# தொல்காப்பியம்

## பொருளதிகாரம்

## இளம்பூரணம்

★

கழக வெளியீடு

கழக வெளியீடு : சுஉக

# தொல்காப்பியம்

# பொருளதிகாரம்

## இளம்பூரணர்

உரையுடன்

கலைமகள் நூலகம்
சிதம்பரம்
தெ. பீ. கோயில் தெரு

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
சென்னை-1 மதுரை-1 திருநெல்வேலி-6
1969

1969 © THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LIMITED.

Ed I June 1953.

Reprints: July 1956; Oct 1969

P31,Dx14,1
K9

THOLKAPPIYAM - PORULATHIKARAM
ILAMBOORANAM

Appar Achakam, Madras-1—II/2.

# பதிப்புரை

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்த குடிமையில் மூகிழ்த்தவர் தமிழர் என்பது, ஆசிரியர் ஐயனாரிதனார் கண்டுரைத்த பேருண்மை யாகும். அதற்கு அரண்செய்வது ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியம்.

இதற்குமுன் இப் பொருளதிகார நச்சினார்க்கினியர், பேராசிரியர் உரைகளை யாம் வெளியிட்டுள்ளமை யாவரும் நன்கறிந்ததே. இவ்வுரை, வித்துவான் பாடத்துக் குரியதாக இருத்தலானும், பொருளதிகாரத்துக்கு முழுதுமுள்ள உரையாக இருத்தலானும் எமக்குக் கிடைத்த பதிப்புப்படிகளைக் கொண்டு செப்பனிட்டு வெளியிட்டுள்ளோம். வேறு படிகளோ, ஏட்டுச் சுவடிகளோ கிடைப்பின் அன்பர்கள் அவைகளை அனுப்பினும், தமிழாசிரியர்கள் வேறு திருத்தங்கள் ஏதேனுமிருந்து தெரிவிப்பினும், அவைகளை மறுபதிப்பில் சேர்த்து வெளியிடுவோம். அதற்கு நன்றி பாராட்டும் கடப்பாடுடையேம்.

இப் பொருளதிகாரத்துக்குப் பிற ஆசிரியர்கள் உரையிருப்பினும் இளம்பூரணர்உரை கருத்துவளனும் சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் திறனுமிக்க பேருரை. இவ்வுரைக் கேற்ற கருத்தினை நன்கு விளக்க அவ்வந் நூற்பாவின்கண் அடிக்குறிப்பாக நச்சினார்க்கினியர், பேராசிரியர் உரைகளை அமைத்துள்ளோம். இதன்கண் விரிந்த முன்னுரையும், நூற்பா, மேற்கோள்விளக்கச் செய்யுட்களின் முதற் குறிப்பு அகரவரிசையும் இணைத்துள்ளனம்.

இப் பதிப்பு ஆசிரியருலகிற்கும், மாணவருலகிற்கும் பெரிதும் பயன்தருவதொன்றாம். இதனை வாங்கிக் கற்று எம்மையும் ஊக்கி நற்றமிழ் வல்ல நாவலராக மக்கள் இலகுறுவார்களென நம்புகிறோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை | 5 |
| க. | அகத்திணை இயல் | ரு |
| உ. | புறத்திணை இயல் | எஉ |
| ங. | களவியல் | கநரு |
| ச. | கற்பியல் | உசக |
| ரு. | பொருளியல் | நஉரு |
| சா. | மெய்ப்பாட்டியல் | நருக |
| எ. | உவமையியல் | நகரு |
| அ. | செய்யுளியல் | சகக |
| கூ. | மரபியல் | ருருங |
| | நூற்பா முதற்குறிப்பு அகரவரிசை | ருஅக |
| | மேற்கோள் செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை | ருககூ |

# முன்னுரை

'நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்
தமிழ்வரம் பறுத்த தண்புனல் நன்னாட்டு
மாட மதுரை'

என, ஆசிரியர் இளங்கோவடிகளால் போற்றப்படும் மதுரைமாநகர்க்கண் முதல் இடை கடை யென்னும் முச்சங்கங்கள் நிறுவித் தென்மொழியாம் நம் சீர்சால் தமிழ்மொழியை நன்கு வளர்த்து வளம்படுத்தினா ரென்ப. அச்சங்கங்களுள் இடைச்சங்க காலத்தே தொல்காப்பியனாரால் இயற்றப்பெற்ற முதல் இயல் நூல் தொல்காப்பியம் ஆகும்.

**தொல்காப்பியத்தின் தொன்மை**

இதனை நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையில் இயற்றி அரங்கேற்றியதாகத் தொல்காப்பியப் பாயிரம் வகுத்த பனம்பாரனார் கூற்றால் அறியக்கிடக்கின்றது. இந்நூல் இற்றைநாள் நமக்குக் கிடைத்துள்ள நூற்களுள் காலத்தால் முந்தியதோடன்றிச் சிறப்பினாலும் தமிழர்தம் மொழிச்சீர்மை, அறம் மறம் மானம் அரசு அமைச்சு படை செல்வம் முதலிய எல்லாச் சிறப்பும் அறிதற்கு உறுகருவியாய் நின்று உதவும் பெற்றியானும் வீழா ஞாயிறுபோன்று நின்றொளிர்கின்றது. ஆகலான் இயற்கைப் பண்பினானும் முந்தியதாகவே உள்ளது.

**தொல்காப்பியம் பொதுவாக நுவன்ற பொருள்கள்**

இஃது, எழுத்து சொல் பொருள் என முப்பகுப்புடையது. எழுத்ததிகாரத்தால் தமிழ்மொழியின் சீரிய கூரிய இனிய மெல்லிய ஒலியமைப்புமுறை, அதன் புணர்நிலையால் ஒலிமாற்ற அமைப்பு முதலியன விளக்கப்பட்டுள்ளன. சொல்லதிகாரத்தால் தமிழ்ச்சொல்லின் சிறப்பும் திணை பால் முதலிய உயிர்ப்பகுப்பு உயிரில்பகுப்பு முறையும் தமிழர் நாகரிகச் சொற்றிறமையும் ஒவ்வொரு சொற்களும் காரணத்தோடு அமைக்கப்பெற்றன வென்பதற்குரிய விதிவழிவகைகளும் தெற்றென விளக்கப்பெற்றுள்ளன. பொருளதிகாரத்தால் மக்களின் மன இயல்பாகிய

அகமும் வீரமும் சுவைகளும் உவமங்களும் பாவின்பண்பு மரபு முறை முதலிய யாவும் ஒருங்கே முற்றமுடிய எடுத்து விளக்கிக் காட்டப்பெற்றுள்ளன.

**தொல்காப்பியர் வரலாறும் காலமும்**

இச் சிரிய நூலை ஆக்கி உதவியருளிய இந் நூலாசிரியரான தொல்காப்பியரைப் பற்றிய வரலாறுகள் ஒன்றும் தெற்றெனப் புலனாகவில்லை. திருவள்ளுவர் வரலாறு அறிதற்குரிய சான்றுகள் இல்லாதனபோலவே, ஆசிரியர் தொல்காப்பியனார் வரலாற்றுண்மைகள் நன்கறிதற்குரிய சான்றுகள் இந்நூலகத்தும் பிறநூல்களினகத்தும் தென்படவில்லை. இவ்வாறே பழங்காலந்தொட்டு இற்றைஞான்றுவரை தமிழகத்தில் வாழ்ந்த புலவர்கள் வள்ளல்கள் அரசர்கள் பெரியார்கள் கூத்தர்கள் பாணர்கள் முதலியோர்களின் வரலாறுகள் ஒன்றும் தெளிவாக அறிதற்கில்லை. வரலாறுகள் எதையெடுத்தாலும் யாருடைய வாழ்க்கை முறைகளை ஆய்ந்துணர முற்பட்டாலும் அவைகளுள் பிற்காலக் கட்டுக்கதைகளைப் புகுத்தியும் முற்கால வழக்கில் இல்லாதனவும் பிற்கால வழக்கத்தில் வந்தனவுமாகிய பாக்களைக் கொண்டு அவர் புனைந்தனவாகக் கொண்டு காட்டியும் அவர்தம் உண்மை வரலாற்றை அறியவொண்ணாதவகையில் போலி வரலாறெழுதிய பலர், வரலாற்று முறைக்குக் கறைசெய்து போதருவாராயினர். இன்னும் இதனானே எதையும் சிக்கறுத்துக் காண்டற்கியலாததாயிற்று. சங்ககால நூல்களில் பல்லாயிரக்கணக்கான பாடல்கள் உள்ளன. அவைகளைப் பாடிய புலவர்களின் பெயரே தெரியாதவண்ணம் இருக்கின்றன. ஆனால், அவர் அமைத்த அரிய சொற்றொடர், உவமை, கருத்துநயம் இவைகளைக்கொண்டே பெயர்கள் அமைத்துத் தொகுப்பாசிரியர் வெளியிட்டுள்ளனர். அவை, கல்பொரு சிறுநுரையார், தொடித்தலை விழுத்தண்டினார், பதடிவைகலார், அணிலாடு முன்றிலார், கவைமகனார் என்பன போன்ற பல புலவர்களின் பெயர்களைக்கொண்டு தெளிக.

இவ்வாறே இந்நூலாசிரியரைத் தொல்காப்பியரல்லர் இவர் பெயர் திரணதூமாக்கினியென்றும் இவர் சமதக்கினியார் புதல்வரென்றும் கூறி ஆரியராக்குவாரும் உள்ளனர். இந்நூற்றாண்டினும் இதற்கு முந்திய நூற்றாண்டினும் வாழ்ந்திருந்த புலவர்கள் பெயர்களுங்கூட மறைந்து வருகின்றனவென்றால் தமிழகமாந்தர்தம் மொழிப்பற்று நாட்டுப்பற்று அறிஞரப்பற்று எவ்வளவென்பதை அளந்தறிமின்? இவ்வாறு பற்றற்று இருந்த காரணத்தால் நூல்களையெல்லாம் 'வாரணங் கொண்ட தந்தை ஊழிவழிப் பெயரும் மாள' என்று இரங்கும்நிலை வந்துற்றது.

இதுகாறும் நாம் ஆய்ந்து கண்டவற்ருல் தொல்காப்பியர் காலத்தை இவ்வளவிற்றென வரையறுத்துக் கூறுதற்கியலாததாய் இருக்கின்றது. வரலாற்ருசிரியர் பலரும் இவர் வாழ்ந்த காலம் ஐயாயிரம் யாண்டுக்கு முற்பட்டதென்பாரும் பதினயிரம் யாண்டென்பாரும் இன்னும் பல திறத்தினராய்ப் பிளவுபட்டு ஒருவருக்கொருவர் முரண்பட வுரைப்பர். அஃது எவ்வாருயினு மாகுக. ஆசிரியர் தொல்காப்பியனர் இருந்த காலம் மிகப் பழமையான காலமென்பதைமட்டும் எவரும் மறுக்கவொண்ணுததாகும்.

ஆனல் இவர்காலத்தேயே தமிழகத்தில் ஆரியக்கொள்கைக் கலப்புக்கள் கலந்துவிட்டன. ஆரிய மொழிகளும் தமிழ் மொழியிற் கலந்து வழக்காருக வழங்கத் தலைப்பட்டன வென்பதற்குரிய சான்றுகள் இந்நூற்கண் காணப்படுகின்றன. அதற்குச் சான்ருக இவர் சொல்லதிகார எச்சவியலில்,

'வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே'

என்று வடமொழி தமிழிற்கலந்து வழங்குதற்கு வரையறை செய்து வகுத்துரைத்திருப்பதும், காதலாற் பிணிப்புண்ட தலைவன் தலைவியர்களிடையே உண்மைக்காதல் திரிந்து பொய்ம்மை புகுந்ததெனவும் அதனல் ஆன்ருேர் முன்னிலையில் ஒரு கட்டுப்பாடமைத்துத் திருமணம் நிகழ்ந்து வந்ததாகவும் கற்பியலில்,

'பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப'

என நூற்பா வகுத்தமைத்துரைத்திருப்பதும் நோக்கின், பழங்காலத்துக்கும் பிற்காலத்துக்கும் இடைப்பட்ட காலத்தேதான் தொல்காப்பியர் வாழ்ந்தனராக ஊகிக்கலாம். எனவே ஏறக்குறைய இற்றைக்கு ஐயாயிரம் யாண்டெனக் கொள்ளுதல் சாலும்.

இந்நூல் மரபியலில்,

'வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை'

என்றும்,

'வேளாண் மாந்தர்க் குழுதூண் அல்லது
இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி'

என்றும் கூறப்பட்டுள்ளன. ஆனல், இது பழந்தமிழர் கொள்கைக்கு முற்றும் மாறுபட்டனவாக இருத்தல் கண்கூடு. தமிழர்

வாழ்வுமுறை நிலத்தைதயொட்டியது ; நிலச்சார்பாக அவர்கள் பெயரமைத்து அழைக்கப்பட்டனரன்றிப் பிறப்பால் சாதி வகுக்கப் பட்டு அழைத்தனரில்லை ; இவரே பிறிதோரிடத்து,

‘ ஆயர் வேட்டுவர் ஆடூஉத் திணைப்பெயர் ’

என்று கூறுகின்றார். எனவே மேற்கூறிய சாதிபற்றிய வகுப்பு முறைகொண்ட •நூற்பாக்கள், பிற்கால இளம்புலவர்களால் ஆக்கி இடைச்செருகலாக அமைக்கப்பெற்றனவோ என ஐயுறற்கு ஏற்றனவாக இருக்கின்றன. இவைகளுள் வரும் சொற்களையும் குலம்வகுத்துக் குலத்துக்கேற்ற நீதிநெறிகளும் வகுக்கின்ற முறையையும் நோக்கின், பிற்காலத்தன வென்பது தெற்றென விளங்கும். அவைகளை ஈண்டு விரித்தல் மிகை. எனவே, இவைகட்கு உரை வகுத்த ஆசிரியர்களும் எவ்வாறுஞ் லும் நூலினுள் அடங்கிக்கிடப்பதால் அவைகளை ஒதுக்கிவிடாது, அவைகட்கும் உரை வகுத்துரைப்பாராயினர். கற்று உண்மை காண விழைவார் காய்தல் உவத்தல் அகற்றி நோக்கின் உண்மை தோன்றுமற் போகா.

இனி இப்பொருளதிகாரத்துள் நுவலப்படும் பொருள்கள் அரிய பெரிய நுண் கருத்துக்கள் கொண்டமைந்தனவாகும். அவைகளுள் அகத்திணையியல் காதலர்கள் வாழ்க்கை துவங்கும் நிலப்பாகுபாடு முதற்பொருள் கருப்பொருள் தொல்காப்பியப் உரிப்பொருள்களை எடுத்துக்காட்டும் விளக்க பொருளதிகாரம் நூலாய் நிலநூல் என்று கருதற்குரியதாம் சிறப்பாக நுவன்ற உள்ளது என்னலாம். புறத்திணையியல் வீரர் பொருள்கள் மேம்பாடு கிளந்தெடுத்துரைத்தலானும் அரசனுவான் படைகளை இயக்கும் முறையும் அரண் அமைக்கும் முறையும் போர் செய்யும் முறையும் கூறப் படலானும் அரசியல் நூலுமாக மிளிர்கின்றது. களவியல் கற்பியல் என்பன, ஒத்த குலனும் ஒத்த பண்புமுடைய காதலர்கள் ஒன்றுபட்டுத் தாமே தேர்ந்து மணந்துகொண்டு இல்லறக்கிழமை பூண்டொழுகும் உலகியல் வாழ்வுமுறை நூலாகத் திகழ்கின்றது. மெய்ப்பாட்டியல் மக்களின் உணர்ச்சி நிலையை விளக்குவதாகும். உணர்ச்சியாவது ஒன்றைக் கண்டு உவத்தல் அஞ்சுதல் வியத்தல் முதலிய உளப் பண்புகள். இவை உடலில் வெளிப்பட்டுத் தோன்றும் தன்மையவான செயல்களை உணர்த்தும் உடல் நூல் ஆகும். இவைகள் பலபட விரித்துரைக்கப்படுமாயினும் அவையெல்லாம் ஒன்பது சுவை (நவரசம்) எனப் பாகுபடுத்துரைப்பர் வடநூலாரும் பிறருமாக, இவர் அவையிற்றை எண்வகைச் சுவையவாகக்கொண்டு எட்டுவகை மெய்ப்பாடுகளாக அமைத்

துரைப்பாராயினர். பிறரெல்லாம் ஒன்பது சுவை அமைக்க இவர் எவ்வாறு எண்சுவையாக்கினரென வினவின், நாம் ஒரு சிங்கத்தையோ புலி கரடி முதலியவற்றையோ ஒரு காட்டில் காண்போமாயின் அவையிற்றைக் கண்டதும் அச்ச உணர்ச்சி உள்ளத்தில் தோன்றி அவ்வுணர்ச்சியின் உந்துதலால் கால் கைகள் நடுங்கிச் செயலற்றுடபோகின்றோம். இதுபோன்ற நிகழ்ச்சிகளை ஒருவன் கூறக்கேட்பினும் அவ்வளவு நடுக்கங் கொள்ளாவிட்டாலும் அந்நிலைவலைகள் தாக்கப்பெற்று அவ்வச்ச உணர்ச்சியால் உடல் மயிர் சிலிர்ப்புறுகின்றன. இது போன்ற பிற உணர்ச்சிகளையும் கேட்டவுடனே கண்டவுடனே காட்டுவதே மெய்ப்பாடு: மெய்யின்கண் உண்டாதல் என்பதாகும். இவ்வாறான சுவைகள், நகை அழுகை இழிவு மருட்கை அச்சம் பெருமிதம் (வீரம்) உவகை வெகுளி என்பன; இவை எட்டாயின. இவற்றோடு சமநிலை ஒன்று கூட்டி ஒன்பதெனப் பகுத்தனர். சமநிலை: ஒத்த தன்மையெனப் பொருள்படும். அஃது உலகில் நிகழாத ஒன்று. அது மக்களின் மன உணர்வின்கண்ணும் நிகழாத நிகழ்ச்சியென அவ்வொன்றையும் விலக்கி எண்வகையே அமைத்தார். சமநிலை எத்தகைத்தென வினவின் ஒருவன்மீது மற்றொருவன் வேல்கொண்டு குத்தினும், வாள்கொண்டு வெட்டினும் அதற்கு வருந்தாது இருத்தலும், கலவைச் சந்தனத்தை உடல் குளிரப் பூசினும் அதற்கு மகிழா திருத்தலுமாகிய உளபோடா உயரிய நிலை. இதனை,

> ''செஞ்சாந் தெறியினும் செத்தினும் போழினும்
> நெஞ்சோர்ந் தோடா நிலை'

என எடுத்துரைப்பர் பேராசிரியர். இந்நிலை தொடர்ந்த மும்மலம் முருக்கி வெம்பவக்கடல் தொலையக் கடந்த முனிவர்களும் செயலில் கொணரமுடியாத அரிய நிலை; இஃது உலகியலுக்கு ஒவ்வாதது; உயிருள்ள எப்பொருளுக்கும் பொருந்தா நிலையென்று ஆசிரியர் தொல்காப்பியனார் தம் அறிவு மதுகை கொண்டாய்ந்து அதனை நீக்கி,

> 'நகையே அழுகை இளிவரல் மருட்கை
> அச்சம் பெருமிதம் வெகுளி உவகை யென்று
> அப்பால் எட்டே மெய்ப்பா டென்ப'

என அளந்து அறுதியிட்டு எண்வகையே கொண்டமை அறியற்பாலது.

உவமவியல் என்பது உலகியற் பொருள்களைக் கூர்ந்து நோக்கிப் பகுத்துணர்கின்ற பகுத்தறிவு பகரும நூல் ஆகும்.

இதன்கண் இவ்வளவு உயர்ந்த பண்புடையது இப்பொருள்; தாழ்ந்த பண்புடையது இப்பொருள் என நன்கு ஆய்ந்து தாம் கண்ட பொருள்களைக் கொண்டு காணாத பொருள்களை விளக்கிச் சுட்டியுரைக்கும் தனி நூலாகும்.

செய்யுளியல் என்பது ஓசைகளின் பல்வேறு நிலைகளைச் செவிப்புலனுக்கேற்ப நாவாலசைத்துப் பாகுபடுத்திக் காணப் பட்ட இசைபபகுப்பு நூல் என்னலாம். இதனைத் தொல்காப் பியச் செய்யுளியல் நூற்பாவே,

'மாத்திரை எழுத்தியல் அசைவகை எனாஅ'

என்று துவங்குமுகத்தே 'அசைவகை' என்று குறிப்பது கொண்டு அறியப் பெறும். இதில் நூறு வகையான வண்ண வேறுபாடுகள் குறித்துரைக்கின்றார் வண்ணமாவது இசையின் வகைகள். அவைகளை, இக்காலத்துச் 'சந்தக் குழிப்பு' என வழங்குவர்; இவ்வகை இவர் நூறெனக் கூறினாரேனும், அஃது அவ்வக் காலத்துக் கேற்ற முறையில் கற்று வல்ல புலவர் களால் வெவ்வேறு வகைப்பட அமைத்து யாக்கும் பாவகைகளில் வரும் வண்ணங்களெல்லாம் கொள்ளலாம். அதற்கு இவர் ஒரு வழி வகுத்துக்காட்டினர். இதன்கண் மந்திர மொழி முதலியவற் றிற்கும் இலக்கணம் வகுத்துள்ளனர். எனவே இஃது ஒலி பற்றிய அமைப்பெல்லாம் கண்டு தெளிதற்கு ஏற்றதாக மிளிர் கின்றது.

பொருளியல் என்பது, இப்பொருளதிகாரத்துக்கே புறனடை போன்று இன்றியமையாத திருத்த முறையாகப் பொதுப்பட அமைத்த பகுதியாகும்.

நூலின் இறுதியில் நிற்பது மரபியல்; இதன்கண் உயிர்ப் பொருள்களின் தன்மைகளை நன்கு ஆய்ந்து, அவைகளின் அறிவு குணம் செயல், ஆண் பெண் பகுப்பு, அவையிற்றை வழங்கும் முறை, அறிவு முறையினால் உயிர்கள் படிப்படியாக உயர்ந்து செல்லுதல் முதலியவற்றையும் அளந்து கூறி, அவற் றுள் மன வுணர்வினால் மற்றை உயிர்களினும உயர்வுபெற்றுள்ள மக்கட் பண்பையும் அறுதியிட்டு உறுதிப்படுத்துரைத்துள் ளது. இவ்வகை உயிர்களை அவர் ஓரறிவு உயிர்முதல் ஆறறிவு உயிர்வரை பாகுபடுத்து உரைக்கும் முறை, இற்றை ஞான்று உயிர் நூலார் உரைக்கும் பகுப்புமுறைக்கு ஒத்த ஒன்றாகும். அவை,

'ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே'

மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே'

என்பனவாம். இவைகளையெல்லாம் 'பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே கூர்த்தறிந்து உரைக்கும் ஒருநூல் தமிழ்மொழியில் உண்டென்றால் இத் தொல்காப்பியத்தையன்றி வேறெதைக் காட்ட வொல்லும்?

இன்னும் இதன்கண் உலகம் ஐம்பெரும் பொருள்களின் கூட்டுறவால் சுழற்சிபெற்று இயங்குகின்ற தன்மையையும் அளந்து அளவை முறையாக ஆய்ந்து உணர்த்துவதும் அறிந்து அறிந்து இன்புறற் பாலதொன்றும். இதனை,

'நிலம் தீ நீர்வளி விசும்போ டைந்தும்
கலந்த மயக்கம் உலகம்'

என்பது காண்க. இவர் உயிர்களைத் தனித்தனி அறிவுமுறை கொண்டு பகுத்துரைப்பதோடமையாது, அவ்வுயிர் வகைகளையும் இவ்விவ்வாறு வழங்கவேண்டுமென வரையறுத்துரைப்பாராயி னர். அன்றியும் அவ்வுயிர்களின் ஆண்மை பெண்மை இயல்பு களை நன்கு நுனித்தறிந்து ஆண்வடிவாக இருப்பினும் அஃது ஆண்மையிற் றிரிந்து பெண்மையியல்பாக இருக்குமானால் வடிவு பற்றிப் பகுக்காது உணர்வுபற்றிப் பெண்பாலாகப் பகுத்துரைப் பது இவர்தம் கூர்த்தறியும் நுண்மாண் நுழைபுலத்தைக் காட்டு கின்றது.

'சேவற் பெயர்க்கொடை சிறகொடு சிவணும்
மாயிருந் தூவி மயிலலங் கடையே'

என்னும் நூற்பாவில் 'சேவல்' என்னும் ஆண்பால் குறிக்கும் பெயர் பறவைகளுள் மயிலினத்துக்குச் சாராது மற்றை இனத் துக்குப் பொருந்துமென்று வகுத்துரைத்தமைகொண்டு தெளிய லாம். இதற்கு இளம்பூரணராகிய இவ்வுரையாசிரியர் தெளிவுற விளக்கிற்றிலராயினும் பேராசிரியர் வகுத்த உரையில், "'மாயிருந் தூவிமயில்' என்றதனான், அவை தோகையுடையவாகிப் பெண் பால் போலும் சாயலவாகலான் ஆண்பாற்றன்மை இலவென்பது கொள்க" என விளக்கிக் கூறியது கொண்டறியற் பாலதாம்.

ஆதலால் இப் பொருளதிகாரத்துட் கூறப்பெற்றிருக்கின்ற ஒன்பது இயல்களும் ஒன்பதுவகைப்பட்ட தனித்தனி நூலென்றே கோடற்பாற்றும். இது, தமிழர்தம் அறிவுக்கருவூலம்; தமிழக

வாழ்க்கை நெறிகாட்டி; மக்களை மாக்களினின்றும் பிரித்து இருள் தீர்ந்த கண்ணராகச் செய்யும் காளாமணி விளக்கு; ஒழுக்க உறையுள்; விழுப்பெரு முழுமணி; தமிழர் நாகரிகம் போர் படை குடி செல்வம் காதல்வாழ்வு அன்புமுறை நாடு நகர்வளம் பிற யாவும் சுரந்து சுரந்து அறிவு வேட்கை ஆற்றும் வற்றாத ஊற்று இஃதெனின், நடுவு பிறழ்ந்ததாகாது. உண்மை; வெறும் புகழ்ச்சியன்று.

**தொல்காப்பிய உரை எழுந்த வரலாறு**

இவ்வெல்லாச் சிறப்பும் ஒருங்கே வாய்ந்த அரிய பெரிய இந்நூலுக்குப் பல நூற்றாண்டுகள்வரை உரையெழுதப் பெறவில்லை. ஆசிரியர்கள் வழிவழியாகத் தத்தம் மாணவர்கட்குத் தாம் தாமே உணர்ந்த அளவுக்கு உரையமைத்துப் பாடஞ் சொல்லி வருவாராயினர். இவ்வாறு தொன்றுதொட்ட மரபு மரபாக உரை சொல்லப் போந்தவர்கள், நாளாக நாளாகத் தற்காலம்போல், தத்தமக்குத் தோன்றியவாறே தம் கருத்துக்கேற்பத் திரித்துப் பொருள் கூறி வருவாராயினர். அதனால் நாட்டில் பல்வேறு திறப்பட்ட கருத்துடை ஆசிரியர் பல்கி, யானை கண்ட குருடர்போலத் தாம் தாம் சொல்வதே உண்மையுரையென வீணுரை பகர்வாராயினர். இங்ஙனமே சில நூற்றாண்டுக் காலங்கள் கழிவவாயின. இக்காலத்தே, தமிழ்நாடு செய்த நல்லூழ்வகையால் இளம்பூரண வடிகள் தோன்றினர். இவர் தமிழமொழியை முற்றக் கற்ற முழுதுணர் பெரியராய் இலகி, தொல்காப்பிய நூற்பெருங் கடலுட்புக்குத் தம் நுண்மாண் நுழைபுல மாட்சியால் நுணுகி ஆய்ந்து தெள்ளத் தெளிந்த பேருரை வகுப்பாராயினர். இவருரை மூன்றதிகாரங்கட்கும் முற்ற முடியவுள்ளது. இவர் முதல் முதல் இதற்கு உரையெழுதிய பெருமைச் சிறப்புக்கொண்டு இவரை இடுகுறிப்பெயராற் கூறாது, உரையாசிரியர் என்னும் சிறப்புப் பெயரால் வழங்குவாராயினர். இவர் தம் உரைச் சிறப்புக்கு இப்பெயரொன்றே சான்று நின்று பகரும்.

இவரின் பின்னர் வடநூற்கடலை நிலைகண்டுணர்ந்த சேனாவரையர், நுணுகி ஆழ்ந்து விரிந்த தம் மதிநுட்பங் கொண்டு சொல்லதிகாரத்துக்கு மட்டும் ஒரு நல்லுரை வரைந்தளித்தனர். பேராசிரியர் பொருளதிகாரம் மெய்ப்பாட்டியல் முதலாக மரபியல் இறுதியாக ஐந்தியல்களுக்கு மட்டுமே உரையெழுதியுள்ளனர். உற்று ஆய்ந்தால் இவர் தொல்காப்பியம் முழுதுக்கும் உரை கண்டனரெனத் தெரிகின்றது. ஆனால் முழுதும் இதுகாறும் கிட்டிற்றில்லை. நச்சினார்க்கினியர் எழுத்ததிகாரம் சொல்லதிகாரங்கட்கும் பொருளதிகார அகத்திணையியல் முத

லாகப் பொருளியல் இறுதியாக ஐந்தியல்களுக்கும், செய்யுளியலுக்குமட்டுமே உரை வகுத்துள்ளனர். ஏனைய இயல்கட்கு எழுதவில்லையென்றே தோன்றுகின்றது; கல்லாடர் சொல்லதிகாரச் சில பகுதிகட்குமட்டும் உரை வரைந்துள்ளனர். அவர் உரையில் சில பகுதிகளன்றி முழுதும் வெளிவந்திலது. தெய்வச்சிலையாருரை, சொல்லதிகாரத்துக்கு மட்டுமே இன்றுகாறும் வெளிவந்துள்ளது.

எனவே, இன்ன இன்ன பகுதிகட்கு இன்னின்னார் இவ்விதுவரை உரைகண்டாரென்று அறுதிகொண்டுரைத்தற்கு அகப்புறச் சான்றுகள் ஒன்றும் இல்லை. 'வந்தது கொண்டு வாராதது உணர்த்தல்,' என்பது கொண்டு அவையிற்றை ஆய்வாளர் முடிபு காண்பாராக.

**இளம்பூரணர் உரைச்சிறப்பு**

எது எவ்வகையாயினும் தொல்காப்பியம் முழுதிற்கும் முற்றமுடியக் கிடைத்திருக்கும் உரை இவ் விளம்பூரணம் ஒன்றேயாகும். இவ்வுரை ஏனைய உரைகளினும் கருத்து விளக்கமும் தெளிவும் மிக்கது. இதன் சிறப்பை நச்சினார்க்கினியத்தையும் பேராசிரியத்தையும் ஒருங்கே ஒப்பவைத்துக்கொண்டு பயில்வார் தெற்றென உணர்வர்.

இவர் சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் ஒண்மையுடையார்; விரிக்க வேண்டுமிடத்து மிகைபடக்கூறாது வேண்டியாங்கு விரித்தும், சுருக்க வேண்டுமிடத்து மிகச் சுருக்காது கருத்து விளக்கம் பெறச் சுருக்கியும் கூறும் மதிநலம் மிக்குடையார். எடுத்துக்காட்டாக அகத்திணையியலில் அகம் இன்னதென்பதை விளக்கிச் சொல்லுங்கால், 'அகப்பொருளாவது போகநுகர்ச்சியாகலான் அதனை ஆயபயன் தானே அறிதலின், அகம் என்றார்' என்று விளக்கியும், புறம் இன்னதென்பதை விளக்கிக் கூறுங்கால், 'புறப்பொருளாவது மறஞ்செய்தலும் அறஞ்செய்தலும் ஆகலான், அவற்றான் ஆயபயன் பிறர்க்குப் புலனாதலின் புறம் என்றார். அஃதற்றாக அறம் பொருள் இன்பம் வீடு என உலகத்தோரும் சமயத்தோரும் கூறுகின்ற பொருள் யாதனுள் அடங்குமெனின், அவையும் உரிப்பொருளினுள் அடங்கும்' என்று விளக்கி விரித்துரைத்தும் தெளித்தலால் நன்கு அறியலாம்.

இன்னும் இவர்தம் உரை ஆங்காங்கே பருந்தும் நிழலும் போல் நூற்பாக்களின் நுணுகிய கருத்துக்களை உண்மை பிறழாது விளக்கி யாவரும் எளிதிற் கற்றுணருமாறு திறம்பட வகுத்துரைத் திருப்பதைப் பயில்வார்கள் நன்கறியலாம்.

இத்தகைய உரைவளமிக்க இவ் விளம்பூரணத்தின் கருத்துரைகளைத் தழுவியும் வேறுபட்டும் இயைந்துள்ள நச்சினார்க்கினியருரையையும், பேராசிரியருரையையும் ஆங்காங்கே வேண்டுமிடத்து அடிக்குறிப்பாக அமைத்துக் காட்டப்பெற்றுள்ளது; அதனால் இவ்வுரைநயத்தோடு அவ்வுரையையும் ஒப்பநோக்கி உண்மை தெளிய விரும்பும் ஆராய்ச்சியாளருக்கும் கற்றுத் துறைபோக விரும்பும் மாணவர்கட்கும் பெரும்பயனாக அமையும்.

இவ்வளவு அரிய கருத்துநயமிக்க பேருரை வகுத்துத் தந்த உரையாசிரியர் வாழ்க்கைவரலாறு பற்றி அறிய விரும்புவது யாவர்க்கும் இயல்பேயாகும். ஆனால்

**இளம்பூரணர் வாழ்க்கை வரலாறு**

அவர் பற்றிய வாழ்க்கைக் குறிப்புக்களைத் தெற்றென அறிதற்குரிய அகச்சான்றுகள் இல்லை. ஆயினும் ஆங்காங்கே கண்டுகேட்டவுரை கொண்டே அறியவேண்டுவதாகவுளது; அவற்றுள் ஒன்றிரண்டு சான்றுக்காகக் காட்டியுரைப்பாம்.

இவர் வாழ்ந்த இடம் பாண்டிநாட்டில் கீழ் கடற்கரைப் பகுதியிலுள்ள செல்லூரென்றும் மறையில்வல்ல இளம்போதி என்பாரின் புதல்வரென்றும் அந்தணர் வகுப்பினரென்றும் கூறுவர்.

இவர் வரலாற்றைக் குறித்து அண்ணாமலைப் பல்கலைக் கழகத்து ஆசிரியரான திரு. டி. வி. சதாசிவ பண்டாரத்தாரவர்கள் செந்தமிழ்த்தொகுதி ௪௨ - ல் பகுதி ௪௦ - முதல் ௪௨ - வரையுள்ள இதழ்களில் ஒரு கட்டுரை வரைந்துள்ளனர். அதன் ஒரு பகுதி வருமாறு :

..................................................

..................................................

..................................................

பாயிருங் காப்பியச் சுவைபல உணர்ந்தகம்  
தோய மடுத்தோர் தொல்காப் பியனுரை  
மூத்திற ஒத்தினுக் கொத்தசீர்க் காண்டிகை  
சொன்னிலை மேற்கோள் தொகுபொருள் துணிபுடன்  
இயல்நூற் பாமுடி பிணைத்தடி காட்டித்  
தலைகடை கூட்டித் தந்தனன் பண்டே  
கொங்குவேள் மாக்கதை குறிப்புரை கண்டோன்  
தன்னறி அளவையில் நல்லுரை தேவர்  
பன்மணிக் குறட்பான் மதிப்பிடப் பொறித்தோன்  
குணகடற் செல்லூர் மணக்குடி புரியான்

தண்முலை முகையென வெண்ணூல் சூடி
அந்தணன் துறவோன் அருமறை உணர்ந்த
இளம்போதி பயந்த புனிதன்
இளம்பூ ரணனுரை இனிதுவாழ் கிங்கென்'

என்னும் பாட்டினால் இவர் கொங்குவேள் மாக்கதையாகிய உதயணன் காதைக்குக் குறிப்புரை யெழுதியுள்ளன ரென்றும், திருக்குறளுக்கும் உரையெழுதின ரென்றும் தெரிகின்றது. ஆனால் திருக்குறளுக்கு உரை வகுத்தவர்களைக் குறிக்கும்,

'தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்
பரிமேல் அழகர் பருதி—திருமலையர்
மல்லர் பரிப்பெருமாள் காளிங்கர் வள்ளுவர்நூற்
கெல்லையுரை செய்தார் இவர்'

என்னும் பழைய வெண்பாவொன்றினால் பதின்மர் திருக்குறளுக்கு உரை கண்டவர்கள் என்று கூறப்பெற்றுள்ளது. ஆனால் இதில் இளம்பூரணர் ஒருவராகப் பெயர் குறிக்கப்பெறவில்லை. ஆயினும் 'செல்லூர் மணக்குடி புரியான்' என மேற்காட்டிய பாட்டின்கண் வரும் மணக்குடி என்பதே மருவு மொழியாகி மணக்குடவர் ஆனதென்று கொள்ளற்கு இடனுண்டு. குடி, குடம் ஆக மாறிவருதல் வழக்கில் இயல்பாக இருக்கின்றது. குடிக்கூலி குடக்கூலியாகத் திரிந்ததுபோல, மணக்குடியார் மணக்குடவர் ஆயினர்போலும்! இவைகளைத் தவிர வேறு இவரைப்பற்றிய வாழ்க்கைக் குறிப்புக்கள் நன்கு தெற்றென அறியக் கிட்டவில்லை. வழங்கும் கதைகளும் உண்மையென்று கோடற்கமையாது.

'அந்தணன் துறவோன்.........................இளம்போதி பயந்த புனிதன் இளம்பூரணன்' என்னும் பாடலடிகளினால் இவர் மறையவர் குலத்தாரென்றும், இளம்போதி மகனாரென்றும் குறிப்பிடப்படுகின்றது.

**இளம்பூரணர் வரலாற்றில் சில வேறுபாடுகள்**

நம் தமிழ்நாட்டில் வேறுபட்ட இருவேறு கருத்துக்கள் இடைக்காலத்தில் தோன்றி வளரலாயின. ஒன்று ஒருவன் அறிஞனாக இருந்தால் அவன் மறையவர் குலத்தானாகவே இருத்தல் கூடுமென்பது; மற்றொன்று தமிழில் நூல்செய்தால் அது, வடமொழியிலிருந்து மொழிபெயர்த்ததாகக் கூறவேண்டுமென்பது. இம் மருட்சிக் கொள்கையைக் கடைப்பிடியாகக் கொண்டே வள்ளுவர், ஔவையார்போன்ற பெரியார் வரலாறெல்லாம் புனைந்துரைக்கப்பட்டன. அவைகட்கு என்ன உண்மைச்சான்றுண்டு? இதைப்போன்றே இவர் வரலாறுபற்றிய கதைகளும் புனைந்துரை

யென்றே கோடல் பொருந்துவதாகும். தொல்காப்பியருக்குத் திரணதூமாக்கினியென்று புனைபெயர்சூட்டி ஆரியராக்கிய இக் கட்டுக்கதையாளர் வேறென்னதான் கூறார்? எனவே இப் புனைந்துரைகளை உண்மையென நம்பாது தமிழுக்கு உரையெழுதி வளம்படுத்திய பெரியார்களுள் இவரும் ஒருவர் எனக் கொள்ளுதலே தக்கது.

**தொல்காப்பியத் தனிச்சிறப்பு**

தமிழ்மொழியின் மெல்லிய ஒலிநயமும் சிறுசிறு சொற்குழுமமும் தொன்மையும் ஒண்மையும் ஒருங்கே தெளிந்துணரத் தொல்காப்பியமும் அதன் உரைவளங்களும் தமிழ்த்திருநாட்டிற்கு வற்றா வளனாய்க் குன்றாத மணிவிளக்காய் வாய்ந்தொளிர்கின்றது.

இத்தன்மைத்தாம் ஒரு பெருநூல் தமிழகத்தில் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னே தோன்றி வேரூன்றி நிற்பதாயின் அது, தமிழர்தம் பழைமையையும் நாகரிக மேம்பாட்டையும் தெள்ளத் தெளிய விளக்குவதொன்றாம்.

இதனை எழுத்தெண்ணிக் கற்ற பெரியார் பண்டும் இன்றும் பல்கியுள்ளனர். பிற்கால வேற்றுமொழி மயக்கத்தால் 'தமிழில் என்ன இருக்கிற தென்று தம்மையும் தமிழ்மாந்தராகக் கருதும் பேரறிஞர்கள் இற்றைஞான்று இதனைக் கருத்துவைத்துக் கற்கமுற்படின், இதுவே நிலநூல் உயிர்நூல் ஒலிநூல் பொருள் நூல் அறிவுவிரிக்கும் அருள்நூல் என வுணர்வர். இதன் பெருமையைத் தமிழக முழுதுமன்றி ஆழிசூழ் உலகம் எங்கும் உணர்ந்தின்புறச் செய்யவேண்டுவது, தமிழ்மாந்தர்கள் ஒவ்வொருவரின் கைம்மாறு வேண்டாக் கடப்பாடாகும்.

'நான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்.'

செல்லூர்க்கிழார்,
செ. ரெ. இராமசாமி பிள்ளை,
கழகப்புலவர்.

உ

# தொல்காப்பியம்

## பொருளதிகாரம்

### இளம்பூரணம்

---

இவ்வதிகாரம் என்ன பெயர்த்தோ எனின், பொருளதிகாரம் என்னும் பெயர்த்து. இது, பொருள் உணர்த்தினமையாற் பெற்ற பெயர். நிறுத்தமுறையானே எழுத்தும் சொல்லும் உணர்த்தினார்; இனிப் பொருள் உணர்த்த வேண்டுதலின், இவ்வதிகாரம் பிற்கூறப்பட்டது.

பொருள் என்பது யாதோ எனின், மேற்சொல்லப்பட்ட சொல்லின் உணரப்படுவது. அது, முதல் கரு உரிப்பொருள் என மூவகைப்படும்.

"முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே
நுவலுங் காலை முறைசிறந் தனவே
பாடலுட் பயின்றவை நாடுங் காலை" (அகத். ௩)

என்றாகலின்.

முதற்பொருளாவது நிலமும் காலமும் என இருவகைப்படும்.

"முதல்எனப் படுவது நிலம்பொழு திரண்டின்
இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே" (அகத். ௪)

என்றாகலின்.

'நிலம்' எனவே, நிலத்திற்குக் காரணமாகிய நீரும், நீர்க்குக்காரணமாகிய தீயும், தீக்குக் காரணமாகிய காற்றும், காற்றிற்குக் காரணமாகிய ஆகாயமும் பெறுதும்.

காலமாவது - மாத்திரை முதலாக, நாழிகை, யாமம், பொழுது, நாள், பக்கம், திங்கள், இருது, அயநம், ஆண்டு, உகம், எனப் பலவகைப்படும்.

கருப்பொருளாவது, இடத்தினும் காலத்தினும் தோற்றும்பொருள் அது, தேவர் மக்கள் விலங்கு முதலாயினவும், உணவு செயல் முதலாயி னவும், பறை யாழ் முதலாயினவும், இன்னவான பிறவும் ஆகிப் பல வகைப்படும்.

"தெய்வம் உணவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருஎன மொழிப" (அகத். உ0)

என்று ராகலின்,

உரிப்பொருளாவது, மக்கட்கு உரிய பொருள். அஃது அகம், புறம் என இருவகைப்படும்.

அகமாவது, புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் எனவும் கைக்கிளை, பெருந்திணை எனவும் எழுவகைப்படும்.

"புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் இவற்றின் நிமித்தம் என்றிவை
தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே" (அகத். கசு)

எனவும்,

"காமம் சாலா இளமை யோள்வயின்
ஏமம் சாலா இடும்பை எய்தி
நன்மையும் தீமையும் என்றிரு திறத்தால்
தன்னொடும் அவளொடும் தருக்கிய புணர்த்துச்
சொல்எதிர் பெறுஅன் சொல்லி இன்புறல்
புல்லித் தோன்றுங் கைக்கிளைக் குறிப்பே" (அகத். ருங)

எனவும்,

"ஏறிய மடற்றிறம் இளமை தீர்திறம்
தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்
மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்
செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே" (அகத். ருச)

எனவும் ஓதினாராகலின்.

அஃதேல், கைக்கிளை பெருந்திணை என்பனவற்றை உரிப்பொருள் என ஓதியது யாதினால் எனின், எடுத்துக்கொண்டகண்ணே 'கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்' என ஓதி, அவற்றுள் நடுவண் ஐந் திணைக்குரியன இவை எனப் புணர்தல் முதலாக வகுக்கப்படுதலின், முன்வகுக்கப்படாத கைக்கிளை பெருந்திணையும் உரிப்பொருளாம் என்றுணர்க.

புறமாவது, நிரை கோடற்பகுதியும், பகைவயிற் சேறலும், எயில் வளைத்தலும். இருபெரு வேந்தரும் ஒரு களத்துப் பொருதலும் வென்றி வகையும் நிலையாமை வகையும், புகழ்ச்சிவகையும் என எழுவகைப்படும். அஃதேல், புறப்பொருளை உரிப்பொருள் என ஓதிற்றிலரால் எனின்,

"வெட்சி தானே குறிஞ்சியது புறனே", (புறத். க)

எனவும்; பிறவும் இவ்வாறு மாட்டேறு பெற ஓதலின் அவையும் உரிப் பொருள் ஆம் என்க அகம் புறம் என்பன காரணப் பெயர்.

அகப்பொருளாவது, போகநுகர்ச்சியாகலான் அதனன் ஆய பயன் தானே அறிதலின், அகம் என்றார்.

புறப்பொருளாவது, மறஞ்செய்தலும் அறஞ்செய்தலும் ஆகலான் அவற்றான் ஆய பயன் பிறர்க்குப் புலனாதலின், புறம் என்றார்.

அஃதற்றாக, அறம், பொருள், இன்பம், வீடு என உலகத்தோரும் சமயத்தோரும் கூறுகின்ற பொருள் யாதனுள் அடங்குமெனின், அவையும் உரிப்பொருளினுள் அடங்கும். என்னை? வாகைத்திணையுள்,

"அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்
ஐவகை மரபின் அரசர் பக்கமும்
இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்" (புறத். கசு)

என இல்லறத்திற்கு உரியவும்,

"காமம் சான்ற கடைக்கோட் காலை
ஏமம் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே" (கற்பு. ருக)

என நான்கு வருணத்தார் இயல்பும்.

"நாலிரு வழக்கின் தாபதப் பக்கமும்" (புறத். கசு)

எனவும்,

"காமம் நீத்த பாலி னானும்" (புறத் கஎ)

எனவும், புறமாகிய வீடுபேற்றிற்குரிய வானப்பிரத்த சந்நியாசிகள் இயல்பும் கூறுதலின், அறமும் வீடும் அடங்கின. வெட்சி முதலாகத் தும்பை ஈறாகக் கூறப்பட்டபொருண்மையும், வாகையிற் கூறப்பட்ட ஒருசாரனவும், காஞ்சிப்படலத்து நிலையாமையும் பாடாண் பகுதியிற் கூறப்பட்ட பொருண்மையுமாகிய இவை எல்லாம் பொருளின் பகுதியாதலின், அப்பொருள் கூறினாராம். அகத்திணையியலானும் களவியலானும் கற்பியலானும் இன்பப் பகுதி கூறினாராம். அஃதேல் பிற நூலாசிரியர் விரித்துக் கூறினாற்போல, அறமும் பொருளும் விரித்துக் கூறாதது என்னையோவெனின், உலகத்தில் நூல்செய்வார் செய்கின்றது அறிவிலாதாரை அறிவுகொளுத்தவேண்டியன்றே; யாதானும் ஒருநூல் விரித்தோதிய பொருளைத் தாமும் விரித்து ஓதுவாராயின், ஓதுகின்றதனாற் பயன் இன்றாமாதலால், முன்னூலாசிரியர் விரித்துக் கூறின பொருளைத் தொகுத்துக் கூறலும் தொகுத்துக் கூறின பொருளை விரித்துக் கூறலும் நூல் செய்வார் செய்யும் மரபு என்று உணர்க. அஃதேல் இந்நூலகத்து விரித்துக் கூறிய பொருள் யாதெனின், காமப் பகுதியும் வீரப் பகுதியும் என்க. இன்பம் காரணமாகப் பொருள் தேடும் ஆகலானும், பொருளானே அறஞ்செய்யும் ஆகலானும், இன்பமும் பொருளும் ஏற்றம் என ஓதினார் என உணர்க.

அஃதற்றாக, இது பொருளதிகாரமாயின், உலகத்துப் பொருள் எல்லாம் உணர்த்தல் வேண்டுமெனின், அது முதல், கரு, உரிப்பொருள் எனத் தொகைநிலையான் அடங்கும். அவ்வாறு வகுக்கப்பட்டபொருளை உறுப்பினானும், தொழிலினானும், பண்பினானும் பாகுபடுத்தி நோக்க

(பாடம்) * பாலின்கண்ணும்.

வரம்பிலவாய் விரியும். இக்கருத்தினானே இவ்வாசிரியர் உலகத்துப் பொருள் எல்லாவற்றையும் முதல் கரு உரிப்பொருள் என ஓதினார் என உணர்க.

அஃதற்றாக, இவ்வதிகாரத்துள் உரைக்கின்ற பொருளை யாங்ஙனம் உணர்த்தினாரோ எனின், முற்பட இன்பப் பகுதியாகிய கைக்கிளை முதலாகப் பெருந்திணை ஈறாக அகப்பொருள் இலக்கணம் உணர்த்தி, அதன் பின் புறப்பொருட் பகுதியாகிய வெட்சி முதலாகப் பாடாண்டிணை ஈறாகப் புறப்பொருள்இலக்கணம் உணர்த்தி, அதன்பின் அகப்பொருட் பகுதியாகிய களவியல் கற்பியல் என இரண்டுவகைக் கைகோளும் உணர்த்தி, அதன்பின் அகம் புறம் என இரண்டினையும் பற்றிவரும் பொருள் இயல்பு உணர்த்தி, அதன்பின் அவ்விரு பொருட் கண்ணும் குறிப்புப்பற்றி நிகழும் மெய்ப்பாடு உணர்த்தி, அதன்பின்வடிவும் தொழிலும் பண்பும், பயனும் பற்றி உவமிக்கப்படும் உவம இயல் உணர்த்தி, அதன்பின், எல்லாப் பொருட்கும் இடமாகிய செய்யுள் இயல் உணர்த்தி அதன்பின், வழக்கு இலக்கணமாகிய மரபுஇயல் உணர்த்தினார் என்று கொள்க இவ்வகையினானே அகத்திணைஇயல், புறத்திணைஇயல், களவியல், கற்பியல், பொருள்இயல், மெய்ப்பாட்டுஇயல், உவமஇயல், செய்யுள்இயல் மரபுஇயல், எனஒத்து ஒன்பதாயின.

சந்து - கைச்சொல், சொற்பா, இயல், அதிகாரம், வேதம் போன்ற பல பொருள்களில் வரும்

## முதலாவது

# அகத்திணை இயல்

இவ்வதிகாரத்துள், இம்முதற்கண் ஓத்து அகப்பொருள் இலக்கணம் நுதலிற்று.

க. கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை என்ப.

இத்தலைச் சூத்திரம் என்நுதலிற்றோ எனின், அகப்பொருள் இத்துணை என வரையறுத்து உணர்த்துதல் நுதலிற்று.

(இதன் பொருள்) கைக்கிளை முதல் ஆக பெருந்திணை இறுவாய் (ஆக) - கைக்கிளை என்று சொல்லப்படும் பொருள் முதலாகப் பெருந்திணை என்று சொல்லப்படும் பொருள் ஈறாக, எழுதிணை* முற்படக் கிளந்த என்ப-எழு பொருள் முற்படக் கூறப்பட்டன என்று சொல்வர்.

முதலா என்பது முதலாக என்னும் பொருள்பட நின்றது; விகாரம் எனினும் அமையும். இறுவாயாக என்பதன்கண் ஆக என்பது எஞ்சி நின்றது. எழுதிணையும் முற்படக் கிளந்த எனற்பாலது மொழிமாறி நின்றது. கிளந்த என்பது கிளக்கப்பட்டன என்னும் பொருள்பட வந்த முற்றுச்சொல். முற்படக்கிளந்த எழுதிணை கைக்கிளை முதலாகப் பெருந்திணை இறுதிய எனினும் இழுக்காது. "முற்படக் கிளந்த" என்றமையான், அவை ஏழும் அகப்பொருள் என்று கூறினருமாம்; அகம், புறம் எனப் பொருளை வரையறுத்தல் இவர் கருத்தாகலின். அன்னதாதல்,

> "அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந்தோர்
> புறத்திணை இலக்கணம் திறப்படக் கிளப்பின்" (புறத். க)

என்பதனுற் கொள்க.

முற்படக் கிளந்த எழுதிணை எனவே பிற்படக் கிளக்கப்படுவன எழுதிணை உள என்பது பெறுதும். அவையாவன, வெட்சி முதலாகப் பாடாண்டிணை ஈருகக் கிடந்த எழுதிணையும், இவ்வகையினன் இவ்வதிகாரத்திற் கூறப்பட்ட பொருள் பதினன்கு என்பதூஉம், அவையும்

> "வெட்சி தானே குறிஞ்சியது புறனே" (புறத். க)

எனவும்,

> 'வஞ்சி தானே முல்லையது புறனே" (புறத். சு)

எனவும், இவ்வாறு கூறுதலின் ஏழாகி அடங்கும் என்பதூஉம் கொள்க.

---

* "முற்படக் கூறப்பட்ட அகத்திணை ஏழென்று கூறுவர் ஆசிரியர் என்றவாறு"—நச்சினர்க்கினியர் உரை.

அஃதேல், மெய்ப்பாட்டியலானும் உவம இயலானும் செய்யுள் இயலானும் மரபு இயலானும் கூறப்பட்ட பொருள் யாதனுள் அடங்கும் எனின், அவை கருப்பொருளும் அப்பொருளாற் செய்யப்பட்டனவும் அப்பொருளின் குணம் முதலியனவும் அப்பொருளின் குறிப்பு நிகழ்ச்சியும் ஆதலின், அவையும் கருப்பொருளின்பால் நடுவண் ஐந்திணையுள் அடங்கும் என்ப. அவை சிறுபான்மை கைக்கிளை பெருந்திணையினும் வரும். அவ்வெழுதிணையும் ஆவன—கைக்கிளை, முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல், பெருந்திணை.

கைக்கிளை என்ற பொருண்மை யாதோ எனின், கை என்பது சிறுமைபற்றி வரும் அது தத்தம் குறிப்பிற் பொருள் செய்வதோர் இடைச்சொல்; கிளை என்பது உறவு; பெருமையில்லாத தலைமக்கள் உறவு என்றவாறு; கைக்குடை, கையேடு, கைவாள், கையொலியல், கைவாய்க்கால் எனப் பெருமையில்லாதவற்றை வழங்குபவாதலின்.

நடுவண் ஐந்திணைக்கண் நிலமும் காலமும் கருப்பொருளும் அடுத்துப் புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல் ஊடல் எனச் சொல்லப்பட்ட அவ் உரிப்பொருள், ஒத்த அன்பும் ஒத்த குலனும் ஒத்த வடிவும் ஒத்த குணனும் ஒத்த செல்வமும் ஒத்த இளமையும் உளவழி நிகழுமாதலின், அது பெருங் கிளைமை ஆயிற்று. முல்லை முதலாகிய ஐந்தும் முன்னர்க் கூறப்படும்.

பெருந்திணை நடுவண் ஐந்திணையாகிய ஒத்த காமத்தின் மிக்கும் குறைந்தும் வருதலானும், எண்வகை மணத்தினும் பிரமம் பிரசாபத்தியம் ஆரிடம் தெய்வம் என்பன அத்திணைப்பாற் படுதலானும், இந் நான்கு மணமும் மேன்மக்கள்மாட்டு நிகழ்தலானும், இவை உலகினுள் பெருவழக்கு எனப் பயின்று வருதலானும், அது பெருந்திணை எனக் கூறப்பட்டது. அஃதேல், நடுவண் ஐந்திணையாகிய ஒத்த கூட்டம் பெருவழக்கிற்றன்றோ எனின், அஃது அன்பும் குலனும் முதலாயின ஒத்துவருவது உலகினுள் அரிதாகலின் அருகியல்லது வாராது என்க.

இந் நூலகத்து ஒருவனும் ஒருத்தியும் நுகரும் காமத்திற்குக் குலனும் குணனும் செல்வமும் ஒழுக்கமும் இளமையும் அன்பும் * ஒருங்கு உளவழி இன்பம் உளதாம் எனவும், கைக்கிளை, ஒருதலை வேட்கை எனவும், பெருந்திணை ஒவ்வாக் கூட்டமாய் இன்பம் பயத்தல் அரிது எனவும் கூறுதலான், இந்நூலுடையார் காமத்துப் பயனின்மை உய்த்து உணர வைத்தவாறு அறிந்துகொள்க. (௧)

௨. அவற்றுள்,
நடுவண் ஐந்திணை நடுவண தொழியப்
படுதிரை வையம் பாத்திய பண்பே.

இது மேற் சொல்லப்பட்ட எழுதிணையும், நிலம்பெறுவன வரையறுத்து உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அவற்றுள் - மேற்சொல்லப்பட்ட எழுதிணையுள், நடுவணது ஒழிய - நடு எனப்பட்ட பாலை ஒழிய, நடுவண் ஐந்திணை - (கைக்கிளை பெருந்திணைக்கு) நடுவணதாகி நின்ற ஐந்

(பாடம்) * ஒழுங்கும்.

திணை, படுதிரை வையம் பாத்திய பண்பு-ஒலிக்கின்ற திரை கடல் சூழ்ந்த உலகம் பகுக்கப்பட்ட இயல்பு.

இதனாற் சொல்லியது, எழுவகைத்திணையினும் நிலம் பெறுவன நான்கு என்றவாறாயிற்று. நடுவணது பாலை என்று எற்றாற் பெறுதும் எனின், வருகின்ற சூத்திரங்களுள்,

'முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல்' (அகத். ௫)

என நிலம் பகுத்து ஓதினமையின், நடுவணது பாலை எனக் கொள்ளப்படும். நடுவுநிலைத் திணையெனினும் பாலை எனினும் ஒக்கும். பாலை என்னுங் குறியீடு எற்றாற்பெறுதும் எனின்,

'வாகை தானே பாலையது புறனே' (புறத். கரு)

என்பதனாற் பெறுதும். இச்சூத்திரத்துள் ஒழிய என்னும் வினையெச்சம் எவ்வாறு முடிந்தது எனின், அது பாத்திய என்னும் பெயரெச்சத்தோடு முடிந்தது. அப்பெயரெச்சம் பண்பு என்னும் பெயர்கொண்டு ஐந்திணை என்னும் எழுவாய்க்குப் பயனிலையாகி நின்றது என உரைப்ப.

இவ்வாறு உரைப்பவே, ஐந்திணை பண்பு என வருஉங் காலத்துப் பயன்பட நில்லாமையின் அஃது உரையன்று என்பார் உரைக்குமாறு:— ஒழிய என்பதனை எச்சப்படுத்தாது முற்றுப்படக் கூறி,

"படுதிரை வையம் பாத்திய பண்பு நடுவண தொழிய"

எனப் பொருள் உரைப்ப, அஃதேல் வினையெச்ச வாய்பாட்டால் வரும் முற்றுளவோ எனின்,

"வினையெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய" (எச்ச. ௬௧)

என்று முற்றுவாய்பாட்டால் வினையெச்சம் வருதலின் வினையெச்ச வாய்பாட்டால் முற்றுவரும் என்பதூஉம் அச்சூத்திரத்தின் அமைத்துக்கொள்ளப்படும் என்ப. இவ்வுரை இரண்டினும் ஏற்பது அறிந்துகொள்க.

'நடுவண் ஐந்திணை'. என்பன யாவை எனின் முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் என்பனவாம். எற்றுக்கு? இந்நூலகத்து அகமும் புறமும் ஆகிய உரிப்பொருள் கூறுகின்றாராதலான் புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என அமையுமே எனின், புறப்பொருட்கண் நிரைகோடலை வெட்சி எனக் குறியிட்டு ஆளுமாகலான் ஈண்டு இப்பொருளையும் முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என ஆளும் என்க. இதனாற் பயன் என்னையெனின், உரிப்பொருளே திணையென உணர்த்துவராயின் முதற்பொருளும் கருப்பொருளும் திணையாதல் தோன்றாதாம். அவை யெல்லாம் அடங்குதற்பொருட்டு முல்லை குறிஞ்சி பாலை மருதம் நெய்தல் என்றார் என்பது. அவை ஆமாறு வருகின்ற சூத்திரங்களான் விளங்கும். [ஏகாரம் ஈற்றசை.] (௨)

௩. முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே
நவலுங் காலை முறைசிறந் தனவே
பாடலுட் பயின்றவை நாடுங் காலை.

இது, மேற்சொல்லப்பட்ட நடுவண் ஐந்திணை ஆமாறும், ஒருவகையான் உலகத்துப் பொருள் எல்லாம் மூவகையாகி அடங்கும் என்பதூஉம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) பாடலுள் பயின்றவை நாடும் காலை—சான்றோர் செய்யுளகத்துப் பயின்ற பொருளை ஆராயுங்கால், முதல் கரு உரிப்பொருள் என்ற மூன்றே - முதற்பொருள் எனவும் கருப்பொருள் எனவும் உரிப்பொருள் எனவும் சொல்லப்பட்ட மூன்று பொருண்மையும் (காணப்படும்), நுவலுங்காலை முறை சிறந்தன - அவை சொல்லுங்காலத்து முறைமையாற் சிறந்தன.*

இச் சூத்திரத்துள் பாடலுட் பயின்ற பொருள் மூன்று என ஓதி அவற்றுள் உரிப்பொருள் என ஒன்றை ஓதினமையால், புறப்பொருளும் உரிப்பொருளாகியவாறு கண்டு கொள்க.

முறைமையாற் சிறத்தலாவது : யாதானும் ஒரு செய்யுட்கண் முதற்பொருளும் கருப்பொருளும் உரிப்பொருளும் வரின், முதற்பொருளால் திணையாகும் என்பதூஉம் முதற்பொருள் ஒழிய ஏனைய இரண்டுஞ் வரின் கருப்பொருளால் திணையாகும் என்பதூஉம், உரிப்பொருள் தானேவரின், அதனால் திணையாகும் என்பதூஉம் ஆம். அவை ஆமாறு முன்னர்க் காணப்படும் அஃதேல், ஒரு பொருட்கு ஒரு காரணம் கூறுது மூன்று காரணம் கூறியது என்னை எனின், உயர்ந்தோர் என்றவழிக் குலத்தினால் உயர்ந்தாரையும் காட்டும்; கல்வியான் உயர்ந்தாரையும் காட்டும்; செல்வத்தான் உயர்ந்தாரையும் காட்டும்; அதுபோலக் கொள்க. [முதல் ஏகாரம் பிரிநிலையாகவும், இரண்டாம் ஏகாரம் அசைநிலையாகவும் வந்தன.] (௩)

ச. முதல்எனப் படுவது நிலம்பொழு திரண்டின்
இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே.

இது, மேற்சொல்லப்பட்ட மூன்று வகைப் பொருளினும் முதற்பொருள் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) முதல் எனப்படுவது நிலம் பொழுது இரண்டின் இயல்பு - முதல் என்று சொல்லப்படுவது நிலமும் காலமும் ஆகிய அவ்விரண்டினது இயற்கை, எனமொழிப இயல்பு உணர்ந்தோர்-என்று சொல்லுவர் உலகின் இயல்பு உணர்ந்தோர்.

* 'முதலிற் கருவும் கருவில் உரிப்பொருளுஞ் சிறந்துவரும். இம் மூன்றும் பாடலுட் பயின்று வரும் எனவே வழக்கினுள் வேறு வேறு வருவதன்றி ஒருங்கு நிகழா என்பதூஉம், நாடுங்காலை யெனவே புலனெறி வழக்கிற் பயின்றவாற்றான் இம்மூன்றனையும் வரையறுத்துக் கூறுவதன்றி வழக்குநோக்கி இலக்கணம் கூறப்படாதென்பதூஉம் பெறுதும்; "நல்லுலகத்து வழக்குஞ் செய்யுளும் ஆயிரு முதலின்" (தொல்-பாயிரம்) என்று புகுந்தமையிற் பொருளும் அவ்விரண்டினும் ஆராய்தல் வேண்டுதலின். (நச்சி.) "முதல்கரு உரிப்பொருள் கொண்டே வருவது திணை."

இயற்கை என்பதனால் *செய்துகோடல் பெருமை அறிந்து கொள்க. நிலம் என்பதனால்பொருள்தோற்றுதற்கு இடமாகிய ஐம்பெரும் பூதமும் கொள்க. [ஏகாரம் ஈற்றசை]. (ச)

ரு. மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே.

**இது, நிறுத்தமுறையான் நிலத்தால் திணையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.**

(இ - ள்.) *மாயோன் மேய காடு உறை உலகமும்-மாயவன் மேவிய காடுபொருந்திய உலகமும், சேயோன் மேய மைவரை உலகமும் - முருகவேள் மேவிய மைவரை உலகமும், வேந்தன் மேய தீம்புனல் உலகமும் - இந்திரன் மேவிய தீம்புனல் உலகமும், வருணன் மேய பெருமணல் உலகமும் - வருணன் மேவிய பெருமணல் உலகமும், முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என சொல்லிய முறையால் சொல்லவும் படும் - முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச் சொல்லிய முறையினானே சொல்லவும் படும்.*

நிரனிறை. **உம்மை எதிர்மறையாகலான்** இம்முறையன்றிப் பிறவாய் பாட்டாற் சொல்லவும்படும் என்றவாறு. காடு நாடு மலை கடல் என்பதே பெருவழக்கு இன்னும் "சொல்லிய முறையாற் சொல்லவும் படும்" என்றதனான் இம்முறையன்றிச் சொல்லவும்படும்என்று கொள்க. அஃதாவது, அவற்றுள் யாதானும் ஒன்றை முன்னும் பின்னுமாக வைத்துக் கூறுதல். அது சான்றோர்செய்யுட் கோவையினும் பிறநூலகத்துங் கண்டுகொள்க இச் சூத்திரத்துள் காடுறை நிலம் என்னாது உலகம் என்றதனான் ஐவகைப் பூதத்தானும் ஐந்து இடம் என்பது உய்த்துணர வைத்தவாறு கண்டு கொள்க. †

---

* செய்துகோட் பெருமை.

† "முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என்ற முறை யென்னையெனின். இவ்வொழுக்க மெல்லாம் இல்லறம் பற்றியஒழுக்கமாதலின், கற்பொடு பொருந்திக் கணவன் சொற்பிழையாது இல்லிருந்து நல்லறஞ்செய்தல் மகளிரது இயற்கை முல்லையாதலின், அது முற்கூறப்பட்டது. எனவே, முல்லையென்ற சொற்குப் பொருள் இருத்தலாயிற்று. "முல்லை சான்ற முல்லையம் புறவின்" என்பவாகலின் புணர்தலின்றி இல்லறம் நிகழாமையிற் புணர்தற்பொருட்டு ஆகிய குறிஞ்சியை அதன்பின் வைத்தார். இதற்கு உதாரணம் இறந்தது. "கருங்காற் குறிஞ்சி சான்ற வெற்பணிந்து" என்பது கரு புணர்ச்சிப்பின் ஊடல் நிகழ்தலின் அதன்பின் மருதத்தை வைத்தார். "மருதஞ்சான்ற மருதத்தண்பணை" என்புழி மருதம் என்றது ஊடியுங் கூடியும் போகநுகர்தலை. பரத்தையிற்பிரிவுபோலப் பிரிவொப்புமை நோக்கி நெய்தலை ஈற்றின்கண் வைத்தார். நெய்தற் பறையாவது இரங்கற் பறையாதலின், நெய்தல் இரக்கமாம்."

—(தொல். அகத். ரு. நச்சி-உரை.)

முல்லை குறிஞ்சி என்பன இடுகுறியோ, காரணக்குறியோ எனின், ஏகதேச காரணம்பற்றி முதலாசிரியர் இட்டதோர் குறி என்று கொள்ளப் படும். என்னை காரணம் எனின்,

"நெல்லொடு,
நாழி கொண்ட நறுவீ முல்லை
அரும்பவிழ் அலரி தூஉய்" (முல்லைப்பாட்டு: அ - ௯0)

என்றமையால், காடுறை உலகிற்கு முல்லைப்பூ சிறந்தது ஆகலானும்,

"கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே" (குறுந். ௩)

என்றவழி மைவரை உலகிற்குக் குறிஞ்சிப்பூ சிறந்தது ஆகலானும்,

"இருஅல் *அருந்திய சிறுசிரல் மருதின்
தாழ்சினை உறங்குந் தண்துறை ஊர" (அகநா. உஅ௬)

என்றவழி, தீம்புனல் உலகிற்கு மருது சிறந்தமையானும்,

"பாசடை நிவந்த கணைக்கால் நெய்தல்
இனமீன் இருங்கழி ஓதம் மல்குதொறும்
கயமூழ்கு மகளிர் கண்ணின் மானும்." (குறுந். ௯)

என்றவழிப் பெருமணல் உலகிற்கு நெய்தல் சிறந்தமையானும் இந்நிலங் களை இவ்வாறு குறியிட்டார் என்று கொள்ளப்படும்.

பாலை என்பதற்கு நிலம் இன்றேனும், வேனிற்காலம்பற்றி வருதலின் அக்காலத்துத் தளிரும் சினையும் வாடுதலின்றி நிற்பது பாலை என்பதோர் மரம் உண்டாகலின், அச்சிறப்பு நோக்கிப் பாலை என்று குறியிட்டார். கைக்கிளை பெருந்திணை என்பனவற்றிற்கு நிலமும் காலமும், பகுத்து ஓதாமையின் இவ்வாறன்றிப் பிறிதோர் காரணத்தினற் குறியிட்டார். [ஏகாரம் ஈற்றசை.] (௫)

## ௬. காரும் மாலையும் முல்லை.

இனிக் காலத்தால் திணையாமாறு உணர்த்துவான் எடுத்துக் கொண்டார். இஃது அவற்றுள் முல்லைத்திணைக்குக் காலம் வரையறுத்து உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) காரும் மாலையும் முல்லை - கார்காலமும் மாலைப் பொழுதும் முல்லைத் திணைக்குக் காலமாம்.

காராவது மழை பெய்யுங்காலம். அஃது ஆவணித் திங்களும் புரட் டாசித் திங்களும். மாலையாவது, இராப்பொழுதின் முற்கூறு. †(௬)

(பாடம்) *வராஅல்.

†"முல்லைக்குக் காரும் மாலையும் உரியவாதற்குக் காரணம் என்னை? எனின், பிரிந்து மீளுந்தலைவன் திறமெல்லாம் பிரிந்திருந்த கிழத்தி கூறுதலே முல்லைப் பொருளாயும், பிரிந்து போகின்றான் திறங்கூறு வனவெல்லாம் பாலையாகவும் வருதலின், அம்முல்லைப் பொருளாகிய மீட்சிக்கும் தலைவி இருத்தற்கும் உபகாரப்படுவது கார்காலமாம். என்னை? வினைவயிற்பிரிந்து மீள்வோன் விரைபரித்தேருர்ந்து பாசறை

எ. *குறிஞ்சி, கூதிர் யாமம் என்மனார் புலவர்.

இது, குறிஞ்சிக்குக் காலம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) குறிஞ்சி - குறிஞ்சித் திணைக்குக் காலமாவது, கூதிர்யாமம என்மனார் புலவர்-கூதிர்க்காலமும் யாமப்பொழுதும் என்று கூறுவர் புலவர்.

கூதிராவது ஐப்பசித் திங்களும் கார்த்திகைத் திங்களும். யாமமாவது இராப்பொழுதின் நடுக்கூறு. (எ)

அ. பனிஎதிர் பருவமும் உரித்தென மொழிப.

இஃது, எய்தாதது எய்துவித்தல் நுதலிற்று.

(இ - ள்.) பனிஎதிர் பருவமும் உரித்து என மொழிப - (குறிஞ்சித் திணைக்கு) முன்பனிக்காலமும் உரித்தென்று சொல்லுவர்.

இதனைக் கூதிர்க்காலத்தோடு ஒருங்கு கூறாமையின், அத்துணைச் சிறப்பிற்று அன்றெனக் கொள்க. குறிஞ்சி என்றது அதிகாரத்தான் வந்தது.

முன்பனிக் காலமாவது மார்கழித் திங்களும் தைத் திங்களும். உம்மை இறந்தது தழீஇய எச்ச உம்மை. (அ)

கூ. †வைகறை விடியல் மருதம்.

இது, மருதத் திணைக்குக் காலம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) வைகறை விடியல் மருதம் - வைகறை விடியலும் மருதத்திற்குக் காலமாம்.

வைகறையாவது இராப்பொழுதின் பிற்கூறு. விடியலாவது. பகற்பொழுதின் முற்கூறு. பருவம் வரைந்தோதாமையின், அறுவகைப் பருவமும் கொள்ளப்படும். இது நெய்தற்கும் ஒக்கும். (கூ)

---

யினின்று மாலைக்காலத்து ஊர்வயின் வருஉங் காலம் ஆவணியும் புரட்டாதியும் ஆதலின். அவை வெப்பமுந் தட்பமும் மிகாது இடை நிகர்த்தவாகி ஏவல் செய்து வரும் இளையோர்க்கு நீரும் நிழலும் பயத்தலானும், ஆர்பதம் மிக்கு நீரும் நிழலும் பெறுதலிற் களிசிறந்து மாவும் புள்ளும் துணையோடின்புற்று விளையாடுவன கண்டு தலைவர்க்கும் தலைவிக்கும் காமக்குறிப்பு மிகுதலானும் என்பது. புல்லைமேய்ந்து கொல்லேற்றோடே புனிற்றுக் கன்றை நினைந்து மன்றிற் புகுதரவும் தீங்குழலிசைப்பவும் பந்தர்முல்லை வந்து மணங்களுற்றவும் வருகின்ற தலைவற்கும் இருந்த தலைவிக்கும் காமக்குறிப்புச் சிறத்தலின் அக்காலத்து மாலைப் பொழுதும் உரித்தாயிற்று." (தொல். அகத். ந். சு நச்சி. உரை)

* 6, 7, சூத்திரங்களை ஒரே சூத்திரமாக்குவர் நச்சினார்க்கினியர்.

† வைகுறு விடியல் (நச்.) கங்குல் வைகிய அறுதியாதல் நோக்கி வைகறை எனவும் கூறுப. (நச்.)

கo. *எற்பாடு,

நெய்தல் ஆதல் மெய்பெறத் தோன்றும்.

இது நெய்தற்றிணைக்குக் காலம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) எற்பாடு - எற்படுபொழுது, நெய்தல் ஆதல் மெய்பெற தோன்றும் - நெய்தற்றிணைக்குக் காலமாதல் பொருண்மை பெறத் தோன்றும்.

எற்பாடாவது பகற்பொழுதின் பிற்கூறு. (கo)

கக. நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு
முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே.

இது, பாலைக்குக் காலமும் இடனும் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) நடுவு நிலைத்திணை - நடுவு நிலைத்திணையாகிய பாலையாவது, நண்பகல் வேனிலொடு †முடிவுநிலைமருங்கின் முன்னிய நெறித்து - நண்பகற்பொழுது வேனிற் காலத்தொடு புணர்ந்து நின்றவழிக் கருதிய நெறியை உடைத்து.

இஃது, இளவேனில் முதுவேனில் என்னும் இருவகைப் பருவத்தின் கண்ணும் வரும். நண்பகற்பொழுது காலமாம் என்பதூஉம் ஆண்டு இயங்கும் நெறி நிலமாம் என்பதூஉம், உணர்த்தியவாறு.

இளவேனிலாவது சித்திரைத் திங்களும் வைகாசித் திங்களும். முதுவேனிலாவது ஆனித் திங்களும் ஆடித் திங்களும். நண்பகலாவது பகற்பொழுதின் நடுக்கூறு.

[முதல் ஏகாரம் பிரிநிலை, இரண்டாம் ஏகாரம் ஈற்றசை.] (கக)

கஉ. பின்பனி தானும் உரித்தென மொழிப.

இஃது எய்தாதது எய்துவித்தல் நுதலிற்று.

(இ - ள்.) பின்பனியும் உரித்து என மொழிப - பின்பனிக்காலமும் உரித்து என்று கூறுப (பாலைக்கு).‡

---

*9, 10 சூத்திரங்களை ஒரே சூத்திரமாக்குவர் நச்சினார்க்கினியர்.

† 'நிலை என்பது நிலத்தினை. முடிவு நிலைப்பகுதிக்கண் முன்னப்படும் எனவே அத்துணை ஆக்கமின்றி ஒழிந்த மருதமும் நெய்தலும் முடியா நிலமாய் அத்துணை முன்னப்படாதாயிற்று. இது பாலைக்கென்பதாம். எற்பாட்டுக்கு முன்னர்த்தாகிய நண்பகலைப் பாலைக்குக் கூறவேண்டிப் பின் வைத்தாரேனும் பெரும்பொழுதிற்கு முற்கூறுதலின், ஒருவாற்றாற் சிறுபொழுதாறும் முறையே வைத்தாராயிற்று. காலையும் மாலையும் நண்பகலன்ன கடுமைகூரச் சோலை தேம்பிக் கூவன்மாறி, நீரும் நிழலும் இன்றி நிலம் பயம் துறந்து, புள்ளும் மாவும் புலம்புற்று இன்பம் இன்றித் துன்பம் பெருகுவதொரு காலமாதலின், இன்பத்திற்கு இடையூறாகிய பிரிவிற்கு நண்பகலும் வேனிலும் சிறப்புடைத்தாயிற்று.'' (நச்சி.)

‡ ''பின் பனிக்கு நண்பகல் துன்பஞ்செய்யா தென்பதூஉம், அதற்குச் சிறுபொழுது வரைவில என்பதூஉம் கூறிற்று. (நச்சி.)

இது வேறுரேதினமையான், வேனில்போலச் சிறப்பு இன்றெனக் கொள்க. பின்பனியாவது மாசித் திங்களும் பங்குனித் திங்களும்.

அஃதற்றாக, இவ்வறுவகைப் பருவமும் அறுவகைப் பொழுதும் இவ்வைந்திணைக்கு உரியவாறு என்னையெனின், சிறப்பு நோக்கி என்க. என்னை சிறந்தவாறு எனின், முல்லையாகிய நிலனும், வேனிற் காலத்து வெப்பம் உழந்து மரனும் புதலும் கொடியும் கவினழிந்து கிடந்தன. புயல்கள் முழங்கக் கவின்பெறும் ஆகலின், அதற்கு அது சிறந்ததாம். மாலைப்பொழுது இந்நிலத்திற்கு இன்றியமையாத முல்லை மலருங்காலம் ஆதலானும், அந்நிலத்துக் கருப்பொருளாகிய ஆனிரை வருங்காலமாத லானும், ஆண்டுத் தனியிருப்பார்க்கு இவை கண்டுழி வருத்தம் மிகுத லின், அதுவும் சிறந்தது ஆயிற்று. குறிஞ்சிக்குப் பெரும்பான்மையும் களவிற் புணர்ச்சி பொருளாதலின், அப்புணர்ச்சிக்குத் தனி இடம் வேண்டுமன்றே. அது கூதிர்க்காலத்துப் பகலும் இரவும் நுண்துளிசிதறி இயங்குவார் இலராம் ஆதலான், ஆண்டுத் தலிப்படல் எளிதாகலின், அதற்கு அது சிறந்தது. நடுநாள் யாமமும் அவ்வாறாகலின் அதுவும் சிறந்தது. மருதத்திற்கு நிலன் பழனஞ்சார்ந்த இடமாதலான், ஆண்டு உறைவார் மேன்மக்களாதலின், அவர் பரத்தையிற் பிரிவுழி அம் மனை யகத்து உறைந்தமை பிறர் அறியாமை மறைத்தல்வேண்டி வைகறைக் கண் தம்மனையகத்துப் பெயரும்வழி, ஆண்டு மனைவி ஊடலுற்றுச் சார் கிலளாமாதலால், அவை அந்நிலத்திற்குச் சிறந்தன. நெய்தற்குப் பெரும் பான்மையும் இரக்கம் பொருளாதலின், தனிமையுற்று இரங்குவார்க்குப் பகற்பொழுதினும் இராப்பொழுது மிகுமாதலின், அப்பொழுது வருதற் கேதுவாகிய எற்பாடு கண்டார் இனி வருவது மாலையென வருத்த முறுதலின். அதற்கு அது சிறந்தது என்க.

பாலைப் பொருளாவது, பிரிவு. அப்பிரிவின்கண் தலைமகற்கு வருத்தம் உறும் என்று தலைமகன் கவலுங்கால், நிழலும் நீரும் இல்லாத வழி ஏகினர் எனவும் கவலுமாகலின், அதற்கு அது சிறந்தது என்க. [தான் என்பது அசை.] (கஉ)

கரு. இருவகைப் பிரிவும் நிலைபெறத் *தோன்றலும்
உரிய தாகும் என்மனார் புலவர்.

இது பாலைக்கு உரிய பொருளாம் ஆறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) இருவகைப் பிரிவும் - இருவகைப் பிரிவான தலை மகளைப் பிரிதலும் தலைமகளை உடன்கொண்டு தமர்வரைப் பிரி தலும்,† நிலைபெறத் தோன்றலும் — நிலைபெறத் தோன்றலும்,

---

(பாடம்) *தோன்றினும். (நச்சி.)

† இருவகைப் பிரிவு : காலிற் பிரிவு, கலத்திற் பிரிவு. கலத்திற் பிரிவு அந்தணர் முதலிய செந்தீ வாழ்நர்க்கு ஆகாமையின் வேளாளர்க்கே உரித்தென்றார். வேதவணிகரல்லாதார் கலத்திற் பிரிவு வேதநெறி யன்மையின் ஆராய்ச்சியின்று. இக்கருத்தானே இருவகை வேனிலும் நண்பகலும் இருவகைப் பிரிவிற்கும் ஒப்ப உரியவன்றிக் காலிற் பிரி வுக்குச் சிறத்தலும் கலத்திற் பிரிவிற்கு இளவேனிலொன்றும் காற்று மிகாத முற்பக்கத்துச் சிறுவரவிற்குய் வருதலுங் கொள்க. (நச்சி.)

உரியது ஆகும் என்மனார் புலவர் - பாலைக்கு உரிய பொருளாம் என்று கூறுவார் புலவர் (தமர்வரை - தமரைமட்டும்).

உம்மை எச்ச உம்மையாகலான், நிலைபெறத் தோன்றுது பிரிதற் குறிப்பு நிகழ்ந்துழியும் பாலைக்கு உரிய பொருளாம் என்று கொள்க. அதிகாரப்பட்டு வருகின்றது பாலையாகலின், இருவகைப் பிரிவும் பாலைக் குரிய பொருளாயின. (கக)

கச. திணைமயக் குறுதலும் கடிநிலை இலவே
நிலனொருங்கு மயங்குதல் இல்லென மொழிப
புலன்நன் குணர்ந்த புலமை யோரே.

இது மேல் அதிகரிக்கப்பட்ட நிலத்தினும் காலத்தினும் ஆகிய திணை மயங்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) *திணை மயக்குறுதலும் கடிநிலை இல* — ஒரு திணைக்கு உரிய முதற்பொருள் மற்றோர் திணைக்குரிய முதற் பொருளோடு சேரநிற்றலும் கட்டப்படாது,* *நிலன் ஒருங்கு மயங்குதல் இல் என மொழிப* - ஆண்டு நிலன் சேரநிற்றல் இல்லை என்று சொல்லுவர், *புலன் நன்கு உணர்ந்த புலமை யோர்* - புலன் நன்கு உணர்ந்த புலமையோர்.

எனவே, காலம் மயங்கும் என்றவாறாயிற்று. அதற்குச் செய்யுள் :

"தொல்லூழி தடுமாறித் தொகல்வேண்டும்† பருவத்தான்
பல்வயின் உயிரெல்லாம் படைத்தான்கட் பெயர்ப்பான்போல்
எல்லுறு தெறுகதிர் மடங்கித்தன் கதிர்மாய
நல்லற நெறிநிறீஇ உலகாண்ட அரசன்பின்
அல்லது மலைந்திருந் தறநெறி நிறுக்கல்லா
மெல்லியான் பருவம்போல் மயங்கிருள் தலைவர
எல்லைக்கு வரம்பாய இடும்பைகூர் மருள்மாலை;
பாய்திரை பாடோவாப் பரப்புநீர்ப் பனிக்கடல்
தூவறத் துறந்தனன் துறைவனென் றவன்திறம்
நோய்தெற உழப்பார்கண் இமிழ்தியோ எம்போலக்
காதல்செய் தகன்றாரை உடையையோ நீ;
மன்றிரும் பெண்ணை மடல்சேர் அன்றில்
நன்றறை கொன்றனர் அவரெனக் கலங்கிய
என்துயர் அறிந்தனை நரறியோ எம்போல
இன்துணைப் பிரிந்தாரை உடையையோ நீ;

* ஒரு நிலமே மயங்குமாறாயிற்று. உரிப்பொருள் மயக்குறுதல் என்னாது திணை மயக்குறுதலும் என்றார், ஓர் உரிப் பொருளோடு ஓர் உரிப்பொருள் மயங்குதலும், ஓர் உரிப்பொருள் நிற்றற்கு உரிய இடத்து ஓர் உரிப்பொருள் வந்து மயங்குதலும், இவ்வாறே காலம் மயங்குதலும் கருப்பொருள் மயங்குதலும் பெறுமென்றற்கு; திணையென்றது அம் மூன்றனையுங் கொண்டே நிற்றலின். (நச்சி.)

(பாடம்) † பருவத்தாற்.

பனியிருள் சூழ்தரப் பைதலஞ் சிறுகுழல்
இனிவரின் உயருமன் பழியெனக் கலங்கிய
தனியவர் இடும்பைகண் டினைதியோ எம்போல
இனியசெய் தகன்றுரை உடையையோ நீ ;

எனவாங்கு,

அழிந்தயல் அறிந்த எவ்வம் மேற்படப்
பெரும்பே துறுதல் களைமதி பெரும!
வருந்திய செல்லல்தீர் திறனறி ஒருவன்
மருந்தறை கோடலிற் கொடிதே யாழநின்
அருந்தியோர் நெஞ்சம் அழிந்துக விடினே" (கலி-நெய். கஉ)

எனவரும்

[முதல் ஏகாரம் அசைநிலை. இரண்டாம் ஏகாரம் ஈற்றசை.] (கச)

கரு. உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே.

இஃது எய்தாதது எய்துவித்தல் நுதலிற்று.

(இ - ள்.) உரிப்பொருள் அல்லன - உரிப்பொருள் அல்லாத கருப்பொருளும் முதற்பொருளும், மயங்கவும் பெறும் - *மற்றொரு திணையொடு சேர நிற்கவும் பெறும்.

உம்மை எதிர்மறை யாகலான் மயங்காமை பெரும்பான்மை. எனவே,

"உய்த்துக் கொண்டுணர்தல்" (மரபு. ககo)

என்னும் தந்திர உத்தியான் எடுத்தோதிய காலமாகிய முதற்பொருளும். பூவும் புள்ளுமாகிய கருப்பொருளும் மயங்கியும் மயங்காமையும் வரும், எனவே, உரிப்பொருள் மயங்கிவராது என்றவாறு. மயங்கி வருதல் கலி முதலாகிய சான்றோர் செய்யுளகத்துக் கண்டுகொள்க.

"ஒண்செங் †கழுநீர்க் கண்போல் ஆயிதழ்
ஊசி போகிய சூழ்செய் மாலையன்
பக்கம் சேர்த்திய செச்சைக் கண்ணியன்
‡குயமண் டாகம் செஞ்சாந்து நீவி" (அகநா. சஅ)

என்றவழி, மருதத்திற்குக் கருப்பொருளாகிய கழுநீரும் குறிஞ்சிக்குரிய வெட்சிப் பூவும் அணிந்தோன் என்றமையாற் கருப்பொருள் மயக்கமாயிற்று. பிறவும் அன்ன. (கரு)

கசு. புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் §அவற்றின் நிமித்தம் என்றிவை
$தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே.

---

(பாடம்) *நால்வகை நிலத்தும். †கழுநீர்த் தண்போல். ‡குய் மண்டாகம். § இவற்றின். (நச்சி)

$தேருங்காலை என்றதனாற் குறிஞ்சிக்குப் புணர்ச்சியும். பாலைக்குப் பிரிவும், முல்லைக்கு இருத்தலும், நெய்தற்கு இரங்கலும், மருதத்திற்கு ஊடலும் அவ்வந் நிமித்தங்களும் உரித்தென்று ஆராய்ந்துணர்க. (நச்சி)

இஃது உரிப்பொருள் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் அவற்றின் நிமித்தம் என்று இவை - புணர்தலும், பிரிதலும், இருத்தலும், இரங்கலும், ஊடலும், அவற்றின் நிமித்தமும் என்று சொல்லப்பட்ட இவை, தேருங் காலை திணைக்கு உரிப்பொருள் - ஆராயுங்காலத்து ஐந்திணைக்கும் உரிப் பொருளாம்.

பிரிவு பாலைக்கு உரித்தாமாறு மேற்சொல்லப்பட்டது. 'ஏனைய மொழிந்த பொருளோ டொன்றவைத்தல்' (மரபு. கக0) என்னும் தந்திர உத்தியால், புணர்தல் என்பது குறிஞ்சிக்கும், இருத்தல் என்பது முல்லைக் கும், இரங்கல் என்பது நெய்தற்கும், ஊடல் என்பது மருதத்திற்கும் பெரும்பான்மையும் உரித்தாகவும் சிறுபான்மை எல்லாப் பொருளும், எல்லாத் திணைக்கும் உரித்தாகவும். கொள்ளப்படும். இருத்தலாவது, தலைமகன் வருந்துணையும் ஆற்றியிருத்தல். இரங்கலாவது ஆற்றாமை. என்று என்பது எண்ணிடைச்சொல், ஏகாரம் - ஈற்றசை. (கசு)

கஎ. கொண்டுதலைக் *கழிதலும் பிரிந்தவண் †இரங்கலும்
உண்டென மொழிப ஓரிடத் தான.

இதுவும், ஒருசார் உரிப்பொருள் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) கொண்டு தலைக்கழிதலும் (உண்டு) பிரிந்து அவண் இரங்கலும் உண்டு - கொண்டுதலைக் கழிதலும் உண்டு,‡ பிரிந்து அவண் இரங்கலும் உண்டு. ஓர் இடத்தான என மொழிப - ஒரோ இடத்துக்கண் என்று கூறுப.

உண்டு என்பதை இரண்டிடத்தும் கூட்டுக. அன்றியும் உண் டென்பதனை இல்லென்பதன் மாறுக்கி விரிவுத்திணையாக்கிப் பொதுப் பட நின்றது எனவுமாம். ஓரிடத்து என்றமையான், மேற்சொல்லப் பட்ட ஐவகை உரிப்பொருளும்போல் எல்லாத் திணைக்கும் பொதுவாகி வருதலின்றி, கொண்டு தலைக்கழிதல் பாலைக்கண்ணும், பிரிந்தவண் இரங்கல் பெருந்திணைக் கண்ணும் வரும் என்று கொள்க. கொண்டு தலைக்கழிதலாவது உடன்கொண்டு பெயர்தல். அது, நிலம் பெயர்தலின் புணர்தலின் அடங்காமையானும். உடன்கொண்டு பெயர்தலின் பிரித லின் அடங்காமையானும், வேறு ஓதப்பட்டது. பிரிந்தவண் இரங்கலாவது, ஒருவரை ஒருவர் பிரிந்த இடத்து இரங்கல். அது நெட்டாறு சென்ற வழி இரங்குதல் இன்மையானும், ஒருவழித் தணந்த வழி ஆற்றுதலின்றி வேட்கை மிகுதியால் இரங்குதலானும், வேறு ஓதப்பட்டது. (இதற்கு)

(பாடம்) *கழியினும் † இரங்கினும்.

‡இல்லிருந்து செந்தீயோம்பல் வேளாளர்க்கு இன்மையிற்கொண்டு தலைக்கழிதல் அவர்க்கு உரியதாயிற்று. ஒழிந்த மூன்று வருணத்தோரும் தமக்கு உரிய பிரிவின்கண் செந்தீ ஓம்புவாரை நாட்டிப்பிரிப, ஆகலான் அவர்க்கு ஏனைய பிரிவுகள் அமைந்தன. (நச்சி.)

ஏறியமடற்றிறமும், தேறுதல் ஒழிந்த காமத்துமிகுதிறமும் முதலாயின பொருள். இது பெருந்திணைக்கு உரித்து. [இடத்தான் என்பது வேற்றுமை மயக்கம், ஈற்றகரம் சாரியை.] (கஎ

கஅ. கலந்த பொழுதும் *காட்சியும் அன்ன.

இதுவும் அது

(இ - ள்.) கலந்த பொழுதும் - தலைவனைக் கண்ணுற்ற வழி மனநிகழ்ச்சி உளதாங்காலமும், (அதன்) பின்னர்க் குறிப் பறியுந் துணையும் நிகழும் நிகழ்ச்சியும், காட்சியும் - தலைவியை எதிர்ப்படுதலும், அன்ன - ஓரிடத்து நிகழும் உரிப்பொருள்.

கலந்த பொழுது என்பது, தலைமகளைக் கண்ணுற்றவழி மனநிகழ்ச்சி யுளதாங் காலம்; அக் காட்சிப் பின்னர்க்குறிப்பறியுந் துணையும் நிகழும் நிகழ்ச்சி. காட்சியாவது, தலைவியை எதிர்ப்படுதல். குறிப்பறிந்த பின் னர்ப் புணருந்துணையும் நிகழும் முன்னிலையாக்கல் முதலாயின புணர்தல் நிமித்தம் இவை அந்நிகரனவன்றிப் பொதுப்பட நிற்றலின் வேறு ஓதப்பட்டன. அன்ன என்பது (இவையும்) ஓர் இடத்து நிகழும் உரிப் பொருள் என்றவாறு. ஓரிடமாவது கைக்கிளை.

அஃதேல், இவையும் புணர்தல் நிமித்தம் ஆயினல் வரும் குற்றம் என்னை எனின், ஒருவன் ஒருத்தியை எதிர்ப்பட்டுழிப் புணர்ச்சி வேட்கை தோற்றலும் தோற்றாமையும் உண்மையின், காட்சி பொதுப்படநின்றது. ஐயம் முதலாகக் குறிப்பறிதல், ஈறாக நிகழும் மனநிகழ்ச்சி தலைமகள் மாட்டுக் காமக் குறிப்பு இல்வழிக். காமக்குறிப்பு உணராது கூறுதலின் புணர்தல் நிமித்தம் அன்றாயிற்று. (கஅ)

கக. முதல்எனப் படுவ தாயிரு வகைத்தே.

இதுவும், ஐயம் அறுத்தலை நுதலிற்று.

(இ - ள்.) முதல் எனப்படுவது - மேல் எடுத்தோதப்பட்ட வற்றில் முதல் என்று சொல்லப்படுவது, ஆ இருவகைத்து - நிலமும் காலமும் ஆகிய அவ்விருவகையை உடையது.

எனவே, ஏனையவெல்லாம் உரிப்பொருள் என்றவாறும். இதனாற் பெற்றது என்னை எனின், முதல் கரு உரிப்பொருள் என அதிகரித்து வைத்தார்; இனிக் கருப்பொருள் கூறுகின்றார்; உரிப்பொருள் யாண்டுக் கூறினர் என ஐயம் நிகழும்; அது விடுத்தல் என்க. சுட்டு நீண்டு நின்றது.] (கக)

உ0. தெய்வம் உணவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருவென மொழிப.

இது கருப்பொருள் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

*முன்னர்க் கூதிரும் யாமமும் முன்பனியும் சிறந்த தென்றது இயற்கைப் புணர்ச்சிப் பின்னர் களவொழுக்கம் நிகழ்தற்குக் காலம் என்றுணர்க. (நச்சி.)

(இ - ள்.) தெய்வம் உணா மா மரம் புள் பறை செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ - தெய்வம் முதலாகச் சொல்லப் பட்டனவும், அவ்வகை பிறவும் கரு என மொழிப - அத்தன்மைய பிறவும் கருப்பொருள் என்று கூறுப.

அவையாவன முதற்பொருட்கண் தோன்றும் பொருள்கள்.

"மாயோன் மேய காடுறை உலகம்" (அகத். ரு)

என்றதனால்,

முல்லைக்குத் தெய்வம் கண்ணன்.

"காடுறை உலகம்"

என்றதனானும்,

"காரும் மாலையும் முல்லை" (அகத். சு)

என்றதனானுங், காட்டினும் கார்காலத்தினும் மாலைப்பொழுதினும் நிகழ் பவை கொள்க.

"எந்நில மருங்கிற் பூவும் புள்ளும்
அந்நிலம் பொழுதொடு வாரா ஆயினும்" (அகத். உக)

என்றதனுலும், நிலமும் காலமும்பற்றி வருவன கருப்பொருள் என்பது உணர்க.

உணவு - வரகும் முதிரையும். மா - மானும் முயலும். மரம் - கொன்றையும், குருந்தும் புதலும். புள் - கானங்கோழி. பறை - ஏறு கோட்பறை. செய்தி - நிரை மேய்த்தல். யாழின் பகுதி என்பது பண். அது சாதாரி. பிறவும் என்றதனால், பூ - முல்லையும் பிடவும் தளவும். நீர் - கான்யாறு. பிறவும் இந்நிகரன கொள்க.

குறிஞ்சிக்குத் தெய்வம் முருகவேள். மைவரை யுலகமும் கூதிர்க் காலமும் நள்ளிருளும் கூறினமையான், அந்நிலத்தினும் காலத்தினும் நிகழ்பவை கொள்க. உணவு - தினையும் ஐவனமும் வெதிர் நெல்லும். மா - யானையும், புலியும், பன்றியும், கரடியும். மரம் - வேங்கையும் கோங்கும். புள் - மயிலும், கிளியும். பறை - வெறியாட்டுப் பறையும், தொண்டகப் பறையும். செய்தி - தேனழித்தல். பண் - குறிஞ்சி. பிற வும் என்றதனால், பூ - வேங்கைப்பூவும், காந்தட்பூவும், குறிஞ்சிப் பூவும். நீர் - சுனை நீரும், அருவி நீரும். பிறவும் அன்ன.

பாலைக்கு நிலம் ஓதாது வேனிற்காலமும் நண்பகலும் ஓதினமை யானும்,

"முல்லையும் குறிஞ்சியும் முறைமையிற் றிரிந்து
நல்லியல் பிழந்து நடுங்குதுயர் உறுத்துப்
பாலை என்பதோர் படிவம் கொள்ளும்"

(சிலப். காடுகாண். சுச-சுசு)

எனப் பிற சான்றோர் செய்யுள் அகத்து வருதலானும், இந்நிலங்களில் வேனிற் காலத்து நிகழ்வன, கருப்பொருளாகக் கொள்ளப்படும். தெய் வம் - கொற்றவை. உணவு - ஆறலைத்தலான் வரும் பொருள். மா - வலி யழிந்த யானையும், வலியழிந்த புலியும், வலியழிந்த செந்நாயும். மரம் பாலை. இருப்பை, கள்ளி, சூரை. புள் - எருவையும், பருந்தும். பறை -

ஆறலைப்பறையும், சூறைகொண்ட பறையும். செய்தி - ஆறலைத்தல். பண் - பாலை. பிறவும் என்றதனால், பூ - மராம்பூ. நீர் - அறுநீர்க் கூவலும் அறுநீர்ச் சுனையும். பிறவும் இந்நிகரன கொள்க.

மருதத்திற்குத் தெய்வம் இந்திரன்; 'தீம்புனல் உலகம்' (அகத். ரு) எனவும், 'வைகறை விடியல்' (அகத்-சு) எனவும், ஓதினமையால், அவ்விடத்தினும் காலத்தினும் நிகழ்பவை கொள்க.

உணவு - நெல். மா - எருமையும், நீர்நாயும். மரம் - மருதும், காஞ்சியும். புள் - அன்னமும் அன்றிலும். பறை - *நெல்லரி பறை. செய்தி - உழவு. பண் - மருதம். பிறவும் என்றதனால், பூ - தாமரையும் கழுநீரும். நீர் - ஆற்றுநீரும் பொய்கை நீரும். பிறவும் அன்ன.

நெய்தற்குத் தெய்வம் வருணன். 'மணல் உலகம்' (அகத். ரு) என்றதனானும், 'எற்பாடு' (அகத். க0) என்றதனானும், ஆண்டு நிகழ்பவை கொள்க. உணவு - உப்பு விலையும் மீன் விலையும். மா - கராவும் சுறவும். மரம் - புன்னையும் கைதையும். புள் - கடற்காக்கை. பறை - நாவாய்ப் பறை. செய்தி - மீன்படுத்தலும் உப்புவிளைத்தலும். பண் - செவ்வழி. பிறவும் என்றதனால், பூ - நெய்தல். நீர் - கேணி நீரும் கடல் நீரும். பிறவும் அன்ன. (உ0)

உக எந்நில மருங்கிற் பூவும் புள்ளும்
அந்நிலம் பொழுதொடு வாரா வாயினும்
வந்த நிலத்தின் பயத்த ஆகும்.

இது, மேலதற்கு ஒரு புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) எ நிலமருங்கின் பூவும் புள்ளும் - யாதானும் ஒரு நிலத்திற் குரிய பூவும் புள்ளும், அ நிலம் பொழுதொடு வாராவாயினும் - அந்நிலத்தொடும் பொழுதொடும் வந்தில வாயினும், வந்த நிலத்தின் பயத்த ஆகும் - வந்த நிலத்தின் பயத்த ஆகும்.

"வந்தது கொண்டு வாராதது முடித்தல்" (மரபு. ககஉ) என்பதனால் சிறுபான்மை ஏனையவும் வந்தவழிக் கண்டுகொள்க: இவ்வாறு வருவன திணை மயக்கம் அன்றென்றவாறு.* (உக)

உஉ. பெயரும் வினையுமென்று ஆயிரு வகைய
திணைதோறும் மரீஇய திணைநிலைப் பெயரே.

இதுவும் கருப்பொருளின் பாகுபாடாகிய மக்கட்டிறம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) பெயரும் வினையும் என்று அ இருவகைய—குலப் பெயரும் தொழிற்பெயரும் என அவ்விருவகைப்படும், திணை தொறும் மரீஇய திணைநிலைப்பெயர் - திணைதொறும் மருவிப் போந்த திணைநிலைப்பெயர்.

*"வினைசெய் இடத்தின் நிலத்தின் காலத்தின்" (தொல். சொல். 81) "நிலத்தின் பயத்தவாமெனப் பொழுதினையும் நிலம் என்றார்" (நச்சி.)

திணைநிலைப்பெயர் என்றதனான் அப்பெயருடையார் பிற நிலத்து இலர் என்று கொள்ளப்படும். அதனானே எல்லா நிலத்திற்கும் உரியராகிய மேன்மக்களை ஒழித்து நிலம்பற்றி வாழும் கீழ்மக்களையே குறித்து ஓதினார் என்று கொள்க. பெயர் என்றதனால் பெற்ற தென்னை? மக்கள் என அமையாதோ? எனின், மக்களாவார் புள்ளும் மாவும்போல வேறு பகுக்கப்படார், ஒரு நீர்மைய ராதலின். அவரை வேறுபடுக்குங்கால் திணைநிலைப்பெயரான் அல்லது வேறுபடுத்தல் அருமையின், பெயர் என்றார். [சுட்டு நீண்டு நின்றது ஏகாரம் - ஈற்றசை. திணைநிலைப் பெயர் எனவும் பாடம்.] (உஉ)

உ௩. ஆயர் வேட்டுவர் ஆடூஉத் திணைப்பெயர்
ஆவயின் வரூஉம் கிழவரும் உளரே.

இது, நிறுத்தமுறையானே முல்லைக்குரிய மக்கட்பெயர் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஆடூஉ திணைப்பெயர் ஆயர் வேட்டுவர் - ஆண் மக்களைப்பற்றி வரும் திணைப்பெயர் ஆயர் எனவும் வேட்டுவர் எனவும் வரும். ஆ வயின் வரும் கிழவரும் உளர் - அவ்விடத்து வரும் கிழவரும் உளர்.

ஆயர் என்பார் நிரைமேய்ப்பார். வேட்டுவர் என்பவர் வேட்டைத் தொழில் செய்வார். அஃது எயினர் என்னும் குலப்பெய ருடையார் மேல் தொழிற்பெயராகி வந்தது. "வந்தது கொண்டு வாராதது முடித்தல்" (மரபு. ககஉ) என்பதனான் ஆய்ச்சியர் எனவும் கொள்க. அவ்விரு திறத்தாரும் காடுபற்றி வாழ்தலின் அந்நிலத்தின் மக்களாயினார். அவ்வயின் வருஉம் கிழவர் இருவகையர், அந்நிலத்தை ஆட்சிபெற்றோரும், அந் நிலத்து உள்ளோரும் என. 'குறும்பொறைநாடன்' என்பதுபோல்வன ஆட்சிபற்றி வரும் 'பொதுவன் ஆயன்' என்பன குலம்பற்றி வரும். [சுட்டு நீண்டு இசைத்தது. ஏகாரம் ஈற்றசை] (உ௩)

உச. ஏனோர் மருங்கினும்* எண்ணுங் காலை
ஆஅ வகைய திணைநிலைப் பெயரே.

இது குறிஞ்சி முதலாய திணைக்கண் வரும் திணைநிலைப்பெயர் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஏனோர் மருங்கினும் எண்ணும் காலை - ஏனை நிலத்துள்ள மக்கண்மாட்டும் ஆராயுங் காலத்து, ஆன் ஆ வகைய திணை நிலைப்பெயர் - அவ்விடத்து அவ்வகைய திணைநிலைப்பெயர்.

என்றது, திணைதொறும் குலப்பெயரும் தொழிற்பெயரும் கிழவர் பெயரும் வரும் என்றவாறு. ஆன் என்பது அவ்விடம்; அ என்னும் சுட்டு நீண்டிசைத்தது. அவை வருமாறு:—குறிஞ்சிக்கு மக்கட்பெயர் குறவன் குறத்தி என்பன; தலைமக்கட்பெயர், மலைநாடன் வெற்பன் என்பன. பாலைக்கு மக்கட்பெயர், எயினர் எயிற்றியர் என்பன; தலைமக்கட் பெயர், மீளி விடலை என்பன. மருதத்திற்கு மக்கட்பெயர், உழவர்

(பாடம்) *பாங்கினும்.

உழத்தியர் என்பன; தலைமக்கட்பெயர் ஊரன் மகிழ்நன் என்பன. நெய்தற்கு மக்கட்பெயர் நுளையர் நுளைச்சியர் என்பன; தலைமக்கட் பெயர் சேர்ப்பன் துறைவன் கொண்கன் என்பன; பிறவும் அன்ன. [ஏகாரம் ஈற்றசை.]

'கைக்கிளை முதலா' (அகத். க) என்னும் சூத்திரம் முதலாக இத்துணையும் கூறப்பட்டது. நடுவணைந்திணை நிலத்தானும் காலத்தானும் கருப்பொருளானும் உரிப்பொருளானும் நிலமக்களானும் தலைமக்களானும் வரும் எனவும், அவை இலக்கண நெறியானும் வழக்குநெறியானும் வரும் எனவும், கைக்கிளை பெருந்திணை உரிப்பொருளான் வரும் எனவும் அகத்திணை ஏழிற்கும் இலக்கணம் ஓதியவாறு,

## உதாரணம்

### முல்லைத்திணைக்குச் செய்யுள்

"முல்லை வைந்நுனை தோன்ற இல்லமொடு
பைங்காற் கொன்றை மென்பிணி அவிழ
இரும்பு திரித்தன்ன மாயிரு மருப்பிற்
பரலவல் அடைய இரலை தெறிப்ப
மலர்ந்த ஞாலம் புலம்புபுறக் கொடுப்பக்
கருவி வானம் கதழுறை சிதறிக்
கார்செய் தன்றே கவின்பெறு கானம்
குரங்குளைப் பொலிந்த கொய்சுவற் புரவி
நரம்பார்த் தன்ன* வாங்குவள் பரியப்
பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த
தாதுண் பறவை பேதுறல் அஞ்சி
மணிநா ஆர்த்த மாண்வினைத் தேரன்
உவக்காண் † தோன்றும் குறும்பொறை நாடன்
கறங்கிசை விழவின் உறந்தைக் குணது
நெடும்பெருங் குன்றத்து அமன்ற காந்தள்
போதவிழ் அலரின் நாறும்
ஆய்தொடி அரிவைநின் மாணலம் படர்ந்தே." (அகம். ௪)

இதனுள், முல்லைக்கு உரித்தாகிய நிலமும் காலமும் கருப்பொருளும் இருத்தலாகிய உரிப்பொருளும் வந்தவாறு கண்டுகொள்க

"இல்லொடு மிடைந்த கொல்லை முல்லைப்
பல்லான் கோவலர் பையுள் ஆம்பல்
புலம்புகொள் மாலை கேட்டொறும்
கலங்குங்கொல் அளியள்நங் காத லோளே"

என்பதும் அது.

"திருநகர் விளங்கு மாசில் கற்பின்
அரிமதர் மழைக்கண் மாஅ யோளொடு
நின்னுடைக் கேண்மை யென்னோ முல்லை
இரும்பல் கூந்தல் நாற்றமும்
முருந்தேர் வெண்பல் ஒளியுநீ பெறவே."

(பாடம்) *நரம்பார்ப்பன்ன. † உதுக்காண்.

இது, முதற்பொருள் வாராது கருப்பொருளானும் உரிப்பொருளானும் முல்லையாயினவாறு.

"கரந்தை விரைஇய தண்ணறுங் கண்ணி
இளையர் ஏல் இயங்குபரி கடைஇப்*
பகைமுனை வலிக்குந் தேரொடு
வினைமுடித் தனர்நங் காதலோரே"

இது, முதலும் கருவும் இன்றி உரிப்பொருளான் முல்லையாயிற்று.

"கதிர்கை யாக வாங்கி ஞாயிறு
பைதறத் தெறுதலின் பயங்கரந்து* மாறி
விடுவாய்ப் பட்ட வியங்கண் மாநிலம்
காடுகவின் எதிரக்† கனைபெயல் பொழிதலின்
பொறிவரி யினவண் டார்ப்பப் பலவுடன்
நறுவீ முல்லையொடு தோன்றி தோன்ற
வெறியேன் றன்றே‡ வீகமழ் கானம்
எவன்கொல் மற்றவர் நிலையென மயங்கி
இகுபனி§ உறைக்குங் கண்ணொடு இனைபாங்கு
இன்னாது உறைவி தொன்னலம் பெறூஉம்
இதுநற் காலம் காண்டிசின் பகைவர்
மதில்முகம் முருக்கிய தொடிசிதை மருப்பிற்$
கந்துகால் ஒசிக்கும் யானை
வெஞ்சின வேந்தன் வினைவிடப் பெறினே." (அகம். ௧௬௪)

இது பிரிதற் பகுதியாகிய பாசறைப்புலம்பல் எனினும் நிலம்பற்றி முல்லையாயிற்று.

"மலிதிரை யூர்ந்துதண் மண்கடல் வெளவலின்" (கலி. முல்லை, ௪) என்னும் முல்லைக்கலி, புணர்தற்பொருண்மைத்தாயினும் முல்லைக்குரிய கருப்பொருளான் வருதலின் முல்லையாயிற்று. பிறவும் அன்ன.

குறிஞ்சித்திணைக்குச் செய்யுள்

"விடிந்த ஞாலம் கவின்பெறத் தலைஇ
இடிந்த வாய எவ்வங் கூர
நிலமலி தண்துளி தவிராது புலந்தாய்
நீர்மலி கடாஅம் செருக்கிக் கார்மலைந்து
கனைபெயல் பொழிந்த நள்என் யாமத்து
மண்புரை மாசுணம் விலங்கிய நெறிய
மலைஇ மணந்த மயங்கரி லாரலிற்
நிலைபொலிந் திலங்கு வைவே லேந்தி
இரும்பிடி புணர்ந்த செம்மல் பலவுடன்
பெருங்களிற்றுத் தொழுதியோ டெண்குநிரை இரிய
நிரம்பா நெடுவரை தத்திக் குரம்பமைந்து
ஈண்டுபயில் எறும்பின் இழிதரும் அருவிக்
குண்டுநீர் மறுசுழி நீந்தி ஒண்தொடி
அலமரல் மழைக்கண் நல்லோள் பண்புநயந்து

(பாடம்) * பயங்கண். † எய்தக். ‡ வெறிவென்றன்றே.
§ இரும்பனி. $ மதின் மூடு கதவ முருக்கிய மருப்பிற்.

சுரன்முத லாரிடை நீந்தித் தந்தை
வளமனை ஒருசிறை நின்றனே மாகத்
தலைமணைப் படலைத் தண்கமழ் நறுந்தாது
ஊதுவண் டிமிரிசை யுணர்ந்தனள் சீறடி
அரிச்சிலம் படக்கிச் சேக்கையின் இயலிச்
செறிநிணை நல்லில் எறிகத வுயவிக்
காவலர் மடிபத நோக்கி ஒவியர்
பொறிசெய் பாவையி னறிவுதளர் பொல்கி
அளக்க ரன்ன வாரிருள் துமிய
விளக்குநிமிர் பணைய மின்னிப் பாம்பு
படவரைச் சிமையக் கழலுறு மேரு
டிணைப்பெய வின்னலங் கங்குலும் வருபவோ வென்றுதன்
மெல்விரல் சேப்ப நொடியின ணல்யாழ்
வடியுறு நரம்பிற் றீவிய மிழற்றித்
திருகுபு முயங்கி யோளே வென்வேற்
களிறுகெழு தானைக் கழறொடி மலையன்
ஒளிறுநீ ரடுக்கங் கவைஇய காந்தள்
மணங்கமழ் முள்ளூர் மீமிசை
அணங்குகடி கொண்ட மலரினுங் கமழ்ந்தே.''

இது, முதலும் கருவும் புணர்தலாகிய உரிப்பொருளும் வந்த குறிஞ்சிப் பாட்டு.

''நறைபடர்* சாந்தம் அறவெறிந்து நாளால்
உறையெதிர்ந்து வித்தியஊழ்† ஏனற் - பிறையெதிர்ந்து
தாமரைபோல் வாண்முகத்துத் தாழ்குழலீர் காணீரோ
ஏமரை போந்தன வீண்டு.'' (திணைமாலை நூற். க)

இது, முதற்பொருள் இன்றிக் கருப்பொருளும் உரிப்பொருளும் வந்தமையாற் குறிஞ்சித் திணையாயிற்று.

''முதுக்குறைந் தனளே முதுக்குறைந் தனளே
மலையன் ஒள்வேற் கண்ணி
முலையும் வாரா முதுக்குறைந் தனளே.''

இஃது உரிப்பொருள் ஒன்றுமே வந்த குறிஞ்சிப்பாட்டு.

''பருவ மென்திணை பாலும் பெய்தன
கருவிரற் கிள்ளை கடியவும் போகா
பசிமு தந்திக் கடைவன வாடப்
பாசிப் பக்கப் பனிநீர்ப் பைஞ்சுனை
விரியிதழ்க் குவளை போல வில்லிட்டு
எரிசுடர் விசும்பின் ஏறெழுந்து முழங்கக்
குன்றுபனி கொள்ளுஞ் சாரல்
இன்றுகொல் தோழி அவர்சென்ற நாட்டே.''

இஃது இருத்தற்பொருண்மைக்கண் வந்ததேனும், முதற்பொருளானும் கருப்பொருளானும் குறிஞ்சியாயிற்று.

(பாடம்) * பரந்த. † ஞேழ்.

"வாடாத சான்றோர் வரவெதிர் கொண்டிராய்க்
கோடாது நீர்கொடுப்பி னல்லது - கோடா
எழிலு முலையும் இரண்டிற்கு முந்நீர்ப்
பொழிலும் விலையாமோ போந்து." (திணைமாலை-நூற். கரு)

இது கற்பிற் புணர்வு; பொருளாற் குறிஞ்சியாயிற்று.

"படாஅ தோழி யெங்கண்ணே கொடுவரி
கொன்முரண் யானை கனவு
நன்மலை நாடன் நசையி னானே."

இஃது இரங்கற்பொருண்மையேனும் முதற்பொருளானும் கருப்பொருளானும் குறிஞ்சியாயிற்று. பிறவும் அன்ன.

பாலைத்திணைக்குச் செய்யுள்

"அறியாய் வாழி தோழி இருளற
விசும்புடன் விளக்கும் விரைசெலல் திகிரிக்
கடுங்கதிர் எறித்த விடுவாய் நிறைய
நெடுங்கால் முருங்கை வெண்பூத் தாஅய்
நீரற வறந்த நிரம்பா நீளிடை
வள்ளெயிற்றுச் செந்நாய் வருந்துபசிப் பிணவொடு
கள்ளியங் காட்ட கடத்திடை உழிஞ்சில்
உள்ளூன் வாடிய சுரிமூக்கு நொள்ளை
பொரியரை புதைத்த புலம்புகொள் இயவின்
விழுத்தொடை மறவர் வில்லிட வீழ்ந்தோர்
எழுத்துடை நடுகல் இன்னிழல் வதியும்
அருஞ்சுரக் கவலை நீந்தி யென்றும்
இல்லோர்க் கில்லென் றியைவது கரத்தல்
வல்லா நெஞ்சம் வலிப்ப நம்மினும்
பொருளே காதலர் காதல்
அருளே காதலர் என்றி நீயே."* (அகம். ருக)

இதனுள் பாலைக்குரிய முதற்பொருளும் கருப்பொருளும் பிரிவும் வந்தவாறு கண்டு கொள்க.

"வளங்கெழு திருநகர்ப் பந்துசிறி தெறியினும்
இளந்துணை யாயமொடு கழங்குடன் ஆடினும்
உயங்கின் றன்னையென் மெய்யென் றசைஇ
மயங்குவியர் பொறித்த நுதலள் தண்ணென
முயங்கினள் வதியு மன்னே † இனியே
தொடிமாண் சுற்றமும் எம்மும் உள்ளாள்
நெடுமொழித் தந்தை அருங்கடி நீவி
நொதும லாளன் நெஞ்சுறப் பெற்றவென்
சிறுமுதுக் குறைவி சிலம்பார் சீறடி
வல்லகொல் செல்லத் தாமே கல்லென

* இப்பாட்டினை இத்துறைக்கே எடுத்துக்காட்டிப் பிரிதல் நிமித்தம் என்றும், தலைவன்கண் நிகழ்ந்தது தலைவி நினைந்து தோழிக்குக் கூறியது என்றும் உரைப்பர். (நச்.) (தொல். பொருள், 14, 43)

(பாடம்) † முன்னே.

ஊரெழுந் தன்ன உருகெழு செலவின்
நீரில் அத்தத் தாரிடை மடுத்த
கொடுங்கோல் உமணர் பகடுதெழி தெள்விளி
நெடும்பெருங் குன்றத் திமிழ்கொள வியம்புங்
கடுங்கதிர்* திருகிய வேய்பயில் பிறங்கல்
பெருங்களி றுரிஞ்சிய மண்ணரை யாஅத்து
அருஞ்சுரக் கவலை அதர்படு மருங்கின்
நீழரை† இலவத் தாழ்கழி‡ பன்மலர்
விழவுத் தலைக்கொண்ட பழவிறன் மூதூர்
நெய்யுமிழ் சுடரிற் கால்பொரச் சில்கி
வைகுறு மீனில் தோன்றும்
மைபடு மால்வரை விளங்கிய சுரனே." (அகம். கஎ)

இஃது உடன்போக்கின்கண் வந்தது.

"நாளு நாளு மாள்வினை யழுங்க
இல்லிருந்து மகிழ்வோர்க் கில்லையாற் புகழெனா
ஒண்பொருட் ககல்வர்நங் காதலர்
கண்பனி துடையினித் தோழி நீயே." (சிற்றட்டகம்)

இது பிரிவுப்பொருளாற் பாலையாயிற்று.

"உயர்கரைக் கானியாற் றவிரறல் அகன்றுறை
வேனிற் பாதிரி விரிமலர் குவைஇத்
தொடலை தைஇய மடவரன் மகளே
கண்ணினுங் கதவநின் முலையே
முலையினுங் கதவநின் தடமென் தோளே." (ஐங்குறு. கூசக)

இது புணர்தற்பொருளாயினும் கருப்பொருளாற் பாலையாயிற்று.

"சிலைவிற் பகழிச் செந்துவ ராடை" (ஐங்குறு. கூகூக) என்னும் பாட்டினுள் "கொலைவி லெயினர் தங்கை" எனப் புணர்தற் பொருண்மை வந்ததாயினும் பாலைக்குரிய மக்கட்பெயர் கூறுதலிற் பாலையாயிற்று. பிறவும் அன்ன.

## மருதத்திணைக்குச் செய்யுள்

"சேற்றுநிலை முனைஇய செங்கட் காரான்
ஊர்மடி கங்குலின் நோன்தளை பரிந்து
கூர்முள் வேலி கோட்டின் நீக்கி
நீர்முதிர் பழனத்து மீனுடன் இரிய
அந்தூம்பு வள்ளை மயக்கித் தாமரை
வண்டூது பனிமலர் ஆரும் ஊர
யாரை யோநிற் புலக்கேம் வாருற்று
உரையிறந் தொளிருந் தாழிருங் கூந்தல்
பிறரும்§ ஒருத்தியை எம்மனைத் தந்து
வதுவை அயர்ந்தனை யென்ப அஃதியாங்
கூறேம் வாழியர் எந்தை செறுநர்
களிறுடை யருஞ்சமந் ததைய நூறும்

(பாடம்) * கருங்கதிர். † ஈழரை. ‡ தாழழி. § பிறளும்.

ஒளிறுவாள் தானைக் கொற்கைச் செழியன்
பிண்ட நெல்லின் அள்ளூர் அன்னவென்
ஒண்டொடி நெகிழினும் நெகிழ்க
சென்றீ பெருமநின் தகைக்குநர் யாரே." (அகம். சசு)

இதனுள் மருதத்திற்கு ஓதிய நிலனும் பொழுதும் கருப்பொருளும் ஊடற் பொருண்மையும் வந்தன. "தாழை வண்டூது பனிமலராரு மூர" என்றமையான் வைகறை வந்தமை அறிக.

"பூங்கொடி மருங்கின் எங்கை கேண்மை
முன்னும் பின்னும் ஆகி
இன்னும் பாணன் எம்வயி னானே"

இஃது உரிப்பொருளால் மருதமாயிற்று.

"ஓரை ஆயம் அறிய ஊரன்
நல்கினன் தந்த நறும்பூந் தண்தழை
மாறுபடின் எவனோ தோழி வீறுசிறந்து
நெடுமொழி விளங்குந் தொல்குடி
வடுநாம் படுதல் அஞ்சுதும் எனவே."

இது புணர்தற் பொருண்மையேனும், திணைநிலைப்பெயரால் மருதமாயிற்று. பிறவும் அன்ன.

## நெய்தல் திணைக்குச் செய்யுள்

*"கானன் மாலைக் கழிப்பூக் கூம்ப
நீனிறப் பெருங்கடல் பாடெழுந் தொலிப்ப
மீனார் குருகின் மென்பறைத் தொழுதி
குவையிரும் புன்னைக் குடம்பை சேர
அசைவண் டார்க்கும் அல்குறு காலைத்
தாழை தளரத் தூங்கி† மாலை
அழிதக வந்த கொண்டலொடு கழிபடர்க்
காமர் நெஞ்சங் கையறுபு இனையத்
துயரஞ் செய்துநம் அருளா ராயினும்
அறாஅ லியரோ அவருடைக் கேண்மை
அளியின் மையின் அவணுறை‡ முனைஇ
வாரற்க தில்ல தோழி கழனி
வெண்ணெல் லரிநர் பின்றைத் ததும்புந்
தண்ணுமை வெரீஇய தடந்தாள் நாரை
செறிமடை வயிரிற் பிளிற்றிப் பெண்ணை
அகமடற் சேக்குந் துறைவன்
இன்துயின் மார்பிற் சென்றவென் னெஞ்சே." (அகம் ௪0)

இது முதலும் கருவும் இரங்குதற் பொருண்மையும் வந்த நெய்தற்பாட்டு.

* இது பொருட்பிரிவிடைத் தோழிக்கு உரைத்தது. இக் களிற்றுயானை நிரையுள், நெய்தற்கு முதலும் கருவும் வந்து உரிப்பொருளால் சிறப்பெய்தி முடிந்தது என்பர். (நச்சி.) (தொல். பொருள், 3)

(பாடம்) † தூக்கி. ‡ அவணுறைவு.

" அங்கண் மதியம் அரவின்வாய்ப் பட்டெனப்
பூசல் வாயாப் புலம்புமனைக் கலங்கி
ஏதின் மாக்களும் நோவர் தோழி
என்றும் நோவார் இல்லைத்
தெண்கடற் சேர்ப்பன் உண்டவென் நலக்கே."

இது திணைநிலைப்பெயரானும் இரங்கற்பொருண்மையானும் நெய்தலாயிற்று.

" கங்குலும் பகலுங் கலந்துக ஒன்றி
வன்புறை சொல்லி நீத்தோர்
அன்புறு செய்தி உடையரோ மற்றே."

இஃது இரங்கற்பொருண்மையான் நெய்தலாயிற்று.

" சுறவுப்பிறழ் இருங்கழி நீந்தி வைகலும்
இரவுக்குறிக் கொண்கனும் வந்தனன்
விரவுமணிக் கொடும்பூண் விளங்கிழை யோயே."

(சிற்றட்டகம்)

இது புணர்தற்பொருளாயினும் நிலத்தான் நெய்தலாயிற்று.

" கோட்டக மலர்ந்த கொழுங்கொடி அடம்பின்
நற்றுறை அணிநீர்ச் சேர்ப்பஇப்
பொற்றொடி அரிவையைப் போற்றினை அளிமே."

இது பாலைக்குரித்தாகிய பிரிவுநிமித்தமாயினும் நிலத்தான் நெய்தலாயிற்று. (உச)

உரு. அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினுங்
கடிவரை இலபுறத் தென்மனார் புலவர்.

இது, நடுவணைந்திணைக்குரிய தலைமக்களைக் கூறி, அதன் புறத்தவாகிய கைக்கிளை பெருந்திணைக்குரிய மக்களை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும் - அடித்தொழில் செய்வார் பக்கத்தினும் வினைசெய்வார் பக்கத்தினும், கடிவரைஇல (மேற் சொல்லப்பட்ட புணர்தல் முதலான பொருளைக் கூறல்) கடிந்து நீக்கும் நிலைமையில்லை, புறத்து என்மனார் புலவர் - ஐந்திணைப் புறத்தவாகிய கைக்கிளை பெருந்திணைக்கண் என்று சொல்வர் புலவர்.

'புணர்தல் முதலான பொருள்' என்பது அதிகாரத்தான் வந்தது. 'வினை செய்வார்' என்பதனால் அடியரல்லாதார் என்பது கொள்க. இவர் அகத்திணைக்கு உரியரல்லரோ வெனின், அகத்திணையாவன அறத்தின் வழாமலும் பொருளின் வழாமலும் இன்பத்தின் வழாமலும் இயலல் வேண்டும்; அவை யெல்லாம் பிறர்க்குக் குற்றேவல் செய்வார்க்குச் செய்தல் அரிதாகலானும், அவர் நாணுக் குறைபாடுடைய ராகலானும், குறிப்பறியாது வேட்கை வழியே சாரக் கருதுவரா கலானும், இன்பம்

• 'அடியோர்' எனவே இருபால் தலைமக்களும் அடங்கிற்று. 'கடிவரையில' என்றதனால் அவருள் பரத்தையரும் உளரென்று கொள்க.' (நச்சி.) (தொல். பொருள். உங.)

இனிது நடத்துவார் பிறரேவல் செய்யாதார் என்பதனுனும், இவர் புறப் பொருட்குரியராயினர் என்க. எனவே, இவ்வெழுவகைத் திணையும் அகம் புறம் என இருவகையாயின.

" என்நோற் றனைகொல்லோ,
நீருள் நிழல்போல் நுடங்கிய மென்சாயல்
ஈங்குருச்* சுருங்கி,
இயலுவாய் நின்னொடு உசாவுவென் நின்நீத்தை;
அன்னையோ, காண்டகை இல்லாக் குறள்நாழிப் போழ்தினன்
ஆண்டலைக் கீன்ற பறழ்மகனே நீயெம்மை
வேண்டுவல் என்று விலக்கினை நின்போல்வார்
தீண்டப் பெறுபவோ மற்று;
மாண்ட, எறித்த படைபோல் முடங்கி மடங்கி
நெறித்துவிட் டன்ன நிறையோரால் என்னைப் பேலன்
பொறுக்கல்லா நோய்செய்தாய் பொறீஇ† நிறுக்கல்
நீநல்கின் உண்டென் னுயிர்;
குறிப்புக்காண், வல்லுப் பலகை யெடுத்து நிறுத்தன்ன
கல்லாக் குறள கடும்பகல் வந்தெம்மை
இல்லத்து வாவென மெய்கொளீஇ‡ எல்லாநின்
பெண்டிர் உளர்மன்னோ கூறு;
நல்லாய்கேள், உக்கத்து மேலு நடுவுயர்ந்து வாள்வாய
கொக்குரித் தன்ன கொடுமடாய் நின்னையான்
புக்ககலம் புல்லின்நெஞ் சூன்றும் புறம்புல்லின்
அக்குளுத்துப் புல்லலும் ஆற்றேன் அருளீமோ
பக்கத்துப் புல்லச் சிறிது;
போசீத்தை, மக்கண் முரியேநீ மாறினித் தொக்க
மரக்கோட்டஞ் சேர்ந்தெழுந்த பூங்கொடிபோல
நிரப்பமில் யாக்கை தழீஇயின ரெம்மைப்
புரப்பேமென் பாரும் பலராற் பரத்தையன்
பக்கத்துப் புல்லீயா யென்னுமாற் றொக்க
உழுந்தினுந் துவ்வாக் குறுவட்டா நின்னின்
இழிந்ததோ கூனின் பிறப்பு;
கழிந்தாங்கே, யாம்வீழ்து மென்றுதன் பின்செலவு முற்றீயாக்
கூனி குழையுங் குழைவுகாண்;
யாமை, எடுத்து நிறுத்தற்றுற் றோளிரண்டும் வீசி,
யாம்வேண்டே மென்று விலக்கவு மெம்வீழுங்
காமர் நடக்கு நடைகாண் கவர்கனைச்
சாமனார் தம்முன் செலவு காண்க §
ஓஒகாண், நம்மு ணகுதற் றொடீஇயர் நம்முணும்
உசாவுவங் கோனடி தொட்டேன்;
ஆங்காக, சாயலின் மார்ப அடங்கினேன் ஏஎ
பேயும் பேயுந் துள்ள லுறுமெனக்
கோயிலுட் கண்டார் நகாஅமை வேண்டுவல்
தண்டாத் தகடுருவ வேறாகக் காவின்கீழ்
போதர் அகடாரப் புல்லி முயங்குவேம்
துகடீர்பு காட்சி அவையத்தார் ஓலை
முகடுகாப்பு யாத்துவிட் டாங்கு." (கலி. மரு. உக)

(பாடம்) *ஈங்குச் †போறி. ‡கைகொளிய. §காண்.

இத்னுள் ஒருவரையொருவர் இழித்துக் கூறினமையான் அடியார் என்பதூஉம் மிக்க காமத்தின் வேறுபட்டு வருதலாற் பெருந்திணைப்பாற் படும் என்பதூஉம் கண்டுகொள்க; இதுதானே கைக்கிளைக்கும் உதாரண மாம். வினைவலர்பாங்கட்டு வருவன வந்தவழிக் கண்டுகொள்க. (உ௫)

உ௬. ஏவல் மரபின் ஏனோரும்* உரியர்
ஆகிய நிலைமை அவரும் அன்னர்.

இதுவும், கைக்கிளை பெருந்திணைக்குரிய தலைமக்களை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஏவல் மரபின் ஏனோரும் உரியர் - (மேற் சொல்லப்பட்ட அடியோரும், வினைவலரும்) ஏவுதல் மரபை யுடைய ஏனையோரும் (கைக்கிளை பெருந்திணைக்கு) உரியர்; அவரும் ஆகிய நிலைமை அன்னர் - அவரும் உரியராகிய நிலைமை அத்தன்மைய ராகலான்.

அவரு மாகிய நிலைமை என மொழிமாற்றுக. கைக்கிளை பெருந்திணை என்பது அதிகாரத்தான் வந்தது. இதனாற் சொல்லியது தலைமக்களும் கைக்கிளை பெருந்திணைக்கு உரியராவர் என்பதாம். உரியராயினவாறு அறம் பொருள் இன்பங்கள் வழுவ மகளிரைக் காதலித்தலான் என்றவா றாயிற்று.

''ஏஎ இஃதொத்தன் நாணிலன் தன்னொடு
மேவேமென் பாரையு மேவினன் கைப்பற்றும்
மேவினு மேவாக் கடையும் அஃதெல்லா
நீயறிதி யானஃ தறிகல்லேன் பூவமன்ற
மெல்லிணர் செல்லாக் கொடியன்னாய் நின்னையான்
புல்லினி தாகலிற் புல்லினேன் எல்லா
தமக்கினி தென்று வலிதிற் பிறர்க்கின்னா
செய்வது நன்றாமோ மற்று;
சுடர்த்தொடீ. போற்றாய் களைநின் முதுக்குறைமை போற்றிக்கேள்
வேட்டார்க் கினிதாயின் அல்லது நீர்க்கினிதென்
றுண்பவோ நீருண் பவர்;
செய்வ தறிகல்லேன் யாதுசெய் வேன்கொலோ
ஐவாய் அரவின் இடைப்பட்டு நைவாராம்
மையின் மதியின் விளங்கு முகத்தாரை
வெளவிக் கொளலும் அறனெனக் கண்டன்று;
அறனு மதுகண்டற் றாயிற் றிறவின்றிக்
கூறுஞ்சொற் கேளான் நலிதரும் பண்டுநாம்
வேறல்ல மென்பதொன் றுண்டால் அவனொடு
மாறுண்டோ நெஞ்சே நமக்கு.'' (கலி. குறிஞ். உ௬)

இதனுள் 'வெளவிக் கொளலும் அறனெனக் கண்டன்று'' எனவும், ''நீர்க்கினி தென்றுண்பவோ நீருண்பவர்'' எனவும் தலைமகன் கூறுத லானும், தலைமகள் முன் இழித் துரைத்தலானும், ஊடியுணர்வாள்போல உடன்பட்டமையானும், இஃது உயர்ந்தோர்மாட்டு வந்த கைக்கிளை பெருந்திணை வந்தவழிக் கண்டுகொள்க. (உ௬)

* ''ஏனோரும்'' —நால்வகை வருணமென்று எண்ணியவகையினுள் ஒழிந்துநின்ற வேளாளரும்.'' (நச்சி.

௨௭. ஓதல் பகையே தூதிவை பிரிவே.

மேல் கைக்கிளை முதலாக எழுதிணையு முணர்த்தினர். அவற்றுள் நிலம் பகுக்கப்பட்ட முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என்னும் நான்கு திணையும் களவு கற்பு என்னும் இருவகைக் கைகோளினும் நிகழ்தலின், அவற்றை யொழித்து நிலம் பகுக்கப்படாத கைக்கிளை பெருந்திணையும் பாலையும் இவ்வோத்தினுள் உணர்த்துகின்றனராதலின் அவற்றுள் பாலைக் குரித்தாகிய பிரிவு உணர்த்துவான் பிரிவுக்கு நிமித்தம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) *ஓதல் பகை தூது இவை பிரிவு* - ஓதலும் பகையும் தூதும் என்று சொல்லப்பட்ட இத்தன்மைய பிரிவிற்கு நிமித்தமாம்.

'இவை' என்பது இத்தன்மைய என்னும் பொருள்பட நின்றது. நிமித்தம் என்பது உய்த்துணர்ந்து கொள்ளக் கிடந்தது. ஓதற்குப் பிரிதலாவது, தமது நாட்டகத்து வழங்காது பிறநாட்டகத்து வழங்கும் நூல் உளவன்றே, அவற்றினைக் கற்றல் வேண்டிப் பிரிதல். பகைவயிற் பிரிதலாவது, மாற்றுவேந்தரொடு போர்கருதிப் பிரிதல். தூதிற்குப் பிரிதலாவது இருபெரு வேந்தரைச் சந்துசெய்தற் பொருட்டுப் பிரிதல். [முதல் ஏகாரம் அசைநிலை ; இரண்டாம் ஏகாரம் ஈற்றசை. (௨௭)

௨௮. அவற்றுள்
ஓதலுந் தூதும் உயர்ந்தோர்* மேன.

இது மேற்கூறப்பட்டவற்றுள் ஓதற்கும் தூதுபோதற்கும் உரிய தலைமக்களை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) *அவற்றுள்* - மேற் கூறப்பட்டவற்றுள், *ஓதலும் தூதும்* - ஓதல் காரணமாகப் பிரியும் பிரிவும் தூதாகிப் பிரியும் பிரிவும், *உயர்ந்தோர் மேன* - நால்வகை வருணத்தினும் உயர்ந்த அந்தணர்க்கும் அரசர்க்கும் உரிய.

இவர் ஒழுக்கத்தானும் குணத்தானும் செல்வத்தானும் ஏனையரினும் உயர்புடையராதலின் 'உயர்ந்தோர்' என்றார். அரசர்தாம் தூதாகியவாறு வாசுதேவனால் உணர்க. [மேல என்பது ஈறு திரிந்து 'மேன' என நின்றது.]

"வயலைக் கொடியின் வாடிய மருங்குல்
உயவ லூர்திப் பயலைப் பார்ப்பான்
எல்லி வந்து நில்லாது புக்குச்
சொல்லிய சொல்லுஞ் சிலவே யதற்கே
ஏணியுஞ் சீப்பும் மாற்றி
மாண்வினை யானையு மணிகளைந் தனனே†." (புறம். ௩௦௫)

இதனுள் பார்ப்பார் தூதாகியவாறு கண்டுகொள்க. (௨௮)

---

(பாடம்) *"உயர்ந்தோர் எனக் கூறலின், வேளாளரை ஒழித்தார் என்றுணர்க." (நச்சி.)

†தனவே.

உ௯. தானே சேறலுந் தன்னொடு சிவணி
ஏனோர் சேறலும் வேந்தன் மேற்றே.

**இது, பகைவயிற் பிரிதற்குரிய தலைமக்களை உணர்த்துதல் நுதலிற்று.**

(இ - ள்.) *தானே சேறலும் – (பகைவர் காரணமாகி அரசன்) தானே சேறலும், தன்னொடு* சிவணி ஏனோர் சேறலும் – அவனொடு கூடி ஒழிந்தோர் சேறலும், வேந்தன் மேற்று – வேந்தன்கண்ணது.*

பகை யென்றது மேனின்ற அதிகாரத்தான் உய்த்துணர்ந்துகொள்ளக்கிடந்தது. 'தானே' என்பதன் ஏகாரம் பிரிநிலை; படையை யொழிய என்றவாறு. போரைக் குறித்துப் பிரிதலும் அரசர்க்கு உரித்தென்று கொள்க. இதனுள் அரசன் தலைமகனாயுழிப் பகைதணிவினைப் பிரிவு எனவும், அவனொடு சிவணி ஏனோர் தலைவராயுழி வேந்தற்குற்றுழிப்பிரிவு எனவும் இதனை இருவகையாகக் கொள்க. [ஏகாரம் ஈற்றசை.] (உ௯)

௩௦. மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய
முல்லை முதலாச் சொல்லிய முறையாற்
பிழைத்தது பிழையா தாகல் வேண்டியும்
இழைத்த ஒண்பொருள் முடியவும் பிரிவே.

**இது, மேற்சொல்லப்பட்ட மூவகை நிமித்தமுமன்றி வருவன உணர்த்துதல் நுதலிற்று.**

(இ - ள்.) *மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய–நால்வகை நிலத்தினும் மேவிய சிறப்பையுடைய மக்களையல்லாத தேவரது பூசையும் விழவும் முதலாயினவும், முல்லை முதலா சொல்லிய – முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச் சொல்லிய நிலத்தின் மக்களும், முறையால் பிழைத்தது பிழையாது ஆகல்வேண்டியும்– முறைமையில் தப்பிய வழி தப்பாது அறம் நிறுத்தல் காரணமாகவும், இழைத்த ஒண்பொருள் முடியவும் பிரிவு – செய்யப்பட்ட ஒள்ளிய பொருள் ஆக்குதல் காரணமாகவும் பிரிவு உளதாம்.*

மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய என்பது நால்வகை நிலத்தினும் மேவிய சிறப்பையுடைய மக்களையல்லாத தேவரது படிமையவாகிய பொருள்கள் என்றவாறு. முல்லை முதலாச் சொல்லிய என்பது முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச் சொல்லிய நிலத்தின் மக்கள் என்றவாறு. முறையால் பிழைத்தது பிழையாதாகல் வேண்டியும் பிரிவே என்பது மேற்சொல்லப்பட்டன முறைமையில் தப்பியவழி தப்பாது அறம் நிறுத்தற்பொருட்டும் பிரிவுளதாம் என்றவாறு இழைத்த ஒண்பொருள் முடியவும் பிரிவே என்பது செய்யப்பட்ட பொருள் முடியவேண்டியும் பிரிவு உளதாம் என்றவாறு.

* சிவணிய.

[இதன் பொழிப்பு, தேவரது பூசை முதலாயினவும் மக்களும் முறைமை தப்பியவழி தப்பாது அறம்நிறுத்தல் காரணமாகவும், பொருளாக்குதல் காரணமாகவும் பிரிவு உளதாம் என்றவாறு.]

காவல் பொருட்பிரிவு எனப் பிறநூலகத்து ஓதப்பட்ட இருவகைப் பிரிவும் ஈண்டு ஓதப்பட்டதென்று கொள்க. 'மேவிய' என்பது "மாயோன் மேய காடுறை யுலகமுஞ், சேயோன் மேய மைவரை யுலகமும்" (அகத். ரு) என்பதனால் நால்வகை நிலத்தினும் மேவிய எனப் பொருளாயிற்று. 'சிறப்பினோர்' என்றதனால் சிறப்புடையார் மக்களும் தேவருமாகலின், மக்களல்லாதாரே தேவர் என்று பொருளாயிற்று. 'படிமை' என்பது ப்ரதிமா என்னும் வடமொழித்திரிபு. அது தேவர்க்கு ஒப்புமையாக நிலத்தின்கண் செய்து அமைத்த தேவர்மேல் வந்தது. அவருடைய பொருளாவன பூசையும் விழாவும் முதலாயின.

'முல்லை முதலாச் சொல்லிய' என்பது "பிறந்தவழிக்கூறல்" (சொல்-கக௪) என்னும் ஆகுபெயரான் அந்நிலத்தின் மக்களை நோக்கிற்று. 'பிரிவு' என்பதனை, பிழைத்தது பிழையாதாகல் வேண்டியும் பிரிவுளதாம், இழைத்த வொண்பொருண் முடியவும் பிரிவுளதாம் என இரண்டிடத்துங் கூட்டுக. ஆம் என்பது எஞ்சிநின்றது.

தேவர் காரணமாகப் பிரியும் பிரிவுக்குச் செய்யுள்

"அரம்போழ் அவ்வளை தோள்நிலை நெகிழ
நிரம்பா வாழ்க்கை நேர்தல் வேண்டி
ஈர்ங்கா ழன்ன அரும்புமுதி ரீங்கை
ஆலி யன்ன வால்வீ தாஅய்
வைவா லோதி மையண லேய்ப்பத்
தாதுறு குவளைப் போதுபிணி யவிழப்
படாஅப் பைங்கட் பாவடிக் கயவாய்க்
கடாஅ மாறிய யானை போலப்
பெய்துவறி தாகிய பொங்குசெலற் கொண்மூ
மைதோய் விசும்பின் மாதிரத் துழிதரப்
பனியடூஉ நின்ற பானாட் கங்குல்
தமியோர் மதுகை தூக்காய் தண்ணென
முனிய அலைத்தி முரணில் காலைக்
கைதொழு மரபிற் கடவுள் சான்ற
செய்வினை மருங்கிற் சென்றோர் வல்வரின்
விரியுளைப் பொலிந்த பரியுடை நன்மான்
வெருவரு தானையொடு வேண்டுபுலத் திறுத்த
பெருவளக் கரிகால் முன்னிலைச் செல்லார்
சூடா வாகைப் பறந்தலை யாடுபெற
ஒன்பது குடையும் நன்பக லொழித்த
பீடின் மன்னர் போல
ஓடுவை மன்னால் வாடைநீ யெமக்கே." (அகம். ௧உ௫)

சேரன் செங்குட்டுவனார் கண்ணகியைக் கடவுள் மங்கலம் செய்தற்குப் பிரிந்த பிரிவு சிலப்பதிகாரத்திற் கண்டுகொள்க. இத்துணையும் பிரிவு அறுவகைப்படும் என்றவாறாயிற்று. அஃதேல் பரத்தையிற் பிரிவு என்பதோ எனின், அது நிலம் பெயர்ந்து உறையாமையானும், இவை

போல் சிறக்காமையானும், அறமுறைமை செய்யப் பிரிதலும் பொருள் காரணமாகப் பிரிதலுமின்றிப் பிரிதலினாலும், கற்பியலுள் கூறப்படும் என்க. ஈண்டும் சிறுபான்மை கூறுப. (௩௦)

௩௧. மேலோர் முறைமை நால்வர்க்கும் *உரித்தே.

இது, நிறுத்த முறையானே அறம்காரணமாகப் பிரிதற்குரிய தலைமக்களை உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்.) மேலோர் முறைமை நால்வர்க்கும் உரித்து - மேலோராகிய தேவரது முறைமையை நிறுத்தற்குப் பிரியும் பிரிவு நான்கு வருணத்தார்க்கும் உரித்து. [ஏகாரம் ஈற்றசை.]

௩௨. மன்னர் பாங்கின் பின்னோர் †ஆகுப.

இது, காவற்பகுதியாகிய முறை செய்வித்தற்கு உரிய மக்களை உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்.) மன்னர் பாங்கின் - மன்னர்க்குரிய பக்கத்திற்கு, பின்னோர் ஆகுப - (அவ்வாறு முறை செய்தற்கு அரசன் தான் சேறல் வேண்டாமையின், அதற்குரியராய் அவனது ஏவல் வழி வரும்) வணிகரும் வேளாளரும் உரியர் ஆகுப.

மன்னர்க்குரிய பக்கமாவது காவல்; அஃதாவது நெறியின் ஒழுகாதாரை நெறியின் ஒழுகப் பண்ணுதல் (௩௨)

௩௩. உயர்ந்தோர்க் குரிய ஓத்தி னான.‡

இது, வணிகர்க்கு உரியதொரு பிரிவு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்.) உயர்ந்தோர்க்கு - மேல் அதிகரிக்கப்பட்ட பின்னோராகிய இருவகையோரிலும் உயர்ந்தோராகிய வணிகர்க்கு, ஓத்தினான உரிய - ஓதுதல் நிமித்தமாகப் பிரிதலும் உரித்து.

---

* 'மேலோர் முறைமை ஏனோர்க்கும் உரித்தே' என்னாது 'நால்வர்க்கும் உரித்தே' என்றது, முற்கூறிய வணிகரை ஒழிந்த இருவகை வேளாளரையும் கூட்டி என்றுணர்க. (நச்சி.)

† 'மன்னர் பின்னோர்' என்ற பன்மையான் முடியுடையோரும், முடியில்லாதோரும், உழுவித்து உண்போரும் உழுது உண்போருமென மன்னரும் வேளாளரும் பலரென்றார்.

"உழுவித்துண்போர் மண்டில மாக்களுள் தண்டத் தலைவருமாய்ச் சோழநாட்டுப்பிடவூரும் அழுந்தூரும் நாங்கூரும் நாவூரும் ஆலஞ்சேரியும் பெருஞ்சிக்கலும் வல்லமும் கிழாரும் முதலிய பதியிற்றோன்றி வேளெனவும் அரசெனவும் உரிமை எய்தினோரும், பாண்டிநாட்டுக் காவிதிப்பட்ட மெய்தினோரும், குறுமுடிக் குடிப்பிறந்தோர் முதலியோருமாய் முடியுடை வேந்தர்க்கு மகட்கொடைக்கு உரிய வேளாளராகுப" (நச்சி.)

‡ வேதந் தோன்றிய பின்னர் அது கூறிய பொருள்களை இவையும் ஆராய்தலின் ஓத்தினான் என்று அவற்றிற்குப் பெயர் கூறினார்; ஓத்து என்பது வேதத்தையே ஆதலின். (நச்சி.)

ஒத்துப் பலவாதலின் 'உரிய' என்றார். ஈண்டு ஒத்து என்பது வேதம்: அது நால்வகை வருணத்தினும் மூவர்க்கு உரித் தென்பது இத்துணையெனக் கூறப்பட்டது. (௩௩)

௩௪. வேந்துவினை இயற்கை வேந்தன்* ஒரீஇய
ஏனோர்† மருங்கினும் எய்திடன் உடைத்தே.

இது, வணிகர்க்கும் வேளாளர்க்கும் உரியதொரு பிரிவு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) வேந்து வினை இயற்கை - வேந்தனது வினை இயற்கையாகிய தூது, வேந்தன் ஒரீஇய ஏனோர் மருங்கினும் - வேந்தனை ஒழிந்த வணிகர்க்கும் வேளாளர்க்கும், எய்து இடன் உடைத்து - ஆகுமிடன் உடைத்து.

வேந்தனது வினை - வேந்தற்குரிய வினை. 'இடனுடைத்து' என்றதனான் அவர் தூதாங்காலம் அமைச்சராகியவழியே நிகழும் என்று கொள்க. [ஏகாரம் ஈற்றசை.] (௩௪)

௩௫. பொருள்வயின் பிரிதலும் அவர்வயின் உரித்தே.

இதுவும் அது.

(இ - ள்.) பொருள்வயின் பிரிதலும் அவர்வயின் உரித்து- பொருள்வயிற் பிரிவும் மேற்சொல்லப்பட்ட வணிகர் வேளாளரிடத்தில் உரியதாகும். [ஏகாரம் ஈற்றசை.] (௩௫)

௩௬. உயர்ந்தோர் பொருள்வயின் ஒழுக்கத் தான.‡

இஃது, அந்தணர் பொருட்குப் பிரியுந்திறன் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) உயர்ந்தோர் பொருள்வயின் ஒழுக்கத்தான - உயர்ந்தோராகிய அந்தணர் பொருள்வயிற் பிரியுங்காலத்து ஒழுக்கத்தானே பிரிப.

இதனாற் சொல்லியது, வணிகர்க்கும் வேளாளர்க்கும் வாணிகம் முதலாயின பொருணிமித்தம் ஆகியவாறுபோல, அந்தணர்க்கு இவை பொருணிமித்தம் ஆகா என்பதூஉம், அவர்க்கு இயற்கையொழுக்க மாகிய ஆசாரமும், செயற்கையொழுக்கமாகிய கல்வியுமே பொருட்குக் காரணமாம் என்பதூஉம் கண்டவாறு [ஈற்றகரம் சாரியை.] (௩௬)

---

(பாடம்) * வேந்தனின். † ஏனோர் - குறுநில மன்னர். (நச்சி.)
‡ இவ்வடியை மேற்சூத்திரத்துடன் இணைத்து ஒன்றாக்கியும், "உயர்ந்தோர்க்குரிய ஓத்தினான," என்று அவ்வோத்தினை அவரொழுக் கத்திலேயான பொருளென்றும் கூறுவர். (நச்சி)

௩௭. *முந்நீர் வழக்கம் மகடூஉவோடு இல்லை.

**இதுவும், பொருள்வயிற் பிரிவதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.**

(இ - ள்.) முந்நீர் வழக்கம் மகடூஉவோடு இல்லை - (ஈண்டு அதிகரிக்கப்பட்ட பிரிவு காலிற்பிரிவும் கலத்திற்பிரிவும் என இருவகைப்படும்; அவற்றுள்) கலத்திற்பிரிவு தலைமகளுடன் இல்லை.

எனவே, காலிற்பிரிவு தலைமகளை உடன்கொண்டு பிரியவும் பெறும் என்றவாறும். கலத்திற் பிரிவு,

தலைமகளை ஒழியப் பிரிந்தமைக்குச் செய்யுள்

† "உலகுகிளர்ந் தன்ன உருகெழு வங்கம்
புலவுத்திரைப் பெருங்கடல் நீரிடைப் போழ
இரவும் எல்லையும் அசைவின் றாகி
விரைசெலல் இயற்கை வங்கூழ் ஆட்டக்
கோடுயர் திணிமணல் அகன்துறை நீகான்
மாட ஒள்ளெரி மருங்கறிந்து ஒய்ய
ஆள்வினைப் பிரிந்த காதலர் நாள்பல
கழியா மையே அழிபடர் அகல
வருவர் மன்னால் தோழி தண்பணைப்
பொருபுனல் வைப்பின் நம்மூர் ஆங்கண்
கருவிளை முரணிய தண்புதல் பகன்றைப்
பெருவளம் மலர அல்லி தீண்டிப்
பலவுக்காய்ப் புறத்த பசும்பழப் பாகல்
கூதள மூதிலைக் கொடிநிரைத் தூங்க
அறன்இன் றலைக்கும் ஆஅ வாடை
கடிமனை மாடத்துக் கங்குல் வீசித்
திருந்திழை நெகிழ்ந்து‡ பெருங்கவின் சாய
நிரைவளை ஊருந் தோளென
உரையொடு செல்லும் அன்பினர்ப் பெறினே" (அகம். உ௫௫)

என வரும். காலிற் பிரிவுக்கு உதாரணம் வந்துழிக் காண்க. (௩௭)

*முந்நீர் வழக்கம் - ஓதலும் தூதும் பொருளுமாகிய மூன்று நீர்மையாற் செல்லுஞ் செலவு. இனி, இச்சூத்திரத்திற்கு, 'பொருள் வயிற் பிரிவின்கண் கலத்திற் பிரிவு தலைவியுடன் சேறலில்லை. எனவே காலிற் பிரிவு தலைவியுடன் சேறல் உண்டு.' என்று பொருள் கூறுவார்க்குச் சான்றோர் செய்த புலனெறி வழக்கம் இன்மை உணர்க. இனி உடன் கொண்டு போகுழிக் கலத்திற் பிரிவின்று; காலிற்பிரிவே உளதென் பாரும் உளர். (நச்சி.)

† இது தோழி தூதுவிடுவது காரணமாக உரைத்தது. இம்மணி மிடைபவளத்துப் பின்பனி வந்தவாறும், நண்பகல் கூறுமையும், அவர் குறித்த காலம் இதுவென்பது தோன்றியவாறும் காண்க. (தொல். பொருள். ௧௧) என்றும். 'உலகு கிளர்ந்தன்ன' (தொல். பொருள்-௨௭) என்னும் அகப்பாட்டுள் வணிகன் தலைவனாகவும் கொள்ளக்கிடத்தலின் தலைவியும் அவ்வருணத் தலைவியாம் என்றுணர்க. (நச்சி.)

(பாடம்) ‡ ஞெகிழ்ந்து.

நடஅ. *எத்திணை மருங்கினும் மகடூஉ மடன்மேல்
பொற்புடை நெறிமை இன்மை யான.

இத்துணையும் பாலைக்குரித்தாகிய பிரிவிலக்கணம் கூறினர்; இது கைக்கிளை பெருந்திணைக்கு உரிய இயல்பு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) எத்திணை மருங்கினும் - எல்லாக்குலத்தினிடத்தினும், மகடூஉ மடல்மேல் (இல்லை) - பெண்பால் மடலேறுதல் இல்லை; பொற்புடை நெறிமை இன்மையான - பொலிவுபெறு நெறிமை இல்லாமையான்.

'மடன்மேல்' என்பது மடலேறுதல் என்னும் பொருள் குறித்தது. இல்லை என்பது மேலைச் சூத்திரத்தினின்று தந்துரைக்கப்பட்டது. 'பொற்புடை நெறிமை' என்பது பெண்பாற்கு இன்றியமையாத நாணம் முதலாயின. மகடூஉ மடலேறுதல் இல்லை எனவே ஆடூஉ மடலேறுதல் உண்டு என்பது பெற்றாம். இது, "புணரா இரக்கமாகிய கைக்கிளைக்கும்," "தேறுதலொழிந்த காமத்து மிகுதிறன்" (அகத். ருக) ஆகிய பெருந்திணைக்கும் உரித்தாகியவாறு கண்டுகொள்க [ஈற்றகரம் சாரியை.]

நடகூ. தன்னும் அவனும் அவளுஞ் சுட்டி
மன்னும் நிமித்தம் மொழிப்பொருள் தெய்வம்
நன்மை தீமை அச்சஞ் சார்தலென்று
அன்ன பிறவும் அவற்றொடு தொகைஇ
முன்னிய கால மூன்றொடு விளக்கித்
தோழி தேஎத்துங் கண்டோர் பாங்கினும்
போகிய திறத்து நற்றாய் புலம்பலும்
ஆகிய கிளவியு மவ்வழி உரிய.

இது, மேற்கூறப்பட்ட இருவகைப் பிரிவினுள் (அகத்-கஉ) தமரைப் பிரிதலாகிய உடன்போக்கில் நிகழ்ந்த நற்றாய்மாட் டுளதாய கிளவி உணர்த்துதல் நுதலிற்று.

தன்னும் அவனும் அவளும் சுட்டியென்பது, தன்னையும் தலைமகனையும் தலைமகளையும் குறித்து என்றவாறு. மன்னுநிமித்தமாவது, ஆட்சிபெற்ற நிமித்தம்; அது பல்லி முதலாயினவாம். மொழிப்பொருளாவது, பிறர் தம்முள் கூறும் மொழிப் பொருளை நிமித்தமாகக் கோடல்; அதனை நற்சொல் என்ப. தெய்வம் என்பது, உலகினுள் வாழும் இயக்கர் முதலாயினர் ஆவேசித்துக் கூறும் சொல். நன்மை தீமை அச்சம் என்பது, தனக்கும் அவர்க்கும் உளதாகிய நன்மையும் தீமையும் அச்சமும் என்றவாறு. சார்தல் என்பது, அவர் தன்னை வந்து சார்தல். என்று என்பது இடைச்சொல். அன்னபிறவும் என்பது, அத்தன்மைய பிறவும் என்றவாறு. அவற்றொடு தொகைஇ என்பது, மேற்சொல்லப்பட்ட நிமித்தம் முதலாயினவற்றொடு கூட்டி என்றவாறு. அவ்வழியாகிய கிளவியும் உரிய என்பது அவ்விடத்தாகும் கூற்றும் உரிய என்றவாறு.

* எத்திணை மருங்கினும்—கைக்கிளை முதற் பெருந்திணை இறுவாய் ஏழன் கண்ணும். (நச்சி.)

(இ - ள்.) போகிய திறத்து நற்றாய் தன்னும் அவனும் அவளும் சுட்டி - தலைமகள் உடன் போகியவழி நற்றாய் தன்னையும் அவனையும் அவளையும் சுட்டி, மன்னும் நிமித்தம் - நிலைபெற்ற நிமித்தம், மொழிப்பொருள் தெய்வம் அவற்றொடு - மொழிப்பொருள் தெய்வம் என்பனவற்றொடு, நன்மை தீமை அச்சம் சார்தல் - தனக்கும் அவர்க்கும் உளதாகிய நன்மை தீமை அச்சம் சார்தல் என்பனவும், அன்னபிறவும் அவற்றொடு தொகைஇ-அத்தன்மை பிறவும் அவற்றோடு கூட்டி, முன்னிய காலம் மூன்றொடு விளக்கி - குறித்த காலம் மூன்றும் ஒருங்கு தோற்றுவித்து, தோழி தேஎத்தும் கண்டோர் பாங்கினும் புலம்பலும் - தோழிமாட்டும் கண்டோர்மாட்டும் புலம்புதலும், அவ்வழி ஆகிய கிளவியும் உரிய-அவ்வழி நிகழும் கூற்றும் உரிய.

"போகிய திறத்து நற்றாய்" என்றதனை முன்னே கூட்டுக. "அவற்றொடு" என்பதனைத் தெய்வம் என்பதனோடும் கூட்டுக. முன்னியகாலம் மூன்றுடன் விளக்குதலாவது, முன்பு இத்தன்மையளாயினாள்; இப்பொழுது இத்தன்மையளாகா நின்றாள்; மேல் இன்னளாகுவள் என மூன்றுகாலமும் ஒருங்கு தோற்றுவித்துப் புலம்புதல். அவ்வழி ஆகிய கிளவியும் என மொழிமாற்றுக. அவற்றிற்குச் சில உதாரணங்கள்.

"தோழியர் சூழத் துறைமுன்றில் ஆடுங்கால்
வீழ்பவள் போலத் தளருங்கால் - தாழாது
கல்லதர் அத்தத்தைக் காதலன் பின்போதல்
வல்லவோ மாதர் நடை" (ஐந்திணை ஐம்பது - ௧௭)

என்பது தலைமகள் உடன்போயவழி நற்றாய் கவன்றுரைத்தது

"மறுவில் தூவிச் சிறுகருங் காக்கை
அன்புடை மரபின்நின் கிளையோ டாரப்
பச்சூன் பெய்த பைந்நிண வல்சி
பொலம்புனை கலத்தில் தருகுவென் மாதோ
வெஞ்சின விறல்வேற் காளையோடு
அஞ்சில் ஓதியை வரக்கரைந் தீமே" (ஐங்குறு - ௫௧௧)

என்பது நற்றாய் உடன்போய தலைமகள் பொருட்டாகக் காகத்திற்குப் பராய்க் கடன் உரைத்தது.

"வேறாக நின்னை வினவுவேன் தெய்வத்தால்
கூறாயோ கூறுங் குணத்தினாய் - வேறாக
என்மனைக் கேறக் கொணருமோ எல்வளையைத்
தன்மனைக்கே உய்க்குமோ தான்" (திணைமாலை நூற் - ௧0)

என்பது நற்றாய் தலைமகளின் உடன்போக் கெண்ணிப் படிமத்தானை வினாஅயது.

பிறவும் அன்ன. 'ஈன்றவள் புலம்பலும்' என்ற உம்மையா செவிலி புலம்பலும் கொள்ளப்படும்.

## உதாரணம்

" பெயர்த்தனென் முயங்கயான் வியர்த்தனென் என்றனள்
இனியறிந் தேனது துனியா குதலே
கழல்தொடி யாஅய் மழைதவழ் பொதியில்
வேங்கையுங் காந்தளும் நாறி
ஆம்பல் மலரினுந் தான்தண் ணியளே'' (குறுந் · ௮௪)

என்பது, உடன்போக்கிய செவிலி கவன்றுரைத்தது.

" என்னும் உள்ளினள் கொல்லோ தன்னை
நெஞ்சுணத் தேற்றிய வஞ்சினக் காளையொடு
அழுங்கல் மூதூர் அலரெழச்
செழும்பல் குன்றம் இறந்தஎன் மகளே'' (ஐங்குறு · ௩௭௨)

என்பது, தலைமகள் கொடுமை நினைந்து கூறியது.

" ஈன்றுபுறந் தந்த எம்மும் உள்ளாள்
வான்தோய் இஞ்சி நன்னகர் புலம்பத்
தனிமணி இரட்டுந் தாளுடைக் கடிகை
நுழைநுதி நெடுவேல் குறும்படை மழவர்
முனையாத் தந்து முரம்பின் வீழ்த்த
வில்லேர் வாழ்க்கை விழுத்தொடை மறவர்
வல்லாண்* பதுக்கைக் கடவுட் பேண்மார்
நடுகற் பீலி சூட்டித் துடிப்படுத்துத்†
தோப்பிக் கள்ளொடு துரூஉப்பலி கொடுக்கும்
போக்கருங் கவலைய புலவுநா றருஞ்சுரந்
துணிந்துபிறள் ஆயினள் ஆயினும் அணிந்தணிந்து
ஆர்வ நெஞ்சமோடு ஆய்நலன் அளைஇத்தன்
மார்புதுணை யாகத் துயிற்றுக தில்ல
துஞ்சா முழவின் கோவல் கோமான்
நெடுந்தேர்க் காரி கொடுங்கால் முன்துறைப்
பெண்ணையம் பேர்யாற்று நுண்ணறல் கடுக்கும்
நெறியிருங் கதுப்பினென் பேதைக்கு
அறியாத் தேஎத் தாற்றிய துணையே'' (அகம் · ௩௫)

என்பது செவிலி தெய்வம் பராஅயது. பிறவும் அன்ன. (௩௯)

௪௦. ஏமப் பேரூர்ச் ‡சேரியுஞ் சுரத்தும்
தாமே செல்லுந் தாயரும் உளரே.

இது, தலைமகள் உடன்போகியவழிச் செவிலிக்கு உரியதொரு திறன் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஏமம் பேர் ஊர் சேரியும் - ஏமம் பொருந்திய பெரிய ஊரகத்துச் சேரியின்கண்ணும், சுரத்தும் - ஊரினினறும் நீங்கிய சுரத்தின்கண்ணும், தாமே செல்லும் தாயரும் உளர் - தாமே செல்லுந் தாயரும் உளர்.

(பாடம்) * வல்லரண் † இடிபடுத்து, துடிப்படத்.
‡ ஏமப் பேரூர் - பதியெழுவறியாப் பேரூர். (நச்சி)

*"தாமேசெல்லுந் தாயர்" என்பதனால் செவிலி என்பது பெற்றாம்; 'தாயரும்' என்றதனால் கைத்தாயர் பலர் என்று கொள்ளப்படும். அவ்வழிச் சேரியோரை வினாதலும், சுரத்திற் கண்டோரை வினாதலும் உளவாம். சேரியிற் பிரிதலும் பாலையாகுமோ எனின், அது வருகின்ற சூத்திரத்தினால் விளங்கும். [ஈற்றேகாரம் அசை.]

### சேரியோரை வினாஅயதற்குச் செய்யுள்

† "இதுஎன் பாவைக் கினியநன் பாவை
இதுவென் பைங்கிளி எடுத்த பைங்கிளி
இதுவென் பூவைக் கினியசொற் பூவையென்று
அலம்வரு நோக்கி னலம்வரு சுடர்நுதல்
காண்டொறுங் காண்டொறுங் கலங்கி
நீங்கின ளோவென் பூங்க ணோளே" (ஐங்குறு - நஎரு)

எனவரும்.

### சுரத்திடை வினாஅயதற்குச் செய்யுள்

" எறித்தரு கதிர்தாங்கி யேந்திய குடைநீழல்
உறித்தாழ்ந்த கரகமும் உரைசான்ற முக்கோலும்
நெறிப்படச் சுவலசைஇ வேறோரா நெஞ்சத்துக்
குறிப்பேவல் செலல்மாலைக் கொளைநடை யந்தணீர்
வெவ்விடைச் செலல்மாலை ஒழுக்கத்தீர் இவ்விடை
என்மகள் ஒருத்தியும் பிறள்மகன் ஒருவனுந்
தம்முளே புணர்ந்த தாமறி புணர்ச்சியர்
அன்னார் இருவரைக் காணிரோ பெரும" (கலி - பாலை - அ)

" செய்வினைப் பொலிந்த செறிகழல் நோன்தாள்
மையணற் காளையொடு பைய இயலிப்
பாவை அன்னஎன் ஆய்தொடி மடந்தை
சென்றனள் என்றிர் ஐய
ஒன்றின வோஅவள் அஞ்சிலம் படியே" (ஐங்குறு - ந௮௯)

என வருவதும் அது.

" காலே பரிதப் பினவே ‡ கண்ணே
நோக்கி நோக்கி வாள்இழந் தனவே
அகல்இரு விசும்பின் மீனினும்
பலரே மன்றஇவ் வுலகத்துப் பிறரே" (குறுந் - சுஉ)

என வருவது, சுரத்திடை வினாஅயது நிகழ்ந்தபின்னர்க் கூறியது. (௨௦)

---

* "தாயர்" எனப் பன்மைகூறித் தாமே எனப் பிரித்ததனால் சேரிக்கு நற்றாய் சேறலும், சுரத்திற்குச் செவிலித்தாய் சேறலும் புலனெறி வழக்கிற்குச் சிறந்ததென்று உணர்க.

(பாடம்) † இதுவென் பாவை பாவை யிதுவென்
அலமரு நோக்கின் அலம்வரு சுடர்நுதல்
பைங்கிளி யெடுத்த பைங்கிளி என்றிவை
காண்டொறும் காண்டொறும் கலங்க

" ‡ பின என்

௪௧. அயலோர் ஆயினும் அகற்சி மேற்றே.

இதுவும், பாலைக்கு உரியதோர் இயல்பு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அயலோராயினும்-(சேரியினும் சுரத்தினும் பிரிதலன்றித்) தமது மனையயற்கண் பிரிந்தாராயினும், அகற்சி மேற்றே – பிரிவின் கண்ணதே.

எனவே, ஓர் ஊரகத்து மனையயற்கண்ணும் பரத்தையிற்பிரிவு பாலையாம் என்பதூஉம் உய்த்துணர்ந்து கொள்ளப்படும். (௪௧)

௪௨. தலைவரும் விழும நிலையெடுத் துரைப்பினும்
போக்கற் கண்ணும் விடுத்தற் கண்ணும்
நீக்கலின் வந்த தம்முறு விழுமமும்
வாய்மையும் பொய்மையுங் கண்டோர்ச் சுட்டித்
தாய்நிலை நோக்கித் தலைப்பெயர்த்துக் கொளினும்
நோய்மிகப் பெருகித்தன் னெஞ்சுகலுழ்ந் தோளை
அழிந்தது களையென மொழிந்தது* கூறி
வன்புறை நெருங்கி வந்ததன் திறத்தோடு
என்றிவை எல்லாம் இயல்புற நாடின்
ஒன்றித் தோன்றுந் தோழி மேன.

இது, பிரிவின்கண் தோழிக்குக் கூற்று நிகழும் இடன் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) தலைவரும் விழும.......தோழிமேன - தலைவரும் விழும நிலையெடுத் துரைத்தல் முதலாகச் சொல்லப்பட்டன தோழிமாட்டுப் பொருந்தித் தோன்றும்.

தலைவரும் விழுமநிலை எடுத்துரைத்தலாவது பின்பு வரும் நோய் நிலையை எடுத்துக் கூறுதல் என்றவாறு.

## உதாரணம்

"பாஅல் அஞ்செவிப் பணைத்தாள் மாநிரை
மாஅல் யானையொடு மறவர் மயங்கித்
தூறதர்ப் பட்ட ஆறுமயங் கருஞ்சுரம்
இறந்துநீர் செய்யும் பொருளினும் யாம்நுமக்குச்
சிறந்தனம் ஆதல் அறிந்தனிர் ஆயின்
நீள்இரு முந்நீர் வளிகலன் வெளவலின்
ஆள்வினைக்கு அழிந்தோர் போறல் அல்லதைக்
கேள்பெருந் தகையோடு எவன்பல மொழிகுவம்
நாளுங் கோள்மீன் தகைத்தலுந் தகைமே ;

(பாடம்)* களைஇய ஒழிந்தது.

கல்லெனக் கவின்பெற்ற விழவாற்றுப் படுத்தபின்
புல்லென்ற களம்போலப் புலம்புகொண்டு அமைவாளோ ;
ஆள்பவர் கலக்குற அலைபெற்ற நாடுபோல்
பாழ்பட்ட முகத்தொடு பைதல்கொண்டு அமைவாளோ ;
ஓரிரா வைகலுள் தாமரைப் பொய்கையுள்
நீர் நீத்த மலர்போல நீநீப்பின் வாழ்வாளோ ;
எனவாங்கு,
பொய்ந்நல்கல் புரிந்தனை புறந்தரல் கைவிட்டு
எந்நாளோ நெடுந்தகாய் நீசெல்வது
அந்நாள்கொண்டு இறக்கும்இவள் அரும்பெறல் உயிரே''
(கலி. பாலை. ௪)

என வரும். இதனுள் ''யாம் நுமக்குச் சிறந்தனமாதல் அறிந்தனிராயின்'' என்றமையாலும், ''பொய்ந் நல்கல் புரிந்தனை'' என்றமையாலும் வரைவதன் முன்பென்று கொள்ளப்படும். இவள் இறந்துபடும் என்றமையால் உடன்கொண்டுபோவது குறிப்பு.

போக்கற்கண்ணும் என்பது 'உடன்கொண்டு பெயர்' என்று கூறுதற் கண்ணும் என்றவாறு.

## உதாரணம்

''மரையா மரல்கவர மாரி வறப்ப
வரையோங்கு அருஞ்சுரத்து ஆரிடைச் செல்வோர்
சுரையம்பு மூழ்கச் சுருங்கிப் புரையோர்தம்
உண்ணீர் வறப்பப் புலர்வாடு நாவிற்குத்
தண்ணீர் பெறுஅத் தடுமாற்று அருந்துயரம்
கண்ணீர் நனைக்குங் கடுமைய காடென்றால்
என்நீர் அறியாதீர் போல இவைகூறல்
நின்னீர அல்ல நெடுந்தகாய் எம்மையும்
அன்பறச் சூழாதே ஆற்றிடை நும்மொடு
துன்பந் துணையாக நாடின் அதுவல்லது
இன்பமும் உண்டோ வெமக்கு'' (கலி. பாலை. ௬

எனவரும்.

விடுத்தற்கண்ணும் என்பது தலைமகன் உடன்போக்கொருப்பட்டமை தலைமகளுக்குக் கூறி அவளை விடுத்தற்கண்ணும் என்றவாறு.

## உதாரணம்

'உன்னங் கொள்கையொடு உளங்கரந்து உறையும்
அன்னை சொல்லும் உய்கம் என்னதூஉம்
ஈரஞ் சேரா இயல்பின் பொய்ம்மொழிச்
சேரியம் பெண்டிர் கவ்வையும் ஒழிகம்
நாடுகண் அகற்றிய உதியஞ் சேரல்
பாடிச் சென்ற பரிசிலர் போல
உவவினி வாழி தோழி அவரே*

(பாடம்) அவரோ.

பொம்மல் ஓதி நம்மொடு ஓராங்குச்
செலவயர்ந் தனரால் இன்றேல் மலைதொறும்
மால்கழை பிசைந்த* நூல்வாய் கூரெரி
மீன்கொள் பரதவர் கொடுந்திமில் நளிசுடர்
வான்றோய் புணரி மிசைக்கண் டாங்கு
மேவரத் தோன்றும் யாஅஉயர் நனந்தலை
உயவல் யானை வெரிநுச்சென் றன்ன
கல்லூர்பு இழிதரும் புல்சாய் சிறுநெறிக்
காடுமீக் கூறுங் கோடேந்து ஒருத்தல்
ஆறுகடி கொள்ளும் அருஞ்சுரம் பணைத்தோள்
நாறைங் கூந்தல் கொம்மை வரிமுலை
நிரையிதழ் உண்கண் மகளிர்க்கு
அரிய வாலென அழுங்கிய செலவே'' (அகம். சுகூ)

என வரும். இஃது உடன்போக்கு நயப்பித்தது.

''வேலும் விளங்கின வினைஞரும்† இயன்றனர்
தாருந் ததையின தழையுந் தொடுத்தன
நிலநீர் அற்ற வெம்மை நீங்கப்
பெயல்நீர் தலைஇய உலவையிலை நீத்துக்
குறுமுறி யீன்றன மரனே நறுமலர்
வேய்ந்தன போலத் தோன்றிப் பலவுடன்
தேம்படப் பொதுளின பொழிலே கானமும்
நனிநன் றாகிய பனிநீங்கு வழிநாள்
பாலெனப் பரத்தரு நிலவின் மாலைப்
போதுவந் தன்று தூதே நீயும்
கலங்கா மனத்தை ஆகி என்சொல்
நயந்தனை கொண்மோ ‡ நெஞ்சமர் தகுவி
தெற்றி உலறினும் வயலை வாடினும்
நொச்சி மென்சினை வணர்குரல் சாயினும்
நின்னினும் மடவள் நனிநின் நயந்த
அன்னை அல்லல் தாங்கிநின் ஐயர்
புலிமருள் செம்மல் நோக்கி
வலியாய் இன்னுந் தோய்கநின் முலையே'' (அகம். உகூக)

எனவரும். இது விடுத்தவழிக் கூறியது.

நீக்கலின் வந்த தம்முறு விழுமமும் என்பது, தமரை நீக்குதலால் தமக்குற்ற நோயின்கண்ணும் என்றவாறு.

## உதாரணம்

''விளம்பழங் கமழும் கமஞ்சூல் குழிசிப்
பாசந் தின்ற தேய்கால் மத்தம்
நெய்தெரி இயக்கம் வெளில்முதல் முழங்கும்
வைகுபுலர் விடியல் மெய்கரந்து தன்கால்
அரியமை சிலம்பு கழீஇப் பன்மாண்
வரிப்புனை பந்தொடு வைஇய செல்வோள்

(பாடம்) * மிசைந்த. † வினையரும். ‡ கேண்மோ.

இவைகாண் தோறும் நோவர் மாதோ
அளியரோ அளியர்என் ஆயத் தோர்என
நும்மொடு வரவுதான் அயரவும்
தன்வரைத்து அன்றியுங் கலுழ்ந்தன கண்ணே'' (நற். கஉ)

எனவரும். இஃது உடன்போக்குத் தவிர்தற்பொருட்டுக் கூறியது.

இன்னும் "நீக்கலின் வந்த தம்முறு விழுமம்" என்றதனால் தலைமகட்குக் கூறினவும் கொள்க.

## உதாரணம்

"நாளும் நாளும் ஆள்வினை அழுங்க
இல்லிருந்து மகிழ்வோர்க் கில்லையால் புகழெனா
ஒண்பொருட் ககல்வர்நங் காதலர்
கண்பனி துடையினித் தோழி நீயே'' (சிற்றட்டகம்)

எனவரும்.

வாய்மையும் பொய்ம்மையும் கண்டோற்சுட்டித் தாய்நிலை நோக்கித் தலைப்பெயர்த்துக்கொளினும் என்பது, மெய்ம்மையும் பொய்ம்மையும் காணப்பட்ட அவனைச் சுட்டித் தாய்நிலை நோக்கி மீட்டுக்கொள்ளுதற் கண்ணும் என்றவாறு.

## உதாரணம்

"பால்மருள் மருப்பின் உரல்புரை பாவடி
ஈர்நறுங் கமழ்கடாஅத்து இனம்பிரி ஒருத்தல்
ஆறுகடி கொள்ளும் வேறுபுலம் படர்ந்து
பொருள்வயின் பிரிதல் வேண்டும் என்னும்
அருளில் சொல்லும் நீசொல் லினையே
நன்னர் நறுநுதல் நயந்தனை* நீவி
நின்னிற் பிரியலேன் அஞ்சல்ஓம் பென்னும்
நன்னர் மொழியும் நீமொழிந் தனையே
அவற்றுள்,
யாவோ வாயின மாஅல் மகனே
கிழவர் இன்னோர் என்னாது பொருள்தான்
பழவினை மருங்கின் பெயர்பு பெயர்பு உறையும்
அன்ன பொருள்வயிற் பிரிவோய் நின்னின்று
இமைப்புவரை வாழாள் மடவோள்
அமைக்கவின் கொண்ட தோளிணை மறந்தே''
(கலி. பாலை. உ0)

எனவரும்.

இது தலைமகனைச் சுட்டிக் கூறியது. தாய்நிலை நோக்கித் தலைப் பெயர்த்துக்கொண்டதற்குச் செய்யுள் வந்தவழிக் கண்டுகொள்க.

நோய் மிகப் பெருகித் தன் நெஞ்சு கலுழ்ந்தோளை. அழிந்தது களையென மொழிந்ததுகூறி வன்புறை நெருங்கி வந்ததன் திறத்தொடு.

பாடம் * நயந்தெனை.

என்றிவை எல்லாம் இயல்புற நாடின், ஒன்றித் தோன்றும் தோழி மேன' என்பது, தலைமகன் பிரிதலால் வந்துற்ற நோய் மிகவும் பெருகித் தன் நெஞ்சு கலங்கியோளை அழிந்தது களைதல் வேண்டுமெனத் தலைமகன் சொன்ன மாற்றத்தைக் கூறி வன்புறையின்பொருட்டு நெருங்கிவந்ததன் திறத்தோடு இத்தன்மைய வெல்லாம் இயல்புற ஆராயின் தலைமகளொடு பொருந்தித் தோன்றும் தோழி மேலன என்றவாறு.

''ஒன்றித் தோன்றுந் தோழி'' என்றதனால் தோழிமார் பலருள்ளும் இன்றியமையாதாள் என்றுகொள்க.

"தோழி தானே செவிலி மகளே" (களவியல் - ௩௪) என்றதனால், அவள் செவிலிமகள் என்று கொள்ளப்படும்.

மொழிந்தது கூறி வன்புறை நெருங்குதலாவது, தலைமகன் மொழிந்தது கூறி வற்புறுத்தலாம்.

''அரிதாய அறன் எய்தி அருளியோர்க்கு அளித்தலும்
பெரிதாய பகைவென்று பேணாரைத் தெறுதலும்
புரிவமர் காதலின் புணர்ச்சியும் தருமெனப்
பிரிவெண்ணிப் பொருள்வயின் சென்றநம் காதலர்
வருவர்கொல் வயங்கிழாஅய் வலிப்பல்யான் கேஎள்இனி

அடிதாங்கும் அளவின்றி அழலன்ன வெம்மையால்
கடியவே கனங்குழாஅய் காடென்றார் அக்காட்டுள்
துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்னுண்ணுங் களிறெனவும் உரைத்தனரே;''

எனவும்,

''இன்பத்தின் இகந்தொரீஇ இலைதீய்ந்த உலவையால்
துன்புறூஉந் தகையவே காடென்றார் அக்காட்டுள்
அன்புகொள் மடப்பெடை அசைஇய வருத்தத்தை
மென்சிறக ரால்ஆற்றும் புறவெனவும் உரைத்தனரே;''

எனவும்,

''கன்மிசை வேய்வாடக் கனைகதிர் தெறுதலால்
துன்னரூஉந் தகையவே காடென்றார் அக்காட்டுள்
இன்நிழல் இன்மையான் வருந்திய மடப்பிணைக்குத்
தன்நிழலைக் கொடுத்தளிக்குங் கலையெனவும் உரைத்தனரே;''

எனவும் அவன் மொழிந்தது கூறி,

''எனவாங்கு;

இனைநலம் உடைய கானஞ் சென்றோர்
புனைநலம் வாட்டுநர் அல்லர் மனைவயின்
பல்லியும் பாங்கொத்து இசைத்தன
நல்எழில் உண்கணும் ஆடுமால் இடனே'' (கலி-பாலை-௧௧)

என வற்புறுத்தியவாறு கண்டுகொள்க.

என்றிவை எல்லாம் இயல்புற நாடின்' என்றதனான், பருவம் வந்தது எனவும் பருவம் அன்று எனவும் வருவன கொள்க.

"வல்வருவர் *காணாய் வயங்கி முருக்கெல்லாம்
செல்வச் சிறார்க்குப்பொன் கொல்லர்போல்—நல்ல
பவளக் கொழுந்தின்மேற் பொற்றாலி பாய்த்தித்
திவளக்கான் றிட்டன தேர்ந்து." (திணைமாலை நூற்-கூ௬)

இது பருவம் வந்தது என்றது.

"மடவ மன்ற தடவுநிலைக் கொன்றை
கல்பிறங்கு அத்தஞ் சென்றோர் கூறிய
பருவம் வாரா அளவை நெறிதரக்
கொம்புசேர் கொடியிணர் ஊழ்த்த
வம்ப மாரியைக் காரென மதித்தே." (குறுந்-௬௬)

இது பருவம் அன்று என்றது.

இன்னும் 'என்றிவை எல்லாம்' என்றதனால், பிரியுங்காலத்துத் தலைமகட்கு உணர்த்துகின்றேன் எனத் தலைமகற்கு உரைத்தலும், தலைமகட்கு அவர் பிரியார் எனக் கூறுதலும் கொள்க.

"முளவுமா †வல்சி எயினர் தங்கை
இளமா எயிற்றிக்கு நின்நிலை அறியச்
சொல்லினேன் இரக்கும் அளவை
வென்வேல் காளை ‡விரையா திமே." (ஐங்குறு-௩௬௪)

இது விலக்கிற்று.

"விலங்கல் விளங்கிழாஅய் செல்வாரோ அல்லர்
அழற்பட் டசைந்த பிடியை—எழிற்களிறு
கற்சுனைச் சேற்றிடைச் சின்னீரைக் கையாற்கொண்டு
உச்சி யொழுக்குஞ் சுரம்." (ஐந்திணை ஐம்-௩உ)

இது தலைமகட்குக் கூறியது. (௪உ)

௪௩. பொழுது மாறும் உட்குவரத் தோன்றி
வழுவின் ஆகிய குற்றங் காட்டலும்
ஊரது சார்பும் செல்லுந் தேயமும்
ஆர்வ நெஞ்சமொடு செப்பிய வழியினும் §
புணர்ந்தோர் பாங்கிற் புணர்ந்த நெஞ்சமொடு$
அழிந்தெதிர் கூறி விடுப்பினும் ஆங்கத்
தாய்நிலை கண்டு தடுப்பினும் விடுப்பினும்
சேய்நிலைக்கு அகன்றோர் செலவினும் வரவினும்
கண்டோர் மொழிதல் கண்டது என்ப.

இது கண்டோர் கூற்று நிகழும் இடன் உணர்த்துதல் நுதலிற்று.

---

(பாடம்) * வல்வரும். † முளமா. ‡ விடலை.
§ கிளவியும். $ நெஞ்சமோடு.

(இ - ள்.) பொழுதும் ஆறும் உட்குவரத் தோன்றி வழுவின் ஆகிய குற்றம் காட்டலும் ஊரது சார்பும் செல்லும் தேயமும் ஆர்வ நெஞ்சமொடு செப்பிய வழியினும் என்பது, காலமும் நெறியும் அச்சம் வருமாறு தோன்றி வழுவுதலினாகிய குற்றம் காட்டலும் ஊரது அணிமையும் செல்லும் தேயத்தின் சேய்மையும் ஆர்வ நெஞ்சமொடு செப்பிய பக்கத்தினும் என்றவாறு.

## உதாரணம்

"எம்மூர் அல்லது ஊர்நணித்து இல்லை
வெம்முரண் செல்வன் கதிரும் ஊழ்த்தனன்
சேந்தனை சென்மோ பூந்தார் மார்ப
இளையள் மெல்லியள் மடந்தை
அரிய சேய பெருங்கல் ஆறே" (சிற்றட்டகம்)

Epigrammatic h... Hudson.

எனவரும்.

"புணர்ந்தோர் பாங்கில் புணர்ந்த நெஞ்சமொடு அழிந்து எதிர் கூறி விடுப்பினும் என்பது, புணர்ந்து-செல்கின்றோர் பக்கத்து விரும்பின நெஞ்சத்தோடு மனன் அழிந்து எதிர்மொழி கூறி விடுத்தற்கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.

## உதாரணம்

"அழுந்துபட வீழ்ந்த பெருந்தண் குன்றத்து
ஒலிவல் ஈந்தின் உலவை யங்காட்டு*
ஆறுசெல் மாக்கள் சென்னி எறிந்த
செம்மறுத் தலைய நெய்த்தோர் வாய
வல்லியம் பெருந்தலைக் குருளை மாலை
மரல்நோக்கும் †இண்டிவர் ஈங்கைய சுரனே
வையெயிற்று ஐயள் மடந்தை முன்னுற்று
எல்லிடை நீங்கும் இளையோன் உள்ளங்
காலொடு பட்ட மாரி
மால்வரை மிளிர்க்கும் உருமினுங் கொடிதே" (நற் உ,

எனவரும்.

ஆங்கு அத் தாய்நிலை கண்டு தடுப்பினும் விடுப்பினும் என்பது, ஆண்டுப் பின் சென்ற அச்செவிலித்தாயது நிலைமையைக் கண்டு போகாமல் தடுத்தற்கண்ணும் போகவிடுத்தற் கண்ணும் என்றவாறு.

## உதாரணம்

"அறம்புரி அருமறை நவின்ற நாவின்
திறம்புரி கொள்கை அந்தணிர் தொழுவலென்று
ஒண்டொடி வினவும் பேதையம் பெண்டே
கண்டனெம் அம்ம சுரத்திடை அவளே
இன்றுணை இனிதுபா ராட்டக்
குன்றுயர் பிறங்கல் மலையிறந் தோளே" (ஐங்குறு-௩அஎ

எனவரும். இது செவிலி வினாஅயவழிக் கூறியது.

(பாடம்) * அந்நாட் † மரனேக்கு

"பெயர்ந்து போகுதி பெருமூ தாட்டி
சிலம்புகெழு சீறடி சிவப்ப
இலங்குவேற் காளையோ டிறந்தனள் சுரனே."

இது தடுத்தற்கண் வந்தது.

"நெருப்பவிர் கனலி உருப்புச்சினந் தணியக்
கருங்கால் யாத்து வரிநிழல் இரீஇச்
சிறுவரை யிறப்பிற் காண்குவை செறிதொடிப்
பொன்னேர் மேனி மடந்தையொடு
வென்வேல் விடலை முன்னிய சுரனே." (ஐங்குறு-ங௩அஅ)

இது விடுத்தற்கண் வந்தது.

சேய்நிலைக்கு அகன்றோர் செலவினும் வரவினும் என்பது, சேய்மைக்கண் அகன்றோர் செல்லுதற் கண்ணும் வரவின்கண்ணும் என்றவாறு.

## உதாரணம்

"வில்லோன் காலன கழலே தொடியோள்
மெல்லடி மேலவுஞ் சிலம்பே நல்லோர்
யார்கொல் அளியர் தாமே ஆரியர்
கயிறுடு பறையிற் கால்பொரக் கலங்கி
வாகை வெண்நெற் றொலிக்கும்
வேய்பயில் அழுவம் முன்னி யோரே" (குறுந்-எ)

என வரும்.

'கண்டோர் மொழிதல் கண்டது என்ப' என்பது, இவ்விவ்விடங்களில் கண்டோர் சொல்லுதல் வழக்கிற் காணப்பட்டதென்ப என்றவாறு. (சங)

சச. ஒன்றாத் தமரினும் பருவத்துஞ் சுரத்தும்
ஒன்றிய மொழியொடு வலிப்பினும் விடுப்பினும்
இடைச்சுர மருங்கில் அவள்தமர் எய்திக்
*கடைக்கொண்டு பெயர்தலிற் கலங்கஞர் எய்திக்
கற்பொடு புணர்ந்த கௌவை உளப்பட
அப்பாற் பட்ட ஒருதிறத் தானும்
நாளது சின்மையும் இளமைய தருமையுங்

* கடை-பின். 'தமர்' எனவே, தந்தை தன்னையரை உணர்த்திற்று. முன்னர்த் 'தாய்நிலை கண்டு தடுப்பினும்' (சo) என்றலின், தாயர் தாமே சென்றமை முன்னத்தால் தமர் உணர்ந்து வலிதிற்கொண்டு அகன்றானென்று கருதியும், அவ்வரைவு மாட்சிமைப் படுத்தற்கும் பின் சென்று அவள் பெயராமற் கற்பொடு புணர்ந்தமை கண்டு தலைவன் எடுத்துக்கொண்ட வினைமுடித்தலும் ஒருதலை என்று உணர்ந்து பின்னர் அவரும் போக்குடன் பட்டு மீள்ப என்று கொள்க. அவ்வெளிப்பாடு கற்பாதலிற் 'கற்பு' என்றார். 'உளப்பட' என்றதனால் வலித்தலும் விடுத்தலும் அகப்பட என்றாராயிற்று. (நச்சி.)

தாளாண் பக்கமுந் தகுதிய தமைதியும்
இன்மைய திளிவும் உடைமைய துயர்ச்சியும்
அன்பின தகலமும் அகற்சிய தருமையும்
ஒன்றாப் பொருள்வயின் ஊக்கிய பாலினும்
வாயினுங் கையினும் வகுத்த பக்கமோடு
ஊதியம் கருதிய ஒருதிறத் தானும்
புகழும் மானமும் எடுத்துவற் புறுத்தலும்
தூதிடை யிட்ட வகையி னானும்
ஆகித் தோன்றும் பாங்கோர் பாங்கினும்
மூன்றன் பகுதியும் மண்டிலத் தருமையும்
தோன்றல் சான்ற மாற்றோர் மேன்மையும்
பாசறைப் புலம்பலும் முடிந்த காலத்துப்
பாகனொடு விரும்பிய வினைத்திற வகையினும்
காவற் பாங்கின் ஆங்கோர் பக்கமும்
பரத்தையின் அகற்சியிற் பிரிந்தோட் குறுகி
இரத்தலுந் தெளித்தலும் எனஇரு வகையோடு
உரைத்திற நாட்டம் கிழவோன் மேன.

**இது பிரிவின்கண் தலைமகற்குக் கூற்று நிகழும் இடன் உணர்த்துதல் நுதலிற்று.**

(இ - ள்.) ஒன்றாத் தமரினும் பருவத்தும் சுரத்தும் ஒன்றிய மொழியொடு வலிப்பினும் விடுப்பினும் என்பது, வரைவு உடன் படாத தமர் கண்ணும் பருவத்தின்கண்ணும் சுரத்தின்கண்ணும் பொருந்திய சொல்லொடு தலைமகளை உடன்கொண்டு போகத் துணியினும் விடுத்துப்போகினும் கிழவோற்குக் கூற்று நிகழும் என்றவாறு.

'உரைத்திற நாட்டம் உளவாம் கிழவோற்கு' என்பதை ஏனைய பகுதிக்கும் ஒட்டுக.

வலித்தற்குச் செய்யுள்

''ஆறுசெல் வருத்தத்துச் சீறடி சிவப்பவுஞ்
சிலைநீங்கு தளிரின் வண்ணம் வாடவுந்
தான்வரல் துணிந்த இவளினும் இவளுடன்
வேய்பயில் அழுவம் உவக்கும்
பேதை நெஞ்சம் பெருந்தகவு உடைத்தே''

எனவும்,

"வேட்டச் செந்நாய் கிளைத்தூண் மிச்சில்
குளவி மொய்த்த அழுகற் சின்னீர்
வளையுடைக் கையள் எம்மோ டுணீஇயர்*
வருகதில் அம்ம தானே
அளியளோ அளியள்என் நெஞ்சமர்ந் தோளே" (குறுந். ௫௬)

எனவும் வரும்.

அவ்வழி இடைச்சுரத்திற் கூறியதற்குச் செய்யுள்

"அழிவில முயலும் ஆர்வ மாக்கள்
வழிபடு தெய்வம் கண்கண் டாஅங்கு
அலமரல் வருத்தந் தீர யாழநின்
நலமென் பணைத்தோ ளெய்தின மாகலிற்
பொரிப்பூம் புன்கி னெழிற்றகை யொண்முறி
சுணங்கணி வனமுலை யணங்குகொளத் திமிரி
நிழல்காண் தோறும் நெடிய வைகி
மணல்காண் தோறும் வண்டல் தைஇ
வருந்தா தேகுமதி வாலெயிற் றோயே
மாநனை கொழுதி மகிழ்குயில் ஆலும்
நறுந்தண் பொழில கானங்
குறும்பல் ஊரயாஞ் செல்லு மாறே" (நற். ௯)

என வரும்.

விடுத்தற்குச் செய்யுள்

"இரும்புலிக் கிரிந்த கருங்கட் செந்நாகு
நாட்டயிர் கடைகுரல் கேட்டொறும் வெரூஉம்
ஆநிலைப் புள்ளி அல்க நம்மொடு
மானுண் கண்ணியும் வருமெனின்
வாரார் ஆயரோ பெருங்க லாறே"

எனவரும். இஃது உடன்கொண்டு பெயர்தல் வேண்டுமென்ற தோழிக்குக் காட்டது கடுமை கூறி விடுத்தது.

"கிளிபுரை கிளவியாய் எம்மொடு நீவரின்
தளிபொழி தளிரன்ன எழில்மேனி கவின்வாட
முளியரில் பொத்திய முழங்கழல் இடைபோழ்ந்த
வளியுறின் அவ்வெழில் வாடுவை யல்லையோ" (கலி.பாலை.௧௨)

என்பது தலைவிக்குக் காட்டது கடுமைகூறி விடுத்தது.

இடைச்சுரம் மருங்கின் அவள் தமர் எய்திக் கடைக்கொண்டு பெயர்தலில் கலங்கு அஞர் எய்திக் கற்பொடு புணர்ந்த கௌவை உளப்பட அப்பால் பட்ட ஒரு திறத்தானும் என்பது, தலைமகள் செல்கின்ற இடைச் சுரத்திடைத் தலைமகள் தமர் எய்தி மீட்டுக்கொண்டு பெயர்தல் மரபாதலின் அங்ஙனம் பெயர்வர் எனக் கலங்கி வருத்தமுற்றுக் கற்பொடு புணர்ந்த அலர் உளப்பட அப்பகுதிப்பட்ட உடன்போக்கின் கண்ணும் அவற்குக் கூற்று நிகழும் என்றவாறு.

அவ்வழி, வருவரெனக் கூறலும் வந்தவழிக் கூறலும் உளவாம்.

---

(பாடம்) * டுணீஇய.

## உதாரணம்

"வினையமை பாவையின் இயலி நுந்தை
மனைவரை இறந்து வந்தனை யாயின்
தலைநாட் செதிரிய தண்பெயல் எழிலி
அணிமிகு கானத் தகன்புறம் பரந்த
கடுஞ்செம் மூதாய் கண்டுங் கொண்டும்
நீவிளை யாடுக சிறிதே யானே
மழகளிறு உரிஞ்சிய பராஅரை வேங்கை
மணலிடு மருங்கின் இரும்புறம் பொருந்தி
அமர்வரின் அஞ்சேன் பெயர்க்குவன்
நுமர்வரின் மறைகுவென் மாஅ யோளே."  (நற். கசுஉ)

இது வருவர் என ஐயுற்றுக்கூறியது. 'கற்பொடு புணர்ந்தகௌவை'க்குச் செய்யுள் வந்தவழிக் கண்டுகொள்க.

நாளது சின்மையும் இளமையது அருமையும் தாளாண் பக்கமும் தகுதியது அமைதியும் இன்மையது இளிவும் உடைமையது உயர்ச்சியும் அன்பினது அகலமும் அகற்சியது அருமையும் ஒன்றாப் பொருள்வயின் ஊக்கிய பாலினும் என்பது. நாளது சின்மை முதலாகச் சொல்லப்பட்ட எட்டனையும் பொருந்தாத பொருட்கண் ஊக்கிய பக்கத்தினும் அவற்குக் கூற்று நிகழும் என்றவாறு.

'ஒன்றா' என்னும் பெயரெச்சம் 'பால்' என்னும் பெயர் கொண்டு முடிந்தது. அது 'பொருள்வயி னூக்கிய பால்' என அடையடுத்து நின்றது.

நாளது சின்மையை ஒன்றாமையாவது, யாக்கை நிலையாது என உணரும் உணர்ச்சியைப் பொருந்தாமை.

இளமையது அருமையை ஒன்றாமையாவது, பெறுதற்கரிய இளமை நிலையாது என உணரும் உணர்ச்சியைப் பொருந்தாமை.

தாளாண் பக்கத்தை ஒன்றாமையாவது, முயற்சியான் வரும் வருத்தத்தை உணரும் உணர்ச்சியைப் பொருந்தாமை.

தகுதியது அமைதியை ஒன்றாமையாவது, பொருண்மேற் காதல் உணர்ந்தோர்க்குத் தகாது என உணரும் உணர்ச்சியைப் பொருந்தாமை;

இன்மையது இளிவை ஒன்றாமையாவது, இன்மையான் வரும் இளிவரவினைப் பொருந்தாமை.

உடைமையது உயர்ச்சியை ஒன்றாமையாவது, பொருள் உடையார்க்கு அமைவு வேண்டுமன்றே, அவ்வமைவினைப் பொருந்தாமை: அஃதாவது மென்மேலும் ஆசை செலுத்துதல்.

அன்பினது அகலத்தை ஒன்றாமையாவது, சிறந்தார்மாட்டுச் செல்லும் அன்பினைப் பொருந்தாமை.

அகற்சியது அருமையை ஒன்றாமையாவது, பிரிதலருமையைப் பொருந்தாமை.

பொருள் தேடுவார் இத்தன்மைய ராதல் வேண்டுமென ஒருவாற்றான் அதற்கு இலக்கணங் கூறியவாறு.

வாயினும் கையினும் வகுத்த பக்கமோடு ஊதியம் கருதிய ஒரு திறத்தானும் என்பது, வாயான் வகுத்த பக்கமோடும் கையான் வகுத்த பக்கமோடும் பயன் கருதிய ஒரு கூற்றானும் அவற்குக் கூற்று நிகழும் என்றவாறு.

வாயான் வகுத்த பக்கமாவது-ஓதுதல். கையான் வகுத்த பக்கமாவது-படைக்கலம் பயிற்றலும் சிற்பங்கற்றலும். ஊதியங் கருதிய ஒரு திறனாவது மேற்சொல்லப்பட்ட பொருள்வயிற் பிரிதலன்றி அறத்திறங் காரணமாகப் பிரியும் பிரிவு. இது மறுமைக்கண் பயன் தருதலின் 'ஊதியம்' ஆயிற்று.

"அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
மறத்தலி னூங்கில்லை கேடு" (குறள்-௩௨)

என்பதனானும் அறிக.

புகழும் மானமும் எடுத்து வற்புறுத்தலும் என்பது பிரிந்ததனான் வரும் புகழும் பிரியாமையான் வரும் குற்றமும் குறித்துத் தலைமகளை யான் வருந்துணையும் ஆற்றியிருத்தல் வேண்டுமெனக் கூறுதற்கண்ணும் அவற்குக் கூற்று நிகழும் என்றவாறு.

பொருள்வயின் ஊக்கிய பாலினும் ஊதியம் கருதிய ஒரு திறத்தானும் வற்புறுத்தல் எனக்கூட்டுக.

## உதாரணம்

"அறனு மீகையு மன்புங் கிளையும்
புகழு மின்புந் தருதலிற் புறம்பெயர்ந்து
தருவது துணிந்தமை பெரிதே
விரிபூங் கோதை விளங்கிழை பொருளே"

என வரும்.

தூதிடை இட்ட வகையினலும் என்பது, இரு பெரு வேந்தர் இகலிய வழிச் சந்து செய்தற்குத் தூதாகிச் செல்லும் வகையின் கண்ணும் அவற்குக் கூற்று நிகழும்.

ஆகித் தோன்றும் பாங்கோர் பாங்கினும் என்பது, தனக்குப் பாங்காகித் தோன்றுவார் பக்கத்துப் பிரியும் வழியும் அவற்குக் கூற்று நிகழும் என்றவாறு. அதுவும் வேந்தற்கு உற்றுழிப் பிரியும் பிரிவு.

மூன்றன் பகுதியாவன, நால்வகை வலியினும் தன் வலியும் துணை வலியும் வினைவலியும் என்பன. அவை பகைவர்மாட்டுள்ளன.

மண்டிலத்து அருமையாவது, பகைவர் மண்டிலங் கொண்ட அருமை என்றவாறு.

தோன்றல் சான்ற என்பது, [இவை] மிகுதல் சான்ற என்றவாறு.

மாற்றோர் மேன்மையாவது, மாற்றோரது உயர்ச்சியானும் என்றவாறு. ஆறன் உருபு எஞ்சிநின்றது.

மூன்றன் பகுதியானும் மண்டிலத்தருமையானும் தோன்றல் சான்ற மாற்றோர் எனக் கூட்டுக.

பாசறைப் புலம்பல் என்பது, பாசறைக்கண் தலைமகன் தனிமையுரைத்தல் என்றவாறு.

தூதிடை வகையினுனும். வேந்தற்கு உற்றுழியினுனும், மாற்றேர் மேன்மையினுனும் பாசறைக்கட் புலம்பல் எனக் கூட்டுக. அஃதாவது, தூதினும் வேந்தற்குற்றுழியினும் பகைதணிவினையினும் பாசறைக்கட் புலம்பல் உளதாகும் எனக்கொள்க.

## உதாரணம்

"வேளாப் பார்ப்பான் வாளரந் துமித்த
வளைகளை ந் தொழிந்த* கொழுந்தி னன்ன
தளைபிணி அவிழாச் சுரிமுகப்† பகன்றை
சிதரலந் துவலை தூவலின் மலருந்
தைஇ நின்ற தண்பெயற் கடைநாள்
வயங்குகதிர் கரந்த வாடை வைகறை
விசும்புரி வதுபோல் வியலிடத் தொழுகி
மங்குல் மாமழை தென்புலம் படரும்
பனியிருங் கங்குலுந் தமியள் நீந்தித்
தம்மூ ரோளே நன்னுதல் யாமே
கடிமதிற் கதவம் பாய்தலின் தொடிபிளந்து
நுதிமுகம் மழுங்கிய மண்ணைவெண் கோட்டுச்
சிறுகண் யானை நெடுநா ஒண்மணி
கழிப்பிணிக் கறைத்தோல் பொழிகணை உதைப்பத்
தழங்குகுரல் முரசமொடு மயங்கும் யாமத்துக்
கழித்துறைச் செறியா வாளுடை யெறுழ்த்தோள்
இரவுத்துயில் மடிந்த தானை
உரவுச்சின வேந்தன் பாசறை யோமே." (அகம்-உச)

இது வேந்தற்கு உற்றுழிப் பிரிந்த தலைமகன் கூற்று.

"வைகுபுலர் விடியல் மைபுலம் பரப்பக்
கருநனை அவிழ்ந்த ஊழுறு முருக்கின்
எரிமருள் பூஞ்சினை யினச்சிதர் ஆர்ப்ப
நெடுநெல் அடைச்சிய கழனியேர் புகுத்துக்
குடுமிக் கட்டிய படப்பையொடு மிளிர
அரிகால் போழ்ந்த தெரிபகட்டு உழவர்
ஓதைத் தெள்விளி புலந்தொறும் பரப்பக்
கோழிணர் எதிரிய மரத்த கவினிக்
காடணி கொண்ட காண்டகு பொழுதின்
நாம்பிரி புலம்பின் நலஞ்செலச் சாஅய்
நம்பிரிபு அறியா நலனொடு சிறந்த
நற்றோள் நெகிழ வருந்தினள் கொல்லோ
மென்சிறை வண்டின் தண்கமழ் பூந்துணர்
தாதின் துவலை தளிர்வார்ந் தன்ன
அங்கலுழ் மாமைக் கிளைஇய
நுண்பல் தித்தி மாஅ யோளே" (அகம்-௪௧)

என்பது பகையிற் பிரியும் தலைமகன் கூற்று. பிறவும் அன்ன. இவ்வாறு வருவன குறித்த பருவம் பிழைத்துழி என்று கொள்க.

(பாடம்) * தொழித்த. † சுரிமுகிழ்ப்.

முடிந்த காலத்துப் பாகனொடு விரும்பிய வினைத்திற வகையினும் என்பது, வினை முடிந்த காலத்துப் பாகனொடு விரும்பப்பட்ட வினைத் திறத்தினது வகையின் கண்ணும் அவற்குக் கூற்று நிகழும் என்றவாறு.

அது பாசறைக்கட் கூறலும், மீண்டு இடைச்சுரத்துக் கூறலும் என இருவகைப்படும். இன்னும், 'வகை' என்றதனுன் நெஞ்சிற்குக் கூறியன வுங்கொள்க.

## உதாரணம்

"வந்துவினை முடித்தனன் வேந்தனும் பகைவரும்
தந்திறை கொடுத்துத் தமரா யினரே
முரண்செறிந் திருந்த தானை இரண்டும்
ஒன்றென அறைந்தன பணையே நின்தேர்
முன்னியங்கு ஊர்தி பின்னிலை யீயாது
ஊர்க பாக ஒருவினை கழிய
நன்னன் ஏற்றை நறும்பூண் அத்தி
துன்னருங் கடுந்திறல் கங்கன் கட்டி
பொன்னணி வல்விற் புன்றுறை யென்றாங்
கன்றவர் குழீஇய அளப்பருங் கட்டூர்ப்
பருந்துபடப் பண்ணிப் பழையன் பட்டெனக்
கண்டது நோனான் ஆகித் திண்டேர்க்
கணையன் அகப்படக் கழுமலந் தந்த
பிணையலங் கண்ணிப் பெரும்பூண் சென்னி
அழும்பில் அன்ன அறாஅ யாணர்ப்
பழம்பல் நெல்லின் பல்குடிப் பரவைப்
பொங்கடி படிகயம் மண்டிய பசுமிளைத்
தண்குட வாயில் அன்னோள்
பண்புடை ஆகத் தின்றுயில் பெறவே" (அகம்-௪௪)

எனவும்,

"கேள்கேடு ஊன்றவுங் கிளைஞர் ஆரவும்
கேளல் கேளிர் கெழீஇயினர் ஒழுகவும்
ஆள்வினைக் கெதிரிய ஊக்கமொடு புகல்சிறந்து
ஆரங் கண்ணி அடுபோர்ச் சோழர்
அறங்கெழு நல்லவை உறந்தை அன்ன
பெறலரு நன்கலன் எய்தி நாடும்
செயலருஞ் செய்வினை முற்றின மாயின்
அரண்பல கடந்த முரண்கொள் தானை
வாடா வேம்பின் வழுதி கூடல்
நாளங் காடி நாறு நறுநுதல்
நீளிருங் கூந்தல் மாஅ யோளொடு
வரைகுயின் றன்ன வான்றோய் நெடுநகர்
நுரைமுகந் தன்ன மென்பூஞ் சேக்கை
நிவந்த பள்ளி நெடுஞ்சுடர் விளக்கத்து
நலங்கேழ் ஆகம் பூண்வடுப் பொறிப்ப
முயங்குகஞ் சென்மோ நெஞ்சே வரிநுதல்
வயந்திகழ்பு இமிழ்தரும் வாய்புகு கடாஅத்து
மீளி முன்பொடு நிலனெறியாக் குறுகி

ஆள்கோட் பிழையா அஞ்சுவரு தடக்கைக்
கடும்பகட் டியானை நெடுந்தேர்க் கோதைத்
திருமா வியனகர்க் கருவூர் முன்றுறைத்
தெண்ணீர் உயர்கரைக் குவைஇய
தண்ணான் பொருநை மணலினும் பலவே" (அகம்-௯௩)

எனவும் வருவன நெஞ்சிற்குக் கூறியன.

"கொல்வினைப் பொலிந்த கூர்ங்குறும் *புழுகின்
வில்லோர் தூணி வீங்கப் பெய்த
அப்புநுனை ஏய்ப்ப அரும்பிய இருப்பைச்
செப்படர் அன்ன செங்குழை அகந்தோ
றிழுதின் அன்ன தீம்புழல் துய்வாய்
உழுதுகாண் துளைய வாகி ஆர்கழல்பு
ஆலி வானிற் காலொடு பாறித்
துப்பின் அன்ன செங்கோட் டியலின்
நெய்த்தோர் மீமிசை நிணத்திற் பரிக்கும்
அத்த நண்ணிய அங்குடிச் சீறூர்க்
கொடுநுண் ணோதி மகளிர் ஓக்கிய
தொடிமாண் உலக்கைத் தூண்டுரற் பாணி
நெடுமால் வரைய குடிஞையோ டிரட்டும்
குன்றுபின் ஒழியப் போகி உரந்துரந்து
ஞாயிறு படினும் ஊர்சேய்த் தெனாது
துனைபரி துரக்கும் துஞ்சாச் செலவின்
எம்மினும் விரைந்துவல் லெய்திப் பன்மாண்
ஓங்கிய நல்லில் ஒருசிறை நிலைஇப்
பாங்கர்ப் பல்லி படுதொறும் பரவிக்
கன்றுபுகு மாலை நின்றோள் எய்திக்
கைகவியாச் சென்று கண்புதையாக் குறுகிப்
பிடிக்கை யன்ன பின்னகந் தீண்டித்
தொடிக்கை தைவரத் தோய்ந்தன்று கொல்லோ
நாணொடு மிடைந்த கற்பின் வாணுதல்
அந்தீங் கிளவிக் குறுமகள்
மென்றோள் பெறநசைஇச் சென்றஎன் நெஞ்சே." (அகம்-௯)

இஃது இடைச்சுரத்துச் சொல்லியது.

காவல் பாங்கின் ஆங்கு ஓர் பக்கம் என்பது, காவற்பக்கத்தின்கண் ஒரு பிரிவினும் கூற்று நிகழும் என்றவாறு.

'ஆங்கு' என்பது இடங்குறித்து நின்றது; "நின்னாங்கு வருஉமென் நெஞ்சினை" (கலி. பாலை. ௨௨) என்றாற் போலக் கொள்க. இது வாரியுள் யானை காணவும், நாடுகாணவும், புனலாடவும், கடவுளரை வழிபடவும் பிரியும் பிரிவு. ஒருபக்கம் நாட்டெல்லையிலிருந்து பகைவரைக் காக்கவேண்டிப் பிரிவது பகைவயிற் பிரிவின் அடங்குதலின் அஃததன் உண்மைக்கண் பிரியும் பிரிவு என்று ஓதப்பட்டது.

பரத்தையின் அகற்சியின் என்பது, பரத்தையரிற் பிரியும் பிரிவின் கண்ணும் என்றவாறு. உம்மை எஞ்சி நின்றது.

(பாடம்) * குறும்பெஃகின்.

பிரிந்தோள் குறுகி இரத்தலும் தெளித்தலும் என இருவகையோடு என்பது, பிரியப்பட்ட தலைமகளைக் குறுகி இரத்தலும் தெளித்தலும் ஆகிய இரண்டு வகையோடே கூட என்றவாறு.

காவற் பாங்கின் ஆங்கோர் பக்கத்தினும் பரத்தையின் அகற்சியினும் பிரியப்பட்டார் எனக் கூட்டுக. அஃதேல் பரத்தையின் அகற்சி ஊடலா காதோ வெனின், ஊடலின் மிக்க நிலையே ஈண்டுக் கூறுகின்றதெனக் கொள்க.

### கடவுள்மாட்டுப் பிரிந்துவந்த தலைமகனைத் தலைமகள் புணர்ச்சி மறுத்தற்குச் செய்யுள்

மருதக்கலியுள் கடவுட் பாட்டினுள்,

"வண்டூது சாந்தம் வடுக்கொள நீவிய
தண்டாத்தீஞ் சாயல் பரத்தை வியன்மார்ப
பண்டினை யல்லைமன் ஈங்கெல்லி வந்தீயக்
கண்டதெவன்மற் றுரை;
நன்றும்,
தடைஇய மென்தோளாய் கேட்டீவா யாயின்
உடனுறை வாழ்க்கைக் குதவி யுறையும்
கடவுளர் கண் தங்கி னேன்;
சோலை மலர்வேய்ந்த மான்பிணை யன்னார் பலர்நீ
கடவுண்மை கொண்டொழுகு வார்"

எனவும்,

"சிறுவரைத் தங்கின் வெகுள்வர் செறுத்தக்காய்
தேறினென் சென்றீநீ செல்லா விடுவாயேல்
நற்றார் அகலத்துக் கோர்சார மேவிய
நெட்டிருங் கூந்தற் கடவுள ரெல்லார்க்கும்
முட்டுப்பா டாகலும் உண்டு" (கலி. மரு. உஅ)

எனவும் புணர்ச்சிக்கு உடன்படாது கூறுதலானும், குறும்பூழ்ப் பாட்டினுள்,

"விடலைநீ நீத்தலின் நோய்பெரி தேய்க்கும்
நடலைப்பட் டெல்லாநின் பூழ்"

என்றவழி மருதநிலத்தின் தலைமகனை விடலை என்றமையானும், இதனுள்

"பொய்யெல்லாம் ஏற்றித் தவறு தலைப்பெய்து
கையொடு கண்டாய் பிழைத்தேன் அருள்இனி"
(கலி. மரு. கo)

என இரந்தமையானும் கண்டு கொள்க.

"ஒரூஉக், கொடியியல் நல்லார் குரனுற்றத் தூற்ற
முடியுதிர் பூந்தாது மொய்ம்பின வாகத்
தொடீஇய எமக்குநீ யாரை பெரியார்க்கு
அடியரோ ஆற்று தவர்;
கடியதமக், கியார்சொல்லத் தக்கார் மாற்று,*
வினைக்கெட்டு, வாயல்லா வெண்மை யுரையாது கூறுநின்
மாய மருள்வார் அகத்து;

(பாடம்) * தக்கரா மற்று,

ஆயிழாய், நின்கண் பெறினல்லால் இன்னுயிர் வாழ்கல்லா
என்கண் எவனோ தவறு ;
இஃதொத்தன், புள்ளிக் களவன் புனல்சேர் பொதுக்கம்போல்
வள்ளுகிர் போழ்ந்தனவும் வாளெயி றுற்றனவும்
ஒள்ளிதழ் சோர்ந்தநின்* கண்ணியும் நல்லார்
சிரறுபு சீறச் சிவந்தநின் மார்பும்
தவறுதல் சாலாவோ கூறு;
அதுதக்கது, வேற்றுமை என்கண்ணோ ஓராதி தீதின்மை
தேற்றக்கண் டீயாய் தெளிக்கு ;
இனித்தேற்றேம் யாம்
தேர்மயங்கி வந்த தெரிகோதை யந்நல்லார்
தார்மயங்கி வந்த தவறஞ்சிப் போர்மயங்கி
நீகூறும் பொய்ச்சூள் அணங்காகின் மற்றினி
யார்மேல் விளியுமோ கூறு.'' (கலி. மரு-உ௧)

இதனுள் இரத்தலும் தெளித்தலும் வந்தவாறு கண்டுகொள்க.

கலித்தொகையிற் கடவுட் பாட்டினுள் உரிப்பொருண்மை பற்றி வரும் பாட்டுக்களும் மருதநிலத்துத் தலைமகன் பெயர் கூறுது பிறபெயர் படக் கோத்தமையானும் ஊடற்பொருண்மையின் வேறுபாடுண்மை அறிக.

'உரைத்திறம் நாட்டம் கிழவோன் மேன' என்பது, இவ்விவ்விடங்கள் பற்றி உரையாடுங் குறிப்புத் தலைமகன் மேலன என்றவாறு. (௪௪)

௪௫. எஞ்சி யோர்க்கு மெஞ்சுதல் இலவே.

இதுகாறும் பிரிவின்கண் கூறுதலுரியார் பலருள்ளும் நற்றாயும் செவிலியும் கண்டோரும் தோழியும் தலைமகனும் கூறுங்கூற்றுக் கூறினர். இஃது அவரை யொழிந்த தலைமகட்கும் பாங்கற்கும் பார்ப்பார்க்கும் பாணர்க்கும் கூத்தர்க்கும் உழையோர்க்கும் கூற்று நிகழுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) எஞ்சியோர்க்கும் எஞ்சுதல் இல - முன்னர்க் கூறுது எஞ்சி நின்றார்க்கும் கூற்றுஒழிதல் இல.

'பாங்கர் முதலாயினரை இச்சூத்திரத்தாற் கூறுப ; தலைமகள் கூற்றுத் தனித்துக் கூறல் வேண்டும், இவரோடு ஒரு நிகரன்மையின்' எனின் ஒக்கும். தலைமகள் கூற்று உணர்த்திய சூத்திரம் காலப் பழைமையாற் பெயர்த்தெழுதுவார் விழ எழுதினர் போலும். ஆசிரியர் இச்சூத்திரத்தானும் பொருள் கொள்ள வைத்தமையின், தலைமகள் கூற்று வருமாறு. தலைமகள் பிரிதலுற்ற தலைமகன் குறிப்புக் கண்டு கூறுதலும், பிரிவுணர்ந்து கூறுதலும், பிரிவுணர்த்திய தோழிக்குக் கூறுதலும், உடன்போவல் எனக் கூறுதலும், இடைச்சுரத்து ஆயத்தார்க்குச் சொல்லிவிட்டனவும், தமர்வந்துற்ற வழிக் கூறுதலும், மீளலுற்ற வழி ஆயத்தார்க்குக் கூறிவிட்டனவும், பிரிவாற்றுமையும், ஆற்றுவல் என்பது படக் கூறுதலும் தெய்வம் பராவலும், பருவங்கண்டு கூறுதலும், வன்புறை எதிரழிந்து கூறுதலும் இவையெல்லாம் கூறப்படும்.

---

(பாடம்) * சேர்ந்தநின்

**பிரிவுற்ற தலைமகன் குறிப்புக்கண்டு கூறியதற்குச்செய்யுள்**

''நெஞ்சு நடுக்குறக் கேட்டுங் கடுத்துந்தாம்
அஞ்சிய தாங்கே* அணங்காகும் என்னும்சொல்
இன்தீங் கிளவியாய் வாய்மன்ற நின்கேள்
புதுவது பன்னாளும் பாராட்ட யானும்
இதுவொன் றுடைத்தென எண்ணி அதுதேர
மாசில்வண்† சேக்கை மணந்த புணர்ச்சியுட்
பாயல்கொண்டு என்தோள் கனவுவார் ஆய்கோல்
தொடிநிரை முன்கையாள் கையாறு கொள்ளாள்
கடிமனை காத்தோம்ப வல்லுவள் கொல்லோ
இடுமருப் பியானை யிலங்குதேர்க் கோடும்
நெடுமலை வெஞ்சுரம் போகி நடுநின்றெம்
செய்பொருண் முற்றும் அளவென்றார் ஆயிழாய்
தாமிடை கொண்டததுவாயின் தம்மின்றி
யாமுயிர் வாழும் மதுகை இலேமாயில்
தொய்யில் துறந்தார் அவர்எனத் தம்வயின்
நொய்யார் நுவலும் பழிநிற்பத் தம்மொடு
போயின்று சொல்லென் உயிர்.'' (கலி. பாலை-௨௧)

**பிரிவுணர்ந்த தலைமகள் தலைமகனுடன் கூறியதற்குச்செய்யுள்**

''செவ்விய தீவிய சொல்லி அவற்றொடு
பைய முயங்கியஅஞ்ஞான் றவையெல்லாம்
பொய்யாதல் யான்யாங் கறிகோமற் றைய
அகனகர் கொள்ளா அலர்தலைத் தந்து
பகன்முனி வெஞ்சுரம் உள்ளல் அறிந்தேன்
மகனல்லை மன்ற இனி;
செல்லினிச் சென்றுநீ செய்யும் வினைமுற்றி
அன்பற மாறியாம் உள்ளத் துறந்தவள்
பண்பும் அறிதிரோ என்று வருவாரை
என்திறம் யாதும் வினவல் வினவின்
பகலின் விளங்குநின் செம்மல் சிதையத்
தவலருஞ் செய்வினை முற்றாமல் ஆண்டோர்
அவலம் படுதலும் உண்டு.'' (கலி. பாலை-௧௮)

**பிரிவுணர்த்திய தோழிக்குக் கூறியதற்குச் செய்யுள்**

''அருளும் அன்பும் நீக்கித் துணைதுறந்து
பொருள்வயிற் பிரிவோர் உரவோர் ஆயின்
உரவோர் உரவோர் ஆக
மடவம் ஆக மடந்தை நாமே.'' (குறுந். ௨0)

''செல்லாமை உண்டேல் எனக்குரை‡மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை'' (குறள்-௧௧௫௧)

என்பதும் அது.

---

(பாடம்) *தெல்லாம். † மாசில்வன் ‡ எமக்குரை.

### உடன்போக்கு ஒருப்பட்டதற்குச் செய்யுள்

"சிலரும் பலருங் கடைக்கண் நோக்கி
மூக்கின் உச்சிச் சுட்டுவிரல் சேர்த்தி
மறுகிற் பெண்டிர் அம்பல் தூற்றச்
சிறுகோல் வலந்தனள் அன்னை அலைப்ப
அலந்தனென் வாழி தோழி கானற்
புதுமலர் தீண்டிய பூநாறு குரூஉச்சுவற்
கடுமா பூண்ட நெடுந்தேர் கடைஇ
நடுநாள் வரூஉ மியறேர்க் கொண்கனொடு
செலவயர்ந் திசினால் யானே
அலர்சுமந் தொழிகஇவ் வழுங்கல் ஊரே." (நற்றிணை-கசக)

### இடைச்சுரத்து ஆயத்தார்க்குச் சொல்லிவிட்டதற்குச் செய்யுள்

"சேட்புல முன்னிய விரைநடை *அந்தணிர்
நும்மொன் றிரந்தனென் மொழிவல் எம்மூர்
யாய்நயந் தெடுத்த ஆய்நலங் கவின
ஆரிடை இறந்தனள் என்மின்
நேரிறை முன்கைஎன் ஆயத் தோர்க்கே." (ஐங்குறு-௩அ௪)

"கடுங்கட் காளையொடு நெடுந்தேர் ஏறிக்
கோள்வல் வேங்கைய மலைபிறக் கொழிய
வேறுபல் அருஞ்சுரம் இறந்தனள் அவளெனக்
கூறுமின் வாழியோ ஆறுசெல் மாக்கள்
நற்றோள் நயந்துபா ராட்டி
எற்கெடுத் திருந்த அறனில் யாய்க்கே." (ஐங்குறு-௩அ௫)

### தமர் வந்துற்றவழிக் கூறியதற்குச் செய்யுள்

"அறஞ்சா லியரோ அறஞ்சா லியரோ
வறனுண் டாயினும் அறஞ்சா லியரோ
வாள்வனப் புற்ற அருவிக்
கோள்வல் என்னையை மறைத்த குன்றே." (ஐங்குறு-௩௧உ)

### மீண்டுவருவாள் ஆயத்தார்க்குக் கூறிவிட்டதற்குச் செய்யுள்

"கவிழ்மயி ரெருத்திற் செந்நா யேற்றை
குருளைப் பன்றி கொள்ளாது கழியும்
சுரநனி வாரா நின்றனள் என்பது
முன்னுற விரைந்தநீர் உரைமின்
இன்னகை முறுவல் என்ஆயத் தோர்க்கே." (ஐங்குறு-௩௧௭)

### பிரிவாற்றாமைக்குச் செய்யுள்

"அரிதரோ தேற்ற மறிவுடையார் கண்ணும்
பிரிவோ ரிடத்துண்மை யான்." (குறள்-௧௧௫௫)

"அஞ்சுவல் வாழி தோழி சென்றவர்
நெஞ்சுணத் தெளித்த நம்வயின்
வஞ்சஞ் செய்தல் வல்லின வாறே."

(பாடம்) *அசைநடை.

அரும்பெறற் காதல ரகலா மாத்திரம்
இரும்புதல் ஈங்கை இளந்தளிர் நடுங்க
அலங்குகதிர் வாடையும் வந்தன்று
கலங்கஞர் எவ்வந் தோழிநாம் உறவே."

இவை பிரிந்தார் என்றவழிக் கூறியன.

ஆற்றுவல் என்பதுபடக் கூறியதற்குச் செய்யுள்

'தோளுந் தொடியும் நெகிழ்ந்தன நுதலும்
நெய்யுகு பள்ளி யாருக தில்ல
யானஃ தவலங் கொள்ளேன் தானஃ
தஞ்சுவரு கான மென்றதற்
கஞ்சுவல் தோழி நெஞ்சத் தானே."

தெய்வம் பராஅயதற்குச் செய்யுள்

'புனையிழாய் ஈங்குநாம் புலம்புறப் பொருள்வெஃகி
முனையென்னார் காதலர் முன்னிய ஆற்றிடைச்
சினைவாடச் சிறக்குநின் சினந்தணிந் தீகெனக்
கனைகதிர்க் கனலியைக் காமுறல் இயைவதோ."
(கலி-பாலை-கசு)

பருவங்கண்டு கூறியதற்குச் செய்யுள்

"என்னொடு புலந்தனர் கொல்லோ காதலர்
மின்னொடு முழங்குதூ வானம்
நின்னொடு வருதும் எனத்தெளிந் தோரே."

வன்புறை எதிரழிந்து கூறியதற்குச் செய்யுள்

"வெறுக்கைக்குச் சென்றார் விளங்கிழாய் தோன்றார்
பொறுக்கவென் றற்பொறுக்க லாமோ—ஒறுப்பபோற்
பொன்னுள் உறுபவளம் போன்ற புணர்முருக்கம்
என்னுள் உறுநோய் பெரிது." (திணைமாலை-சுஎ)

தூதுவிடக் கூறியதற்குச் செய்யுள்

"காண்மதி பாணநீ உரைத்தற் குரியை
துறைகெழு கொண்கன் பிரிந்தென
இறைகேழ் எல்வளை நீங்கிய நிலையே. (ஐங்குறு-கசO)

ஆயத்தார் கூறியதற்குச் செய்யுள்

மாந்தர் மயங்கிய மலைமுதற் சிறுநெறி
தான்வரும் என்ப தடமென் தோழி
அஞ்சினள் அஞ்சினள் ஒதுங்கிப்
பஞ்சு மெல்லடிப் பரல்வடுக் கொளவே."

பாணர் கூறியதற்குச் செய்யுள்

"நினக்கியாம் பாணரும் அல்லேம் எமக்கு
நீயுங் குருசிலை அல்லை மாதோ
நின்வெங் காதலி நன்மனைப்* புலம்பி
ஈரிதழ் உண்கண் உகுத்த
பூசல் கேட்டும் அருளா.தோயே." (ஐங்குறு-சஅ0)

பார்ப்பார் கூறியதற்குச் செய்யுள்

"துறந்ததற் கொண்டு துயரடச் சாஅய்
அறம்புலந்து பழிக்கும் அளைக ணாட்டி
எவ்வ நெஞ்சிற் கேம மாக
வந்தன ளேநின் மடமகள்†
வெந்திறல் வெள்வேல் விடலைமுந் துறவே." (ஐங்குறு-கசக)

சகூ. நிகழ்ந்தது நினைத்தற்கு ஏதுவும் ஆகும்.

இதுவும் பாலைக்கு உரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) *நிகழ்ந்தது நினைத்தற்கு ஏதுவும் ஆகும்* - முன்பு நிகழ்ந்தது பின்பு விசாரித்தறகு ஏதுவும் ஆகும். உம்மை எதிர்மறை.

உதாரணம்

"வேர்பிணி வெதிரத்துக் கால்பொரு நரலிசை
கந்துபிணி யானை அயாவுயிர்த் தன்ன
என்றூழ் நீடிய வேய்பயில் ‡அழுவத்துக்
குன்றூர் மதியம் நோக்கி நின்றுநினைந்து
உள்ளினேன் அல்லனோ யான்முள் எயிற்றுத்
திலகந் தைஇய தேங்கமழ் திருநுதல்
எமது முண்டோர் மதிநாட் டிங்கள்
உரறுகுரல் வெவ்வளி எடுப்ப நிழறப
உலவை யாகிய மரத்த
கல்பிறங்கு மாமலை உம்பரஃ தெனவே." (நற்றிணை-கூஉ)(சகூ)

சஎ. நிகழ்ந்தது கூறி நிலையலுந் திணையே.

இதுவும் அது.

(இ - ள்.) *நிகழ்ந்தது கூறி நிலையலும் திணை*-முன்புநிகழ்ந்ததனைக் கூறிப்போகா தொழிதலும் பாலைத்திணையாம்.

(பாடம்) *தன்மனைப்.
†வந்தனளோ நின்மகளே.
‡வேய்பிறங்கு

## உதாரணம்

"ஈன்பருந் துயவும் வான்பொரு நெடுஞ்சினைப்
பொரியரை வேம்பின் புள்ளி நீழற்
கட்டளை யன்ன வட்டரங் கிழைத்துக்
கல்லாச் சிறுஅர் நெல்லிவட் டாடும்
வில்லேர் உழவர் வெம்முனைச் சீறூர்ச்
சுரன்முதல் வந்த உரன்மாய் மாலை
உள்ளினென் அல்லனே யானே உள்ளிய
வினைமுடித் தன்ன இனியோள்
மனைமாண் சுடரொடு படர்பொழு தெனவே." (நற்றிணை-௩)

௭௫. மரபுநிலை திரியா மாட்சிய ஆகி
விரவும் பொருளும் விரவும் என்ப.

இதுவும் அது.

(இ - ள்.) மரபு நிலை திரியா மாட்சிய ஆகி விரவும் பொருளும் விரவும் என்ப - மரபுநிலை திரியாத மாட்சிமை யுடையவாகி விரவும் பொருளும் விரவும் என்ப.

அஃதாவது பாலைக்கு ஓதிய பாசறைப் புலம்பற்கண்ணும், தேர்ப்பாகற்குக் கூறுதற்கண்ணும் முல்லைக்குரிய முதற்பொருளும் கருப்பொருளும் விரவுதலாம். இந்நிகரன பிறவுங் கொள்க.

மரபுநிலை திரியாமையாவது, பாசறைக்கண் வினை முடித்தவழிக் கார்காலம் வந்ததாயின் ஆண்டுக் கூறும் கூற்று. அஃது அக்காலத்தைப்பற்றி வருதலின் மரபு நிலை திரியாதாயிற்று.

## உதாரணம்

"வேந்து வினை முடித்த" என்னும் அகப்பாட்டினுள் (௧௪) கண்டு கொள்க.

இன்னும் 'மாட்சியஆகி விரவும் பொருளும் விரவும்' என்றதனால் பாசறைக்கண் தூது கண்டு கூறுதலும் தலைமகளை இடைச்சுரத்து நினைத்துக் கூறுதலுங் கொள்க.

## உதாரணம்

"நீடினம் என்று கொடுமை தூற்றி
வாடிய நுதல ளாகிப் பிறிதுநினைந்து
யாம்வெங் காதலி நோய்மிகச் சாஅய்ச்
சொல்லியது உரைமதி நீயே
முல்லை நல்யாழ்ப் பாணமற் றெமக்கே" (ஐங்குறு-௪௭௮)

இது தூது கண்டு கூறியது.

"பனிமலர் நெடுங்கண் பசலை பாயத்
துனிமலி துயரமோ டரும்பட ருழப்போள்
கையறு நெஞ்சிற் குசா அத்துணை * யாகச்
சிறுவரைத் தங்குவை யாயின்
காண்குவை மன்னாற் பாணவெந் தேரே"

இது தூது விடும் தலைமகன் கூறியது.

"நெடுங்கழை முளிய வேனில் நீடிக்
கடுங்கதிர் ஞாயிறு கல்பகத் தெறுதலின்
வெய்ய ஆயின முன்னே இனியே
ஒண்ணுதல் அரிவையை உள்ளுதொறும்
தண்ணிய ஆயின சுரத்திடை ஆறே." (ஐங்குறு-௩௨௨)

இஃது இடைச்சுரத்துக் கூறியது. (௪௮)

௪௯. உள்ளுறை உவமம் ஏனை உவமம் எனத்
தள்ளாது †ஆகுந் திணையுணர் வகையே.

இ:.நு, உவம வகையான் ஐந்திணைக்கும் உரியதோர் இயல்பு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) உள்ளுறை உவமம் ஏனை உவமம் என - உள்ளுறைக்கண் வரும் உவமமும் ஒழிந்த உவமமும் என இருவகையாலும், திணை உணர்வகை தள்ளாது ஆகும் - திணை உணரும் வகை தப்பாதாகும். [ஏகாரம் ஈற்றசை.]

உதாரணம் முன்னர்க் காட்டுதும். (௪௯)

௫௦. உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலம்எனக்
கொள்ளும் என்ப குறிஅறிந் தோரே.

இ:.நு, உள்ளுறையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை - உள்ளுறை யாவது கருப்பொருட்டெய்வம் ஒழிந்த பொருளை, நிலம் என கொள்ளும் என்ப குறி அறிந்தோர் - இடமாகக் கொண்டுவரும் என்று சொல்லுவர் இலக்கணம் அறிந்தோர்.

குறி-இலக்கணம் (௫௦)

---

(பாடம்) * குயவுத்துணை.

† இனித் தள்ளாது என்றதனானே 'பாஅல் அஞ்செவி' என்னும் பாலைக் கலியுள் தாழிசை மூன்றும் ஏனையுவமமாய் நின்று கருப்பொருளோடு கூடிச் சிறப்பியாது தானே திணைப்பொருள் தோன்றுவித்து நிற்பன போல்வனவும், 'கரைசேர் வேழம் கரும்பிற் பூக்கும், துறைகேழூரன்' (ஐங்குறு-12) என்றாற்போலக் கருப்பொருள் தானே உவமமாய் நின்று உள்ளுறைப் பொருள் தருவனவும், பிறவும் வேறுபட வருவனவும் இதனான் அமைக்க. இது புறத்திற்கும் பொது.

இதனான் உள்ளுறை உவமமும், ஏனை உவமமுமென உவமம் இரண்டே என்பது. (நச்சி.)

ருக. உள்ளுறுத்து இதனோடு ஒத்துப்பொருள் முடிகென
உள்ளுறுத்து உரைப்பதே* உள்ளுறை உவமம்.

இஃது, உள்ளுறை உவமம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) உள்ளுறுத்து பொருள் இதனோடு ஒத்து முடிக என-(உள்ளுறுத்தப்பட்ட கருப்பொருளை) உள்ளுறுத்துக் கருதிய பொருள் இதனொடு ஒத்து முடிக என, உள்ளுறுத்து உரைப்பதே உள்ளுறை உவமம் - உள்ளுறுத்துக் கூறுவதே உள்ளுறை உவமம்.

எனவே, உவமையாற் கொள்ளும் வினை பயன் மெய் உரு வன்றிப் பொருளுவமையாற் கொள்ளப்படுவது.

## உதாரணம்

"வெறிகொள் இனச்சுரும்பு மேய்ந்ததோர் காவிக்
குறைபடுதேன் வேட்டுங் குறுகும்-நிறைமதுச்சேர்ந்து
உண்டாடுந் தன்முகத்தே செவ்வி உடையதோர்
வண்தா மரைபிரிந்த வண்டு"

இது வண்டோரனையர் மாந்தர் எனக் கூறுதலான் உவமிக்கப்படும் பொருள் புலப்படாமையின் உள்ளுறையுவம மாயிற்று. இதனுட் காவியும் தாமரையும் கூறுதலான் மருதமாயிற்று. (ருக)

ருஉ. ஏனை உவமம் தானுணர் வகைத்தே

இஃது. ஏனை உவமம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்.) ஏனை உவமம் தான் உணர் வகைத்து-உள்ளுறை யொழிந்த உவமம் தான் உணரும் வகையான் வரும்.

தான் உணரும் வகையாவது, வண்ணத்தானுதல் வடிவானுதல் பயனுதல் தொழிலானுதல் உவமிக்கப்படும் பொருளொடு எடுத்துக் கூறுதல். [ஏகாரம் ஈற்றசை.]

அது வருமாறு உவமவியலுட் கூறப்படும்.

இதனல் திணை உணருமாறு :

"வளமலர் ததைந்த வண்டுபடு நறும்பொழில்
முளைநிரை முறுவல் ஒருத்தியொடு நெருநல்
குறிநீ செய்தனை யென்ப அலரே
குரவ நீள்சினை உறையும்
பருவ மாக்குயிற் கௌவையிற் பெரிதே." (ஐங்குறு-கூகக)

இஃது ஊடற் பொருண்மைத்தேனும், வேனிற்காலத்து நிகழும் குயிற்குரலை உவமித்தலிற் பாலைத்திணையாயிற்று. மரவம் குராமரம்.

(பாடம்) * இறுவதை.

"உரைத்திசிற் றேழியது புரைத்தோ அன்றே
துருக்கங் கமழும் மென்தோள்
துறப்ப என்றி இறீஇயர்என் உயிரே." (சிற்றட்டகம்)

இது துருக்கம் என உவமை கூறுதலாற் குறிஞ்சியாயிற்று. (௫௨)

௫௩. காமஞ் சாலா இளமை யோள்வயின்
ஏமஞ் சாலா இடும்பை யெய்தி
நன்மையும் தீமையும் என்றிரு திறத்தான்
தன்னொடும் அவளொடும் தருக்கிய புணர்த்துச்
சொல்எதிர் பெறுஅன் சொல்லி இன்புறல்
புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே.

மேல் நடுவணைந்திணைக்குரிய பொருண்மையெல்லாம் கூறினர். இது கைக்கிளையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) காமம் சாலா இளமையோள்வயின் - காமம் அமையாத இளையாள்மாட்டு, ஏமம் சாலா இடும்பை எய்தி-ஏமம் அமையாத இடும்பை எய்தி, நன்மையும் தீமையும் என்று இரு திறத்தான்-புகழ்தலும் பழித்தலுமாகிய இரு திறத்தால், தன்னொடும் அவளொடும் தருக்கிய புணர்த்து-தனக்கும் அவட்கும் ஒத்தன புணர்த்து, சொல் எதிர்பெறான் சொல்லி இன்புறல்-சொல் எதிர் பெறானய்த் தானே சொல்லி இன்புறுதல், புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பு - பொருந்தித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பு.

'பொருந்தித்தோன்றும்' என்றதனால் அகத்தொடு பொருந்துதல் கொள்க. என்னை? 'காமஞ்சாலா' என்றதனால் தலைமைக்குக் குற்றம் வாராதாயிற்று. 'புல்லித்தோன்றும்' என்றதனால், புல்லாமற்றோன்றும் கைக்கிளையும் கொள்ளப்படும். அஃதாவது - காமஞ்சான்ற தலைமகன் மாட்டு நிகழும் மனநிகழ்ச்சி. அது களவியலுள் கூறப்படுகின்றது. ['என்று' என்பது எண்ணிடைச்சொல். ஏகாரம் ஈற்றசை.]

காமம் சாலா இளமையோள்வயின் கூறியதற்குச் செய்யுள்

"ஊர்க்கால் நிவந்த பொதும்பருள் நீர்க்கால்
கொழுநிழல் ஞாழல் முதிரிணர் கொண்டு
கழும முடித்துக் கண்கூடு கூழை
சுவல்மிசைத் தாதொடு தாழ அகல்மதி
தீங்கதிர் விட்டது போல முகனமர்ந்து
ஈங்கே வருவாள் இவள்யார்கொல் ஆங்கேஓர்
வல்லவன் தைஇய பாவைகொல் நல்லார்
உறுப்பெலாங் கொண்டியற்றி யாள்கொல் வெறுப்பினல்
வேண்டுருவம் கொண்டதோர் கூற்றம்கொல் ஆண்டார்
கடிதிவளைக் காவார் விடுதல் கொடியியற்
பல்கலைச் சில்பூங் கலிங்கத்தாள் ஈங்கிதோர்

நல்கூர்ந்தார் செல்வ மகள்;
இவளைச், சொல்லாடிக் காண்பென் தகைத்து;

நல்லாய் கேள்,

ஆய்தூவி அனமென அணிமயிற் பெடையெனத்
தூதுணம் புறவெனத் துதைந்தநின் எழில்நலம்
மாதர்கொள் மான்நோக்கின் மடநல்லாய் நிற்கண்டார்ப்
பேதுறூஉம் என்பதை அறிதியோ அறியாயோ?

நுணங்கமைத் திரள்என நுண்இழை யணையென
முழங்குநீர்ப் புணையென அமைந்தநின் தடமென்றோள்
வணங்கிறை வாலெயிற் றந்நல்லாய் நிற்கண்டார்க்கு
அணங்காகு மென்பதை அறிதியோ அறியாயோ?

முதிர்கோங்கின் முகையென முகஞ்செய்த குரும்பையெனப்
பெயல்துளி முகிழெனப் பெருத்தநின் இளமுலை
மயிர்வார்ந்த வரிமுன்கை மடநல்லாய் நிற்கண்டார்
உயிர்வாங்கு மென்பதை உணர்தியோ வுணராயோ?

என ஆங்கு,

பேதுற்றாய் போலப் பிறரெவ்வம் நீயறியாய்
யாதொன்றும் வாய்வாளாது இறந்தீவாய் கேளினி
நீயுந் தவறிலை நின்னைப் புறங்கடைப்
போதர விட்ட நுமருந் தவறிலர்
நிறையழி கொல்யானை நீர்க்குவிட் டாங்குப்
பறையறைந் தல்லது செல்லற்க என்னா
இறையே தவறுடை யான்.'' (கலித். குறிஞ்-உ0) (கூ)

ருச. ஏறிய மடல்திறம் இளமை தீர்திறம்
தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்
மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்
செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே.

இது பெருந்திணை ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஏறிய மடல் திறம் - ஏறிய மடற்றிறமும், இளமை தீர்திறம் - இளமை தீர்திறமும், தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம் - தேறுதலொழிந்த காமத்து மிகுதிறமும், மிக்க காமத்து மிடலொடு தொகைஇ - மிக்க காமத்து மாறுய திறனொடு கூட்டி, செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பு - சொல்லப்பட்ட நான்கு திறமும் பெருந்திணைக் கருத்து.

கைக்கிளை புணராது நிகழும் என்றமையால், இது புணர்ந்தபின் நிகழும் என்று கொள்க. ஏறிய மடற்றிறம் தலைமகற்கே உரித்து. அது வருமாறு:—

" எழின்மருப் பெழில்வேழ மிகுதரு கடாத்தால்
தொழின்மாறித் தலைவைத்த தோட்டிகை நிமிர்ந்தாங்கு
அறிவுநம் அறிவாய்ந்த அடக்கமும் நாணொடு
வறிதாகப் பிறரென்னை நகுபவும் நகுபுடன்
மின்னவிர் நுடக்கமுங் கனவும்போல் மெய்காட்டி
என்னெஞ்சம் என்னொடு நில்லாமை நனிவௌவித்
தன்னலங் கரந்தாளைத் தலைப்படுமா றெவன்கொலோ
மணிப்பீலி சூட்டிய நூலொடு மற்றை
அணிப்பூளை ஆவிரை யெருக்கொடு பிணித்தியாத்து
மல்லலூர் மறுகின்கண் இவட்பாடு மிசைதொத்தன்
எல்லீருங் கேட்டீமின் என்று ;

படரும் பனையீன்ற மாவுஞ் சுடரிழை
நல்கியாள் நல்கி யவை ;

பொறையென் வரைத்தன்றிப் பூநுதல் ஈத்த
நிறைஅழி காமநோய் நீந்தி அறையுற்ற
உப்பியல் பாவை உறையுற் றதுபோல
உக்கு விடும்என் உயிர் ;

பூளை பொலமலர் ஆவிரை வேய்வென்ற
தோளாள் எமக்கீத்த பூ ;

உரித்தென் வரைத்தன்றி ஒள்ளிழை தந்த
பரிசழி பைதல்நோய் மூழ்கி எரிபரந்த
நெய்யுண் மெழுகின் நிலையாது பைபயத்
தேயும் அளித்தென் னுயிர் ;

இளையாரும் ஏதி லவரும் உளையயான்
உற்ற துசாவுந் துணை ;

என்றியான் பாடக் கேட்டு
அன்புறு கிளவியாள் அருளிவந் தளித்தலின்
துன்பத்தில் துணையாய மடல்இனி இவட்பெற
இன்பத்துள் இடம்படலென் றிரங்கினள் அன்புற்று
அடங்கருந் தோற்றத்து அருந்தவ முயன்றோர்தம்
உடம்பொழித்து உயருல கினிதுபெற் றாங்கே."

(கலித். நெய். உக)

இளமை தீர் திறமாவது, இளமை நீங்கிய திறத்தின்கண் நிகழ்வது. அது மூவகைப்படும் ; தலைமகன் முதியனாகித் தலைமகள் இளையளாதலும் தலைமகள் முதியளாகித் தலைமகன் இளையனாதலும், இவ்விருவரும் இளமைப் பருவம் நீங்கியவழி அறத்தின்மேல் மனம் நிகழ்தலன்றிக் காமத்தின்மேல் மனம் நிகழ்தலும் என.

## உதாரணம்

" உளைத்தவர் கூறும் உரையெல்லாம் நிற்க
முளைத்த முறுவலார்க் கெல்லாம்—விளைத்த
பழங்கள் அனைத்தாய்ப் படுகளி செய்யும்
முழங்கு புனலூரன் மூப்பு."

(புறப். இருபாற் பெருந்திணை. கச)

இதனுள் தலைமகன் இளமை தீர் திறம் வந்தவாறு காண்க.

" அரும்பிற்கு முண்டோ அலரது நாற்றம்
பெருந்தோள் விறலி பிணங்கல் — சுரும்போடு
அதிரும் புனலூரற்கு ஆரமிழ்தம் அன்றோ
முதிரும் முலையார் முயக்கு"

(புறப். இருபாற்பெருந்திணை. ௧௧)

இதனுள் தலைமகள் இளமை தீர் திறம் வந்தவாறு காண்க.

"ஆண்டலைக் கீன்ற பறழ்மகனே நீயெம்மை
வேண்டுவல் என்று விலக்கினை நின்போல்வார்
தீண்டப் பெறுபவோ மற்று" (கலித். மருதம். ௨௧)

எனவும்,

" உக்கத்து மேலும் நடுஉயர்ந்து வாள்வாய
கொக்குரித் தன்ன கொடுமடாய் நின்னையான்
புக்ககலம் புல்லினெஞ் சூன்றும் புறம்புல்லின்
அக்குளுத்துப் புல்லலும் ஆற்றேன் அருளீமோ
பக்கத்துப் *புல்லச் சிறிது" (கலித். மருதம். ௨௧)

எனவும் முறையே தலைமகன் தலைமகள் ஆவார் இருவர் இளமை தீர் திறம் வந்தவாறு காண்க.

தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறமாவது, தெளிவு ஒழிந்த காமத்தின் கண்ணே மிகுதலும் என்றவாறு.

இது பெரும்பான்மை தலைமகட்கே உரித்து.

## உதாரணம்

"புரிவுண்ட புணர்ச்சியுள் புல்லாரா மாத்திரை
அருகுவித் தொருவரை அகற்றலில் தெரிவார்கண்
செயநின்ற பண்ணினுள் செவிசுவை கொள்ளாது†
நயனின்ற பொருள்கெடப் புரியறு நரம்பினும்
பயனின்று மன்றம்ம காமம் இவள்மன்னும்
ஒண்ணுதல் ஆயத்தார் ஓராங்குத் திளைப்பினும்
முள்நுனை தோன்றுமை முறுவல்கொண் டடக்கித்தன்
கண்ணினும் முகத்தினும் நகுபவள் பெண்ணின்றி
யாவரும் தண்குரல் கேட்ப நிரைவெண்பல்
மீயுயர் தோன்ற நகாஅநக் காங்கே
பூவுயிர்த் தன்ன புகழ்சால் எழில்உண்கண்
ஆயிதழ் மல்க அழும்;

ஓஒ! அழிதகப் பாராதே அல்லல் குறுகினம்
காண்பாம் கனங்குழை பண்பு;

என்று, எல்லீரும் என் செய்தீர் என்னை நகுதிரோ
நல்ல நகாஅலிர் மற்கொலோ யானுற்ற
அல்லல் உறீஇயான் மாய மலர் மார்பு
புல்லிப் புணரப் பெறின்;

(பாடம்) *புல்லல், †கொள்ளாமை.

எல்லாநீ, உற்ற தெவனோமற் றென்றீரேல் எற்சிதை
செய்தான் இவன்என உற்ற திதுவென
எய்த உரைக்கும் உரனகத் துண்டாயின்
பைதல வாகிப் பசக்குவ மன்னோவென்
நெய்தல் மலரன்ன கண் ;

கோடுவாய் கூடாப் பிறையைப் பிறிதொன்று
நாடுவேன் கண்டனென் சிற்றிலுள் கண்டாங்கே
ஆடையான் மூஉய் அகப்படுப்பேன் சூடிய
காணான் திரிதருங் கொல்லோ மணிமிடற்று
மாண்மலர்க் கொன்றை யவன் ;

தெள்ளியேம் என்றுரைத்துத் தேராது ஒருநிலையே
வள்ளியை ஆகென நெஞ்சை வலியுறீஇ
உள்ளி வருகுவர் கொல்லோ உளைந்தியான்
எள்ளி இருக்குவேன் மற்கொலோ நள்ளிருள்
மாந்தர் கடிகொண்ட கங்குற் கனவினால்
தோன்றினன் ஆகத் தொடுத்தேன்மன் யான் தன்னைப்*
பையெனக் காண்கு விழிப்பயான் பற்றிய
கையுளே மாய்ந்தான் கரந்து ;

கதிர்பகா ஞாயிறே கல்சேர்தி ஆயின்
அவரை நினைத்து நிறுத்தென்கை நீட்டித்
தருகுவை ஆயின் தவிருமென் நெஞ்சத்து
உயிர் திரியா மாட்டிய தீ ;

மையில் சுடரே மலைசேர்தி நீயாயின்
பௌவநீர்த் தோன்றிப் பகல்செய்யு மாத்திரை
கைவிளக் காகக் கதிர்சில தாராய்என்
தொய்யில் சிதைத்தானைத் தேர்கு ;

சிதைத்தானைச் செய்வ தெவன்கொலோ எம்மை
நயந்து நலஞ்சிதைத் தான் ;

மன்றப் பனைமேல் †மலைமாந் தளிரே நீ
தொன்றிவ் உலகத்துக் கேட்டும் அறிதியோ
மென்றோள் நெகிழ்த்தான் தகையல்லால் யான்காணேன்
நன்றுதீ தென்று பிற ;

நோயெரி ஆகச் சுடினுஞ் சுழற்றியென்
ஆயிதழ் உள்ளே கரப்பன் கரந்தாங்கே
நோயுறு வெந்நீர் தெளிப்பின் தலைக்கொண்டு
வேவ தளித்திவ் வுலகு.
மெலியப் பொறுத்தேன் களைந்தீமின் சான்றீர்
நலிதருங் காமமுங் கௌவையும் என்றிவ்
வலிதின் உயிர்காவாத் தூங்கியாங் கென்னை
நலியும் விழுமம் இரண்டு ;

எனப்பாடி,

இனைந்துநொந் தழுதனள் நினைந்துநீடு உயிர்த்தனள்
எல்லையும் இரவும் கழிந்தவென் றெண்ணி எல்லிரா

(பாடம்) *யான்றனை இப் †பனைமேல்

நல்கிய கேள்வன் இவன்மன்ற மெல்ல
மணியுட் பரந்தநீர் போலத் துணிபாங்
கலஞ்சிதை இல்லத்துக் காழ்கொண்டு தேற்றக்
கலங்கிய நீர்போல் தெளிந்து நலம்பெற்ருள்
நல்லெழின் மார்பனைச் சார்ந்து.'' (கலித்-நெய்-உ௫)

மிக்க காமத்து மிடலாவது, ஐந்திணைக்கண் நிகழும் காமத்தின் மாறுபட்டு வருவது. அஃதாவது, வற்புறுத்துந் துணையின்றிச் செலவழுங்குதலும், ஆற்றருமை கூறுதலும் இழிந்திரந்து கூறுதலும், இடையூறு கிளத்தலும் அஞ்சிக்கூறுதலும், மனைவி விடுத்தலிற் பிறள்வயிற் சேறலும், இன்னோரன்ன ஆண்பாற்கிளவியும், முன்னுறச் செப்பலும், பின்னிலை முயறலும், கணவனுள்வழி இரவுத்தலைச்சேறலும், பருவம் மயங்கலும், இன்னோரன்ன பெண்பாற் கிளவியும், குற்றிசையும்; குறுங்கலியும் இன்னோரன்ன பிறவுமாகிய ஒத்த அன்பின் மாறுபட்டு வருவன எல்லாம் கொள்ளப்படும். அவற்றுட் சில வருமாறு:—

''நடுங்கி நறுநுதலாள் நன்னலம்பீர் பூப்ப
ஒடுங்கி உயங்கல் ஒழியக்—கடுங்கணை
வில்லேர் உழவர் விடரோங்கு மாமலைச்
செல்லேம் ஒழிக செலவு.'' (புறப். இருபாற்பெருந்திணை-க)

இது செலவழுங்குதல்.

''பணையாய் அறைமுழங்கும் பாயருவி நாடன்
பிணையார மார்பம் பிணையத்—துணையாய்க்
கழிகாமம் உய்ப்பக் கனையிருட்கண் செல்வேன்
வழிகாண மின்னுக வான்.'' (புறப். பெருந்திணை-௬)

இஃது இரவுத்தலைச்சேறல்.

''பெரும்பணை மென்தோள் பிரிந்தார்எம் உள்ளி
வரும்பருவம் அன்றுகொல் ஆம்கொல்—சுரும்பிமிரும்
பூமலி கொன்றை புறவெலாம் பொன்மலரும்
மாமயிலும் ஆலும் மலை.'' (புறப். இருபாற்பெருந்திணை-௬)

இது பருவமயங்கல். பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க. மெய்ப்பாட்டியலுள் ''இன்பத்தை வெறுத்தல்'' (மெய்ப்பாடு-உ௨) முதலாக நிகழ்பவை பொருளாக வருங்கிளவியும் இதன் பகுதியாகக் கொள்க. (௫௪)

௫௫. முன்னைய நான்கும் *முன்னதற் கென்ப.

இது கைக்கிளைக்குரியதொரு மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) முன்னைய நான்கும் - மேற்சொல்லப்பட்ட நான்கினும் முந்துற்ற நிலைமை நான்கும், முன்னதற்கு என்ப - முற்கூறப்பட்ட கைக்கிளைக்காம் என்ப.

அவையாவன:—ஏறு மடற்றிறம், இளமை தீராத்திறம், தேறுதலொழிந்த காமத்து மிகாத்திறம், மிக்க காமத்தின் மாறுகாத்திறம் என்பன.

* முன்னைய நான்கும்: இயற்கைப் புணர்ச்சிக்கு முன் நிகழ்ந்த காட்சியும் ஐயமும் தெரிதலும் தேறலும் என்ற குறிப்பு நான்கும். (நச்சி.)

ஏறுமடற்றிறம் வெளிப்பட இரத்தலாம், இளமை தீராத்திறம், நலம் பாராட்டலாம். தேறுதலொழிந்த காமத்து மிகாத்திறம், புணரா விரக்கமாம். மிக்க காமத்தின் மாறுகாத்திறம், நயப்புறுத்தலாம்.

இவை ஒருவாற்றான் உணர்த்தியவாறு.

"கைக்கிளை செந்திறம் பெருந்திணை நோந்திறம்
அத்திறம் இரண்டும் அகத்திணை மயங்காது
அத்திணை யானே யாத்தனர் புலவர்."

இதனானே கைக்கிளை இன்பம் பயப்ப வருமென்பதூஉம், பெருந்திணை துன்பம் பயப்ப வருமென்பதூஉம் அறிந்துகொள்க. (ருரு)

ருசு. நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்
கலியே பரிபாட்டு ஆயிரு பாவினும்*
உரிய தாகும் என்மனார் புலவர்.

இதுவும் அகத்திணைக்கு இன்றியமையாத செய்யுளை வரையறுத்து உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) நாடக வழக்காவது, சுவைபட வருவனவெல்லாம் ஓரிடத்து வந்தனவாகத் தொகுத்துக் கூறுதல். அஃதாவது செல்வத்தானும், குலத்தானும், ஒழுக்கத்தானும், அன்பினானும் ஒத்தார் இருவராய்த் தமரின் நீங்கித் தனியிடத்து எதிர்ப்பட்டார் எனவும், அவ்வழிக் கொடுப்போரு மின்றி அடுப்போரு மின்றி வேட்கை மிகுதியாற் புணர்ந்தார் எனவும், பின்னும் அவர் களவொழுக்கம் நடத்தி இலக்கண வகையான் வரைந்தெய்தினர் எனவும், பிறவும் இந்நிகரனவாகிச் சுவைபட வருவனவெல்லாம் ஒருங்கு வந்தனவாகக் கூறுதல்.

உலகியல் வழக்காவது, உலகத்தார் ஒழுகலாற்றோடு ஒத்து வருவது.

பாடல் சான்ற புலன் நெறி வழக்கமாவது, இவ்விருவகையானும் பாடல் சான்ற கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்க் கூறப்படுகின்ற அகப்பொருள்.

கலியே பரிபாட்டு அ இரு பாவினும் உரியது ஆகும் என்மனார் புலவர் என்றது, கலியும் பரிபாடலும் என்னும் இரண்டு பாவிலும் உரிமையுடைத்தாம் என்று உரைப்பர் புலவர் என்றவாறு.

எனவே, இவை இன்றியமையாதன என்றவாறு. ஒழிந்த பாக்கள் இத்திணை அகப்பொருட்கு உரியவாய் வருதலின்றிப் புறப்பொருட்கும் உரியவாய் வருதலின் ஓதாராயினர். புறப்பொருள் உலகியல்பானன்றி வாராமையின், அது நாடக வழக்கம் அன்றாயிற்று. (ருசு)

(பாடம்) * பாங்கினும்.

ருஎ. மக்கள் நுதலிய* அகன்ஐந் திணையும்
சுட்டிஒருவர்ப் பெயர்கொளப் பெறுஅர்.

இது, நடுவணைந் திணைக்குரியதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அகன் மக்கள் நுதலிய ஐந்திணையும் - அகத்திணையுள் கைக்கிளை பெருந்திணை ஒழிந்த ஐந்திற்கும் உரியவாகிய நிலமும் காலமும் கருப்பொருளுமன்றி மக்களைப்பற்றி வரும் புணர்தலும் பிரிதலும் இருத்தலும் இரங்கலும் ஊடலும் என்று சொல்லப்பட்ட ஐந்து பொருண்மையும், சுட்டி ஒருவர் பெயர் கொளப்பெறுர்- (அவ்வைந்திணைக் கண்ணும் தலைமகனைப் புலனெறி வழக்கம் செய்ய வேண்டின்,) நாடன் ஊரன் சேர்ப்பன் என்னும் பொதுப்பெயரானன்றி ஒருவர்க்கு உரித்தாகி வரும் பெயர் கொள்ளப்பெறுர் புலவர். (ருஎ)

ருஅ. புறத்திணை† மருங்கின் பொருந்தின் அல்லது
அகத்திணை மருங்கின் அளவுதல் இலவே.

இஃது, எய்தாதது எய்துவித்தல் நுதலிற்று.

(இ - ள்.) புறத்திணை மருங்கின் பொருந்தின் அல்லது - ஒருவர் பெயர் புறத்திணை மருங்கிற் பொருந்தினல்லது, அகத்திணை மருங்கின் அளவுதல் இல - அகத்திணை மருங்கின் வருதல் இல்லை. [ஏகாரம் ஈற்றசை].

இதனாற் சொல்லியது, ஒருவர்க்குரித்தாகி வரும்பெயர் அகத்திணை பற்றி வரும் கைக்கிளை பெருந்திணையினும் வரப்பெறுது என்பதூஉம், புறத்திணையுள் வரும் என்பதூஉம், ஆண்டும் பாடாண் பாட்டுக் காமம் பொருளாகவரின் அவ்வழி வரூஉம் என்பதூஉம் கூறியவாறு. இதனான் அகப்பொருள் ஒருவரைச் சாராது பொதுப்பட வருமென்பது கொள்க. (ருஅ)

முதலாவது அகத்திணை இயல் முற்றிற்று.

---

* 'மக்கள் நுதலிய' என்பதனானே மக்கள் அல்லாத தேவரும் நரகரும் தலைவராகக் கூறப்படார் எனவும் 'அகன் ஐந்திணையும்' என்றதனானே கைக்கிளையும் பெருந்திணையும் சுட்டியொருவர் பெயர்கொண்டும் கொள்ளாதும் வருமெனவுங் கொள்க.' (நச்சி.)

† "புறத்திணை கருப்பொருளாயும் அதுதான் உவமமாயும் அகத்திணையுட்கலக்கு மென்பதூஉம் இதனானே விரித்தாராயிற்று. அளவுதல் எனவே ஒரு செய்யுட்கண்ணும் அப்புறத்திணையாகிய இயற்பெயர்களும் சிறப்புப்பெயர்களும் ஒன்றே அன்றிப் பலவும் வருதலுங் கொள்க. (நச்சி.)

# இரண்டாவது

# புறத்திணை இயல்

இவ்வோத்து என்ன பெயர்த்தோ எனின், புறத்திணையியல் என்னும் பெயர்த்து. இது புறப்பொருள் உணர்த்துதலாற் பெற்றபெயர்.

அஃது யாங்ஙனம் உணர்த்தினரோ எனின், மேல் அகத் திணையாகிய எழுதிணையும் சாற்றி, அவற்றின் புறத்து நிகழ்வன எழுதிணை உணர்த்தினர் என்று கொள்க. அவை :—

மலையாகிய குறிஞ்சித்திணைப்புறம் நிரைகோடலும்* நிரை மீட்டலும் என்னும் வேறுபாடு குறித்து வெட்சிஎனவும்கரந்தை எனவும் இரண்டு குறி பெறுதலும்,

காடுறையுலகாகிய முல்லைப்புறம் மண்நசை வேட்கையால் எடுத்துச் செலவுபுரிந்த வேந்தன்மேல் அடல் குறித்துச் செலவு புரிதலான், அவ்விரு பெருவேந்தரும் ஒரு வினையாகிய செலவு புரிதலின் அது வஞ்சி என ஒரு குறி பெறுதலும்,

புனலுலகாகிய மருதத்துப்புறம் எயில் அழித்தலும், எயில் காத்தலும் என்னும் வேறுபாடு குறித்து உழிஞை எனவும் நொச்சி எனவும் இரண்டு குறி பெறுதலும்,

மணலுலகாகிய நெய்தற்புறம் இரு பெருவேந்தரும் பொருத லாகிய ஒரு தொழிலே புரிதலால் அது தும்பை என ஒரு குறி பெறுதலும்,

நடுநிலைத்திணையாகிய பாலைப்புறம் வேந்தரே யாயினும் ஏனையோராயினும் தமது மிகுதியாகிய வெற்றியைக் குறித்தலால் அது வாகை என ஒரு குறி பெறுதலும்,

பெருந்திணைப்புறம் நிலையாமையாகிய நோம்திறப் பொருளே குறித்து வருதலின் காஞ்சி என ஒரு குறி பெறுதலும்,

கைக்கிளைப்புறம் செந்திறமாகிய ஒரு பொருளே குறித்து வருதலின் பாடாண் என ஒரு குறி பெறுதலும் உணர்த்தியவாறு கண்டு கொள்க.

மேலை ஓத்தினுள்,

> "புறத்திணை மருங்கின் பொருந்தின் அல்லது,
> அகத்திணை மருங்கின் அளவுதல் இலவே" (அகத். ருஅ)

என அகத்திணைச் செய்யுள் இயற்பெயர் கூறப்பெறுதென்றமையானும், புறத்திணை மருங்கிற் பொருந்தும் என்றமையானும் உலகியலோடு ஒத்துவரும் காமப்பொருளாகப் பாடாண் பாட்டின்கண் இன்பம் இயற்பெயர் சார்த்தி வரப்பெறும் என்று கொள்க.

> "ஆன்ற சிறப்பின் அறம்பொருள் இன்பமென
> மூன்றுவகை நுதலிய துலகம் அவற்றுள்
> அறமும் இன்பமும் அகலா தாகிப்
> புறன்எனப் படுவது பொருள்குறித் தன்றே"

என்னும் பன்னிருபடலச் செய்யுள் புறப்பொருள் அறமும் இன்பமும் அகலா தாகி எனக் கூறினர்; அவர் கூறுதல் வாகைத் திணைக்கண் 'கட்டில் நீத்த பால்' முதலாகக் 'காமம் நீத்த பால்' ஈறாக அறங்கூறுதலில் அச்சார்பாகக் கூறியது மயங்கக் கூறுதலாம்.

> "ஆங்ஙனம் உரைப்பின் அவற்றது வகையால்
> பாங்குறக் கிளந்தனர் என்ப அவைதாம்
> வெட்சி கரந்தை வஞ்சி காஞ்சி
> உட்குவரு சிறப்பின் உழிஞை நொச்சி
> முரண்மிகு சிறப்பின் தும்பையுள் ளிட்ட
> மறனுடை மரபின் ஏழே ஏனை
> அமர்கொள் மரபின் வாகையும் சிறந்த
> பாடாண் பாட்டொடு பொதுவியல் என்ப"

எனவும்,

> "கைக்கிளை ஏனைப் பெருந்திணை என்றாங்கு
> அத்திணை யிரண்டும் அகத்திணைப் புறனே"

எனவும் புறப்பொருள் பன்னிரண்டு வகைப்படக் கூறில், அகமும் பன்னிரண்டாகி மாட்டேறு பெறுதல்வேண்டும். அகத்திணை ஏழாகிப் புறத்திணை பன்னிரண்டாகில், "மொழிந்த பொருளோடு ஒன்றவைத்தல்" (மரபு. கக உ) என்னுந் தந்திர உத்திக்கும் பொருந்தாதாகி "மிகைபடக் கூறல்" "தன்னோன் ஒரு பொருள் கருதிக் கூறல்" (மரபு. கக0) என்னும் குற்றமும் பயக்கும் என்க. அன்றியும் பெருந்திணைப் புறனாகிய காஞ்சி நிலையாமை யாதலானும், பொதுவியல் என்பது,

> "பல்அமர் செய்து படையுள் தப்பிய
> நல்லாண் மாக்கள் எல்லாரும் பெறுதலின்
> திறப்பட மொழிந்து தெரிய விரித்து
> முதற்பட எண்ணிய எழுதிணைக்கும் உரித்தே"

எனத் தாமே கூறுகின்றாராதலின், மறத்திற்கு முதலாகிய வெட்சியின் எடுத்துக் கோடற்கண்ணும் கூறாமையானும், கைக்கிளையும் பெருந்திணையும் புறம் என்றாராயின் அகத்திணை ஏழ் என்னாது ஐந்து எனல்

வேண்டுமாதலானும், பிரமம் முதலாகச் சொல்லப்பட்ட மணம் எட்ட னுள்ளும் யாழோர் கூட்டமாகிய மணத்தை ஒழித்து ஏனைய ஏழும் புறப் பொருளாதல் வேண்டுதலானும், முனையவன் நூலிற்கும் கலி முதலாகிய சான்றோர் செய்யுட்கும் உயர்ந்தோர் வழக்கிற்கும் பொருந்தாது என்க.

டுகூ. அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந்தோர்*
புறத்திணை இலக்கணம் திறப்படக் கிளப்பின்
வெட்சி தானே குறிஞ்சியது புறனே
உட்குவரத் தோன்றும் ஈரேழ் துறைத்தே.

இத்தலைச் சூத்திரம் என் நுதலிற்றோவெனில், வெட்சித்திணைக்கு இடமும் துறையும் வரையறுத்து உணர்த்துதல் நுதலிற்று. இதனானே திணையும் துறையும் என்று வரும் புறப்பொருள் என்று கொள்க.

(இ - ள்.) அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந்தோர் புறத்திணை இலக்கணம் திறபபடக் கிளப்பின் - அகத்திணை யிடத்து மயக்கம் கெட உணர்ந்தோர் புறத்திணை இலக்கணம் வகைப்படக் கூறின்,

அகத்திணை மருங்கின் மயக்கம் கெட உணர்தலாவது, மேல் ஓதிய இலக்கணத்தால் மயக்கம் கெட உணர்தல்.

வெட்சிதானே குறிஞ்சியது புறனே - வெட்சி என்னும் திணை குறிஞ்சி என்னும் திணைக்குப் புறனும்.

வெட்சி குறிஞ்சிக்குப் புறனயது எவ்வாறெனின், நிரைகோடல் குறிஞ்சிக்குரிய மலைசார்ந்த நிலத்தின்கண் நிகழ்தலானும், அந்நிலத்தின் மக்களாயின் பிறநாட்டு ஆன் நிரையைக் களவிற்கோடல் ஒரு புடை குறிஞ்சிக்கு உரித்தாகிய களவோடு ஒத்தலானும், அதற்கு அது புறனா யிற்று என்க. சூடும் பூவும் அந்நிலத்திற்குரிய பூவாதலானும் அதற்கு அது புறமாம்.

உட்குவரத் தோன்றும் ஈர் ஏழ் துறைத்தே - வெட்சித்துறை உட்கு வரத் தோன்றும் பதினன்கு துறையை உடைத்து.

துறை பதினன்கும் வருகின்ற சூத்திரத்துள் காட்டுதும். (கூ)

கூ0. வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின்
ஆதந்து ஓம்பல் மேவற்று ஆகும்.

இது, வெட்சித்திணையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

---

* அரில்தப உணர்ந்தோர் என்றது; அகத்திணைக்கண் முதல் கரு உரிப்பொருள் கூறிய குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் என்பனவற்றிற்கு வெட்சி வஞ்சி உழிஞை தும்பை என்பன அவ்வவ் விலக்கணங்களோடு ஒரு புடை ஒப்புமை பற்றிச் சார்புடையவாதலும், நிலமில்லாத பாலை பெருந்திணை கைக்கிளை என்பனவற்றிற்கு வாகையும் காஞ்சியும் பாடாண் திணையும்பெற்ற இலக்கணத்தோடு ஒருபுடை ஒப்புமை பற்றிச் சார் புடையவாதலும் கூறுதற்கு. (நச்சி.)

(இ - ள்.) வேந்துவிடு முனைஞர் வேற்றுப் புலக்களவின் ஆ தந்து ஓம்பல் மேவற்று ஆகும் - வேந்தனால் விடப்பட்ட முனைஊரகத்துள்ளார் வேற்று நாட்டின்கண் களவினானே ஆவைக்கொண்டு பெயர்ந்து பாதுகாக்கும் மேவலை உடைத்து.

ஓம்புதலாவது, மீளாமல் காத்தல். புறப்பொருட் பாகுபாடாகிய பொருளினும் அறத்தினும் பொருள் தேடுதற்குரிய நால்வகை வருணத்தாரினும் சிறப்புடையார் அரசராதலானும், அவர்க்கு மாற்றரசர்பால் திறைகொண்ட பொருள் மிகவும் சிறந்ததாகலானும், அப்பொருள் எய்துங்கால் அவரைப் போரில் வென்று கோடல் வேண்டுதலானும், போர்க்கு முந்துற நிரைகோடல் சிறந்ததாகலானும், இப்பொருள் முன் கூறப்பட்டது.

பன்னிரு படலத்துள் "தன்னுறு தொழிலே வேந்துறு தொழிலென்று, அன்ன இருவகைத்தே வெட்சி," என இரண்டு கூறுபடக் கூறினாராயினும், முன்வருகின்ற வஞ்சி, உழிஞை, தும்பை முதலாயின எடுத்துச்செலவு, எயில்காத்தல், போர்செய்தல் என்பன அரசர்மேல் இயன்று வருதலின் வேந்துறு தொழில் ஒழித்து, தன்னுறு தொழில் எனத் தன் நாட்டும் பிறர் நாட்டும் களவின் ஆன்நிரை கோடலின் இவர் அரசரது ஆணையை நீங்கினாராவர். ஆதலால், அவர் அவ்வாறு கூறல் மிகைபடக் கூறலாம். அதனால், பன்னிருபடலத்துள் வெட்சிப்படலம் தொல்காப்பியர் கூறினாரென்றல் பொருந்தாது. என்னை ?

> "ஒத்த சூத்திரம் உரைப்பின் காண்டிகை
> மெய்ப்படக் கிளந்த வகைய தாகி
> ஈரைங் குற்றமும் இன்றி நேரிதின்
> முப்பத் திருவகை உத்தியொடு புணரின்
> நூலென மொழிப நுணங்குமொழிப் புலவர்"
> (தொல். மரபு-௧00)

எனவும்,

> "சிதைவெனப் படும்அவை வசையற நாடின்
> கூறியது கூறல் மாறுகொளக் கூறல்
> குன்றக் கூறல் மிகைபடக் கூறல்
> பொருளில கூறல் மயங்கக் கூறல்
> கேட்டோர்க் கின்னா யாப்பிற் றாதல்
> பழித்த மொழியான் இழுக்கக் கூறல்
> தன்னான் ஒருபொருள் கருதிக் கூறல்
> என்ன வகையினும் மனங்கோள் இன்மை
> அன்ன பிறவும் அவற்றுவிரி வாகும்' (தொல். மரபு-௧௧0)

எனவும் கூறிய ஆசிரியர் தாமே மாறுகொளக்கூறல், குன்றக்கூறல், மிகைபடக்கூறல், பொருளிலகூறல், மயங்கக்கூறல், தன்னானொரு பொருள் கருதிக்கூறல் என்னும் குற்றம் பயப்பக் கூறினாரென வருமாகலான். (உ)

௬௧. படையியங்கு அரவம் பாக்கத்து விரிச்சி
புடைகெடப் போகிய செலவே புடைகெட
ஒற்றின் ஆகிய வேயே வேய்ப்புறம்
முற்றின் ஆகிய புறத்துஇறை முற்றிய

ஊர்கொலை ஆகோள் பூசல் மாற்றே
நோயின்று உய்த்தல் நவல்வழித் *தோற்றம்
தந்துநிறை பாதீடு உண்டாட்டுக் கொடையென
வந்த ஈரேழ் வகையிற்று ஆகும்.

இது, வெட்சித் துறையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) படையியங்கு அரவம் முதலாகக் கொடை ஈறாகச் சொல்லப்பட்ட பதினான்கு துறையை உடைத்து வெட்சித்திணை.

வெட்சியென்பது அதிகாரத்தான் வந்தது. படை இயங்கு அரவம்- (நிரைகோடல் கருதிப்) படையெழும் அரவம்.

உதாரணம்

"நெடிபடு கானத்து நீள்வேல் மறவர்
அடிபடுத் தாரதர் செல்வான்—துடிபடுத்து
வெட்சி மலைய விரவார் மணிநிரைக்
கட்சியுள் காரி யெழும்†" (புறப். வெட்சி. ௧)

பாக்கத்து விரிச்சி - (குறித்த பொருளின் பயன் அறிதற்குப்) பாக்கத்துக்கண் நற்சொல் ஆய்தல்.

உதாரணம்

"எழுவணி சீறூர் இருள்மாலை முன்றில்
குழுவினங் கைகூப்பி நிற்பத்—தொழுவில்
குடக்கள்ளுக் கொண்டுவா என்றாள் குனிவில்
தடக்கையாய் வென்றி தரும்." (புறப். வெட்சி. ௪)

புடை கெடப்போகிய செலவு - பக்கம் கெடப் போகிய செலவு.

பக்கங் கெடுதலாவது, மாற்றரசர் பக்கத்தாராகித் தம்மாட்டு ஒற்றொடு நிற்பார் அறியாமல் போதல். பக்கத்திலுள்ளாரைப் பக்கம் என்றார்.

உதாரணம்

"கூற்றினத்து அன்னார் கொடுவில் இடனேந்திப்
பாற்றினம் பின்படர முன்படர்ந்து—ஏற்றினம்
நின்ற நிலைகருதி ஏகினார் நீள்கழைய
குன்றங் கொடுவில் அவர்." (புறப். வெட்சி. ௫)

புடை கெட ஒற்றின் ஆகிய வேயே - மாற்றரசர் பக்கத்துள்ளார் அறியாதவகை ஒற்றரால் ஆகிய ஒற்றுதலும்.

ஒற்று என்பது எவ்விடத்தும் வேண்டுமாயினும், ஆதிவிளக்காக இவ்வோத்தின் முதற்கண் வைத்தாரென்று கொள்க.

(பாடம்) * நுவலுழித். † கலுழும்.

## உதாரணம்

"நிலையும் நிரையும் நிரைப்புறத்து நின்ற
சிலையுஞ் செருமுனையுள் வைகி—இலைபுனைந்த
கள்ளவிழ் கண்ணிகீ கழல்வெய்யோய் சென்றறிந்து
நள்ளிருட்கண் வந்தார் நமர்." (புறப். வெட்சி. ௬)

வேய் புறம் முற்றின் ஆகிய புறத்து இறை-(அவ்வாறு) வேய்க்கப் பட்ட இடத்தின் புறத்தினைச் சூழ்தலான் ஆகிய புறத்திருக்கை.

'வேய்' என்பது ஆகுபெயராய் அவ்விடத்தின்மேல் நின்றது.

## உதாரணம்

"உய்ந்தொழிவார் ஈங்கில்லை ஊழிக்கண் தீயேபோல்
முந்தமருள் ஏற்றூர் முரண்முருங்கத்—தந்தமின்*
ஒற்றினன் ஒற்றி உரவோர் குறும்பினைச்
சுற்றினர் போகாமற் சூழ்ந்து." (புறப். வெட்சி. எ)

முற்றிய ஊர்கொலை (அவ்வாறு) சூழப்பட்ட ஊரை அழித்தல்.

## உதாரணம்

"இகலே துணையா எரிதவழச் சீறிப்
புகலே அரிதென்னார் புக்குப்—பகலே
தொலைவில்லார்† வீழத் தொடுகழல் ஆர்ப்பக்
கொலைவில்லார்‡ கொண்டார் குறும்பு." (புறப். வெட்சி. அ)

ஆ கோள்-(ஆண்டுளதாகிய) நிரையைக் கோடல்.

## உதாரணம்

"கொடுவரி கூடிக் குழூஉக்கொண் டனைத்தால்
நெடுவரை நீள்வேய் நரலும்—நடுவூர்க்
கணநிரை கைக்கொண்டு கையகலார் நின்ற
நிணநிரை வேலார் நிலை." (புறப். வெட்சி. ௯)

பூசல் மாற்று-(அவ்வாறு கொண்ட நிரையை மீட்டற்கு வந்தார் பொரும்) பூசல் மாற்றிப் பெயர்தல்.

## உதாரணம்

"சூழ்ந்த நிரைபெயரச் சுற்றித் தலைக்கொண்டார்
வீழ்ந்தனர் வீழ்ந்தார் விடக்குணிய—தாழ்ந்த
குலவுக் கொடுஞ்சிலைக்கைக் கூற்றனையார் எய்த
புலவுக் கணைவழிபோய்ப் புள்." (புறப். வெட்சி. ௧௦)

நோய் இன்று உய்த்தல்-(அவ்வாறு கொண்ட நிரையை) வருந்தாமல் உய்த்தல்.

(பாடம்) * தந்தமரின். † தொலைவிலார். ‡ கொலைவிலார்.

### உதாரணம்

"செருப்பிடைச் சிறுபரல் அன்னன்* கணைக்கால்
அவ்வயிற்று அகன்ற மார்பிற் பைங்கண்
குச்சின் நிரைத்தன்ன† குரூஉமயிர் மோவாய்ச்
செவியிறந்து தாழ்தரூஉங் கவுளன் வில்லோ
டியார்கொலோ.அளியன் தானே தேரின்
ஊர்பெரிது இகந்தன்றும் இலனே அரணெனக்
காடுகைக் கொண்டன்றும் இலனே காலைப்
புல்லார் இனநிரை செல்புற நோக்கிக்
கையிற் சுட்டிப் பையென எண்ணிச்
சிலையின் மாற்றி யோனே அவைதாம்
மிகப்பல வாயினும் என்னும் எனைத்தும்
வெண்கோள் தோன்றாக் குழிசியொடு
நாளுறை மத்தொலி கேளா தோனே." (புறம். உகள)

நுவல்வழித் தோற்றம்-தமர் கவன்று [சொல்லியவ]ழித் தோன்றுதல்.

### உதாரணம்

"நறவுந் தொடுமின் விடையும் வீழ்மின்
பாசுவல் இட்ட புன்கால் பந்தர்ப்
புனல்தரும் இளமணல் நிறையப் பெய்ம்மின்
ஒன்னார் முன்னிலை முருக்கிப் பின்நின்று
நிரையொடு வரூஉம் என்னைக்
குழையோர் தன்னினும் பெருஞ்சா யலரே." (புறம். உசஉ)

தந்து நிறை-(கொள்ளப்பட்ட நிரையைத்) தம்மூரகத்துக் கொணர்ந்து நிறுத்தல்.

### உதாரணம்

"தண்டா விருப்பினள் தன்னை தலைமலைந்த
வண்டார் கமழ்கண்ணி வாழ்கென்று - கண்டாள்
அணிநிரை வாள்முறுவல் அம்மா எயிற்றி
மணிநிரை மல்கிய மன்று." (புறப். வெட்சி. கக)

பாதீடு-(அந்நிரையைக்) கூறிடுதல்.

### உதாரணம்

"ஒள்வாள் மலைந்தார்க்கும் உற்றாய்ந் துரைத்தார்க்கும்
புள்வாய்ப்பச் சொன்ன புலவர்க்கும் - விள்வாரை
மாறட்ட வென்றி மறவர்தஞ் சீறூரில்
கூறிட்டார் கொண்ட நிரை." (புறப். வெட்சி. கச)

உண்டாட்டு-(நிரைபகுத்த மறவர்) களிப்பினால் அயரும் விளையாட்டு.

---

(பாடம்) * அன்ன. † நிரைத்த.

## உதாரணம்

"இளிகொண்ட தீஞ்சொல் இளமா எயிற்றி
களிகொண்ட நோக்கம் கவற்றத்—தெளிகொண்ட
வெங்கண் மலிய விளிவதுகொல் வேற்றூர்மேல்
செங்கண் மறவர் சினம்." (புறப். வெட்சி. கஙு)

கொடை-(பகுத்த நிரையை வேண்டி இரப்பார்க்குக்) கொடுத்தல்.

## உதாரணம்

"இளமா எயிற்றி இவைகாண் நின்ஐயர்
தலைநாளை வேட்டகத்துத் தந்தநல் ஆநிரைகள்
கொல்லன் துடியன் கொளைபுணர்சீர் வல்ல
நல்லியாழ்ப் பாணர்தம் முன்றில் நிறைந்தன.

முருந்தேர் இளநகை காணாய்நின் ஐயர்
கரந்தை அலறக் கவர்ந்த நிரைகள்*
கள்விலை யாட்டிநல் வேய்திரி கானவன்
புள்வாய்ப்பச் சொல்கணி† முன்றில் நிறைந்தன.

கயமலர் உண்கணாய் காணாய்நின் ஐயர்
அயலூர் அலற எறிந்தநல் ஆக்கள்‡
நயனின் மொழியர் நரைமுதிர் தாடி
எயினர் எயிற்றியர் முன்றில் நிறைந்தன." (சிலப்-வேட்டுவவரி)

சுஉ. மறங்கடைக் கூட்டிய குடிநிலை§ சிறந்த
கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே.

இதுவும் அது.

(இ - ள்.) மறம் கடை கூட்டிய குடி நிலை – மறத்தொழில் முடித்தலையுடைய குடியினது நிலைமையைக் கூறலும், சிறந்த கொற்றவை நிலையும்-சிறந்த கொற்றவையது நிலைமையைக் கூறலும், அ திணை புறன்-குறிஞ்சித்திணைப் புறனாகிய வெட்சித் திணையாம்.

குடிநிலை என்றதனால் மைந்தர்க்கும் மகளிர்க்கும் பொதுவாதல் அறிக.

## உதாரணம்

"யானை தாக்கினும் அரவுமேற் செலினும்
நீல்நிற விசும்பின் வல்லேறு சிலைப்பினும்
சூல்மகள் மாறா மறம்பூண் வாழ்க்கை
வலிக்கூட் டுணவின் வாட்குடிப் பிறந்த
புலிப்போத் தன்ன புல்லணற் காளை
செந்நா யன்ன கருவிற் சுற்றமொடு
கேளா மன்னர் கடிபுலம் புக்கு

(பாடம்) * இனநிரைகள். † வாய்ப்புச் சொன்னகணி. ‡ எறிந்த நிரைகள். § துடிநிலை.

"நாளா தந்து நறவுநொடை தொலைச்சி
இல்லக் கள்ளின் தோப்பி பருகி
மல்லல் மன்றத்து மதவிடை கெண்டி
மடிவாய்த் தண்ணுமை நடுவட் சிலைப்பச்
சிலைநவி லெறுழ்த்தோள் ஓச்சி வல்ன்வளையூப்
பகன்மகிழ் தூங்கும் தூங்கா இருக்கை."
(பெரும்பாண். கஉ௪-கச௪

"முளிதலை களித்தவர் உள்ளுங் காதலில்
தனக்குமுகந் தேந்திய பசும்பொன் மண்டை
இவற்கீ கென்னு மதுவுமன் றிசினே
கேட்டியோ வாழி பாண பாசறைப்
பூக்கோள் இன்றென் றறையும்
மடிவாய்த் தண்ணுமை இழிசினன் குரலே." (புறம். உஅக)

"கெடுக சிந்தை கடிதிவள் துணிவே
மூதில் மகளிர் ஆதல் தகுமே
மேனாள் உற்ற செருவிற்கு இவள் தன்ஐ
யானை எறிந்து களத்தொழிந் தனனே;
நெருநல் உற்ற செருவிற்கு இவள்கொழுநன்
பெருநிரை விலங்கி ஆண்டுப்பட் டனனே;
இன்றும்,
செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிதுவிரித்து உடீஇப்
பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி
ஒருமகன் அல்லது இல்லோள்
செருமுகம் நோக்கிச் செல்கென விடுமே" (புறம். உளக)

இவற்றுள் ஆண்பால் பற்றி வந்ததனை இல்லாண்முல்லை யெனவும், பெண்பால் பற்றி வந்ததனை மூதின்முல்லை யெனவும் கூறுப.

'கொற்றவை நிலை' என்றதனானே, குறிஞ்சித் திணைக்கு முருக வேளே யன்றிக் கொற்றவையும் தெய்வம் என்பது பெற்றும்.

## உதாரணம்

"ஆளி மணிக்கொடிப் பைங்கிளிப் பாய்கலைக்
கூளி வலிபடைக் கொற்றவை மீளி
அரண்முருங்க ஆகோள் கருதின் அடையார்
முரண்முருங்கத் தான்முந் துறும்" (புறப்-வெட்சி. உ0) (௪)

கூரு. வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்
வெறியாட்டு அயர்ந்த காந்தளும் உறுபகை
வேந்திடை தெரிதல் வேண்டி ஏந்துபுகழ்ப்
போந்தை வேம்பே ஆரென வரூஉம்
மாபெருந் தானையர் மலைந்த பூவும்
வாடா வள்ளி வயவர் ஏத்திய
ஓடாக் கழல்நிலை உளப்பட ஓடா
உடல்வேந்து அடுக்கிய உன்ன நிலையும்

மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பின்
தாவா விழுப்புகழ்ப் பூவை நிலையும்
ஆரமர் ஓட்டலும் ஆபெயர்த்துத் தருதலும்
சீர்சால் வேந்தன் சிறப்பெடுத்து உரைத்தலும்
தலைத்தாள் நெடுமொழி தன்னொடு புணர்த்தலும்
மனைக்குரி* மரபினது கரந்தை அன்றியும்
வருதார் தாங்கல் வாள்வாய்த்துக் கவிழ்தலென்று
இருவகைப் பட்ட பிள்ளை நிலையும்
வாள்மலைந்து எழுந்தோனை மகிழ்ந்துபறை தூங்க
நாடவற்கு அருளிய பிள்ளை யாட்டும்
காட்சி கல்கோள்† நீர்ப்படை நடுதல்‡
சீர்த்தகு மரபில் பெரும்படை வாழ்த்தலென்று
இருமூன்று மரபிற் கல்லொடு புணரச்
சொல்லப் பட்ட எழுமூன்று துறைத்தே.

வேலன் முதலாக வெட்சித்திணைக்குரிய துறை கூறினர்; இனி அதற்கு மாறாகிய கரந்தைத் திணையாமாறு உணர்த்துதல் நுதலிற்று. அதுவும் ஆநிரை மீட்டல் காரணமாக அந்நிலத்தின்கண் நிகழ்வதாகலின் வெட்சிப் பாற்பட்டுக் குறிஞ்சிக்குப் புறனாயிற்று.

(இ - ள்.) வெறியாட்டயர்ந்த காந்தளும் என்பது முதலாகத் தலைத்தாள் நெடுமொழி தன்னொடு புணர்த்தலும் என்பது ஈறாகச் சொல்லப்பட்ட பதின்மூன்று துறையும் காட்சி முதலாக வாழ்த்தல் ஈறாகக் கல்லொடு புணர்த்துக் கூறும் துறையொடுங் கூடச் சொல்லப்பட்ட இருபத்தொரு துறைத்து.

வெறி அறி சிறப்பின் வெவ்வாய் வேலன் வெறியாட்டு அயர்ந்த காந்தளும்-வெறி ஆடுதலை அறியும் சிறப்பினையுடைய வெவ்விய வாயினையுடைய வேலன் வெறியாடிய காந்தளும்.

காந்த ளென்பதனை மடலேறுதற்குப்பெயராகக் கூறுவா ருளராகலின், வெறியாட்டு அயர்ந்த காந்த ளென்றார். அன்றியும், காந்தள் என்பது மடலேறுதலான் அத்துணை ஆற்றாளாகிய பெண்பால்மாட்டு நிகழும் வெறி 'காந்தள்' எனவும் பெயராம். இதனானே காமவேட்கையின் ஆற்றாளாகிய பெண்பாற் பக்கமாகிய வெறியும் அந்நிலத்துள்ளார் வென்றி வேண்டி ஆடும் வெறியும் கொள்ளப்படும் இவ்வெறி இந்நிலத்திற்குச் சிறந்தமை அறிக. இதுவெட்சிப் பின்னர் வைத்தார், பெரும்பான்மையும் குறிஞ்சி பற்றி நிகழு மாகலின்.

(பாடம்) * அனைக்குரி. † கால்கோள். ‡ நடுகல்.

## உதாரணம்

"வெய்ய நெடிதுயிரா வெற்பன் அளிநினையா
ஐய நனிநீங்க ஆடினுள்—மையல்
அயன்மனைப் பெண்டிரோடு அன்னைசொல் அஞ்சி
வியன்மனையுள் ஆடும் வெறி."

(வெண்பா. இருபாற்பெருந்திணை. கo)

இது காமவேட்கை தோற்றுமல் தலைமகள் தானே முருகு மேல் நிறீஇ ஆடியது. வென்றி வேண்டியாடுதற்குச் செய்யுள் சிலப்பதி காரத்து வேட்டுவவரியுட் கண்டு கொள்க. இனி வேலன்தானே ஆடிய தற்குச் செய்யுள் வந்தவழிக் கண்டுகொள்க.

உறு பகை வேந்து இடை தெரிதல் வேண்டி ஏந்துபுகழ் போந்தை வேம்பு ஆர் என வரும் மா பெருந் தானையர் மலைந்த பூவும்-மிக்கபகை வேந்தன் வேறுபாடு தெரிதல் வேண்டி உயர்ந்த புகழையுடைய போந்தை யெனவும் வேம்பெனவும் ஆரெனவும் தமிழ்நாட்டு நிலவேந்தர் சூடிய பூவும்.

## உதாரணம்

"குடையலர் காந்தட்டன் கொல்லிச் சுனைவாய்த்
தொடையவிழ் தண்குவளை சூடான்—புடைதிகழுந்
தேரதிரப் பொங்குந் திருந்துவேல் வானவன்
போரெதிரிற் போந்தையாம் பூ." (புறப். பொது. க)

இது சேரன் பூ.

"தொடியணிதோள் ஆடவர் தும்பை புனையக்
கொடியணிதேர் கூட்டணங்கும் போழ்தின்—முடியணியும்
காத்தல்சால் செங்கோல் கடுமான் நெடுவழுதி
ஏத்தல்சால் வேம்பின் இணர்." (புறப். பொது. உ)

இது பாண்டியன் பூ.

"கொல்களிறு ஊர்வர் கொலைமலி வாள்மறவர்
வெல்கழல் வீக்குவர் வேலினையர்—மல்குங்
கலங்கல் ஒலிபுனல் காவிரி நாடன்
அலங்கல் அமரழுவத் தார்." (புறப். பொது. ௩)

இது சோழன் பூ.

நிரைகோள் கேட்டவழி நெடுநிலவேந்தரும் கதுமென எழுவ்ராத லின், நிரை மீட்டலின்கண் பூப் புகழப்பட்டது.

வாடா வள்ளி-வாடுதல் இல்லாத வள்ளி.

'வள்ளி' என்பது ஒருகூத்து; அஃது அந்நிலத்தின் நிகழ்தலின் வாடா வள்ளி' என்றார். உதாரணம் வந்த வழிக் கண்டுகொள்க.

வயவர் ஏத்திய ஓடா கழல் நிலை-வீரரால் புகழப்பட்ட கெடாத கழல் நிலை.

### உதாரணம்

"வாள் அமரின் முன்விலக்கி வான்படர்வார் யார்கொலோ
கேளலார் நீக்கிய கிண்கிணிக்கால்—காளை
கலங்கழல் வாயில் கடுத்தீற்றி அற்றால்
பொலங்கழல் கான்மேல் புனைவு" (புறப். பொது. எ)

ஓடா உடல் வேந்து அடுக்கிய உன்ன நிலையும்-ஓடாத வெகுண்ட வேந்தரைச் சார்த்திய உன்ன நிலையும்.

'உன்னம்' என்பது மரம். அது தன் நாட்டகத்துக் கேடுவருங்கால் உலறியும், வாராத காலம் குழைந்தும் நிற்கும்.

### உதாரணம்

"துன்னருந் தானைத் தொடுகழலான் துப்பெதிர்ந்து
முன்னர் வணங்கார் முரண்முருங்க—மன்னரும்
ஈடெலாந் தாங்கி இகலவிந்தார் நீயுநின்
கோடெலாம் முன்னங் குழை." (புறப். பொது. ௬)

பிறவும் நிமித்தமாகி வருவன வெல்லாவற்றிற்கும் இதுவே துறையாகக் கொள்க.

மாயோன் மேய மன் பெருஞ் சிறப்பின் தாவா விழு புகழ் பூவை நிலையும்-மாயோனைப் பொருந்திய நிலைபெற்ற பெருஞ் சிறப்பினையுடைய கெடாத விழுப்புகழைப் பொருந்திய பூவை நிலையைக் கூறுதலும்.

பூவை மலர்ச்சியைக் கண்டு மாயோன் நிறத்தை ஒத்ததெனப் புகழ்தல். நாடெல்லை காடாதலின், அக்காட்டிடைச் செல்வோர் அப் பூவையைக் கண்டு கூறுதல். உன்னம் கண்டு கூறினர் போல இதுவும் ஒரு வழக்கு.

### உதாரணம்

"பூவை விரியும் புதுமலரில் பூங்கழலோய்
யாவை விழுமிய யாமுணரேம்—மேவார்
மறத்தொடு மல்லர் மறங்கடந்த காளை
நிறத்தொடு நேர்தருத லான்." (புறப். பாடாண். ௬)

இஃது உரையன்றென்பார், மாயோன் முதலாகிய தேவர்களோடு உவமித்தலே பூவைநிலை யென்ப.

### உதாரணம்

"இந்திரன் என்னின் இரண்டேகண் ஏறூர்ந்த
அந்தரத்தான் என்னின் பிறை இல்லை—அந்தரத்தின்
கோழியான் என்னின் முகன் ஒன்றே கோதையை
ஆழியான் என்றுணரற் பாற்று." (முத்தொள்ளாயிரம்)

வேறு கடவுளரை நோக்கி உவமித்து வருபவையெல்லாம் பூவை நிலையாகக் கொள்க. என்னை ?

"ஏற்றூர்தி யானும் இகல்வெம்போர் வானவனும்
ஆற்றலும் ஆள்வினையும் ஒத்தொன்றின் ஒவ்வாரே
கூற்றக் கணிச்சியான் கண்மூன்று இரண்டேயாம்
ஆற்றல்சால் வானவன் கண்." (முத்தொள்ளாயிரம்)

என முத்தொள்ளாயிரத்து வந்தவாறு காண்க. பிறவும் அன்ன. பூவை நிலையும் அந்நிலத்தின் தெய்வமாகிய கருப்பொருளாதலின், அதன்மேல் வந்தது.

ஆர் அமர் ஓட்டலும்-அரிய அமரைப் போக்குதலும்,

## உதாரணம்

"புலிக்கணமுஞ் சீயமும் போர்க்களிறும் போல்வார்
வலிச்சினமும் மானமுந் தேசும்—ஒலிக்கும்
அருமுனை வெஞ்சுரத் தான்பூசற் கோடிச்
செருமலைந்தார் சீற்றஞ் சிறந்து." (புறப். கரந்தை. ச)

ஆபெயர்த்துத்தருதல்-நிரை மீட்டல்.

## உதாரணம்

"அழுங்கல்நீர் வையகத்து ஆருயிரைக் கூற்றம்
விழுங்கியபின் வீடுகொண்டு அற்றால்—செழுங்குடிகள்
தாரார் கரந்தை தலைமலைந்து தாங்கொண்டார்*
நேரார்கைக் கொண்ட நிரை." (புறப். கரந்தை க.)

எனவும்,

"ஏறுடைப் பெருநிரை பெயர்தரப் பெயராது
இலைபுதை பெருங்காட்டுத் தலைகரந் திருந்த
வல்வில் மறவர் ஒடுக்கங் காணாய்
செல்லல் செல்லல் சிறக்கநின் உள்ளம்
முருகுமெய்ப் பட்ட புலைத்தி போலத்
தாவுபு தெறிக்கு†மான்மேற்
புடையிலங்கு ஒள்வாள் புனைகழ லோயே." (புறம்-உருக)

எனவும் வரும்.

சீர் சால்வேந்தன் சிறப்பு எடுத்து உரைத்தலும்-சீர்மை பொருந்திய வேந்தனது மிகுதியை எடுத்துக் கூறலும்.

## உதாரணம்

"அங்கையுள் நெல்லி அதன்பயம் ஆதலால்
கொங்கலர் தாரான் குடை நிழற்கீழ்த்—தங்கிச்
செயிர் வழங்கும் வாளமருள் சென்றடையார் வேல்வாய்
உயிர்வழங்கும் வாழ்க்கை உறும்." (புறப். கரந்தை. கூ)

இது மற்றுள்ள திணைக்கும் பொது.

(பாடம்) * தாங்கோடல். † செறிதரு.

தலைத்தாள் நெடுமொழி தன்னொடு புணர்த்தலும்-தன்மாட்டுள்ள போர்வலி முயற்சியினாலே கொடுஞ்சொற்களைத் தன்னொடு புணர்த்திக் கூறுதலும்.

## உதாரணம்

"ஆளமர் வெள்ளம் பெருகின் அதுவிலக்கி
வாளொடு வைகுவேம் யாமாக—நாளுங்
கழிமகிழ் வென்றிக் கழல்வெய்யோய் ஈயப்
பிழிமது உண்பார் பிறர்." (புறப். கரந்தை. கக)

இது மற்றுள்ள திணைக்கும் பொது.

வரு தார் தாங்கல் வாள் வாய்த்து கவிழ்தல் என்று இருவகைப்பட்ட பிள்ளை நிலையும்-மேல் வருகின்ற கொடிப்படையைத் தாங்கலும் வாள் வாய்த்தலாற் படுதலும் என இரண்டு வகைப்பட்ட பிள்ளை நிலையும்.

## உதாரணம்

"பிள்ளை கடுப்பப் பிணம்பிறங்க வாளெறிந்து
கொள்ளைகொள் ஆயந் தலைக்கொண்டார்—எள்ளிப்
பொருதழிந்து மீளவும் பூங்கழலான் மீளான்
ஒருதனியே நின்றான் உளன்." (புறப். கரந்தை. எ)

இது வருதார் தாங்கல்.

"உரைப்பின் அதுவியப்போ ஒன்னார்கைக் கொண்ட
நிரைப்பின் நெடுந்தகை சென்றான்—புரைப்பின்
றுளப்பட்ட வாயெல்லாம் ஒள்வாள் கொளவே*
களப்பட்டான் சென்றான்†கரந்து." (புறப். கரந்தை. அ)

இது வாள் வாய்த்துக் கவிழ்தல்.

வாள் மலைந்து எழுந்தோனை மகிழ்ந்து பறை தூங்க நாடு அவர்க்கு அருளிய பிள்ளையாட்டும் - வாளான் மாறுபட்டு எழுந்தவனை மகிழ்ந்து பறை ஒலிப்ப அவற்குத் துறக்கமாகிய நாட்டை அளித்தபிள்ளையாட்டும்.

## உதாரணம்

"மாட்டிய பிள்ளை மறவர் நிறந்திறந்து
கூட்டிய எஃகங் குடர்மாலை—சூட்டியபின்
மாறுஇரியச் சீறி நுடங்குவான் கைக்கொண்ட
வேல்திரிய விம்முந் துடி." (புறப். கரந்தை. க)

காட்சி-(போர்க்களத்துப் பட்ட வீரரைக் கல்நிறுத்தற் பொருட்டுக் கற்) காண்டல்.

## உதாரணம்

"மிகையணங்கு மெய்ந்நிறீஇ மீளி மறவர்
புகையணங்கப் பூமாரி சிந்திப்—பகையணங்கும்
வீளைக் கடுங்கணையால் வேறுகி விண்படர்ந்த
காளைக்குக் கண்டமைத்தார் கல்." (புறப். பொது. அ)

கல்கோள் - (அவ்வாறு காணப்பட்ட) கல்லைக் கைக்கோடல்.

---

(பாடம்) * கவரக். † தோன்றான்.

### உதாரணம்

"பூவொடு நீர் தூவிப் பொங்க விரைபுகைத்து
நாவுடை நன்மணி நன்கியம்ப—மேவார்
அழன்மறம் காற்றி அவிந்தாற்கென் றேத்திக்
கழன்மறவர் கைக்கொண்டார் கல்." (புறப். பொது. கூ,

நீர்ப்படை - (அக்கல்லை) நீர்ப்படுத்தல்.

### உதாரணம்

"காடு கனற்றக்* கதிரோன் சினஞ்சொரியக்
கூடிய வெம்மை குளிர்கொள்ளப்—பாடி
நயத்தக மண்ணி நறுவிரைகொண் டாட்டிக்
கயத்தகத்து உய்த்திட்டார் கல்." (புறப். பொது. கo)

நடுதல் - (அக்கல்லை) நடுதல்.

### உதாரணம்

"மாலை துயல மணியெறிந்து மட்டுகுத்துப்
பீலி அணிந்து பெயர் பொறித்து—வேலமருள்
ஆண்டக நின்ற அமர்வெய்யோற்கு இஃதென்று
காண்டக நாட்டினார் கல்." (புறப். பொது. கஉ)

சீர் தகு மரபின் பெரும்படை - மிகவுந் தக்க மரபினையுடைய பெரும்படையினும்.

அஃதாவது, நாட்டிய கல்லிற்குக் கோட்டஞ் செய்தல், அஃது இற்கொண்டு புகுதலென உரைத்த துறை. [கோட்டம் - கோயில். படை - படைத்தல்.]

### உதாரணம்

"வாட்புகா ஊட்டி வடிமணி நின்றியம்பக்
கோட்புலி அன்ன குரிசில்கல்—ஆட்கடிந்து
விற்கொண்ட வென்றி வியன்மறவர் எல்லாரும்
இற்கொண்டு புக்கார் இயைந்து."

வாழ்த்து - (அக்கல்லைப்) பழிச்சுதல்.

### உதாரணம்

"அடும்புகழ் பாடி அழுதழுது ஆற்றாது†
இடும்பையுள் வைகி இருந்த—கடும்பொடு
கைவண் குரிசில்கல் கைதொழுது ‡ செல்பாண
தெய்வமாய் நின்றான் திசைக்கு." (புறப். பொது. கங)

இவை யெல்லாம் கரந்தைக்கு உரித்தாக ஓதப்பட்டனவேனும், "ஒருபாற் கிளவி எனைப்பாற் கண்ணும், வருவகை தானே வழக்கென மொழிப" [பொருளியல்-உஅ] என்றதனான், மறத்துறை ஏழிற்கும்

(பாடம்) * கனலக். † நோனாது. ‡ கைதொழூஉச்.

கொள்ளப்படும். ஈண்டு ஓதப்பட்ட இருபத்தொரு துறையினும் நிரை மீட்டற் பொருண்மைத்தாகிக் கரந்தையென ஓதப்பட்டன ஏழாயின கரந்தையாயினவாறு என்னையெனின், வெறியாட்டும் வள்ளிக்கூத்தும் மலைசார்ந்த இடத்து வழங்குதலின், வந்த நிலத்திற்கு உரிய பொருளாகி வந்தன. பூவை நிலையும் அந்நிலத்தைச் சார்ந்து வருவதொரு தெய்வ மாதலின், அந்நிலத்தின் கருப்பொருளாகி வந்தது. கற்கோள்நிலையாறும் உன்ன நிலையும் முடியுடை வேந்தர் சூடும் பூவும் கழல்நிலையும் ஏனைய வற்றிற்கும் பொதுவாகலான், எடுத்துக்கோண்ட கண்ணே கூறுதல் இலக்கணமாதலின் ஈண்டு ஓதப்பட்டதென உணர்க. பன்னிருபடலத் துள் கரந்தைக்கண் புண்ணொடுவருதல் முதலாக வேறுபடச் சிலதுறை கூறினாராகலின், புண்படுதல் மாற்றோர்செய்த மறத்துறையாகலின், அஃது இவர்க்கு மாறுகக் கூறலும் மயங்கக்கூறலுமாம். ஏனையவும் இவ்வாறு மயங்கக்கூறலும் குன்றக்கூறலும் மிகைபடக் கூறலும் ஆய வாறு எடுத்துக் காட்டின் பெருகுமாதலான், உய்த்துணர்ந்து கண்டு கொள்க. இத்துணையும் கூறப்பட்டது வெட்சித்திணை. (௫)

௬௪. வஞ்சி தானே முல்லையது புறனே
எஞ்சா *மண்நசை வேந்தனை வேந்தன்
அஞ்சுதகத் தலைச்சென்று அடல்குறித் தன்றே.

**இது, வஞ்சித்திணையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.**

(இ - ள்.) *வஞ்சி முல்லையது புறன்* - வஞ்சியாகிய புறத் திணை முல்லையாகிய அகத்திணைக்குப் புறனும், *எஞ்சா மண் நசை வேந்தனை வேந்தன் அஞ்சுதகத் தலைச்சென்று அடல் குறித்தன்று* - அஃது ஒழியாத மண்ணை நச்சுதலையுடைய வேந்தனை மற்றொரு வேந்தன் அஞ்சுதகத் தலைச்சென்று அடல் குறித்தது.

ஒழியாத மண்ணை நச்சுதலாவது, வேண்டிய அரசர்க்குக் கொடாமை. "அகத்திணை மருங்கின் அரில்தபஉணர்ந்தோர், புறத்திணை இலக்கணம் திறப்படக்கிளப்பின்" [புறத். ௧] என்பதனைக்கொணர்ந்து உரைத்துக் கொள்க. இவ்வுரை இனி வருகின்ற திணைக்கும் ஒக்கும். அதற்கு இது புறனாகியவாறு என்னையெனின், "மாயோன்மேய காடுறை யுலகமும்" [அகத். ௫] கார்காலமும் முல்லைக்கு முதற்பொருளாத லானும், பகைவயிற் சேறலாகிய வஞ்சிக்கு நிழலும் நீருமுள்ள காலம் வேண்டுதலானும், பருமரக் காடாகிய மலைசார்ந்த இடம் ஆகாமை யானும் அதற்கு இது சிறந்ததென்க. அன்னவுரைகள் முல்லைப்பாட்டினுள்,

"கான்யாறு தழீஇய அகல்நெடும் புறவில்
சேண்நாறு பிடவமொடு பைம்புதல் எருக்கி
வேட்டுப்புழை அருப்பம் மாட்டிக் காட்ட
இடுமுட்புரிசை ஏமுற வளைஇப்
படுநீர்ப் புணரியிற் பரந்த பாடி" (முல்லைப். ௨௪-௨௮)

என்பதனானும் அறிக. *(௬)

---

*"எஞ்சா.........தன்றே" என்பது முடியத் தனிச் சூத்திரம் ஆக்குவர். (நச்சி.) (௭)

சுரு. இயங்குபடை அரவம் எரிபரந்து எடுத்தல்
வயங்கல் எய்திய பெருமை யானும்
கொடுத்தல் எய்திய கொடைமை யானும்
அடுத்தூர்ந்து அட்ட கொற்றத் தானும்
மாராயம் பெற்ற நெடுமொழி யானும்
பொருள்இன்று உய்த்த பேராண் பக்கமும்
வருவிசைப் புனலைக் கற்சிறை போல
ஒருவன் தாங்கிய பெருமை யானும்
பிண்டமேய பெருஞ்சோற்று நிலையும்
வென்றோர் விளக்கமுந் தோற்றோர் தேய்வும்
குன்றாச் சிறப்பிற் கொற்ற வள்ளையும்
அழிபடை தட்டோர் தழிஞ்சியொடு தொகைஇக்
கழிபெருஞ் சிறப்பின் துறைபதின் மூன்றே.

இது, வஞ்சித்திணையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) இயங்குபடை அரவம் முதலாகத் தழிஞ்சியொடு கூடச் சொல்லப்பட்ட பதின்மூன்றும் வஞ்சித்துறையாம் என்றவாறு.

'பெருமை யானும்' என்பது முதலாக வந்த 'ஆன்' எல்லாம் இடைச்சொல்லாகி வந்தன. இயங்குபடை அரவம் எரிபரந்தெடுத்தல் என்பதன்கண் உம்மை தொக்கு நின்றது.

படை இயங்கு அரவம் - படையெழும் அரவம்.

### உதாரணம்

"சிறப்புடை மரபின் பொருளு மின்பமும்
அறத்து வழிப்படூஉம் தோற்றம் போல
இருகுடை பின்பட ஓங்கிய ஒருகுடை
உருகெழு மதியின் நிவந்துசேண் விளங்க
நல்லிசை வேட்டம் வேண்டி வெல்போர்ப்
பாசறை யல்லது நீஒல் லாயே
நுதிமுக மழுங்க மண்டி ஒன்னார்
கடிமதில் பாயுநின் களிறடங் கலமே
போரெனிற் புகலும் புனைகழல் மறவர்
காடிடைக் கிடந்த நாடுநனி சேய
செல்வேம் அல்லேம் என்னார் கல்லென்
விழவுடை யாங்கண் வேற்றுப்புலத் திறுத்துக்
குணகடல் பின்னது ஆகக் குடகடல்
வெண்தலைப் புணரிநின் மான்குளம்பு அலைப்ப
வலமுறை வருவதும் உண்டென்று அலமந்து

நெஞ்சுநடுங்கு அவலம் பாயத்
துஞ்சாக் கண்ண வடபுலத் தரசே." (புறம். கூக)

எரி பரந் தெடுத்தல்-(பகைவரது நாடு) எரி பரந்து கிளர்தல்.

உதாரணம்

" வினைமாட்சிய விரைபுரவியொடு
மழையுருவின தோல்பரப்பி
முனைமுருங்கத் தலைச்சென்றவர்
விளைவயல் கவர்பூட்டி
மனைமரம் விறகாகக்
கடிதுறைநீர்க் களிறுபடீஇ
எல்லுப்பட விட்ட சுடுதீ விளக்கம்
செல்சுடர் ஞாயிற்றுச் செக்கரின் தோன்றப்
புலங்கெட இறுக்கும் வரம்பில் தானைத்
துணைவேண்டாச் செருவென்றிப்
புலவுவாட் புலர்சாந்தின்
முருகற் சீற்றத் துருகெழு குருசில்
மயங்குவள்ளை மலராம்பல்
பனிப்பகன்றைக் கனிப்பாகல்
கரும்பல்லது காடறியாப்
பெருந்தண்பணை பாழாக
ஏம நன்னாடு ஒள்ளெரி ஊட்டினை*
நாம நல்லமர் செய்ய
ஓராங்கு மலைந்தன பெருமநின் களிறே" (புறம். கசு)

வயங்கல் எய்திய பெருமையும்-விளக்கம் எய்திய பெருமையும்.

உதாரணம்

"இருங்கண் யானையொடு அருங்கலந்†தெறுத்துப்
பணிந்துகுறை‡மொழிவ தல்லது பகைவர்
வணங்கார் ஆதல் யாவதோ மற்றே
உருமுடன்று சிலைத்தலின் விசும்பதிர்ந் தாங்கு
கண்ணதிர்பு முழங்குங் கடுங்குரல் §முரசம்
கால்கிளர்ந் தன்ன ஊர்தி கான்முனை
¶எதிர்நிகழ்ந் தன்ன சிறையருஞ் சீற்றத்து
நளியிரும் பரப்பின் மாக்கடல் முந்நீர்
நீர்துனைந் தன்ன செலவின்
நிலந்திரைப் பன்ன தானையோய் நினக்கே." (பதிற்றுப்பத்து)

கொடுத்தல் எய்திய கொடைமையும் - கொடுத்தலைப் பொருந்திய கொடைமையும்.

---

(பாடம்) * ஊட்டி. † தொறுத்தும். ‡ வழி. § முரசமொடு
¶ எரிநிகழ்ந் தன்ன நிறையருஞ் சீற்றத்து.

## உதாரணம்

" பாணர் தாமரை மலையவும் புலவர்
பூநுதல் யானையொடு புனைதேர் பண்ணவும்
அறனோ* மற்றிது விறல்மாண் குடுமி
இன்னா வாகப் பிறர்மண் கொண்டு
இனிய செய்திநின் ஆர்வலர் முகத்தே"  (புறம். கஉ)

அடுத்து ஊர்ந்து அட்ட கொற்றமும்-பகைவர் பலரையும் அடுத்து மேலிட்டுக் கொன்ற கொற்றமும்.

## உதாரணம்

" திண்பிணி முரசம் இழுமென முழங்கச்
சென்றமர் கடத்தல் யாவது வந்தோர்
தார்தாங் குதலும் ஆற்றார் வெடிபட்டு
ஓடல் மரீஇய பீடில் மன்னர்
நோய்ப்பால் விளிந்த யாக்கை தழீஇக்
காதல் மறந்தவர்† தீதுமருங்கு அறுமார்
அறம்புரி கொள்கை நான்மறை முதல்வர்
திறம்புரி பசும்புல் பரப்பினர் கிடப்பி
மறங்கந் தாக நல்லமர் வீழ்ந்த
நீள் கழல் மறவர்‡ செல்வுழிச் செல்கென
வாள்போழ்ந்து அடக்கலும் உய்ந்தனர் மாதோ
வரிஞிமிறு ஆர்க்கும் வாய்புகு கடாஅத்து
அண்ணல் யானை அடுகளத்து ஒழிய
அருஞ்சமந் ததைய நூறிநீ
பெருந்தகை விழுப்புண் பட்ட மாறே."  (புறம். கக)

மாராயம் பெற்ற நெடு மொழியும்-மாராயமாகிய உவகை பெற்ற நெடிய மொழியும்.

## உதாரணம்

" துடியெறியும் புலைய
எறிகோல்கொள்ளும் இழிசின
கால மாரியின் அம்பு தைப்பினும்
வயற்கெண்டையின் வேல்பிறழினும்
பொலம்புனை ஓடை அண்ணல் யானை
இலங்குவால் மருப்பின் நுதிமடுத்து ஊன்றினும்
ஓடல் செல்லாப் பீடுடை யாளர்
நெடுநீர்ப் பொய்கைப் பிறழிய வாளை
நெல்லுடை நெடுநகர்க் கூட்டுமுதல் புரளும்
தண்ணடை பெறுதல் யாவது படினே
மாசில் மகளிர் மன்றல்§ நன்றும்
உயர்நிலை உலகத்து நுகர்ப அதனால்
வம்ப வேந்தன் தானை
இம்பர் நின்றுங் காண்டிரோ வரவே."  (புறம். உஅஎ)

பொருள் இன்று உய்த்த பேர் ஆண் பக்கமும்-பகைவரைப் பொருளாக மதியாது செலுத்தின பேர் ஆண் பக்கமும்.

(பாடம்) * மறனோ. † மறந்து. ‡ மன்னர். § மன்னு

## உதாரணம்

" ஆவும் ஆனியல் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்
எம்அம்பு கடிவிடுதும் நும்அரண் சேர்மினென
அறத்தாறு நுவலும் பூட்கை மறத்தின்
கொல்களிற்று மீமிசைக் கொடிவிசும்பு நிழற்றும்
எங்கோ வாழிய குடுமி தங்கோச்
செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீத்த
முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே" (புறம். க)

விசைவரு புனலைக் கற்சிறைபோல ஒருவன் தாங்கிய பெருமையும்- விசை கொண்டுவரும் புனலைக் கற்சிறை தாங்கினாற்போல ஒருவன் தாங்கிய பெருமையும்.

## உதாரணம்

" வீடுணர்ந் தார்க்கும் வியப்பாமால் இந்நின்ற
வாடல் முதியாள் வயிற்றிடம்—கூடார்
பெரும்படை வெள்ளம் நெரிதரவும் பேரா
இரும்புலி சேர்ந்த இடம்'' (புறப். வஞ்சி. கக)

எனவும்,

"வேந்துடைத் தானை முனைகெட நெரிதர
ஏந்துவாள் வலத்தன் ஒருவன் ஆகித்
தன்இறந்து வாராமை விலக்கலின் பெருங்கடற்கு
ஆழி அனையன் மாதோ என்றும்
பாடிச் சென்றோர்க்கு அன்றியும் வாரிப்
புரவிற்கு ஆற்றாச் சீறூர்த்
தொன்மை சுட்டிய வண்மை யோனே" (புறம். ௩௩0)

எனவும் வரும்.

பிண்டம் மேய பெருஞ்சோற்று நிலையும் - திரட்சி பொருந்தின பெருஞ்சோற்று நிலையும்.

## உதாரணம்

" இணர்ததை ஞாழல் கரைகெழு பெருந்துறை
மணிக்கலத்து அன்ன மாயிதழ் நெய்தற்
பாசடைப் பனிக்கழி துழைஇப் புன்னை
வாலிணர்ப் படுசினைக் குருகிறை கொள்ளும்
அல்குறு கானல் ஓங்குமணல் அடைகரை
தாழடம்பு மலைந்த புணரிவளை ஞரல

இலங்கு*நீர் முத்தமொடு வார் துகில் எடுக்கும்
தண்கடற் படப்பை மென்பா லனவும்
காந்தளங் கண்ணிக் கொலைவில் வேட்டுவர்
செங்கோட்டு ஆமான் ஊனொடு காட்ட
மதனுடை வேழத்து வெண்கோடு கொண்டு
பொன்னுடை நியமத்துப் பிழிநொடை கொடுக்கும்
குன்றுதலை மணந்த † புன்புல வைப்பும்
கால மன்றியுங் கரும்பறுத்து ‡ ஒழியாது
அரிகால் அவித்துப் § பல்பூ விழவில்
தேம்பாய் மருதம் முதல்படக் கொன்று
வெண்டலைச் செம்புனல் பரந்துவாய் மிகுக்கும்
பலசூழ் பதப்பர் பரிய வெள்ளத்துச்
சிறைகொள் பூசலிற் புகன்ற வாயம்
முழவிமிழ் மூதூர் விழவுக்காணூஉப் பெயருஞ்
செழும்பல் வைப்பிற் பழனப் பாலும்
ஏனல் உழவர் வரகுமீது இட்ட
கான்மிகு குளவிய வன்புசேர் இருக்கை
மென்தினை நுவணை முறைமுறை பகுக்கும்
புன்புலந் தழீஇய புறவணி வைப்பும்
பல்பூஞ் செம்மற் காடுபயம் மாறி
அரக்கத்து அன்ன நுண்மணற் கோடுகொண்டு
ஒண்ணுதல் மகளிர் கழலொடு மறுகும்
விண்ணுயர்ந் தோங்கிய கடற்றவும் பிறவும்
பணைகெழு வேந்தரும் வேளிரும் ஒன்றுமொழிந்து
கடலவுங் காட்டவும் அரண்வலியார் நடுங்க
முரண்மிகு கடுங்குரல் விசும்படை பதிரக்
கடுஞ்சினங் கடாஅய் முழங்கு மந்திரத்து
அருந்திறல் மரபிற் கடவுட் பேணியர்
உயர்ந்தோன் ஏந்திய அரும்பெறற் பிண்டம்
கருங்கண் பேய்மகள் கைபுடையூஉ நடுங்க
நெய்த்தோர் தூஉய நிறைமகிழ் இரும்பலி
எறும்பு மூசா இறும்பூது மரபிற்
கருங்கண் காக்கையொடு பருந்திருந்து ஆர
ஓடாப் பூட்கை ஒண்பொறிக் கழற்கால்
பெருஞ்சமந் ததைந்த செருப்புகல் மறவர்
உருமுநிலன் அதிர்க்குங் குரலொடு கொளைபுணர்ந்து
பெருஞ்சோ றுகுத்தற்கு எறியும்
கடுஞ்சினவேந்தே நின் ¶தழங்குகுரல் முரசே." (பதிற்றுப். ௩0)

வென்றோர் விளக்கமும்-வென்றோர் மாட்டு உளதாகிய விளக்கமும்

"அறாஅ யாணர் அகன்கண் செறுவின்
அருவி ஆம்பல் நெய்தலொடு அரிந்து
செறுவினை மகளிர் மலிந்த வெக்கைப்
பரூஉப்பகடு உதிர்த்த மென்செந் நெல்லின்
அம்பண அளவை உறைகுவித் தாங்குக்

(பாடம்) * கதிர். † வன். ‡ கரும்புய்த்து. § பல்பூ உழவர். ¶ வேந்துசேண்.

கடுந்தேன் உருகிளை* மொசிந்தன துஞ்சும்
செழுங்கூடு கிளைத்த இளந்துணை மகாரின்
அலந்தனர் பெருமநின் உடற்றி யோரே
ஊரெரி கவர உருத்தெழுந்து உரைஇப்
போர்சுடு கமழ்புகை மாதிரம் மறைப்ப
மதில்வாய்த் தோன்றல் ஈயாது தம்பழி ஊக்குநர்
குண்டுகண் அகழிய குறுந்தாள் ஞாயில்
ஆரெயில் தோட்டி வௌவினை ஏறொடு
கன்றுடை ஆயம் தரீஇப் புகல்சிறந்து
புலவுவில் இளையர் அங்கை விடுப்ப
மத்துக்கயிறு ஆடா வைகற்பொழுது நினையூஉ
ஆன்பயம் வாழுநர் கழுவுடலை மடங்கப்
பதிபாழ் ஆக வேறுபுலம் படர்ந்து
விருந்தின் வாழ்க்கையொடு பெருந்திரு அற்றென
அருஞ்சமத்து அருநிலை தாங்கிய புகர்நுதல்
பெருங்களிற்று யானையொடு அருங்கலந் தராஅர்
மெய்பனி கூரா அணங்கெனப் பராவலிற்
பலிகொண்டு பெயரும் பாசம்† போலத்
திறைகொண்டு பெயர்தி வாழ்கநின் ஊழி
உரவரும் மடவரும் அறிவுதெரிந்து எண்ணி
அறிந்தனை அருளாய் ஆயின்
யாரிவண் நெடுந்தகை வாழு மோரே.'' (பதிற்றுப். ௭௧)

தோற்றோர் தேய்வும் - தோற்றோர் தேய்வு கூறுதலும்.

## உதாரணம்

''வான்மருப்பின் களிற்றியானை
மாமலையிற் கணங்கொண்டவர்
எடுத்தெறிந்த விறல்முரசம்
கார்மழையின் கடிதுமுழங்கச்
சாந்துபுலர்ந்த வியன்மார்பின்
தொடிசுடர்வரும் வலிமுன்கைப்
புண்ணுடை எறுழ்த்தோள் புடையலங் கழற்கால்
பிறக்கடி ஒதுங்காப் பூட்கை ஒள்வாள்
ஓடிவில் தெவ்வர் எதிர்நின்று உரைஇ
இடுக திறையே புரவெதிர்ந் தோற்கென
அம்புடை வலத்தர் உயர்ந்தோர் பரவ
அனையை ஆகல் மாறே பகைவர்
கால்கிளர்ந்து அன்ன கதழ்பரிப் புரவிக்
கடும்பரி நெடுந்தேர் மீமிசை நுடங்குகொடி
புலவரைத் தோன்றல் யாவது சினப்போர்
நிலவரை நிறீஇய நல்லிசைத்
தொலையாக் கற்பநின் தெம்முனை யானே.'' (பதிற்றுப். ௮௰)

குன்றா சிறப்பின் கொற்றவள்ளையும் - குறைவுறுதலைச் செய்யாத வென்றிச் சிறப்பினையுடைய கொற்றவள்ளையும்.

---

(பாடம்) *கடுந்தேறு உறுகிளை. †பசாசம்.

கொற்றவள்ளை - தோற்ற கொற்றவன் அளிக்கும் திறை. உதாரணம் வந்துழிக் காண்க.

அழிபடை தட்டோர் தழிஞ்சியொடு தொகைஇ - மாற்றார் விடு படைக்கலன் முதலியனவற்றைத் தம்மாட்டுத் தடுத்து உளன் அழிந் தோர்ப் பேணித்தழுவிக்கோடலொடு தொகுத்து எண்ணின்.

## உதாரணம்

"வருகதில் வல்லே வருகதில் வல்லென
வேந்தவிடு விழுத்தூது ஆங்காங்கு இசைப்ப
நூலரி மாலே சூடிக் காலின்
தமியன் வந்த மூதி லாளன்
அருஞ்சமந் தாங்கி முன்னின்று எறிந்த
ஒருகை இரும்பிணத்து எயிறுமிறை யாகத்
திரிந்த வாய்வாள் திருத்தாத்
தனக்குஇரிந் தானைப் பெயர்புற நகுமே." (புறம். உஅச)

இத்துணையும் கூறப்பட்டது வஞ்சி-

"உரவரும் மடவரும் அறிவுதெரிந்து எண்ணி
அறிந்தனை அருளாய் ஆயின்
யாரிவண் நெடுந்தகை வாழு மோரே" (பதிற்றுப். எக)

என்பதும் இதன்கண் அடங்கும். இது முதுமொழி வஞ்சி.

கழி பெருஞ் சிறப்பின் பதின்மூன்று துறை - மிகப் பெருஞ் சிறப்பையுடைய பதின் மூன்று துறைத்தாம்.

வென்றோர் விளக்கம் முதலிய மூன்றும் ஒழிந்த ஏனையவெல்லாம் இரு திறத்தினர்க்கும் பொதுவாக நிற்றலின் கழிபெருஞ் சிறப்பெனக் கூறினர். இன்னும் "கழிபெருஞ்சிறப்பின்" என்றமையின், பேரரசர் துணையாக வந்த குறுநில மன்னரும் தாமும் பொலிவெய்திப் பாசறை நிலை உரைத்தலும் பிறவும் கொள்க. இவைபற்றியன துணைவஞ்சி. "நீயே புறவின் அல்லல்" (புறம். சக) "வள்ளியோர்ப் படர்ந்து" (புறம். சஎ) என்னும் புறப்பாட்டுக்களில் காண்க. பிறவும் அன்ன. (எ)

கூகூ. *உழிஞை தானே மருதத்துப் புறனே
முழுமுதல் அரணம் முற்றலும் கோடலும்
†அனைநெறி மரபிற்று ஆகும் என்ப.

இஃது, உழிஞைத்திணை யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) உழிஞை மருதத்துப் புறன் - உழிஞை என்னும் புறத்திணை மருதம் என்னும் அகத்திணைக்குப் புறனும், முழு முதல் அரணம் முற்றலும் கோடலும் அனைநெறி மரபிற்று ஆகும்- அது முழுமுதல் அரணம் முற்றுதலும் அழித்தலுமாய் வருந் தன்மைத்தாகிய நெறியை மரபாக உடைத்து.

---

*உழிஞை .....புறனே. (க) முழுமுதல்......என்ப. (கo) என, இதனை இரண்டு சூத்திரம் ஆக்குவர். (நச்சி.)

(பாடம்) †பன்னெறி.

'முதல் அரணம்' என்றதனுன் தலையும் இடையும் கடையும் என மூவகைப் படுமவற்றுள் தலையரண். அஃதாவது, அரணிற்குக் கூறுகின்ற இலக்கணம் பலவும் உடைத்தாதல். மருதத்திற்கு இது புறனாயவாறு என்னையெனின், வஞ்சியிற் சென்ற வேந்தனொடு போர்செய்தல் ஆற்றுது உடைந்து மாற்றுவேந்தன் அரண் வலியாகப் போர் செய்யுமாகலானும், அவர் நாட்டகத்தாகலானும், அவ்வழிப் பொருவார்க்கு விடியற்பொழுது காலமாகலானும் அதற்கு இது புறனாயிற்று. நாட்டெல்லையின் அழிப்பு உழிஞையாகுமோ எனின், அது பெரிதாயின் அதன் பாற்படும்; சிறிதாயின் வெட்சியுள் ஓதின ஊர்கொலை [புறத்திணை. ௯] யுள் அடங்கும். (அ)

கூஎ. அதுவே தானும் இருநால் வகைத்தே.

இஃது, உழிஞைத் திணையை வரையறுத்து உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) *அதுதான் இருநால் வகைத்து - உழிஞைத் துறைதான் எட்டு வகைத்து.*

அவையாமாறு முன்னர்க் காணப்படும். [ஏகாரமும் உம்மையும் அசைகள்.]

கூஅ. கொள்ளார் தேஎங் குறித்த கொற்றமும்
உள்ளியது முடிக்கும் வேந்தனது சிறப்பும்
தொல்லெயிற் றிவர்தலுந் தோலது* பெருக்கமும்
அகத்தோன் செல்வமும் அன்றி முரணிய
புறத்தோன் அணங்கிய பக்கமும் திறப்பட†
ஒருதான் மண்டிய குறுமையும் உடன்றோர்
வருபகை பேணார் ஆரெயில் உளப்படச்
சொல்லப் பட்ட நாலிரு வகைத்தே.

இதுவும் உழிஞை யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) *கொள்ளார் தேஎம் குறித்த கொற்றம் முதலாகச் சொல்லப்பட்டன உழிஞைத் துறையாம்.*

கொள்ளார் தேஎம் குறித்த கொற்றமும்-பகைவரது தேயத்தைக் கொள்ளக் குறித்த கொற்றமும். [கொள்ளார் - தன்னை இறையெனக் கொள்ளாரும் தன் ஆணையைக் கொள்ளாரும்‡.]

## உதாரணம்

"ஆனு ஈகை அடுபோர் அண்ணல்நின்
யானையும் மலையின் தோன்றும் பெருமநின்
தானையுங் கடலென முழங்கும் கூர் நுனை§
வேலும் மின்னின் விளங்கும் உலகத்து\$

(பாடம்) *தொல் எயிற்கு இவர்தலும் தோலின். †திறப்பட.
‡தன்னை இகழ்ந்தோரையும் தான் இகழ்ந்தோரையும் கொள்ளார் என்ப. (நச்சி.)
(பாடம்) § கடலின் ஒலிக்கும் வைந்நுதி. \$ ஞாலத்து.

அரைசுதலை பனிக்கும் ஆற்றலை யாதலின்
புரைதீர்ந்து அன்றது புதுவதோ அன்றே
தண்புனல் பூசல் அல்லது நொந்து
களைக வாழி வளவ என்றுநின்
முனைதரு பூசல் கனவினும் அறியாது
புலிபுறங் காக்குங் குருளை போல
மெலிவில் செங்கோல் நீபுறங் காப்பப்
பெருவிறல் யாணர்த் தாகி அரிநர்
கீழ்மடைக் கொண்ட வாளையும் உழவர்
படைமிளிர்ந் திட்ட யாமையும் அறைநர்
கரும்பில் கொண்ட தேனும் பெருந்துறை
நீர்தரு மகளிர் குற்ற குவளையும்
வன்புலக் கேளிர்க்கு வருவிருந்து அயரும்*
மென்புல வைப்பின் நன்னாட்டுப் பொருந
மலையின் இழிந்து மாக்கடல் நோக்கி
நிலவரை இழிதரும் பல்யாறு போலப்
புலவர் எல்லாம் நின்நோக் கினரே
நீயே, மருந்தில் கணிச்சி வருந்தவட் டித்துக்
கூற்று வெகுண்டுஅன்ன முன்பொடு
மாற்று இரு வேந்தர் மண்நோக் கினையே." (புறம். சஉ)

உள்ளியது முடிக்கும் வேந்தனது சிறப்பும் • நினைத்தது முடிக்கலாகும் வேந்தனது சிறப்பும்.

## உதாரணம்

"அடுநை ஆயினும் விடுநை ஆயினும்
நீஅளந்து அறிதி† நின் புரைமை வார்கோல்
செறியரிச் சிலம்பில் குறுந்தொடி மகளிர்
பொலஞ்செய் கழங்கின் தெற்றி ஆடும்
தண்ஆன் பொருநை வெண்மணல் சிதையக்
கருங்கைக் கொல்லன் அரஞ்செய் அவ்வாய்
நெடுங்கை நவியம் பாய்தலின் நிலையழிந்து
வீகமழ் நெடுஞ்சினை புலம்பக் காவுதொறும்
கடிமரந் தடியும் ஓசை தன்னூர்
நெடுமதில் வரைப்பின் கடிமனை இயம்ப
ஆங்கினிது இருந்த வேந்தனொடு ஈங்குநின்
சிலைத்தார் முரசம் கறங்க
மலைத்தனை என்பது நாணுத்தகவு உடைத்தே." (புறம். கூசு)

இன்னும் 'உள்ளியது முடிக்கும் வேந்தனது சிறப்பும்' என்றதனால் அகத்தரசனை அழித்தது கூறலும் கொள்க.

## உதாரணம்

"இரும்பிடித் தொழுதியொடு பெருங்கயம் படியா
நெல்லுடைக் கவளமொடு நெய்ம்மிதி பெறுஅ
திருந்தரை நோன்வெளில் வருந்த ஒற்றி
நிலமிசைப் புரளும் கையவெய் துயிர்த்து

(பாடம்) * அமரும். † தறிவை.

அலமரல் யானை உருமென முழங்கவும்
பாலில் குழவி அலறவும் மகளிர்
பூவில் வறுந்தலை முடிப்பவும் நீரில்
வினைபுனை நல்லில் இனைகூஉக் கேட்பவும்
இன்னாது அம்ம ஈங்கினிது* இருத்தல்
துன்னருந் துப்பின் வயமான் தோன்றல்
அறவை ஆயின் நினதெனத் திறத்தல்
மறவை ஆயின் போரொடு திறத்தல்
அறவையும் மறவையும் அல்லை யாகத்†
திறவா தடைத்த திண்ணிலைக் கதவின்
நீள்மதில் ஒருசிறை ஒடுங்குதல்
நாணுத்தகவு உடைத்திது காணுங் காலே." (புறம். ௪௪)

தொல் எயிற்று இவர்தலும்‡-தொல் எயிலின்கண் பரத்தலும்.

## உதாரணம்

"புல்லார் புகழொடு போக்கொழியப் பொங்கினனாய்ப்
பல்லார் மருளப் படைபரப்பி—ஒல்லார்
நிறத்திறுத்த வாள்தானை நேரார் மதிலின்
புறத்திறுத்தான் பூங்கழலி னான்." (புறப். உழிஞை. ௯௦)

தோலது பெருக்கமும் - தோற்படையினது பெருமையும்.

## உதாரணம்

"நின்ற புகழொழிய நில்லா உயிரோம்பி
இன்றுநாம் வைகல் இழிவாகும்—வென்றொளிரும்
பாண்டில் நிரைதோல் பணியார் பகைஅரணம்
வேண்டில் எளிதென்றான் வேந்து." (புறப். உழிஞை.௧௨)

அகத்தோன் செல்வமும்-அகத்தரசனது செல்வமும்.

## உதாரணம்

"அளிதோ தானே பாரியது பறம்பே
நளிகொள் முரசின் மூவிரும் முற்றினும்
உழவர் உழாதன நான்குபயன் உடைத்தே
ஒன்றே, சிறியிலை§ வெதிரின் நெல்விளை யும்மே
இரண்டே, தீஞ்சுளைப் பலவின் பழம்ஊழ்க் கும்மே
மூன்றே, கொழுங்கொடி வள்ளிக் கிழங்குவீழ்க் கும்மே
நான்கே, அணிநிற ஓரி பாய்தலின் மீதழிந்து
திணிநெடுங் குன்றம் தேன்சொரி யும்மே
வான்கண் அற்றவன் மலையே வானத்து
மீன்கண் அற்றதன் சுனையே ஆங்கு
மரந்தொறும் பிணித்த களிற்றினிர் ஆயினும்
புலந்தொறும் பரப்பிய தேரினிர் ஆயினும்
தாளில் கொள்ளலிர் வாளில் தாரலன்

---

(பாடம்) * ஈண்டினி. † யாகித்.
‡ இவர்தலும்-விருப்பஞ் செய்தலும். (நச்சி.)
(பாடம்) § செறியிலை.

யானறி குவனது கொள்ளும் ஆறே
சுகிர்புரி நரம்பின் சீறியாழ் பண்ணி
விரைஒலி கூந்தல்நும் விறலியர் பின்வர
ஆடினிர் பாடினிர் செலினே
நாடும் குன்றும் ஒருங்கீ யும்மே." (புறம். கOகூ)

அன்றி முரணிய புறத்தோன் அணங்கிய பக்கமும் - அன்றியும் பகைத்த புறத்தரசன் வருத்திய பக்கமும்.*

## உதாரணம்

"நஞ்சுடை வாலெயிற்று ஐந்தலை சுமந்த
வேக வெந்திறல் நாகம் புக்கென
விசும்புதீப் பிறப்பத் திருகிப் பசுங்கொடிப்
பெருமலை விடரகத் துரும்எறிந் தாங்குப்
புள்ளுறு புன்கண் தீர்த்த வெள்வேல்
சினங்கெழு தானைச் செம்பியன் மருக
கராஅங் கலித்த குண்டுகண் அகழி
இடங்கருங் குட்டத் துடன்தொக் கோடி
யாமங் கொள்பவர் சுடர்நிழற் கதூஉங்
கடுமுரண் முதலைய நெடுநீர் இலஞ்சிச்
செம்புறழ் புரிசைச் செம்மல் மூதூர்
வம்பணி யானை வேந்தகத்து உண்மையின்
நல்லஎன் றாது சிதைத்தல்
வல்லையால் நெடுந்தகை செருவத் தானே." (புறம். கூஎ)

திறப்பட ஒருதான் மண்டிய குறுமையும்-வலிபட ஒரு தானாகிச் சென்ற குற்றுழிஞையும்.

## உதாரணம்

"கிண்கிணி களைந்தகால் ஒண்கழல் தொட்டுக்
குடுமி களைந்தநுதல் வேம்பின்† ஒண்டளிர்
நெடுங்கொடி உழிஞைப் பவரொடு மலைந்து
குறுந்தொடி கழித்தகைச் சாபம் பற்றி
நெடுந்தேர்க் கொடிஞ்சி பொலிய நின்றோன்
யார்கொல் வாழ்க அவன்‡ கண்ணி தார்பூண்டு
தாலி களைந்தன்றும் இலனே பால்விட்டு
அயினியும் இன்றயின் றனனே வயின்வயின்
உடன்றுமேல் வந்த வம்ப மள்ளரை
வியந்தன்றும் இழிந்தன்றும் இலனே அவரை
அழுந்தப் பற்றி அகல்விசும்பு ஆர்ப்பெழக்
கவிழ்ந்துநிலஞ் சேர அட்டதை
மகிழ்ந்தன்றும் மலிந்தன்றும் அதனினும் இலனே." (புறம். எஎ)

உடன்றோர் வருபகை பேணார் ஆரெயில்§ - வெகுண்டு வருகின்ற படையைப் பேணார் ஆரெயில் உழிஞையும்.

---

* அணங்கிய பக்கமும் - வருத்திய கூறலும். (நச்சி.)

(பாடம்) † களைந்த வேம்பின். § வாழ்கவண்: ‡ வாரெயில்.

## உதாரணம்

"மயிற்கணத்து அன்னர் மகிழ்தேறல் ஊட்டக்
கயிற்கழலார் கண்கனல் பூப்ப—எயிற்கண்ணார்
வியப்போர் செய்தாலும் வென்றி அரிதரோ
மாயப்போர் மன்னன் மதில்" (புறப். உழிஞை.கக)

உளப்பட சொல்லப்பட்ட நாலிரு வகைத்து* - உட்படக் கூறப்பட்ட எட்டு வகைத்து.

பதினெட்டு, இருபத்தொன்பது என்பார் மதம் விலக்கியமை தோன்றப் பெயர்த்துந் தொகை கூறினர். இது கூறியது கூறலன்று; தொகை. (௪0)

ஞகூ. குடையும் வாளும் நாள்கோள் அன்றி
மடையமை ஏணிமிசை மயக்கமுங் கடைஇச்
சுற்றமர் ஒழிய வென்றுகைக் கொண்டு
முற்றிய முதிர்வும் அன்றி முற்றிய
அகத்தோன் வீழ்ந்த நொச்சியும் மற்றதன்
புறத்தோன் வீழ்ந்த புதுமை யானும்
நீர்ச்செரு வீழ்ந்த பாசியும் அதாஅன்று
ஊர்ச்செரு வீழ்ந்த மற்றதன் மறனும்
மதில்மிசைக் கிவர்ந்த மேலோர் பக்கமும்
இகல்மதிற்† குடுமிகொண்ட மண்ணு மங்கலமும்
வென்ற வாளின் மண்ணோடு ஒன்றத்
தொகைநிலை என்னுந் துறையொடு தொகைஇ
வகைநான் மூன்றே துறையென மொழிப.

இதுவும் அது.

(இ - ள்.) குடை நாட்கோள் முதலாகச் சொல்லப்பட்டுள்ள பன்னிரண்டு துறையும் உழிஞைக்குரிய துறை, மேற்சொல்லப்பட்டவற்றின் விரியும் பன்னிரண்டு உள என்றவாறு.

---

* முற்கூறிய தொகையேயன்றி ஈண்டுந் தொகை கூறினர். அந் நாலிரண்டுமேயன்றி அவை போல்வனவும் நாலிரண்டு துறை தோன்றும் என்றற்கு. அவை புறத்து வேந்தன் தன் துணையாகிய அரசனையாயினும், தன் படைத் தலைவரையாயினும் ஏவி அகத்து வேந்தற்குத் துணையாகிய அரசரது முழுமுதலரண் முற்றலும் அவன் அதனைக் காவல் கோடலும் நிகழ்ந்த இடத்தும் இவ்விருநான்கு வகையும் இருவர்க்கும் உளவாதலாம். (தொல். புறம்-௬எ) (நச்சி.)

(பாடம்) † மகமிசைக் கிவர்ந்தோன் பக்கமும் இகன்மதில்.

குடையும் வாளும் நாள்கோள்*-குடைநாட்கோள் வாள்நாட்கோள் என வருவனவும்.

உதாரணம்

"நெய்யணிக செவ்வேல் நெடுந்தேர் நிலைபுகுக
கொய்யுளைமா கொல்களிறு பண்விடுக—வையகத்து
முற்றக் கடியரணம் எல்லா முரண்அவிந்த
கொற்றக் குடைநாட் கொள." (புறப். உழிஞை. உ)

இது குடைநாட்கோள்.

"வாளுநாட் கொளலும் வழிமொழிந்து வந்தடையாப்
பேணார் பிறைதொடூஉம் பேர்மதில்—பூணார்
அணிகொள் வன்முலையார் ஆடரங்கம் ஏறிப்
பிணிகொள்பே யாடும் பெயர்த்து." (புறப். உழிஞை. ௩)

இது வாள்நாட்கோள்.

மடைஅமை ஏணி மிசை மயக்கமும்-மதிலிடத்து மடுத்தல் அமைந்த ஏணிசார்த்தி அதன்மேல் பொரும் போர்மயக்கமும்.

உதாரணம்

"சுடுமண் நெடுமதில் சுற்றிப் பிரியார்
கடுமுரண் எஃகங் கழிய—அடுமுரண்
ஆறினர் அன்றி அரவும் உடும்பும்போல்
ஏறினர் ஏணி பலர்." (புறப். உழிஞை. கக)

கடைஇச் சுற்றமர் ஒழிய வென்று கைக்கொண்டு முற்றிய முதிர்வும்-செலுத்திச் சுற்றமர் ஒழிக என்று கைக்கொண்டு முற்றிய முதிர்வும்.

உதாரணம்

"காலை முரசம் மதிலியம்பக் கண்கனன்று
வேலை விறல்வெய்யோன் நோக்குதலும்—மாலை
அடுதும் அடிசிலென்று அம்மதிலுள் இட்டார்
தொடுகழலார் மூழை துடுப்பு." (புறப். உழிஞை. உ௩)

முற்றிய அகத்தோன் வீழ்ந்த நொச்சியும்† - முற்ற அகப்பட்ட அகத்தி னுள்ளான் வீழ்ந்த நொச்சியும்.

உதாரணம்

"நீரறவு அறியா நிலமுதற் கலந்த‡
கருங்குரல்§ நொச்சிக் கண்ணார் குரூஉத்தழை
மெல்லிழை$ மகளிர் ஐதகல் அல்குல்
தொடலை யாகவுங் கண்டனம் இனியே

---

* நாள் கொளலாவது நாளும் ஓரையும் தனக்கு ஏற்பக்கொண்டு செல்லுழி, அக்காலத்திற்கு ஓர் இடையூறு தோன்றியவழித் தனக்கு இன்றியமையாதனவற்றை அத்திசை நோக்கி அக்காலத்தே முன்னே செல்லவிடுதல் (தொல். புறம். கஅ.) (நச்சி.)

† நொச்சியும் மதிலைக்காத்தலும், உள்ளத்தைக்காத்தலும். (நச்சி.) (பாடம்) ‡ கழித்த. § கருங்கால். $ மெல்லியல்.

வெருவரு குருதியொடு மயங்கி உருவுகரந்து
தொறுவாய்ப் பட்ட தெரியலூன் செத்துப்
பருந்துகொண் டுகப்பயாம் கண்டனம்
மறம்புகல் மைந்தன் மலைந்த மாறே.'' (புறம். உஎக)

அதன் புறத்தோன் வீழ்ந்த புதுமையும்-நொச்சியின் புறத்தாகிய உழிஞையான் வீழ்ந்த புதுமையும். ['மற்று' என்பது அசை. 'ஆன்' என்பது இடைச்சொல்.]

## உதாரணம்

''கோடுயர் வெற்பில் நிலங்கண் டிரைகருதுந்
தோடுகொள் புள்ளின் தொகையொப்பக்—கூடார்
முரணகத்துப் பாற முழவுத்தோள் மள்ளர்
அரணகத்துப் பாய்ந்திழிந்தார் ஆர்த்து.''
(புறப். உழிஞை. உ0)

நீர்ச்செரு வீழ்ந்த பாசியும் - கிடங்கின் உளதாய போரின்கண்ணே வீழ்ந்த பாசியும்.

## உதாரணம்

''நாவாயும் தோணியும் மேல்கொண்டு நண்ணுதார்*
ஓவார் விலங்கி உடலவும்—பூவார்
அகழி பரந்தொழுகும் அங்குருதிச் சேற்றுப்
பகழிவாய் வீழ்ந்தார் பலர்.'' (புறப். உழிஞை. கஎ)

அஃது அன்று ஊர்ச்செரு வீழ்ந்த அதன் மறனும் - அஃது ஒழிய ஊர்ச்செருவின்கண் வீழ்ந்த பாசிமறனும்? ['மற்று' என்பது அசை.]

## உதாரணம்

''பாயினர் மாயும் வகையாற் பலகாப்பும்
ஏயினர் ஏய இகல்மறவர்—ஆயினர்
ஒன்றி யவரற ஊர்ப்புறத்துத் தார்தாங்கி
வென்றி அமரர் விருந்து'' (புறப். நொச்சி. உ)

மதில்மிசைக்கு இவர்ந்த மேலோர்பக்கமும்-மதின்மேற்கோடற்குப் பரந்த மதிலோர் பக்கமும்.

## உதாரணம்

''அகத்தன வார்கழல் நோன்தாள் அரணின்
புறத்தன போரெழில் திண்தோள் உறத்தழீஇத்
தோட்குரிமை பெற்ற துணைவளையார் பாராட்ட
வாட்குரிசில் வானுலகி னன்.'' (புறப். நொச்சி. எ)

இகல் மதில் குடுமி கொண்ட மண்ணு மங்கலமும்-தம்முடன் இகலி மதில்மேல் நின்றானை அட்டு அவன் முடிக்கலங் கொண்ட மண்ணு மங்கலமும்.

## உதாரணம்

''எங்கண் மலர எயிற்குமரி கூடிய
மங்கல நாள்யாம் மகிழ்தூங்க—கொங்கலர்தார்ச்
செய்சுடர்பூண் மன்னவன் சேவடிக்கீழ் வைகினவே
மொய்சுடர்ப்பூண் மன்னர் முடி.'' (புறப். உழிஞை. உஅ)

---

(பாடம்) * நள்ளாதார்.

வென்ற வாளின் மண்ணோடு ஒன்ற - வென்ற வாளின் மண்ணு மங்கலமும் பொருந்த.

### உதாரணம்

"தீர்த்தநீர் பூவொடு பெய்து திசைவிளங்கக்
கூர்த்தவாள் மண்ணிக் கொடித்தேரான்—பேர்த்தும்
இடியார் பணைதுவைப்ப இம்மதிலுள் வேட்டான்
புடையார் அடையப் புகழ்." (புறப். உழிஞை. ௨௭)

தொகைநிலை-அம்மதிலழித்தமையான் மற்றுள்ள மதில்கள்வரைப் பில் மாறுபட்ட வேந்தரும் முரண் அவிந்தபடி யடைதல்.

### உதாரணம்

"வென்றுகலந் தரீஇயர் வேண்டுபுலத் திறுத்தவர்
வாடா யாணர் நாடுதிறை கொடுப்ப
நல்கினை யாகுமதி எம்மென் றருளிக்
கலம்பிறங்கு* வைப்பிற் கடற்றிரை யாத்தநின்
தொல்புகழ் மூதூர்ச் செல்குவை யாயின்
செம்பொறிச் சிலம்பொ டணித்தழை தூங்கும்
எந்திரத் தகைப்பின் அம்புடை வாயிற்
கோள்வல் முதலைய குண்டுகண் அகழி
வானுற ஓங்கிய வளைந்துசெய் புரிசை
ஒன்னாத் தெவ்வர் முனைகெட விலங்கி
நின்னில் தந்த மன்னெயில் அல்லது
முன்னும் பின்னுநின் முன்னோர் ஓம்பிய
எயில்முகப் படுத்தல் யாவது வளையினும்
பிறிதாறு செல்மதி சினங்கெழு குரிசில்
எழூஉப்புறந் தரீஇப் பொன்பிணிப் பலகைக்
குழூஉநிலைப் புதவிற் கதவுமெய் காணின்
தேம்பாய் கடத்தொடு† காழ்கை நீவி
வேங்கை வென்ற பொறிகிளர் புகர்நுதல்
ஏந்துகை சுருட்டித் தோட்டி நீவி
மேம்படு வெல்கொடி நுடங்கத்
தாங்கல் ஆகா ஆங்குநின் களிறே." (பதிற்றுப். ௫௩)

என்னும் துறையொடு தொகைஇ வகை நால்மூன்று என மொழிப. என்னும் துறையொடு கூடிய உழிஞை வகை பன்னிரண்டு என்று கூறுவர்

௭௦. ‡தும்பை தானே நெய்தலது புறனே
மைந்துபொ ளாக வந்த வேந்தனைச்
சென்றுதலை அழிக்குஞ் சிறப்பிற் றென்ப.

இது, தும்பைத்திணை யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

---

* கல்பிறங்கு. † கடாமொடு.

‡ தும்பை என்பது சூடும் பூவினாற் பெற்ற பெயர். மைந்து பொருளாக என்பதனை வந்த என்பதற்கும் சென்று என்பதற்குங் கூட்டுக. (நச்சி.)

இதனைப் பதினொன்கு பதினைந்தென இரண்டாக்குவர். (நச்சி.)

(இ - ள்.) தும்பை நெய்தலது புறன் - தும்பை என்னும் திணை நெய்தல் என்னும் அகத்திணைக்குப் புறனும், மைந்து பொருளாக வந்த வேந்தனை சென்று தலையழிக்கும் சிறப்பிற்று - அது வலி பொருளாகப் போர்க்கருதி வந்த அரசன்கண் சென்று அவனைத் தலையழிக்கும் சிறப்பினையுடைத்து.

இதனானே "எதிருன்றல் காஞ்சி" (பிங்க. அநுபோக. கஅஎஅ) என்பாரை மறுத்தவாறு அறிக. அதற்கு இது புறனாயவாறு என்னை யெனின், இருபெருவேந்தரும் ஒருகளத்துப் பொருதலின், அதற்கு இடம் காடும் மலையும் கழனியும் ஆகாமையானும், களரும் மணலும் பரந்த வெளி நிலத்துப் பொருதல் வேண்டுதலானும், அந்நிலம் கடல்சார்ந்த வழியல்லது இன்மையானும், நெய்தற்கு ஒதிய ஏற்பாடு போர்த் தொழிற்கு முடிவாதலானும் நெய்தற்குப் புறனாயிற்று. ['என்ப' அசை.] (கஉ)

எக. கணையும் வேலும் துணையுற *மொய்த்தலிற்
சென்ற உயிரின் நின்ற யாக்கை
இருநிலந் தீண்டா அருநிலை வகையோடு
இருபாற் பட்ட ஒருசிறப் பின்றே.

இது, தும்பைத்திணையின் சிறப்பியல் உணர்த்துதல் நுதலிற்று.

இது மேலனபோல ஒருபாற்கு மிகுதலின்றி இருவகையார்க்கும் ஒத்த இயல்பிற்றும்; ஒருவர்மாட்டும் மிகுதல் இல்லை.

(இ - ள்.) கணையும் வேலும் துணையுற மொய்த்தலின் சென்ற உயிரின் நின்ற யாக்கை - கணையும் வேலும் படைத் துணையாக்கொண்டு பொருதல் காரணமாகச் சென்ற உயிரின் நின்ற யாக்கை, இருநிலம் தீண்டா அருநிலை வகையொடு - நீர் அட்டை காலவயப்பட்டு உடலினின்று உயிர் பிரிக்கப்படுமாறு, இருபால் பட்ட ஒரு சிறப்பின்று - இருபாற் படுக்கப்படும் அற்ற துண்டம் இணைந்தது போன்று ஆடலொத்த பண்பினையுடையது.

[இருநிலம் தீண்டா அரு - நீருட் கிடக்கும் அட்டை.] (கக)

எஉ. †தானை யானை குதிரை என்ற
நோனார் உட்கும் மூவகை நிலையும்
வேல்மிகு வேந்தனை மொய்த்தவழி ஒருவன்
தான்மீண்டு எறிந்த தார்நிலை அன்றியும்

---

*மொய்த்தலின் என்றது யாக்கை அற்று ஆடவேண்டுதலின் கணையும் வேலும் அன்றி வாள் முதலியன ஏதுவாகக் கொள்க. பிற்கூறிய தற்கு அட்டை அற்றுழியும் ஊருமாறுபோல் அலிகன்இற அற்றுழியும் உடம்பு ஆடுதலின் அட்டையாடல் எனவும் இதனைக் கூறுப. (நச்சி.)

†துறக்கம்புகு வேட்கையுடைமையிற் காலாளை முற்கூறி அதன் பின்னர் மதத்தால் கதம்சிறந்து தானும் போர்செய்யும் யானையைக்கூறி, மதம் சிறவாமையிற் கதம் சிறவாத குதிரையை அதன்பிற் கூறினர்.

இருவர் தலைவர் தபுதிப் பக்கமும்
ஒருவன் ஒருவனை உடைபடை புக்குக்
கூழை தாங்கிய பெருமையும் *படையறுத்துப்
பாழி கொள்ளும் ஏமத் தானும்
களிறெறிந் தெதிர்ந்தோர் பாடுங் களிற்றொடு
பட்ட வேந்தனை அட்ட வேந்தன்
வாளோர் ஆடும் அமலையும் வாள்வாய்த்து
இருபெரு வேந்தர் தாமுஞ் சுற்றமும்
ஒருவரும் ஒழியாத் தொகைநிலைக் கண்ணும்
செருவகத்து இறைவன் வீழ்வுறச்† சினைஇ
ஒருவனை‡ மண்டிய நல்லிசை நிலையும்
பல்படை ஒருவற்கு உடைதலின் மற்றவன்
ஒள்வாள் வீசிய நூழிலும் உளப்படப்
புல்லித் தோன்றும் பன்னிரு துறைத்தே.

இஃது தும்பைத்திணை பாகுபடுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) *நோனார் உட்கும் தானை யானை குதிரை என்ற மூவகை நிலையும் - பகைவரால் உட்கப்படுகின்ற தானையும் யானையும் குதிரையுமாகிய மூவகைப்பட்டவற்றினது நிலையும்.*

*தானை நிலை வருமாறு*

"வெண்குடை மதியம் மேல்நிலாத் திகழ்தரக்
கண்கூடு இறுத்த கடன்மருள் பாசறைக்
குமரிப்படை தழீஇய§ கூற்றுவினை ஆடவர்
தமர்பிறர் அறியா அமர்மயங்கு அழுவத்து
இறையும் பெயருந் தோற்றின் நுமருள்
நாண்முறை தபுத்தீர் வம்மின் ஈங்கெனப்
போர்மலைந்து ஒருசிறை நிற்ப யாவரும்
அரவுமிழ் மணியிற் குறுகார்
நிறைதார் மார்பினின் கேள்வனைப் பிறரே." (புறம். உகச)

"கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்." (குறள். எஎச)

---

குதிரையானன்றித் தேர் செல்லாமையின் தேர்க்கு மறமின்றென்று அது கூறாராயினர்.

நிலை என்னுது வகை என்றதனுன் அம்மூன்று நிலையும் தாமே மறம் சிறப்பப் பொருது வீழ்தலும், அரசன் ஏவலில் தானைபொருது வீழ்தலும், யானையுங் குதிரையும் ஊர்ந்தார் ஏவலில் பொருதலும், படையாளர் ஒருவர் ஒருவர் நிலை கூறலும், அவருக்கு உதவலும் என இப் பகுதியெல்லாம் கொள்க. (நச்சி.)

(பாடம்) *எருமையும். †வீழ்ந்தெனச். ‡ஒருவன். §தழீஇக்.

"நறுவிரை துறந்த நரைவெண் கூந்தல்
இரங்காழ்* அன்ன திரங்குகண் வறுமுலைச்
செம்முது பெண்டின் காதலஞ் சிறுஅன்
மடப்பால் ஆய்மகள் வள்ளுகிர்த் தெறித்த
குடப்பால் சில்லுறை போலப்
படைக்குநோய் எல்லாந் தானு யினனே." (புறம். உஎசு)

"தற்கொள் பெருவிறல் வேந்துவப்பத் தானவற்கு
ஒற்கத்து உலந்தானும் ஆகுமால் பின்பின்
பலர்புகழ் செல்வம் தருஉம்பற் பலர்தொழ
வானக வாழ்க்கையும் ஈயுமால் அன்னதோர்
மேன்மை இழப்பப் பழிவருவ செய்பவோ
தானேயும் போகும் உயிர்க்கு."

இஃது ஒரு வீரன் கூற்று.

யானை நிலை வருமாறு

"கையொடு கையோடு ஒருதுணி கோட்டது
மொய்யிலைவேல் மன்னர் முடித்தலை—பைய
உயர்பொய்கை நீராட்டிச் செல்லுமே அங்கோர்
வயவெம்போர் மாண்ட களிறு."

குதிரை நிலை வருமாறு

"நிலம்பிறக் கிடுவது போற்குளம்பு கடையூஉ
உள்ளம் ஒழிக்கும்† கொட்பின் மான்மேல்
எள்ளுநர்ச் செகுக்குங் காளை கூர்த்த
வெந்திறல் எஃகம்‡ நெஞ்சுவடு விளைப்ப
ஆட்டிக் காணிய வருமே நெருநை
உரைசால் சிறப்பின் வேந்தன் முன்னர்க்
கரைபொரு முந்நீர்த்§ திமிலிற்$ போழ்ந்தவர்
கயந்தலை மடப்பிடி புலம்ப
இலங்குமருப்பு யானை எறிந்த எற்கே." (புறம். கoஅ)

வேல்மிகு வேந்தனை மொய்த்தவழி ஒருவன் தான்மீண்டு எறிந்த தார் நிலையும் வேல்வென்றி மிகலையே கண்ணோக்குடையனுய்க் களத்து முகப்பிற் சென்ற வேந்தனை மாற்றார் சூழ்ந்த இடத்து வேந்தன் பாலினனாய மற்றொரு தலைவன் தன்நிலை விட்டுத் தன்வேந்துமாட்டு அடுத்துத் துணையாய் மாற்றாரை எறிந்த தார்நிலையும்.

உதாரணம்

"நிரப்பாது கொடுக்கும் செல்வமும் இலனே
இல்லென மறுக்கும் சிறுமையும் இலனே
இறையுறு விழுமம் தாங்கி அமரகத்து
இரும்புசுவைக் கொண்ட விழுப்புண்நோய் தீர்ந்து
மருந்துகொள் மரத்தின் வாள்வடு மயங்கி
வடுவின்று வடிந்த யாக்கையன் கொடையெதிர்ந்து
ஈர்ந்தை¶ யோனே பாண்பசிப் பகைஞன்" (புறம்.கஅo)

எனப் பாணன் அது தோன்றப் புகழ்ந்தவாறு காண்க.

(பாடம்) * ஈர்ங்காழ். † அழிக்கும். ‡ நெடுவேல்.
§ முன்னீர்த். $ திறையிற். ¶ஈரந்தை.

அன்றி இருவர் தலைவர் தபுதி பக்கமும்-அஃதல்லாமல் படைநின்று பொராநின்ற இருவரும் தம்முள் பொருது படுதலும்.

## உதாரணம்

"காய்ந்து கடுங்களிறு கண்கனலக் கைகூடி
வேந்தர் இருவரும் விண்படர—ஏந்து
பொருபடை மின்னப் புறக்கொடா பொங்கி
இருபடையும் நீங்கா இகல்." (புறப்- தும்பை. ௯௨)

ஒருவன் ஒருவனை உடைபடை புக்கு கூழை தாங்கிய பெருமையும்-ஒருவன் ஒருவனைக் கெடுபடையின்கண் புக்குக் கூழை தாங்கிய பெருமையும்.

## உதாரணம்

"கோட்டங் கண்ணியும் கொடுந்திரை ஆடையும்
வேட்டது சொல்லி வேந்தனைத் தொடுத்தலும்
ஒத்தன்று மாதோ இவற்கே செற்றிய
திணிநிலை அலறக் கூழை போழ்ந்துதன்
வடிமாண் எஃகம் கடிமுகத்து ஏந்தி
ஓம்புமின் ஓம்புமின் இவணென ஓம்பாது
தொடர்கொள் யானையிற் குடர்கால் தட்பக்
கன்றமர் கறவை மான
முன்சமத்து எதிர்ந்ததன்* தோழற்கு வருமே." (புறம். உ௭௫)

படை அறுத்து பாழிகொள்ளும் ஏமமும் - கருவியை அறுத்து மல்லினால் கொள்ளும் ஏமமும். [அத்தும் ஆனும் சாரியை.]

## உதாரணம்

"நீலக் கச்சைப் பூவார் ஆடைப்
பீலிக் கண்ணிப் பெருந்தகை மறவன்
மேல்வருங் களிற்றொடு வேல்துரந்து இனியே
தன்னுந் துரக்குவன் போலும் ஒன்னலர்
எஃகுடை வலத்தர் மாவொடு பரத்தரக்
கையின் வாங்கித் தழீஇ
மொய்ம்பின் ஊக்கி மெய்க்கொண் டனனே." (புறம். உ௭௪)

களிறு எறிந்து எதிர்ந்தோர் பாடும்-களிறு எறிந்து எதிர்ந்தோர் பாடும்.

## உதாரணம்

"ஆசாகு† எந்தை யாண்டுளன் கொல்லோ
குன்றத்து அன்ன களிற்றொடு பட்டோன்
வம்பலன் போலத் தோன்றும் உதுக்காண்
வேனல்‡ வரியணில் வாலத்து அன்ன
கான ஊகின் கழன்றுகு முதுவீ
அரியல்§ வான்குழல் சுரியல் தங்க
நீரும் புல்லும் ஈயாது உமணர்
யாருமில் ஒருசிறை முடத்தொடு துறந்த

(பாடம்) *ஒழிந்ததன். †அரசா. ‡வேனில், வெரிநில்.
§விரியல்.

வாழா வான்கடு ஏய்ப்பத் தெறுவர்*
பேருயிர் கொள்ளும் மாதோ அதுகண்டு
வெஞ்சின யானை வேந்தனும் இக்களத்து
எஞ்சலிற் சிறந்தது பிறிதொன்று இல்லெனப்
புணர்கொளற்கு அருமை நோக்கி
நெஞ்சற வீழ்ந்த புரைமை யோனே." (புறம். கடOஎ)

களிற்றொடு பட்ட வேந்தனை அட்ட வேந்தன் வாளோர் ஆடும் அமலையும்-களிற்றுடன் போந்து மலைந்துபட்ட இறைவனை மிக்க வேந்தன் படையாளர் நெருங்கி மற்றவனைப் பாடும் பாட்டும்.

அமல்-நெருங்கல். அதனலாய பாட்டுக்கு ஏற்புடைத்தாயிற்று

## உதாரணம்

"விழவுவீற் றிருந்த வியலுள்† ஆங்கண்
கோடியர் முழவின் முன்னர் ஆடல்
வல்லான் அல்லன் வாழ்கவன்‡ கண்ணி
வலம்படு முரசந் துவைப்ப வாளுயர்த்து
இலங்கு பூணன் பொலங்கொடி உழிஞையன்
மடம்பெரு மையின் உடன்றுமேல் வந்த
வேந்துமெய்ம் மறந்த வாழ்ச்சி
வீந்துகு போர்க்களத் தாடுங் கோவே." (பதிற்றுப். ருசு,

## உதாரணம்

வாள் வாய்த்து இருபெரு வேந்தர் தாமும் சுற்றமும் ஒருவரும் ஒழியா தொகைநிலையும்-வாள்தொழில் முற்றி இரு பெருவேந்தர் தாமும் சுற்றமும் ஒருவரும் ஒழியாமல் பட்டபாடும். ['கண்' என்பது இடைச் சொல்.]

"வருதார் தாங்கி அமர்மிகல் யாவது
பொருதாண்டு ஒழிந்த மைந்தர்புண் தொட்டுக்
குருதிச் செங்கைக் கூந்தல் தீட்டி
நிறங்கிளர் உருவில் பேஎய்ப் பெண்டிர்
எடுத்தெறி அனந்தல் பறைச்சீர் தூங்கப்
பருந்தருந்து உற்ற தானையொடு செருமுனிந்து
அறத்தின் மண்டிய மறப்போர் வேந்தர்
தாமாய்ந் தனரே குடைதுளங் கினவே
உரைசால் சிறப்பின் முரைசொழிந் தனவே
பன்னூ றடுக்கிய வேறுபடு பைஞ்ஞிலம்
இடங்கெட ஈண்டிய வியன்கண் பாசறைக்
களங்கொளற்கு உரியோர் இன்றித் தெறுவர
உடன்வீழ்ந் தன்றால் அமரே பெண்டிரும்
பாசடகு மிசையார் பனிநீர் மூழ்கார்
மார்பகம் பொருந்தி ஆங்கமைந் தனரே
வாடாப் பூவின் இமையா நாட்டத்து
நாற்ற உணவி னோரும் ஆற்ற
அரும்பெறல் உலகம் நிறைய
விருந்துபெற் றனரால் பொலிகநும் புகழே." (புறம். கஉ)

(பாடம்) *தெவ்வர்ப். †வியலூர். ‡வாழ்கவவன்.

செரு அகத்து இறைவன் வீழ்வுறச் சினைஇ ஒருவனை மண்டிய நல்லிசை நிலையும்-பொருகளத்துத் தன்வேந்தன் பட அது கண்டு கறுத்தெழுந்து படைத் தலைவன் வீரனொருவனை நெருங்கிப் பொருத ஒரு நற்புகழ் நிலைமையும்.

## உதாரணம்

"வானம் இறைவன் படர்ந்தென வாள்துடுப்பா
மானமே நெய்யா மறம்விறகாத்—தேன்இமிரும்
கள்ளவிழ் கண்ணிக் கழல்வெய்யோன் வாளமர்!
ஒள்ளழலுள் வேட்டான் உயிர்." (புறப். தும்பை. ௨௬)

பல படை ஒருவற்கு உடைதலின் அவன் ஒள்வாள் வீசிய நூழிலும்-பல படை ஒருவற்குக் கெடுதலின் அவன் ஒள்ளிய வாள் வீசிய நூழிலும் அது பலரைக் கொல்லுதல். ['மற்று' அசை.]

## உதாரணம்

"ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும்
புதுவது அன்றிவ் வுலகத்து இயற்கை
இன்றின் ஊங்கோ கேளலம் திரளரை
மன்ற வேம்பின் மாச்சினை ஒண்தளிர்*
நெடுங்கொடி உழிஞைப் பவரொடு மிடைந்து
செறியத் தொடுத்த தேம்பாய் கண்ணி†
ஒலியல் மாலையொடு பொலியச் சூடிப்
பாடின் தெண்கிணை கறங்கக் காண்டக
நாடுகெழு திருவிற் பசும்பூண்‡ செழியன்
பீடும் செம்மலும் அறியார் கூடிப்
பொருதும் என்று தன்தலை வந்த
புனைகழல் எழுவர் நல்வலம் அடங்க
ஒருதானாகிப் பொருதுகளத்து அடலே" (புறம். எ௬)

எனவும்,

"வள்ளை நீக்கி வயமீன் முகந்து
கொள்ளை சாற்றிய கொடுமுடி வலைஞர்
வேழப் பழனத்து நூழில் ஆட்டு" (மதுரைக்காஞ்சி. ௨௫௫-௭)

எனவும் பல உயிரை ஒருவன் கொன்றதனை நூழில் என்றவாறு அறிக.

உளப்பட புல்லித்தோன்றும் பன்னிரு துறைத்து-உட்படப் பொருந்தித் தோன்றும் பன்னிரு துறைகளையுடைத்து. [ஏகாரம் ஈற்றசை.] (௧௪)

எ௩. வாகை தானே பாலையது புறனே
§தாவில் கொள்கைத் தத்தம் கூற்றைப்
$பாகுபட மிகுதிப் படுத்தல் என்ப.

---

(பாடம்) *நுண்தளிர். †தெரியல். ‡பெரும்பூண்.

§ இதனை ௧௮, ௧௯ என இரண்டு சூத்திரம் ஆக்குவர். (நச்சி.)

தாவில் கொள்கை எனவே, இரணியனைப்போல வலியானும் வருத்தத்தானும் கூறுவித்துக் கோடல் வாகை அன்றாயிற்று. (நச்சி.)

$ பாகுபட மிகுதிப்படுத்தலாவது இருவகைப்பட மிகுதிப்படுத்தல் என்று கூறுவர் ஆசிரியர் என்றவாறு. இருவகையாவன, தன்னைத் தானே மிகுதிப்படுத்தலும், பிறர்மீக்கூறு படுத்தலுமாம். (நச்சி.)

(இ - ள்.) வாகை பாலையது புறன் - வாகைத்திணை பாலை என்னும் அகத்திணையினது புறனும்; தாவில் கொள்கை தத்தம் கூற்றை—பாகுபட மிகுதிப்படுத்தல் என்ப - அது கேடில்லாத கோட்பாட்டினையுடைய தத்தமக்குள்ள இயல்பை வேறுபட மிகுதிப்படுத்தல் என்பர்.

அதற்கு இது புறனாயவாறு என்னையெனின், பாலையாவது தனக்கென ஒருநிலமின்றி எல்லா நிலத்தினும் காலம் பற்றிப் பிறப்பதுபோல இதுவும் எல்லா நிலத்தினும் எல்லாக் குலத்தினும் காலம்பற்றி நிகழ்வதாதலினாலும், ஒத்தார் இருவர் புணர்ச்சியினின்றும் புகழ்ச்சி காரணமாகப் பிரியுமாறுபோலத் தன்னோடு ஒத்தாரினின்றும் நீங்கிப் புகழப்படுதலாலும் அதற்கிது புறனாயிற்று. அஃது ஆமாறு வருகின்ற சூத்திரங்களானும் விளங்கும். (௬௫)

௭௪. *அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்
ஐவகை மரபின் அரசர் பக்கமும்
இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்
மறுவில் செய்தி மூவகைக் காலமும்
நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்
நாலிரு வழக்கில் தாபதப் பக்கமும்
பாலறி மரபில் பொருநர் கண்ணும்
அறநிலை வகையோடு ஆங்கெழு வகையால்†
தொகைநிலை பெற்றது என்மனார் புலவர்.

இது, வாகைத்திணை பாகுபடுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

பார்ப்பனப் பக்கம் முதலாகப் பொருநர் பக்கம் ஈறாகச் சொல்லப்பட்ட அத்தன்மைத்தாகிய நிலைவகையோடே ஏழ்வகையால் தொகை

*ஆறு பார்ப்பியல் என்றது வகை என்றதனான், அவை தலை இடை, கடை என ஒன்று மும்மூன்றாய்ப் பதினெட்டாம் என்று கொள்க; அவை ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், கொடுத்தல், கோடல் என ஆறும். இருக்கும், எசுரும், சாமமும் இவை தலையாய ஓத்து; இவை வேள்வி முதலியவற்றை விதித்தலின் இலக்கணமுமாய், வியாகரணத்தான் ஆராயப்படுதலின் இலக்கியமும் ஆயின. அதர்வமும், ஆறங்கமும், தருமநூலும் இடையாய ஓத்து. இதிகாசமும் புராணமும் வேதத்துக்கு மாறுபடுவாரை மறுக்கும் உறழ்ச்சி நூலும், அவரவர் அதற்கு மாறுபடக் கூறும் நூல்களும் கடையாய ஒத்து. எழுத்தும் சொல்லும் பொருளும் ஆராய்ந்து இம்மைப் பயன்தருதலின், அகத்தியம் தொல்காப்பியம் முதலிய தமிழ் நூல்களும் இடையாய ஒத்து ஆம் என்று உணர்க. இவையெல்லாம் இலக்கணம். இராமாயணமும் பாரதமும் போல்வன இலக்கியம். இனி, தமிழ்ச் செய்யுட்கண்ணும் இறையனாரும் அகத்தியனாரும் மார்க்கண்டேயனாரும் வான்மீகனாரும் கவுதமனாரும் போல்வார் செய்தன தலையும், இடைச் சங்கத்தார் செய்தன இடையும், கடைச் சங்கத்தார் செய்தன கடையுமாகக் கொள்க. (நச்சி.)

(பாடம்) † வகையில்.

நிலைபெற்றது [வாகைத்திணை-] எனவே தொகைநிலை பல வென்பது பெறுதும்.

(இ - ள்.) அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும் - ஆறு திறனுகிய அந்தணர் பக்கமும்.

அறுவகைப்பட்ட பக்கம் எனக் கூட்டுக. அவையாவன :—ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்பன. இவ் வொழுக்கத்தால் மிகுதல் வாகையாம் என்பது. பார்ப்பனப் பக்கமும் என்றதனுன் அப்பொருளின் மிகுதி கூறலும் இதன்பாற் படும். இது மேல்வருவனவற்றிற்கும் ஒக்கும்.

ஓதலாவது கல்வி.

ஓதல் வருமாறு

"இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்ருல்
தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்ருல்
எம்மை உலகத்தும் யாங்காணேம் கல்விபோல்
மம்மர் அறுக்கும் மருந்து." (நாலடி. கல்வி உ)

இது கல்வியின் விழுப்பம் கூறிற்று.

"ஆற்றவுங் கற்ருர் அறிவுடையார் அஃதுடையார்
நாற்றிசையுஞ் செல்லாத நாடில்லை அந்நாடு
வேற்றுநா டாகா தமவேயாம் ஆதலால்*
ஆற்றுணு வேண்டுவ தில்." (பழமொழி-கககூ)

இது கற்ருேர்க்கு உளதாகும் விழுப்பம் கூறிற்று. இஃது ஏனைய மூன்று வருணத்தார்க்கும் ஒக்கும்.

ஓதுவித்தலாவது - கற்பித்தல்.

ஓதுவித்தல் வருமாறு

"எண்பொருள ஆகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்பது அறிவு." (குறள் - கஉ௪)

வேட்டலாவது - வேள்வி செய்தல்.

வேட்டல் வருமாறு

"நன்ருய்ந்த நீள்நிமிர்சடை
முதுமுதல்வன் வாய்போ காது
ஒன்றுபுரிந்த ஈரிரண்டின்
ஆறுணர்ந்த ஒருமுதுநூல்
இகல்கண்டோர் மிகல்சாய்மார்
மெய்அன்ன பொய்யுணர்ந்து
பொய்ஓராது மெய்கொளீஇ
மூவேழ் துறையும் முட்டின்று போகிய
உரைசால் சிறப்பின் உரவோர் மருக
வினைக்குவேண்டி நீபூண்ட

* ஆயினுல்.

புலப்புல்வாய்க் கலைப்பச்சை
சுவற்பூண்ஞாண் மிசைப்பொலிய
மறங்கடிந்த அருங்கற்பின்
அறம்புகழ்ந்த* வலைசூடிச்
சிறுநுதற்பேர் அகலல்குற்
சிலசொல்லிற் பல கூந்தல்நின்
நிலைக்கொத்தநின் துணைத்† துணைவியர்
தமக்கமைந்த தொழில் கேட்பக்
காடென்று நாடென்றுங்கு
ஈரேழின் இடமுட்டாது
நீர்நாண நெய்வழங்கியும்
எண்நாணப் பலவேட்டும்
மண்நாணப் புகழ்பரப்பியும்
அருங்கடிப் பெருங்காலை
விருந்துற்றநின் திருந்தேந்துநிலை
என்றும்,
காண்கதில் அம்ம யாமே குடாஅது
பொன்படு நெடுவரைப் புயலேறு சிலைப்பின்
பூவிரி புதுநீர்க் காவிரி புரக்குந்
தண்புனல் படப்பை எம்மூர் ஆங்கண்
உண்டுந் தின்றும் ஊர்ந்தும் ஆடுகம்
செல்வல் அத்தை யானே செல்லாது
மழைஅண் ணப்ப நீடிய நெடுவரைக்
கழைவளர் இமயம் போல
நிலீஇயர் அத்தைநீ நிலமிசை யானே." (புறம். ககக)

வேட்பித்தலாவது, வேள்வி செய்வித்தல். "நளிகடல்இருங் குட்டத்து" என்னும் புறப்பாட்டினுள்,

"ஆன்ற கேள்வி அடங்கிய கொள்கை
நான்மறை முதல்வர் சுற்றம் ஆக
மன்னர் ஏவல் செய்ய மன்னிய
வேள்வி முற்றிய வாள்வாய் வேந்தே" (புறம். உ௬)

என அரசன் வேட்பித்தவாறும், பார்ப்பார் வேட்டவாறும் கண்டு கொள்க.

ஈதலாவது, இல்லெனை இரந்தோர்க்குக் கொடுத்தல்.

## உதாரணம்

"இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே உள." (குறள். உஉ௩)

ஏற்றலாவது, கோடல்; கொள்வோன் தனது சிறப்பிற் குன்றாமல் கோடல்.

## உதாரணம்

"இரவலர் புரவலை நீயும் அல்லை
புரவலர் இரவலர்க்கு இல்லையும் அல்லர்
இரவலர் உண்மையும் காண்இனி இரவலர்க்கு
ஈவோர் உண்மையும் காண்இனி நின்னூர்க்

* அறம்பகர்ந்த. † மனைத்.

கடிமரம் வருந்தத் தந்தியாம் பிணித்த
நெடுநல் யானைஎம் பரிசில்
கடுமான் தோன்றல் செல்வல் யானே." (புறம். கசஉ)

*ஐவகை மரபின் அரசர் பக்கமும்-ஐவகைப்பட்ட அரசர் பக்கமும்.

அவையாவன : ஓதலும் வேட்டலும் ஈதலும் படைவழங்குதலும் குடியோம்புதலுமாம். இவற்றுள் முந்துற்ற மூன்றும் மேற்சொல்லப் பட்டன. ஏனைய இரண்டும் இனிக் கூறப்படுகின்றன.

படை வழங்குதல் வருமாறு

"கடுங்கண்ண கொல்களிற்றால்
காப்புடைய எழுமுருக்கிப்
பொன்னியல் புனைதோட்டியான்
முன்புதுரந்து சமந்தாங்கவும்
பாருடைத்த குண்டகழி
நீரழுவ நிவப்புக் குறித்து
நிமிர்பரிய மாதாங்கவும்
ஆவஞ் சேர்ந்த புறத்தை தேர்மிசைச்
சாப நோன்ஞாண் வடுக்கொள வழங்கவும்
பரிசிலர்க்கு அருங்கலம் நல்கவுங் குரிசில்
வலிய வாகுநின் தாள்தோய் தடக்கை
புலவுநாற் றத்த பைந்தடி
பூநாற் றத்த புகைகொளீஇ ஊன்துவை
கறிசோறு உண்டு வருந்துதொழில் அல்லது
பிறிதுதொழில் அறியா ஆகலின் நன்றும்
மெல்லிய பெரும தாமே நல்லவர்க்கு
ஆரணங் காகிய மார்பிற் பொருநர்க்கு
இருநிலத் தன்ன நோன்மைச்
செருமிகு சேஎய்நிற் பாடுநர் கையே." (புறம். கச)

குடியோம்புதல் வருமாறு

"இருமுந்நீர்க் குட்டமும்
வியன்ஞாலத்து அகலமும்
வளிவழங்கு திசையும்
வறிது நிலைஇய காயமும்
என்றாங்கு,
அவை அளந்து அறியினும் அளத்தற்கு அரியை

---

*வகை யென்றதனானே களவு செய்தோர் கையிற் பொருள் கோடலும், ஆறில் ஒன்று கோடலும், சுங்கம் கோடலும், அந்தணர்க்கு இறையிலி கொடுக்குங்கால் இத்துணைப் பொருள் நும்மிடத்து யான் கொள்வல் எனக் கூறிக்கொண்டு அது கோடலும், மறம் பொருளாகப் பகைவர் நாடு கோடலும், தமரும் அந்தணரும் இல்வழிப் பிறன் தாயங்கோடலும், பொருள் இல்வழி வாணிகம் செய்து கோடலும், அறத்தில் திரிந்தாரைத் தண்டத்தில் தருமாறு பொருள் கோடலும் போல்வன கொள்க. அரசியல் என்றது பக்கம் என்றதனான் அரசர் ஏனை வருணத்தார்கண் கொண்ட பெண்பாற்கண் தோன்றிய வருணத்துப் பகுதியோரும் சில தொழிற்குரியர் என்று கொள்க. (நச்சி.)

அறிவும் ஈரமும் பெருங்க ணோட்டமும்
சோறுபடுக்குந் தீயொடு
செஞ்ஞாயிற்றுத் தெறலல்லது
பிறிதுதெறல் அறியார்நின் நிழல்வாழ் வோரே
திருவில் அல்லது கொலைவில் அறியார்
நாஞ்சில் அல்லது படையும் அறியார்
திறனறி வயவரொடு தெவ்வர் தேயஅப்
பிறர்மண் உண்ணுஞ் செம்மல்நின் நாட்டு
வயவுறு மகளிர் வேட்டுணின் அல்லது
பகைவர் உண்ணா அருமண் ணினையே
அம்புதுஞ்சும் கடிஅரணால்
அறந்துஞ்சும் செங்கோலையே
புதுப்புள் வரினும் பழம்புள் போகினும்
விதுப்புறவு அறியா ஏமக் காப்பினை
அனையை ஆகல் மாறே
மன்னுயிர் எல்லாம் நின்அஞ் சும்மே." (புறம்-உ0)

'பக்கம்' என்றதனான் அரசரைப்பற்றி வருவனவற்றிற்கெல்லாம் இதுவே நீத்தாகக் கொள்க.

இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும் - ஆறு மரபினையுடைய வணிகர் வேளாளர் பக்கமும்.

வணிகர்க்குரிய ஆறுபக்கமாவன :—ஓதல், வேட்டல், ஈதல், உழவு, வாணிகம், நிரையோம்பல்.

## உதாரணம்

"உழுது பயன்கொண் டொலிநிரை ஓம்பிப்
பழுதிலாப் பண்டம் பகர்ந்து—முழுதுணர
ஓதி அழல்வழிபட் டோம்பாத ஈகையான்
ஆதி வணிகர்க் கரசு." (புறப். வாகை. ௧0)

வேளாண் மாந்தர்க்குரிய ஆறு மரபாவன: உழவு, உழவொழிந்த தொழில், விருந்தோம்பல், பகடு புறந்தருதல், வழிபாடு, வேதம் ஒழிந்த கல்வி.

## உதாரணம்

"சுழன்றும் ஏர்ப்பின்ன துலகம் அதனால்
உழந்தும்* உழவே தலை." (குறள். ௧0௩௧)

"கருமஞ் செயஒருவன் கைதூவேன் என்னும்
பெருமையில் பீடுடைய தில்." (குறள். ௧0உ௧)

"இரவார் இரப்பார்க்கொன் றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்." (குறள். ௧0௩௫)

"பகடு புறந்தருநர் பாரம் ஓம்பி." (புறம். ௩௫)

"இருக்கை எழலும் எதிர்செலவும் ஏனை
விடுப்ப ஒழிதலோ டின்ன—குடிப்பிறந்தார்
குன்று ஒழுக்கமாக் கொண்டார் கயவரோ
டொன்று உணரற்பாற் றன்று." (நாலடி. குடிப்பிறப்பு. ௪)

(பாடம்) * உழன்றும்.

"வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கட் படுமே." (புறம். ௧௮௩)

இவை ஆறும் வந்தவாறு காண்க.

மறுவில் செய்தி மூவகை காலமும் நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும் - குற்றமற்ற செயலையுடைய மழையும் பனியும் வெயிலு மாகிய மூவகைக் காலத்தினையும் நெறியினாற் பொறுத்த அறிவன் பக்கமும்.

இறந்தகாலம் முதலாகிய மூன்று காலத்தினையும் நெறியினால் தோற்றிய அறிவன் பக்கம் என்றுலோ வெனின், அது முழுதுணர்ந் தோர்க் கல்லது புலப்படாமையின் அது பொருளன்றென்க. பன்னிரு படலத்துள், "பனியும் வெயிலுங் கூதிரும் யாவும், துனியில் கொள்கை யொடு நோன்மை எய்திய தணிவுற்று அறிந்த கணிவன் முல்லை" எனவும் ஓதுதலின் மேலதே பொருளாகக் கொள்க.

அறிவன் என்றது கணியனை. மூவகைக் காலமும் நெறியினால் ஆற்றுதலாவது, பகலும் இரவும் இடைவிடாமல் ஆகாயத்தைப் பார்த்து ஆண்டு நிகழும் வில்லும் மின்னும் ஊர்கோளுந் தூமமும் மீன்வீழ்வும் கோள்நிலையும் மழைநிலையும் பிறவும் பார்த்துப் பயன்கூறல். ஆதலான் மூவகைக் காலமும் நெறியின் ஆற்றிய அறிவன்' என்றார்.

## உதாரணம்

"புரிவின்றி யாக்கைபோற் போற்றுவ போற்றிப்
பரிவின்றிப் பட்டாங் கறியத்—திரிவின்றி
விண்ணிவ் வுலகம் விளைக்கும் விளைவெல்லாம்
கண்ணி உரைப்பான் கணி." (புறப். வாகை. ௨0)

நால் இரு வழக்கின் தாபத பக்கமும்-எட்டுவகைப்பட்ட வழக்கினை யுடைய தாபதர் பக்கமும்.

அவையாவன :—நீராடல், நிலத்திடைக் கிடத்தல், தோலுடுத்தல், சடைபுனைதல், எரியோம்பல், ஊரடையாமை, காட்டிலுள்ள உணவு கோடல், தெய்வப்பூசையும் அதிதி பூசையும் செய்தல்.

## உதாரணம்

"நீர்பலகால் மூழ்கி நிலத்தசைஇத் தோல் உடையாச்
சோர்சடை தாழச் சுடர்ஓம்பி—ஊரடையார்
கானகத்த கொண்டு கடவுள் விருந்தோம்பல்
வானகத்து உய்க்கும் வழி." (புறப். வாகை. ௧௭)

"ஓவத்து அன்ன இடனுடை வரைப்பின்
பாவை யன்ன குறுந்தொடி மகளிர்
இழைநிலை நெகிழ்த்த மள்ளற் கண்டிகும்
கழைக்கண் நெடுவரை அருவி ஆடிக்
கான யானை தந்த விறகின்
கடுந்தெறற் செந்தீ வேட்டுப்
புறந்தாழ் புரிசடை புலர்த்து வோனே." (புறம். ௨௫௧)

"கறங்குவெள் அருவி ஏற்றலின் நிறம்பெயர்ந்து
தில்லை அன்ன புல்லென் சடையோடு
அள்ளிலைத் தாளி கொய்யு மோனே
இல்வழங்கு மடமயில் பிணிக்கும்
சொல்வலை வேட்டுவன் ஆயினன் முன்னே" (புறம். உ௫உ)

இவற்றுள்ளும் சில வந்தவாறு காண்க.

பால் அறி மரபின் பொருநர் கண்ணும்-பாகுபாடு அறிந்த மரபினையுடைய பொருநர் பக்கமும்.

அஃதாவது, வாளானும் தோளானும் பொருதலும் வென்றி கூறலும் வாகையாம் என்றவாறு.

வாளால் மிகுதல் வருமாறு

"ஏந்துவாள் தானை இரிய உறைகழித்துப்
போந்துவாள் மின்னும் பொருசமத்து—வேந்தர்
இருங்களி யானை இனமிரிந் தோடக்
அருங்கழலான் கொண்டான் களம்." (புறப். வாகை. உசு)

மல்வென்றி வருமாறு

"இன்கடுங் கள்ளின் ஆமூர் ஆங்கண்
மைந்துடை மல்லன் மதவலி முருக்கி
ஒருகால் மார்பொதுங் கின்றே ஒருபால்
வருதார் தாங்கிப் பின்னொதுங் கின்றே
நல்கினும் நல்கான் ஆயினும் வெல்போர்ப்
போர் அருந் தித்தன் காண்கதில் அம்ம
பசித்துப் பணைமுயலும் யானைபோல
இருதலை ஒசிய எற்றிக்
களம்புகு மல்லற் கடந்தடு நிலையே." (புறம். அ0)

அனைநிலைவகையொடு-வாளானும் தோளானும் பொருது வேறலன்றி அத்தன்மைத்தாகிய நிலைவகையான் வேறலொடு.

அஃதாவது, சொல்லான் வேறலும் பாட்டான் வேறலும் கூத்தான் வேறலும் சூதான் வேறலும் தகர்ப்போர் பூழ்ப்போர் என்பனவற்றான் வேறலும்-பிறவும் அன்ன.

"விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்." (குறள். கூ௪அ)

இது சொல் வென்றி.

"வண்டுறையுங் கூந்தல் வடிக்கண்ணாள் பாடினாள்
வெண்டுறையுஞ் செந்துறையும் வேற்றுமையாக்—கண்டறியக்
கின்னரம் போலக் கிளையமைந்த தீந்தொடையாழ்
அந்நரம்பும் அச்சுவையும் ஆய்ந்து."
(புறப். பெருந்திணை. கஅ)

இது பாடல் வென்றி.

---

௧. (பாடம்) * பொரலருந்.

"கைகால் புருவங்கண் பாணி நடைதூக்குக்
கொய்பூங்கொம் பன்னாள் குறிக்கொண்டு—பெய்பூப்
படுகளிவண் டார்ப்பப் பயில்வளை நின்று ஆடும்
தொடுகழல் மன்னன் துடி." (புறப். பெருந்திணை. ௧எ)

இஃது ஆடல் வென்றி.

"கழகத் தியலுங் கவற்று* நிலையும்
அளகத் திருநுதலாள் ஆய்ந்து—கழகத்திற்†
பாய வகையாற் பணிதம் பலவென்றாள்
ஆய நிலையம்‡ அறிந்து." (புறப். பெருந்திணை ௧௬)

இது சூது வென்றி. பிறவும் வந்தவழிக் காண்க.

எழுவகையான் தொகைநிலை பெற்றது என்மனார் புலவர்-ஏழ்வகையான் தொகைநிலை பெற்றதென்று கூறுவர் புலவர். [ஆங்கு என்பது அசை.] (௧௬)

௭௫. கூதிர் வேனில் என்றிரு பாசறைக்
காதலின் ஒன்றிக் கண்ணிய வகையினும்§
ஏரோர் களவழி அன்றிக் களவழித்
தேரோர் தோற்றிய வென்றியுந் தேரோர்
வென்ற கோமான் முன்தேர்க் குரவையும்
ஒன்றிய மரபிற் பின்தேர்க் குரவையும்
பெரும்பகை தாங்கும் வேலி னானும்
அரும்பகை தாங்கும் ஆற்ற லானும்
புல்லா வாழ்க்கை வல்லாண் பக்கமும்
ஒல்லார் நாணப் பெரியவர்க் கண்ணிச்
சொல்லிய வகையின் ஒன்றொடு புணர்த்துத்$
தொல்லுயிர் வழங்கிய அவிப்பலி யானும்
ஒல்லார் இடவயிற் புல்லிய பாங்கினும்
பகட்டி னானும் மாவி னானுந்
துகட்டபு சிறப்பின் சான்றோர் பக்கமும்
கடிமனை நீத்த பாலின் கண்ணும்¶
எட்டுவகை நுதலிய அவையகத்** தானும்
கட்டமை ஒழுக்கத்துக் கண்ணுமை யானும்
இடையில் வண்புகழ்க் கொடையி னானும்††
பிழைத்தோர்த் தாங்குங் காவ லானும்

---

(பாடம்) *கவற்றினி. †புழகத்து ‡ வகையும். § மரபினும். $ புணர்ந்து. ¶ கட்டில் நீத்த பாலினானும். ** அவையத். †† கொடைமை யானும்.

பொருளொடு புணர்ந்த பக்கத் தானும்
அருளொடு புணர்ந்த அகற்சி யானும்
காமம் நீத்த பாலி னுமென்று
இருபாற் பட்ட ஒன்பதின் துறைத்தே.

**இது, வாகைத்துறையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.**

(இ - ள்.) கூதிர்ப்பாசறை முதலாகச் சொல்லப்பட்ட பதினெட்டுத்துறையும் வாகைத்துறையாம். எனவே, மேற் சொல்லப்பட்ட ஏழ் வகையும் திணை யென்று கொள்க.

கூதிர் வேனில் என்று இரு பாசறை காதலின் ஒன்றி கண்ணிய வகையும் - கூதிர்ப்பாசறையும் வேனிற்பாசறையும் என்று சொல்லப் பட்ட இருவகைப் பாசறைகளையும் போரின்மீது கொண்ட காதலாற் பொருந்திக் கருதிய போர்நிலை வகையும்.

இவை இரண்டும் ஒரு வகை. [இச்சூத்திரத்தில் வரும் இன்னும் ஆனும் இடைச்சொற்கள்.]

உதாரணம்

''கவலை மறுகின் கடுங்கண் மறவர்
உவலைசெய் கூறை ஒடுங்கத் துவலைசெய்
கூதிர் நலியவும் உள்ளான் கொடித்தேரான்
மூதில் மடவாள் முயக்கு.'' (புறப். வாகை. கஓ)

பிறவும் அன்ன.

ஏரோர் களவழி அன்றி களவழி தேரோர் தோற்றிய வென்றியும்- ஏரோர் களவழி கூறுதலும் அன்றிப் போரோர் களவழி தேரோர் தோற்றுவித்த வென்றியும்.

அது களம்பாடுதலும் களவேள்வி பாடுதலுமாம். [களவழி-களத்தில் நிகழும் செயல்கள்.]

உதாரணம்

''இருப்புமுகஞ் செறித்த ஏந்தெழில் மருப்பின்
கருங்கை*யானை கொண்மூ வாக
நீண்மொழி மறவர் எறிவனர் உயர்த்த
வாள்மின் ஆக வயங்குகடிப் பமைந்த†
குருதிப் பலிய முரசுமுழக் காக
அரசுஅராப் பனிக்கும் அணங்குறு பொழுதின்
வெவ்விசைப் புரவி வீசுவளி யாக
விசைப்புறு வல்வில் வீங்குநாண் உகைத்த‡
கணைத்துளி பொழிந்த கண்ணகன் கிடக்கை
ஈரச் செறுவயின் தேர்ஏர் ஆக
விடியல் புக்கு நெடிய நீட்டிநின்
செருப்படை மிளிர்த்த திருத்துறு பைஞ்சால்§
பிடித்தெறி வெள்வேல்$ கணையமொடு வித்தி

(பாடம்) * பெருங்கை. † படைந்த. ‡ உதைத்த
§ செஞ்சால். $ வைவேற்.

விழுத்தலை சாய்த்த வெருவரு பைங்கூழ்ப்
பேய்மகள் பற்றிய பிணம்பிறங்கு பல்போர்பு
கணநரி யோடு* கழுதுகளம்† படுப்பப்
பூதங் காப்பப் பொலிகளந் தழீஇப்
பாடுநர்க் கிருந்த பீடுடை யாள
தேய்வை வெண்காழ் புரையும் விசிபிணி
வேய்வை காணா விருந்தின் போர்வை
அரிக்குரல் தடாரி யுருப்ப ஒற்றிப்
பாடி வந்திசின் பெரும பாடான்று
எழிலி தோயும் இமிழிசை அருவிப்
பொன்னுடை நெடுங்கோட்டு இமயத்து அன்ன
ஓடை நுதல ஒல்குதல்‡ அறியாத்
துடிஅடிக் குழவிப் பிடியிடை மிடைந்த
வேழ முகவை நல்குமதி
தாழா ஈகைத் தகைவெய் யோயே.'' (புறம். ருகக)

இஃது ஏரோர் களவழி.

"ஓஒ உவமை§ உறழ்வின்றி ஒத்ததே
காவிரி நாடன் கழுமலங் கொண்டநாள்
மாவுதைப்ப மாற்றார் குடையெலாங் கீழ்மேலாய்
ஆவுதை காளாம்பி போன்ற புனல்நாடன்
மேவாரை அட்ட களத்து.'' (களவழி. ருக)

இது போரோர் களவழி.

"நளிகடல் இருங்குட்டத்து
வளியுடைத்த கலம்போலக்
களிறுசென்று களன் அகற்றவும்
களனகற்றிய வியலாங்கண்
ஒளிறிலைய எஃகேந்தி
அரசுபட அமருழக்கி
உரைசெல முரசுவெளவி
முடித்தலை அடுப்பாகப்
புனற்குருதி உலைக்கொளீஇத்
தொடித்தோள் துடுப்பில் துழந்த வல்சியின்
அடுகளம் வேட்ட அடுபோர்ச் செழிய
ஆன்ற கேள்வி அடங்கிய கொள்கை
நான்மறை முதல்வர் சுற்ற மாக
மன்னர் ஏவல் செய்ய மன்னிய
வேள்வி முற்றிய வாள்வாய் வேந்தே
நோற்றோர் மன்றநின் பகைவர் நின்னொடு
மாற்றார் என்னும் பெயர்பெற்று
ஆற்றா ராயினும் ஆண்டுவாழ் வோரே.'' (புறம். கஉ)

இது களவேள்வி.

தேரோர் வென்ற கோமான் தேர்முன் குரவையும் - தேரோரைப் பொருது வென்ற அரசன் தேர்முன் ஆடு குரவையும்.

(பாடம்) * பல்போர்க்கணநரி யோடு. † கழுகுகளம்.
‡ ஒல்குநிலை. § உவமன்,

## உதாரணம்

"..............................
களிற்றுக்கோட் டன்ன வாலெயிறு அழுத்தி
விழுக்கொடு விரைஇய வெள்நிணச் சுவையினள்
குடர்த்தலை மாலை சூடி* உணத்தின
ஆனாப் பெருவளஞ் செய்தோன் வானத்து
வயங்குபல் மீனினும் வாழிய பலவென
உருகெழு பேய்மகள் அயரக்*
குருதித்துகள் ஆடிய களங்கிழ வோயே." (புறம். ௩௭௧)

ஒன்றிய மரபின் தேர்ப்பின் குரவையும் - பொருந்திய மரபின் தேர்ப்பின் ஆடு குரவையும்.

## உதாரணம்

"வஞ்சமில் கோலானை வாழ்த்தி வயவரும்
அஞ்சொல் விறலியரும் ஆடுபவே—வெஞ்சமத்துக்†
குன்றேர் மழகளிறுங் கூந்தற் பிடியும்போல்
பின்தேர்க் குரவை பிணைந்து." (புறப். வாகை. ௮)

பெரும்பகை தாங்கும் வேலும் - பெரிய பகையினைத் தாங்கும் வேலினைப் புகழுமிடமும்.

## உதாரணம்

"இவ்வே, பீலி யணிந்து மாலை சூட்டிக்
கண்திரள் நோன்காழ் திருத்திநெய் அணிந்து
கடியுடை வியனக ரவ்வே அவ்வே
பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து
கொல்துறைக் குற்றில மாதோ என்றும்
உண் டாயிற் பதங்கொடுத்து
இல்லாயின் உடனுண்ணும்
இல்லோர் ஒக்கல் தலைவன்
அண்ணல்எம் கோமான் வைந்நுதி வேலே" (புறம். ௯௫)

"...............
நிலைதிரிபு எறியத் திண்மடை கலங்கிச்
சிதைதலுய்ந் தன்றே நின்வேல் செழிய" (புறம். ௨௫)

என்பதும் அது.

அரும்பகை தாங்கும் ஆற்றலும் - பொருதற்கரிய பகையைப் பொறுக்கும் ஆற்றலும்.

## உதாரணம்

"களம்புகல் ஓம்புமின் தெவ்விர் போரெதிர்ந்து
எம்முளும் உளனொரு பொருநன் வைகல்
எண்தேர் செய்யுந் தச்சன்
திங்கள் வலித்த காலன் னோனே" (புறம். ௮௭)

எனவும்,

(பாடம்) * துயல்வரத் துள்ளி. †விறலிகளும் ஆடுபவே—வெஞ்ச மரில்.

" என்னைமுன் நில்லன்மின் தெவ்விர் பலர்என்னை
முன்னின்று கல்நின் றவர்." (குறள். எஎக)

புல்லாவாழ்க்கை வல்லாண் பக்கமும் - பொருந்தாத வாழ்க்கையினையுடைய வல்லாண் பக்கமும்.

## உதாரணம்

" எருது கால்உறாஅது இளைஞர் கொன்ற
சில்விளை வரகின் புல்லென் குப்பை
தொடுத்த கடவர்க்குக் கொடுத்த மிச்சில்
பசித்த பாணர் உண்டுகடை தப்பலின்
ஒக்கல் ஒற்கஞ் சொலியத் தன்னூர்ச்
சிறுபுல் ஆளர் முகத்தவை கூறி
வரகுடன் இரக்கும் நெடுந்தகை
அரசுவரில் தாங்கும் வல்லா ளன்னே." (புறம். ந௨எ)

ஒல்லார் நாண பெரியவர்க் கண்ணி சொல்லிய வகையின் ஒன்றொடு புணர்த்து தொல் உயிர் வழங்கிய அவிப்பலியும்-பொருந்தாதார் நாணுமாறு தலைவரைக் குறித்து முன்பு சொன்ன வஞ்சின மரபின் ஒன்றொடு பொருந்தித் தொன்றுதொட்டு வருகின்ற உயிரை வழங்கிய அவிப் பலியும்.

## உதாரணம்

" சிறந்த திதுவெனச் செஞ்சோறு வாய்ப்ப
மறந்தரு வாளமர் என்னும்—பிறங்கழலுள்
ஆருயிர் என்னும் அவிவேட்டார் ஆங்கஃதால்
வீரியரெய் தற்பால வீடு" (புறப். வாகை. ந0)

எனவும்,

" இழைத்த திகவாமைச் சாவாரை யாரே
பிழைத்த தொறுக்கிற் பவர்" (குறள். எஎசு)

எனவும் வரும்.

ஒல்லார் இடவயின் புல்லிய பாங்கும் - பொருந்தாதார் இடத்தின் கண் பொருந்திய பக்கமும்.

அஃதாவது, போரில்வழி நாடு கைத்தென்று கொண்டு உவத்தல்* (கைத்து - கையகப்பட்டது. உவத்தல் - வெகுளிவிட்டிருத்தல்.)

## உதாரணம்

" மாண்டனை பலவே போர்மிகு குருசில்நீ
மாதிரம் விளக்குஞ் சால்புஞ் செம்மையும்
முத்துடை மருப்பின் மழகளிறு பிளிற
மிக்கெழு கடுந்தார் துய்த்தலைச் சென்று
துப்புத்துவர் போகப் பெருங்கிளை உவப்ப
ஈத்தான்று ஆனு இடனுடை வளனும்
துளங்குகுடி திருத்திய வலம்படு வென்றியும்

(பாடம்) *இளையர்.

எல்லாம் எண்ணின் இடுகழங்கு தபுந
கொன்னொன்று மருண்டனென் அடுபோர்க் கொற்றவ
நெடுமிடல் சாயக் கொடுமிடல் துமியப்
பெருமலை யானையொடு புலங்கெட இறுத்துத்
தடந்தாள் நாரை படிந்திரை கவரும்
முடந்தை நெல்லில் கழைஅமல் கழனிப்
பிழையா விளையுள் நாடகப் படுத்து
வையா மாலையர் விசையுநர்க் கறுத்த
பகைவர் தேஎத்து ஆயினும்
சினவாய் ஆகுதல் இறும்பூதாற் பெரிதே.'' (பதிற்றுப். கஉ)

என்பதனுள் பகைவர் நாடு கைக்கொண்டிருந்தவாறு அறிக.

பகட்டினானும் ஆவினானும் துகள் தபு சிறப்பின் சான்றோர் பக்கமும்-பகட்டினானும் ஆவினானும் குற்றம் தீர்ந்த சிறப்பினையுடைய சான்றோர் பக்கமும்.

பகட்டால் புரை தீர்ந்தார் வேளாளர். ஆவால் குற்றம் தீர்ந்தார் வணிகர், இவ்விரு குலத்தினும் அமைந்தார் பக்கமும். அவர் குலத்தினுள் அளவால் மிக்க நீர்மையராதலின் வேறு ஓதப்பட்டது.

## உதாரணம்

''உண்டால் அம்மஇவ் வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே முனிவிலர்
துஞ்சலும் இலர்பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழெனில் உயிருங் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினுங் கொள்ளலர் அயர்விலர்
அன்ன மாட்சி அனையர் ஆகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே.'' (புறம். கஅஉ)

கடிமனை நீத்த பாலும் - கடிமனை நீத்த பக்கமும்.

அஃதாவது, பிறர்மனை நயவாமை. மேல், 'காம நீத்த பாலினானும்' என்று ஓதுகின்றா ராகலின், இது மனையறத்தின் நின்றோரை நோக்க வரும்.

## உதாரணம்

''பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்(கு)
அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு.'' (குறள் - கஙஅ)

எட்டுவகை நுதலிய அவையகமும்-எட்டுப் பாகுபாட்டைக்குறித்த அவையகமும்.

எட்டுவகை குறித்த அவையகம் என்றமையான், ஏனைய அவையின் இவ்வவை மிகுதி உடைத்தென்றவாறு. அவையாவன :—குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம், வாய்மை, தூய்மை, நடுவுநிலைமை, அழுக்காறாமை, அவாவின்மை என்பன.

அவை எட்டினுனும் அவை வருமாறு

"குடிப்பிறப் புடுத்துப் பனுவல் சூடி
விழுப்பேர் ஒழுக்கம் பூண்டு காமுற
வாய்மைவாய் மடுத்து மாந்தித் தூய்மையின்
காத லின்பத்துள் தங்கித் தீதறு
நடுவுநிலை நெடுநகர் வைகி வைகலும்
அழுக்கா றின்மை அவாஅ இன்மையென
இருபெரு நிதியமும் ஒருதாம் ஈட்டும்
தோலா நாவின் மேலோர் பேரவை
உடனமர்* இருக்கை ஒருநாட் பெறுமெனின்
பெறுகதில் அம்ம யாமே வரன்முறைத்
தோன்றுவழித் தோன்றுவழிப் புலவுப் பொதிந்து
நின்றுழி நின்றுழி ஞாங்கர் நில்லாது
நிலையழி யாக்கை வாய்ப்பஇம்
மலர்தலை உலகத்துக் கொட்கும் பிறப்பே." (ஆசிரியமாலை)

கட்டமை ஒழுக்கத்து கண்ணுமையும்-கட்டுதல் அமைந்த ஒழுக்கத்தினைக் குறித்த நிலையினும்.

அஃதாவது, இல்லறத்திற்கு உரித்தாக நான்கு வருணத்தார்க்கும் சொல்லப்பட்ட அறத்தின்கண் நிற்றல். அவையாவன —அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, நடுவுநிலைமை, வெஃகாமை, புறங்கூறுமை, தீவினையச்சம், அழுக்காறுமை, பொறையுடைமை என்பன. மிகுதி யாகலின், வாகை யாயின.

அடக்கமுடைமையாவது, பொறிகள் ஐம்புலன்கள்மேல் செல்லாமை அடக்குதல்.

## உதாரணம்

"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்பு உடைத்து." (குறள் · கஉசு)

ஒழுக்கமுடைமையாவது, தங்குலத்திற்கும் இல்லறத்திற்கும் ஒத்த ஒழுக்கமுடையராதல்

## உதாரணம்

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்." (குறள். ககக)

நடுவுநிலைமையாவது, பகைவர்மாட்டும் நட்டார் மாட்டும் ஒக்க நிற்கும் நிலைமை.

## உதாரணம்

"சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க்கு அணி." (குறள். ககஅ)

வெஃகாமையாவது, பிறர்பொருளை விரும்பாமை.

## உதாரணம்

"படுபயன் வெஃகிப் பழிப்படுவ† செய்யார்
நடுவன்மை நாணு பவர்." (குறள். கஎஉ)

புறங்கூறுமையாவது, ஒருவரை அவர் புறத்துரையாமை.

(பாடம்) * உடன்மரீஇ. † பழிப்பன

உதாரணம்

"அறங்கூறான் அல்ல செயினும் ஒருவன்
புறங்கூறான் என்றல் இனிது." (குறள். க௮க)

தீவினையச்சமாவது, தீவினையைப் பிறர்க்குச் செய்தலை அஞ்சுதல்.

உதாரணம்

"தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்
தீவினை என்னுஞ் செருக்கு." (குறள். உ0க)

அழுக்காறுமையாவது, பிறர் ஆக்கம் முதலாயின கண்டு பொறாமையால் வரும் மனக்கோட்டத்தைச் செய்யாமை.

உதாரணம்

"ஒழுக்காறுக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து
அழுக்கா றிலாத இயல்பு." (குறள். கசக)

வொறையுடைமையாவது, பிறர் தமக்கு மிகுதியாகச் செய்தவழி வெகுளாமை.

உதாரணம்

"மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல்." (குறள். க௫அ)

பிறவும் இந்நிகரனவெல்லாம் கொள்க.

இடையில் வண்புகழ்க்கொடையும் - இடைதலில்லாத வளவிய புகழினைத் தரும் கொடையும்.

அஃதாவது, கொடுத்தற்கு அரியன கொடுத்தல். இதுவும் பாகுபாடு மிகுதிப்படுதலின் வாகையாயிற்று.

உதாரணம்

"மன்னு உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே
துன்னருஞ் சிறப்பின் உயர்ந்த செல்வர்
இன்மையின் இரப்போர்க்கு ஈஇ யாமையின்*
தொன்மை மாக்களின் தொடர்பறி யலரே
தாள்தாழ் படுமணி இரட்டும் பூநுதல்
ஆடியல் யானை பாடுநர்க்கு அருகாக்
கேடில் நல்லிசை வயமான் தோன்றலைப்
பாடி நின்றனென் ஆகக் கொன்னே
பாடுபெறு பரிசிலன் வாடினன் பெயர்தல்என்
நாடிழந் ததனினும் நனிஇன் னாதென
வாள்தந் தனனே தலையெனக்கு ஈயத்
தன்னிற் சிறந்தது பிறிதொன்று இன்மையின்
ஆடுமலி உவகையொடு† வருவல்
ஓடாப் பூட்கைநின் கிழமையோற் கண்டே." (புறப். கசு௫)

(பாடம்) *ஈயாமரபின். †உவகையின்.

பிழைத்தோர்த் தாங்கும் காவலும் - தம்மாட்டுப் பிழைத்தோரைப் பொறுக்கும் ஏமமும்.

## உதாரணம்

"தம்மை இகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றிமற்
றெம்மை இகழ்ந்த வினைப்பயத்தால்—உம்மை
எரிவாய் நிரயத்து வீழ்வர்கொல் என்று
பரிவதூஉஞ் சான்றோர் கடன்" (நாலடி., அறவு. அ)

எனவும்,

"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை" (குறள். கடுக)

எனவும் வரும்.

பொருளொடுபுணர்ந்த பக்கமும் - மெய்ப்பொருள் உணர்ந்த பக்கமும்.

## உதாரணம்

"ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயம்இன்றே
மெய்யுணர்வு இல்லா தவர்க்கு" (குறள். ங௲ச)

எனவும்,

"சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்" (குறள். ங௲க)

எனவும் வரும்.

இன்னும் பொருளொடு புணர்ந்த பக்கமும் என்றது, அறம் பொருள் இன்பம் மூன்றினும் அறனும் இன்பமும் அன்றி ஒழிந்த பொருளொடு பொருந்திய பக்கமும் என்றுமாம். பொருளாவது நாடும் அரணும் பொருளும் அமைச்சும் நட்பும் படையும்.

"படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு" (குறள். ங௮க)

என்பதனானும் கொள்க. அவையிற்றின் மிகுதி கூறலும் வாகையாம். நாடாவது,

"தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு." (குறள். எங௧)

அரணாவது,

"கொளற்கரிதாய்க் கொண்டகூழ்த் தாகி அகத்தார்
நிலைக்கெளிதாம் நீரது அரண்." (குறள். எசு)

பொருளாவது,

"உறுபொருளும் உல்குபொருளுந்தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள்." (குறள். எ௫௬)

அமைச்சாவது,

"வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோடு
ஐந்துடன் மாண்டது அமைச்சு." (குறள்-௬௩௨)

நட்பாவது,

"அழிவின் அவைநீக்கி ஆறுய்த் தழிவின்கண்
அல்லல் உழப்பதாம் நட்பு." (குறள்-௭௮௭)

படையாவது,

"அழிவின்று அறைபோகா தாகி வழிவந்த
வன்கண் அதுவே படை." (குறள்-௭௬௪)

பக்கம் என்றதனுல் ஒற்று, தூது, வினைசெயல்வகை, குடிமை மானம் என வருவனவெல்லாம் கொள்க. அவற்றுட் சில வருமாறு:-

"கடாஅ உருவொடு கண்ணஞ்சா தியாண்டும்
உகாஅமை வல்லதே ஒற்று." (குறள்-௫௮௫)

"கற்றுக்கண் அஞ்சான் செலச்சொல்லிக் காலத்தால்
தக்க தறிவதாந் தூது." (குறள்-௬௮௬)

பிறவும் அன்ன. 'இன்னும் 'பொருளொடு புணர்ந்த பக்கம்' என்றதனுற் புதல்வர்ப் பேறுங் கொள்க.

## உதாரணம்

"படைப்புப் பலபடைத்துப் பலரோடு உண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லைத்தாம் வாழும் நாளே." (புறம். ௧௮௮)

அருளொடு புணர்ந்த அகற்சியும்-அருளொடு பொருந்தின துறவும்.

அஃதாவது, அருளுடைமை, கொல்லாமை பொய்யாமை, கள்ளாமை, புணர்ச்சி விழையாமை, கள்ளுண்ணமை, துறவு என்பனவற்றைப் பொருந்துதலாம். அவற்றுள், அருளுடைமை யொழிந்த எல்லாம் விடுதலான் 'அகற்சி' என்ருர்.

அருளுடைமையாவது. யாதானும் ஓர் உயிர் இடர்ப்படுமிடத்துத் தன்னுயிர் வருந்திறைற்போல வருந்தும் ஈரமுடைமை.

"அருட்செல்வம் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள." (குறள்-௨௪௧)

கொல்லாமையாவது, யாதொன்றையும் கொல்லாமை.

"அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல்
பிறவினை எல்லாந் தரும்." (குறள்-௩௨௧)

பொய்யாமையாவது, தீமை பயக்கும் சொற்களைக் கூருமை.

"வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றுந்
தீமை இலாத சொலல்." (குறள்-௨௯௧)

கள்ளாமையாவது, பிறர்க்குரிய பொருளைக் களவினுற் கொள்ளா தல்.

"களவென்னுங் காரறி வாண்மை அளவென்னும்
ஆற்றல் புரிந்தார்கண் இல்." (குறள்-உஅஎ)

புணர்ச்சி விழையாமையாவது, பிரமசரியம் காத்தல்.

"மாக்கேழ் மடநல்லாய் என்றரற்றுஞ் சான்றவர்
நோக்கார்கொல் நொய்யதோர் புக்கில்லை—யாக்கைக்கோர்
ஈச்சிற கன்னதோர் தோலறினும் வேண்டுமே
காக்கை கடிவதோர் கோல்." (நாலடி, தூய்தன்மை.க)

கள்ளுண்ணாமையாவது கள்ளுண்டலைத் தவிர்தல்.

"களித்தறியேன் என்பது கைவிடுக நெஞ்சத்து
ஒளித்ததூஉம் ஆங்கே மிகும்" (குறள்-கஉஅ)

துறவாவது, தன்னுடைய பொருளைப் பற்றறத் துறத்தல்.

"யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்." (குறள்-கஙச)

காமம் நீத்த பாலும் - ஆசையை நீத்த பக்கமும்.

## உதாரணம்

"காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமங் கெடக்கெடும் நோய்." (குறள்-கஙO)

என்று இரு பால்பட்ட ஒன்பதின் துறைத்து-என்று இரண்டு கூறு பட்ட ஒன்பது துறைத்து. (கஎ)

எகூ. காஞ்சி தானே பெருந்திணைப் புறனே*
பாங்கருஞ் சிறப்பிற் பன்னெறி யானும்†
நில்லா உலகம்‡ புல்லிய நெறித்தே.

இது, காஞ்சித்திணையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

---

*அதற்கு இது புறனாயவாறு என்னையெனின், எண்வகை மணத்தினும் நான்கு மணம் பெற்ற பெருந்திணைபோல இக்காஞ்சியும் அறமுதலாகிய மும்முதற் பொருளும் அவற்றது நிலையின்மையுமாகிய ஆறனுள்ளும் நிலையின்மை மூன்றற்கும் உரித்தாய் எல்லாத் திணைகட்கும் ஒத்தமரபிற்றாகலானும்; பின்னர் நான்கும் பெருந்திணைபெறும் (தொல்-களவி. 14) என்ற நான்கும் சான்றோர் இகழ்ந்தாற்போல அறம் முதலியவற்றது நிலையின்மை யுணர்ந்து அவற்றை அவர் இகழ்தலானும், 'ஏறிய மடற்றிறம்' (தொல். அகத். 51) முதலிய நான்கும் தீய காமம் ஆயினவாறு போல உலகியல் நோக்கி நிலையாமையும் நற்பொருள் அன்றாகலானும், உரிப்பொருள் இடைமயங்கி வருதலன்றித் தனக்கு நிலமில்லாத பெருந்திணை போல அறம் பொருள் இன்பம் பற்றி யன்றி வேறுவேறு நிலையாமை என்பதொரு பொருளின்றாதல் ஒப்புமையானும், பெருந்திணைக்குக் காஞ்சி புறனாயிற்று. (தொல். புறம்.உஉ) (நச்சி.)

(பாடம்) †பல்லாற்றானும்.

‡ "நில்லா உலகம்"—உலகிற்கு நிலையாமை கூறுங்கால் அறமுதலாகிய பொருட்பகுதி ஏதுவாகக் கூறினன்றி, உலகு என்பதற்கு வடிவு வேறின்மையின் பல்லாற்றானும் என்று ஆன் உருபு கொடுத்தார். கெடுங்காற் கணந்தோறுங் கெடுவனவும் கற்பந்தோறுங் கெடுவனவும் ஆம் என்றற்கு ஆறு என்றார். நிலைபெற்ற வீட்டினுன் இவற்றின் நிலையாமை புணர்தலின் வீடு ஏதுவாயிற்று. (தொல். புறம் உங) (நச்சி.)

(இ - ள்.) காஞ்சி பெருந்திணை புறன் - காஞ்சி என்னும் திணை பெருந்திணை என்னும் அகத்திணைக்குப் புறனும்; பாங்கு அருஞ் சிறப்பின் பல் நெறியானும் நில்லா உலகம் புல்லிய நெறித்து-அது பாங்காதல் அரிய சிறப்பினாற் பலநெறியாயினும் நில்லாத உலகத்தைப் பொருந்திய நெறியை யுடைத்து.

பாங்கருமையாவது, ஒருவற்கு ஒருதுணையாகாமை. நிலையாமை மூவகைப்படும்.

இளமை நிலையாமை செல்வம் நிலையாமை யாக்கை நிலையாமை என. இவற்றுள்,

இளமைநிலையாமை யாவது,

"பனிபடு சோலைப் பயன்மரம் எல்லாம்
கனிஉதிர்ந்து வீழ்ந்தற் றிளமை—நனிபெரிதும்
வேற்கண்ணள் என்றிவளை வெஃகல்மின் மற்றிவளும்
கோற்கண்ணள் ஆகுங் குனிந்து" (நாலடி-இளமை. எ)

செல்வம் நிலையாமையாவது,

"அறுசுவை உண்டி அமர்ந்தில்லாள் ஊட்ட
மறுசிகை நீக்கியுண் டாரும்—வறிஞராய்ச்
சென்றிரப்பர் ஓரிடத்துக் கூழெனிற் செல்வமொன்
றுண்டாக வைக்கற்பாற் றன்று." (நாலடி. செல்வம். க)

யாக்கை நிலையாமையாவது முன்னர்க் காட்டுதும்.

அதற்கு இது புறனயவாறு என்னையெனின், "ஏறிய மடற்றிறம்" (அகத்திணை ருச) முதலாகிய நோந்திறக் காமப் பகுதி அகத்திணை ஐந்தற்கும் புறனயவாறு போல இது புறத்திணை ஐந்தற்கும் புறனாக லானும் இதுபோல அதுவும் நிலையாமை நோந்திறம் பற்றியும் வருத லானும் அதற்கு இது புறனயிற்று. (கஅ)

எஎ. மாற்றருங் கூற்றஞ் சாற்றிய பெருமையும்
கழிந்தோர் ஒழிந்தோர்க்குக் காட்டிய முதுமையும்
பண்புற வரூஉம் பகுதி நோக்கிப்
புண்கிழித்து முடியும் மறத்தி னானும்
ஏமச் சுற்றம் இன்றிப் புண்ணோன்
பேஎய் ஓம்பிய பேஎய்ப் பக்கமும்
இன்னனென் றிரங்கிய மன்னை யானும்
இன்னது பிழைப்பின் இதுவா கியரெனத்
துன்னருஞ் சிறப்பின் வஞ்சினத் தானும்
இன்னகை* மனைவி பேஎய் புண்ணோன்
துன்னுதல் கடிந்த தொடாஅக் காஞ்சியும்

(பாடம்) *மின்னகை.

நீத்த கணவற் றீர்த்த வேலின்
பெயர்த்த* மனைவி வஞ்சி யானும்
நிகர்த்துமேல் வந்த வேந்தனொடு முதுகுடி
மகட்பாடு அஞ்சிய மகட்பா லானும்
முலையும் முகனுஞ் சேர்த்திக் கொண்டான்†
தலையொடு முடிந்த நிலையொடு தொகைஇ
ஈரைந் தாகும் என்ப பேரிசை
மாய்ந்த மகனைச் சுற்றிய சுற்றம்
மாய்ந்த பூசல் மயக்கத் தானுந்
தாமே எய்திய‡ தாங்கரும் பையுளும்
கணவனொடு முடிந்த படர்ச்சி நோக்கிச்
செல்வோர் செப்பிய மூதா னந்தமும்
நனிமிகு சுரத்திடைக் கணவனை இழந்து
தனிமகள் புலம்பிய முதுபா லையும்
கழிந்தோர் தேஎத்துக் கழிபடர் உறீஇ
ஒழிந்தோர் புலம்பிய கையறு நிலையும்
காதலி இழந்த தபுதார நிலையும்
காதலன் இழந்த தாபத நிலையும்
நல்லோள் கணவனொடு நனியழல் புகீஇச்
சொல்லிடை இட்ட பாலை நிலையும்§
அரும்பெருஞ் சிறப்பிற் புதல்வற் பயந்த¶
தாய்தப வரூஉந் தலைப்பெயல் நிலையும்
மலர்தலை உலகத்து மரபுநன்கு அறியப்
பலர்செலச் செல்லாக் காடு வாழ்த்தொடு
நிறையருஞ் சிறப்பின் துறையிரண்டு உடைத்தே.

இது காஞ்சித்துறையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) *'மாற்றருங் கூற்றம் சாற்றிய பெருமை'* முதலாகத் *'தலையொடு முடிந்த நிலையொடு'* கூடப் பத்தாகும்.

---

(பாடம்) *பேஎத்த, பேர்த்த. †கொண்டோன். ‡ஏங்கிய,

§பாலை நிலையும் - புறங்காட்டு நிலையும். எல்லாநிலத்தும் உளதாகி வேறுதனக்கு நிலன் இன்றி வருதலானும், நண்பகல்போல் வெங்கனலான் வெதுப்புதலானும் புறங்காட்டைப் பாலை என்றார். பாலைத் தன்மை எய்திற்று என்றற்கு நிலைஎன்றார். (தொல். புறம். உ௪.) (நச்சி)

(பாடம்.) $ ஆய்பெருஞ். ¶பெயரத்.

என்பர் சிலர். 'பூசல் மயக்கம்' முதலாகக் 'காடுவாழ்த்து' உட்பட வருவனவற்றொடும் இருவகைப்பட்ட துறையை உடைத்து.

[எனவே, முற்கூறிய பத்தும் ஒருவகை யென்பதும் பிற்கூறிய பத்தும் மற்றொரு வகை யென்பதும் பெறப்பட்டன.]

மாற்று அருங் கூற்றம்* சாற்றிய பெருமையும்-மாற்றுதற்கு அரிய கூற்றம் வருமெனச் சொல்லப்பட்ட பெருங்காஞ்சியும்.

## உதாரணம்

"இருங்கடல் உடுத்தஇப் பெருங்கண் மாநிலம் †
உடையிலை நடுவணது இடைபிறர்க் கின்றித்
தாமே யாண்ட ஏமங் காவலர்
இடுதிரை மணலினும் பலரே சுடுபிணக்
காடுபதி யாகப் போகித் தத்தம்
நாடு பிறர்கொளச் சென்றுமாய்ந் தனரே
அதனால், நீயுங் கேள்மதி அத்தை வியாது
உடம்பொடு நின்ற உயிரும் இல்லை
மடங்கல் உண்மை மாயமோ அன்றே
‡கள்ளி யேய்ந்த முள்ளியம் புறங்காட்டு
வெள்ளில் போகிய வியலுள் ஆங்கண்
உப்பிலா அ அவிப்புழுக்கல்
கைக் கொண்டு பிறக்குநோக்காது
இழிபிறப்பினோன் ஈயப்பெற்று
நிலங்கலன் ஆக விலங்குபலி மிசையும்
இன்னா வைகல் வாரா முன்னே
செய்ந்நீ முன்னிய வினையே
முந்நீர் வரைப்பகம் முழுதுடன் துறந்தே." (புறம்-ருகரு)

கழிந்தோர் ஒழிந்தோர்க்குக் காட்டிய முதுமையும்-அறிவான் மிக்கோர் அல்லாதார்க்குச் சொன்ன முதுகாஞ்சியும்.

## உதாரணம்

"பல்சான் றீரே பல்சான் றீரே
கயல்முள் அன்ன நரைமுதிர் திரைகவுள்
பயன் இல் மூப்பின் பல்சான் றீரே
கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திறல் ஒருவன்
பிணிக்குங் காலை இரங்குவிர் மாதோ
நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்
எல்லாரும் உவப்பது அன்றியும்
நல்லாற்றுப் படூஉம் நெறியுமா ரதுவே." (புறம். கலரு)

---

* கூற்றுவது, வாழ்நாள் இடையறுது செல்லுங் காலத்தினைப் பொருள் வகையாற் கூறுபடுத்துங் கடவுள், கூற்றத்திற்குக் காலம் என்பது வேறன்மையிற் "காலம் உலகம்" என(தொல். சொல்-கிளவி. ருஅ) முன்னே கூறினர்; (நச்சி.)

(பாடம்) † மாநிலத்து. ‡ முள்ளி கள்ளி நள்ளிருஞ் சுடலை.

பண்பு உறவருஉம் பகுதிநோக்கிப் புண்கிழித்து முடியும் மறனும்-இயல்புற வரும் பகுதிநோக்கிப் புண்கிழித்து முடியும் மறக்காஞ்சியும்.

## உதாரணம்

''நகையமர் ஆயம் நடுங்க நடுங்கானீ
தொகையமர் ஒட்டிய துப்பின் — பகைவர்முன்
நுங்கிச் சினவுதல் நோனன் நுதிவேலான்
பொங்கிப் பரிநதிட்டான் புண்.'' (புறப், காஞ்சி. கஇ)

ஏமச்சுற்றம் இன்றிப் புண்ணோன் பேஎய் ஓம்பிய பேஎய்ப்பக்கமும்-ஓம்பும் சுற்றம் இன்மையாற் புண்ணோனைப்பேய் ஓம்பியபேய்ப் பக்கமும்.

## உதாரணம்

''ஆயும் அடுதிறலாற் கன்பிலார் இல்போலும்
தோயுங் கதழ்குருதி தோள்புடைப்பப் — பேயும்
களம்புகலச் சீறிக் கதிர்வேல்வாய் வீழ்ந்தான்
உளம்புகல ஓம்பல் உறும்.'' (புறப்-காஞ்சி. கசு)

இன்னன் என்று இரங்கிய மன்னையும்-இத்தன்மையான் என உலகத்தார் இரங்கிய மன்னைக் காஞ்சியும்.

## உதாரணம்

''சிறியகள் பெறினே எமக்கீயும் மன்னே
பெரியகள் பெறினே
யாம்பாடத் தான்மகிழ்ந் துண்ணும் மன்னே
சிறுசோற் றானும் நனிபல கலத்தன் மன்னே
பெருஞ்சோற்றானும் நனிபல கலத்தன் மன்னே
என்பொடு தடிபடு வழியெல்லாம் எமக்கீயும் மன்னே
அம்பொடு வேல்நுழை வழியெல்லாம் தானிற்கும்மன்னே
நரந்த நாறுந் தன்கையாற்
புலவுநாறும் என்தலை தைவரும் மன்னே
அருந்தலை இரும்பாணர் அகன் மண்டைத் துளையுரீஇ
இரப்போர் கையுளும் போகிப்
புரப்போர் புன்கண் பார்வை சோர
அஞ்சொல் நுண் தேர்ச்சிப் புலவர் நாவில்
சென்றுவீழ்ந் தன்றவன் அருநிறத்து* இயங்கியவேலே
ஆசாகு எந்தை யாண்டுளன் கொல்லோ
இனிப், பாடுநரு மில்லைப் பாடுநர்க்கொன் றீகுநருமில்லைப்
பனித்துறைப் பகன்றை நறைக்கொள் மாமலர்
சூடாது வைகி யாங்குப் பிறர்க்கொன்று
ஈயாது வீயும் உயிர்தவப் பலவே.'' (புறம். உஙகு)

இன்னது பிழைப்பின் இது ஆகியர் என துன் அருஞ் சிறப்பின் வஞ்சினமும் - இன்னவாறு செய்தலைப் பிழைத்தேனாயின் இன்னேன் ஆகக் கடவேன் எனக் கூறிய துன்னற்கு அரிய சிறப்பினையுடைய வஞ்சினக்காஞ்சியும், [துணிவுபற்றி 'ஆகியர்' என இறந்த காலத்தாற் கூறினர்.]

---

(பாடம்) *திருநிறத்து.

## உதாரணம்

"நகுதக் கனரே நாடுமீக் கூறுநர்
இளையன் இவனென உளையக் கூறிப்
படுமணி இரட்டும் பாஅடிப் பணைத்தாள்
நெடுநல் யானையுந் தேரும் மாவும்
படையமை மறவரும் உடையம் யாமென்று
உறுதுப் பஞ்சாது உடல்சினஞ் செருக்கிச்
சிறுசொல் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமஞ் சிதையத் தாக்கி முரசமொடு
ஒருங்ககப் படேஎ னாயின் பொருந்திய
என் நிழல் வாழ்நர் செல்நிழற் காணாது
கொடியன்எம் இறையெனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றுங் கோலேன் ஆகுக
ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைகஎன் நிலவரை
புரப்போர் புன்கண் கூர
இரப்போர்க் கீயா இன்மையான் உறவே," (புறம். எ௨)

இன்நகை மனைவி பேஎய் புண்ணோன் துன்னுதல் கடிந்த தொடாக் காஞ்சியும்-இனிய நகையார்ந்த மனைவி பேய் புண்ணோனை கிட்டுதலைக் காத்த தொடாக்காஞ்சியும்.

## உதாரணம்

"தீங்கனி இரவமொடு* வேம்புமனைச் செரீஇ
வாங்குமருப்பு யாழொடு† பல்லியங் கறங்கக்
கைபயப் பெயர்த்து மையிழுது இழுகி‡
ஐயவி சிதறி ஆம்பல் ஊதி
இசைமணி எறிந்து காஞ்சி பாடி
நெடுநகர் வரைப்பின் கடிநறை புகைஇக்
காக்கம் வம்மோ காதலம் தோழி
வேந்துறு விழுமந் தாங்கிய
பூம்பொறிக் கழற்கால் நெடுந்தகை புண்ணே." (புறம். உ௮௧)

நீத்த கணவன் தீர்த்த வேலின் பெயர்த்த மனைவி ஆஞ்சியும்-தன்னை நீத்த கணவன் விடுத்த வேலினானே மனைவி தன் உயிரையும் பெயர்த்த ஆஞ்சியும்.

## உதாரணம்

"கௌவைநீர் வேலிக் கடிதேகாண் கற்புடைமை
வெவ்வேல்வாய் வீழ்ந்தான் விறல்வெய்யோன்—அவ்வேலே
அம்பிற் பிறழுந் தடங்கண் அவன்காதற்
கொம்பிற்கும் ஆயிற்றே கூற்று." (புறப். காஞ்சி. உ௩)

நிகர்த்து மேல் வந்த வேந்தனொடு முதுகுடி மகட்பாடு அஞ்சிய மகட்பாலும்-ஒத்து மாறுபட்டுத் தன் மேல் வந்த வேந்தனொடு தன் தொல்குலத்து மகட்கொடைஅஞ்சிய மகட்பாற்காஞ்சியும்.

(பாடம்) *புறவமொடு. †யானையொடு. ‡எழுதி.

### உதாரணம்

"நுதிவேல் கொண்டு நுதல்வியர் துடையாக்
கடிய கூறும் வேந்தே தந்தையும்
நெடிய அல்லது பணிந்துமொழி யலனே
இஃதிவர் படிவம் ஆயின் வையெயிற்று
அரிமதர் மழைக்கண் அம்மா அரிவை
மரம்படு சிறுதீப் போல
அணங்கா யினள்தான் பிறந்த ஊர்க்கே." (புறம். கூ௪௯)

கொண்டோன் தலையொடு முலையும் முகனும் சேர்த்தி முடிந்தநிலையொடு தொகைஇ ஈர் ஐந்து ஆகும் என்ப - தன்னைக் கொண்டான் தலையொடு தன்னுடைய முலைகளையும் தம்முகத்தையும் சேர்த்தி இறந்தநிலையும் கூடிப் பத்தாகும் என்பர் சிலர்.

### உதாரணம்

"கொலையானுக் கூற்றே* கொடிதே கொழுநன்
தலையானுள் தையலாள் கண்டே—முலையான்
முயங்கினுள் வாள்முகமுஞ் சேர்த்தினுள் ஆங்கே
உயங்கினுள் ஓங்கிற்று உயிர்." (புறப். காஞ்சி : கரு)

பேர்இசை மாய்ந்த மகனைச் சுற்றியசுற்றம் மாய்ந்த பூசல்மயக்கமும் - பெரிய இசையையுடையனும் மாய்ந்தவனைச் சுற்றிய சுற்றத்தார் அவன் மாய்ந்தமைக்கு அழுத மயக்கமும். [மகன்-ஆண்மகன்.]

### உதாரணம்

"மீன்உண் கொக்கின் தூவி அன்ன
வால்நரைக் கூந்தல் முதியோள் சிறுவன்
களிறெறிந்து பட்டனன் என்னும் உவகை
ஈன்ற ஞான்றினும் பெரிதே கண்ணீர்
நோன்கழை துயல்வரும்† வெதிரத்து
வான்பெயத் தூங்கிய‡ சிதரினும் பலவே." (புறம். ௨௭௭)

தாம் எய்திய தாங்கு அரும் பையுளும் - சிறைப்பட்டார் தாம் உற்ற பொறுத்தற்கு அரிய துன்பத்தினைக்கூறுங் கூற்றும்.

### உதாரணம்

"குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்
ஆளன்று என்று வாளில் தப்பார்
தொடர்ப்படு ஞமலியின் இடர்ப்படுத் திரீஇய
கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்
மதுகை யின்றி வயிற்றுத்தீத் தணியத்
தாம் இரந்து உண்ணும் அளவை
ஈன்ம ரோஇவ் வுலகத் தானே." (புறம். ௭௪)

கணவனொடு முடிந்த படர்ச்சி நோக்கி செல்வோர் செப்பிய மூதானந்தமும் - கணவனொடு இறந்த செலவை நோக்கிச் செல்வோர் செப்பிய மூதானந்தமும்

(பாடம்) *கூற்றம். †அலமரும். ‡பெயல் தூங்கிய.

## உதாரணம்

"ஒருயி ராக உணர்க உடன்கலந்தார்க்கு
ஈருயிர் என்பர் இடைதெரியார்—போரில்
விடன்ஏந்தும் வேலோற்கும் வெள்வளையி னுட்கும்
உடனே உலந்தது உயிர்." (புறப். சிறப்பிற்பொதுவியல்-கூ)

நனி மிகு சுரத்திடை கணவனை இழந்து தனிமகள் புலம்பிய முது பாலையும் - மிகுதி மிக்க சுரத்திடைக் கணவனை யிழந்து தனியளாய்த் தலைமகள் வருந்திய முதுபாலையும்.

## உதாரணம்

"ஐயோ எனின்யான் புலியஞ் சுவலே
அணைத்தனன் கொளினே அகன்மார்பு எடுக்கவல்லேன்*
என்போற் பெருவிதிர்ப்பு உறுக நின்னை
இன்னு செய்த அறனில் கூற்றே
நிரைவளை முன்கை பற்றி
வரைநிழற் சேர்க நடத்திசின் சிறிதே." (புறம்- உருரு)

கழிந்தோர் தேத்து கழிபடர் உறீஇ ஒழிந்தோர் புலம்பிய கையறு நிலையும் - செத்தோர்மாட்டுச் சாவாதார் வருத்தமுற்றுப் புலம்பிய கையறு நிலையும்.

## உதாரணம்

"செற்றன் ருயினுஞ் செயிர்த்தன் ருயினும்
உற்றன் ருயினும் உய்வின்று மாதோ
பாடுநர் போலக் கைதொழுது ஏத்தி
இரந்தன் ருகல் வேண்டும் பொலந்தார்
மண்டமர்க் கடக்குந் தானைத்
திண்தேர் வளவற் கொண்ட கூற்றே." (புறம். உஉசு)

காதலி இழந்த தபுதாரநிலையும் - காதலியை இழந்த கணவனது தபுதாரநிலையும்.

## உதாரணம்

"யாங்குப்பெரி தாயினும் நோயளவு வெனைத்தே
உயிர்செகுக் கல்லா மதுகைத் தன்மையின்
கள்ளி போகிய களரியம்† பறந்தலை
வெள்ளிடைப் பொத்திய விளைவிறகு ஈமத்து
ஒள்ளழற் பள்ளிப் பாயல் சேர்த்தி
ஞாங்கர் மாய்ந்தனள் மடந்தை
இன்னும் வாழ்வல் என்னிதன் பண்பே." (புறம். உசரு)

காதலன் இழந்த தாபத நிலையும் - காதலனை இழந்தவள் நிற்கும் தாபத நிலையும்.

---

(பாடம்) *எடுத்தனன் கொளினகன் மார்பெடுக் கல்லேன்.
†களரி மருங்கின்.

## உதாரணம்

"அளிய தாமே சிறுவெள் ஆம்பல்
இளையம் ஆகத் தழையா யினவே, இனியே
பெருவளக் கொழுநன் மாய்ந்தெனப் பொழுதுமறுத்து
இன்னா வைகல் உண்ணும்
அல்லிப் படூஉம் புல்லா யினவே." (புறம். உசஅ)

நல்லோள் கணவனொடு நளி அழல் புகீஇ இடையிட்ட மாலை சொல் நிலையும் - கணவனொடு கிழத்தி பெரிய அழற் புகுவழி இடையிட்ட மாலைக்காலத்துக் கூறும் கூற்றும்.

## உதாரணம்

"பல்சான் றீரே பல்சான் றீரே
செல்கெனச் சொல்லாது ஒழிகென விலக்கும்
பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான் றீரே
அணில்வரிக் கொடுங்காய் வாள்போழ்ந் திட்ட
காழ்போல் நல்விளர் நறுநெய் தீண்டாது
அடையிடைக் கிடந்த* கைபிழி பிண்டம்
வெள்ளெள் சாந்தொடு புளிப்பெய்து அட்ட
வேளை வெந்தை வல்சி யாகப்
பரல்பெய் பள்ளிப் பாயின்று வதியும்
உயவல் பெண்டிரேம் அல்லேம் மாதோ
பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட்டு ஈமம்
நுமக்கரிது ஆகுக தில்ல எமக்கெம்
பெருந்தோள் கணவன் மாய்ந்தென அரும்பற
வள்ளிதழ் அவிழ்ந்த தாமரை
நள்ளிரும் பொய்கையும் தீயும்ஓர் அற்றே" (புறம். உசக)

அரும்பெருஞ் சிறப்பின் புதல்வன் பயந்த தாய் தப வரூஉம் தலைப் பெயல் நிலையும் - அரும்பெருஞ் சிறப்பினையுடைய மகற்பெற்ற தாய் சாதற்கண் அவனைத் தலைப்பெயல் நிலையும். [தலைப்பெயல்-சேர்தல்]

## உதாரணம்

"இடம்படு ஞாலத்து இயல்போ கொடிதே
தடம்பெருங்கண் பாலகன் என்னுங்—கடன்கழித்து
முள்ளெயிற்றுப் பேதையாள் புக்காள் முரண்அவியா
வள்ளெயிற்றுக் கூற்றத்தின் வாய்"
(புறப். சிறப்பிற் பொதுவியல்-இ)

மலர்தலை உலகத்து மரபு நன்கு அறிய பலர் செல செல்லாக் காடு வாழ்த்தொடும் - இடம் அகன்ற உலகத்தின் மரபு நன்கு விளங்கப் பலரும் மாயத் தான் மாயாத புறங்காடு வாழ்த்துதலும்.

## உதாரணம்

"களரி பரந்து கள்ளி போகிப்†
பகலுங் கூவுங் கூகையொடு பிறழ்பல்‡
ஈம விளக்கின் பேஎய் மகளிரொடு

(பாடம்) *அடகிடை மிடைந்த. †பொங்கிப். ‡பிறழ்வர.

அஞ்சுவந் தன்றிம் மஞ்சுபடு முதுகாடு
நெஞ்சமர் காதலர் அழுத கண்ணீர்
என்புபடு சுடலை வெண்ணீறு அவிப்ப
எல்லார் புறனுந் தான்கண்டு உலகத்து
மன்பதைக் கெல்லாந் தானாய்த்
தன்புறங் காண்போர்க் காண்பறி யாதே'' (புறம். ௩௫௬)

நிறை அருஞ்சிறப்பின் இரண்டு துறை உடைத்து - ஆக நிறையும் அருஞ்சிறப்பினையுடைய இரண்டுதுறைகளையுடைத்து.

[இச்சூத்திரத்தில் வந்த அத்தும் ஆனும் முறையே சாரியையும் இடைச் சொல்லுமாம்.] (௧௯)

எ௯. பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே
நாடுங் காலை நாலிரண் டுடைத்தே.

இது, பாடாண்திணை ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) பாடாண்* பகுதி கைக்கிளைப் புறன் - பாடாண் திணைபகுதி கைக்கிளை என்னும் அகத்திணைக்குப் புறனும்; நாடும் காலை நால் இரண்டு உடைத்து - அஃது ஆராயும் காலத்து எட்டுவகையினை உடைத்து.

அவையாவன:—கடவுள் வாழ்த்துவகை, வாழ்த்தியல்வகை, மங்கலவகை, செவியறிவுறுத்தல் ஆற்றுப்படைவகை, பரிசிற்றுறைவகை, கைக்கிளைவகை, வசைவகை என்பன. அவையாமாறு முன்னர்க் காட்டுதும்.

அதற்கு இது புறனாயவாறு என்னை யெனின், கைக்கிளையாவது ஒரு நிலத்திற்கு உரித்தன்றி ஒருதலைக் காமமாகி வருமன்றே அது போல இதுவும் ஒருபாற்கு உரித்தன்றி ஒருவனை ஒருவன் யாதானும் ஒரு பயன் கருதியவழி மொழிந்து நிற்பது ஆகலானும் கைக்கிளையாகிய காமப்பகுதிக்கண் மெய்ப்பெயர் பற்றிக் கூறுதலானும், கைக்கிளை போலச் செந்திறத்தாற் கூறுதலானும், அதற்கு இது புறனாயிற்று நோந்திறமாவது கழிபேரிரக்கம்; செந்திறமாவன அஃது அல்லாதன (௨௦

எ௬. அமரர்கண் முடியும் அறுவகை யானும்
புரைதீர் காமம் புல்லிய வகையினும்
ஒன்றன் பகுதி ஒன்றும் என்ப.

இது, பாடாண் பாட்டிற்கு உரியதோர் பொருண்மை உணர்த்துதல் நுதலிற்று.

---

*பாடாண் என்பது பாடுதல் வினையையும் பாடப்படும் ஆண்மகனையும் நோக்காது அவனது ஒழுகலாறாகிய திணையுணர்த்தினமையின் வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.
(தொல். புறம். ௨௫) (நச்சி.)

(இ - ள்) அமரர்கண்* முடியும் அறுவகையானும் - அமரர்கண் முடியும் கொடிநிலை கந்தழி வளளி புலவராற்றுப் படை புகழ்தல் பரவல் என்பனவற்றினும்.

புரைதீர் காமம் புல்லிய வகையினும் - குற்றந் தீர்ந்த காமத்தைப் பொருந்திய வகையினும்.

அஃதாவது, ஐந்திணை தழுவிய அகம்.

ஒன்றன் பகுதி ஒன்றும் என்ப - அவையிற்றின் ஒரு கூற்றின் பாகுபாடு பாடாண் திணை யாதற்குப் பொருந்தும் என்பர் புலவர்.

அஃதாவது, கொடிநிலை முதலிய ஆறும் கடவுட் புகழ்ச்சியின்றிப் பாட்டுடைத்தலைவனைச் சார்த்தி வருதல், காமப்பகுதியிற் பாடும் பாட்டுடைத் தலைவனைச் சார்த்தி வருதல் என்ற இவ்விருவகையானும் ஒருவனைப் புகழ்தலாற் பாடாண்பாட்டு ஆயிற்று.

இன்னும் 'புரைதீர் காமம் புல்லிய வகையினும் ஒன்றன்பகுதி' என்ற அதனன் ஐவகைப்பொருளினும் ஊடற்பொருண்மை பாடாண் பகுதிக்கு ஒன்றும் என்றவாறும். இன்னும் இதனானே இயற்பெயர் சார்த்திவாராது நாடும் ஊரும் இதுவென விளங்கவரும் ஊரன் சேர்ப்பன் என்னும் பெயரினன் ஒரு கூறு குறிப்புப்பற்றி வரும் பகுதியும் பாடாண்பாட்டாம் என்றும் கொள்க. (உக)

௮௦ வழக்கியல்† மருங்கின் வகைபட நிலைஇப்
பரவலும் புகழ்ச்சியும் கருதிய பாங்கினும்
முன்னோர் கூறிய குறிப்பினும் செந்துறை
வண்ணப் பகுதி வரைவின் றாங்கே.

இது, சில பொருட்கண் வரும் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) வழக்கியல் மருங்கின் வகைபட நிலைஇ பரவலும் புகழ்ச்சியும் கருதிய பாங்கினும் - மேற் சொல்லப்பட்டன வழக்கு இயலும் பக்கத்து வகைபெற நிறுத்திப் பரவலும் புகழ்ச்சியும் கருதிய பக்கத்தினும், முன்னோர் கூறிய குறிப்

---

*அமரர் கண்ணே வந்து முடியும் எனவே, அமரர் வேறு என்பதூஉம், அவர்கண்ணே வந்து முடிவன வேறு என்பதூஉம் பெற்றும். அவை முனிவரும் பார்ப்பாரும் ஆனிரையும் மழையும் முடியுடை வேந்தரும் உலகும் ஆம். இவை தத்தம் சிறப்புவகையான் அமரர்சாதிப் பால என்றல் வேத முடிவு.

இத்துணைப் பகுதி என்று இரண்டிறந்தன எனக் கூறுது, வாளாதே பகுதி என்றமையின் தேவரும் மக்களும் என இரண்டேயாயிற்று. அத் தேவருட்பெண்தெய்வம் 'கொடிநிலை கந்தழி' என்புழி அடங்கும்.

(தொல். புறம். உ௬) (நச்சி.)

(பாடம்) †வழங்கியல்.

பினும் - முதலாசிரியர் கூறிய காமக்குறிப்பினும், செந்துறை* வண்ணம் பகுதி வரைவு இன்று ஆங்கு - செந்துறைப்பாட்டின் கண் வரும் வண்ணப்பகுதி வரைதல் இல்லை அவ்விடத்து.

குறிப்பு என்பது காமம்ஆமாறு வருகின்ற சூத்திரத்துள் "காமப் பகுதி கடவுளும் வரையார்" (புறத்திணை. உ௯) என ஒட்டி எழுந்தமை யான் உணர்க.

இதனாற் சொல்லியது, தேவபாணியும் அகப்பொருள் பாடும் பாட் டும் இசைத்தமிழில் வரைந்து ஓதினாற்போலச் செந்துறைப்பாட்டிற்கு உரிய செய்யுள் இவை என்று உரைத்தல் இல்லை பாடாண்பாட்டின்கண் வருங் காலத்தென்பது. எனவே எல்லாச் செய்யுளும் ஆம் என்றவாறு.

இனி, புகழ்தல் படர்க்கைக்கண்ணும், பரவல் முன்னிலைக்கண்ணும் வருமாறு :

"கண்ணகன் ஞாலம் அளந்ததூஉம் காமருசீர்த்
தண்ணறும் பூங்குருந்தம் சாய்த்ததூஉம் - நண்ணிய
மாயச் சகடம் உதைத்ததூஉம் இம்மூன்றும்
பூவைப்பூ வண்ணன் அடி." (திரிகடுகம். கடவுள் வாழ்த்து)

இது புகழ்தல்.

"வைய மகளை அடிப்படுத்தாய் வையகத்தார்
உய்ய உருவம் வெளிப்படுத்தாய்—வெய்ய
அடுந்திறல் ஆழி அரவணையாய் என்றும்
நெடுந்தகை நின்னையே யாம்." (புறப். பாடாண். ௯)

இது பரவல்.

"வெறிகொள் அறையருவி வேங்கடத்துச் சேறி†
நெறிகொள் படிவத்தோய் நீயும்—பொறிகட்கு
இருளீயும் ஞாலத்து இடரெல்லாம் நீங்க
அருளீயும் ஆழி யவன்." (புறப். பாடாண். ௪௨)

இது புலவராற்றுப்படை.

"மாயவன் மாயம் அதுவால் மணிநிரையுள்
ஆயனு எண்ணல் அவனருளான்—காயக்
கழலவிழக் கண்கலைக் கைவளையார் சோரச்
சுழலழலுள் வைகின்று சோ." (புறப். பாடாண். ௪௦)

இது கந்தழி.

"வேண்டுதியால் நீயும் விழைவோ விழுமிதே
ஈண்டியம் விம்ம இனவளையார்—பூண்தயங்கச்
சூலமோ டாடுஞ் சுடர்ச்சடையோன் காதலற்கு
வேலனே டாடும் வெறி." (புறப். பாடாண். ௪௧)

இது வள்ளி. வள்ளி என்பது ஈண்டு வெறியாட்டு. கொடிநிலை வந்த வழிக்காண்க. இனி அவை சார்ந்து வருமாறு முன்னர்க் காட்டுதும்.

---

*செந்துறையாவது விகாரவகையான் அமரர் ஆக்கிச் செய்யும் அறு முறை வாழ்த்தினைப் போலாது உலகினுள் இயற்கை வகையான் இயன்ற மக்களைப் பாடுதல். (தொல். புறம். உ௭) (நச்சி)

(பாடம்) †செல்லின்.

இனிக் காமப்பகுதி வருமாறு :—

"மலைபடு சாந்தம் மலர்மார்ப யாம்நின்
பலர்படி செல்வம் படியேம்—புலர்விடியல்
வண்டினங் கூட் டுண்ணும் வயல்சூழ் திருநகரிற்
கண்டனங் காண்டற் கரிது*." (புறப். பாடாண். சஎ)

இஃது ஊடற்பொருண்மைக்கண் வந்தது. இது, இயற்பெயர் சார்த்தி யும் வரும்.

"வையைதன்
நீர்முற்றி மதில்பொரூஉம் பகையல்லால் நேராதார்
போர் முற்றொன்று அறியாத புரிசைசூழ் புனலூரன்."
(கலி. மருதம். உ)

என்பது குறிப்பினாற் பாட்டுடைத்தலைமகனே கிளவித்தலைமகனாக வந்தது.

"பூந்தண்டார்ப் புலர்சாந்தில் தென்னவன் உயர்கூடல்
தேம்பாய அவிழ்நீலத் தலர்வென்ற அமருண்கண்
ஏந்துகோட் டெழில்யானை ஒன்னாதார்க் கவன்வேலில்
சேந்துநீ இனையையால் ஒத்ததோ சின்மொழி."
(கலி. குறிஞ்சி. உக)

இது காமத்தின்கண் வந்தது. (உஉ)

அக. காமப்பகுதி கடவுளும் வரையார்
ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர்.

இது, கடவுள்மாட்டு வருவதொரு பாடாண்பக்கம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) காமப்பகுதி† கடவுளும் வரையார் - காமப்பகுதி கடவுள்மாட்டும் வரையார், ஏனோர்பாங்கினும் (வரையார்) என் மனார் புலவர் - ஏனோர்மாட்டும் வரையார் என்பர் புலவர்.

என்றது, கடவுள்மாட்டுத் தெய்வப்பெண்டிர் நயந்த பக்கமும், மானிடப்பெண்டிர் நயந்த பக்கமும் பாடப்பெறும் என்றவாறு.

## உதாரணம்

"நல்கினும்‡ நாமிசையாள் நோம்என்னும் சேவடிமேல்
ஒல்கினும் உச்சியாள் நோம்என்னும்—மல்கிருள்
ஆடல் அயர்ந்தாற்கு§ அரிதால் உமையாளை
ஊடல் உணர்த்துவதோர் ஆறு." (புறப். பாடாண். சஅ)

இது தெய்வப்பெண்டிர் நயந்த பக்கம்.

---

(பாடம்) * கினிது.

† பகுதி ஆகுபெயர். அது கடவுள்மாட்டுக் கடவுட்பெண்டிர் நயப்பனவும், அவர்மாட்டு மானிடப்பெண்டிர் நயப்பனவும் கடவுள் மானிடப்பெண்டிரை நயப்பனவும் பிறவும் ஆம் (தொல். புறம். உஅ) (நச்சி

(பாடம்) ‡ நல்கெனின். § அமர்ந்தாற்கு.

"அரிகொண்ட கண்சிவப்ப அல்லினென் ஆகம்
புரிகொண்ட நூல்வடுவாப் புல்லி—வரிவண்டு
பண்நலங்கூட் டுண்ணும் பனிமலர்ப் பாசூர்என்
உண்ணலங் கூட்டுண்டா னூர்." (புறப். பாடாண். ௪௧)

இது மானிடப்பெண்டிர் நயந்த பக்கம். (உக)

அஉ. குழவி மருங்கினும் கிழவ தாகும்.

இது, குழவிப் பருவத்தும் காமப்பகுதி பாடப்பெறும் என்பது உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) குழவி மருங்கினும்* கிழவது ஆகும் - குழவிப் பருவத்தும் காமப்பகுதி கூறல்பெறும் (அவர் விளையாட்டு மகளிரொடு பொருந்தியக்கண்.)

## உதாரணம்

"வரிப்பந்து கொண்டொளித்தாய் வாள்வேந்தன் மைந்தா
அரிக்கண்ணி அஞ்சி அலற—எரிக்கதிர்வேல்
செங்கோலன் நுங்கோச் சினக்களிற்றின் மேல்வரினும்
எங்கோலம் தீண்டல் இனிது." (புறப். பாடாண். ௫0)

அங. ஊரொடு† தோற்றமும் உரித்தென மொழிப
வழக்கொடு சிவணிய வகைமை‡ யான.

இதுவும் அது.

(இ - ள்.) ஊரொடு தோற்றமும் உரித்து என மொழிப- ஊரின்கண் காமப்பகுதி நிகழ்த்தலும் உரித்து என்று சொல்வர் புலவர், வழக்கொடு சிவணிய வகைமையான - அது நிகழுங்காலத்து வழக்கொடு பொருந்திநடக்கும் வகைமையின் கண்.

---

* மருங்கு என்றதனால் மக்கட்குழவியாகிய ஒரு மருங்கே கொள்க. குழவிப்பருவங் கழிந்தோர் அது வேண்டியக்காலும் அக் குழவிப் பருவமே கருதிப் பாடும் என்றற்குக் கிழவதாகும் என்றார். (தொல், புறம். உக) (நச்சி.)

† இச் சூத்திரத்திற்குத் தலைவர் பிறந்த ஊரும் அவர் பிறப்பும் என்று பொருள் கூறன், மரபியல் கண்ணே 'ஊரும் பெயரும் (தொல். மரபு. எச) என்னுஞ் சூத்திரத்து ஊர் பெறுதலானும் முன்னர் 'வண்ணப் பகுதி' (தொல். புறத்திணை - உஎ) என்பதனால் பிறப்புப் பெறுதலானும் இது கூறியது கூறலாம் என்றுணர்க. (தொல். புறம். க0) (நச்சி.)

‡ 'சிவணிய வகைமை' என்றதனானே முற்கூறியவற்றோடே நாடும் ஊரும் மலையும் யாறும் படையும் கொடியும் குடையும் முரசும் நடைநவில் புரவியும் களிறும் தேரும் தாரும் பிறவும் வருவன எல்லாம் கொள்க. (தொல். புறம். கூக) (நச்சி.)

'ஊரொடு தோற்றம்' என்பது பேதை முதலாகப் பேரிளம்பெண் ஈறாக வருவது. 'வழக்கு' என்பது சொல்லுதற்கு ஏற்ற நிலைமை. 'வகை' என்பது அவரவர் பருவத்திற்கு ஏற்கக்கூறும் வகைச்செய்யுள். உதாரணம் வந்தவழிக் கண்டுகொள்க. (உ௫)

அச. மெய்ப்பெயர் மருங்கின் வைத்தனர் வழியே.

இதுவும், பாடாண்பாட்டிற்கு உரியதோரு மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) மெய்ப்பெயர் மருங்கின் வைத்தனர் வழியே - மேற்சொல்லப்பட்டனவும் இனிக் கூறுகின்றனவும் ஒருவற்குக் காரணமாகி மெய்ப்பெயராகி வரும் பொதுப்பெயரான் அன்றி இயற்பெயரின் பக்கத்து வைத்தனர் நெறிப்பட. (உசு)

அரு. கோடிநிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தோடு கண்ணிய வருமே*.

இது, சார்ந்துவருமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) வடு நீங்கு சிறப்பின் கொடிநிலை கந்தழி வள்ளி என்ற முதலன மூன்றும் - குற்றம் தீர்ந்த சிறப்பினையுடைய கொடிநிலை முதலாகச் சொல்லப்பட்ட முற்பட்ட மூன்றும், கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வரும் - பாட்டுடைத் தலைமகனைச் சார்த்தி வருங்காலத்துக் கடவுள் வாழ்த்தொடு பொருந்தி வரும்.

## உதாரணம்

"பூங்கண் நெடுமுடிப் பூவைப்பூ மேனியான்
பாம்புண் பறவைக் கொடிபோல—ஓங்குக
பல்யானை மன்னர் பணியப் பனிமலர்த்தார்க்
கொல்யானை மன்னன் கொடி." (புறப். பாடாண். ௩௬)

இது கொடிநிலை.

---

*கீழ்த்திசைக் கண்ணே தோன்றும் 'மண்டிலம்' என்றுற்போலக் 'கொடிநிலை' என்பதூஉம் அப்பொருள் தந்ததோர் ஆகுபெயர். இனி, எப்புறமும் நீடுசென்று எறித்தலின் அந்நீடல் நிலைமைபற்றிக் கொடிநிலை என்பாரும் உளர்.

வள்ளி என்பதுவும் கொடியை. என்னை? பன்மீன் தொடுத்த உடுத்தொடையைக் கொடி எனப்படுதலின் அத்தொடையினை இடைவிடாது உடைத்தாதலின் அதனை அப்பெயராற் கூறினர்: முத்துக் கொடி எனவும் மேகவள்ளி எனவும் கூறுமதுபோல. கந்தழி அவ்விரண்டற்கும் பொதுவாய் நிற்றலின் இடையேவைத்தார். (தொல். புறம். ௩௩) (நச்சி)

'அன்றெறிந் தானும் இவனால் அரண்வலித்து
இன்றிவன் மாறுய் எதிர்வார்யார்—கன்றும்*
அடையார் மணிப்பூண் அடையாதார் மார்பின்
சுடராழி நின்றெரியச் சோ.'' (புறப். உழிஞை. எ)

இது கந்தழி.

வள்ளியிற் சார்ந்து வருமாறு வந்தவழிக் கண்டுகொள்க. ''வந்தது கொண்டு வாராத துணர்த்தல்'' (தொல். மரபி. கக0) என்பதனால் புலவராற்றுப்படை முதலாகிய மூன்றும் சார்த்தி வருமெனவும் கொள்க. முருகாற்றுப்படையுள்,

''மாடமலி மறுகிற் கூடற் குடவயின்
இருஞ்சேற்று அகல்வயல் விரிந்துவாய் அவிழ்ந்த
முள்தாள் தாமரைத் துஞ்சி'' (திருமுருகு. எக-எக)

என்றவழி, ஒரு முகத்தாற் பாண்டியனையும் இதனுட்சார்த்தியவாறு காண்க.

முனிப் பரவற்குச் சார்ந்து வருமாறு:—''கெடலரு மாமுனிவர் கிளடர்ந்துடன்'' என்னுங் கலிப்பாட்டினுள்,

''அடுதிறல் ஒருவநிற் பரவுதும் எங்கோன்
தொடுகழற் கொடும்பூண் பகட்டெழின் மார்பில்
கயலொடு கலந்த சிலையுடைக் கொடுவரிப்
புயல்உறழ் தடக்கைப் போர்வேல் அச்சுதன்
ஒன்று முதுகடல் உலகம் முழுவதும்
ஒன்றுபுரி திகிரி உருட்டுவோன் எனவே''
(யாப்- விரு. அக. மேற்கோள்)

என்பதனுட் பாட்டுடைத் தலைமகனைச் சார்த்தியவாறு காண்க. பிறவும் அன்ன. (உஎ)

அகூ. கோற்ற வள்ளை ஓரிடத் தான.

இது, பாடாண்திணைக்கு உரியதொரு பொருள் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) கொற்றவள்ளை ஓர் இடத்து ஆன - கொற்றவள்ளையும் ஓர் இடத்துப் பாடாண்பாட்டாம்.

என்றது, துறைகூறுதல் கருத்தாயின் வஞ்சியாம்; புகழ்தல் கருத்தாயின் பாடாண்திணையாம் என்றவாறு.

---

(பாடம்) *என்றும்.

† இச்சூத்திரம் மக்கட்கு எய்திய பொருண்மையை மீட்டும் கூறி நியமித்ததாம். ஆகவே, வெட்சி முதல் வஞ்சியிற் கொற்றவள்ளை ஈறுய பொருண்மை உழிஞைமுதற் பாடாண் திணைக்கு உரியராகி இடைபுகுந்த தேவர்க்கு ஆகா என விதிவகையான் விலக்கியதாம். எனவே தேவர்க்கு உழிஞை முதலிய கொற்றவள்ளை ஆம் என்பதூஉம் கூறினாராயிற்று (தொல். புறம். கூச) (நச்சி.)

## உதாரணம்

"வல்லா ராயினும் வல்லுந ராயினும்
புகழ்தலுற் றோர்க்கு மாயோன் அன்ன
உரைசால் சிறப்பின் புகழ்சால் மாற
நின்னொன்று கூறுவது உடையேன் என் எனின்,
நீயே, பிறர்நாடு கொள்ளுங் காலை அவர்நாட்டு
இறங்குகதிர்க் கழனிநின் இளையருங் கவர்க
நனந்தலைப் பேரூர் எரியும் நக்க
மின்னுநிமிர்ந் தன்னநின் ஒளிறிலங்கு நெடுவேல்
ஒன்னார்ச் செகுப்பினுஞ் செகுக்க என்னதூஉம்
கடிமரந் தடிதல் ஓம்புநின்
நெடுநல் யானைக்குக் கந்தாற் றாவே." (புறம். ருஎ) (உஅ)

அஎ. கொடுப்போர் ஏத்திக் கொடாஅர்ப் பழித்தலும்
அடுத்தூர்ந் தேத்திய இயல்மொழி வாழ்த்தும்
சேய்வரல் வருத்தம் வீட வாயில்
காவலர்க் குரைத்த கடைநிலை யானும்
கண்படை கண்ணிய கண்படை நிலையும்
கபிலை கண்ணிய வேள்வி நிலையும்
வேலை நோக்கிய* விளக்கு நிலையும்
வாயுறை வாழ்த்தும் செவியறி வுறூஉவும்†
ஆவயின் வரூஉம் புறநிலை வாழ்த்தும்
கைக்கிளை வகையோடு உளப்படத் தொகைஇத்
தொக்க நான்கும் உளவென மொழிப.

இது, பாடாண்திணைக்குத் துறையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) 'கொடுப்போ ரேத்திக் கொடா அர்ப் பழித்தல்' முதலாக 'வேலை நோக்கிய விளக்கு நிலை' ஈறுகச் சொல்லப் பட்டனவும், 'வாயுறை வாழ்த்து' முதலாகக் 'கைக்கிளை' உளப்பட்ட நால்வகையும் பாடாண்திணைக்குத் துறையாம் என்று சொல்லுவர் புலவர் என்றவாறு.

கொடுப்போர் ஏத்திக் கொடார்ப் பழித்தல் என்றது, கொடுப்போர் ஏத்தல் எனவும், கொடார்ப் பழித்தல் எனவும், கொடுப்போர் ஏத்திக் கொடார்ப் பழித்தல் எனவும் மூவகைப்படும்.

இதனாற் பெற்றது, ஈவோரைப் புகழ்தலும், ஈயாதோரைப் பழித்தலும், ஈவோரைப் புகழ்ந்து ஈயாதோரைப் பழித்தலும் என்றவாறு.

---

(பாடம்) *வேலின் நோக்கிய. †உறூஉம்.

### கொடுப்போர் ஏத்தல் வருமாறு

"தடவுநிலைப் பலவின் நாஞ்சிற் பொருநன்
மடவன் மன்ற செந்நாப் புலவீர்
வளைக்கை விறலியர் படப்பைக் கொய்த
அடகின் கண்ணுறை யாக யாம்சில
அரிசி வேண்டினெம் ஆகத் தான்பிற
வரிசை அறிதலில் தன்னுந் தூக்கி
இருங்கடறு வளைஇய குன்றத்து அன்னதோர்
பெருங்களிறு நல்கி யோனே அன்னதோர்
தேற்றா ஈகையும் உளதுகொல்
போற்றார் அம்ம பெரியோர்தங் கடனே." (புறம். கசO)

"பாரி பாரி யென்றுபல ஏத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி ஒருவனும் அல்லன்
மாரியும் உண்டீண்டு* உலகுபுரப் பதுவே." (புறம். கOஎ)

### கொடார்ப் பழித்தல் வருமாறு

"ஒல்லுவது ஒல்லும் என்றலும் யாவர்க்கும்
ஒல்லாது இல்லென மறுத்தலும் இரண்டும்
ஆள்வினை† மருங்கிற் கேண்மைப் பாலே
ஒல்லாது ஒல்லும் என்றலும் ஒல்லுவது
இல்லென மறுத்தலும் இரண்டும் வல்லே
இரப்போர் வாட்டல் அன்றியும் புரப்போர்
புகழ்குறை படூஉம் வாயில் அத்தை
அனைத்தா கியர்இனி இதுவே எனைத்தும்
சேய்த்துக் காணாது‡ கண்டனம் அதனால்
நோயில ராகநின் புதல்வர் யானும்
வெயிலென முனியேன் பனியென மடியேன்
கல்குயின் றன்னஎன் நல்கூர் வளிமறை
நாணலது இல்லாக் கற்பின் வாள்நுதல்
மெல்லியற் குறுமகள் உள்ளிச்
செல்வல் அத்தை சிறக்கநின் நாளே." (புறம். ககச)

### கொடுப்போர் ஏத்திக் கொடார்ப் பழித்தல் வருமாறு

"களங்கனி அன்ன கருங்கோட்டுச் சீறியாழ்ப்
பாடின்§ பனுவற் பாணர் உய்த்தெனக்
களிறில வாகிய புல்லரை நெடுவெளிற்
கான மஞ்ஞை கணனொடு சேப்ப
ஈகை அரிய இழையணி மகளிரொடு
சாயின் றென்ப ஆஅய் கோயில்
சுவைக்கினி தாகிய குய்யுடை அடிசில்
பிறர்க்கீ வின்றித் தம்வயி றருத்தி
உரைசால் ஓங்குபுகழ் ஓரீஇய
முரைசுகெழு செல்வர் நகர்போ லாதே." (புறம். கஉஎ

இதனுள் ஏத்தப்பட்டவன் ஆய, பழிக்கப்பட்டவர் செல்வர்.

(பாடம்) *உண்டிவ். † மாண்வினை. ‡ செய்து காணாதது. § பாட்டின்.

அடுத்து ஊர்ந்து ஏத்திய இயல்மொழி வாழ்த்தும் - வென்றியும் குணனும் அடுத்துப் பரந்து ஏத்திய இயல்மொழி வாழ்த்தும்.

அஃது, இயல்மொழி எனவும், வாழ்த்து எனவும், இயல்மொழி வாழ்த்து எனவும் மூவகைப்படும்.

## உதாரணம்

"ஊர்க்குறு மாக்கள் வெண்கோடு கழாஅலின்
நீர்த்துறை படியும் பெருங்களிறு போல
இனியை பெரும எமக்கே மற்றதன்
துன்னருங் கடாஅம் போல
இன்னாய் பெருமநின் ஒன்னா தோர்க்கே." (புறம் கச)

இஃது இயல்மொழி.

"ஆன்முலை அறுத்த அறனி லோர்க்கும்
மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
குரவர்த்* தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கிற் கழுவாயும் உளவென†
நிலம்புடை பெயர்வ தாயினும் ஒருவன்
செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்லென
அறம்பா டிற்றே ஆயிழை கணவ
காலை அந்தியும் மாலை அந்தியும்
புறவுக் கருவன்ன புன்புல வரகின்
பாற்பெய் புன்கம் தேனொடு மயக்கிக்
குறுமுயற் கொழுஞ்சூடு கிழித்த ஒக்கலொடு
இரத்தி நீடிய அகன்தலை மன்றத்துக்
கரப்பில் உள்ளமொடு வேண்டுமொழி பயிற்றி
அமலைக் கொழுஞ்சோறு ஆர்ந்த பாணர்க்கு
அகலாச் செல்வம் முழுவதுஞ் செய்தோன்
எங்கோன் வளவன் வாழ்க என்றுநின்
பீடுகெழு நோன்தாள் பாடேன் ஆயின்
படுபறி யலனே பல்கதிர்ச் செல்வன்
யானோ தஞ்சம் பெருமஇவ் வுலகத்துச்
சான்றோர் செய்த நன்றுண் டாயின்
இமயத்து ஈண்டி இன்குரல் பயிற்றிக்
கொண்டல் மாமழை பொழிந்த
நுண்பல் துளியினும் வாழிய பலவே." (புறம். கூச)

இது வாழ்த்து.

"ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புலம் வாழ்நர்க் கருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்
எம் அம்பு கடிவிடுதும் நும்அரண் சேர்மினென
அறத்தாறு நுவலும் பூட்கை மறத்திற்
கொல்களிற்று மீமிசைக் கொடிவிசும்பு நிழற்றும்

(பாடம்) *பார்ப்பார்த். † உளவே.

எங்கோ வாழிய குடுமி தங்கோச்
செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீத்த
முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே." (புறம். க)

இஃது இயல்மொழி வாழ்த்து.

"பார்ப்பார்க்கு அல்லது பணிபறி யலையே
பணியா உள்ளமொடு அணிவரக் கெழீஇ
நட்டோர்க் கல்லது கண்ணஞ் சலையே
வணங்குசிலை பொருதநின் மணங்கமழ் அகலம்
மகளிர்க்கு அல்லது மலர்ப்பறி யலையே
நிலந்திறம் பெயருங் காலை ஆயினும்
கிளந்த சொல்நீ பொய்ப்பறி யலையே
சிறியிலை உழிஞைத் தெரியல் சூடிக்
கொண்டி மிகைபடத் தண்டமிழ் செறித்துக்
குன்றுநிலை தளர்க்கும் உருமிற் சீறி
ஒருமுற் றிருவர் ஒட்டிய ஒள்வாள்
செருமிகு தானை வெல்போ ரோயே
ஆடுபெற்று அழிந்த மள்ளர் மாறி
நீகண் டனையேம் என்றனர் நீயும்
நும்நுகம் கொண்டினும் வென்றோய் அதனால்
செல்வக் கோவே சேரலர் மருக
கால்திரை எடுத்த முழங்குகுரல் வேலி
நனந்தலை உலகஞ் செய்தநன் றுண்டெனின்
அடையடுப் பறியா அருவி யாம்பல்
ஆயிர வெள்ள ஊழி
வாழி யாத வாழிய பலவே" (பதிற்றுப். சுங)

என்பதும் அது. பிறவும் அன்ன.

சேய்வரல் வருத்தம் வீட வாயில்காவலர்க்கு உரைத்த கடைநிலையும் - சேய்மைக்கண்ணின்று வருகின்ற வருத்தம் தீர வாயில் காவலர்க்கு உரைத்த வாயில் நிலையும்.

## உதாரணம்

"வாயி லோயே வாயி லோயே
வள்ளியோர் செவிமுதல் வயங்குமொழி வித்தித்தாம்*
உள்ளியது முடிக்கும்† உரனுடை உள்ளத்து
வரிசைக்கு வருந்தும்இப் பரிசில் வாழ்க்கைப்
பரிசிலர்க்கு அடையா வாயி லோயே
கடுமான் தோன்றல் நெடுமான் அஞ்சி
தன்அறி யலன்கொல் என்னறி யலன்கொல்
அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென
வறுந்தலை உலகமும் அன்றே அதனாற்
காவினெம் கலனே சுருக்கினெம் கலப்பை
மரங்கொல் தச்சன் கைவல் சிறுஅர்
மழுவுடைக் காட்டகத் தற்றே
எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே." (புறம். உ0௬)

(பாடம்) * விதைத்துத்தாம். † விளைக்கும்

கண்படை* கண்ணிய கண்படை நிலையும் - இறைவன் கண்படை நிலையைக் குறித்த கண்படை நிலையும்.

என்றது, அரசன் இனிது துயின்றது கூறல் என்றவாறும்.

## உதாரணம்

"மேலார் இறைஅமருள் மின்னார் சினஞ்சொரியும்
வேலான் விறன்முனை வென்றடக்கிக்—கோலால்
கொடிய உலகில் குறுகாமை எங்கோன்
கடியத் துயிலேற்ற கண்." (புறப். பாடாண். அ)

கபிலை கண்ணிய வேள்விநிலையும்-கபிலையைக் குறித்த வேள்விநிலையும்.

## உதாரணம்

"பருக்காழும் செம்பொன்னும் பார்ப்பார் முகப்பக்
குருக்கண் கபிலை கொடுத்தான்—செருக்கோடு
இடிமுரசத் தானை இகலிரிய எங்கோன்
கடிமுரசங் காலைச்செய் வித்து†." (புறப். பாடாண். கச)

வேலை நோக்கிய விளக்குநிலையும் - வேலினைக் குறித்த விளக்கு நிலையும். நோக்குதலாவது, விளக்கு ஏதுவாக வேலின் வெற்றியைக் காட்டுதல்.

## உதாரணம்

"வளிதுரந்தக் கண்ணும் வலந்திரியாப் பொங்கி
ஒளிசிறந்தாங்கு‡ ஓங்கி வரலால்—அளிசிறந்து
நன்னெறியே காட்டும் நலந்தெரி கோலாற்கு
வென்னெறியே காட்டும் விளக்கு. (புறப். பாடாண். கஉ)

வாயுறை வாழ்த்தும் - வெஞ்சொல்லைப் பிரித்தலின்றிப் பிற்பயக்கு மென்று வேம்பும் கடுவும்போல ஓம்படைக் கிளவியாலே மெய்யுறக் கூறுதலும்.

## வாயுறை வாழ்த்தின் இலக்கணம்

"வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்
வேம்பும் கடுவும் போல வெஞ்சொல்
தாங்குதல் இன்றி வழிநனி பயக்குமென்று
ஓம்படைக் கிளவியின் வாயுறுத் தற்றே." (தொல்.செய்யு.க0அ)

## உதாரணம்

"காய்நெல் அறுத்துக் கவளங் கொளினே
மாநிறைவு இல்லதும் பன்னாட் காகும்
நூறுசெறு ஆயினுந் தமித்துப்புக் குணினே
வாய்புகு வதனினுங் கால்பெரிது கெடுக்கும்
அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே

*கண்படை கண்ணிய என்றூர், கண்படைமுடி பொருளாக இடை நின்ற உண்டி முதலியனவும் அடக்குதற்கு. (தொல்.புறம்.௩௫) (நச்சி.) (பாடம்) † காலைசெய. ‡ ஒளிசிறந்து.

கோடி யாத்து நாடுபெரிது நந்தும்
மெல்லியன் கிழவ னாகி வைகலும்
வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப எடுக்கும் பிண்டம் நச்சின்
யானை புக்க புலம்போலத்
தானும் உண்ணான் உலகமுங் கெடுமே." (புறம். கஅச)

செவியறிவுறூஉம்-உயர்ந்தோர்மாட்டு அவிந்து ஒழுகுதல்வேண்டும் எனச் செவியறிவுறுத்துக் கூறுதலும்.

செவியுறையின் இலக்கணம்

"செவியுறை தானே
பொங்குதல் இன்றிப் புரையோர் நாப்பண்
அவிதல்* கடனெனச் செவியுறுத் தற்றே."
(தொல். செய்யு. ககO)

உதாரணம்

"அந்தணர் சான்றோர் அருந்தவத்தோர் தம்முன்னோர்
தந்தைதாய் என்றிவர்க்குத் தார்வேந்தே—முந்தை
வழிநின்று பின்னை வயங்குநீர் வேலி
மொழிநின்று கேட்டல் முறை." (புறப். பாடாண். ௨௨)

ஆவயின் வரூஉம் புறநிலை வாழ்த்தும்-மன்னன் இடத்ததாகி வரும் புறநிலை வாழ்த்தும். அது,

"வழிபடு தெய்வம் நிற்புறங் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து
பொலிமின் என்னும் புறநிலைவாழ்த்தே" (தொல். செய்யு.கOசு)

என்பதனால் இனிது வாழ்மின் என்னும் பொருள்மேல் வரும்.

உதாரணம்

"தென்றல் இடைபோழ்ந்து தேனார் நறுமுல்லை
முன்றில் முகைவிரியும் முத்தநீர்த் தண்கோளூர்க்
குன்றமர்ந்த கொல்லேற்றான் நிற்காப்ப—என்றுந்
திரா நண்பின் தேவர்
சீர்சால் செல்வமொடு பொலிமதி சிறந்தே."
(யா. விரு. ௫௫-மேற்கோள்)

கைக்கிளை வகையொடு - ஆண்பாற்கூற்றுக் கைக்கிளையும் பெண்பாற்கூற்றுக் கைக்கிளையும்.

இவையும் பாடாண் பாட்டாம் என்றவாறு.

உதாரணம்

"துடியடித் தோற்செவித் தூங்குகை நால்வாய்ப்
பிடியேயான் நின்னை இரப்பல்—கடிகமழ்தார்ச்
சேலேக வண்ணனொடு† சேரி புகுதலும்எம்
சாலேகம் சார நட" (முத்தொள். ௫O)

எனவும்,

(பாடம்) *நவிலுதல். †வண்ணன்எஞ் சேரிபுகுதுங்காற்.

"அணியாய செம்பழுக்காய் வெள்ளிலையோ டேந்திப்
பணியாயோ எம்பெருமான் என்று—கணியார்வாய்க்
கோள்நலங் கேட்பதூஉங் கொங்கர் பெருமானார்
தோள்நலஞ் சேர்தற் பொருட்டு".

எனவும் வரும். பிறவும் அன்ன.

உளப்பட தொகைஇ தொக்க நான்கும் உள என மொழிப - உளப்படத் தொகைஇத் தொக்க நான்கும் (முன்னையவும் இத்திணைக்கு) உள என மொழிப. (உக)

அஅ. தாவில் நல்லிசை கருதிய கிடந்தோர்க்குச்*
சூதர் ஏத்திய துயிலெடை நிலையும்
கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
சென்றுபயன் எதிரச் சொன்ன பக்கமும்
சிறந்த நாளினிற்† செற்றம் நீக்கிப்
பிறந்த நாள்வயின் பெருமங் கலமும்
சிறந்த சீர்த்தி மண்ணுமங் கலமும்
நடைமிகுத்து ஏத்திய குடைநிழல் மரபும்
மாணார்ச் சுட்டிய வாள்மங் கலமும்
மன்எயில் அழித்த மண்ணுமங் கலமும்
பரிசில் கடைஇய கடைக்கூட்டு நிலையும்
பெற்ற பின்னரும் பெருவளன் ஏத்தி
நடைவயின் தோன்றிய‡ இருவகை விடையும்
அச்சமும் உவகையும் எச்சம் இன்றி
நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்
காலங் கண்ணிய ஓம்படை உளப்பட
ஞாலத்து வரூஉம் நடக்கையது குறிப்பின்
காலம் மூன்றொடு கண்ணிய வருமே.

இதுவும் அது.

---

*கிடந்தோர்க்கு எனப் பன்மை கூறவே, அவர் துயிலெடுப்புத் தொன்றுதொட்டு வரும் என்பதூஉம், சூதர், மாகதர், வேதாளிகர், வந்திகர் முதலாயினோருட் சூதரே இங்ஙனம் வீரத்தால் துயின்றோரைத் துயில் எடுப்புவர் என்பதூஉம், யாண்டும் முன்னுள்ளோரையும் பிறரையும் கூறப்படும் என்பதூஉம் கொள்க. (தொல். புறம். ௩௬) (நச்சி.)

(பாடம்) †நாளணி. ‡ தோன்றும்.

(இ - ள்.) 'துயிலெடைநிலை' முதலாகப் 'பரிசில் விடை' ஈருகச் சொல்லப்பட்டனவும், நாளும் புள்ளும் நிமித்தமும் ஓம்படையும் உட்பட்ட உலக வழக்கின் அறியும் மூன்று காலமும் பற்றி வரும் பாடாண்திணை என்றவாறு.

கிடந்தோர்க்கு தாவில் நல்இசை கருதிய சூதர் ஏத்திய துயில் எடைநிலையும் - கிடந்தோர்க்குக் கேடு இல்லாத நற்புகழைப் பொருந்த வேண்டிச் சூதர் ஏத்திய துயில் எடைநிலையும்.

## உதாரணம்

''அளந்த திறையார் அகலிடத்து மன்னர்
வளந்தரும் வேலோய் வணங்க—களந்தயங்கப்
பூமலர்மேற் புள்ளொலிக்கும் பொய்கைசூழ் தாமரைத்
தூமலர்க்கண் நேர்க துயில்.'' (புறப், பாடாண். க)

கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும் ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றி பெற்ற பெருவளம் பெறுர்க்கு அறிவுறீஇ சென்று பயன் எதிர சொன்ன பக்கமும்-கூத்தராயினும் பாணராயினும் பொருநராயினும் விறலியாயினும் நெறியிடைக் காட்சிக்கண்ணே எதிர்ந்தோர் உறழ்ச்சியால் தாம் பெற்ற பெருவளன் நுமக்குப் பெறலாகும் எனவும் சொன்ன பக்கமும்.

'பக்கமும்' என்றதினுன், ஆற்றினது அருமையும் அவன் ஊரது பண்பும் கூறப்படும். அவற்றுள்,

### கூத்தராற்றுப்படை வருமாறு

''திருமழை தலைஇய'' (மலைபடுகடாம்.க) என்னும் பாட்டுட் காண்க,

### பாணாற்றுப்படை வருமாறு

''பாணன் சூடிய பசும்பொன் தாமரை
மாணிழை விறலி மாலையொடு விளங்கக்
கடும்பரி நெடுந்தேர் பூட்டுவிட் டசைஇ
ஊரீர் போலச் சுரத்திடை இருந்தனிர்*
யாரீ ரோவென வினவல் ஆனுக்
காரென் ஒக்கற் கடும்பசி இரவல
வென்வே லண்ணற் காணு ஊங்கே
நின்னினும் புல்லியேம் மன்னே இனியே
இன்னே மாயினேம் மன்னே யென்றும்
உடாஅ போரா ஆகுதல் அறிந்தும்
படாஅம் மஞ்ஞைக் கீத்த எங்கோ
கடாஅ யானைக் கலிமான் பேகன்
எத்துணை யாயினும் ஈத்தல் நன்றென
மறுமை நோக்கின்றோ அன்றே பிறர்
வறுமைநோக் கின்றவன் கைவண் மையே.'' (புறம். கசுக)

(பாடம்) *இருந்திர்.

பொருநராற்றுப்படை வருமாறு

"சிலையுலாய் நிமிர்ந்த சாந்துபடு மார்பின்
புலிபுனற்* கழனி வெண்குடைக் கிழவோன்
வலிதுஞ்சு தடக்கை வாய்வாள் குட்டுவன்
வள்ளியன் ஆதல் வையகம் புகழினும்
உள்ளல் ஓம்புமின் உயர்மொழிப் புலவீர்
யானும், இருள்நிலாக் கழிந்த பகல்செய் வைகறை
ஒருகண் மாக்கிணை தெளிர்ப்ப ஒற்றிப்
பாடிமிழ் முரசின் இயல்தேர்த் தந்தை
வாடா வஞ்சி பாடினேன் ஆக
அகமலி உவகையோடு அணுகல் வேண்டிக்
கொன்றுசினந் தணியாப் புலவுநாறு மருப்பின்
வெஞ்சின வேழம் நல்கினன் அஞ்சி
யானது பெயர்த்தனென் ஆகத் தான்அது
சிறிதென உணர்ந்தமை நாணிப் பிறிதும்ஓர்
பெருங்களிறு நல்கி யோனே அதற்கொண்டு
இரும்பேர் ஒக்கல் பெரும்புலம்பு உறினும்
துன்னரும் பரிசில் தருமென
என்றுஞ் செல்லேன் அவன் குன்றுகெழு நாட்டே."

(புறம். ௩௯௪)

விறலியாற்றுப்படை வருமாறு

"மெல்லியல் விறலிநீ நல்லிசை செவியிற்
கேட்பின் அல்லது காண்பறி யலையே
காண்டல் வேண்டினை யாயின் மாண்டநின்
விரைவளர் கூந்தல் வரைவளி உளரக்
கலவ மஞ்ஞையிற் காண்வர இயலி
மாரி யன்ன வண்மைத்
தேர்வேள் ஆயைக் காணிய சென்மே." (புறம். ௧௩௩)

சிறந்த நாளினிற் செற்றம் நீக்கிப் பிறந்த நாள்வயின் பெருமங்கலமும் சிறந்த நாட்கண் உண்டாகிய செற்றத்தை நீக்கிப் பிறந்த நாட்கண் உளதாகிய பெருமங்கலமும்.

உதாரணம்

"அந்தணர் ஆவொடு பொன்பெற்றார் நாவலர்†
மந்தரம்போல் மாண்ட களிறூர்ந்தார்—எந்தை
இலங்கிலைவேல் கிள்ளி இரேவதிநாள் என்னோ
சிலம்பிதன் கூடிழந்த வாறு." (முத்தொள். ௮௨)

சிறந்த சீர்த்தி மண்ணு மங்கலமும்-ஆண்டுதோறும் முடிபுனையும் வழி நிகழும் மிகப்புண்ணிய நீராட்டு மங்கலமும். இதற்குச் செய்யுள் வந்தவழிக் காண்க.

நடை மிகுத்து ஏத்திய குடை நிழல் மரபும்-ஒழுக்கத்தை மிகுத்து ஏத்தப்பட்ட குடை நிழல் மரபு கூறுதலும்.

(பாடம்) *ஒலிகதிர்க். †பாவலர்.

## உதாரணம்

"திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்
கொங்கலர் தார்ச் சென்னி குளிர்வெண் குடைபோன்றிவ்
வங்க ணுலகளித்த லான்." (சிலப். மங்கல. க)

மாணார்ச் சுட்டிய வாள் மங்கலமும் - பகைவரைக் கருதிய வாள் மங்கலமும்.

## உதாரணம்

"பிறர்வேல் போலா தாகி இவ்வூர்
மறவன் வேலோ பெருந்தகை உடைத்தே
இரும்புற நீறும் ஆடிக் கலந்திடைக்
குரம்பைக் கூரைக் கிடக்கினும் கிடக்கும்
மங்கல மகளிரொடு மாலை சூட்டி*
இன்குரல் இரும்பை யாழொடு ததும்பத்
தெண்ணீர்ப் படுவினுந் தெருவினும் திரிந்து
மண்முழுது அழுங்கச் செல்லினுஞ் செல்லுமாங்கு
இருங்கடல் தானை வேந்தர்
பெருங்களிற்று முகத்தினுஞ் செலவா னதே." (புறம்:கூகூஉ)

மன் எயில் அழித்த மண்ணு மங்கலமும்-நிலைபெற்ற எயிலை அழித்த மண்ணு நீராடு மங்கலமும்.

இஃது உழிஞைப் படலத்துக் கூறப்பட்ட தாயினும் மண்ணு நீராடு தலின் இதற்கும் துறையாயிற்று. இவ்வாறு செய்தனை எனப் புகழ்ச்சிக் கண் வருவது பாடாண் திணையாம். இவ்வுரை மறத்துறை ஏழற்கும் ஒக்கும். உதாரணம் வந்தவழிக் காண்க.

பரிசில் கடைஇய கடைக்கூட்டு நிலையும் - பரிசில் கடாவுதலாகிய கடைக்கூட்டு நிலையும்.

## உதாரணம்

"ஆடுநனி† மறந்த கோடுயர் அடுப்பின்
ஆம்பி பூப்பத் தேம்புபசி உழவாப்
பாஅல் இன்மையின் தோலொடு திரங்கி
இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை
சுவைத்தொறு அழூஉந்தன் மகத்துமுக‡ நோக்கி
நீரொடு நிறைந்த ஈரிதழ் மழைக்கண்ணென்
மனையோள் எவ்வம் நோக்கி நினைஇ
நிற்படர்ந் திசினே நற்போர்க் குமண
என்நிலை யறிந்தனை யாயின் இந்நிலைத்
தொடுத்துங் கொள்ளா தமையலென் அடுக்கிய
பண்அமை நரம்பின் பச்சை நல்யாழ்
மண்அமை§ முழவின் வயிரியர்
இன்மை தீர்க்குங் குடிப்பிறந் தோயே." (புறம். கசச)

இன்னும் இதனானே, பரிசில்பெறப் போகல் வேண்டுமென்னும் குறிப்பும் கொள்க.

---

(பாடம்) * சூடி. † ஆடுனரி. ‡ முகத்தினும். § மண்ணார்.

## உதாரணம்

"நல்யாழ் ஆகுளி பதலையொடு சுருக்கிச்
செல்லா மோதில் சில்வளை விறலி
களிற்றுக்கணம் பொருத கண்ணகன் பறந்தலை
விசும்பாடு எருவை பசுந்தடி தடுப்பப்
பகைப்புல மரீஇய தகைப்பெருஞ் சிறப்பின்
குடுமிக் கோமாற் கண்டு
நெடுநீர்ப் புற்கை நீத்தனம் வரற்கே." (புறம். கூச)

பெற்ற பின்னரும் பெருவளன் ஏத்தி நடைவயின் தோன்றிய இருவகை விடையும்-பரிசில் பெற்ற பின்னரும் அவன் கொடுத்த மிக்க வளனை ஏத்தி வழக்கின்கண் தோன்றிய இருவகை விடையும். அவை யாவன, தான் போதல் வேண்டும் எனக் கூறுதலும் அரசன் விடுப்பப் போதலும்.

வளன் ஏத்தியதற்குச் செய்யுள்

"தென்பரதவர் மிடல்சாய
வடவடுகர் வாளோட்டிய
தொடையமை* கண்ணித் திருந்துவேல் தடக்கைக்
கடுமா கடைஇய விடுபரி வடிம்பின்
நற்றார்க் கள்ளின் சோழன் கோயில்
புதுப்பிறை அன்ன சுதைசெய் மாடத்துப்
பனிக்கயத் தன்ன நீள்நகர் நின்றென்†
அரிக்கூடு மாக்கிணை இரிய ஒற்றி
எஞ்சா மரபின் வஞ்சி பாட
எமக்கென வகுத்த அல்ல மிகப்பல
மேம்படு சிறப்பின் அருங்கல வெறுக்கை
தாங்காது பொழிதந் தோனே அதுகண்டு
இலம்பாடு உழந்தஎன் இரும்பேர் ஒக்கல்
விரற்செறி மரபின செவித்தொடக் குநரும்
செவித்தொடர் மரபின விரற்செறிக் குநரும்
அரைக்கமை மரபின மிடற்றியாக் குநரும்
மிடற்றமை மரபின அரைக்கியாக் குநரும்
கடுந்தெறல்‡ இராமன் உடன்புணர் சீதையை
வலித்தகை அரக்கன் வெளவிய ஞான்றை
நிலஞ்சேர் மதரணி கண்ட குரங்கின்
செம்முகப் பெருங்கிளை இழைப் §பொலிந் தாஅங்கு
அறாஅ வருநகை இனிதுபெற் றிகுமே
இருங்கிளைத் தலைமை எய்தி
அரும்படர் எவ்வம் உழந்ததன் தலையே." (புறம். நஎஅ)

தான் பிரிதல் வேண்டிக் கூறியதற்குச் செய்யுள்

"ஊனும் ஊணு முனையின் இனிதெனப்
பாலிற் பெய்தவும் பாகிற் கொண்டவும்
அளவுபு கலந்து மெல்லிது பருகி

(பாடம்) *தொடியமை. †நின்றேன். ‡கடுந்தேர். §இழையணிப்.

"விருந்துறுத் தாற்றி இருந்தென* மாகச்
சென்மோ பெருமளம் விழவுடை நாட்டென
யாந்தன் னறியுநம் ஆகத் தான்பெரிது
அன்புடை மையின் எம்பிரி வஞ்சித்
துணரியது கொளா ஆகிப் பழமூழ்த்துப்
பயம்பகர்வு அறியா மயங்கரின் முதுபாழ்ப்
பெயல்பெய் தன்ன செல்வத்து ஆங்கண்
ஈயா மன்னர் புறங்கடைத் தோன்றி
சிதாஅர் வள்பிற் சிதர்ப்புறத் தடாரி
ஊனுகிர் வலந்த தெண்கண் ஒற்றி
விரல்விசை தவிர்க்கும் மரலையில் பாணியின்
இலம்பாடு அகற்றல் யாவது புலம்பொடு
தெருமரல் உயக்கமுந் தீர்க்குவெம்† அதனால்
இருநிலங் கூலம் பாறக் கோடை
வருமழை முழக்கிடைக் கோடிய பின்றைச்
சேயை யாயினும் இவணை யாயினும்
இதற்கொண்டு அறிவை‡ வாழியோ கிணைவ
சிறுநனி ஒருவழிப் படர்கென் றோனே எந்தை
ஒலிவெள் அருவி வேங்கட நாடன்
உறுவருஞ் சிறுவரும் ஊழ்மாறு உய்க்கும்
அறத்துறை அம்பியின் மான மறப்பின்று
இருங்கோள் ஈராப் பூட்கைக்
கரும்ப னூரன் காதல் மகனே." (புறம். ௩௮௧)

அரசன் விடை கொடுப்பப் போந்தவன் கூற்று

"நின்நயந்து உறைநர்க்கும் நீநயந்து உறைநர்க்கும்
பன்மாண் கற்பின்நின் கிளைமுத லோர்க்கும்
கடும்பின் கடும்பசி தீர யாழநின்
நெடுங்குறி எதிர்ப்பை நல்கி யோர்க்கும்
இன்னோர்க்கு என்னாது என்னொடுஞ் சூழாது
வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்
எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழ வோயே
பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்துவேல் குமணன் நல்கிய வளனே." (புறம். ௧௬௩)

'இருவகை விடையும்' என்றதனால், பரிசில் பெற்றவழிக் கூறுதலும் பெயர்ந்தவழிக் கூறுதலும் ஆம்.

அச்சமும் உவகையும் எச்சம் இன்றி நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும் காலம் கண்ணிய ஓம்படை - அச்சமும் உவகையும் ஒழிவு இன்றி நாளானும் புள்ளானும் பிற நிமித்தத்தானும் காலத்தைக்குறித்த ஓம்படையும்.

அச்சமாவது, தீமை வரும் என்று அஞ்சுதல். உவகையாவது நன்மை வரும் என்று மகிழ்தல். நாளாவது, நன்னாள் தீநாள். புள்ளாவன, ஆந்தை முதலியன. பிற நிமித்தமாவன, அலகு முதலாயின. காலங் கண்ணுதலாவது, வருங்காலங் குறித்தல்.

(பாடம்) *இருந்தனே. †தீர்க்குவோம். ‡அறிநை, அறிகை.

## உதாரணம்

"ஆடியல் அழற்குட்டத்து
ஆர்இருள் அரையிரவின்
முடப்பனையத்து வேர்முதலாக்
கடைக்குளத்துக் கயங்காயப்
பங்குனிஉயர் அழுவத்துத்
தலைநாண்மீன் நிலைதிரியூ
நிலைநாண்மீன் அதன் எதிர் ஏர்தரத்
தொல்நாள்மீன் துறைபடியப்
பாசிச் செல்லாது ஊசி முன்னது
அளக்கர்த்திணை விளக்காகக்
கனையெரி பரப்பக் காலெதிர்பு பொங்கி
ஒருமீன் விழுந்தன்றால்* விசும்பி னானே
அதுகண், டியாமும் பிறரும் பல்வே றிரவலர்
பறையிசை அருவி நன்னாட்டுப் பொருநன்
நோயில னாயின் நன்றுமற் றில்லென
அழிந்த நெஞ்சம் மடியுளம் பரப்ப
அஞ்சினம்" (புறம். உஉகூ)

என்பது பிறவாறு நிமித்தம் கண்டு அஞ்சியது.

"......... ..................
புதுப்புள் வரினும் பழம்புள் போகினும்
விதுப்புறல் அறியா ஏமக் காப்பினை
அனையை ஆகல் மாறே
மன்னுயிர் எல்லாம் நின்அஞ் சும்மே" (புறம். உ0)

என்பது புள்பற்றி வந்தது.

"காலனுங் காலம் பார்க்கும்" (புறம். சக)

என்னும் புறப்பாட்டு நிமித்தம் பற்றி வந்தது.

"நல்லது† செய்தல் ஆற்றீர் ஆயினும்
அல்லது‡ செய்தல் ஓம்புமின்" (புறம். ககூ)

என்பது ஓம்படை பற்றி வந்தது.

உளப்படஞாலத்து வரும் நடக்கையது குறிப்பின் காலம் மூன்றொடு கண்ணிய வருமே-இவை உளப்படத் தோன்றும் வழக்கினது கருத்தினானே காலம் மூன்றனொடும் பொருந்தக் கருதுமாற்றான் வரும் மேற்கூறி வருகின்ற பாடாண்திணை.§ (கூ0)

இரண்டாவது புறத்திணை இயல் முற்றிற்று.

---

(பாடம்) *வீழ்ந்தன்றால் †நல்லவை. ‡அல்லவை.

§ பாடாண்திணை என்றது இவ்வழக்கியல் காலவேற்றுமை பற்றி வேறுபடுமாயின், அவையும் இப்பொருளின்கண் வேறுபடா என்பது உணர்த்தியவாறு.

அவை, பகைவர் நாட்டுப் பார்ப்பார் முதலியோரை ஆண்டுநின்றும் அகற்றிப் பொருதல் தலையாய அறம். அதுவன்றிப் பொருள் கருதாது பாதுகாவாதான் நிரையைத் தான் கொண்டு பாதுகாத்தல் அதனின் இழிந்த இடையாய அறம். அதுவன்றிப் பிறர்க்கு அளித்தற்கு நிரை கோடல் நிகழினும் அஃது அதனினும் இழிந்த கடையாய அறம் எனப்படும். (தொல் புறம். கூசு.) (நச்சி.)

# மூன்றாவது

# களவியல்

---

இவ்வோத்து என்ன பெயர்த்தோ எனின், களவியல் என்னும் பெயர்த்து. களவொழுக்கம் உணர்த்தினமையாற் பெற்ற பெயர். அஃதாதல் ஈண்டு உரைக்கின்றதனால் பயன் இன்றாம்; களவென்பது அறம் அன்மையின் [எனில்], அற்றன்று; களவு என்னும் சொற் கண்டுழியெல்லாம் அறப்பாற்படாதென்றல் அமையாது. களவாவது, பிறர்க்குரிய பொருள் மறையிற் கோடல், இன்னதன்றி, ஒத்தார்க்கும் மிக்கார்க்கும் பொதுவாகிய கன்னியரைத் தமர் கொடுப்பக் கொள்ளாது, கன்னியர், தம் இச்சையினால் தமரை மறைத்துப் புணர்ந்து பின்னும் அறநிலைவழாமல் நிற்றலால் இஃது அறமெனப்படும். அன்னதாதல் இச்சூத்திரத்தானும் விளங்கும்.

அஃதற்றாக, மேலை ஓத்தினோடு இவ்வோத்திற்கு இயைபு என்னை யெனின், மேல் கைக்கிளை முதற் பெருந்திணை இறுவாயாக எழுதிணை ஓதி அவற்றின் புறத்து நிகழுந் திணைகளும் ஓதிப்போந்தார். அவ்வெழுதிணையினும் ஒருதலை வேட்கையாகிய கைக்கிளையும், ஒப்பில்கூட்டமாகிய பெருந்திணையும் ஒழித்து இருவரன்பும் ஒத்த நிலைமையாகிய நடுவண் ஐந்திணைக்கண்ணும் புணர்ப்பும் பிரிதலும் இருத்தலும் இரங்கலும் ஊடலுமாகிய உரிப்பொருள் களவு கற்பு என்னும் இருவகைக் கைகோளினும் நிகழுமாதலின், அவ்விருவகைக் கைகோளினுங் களவாகிய கைகோள் இவ்வோத்தினுள் உணர்த்துதலான் அவற்றின் பின் கூறப்பட்டது. இது நடுவணைந்திணைக்கண் நிகழும் பொருட்பாகுபாடாயின், அகத்திணையியலின் பின் வைக்கற்பாலது எனின், ஆண்டு வைக்கக் கருதின் "வெட்சி தானே குறிஞ்சியது புறனே" [புறத்திணை-௫௯] என்னும் மாட்டேறு பெறாதாம், அதனிடைக் களவியலும் கற்பியலும் கிடத்தலான் என்க.

மற்றும், அஃது யாங்ஙனம் உணர்த்தினாரோ எனின்,

"காமப் புணர்ச்சியும் இடந்தலைப் படலும்*
பாங்கொடு தழாஅலுந் தோழியிற் புணர்வுமென்று
ஆங்கநால் வகையினும் அடைந்த சார்வொடு†
மறையென மொழிதல் மறையோர் ஆறே"(செய்யுளியல். களஅ)

என்பதனான் இந்நால்வகையும் இதனுள் உரைக்கப்படுகின்றதென்று கொள்ளப்படும். காமப்புணர்ச்சியெனினும், இயற்கைப் புணர்ச்சியெனினும், முன்னுறு புணர்ச்சி யெனினும், தெய்வப் புணர்ச்சி யெனினும் ஒக்கும். இவையெல்லாம் காரணப்பெயர். அஃதாவது, ஒத்தார் இருவர் தாமே கூடுங் கூட்டம். இடந்தலைப்பாடாவது இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைமகன் பிற்றைஞான்றும் அவ்விடத்துச்சென்று எதிர்ப்படுதல். பாங்கற் கூட்டமாவது, இப்புணர்ச்சி பாங்கற்கு உரைத்து, நீ யெமக்குத் துணையாக வேண்டுமென்ற அவன் குறிவழிச் சென்று தலைமகள் நின்ற நிலையை யுணர்த்தச் சென்று கூடுதல். தோழியிற் கூட்டமாவது, இவற்றின் பின்னர் இக்கூட்டம் நீடச்சேறல் வேண்டித் தோழியை இரந்து பின்னின்று அவள் வாயிலாகக் கூடுதல். இவை நான்கும் இம்முறையே நிகழும் என்று கொள்க. இனி இம்முறை நிகழாது இடையீடு பட்டுவரும். அஃதாமாறு, தலைமகள் எதிர்ப்பட்டுழி அன்புடையார் எல்லார்க்கும் இயற்கைப் புணர்ச்சி முட்டின்றிக் கூடுதல் உலகியல் அன்மையான் தலைமகளை யாதானும் ஓரிடத்து எதிர்ப்பட்ட தலைமகன் அவள் காதற்குறிப்புணர்ந்துநின்று, கூட்டத்திற்கு இடையீடு உண்டாயுழியும் ஆண்டுச் சென்ற வேட்கை தணியாது நின்று, முன்னைஞான்று கண்டாற் போலப் பிற்றைஞான்றும் காணலாகுமோ என ஆண்டுச் சேறலும், தலைமகளும் அவ்வாறே வேட்கையான் அடர்ப்புண்டு ஆண்டுவருதலும் ஆகியவழிப்புணர்ச்சி நிகழும். ஆண்டு ஆயத்தாரானாதல் பிறரானாதல் இடையீடுபட்டுழித் தன்வருத்தத்தினைப் பாங்கற்கு உணர்த்தி அவன் தலைமகள் நின்றுழி யறிந்து கூற, ஆண்டுச்சென்று புணரும். அவ்விடத்தும் இடையீடு பட்டுழித் தோழிவாயிலாக முயன்றெய்தும். இவ்வாறும், ஒரோவொன்று இடையீடுபட்டு வருதலும் உளவாம். அவ்வாறாயின், இயற்கைப்புணர்ச்சி இடையீடுபட்டுழிவரைந்தெய்தல் தக்கதன்றோ எனின் வரைந்தெய்துந்திறம் நீட்டிக்குமாயின் வேட்கை நிறுத்தலாற்றாதார் புணர்ச்சி கருதி முயல்ப. இவ்வாறு சான்றோர் செய்யுள் வந்தனவும் உளவோ எனின், சான்றோர் செய்யுட்களும் இவ்வாறு பொருள் கொள்ள ஏற்பன உள. அவையாவன :—

"மருந்தின் தீரா மண்ணின் ஆகாது
அருந்தவ முயற்சியின் அகற்றலும் அரிதே
தான்செய் நோய்க்குத் தான்மருந் தாகிய
தேன்இமிர் நறவின் தேறல் போல
நீதர வந்த நிறைஅருந் துயரம்நின்
ஆடுகொடி மருங்கின் அருளின் அல்லது
பிறிதில் தீரா தென்பது பின்நின்று
அறியக் கூறுதும் எழுமோ நெஞ்சே
நாடுவளங் கொண்டு புகழ்நடுதல் வேண்டித்தன்

(பாடம்) *இடந்தலைப்பாடும்
†சார்பொடு-தொல். செய்-கஅ௯, (நச்சி)

ஆடுமழைத் தடக்கை அறுத்துமுறை செய்த
பொற்கை நறுந்தார்ப் புனைதேர்ப் பாண்டியன்
கொற்கைஅம் பெருந்துறை குனிதிரை தொகுத்த
விளங்குமுத்து உறைக்கும் வெண்பல்
பன்மாண் சாயல் பரதவர் மகட்கே.''

இதனுள் ''ஆடுகொடி மருங்கின் அருளின் அல்லது பிறிதில் தீராது'' என்பதனான் இயற்கைப் புணர்ச்சி இடையீடு பட்டுப் புணர்ச்சி கருதிக் கூறியவாறு காண்க.

''மயில்கொல் மடவாள்கொல் மாநீர்த் திரையுள்
பயில்வதோர் தெய்வங்கொல் கேளிர்—குயில்பயிரும்*
கன்னி இளஞாழல் பூம்பொழில் நோக்கிய
கண்ணின் வருந்தும்என் நெஞ்சு.'' (திணைமொழி-உக)

இதனுள் ஐயநிலையைப் பாங்கற்கு உரைத்தலின் புணர்ச்சி இன்றாயிற்று.

''கொண்டல் மாமழை குடக்கேர்பு குழைத்த
சிறுகோல் இணர பெருந்தண் சாந்தம்
வகைசேர் ஐம்பால் தகைபெற வாரிப்
புலர்விடத் துதிர்த்த துகள்படு கூழைப்
பெருங்கண் ஆயம் உவப்பத் தந்தை
நெடுந்தேர் வழங்கும் நிலவுமணல் முற்றத்துப்
பந்தொடு பெயரும் பரிவி லாட்டி
அருளினும் அருளாள் ஆயினும் பெரிதழிந்து
பின்னிலை முனியல்மா நெஞ்சே என்னதூஉம்
அருந்துயர் அவலந் தீர்க்கும்
மருந்து பிறிதில்லை யான்உற்ற நோய்க்கே.'' (நற்றிணை-கசo)

இதனுள் 'அருளினும் அருளாளாயினும்' என்றமையால் கூட்டமின்மையும், 'பின்னிலை முனியல்' என்றமையால் இரந்து பின்னிற்பானாகத் துணிந்தமையும்,† தோழியிற் கூட்டத்து இயற்கைப் புணர்ச்சிக்கு ஒருப்பட்டமையும் உணர்க.

'' நறவுக்கமழ் அலரி நறவு வாய்விரிந்து
இறங்கிதழ் கமழும் இசைவாய் நெய்தற்
கண்ணித் தலையர் கருங்கைப் பரதவர்
நின்னையர் அல்லரோ நெறிதாழ் ஓதி
ஒண்சுணங் கிளமுலை ஒருஞான்று புணரின்
நுண்கயிற் றுறுவலை நுமரொடு வாங்கிக்
கைதை வேலி இவ்வூர்ச்
செய்தூட் டேனே சிறுகுடி யானே.''

பெரியீரெனச் சேட்படுத்தவழிக் கூறியது.

''கூறுவம் கொல்லோ கூறலம் கொல்லெனக்
கரந்த காமம் கைந்நிறுக் கல்லாது
நயந்துநாம் விட்ட நன்மொழி நம்பி
அரைநாள் யாமத்து விழுமழை கரந்து

(பாடம்) * குயில் பயிலும். † 'துணிந்தமையானும்'

*கார்விரை கமழுங் கூந்தற் றூவினை
நுண்ணூதல் ஆகம் பொருந்தினள் வெற்பின்
†இளமழை சூழ்ந்த மடமயில் போல
வண்டுவழிப் படரத் தண்மலர் வேய்ந்து
வில்வகுப் புற்ற நல்வாங்கு குடச்சூல்
அம்சிலம் பொடுக்கி அஞ்சினள் வந்து
‡துஞ்சூர் யாமத்து முயங்கினள் பெயர்வோள்
ஆன்ற கற்பிற் சான்ற §பெரியள்
அம்மா அரிவையோ அல்லள் தெனாஅது
ஆஅய் நன்னாட்டு அணங்குடைச் சிலம்பிற்
கவிரம் பெயரிய வுருகெழு கவாஅன்
நேர்மலை நிறைசுனை உறையுஞ்
சூர்மகள் $மாதோ என்னுமென் நெஞ்சே.'' (அகம் கக அ)

இது தோழியிற் கூடிய தலைமகன் கூற்று.

''அவரை பொருந்திய பைங்குரல் ஏனல்
கவரி மடமா கதூஉம் படர்சாரல்
கானக நாட மறவல் வயங்கிழைக்கு
யானிடை நின்ற புணை.'' (ஐந்திணையெழு·க)

இதனானே முந்துற்ற கூட்டமின்மை யுணர்க. இனி ஒரு கூட்டமும் நிகழாது ஆண்டு வந்தடைவேட்கை இருவர்க்கும் தணியாது நின்று வரைந்தெய்தலும் ஒன்று. இவ்வகையினான் இக்களவொழுக்கம் மூவகைப்படும்.

அகூ. இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்
காமக் கூட்டங் காணுங் காலை
மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்
துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே.

இனி, இதன் தலைச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், காமப் புணர்ச்சிக்கு இலக்கண வகையாற் குறியிடுதலை உணர்த்துதல் நுதலிற்று, என்பது சூத்திரம்.

(இதன் பொருள்.) இன்பமும் பொருளு........காணுங் காலை என்பது—இன்பமும் பொருளும் அறனும் என்று சொல்லப் பட்டு, அன்பொடுபுணர்ந்த நடுவண் ஐந்திணையிடத்து நிகழும் காமக் கூட்டத்தினை ஆராயுங்காலத்து என்றவாறு.

அன்பொடு புணர்ந்த ஐந்திணை என்றதனால் கைக்கிளை பெருந் திணையை ஒழித்து நின்ற முல்லை குறிஞ்சி பாலை மருதம் நெய்தல் எனக் கொள்ளப்படும். அவை அன்பொடு புணர்ந்தவாறு என்னை யெனின், கைக்கிளை பெருந்திணையைப் போலாமை, ஒத்த அன்பினராகிப் புணர்

(பாடம்) * கார்மலர். † இனமழை. ‡ துஞ்சி யாமத்து.
§ பேரியல். $ கொல்லெனத் துணியுமென்.

தலும் பிரிதலும் இருத்தலும் ஊடலும் இரங்கலும் நிகழ்த்துப ஆகலானும், அவை நிகழுங்கால் அத்திணைக்கு உறுப்பாகிய இடமும் காலமும் கருப்பொருளும் துணையாகி நிகழுமாகலானும், இவை அன்பொடு புணர்ந்தன என்க. அஃதேல், ஐந்திணைப் புறத்தவாகிய வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை என்பனவும் அன்பொடு புணர்ந்தன வாம் எனின், அவை அன்புடையார் பலர் கூடி நிகழ்த்துபவை யாகலின், அன்பொடு புணர்ந்தனவாம்.

> "அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார்
> மறத்திற்கும் அஃதே துணை" (குறள்-எ௬)

என்பதனாலும் கொள்க.

இனி, இவ்வைந்திணையும் இன்பமும் பொருளும் அறமும் ஆயின வாறு என்னையெனின் புணர்தல் முதலாகிய ஐந்துபொருளும் இன்பந் தருதலின் இன்பமாயின. முல்லை முதலாகிய ஐந்திணைக்கும் உறுப்பாகிய நிலமும் காலமும் கருப்பொருளும் இவற்றின் புறத்தாகிய வெட்சி வஞ்சி உழிஞை தும்பை என்பனவும் வாகையுள் ஒரு கூறும் பொருளாக லானும், புணர்தன் முதலாகிய உரிப்பொருளான் வருவதொரு கேடின்மையானும், பொருளாயின. இவ்வொழுக்கங்கள் அறத்தின்வழி நிகழ்தலானும், பாலையாகிய வாகைப்படலத்துள் அறநிலை கூறுத லானும், இவை அறமாயின. அஃதேல், கைக்கிளை பெருந்திணையும் இவற்றின் புறமாகிய பாடாண்பாட்டும் காஞ்சியும் அறமுதலாகியமூன்று மன்றி அன்பொடு புணர்தல் வேண்டுமெனின், காஞ்சி அன்பொடு புணராமையும் பாடாண்பாட்டு அன்பொடு புணர்தல் ஒருதலையன்மை யும் அவ்வோத்தினுள் கண்டுகொள்க. ஏனையிரண்டும் அன்பொடு புணராமை மேற்சொல்லப்பட்டன. இனி அவை அறனும் பொருளு மாய் இன்பமாகா : அஃதேல், அறனும் பொருளும் ஆகாமையும் வேண்டுமெனின் குலனும் குணனுங் கல்வியும் உடையராகிய அந்தணர் என விசேடித்தவழி ஏனையோர்க்கு இம்மூன்று பொருளும் இயைதல் வேண்டுமென்னும் நியமம் இன்மையின் ஏற்றவழிக் கொள்ளப்படும்.

இனி, ஐந்திணைமருங்கிற் காமக்கூட்டம் என்பது புணர்தல் முதலாகிய உரிப்பொருளும், அந்நிலமும் காலமும் கருப்பொருளும், களவினும் கற்பினும் வருதலின், அவை ஒரோவொன்று இருவகைப் படும். அவற்றுள், புணர்ச்சியாகிய இருவகையினும் களவாகிய காமக் கூட்டம் எனக்கொள்க.

இன்னும் அன்பொடுபுணர்ந்த ஐந்திணைமருங்கிற் காமக்கூட்டம் என்றதனால் எல்லாநிலத்தினும் காமக்கூட்டம் நிகழப்பெறும் என்று கொள்க. அவ்வாறுதல் சான்றோர் செய்யுளகத்துக் காண்க.

மறையோர் தேஎத்...யோரியல்பே என்பது—மறையோரிடத்தோதப் பட்ட மணம் எட்டனுள்ளும் துறையமை நல்யாழினை யுடையராகிய துணைமையோர் நெறி என்றவாறு.

மறையோர் என்றது அந்தணரை. தேஎம் என்றது அவரதாகிய நூலை. மணம் எட்டாவன : பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம் காந்திருவம் அசுரம், இராக்கதம், பைசாசம் என்பன. பிரமமாவது, கன்னியை அணிகலன் அணிந்து பிரமசாரியா யிருப்பானொருவனுக்குத் தானமாகக் கொடுப்பது. பிரசாபத்தியமாவது, மகட்கோடற்குரிய

கோத்திரத்தார் மகள் வேண்டியவழி இருமுதுகுரவரும் இயைந்து கொடுப்பது. ஆரிடமாவது. ஒன்றானும் இரண்டானும் ஆவும் ஆனேறும் வாங்கிக்கொடுப்பது. தெய்வமாவது, வேள்விக்கு ஆசிரியராய் நின்றார் பலருள்ளும் ஒருவர்க்கு வேள்வித்தீ முன்னர்க் கொடுப்பது. காந்தருவ மாவது ஒத்த இருவர் தாமே கூடுங்கூட்டம். அசுரமாவது வில்லேற்றினு னுதல் திரிபன்றி யெய்தானுதல் கோடற்குரியனெனக் கூறியவழி அது செய்தாற்குக் கொடுத்தல். இராக்கதமாவது தலைமகள் தன்னினும் தமரினும் பெறாது வலிதிற்கொள்வது. பைசாசமாவது, களித்தார் மாட்டுந் துயின்றார்மாட்டுங் கூடுதல்.

"அறன்நிலை ஒப்பே பொருள்கோள் தெய்வம்
யாழோர் கூட்டம் அரும்பொருள் வினையே
இராக்கதம் பேய்நிலை என்றிக் கூறிய
மறையோர் மன்றல் எட்டவை அவற்றுள்
துறையமை நல்யாழ்த் துணைமையோர் புணர்ப்பினதன்
பொருண்மை என்மனார் புலமை யோரே"

என்பதனாலுங்கொள்க. துறையமை நல்யாழ்த் துணைமையோராவார் கந்திருவர். அவர் இருவராகித் திரிதலின் துணைமையோர் என்றார் துணையன்பாவது அவர் ஒழுகலாறுடொத்து மக்கண்மாட்டு நிகழ்வது. ஈண்டுக்காமக்கூட்டமென ஓதப்பட்டது மணவிகற்பமாகிய எட்டனுள் ளுங் கந்திருவமென்றவாறு. மாலைசூட்டல் யாதனுள் அடங்குமெனின், அதுவும் ஒத்த அன்பினராய் நிகழ்தலிற் கந்திருவப்பாற்படும்.

அறனும் பொருளும் இன்பமும் என்னாது, இன்பமும் பொருளும் அறனும் என்றது என்னை எனின், பலவகை உயிர் கட்கும் வரும் இன்பம் இருவகைப்படும். அவையாவன, போகம் நுகர்தலும் வீடுபெறுதலும் என. அவற்றுள் வீடுபேறு துறவறத்தில் நின்றார்க்கல்லது எய்தல் அரிதாயிற்று. போகநுதர்தல் மனையறத்தார்க்கெய்துவது. அவரெய்தும் இன்பமும் அவ்வின்பத்திற்குக் காரணமாகிய பொருளும் அப்பொருட் குக் கராணமாகிய அறனும் எனக் காரிய காரணம் நோக்கிவைத்தார் என்க.

இதனாற்சொல்லியது ஈண்டுக் களவென்றோதப்படுகின்ற *ஒழுக்கம் அறம்பயவாத புறநெறியன்று; வேதவிதியாகிய தந்திரம் என விகற்ப மாகிய நெறி கூறியவாறு.

---

*"களவொழுக்கம் பொதுவாகலின் நான்கு வருணத்தார்க்கும் ஆயர் முதலியோர்க்கும் உரித்து. மாலைசூட்டுதலும் இதன்பாற்படும். வில்லேற்றுதல் முதலியன பெரும்பான்மை அரசர்க்குரிய. அவற்றுள் ஏறு தழுவுதல் ஆயர்க்கே சிறந்தது. இராக்கதம் அந்தணர் ஒழிந் தோர்க்கு உரித்து: வலிதிற்பற்றிப் புணர்தலின் அரசர்க்கு இது பெரு வரவிற்றன்று. பேய் இழிந்தோர்க்கே உரித்து. கந்தருவரின் மக்கள் சிறிது திரிபுடைமையிற் சேட்படை முதலியன உளவாமென்றுணர்க. அறத்தினாற் பொருளாக்கி அப்பொருளான் இன்பநுகர்தற் சிறப்பானும் அதனன் இல்லறங் கூறலானும் இன்பம் முற்கூறினார். அறனும் இன்ப மும் பொருளாற் பெறப்படுதலின் அதனை இடைவைத்தார். போகமும் வீடும் என இரண்டும் சிறத்தலிற் போகம் ஈண்டுக்கூறி வீடு பெறுதற்குக் காரணம் முற்கூறினார். ஒழிந்த மணம் கைக்கிளையும் பெருந்திணையுமாய் அடங்குதலின் இதனை அன்பொடு" என்றார் (நச்சி)

கூO. ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
ஒன்றி உயர்ந்த பால தாணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப
மிக்கோ ளாயினுங் கடிவரை இன்றே.

**என் —எனின், இது காமக்கூட்டத்தின்கண் தலைமகனும் தலைமகளும் எதிர்ப் படுந்திறனும் அதற்குக் காரணமும் உணர்த்துதல் நுதலிற்று.**

(இ - ள்.) ஒன்றே வேறே என்றிரு பால்வயின் என்பது—*ஒருவனும் ஒருத்தியுமாக இல்லறஞ் செய்துழி, அவ்விருவரையும் மறுபிறப்பினும் ஒன்றுவித்தலும் வேறாக்குதலுமாகிய இருவகை ஊழினும் என்றவாறு.*

**ஒன்றி உயர்ந்த பாலதாணையின்** *என்றது—இருவருள்ளமும் பிறப்புத் தோறும் ஒன்றி நல்வினைக்கண்ணே நிகழ்ந்த ஊழினது ஆணையின் என்றவாறு.*

*உயர்ந்ததன்மேற்செல்லும் மனநிகழ்ச்சி உயர்ந்த பாலாயிற்று. காம நிகழ்ச்சியின்கண் ஒத்த அன்பினராய்க் கூடுதல் நல்வினையான் அல்லது வாராதென்பது கருத்து.*

**ஒத்த கிழவனும் கிழத்தியுங் காண்ப** *என்பது—*

*ஒப்பு பத்துவகைப்படும். அவை,*

*''பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டோடு
உருவு நிறுத்த காம வாயில்
நிறையே அருளே உணர்வொடு திருவென
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே''* (மெய்ப். உரு)

*என்னும் மெய்ப்பாட்டியற் சூத்திரத்துள் கூறிய பத்துமாம். அவற்றுள் பிறப்பாவது, அந்தணர், அரசர், வணிகர், வேளாளர், ஆயர், வேட்டுவர் குறவர், நுளையர் என்றாற்போல வருங் குலம். குடிமையாவது அக் குலத்தினுள்ளார் எல்லாருஞ் சிறப்பாக ஒவ்வாமையின் அச்சிறப்பாகிய ஒழுக்கம் பற்றிய குடிவரவைக் குடிமை என்றார்.*

*''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்''* (குறள். கஎஉ)

*எனப் பிறரும் குலத்தின்கண்ணே சிறப்பென்பது ஒன்றுண்டென்று கூறினாராகலின். ஆண்மையாவது, ஆண்மைத்தன்மை. அஃதாவது, ஆள்வினையுடைமையும் வலி பெயராமையுமாம்.*

*''மொழியா ததனை முட்டின்று முடித்தல்''* (மரபியல். ககO)

*என்பதனால் தலைமகள்மாட்டுப் பெண்மையும் கொள்ளப்படும். அது பெண்டிர்க்கு இயல்பாகிய நாணம் முதலாயினவும் பெண்ணீர்மையும், ஆண்டென்பது, ஒருவரினொருவர் முதியரன்றி ஒத்த பருவத்தராதல்: அது குழவிப்பருவங் கழிந்து பதினாறு பிராயத்தானும் பன்னிரண்டு*

பிராயத்தாலும் ஆதல். உருவு என்பது வனப்பு. நிறுத்த காமவாயில் என்பது நிலைநிறுத்தப்பட்ட புணர்ச்சிக்கு வாயில். அஃதாவது, ஒருவர் மாட்டு ஒருவர்க்கு நிகழும் அன்பு. நிறை என்பது அடக்கம், அருள் என்பது பிறர் வருத்தத்திற்குப் புரியும் கருணை. உணர்வென்பது அறிவு. திரு என்பது செல்வம். இப்பத்து வகையும் ஒத்த கிழவனும் கிழத்தியும் எதிர்ப்படுவர் எனக் கொள்க.

* மிக்கோ......இன்றே என்பது—இக்குணங்களால் தலைமகன் மிக்கா னாயினுங் கடியப்படாது என்றவாறு.

எனவே, இவற்றுள் யாதானும் ஒன்றினாயினும் தலைமகள் மிக்கா ளாயின் ஐந்திணையிற் கடியப்படும் என்றவாறும்.

பாலதாணையின்...காண்ப என்பது—ஒருவரை யொருவர் கண்டுழியெல் லாம் புணர்ச்சிவேட்கை தோற்றுமையிற் பாலதாணையான் ஒருவரை யொருவர் புணர்தற் குறிப்பொடு காண்ப என்றவாறு. மிக்கோனாயினும் என்ற உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை. எற்றுக்கு, எதிர்மறை யாக்கி 'இழிந்தோனாயினும் கடியப்படாது' என்றாற் குற்றமென்னை யெனின் செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணி வருகின்ற பெருமை யாதலின், இழிந்தானொடு உயர்ந்தாட்குளதாகிய கூட்டமின்மை பெரு வழக்காதலின் அது பொருளாகக் கொள்ளப்படும் என்பது. ஈண்டுக் கிழ வனும் கிழத்தியும் என ஒருவனும் ஒருத்தியும்போலக் கூறினாராயினும்,

> "ஒருபாற் கிளவி யேனைப்பாற் கண்ணும்
> வருவகை தானே வழக்கென மொழிப" (பொருளியல்-உசு)

என்பதனானும், இந்நூல் உலக வழக்கே நோக்குதலானும் அவர் பல வகைப்படுவர். அஃதாமாறு அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் என்னும் நால்வரொடும் அநுலோமர் அறுவரையும் கூட்டப் பதின்ம ராவர். இவரை நால்வகை நிலத்தோடு உறழ நாற்பதின்மராவர். † இவரையும் அவ்வந்நிலத்திற்குரிய ஆயர் வேட்டுவர் குறவர் பரதவர் என்னுந் தொடக்கத்தாரோடு கூட்டப் பலராவர். அவரையும் உயிர்ப் பன்மையான் நோக்க வரம்பிலராவர். (உ)

---

* "மிகுதலாவது குலம், கல்வி, பிராயம் முதலியவற்றான் மிகுதல். எனவே, அந்தணர் அரசர் முதலிய வருணத்துப் பெண்கோடற்கண் உயர்தலும் அரசர் முதலியோரும் அம்முறை உயர்தலும் கொள்க. இதனானே அந்தணர் முதலியோர் அங்ஙனம் பெண்கோடற்கட் பிறந் தோர்க்கும் இவ்வொழுக்கம் உரித்து என்று கொள்க. கடி - மிகுதி, அவர் அங்ஙனம் கோடற்கண் ஒத்தமகளிர் பெற்ற புதல்வரோடு ஒழிந்த மகளிர் பெற்ற புதல்வர் ஒவ்வார் என்பது உணர்த்தற்குப் பெரிதும் வரையப்படாதென்றார். பதினாறு தொடங்கி இருபத்து நான்கு ஈறாகக் கிடந்த யாண்டொன்பதும் ஒரு பெண்கோடற்கு மூன்று யாண்டாக அந்தணன் உயரும் கந்தருவமணத்து; ஒழிந்தோர் ஆயின் அத்துணை உயரார். இருபத்து நான்கு இரட்டி நாற்பத்தெட்டாதல் பிரமம் முதலிய வற்றான் உணர்க. வல்லெழுத்து மிகுதல் என்றாற்போல மிகுதலைக் கொள்ளவே பிராயம் இரட்டியாயிற்று. கிழத்தி மிகுதல் அறக் கழிவாம்." (நச்சி.)

(பாடல்) † 'இவரொடும்'

கூக. சிறந்துழி* ஐயஞ் சிறந்த தென்ப
இழிந்துழி இழிபே† சுட்டலான.

என்—எனின், ஐயம் நிகழுமீ இடம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஒருவன் ஒருத்தியைக் கண்ணுற்றுழி அவ்விரு வகையும் உயர்வுடையராயின் அவ்விடத்து ஐயம் சிறந்தது என்று சொல்லுவர்; அவர் இழிபுடையராயின், அவ்விடத்து அவள் இழிபினையே சுட்டி யுணர்தலான் என்றவாறு. சிறப்பு என்பது மிகுதி, ஐயமிகுதலாவது மக்களுள்ளாள் அல்லள் தெய்வமோ என மேலாயினரோடே ஐயுறுதல், சிறந்துழி என்பதற்குத் தலைமகள்தான் சிறந்துழியும் கொள்ளப்படும்; அவளைக் கண்ட இடம் ஐயப்படுதற்குச் சிறந்துழியும் கொள்ளப் படும். உருவ மிகுதியுடையளாதலின் ஆயத்தாரிடைக் காணினும் தெய்வம் என்று ஐயுறுதல். இதனாற் சொல்லியது உலகத்துத் தலைமகனும் தலைமகளுமாக நம்மால் வேண்டப்பட்டார் அந்தணர் முதலாகிய நான்கு வருணத்தினும் ஆயர் வேட்டுவர் குறவர் பரதவர் என்னும் தொடக்கத்தினும் அக்குலத்தாராகிய குறுநில மன்னர் மாட்டும் உளராவரன்றே; அவரெல்லாரினும் செல்வத்தானும் குலத்தானும் வடிவானும் உயர்ந்த தலைமகனும் தலைமகளுமாயினோர் மாட்டே ஐயம் நிகழ்வது. அல்லாதார் மாட்டும் அவ் விழிமரபினையே சுட்டியுணரா நிற்குமாதலான் என்றவாறு.

'காராரப் பெய்த' என்னும் முல்லைக் கலியுள் (கலித். க0க)

"பண்ணித்‡ தமர்தந் தொருபுறந் தைஇய
கண்ணி எடுக்கல்லாக் கோடேந் தகலல்குல்
புண்ணிலார் புண்ணுக நோக்கு முழுமெய்யுங்
கண்ணளோ §ஆய மகள்"

என ஐயமின்றிச் சுட்டியுணர்ந்தவாறு காண்க.

இனி உயர்புள்வழி ஐயம் நிகழுமாறு :

"உயர்மொழிக் கிளவி உறழுங் கிளவி
ஐயக் கிளவி ஆடூஉவிற்கு உரித்தே" (பொருளியல்-௬உ)

என்றாராகலின், ஐயப்படுவான் தலைமகன் என்று கொள்க. தலைமகள் ஐயப்படாதது என்னையெனின், அவள் ஐயப்படுங்கால் தெய்வமோ வென்று ஐயுறல் வேண்டும். அவ்வாறு ஐயுற்றால் அச்சம் வரும். அஃது ஏதுவாகக் காம நிகழ்ச்சி யுண்டாகாது. (௨)

---

(பாடம்) *"மகடூஉவின் ஆடூஉச்சிறத்தல் பற்றிச்சிறந்துழி என்றார்."
† இழிபே. ‡ மண்ணித். § ஆயர் மகள்.

கஉ. வண்டே இழையே வள்ளி பூவே
கண்ணே அலமரல் இமைப்பே அச்சமென்று
அன்னவை பிறவும் ஆங்கண் நிகழ*
நின்றவை களையுங் கருவி என்ப.

என்—எனின், ஐயப்பட்டான் துணிதற்குக் கருவி உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) எண்ணப்பட்ட வண்டு முதலாகிய எட்டும் †பிறவுமாகி அவ்விடத்து நிகழாநின்ற ஐயம் களையும் கருவி என்றவாறு.

ஐயமென்பது அதிகாரத்தான் வந்தது. 'நிகழநின்றவை' என்பது குறுகிநின்றது. வண்டாவது மயிரின் அணிந்த பூவைச் சூழும் வண்டு. அது பயின்றதன் மேலல்லது செல்லாமையின் அதுவும் மக்களுள்ளா ளென்றறிதற்குக் கருவியாயிற்று, இழையென்பது அணிகலன். அது செய்யப்பட்டதெனத் தோற்றுதலானும். தெய்வப்பூண் செய்யா அணி யாதலானும் அதுவும் அறிதற்குக் கருவியாயிற்று. வள்ளி என்பது முலை யினும் தோளினும் எழுதிய கொடி. அதுவும் உலகின் உள்ளதாகித் தோன்றுதலின் (அதுவும்) கருவியாயிற்று அலமரல் என்பது தடுமாறு தல். தெய்வமாயின் நின்றவழி நிற்கும். அவ்வாறன்றி, நின்றுழி நிற்கின்றிலள் என்று சுழற்சியும் அறிதற்குக் கருவியாயிற்று. இமைப் பென்பது கண்ணிமைத்தல். தெய்வத்திற்குக் கண் இமையாமையின் அதுவும் அறிதற்குக் கருவியாயிற்று. அச்சமென்பது ஆண்மக்களைக் கண்டு அஞ்சுதல். அது தெய்வத்திற்கு இன்மையான் அதுவும் அறிதற் குக் கருவியாயிற்று. அன்னவை பிறவும் என்றதனான் கால் நிலந்தோய்தல், வியர்த்தல், நிழலாடுதல் கொள்க. இவை கருவியாகத் துணியப்படும் என்றவாறு.

காட்சி முதலாகிய இத்துணையும் கைக்கிளைக் குறிப்பாம். இதற்குச் செய்யுள் வந்தவழிக் காண்க. இனிக் குறிப்பறிதல் கூறுகின்றாராகலின், அக்குறிப்பு நிகழும் வழி இவையெல்லாம் அகமாம். என்னை இருவர் மாட்டு மொத்த நிகழ்ச்சி யாதலான். இவை தலைமகள் மாட்டுப் புலப் பட நிகழாது. ஆண்டுக் குறிப்பினாற் சிறிது நிகழுமென்று கொள்க.

அவை வருமாறு:—

"உண்டார்கண் அல்லது அடுநறாக் காமம்போல்
கண்டார் மகிழ்செய்தல் இன்று" (குறள். க0க0)

எனவரும். பிறவும் அன்ன. (ச)

கரு. ‡நாட்டம் இரண்டும் அறிவுடம் படுத்தற்குக்
கூட்டி உரைக்குங் குறிப்புரை யாகும்.

என்—எனின் மேல் தலைமகளை இத்தன்மையள் எனத் துணிந்த தலைமகன் குறிப் பறியாது சாரலுறின் பெருந்திணைப்பாற்படு மாகலானும் இக் களவொழுக்கத்திற்கு ஒத்த

(பாடம்) * ஆங்கவண் நிகழ. † 'பிறவுமாம்' என்றிருத்தல்வேண்டும்.

‡ "ஒன்று ஒன்றை ஊன்றுநோக்குதலின் நாட்டம் என்றார். நாட்டு தலும் நாட்டமும் ஒக்கும்." (நச்சி.)

உள்ளத்தாராதல் வேண்டுமாதலானும், ஆண்டு ஒருவரோடொருவர் சொல்லாடுதல் மரபன்மையானும், அவருள்ளக் கருத்தறிதல் வேண்டுதலின், அதற்குக் கருவியாய உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) நாட்டம் இரண்டும் என்பது—தலைமகன் கண்ணும் தலைமகள் கண்ணும் என்றவாறு.

அறிவுடம்படுத்தற்கு என்பது—ஒருவர் வேட்கைபோல இருவர்க்கும் வேட்கை உளதாகுங் கொல்லோ எனக் கவர்த்து நின்ற இருவரது அறிவினையும் ஒருப்படுத்தற்கு என்றவாறு.

கூட்டியுரைக்குங்குறிப்புரையாகும் என்பது-தமதுவேட்கையொடு கூட்டி ஒருவர் ஒருவருக்கு உரைக்குங் காமக்குறிப்புரையாம் என்றவாறு.

இதன் பொழிப்பு:—இருவர்க்குங் கவர்த்து நின்ற அறிவை ஒருப்படுத்தற் பொருட்டு வேட்கையொடுகூட்டிக் கூறுங் காமக்குறிப்புச் சொல் இருவரது நாட்டமாகும் என்றவாறு.

ஆகும் என்பதனை நாட்டம் என்பதனொடு கூட்டியுரைக்க. இதற்குச் செய்யுள்:—

"பானலந்* தண்கழிப் பாடறிந்து †தன்ஐமார்
நூல்நல நுண்வலையாற் கொண்டெடுத்த—கானற்
படுபுலால் காப்பாள் படைநெடுங்கண் நோக்கம்
கடிபொல்லா என்னையே காப்பு." (திணைமாலை நூற். ௩௨)

கண்ணினான் அறிப என்றவாறு. (௬)

கூச. குறிப்பே குறித்தது கொள்ளு மாயின்
ஆங்கவை நிகழும் என்மனார் புலவர்.

என்—எனின், மேலதற்கொரு புறனடை யுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஒருவர் குறிப்பு ஒருவர் குறித்ததனைக்கொள்ளுமாயின், அவ்விடத்துக் கண்ணினான் வருங் குறிப்புரை நிகழும் என்றவாறு.

எனவே, குறிப்பைக் கொள்ளாதவழி அக்குறிப்புரை நிகழாது என்றவாறும். இதனாற் சொல்லியது கண்ட காலத்தே வேட்கை முந்துற்றவழியே இக்கண்ணினான் வருங் குறிப்பு நிகழ்வது; அல்லாதவழி நிகழாது என்றவாறு. இனிக் குறிப்பு நிகழுமாறும் அதன் வேறுபாடும் ‡மெய்ப்பாட்டியலுள் கூறுப. ஈண்டும் சில உதாரணம் காட்டுவம்.

---

(பாடம்) * 'தண்கழுநீர்'. † தன்ஐயர்.

‡ "பன்னிரண்டாம் மெய்ப்பாடாகிய இருகையும் எடுத்தல் கூறவே முயக்கமும் உய்த்துணரக் கூறியவாறு காண்க. அம்மெய்ப் பாட்டியலுட் கூறிய மூன்று 261, 262, 263 சூத்திரத்தையும் ஈண்டுக் கூறியுணர்க." (தொல். பொருள். நச்சி.)

"நோக்கினாள் நோக்கி இறைஞ்சினாள் அஃதவள்
யாப்பினுள் அட்டிய நீர்" (குறள். ௧0௯௩)

எனவும்,

"அசையியற்கு உண்டாண்டோர் ஏஎர்யான் நோக்கப்
பசையினள் பைய நகும்" (குறள். ௧0௯௮)

எனவும் வரும். பிறவும் அன்ன. தலைமகன் குறிப்புத் தலைமகள் அறிந்த வழியும் கூற்று நிகழாது, பெண்மையான். (௬)

௯௫. பெருமையும் உரனும் ஆடூஉ மேன.

என்—எனின், இது தலைமகற்கு உரியதோர் இலக்கணமுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) பெருமை யாவது—பழியும் பாவமும் அஞ்சுதல். உரன் என்பது—அறிவு.

இவை யிரண்டும் ஆண்மகனுக்கு இயல்பு என்றவாறு.

இதனானே மேற்சொல்லப்பட்ட தலைமகளது வேட்கைக் குறிப்புக் கண்ட தலைமகன், அந்நிலையே புணர்ச்சியை நினையாது, வரைந்து எய்தும் என்பது பெறுதும்.

"சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப தறிவு" (குறள். ௪௨௨)

என்பவாகலின். தலைமகன் இவ்வாறு கூறியதற்குச் செய்யுள்:—

'வேயெனத் திரண்டதோள் வெறிகமழ் வணர்ஐம்பால்
மான்வென்ற மடநோக்கின் மயிலியல்* தளர்பொல்கி
ஆய்சிலம்பு அரியார்ப்ப வவிரொளி இழைஇமைப்பக்
கொடியென மின்னென அணங்கென யாதொன்றும்
தெரிகல்லா இடையின்கட் கண்கவர்பு ஒருங்கோட
வளமைசால் உயர்சிறப்பின் நுந்தைதொல் வியனகர்
இளமையான் எறிபந்தோ டிகத்தந்தாய் கேளினி;

பூந்தண்தார்ப் புலர்சாந்தின் தென்னவன் உயர்கூடல்
தேம்பாய அவிழ்நீலத் தலர்வென்ற அமருண்கண்
ஏந்துகோட் டெழில்யானை† யொன்னுதார்க் கவன்வேலிற்
சேந்துநீ யினையையால் ஒத்ததோ சின்மொழி;

பொழிபெயல் வண்மையான் அசோகந்தண் காவினுள்
கழிகவின் இளமாவின் தளிரன்னாய் அதன்தலைப்
‡பணையமை பாய்மான்தேர் அவன்செற்றார் நிறம்பாய்ந்த
கணையினு நோய்செய்தல் கடப்பன்றோ கனங்குழாய்;

வகையமை தண்தாரான் கோடுயர் பொருப்பின்மேல்
தகையிணர் இளவேங்கை மலரன்ன சுணங்கினாய்
மதவலி மிகுகடாஅத்§ தவன்யானை மருப்பினும்

(பாடம்) *மயிலியலாற். †யெண்ணுதார்க்.
‡'புணையமை யாய்மான்றே.' §கமழ்கடாஅத்.

கதவவால் தக்கதோ காழ்கொண்ட இளமுலை;
எனவாங்கு,
இனையன கூற இறைஞ்சுபு நிலநோக்கி
*நினையுபு நெடிதொன்று நினைப்பாள்போல் மற்றாங்கே
துணையமை தோழியர்க் கமர்த்த கண்ணள்
மனையாங்குப் பெயர்ந்தாளென் அறிவகப் படுத்தே.''
(கலித். ௫௭)

''உறுகழி மருங்கின் ஓதமொடு மலர்ந்த
சிறுகரு நெய்தல் கண்போல் மாமலர்ப்
பெருந்தண் மாத்தழை †யிருந்த அல்குல்
ஐய அரும்பிய சுணங்கின் வைஎயிற்று
மையீர் ஓதி வாணுதற் குறுமகள்
விளையாட் டாயமொடு வெண்மணல்‡உதிர்த்த
புன்னை நுண்தாது பொன்னின் நொண்டு
மனைபுறந் தருதி யாயின் எனையதூஉம்
இம்மனைக் கிழமை யெம்மொடு புணரின்
தீதும் உண்டோ மாத ராயெனக்
கடும்பரி நன்மான் கொடிஞ்சி நெடுந்தேர்
கைவல் பாகன் பையென இயக்க
யாந்தற் குறுகினம் ஆக ஏந்தெழில்
அரிவே யுண்கண் பனிவர லொடுக்கிச்
சிறிய இறைஞ்சினள் தலையே
பெரிய எவ்வம்§ யாமிவ ணுறவே.''$ (அகம். உ௩0)

இவை உள்ளப்புணர்ச்சியான் வரைதல் வேண்டிப் பாங்கற்கு ¶உரைத்தன. (எ)

௬௯. அச்சமும் நாணும் மடனும் **முந்துறுதல்
நிச்சமும் பெண்பாற் குரிய என்ப.

என்—எனின், இது தலைமகட்கு உரியதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அச்சமும் நாணும் பேதைமையும் இம்மூன்றும் நாடோறு முந்துறுதல் பெண்டிர்க்கு இயல்பு என்றவாறு.

எனவே, வேட்கையுற்றுழியும் அச்சத்தானுதல் நாணானுதல் மடத்தானுதல் புணர்ச்சிக்கு இசையாது நின்று வரைந்தெய்தல் வேண்டுமென்பது

(பாடம்) *நினைஞுபு. †'யருந்த.' ‡உகுத்த.
§'யெவ்வமொடு.' $'யாமினுறவே.' ¶ உரைத்தது.
** முந்துறுத்த.

''முந்துறுத்த என்றதனுல் கண்டறியாதன கண்டுழி மனங்கொள்ளாத பயிர்ப்பும், செயத்தகுவது அறியாத பேதைமையும், நிறுப்பதற்கு நெஞ்சு உண்டாம் நிறையும் கொள்க. இருவர் கண்ணுற்றுக் காதல் கூர்ந்த வழியெல்லாம் கந்தருவம் என்பது வேதமுடிபாதலின், இவ்வுள்ளப் புணர்ச்சியும் கந்தருவமாம். ஆதலான் அதற்கேதுவாகிய பெருமையும் உரனும் அச்சமும் நாணும் போல்வன கூறினர்.'' (நச்சி.)

போந்தது. இவ்வாறு இருவரும் உள்ளப்புணர்ச்சியால் நின்று வரைந்தெய்தி மெய்யுறும். இதற்குச் செய்யுள் :

"தீம்பால் கறந்த கலமாற்றிக் கன்றெல்லாந்
தாம்பிற் பிணித்து மனைநிறீஇ யாய்தந்த
பூங்கரை நீலம் புடைதாழ மெய்யசைஇப் பாங்கரு
முல்லையுந் தாய பாட்டங்கால் தோழிநம்
புல்லினத் தாயர் மகளிரோ டெல்லாம்
ஒருங்கு விளையாட அவ்வழி வந்த
குருந்தம்பூங் கண்ணிப் பொதுவன்மற் றென்னை
முற்றிழை ஏஎர் மடநல்லாய் நீயாடுஞ்
சிற்றில் புனைகோ சிறிதென்றான் எல்லாநீ
பெற்றேம்யா மென்று பிறர்செய்த இல்லிருப்பாய்
கற்ற திலைமன்ற காண்என்றேன் முற்றிழாய்
தாதுசூழ் கூந்தல் தகைபெயத் தைஇய *
கோதை புனைகோ நினக்கென்றான் எல்லாநீ
ஏதிலார் தந்தபூக் கொள்வாய் நனிமிகப்
பேதையை மன்ற பெரிதென்றேன் மாதராய்
ஐய பிதிர்ந்த சுணங்கணி மென்முலைமேல்
தொய்யி லெழுதுகோ மற்றென்றான் யாம்பிறர்
செய்புறம் நோக்கி இருத்துமோ நீபெரிதும்
மையலை மாதோ விடுகென்றேன் தையலாய்
சொல்லிய வாறெல்லாம் மாறுமாறு யான்பெயர்ப்ப †
அல்லாந்தான் போலப் பெயர்ந்தான் அவனைநீ
ஆயர் மகளிர் இயல்புரைத் தெந்தையும்
யாயும் அறிய உரைத்தியின் யானுற்ற
நோயுங் களைகுவை மன்." (கலித். கக௧)

இது தலைமகள் உள்ளப்புணர்ச்சியின் உரிமைபூண்டிருந்தவாறும் வரைந்தெய்தக் கூறலுற்றவாறும் காண்க. (அ)

கூ௭. வேட்கை ஒருதலை உள்ளுதல் மெலிதல்
ஆக்கஞ் செப்பல் நாணுவரை இறத்தல்
நோக்குவ எல்லாம் அவையே போறல்
மறத்தல் மயக்கஞ் சாக்காடு என்றிச் ‡
§சிறப்புடை மரபினவை களவென மொழிப.

என்—எனின், மெய்யுறுபுணர்ச்சி நிகழுங்காலம் உணர்த்துதல் நுதலிற்று. மேல், "பெருமையும் உரனும் ஆடூஉ மேன" எனவும்,

"அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்$
நிச்சமும் பெண்பாற் குரிய என்ப" (தொல். களு. அ)

(பாடம்) * 'தகைபெறுதகைஇய' † 'றியான் பெயர.' ‡ 'என்றச்
§ 'இவை சிறப்புடைய எனவே களவு சிறப்புடைத்தாம். இவை கற்பிற்கு ஆகா. இருவர்க்கும்இவை தடுமாறிவருதலின் 'மரபினவை. எனப் பன்மை கூறினர். (நச்சி.) $'அச்சமு நாணும் பெண்பாலான.'

எனவும் ஓதியவதனான் உள்ளஞ் சென்றவழியும் மெய்யுறுபுணர்ச்சி வரைந்தெய்தி நிகழ்ப என்றாராம். அவ்வழிச் சாக்காடெல்லையாகிய மெய்ப்பாடுவரின் மெய்யுற்றுப் புணரப்பெறு மென்பது உணர்த்திற்று.

(இ - ள்.) வேட்கை முதலாகச் சாக்காடு ஈறாக ஓதப்பட்ட காமச் சிறப்புடையனவாற்றாற் களவு ஆமென்று சொல்லுவர் என்றவாறு.

ஆனும் ஆமும் எஞ்சி நின்றன. இவற்றை அவத்தையென்ப. அஃதேல், அவை பத்துளவன்றே; ஈண்டுரைத்தன ஒன்பதாலெனின், காட்சி விகற்பமுங் கூறினார், அஃது உட்படப் பத்தாம். காட்சி விகற்பமாகிய ஐயமுந் துணிவும் முதலது; வேட்கை இரண்டாவது, என்று கொள்க.

வேட்கை யாவது—பெறல்வேண்டு மென்னும் உள்ள நிகழ்ச்சி.

ஒருதலையுள்ளுத லாவது—இடைவிடாது நினைத்தல்.

"உள்ளிக் காண்பென் போல்வன் முள்ளெயிற்று
அமிழ்தம் ஊறுஞ் செவ்வாய்க் கமழகில்
ஆரம் நாறும் அறல்போற் கூந்தற்
பேரமர் மழைக்கண் கொடிச்சி
மூரல் முறுவலொடு மதைஇய நோக்கே." (குறுந். உஅசு)

மெலித லாவது—உண்ணாமையான் வருவது

ஆக்கஞ்செப்ப லாவது—உறங்காமையும் உறுவ ஓதலும் முதலாயின கூறுதல்.

"ஒண்தொடி அரிவை கொண்டனள் நெஞ்சே
வண்டிமிர் பனித்துறைத் தொண்டி ஆங்கண்
உரவுக்கடல் ஒலித்திரை *போல
இரவி னானுந் துயிலறி யேனே" (ஐங்குறு. கஉஎ)

எனவரும்.

நாணுவரையிறத்த லாவது—நாண் நீங்குதல்.

"காமம் விடுவொன்றோ நாண்விடு நல்நெஞ்சே
யானோ பொறேனிவ் விரண்டு." (குறள். கஉசஎ)

நோக்குவ எல்லாம் அவையே போற லாவது—தன்னாற் காணப் பட்டன எல்லாந் தான் கண்ட உறுப்புப்போலுதல்.

"ஓங்கெழிற் கொம்பர் நடுவி தெனப்புல்லுங்
காந்தட் கிவரும் கருவிளம் பூக்கொள்ளும்
மாந்தளிர் கையில் தடவரு மாமயில்
பூம்பொழி லேக்கிப் புகுவன பின்செல்லுந்
தோளெனச் சென்று துளங்கொளி வேய்தொடு
நீள்கதுப் பிஃதென நீர்அறல் உட்புகும்" என்றாற் போல்வன.

(பாடம்) * என.

மறந்தல் — பித்தாதல். மயக்கமாவது — மோகித்தல். சாக்காடு — சாதல். இவற்றுள் சாதல் பத்தாம் அவத்தையாதலால், ஒழிந்த எட்டுங் களவு நிகழ்தற்குக் காரணமாம் என்று கொள்க. இது தலைமகட்கும் தலைமகற்கும் ஒக்கும். இவற்றிற்குச் செய்யுள் வந்தவழிக் காண்க. (க)

கூ அ. *முன்னிலை யாக்கல் சொல்வழிப் படுத்தல்
நன்னயம் உரைத்தல் நகைநனி உறுஅ†
அந்நிலை யறிதல் மெலிவுவிளக் குறுத்தல்
தன்னிலை‡ யுரைத்தல் தெளிவகப் படுத்தலென்று
இன்னவை நிகழும் என்மனார் புலவர்.

என்—எனின், இஃது இயற்கைப் புணர்ச்சிக்குரியதொரு திறன் உணர்த்துதல் நுதலிற்று.

தனியினுல் தலைமகளை யெதிர்ப்பட்ட தலைமகன் தனது பெருமையும் அறிவும் நீக்கிவேட்கை மீதூரப் புணர்ச்சி வேண்டினுனாயினும், தலைமகள் மாட்டு நிற்கும் அச்சமும் நாணும் மடனும் நீக்குதலும் வேண்டுமன்றே§, அவை நீங்குதற்பொருட்டு இவையெல்லாம் நிகழுமென்பது. உலகத்துள்ளார் இலக்கணமெல்லாம் உரைக்கின்றுராகலின், இவ்வாசிரியர் உரைக்கின்றவாற்றுன் நிகழ்தல் பெரும்பான்மையாகவும்,

"சொல்லிய நுகர்ச்சி வல்லே பெற்றுழி" (தொல். களவியல்-கக) என ஓதுதலின், இவையெல்லாம் நிகழ்தலின்றிச் சிறுபான்மை வேட்கை மிகுதியாற் புணர்ச்சி கடிதின் முடியவும் பெறுமெனவுங் கொள்க.

(இ-ள்.) முன்னிலையாக்கல் என்பது-காமக்குறிப்புண்மை அறிந்த தலைமகன் வேட்கையாற் சாரநினைத்தவழித் தலைமகளும் வேட்கைக் குறிப்புடையா ளாயினும் குலத்தின் வழிவந்த இயற்கையன்மையான் நாணமும் அச்சமும் $மீதூர அக்குறிப்பில்லாதாரைப் போல் நின்றவழி அவளை முன்னிலையாகப் படுத்துச் சில கூறுதல்.

---

* "இனி வேட்கை யொருதலை (தொல். பொருள். க00) என்னும் சூத்திரத்திற் கூறியவற்றை மெய்யுறு புணர்ச்சிமேல் நிகழ்த்துதற்கு அவத்தை கூறினுர் என்றும், இச் சூத்திரத்தைத் தலைவியை நோக்கி முன்னிலையாக்கல் முதலியன கூறிப் பின்னர் இயற்கைப்புணர்ச்சி புணருமென்றும் கூறுவாரும் உளர். அவர் அறியார். என்னை? ஈண்டு அவத்தை கூறிப் பின்னர்ப் புணர்ச்சி நிகழும் எனின் ஆண்டுக் கூறிய மெய்ப்பாடு பன்னிரண்டும் வேண்டாவாம். அன்றியும் ஆறும் அவதி கடந்து வருவன அகம் அன்மை மெய்ப்பாட்டியலில் கூறலிற் பத்தாம் அவத்தையாகிய சாக்காடெய்தி மெய்யுறு புணர்ச்சி நடத்தல் பொருந்தாமை உணர்க. இனி, தலைவியை முன்னிலையாக்கல் முதலியன கூறிப்பின்னர்ப் புணரும் எனின் முன்னர்க் 'கூட்டியுரைக்கும் குறிப்புரையாகும்' எனக் கண்ணுற் கூறிக்கூடும் என்றலும் இருகையும் எடுத்தல் எனப் பின்பு கூறுதலும் பொருந்தாதாம்."—(நச்சி) (பாடம்)—†உறுஅது. ‡தந்நிலை.

§ 'வேண்டுமென்றே.' $ 'மீதூர நின்றுர்'

"ஒள்ளிழை மகளிரோ டோரையும் ஆடாய்
வள்ளிதழ் நெய்தற் றொடலையும் *புனையாய்
விரிபூங் கானல் ஒருசிறை நின்றோய்
யாரை யோநிற் றொழுதனம் வினவுதும்
கண்டோர் தண்டா நலத்தை தெண்டிரைப்
பெருங்கடற் பரப்பின் அமர்ந்துறை அணங்கோ
இருங்கழி †மருங்கின் நிலைபெற் றனையோ
சொல்இனி மடந்தை என்றனென் அதன் எதிர்
முள்ளெயிற்று முறுவலுந் திறந்தன
பல்லிதழ் உண்கணும் பரந்தவால் பனியே." (நற்றிணை-கஙரு)

சொல்வழிப் படுத்த லாவது—தான் சொல்லுகின்ற சொல்லின் வழி அவள் நிற்குமாறு படுத்துக் கூறுதல்.

"சொல்லிற் சொல்லெதிர் கொள்ளாய் யாழநின்
திருமுகம் இறைஞ்சி நாணுதி கதுமெனக்
காமங் ‡கைம்மிகின் தாங்குதல் எளிதோ
கொடுங்கேழ் இரும்புறம் நடுங்கக் குத்திப்
புலிவிளை யாடிய §புலவுநாறு வேழத்தின்
தலைமருப் பேய்ப்பக் கடைமணி சிவந்தநின்
கண்ணே கதவ அல்ல நண்ணார்
ஆண்டலை மதில ராகவும் முரசுகொண்டு
ஓம்பரண் கடந்த அடுபோர்ச் செழியன்
பெரும்பெயர்க் கூடல் அன்னநின்
கரும்புடைத் தோளும் உடையவால் அணங்கே."
(நற்றிணை கஅ)

நன்னய முரைத்த லாவது—தலைமகளினது நலத்தினை யுரைத்தல்.
'சேரல் மடவன்னஞ் சேரல்நடை யொவ்வாய்
சேரல் மடவன்னஞ் சேரல்நடை யொவ்வாய்
ஊர்திரை வேலி யுழக்கித் திரிவாள்பின்
சேரல் மடவன்னஞ் சேரல்நடை யொவ்வாய்."
(சிலப். கானல்-உக)

நகைநனி யுறாஅ அந்நிலை யறிந லாவது—தலைமகன் தன் நன்னய முரைத்தலைக் கேட்ட தலைவிக்கு இயல்பாக அகத்து உளவாகும் மகிழ்வால் புறந்தோன்றும் முறுவற்குறிப்பு மிக்குத்தோன்றா அந்நிலையினைத் தலைவன் அறிதல்,

"மாண்இழை பேதை நாறிருங் கூந்தல்
ஆணமும் இல்லாள் நீர்உறை சூருடைச்
சிலம்பிற் கணங்காய் முபன்ற செறியியல்
நொதுமல் நோக்கைக் காண்மோ நெஞ்சே
வறிதால் முறுவற் கெழுமிய
நுடங்குமென் பணைவேய் சிறுகுடி யோளே."

(பாடம்) *புரியாய். †மருங்கிளிலை. ‡'கைமிக்குற்றுத லெளிதோ'
§ புகர்முக.

மெலிவு விளக்குறுத்த லாவது — தலைவன் அகத்துறும் நோயாற் புறத்து நிகழும் தளர்வினைக் குறிப்பான் எடுத்துக் கூறலும். உதாரணம் வந்துழிக் காண்க.

குறிப்பாவன : புறத்துறுப்பா யவர்க் கின்றியமையாதன.

தன்னிலை யுரைத்த லாவது—அப் புறநிகழ்ச்சியின் பொலி விழவைக் கண்ட தலைமகள்மாட்டுத் தலைவன் தன் உள்ள வேட்கை மீதூர் வினை நிலைப்படக் கூறுதல்.

"சொல்லிற் சொல்லெதிர் கொள்ளாய் யாழநின்."

என்னும் நற்றிணைப்பாட்டுள்,

"காமங் கைம்மிகில் தாங்குதல் எளிதோ
... ... ...
.... ... கடைமணி சிவந்தநின் *
கண்ணே கதவ அல்ல" (நற்றிணை-௩௯)

எனத் தன்னிலை யுரைத்தவாறு காண்க.

தெளிவு அகப்படுத்த லாவது—தலைவன் முன்னிலையாக்கல் முதலியன கூறிப் பின்னர் இயற்கைப் புணர்ச்சியினை விழைந்து நின்றானாக, அப் புணர்ச்சியினைக் கூறுவார் முன்னம் ஒத்த பண்புடைமை உள்ளத்து இருவர் மாட்டும் வேண்டுதலின் தலைமகள் பண்பினைத் தலைவன் அறிந்து அத்தெளிவைத் தன்னகப்படுத்துத் தேர்தல்.

"யாயும் ஞாயும் யாரா கியரோ"

என்னும் குறுந்தொகைப்பாட்டுள்,

"அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே" (குறுந்-௪0)

என இயற்கைப்புணர்ச்சி முன்னர்த் தலைவன் தலைவியர் உள்ளம் ஒத்த பண்பினைக் கூறியவாறு காண்க.

இதுகாறும் இயற்கைப்புணர்ச்சிக்குரிய திறன்கூறி, மேல் இயற்கைப் புணர்ச்சி நிகழுமாறு கூறுகின்றார். அஃதேல்; தன்னிலை யுரைத்தலைத் தெளிவகப் படுத்தலுடன் இணைத்து மெய்யுறுபுணர்ச்சி யாக்கிய பின்னர்த் தோன்றுந் துறையாகப் படுத்தாலோ எனின், அது சான்றோர் வழக்கின்றாதலானும், மெய்யுறுபுணர்ச்சி முன்,

"மெய்தொட்டுப் பயிறல்" (களவியல்-கக)

முதலியன யாண்டும் நிகழ்ந்தே தலைவிக்கு மெய்யுறுபுணர்ச்சி நிகழுமாதலானும் அஃதன்றென்க. (௧0)

கக. மெய்தொட்டுப் பயிறல் பொய்பா ராட்டல்
இடம்பெற்றுத் தழாஅல் இடையூறு கிளத்தல்
நீடுநினைந் திரங்கல் கூடுத லுறுதல்
சொல்லிய நுகர்ச்சி வல்லே பெற்றுழித்
தீராத் தேற்றம் உளப்படத் தொகைஇப்
பேராச் சிறப்பின் இருநான்கு கிளவியும்

* கஎக ஆம் பக்கம் காண்க.

பெற்றவழி மகிழ்ச்சியும் பிரிந்தவழிக் கலங்கலும்
நிற்பவை நினைஇ நிகழ்பவை உரைப்பினும்
குற்றங் காட்டிய வாயில் பெட்பினும்
பெட்ட வாயில்பெற் றிரவுவலி யுறுப்பினும்
ஊரும் பேருங் கெடுதியும் பிறவும்
நீரிற் குறிப்பின் நிரம்பக் கூறித்
தோழியைக் குறையுறும் பகுதியும் தோழி
குறையவட் சார்த்தி மெய்யுறக் கூறலும்
தண்டா திரப்பினும் மற்றைய வழியும்
சொல்லவட் சார்த்தலிற் புல்லிய வகையினும்
அறிந்தோள் அயர்ப்பி னவ்வழி மருங்கில்
கேடும் பீடுங் கூறலும் தோழி
நீக்கலி னாகிய நிலைமையும் நோக்கி
மடல்மா கூறும் இடனுமா ருண்டே.

என்—எனின், களவிற் கூட்டம் நான்கினிடத்தும் தலைவன் கூற்று நிகழுமாறும் காதல்மிக்கு ஆற்றுமை கையிகப்பின் தலைவனும் இயனும் கூறுதல் நுதலிற்று.

(இ - ள்.) மெய்தொட்டுப் பயிற லாவது—பெருமையும் உரனுமுடைய தலைமகன் தெளிவகப்படுத்தியது காரணமாகக் காதல் வெள்ளம் புரண்டோடத் தலைவியின் மெய்யைத் தீண்டிப் பயிறல்.

"தீண்டலும் இயைவது கொல்லோ மாண்ட
வில்லுடை *வீளையர் கல்லிடுபு எடுத்த
நனந்தலைக் கானத்து இனந்தலைப் பிரிந்த
புன்கண் மடமான் நேர்படத் தன்ஐயர்
சிலைமாண் கடுவிசைக் கலைநிறத் தழுத்திக்
குருதியொடு பறித்த செங்கோல் வாளி
மாறுகொண் †டன்ன உண்கண்
நாறிருங் கூந்தற் கொடிச்சி தோளே." (குறுந். உஎஉ)

பொய் பாராட்ட லாவது—தலைவியின் ஐம்பால் முதலிய கடைகுழன்று சிதை வின்றேனும் அஃதுற்றதாக மருங்குசென்று தொட்டான் ஒருகாரணம் பொய்யாகப் படைத்து உரைத்துப் பாராட்டல்.

"கடல்புக் குயிர்கொன்று வாழ்வர்நின் ஐயர்
உடல்புக் குயிர்கொன்று வாழ்வைமன் நீயும்
மிடல்புக் கடங்காத வெம்முலையோ பாரம்
இடர்புக் கிடுகும் இடையிழவல்கண்டாய்." (சிலப். கானல்-கஎ)

(பாடம்) *இளையர். †மாறுகொண்.

**இடம்பெற்றுத் தழாஅல்** ஆவது—பொய்பாராட்டல் காரணமாத் தலைவிமாட்டு அணிமையிடம் பெற்றுத் தழுவக்கூறல். உதாரணம் :

"கொல்யானை வெண்மருப்பும் கொல்வல் புலியதளும்
நல்லானை* நின்னையிச் கூட்டுண்டு செல்வார்தாம்
ஓர் அம்பி ஞனெய்து போக்குவர்யான் போகாமை
ஈர்அம்பி ஞனெய்தாய் இன்று" (திணைமாலை·உஉ)

**இடையூறு கிளத்தல்** ஆவது—நாண் மடன் நிலைக்களனுக் கொண்ட தலைவி தன் அறிவு நலன் இழந்து ஒன்றும் அறியாது உயிர்த்தனள் அஃது ஒக்குமோ எனின் ஒக்கும். புதிதாய்ப் புக்கார், ஊற்றுணர்வு என்றும்பயிலாததம் மெல்லியல் மெய்யிற் படஅறிவிழப்பினும்† உள்நெக்கு உயிர்க்கும் என்க. அதுபற்றிப் புலையன் தொடு தீம்பால் போல் காதல் கூரக் கொம்பானும் கொடியானும் சார்ந்தாளைத் தலைவன் இப்பொழுது இவ்வூற்றின்பிற்கு இடையூறுய் நின்மனத்தகத்து நிகழ்ந்தவை யாவென வினவுதலும்.

**நீடுநினைந்திரங்க** லாவது—இருவர் இயலும் ஒருங்கு இணைந்தும் தலைவிபெரு நாணல், பால்வழி உறுகவென எண்ணிமாற்றமுங்குறியுங் காட்டாது கண்புதைப்பாளைத் தலைவன் புறம்ஒச்சி நிற்கவும் ஆண்டும் கலக்கலாம் பொழுது கூடாமைக்கு நினைந்து இரங்கல்.

**கூடுதலுறுத** லாவது—இங்ஙனமாய்க் காட்சி நிகழ்வின் பின்னர்ப் புணர்ச்சி எய்தலும் .

இதுவரை இயற்கைப் புணர்ச்சியாங் காரணங்கூறிக், கூடுதலுறுதலால் மெய்யுறுபுணர்ச்சி கூறினர். இவற்றிற்குச் செய்யுள் :

"வீழும் இருவர்க்கு இனிதே வளியிடை
போழப் படாஅ முயக்கு." (குறள் ககOஅ)

இது கூடுதலுறுதல் பிற வந்துழிக் காண்க.

**சொல்லிய நுகர்ச்சி வல்லே பெற்றுழி** என்பது—இயற்கைப் புணர்ச்சிக்குக் களனுக மேற்கூறப்பட்டவற்றுடன் அவ்வின்பந் திளைத் தலையும் விரைவாக ஒன்றுய்ப் பெற்ற விடத்து.

இத்தெய்வப் புணர்ச்சிக்குப் பொருள் கூறுங்கால், பயிறல், பாராட்டல், தழாஅல், கிளத்தல், இரங்கல், உறுதல், நுகர்ச்சி, தேற்றம் என்று சொல்லப்பட்ட இருநான்கு கிளவியும் என எண்ணப்படுத்துக.

"மெய்தொட்டுப் பயிறல்" முதலாகக் "கூடுத லுறுதல்" வரை இயற்கைப் புணர்ச்சிக்கே உரிய கூறி,

"சொல்லிய நுகர்ச்சி" முதல் "இருநான்கு கிளவி" வரை இடந்தலைப்பாடும் சேர்த்து உணர்த்தினர். அற்றுயின் நுகர்ச்சியும் தேற்றமும் இயற்கைப் புணர்ச்சியன்றே, இடந் தலைப்பாடாமாறு என்னை யெனின், நன்று கடாயினுய். மெய்யுறுபுணர்ச்சியினைப் பால் கூட்டும் நெறிவழிப் பட்டுப்பெற்றுர்க்கு மெய்தொட்டுப்பயிறல் முதல்அறு துறையே இன்றியமையாத் துறையாக, ஏனைய இரண்டும் இடந்தலைப்பாட்டிற்கும் சேர்ந்த துறையாகலின், பொதுப்பட இரண்டற்கும் நடுவே வைத்துச் செப்பம் ஆக்கினுரென்க. நுகர்ச்சியும் தேற்றமும் எனப் பிரித்துக் கூட்டுக.

(பாடம்) * நல்யாணர். † 'உண்நொக்கு'.

**தீராத் தேற்ற** மாவது—இயற்கைப்புணர்ச்சியுடன் முடியாத தெளிவு.

"வேட்ட பொழுதின் அவையவை போலுமே
தோட்டார் கதுப்பினாள் தோள்." (குறள். ௧00௫)

இஃது இயற்கைப் புணர்ச்சித் துறையன்று; இடந்தலைப்பாட்டின்கண் தலைமகன் கூறியது; நுகர்ச்சி பெற்றது.

"கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள" (குறள்-௧௧0௧)

என்பதோ எனின், இயற்கைப்புணர்ச்சிக்கண் நுகர்ச்சி யுற்றமை கூறிற்று என்க.

"எம்மணங் கினவே மகிழ்ந முன்றில்
கனைமுதிர் புன்கின் பூத்தாழ் வெண்மணல்
வேலன் புனைந்த வெறிஅயர் களந்தொறுஞ்
செந்நெல் வான்பொரி சிதறி அன்ன
எக்கர் நண்ணிய எம்மூர் வியன்துறை
நேர்இறை முன்கை பற்றிச்
சூரர மகளிரோ டுற்ற சூளே." (குறுந்-௫௩)

இஃது இயற்கைப்புணர்ச்சிப் பின்றைச் சொற்ற தீராத் தேற்ற வுரை "இன்னிசை யுருமொடு" என்னும் அகப்பாட்டுள்,

"நின்மார் படைதலின் இனிதா கின்றே
நும்மில் புலம்பினும்* உள்ளுதொறும் நலியும்" (அகம்-௮௫)

என்றது இடந்தலைப்பாட்டில் நேர்ந்த தேற்றம்.

"பேராச் சிறப்பின்" எட்டு என்றல்.

பேரும் சிறப்பினை ஆறு என்றலை எடுத்தோத்தாற் காட்டி நின்றது.

இதுவரை இயற்கைப் புணர்ச்சியும் இடந்தலைப்பாடும். மேல் 'வாயில் பெட்பினும்' என்னுமளவும் பாங்கற் கூட்டம்; மேல் தொடர் பவை தோழியிற் கூட்டம்.

**பெற்றவழி மகிழ்ச்சியும்** என்பது — இடந்தலைப்பாட்டினை யொட்டி நிகழும் இன்பினைப் பெற்றவழி அகத்துத் தோற்றும் பெருமகிழ்வும்.

† "நீங்கின் தெறூஉங் குறுகுங்கால் தண்ணென்னுந்
தீயாண்டுப் பெற்றாள் இவள்." (குறள்-௧௧0௪)

---

(பாடம்) * புலம்பான்.

† ௧௨௮ ஆம் சூத்திர வுரையில் 'நன்னயமுரைத்தல்' என்பதன் கீழுள்ள 'சேரல் மடவன்னம்' என்ற செய்யுளின் இறுதியடியிலிருந்து ௧௧ ஆம் சூத்திரவுரையில் 'பெற்றவழி மகிழ்ச்சியும்' என்பதன் கீழுள்ள 'நீங்கிற் றெறூஉம்' என்னும் செய்யுள் வரையும் காணும் பகுதி ஏட்டுப் பிரதியிற் காணப்பெறவில்லை; காலஞ்சென்ற த. மு. சொர்ணம்பிள்ளை யவர்களுடைய கடிதப் பிரதியில் மாத்திரம் இருந்தது; நச்சினார்க்கினியரது உரையினின்றும் எடுத்துச் சேர்க்கப்பட்டுள்ளது எனக் கருதுதற்கு இடமுண்டு. இதன் பின்னர் 'ஒடுங்கீரோதி' என்பதிலிருந்து ௧00 ஆம் சூத்திர வுரை முடியவுள்ள பகுதியிற் பெரும்பாலும் ஏட்டுப் பிரதியிற் பல வாறாகப் பிறழ்ந்து காணப்படுகின்றது. இது பொருட்டொடர்பு நோக்கி யொருவாறு செப்பஞ் செய்யப் பெற்றுள்ளது.

"ஒடுங்கி ரோதி ஒண்ணுதற் குறுமகள்
நறுந்தண் நீர ளாரணங் கினளே
இனையள் ஆன்றவட் புனையளவு அறியேன்
சிலமெல் லியவே கிளவி
அனைமெல் லியல்யாம் முயங்குங் காலே." (குறுந்-எ0)

இவை புணர்ச்சியான் மகிழ்ந்ததற்குச் செய்யுட்கள்.

பிரிந்தவழிக் கலங்கலாவது—இவ்வாறு கூடின தலைமகள் பிரிந்தவழிக் கலக்க முறுதலும் என்றவாறு.

'என்றும் இனிய ளாயினும் பிரிதல்
என்றும் இன்னுள் அன்றே நெஞ்சம்
பனிமருந்து விளைக்கும் பரூஉக்கண் இளமுலைப்
படுசாந்து சிதைய முயங்குஞ்
சிறுகுடிக் கானவன் பெருமட மகளே"

எனவரும்.

*இத்துணையும் இடந்தலைப்பாடு, பெற்றவழி மகிழ்தலும் பிரிந்தவழிக் கலங்கலும் பாங்கற் கூட்டத்தினுந் தோழியிற் கூட்டத்தினும் நிகழும்.

நிற்பவை நினைஇ நிகழ்பவை உரைப்பினும் என்பது—காமநுகர்ச்சி யொன்றனையும் நினையாது இவளாலே நமக்கு இல்லறம் இனிது நடக்கு மென்று உட்கோடலும். †நிற்பவை—இல்லறவினை.

"தேரோன் தெறுகதிர் மழுங்கினுந் திங்கள்
தீரா வெம்மையொடு திசைநடுக்கு உறுப்பினும்
பெயராப் பெற்றியில் திரியாச் சீர்சால்
குலத்தில் திரியாக் கொள்கையுங் கொள்கையொடு
நலத்தில் திரியா நாட்டமும் உடையோய்
கண்டத னளவையிற் கலங்குதி யெனின்இம்
மண்திணி கிடக்கை மாநிலம்
உண்டெனக் கருதி உணரலன் யானே."

இது நிற்பவை நினைஇக் கழறியது.

"இடிக்குங் கேளிர் நுங்குறை யாக
நிறுக்க லாற்றினோ நன்றுமற் றில்ல
ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கில்
கையில் ஊமன் கண்ணிற் காக்கும்
வெண்ணெய் உணங்கல் போலப்
பரந்தன் றிந்நோய் ‡நொண்டுகொளற் கரிதே." (குறுந்-கஅ)

இது நிகழ்பவை உரைத்தது.

---

* இவ்விரண்டு துறையும் இடந்தலைப்பாட்டுக்கும் ஒக்குமன்றோ வெனின் பெற்றுழி மகிழ்தலும் பிரிந்துழிக் கலங்கலும் என்பன எந்நிலத்தார்க்கும் எவ்வொழுக்கினுக்கும் ஏற்குமாகலின் ஒக்கும். மேல், இடந்தலைப் பாட்டுக்கும் பாங்கற்கூட்டம் பாங்கியிற் கூட்டம் என்பனவற்றுக்கும் கொள்க. (த. மு. சொ.) † இது தொடங்கி 'இது நிற்பவை நினைஇக் கழறியது' என்பது முடியவுள்ளது (த. மு. சொ.)

(பாடம்) ‡ நோன்றுகொளற்.

*குற்றங்காட்டியவாயிலாவது—தலைவன் மாட்டுச் சோர்வானும் காதல் மிகுதியானும் நேர்வுற்ற பழிபாவங்களை எடுத்துக்காட்டும் பாங்கன்.

பெட்பினும்—அத்தகைய பாங்கன் இவ்வியல் பண்டைப் பால் வழியது என எண்ணி இவ்வாறு தலைமகன் மறுத்தவழி அதற் குடன்படல். அவ்வழி, நின்னுற் காணப்பட்டாள் எவ்விடத்தாள்? எத்தன்மையாள்? எனப் பாங்கன் வினவுதலும், அதற்குத் தலைமகன் இடமும் உருவுங் கூறுதலும், அவ்வழிப் பாங்கன் சென்று காண்டலும், மீண்டு தலைமகற்கு அவள் நிலைமை கூறலு மெல்லாம் உளவாம். அவ்வழிப் பாங்கன் வினுதலும் தலைமகன் உரைத்தனவும் உளவாம். பாங்கன் வினயதற்குச் செய்யுள் வந்தவழிக் கண்டுகொள்க. அவ்வழித் தலைமகன் உரைத்தற்குச் செய்யுள் :—

"எலுவ சிறாஅர் ஏமுறு நண்ப
புலவர் தோழ கேளாய் அத்தை
மாக்கடல் நடுவண் எண்ணாட் பக்கத்துப்
பசுவெண் திங்கள் தோன்றி யாங்குக்
கதுப்பயல் விளங்குஞ் சிறுநுதல்
புதுக்கோள் யானையிற் பிணித்தற்றால் எம்மே." (குறுந்-கஉக)

"கழைபாடு இரங்கப் பல்லியங் கறங்க
ஆடுமகள் நடந்த கொடும்புரி நோன்கயிற்று
அதவத் தீங்கனி அன்ன செம்முகத்
† துய்த்தலை மந்தி வன்பறழ் தூங்கக்
‡ கழைக்கண் இரும்பொறை ஏறி விசைத்தெழுந்து
குறக்குறு மாக்கள் தாளங் கொட்டுமக்
குன்றகத் ததுவே கொழுமிளைச் சீறூர்
சீறூ ரோளே நாறுமயிர்க் கொடிச்சி
கொடிச்சி கையகத் ததுவே பிறர்
விடுத்தற் காகாது பிணித்தஎன் நெஞ்சே." (நற்றிணை கூ௫)

இன்னும் இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைமகன் வரைந்தெய்தல் வேண்டிக் கூறினவுங் கொள்க.

"முலையே முகிழ்முகிழ்த் தனவே தலையே
கிளைஇய குரலே கிழக்குவீழ்ந் தனவே
§ செறிநிரை வெண்பலும் பறிமுறை நிரம்பின
சுணங்குஞ் சிலதோன் றினவே$ அணங்குதற்கு
யான்தன் அறிவலே தானறி யலளே
யாங்கா குவள்கொல் தானே
பெருமுது செல்வன் ஒருமட மகளே." (குறுந்-௩௩எ)

[இது பாங்கன் நின்னை அணங்காக்கியாள் எவ்விடத்தவள் எவ்வியலினள் என்று வினய் அறிந்தது.]

இவ்வாறு கேட்ட பாங்கன் அவ்வழிச் சென்று கண்டதற்குச் செய்யுள்.

"இரவி னானும் இன்துயில் அறியாது
அரவுறு துயரம் எய்துப தொண்டித்

---

(பாடம்) * இது தொடங்கி 'பண்டைப்பால் வழியது என எண்ணித்' என்பது முடியவுள்ளது. (த. மு. சொ.) † துய்தலை. ‡ பறைக்கணிரும் பொறை. § செறிமுறை. $ அணங்கெனதா.

*"தண்ணறு நெய்தல் நாறும்
பின்னிருங் கூந்தல் அணங்குற் றோரே" (ஐங்-கஎக)

என வரும்.

இச்சூத்திரத்துள் கூற்று † வரையறுத்துணர்த்தாமை பாங்கற் கூற்றும் அடங்கற்குப் போலும்.

பெட்ட வாயில்பெற் றிரவு வலியுறுப்பினும் என்பது மேற்சொல்லிய வாற்றான் உடம்பட்ட பாங்கனால் தலைமகளைப் பெற்றுப் பின்னும் வரைந்தெய்த லாற்றாது களவிற் புணர்ச்சி வேண்டித் தோழியை இரந்து பின்நின்று கூட்டக் கூடுவன் என்னும் உள்ளத்தனாய் அவ்விரத்தலை வலியுறுத்தினும் என்றவாறு.

வலியுறுத்தலாவது, தான் வழிமொழிந்தது யாது தான் அவ்வாறு செய்குவல் என்றமை.

பெட்டவாயிலால் தலைமகளைக் கண்டு கூறியதற்குச் செய்யுள்:

"கடல்புக் குயிர்கொன்று வாழ்வர்நின் ஐயர்
உடல்புக் குயிர்கொன்று வாழ்வைமன் நீயும்
மிடல்புக் கடங்காத வெம்முலையோ பாரம்
‡இடர்புக் கிடுகு மிடையிழவல் கண்டாய்" (சிலப். கானல்-கஎ)

இன்னும், பெட்டவாயில் பெற்று என்பதற்கு இரட்டுற மொழிதல் என்பதனால் தலைமகள் தான் விரும்பப்பட்ட தோழியாகி எமக்கு வாயில் நேர்வாள் இவள் எனப்பெற்றுப் பின்னிரந்து குறையுற நினைப்பினும் என்றுமாம். அதற்குச் செய்யுள்:

"தலைப்புணைக் கொளினே தலைப்புணைக் கொள்ளும்
கடைப்புணைக் கொளினே கடைப்புணைக் கொள்ளும்
புணைகை விட்டுப் புனலோ டொழுகின்
ஆண்டும் வருகுவள் போலும் மாண்ட
மாரிப் பித்திகத்து நீர்வார் கொழுமுகைச்
செவ்வெரிந் உறழுங் கொழுங்கடை மழைக்கண்
துளிதலைத் தலைஇய தளிர்அன் னோளே." (குறுந்-உஉஉ)

இரவு வலியுறுத்தற்குச் செய்யுள் வந்தவழிக் கண்டுகொள்க.

"கொண்டல் மாமழை குடக்கேர்பு குழைத்த
சிறுகோல் இணர பெருந்தண் சாந்தம்
வகைசேர் ஐம்பால் தகைபெற வாரிப்
புலர்விடத் துதிர்த்த துகள்படு கூழைப்
பெருங்கண் ஆயம் உவப்பத் தந்தை
நெடுந்தேர் வழங்கும் நிலவுமணல் முற்றத்துப்
பந்தொடு பெயரும் பரிவி லாட்டி
அருளினும் அருளா ளாயினும் பெரிதழிந்து
பின்னிலை § முனியல்மா நெஞ்சே என்ன தூஉம்
அருந்துயர் அவலந் தீர்க்கும்
மருந்துபிறி தில்லையான் உற்ற நோய்க்கே" (நற்றிணை-கசо)

என்னும் பாட்டும் ஆம்.

(பாடம்) * தண்ணுறு. † வரையாதோதிற்றுப்
‡ இடர்புக்கு மின்னிடையே. § முன்னிலை.

இத்துணையும் பாங்கற்கூட்டம்.

ஊரும்... பகுதியும் என்பது — ஊராயினும் பேராயினும் கெடுதியாயினும் பிறவாயினும் நீர்மையினல் தன்குறிப்புத் தோன்றக் கூறித் தலைமகன் தோழியைக் குறையுறும் பகுதியும் உண்டு என்றவாறு.

அவற்றுள் ஊர்வினயதற்குச் செய்யுள் :

"அருவி ஆர்க்கும் பெருவரை நண்ணிக்
கன்றுகால் யாத்த மன்றப் பலவின்
வேர்க்கொண்டு தூங்குங் கொழுஞ்சுளைப்* பெரும்பழங்
குழவிச் சேதா மாந்தி அயலது
வேய்பயில் இறும்பின் ஆம் அறல் பருகும்
பெருங்கல் வேலிச் சிறுகுடி யாதெனச்
சொல்லவுஞ் சொல்லீர் ஆயிற் கல்லெனக்
கருவி மாமழை வீழ்ந்தென எழுந்த
செங்கேழ் ஆடிய செழுங்குரற் சிறுதினைக்
கொய்புனங் காவலும் நுமதோ
கோடேந் தல்குல் நீள்தோ ளீரே." (நற்றிணை-௨௧௩)

பெயர் வினயதற்குச் செய்யுள் வந்தவழிக் கண்டுகொள்க. கெடுதி வினயதற்குச் செய்யுள் :—

"நரைபரந்த † சாந்தம் அறஎறிந்து நாளால்
உறையெதிர்ந்து வித்தியஊழ் ஏனல்—பிறையெதிர்ந்த
தாமரைபோல் வாள்முகத்துத் தாழ்குழலீர் காணீரோ
ஏமரை போந்தன ஈண்டு." (திணைமாலை-௧)

‡ "இல்லுடைக் கிழமை யெம்மொடு புணரில்
தீதும் உண்டோ மாத ரீரே"

என்றது பிறவாறு வினயது. பிறவுமன்ன.

தோழி குறை...§ இடனுமா ருண்டே என்பது—தோழி குறையைத் தலைமகளைச் சார்த்தி மெய்யுறக் கூறுதலும், அமையா திரப்பினும் மற்றைய வழியும், சொல்லவட் சார்த்தலிற் புல்லிய வகையினும், அறிந்தோள் அயர்ப்பின் அவ்வழி மருங்கிற் கேடும் பீடும் கூறுதலின் நீக்கலினகிய நிலைமையும் நோக்கி மடல்மா கூறுதலும் உண்டு தலைமகன் கண் என்றவாறு.

தலைமகன்கண் என்பது ஆற்றலாற் கொள்ளக்கிடந்தது. உம்மையாற் பிறகூறுதலு முண்டென்றவாறு. புணர்ச்சி நிமித்தமாகத் தலைமகன் இரத்தலுங் குறையுறுதலும் மடலேறுவல் எனக் கூறுதலும் பெறுமென்றவாறு. ஈண்டு, குறையவட் சார்த்தி மெய்யுறக் கூறல் என்பது தோழி

---

(பாடம்) * கொடுஞ்சிளைப். † நறைபடர். ‡ இது தொடங்கி 'பிறவுமன்ன' என்பது முடியவுள்ளது. (த. மு. சொ.)

§ இனி இடனும் என்ற உம்மையைப் பிரித்து நிறீஇ இருநான்கு கிளவியும் மகிழ்ச்சியும் கலங்கலும் கூறும் இடனும் உண்டு, உரைப்பினும் பெட்பினும் உவப்பினும் இரப்பினும் வகையினுங் கூறும் இடனும் உண்டு, மெய்யுறக் கூறலும், பீடுங் கூறலும் உண்டென முடிக்க (நச்சி

கூற்றுள் அருமையி னகற்சி யென்று ஓதப்பட்டது. தண்டாதிரந்த லாவது—தலைமகன் பலகாலுஞ் சென்று இரத்தல். மற்றைய வழி என்பது—பின்வர வென்றல் முதலாயின. சொல்லவட் சார்த்தலிற் புல்லியவகை என்பது—மூன்னுறு புணர்ச்சி முறைநிறுத் துணர்த்தலென ஓதப்பட்டது. அறிந் தோளயர்ப் பென்பது—பேதைமை யூட்டல் என ஓதப்பட்டது. கேடு கூறுதலாவது—உலகுரைத் தொழிப்பினும் என ஓதப்பட்டது. பீடுகூறுத லாவது—பெருமையிற் பெயர்ப்பினும் என ஓதப்பட்டது. நீக்கலினுகிய நிலைமை என்பது—அஞ்சி அச்சுறுத்தலென ஓதப்பட்டது. இவையெல்லாந் தோழி கூற்றினுட் காணப்படும்.

தோழியைக் குறையுறும் பகுதி வருமாறு :—

"தோளுங் கூந்தலும் பலபா ராட்டி
வாழ்தல் ஒல்லுமோ மற்றே செங்கோற்
குட்டுவன் தொண்டி அன்ன
எற்கண்டு மயங்கிநீ* நல்காக் காலே" (ஐங்குறு-களஅ)

இனி மடலேறுவல் என்பதற்குச் செய்யுள் :

"மாவென மடலும் ஊர்ப பூவெனக்
குவிமுகிழ் எருக்கங் கண்ணியுஞ் சூடுப
மறுகின் ஆர்க்கவும் படுப
பிறிதும் ஆகுப காமங்காழ்க் கொளினே." (குறுந்-கஎ)

அவ்வழித் தலைமகன் கூறிய சொற்கேட்டு, இஃது அறிவும் அருளும் நாணமும் உடையார் செய்யார் எனக் கூறியவழித் தலைமகன் கூறிய தற்குச் செய்யுள் :

"நாணொடு நல்லாண்மை பண்டுடையேன் இன்றுடையேன்
காமுற்றார் ஏறும் மடல்" (குறள் - ககங௩)

எனவும்,

† "அறிகிலா ரெல்லாரும் என்றேயென் காமம்
மறுகில் மறுகும் மருண்டு" (குறள்-ககஙக)

எனவும் வரும். பிறவு மன்ன. மடல்மா கூறுது பிற கூறியதற்குச் செய்யுள் :—

"பனைத்தோட் குறுமகள் பாவை தைஇயும்
பஞ்சாய்ப் பள்ளஞ் சூழ்ந்தும் மற்றிவள்
உருத்தெழு வனமுலை ஒளிபெற எழுதிய
தொய்யில் காப்போர் அறிதலும் ‡ அறியார்
முறையுடை அரசன் செங்கோல் வையத்து
யான்தற் கடவின் யாங்கா வதுகொல்
பெரிதும் பேதை மன்ற
அளிதோ தானேயிவ் அழுங்கல் ஊரே." (குறுந் உஎஉ)

இவ்வாறு இரந்து பின்னிற்றலும் மடலேறுவல் என்றலும் கைக்கிளை பெருந்திணைப் பாற்படுமோ எனின், அவ்வாறு வருவன அகத்திணைக்கும் புறத்திணைக்கும் பொதுவாமாறு வருகின்ற சூத்திரத்தான் விளங்கும். (கக)

(பாடம்) * நயந்துநீ. † அறிவில்லார். ‡ அறியாது.

௧௦௦. பண்பிற் பெயர்ப்பினும் பரிவுற்று மெலியினும்
அன்புற்று நகினும் அவட்பெற்று மலியினும்
ஆற்றிடை யுறுதலும் அவ்வினைக் கியல்பே.

என்—எனின், எய்தியது விலக்குதல் நுதலிற்று.

(இ - ள்.) மேல் தலைமகன் 'மடல்மா கூறும் இடனுமா ருண்டே' என்றார், இஃது அவன் மடல்மா கூறுதற்கு நிமித்த மாகிய நீக்கத்தினை மாறுபட்டுக் கூருத் தலைமகள் இயல்பைக் கூறிப் பெயர்ப்பினும், அஃதறிந்து தாம் உடன்படத் தலைமகன் வருத்தத்தினான் மெலிகின்றமை கூறிய இடத்தினும், தலைமகன் குறையை மறுப்புழி அன்பு தோன்றத் தக்க இடத்தும், தோழி உடன்பாடுற்றவழியும், தலைமகனும் மேற் சொல்லப்பட்ட மடல்மா கூறுதல் இடையூறுபடுதலும் தோழியிற் கூட்டத் திற்கு இயல்பு என்றவாறு.

உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை.

பண்பிற் பெயர்ப்பினும் — தலைமகள் இளமைப்பண்பு கூறிப் பெயர்த்த வழித் தலைமகன் கூறியது. அதற்குச் செய்யுள் :—

"குன்றக் குறவன் காதல் மடமகள்
வண்டுபடு கூந்தல் தண்தழைக் கொடிச்சி
வளையள் *முளைவாள் எயிற்றள்
இளைய ளாயினும் ஆரணங் கினளே." (ஐங்குறு-உ௫௬)

பரிவுற்று மெலியினும் — பரிந்த வுள்ளத்துடன் மெலிதலுறுதலும். பரிவுற்றுத் தோழி மெலிதலாவது 'உடம்படுவளியாள்' என்றாற்போல வருவது. அவ்வழித் தலைமகன் கூற்று :—

"தொடலைக் குறுந்தொடி தந்தாள் மடலொடு
மாலை உழக்குந் துயர்." (குறள்-௧௧௩௫)

அன்புற்று நகினும் — அன்பு தோன்றும் உள்ளத்துடன் நக்ககாலும் கூற்று நிகழும். அன்புற்று நக்கவழித் தலைமகன் கூறியதற்குச் செய்யுள் :—

"நயனின் மையிற் பயனிது என்னாது
பூம்பொறிப் பொலிந்த அழலுமிழ் அகன்பைப்
பாம்புயிர் அணங்கி யாங்கும் ஈங்கிது
தகாஅது வாழியோ குறுமகள் நகாஅது
உரைமதி யுடையுமென் உள்ளஞ் சாரல்
கொடுவிற் கானவன் கோட்டுமா தொலைச்சிப்
பச்சூன் பெய்த பகழி போலச்
சேயரி பரந்த ஆயிழை மழைக்கண்
உருஅ நோக்க முற்றவென்
பைதல் நெஞ்சம் உய்யு மாறே." (நற்றிணை-எ௫)

(பாடம்) * முளைவாய் வாளெயிற் றிளைய,

அவட்பெற்று மலியினும் — தோழி உடம்பாட்டினைப் பெற்று மகிழல். இரட்டுற மொழிதலான் தலைமகளை இருவகைக் குறியினும் பெற்று மகிழினும் என்றும் கொள்க.

உதாரணம் :—

"எமக்குநயந் தருளினை யாயிற் பணைத்தோள்
நன்னுதல் அரிவையொடு மென்மெல இயலி
வந்திசின் வாழியோ மடந்தை
தொண்டி அன்னநின் பண்புபல கொண்டே." (ஐங்குறு கஎகு)

இது அவட்பெற்று மலியுந் தலைவன் கூற்று.

இனி, உள்ளப் புணர்ச்சியா னின்றி யியற்கை யிடையீடுபட்டுழி, பின் தலைமகள் குறியிடங் கூறியவழி யதனைப் பாங்கற் குரைத்தற்குச் செய்யுள் :—

"அணங்குடைப் பனித்துறைத் தொண்டி அன்ன
மணங்கமழ் பொழிற்குறி நல்கினள் நுணங்கிழைப்
பொங்கரி பரந்த உண்கண்
அங்கவிழ் மேனி *அசையியல் எமக்கே" (ஐங்குறு-கஎ௪)

எனவுஞ் சிறுபான்மை வரும்.

"காணிற் குவளை கவிழ்ந்து நிலனோக்கும்
மாணிழை கண்ணொவ்வேம் என்று." (குறள்-கககஉ)

இது தலைவியைப் பகற்குறிக்கண்பெற்று மலிதல்.

"மதியும் மடந்தை முகனும் அறியா
பதியிற் கலங்கிய மீன்." (குறள்-கககரு)

இஃது இரவுக்குறிக்கண் தலைவன் அவட்பெற்று மலிந்தது.

"மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்
காதலை வாழி மதி" (குறள் · கககஅ)

என்பதும் அது.

ஆற்றிடை உறுதலும்—தான்சேறும் ஆற்றிடை இடையூறு உண்டாய விடத்தும் கூற்று நிகழும். இரட்டுற மொழிவான் வரைவிடை வைத்துப் பிரிந்தான், தான் சேறும் ஆற்றின்கண் வருத்தமுற்றுக் கூறலும் கொள்ளப்படும்.

"குருதி வேட்கை உருகெழு வயமான்
வலிமிகு முன்பின் மழகளிறு பார்க்கும்
மரம்பயில் சோலை மலியப் பூழியர்
உருவத் துருவின் நாள்மேயல் ஆரும்
மாரி எண்கின் மலைச்சுர நீளிடை
நீநயந்து வருதல் எவனெனப் பலபுலந்து
அழுதனை உறையும் அம்மா அரிவை
பயங்கெழு பலவின் கொல்லிக் குடவரைப்

பாடம்) * அசைஇய எமக்கே.

பூதம் புணர்த்த புதிதியல் பாவை
விரிகதிர் இளவெயில் தோன்றி அ[illegible]னநின்
[illegible]ய்நலம் உள்ளி வரினெமக்கு
ஏமம் ஆகும் மலைமுதல் ஆறே.'' (நற்றிணை. ககஉ)

இந் நற்றிணைப் பாட்டு தலைவி ஆற்றினது அருமை செப்பத் தலைவன் செப்பியது.

"ஓம்புமதி வாழியோ வாடை பாம்பின்
தூங்குதோல் கடுக்குந் தூவெள் ளருவிக்
கல்லுயர் நண்ணி யதுவே நெல்லி
மரையினம் ஆரும் முன்றிற்
புல்வேய் குரம்பை நல்லோள் ஊரே." (குறுந்: உ௩௫)

இக் குறுந்தொகைப் பாட்டு தலைவன் வரைவிடத்துச் சேறுவான் கூறியது. (கஉ)

க09க. *பாங்கர் நிமித்தம் பன்னிரண் டென்ப.

என்—எனின், பலவகை மணத்திற் பாங்கராயினுர் துணையாகுமிடம் இத்துணை யென வரையறுத்துணர்த்துதல் நுதலிற்று.

பாங்கராயினுர் துணையாகக் கூடும் கூட்டம் பன்னிரண்டு வகை யென்றவாறு.

நிமித்தம் என்பது நிமித்தமாகக் கூடும் கூட்டம். அக்கூட்டம் நிமித்தமென ஆகுபெயராய் நின்றது. பாங்கராற் கூட்டம் பாங்கர் நிமித்தமென வேற்றுமைத் தொகையாயிற்று. அவையாவன:—†பிரமம் முதலிய நான்கும், கந்திருவப் பகுதியாகிய களவும், உடன்போக்கும் அதன்கண் கற்பின் பகுதியாகிய இற்கிழத்தியும், காமக்கிழத்தியும், காதற்பரத்தையும், அசுரம் முதலாகிய மூன்றுமென இவை. (க௩)

க09உ. முன்னைய மூன்றும் கைக்கிளைக் குறிப்பே.

என்—எனின், மேற்சொல்லப்பட்ட பன்னிருவகையினும் கைக்கிளைப் பாற்படுவன வகுத்துணர்த்துதல் நுதலிற்று.

எண்வகை மணத்தினுள்ளும் முன்னையவாகிய அசுரம் முதல் மூன்றும் ‡ கைக்கிளைப்பாற்படும் என்றவாறு. (க௪)

(பாடம்) * பாங்கன்.

† பிரமம் முதலிய நான்கற்கும் பாங்கன் ஏதுவாகலின் இவ்வாறு பிரமசரியம் காத்தான் எனவும், இவன் இன்ன கோத்திரத்தான் ஆகலின் இவட்கு உரியன் எனவும், இவளை இன்னவாற்றாற் கொடுக்கத் தகும் எனவும் இன்னோனை ஆசாரியனைக் கொண்டு வேள்விசெய்து மற்றிக் கன்னியைக் கொடுக்கத்தகும் எனவும், சொல்லிப்புணர்க்கும் என்பது. இப்பன்னிரண்டும் தொன்மையும் தோலும் என்ற வனப்பினுள் வருவன. (தொல். கள. க௩. நச்சி.)

‡ வில் ஏற்றியாயினும் கொல்லேறு தழீஇயாயினும் கொள்வல் என்னும் உள்ளத்தனுவான் தலைவனே யாதலின், அதனை முற்படப்பிறந்த அன்பு முறை பற்றி ஒருதலைக்காமம் ஆகிய "கைக்கிளை" என்றார். இராக்கதம் வலிதில் மணஞ்செய்தலாதலின் அதுவும் அப்பாற்படும்;

கoங. பின்னர் நான்கும் பெருந்திணை பெறுமே*

என்—எனின், மேற்சொல்லப்பட்டவற்றுள் பெருந்திணைக்குரியன உணர்த்துதல் நுதலிற்று.

எண்வகை மணத்தினுள்ளும் பிரமம் முதலிய நான்கும் பெருந் திணைப் பாற்படும் என்றவாறு. (கரு)

கoச. முதலொடு புணர்ந்த யாழோர் மேன
தவலருஞ் சிறப்பின் ஐந்நிலம் பெறுமே.

என்—எனின், மேற்சொல்லப்பட்ட ஒருதலைக்காமமும் பொருந்தாக் காமமுமன்றி, ஒத்த அன்பின் வருங் கூட்டம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) முதல் என்பது நிலமும் காலமும். நிலத் தொடும் காலத்தொடும் பொருந்திய கந்திருவர் பாற்பட்டன கெடுதலில்லாத சிறப்பினை யுடைய ஐந்துவகைப்படும் என்ற வாறு.

முதலொடு புணர்ந்த என்றாரேனும் 'வந்தது கண்டு வாராதது முடித்தல்' (மரபியல்-கக உ) என்பதனால் ஒழிந்த கருப்பொருளும் உரிப் பொருளும் கொள்ளப்படும். நிலம் என்பது இடம். இதனாற் சொல் லியது, ஒத்தகாமமாகிக் கருப்பொருளொடும் புணர்ந்த கந்திருவநெறி இட வகையான் ஐந்து வகைப்படும் என்றவாறு. அவையாவன களவும் உடன்போக்கும், இற்கிழத்தி, காமக்கிழத்தி, காதற்பரத்தையும் எனச் சொல்லப்பட்ட ஐவகைக் கூட்டம்.

இச்சொல்லப்பட்ட பன்னிருவகைப்பட்ட கூட்டத்திற்கும் பாங்க ராயினார் நிமித்தமாக வேண்டுதலின், அவற்றுள் தலைவற்கும் தலைவிக்கும் ஒத்த காத லுள்வழிப் பாங்கராயினாரால் நிகழும் நிகழ்ச்சி கந்திருவப் பகுதியாகவும், ஒருதலை வேட்கையாகிய வழி இவரால் வரும் நிகழ்ச்சி கைக்கிளையாகவும் ஒப்பில்கூட்ட மாகியவழிப் பெருந்திணையாகவும் கொள்க. †ஐந்நிலம் என்பதனை முல்லை குறிஞ்சி முதலாயின வென்றார் உளராலெனின், 'முதலொடு புணர்ந்த' என்பதனால் நிலம்பெறு மாத லான் நிலம் என்பதற்கு வேறுபொருள் உரைத்தல்வேண்டு மென்க. அஃது அற்றாக, இற்கிழத்தி, காமக்கிழத்தி என்பார் உள்ளப் புணர்ச்சியா

பேயும் அப்பாற்படும். இவை முன்னைய மூன்றும் கைக்கிளையாய வாறு. "காமஞ் சாலா இளமை யோள்வயிற்" (தொல். பொரு- ருo) கைக்கிளை சிறப்புடைத் தென்றற்குப் புல்லித் தோன்றும் எனக்கூறி, இதனைவாளாது 'குறிப்பு' என்றார். ஆண்டுப் பிற்காலத்தன்றிக் காட்சிக் கண் மணம் அதற்கின்மையின் ஈண்டு மணம் கூறும்வழிக் கூறாது அகத் திணையியலுட் கூறினார். (தொல். கள. கச. நச்சி.)

* கச, கரு இரண்டையும் ஒரு சூத்திரமாக்குவர் நச்சினார்க்கினியர்.

† இது புலனெறியன்றி உலகியலாகலின். உலகியலாற் பாலைநிலனும் ஆண்டு வாழ்வார்க்கு மன்றலும் உளதாகலின், பாலையுங் கூறினான். எனவே, ஐம்புலத்து வாழ்வார் மணமும் செய்யுளுட் பாடியக்கால் இழுக்கின்றென்றான். (தொல். கள-கரு. நச்சி.)

ஞதல் மெய்யுறு புணர்ச்சியாஞதல் வரையப்பட்டாராகப் பொருட் பெண்டிராகிய காதற்பரத்தையர் கூட்டம் ஒத்த காமமாகியவா றென்னையெனின், அரும் பொருளாஞதல், அச்சத்தாஞதல் அன்றி அன்பினுற் கூடுதலின் அதுவுங் கந்திருவப்பாற்படும். அவ்வாறன்றி அவரைப் பிறிது நெறியாற் கூடுவராயின் இவன்மாட்டுத் தலைமை இன்றுமென்பது உணர்ந்து கொள்க. அஃதாமாறு.

"அன்னை கடுஞ்சொல் அறியாதாய் போலநீ
என்னைப் புலப்பது ஒறுக்குவேன்* மன்யான்
சிறுகாலை இற்கடை வந்து குறிசெய்த
அவ்வழி என்றும்யான் காணேன் திரிதர
எவ்வழிப் பட்டாய் சமஞக இவ்வெள்ளல்" (கலித்-கO)

எனவும், "கண்டேனின் மாயங் களவாதல்" என்னுங் கலியுள்,

"...நோயும் வடுவுங் கரந்து மகிழ்செருக்கிப்
பாடுபெயல் நின்ற பானுள் இரவில்
தொடிபொலி தோளும் முலையுங் கதுப்பும்
வடிவார் குழையும் இழையும் பொறையா
ஒடிவது போலும் நுசுப்போ டடிதளரா
வாராக் கவவின் ஒருத்திவந் † தல்கல்தன்
சீரார் ஞெகிழஞ் சிலம்பச் சிவந்துநின்
போரார் கதவம் மிதித்த தமையுமோ" (கலித்-கஎ)

எனவும், பரத்தையர் அன்பினுற் கூறியவாறும் இவர் இற்கிழத்தி யும் காமக்கிழத்தியும் அன்மையும் அறிந்து கொள்க. இவ்வகை வருவன ஐந்து நிலனும் வரும். அஃதேல், மருதக்கலியுள்,

"... ... ... ... ... ...
அடக்கமில் போழ்தின்கண் தந்தை காமுற்ற
தொடக்கத்துத் தாயுழைப் புக்கான்" (கலித்-அஉ)

எனவும்,

'வழிமுறைத்தாய்' எனவும், 'புதியோள்' எனவும், இவ்வாறு கூறக் கேட்கின்ற காமக்கிழத்தியு மென மனைவியர் நால்வருளர். அவரெல் லாரையும் கூருது மனைக்கிழத்தியர் இருவர் என்றதனுற் பயன் இன்றெனின், அவரெல்லாரும் இற்கிழத்தியும் காமக்கிழத்தியு மென இரண்டு பகுப்பினுள் அடங்குப. அன்றியும், இவர் நால்வரோடு பரத்தையுட்பட ஐவர் கந்திருவப்பகுதியர் என உரைப்பினும் அமையும்.

'பரத்தை வாயில் நால்வர்க்கும் உரித்தே' (பொருளியல். உஅ)

என ஓதுதலானும், தலைவற்குப் பிரமம் முதலாக வரும் நான்கு வருணத் துப் பெண்பாலாரும் பரத்தையும் என ஐவகைப்படுமென்பதூஉம் ஒன் றெனக் கொள்க. (கசு)

கOரு. இருவகைக் குறிபிழைப் பாகிய இடத்துங்
காணு வகையிற் பொழுதுநனி இகப்பினும்
தானகம் புகாஅன் பெயர்தல் இன்மையிற்
காட்சி யாசையிற் களம்புக்குக் கலங்கி

(பாடம்) * ஒருக்குறுவென். † கவ்விஞே டொருத்திவந்.

வேட்கையின் மயங்கிக்* கையறு பொழுதினும்
புகாஅக் காலைப் புக்கெதிர்ப் பட்டுழிப்
பகாஅ விருந்தின் பகுதிக் கண்ணும்
வேளாண் எதிரும் விருப்பின் கண்ணுந்
தாளாண்† எதிரும் பிரிவி னானும்
நாணுநெஞ் சலைப்ப விடுத்தற் கண்ணும்
வரைதல் வேண்டித் தோழி செப்பிய
புரைதீர் கிளவி புல்லிய எதிரும்
வரைவுடம் படுதலும் ஆங்கதன் புறத்தும்
புரைபட வந்த மறுத்தலொடு தொகைஇக்
கிழவோன் மேன என்மனார் புலவர்.

இது, தோழியிற் கூடிய தலைமகன் வரைந்தெய்துங்காறும் கூறும் பொருண்மை யுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) இருவகைக் குறிபிழைப்பாகிய இடத்தும் என்பது—பகற்குறியும் இரவிற்குறியும் பிழைப்பாகிய இடத்தும் என்றவாறு. பகற்குறி இரவிற்குறி யென்பது எற்றாற் பெறுது மெனின்,

"குறியெனப் படுவ திரவினும் பகலினும்
அறியக் கிளந்த ஆற்ற தென்ப" (களவியல். சO)

என்பதனாற் கொள்க. அக்குறிக்கண் தலைவி வரவு பிழைத்தவிடத்துத் தலைவன் கூற்று நிகழும் என்றவாறு.

"மழைவர வறியா மஞ்ஞை யாலும்
அடுக்கல் நல்லூர் அசைநடைக் கொடிச்சி
தானெம் மருளாள் ஆயினும்
யாந்தன் உள்ளுபு மறந்தறி யேமே." (ஐங்குறு-உசுஅ)

இது, குறிபிழைத்தவழித் தோழிக்குச் சொல்லியது.

"இல்லோன் இன்பங் காமுற் றாஅங்கு
அரிதுவேட் டனையால் நெஞ்சே காதலி
நல்லா ளாகுதல் அறிந்தாங்கு
அரியா ளாகுதல் அறியா தோயே." (குறுந். கஉO

இது, குறிபிழைத்தவழி உள்ளத்திற்குச் சொல்லியது.

காணா வகையிற் பொழுதுநனி இகப்பினும் என்பது—தலைமகளைக் காணா வகையிற் பொழுது மிகவும் கடப்பினுங் கூற்று நிகழும் என்றவாறு. செய்யுள்:

"உள்ளிக் காண்பென் போல்வல் முள்ளெயிற்று
அமிழ்தம் ஊறுஞ் செவ்வாய்க் கமழகில்

(பாடம்) * மயங்கிய † வாளாண்.

ஆரம் நாறும் அறல்போற் கூந்தற்
பேரமர் மழைக்கண் கொடிச்சி
மாரல் முறுவலொடு மதைஇய நோக்கே'' (குறுந். உஅசு)

எனவரும்.

**தானகம்புகாஅன் பெயர்தல் இன்மையிற்...பொழுதினும்** என்பது—காணுவகையிற் பொழுது மிகக்கழிந்துழிக் காட்சி யாசையினாற் குறியிடத்துச் சென்று ஆண்டுக் காணாது கலங்கி வேட்கையான் மயக்கமுற்றுச் செயலற்று நிற்குங் காலத்தினுங் கூற்று நிகழும் என்றவாறு.

புகான் என்பது முற்று வாய்பாட்டான் வந்த வினையெச்சம். செய்யுள் வந்தவழிக் காண்க.

***புகாஅக் காலை புக்கெதிர்ப் பட்டுழிப்...கண்ணும்** என்பது—தான் புகுதற்குத் தகுதியில்லாத காலத்துக்கண் அகம்புக் கெதிர்ப்பட்டுழி அவரால் நீக்கப்படாத விருந்தின்பகுதிய ளாகியவழியும் கூற்று நிகழும் என்றவாறு, செய்யுள்:

''இரண்டறி களவின்நம் காத லோரே
முரண்கொள் துப்பிற் செவ்வேல் மலையன்
முள்ளூர்க் கானம் நண்ணுற வந்து
நள்ளென் கங்குல் நம்மோ ரன்னள்
கூந்தல் வேய்ந்த விரவுமலர் உதிர்த்துச்
சாந்துளர் நறுங்கதுப்பு எண்ணெய் நீவி
அமரா முகத்த ளாகித்
தமரோர் அன்னள் வைகறை யானே'' (குறுந். கஉஉ)

என வரும்.

**வேளா ணெதிரும் விருப்பின் கண்ணும்**—என்பது தலைவி உபகாரம் எதிர்ப்பட்ட விருப்பின் கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.

அது குறிவழிக்கண்டு கூறுதல். அவ்வழித் தலைவிக்குக் கூறிய செய்யுள்:

''சிலம்புகமழ் காந்தள் நறுங்குலை யன்ன
நலம்பெறு கையினென் கண்புதைத் தோயே
பாயல் இன்துணை யாகிய பணைத்தோள்
தோகை மாட்சிய மடந்தை
நீயல துளரோஎன் நெஞ்சமர்ந் தோரே.'' (ஐங்குறு. உகூஉ)

இது தலைவி கண்புதைத்தவழித் தலைவன் கூறியது.

''குருதி வேட்கை உருகெழு வயமான்
வலிமிகு முன்பின் மழகளிறு பார்க்கும்
மரம்பயில் சோலை மலியப் பூழியர்
உருவத் துருவின் நாள்மேயல் ஆரும்

---

* புகாக்காலமாதலின் பகாவிருந்தென்றான். விடியற்காலமாயின் தலைவன் புகான் எனவும், புகாக் காலத்துப் புக்கானாயின் அவர்விருந்தேற்றுக் கோடல் ஒருதலையென்று புகும் என்றும் கொள்க.
(தொல். களா - கசு. நச்சி.)

மாரி எண்கின் மலைச்சுர *நீளிடை
நீநயந்து வருதல் எவனெனப் பலபுலந்து
அழுதனை உறையும் அம்மா அரிவை
பயங்கெழு பலவின் கொல்லிக் குடவரைப்
பூதம் புணர்த்த புதிதியல் பாவை
விரிகதிர் இளவெயில் தோன்றி யன்ன நின்
ஆய்நலம் உள்ளி வரினெமக்கு
ஏமம் ஆகும் மலைமுத லாறே" (நற்றிணை. ககஉ

எனவும் வரும்.

**தாளாண் எதிரும் பிரிவி னானும்** என்பது—தாளாண்மை எதிரும் பிரிவின் கண்ணும் என்றவாறு. எனவே நெட்டாறு சேறலன்றி அணிமைக்கண் பிரிவென்று கொள்க.

"இன்றே சென்று வருவது நாளைக்
குன்றிழி அருவியின் வெண்டேர் முடுக
இளம்பிறை யன்ன விளங்குசுடர் நேமி
விசும்புவீசு † கொள்ளியிற் பைம்பயிர் துமியக் ‡
காலியற் செலவின் § மாலை யெய்திச்
சின்னிரை வால்வளைக் குறுமகள்
பன்மாண் ஆகம் அடைந்துவக் குவமே." (குறுந். ௧அக)

பிரிந்தவழிக் கூறியதற்குச் செய்யுள் :—

"ஓம்புமதி வாழியோ வாடை பாம்பின் $
தூங்குதோல் கடுக்குந் தூவெள் அருவிக்
கல்லுயர் நண்ணி யதுவே நெல்லி
மரையினம் ஆரும் முன்றில்
புல்வேய் குரம்பை நல்லோள் ஊரே" (குறுந். உகரு)

எனவும் வரும்.

**நாணுநெஞ் சலைப்ப விடுத்தற் கண்ணும்** என்பது நாணந் தலைவி நெஞ்சினை வருத்துதலானே நீக்கி நிறுத்துதற்கண்ணும் என்றவாறு.

அஃது, அலராகும் என்றஞ்சி நீக்குதல். அவ்வழித் தலைவன் கூற்று நிகழும் என்றவாறு. அவ்வழி இவ்வாறு கூறுகின்றது, புனைந்துரை யென்று கருதிக் கூறுதலும் மெய்யென்று கருதிக் கூறுதலும் உளவாம்.

"களித்தொறுங் கள்ளுண்டல் வேட்டற்றுற் காமம்
வெளிப்படுந் தோறும் இனிது" (குறள். ௧0சரு)

இது புனைந்துரையென்று கருதிக் கூறியது.

¶ "உறுஅது ஊரறி கௌவை அதனைப்
பெறுஅது பெற்றன்ன நீர்த்து." (குறள். ககசரு)

'ஊரறிந்த கௌவை நன்றே காண்; அதனைக் குற்றமாகக் கொள்ளாது பெறுது பெற்ற நீர்மைத்தாகக் கொள்' என்றமையானுந் தமர் வரைவுடன் படுவர் எனக் கூறியவாறும். இது மெய்யாகக் கொண்டு கூறியது.

(பாடம்) * எண்கினம் வலிதரு. † விசும்புவீழ். ‡ கொள்ளி நெற்பயிர் துமிப்பக். § காலையிற் செலவின். $ பாப்பின். ¶ "உறுதோ ஊரறிந்த கௌவை அதனைப், பெறுஅது பெற்றன்ன நீர்த்து."

வரைதல் வேண்டி...புல்லிய எதிரும் என்பது—வரைந்து கோடல் வேண்டித் தோழியாற் சொல்லப்பட்ட குற்றந்தீர்ந்த கிளவி பொருந்திய எதிர்ப்பாட்டுக் கண்ணுங் கூற்று நிகழும் என்றவாறு.

அஃதாவது பின்னுங் களவொழுக்கம் வேண்டிக் கூறுதல்.

"நல்லுரை இகந்து* புல்லுரைத் தாஅய்
பெயல்நீர்க் கேற்ற பசுங்கலம் போல
உள்ளம் தாங்கா வெள்ளம் நீந்தி
அரிதவா வுற்றனை நெஞ்சே நன்றும்†
பெரிதால் அம்மநின் பூசல்‡ உயர்கோட்டு
மகவுடை மந்தி போல
அகனுறத் தழீஇக் கேட்குநர்ப் பெறினே" (குறுந். உக)

எனவரும்.

வரைவுடம் படுதலும் — தோழி கூறிய சொற்கேட்டு வரைவுடம்படுதற் கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.

"ஆர்களிறு மிதித்த நீர்திகழ் சிலம்பிற்
சூர்நசைந் தனையையாய்§ நடுங்கல் கண்டே
நரந்த நாறுங் குவையிருங் கூந்தல்
நிரந்திலங்கு வெண்பல் மடந்தை
பரித்தனென் அல்லனோ இறையிறை யானே." (குறுந். ருஉ)

என வரும்.

ஆங்கதன் புறத்தும் என்பது — அவ் வரைவு நிகழ்ச்சிக் கண்ணுங் கூற்று நிகழும் என்றவாறு. செய்யுள் வந்தவழிக் காண்க.

புரைபடவந்த மறுத்தலொடு தொகைஇ என்பது — குற்றம்படவந்த மறுத்தலொடுகூட என்றவாறு.

அஃது அவர் மறுத்தற் கண்ணுந் தலைமகன் மாட்டுக் கூற்று நிகழும் என்றவாறு. அதற்குச் செய்யுள்:

"பொன்அடர்ந் தன்ன ஒள்ளிணர்ச் செருந்திப்
பன்மலர் வேய்ந்த நலம்பெறு கோதையுள்$
திணிமணல் அடைகரை அலவன் ஆட்டி
அசையினர்¶ளிருந்த ஆய்தொடிக் குறுமகள்
நலஞ்சால் விழுப்பொருள் கலநிறை கொடுப்பினும்
பெறலருங் குரைய ளாயின்** அறந்தெரிந்து
நாமுறை தேஎ மரூஉப்பெயர்ந் தவனொடு
இருநீர்ச் சேர்ப்பி னுப்புடன் உழுதும்
பெருநீர்க் குட்டம் புணையொடு புக்கும்
படுத்தனம் பணிந்தனம் அடுத்தனம் இருப்பில்††
தருகுவன் கொல்லோ தானே விரிதிரைக்
கண்திரள் முத்தங் கொண்டு ஞாங்கர்த்

(பாடம்) * யிகழ்ந்த. † என்றும். ‡ அஞ்சொல். § தணையாய் $ தெரிகைய. ¶ யசையுள. ** அந்தில் தெரிநுநாமுரைப் பெயர் வந்தவனொ டிருநீர்ச் சேர்ப்பினும் உப்புடனுழுதும். †† இருந்தபின்.

தேன் இமிர் அகன்கரைப்* பகுக்குங்
கானலம் பெருந்துறைப் பரதவன் நமக்கே"† (அகம். உஅ0)

என வரும்.

கிழவோன் மேன என்மனார் புலவர் என்பது — இச் சொல்லப்பட்டன வெல்லாங் கிழவோன் இடத்தன என்றவாறு.

கூற்றென்னாது பொதுப்படக் கூறுதலான் உள்ள நிகழ்ச்சியும் கூற்றும் கொள்ளப்படும். (கஎ)

க0சு. காமத் திணையிற் கண்நின்று வரூஉம்
நாணும் மடனும் பெண்மைய ஆகலின்‡
குறிப்பினும் இடத்தினும் அல்லது வேட்கை
நெறிப்பட வாரா அவள்வயின் ஆன.

என்பது மேல் தலைவற் குரிய கிளவி கூறி, இனித் தலைவிக்குரிய கிளவி கூறுகின்றாராகலின் முற்பட அவள் தலைவனைக் கண்ணுற்றவழி வரும் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

தலைவியிடத்து நிலைமைபெற்று வருகின்ற நாணமும் மடனும் பெண்மைக்கு அங்கமாகலின், காமவொழுக்கத்தின்கண் குறிப்பினானும் இடத்தினானுமல்லது வேட்கை புலப்பட நிகழாது தலைவியிடத்து என்றவாறு.

காமத்திணை என்பதனைக் குறிப்பென்பதற்கு முன்னே கூட்டியுரைக்க. அச்சமும் இயல்பன்றோவெனின், அதுவும் வேட்கைக்குறிப்பினான் நீங்குமென்ப, அச்சமுள்வழி வேட்கை நிகழாமையின், வேட்கையுள் வழி நாணும் மடனும் நீங்காவோ எனின், அது வருகின்ற சூத்திரத்தாற் கூறுப. இதனாற் சொல்லியது தலைவி தலைவனை எதிர்ப்பட்டு முன்னிலையாக்கல் முதலாகத் தலைவன்மாட்டு நிகழ்ந்தனமைபோலத் தலைவிமாட்டு நிகழ்பவை உளவோ வெனின், அவள்மாட்டுக் குறிப்பினானுதல், சொல்லுதற்குத் தக்க விடத்தினானுதல் தோற்றுவதல்லது, புலப்பட்டு நிகழா தென்றவா றாயிற்று.

"உண்டார்கண் அல்ல தடுநறுக் காமம்போற்
கண்டார் மகிழ்செய்தல் இன்று" (குறள். க0கo)

என்றது தலைவனைக் கண்ட தலைவி வேட்கைக் குறிப்பினால் தன்னுள்ளே கருதியது.

இடம் பற்றி வேட்கை தோற்றியதற்குச் செய்யுள் :—

"..................................................
நெடுங்கொடி நுடங்கும் நாவாய் தோன்றுவ
காணா மோவெனக் காலிற் சிதையா§
நில்லாது பெயர்ந்த பல்லோ ருள்ளும்
என்னே $குறித்த நோக்கமொடு நன்னுதால்¶
ஒழிகோ யானென அழிதகக் கூறி
யான்பெயர்க என்ன"** நோக்கித் தான்தன்
நெடுந்தேர்க் கொடிஞ்சி பற்றி
நின்றோன் போலும் இன்றும்என் கட்கே" (அகம். ககo)

(பாடம்) * தண்கரைப் † மகளே. ‡ ஆதலின். §சிதைய'
$ என்னையே. ¶ நன்னுதல். ** தோறு.

எனத் தன் குறிப்புக் காலத்தாற் கூறுதலாற்றாது பின் இடம்பெற்றுழிக் கூறியவாறு காண்க. (கஅ)

கOஎ. காமஞ் சொல்லா நாட்டம் இன்மையின்
ஏமுற இரண்டும் உளவேன மொழிப.

என்பது, மேலதற்கோர் புறனடை யுணர்த்துதல்*நுதலிற்று.

வேட்கையுரையாத கண் உலகத்தின்மையால் தலைவன் ஏமுறற் பொருட்டு நாணும் மடனும் உளவாம் என்றவாறு.

இதனாற் சொல்லியது மேல் தலைவிக்கு இயல்பாய்க் கூறப்பட்ட அச்சமும் நாணும் மடனும் என்பனவற்றுள் வேட்கையால் அச்சம் நீங்கினவழி நாணும் மடனும் நீங்காவோ என்றையுற்றார்க்கு அவை தலை மகற்கு ஏம மாதற்பொருட்டு நீங்காவாம் என்பதூஉம், வேட்கைக்குறிப் புக் கண்ணினான் அறியலா மென்பதூஉம் உணர்த்தியவாறு. என்னை? நாணும் மடனும் இல்லாதாரைத் தலைமக்கள் அவமதிப்பாராதலால். உதாரணம் :—

"கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்
பெண்ணிற் பெருந்தக்க தில்." (குறள் ககஎஙு)

இதனுள் 'கடலன்ன காமம் உழந்தும்' என்றதனான் வேட்கை மிக்க நிலையினையும், 'மடலேறாப் பெண்' என்றமையான் நாணும் மடனும் நீங்கா நிலையினையும் கூறுதல் காண்க.

"கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல." (குறள். ககOO)

இதனுள் அகத்துநிகழ் வேட்கையினைக் கண்ணினால் அறியக்கிடந்தமை கூறியவாறு காண்க. (கக)

கOஅ. சொல்லெதிர் மொழிதல் அருமைத் தாகலின்
அல்ல கூற்றுமொழி அவள்வயி னான.

என்பது, இதுவும் தலைவிமாட்டு ஒரு கூற்றுச்சொல் நிகழுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

தலைவன் இயற்கைப்புணர்ச்சி கருதிக்கூறுஞ் சொல்லெதிர் தான் வேட்கைக் குறிப்பினளாயினும் அதற்குடம்பட்ட நெறியைக் கூறுதல் அருமையுடைத் தாதலான் அதற்கு உடம்பாடல்லாத கூற்றுமொழி தலைவியிடத்தன என்றவாறு. என்றது இசைவில்லாதாரைப்போலக் கூறுதல்.

---

*இனிக் கூற்று நிகழுங்கால், நாணும் மடனும் பெண்மையவாத லின் குறிப்பினும், இடத்தினும் அன்றி வேட்கை நெறிப்படவாரா என்று பொருள்கூறிற், காட்டிய உதாரணங்கட்கு மாறுபாடாகலானும், சான் றோர் செய்யுட்கள் எல்லாம் குறிப்பும் இடனும் அன்றிப் பெரும்பான்மை கூற்றாய்வருதலானும், ஆசிரியர் தலைவன் கூற்றும் தலைவி கூற்றும் தோழி கூற்றும் செவிலி கூற்றும் எனக் கூற்றும் சேர்த்து நூல்செய்த லானும் அது பொருளன்மை யுணர்க. (தொல் : கள. கக. நச்சி.)

உதாரணம் :—

"யாரிவன் என்னை விலக்குவான் நீருளர்
பூந்தா மரைப்போது தந்த விரவுத்தார்க்
கல்லாப் பொதுவனை நீமாறு நின்னொடு
சொல்லலோம் பென்றார் எமர்" (கலித். ௧௧௨)

எனவரும். இதன்பின்,

"..........................................
எவன் கொலோ
மாயப் பொதுவன் உரைத்த உரையெல்லாம்
வாயாவ தாயின் தலைப்பட்டாம் பொய்யாயின்
சாயலின் மார்பிற் கமழ்தார் குழைத்தநின்
ஆயித முண்கண் பசப்பத் தடமென்தோள்
சாயினும் ஏஎர் உடைத்து" (கலித். ௧௧௨)

என உடம்பாடு கூறினளாதலின் முற்கூறியது அல்ல கூற்றாயிற்று. (உ.௦)

௧௦௯. மறைந்தவற் காண்டல் தற்காட் டுறுதல்
நிறைந்த காதலிற் சொல்லெதிர் மழுங்கல்
வழிபாடு மறுத்தல் மறுத்தெதிர் கோடல்
பழிதீர் முறுவல் சிறிதே தோற்றல்
கைப்பட்டுக் கலங்கினும் நாணுமிக வரினும்
இட்டுப்பிரி விரங்கினும் அருமைசெய் தயர்ப்பினும்
வந்தவழி எள்ளினும் விட்டுயிர்த் தழுங்கினும்
நொந்துதெளி வொழிப்பினும் அச்சம் நீடினும்
பிரிந்தவழிக் கலங்கினும் பெற்றவழி மலியினும்
வருந்தொழிற் கருமை வாயில் கூறினும்
கூறிய வாயில் கொள்ளாக் காலையும்
மனைப்பட்டுக் கலங்கிச் சிதைந்தவழித் தோழிக்கு
நினைத்தல் சான்ற அருமறை உயிர்த்தலும்
உயிராக் காலத்து உயிர்த்தலும் உயிர்செல
வேற்றுவரைவு வரின் அது மாற்றுதற் கண்ணும்
நெறிப்படு நாட்டத்து நிகழ்ந்தவை மறைப்பினும்
பொறியின் யாத்த புணர்ச்சி நோக்கி
ஒருமைக் கேண்மையின் உறுகுறை தெளிந்தோள்
அருமை சான்ற நாலிரண்டு வகையிற்
பெருமை சான்ற இயல்பின் கண்ணும்
பொய்தலை அடுத்த மடலின் கண்ணுங்
கையறு தோழி கண்ணீர் துடைப்பினும்

வெறியாட் டிடத்து வெருவின் கண்ணும்
குறிப்பின் ஒப்புமை மருடற் கண்ணும்
வரைவுதலை வரினும் களவறி வுறினும்
தமர்தற் காத்த காரண மருங்கினும்
தன்குறி தள்ளிய தெருளாக் காலை
வந்தவன் பெயர்ந்த வறுங்களம் நோக்கித்
தன்பிழைப் பாகத் தழீஇத் தேறலும்
வழுவின்று நிலைஇய இயற்படு பொருளினும்
பொழுதும் ஆறும் புரைவ தன்மையின்
அழிவுதலை வந்த சிந்தைக் கண்ணும்
காமஞ் சிறப்பினும் அவனளி சிறப்பினும்
ஏமஞ் சான்ற வுவகைக் கண்ணும்
தன்வயின் உரிமையும் அவன்வயிற் பரத்தையும்
அன்னவு முளவே ஓரிடத் தான.

என்றது, தலைவிக்கு இயற்கைப்புணர்ச்சி முதலாகக் களவின்கட் 'குறிப்பினு மிடத்தினு மல்லது' (களவியல்-கஅ) நிகழ்ச்சி யெல்லாவற்றினும் கூற்று நிகழுமிடம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) மறைந்தவற் காண்டல் என்பது—தன்னைத் தலைவன் காணாமல் தான் அவனைக் காணுங் காட்சி.

தற்காட்டுறுதல் என்பது—தன்னை அவன் காணுமாறு நிற்றல்.

நிறைந்த...மழுங்கல் என்பது—நிரம்பிய வேட்கையால் தலைவன் கூறிய சொற் கேட்டு எதிர்மொழி கூறாது மடிந்து நிற்றல்.

இம் மூன்றிடத்தினுங் கூற்று நிகழாது.

வழிபாடு மறுத்தல் என்பது—அதன்பின் இவள் வேட்கைக் குறிப்புக் கண்டு சாரலுற்றவழி அதற்கு உடம்படாது மறுத்தல்.

அது குறிப்பினானும் கூற்றினானும் வரும்.

மறுத்தெதிர்கோடல் என்பது—மறுத்தாங்கு மறாது பின்னும் ஏற்றுக்கோடல்.

பழிதீர்...தோற்றல்—குற்றந்தீர்ந்த முறுவல் சிறிது தோற்றுவித்தல்.

அது புணர்தற்கு உடன்பாடு காட்டி நிற்கும் இவை ஆறுநிலையும் புணர்ச்சிக்கு முன் நிகழும் ஈண்டுங் குறிப்பு நிகழ்ச்சியல்லது கூற்று நிகழ்ச்சி அருகியல்லது வாராது. அவற்றுள் சில வருமாறு:

''இகல்வேந்தன் சேனை'' என்னும் முல்லைக்கலியுள்,

''மாமருண் டன்ன மழைக்கண்சிற் றுய்த்தியர்*
நீமருட்டுஞ் சொற்கண் மருள்வார்க் குரையவை

(பாடம்) * றுய்ச்சியர்.

யாமுனியா ஏறுபோல் வைகற் பதின்மரைக்
காமுற்றுச் செல்வாயோர் கட்குத்திக் கள்வனை
நீஎவன் செய்தி பிறர்க்கு,
யாம்எவன்* செய்தும் நினக்கு;

இது வழிபாடு மறுத்தது. இன்னும் இதனுள்,

"தேங்கொள் பொருப்பன் சிறுகுடி எம்ஆயர்
வேந்தூட்டு அரவத்து நின்பெண்டிர் காணுமல்†
காஞ்சித்தா துக்கன்ன தாதெரு மன்றத்துத்
தூங்குங் குரவையுள் நின்பெண்டிர் கேளாமை
ஆம்பற் குழலாற் பயிர்பயிர்‡ எம்படப்பைக்
காஞ்சிக்கீழ்ச் செய்தேங் குறி." (கலித். கOஅ)

இது மறுத்தெதிர் கோடல்.

பழிதீர் முறுவல் சிறிதே தோற்றற்கு உதாரணம்:

"அன்னையோ,
மன்றத்துக் கண்டாங்கு சான்றூர் மகளிரை
இன்றி அமையேனென் றின்னவுஞ் சொல்லுவாய்
நின்றாய்நீ சென்றீ எமர்காண்பர் நாளையுங்
கன்றொடு சேரும் புலத்து" (கலித். ககO)

இதனுள் "அன்னையோ" என்பது நகையொடு கூடிய சொல்.

கைப்பட்டுக் கலங்கினும் என்பது—தலைவன் கையகப்பட்டபின்பு என்செய்தே மாயினேம் எனக் கலக்கமுறினும் என்றவாறு.

நாணுமிகவரினும் என்பது—தலைவிக்கு முன்புள்ள நாணத்தினும் மிக நாணம் வந்துழியும் என்றவாறு.

இட்டுப்பிரி விரங்கினும் என்பது—தலைவன் இட்டு வைத்துப் பிரிவன் என அஞ்சியதற்கு இரக்க முறினும் என்றவாறு.

அருமைசெய் தயர்ப்பினும் என்பது தலைவன் வருதற்குக் காவலாகிய அருமை செய்ததனுல் அவனும் வருதலைத் தவிரினும் என்றவாறு.

வருதலைத் தவிர்தலை அயர்ப்பு என்றார். அன்றியும் புறத்து விளையாடுதற்கு அருமை செய்ய மயக்கம்வரினும் என்றுமாம். செய்தென் பதனைச் செயவெனத் திரிக்க.

வந்தவழி எள்ளினும் என்பது—தலைவன் வந்தவிடத்து அலராகு மென்றஞ்சி இகழ்ந்தவழியும் என்றவாறு.

விட்டுயிர்த்தழுங்கினும் என்பது—மறையாது சொல்லி இரங்கினும் என்றவாறு.

நொந்து தெளிவொழிப்பினும் என்பது — தலைவன் தெளிவித்த தெளிவை நொந்து, அதனை யொழிப்பினும் என்றவாறு.

அச்சம் நீடினும் என்பது—தலைவன் வருகின்றது இடையீடாக அச்சம் மிக்குழியும் என்றவாறு.

---

(பாடம்) * உரை † காணுமை. ‡ பயிர் பயிர்த்தெம்.

பிரிந்தவழிக் கலங்கினும் என்பது—தலைவன் பிரிந்தவழிக் கலக்க முறினும் என்றவாறு.

அது தாளாணெதிரும் பிரிவு.

பெற்றவழி மலியினும் என்பது—தலைவனோடு கூட்டம் பெற்றவழி மகிழினும் என்றவாறு.

வருந்தொழிற்கு அருமை வாயில் கூறினும் என்பது—தலைவன் வருதற்கு இடையீடாகக் காவலர் கடுகுதலான் ஈண்டுவருதல் அரிதெனத் தோழி தலைவிக்குச் சொல்லினும் என்றவாறு.

கூறிய....காலையும் என்பது—தோழி இவ்வாறு கூறியதனை மனங் கொள்ளாத காலத்தினும் என்றவாறு.

மனைப்பட்டு அருமறை யுயிர்த்தலும் என்பது—புறத்து விளையாடுதல் ஒழிந்து மனைப்பட்டுக் கலங்கிச் சிதைந்தவழித் தோழிக்குச் சூழ்தலமைந்த அரிய மறைப்பொருளைச் சொல்லலும் என்றவாறு.

எனவே சிதையாதவழித் தோழிக்குச் சொல்லாளாம் என்பது போந்தது. வேட்கை மறைக்கப்படுதலின் மறையாயிற்று.

'கைப்பட்டுக் கலங்கல்' முதலாகக் 'கூறிய வாயில் கொள்ளாக்காலை' யீறாகச் சொல்லப்பட்ட பன்னிருவகையினும் தலைமகள் தோழிக்கு உரைக்கப்பெறும். அஃது உரைக்குங்கால் மனைப்பட்டுக் கலங்கி மேனி சிதைந்தவழியே உரைக்கப்பெறுவது. ஆண்டும் இதற்கு என்செய்வாம் என உசாவுதலோடுகூடத் தனது காதன்மை தோன்ற உரைக்கும் என்றவாறு. மனைப்படாக்கால் அவனைக் காண்டலால் உரைக்கவேண்டுவதில்லை யென்றவாறாயிற்று. இப்பன்னிரண்டும் ஒருத்திமாட்டு ஒருங்கு நிகழ்வன அல்ல. இவ்விடங்கள் உரைத்தற்கு இடமென இலக்கணங் கூறியவாறு.

அவற்றுட் கைப்பட்டுக் கலங்கியதற்குச் செய்யுள் :—

'கொடியவுங் கோட்டவும்' என்னுங் குறிஞ்சிக்கலியுள்,

"நரந்தநா றிருங்கூந்தல் எஞ்சாது நனிபற்றிப்
பொலம்புனை மகரவாய் நுங்கிய சிகழிகை
நலம்பெறச் சுற்றிய குரல்அமை ஒருகாழ்
விரன்முறை* சுற்றி மோக்கலும் மோந்தனன்
நறுஅவிழ்ந் தன்னஎன் மெல்விரற் போதுகொண்டு
செறுஅச் செங்கண் புதைய வைத்துப்
பறுஅக் குருகின் உயிர்த்தலும் உயிர்த்தனன்
தொய்யில் இளமுலை இனிய† தைவந்து
தொய்யலந் தடக்கையின் வீழ்பிடி அளிக்கும்‡
மையல் யானையின் மருட்டலும் மருட்டினன் ;

அதனால்,

அல்லல் களைந்தனன் தோழி நந்நகர்
அருங்கடி நீவாமை கூறி னன்றென
நின்னொடு சூழ்வல் தோழி நயம்புரிந்
தின்னது செய்தாள் இவளென
மன்னா உலகத்து மன்னுவது புரைமே." (கலித். ருச)

(பாடம்) * தொன்முறை. † இனிது. ‡ பிடிக்களிக்கும்.

இதனுட் கைப்பட்டுக் கலங்கியவாறும் அருமறை உயிர்த்தவாறும் இவ்வாறு செய்யாக்கால் இறந்துபடுவன் என்னுங் குறிப்பினளாய் 'மன்னுவுலகத்து மன்னுவது புரையும்' எனவுங் கூறியவாறு காண்க.

நாணுமிக வந்ததற்குச் செய்யுள் :—

"நோக்குங்கால் நோக்கித் தொழூஉம்பிறர் காண்பார்*
தூக்கிலி தூற்றும் பழியெனக் கைகவித்துப்
போக்குங்காற் போக்கும் நினைந்திருக்கும் மற்றுநாம்
காக்கும் இடமன் றினி :
எல்லா எவன்செய்வாம் நாம்." (கலித். ௬௩)

இது நாணம் மிக்கவழித் தோழியொடு உசாவியது.

இட்டுப்பிரி விரங்கியதற்குச் செய்யுள் :—

"அம்ம வாழி தோழி காதலர்
பாவை யன்னஎன் ஆய்கவின் தொலைய
நல்மா மேனி பசப்பச்
செல்வேம்† என்பதம் மலைகெழு நாட்டே"‡ (ஐங்குறு. ௨௨௧)

எனவரும்.

அருமை செய்தயர்த்தற்குச் செய்யுள் :—

"நெய்தற் புறவின்§ நிறைகழித் தண்சேர்ப்பன்
கைதைசூழ் கானலுட் கண்டநாட் போலானுற்
செய்த குறிவழியும் பொய்யாயின் ஆயிழாய்$
ஐயகொல் ஆன்றார் தொடர்பு" (திணைமொழி. ௪௧)

எனவரும்.

வந்தவழி யெள்ளியதற்குச் செய்யுள் :—

"கண்திரள் முத்தம் மயக்கும் இருண்முந்நீர்¶
பண்டங்கொள் நாவாய் வழங்குந் துறைவனை
முண்டகக் கானலுட் கண்டேன் எனத்தெளிந்தேன்
நின்ற உணர்விலா தேன்." (ஐந்திணையெழு. ௫௬)

இதனுள் 'பின்னும் வருவன் என்றிருந்தேன்; அதனான் எள்ளினேன்' என்பது கருத்து.

"..............................................
ஏறிரங் கிருளிடை இரவினிற் பதம்பெறூஅன்
மாறினென் எனக்கூறி மனங்கொள்ளுந் தானென்ப**
கூடுதல் வேட்கையாற் குறிபார்த்துக் குரல்நொச்சிப்
பாடோர்க்குஞ் செவியோடு பைதலேன் யானாக." (கலித். ௪௬)

இஃது எள்ளினையென நினைத்தான் என்றவழிக் கூறியது.

(பாடம்) * காண்பாராத். † செல்வன். ‡ நாடே.
§ படப்பை. $ குறியும் பொய்யாயின ஆயிழையாய்.
¶ இருமுந்நீர்ப். ** தானென்க.

விட்டுயிர்த் தழுங்கியதற்குச் செய்யுள் :—

"மணிநிறந் தீர்ந்து பெரும்பணைத்தோள் வீங்க
மணிமலை நாடன் வருவன்கொல் தோழி
கணிநிற வேங்கை மலர்ந்துவண் டார்க்கும்
மணிநிற மாலைப் பொழுது" (திணைமொழி-க)

எனவும்,

"மரையா உகளும் மரம்பயில் சோலை
உரைசார்* மடமந்தி ஓடி உகளும்
புரைதீர் மலைநாடன் பூணேந் தகலம்
உரையா உழக்கும்என்† நெஞ்சு" (கைந்நிலை-சு)

எனவும் வரும்.

நொந்து தெளிவொழித்தற்குச் செய்யுள் :—

"மன்றத் துறுகற் கருங்கண் முசுஉகளுங்
குன்றக நாடன் தெளித்த தெளிவினை
நன்றென்று தேறித் தெளிந்தேன் தலையளி
ஒன்றுமற் றொன்றும் அனைத்து" (ஐந்திணையெழு-க)

எனவரும்.

அச்சம் நீடினும் என்பதற்குச் செய்யுள் :—

"மென்தினை மேய்ந்த தறுகட் பன்றி
வன்கல் அடுக்கத்துத் துஞ்சு நாடன்
எந்தை யறிதல் அஞ்சிக்கொல்
அதுவே மன்ற வாரா மையே" (ஐங்குறு-உசக)

எனவும்,

"மன்ற மராஅத்த பேஎமுதிர் கடவுள்
கொடியோர்த் தெறூஉம் என்ப யாவதும்
கொடியர் அல்லர்எங் குன்றுகெழு நாடர்
பசைஇப் பசந்தன்று நுதலே
ஞெகிழிய‡ ஞெகிழ்ந்தன்று தடமென் தோளே" (குறுந்-அ௭)

எனவும் வரும்.

பிரிந்தவழிக் கலங்கியதற்குச் செய்யுள் :—

"வருவது கொல்லோ தானே வாராது
அவணுறை மேவலின் அமைவது கொல்லோ
புனவர் கொள்ளியிற் புகல்வரு மஞ்ஞை
இருவி இருந்த குருவி வெருவுறப்
பந்தாடு மகளிரிற் படர்தருங்
குன்றுகெழு நாடனொடு சென்றஎன் நெஞ்சே" (ஐங்குறு-உகூ௬)

எனவும்,

"அதுகொல் தோழி காம நோயே
வதிகுரு குறங்கு மின்னிலைப் புன்னை
உடைதிரைத் திவலை அரும்புந் தீநீர்

(பாடம்) * உரைசால். † வழங்கும். ‡ ஞெகிழ

மெல்லம் புலம்பன் பிரிந்தெனப்
பல்லிதழ் உண்கண் பாடொல் லாவே'' (குறுந். ௫)

எனவும்,

''மணிநிற நெய்தல் இருங்கழிச் சேர்ப்பன்
அணிநலம் உண்டகன்றான் என்றுகொ லெம்போல்
திணிமண லெக்கர்மேல் ஓதம் பெயர்ந்து
துணிமுந்நீர் துஞ்சா தது'' (ஐந்திணையெழு. சு0)

எனவும்,

''நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக் கறிந்து'' (குறள். ககஉஅ)

எனவும்,

''கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்
எழுதேம் கரப்பாக் கறிந்து''* (குறள். ககஉஎ)

எனவும் வரும்.

உறங்காமையும் உண்ணாமையும் கோலஞ் செய்யாமையும் விருத்தம் பிறவுஞ் சொல்லுதல். இவ்வழி நீ வருந்தாதி நின்மாட்டு அன்பு பெரிதுடையான் எனத்தோழி ஆற்றுவித்தவழி ஆற்றாமையாற் கூறியதற்குச் செய்யுள் :—

''சிறுதினை மேய்ந்த தறுகட் பன்றி
துறுகல் அடுக்கத்துத் துணையொடு வதியும்
இலங்குமலை நாடன் வரூஉம்
மருந்தும் அறியுங்கொல் தோழியவன் விருப்பே''
(ஐங்குறு. உசுஉ)

என வரும்.

பெற்றவழி மலியினு மென்பதற்குச் செய்யுள் :

''அம்ம வாழி தோழி பன்மாண்
நுண்மணல் அடைகரை நம்மோ டாடிய
தண்ணந் துறைவன் மறைஇ
அன்னை அருங்கடி வந்துநின் றோனே'' (ஐங்குறு. ககரு)

எனவும்,

''முளைவளர் முதல''†என்னும் அகப்பாட்டினுள்,

''.........வேட்டோர்க்கு
அமிழ்தத் தன்ன கமழ்தார் மார்பின்
வண்டிடைப் படாஅ முயக்கமுந்
தண்டாக் காதலும் தலைநாள் போன்மே'' (அகம். ங௩உ)

எனவும்,

''பெயல்கண் ‡மறைத்தலின் விசும்புகா ணலரே
நீர்பரந் தொழுகலின் நிலங்கா ணலரே
எல்லை சேறலின் இருள்பெரிது பட்டன்று
பல்லோர் துஞ்சும் பானாட் கங்குல்

(பாடம்) * கரப்பதறிந்து. † முதல்வன். ‡ கால்.

யாங்குவந் தனையோ ஓங்கல் வெற்ப
வேங்கை கமழும்எம் சிறுகுடி
யாங்கறிந் தனையோ நோகோ யானே" (குறுந். ௩௭௬)

எனவும்,

"அம்ம வாழி தோழி நலமிக
நல்ல வாயின அளியமென் தோள்கள்
மல்லல் இருங்கழி மலரும்*
மெல்லம் புலம்பன் வந்த வாறே" (ஐங்குறு. ௧௨௦)

எனவும் வரும்.

வருந்தொழிற் கருமை வாயில் கூறியவழித் தலைவி கூறியதற்குச் செய்யுள் :—

"அருங்கடி அன்னை காவல் நீவிப்
பெருங்கடை இறந்து மன்றம் போகிப்
பகலே பலருங் காண வாய்விட்டு†
அகல்வயற் படப்பை அவனூர் வினவிச்
சென்மோ வாழி தோழி பன்னாள்
கருவி வானம் பெய்யா தாயினும்
அருவி ஆர்க்கும் அயந்திகழ் சிலம்பின்‡
வான்தோய் மாமலை கிழவனைச்
சான்றோய் அல்லை என்றனம் வரற்கே" (நற்றிணை. ௩௬௫)

எனவரும்.

கூறியவாயில் கொள்ளாக்காலத்துத் தலைவியுரைத்தற்குச் செய்யுள்:—

"கல்வரை யேறிக் கடுவன் கனிவாழை
எல்லுறு போழ்தின் இனிய பழங் §கவுட்கொண்
டொல்லென வோடு மலைநாடன் தன்கேண்மை
சொல்லச் சொரியும் வளை" (கைந்நிலை. ௭)

எனவரும்.

மனைப்பட்டுக் கலங்கிச் சிதைந்தவழித் தோழிக்கு நினைத்தல் சான்ற அருமறை உயிர்த்தற்குச் செய்யுள் :—

"பலவின் $பழம்பெற்ற பைங்கண் கடுவன்
எலவென்று ¶இணைபயிரும் ஏகல்சூழ் **வெற்பன்
புலவுங்கொல் தோழி புணர்வறிந் தன்னை
செலவுங் கடிந்தாள் புனத்து" (திணைமொழி. ௧0)

எனவும்,

"பொழுதும் எல்லின்று பெயலும் ஓவாது
கழுதுகண் பனிப்ப வீசும் அதன்றலைப்
புலிப்பல் தாலிப் புதல்வர்ப் புல்லி

(பாடம்) * இருங்கழி நீர் அறல் விரியும். † நாண் விட்டு
‡ கழைபயில் நனந்தலை. § கைக்கொண்.
$ பலவம், ¶ இலவென்று. ** மெக்கல்

*அன்னாய் என்னும் அன்னையும் மன்னோ
என்மலைந் தனன்கொல் தானே தன்மலை
ஆரம் நாறு மார்பினன்
மாரி யானையின் வந்துநின் றோனே" † (குறுந். கசு)

எனவும் வரும்.

இவை யெல்லாம் இயற்கைப்புணர்ச்சி புணர்ந்தபின் நிகழ்வன. உள்ளப்புணர்ச்சியான் உரிமை பூண்டிருந்தவரும் இவ்வாறு கூறப்பெறும் என்று கொள்க; ஆண்டு மனநிகழ்ச்சி ஒருப்பட்டு நிற்றலின்.

உயிராக்காலத்து உயிர்த்தலும் உயிர்செல என்பது—இவ்வாறு கூறுங் காலத்து உயிர்செல்லுமாறு சொல்லுதலும் என்றவாறு.

ஈண்டு, உயிர்த்தல் என்பது சுவாதம் எனினும் அமையும். இந் நிகழ்ச்சியைத் தோழிக்கு நாணத்தால் உரையாளாயின், நோயட வருந்தும் என்றவாறு உதாரணம்:—

"தழையணி அல்குல் தாங்கல் செல்லா
நுழைசிறு நுசுப்பிற் கெவ்வ மாக
அம்மெல் லாகம் நிறைய வீங்கி‡
கொம்மை வரிமுலை செப்புடன் எதிரின
யாங்கா குவள்கொல் பூங்குழை என்னும்§
அவல நெஞ்சமொ டுசாவாக்
கவலை மாக்கட்டிப் பேதை யூரே." (குறுந் கஙக)

இது யாங்காகுவளென$ உயிர்செலவு குறித்து நின்றது.

"இன்ன ளாயினள் நன்னுதல் என்றவர்த்
துன்னச் சென்று செப்புநர்ப் பெறினே
நன்றுமன் வாழி தோழிநம் படப்பை
நீர்வார் பைம்புதற் கலித்த
மாரிப் பீரத் தலர்சில ¶கொண்டே" (குறுந். கஅ)

என வரும்.

வேற்றுவரைவு...தன்பிழைப்பாகத் தழீஇத்**தேறலும் என்பது—வேற்று வரைவு வரின் அது மாற்றுதல் முதலாகத் தமர் தற்காத்த காரணப் பக்கம் ஈருக நிகழும்வழித் தன்குறி தப்பித் தலைவன் எதிர்ப்படுதலில்லாக் காலத்து வந்தவன் பெயர்ந்த வறுங்களம் நோக்கித் தன்குறையாக வுடம்பட்டுத் தேறுதலும் என்றவாறு.

ஆண்டுக் கலக்கமின்றித் தேறுமென்பது கூறினாராம்.

அவ்வழி, வேற்று வரைவு வரின் அது மாற்றுதற்கண்ணும் என்பது—பிறனொருவன் வரைய வரின் அதனை மாற்றுதற்காகவும் தன்குறி தப்பும் என்றவாறு.

நெறிப்படு...மறைப்பினும் என்பது—கூட்டம் உண்மை வழக்கியலால் நாடுகின்ற காலத்து மெய் வேறுபாடு நிகழ்ந்துழி. தோழி அறியாமலும் செவிலி அறியாமலுந் தலைவி மறைப்பினும் என்றவாறு.

(பாடம்) * யினை. † றனனே. ‡ வீங்கிக். § குவள்கொல் பூங்குழை யெண்ணும். $ ளென. ¶ சிலர். ** தேறுதலும்.

பொறியின்...இயல்பின் கண்ணும் என்பது—பொறி யென்பது ஊழ். ஊழாற் கட்டப்பட்ட புணர்ச்சியைக் குறித்து ஒற்றுமைப்பட்ட நண்பினுனே தலைவன் வரைதற்குக் குறையுறுகின்றதனைத் தெளிந்த தலைவி செய்தற்கு அருமையமைந்த எண்வகையினுற் பெருமை இயைந்த இயல்பினளாகி நிற்றற்கண்ணும் என்றவாறு.

எண்வகையாவது மெய்ப்பாட்டியலுள் மனன் அழிவில்லாத கூட்டம் என ஓதுகின்ற,

'முட்டுவயிற் கழறல் முனிவுமெய்ந் நிறுத்தல்
அச்சத்தின் அகறல் அவன்புணர்வு மறுத்தல்
தூதுமுனி வின்மை துஞ்சிச் சேர்தல்
காதல் கைம்மிகல் கட்டுரை யின்மை' (மெய்ப்பாட். உ௩)

என்பன. அவற்றுள்,

முட்டுவயிற் கழறல் ஆவது—களவொழுக்கம் நிகழாநின்றுழி நிலவு வெளிப்பாடு, காவலர் கடுகுதல், தாய்துஞ்சாமை, ஊர்துஞ்சாமை, தலைவன் குறிவருவதற்கு இடையீடுபடுதல், இவ்வழிக் களவொழுக்கத் தினுற் பயனின்மை கூறல். அவ்வாறு கூறி இனி இவ்வொழுக்கம் அமையுமென வரைந்தெய்துதல்காறும் புணர்ச்சியை விரும்பாது கலக்க மின்றித் தெளிவுடையளாம்.

முனிவு மெய்ந்நிறுத்தல் ஆவது—இவ்வொழுக்கத்தினுன் வந்த துன் பத்தைப் பிறர்க்குப் புலனுகாமை மெய்யின் கண்ணே நிறுத்தல்.

அவ்வழியும் வரைந்தெய்தல் சான்றமையும் புணர்ச்சியெனக் குறி வழிச் செல்லாளாம்.

அச்சத்தின் அகறல் ஆவது—இதனைப் பிறரறிவர் என்னும் அச்சத்தினுனும் குறிவழிச் செல்லாளாம்.

அவன் புணர்வுமறுத்தல் ஆவது—தலைவன் புணர்ச்சி யில்வழியும் குறிவழிச் செல்லாளாம்.

தூது முனிவின்மை ஆவது—அவ்வழித் தலைவன்மாட்டுத் தூதாகி வருஞ் சொற்கேட்டலை முனிவின்மை.

துஞ்சிச் சேர்தல் ஆவது—உறங்காமையின்றி யுறக்கம் நிகழ்தல்.

காதல் கைம்மிகல் ஆவது—இவ்வாறு செய்யுங் காதல் அன் பின்மையன்றி அன்பு மிகுதல்.

கட்டுரை யின்மை ஆவது—கூற்று நிகழ்தலின்மை.

இவையெல்லாம் கலக்கமில்லாத நிலைமை யாதலிற் பெருமை சான்ற இயல்பாயின.

பொய்தலையடுத்த மடலின் கண்ணும் என்பது—பொய்ம்மையால் மட லேறுவன் எனத் தலைவன் கூறியவழியும் வெறுத்த உள்ளத்தளாய்க் குறிவழிச் செல்லாளாம்.

கையறு தோழி கண்ணீர்துடைப்பினும் என்பது—தோழி கையினுல் தலைவி கண்ணீர் துடைத்தவழியுங் குறிவழிச் செல்லாளாம்.

வெறியாட்டிடத்து வெருவின் கண்ணும் என்பது—தலைவி வேறுபாடு எற்றினுயிற்றெனச் செவிலி வெறியாட்டுவிக்க வரும் அச்சத்தினுனுங் குறிவழிச் செல்லாளாம்.

குறியின் ஒப்புமை மருடற் கண்ணும் என்பது—தலைவன் செய்த குறியை ஒப்புமைபற்றிச் சென்று அஃது அவ்வழி மருளுதற்கண்ணும் குறிவழிச் செல்லாளாம்.

அஃதாவன புள்ளெழுப்புதல் போல்வன. அவைபெற்றுப் புள்ளரவம்* எழும். அவ்வாறு மருளுதல்.

வரைவுதலை வரினும் என்பது—தலைவன் வரையவருகின்ற நாள் அணித்தாக வரினும் குறிவழிச் செல்லாளாம்.

களவறிவுறினும் என்பது—களவினைப் பிறர் அறியினும் குறிவழிச் செல்லாளாம்.

தமர்தற்காத்த காரணமருங்கினும் என்பது—தன்னைத் தமர் காத்த காரணப் பக்கத்தினும் என்றவாறு.

அஃது ஐயமுற்றுக் காத்தல்.

அவற்றுள் வேற்றுவரைவு வரின் அது மாற்றுதற்குத் தலைவி கூறிய செய்யுள் :—

"அன்னை வாழிவேண் டன்னை புன்னை
பொன்னிறம் விரியும் பூக்கெழு துறைவனை
என்னை என்றும் யாமே இவ்வூர்
பிறிதொன் றாகக் கூறும்
ஆங்கும் ஆக்குமோ வாழிய பாலே" (ஐங்குறு. கக0)

என வரும்.

நெறிப்படு நாட்டத்து நிகழ்ந்தமை மறைத்தற்குச் செய்யுள் :

"துறைவன் துறந்தெனத் துறையிருந் தழுதஎன்
மம்மர் வாண்முக நோக்கி அன்னைநின்
அவலம் உரையென் றனளே† கடலென்
பஞ்சாய்ப் பாவை கொண்டு
வண்டலஞ் சிறுமனை‡ சிதைத்ததென் றேனே"

என வரும்.

முட்டுவயிற் கழறற்குச் செய்யுள் :—

"இரும்பிழி மாரி§ அழுங்கன் மூதூர்
விழவின் றாயினுந் துஞ்சா தாகும்
மல்லல் ஆவணம் மறுகுடன் மடியின்
வல்லுரைக் கடுஞ்சொல் அன்னை துஞ்சாள்
பிணிகோள் அருஞ்சிறை அன்னை துஞ்சில்
துஞ்சாக் கண்ணர் காவலர் கடுகுவர்
இலங்குவேல் இளையர் துஞ்சின் வைஎயிற்று
வலஞ்சுரித் தோகை ஞாளி மகிழும்
அரவவாய் ஞமலி மகிழாது மடியிற்
பகலுரு உறழ நிலவுக்கான் று$ விசும்பின்
அகல்வாய் மண்டிலம் நின்றுவிரி யும்மே
திங்கள் கல் சேர்பு கனையிருள் மடியின்
இல்லெலி வல்சி வல்வாய்க் கூகை

(பாடம்) * புள்வரவு. † றேளே. ‡ சிறுவன
§ மகாஅரிவ். $ உறழ்நிலாக்கான்று

கழுதுவழங் கியாமத் தழிதகக் குழறும்
வளைக்கட் சேவல் வாளாது மடியின்
மனைச்செறி கோழி மாண்குரல் இயம்பும்
எல்லா மடிந்த காலை யொருநாள்
நில்லா நெஞ்சத் தவர்வா ரலரே, அதனால்
அரிபெய் புட்டில் ஆர்ப்பப் பரிசிறந்து
ஆதி போகிய பாய்பரி நன்மா
நொச்சி வேலித் தித்தன் உறந்தைக்
கல்முதிர் புறங்காட் டன்ன
பல்முட் டின்றால் தோழிநங் களவே" (அகம். கஉஉ)

என வரும்.

முனிவு மெய்ந்நிறுத்தற்குச் செய்யுள் :—

"நோமே நெஞ்சே நோமே நெஞ்சே*
இமைதீய்ப் பன்ன கண்ணீர் தாங்கி
அமைதற் கமைந்தநங் காதலர்
அமைவிலர் ஆகுதல் நோமே நெஞ்சே†" (குறுந். ௪)

என வரும்.

அச்சத்தின் அகறற்குச் செய்யுள் :—

"பேணுப பேணார் பெரியோர்‡ என்பது
நாணுத் தக்கன் றது காணுங் காலை
உயிரோர் அன்ன செயிர்தீர் நட்பின்
நினக்கியான் மறைத்தல்§ யாவது மிகப்பெரிது
அழிதக் கன்றால் தானே கொண்கன்
யான்யாய் அஞ்சுவல் எனினுந் தான்எற்
பிரிதல் சூழான் மன்னே இனியே
கானல் ஆயம் அறியினும் ஆனாது
அலர்வது$ அன்றுகொல் என்னு மதனால்
புலர்வது கொல்அவன் நட்பென
அஞ்சுவல் தோழிஎன் னெஞ்சத் தானே" (நற்றிணை. எஉ)

என வரும்.

அவன் புணர்வு மறுத்தற்குச் செய்யுள் :—

"யாரு மில்லைத் தானே கள்வன்
தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ
தினைத்தா ளன்ன சிறுபசுங் கால
ஒழுகுநீர் ஆரல் பார்க்குங்
குருகும் உண்டுதாம் மணந்த ஞான்றே" (குறுந். உ௫)

என வரும்.

தூதுமுனிவின்மைக்குச் செய்யுள் :—

"புல்வீழ் இற்றிக் கல்லிவர் வெள்வேர்
வரையிழி யருவியின் தோன்று நாடன்

(பாடம்) * நோமென்னெஞ்சே நோமென்னெஞ்சே. † நோமெனி நெஞ்சே. ‡ பெரியார். § மறைப்பது. $ அலர்வந்து.

நீதில் நெஞ்சத்துக் கிளவி நம்வயின்
வந்தன்று வாழி தோழி நாமும்
நெய்பெய் தீயின் எதிர்கொண்டு
தாம்வரைந் தனையமென விடுகம் தூதே" (குறுந். ௧0௬)

என வரும்.

துஞ்சிச் சேர்தற்குச் செய்யுள் வந்தவழிக் காண்க.

காதல் கைம்மிகுதற்குச் செய்யுள் :—

"கன்றும் உண்ணாது கலத்தினும் படாது
நல்லான் தீம்பால் நிலத்துக் காஅங்கு
எனக்கு மாகா தென்னைக்கும் உதவாது
பசலை உணீஇயர் வேண்டுந்
திதலை அல்குல்என் மாமைக் கவினே" (குறுந். உஎ)

என வரும்.

கட்டுரையின்மைக்குக் கூற்று நிகழாது.

பொய்தலையடுத்த மடலின்கண் தலைமகள் கூறிய செய்யுள் வந்த வழிக் காண்க.

கையறு தோழி கண்ணீர் துடைத்தற்குச் செய்யுள் :—

"யாம்எம் காமந் தாங்கவுந் தாம்தம்
கெழுதகை மையின் அழுதன தோழி
கன்றாற்றுப் படுத்த புன்தலைச் சிறாஅர்
மன்ற வேங்கை மலர்பத நோக்கி
ஏறா திட்ட ஏமப் பூசல்
விண்தோய் விடரகத் தியம்பும்
குன்ற நாடற் கண்டஎங் கண்ணே" (குறுந். உ௪௧)

என வரும்.

வெறியாட்டிடத்து வெருவினற் கூறியதற்குச் செய்யுள் :—

"நம்முறு துயரம் நோக்கி அன்னை
வேலவற்* றந்தனள் ஆயினவ் வேலன்
வெறிகமழ் நாடன் கேண்மை
அறியுமோ தில்ல செறியெயிற் றோயே" (ஐங்குறு. உ௪௧)

என வரும்.

குறியின் ஒப்புமை மருடற்குக் கூறிய செய்யுள் :—

"அணிகடல் தண்சேர்ப்பன் தேர்ப்பரிமா பூண்ட
மணியரவம் என்றெழுந்து போந்தேன்—கனிவிரும்பும்†
புள்ளரவங் கேட்டுப் பெயர்ந்தேன் ஒளியிழாய்‡
உள்ளுருகு நெஞ்சினேன் யான்."§ (ஐந்திணையைம். ௩0)

(பாடம்) * வேலர். † கணிவிரும்பும்.
‡ அணி இழாய். § ஆய்.

"......................................
கனைபெயல்* நடுநாள்யான் கண்மாறக் குறிபெறுஅன்
புனையிழாய் என்பழி நினக்குரைக்குந் தானென்ப
துளிநசை வேட்கையான் மிசைபாடும் புள்ளின்றன்
அளிநசைஇ ஆர்வுற்ற அன்பினேன் யானாக†" (கலித். ௪௬)

எனவரும்.

வரைவு தலைவந்தவழிக் கூறிய செய்யுள்:—

"கொல்லைப் புனத்த அகில்சுமந்து கல்பாய்ந்து
வானின் அருவி ததும்பக் கவினிய
நாடன் நயமுடையன்‡ என்பதனால் நீப்பினும்
வாடல் மறந்தன தோள்." (ஐந்திணையெழு. உ)

நயமுடைய னென்றதனான் வரைவு தலைவந்தமை யறிந்து கூறினாளாம்.

"இலைபடர்§ தண்குளவி யேய்ந்த$ பொதும்பிற்
குலையுடைக் காந்தள் இனவண் டிமிரும்
வரையக நாடனும் வந்தான்மற் றன்னை
அலையும் அலைபோயிற் றின்று." (ஐந்திணையெழு. ௩)

களவறிவுற்றவழிக் கூறிய செய்யுள் :—

"யாங்கா குவமோ அணிநுதற் குறுமகள்
தேம்படு சாரல் சிறுதினைப் பெருங்குரல்
செவ்வாய்ப் பைங்கிளி கவர நீமற்று
எவ்வாய்ச் சென்றனை அவணெனக் கூறி
அன்னை யானாள் கழறமுன் னின்று
அருவி ஆர்க்கும் பெருவரை நாடனை
அறியலும் அறியேன் காண்டலும் இலனே
வெதிர்புனை தட்டையேன் மலர்பூக் கொய்து
சுனைபாய்ந் தாடிற்றும் இலனென நினைவிலை
பொய்யல் அந்தோ வாய்த்தனை யதுகேட்டுத்
தலையிறைஞ் சினளே யன்னை
செலவொழிந்¶ தனையா லணியை நீபுனத்தே**." (நற்றிணை. கஎஎ)

எனவரும்.

தமர்தற்காத்த காரணப் பக்கத்திற்குக் கூறிய செய்யுள்:
"பெருநீர் அழுவத் தெந்தை தந்த" என்னுங் களிற்றியானை நிரையுள்,

"பல்பூங் கானல் அல்கினம் வருதல்
கவ்வை நல்லணங் குற்ற இவ்வூர்க்††
கொடிதறி பெண்டிர் சொற்கொண் டன்னை
கடிகொண் டனளே தோழி பெருந்துறை
எல்லையும் இரவும் என்னாது கல்லென
வலவன் ஆய்ந்த வண்பரி
நிலவுமணல் கொட்குமோர் தேருண் டெனவே" (அகம் உ0)

எனவரும்.

(பாடம்) *பெய்ந். † பானாக. ‡ நயனுடையன். § இலையமர். $ குளவிவேய்ந்த. ¶ செயலொழிந். ** அணிய நம் புனத்தே. †† குற்றத் திவ்வூர்க்.

தன்குறிதள்ளிய தெருளாக் காலை வந்தவன் பெயர்ந்த வறுங் களம் நோக்கித் தன்பிழைப்பாகத் தழீஇத் தேறியதற்குச் செய்யுள்:—

'இருள்கிழிப்பதுபோல்' என்னும் களிற்றியானை நிரையுள்,

"வாள்நடந் தன்ன வழக்கருங் கவலை
உள்ளுநர் உட்குங் கல்லடர்ச் சிறுநெறி
அருள்புரி நெஞ்சமோ டெஃகுதுணை யாக
வந்தோன் கொடியனும் அல்லன் தந்த
நீதவ றுடையையும் அல்லை நின்வயின்
ஆனு அரும்படர் செய்த
யானே தோழி தவறுடை யேனே" (அகம். எஉ)

என வரும்.

வழுவின்று...அன்னவுமுளவே என்பது—வழுவின்று நிலைஇய இயற்படு பொருண் முதலாக 'ஏமஞ்சான்ற உவகை' யீறுகச் சொல்லப்பட்ட இடங்களில் தன்னிடத்து உரிமையும் அவனிடத்துப் பரத்தைமையும் அன்னவையும் நிகழப்பெறும் என்றவாறு.

அன்ன என்பது, அவைபோல்வன என்றவாறு.

ஓரிடத்துக்கண் என்றதனுல் இவ்வாறு: எல்லார் மாட்டும் எவ்விடத்தும் நிகழாது என்றவாறும். எனவே மேற் குறிப்பினும் இடத்தினு மல்லது (களவியல்-கஅ) கூற்று நிகழாதென்பதனை மறுத்து ஓரிடத்துக் கூற்று நிகழும் என்றவாறும்.

அவற்றுள் வழுவின்று நிலைஇய இயற்படு பொருளினும்—என்பது தலைவனை இயற்பழித்தவழி அவன் குற்றமிலனுக நிலை நிறுத்தப்பட்ட இயற்படமொழிந்த பொருண்மைக் கண்ணும் தன்வயின் உரிமைதோன்றவும் அவன் வயிற் பரத்தைமை தோன்றவும் கூறும் தலைவி என்றவாறு.

இரண்டினுள் ஒன்றுதோன்ற உரைக்கு மென்றவாறு. எனவே இரண்டுந் தோற்ற வருவனவு முளவாம்.

பொழுது மாறும்...சிந்தைக் கண்ணும் என்பது—தலைவன் வருங் காலமும் இடனும் குற்றமுளவாதலான். ஆண்டு அழிவுவந்த சிந்தைக் கண்ணும் தலைமகள் தன்வயின் உரிமையும் அவன்வயிற் பரத்தைமையும் தோன்றக் கூறும் என்றவாறு.

காமஞ் சிறப்பினும் என்பது—தலைமகன்மாட்டு வேட்கை மிகினும் தன்வயின் உரிமையும் அவன்வயிற் பரத்தைமையும் உரைக்குந் தலைவி என்றவாறு.

அவன் அளி சிறப்பினும் என்பது—தலைவன் தலையளி மிக்கவழியும் தன்வயின் உரிமையும் அவன்வயிற் பரத்தைமையும் தோன்றக்கூறும் என்றவாறு.

ஏமஞ்சான்ற உவகைக்கண்ணும் என்பது — ஏமம் பொருந்திய மகிழ்ச்சிவந்துழித் தன்வயின் உரிமையும் அவன்வயிற் பரத்தைமையும் தோன்றக் கூறும் என்றவாறு. அஃதாவது இவன் வரைந்தல்லது நீங்கான் என்னும் உவகை.

அவற்றுள், வழுவின்று நிலைஇய இயற்படு பொருட்கண் கூறியதற் குச் செய்யுள் :—

"அடும்பமலங்கொடி உள்புதைந் தொழிப்ப
வெண்மலர் விரிக்குந் தண்ணந் துறைவன்
கொடியன் ஆயினும் ஆக
அவனே தோழிஎன் னுயிர்கா வலனே" (ஐங்குறு. தனி. சு)

என வரும்.

பொழுது மாறும் புரைவ தன்மையின் அழிவுதலைவந்த சிந்தையால் தலைவி கூறிய செய்யுள் :—

"கொடுவரி வேங்கை பிழைத்துக்* கோட்பட்டு
மடிசெவி வேழம் இரிய—அடியோசை
அஞ்சி யொதுங்கும் அதருள்ளி ஆரிருள்
துஞ்சா சுடர்த்தொடி† கண்" (ஐந்திணையைம். கசு)

"வளைவாய்ச் சிறுகிளி விளைதினை கடியச்‡
செல்கென் றோளே அன்னை எனநீ
சொல்லின் எவனாந்§ தோழி கொல்லை
நெடுங்கை வன்மான்$ கடும்பகல் உழந்த
குறுங்கை இரும்புலிக் கோள்வல்¶ ஏற்றை
பைங்கட் செந்நாய் படுபதம் பார்க்கும்
ஆரிருள் நடுநாள் வருதி
சாரல் நாட வாரலோ எனவே" (குறுந். கசக)

என வரும்.

காம மிக்கவழிக் கூறிய செய்யுள் :—

"அம்ம வாழி தோழி நலனே
இன்ன தாகுதல் கொடிதே புன்னை
அணிமலர் துறைதொறு விரிக்கும்**
மணிநீர்ச் சேர்ப்பனை மறவா தோர்க்கே.††" (ஐங்குறு. ககஎ)

இது தன்வயின் உரிமை :

"நள்ளென் றன்றே யாமஞ் சொல்லவிந்து
இனிதடங் கினரே மாக்கள் முனிவின்றி
நனந்தலை உலகமுந் துஞ்சும்
ஓர்யான் மன்ற துஞ்சா தேனே." (குறுந். சு)

இஃது அவன்வயிற் பரத்தைமை :

"கொடுந்தாள் அலவ! ‡‡ குறையாம் இரப்பேம்
ஒடுங்கா ஒலிகடற் சேர்ப்பன்—நெடுந்தேர்
கடந்த வழியைஎங் கண்ணாரக் காண
நடந்து சிதையாதி நீ" (ஐந்திணையைம். சஉ)

---

(பாடம்) * இணைத்துக். † சுடர்க்கொடி. ‡ கடீஇயர்.
§ எவனோ. $ வளமான். ¶ கொலைவல்.
** வரிக்கும். †† மறவாதீமே. ‡‡ அலவன்.

அவனளி சிறந்தவழித் தலைவி கூறிய செய்யுள் :—

"சேணோன் மாட்டிய நறும்புகை ஞெகிழி
வான மீனின் வயின் வயின் இமைக்கும்
ஓங்குமலை நாடன் சாந்துபுலர் அகலம்
உள்ளின் உள்நோய் மல்கும்
புல்லின் மாய்வ தெவன்கொல் அன்னாய்" (குறுந். கடுO)

"மன்றப் பலவின் சுளைவிளை தீம்பழம்*
உண்டுவந்து மந்தி முலைவருடக்—கன்றமர்ந்(து)
ஆமா சுரக்கும்† அணிமலை நாடனை
யாமாப் பிரிவ திலம்" (ஐந்திணையெழு. சு)

என வரும்.

ஏமஞ் சான்ற உவகைக்கண் கூறிய செய்யுள் :—

"ஓங்கல் இறுவரைமேற் காந்தள் கடிகவினப்
பாம்பென ஓடி உருமிடிப்பக் கண்டிரங்கும்
பூங்குன்ற நாடன் புணர்ந்தவந் நாள்போலா
ஈங்கு நெகிழ்ந்த வளை" (திணைமொழி ௯)

என வரும்.

பரத்தைமை தோன்ற வந்ததற்குச் செய்யுள் :—

"......................... ... .....
கணங்கொள் இடுமணற் காவி வருந்தப்
பிணங்கிரு மோட்ட திரைவந் தளிக்கும்
மணங்கமழ் ஐம்பாலார் ஊடலை ஆங்கே
வணங்கி உணர்ப்பான் துறை" (கலித். கஉக)

என்னும் பாட்டினுள் தான் ஊடினாளாகவும் மகிழ்ந்தவாறும் அவன் வயிற் பரத்தைமை கூறியவாறும் காண்க.

இச் சூத்திரத்தாற் சொல்லியது 'மறைந்தவற் காண்டல்' முதலாக ஓதப்பட்ட அறுவகைப் பொருண்மையும், 'கைப்பட்டுக் கலங்கல்' முதலாகக் 'கூறியவாயில் கொள்ளாக்காலை' ஈறாகவரும் மகிழ்ச்சியினால் மனைப்பட்டுக் கலங்கிச் சிதைந்தவழி எண்ணுதல் சான்ற அருமறையைச் சொல்லுதலும், இவ்வாறும் எண்ணந்தான் உரையாக்காலத்துத் தன்னுயிர் செல்லுமாறு உரைத்தலும், 'வேற்றுவரைவு வரின் அது மாற்றுதல்' முதலாகத் 'தமர்தற்காத்த காரணப்பக்கம்' ஈறாகத் தன் குறிபிழைக்க நிற்கப் பெறும் எனவும், அவ்வழித் தலைவன் வந்து பெயர்ந்துழிக் கலக்கமின்றித் தெளிதலும், 'வழுவின்று நிலைஇய இயற்படு பொருள்' முதலாக 'ஏமம் சான்ற உவகை' ஈறாகத் தான் உரியளாகிய நெறியும் தலைவன் அயலாகிய நிலையும்போல வரிற் சொல்லப்பெறும் எனவும் குறிப்பினும் இடத்தினும் அல்லது வேட்கை நெறிப்பட்டவாறாகத் தலைவிக்குக் கூற்று நிகழுமிடமும் உணர்த்தியவாறு.
(உக)

(பாடம்) * தீங்கனி. † கறக்கும்.

கக0. *வரைவிடை வைத்த காலத்து வருந்தினும்
வரையா நாளிடை வந்தோன் முட்டினும்
உரையெனத் தோழிக்கு உரைத்தற் கண்ணும்
தானே கூறுங் காலமும் உளவே.

இதுவும் தலைவிமாட்டுச் சொல் நிகழுமிடம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) தலைவன் இயற்கைப்புணர்ச்சி புணர்ந்து நீங்குகின்றான்; இன்னநாள் வரைந்து கொள்வல் எனக்கூறித் தோழியிற் கூட்டத்திற்கு முயலாது தணந்தவழி யதனைத் தோழி ஐயப்படுங் குறிப்புத் தோன்றாமை மறைத்தொழுகிய தலைவி அவன் வருந்துணையும் ஆற்றாது வருத்தமுறினும் வரையாத நாளின்கண் மறைந்தொழுகாநின்ற தலைவன் செவிலி முதலாயினாரை முட்டினவழியும் இவ்வொழுக்கத்தினை நின் தோழிக்கு உரையெனத் தலைவன் கூறியவழியும் தலைவி தானே கூறுங் காலமும் உளவென்றவாறு.

உம்மை எதிர்மறையாதலாற் கூறாமை பெரும்பான்மை. காலமும் என்றது இவ்வொழுக்கம் புறத்தார்க்குப் புலனாங் காலம். அக்காலத்துத் தோழி மதியுடம்படாமல் அறிவிக்கும் என்றவாறு

இனி, வரைவிடைவைத்த காலத்து வருத்தமுற்றவழிக் கூறிய செய்யுள் :—

''புனவன் துடவைப்† பொன்போற் சிறுதினைக்
கடியுண் கடவுட் கிட்ட செல்குரல்
அறியா துண்டனம் மஞ்ஞை‡ யாடுமகள்
வெறியுறு வனப்பின் வேர்த்துற்று நடுங்குஞ்
சூர்மலை நாடன் கேண்மை
நீர்மலி கண்ணொடு நினைப்பா கின்றே'' (குறுந். ௧0௫)

என வரும்.

வரையா நாளிடை வந்தோன் முட்டியவழித் தலைவி கூறியதற்குச் செய்யுள்:—

''தாழை குருகீனுந் தண்ணந் துறைவனை
மாழைமான் நோக்கின் மடமொழி— நூழை
நுழையு மடமகன் யார்கொலென் றன்னை
புழையும் அடைத்தாள் கதவு'' (கைந்நிலை. ௬௧)

எனவும்,

''அறியா மையின் அன்னை அஞ்சிக்
குழையன் கோதையன் குறும்பைந் தொடியன்

---

* ''வரைவிடை வைத்த காலத்து வருந்தினும்'' என்பதனைத் 'தொகுத்த மொழியான் வகுத்தனர் கோடல்' (தொல், பொ. ௬௬௫) என்னுந் தந்திரவுத்தியாகக் கொண்டு அதன்கண் வேறுபட வருவன எல்லாம் கொள்க. (தொல். சஎ - உ௧ நச்சி)

(பாடம்.) † தொடவை. ‡ அறியாதுண்டமஞ்ஞை.

விழவயர் துணங்கை தழூவுகஞ் செல்ல
நெடுநிமிர் தெருவிற் கைபுகு கொடுமிடை*
நொதும லாளன் கதுமெனத் தாக்கலின்
கேட்பார்†உளர்கொல் இல்லைகொல் போற்றென
யாணது‡ பசலை என்றனன் அதனெதிர்
நாணிலை எலுவ என்றுவந்§ திசினே
செறுநரும் விழையுஞ் செம்ம லோனென
நறுநுதல் அரிவை போற்றேன்
சிறுமை பெருமையிற் காணாது துணிந்தே" (நற்றிணை. ௫0)

எனவும் வரும். இதன்கண் என்றனென ஒரு சொல் வருவிக்க.

உரையெனத் தோழிக்கு உரைத்தற்குச் செய்யுள்:—

"பொன்இணர் வேங்கை கவினிய பூம்பொழிலுள்
நன்மலை நாடன் நலம்புனைய—மென்முலையாய்
போயின திந்நாள் புனத்து மறையினால்
ஏயினர் இன்றும்$ இனிது" (ஐந்திணையைம், ௧௧)

என வரும்.

இன்னும், 'உரையெனத் தோழிக் குரைத்தற் கண்ணும்' என்பதற்குத் தலைவற்கு உரையெனத் தோழிக்கு உரைத்தற் கண்ணும் என்றுமாம்.

உதாரணம்—

"என்னைகொல் தோழி அவர்கண்ணும் நன்கில்லை
அன்னை முகனும் அதுவாகும்—பொன்னலர்
புன்னையம் பூங்கானற் சேர்ப்பனைத் தக்கதோ
நின்னல்ல தில்லென் றுரை" (ஐந்திணையெழு. ௬௧)

என வரும். (உஉ)

௧௧௧. உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்
செயிர்தீர் காட்சிக் ¶கற்புச்சிறந் தன்றெனத்
தொல்லோர் கிளவி புல்லிய நெஞ்சமொடு
காமக் கிழவன் உள்வழிப் படினும்
தாவில் நன்மொழி கிழவி கிளப்பினும்
ஆவகை பிறவும் தோன்றுமன் பொருளே.

இதுவும் அது.

(இ - ள்.) உயிரினும் நாண் சிறந்தது; அதனினும் குற்றந்தீர்ந்த காட்சியினையுடைய கற்புச் சிறந்தது; என முன்னோர்

(பாடம்) * கொடிமுடி. † கேட்டார். ‡ யானது.
§ தூணிலை எலுவமென்றுவந். $ இன்னும்.

¶ சிறுபான்மை வேறுபட்டு வருவனவற்றைக் கற்புச் சிறப்ப நாண் துறந்தாலும், குற்றம் இன்று என்றற்குச் 'செயிர் தீர்' என்றார். நன்மொழி என்றார் கற்பிற்றிரியாமையின்; அவை இன்னோரன்னவழி நெஞ்சொடு கிளத்தல்போல்வன—(தொல். கள-உஉ. நச்சி.)

கூற்றை யுட்கொண்டு தலைவனுள்ள விடத்துச் செல்லலும்* வருத்த மில்லாச் சொல்லைத் தலைவி சொல்லுதலுமாகிய அவ் வகை பிறவுந்தோன்றும் அவை பொருளாம் என்றவாறு.

மன் ஆக்கத்தின்கண் வந்தது. எனவே இவ்வாறு செய்தல் பொரு ளல்ல என்று கூறற்க என்றவாறு. இதனுள் நாணத்தினும் கற்புச் சிறந்ததென்றவாறு.

நொதுமலர் வரைவு நோக்கிக் கூறுவது—

''அளிதோ தானே நாணே நம்மொடு
நனிநீடு உழந்தன்று மன்னே இனியே
வான்பூங் கரும்பின் ஓங்குமணற் சிறுசிறை
தீம்புனல் நெரிதர வீழ்ந்துக் காஅங்குத்
தாங்கும் அளவைத் தாங்கிக்
காம நெரிதரக் கைநில் லாதே.'' (குறுந். கசக)

''கோடீ ரிலங்குவளை நெகிழ நாடொறும்†
பாடில கலிழுங் கண்ணொடு புலம்பி
ஈங்கிவண் உறைதலும் உய்குவம் ஆங்கே
எழுஇனி வாழியென் நெஞ்சே முனஅது
குல்லைக் கண்ணி வடுகர் முனையது
பல்வேற் கட்டி நன்னாட்டு உம்பர்
மொழிபெயர் தேஎத்த ராயினும்
வழிபடல் சூழ்ந்திசின் அவருடை நாட்டே.'' (குறுந். கக)

இது காமக்கிழவ னுள்வழிப் படுதல்

தாவில் நன்மொழி கூறியதற்குச் செய்யுள் :—

''மன்ற மராஅத்த பேஎமுதிர் கடவுள்
கொடியோர்த் தெறூஉம் என்ப யாவதும்
கொடியர் அல்லர்எம் குன்றுகெழு நாடர்
பசைஇய பசந்தன்று நுதலே
ஞெகிழியஈ ஞெகிழ்ந்தன்று தடமென் தோளே' (குறுந். அ௭)

என வரும். (உ௬)

ககஉ. நாற்றமும் தோற்றமும் ஒழுக்கமும் உண்டியும்
செய்வினை மறைப்பினும் செலவினும் பயில்வினும்
புணர்ச்சி யெதிர்ப்பா டுள்ளுறுத்து வரூஉம்
உணர்ச்சி ஏழினும் உணர்ந்த பின்றை
மெய்யினும் பொய்யினும் வழிநிலை பிழையாது
பல்வேறு கவர்பொருள் நாட்டத் தானும்
குறையுறற் கெதிரிய கிழவனை மறையுறப்
பெருமையிற் பெயர்ப்பினும் உலகுரைத் தொழிப்பினும்
அருமையின் அகற்சியும் அவளறி வுறுத்துப்

(பாடம்) * செல்லவும். † நாளும். ‡ ஞெகிழ.

பின்வா* வென்றலும் பேதைமை யூட்டலும்
முன்னுறு புணர்ச்சி முறைநிறுத் துரைத்தலும்
அஞ்சியச் சுறுத்தலும் உரைத்துழிக் கூட்டமொடு
எஞ்சாது கிளந்த இருநான்கு கிளவியும்
வந்த கிழவனை மாயஞ் செப்பிப்
பொறுத்த காரணங் குறித்த காலையும்
புணர்ந்தபின் அவன்வயின் வணங்கற் கண்ணுங்
குறைந்தவட் படரினும் மறைந்தவ ளருகத்
தன்னொடும் அவளொடும் முன்னமூன் றளைஇப்†
பின்னிலை நிகழும் பல்வேறு மருங்கினும்
நன்னயம் பெற்றுழி நயம்புரி இடத்தினும்‡
எண்ணரும் பன்னகை கண்ணிய வகையினும்
புணர்ச்சி வேண்டினும் வேண்டாப் பிரிவினும்
வேளாண் பெருநெறி வேண்டிய இடத்தினும்
புணர்ந்துழி உணர்ந்த அறிமடச் சிறப்பினும்
ஓம்படைக் கிளவிப் பாங்கின் கண்ணும்
செங்கடு மொழியாற் சிதைவுடைத் தாயினும்
என்புநெகப் பிரிந்தோள் வழிச்சென்று கடைஇ
அன்புதலை அடுத்த வன்புறைக் கண்ணும்
ஆற்றது தீமை அறிவுறு கலக்கமும்
காப்பின் கடுமை கையற வரினும்
களனும் பொழுதும் வரைநிலை விலக்கிக்
காதல் மிகுதி உளப்படப் பிறவும்
நாடும் ஊரும் இல்லும் குடியும்
பிறப்புஞ் சிறப்பும் இறப்ப நோக்கி
அவன்வயின் தோன்றிய கிளவியொடு தொகைஇ
அணைநில§ வகையான் வரைதல் வேண்டினும்$
ஐயச் செய்கை தாய்க்கெதிர் மறுத்துப்
பொய்யென மாற்றி மெய்வழிக் கொடுப்பினும்
அவள்விலங் குறினுங் களம்பெறக் காட்டினும்
பிறன்வரை வாயினும் அவன்வரைவு மறுப்பினும்
முன்னிலை அறனெனப் படுதலென் றிருவகைப்

(பாடம்) * பின்வர. † முதல்மூன்று அளை இப். ‡ இடத்தும். § அணைநிலை. $ வேண்டியும்.

புரைதீர் கிளவி தாயிடைப் புகுப்பினும்
வரைவுடன் பட்டோர்க் கடாவல் வேண்டினும்*
ஆங்கதன் தன்மையின் வன்புறை† உளப்படப்
பாங்குற வந்த நாலெட்டு வகையினும்‡
தாங்கருஞ் சிறப்பின் தோழி மேன.

என்றது, களவொழுக்கத்தின்கண் தோழிக்குரிய கிளவியெல்லாம் தொகுத்து உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்). நாற்றமு.......நாட்டத்தானும் என்பது - நாற்ற முதலாகச் சொல்லப்பட்ட ஏழினும் புணர்ச்சிக்கு முந்துற்ற நிலைமையை உட்கொண்டு வரும் மனநிகழ்ச்சி யேழினும் புணர்ச்சி யுண்மை யறிந்த பின்றை மெய்யினானும் பொய்யினானுந் தலைவி குலத்தினுள்ளார் நிலைமையிற் பிழையாது பலவாகி வேறுபட்ட கவர்ந்த பொருண்மையையுடைய ஆராய்தற் கண்ணும் என்றவாறு.

நாற்றம் என்பது—பூவினானும் சாந்தினானும் தலைவன்மாட்டுளதாகிய கலவியால் தலைவிமாட்டுளதாய நாறுதல்.

தோற்றம் என்பது - புணர்சியான் வரும் பொற்பு.

ஒழுக்கம் என்பது—ஆயத்தாரோடு வேண்டியவாறொழுகுதலன்றித் தன்னைப் பேணியொழுகுதல்.

உண்டி என்பது—உண்ணும் அளவிற் குறைதல்.

செய்வினை மறைத்தல் ஆவது—பூக்கொய்தலும் புனலாடலும் போலும் வினைகளைத் தோழியை மறைத்துத், தனித்து நிகழ்த்துதல் அன்றியும் தலைவன் செய்த புணர்ச்சியாகிய கருமத்தினைப் புலப்பட விடாது தோழியை மறைத்தலும் என்றுமாம்.

செலவினும் என்பது—எத்திசையினும் சென்று விளையாடுவாள் ஒரு திசையை நோக்கிச்சேறல்.

பயில்வினும் என்பது—ஓரிடத்துப் பயிலுதல்

புணர்ச்சி எதிர்ப்பாடு ஆவது—புணர்வதற்கு முந்துற்ற காலம்.

உள்ளுறுத்தல் ஆவது—உட்கோடல்

உணர்ச்சி ஏழாவது—நாற்ற முதலாகச் சொல்லப்பட்டவற்றான் வரும் மன நிகழ்ச்சி ஏழும்.

பல்வேறு கவர்பொருள் நாட்டம் என்பது—ஒன்றோடொன்று ஒவ்வாத வேறுபட்டனவாகி இருபொருள் பயக்கும் சொற்களாலே யாராய்தல்.

(பாடம்) * வேண்டியும். † வன்பொறை. ‡ வகையும்.

அவற்றுள் சில வருமாறு:—

"கண்ணுஞ் சேயரி பரந்தன்று நுதலும்
நுண்வியர் பொறித்து வண்டார்க் கும்மே
வாங்கமை மென்றோள் மடந்தை
யாங்கா யினள்கொல் என்னுமென் நெஞ்சே" (சிற்றெட்டகம்)

இது தலைவி தோற்றங்கண்டு பாங்கி கூறியது. பிறவும் அன்ன.

குறையுறற் கெதிரிய கிழவனை மறையுற என்பது—களவொழுக்கத்தின் கண்ணே யுறுதற்காகத் தனது குறையைச் சொல்லவேண்டி எதிர்ப்பட்ட தலைவனை யென்றவாறு.

மறையுற என்பதனை முன்னே கூட்டுக

பெருமையிற் பெயர்ப்பினும் என்பது—தலைவனது பெருமையான் நீக்கலும் என்றவாறு.

"இவளே, கானல் நண்ணிய காமர் சிறுகுடி
நீல்நிறப் பெருங்கடல் கலங்க உள்புக்கு
மீனெறி பரதவர் மகளே நீயே
நெடுங்கொடி நுடங்கும் நியம மூதூர்க்
கடுந்தேர்ச் செல்வர் காதல் மகனே
நிணச்சுறு உறுத்த உணக்கல்* வேண்டி
இனப்புள் ஓப்பும் எமக்குநலன் எவனோ
புலவு நாறுதும் செலநின் றீமோ
பெருநீர் விளையுள்எம் சிறுநல் வாழ்க்கை
நும்மொடு புரைவதோ அன்றே
எம்ம னோரிற் செம்மலும் உடைத்தே" (நற்றிணை. ௪௫)

என வரும்.

உலகுரைத் தொழித்தல் என்பது—உலகத்தார் மகட்கொள்ளுமாறு கொள்ளெனக் கூறுதல்.

"கோடீர் எல்வளைக் கொழுமடற்† கூந்தல்
ஆய்தொடி மடவரல் வேண்டுதி யாயின்
தெண்கழிச் சேயிறற்‡ படூஉந்
தண்கடற் சேர்ப்ப வரைந்தனை கொண்மோ." (ஐங்குறு. ௧௧௧)

இன்னும் உலகுரைத் தொழித்தல் என்றதனாற் கையுறைமறையுங் கொள்க.

"நீடுநீர்க் கானல் நெருநலும் நித்திலங்கொண் டைய வந்தீர்
கோடுயர் வெண்மணற் கொற்கையெம் ஊரிவற்றாற் குறையிலேமியாம்
ஆடுங் கழங்கும் அணிவிளக்கும் அம்மனையும்
பாடி யவைப்பனவும் பந்தாடப் படுவனவும் பனிநீர் முத்தம்."

அருமையின் அகற்சியும் என்பது—தலைவியைக் கிட்டுதற்கு அருமை கூறியகற்றுதல்.

(பாடம்) * நிணச்சுற வுறுத்த உணங்கல். † கொழும்பல்.
‡ சேயிறுப்

உதாரணம் :—

"நெருநலும் முன்னு ளெல்லையும் ஒருசிறைப்
புதுவை யாகலின் அதற்கெய்த நாணி
நேரிறை வளைத்தோள்நின் தோழி செய்த
ஆருயிர் வருத்தங் களையா யோவென
எற்குறை யுறுதி ராயிற் சொற்குறை
எம்பதத் தெளியள் அல்லள் எமக்கோர்
கட்காண் கடவுள் அல்லளோ பெருழ
வால்கோன் மிளகின் மலயங் கொழுங்கொடி
துஞ்சுபுலி வரிப்புறந் தைவரும்
மஞ்சுசூழ் மணிவரை மன்னவன் மகளே"

எனவரும்.

அவளறி வுறுத்துப் பின்வாவென்றலும் என்பது—நின்னாற் காதலிக்கப்பட்டாட்குச் சென்று அறிவித்துப் பின்னர் என்மாட்டு வா என்றவாறு.

அவற்றுள், நீயே சென்று அறிவி என்றதற்குச் செய்யுள் :—

"தன்னையுந் தான்நாணுஞ் சாயலாட் கீதுரைப்பின்
என்னையும் நாணப் படுங்கண்டாய்—என்னைய
வேயேர்மென் தோளிக்கு வேறாய் இனியொருநாள்
நீயே யுரைத்து விடு."

பின்வா வென்றற்குச் செய்யுள் :

"நாள்வேங்கை பொன்விளையும் நன்மலை நன்னாட
கோள்வேங்கை போற்கொடியர் என்னையன்மார்*—கோள்
அன்னையால் நீயும்! அருந்தழையாம் ஏலாமைக்கு [வேங்கை
என்னையோ நாளை எளிது" (திணைமாலை.உ)

எனவரும்.

பேதைமை யூட்டல் என்பது—நேரினும் அவள் அறிவாளொருத்தி யல்லள் என்று தலைவற்குக் கூறல்.

உதாரணம் :—

"நறுந்தண் தகரம் வகுளம் இவற்றை
வெறும்புதல்போல் வேண்டாது வேண்டி‡—எறிந்துழுது
செந்தினை வித்துவார் தங்கை பிறர்நோய்க்கு
நொந்தினைய வல்லளோ நோக்கு." (திணைமாலை உ௬)

இன்னும், பேதைமை யூட்டல் என்பதனால் தோழி தான் அறியாள் போலக் கூறுதலுங் கொள்க.

உதாரணம் :—

"புன்தலை மந்திக் கல்லா§ வன்பறழ்
குன்றுழை நண்ணிய முன்றில் போகாது

(பாடம்) * என்னையர். † வேங்கை.
‡ வெட்டி. § கல்லார்.

எரியகைந்து அன்ன வீதகை இணர
வேங்கையம் படுசினைப் பொருந்திக் கைய*
தேம்பெய் தீம்பால் வெளவலிற் கொடிச்சி†
எழுதெழில் சிதைய அழுத கண்ணே
தேர்வண் சோழர் குடந்தை வாயில்
மாரியங்‡ கிடங்கின் ஈரிய மலர்ந்த
பெயலுறு நீலம் போன்றன§ விரலே
பாஅய அவ்வயிறு அலைத்தலின்$ ஆனது
ஆடுமழை¶ தவழுங் கோடுயர் பொதியின்
ஓங்கிருஞ் சிலம்பில் பூத்த
காந்தளங் கொழுமுகை போன்றன சிவந்தே''
(நற்றிணை. ந௲௧)

எனவரும்.

முன்னுறு புணர்ச்சி முறைநிறுத் துரைத்தலும் என்பது—முன்னுறு புணர்ச்சி முறையே நிறுத்துக் கூறலும் என்றவாறு.

நிறுத்தக் கூறலாவது நீங்கவிடாது உடன்பட்டுக் கூறல். இன்னும், முன்புகூடினாற் போலக் கூட அமையுமென்று கூறுதல். உதாரணம் வந்தவழிக் காண்க.

அஞ்சி அச்சுறுத்தலும் என்பது—தான் அச்சமுற்று அஞ்சின தன்மையைத் தலைவற்கு அறிவித்தலும் என்றவாறு. அது யாய் வருவ ளென்றுனும் தமையன்மார் வருவ ரென்றுனும் காவலர் வருவ ரென்றுனும் கூறுதல்.

உதாரணம் :—

"யானை உழலும் அணிகிளர் நீள்வரைக்
கானக வாழ்க்கைக் குறவர் மகளிரேம்
ஏனலுள் ஐய** வரவுமற் றென்னைகொல்
காணினும் காய்வர் எமர்'' (திணைமொழி. ௬)

எனவரும்.

உரைத்துழிக் கூட்டமொடு என்பது—நின்னாற் காதலிக்கப்பட்டாள் யாவள் என வினயவழி இத்தன்மையாள் எனச் சொல்லக்கேட்ட தோழி அவளும் நின் தன்மையாள் என இவனோடு கூட்டியுரைத்தலும் என்றவாறு.

ஒடு எண்ணின்கண் வந்தது.

உதாரணம் :—

"நெறிநீர் இருங்கழி நீலமுஞ் சூடாள்
பொறிமாண் வரியலவன் ஆட்டலும் ஆட்டாள்
திருநுதல் வேரரும்பச் சிந்தியா நின்றாள்
செறிநீர்த்தண் சேர்ப்பயா னென்சொல்லிச் சேர்கேன்''

எனவரும்.

(பாடம்) * கைதைய. † கொச்சி. ‡ மாதயங். § போன்றல. $ பாயறுவயறலைதவலி. ¶ தேர்மழை. ** ஏனலாழ் ஐயர்.

எஞ்சாது கிளந்த இருநான்கு கிளவியும் என்பது—ஒழியாது கூறிய எட்டுக் கூற்றும் என்றவாறு. முன்னைப் புணர்ச்சி முறையறிந்தாளாதலின் அவன் இரந்து பின்னின்றுழி ஈண்டுக் கூறிய எல்லாம் அவன் உள்ளக் கருத் தறியுந்துணையும் தழீஇக்கொண்டு கூறினல்லது ஒழித்தல் பொருளாகக் கூறுள் என்பது கொள்ளப்படும். இவை எட்டும் குறையுறவுணர்தலின் பகுதி.

வந்த கிழவனை மாயஞ் செப்பிப் பொறுத்த காரணங் குறித்த காலையும் என்பது—மாயம் சொல்லிவந்த கிழவனைத் தலைவி பொறுத்தகாரணம் குறித்தகாலையும் தோழி கூற்று நிகழும் என்றவாறு.

அவ்வழித் தலைவன் குறிப்பும் தலைவிகுறிப்பும் உணர்தலும் தலைவன் கேட்டதற்கு மாற்றம் கூறுதலும் உளவாம். மாயம் செப்பிவந்த கிழவன் என மாற்றுக. மாயம் செப்புதலாவது யானை போந்ததோ மான் போந்ததோ எனக் கூறல்.

"இரந்து குறையுறுது கிழவியுந் தோழியும்
ஒருங்குதலைப் பெய்த செவ்வி நோக்கிப்
பதியும் பெயரும் பிறவும் வினஅய்ப்
புதுவோன் போலப் பொருந்துபு கிளந்து
மதியுடம் படுத்தற்கும் உரியன் என்ப" (இறையனாரகப். ௬)

என்பதனாற் குறையுறவுணர்தல் நிகழ்ந்துழி இது நிகழாதென்று கொள்க.

அதன்கட் குறிப்புணர்வதற்குச் செய்யுள் :—

"வேங்கை மலர[*] வெறிகமழ் தண்சிலம்பின்
வாங்கமை மென்தோள் குறவர் மகளிரேம்
சோர்ந்து குருதி[†] ஒழுகமற் றிப்புறம்[‡]
போந்ததில் ஐய[§] களிறு" (திணைமொழி. அ)

எனவும்,

"நெடுந்தேர் கடைஇத் தமியராய் நின்று
கடுங்களிறு காணீரோ என்றீர் - கொடுங்குழையார்
யானை அதருள்ளி நிற்பரோ தம்புனத்துள்
ஏனற் கிளிகடிகு வார்"

எனவும்,

"ஏனல் காவல் இவளும் அல்லள்
மான்வழி வருகுவன் இவனும் அல்லன்
நரந்தங் கண்ணி இவனோ டிவளிடைக்
கரந்த உள்ளமொடு கருதியது பிறிதே
நம்முன் நாணினர் போலத் தம்முள்
மதுமறைந் துண்டோர் மகிழ்ச்சி போல
உள்ளத் துள்ளே மகிழ்ப
சொல்லும் ஆடுப கண்ணி னானே"

எனவும்,

குறிப்புணர்ந்து இருவருமுள் வழி அவன் வரவுணர்தல்.

---

(பாடம்) * மலரும். † சோர்ந்த குருதி ‡ றிப்புனத்துள்.
§ போந்ததில் ஐயக்.

புணர்ந்தபின் அவன்வயின் வணங்கற் கண்ணும் என்பது — மேற் சொல்லப்பட்ட மூவகையானும் புணர்ச்சியுண்மைபொருந்தியபின் தலைவன்கண் தாழநிற்றற் கண்ணும் என்றவாறு.

அது நீ கருதியது முடிக்கற்பாலை எனவும் நீ இவளைப் பாதுகாத்தல் வேண்டுமெனவும் இவ்வகை கூறுதல்.

உதாரணம் :—

"..........................................
அரவின் பொறியும் அணங்கும் புணர்ந்த
உரவுவில் மேலசைத்த* கையை ஒராங்கு
நிரைவளை முன்கையென் தோழியை†நோக்கிப்
படுகிளி பாயும் பசுங்குரல் ஏனல்
கடிதல் மறப்பித்தா யாயின் இனிநீ
நெடிதுள்ளல் ஓம்புதல் வேண்டும் இவளே
..............................
கடுமா கடவுறூஉங் கோல்போல் எனைத்தும்
கொடுமையிலை யாவது அறிந்து மடுப்பல்
வழைவளர் சாரல் வருடை நன்மான்‡
குழவி வளர்ப்பவர் போலப் பாராட்டி
உழையிற் பிரியிற் பிரியும்§
இழையணி அல்குல்என் தோழியது கவினே" (கலித். ௫0)

எனவரும்.

குறைந்து அவட்படரினும் என்பது — மேல் தலைவன் புணர்ச்சியுண்மை யறிந்து தாழநின்ற தோழி தானுங் குறையுற்றுத் தலைவி மாட்டுச் செல்லுதற் கண்ணுங் கூற்று நிகழும் என்றவாறு

இக் கிளவி இரந்து பின்னின்ற தலைவன் உள்ளப்புணர்ச்சியுள்வழியும் குறையுற்று மெய்யுறுபுணர்ச்சிவேண்டித் தலைவிமாட்டுச்செல்லுங் காலத்தும் ஒக்கும்.

உதாரணம் :—

"வளை அணி முன்கை வால்எயிற் றின்னகை$
இளையர் ஆடுந் தழையவிழ் கானற்
குறுந்துறை¶ வினவி நின்ற
நெடுந்தேர் அண்ணலைக்** கண்டிகும் யாமே"

(ஐங்குறு. கக௮)

எனவரும்.

மறைந்து அவள் அருகத் தன்னொடும் அவளொடும் முன்னம் முன்தளைஇப் பின்னிலை நிகழும் பல்வேறு மருங்கினும் என்பது—மேல் தலைவன்மாட்டுத் தோழி குறைநயப்பிக்கச் சென்றவழித் தோழி சொல்லும் குறிப்பு மொழிக்கு அவள் மறைந்து அரியளாகத் தன்னொடும் அவளொடும் குறிப்பினை முன்னர்த் தடுத்துக்கொண்டு வழிபட்டு முயலும் பல வேறு பக்கத்தின் கண்ணும் தோழிகூற்று நிகழும் என்றவாறு.

(பாடம்) * மேலசை. † தோழிநெறி. ‡ வரிவளைநன்மாண். § பிரியுற்றுறையும். $ நமர்நகை. ¶ சறுந்துறை. ** அண்ணற்.

மறைத்தலாவது—தன் மனத்து நிகழ்ச்சியை ஒளித்தல். அருகுதலாவது—இசைவிலாதாரைப்போல நிற்றல். முன்னமுன் தலைதலாவது - கூற்றினன்றிக் குறிப்பினனுணர்தல். முதன்மூன் றலை இ என்று பாடமாயின், மனத்தினனும் மொழியினனும் உடம்பினனும் ஒருங்கே அளவி என்றுமாம். பின்னிலை நிகழும் பல்வேறு மருங்காவது வழிபாடு கொடுவருங் கூற்றுவேறுபாடு. எனவே தலைவிக்குத் தழையும் கண்ணியும் கொண்டு ஒருவன் நம் புனத்தயல் வாராநின்றான் எனவும், அவன் என்மாட்டு ஒருகுறையுடையன்போலும் எனவும், அருளுவார்க்கு இஃது இடமெனவும், அவன் குறைமறுப்பின் மடலேறுவல் எனக் கூறிப் போந்தான் பின்பு வரக்கண்டிலேன் எனவும், இந் நிகரன கூறுதல் அவை வருமாறு;

"புலைபூந் தழைஅல்குல் பொன்அன்னாய் சாரல்
திலைகாத் திருந்தேம்யா மாக—விலைவாய்த்து
மாவினவு வார்போல வந்தவர் நம்மாட்டுத்
தாம்வினவல் உற்றதொன் றுண்டு" (ஐந்திணையைம். கசு)

எனவும்,

"நெய்யொடு மயக்கிய உழுத்துநூற்* றன்ன
வயலையஞ் சிலம்பின் தலையது
செயலையம் பகைத்தழை வாடும் அன்னாய்" (ஐங்குறு. உகக)

எனவும்,

"இலைசூழ்செங் காந்தள் எரிவாய் முகையவிழ்த்த ஈர்ந்தண் வாடை
கொலைவேல் நெடுங்கட் கொடிச்சி கதப்புளருங் குன்ற நாடன்
உலைபடு வெந்நோய் உழக்குமால் அந்தோ
முலையிடை நேர்பவர் நேரும் இடனிது†மொய்குழலே"

எனவும்,

"புணர்துணையோ டாடும் பொறியலவன் நோக்கி
இணர்ததையும் பூங்கானல் என்னையும் நோக்கி
உணர்வொழியப் போன ஒலிதிரைநீர்ச் சேர்ப்பன்
வணர்சுரியைம் பாலாய் வண்ணம் உணரேனால்"
(சிலப். கானல். கூக

எனவும்,

"தன்குறையீ தென்னான் தழைகொணருந் தண்சிலம்பன்‡
நின்குறை யென்னும் நினைப்பினனாய்ப்§ பொன்குறையும்
நாள்வேங்கை நீழலும் நண்ணான் எவன்கொலோ
கோள்வேங்கை அன்னான் குறிப்பு" (திணைமாலை. கூக)

எனவும்,

"ஒருநாள் வாரலன் இருநாள் வாரலன்
பன்னாள் வந்து பணிமொழி பயிற்றி$
நன்னர் நெஞ்சம் நெகிழ்ந்த பின்றை
வரைமுதிர் தேனிற் போகி யோனே

(பாடம்) * உழுந்து. † மிடனே.
‡ தன் சிலம்பின். § யேநான் நினைப்பினும்.
$ பயிற்றியென்.

ஆசாகு எந்தை யாண்டுளன் கொல்லோ
வேறுபுல னல்நாட்டுப் பெய்த
ஏறுடை மழையிற் கலிழுமென் நெஞ்சே" (குறுந்தொகை.கஎ௪)

எனவும்,

"மாயோன் அன்ன மால்வரைக் கவாஅன்
வாலியோன் அன்ன வயங்குவெள் அருவி
அம்மலைக் கிழவன் நம்நயந்* தென்றும்
வருந்தினன் என்பதோர் வாய்ச்சொல் தேறாய்
நீயுங் கண்டு நுமரொடும்† எண்ணி
அறிவறிந் தளவல் வேண்டு மறுதரற்கு
அரிய வாழி தோழி பெரியோர்
நாடி நட்பின் அல்லது
நட்டு நாடார்தம் ஒட்டியோர்‡ திறத்தே" (நற்றிணை. ௩௨)

எனவும் வரும்.

நன்னயம் பெற்றுழி நயம்புரி யிடத்தினும் என்பது—தலைவி குறை நயந்தமை பெற்றவழி அத் தலைவி நயம்பொருந்தும் இடத்தினுங் கூற்று நிகழும் என்றவாறு

தலைமகள் குறைநயந்தமை தலைமகட்குக் கூறிய செய்யுள் :—

"நெய்தற் பரப்பிற் பாவை கிடப்பி
நின்குறி வந்தனென் இயல்தேர்க் கொண்க
செல்கஞ் செலவியங் கொண்மோ வைகலும்§
ஆரல் அருந்த வயிற்ற
நாரை மிதிக்கும் என்மகள் நுதலே" (குறுந். ககச)

எனவும்,

"கடும்புலால் புன்னை கடியுந் துறைவ
படும்புலால்$ புள்கடிவான் புக்க—தடம்புல் ஆம்
தாழைமா ஞாழல் ததைந்துயர்ந்த தாழ்பொழில்¶
ஏழைமான் நோக்கி இடம்" (திணைமாலை, ௪௪)

எனவும் வரும்.

இன்னும் நயம்புரி யிடத்தும் என்றதனால் களவொழுக்கம் நிகழா நின்றுழிக் கூறுங் கூற்றும் ஈண்டே கொள்க. அது தலைவன் வருமென வும் வந்தா னெனவுங் கூறுதலும் தலைமகன் பகற்குறிக்கண் நீங்கிய வழிக் கூறுதலும் எனப் பலவாம்.

"கவர்பரி நெடுந்தேர் மணியும் இசைக்கும்
பெயர்பட வியங்கிய** இளையரும் ஒலிப்பர்
கடலாடு வியலிடைப்†† பொலிந்த நறுந்தழைத்
திதலை யல்குல் நலம்பா ராட்டிய
வருமே தோழி வார்மணற் சேர்ப்பன்
இற்பட‡‡ வாங்கிய முழவுமுதற் புன்னை
மாவரை மறைகம் வம்மதி பானாள்

(பாடம்) * நன்னயத். † நுமரோடு. ‡ ஒள்ளியோர்.
§ அல்கலும். $ அடும்புலால். ¶ பொழிலே.
** இலங்கிய. †† வியலணிப். ‡‡ நிறைபட.

பூவிரி கானல் புணர்குறி வந்துநம்
மெல்லிணர் நறும்பொழிற் காணுதவன்
அல்லல் அருப்படர் காண்கநாம் சிறிதே." (நற்றிணை. க0எ)

இது வருகின்முன் எனக் கூறியது.

"நிலவு மறைந்தன்று இருளும் பட்டன்று
ஓவத் தன்ன இடனுடை வரைப்பில்
பாவை அன்ன நப்புறப்* காக்குஞ்
சிறந்த செல்வத்து அன்னையுந்† துஞ்சினள்.
கெடுத்துப்படு‡ நன்கலம் எடுத்துக்கொண் டாங்கு
நன்மார்பு அடைய முயங்கி மென்மெலக்§
கண்டனம் வருகஞ் செல்மோ தோழி
கீழு மேலுங் காப்போர் நீத்த$
வறுந்தலைப்¶ பெருங்களிறு** போலத்
தமியன் வந்தோன் பனியலை நிலையே." (நற்றிணை. கஅஉ)

இது வந்தான் எனக் கூறியது.

"நெய்தல் கூம்ப நிழல்குணக் கொழுகக்
கல்சேர் மண்டிலஞ் சிவந்து சினந்தணியப்
பல்பூங் கானலும் அல்கின் றன்றே††
இனமணி ஒலிப்பப் பொழுதுபடப் பூட்டி
மெய்ம்மலி காமத்து யாந்தொழுது ஒழியத்
தேருஞ் செல்புறம் மறையும் ஊரோடு
யாங்கா வதுகொல் தானே தேம்பட
ஊதவண்டு‡‡ இமிருங் கோதை மார்பின்
மின்னிவர்§§ பெரும்பூண் கொண்கனொடு
இன்னகை மேவிநாம் ஆடிய பொழிலே" (நற்றிணை. கஅஎ)

இது பகற்குறிக்கண்—தலைவன் நீங்கியவழிக் கூறியது.

என்னரும் பன்னகை கன்னிய வகையினும் என்பது—எண்ணுதற்கு அரிய பல நகையாட்டுக்களைத் தலைவனிடம் குறித்த வகையுங் கூற்று நிகழும் என்றவாறு.

அஃது அலராகுமென்று கூறுதல். இவ்வொழுக்கம் புறத்தார்க்குப் புலனாயினுல் அவர் தூற்றி நகைப்பராகலின் நகையாயிற்று.

உதாரணம்:—

"நிறைஅரியர் மன்அளியர்$$ என்னுது காமம்
மறைஇறந்து மன்று படும்" (குறள்.*ககஙஅ)

"அன்னையும் அறிந்தனள் அலரு மாயின்று
நன்மனை நெடுநகர் புலம்புகொள உயிர்க்கும்
இன்னு வாடையும் மலையும்
நம்மூர்ச் செல்கம் எழுகமோ¶¶ தெய்யோ" (ஐங்குறு. உஙஅ)

எனவும் வரும்.

---

(பாடம்) * நிற்புறம். † அன்னையும். ‡ பெறு. § மென்மேற்.
$ நீர்க்க. ¶ வருந்தலைப், ** பெயர்களிறு. †† பல்குற்றன்றே.
‡‡ ஓதைவண்டு. §§ மின்னவிர். $$ மன் எளியர். ¶¶ வெழுரே.

புணர்ச்சி வேண்டினும் என்பது—மேற்சொல்லப்பட்ட பல்லாற்றானும் தலைவற்கறிவுறுத்தவழிப் பின்னும் புணர்ச்சி வேண்டினும் ஆண்டுத் தோழி கூற்று நிகழும் என்றவாறு.

'நெய்யால் எரிநுதுப்பேம்* என்றற்றாற் கௌவையாற்
காமம் நுதுப்பேம்† எனல்'' (குறள். ககச அ)

''இவளே, நின்சொற் கொண்ட என்சொல் தேறிப்
பசுநனை ஞாழற் பல்கிளை‡ ஒருசிறைப்
புதுநல னிழந்த புலம்புமார் உடையள்
உதுக்காண் தெய்ய உள்ளல் வேண்டும்
நிலவும் இருளும் போலப் புலவுத்திரைக்
கடலுங் கானலுந் தோன்றும்
மடல்தாழ் பெண்ணையஞ்§ சிறுநல் லூரே.'' (குறுந். அக)

இது பின்னும் புணர்ச்சி வேண்டிய தலைவற்கு இடமுணர்த்தியது. இரவு வருவானைப் பகல் வாவென்றலும் பகல் வருவானை இரவு வாவென்றலுங் குறிபெயர்த்தலும் எல்லாம் ஈண்டே கொள்க.

''ஊர்க்கும் அணித்தே பொய்கை பொய்கைக்குச்
சேய்த்தும் அன்று சிறுகான் யாறே
இரைதேர் வெண்குருகு அல்லது யாவதும்
துன்னல் போகின்றாற் பொழிலே யாமெம்
கூழைக் கெருமண் கொணர்கஞ் சேறும்
ஆண்டும் வருகுவள் பெரும்பே தையே.'' (குறுந். ககக)

இது பகற்குறி நேர்ந்தது. ஆண்டுத் தலைவிக்குக் கூறுமாறு:—

''ஒலிவெள் ளருவி ஒங்குமலை நாடன்
சிறுகட் பெருங்களிறு வயப்புலி தாக்கித்
தொல்முரண் சோருந்§ துன்னருஞ் சோலை¶
நடுநாள் வருதலும் வரூஉம்
வடுநா ணலமே தோழி நாமே'' (குறுந். அஅ)

எனவரும்.

வேண்டாப் பிரிவினும் என்பது—புணர்ச்சி வேண்டாது பிரிவு வேண்டினும் என்றவாறு.

இது தலைவன் நெஞ்சினாற் பிரியானென்பதனான் வேண்டாப் பிரிவென்றார். அது தாளா...வென்பது அலராகுமென்று அஞ்சி ஒருவழித் தணத்தலும் ஒன்று. அவ்வழித் தலைவிக்கு உரைத்தனவும் தலைவற்** குரைத்தனவும் உளவாம். அவை வருமாறு:—

''இறவுப்புறத் தன்ன பிணர்படு தடவுமுதற்††
சுறவுக்கோட் டன்ன முள்ளிலைத் தாழை
பெருங்களிற்று மருப்பின் அன்ன அரும்பு முதிர்பு
நன்மான் உழையின்‡‡ வேறுபடத் தோன்றி

(பாடம்) * எரிநுதுப்போம். † காமநுதுப்போம். ‡ பல்சினை.
§ எம். $ சொல்லும். ¶ சாரல்.
** தலைவிக். †† கடவுமுதற். ‡‡ நுளையின்.

விழவுக்களங் கமழும் உரவுநீர்ச் சேர்ப்ப
இனமணி நெடுந்தேர் பாகன் இயக்கச்
செலீஇய சேறி யாயின் இவளே
வருவை யாகிய சின்னாள்
வாழா ளாதல்நற் கறிந்தனை* சென்மே'' (நற்றிணை. ௧௧)

இது, தலைவன் பிரிவு வேண்டியவழிக் கூறியது.

''சாரற் பலவின் கொழுந்துணர் நறும்பழம்
இருங்கல் விடரளை வீழ்ந்தென வெற்பிற்
பெருந்தேன் †இருலொடு சிதறு‡ நாடன்
பேரமர் மழைக்கண் கலிழத்தன்
சீருடை நன்னாட்டுச் செல்லும் அன்னாய்.'' (ஐங்குறு. ௨௧௪)

இது தலைவிக்கு உரைத்தது.

''கானலம் பெருந்துறைக் கலிதிரை§ திளைக்கும்
வானுயர் எறிமணல்$ ஏறி ஆனது
காண்கம் வம்மோ தோழி
செறிவளை நெகிழ்த்தோன் எறிகடல் நாடே.'' (ஐங்குறு. ௧௧௧)

இது தலைவியை ஆற்றுவித்தது.

''இருள்திணிந் தன்ன ஈர்ந்தண் கொழுநிழல்
நிலவுக் குவித்தன்ன வெண்மண லொருசிறைக்
கருங்கோட்டுப் புன்னைப் பூம்பொழில் புலம்ப
இன்னும் வாரார் வரூஉம்
பல்மீன் வேட்டத் தென்னையர் திமிலே'' (குறுந். ௧௨௩)

எனவும் வரும்.

**வேளாண் பெருநெறி வேண்டிய விடத்தினும்** என்பது—வேளாண்மையாவது உபகாரம். பெருநெறியாவது உபகாரமாகிய பெருநெறி என்க. அதனைத் தோழி தலைவனை வேண்டிக் கோடற்கண்ணும் என்றவாறு.

''நெடுவேள் மார்பின் ஆரம் போலச்
செவ்வாய் வானந் தீண்டிமீன் அருந்தும்
பைங்காற் கொக்கின் நிரைபறை யுகப்ப
எல்லை பைப்பயக் கழிப்பிக் குடவயின்
கல்சேர்ந் தன்றே பல்கதிர் ஞாயிறு
மதரெழில் மழைக்கண் கலிழ இவளே
பெருநாண் அணிந்த சிறுமென் சாயல்
மாணலஞ் சிதைய ஏங்கி ஆனது
அழல்தொடங் கினளே பெரும அதனாற்
கழிச்சுறு வெறிந்த புட்டாள் அத்திரி¶
நெடுநீர் இருங்கழிப் பரிமெலிந் தசைஇ
வல்வில் இளையரொ டெல்லிச் செல்லாது
சேர்ந்தனை** செலினே சிதைகுவ துண்டோ

(பாடம்) * ஆதலறிந்தனை. † இருஅல். ‡ வெற்பிறஞ்சிதறு.
§ கலிதிரை. $ நெடுமணல் ¶ புட்டிரளத்திரி.
** சேந்தனை.

பெண்ணை ஓங்கிய வெண்மணல் படப்பை
அன்றில் அகவும் ஆங்கண்
சிறுகுரல் நெய்தலெம் பெருங்கழி* நாட்டே'' (அகம். கஉ0)

என்பதும்

''நிலாவின் இலங்கும்'' என்னும் அகப்பாட்டினுள்,

''சேர்ந்தனிர்† செல்குவிராயின் யாமும்
எம்வரை அளவையிற் பெட்குவம்
நும்மோப் பதுவோ உரைத்திசின் எமக்கே''‡ (அகம். உ00)

என்பதும் கொள்க.

இதனாற் பயன் இல்லறம் நடத்தல்வேண்டும் என்பது.

புணர்ந்துழி யுணர்ந்த அறிமடச் சிறப்பினும் என்பது—தலைவனொடு தலைவி புணர்ந்தவழி ஆண்டுப் பொருந்திய அறிவுமடம்பட்ட சிறப்பின் கண்ணும் என்றவாறு.

அஃதாவது அல்லகுறிப்படுதல். அவ்வழியும் தோழி கூற்று நிகழும்.

''கொடுமுள் மடல்தாழைக் கூம்பவிழ்ந்த ஒண்பூ
இடையுள்§ இழுதொப்பத் தோன்றிப்—படையெலாந்$
தெய்வம் கமழுந் தெளிகடல் தண்சேர்ப்பன்
செய்தான் தெளியாக் குறி'' (ஐந்திணையைம். சக)

''இடுமணல் எக்கர் அகன்கானல் சேர்ப்பன்
கடுமான் மணியரவம் என்று—கொடுங்குழை¶
புள்ளரவங் கேட்டும் பெயர்ந்தாள் சிறுகுடியர்
உள்ளரவம் நாணுவர்** என்று'' (ஐந்திணையெழு. இஎ)

''அம்ம வாழியோ அன்னைநம் படப்பை
மின்னேர் நுடங்கிடைச் சின்னிழ லாகிய
புன்னை மென்காய் பொருசினை அரிய
வாடுவளி தூக்கிய அசைவிற் கொல்லோ
தெண்ணீர்ப் பொய்கையுள் வீழ்ந்தென
எண்ணினை யுரைமோ உணர்குவல் யானே''

என வரும்.

ஓம்படைக் கிளவிப் பாங்கின் கண்ணும் என்பது—ஓம்படுத்துதற் பொருட் பகுதிக்கண்ணுங் கூற்று நிகழும் என்றவாறு.

அஃதாவது ஒருவழித்தணக்கும்வழி ஓம்படை கூறுதல்.

''பெருநன் றென்றிற் †† பேணுரும் உளரே
ஒருநன்‡‡ றுடையா ளாயினும் புரிமாண்டு
புலவி தீர வளிமத§§ யிலைகவர்

(பாடம்) * பெருங்கறி. † சேர்நகர்நீர். ‡ நும்மொப்பது மேவரி தெமக்கே. § இடையில். $ புடையெல்லாம். ¶ கொடுங்குழையான். ** கலித்தாள் சிறுகுடியர் உள்ளாயம் நாணுப. †† றூற்றின். ‡‡ யொருகன். §§ வழிமதி.

பூாடமை யொழுகிய தண்ணறுஞ் சாரல்
மென்னடை மரையா துஞ்சும்
நன்மலை நாட நின்னல திலளே" (குறுந். ககடு)

எனவும்,

"எறிந்தெமர் தாமுழுத ஈர்ங்குரல்* ஏனல்
மறந்துங் கிளியினமும் வாரா—கறங்கருவி
மாமலை நாட மடமொழி தன்கேண்மை
நீமறவல் நெஞ்சத்துக்† கொண்டு" (ஐந்திணையைம். கஅ)

எனவும் வரும்.

இதனுள் கிளிகடிய யாம் வாரேம் நீமறவா தொழிதல்வேண்டு மென்றவாறு.

**செங்கடு மொழியாற் சிதைவுடைத்தாயினு மென்பு நெகப் பிரிந்தோள் வழிச் சென்று கடைஇ அன்புதலை யடுத்த வன்புறைக்கண்ணும்** என்பது—செவ்விய கடிய சொல்லினானே தலைவன் அன்பு சிதைவுடைத்தாயினும் என்புருகு மாறு பிரியப்பட்டவளிடத்துச் சென்று தலைவன் அன்புடைமையின் அளிப்பன் என ஆற்றுவித்த வற்புறுத்தற்கண்ணுந் தோழிகூற்று நிக ழும் என்றவாறு.

**செங்கடுமொழி** என்றது—கொடிய கடுமொழியேயன்றி மனத்தி ஞன் இனியளாகிக் கூறும் கடுமொழி. அஃதாவது இயற்பழித்தல். அவ்வாறு இயற்பழித்தவழித் தலைவன் அன்பு சிதைவுடைத்தாயினும் என்றவாறு அன்புதலையடுத்த வன்புறையாவது தலைவன் இன்றியமை யான் என ஆற்றுவித்தல்.

இயற்பழித்தற்குச் செய்யுள்:

"மாசறக் கழீஇய யானை போலப்
பெரும்பெயல் உழந்த இரும்பிணர்த் துறுகல்
பைதல் ஒருதலை‡ சேக்கு நாடன் நீடு
நோய்தந் தனனே தோழி
பசலை ஆர்ந்தன§ குவளையங் கண்ணே" (குறுந். கங)

வன்புறைக்குச் செய்யுள்:—

"மகிழ்நன் மார்பே வெய்யை எனநீ
அழியல் வாழி தோழி நன்னன்
நறுமா கொன்று நாட்டிற் போகிய
ஒன்றுமொழிக் கோசர் போல
வன்கட் சூழ்ச்சியும் வேண்டுமாற் சிறிதே." (குறுந். எங)

"மெய்யில் தீரா மேவரு காமமொடு
எய்யாய் ஆயினும் உரைப்பல் தோழி
கொய்யா முன்னுங் குரல்வார்பு தினையே
அருவி ஆன்ற பைங்கால் தோறும்
இருவி தோன்றின பலவே நீயே
முருகுமுரண் கொள்ளுந் தேம்பாய் கண்ணிப்

(பாடம்) * ஈன்குரல். † நெஞ்சத்துட், ‡ ஒருகலை. § ஆர்ந்தநங்.

பரிடல் நாயொடு* பன்மலைப் படரும்
வேட்டுவற் பெறலோ டமைந்தனை† யாழநின்
பூக்கெழு‡ தொடலை நுடங்க வெழுந்தெழுந்து
கிள்ளைத் தெள்விளி யிடையிடை பயிற்றி
ஆங்காங் கொழுகா யாயின் அன்னை
சிறுகிளி கடிதல் தேற்றாள் இவளெனப்
பிறர்த்தந்து நிறுக்குவ ளாயின்
உறற்கரி தாகுமவன் மலர்ந்த மார்பே' (அகம். உஅ)

ஆற்றுவித்தற்குச் செய்யுள்:—

"குறுங்கை இரும்புலி கோள்வல் ஏற்றை
நெடும்புதற் கானத்து மடப்பிடி ஈன்ற
நடுங்குநடைக் குழவி கொளீஇய பலவின்§
பழந்தூங்கு கொழுநிழல் ஒளிக்கு நாடற்குக்
கொய்திடு தளிரின் வாடிநின்
மெய்பிறி தாகல் எவன்கொல் அன்னாய்" (ஐங்குறு. உ௧௬)

"அழியல் ஆயிழை அன்புபெரி$ துடையன்
பழியும் அஞ்சும் பயமலை நாடன்
நில்லா மையே நிலையிற் றாகலின்
நல்லிசை வேட்ட நயனுடை நெஞ்சிற்
கடப்பாட் டாளன் உடைப்பொருள் போலத்
தங்குதற் குரிய தன்றுநின்
அங்கலுழ் மேனிப் பாஅய பசப்பே" (குறுந்தொகை. ௧௪௩)

எனவும்,

"பெருங்கை இருங்களிறு ஐவனம் மாந்திக்
கருங்கால் மராம்பொழிற் பாசடைத் துஞ்சுஞ்
சுரும்பிமிர் சோலை மலைநாடன் கேண்மை
பொருந்தினார்க் கேமாப் புடைத்து" (ஐந்திணையெழு. ௧உ)

எனவும் வரும்.

ஆற்றது தீமை அறிவுறு கலக்கமும்...வரைதல் வேண்டியும் என்பது—தலைவன் வருநெறியினது தீமையைத் தாங்கள் அறிவுற்றதனால் எய்திய கலக்கத்தானும் காவற் கடுமை வரையிறந்ததனானும் குறியிடமும் காலமுமாகத் தாங்கள் வரைந்த நிலைமையை விலக்கித் தலைவி காதல் மிகுதல் உட்படப் பிறவுந் தலைவனது நாடும் ஊரும் இல்லும் குடியும் பிறப்பும் சிறப்பும் மிகுதியும் நோக்கித் தலைவன்மாட்டுக் கிளக்குங் கிளவியோடே கூட அத்தன்மைத்தாகிய நிலவகையினானே வரைதல் வேண்டியும் தோழி கூறும் என்றவாறு.

அவற்றுள் ஆறின்னாமை கூறியதற்குச் செய்யுள் :—

"சாரற் புனத்த¶ பெருங்குரற் சிறுதினைப்
பேரமர் மழைக்கண் கொடிச்சி கடியவுஞ்
சோலைச் சிறுகிளி உண்ணும் நாட
ஆரிருள் பெருகின வாரல்
கோட்டுமா வழங்குங் காட்டக நெறியே." (ஐங்குறு. உ௮உ)

(பாடம்) * பரிபன்நாயொடு † டமைந்தன. ‡ தோட்கெழு.
§ பலவின்கொ. $ அளிபு. ¶ புறத்த.

காப்பு வரை யிறந்ததற்குச் செய்யுள் :—

''பல்லோர் துஞ்சு நள்ளென் யாமத்து
உரவுக்களிறு போல்வந் திரவுக்கதவ முயறல்
கேளேம் அல்லேங் கேட்டனம் பெரும
ஓரி முருங்கப் பீலி* சாய
நன்மயில் வலைப்பட் டாங்குயாம்
முயங்குதொறு முயங்கும் அறனில் யாயே'' (குறுந். உ௪௪)

எனவும்,

''கருங்கண் தாக்கலை பெரும்பிறி துற்றெனக்
கைம்மை உய்யாக் காமர் மந்தி
கல்லா வன்பறழ் கிளைமுதற் சேர்த்தி
ஓங்குவரை யடுக்கத்துப் பாய்ந்துயிர் செகுக்குஞ்
சாரல் நாட நடுநாள்
வாரல் வாழியோ வருந்துதும் யாமே'' (குறுந். ௬௯)

எனவும் வரும்.

காதன் மிகுதி கூறியதற்குச் செய்யுள் :—

''வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சாரல் நாட செவ்வியை ஆகுமதி
யாரஃ தறிந்திசி னோரே சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே.'' (குறுந். ௧௮)

பிறவும் என்றதனான் தலைவனைப் பழித்தலுங் கொள்க.

''நெடுவரை மிசையது குறுங்கால் வருடை
தினைபாய் கிள்ளை வெருவும்† நாட
வல்லைமன் றம்ம பொய்த்தல்‡
வல்லாய் மன்றநீ அல்லது செயலே.'' (ஐங்குறு. உ௮எ)

இது, தலைவனைப் பழித்தது.

''குன்றக் குறவன் காதல் மடமகள்
மென்தோட் கொடிச்சியைப்§ பெறற்கரி தில்ல
பைம்புறப் படுகிளி யோப்பவவர்$
புன்புல மயக்கத் துவிளைந்தன தினையே.'' (ஐங்குறு. உ௯0)

இது, புனக்காவலினி இன்றென்றது.

''கொடிச்சி யின்குரல் கிளைசெத்¶ தடுக்கத்துப்
பைங்குரல் ஏனற் படர்தருங் கிளியெனக்
காவலுங் கடியுநர் போல்வர்
மாமலை நாட வரைந்தனை கொள்மே.'' (ஐங்குறு. உ௯௧)

இது, குறவரியல்பு உணர்த்தி வரைக வென்றது.

---

(பாடம்) * பலி. † வெரூஉம். ‡ வல்லைமன்ற பொய்த்தல்
§ கொட்புச் சிறையைப். $ ஒப்பலர், ஒப்பலள்,
¶ கிளிசெத். கிளைசேர்த்தி.

"வெறிகமழ் வெற்பன்என் மெய்ந்நீர்மை கொண்ட(து)
அறியாள்மற் றன்னோ* அணங்கணங்கிற் றென்று
மறியீர்த் துதிரந்தூய்† வேலற் றரீஇ
வெறியோ டலம்வரும் யாய்."   (ஐந்திணையைம். உ0)

இது, வெறி யச்சுறுத்தியது.

"இனமீ னிருங்கழி ஓதம் உலாவ‡
மணிநீர் பரிக்குந்§ துறைவ தகுமோ
குணநீர்மை குன்றக் கொடியன்னாள் பக்கம்
நிணைநீர்மை இல்லா ஒழிவு."   (திணைமொழி. ௪௪)

இஃதருளல் வேண்டு மென்றது.

இன்னும் பிறவும் என்றதனால் தலைமகள் தன்னை யழிந்தமை கூறு தலுந் தலைவன்மாட்டு வருமிடையூறு அஞ்சுதலுங் கொள்க. அது வருமாறு :—

"........................................
தன்எவ்வங் கூரினும் நீசெய்த அருளின்மை
என்னையு மறைத்தாள்$ என்தோழி அதுகேட்டு
நின்னையான் பிறர்முன்னர்ப் பழிகூறல் தான்நாணி" (கலி. ௪௪)

இது, தலைமகள் தன்னை அழிந்ததற்கண் வந்தது.

"கரைபொரு கான்யாற்றங் கல்லத ரெம்முள்ளி வருதி ராயின்
அரையிருள் யாமத் தடுபுலியோ நும்மஞ்சி யகன்று போக
நரையுருமே றுங்கைவேல் அஞ்சுக நும்மை
வரையர மங்கையர் வவ்வுத லஞ்சுதும் வார லையோ."

இஃது அவனாறு அஞ்சுதற்கண் வந்தது.

நாடுமுதலாயின சுட்டித் தலைவன்மாட்டுத் தோன்றுங் கிளவி யாவன—நீ இத்தன்மையாகிய நாட்டையுடையை; இத்தன்மையாகிய நகரையுடையை; இத்தன்மைத்தாகிய இல்லையுடையை; இத்தன் மைத்தாகிய குடிப்பிறப்பை யுடையை; இத்தன்மைத்தாகிய சிறப் புடையை; என அவற்றின் மிகுதிபடக் கூறுதல். அவை வருமாறு :

"கோழிலை வாழை" என்னும் நெடுந்தொகைப் பாட்டினுள்,

"குறியா வின்பம் எளிதின் நின்மலைப்¶
பல்வேறு விலங்கும் எய்து** நாட
குறித்த இன்பம் நினக்கெவன் அரிய"

என நாடு சுட்டிவந்தது.

"காமங் கடப்ப உள்ளம்†† இனைப்ப
யாம்வந்து காண்பதோ பருவ மாயின்
ஓங்கித் தோன்றும் உயர்வரைக்கு
யாங்கெனப் படுவது நும்மூர் தெய்யோ."   (ஐங்குறு. உ௩எ)

இஃது ஊர்பற்றி வந்தது.

(பாடம்) றன்னை. †மறியீர் தனவோர்ந்தாய. ‡ முதலாவ. § பரக்கும். $ யறைவித்தாள். ¶னின்மலைப். **எய்த. †† கடவ உள்ளம்,

துணைபுணர்ந் தெழுதரும்'' என்னும் கலித்தொகைப் பாட்டினுள்,

''கடிமலர்ப் புன்னைக்கீழ்க் காரிகை* தோற்றாளைத்
தொடிநெகிழ்ந்த தோளளாத்† துறப்பாயால் மற்றுநின்
குடிமைக்கட் பெரியதோர்‡ குற்றமாய்க்§ கிடவாதோ.''

இது, குடிமைபற்றி வந்தது.

''ஆய்மலர்ப் புன்னைக்கீழ் அணிநலந் தோற்றாளை
நோய்மலி நிலையளாத் துறப்பாயால் மற்றுநின்
வாய்மைக்கண் பெரியதோர் வஞ்சமாய்க் கிடவாதோ.''

''திகழ்மலர்ப் புன்னைக்கீழ்த் திருநலந் தோற்றாளை
துகழ்மலர்க் கண்ணளாத் துறப்பாயால் மற்றுநின்
புகழ்மைக்கட் பெரியதோர் புகராகிக் கிடவாதோ.''

(கலித். ௧௩௫)

''.................................................
தாமரைக் கண்ணியைத் தண்ணறுஞ் சாந்தினை
நேரிதழ்க் கோதையாள் செய்குறி நீவரின்
மணங்கமழ் நாற்றத்த மலைநின்று பலிபெறூஉம்
அணங்கென அஞ்சுவர் சிறுகுடி யோரே $'' (கலித். ௫௨)

பிறவு மன்ன.

ஐயச் செய்கை தாய்க் கெதிர்மறுத்துப் பொய்யென மாற்றி மெய்வழிக் கொடுப்பினும் என்பது தலைவிக்குப் பிறரோடு கூட்டமுண்டெனச் சொல்லி ஐயுற்றவழி அதனை மறுத்துத் தலைவி செய்த செய்கையைப் பொய்யென நீக்கிப் பிறிதோர் ஆற்றான் மெய்வழிக்கட்படுத்தினும் என்றவாறு.

அஃதாமாறு தலைவி குறிவழிச் செல்கின்றதனைக் காண்டல்.

''உரும்உரறு கருவிய¶ பெருமழை தலைஇப்
பெயலான் றவிந்த தூங்கிருள் நடுநாள்
மின்னுநிமிர்ந் தன்ன** கனங்குழை இமைப்பப்
பின்னுவிடு நெறியிற் கிளைஇய கூந்தலள்
வரையிழி மயிலின் ஒல்குவனள் ஒதுங்கி
மிடையூர் பிழியக் கண்டனென் இவளென
அலையல் வாழிவேண் டன்னைநம் படப்பைச்
சூருடைச் சிலம்பிற் சுடர்ப்பூ வேய்ந்து
தாம்வேண்†† டுருவின் அணங்குமார் வருமே
நனவின் வாயே போலத் துஞ்சுநர்க்
கனவாண்டு மருட்டலும் உண்டே இவள்தான்
சுடரின்று தமியளும் பனிக்கும் வெருவர‡‡
மன்ற மராத்த கூகை குழறினும்
நெஞ்சழிந் தரணஞ் சேரு மதன்றலைப்§§
புலிக்கணத் தன்ன நாய்தொடர் விட்டு

(பாடம்) * அணிகலம். † தாளழுதி. ‡ பேரினத்தாற். § வஞ்சமா. $ சிறுகுடி வாழ்நரே. ¶ கருவியல். ** நிமிர்ந்த. †† தான்வேண். ‡‡வெருவுற. §§ சேருந் தன்றலைப்.

முருகன் அன்ன சீற்றத்துக் கடுந்திறல்
எந்தையும் இல்ல னாக*
அஞ்சுவள் அல்லளோ இவளது செயலே" (அகம். சஅ)

என வரும்.

"வேங்கை நறுமலர் வெற்பிடை யாம்கொய்து
மாந்தளிர் மேனி வியர்ப்பமற் றாங்கெனைத் தும்
பாய்ந்தருவி ஆடினேம் ஆகப் பணிமொழிக்குச்
சேந்தனவாஞ் சேயரிக்கண் தாம்" (ஐந்திணையைம். கஞ)

என்பதும் அது.

அவன் விலங்குறினும்......தாயிடைப்புகுப்பினும் என்பது—தலைவி காப்பு மிகுதியானுங் காதன் மிகுதியானும் நொதுமலர் வரைவினானும் தமர் வரைவுமறுத்ததினானும் வேறுபட்டவழி இஃது எற்றினான் ஆயிற்று எனச் செவிலி அறிவரை வினாஅய்க் குறிபார்க்கும் இடத்தினும், அஃதன்றி வெறியாட்டிடத்தினும். பிறர் வரைவு வந்துழியும் அவர் வரைவு மறுத்தவழியும், முன்னிலைவகையானுதல் அறத்தொடுநிலை வகையானுதல் இவ்விருவகையானுந் தலைவற்கும் தலைவிக்கும் தனக்குங் குலத்திற்கும் குற்றந் தீர்ந்த கிளவியைத் தாய்மாட்டுப் புகுதவிடுத்தலும் என்றவாறு.

புகுதவிடுத்தலாவது நிரம்பச் சொல்லாது தோற்றுவாய் செய்தல் அந்நால்வகைப் பொருளினும் முன்னிலைக் கிளவி வருமாறு:—

"பொய்படு பறியாக் கழங்கே மெய்யே
மணிவரைக் கட்சி மடமயில் ஆலும்
மலர்ந்த வள்ளியங் கானங் கிழவோன்
ஆண்டகை விறல்வேள் அல்லன் இவள்
பூண்தாங் கிளமுலை அணங்கி யோனே." (ஐங்குறு. உ௫0)

இது குறிபார்த்தவழிக் கூறியது, கழங்கு முன்னிலையாக.

"அம்ம வாழி தோழி பன்மலர்
நறுந்தண் சோலை நாடுகெழு நெடுந்தகை
குன்றம் பாடா னாயின்
என்பயஞ் செயுமோ வேலற்கு வெறியே."† (ஐங்குறு. உசச)

இது, தலைவியை முன்னிலையாகக் கூறியது.

"நெய்தல் நறுமலர்ச் செருந்தியொடு விரைஇக்
கைபுனை நறுந்தார் கமழு மார்பன்
அருந்திறற் கடவு ளல்லன்
பெருந்துறைக் கொண்டிவள் அணங்கி யோனே."
(ஐங்குறு. சஅஉ)

இது, வேலனை முன்னிலையாகக் கூறியது.

"கடவுட் கற்சுனை ‡அடைவிறந் தவிழ்ந்த
பறியாக் குவளை மலரொடு காந்தள்
குருதி ஒண்பூ உருகெழக் கட்டிப்
பெருவரை அடுக்கம் பொற்பச் சூர்மகள்§

(பாடம்) * இல்லானாக. † வேலற்கண் வெறியே ‡ கிதலை.
§ குறமகள்.

அருவி இன்னியத் தாடு நாடன்
மார்புதர வந்த படர்மலி யருநோய்
நின்னணங் கன்மை யறிந்தும் அண்ணாந்து
கார்நறுங் கடம்பின் கண்ணி சூடி
வேலன் வேண்ட வெறிமனை வந்தோய்
கடவு ளாயினும் ஆக
மடவை மன்ற·வாழிய முருகே'' (நற்றிணை.கஎ)

இது, முருகனை முன்னிலையாகக் கூறியது. பிறவுமன்ன.

''அன்னை வாழிவேண் டன்னை முழங்குகடல்
திரைதரு முத்தம் வெண்மணல் இமைக்குந்
தண்ணந் துறைவன் வந்தெனப்
பொன்னினுஞ் சிறந்தன்று கண்டிசின் நுதலே.'' (ஐங்குறு. கOரு.

இது, முன்னிலைப்பகுதி: நொதுமலர்வரைவுபற்றி வந்தது

''குன்றக் குறவன் காதல் மடமகள்
அணிமயி லன்ன அசைநடைக் கொடிச்சியைப்
பெருவரை நாடன் வரையு மாகில்
தொடுத்தனம்* ஆயினு நன்றே
இன்னும் ஆனாது நன்னுறு துயரே.†'' (ஐங்குறு. உருஅ)

இஃது, அவன் வரைவு மறுத்துழிக் கூறியது.

இனி, அறத்தொடுநிலைப் பகுதி எழுவகைப்படும். அவையாமாறு:

''எளித்தல் ஏத்தல் வேட்கை யுரைத்தல்
கூறுதல் உசாவுதல்‡ ஏதீடு தலைப்பாடு
உண்மை செப்புங் கிளவியொடு தொகைஇ
அவ்வெழு வகைய என்மனார்§ புலவர்'' (பொருளியல். கOஉ)

எனப் பொருளியலுட் கூறிய சூத்திரத்தானே கொள்க.

எளித்தல் என்பது—தலைவன் நம்மாட்டு எளிய னென்று கூறுதல். அதனது பயம் மகளுடைத்தாயர் தம்வழி ஒழுகுவார்க்கு மகட்கொடை வேண்டுவ ராதலான், எளியனென்பது கூறி அறத்தொடுநிற்கப் பெறு மென்றவாறு.

''அன்னை அறியினும் அறிக அலர்வாய்§
அம்மென் சேரி¶ கேட்பினுங் கேட்க
பிறிதொன் றின்மை அறியக் கூறிக்
கொடுஞ்சுழிப் புகாஅர்த் தெய்வ நோக்கிக்
கடுஞ்சூள் தருகுவல் நினக்கே** கானல்
தொடலை ஆயமொடு கட லுடன் ஆடியுஞ்
சிற்றில் இழைத்துஞ் சிறுசோறு குவைஇயும்
வருந்திய வருத்தந் தீர யாம் சிறிது
இருந்தன மாக எய்த வந்து
தடமென் பணைத்தோள் மடநல் லீரே
எல்லும் எல்லின் றசைவுமிக †† உடையேன்

(பாடம்) * கொடுத்தனம். † நன்னுதல் துயரே. ‡ உசாதல்.
§ வகையுமென்மனார். § வல்லவா. ¶ இம்மென் சேரி
** நினக்குறு. †† நிசையும்.

மெல்லிலைப் பரப்பின் விருந்துண் டியானுமிக்
கல்லென் சிறுகுடித் தங்கின்மற் றெவனோ
எனமொழிந் தனனே* ஒருவன் அவற்கண்டு
இறைஞ்சிய முகத்தெம் புறஞ்சேர்பு பொருந்தி
இவைநுமக் குரிய அல்ல இழிந்த
கொழுமீன் வல்சி என்றனம் இழுமென
நெடுங்கொடி நுடங்கு நாவாய் தோன்றுவ
காணு மோவெனக் காலிற் சிதையா
நில்லாது பெயர்ந்த பல்லோ ருள்ளும்
என்னே† குறித்த நோக்கமொடு நன்னுதால்
ஒழிகோ யானென அழிதகக் கூறி
யான்பெயர்‡ கென்ன நோக்கித் தான்தன்
நெடுந்தேர்க் கொடிஞ்சி பற்றி
நின்றோன் போலும் இன்றுமென் கட்கே'' (அகம். ககO)

என வரும். அன்னை என்றது நற்றாயை.

ஏத்தல் என்பது—தலைவனை உயர்த்துக்கூறுதல். அது, மகளுடைத் தாயர் 'தலைவன் உயர்ந்தான்' என்றவழி மனமகிழ்வராகலின், அவ்வாறு கூறப்பட்டது. உயர்த்துக் கூறி அறத்தொடு நிற்கப்பெறும் என்றவாறு.

''அன்னாய் வாழிவேண் டன்னை நின்மகள்
பாலும் உண்ணாள் பழங்கண் கொண்டு
நனிபசந் தனளென வினவுதி அதன்திறம்
யானுந் தெற்றென உணரேன் மேனாள்
மலிபூஞ் சாரலென் தோழி மாரோடு
ஒலிசினை வேங்கை கொய்குவஞ் சென்றுழிப்
புலிபுலி என்னும் பூசல் தோன்ற
ஒண்செங் கழுநீர்க் கண்போல் ஆயிதழ்
ஊசி போகிய சூழ்செய் மாலையன்
பக்கஞ் சேர்த்திய செச்சைக் கண்ணியன்
குயமண் டாகஞ் செஞ்சாந்து நீவி
வரிபுனை வில்லன் ஒருகணை தெரிந்துகொண்டு
யாதோ மற்றம் மாதிறம் படரென§
வினவி நிற்றந் தோனே அவற்கண்டு
எம்முள் எம்முள் மெய்ம்மறை பொடுங்கி
நாணி நின்றனெ மாகப் பேணி
ஐவகை வகுத்த$ கூந்தல் ஆய்நுதல்
மையீர் ஓதி மடவீர் நும்வாய்ப்
பொய்யும் உளவோ என்றனன் பையெனப்
பரிமுடுகு தவிர்த்த தேரன் எதிர்மறுத்து¶
நின்மகள் உண்கண் பன்மா ணோக்கிச்**
சென்றோன் மன்றஅக் குன்றுகிழ வோனே††
பகல்மாய் அந்திப் படுசுடர் அமையத்து

(பாடம்) * தன்றென. † என்னையே ‡ யாம்பெயர்தோறும். § படர்கென. $ அமர்த்த. ¶ தவிர்ந்தோன் எதிர் மறுத்து ** ணேக்கிச். ††கிழவோன்.

அவன்மறை தேஎம்* நோக்கி மற்றிவன்
மகனே தோழி என்றனள்
அதனள †வுண்டுகோள் மதிவல் லோர்க்கே.‡" (அகம். சஅ)

இதனுள் கழுநீர் மாலையன், வெட்சிக்கண்ணியன் எனக் கூறினமையால், அவன் நாட்டிற்கும் மலைக்குந் தலைவன் என்பது படவும், ஒருகணை தெரிந்துகொண்டு புலி யாதென்ற அவனது வீரியமுங் கூறி உயர்த்த வாறுங் காண்க.

வேட்கையுரைத்தலாவது—தலைவன்மாட்டுத் தலைவி வேட்கையும் தலைவிமாட்டுத் தலைவன் வேட்கையும் கூறுதல். வேட்கைகூறி அறத்தொடு நிற்கும் என்றவாறு.

"நின்மக ளுண்கண் பன்மா ணோக்கிச் சென்றோன்" என்பது தலைவன் வேட்கை கூறியவாறும்.

"அன்னாய் வாழிவேண் டன்னை என்தோழி
நனிநா ணுடையள் எனினும்§ அஞ்சும்
ஒலிவெள் ளருவி யோங்குமலை நாடன்
மலர்ந்த மார்பிற் பாயல்
தவநனி வெய்ய$ நோகோ யானே." (ஐங்குறு. உகரு)

இது தலைவி வேட்கை கூறியது.

கூறுதலாவது—தலைவியைத் தலைவற்குக் கொடுக்கவேண்டு மென்பது படக் கூறுதல்.

உதாரணம்:—

"வாடாத சான்றோர் வரவெதிர் கொண்டிராய்க்¶
கோடாது நீர்கொடுப்பின்** அல்லது—வாடா
எழிலும் முலையும் இரண்டிற்கு முந்நீர்ப்
பொழிலும் விலையாமோ போந்து" (திணைமாலை·கரு)

என வரும்.

"கறிவளர் சிலம்பிற் கடவுட் பேணி
அறியா வேலன் வெறியெனக் கூறும்
அதுமனங் கொள்குவை அன்னையிவள்
புதுமலர் மழைக்கண் புலம்பிய நோய்க்கே" (ஐங்குறு. உசக)

எனவும் வரும்.

உசாவுதல் என்பது—வெறியாட்டுங் கழங்கும் இட்டுரைத்துழி வேலனோடாதல் பிறரோடாதல் தோழி உசாவுதல்.

"முருகயர்ந்து வந்த முதுவாய் வேல
சினவல் ஓம்புமதி வினவுவ துடையேன்
பல்வே றுருவிற் சில்லவிழ் மடையொடு
சிறுமறி தோன்றிய†† வன்றுநுதல் நீவி

(பாடம்) * தேயம். † வுண்டொர்கோள்- ‡ சொன்மதிவல்.
§ வெனினு $ துஞ்சிய வெய்யள் ¶ கொண்டியாய்க்.
** நீ கொடுப்பின். †† கொன்றிவள்.

வணங்கினை* கொடுத்தி யாயின் அணங்கிய
விண்டோர்† மாமலைச் சிலம்பன்
தண்டா ரகலமும் உண்ணுமோ பலியே.''‡ (குறுந். நசஉ)

இது, வேலனொடு உசாவுதல்.

''இன்றியாண் டையனோ தோழி குன்றத்துப்
பழங்குழி அகழ்ந்த கானவன் கிழங்கினொடு
உண்ணமை§ மதுத்துளி$ பெறூஉ நாடன்
அறிவுகாழ்க் கொள்ளும் அளவைச் செறிதொடி
எம்மில் வருகுவை நீயெனப்
பொம்மல் ஓதி நீவி யோனே.'' (குறுந். நஎக)

இது செவிலி கேட்பத் தலைவியொடு தோழி உசாவியது. பிறவு மன்ன.

ஏதீடு தலைப்பாடு என்பது—யாதானுமோர் ஏதுவை இடையிட்டுக் கொண்டு தலைப்பட்டமை கூறுதல்.

உதாரணம்:—

''காமர் கடும்புனல் கலந்தெம்மோ டாடுவாள்
.........................................................
அருமழை தரல்வேண்டில் தருகிற்கும் பெருமையளே.''
(கலித். நக)

இது, புனலிடை உதவினனெனத் தலைப்பாடு கூறியது.

''கள்ளி சுனைநீலஞ் சோபா லிகைசெயலை
அள்ளி அளகத்தின்¶ மேலாய்ந்து—தெள்ளி
இதணாற்** கடியொடுங்கா ஈர்ங்கடா யானை
உதணாற்†† கடிந்தான் உளன்.'' (திணைமாலை நூற். உ.)

இது, களிற்றிடை உதவினனெனத் தலைப்பாடு கூறியது.

''அன்னாய் வாழிவேண் டன்னை என்னை‡‡
தானு மலைந்தான் எமக்குந்தழை யாயின
பொன்வீ மணிஅரும் பினவே
என்ன மரங்கொலவர் சார லவ்வே.'' (ஐங்குறு. உ0௧)

இது, தழையும் கண்ணியுந் தந்தானென்பதுபடக் கூறியது.

உண்மை செப்பும் கிளவி யாவது—பட்டாங்கு கூறுதல்.

''அல்கன் மழை§§ பொழிந்த அகன்கண் அருவி
ஆடுகழை அடுக்கத் திழிதரு நாடன்
பெருவரை அன்ன திருவிறல் வியன்மார்பு
முயங்காது கழிந்த நாளிவள்
மயங்கிதழ் மழைக்கண் கலிழும் அன்னாய்.'' (ஐங்குறு. உஉ0)

இவ்வகை யெல்லாம் தத்தங் குடிமைக் கேற்றவழிக் கொள்க.

(பாடம்) * யணங்கினை. † விண்தோய். ‡ முண்ணுமொப்பிவியே. § கண்ணமைதூமணி. $ துணி. ¶ அளகத்து. ** யிதணற். †† யதணற். ‡‡ யென்னை கூறுதல் §§ அலங்குமழை.

வரைவுடன் பட்டோர்க் கடாவல் வேண்டியும் என்பது—தமர் வரைவுடன் பட்டமையைத் தலைவற்கு உரைக்க வேண்டியும் என்றவாறு.

உதாரணம் வந்தவழிக் காண்க

ஆங்கதன் றன்மையின் வன்புறை என்பது—அவ்வாறு வரைவுடம்பட்ட தன்மையினால் தலைவியை வற்புறுத்தற் கண்ணும் என்றவாறு.

"கூர்முள்* முண்டகக் கூர்ம்பனி மாமலர்
நூலற முத்திற் காலொடு பாறித்
துறைதொறும் பரக்குந் தூமணற் சேர்ப்பனை
யானுங் காதலென் யாயும்நனி வெய்யள்†
எந்தையுங் கொடீஇயர் வேண்டும்
அம்பல் ஊரும் அவனொடு மொழிமே." (குறுந். ௫௧)

"அம்ம வாழி தோழி நம்மொடு
சிறுதினைக் காவல னாகிப் பெரிதுநின்
மென்தோள் நெகிழவும் திருநுதல் பசப்பவும்
பொன்போல் விறற்கவின் தொலைத்த
குன்ற நாடற் கயர்ந்தனர் மணனே" (ஐங்குறு உ௩௦)

என வரும்.

பாங்குற வந்த நாலெட்டு வகையும் என்பது—பகுதிப்படவந்த முப்பத்திரண்டு வகைப்பட்ட பொருண்மையும் என்றவாறு.

அவையாவன மேற் சொல்லப்பட்ட முன்னுற வுணர்தல் வகை குறையுற வுணர்தற்கண் பெருமையிற் பெயர்த்தல், உலகுரைத் தொழித்தல், அருமையினகற்றல், பின் வாவென்றல், பேதைமையூட்டல், முன்னுறு புணர்ச்சி முறைநிறுத் துரைத்தல், அஞ்சி யச்சுறுத்தல், உரைத் துழிக் கூட்டம் எனச் சொல்லப்பட்ட எண்வகை மாயஞ் செப்பி வந்த கிழவனைப் பொறுத்த காரணம் குறித்தலாகிய இருவருமுள்வழி அவன் வர வுணர்தல், புணர்ந்தபின் அவன்வயின் வணங்கல், குறைநயப்பச் சேறல், குறைநயப்புவகை, நயந்தமைகூறல், அலராமென்றல். புணர்ச்சி வேண்டியவழிக் கூறல் பிரிவு வேண்டியவழிக் கூறல், வேளாண் பெருநெறி வேண்டிக் கூறல், அல்லகுறிப்பட்டவழிக் கூறல், ஓம்படைகூறல். இயற் பழித்து வற்புறுத்தல், ஆறின்னாமை கூறல், காப்பு மிகுதி கூறல், காதல் மிகுதிகூறல், அவன்வயிற்றோன்றிய கிளவி, ஐயச்செய்கை தாய்க்கெதிர் மறுத்தல், குறிபார்த்தல் விலக்கல், வெறிவிலக்கல், பிறன் வரைவு மறுப்பித்தல், அவன் வரைவுடம்படுத்தல், வரைவுடம் பட்டமை தலைவற்குக் கூறல், உடம்பட்டமை தலைவிக்குக் கூறி வற்புறுத்தல் என இவை.

‡ தாங்கருஞ் சிறப்பிற் றோழி மேன என்பது—இவை முப்பத்திரண்டு பொருண்மையும் தலைவிக்கு இன்றியமையாத தோழி மேலன என்றவாறு. (உ௪)

---

(பாடம்) * கூன்முள். † நையுநனிவெய்யன்.

‡ தாய்த் தாய்க் கொண்டுவருஞ் சிறப்பும் இருவர் தன்பமும் தான் உற்றாளாகக் கருதுஞ் சிறப்பும் உடைமையின் 'தாங்கருஞ் சிறப்பு' என்றான். (தொல். கள - உ௩) (நச்சி.)

௧௧௫. களவல ராயினுங் காமமேற் படுப்பினும்*
அளவுமிகத் தோன்றினுந் தலைப்பெய்து காணினுங்
கட்டினுங் கழங்கினும் வெறியென இருவரும்
ஒட்டிய திறத்தாற் செய்திக் கண்ணும்
ஆடிய சென்றுழி அழிவுதலை வரினும்
காதல் கைம்மிகக்† கனவின் அரற்றலுந்
தோழியை வினாதலுந் தெய்வம் வாழ்த்தலும்
போக்குடன் அறிந்தபின் தோழியொடு கெழீஇக்
கற்பின் ஆக்கத்து நிற்றற் கண்ணும்
பிரிவின் எச்சத்து மகள்நெஞ்சு வலிப்பினும்
இருபாற் குடிப்பொருள் இயல்பின் கண்ணும்
இன்ன வகையிற் பதின்மூன்று கிளவியொடு
அன்னவை பிறவுஞ் செவிலி மேன.

என்றது மேற் றலைவற்குந் தலைவிக்குந் தோழிக்குமுரிய கிளவியெல்லாங் கூறி இனிச் செவிலிக்குரிய கிளவி யுணர்த்துதல் நுதலிற்று.

களவலராதல் முதலாகச் சொல்லப்பட்ட பதின்மூன்று கிளவியும் அத்தன்மைய பிற கிளவியும் களவுகாலத்துச் செவிலியின் மேலன என்றவாறு. இவற்றுள் தோழியை வினாதலென வேறொரு கிளவியாக ஓதினாராயினும் அதன் முன்பு நிகழும் கிளவியெல்லாம் அவளை வினாதற் குக் காரணமாதலின் அவை யீண்டுப் பதின்மூன்றென வெண்ணப்பட்டன வென்க.

(இ - ள்.) களவல ராயினும் என்பது—தலைவன் ஒழுகலாறு புறத்தார்க்குப் புலனாகி அலர் தூற்றப்பட்ட விடத்துத் தோழியை வினவும் என்றவாறு.

உதாரணம்:—

"பாவடி உரல பகுவாய் வள்ளை
ஏதின் மாக்கள் நுவறலும் நுவல்ப
அழிவ தெவன்கொல்இப் பேதை ஊர்க்கே
பெரும்பூட் பொறையன் பேஎமுதிர் கொல்லிக்
கருங்கட் டெய்வங் குடவரை எழுதிய
நல்லியற் பாவை அன்ன ‡என்
மெல்லியற் குறுமகள் பாடினள் குறினே." (குறுந். அ௯)

காம மேற் படுப்பினும் என்பது—தலைவிமாட்டுளதாகிய வேட்கை அளவிறப்பினும் தோழியை வினவும் என்றவாறு.

"மணியில்§ திகழ்தரு நூல்போல் மடந்தை
அணியில்$ திகழ்வதொன் றுண்டு." (குறள். ௧௨௭௩)

(பாடம்) * காமமெய்ப்படுப்பினும். † கைமிகக். ‡ அன்னஇம்.
§ மணியுள். $ அணியுள்.

அளவு மிகத் தோன்றினும் என்பது—பெதும்பைப் பருவத்தளாகிய தலைவி புணர்ச்சியாற் கதிர்த்து வீங்குகின்ற முலையும் புதிதுற்ற கவினுங் கண்டவிடத்துந் தோழியை வினவும் என்றவாறு.

"கண்நிறைந்த காரிகைக் காம்பேர்தோட் பேதைக்குப்
பெண்நிறைந்த நீர்மை* பெரிது." (குறள். ௧உஎஉ)

தலைப்பெய்து காணினும் என்பது—தலைவனோடு தலைவியைத் தலைப்பெய்து காணினும் வினவும் என்றவாறு.

பெய்தென்பதனைப் பெயவெனத் திரிக்க.

"...........................................
மிடையூர் பிழியக் கண்டனென்' (அகம். ௧௫௮)

என வரும்.

†கட்டினும் என்பது—கட்டு வைப்பித்தவழியும் அவர்சொற்கேட்டுத் தோழியை வினவும் என்றவாறு,

கழங்கினும் என்பது—கழங்கு வைத்துழியும் அவர்சொற்கேட்டுத் தோழியை வினவும் என்றவாறு.

வெறியென விருவரு மொட்டிய திறத்தாற் செய்திக்கண்ணும் என்பது—செவிலியும் நற்றாயும் பொருந்தியபக்கத்துக் கண்டு வெறியாடுவாமென்றவழித் தலைவி செய்திக்கண்ணுந் தோழியை வினவும் என்றவாறு.

ஆடிய சென்றுழி அழிவு தலைவரினும் என்பது—வெறியாடிய சென்றவழி அதற்கழிவுறுமிடத்து வரினும் என்றவாறு.

அஃதாவது: "கடவுட் கற்சுனை" எனத் தொடங்கும் நற்றிணைப் பாட்டில்,

"நின்னணங் கன்மை அறிந்தும் அண்ணாந்து
கார்நறுங் கடம்பின் கண்ணி சூடி
வேலன் வேண்ட வெறிமனை வந்தோய்
கடவு ளாயினும் ஆக
மடவை மன்ற வாழிய முருகே" (நற்றிணை. ௩௪)

எனத் தோழி கூறுதல். அவ்வாறு கூறியவழியுங் காரணமென்னையென வினவும்.

காதல் கைம்மிகக் கனவி னரற்றலும் என்பது—காதன் மிகுதியால் தலைவனை யுள்ளிக் கனவின்கண் அரற்றுதற்கண்ணும் வினவும்.

தோழியை வினுதலும் என்பது—இவை நிமித்தமாகத் தோழியை வினுதலும் என்றவாறு. எனவே களவலராதல், முதற் கனவினரற்ற

---

(பாடம்) * மாமை.

† கட்டுவிச்சியும் வேலனும் தாம்பார்த்த கட்டினானும், கழங்கினானும் தெய்வத்திற்குச் சிறப்புச் செய்யாக்கால் இம்மையில் தீராதென்று கூறுதலின் அவ்விருவருந் தம்மின் ஒத்த திறம்பற்றியதனையே செய்யுஞ் செய்தியிடத்தும்: 'திறம்' என்றவதனான் அவர் வேறு வேறாகவும் கூறப்படும், (தொல். கள. உ௪. நச்சி.)

வீருக ஓதிய வொன்பது கிளவியும் தோழியை வினுதற்பகுதி. அவை நிகழாதவழி வினுதலில்லை. அதனுல் தோழியை வினுதலென ஒரு கிளவியாக எண்ணற்க.

தெய்வம் வாழ்த்தலும் என்பது — இவ்வாறு பட்டதெனத் தோழி யுரைத்தவழி யிதனை நற்றாய்க்கும் தந்தைக்கும் கூறலாற்றாதாள் தெய்வத்தை வேண்டிக்கோடல்.

போக்குடன் அறிந்தபின்...நிற்றற் கண்ணும் என்பது—தலைவனுடன் போயினுள் என்று அறிந்தவழித் தானுந் தோழியோடு கெழுமி இல்லத் தின்க ணிறுத்தற் கண்ணும் என்றவாறு.

''பறைபடப் பணிலம் ஆர்ப்ப இறைகொள்பு
தொன்மூ தாலத்துப் பொதியில் தோன்றிய
நாலூர்க் கோசர் நன்மொழி போல
வாயா கின்றே தோழி ஆய்கழற்
சேயிலை வெள்வேல் விடலையொடு
தொகுவளை முன்கை மடந்தை நட்பே.'' (குறுந். கரு)

பிரிவி னெச்சத்து மகணெஞ்சு வலிப்பினும் என்பது—தலைவன் வரையாது பிரிந்தவழி யொழிந்த தலைமகள் அலராகுதலு மின்றி வேறு பாடுமின்றி ஒரு மணைப்பட்டிருந்த வுள்ளக்கருத்தை யறிந்தவழியும் என்றவாறு. வலித்தல் என்பது தெளிதல்.

இருபாற் குடிப்பொரு ளியல்பின்கண்ணும் என்பது — தலைவன் குடிமை தன் குடிமையோ டொக்குமென வாராய்தற்கண்ணும் என்றவாறு.

குடியென்னுது பொருள் என்றதனுல் பொருளுங் குணமும் ஆயப் பெறு மென்றவாறு.

அன்னவை பிறவும் என்றதனுன்,

''நாற்றம் பெற்று நிலைப்புக் காண்டல்
உண்டியிற் குறைதல் உடம்புநனி சுருங்கல்
கண்துயில் மறுத்தல் கோலஞ்செய் யாமை''

முதலாயின கொள்க. இவையும் வினுதற்கேதுவாம். இவற்றிற் கெல்லாஞ் செய்யுள் வந்தவழிக் காண்க. (உரு)

கக௪. *தாய்க்கும் வரையார் உணர்வுடம் படினே.

இது நற்றாய்க்கு உரியதோர் இலக்கணமுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) செவிலியுணர்வோடு உடம்பட்ட வுள்ளத்தளாயின், நற்றாய்க்கும் மேற்சொல்லப்பட்டவை யெல்லாம் வரையப்படா வென்றவாறு.†

---

*'தாய்க்கும்' என்றார், இவட்கு அத்துணை பயின்றுவாரா என்றற்கு. அது நற்றாய் இல்லறம் நிகழ்த்துங் கருத்து வேறு உடைமையின் உற்று நோக்காள் செவிலியே தலைவியை உற்றுநோக்கி ஒழுகுவாளாதலின் இலக்கணமுண்மையின் இலக்கியம் வந்துழிக்காண்க. (தொல். கள. உகு. நச்சி.) (பாடம்) † வரையப்பட்ட தென்றவாறு.

உணர்வுடம் படுதலாவது—தலைவியை யுற்று நோக்கம் நிகழ்ந்தவழி யன்றித்* தானும் செவிலியைப்போல உற்று நோக்காளென்று கொள்க. இப்பொருள்மேற் கிளவி வருவன உளவேனுஞ் செவிலியைப்போல வொருப்பட்ட வுள்ளத்தளாயின் அவள்கண்ணும் இக்கிளவியெல்லாம் நிகழும் என்றவாறு. உடம்படாதவாறு என்னை யெனின், யாரிடத்தும் மக்களை வளர்ப்பார் செவிலியராகலானும் தமக்குத் தம் இல்லறநிலைக்குக் கடவ பகுதியான அறனும் பொருளும் இன்பமும் வேண்டுதலானும் கூற்றொடு வேறுபாடு தோன்றாது. (உசு)

ககரு. கிழவோன் அறியா அறிவினள் இருளேன்
மையறு சிறப்பின் உயர்ந்தோர் பாங்கின்
ஐயக் கிளவியின் அறிதலும்† உரித்தே.

இது நற்றாயும் செவிலியும் துணியுமாறு கூறுகின்றது.

(இ - ள்.) கிழவோன் அறியா அறிவினள் என்பது—தலைமகன் அறியா அறிவினையுடையவள் என்றவாறு. எனவே ஒருபக்கம் எதிர்காலம் நோக்கிக் கூறினார்‡ போலத் தோன்றும்; ஒருபக்கம் இறந்தகாலந் தோன்றும். அவன் அறியாத அறிவுரிமை பூண்டு மயங்குதல், அவள் எத்துணையும் மயக்கமிலள் எனவும் அவன் பொருட்டு மயங்கினாள்§ எனவும்படக் கூறுதல், தலைவன் அறியாத அறிவினையுடையவள் எனக் குற்றமற்ற சிறப்பினையுடைய உயர்ந்தோர்மாட்டு உளதாகிய ஐயக்கிளவியால் புணர்ப்பறிதலும் உரித்து, செவிலிக்கும் நற்றாய்க்கும் என்றவாறு.

இஃது எற்றினான் ஆயிற்று எனக் குற்றமற்ற தவவரை$ வினையவழி அவர் இவ்வாறு பட்டதென மெய்கூறுதலுந் தகுதியன்றாம்: பொய் கூறுதலும் தகுதியன்றாம். ஆதலால் ஐயப்படுமாறு சில கூறியவழி, அதனானே யுணர்ப என்றவாறு. கிழவோனறியா வறிவினளென்றவாறு கூறியவழிக் கிழவோனெதிர்ப்பட ¶...இறந்த காலத்துள் தலைவன் உளன் என்றவாறாம். (உஎ)

ககசு. தன்னுறு வேட்கை கிழவன்முற் கிளத்தல்
எண்ணுங் காலைக் கிழத்திக் கில்லைப்
பிறநீர் மாக்களின் அறிய ஆயிடைப்**
பெய்ந்நீர் போலும் உணர்விற் றென்ப.

இது, தலைவிக்கு உரியதோர் இயல்புணர்த்துதல் நுதலிற்று.

---

(பாடம்) * நோக்காதிகழ்ந்தவழியன்றித். † கிளவி அறிதலும்.
‡ கூறினாள். § அவன் எத்துணையு மயக்கமில னென்பது மவள் பொருட்டு மயங்கினன். $ தவவரை.
¶ கிழவோனெதிர்ப்பட என்றிருத்தலமையும்.
** வாயுடைப்.

(இ - ள்.) தலைவி தனது வேட்கையைக் கிழவன் முன்பு சொல்லுதல் வினைக்குங் காலத்துக் கிழத்திக்கு இல்லை. அங்ஙனம் சொல்லாத விடத்தும் புதுக்கலத்தின்கண் பெய்த நீர்போலப் புறம்பொசிந்து காட்டும் உணர்வினையுமுடைத்து அவ்வேட்கை என்றவாறு.

எனவே, குறிப்பின் உணரநிற்கும்* என்றவாறு. தலைவன்மாட்டுக் கூற்றினானும் நிகழப்படுமென்று கொள்ளப்படும். (உ௮)

௧௧௭. காமக் கூட்டந் தனிமையிற் பொலிதலின்
தாமே தூதுவ ராகலும் உரித்தே.

என்றது, களவிற்புணர்ச்சிக் குரியதொரு வேறுபாடுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) மேற் சொன்னவாற்றால் பாங்கனுந் தோழியு நிமித்தமாகக் கூடுதலேயன்றித் தாமே தூதுவராகிய கூட்டங்கள் நிகழப்பெறும்; அது சிறப்புடைத் தாதலால் என்றவாறு.

எனவே, பாங்கற் கூட்டம் தோழியிற் கூட்டம் என்பன நியம மில்லை; யார்மாட்டும் என்றவாறும். தனிமையிற் பொலிதலின் என்ற மையான் இது மிகவும் நன்று. (உ௯)

௧௧௮. அவன்வரம் பிறத்த லறந்தனக் கின்மையின்
களஞ்சுட்டுக் கிளவி கிழவிய தாகுந்
தான்செலற் குரியவழி யாக லான.

இது சொல்லப்பட்ட கூட்டத்திற்குக் குறியிடம் கூறுவானுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) தலைவன் இயற்கைப்புணர்ச்சி புணர்ந்த பின்பு, தலைவனெல்லையை மறத்தல் தலைவிக்கு அறமாக வின்மையானே குறியிடம் கூறுதல் தலைமகள் தாம்; அது தான் சேறற் குரிய இடமாதலான் என்றவாறு.

எனவே, இத்துணைக்கூறின் மிகையன்று என்றவாறும். (௩0)

௧௧௯. தோழியின் முடியும் இடனுமார் உண்டே.

இது, தோழியிற் கூட்டத்திற் காயதொரு சிறப்புவிதி உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) மேல், 'காமக்கூட்டந் தனிமையிற் பொலிதலிற் றாமே தூதுவ ராகலும் உரித்' தெனக் கூறிப்போந்தார்; அவ்வாறன்றி மேற் சொல்லப்பட்ட இயற்கைப்புணர்ச்சியாவது தோழியின் முடியுமிடத்து ஒரிடத்து உண்டு என்றவாறு.

* உணராநிற்கும்.

"அன்பொடு புணர்ந்த வைந்திணை" (இறையனார் களவியல்-க) என்றதனால் யாண்டும் உள்ளப் புணர்ச்சியான் வேட்கைமீதூர்ந்த வழியே தோழியின் முடியப் பெறுவது என்று கொள்க. அல்லாக்கால் பெருந்திணைப்பாற்படும். (௧௧)

௧௨௦. *முந்நா ளல்லது துணையின்று கழியாது
அந்நா ளகத்தும் அதுவரை வின்றே

இது, பாங்கற் கூட்டம் நிகழுமிடம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) மேல், தோழியிற் கூட்டத்தின் விகற்பங் கூறினாராகலின், ஈண்டுத் துணை யென்றது பாங்கன் ஆயிற்று. மூன்று நாளல்லது துணையின்றிக் களவிற் புணர்ச்சி செல்லாது; அந்நாளகத்தும் துணையை நீக்கவும் படாது என்றவாறு.

எனவே, எதிர்ப்பட்ட † தலைவன் இயற்கைப் புணர்ச்சி புணர்வதன் முன் பாங்கற்கு உணர்த்தவும் பெறும் என்றவாறு.

உதாரணம் மேற்காட்டப்பட்டது. (௧௨)

௧௨௧. பன்னூறு வகையினுந் தன்வயின் வரூஉம்
நன்னய மருங்கின் நாட்டம் வேண்டலில்
துணைச்சுட்டுக் கிளவி கிழவிய தாகுந்
துணையோர் கரும மாத லான.‡

இது, தலைவிக்கு உரியதோர் இயல்பு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) பன்னூறு வகையினும் என்பது - பலவகையானும் என்றவாறு. நூறு, பத்து, ஆயிரம் என்பன பல்பொருட் பெயர்.

தன்வயின்வரூஉ... மாதலான என்பது—தன்னிடத்து வரும் நல்ல நயப்பாட்டுப் பக்கத்தினை ஆராய்தல் தலைவன் மாட்டு வேண்டுமாதலால்,

* இது, முந்நாளைப்பிரிவாகிய பூப்பிடைப்பிரிவு வந்துழித் தலைவி கூறியது. இனி அல்லகுறிப்பட்டுழி ஒரு நாளும் இரண்டு நாளும் இடையீடாம் என்றுணர்க. பூப்பு நிகழாத காலத்துக் களவொழுக்கம் பூப்பு நிகழ்காலம் வரையப்பட்டதென்று உரைப்பாரும் உளர். இவ்விதி அந்தணர்க்குக் கூறியதன்று. அரசர் வணிகர் ஆதியவர்க்குச் சிறுபான்மையாகவும் ஏனை வேளாளர் ஆயர் வேட்டுவர் முதலியோர்க்குப் பெரும்பான்மையாகவும் கூறிய விதியென்றுணர்க. என்னை? பூப்பு நிகழுங் காலத்து வரையாது களவொழுக்கம் நிகழ்த்தினோர்க்கு. 'அந்தரத் தெழுதிய எழுத்தின் மான, வந்த குற்றம் வழிகெட ஒழுகலும்' (தொல். கற்பி. ௫) என்பதனாற் பிராயச்சித்தம் பெறுதும். இதனானே அந்தணர் மகளிர்க்கும் பூப்பெய்தியக்கால் அறத்தொடு நின்றும் வரைதல் பெறுதும். (தொல். கள. ௩௧. நச்சி.)

(பாடம்) † எதிர்பட்ட ‡ மாகலான.

துணையைச் சுட்டிக்கூறலுறும் சொல் தலைமகளதாகும்; தான் கூறும் கருமம் துணையோராற் செய்யப்படும் கருமமாதலான் என்றவாறு.

எனவே, தலைமகன்* களவுகாலத்துப் பாங்கற்கு உற்றதுரைத்த பின்பு பாங்கனைச் சுட்டி யாது செய்வாமெனக் கூறப்பெறும் என்றவாறாயிற்று. (௩௩)

கஉஉ. ஆய்பெருஞ் சிறப்பின் அருமறை கிளத்தலின்
தாயெனப் படுவாள்† செவிலி யாகும்.

இது, செவிலிக்கு உரியதொரு சிறப்பு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) நல்ல பெரிய சிறப்பினையுடைய அறிதற்கரிய மறைப்பொருள் யாவற்றையுங் கூறும் கடப்பாடுடையளாதலின் தாய் எனப்படுவாள் செவிலியாகும் என்றவாறு.

நற்றாய் இத்துணைச் சிறப்பிலள் என்றவாறு. இதனாற் பயன் களவுக் காலத்தைச் சொ......செவிலித்தாய்க்கும் கைத்தாய்க்கும் பொதுவாயினும், தாயென்று வேண்டப்படுவாள் செவிலி என்றறிவித்தல். (௩௪)

கஉ௩. தோழி தானே செவிலி மகளே.

இது, தோழிக்கு உரியதொரு சிறப்பு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) களவுக்காலத்தும் இன்றியமையாளாகத் தலைவியால் வேண்டப்பட்டாள் செவிலிமகள் என்றவாறு.

எனவே, பயின்றா ரெல்லாருந் தோழியராகார். அருமறை கிளக்கப் படுதலான் உடன் முலையுண்டு வளர்ந்த செவிலி மகளே தோழி எனப்படுவாள் என்றவாறு. அருமறை கிளத்தல் என்பதனை யீண்டு வருவிக்க.

கஉ௪. சூழ்தலும் உசாத்துணை நிலைமையிற் பொலிமே.

இது, தோழிக்கு உரியதோர் இயல்பு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) மேற்சொல்லப்பட்ட தோழி தான் சூழ்தற்கும் தலைவிசூழ்ச்சிக்கு உசாத்துணையாகியும் வரும் நிலைமையாற் பொலிவுபெறும் என்றவாறு.

எனவே, செவிலிமகள் என்னுந் துணையாற் பொலிவுபெறுள்; என்றும் தோழியாவாள் செவிலிமகளாதலேயன்றிச் சூழவும் உசாத்துணையாகவும் வல்லள் ஆதல்வேண்டும் என்றவாறு. (௩௫)

செய்யுள் மேற்காட்டப்பட்டன.

கஉ௫. குறையுற உணர்தல், முன்னுற உணர்தல்
இருவரும் உள்வழி அவன்வர வுணர்தலென
மதியுடம் படுதல்‡ ஒருமூ வகைத்தே.

இது தலைவன் புணர்ச்சி யுண்மை தோழி அறியுந் திறன் பாகுபடுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

* தலைமகள் † படுவோள். ‡ படுத்தல்.

(இ - ள்.) தலைவன் குறையுற வுணர்தலும் அவன் குறையுருவழித் தலைவி குறிப்புக்கண்டு உணர்தலும் தானும் தலைவியுங் கூடியிருந்துழித் தலைவன் வந்தமைகண்டு உணர்தலும் என மூவகைத்துத் தோழி அறிவுடம்படுதற்கண்ண என்றவாறு.

மதியுடம்படுதல் எனினும் புணர்ச்சியுணர்தல் எனினும் ஒக்கும். இம்மூன்றினும் ஒன்று கண்டுழி அவரவர் குறிப்பினாற் புணர்ச்சியுணரும் என்றவாறு. 'குறையுணர்தல்' முன்வைத்தார் நன்கு புலப்படுதலின். 'முன்னுறவுணர்தல்' அதன்பின் வைத்தார், தலைவி வேறுபாடு கண்டு பண்டையிற்போலாள் என்னும் நிகழ்ச்சியான் முற்றத் துணிவின்மையின், 'இருவரு முள்வழி யவன் வரவுணர்தல்' அதன் பின் வைத்தார். ஆண்டுப் புதுவோன்போலத் தலைவன் வருதலானும் தலைவி கரந்த உள்ளத்தளாய் நிற்குமாதலானும் அத்துணைப் புலப்பாடின்மையின், அக்கருத்தினானே மேற்சொல்லப்பட்ட தோழிகூற்று மூவகையாகப் பொருள் உரைத்ததென்று கொள்க. (கஎ)

கஉகூ. அன்ன வகையான் உணர்ந்தபின் அல்லது
பின்னிலை முயற்சி பெறாஅள்என* மொழிப.

இதுவும் தோழிக்கு உரியதொரு திறன் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) மேற்சொல்லப்பட்ட கூறுபாட்டான் இருவர் மாட்டும் அன்புடைமை உணர்ந்தபின் அல்லது வழிபாட்டு நிலைமையாற் கூட்டத்திற்கு முயலப்பெறாள் தோழி என்றவாறு.

அஃதேல், உள்ளப்புணர்ச்சியானின்று மெய்யுறாது கூட்டத்திற்கு முயல்வாரர் உளர். ஆயின், அஃதெற்றாற்பெறும் எனின் ஆண்டும் இருவர் மாட்டுளதாகிய அன்புடைமையான் மனநிகழ்ச்சியுளவாக அந்நிகழ்ச்சி கண்டுழியும் முயலப்பெறுமென்று கொள்க. அதனானேயன்றே 'முன்னுறவுணர்தல்' என்னும் சூத்திரத்தினும் 'புணர்ச்சியுடம்படுதல்' என்னாது 'மதியுடம்படுத லொரு மூவகைய' எனப் பொதுப்பட ஓதுவாராயிற் றென்க. அவ்வன்பினான் வருநிகழ்ச்சி யுள்ளவழியும் இவ்விடமூன்றினும் காலமுண்மை அறியலாகும். (கஅ)

கஉஎ. முயற்சிக் காலத் ததற்பட நாடிப்
புணர்த்த லாற்றலும் அவள்வயி னான.

இதுவும் அது.

(இ - ள்.) தோழி வழிமொழிந்து முயலுங்காலத்து அவ்வினைவின்கட்படுந்திறன் ஆராய்ந்து புணர்த்தலைச் செய்யும் அவளிடத்து என்றவாறு.

அஃதாவது, 'இன்னுழிச் செல்' எனவும், 'இன்னுழி வா' எனவும், தலைவியை ஆயத்துணின்றும் பிரித்துத் தனி நிறுத்திப் பட்டாங்கு கூறியும் பிறவாற்றானும் ஆராய்ந்து கூட்டுதல்.

இவ்வைந்து சூத்திரத்தானுந் தோழிக்கு உரிய மரபு உணர்த்தியவாறு காண்க. (கக)

* பெறுனென.

கஉஅ. குறியெனப் படுவ திரவினும்* பகலினும்
அறியக் கிளந்த† ஆற்ற தென்ப.

என்றது, மேல் 'களஞ்சுட்டுக் கிளவி கிழவியதாகும்' என்றார், அதற்கு இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) குறி என்று சொல்லப்படுவது இரவினும் பகலினும் இருவரும் அறியச் சொல்லப்பட்ட இடத்தை யுடைத்து என்றவாறு.

எனவே, இரவிற்குறி பகற்குறி என இருவகைப்படும் என்பது கொள்ளப்படும். (சO)

கஉகூ இரவுக் குறியே இல்லகத் துள்ளும்
மனையோர்‡ கிளவி கேட்கும்வழி யதுவே
மனையகம் புகாஅக்§ காலை யான.

என்றது, இரவுக்குறிக்கு இடமுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) இரவுக்குறியாம் இடமே இல்லகத்துள் மனையகம் புகாவிடத்துக்கண் மனையோர் கிளவிகேட்கும் அணிமைத்தாம் என்றவாறு;

எனவே, மனைக்கும் எயிற்கும் நடுவணதோரிடம் என்று கொள்ளப் படும். (சக)

கநO. பகற்புணர் களனே புறனே மொழிப
அவளறி வுணர வருவழி யான,

என்றது, பகற்குறி யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) பகற்குறியாகிப் புணருமிடம் எயிற்புறன் என்று சொல்லுவர்; ஆண்டுந் தலைமகள் அறிவுற்றுவரும் இடனாதல் வேண்டும் என்றவாறு. (சஉ)

கநக. அல்லகுறிப் படுதலும் அவள்வயின் உரித்தே
அவன்குறி$ மயங்கிய அமைவொடு வரினே.

---

* இரவு களவிற்குச் சிறத்தலின் முற்கூறினர். (தொல், கூ-கநகூ. நச்சி.)

(பாடம்.) †: அறியத் தோன்றும். ‡ மனையோள்.

§ அகமனையிற் புகாக்காலை எனவே இரவுக்குறி அங்ஙனம் சிலநாள் நிகழ்ந்த பின்னர் அச்சமின்றி உள்மனையிற் சென்று கூடவும்பெறும் என்பதும் கூறியதாம். (தொல். கO-சO. நச்சி.)

$ வெறித்தல் வெறியாயினாற்போலக் குறித்தல் குறியாயிற்று.

அக்கருவி புள்ளொலிப்படுத்தல் முதலியன. (தொல். களா. சஉ. நச்சி.)

இதுவுமது.

(இ - ள்.) அல்லகுறிப்படுதலுந் தலைமகட்கு உரித்து : தலைவன் செய்த குறிமயங்கின* பொருத்தத்தொடு வரின் என்றவாறு.

உதாரணம் மேற்காட்டப்பட்டது.

மயங்கிய அளவு ஆவது—அவன் செய்யும் குறியோடமைவுடையன. (சங)

கஙஉ. ஆங்காங் கொழுகும் ஒழுக்கமும் உண்டே
ஓங்கிய சிறப்பின் ஒருசிறை யான.

இதுவுமது.

(இ - ள்.) அவ்வவ்விடத் தொழுகும் ஒழுக்கமுந் தலைவிமாட்டு உண்டு, ஓங்கிய சிறப்பினையுடைய ஒருபக்கத்து என்றவாறு.

ஒருசிறை யென்றது மனத்தானும் மொழியானும் மெய்யானும் கற்புடை மகளிர் ஒழுகும் ஒழுக்கத்தின் மனத்தான் ஒழுகும் ஒழுக்கமும் உண்டு என்றவாறு. (சச)

கஙங. மறைந்த ஒழுக்கத் தோரையும் நாளுந்
துறந்த ஒழுக்கங்† கிழவற் கில்லை.

என்றது, தலைவற்கு உரிய இயல்பு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) களவொழுக்கத்து முகூர்த்தமும்‡ நாளும் துறந்தொழுகும் ஒழுக்கம் தலைவற்கு இல்லை என்றவாறு.

என்றதனன், ஆண்டு அறத்தின் வழுவினனல்லன் தலைவிமாட்டுத் தலையளி குறைதலான் என்றவாறு. (சரு)

கஙச. ஆறின தருமையும் அழிவும் அச்சமும்
ஊறும் உளப்பட அதனோ ரற்றே.§

இதுவுமது.

(இ - ள்.) நெறியினது அருமையும் மனன் அழிவும் அஞ்சுதலும் இடையூறுந் தலைவன்மாட்டு நிகழா என்றவாறு. (சசா)

கஙரு. தந்தையுந் தன்னையும் முன்னத்தின் உணர்ப.

என்றது, தந்தையும், தன்னையரும் களவு உணருமாறு உணர்த்துதல் நுதலிற்று.

---

(பாடம்) *தலைவி செய்த குறிமயங்கிப்.

† ஒழுக்கமாவது சிலமாதலின் சிலம் காரணத்தால் துறப்பது தீதாகிய இராசியும் நாளும் என்பது பெற்றும், நாளாவது அவ்விராசி மண்டிலம் முழுவதும் (தொல். கள. சச. நச்சி.)

(பாடம்) ‡ முழுத்தமும். §ரன்ன.

(இ - ள்) தந்தையரும் தன்னையரும் குறிப்பின் ,உணர்ப என்றவாறு.

எனவே, கூற்றினன் உரைக்கப்பெறுர் என்றவாறும். (௬௭)

௩௩௬. தாய் அறிவுறுதல் செவிலியோ டொக்கும்.

என்றது, நற்றாய்க்கு உரியதொரு மரபுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) நற்றாய் களவொழுக்கம் அறிவுறுதல் செவிலியோடொக்கும் என்றவாறு செவிலி கவலுந்துணைக் கவலுத லல்லது தந்தையையும் தன்னையன்மாரையும்போல வெகுட லிலள் என்றவாறு. அவர் வெகுள்வரோ எனின்,

"காமர் கடும்புனல்" எனத்தொடங்கும் கலித்தொகைப் பாட்டினுள்,

"அறத்தொடு நின்றேனைக் கண்டு திறப்பட
என்னையர்க் குய்த்துரைத்தாள் யாய்" (கலித். ௩௯)

எனத் தாய்வெகுளாமை காணப்பட்டது.

" அவரும் தெரிகணை நோக்கிச் சிலைநோக்கிக் கண்சேந்து
ஒருபக லெல்லாம் உருத்தெழுந் தாறி" (கலித். ௩௯)

என்றதனுன் வெகுட்சி பெற்றும். (௬௮)

௩௩௭. அம்பலும் அலருங் களவுவெளிப் படுத்தலின்
அங்கதன் முதல்வன் கிழவ னாகும்.

என்றது, களவு வெளிப்படுப்பார் அவர்* என்பது உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அம்பல் என்பது முகிழ்த்தல். அஃது ஒருவரொருவர் முகக்குறிப்பினுற் றேற்றுவித்தல். அலராவது சொல்லுதல். அதனானே இவை இரண்டும் களவினை வெளிப் படுத்தலின் அதற்குக் காரணமாவான் தலைவன் என்றவாறு. என்னை, அவனை யறிந்துழியல்லது இவை நிகழாமையின். தலைவி வேறுபாட்டான் ஆகாதோ எனின், ஆண்டு எற்றினுன் ஆயிற்று. என ஐயம் நிகழ்தலல்லது துணிவு பிறவா தாம் என்று கொள்க.

௩௩௮. வெளிப்பட வரைதல் படாமை வரைதல் என்று
ஆயிரண் டென்ப வரைதல் ஆறே.

இது, வரையும் பகுதி உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) களவு வெளிப்பட்டபின் வரைதலும் களவு வெளிப்படாமை வரைதலும் என அவ்விரண்டென்று சொல்லுவர் வரையும் நெறி என்றவாறு.

---

(பாடம்) *இருவர்.

இதனால் சொல்லியது இருவாற்றானும் அறன் இழுக்காதென்ற வாறு. அஃது இழுக்காதவாறு வருகின்ற சூத்திரத்தான் உணர்க. (ருo)

கரு௬. வெளிப்படை தானே கற்பினொ டொப்பினும்
ஞாங்கர்க் கிளந்த மூன்றுபொரு ளாக
வரையாது *பிரிதல் கிழவோற் கில்லை.

இது, தலைவற்கு உரியதோர் இயல்பு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்.) களவு வெளிப்படுதல் கற்பினோடொப்பினும் மேற்சொல்லப்பட்ட மூன்று பொருளாக வரையாது பிரிதல் கிழவோற்கு இல்லை என்றவாறு.

அவையாவன முற்கூறிய ஓதற்பிரிவும், பகைவயிற்பிரிவும், தூதிற் பிரிவும். எனவே பொருள்வயிற் பிரிதலும் வேந்தர்க்குற்றுழிப் பிரிதலும் காவற்பிரிதலும் நிகழப்பெறும் என்றவாறும். (ருக)

மூன்றாவது களவியல் முற்றிற்று.†

---

*ஓதுதற்கு ஏவுவார் இருமுதுகுரவராதலின், அவர் வரையாமற் பிரிக என்றார். பகைவென்று திறைகோடற்குப் பிரியுங்கால் அன்புறு கிழத்தி துன்புற்றிருப்ப வரையாது பிரிதலின்று. இது தூதிற்கும் ஒக்கும். மறைவெளிப்படுதல் கற்பென்று செய்யுளியலுட் கூறுதலின், இதனை இவ்வோத்தின் இறுதிக்கண்வைத்தார். (தொல். கள-ருo. நச்சி.)

(பாடம்) † முடிந்தது. நடேசன் துணை. உ.

[illegible] — [illegible]
[illegible]
[illegible] 243

[illegible] — [illegible]
[illegible]
B.S. [illegible] 247

நான்காவது

# கற்பியல்

இவ்வோத்து என்னபெயர்த்தோ வெனின், கற்பியல் என்னும் பெயர்த்து. கற்புக்கு இலக்கணம் உணர்த்தினமையாற் பெற்ற பெயர். கற்பென்பது யாதோவெனின், அஃதாமாறு இச் சூத்திரத்தில் விளங்கும்.

கசo. கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்கொள் வதுவே.

என்பது சூத்திரம்.

இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின் கற்பிலக்கணம் கூறுதல் நுதலிற்று.

(இ - ள்.) கற்பென்று சொல்லப்படுவது, கரணத்தொடு பொருந்திக் கொள்ளுதற்குரிய மரபினையுடைய கிழவன் கொள்ளுதற்குரிய மரபினையுடைய கிழத்தியைக் கொடுத்தற்குரிய மரபினை யுடையார் கொடுப்பக் கொள்வது என்றவாறு.

'கொளற்குரி மரபின்' என்பதனைக் 'கிழத்தி' என்பதனோடுங் கூட்டியுரைக்க.

களவின்கண் ஒத்தாரிருவர் வேட்கை மிகுதியாற் கூடி ஒழுகிய வழிக் கரணத்தின் அமையாது இல்லறம் நடத்தலாமோ எனின் அஃதாகா தென்றற்குக் 'கரணமொடு புணர' என்றார். கரணம் என்பது—வதுவைச் சடங்கு. 'கொளற்குரி மரபிற் கிழவோன்' என்றதனால் ஒத்தகுலத்தானும் உயர்ந்த குலத்தானும் என்று கொள்க. 'கொளற்குரி மரபிற் கிழத்தி' யென்றதனால், ஒத்தகுலத்தாளும் இழிந்த குலத்தாளும் என்று கொள்க. 'கொடைக்குரி மரபினோர்' என்றதனால், தந்தையும் தாயும் தன்னையரும் மாதுலனும் இவரில்லாதவழிச் சான்றோரும் தெய்வமும் என்று கொள்க. கொடுப்பக் கொள்வது கற்பு என்றமையால், அது கொடுக்குங்கால், களவு வெளிப்பட்ட வழியும், களவு வெளிப்படாத வழியும், மெய்யுறு புணர்ச்சியின்றி உள்ளப்புணர்ச்சியான் உரிமைபூண்ட வழியும் கொள்ளப் பெறும் எனக்கொள்க. களவியற் சூத்திரத்துள்,

"இன்பமும் பொருளு மறனு மென்றாங்
கன்பொடு புணர்ந்த" (களவியல். க)

என்பதனைத் தந்துரைத்து. ஐந்திணை மருங்கிற் கற்பெனப்படுவது எனக் கூட்டுக.

அஃதேல், கொடுப்பக் கொள்வது கற்பாயின் பிரமம் முதலிய எண் வகையும் கொள்க. 'கொடுப்போ ரின்றியும் கரண முண்டே—புணர்ந் துடன் போகிய காலை யான' என்னும் இது கற்பாகுமோ எனின், அவையும் கற்பாதல் ஒக்குமேனும் கந்திருவம்போல ஒத்த அன்புடையார் ஆதல் ஒருதலையன்மையின் கைக்கிளை பெருந்திணைப்பாற்படும். ஈண்டு ஐந்திணை தழுவிய அகத்திணையே களவு கற்பு எனப் பகுத்தார் என்று கொள்க. (க)

கசக. கொடுப்போர் இன்றியுங் கரண முண்டே
புணர்ந்துடன் போகிய காலை யான.

இது மேலதற்கொரு புறனடை.

(இ - ள்.) கொடுப்போரின்றியும், கரண நிகழ்ச்சி உண்டு; புணர்ந்துடன் போகிய காலத்து என்றவாறு.

எனவே கற்பிற்குக் கரண நிகழ்ச்சி ஒருதலையாயிற்று. இதனானே கொடுப்போ ரில்வழியும் கரணநிகழ்ச்சி உண்மையும் ஒழுக்கக் குறைபாடு இன்மையும் கொள்க.

"பறைபடப் பணிலம் ஆர்ப்ப இறைகொள்பு
தொல்மூ தாலத்துப் பொதியில் தோன்றிய
நாலூர்க் கோசர் நன்மொழி போல
வாயா கின்றே தோழி யாய்கழற்
சேயிலை வெள்வேல் விடலையொடு
தொகுவளை முன்கை மடந்தை நட்பே" (குறுந். கரு)

இதனுள் விடலையொடு மடந்தைநட்பு பறைபடப் பணிலம் ஆர்ப்ப இறைகொண்டு நாலூர்க் கோசர் நன்மொழிபோல வாயாயிற்று எனச் செவிலி நற்றாய்க்குக் கூறினமையானும், விடலை எனப் பாலை நிலத்திற் குரிய தலைவன் பெயர் கூறினமையானும் கொடுப் போரின்றியும் கரணம் நிகழ்ந்தவாறு காண்க. (உ)

கசஉ. மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணங்
கீழோர்க் காகிய காலமும் உண்டே.

இதுவுமது.

(இ - ள்.) மேற்குலத்தாராகிய அந்தணர் அரசர் வணிகர் என்னும் மூன்று வருணத்தார்க்குப் புணர்த்த கரணம் கீழோராகிய வேளாண்மாந்தர்க்கும் ஆகிய காலமும் உண்டு என்றவாறு.

இதனாற் சொல்லியது, முற்காலத்துக்கரணம் பொதுப்பட நிகழ்தலின் எல்லார்க்கும் ஆம் என்பதும் *பிற்காலத்து வேளாண்மாந்தர்க்குத்

* முற்காலத்து நான்கு வருணத்தார்க்கும் கரணம் ஒன்றாய் நிகழ்ந்தது என்பதாம். அஃது இரண்டாம் ஊழி தொடங்கி வேளாளர்க்குத் தவிர்ந் தது என்பதூஉம், தலைச்சங்கத்தாரும் முதனூலாசிரியர் கூறிய முறையே கரணம் ஒன்றாகச் செய்யுள் செய்தார் என்பதூஉம் கூறியவாறாயிற்று. உதாரணம் இக்காலத்து இன்று.

(தொல். பொருள் - கசச. நச்சி.)

தவிர்ந்ததெனவுங் கூறியவாறு போலும். அஃதாமாறு தருமசாத்திரம் வல்லாரைக்கொண் டுணர்க. (௩)

௧௪௩. போய்யும் வழுவுந் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர்* கரணம் என்ப.

என்றது, கரணமாகியவாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) பொய் கூறலும் வழுஉப்பட வொழுகலும் தோன்றியபின்னர் முனிவர் கரணத்தைக் கட்டினார் என்று சொல்வர் என்றவாறு.

இரண்டுந் தோன்றுவது இரண்டாம் ஊழியின்கண் ணாதலின், முதலூழியிற் கரணமின்றியே† இல்வாழ்க்கை நடந்ததென்பதூஉம் இவை தோன்றிய பின்னர்க் கரணந் தோன்றின தென்பதூஉம் கூறியவாறாயிற்று. பொய்யாவது செய்ததனை மறைத்தல். வழுவாவது செய்த தன்கண் முடிய நில்லாது தப்பி யொழுகுதல்.‡ கரணத்தொடு முடிந்த காலையின் அவை யிரண்டும் நிகழாவா மாதலாற் கரணம் வேண்டுவதாயிற்று. (௪)

௧௪௪. கரணத்தின் அமைந்து முடிந்த காலை
நெஞ்சுதளை அவிழ்ந்த புணர்ச்சிக் கண்ணும்
எஞ்சா மகிழ்ச்சி இறந்துவரு பருவத்தும்
அஞ்ச வந்த உரிமைக் கண்ணும்
நன்னெறிப் படருந் தொன்னலப் பொருளினும்
பெற்ற தேஎத்துப் பெருமையின் நிலைஇக்§
குற்றஞ் சான்ற பொருளெடுத் துரைப்பினும்
நாமக் காலத் துண்டெனத் தோழி
ஏமுறு கடவுள் ஏத்திய மருங்கினும்
அல்லல் தீர ஆர்வமொ டளைஇச்$
சொல்லுறு பொருளின் கண்ணுஞ் சொல்லென
ஏனது சுவைப்பினும் நீகை தொட்டது
வானோர் அமிழ்தம் புரையுமால் எமக்கென
அடிசிலும் பூவுந் தொடுத்தற்¶ கண்ணும்
அந்தணர் திறத்துஞ் சான்றோர் தேஎத்தும்
அந்தமில் சிறப்பிற் பிறர்பிறர் திறத்தினும்

*இவ்வாசிரியர் ஆதி ஊழியின் அந்தத்தே இந்நூல் செய்தலின் முதனூல் ஆசிரியர் கூறியவாறே களவு நிகழ்ந்த பின்னர்க் கற்பு நிகழுமாறுங் கூறித் தாம் நூல் செய்கின்ற காலத்துப் பொய்யும் வழுவும் பற்றி இருடிகள் கரணம் யாத்தவாறும் கூறினர். அக்களவின்வழி நிகழ்ந்த கற்பும் கோடற்கென்று உணர்க. (தொல் பொருள். ௧௪௫. நச்சி.)

(பாடம்) † கரணமின்றே. ‡ லொழுகுதல், § நிலைஇயக்.
$ டளைஇயச். ¶ தொடுதற்.

ஒழுக்கங் காட்டிய குறிப்பினும் ஒழுக்கத்துக்
களவினுள் நிகழ்ந்த அருமையைப் புலம்பி
அலமர லுள்ளமோ டளவிய இடத்தும்
அந்தரத் தெழுதிய எழுத்தின் மான
வந்த குற்றம் வழிகெட ஒழுகலும்
அழியல் அஞ்சலென் றாயிரு பொருளினுந்
தானவட் பிழைத்த பருவத் தானும்
நோன்மையும் பெருமையும் மெய்கொள வருளிப்*
பன்னல் சான்ற வாயிலொடு பொருந்தித்
தன்னி னாகிய தகுதிக் கண்ணும்
புதல்வற் பயந்த புனிறுதீர்† பொழுதின்
நெய்யணி மயக்கம் புரிந்தோள் நோக்கி
ஐயர் பாங்கினும் அமரர்ச் சுட்டியுஞ்
செய்பெருஞ் சிறப்பொடு சேர்தற் கண்ணும்
பயங்கெழு துணையணைப் புல்லிப் புல்லாது‡
உயங்குவனள்§ கிடந்த கிழத்தியைக் குறுகி
அல்கல்$ முன்னிய நிறையழி பொழுதின்
மெல்லென் சீறடி புல்லிய இரவினும்
உறலருங் குரைமையின்¶ ஊடன்மிகுத் தோளைப்
பிறபிற பெண்டிரிற் பெயர்த்தற் கண்ணும்
பிரிவின் எச்சத்துப் புலம்பிய இருவரைப்
பரிவு நீக்கிய** பகுதிக் கண்ணும்
நின்றுநனி பிரிவின் அஞ்சிய பையுளுஞ்
சென்றுகை இகந்துபெயர்த் துள்ளிய வழியுங்
காமத்தின் வலியுங் கைவிடின் அச்சமுந்
தானவட் பிழைத்த நிலையின் கண்ணும்
உடன்சேறற் செய்கையொ டன்னவை பிறவும்
மடம்பட வந்த தோழிக் கண்ணும்
வேற்றுநாட் டகல்வயின் விழுமத் தானும்
மீட்டுவர வாய்ந்த வகையின் கண்ணும்
அவ்வழிப் பெருகிய சிறப்பின் கண்ணும்

(பாடம்) * அருளிய. † புதல்வர்ப்பயந்த புனிறு தேர்.
‡ துணையணை புல்லிய புல்லாது. § உயங்கவள். $ புல்கென.
¶ குண்மையின். ** பிரிவின் நீக்கிய

பேரிசை யூர்திப் பாகர் பாங்கினுங்
காமக் கிழத்தி மனையோள் என்றிவர்
ஏமுறு கிளவி சொல்லிய எதிருஞ்
சென்ற தேஎத் துழப்புநனி விளக்கி
இன்றிச் சென்ற தன்னிலை கிளப்பினும்
அருந்தொழில் முடித்த செம்மற் காலை
விருந்தொடு நல்லவை வேண்டற் கண்ணும்
மாலை யேந்திய பெண்டிரும் மக்களுங்
கேளிர் ஒழுக்கத்துப் புகற்சிக் கண்ணும்
ஏனைய வாயிலோ ரெதிரொடு தொகைஇப்*
பண்ணமை பகுதிமுப் பதினொரு மூன்றும்
எண்ணருஞ் சிறப்பிற் கிழவோன் மேன.

இது தலைவற்கு உரிய கிளவியெல்லாந் தொகுத்துணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) கரணத்தினமைந்து முடிந்த பின்பு, நெஞ்சுதளை யவிழ்ந்த புணர்ச்சி முதலாக ஏனைய வாயிலோரெதிரொடு கூடிப் பண்ணுத லமைந்த பகுதியினையுடைய முப்பத்தின்மூன்றிடத்தினும் கூறல் எண்ணுதற்கரிய சிறப்பினையுடைய கிழவோன் மேலன என்றவாறு.

இடம் என்பது வகையிற் கூறியவதனால் உரைக்கப்பட்டது. கூற்றென்பது வருகின்ற சூத்திரத்தினும் கொணர்ந்துரைக்கப் பட்டது.

கரணத்தி னமைந்து முடிந்தகாலை என்பது—ஆசான் புணர்த்த கரணத்தினால் வதுவை முடிந்தபின் என்றவாறு.

நெஞ்சு தளையவிழ்த லாவது—தலைவியைத் தலைவன் கண்ணுற்றஞான்று தலைவன் மாட்டு உளதாகிய பெருமையும் உரனும் தலைவிமாட்டு உளதாகிய அச்சமும் நாணும் மடனும் ஏதுவாக இயற்கைப்புணர்ச்சி இடையீடுபட்டுழி வேட்கை தணியாது வரைந் தெய்துங்காறும் இருவர்மாட்டும் கட்டுண்டு நின்ற நெஞ்சம் கட்டு விடப்படுதல். இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைவன் அலரறிவுறுக்கப்பட்டு நீங்கி வரைந்தெய்துங்காறும் புணர்ச்சி வேட்கையாற் செல்கின்ற நெஞ்சினை இருவரும் வேட்கைதோற்றுமல் தளைக்கப்பட்டதனைத் தளை என்றலும் ஒன்று. இவை யிரண்டினும் மிகுதி பொருளாகக் கொள்க.

---

(பாடம்) * ஏனைவாயில் எதிரொடு தொகைஇயப்.

உதாரணம்

"உழுந்து தலைப்பெய்த கொழுங்களி மிதவை*
பெருஞ்சோற் றமலை நிற்ப நிரைகால்
தண்பெரும் பந்தர்த் தருமணல் ஞெமிரி
மனைவிளக் குறுத்து மாலை தொடரிக்
கனையிருள் அகன்ற கவின்பெறு காலைக்
கோள்கால் நீங்கிய கொடுவெண் திங்கள்
கேடில் விழுப்புகழ் நாள்தலை வந்தென
உச்சிக் குடத்தர் புத்தகல் மண்டையர்
பொதுசெய் கம்பலை முதுசெம் பெண்டிர்
முன்னவும் பின்னவும் முறைமுறை தரத்தரப்
புதல்வர்ப் பயந்த திதலையவ் வயிற்று
வாலிழை மகளிர் நால்வர் கூடிக்
கற்பினின்† வழாஅ நற்பல உதவிப்
பெற்றோற் பெட்கும் பிணையை ஆகென
நீரொடு சொரிந்த ஈரிதழ் அலரி
பல்லிருங் கதுப்பின் நெல்லொடு தயங்க
வதுவை நன்மணங் கழிந்த பின்றைக்
கல்லென் சும்மையர் ஞெரேரெனப் புகுதந்து
பேரிற் கிழத்தி யாகெனத் தமர்தர
ஓரிற் கூடிய வுடன்புணர் கங்குற்
கொடும்புறம் வளைஇக் கோடிக் கலிங்கத்து
ஒடுங்கினள் கிடந்தனள் ஓர்புறந் தழீஇ
முயங்கல் விருப்பொடு முகம்புதை திறப்ப
அஞ்சினள் உயிர்த்த காலை யாழநின்
நெஞ்சம் படர்ந்தது‡ எஞ்சா துரையென
இன்னகை இருக்கைப் பின்யான் வினவலின்
செஞ்சூட் டொண்குழை வண்காது துயல்வர
அகமலி உவகையள் ஆகிமுகன் இகுத்து
ஒய்யென§ இறைஞ்சி யோளே மாவின்
மடங்கொள் மதைஇய நோக்கின்
ஒடுங்கீ ரோதி மாஅ யோளே." (அகம். அசு)

இதனுள் 'முயங்கல் விருப்பொடு முகம்புதை திறப்ப அஞ்சினள் உயிர்த்தகாலை' என்பதனால் இயற்கைப் புணர்ச்சி யின்மையும், 'அகமலி யுவகையளாகி முகனிகுத்து ஒய்யென விறைஞ்சி' என்பதனால் உள்ளப் புணர்ச்சி யுண்மையும் அறிக. பிறவும் அன்ன.

*எஞ்சா மகிழ்ச்சி யிறந்துவரு பருவத்தும் என்பது*—ஒழியாத மகிழ்ச்சி மிக்கு வருங்காலத்துத் தலைவன்கட் கூற்று நிகழும் என்றவாறு.

உதாரணம்

"குனிகா யெருக்கின் குவிமுகிழ் விண்டலொடு
பனிவார் ஆவிரைப் பன்மலர் சேர்த்தித்
தாருங் கண்ணியுந் தைஇத் தன்னிட்டு

(பாடம்) * விதவைப். † கற்பின். ‡ பயந்த § ஏயென.

"ஊரும் மடவோன் உலர்வன் கொல்லென
நீர்த்துறைப் பெண்டிர் நெஞ்சழிந் திரங்கினும்
உணரா ளூர்தோறு
அணிமடற் கலிமா மன்றத் தேறித்தன்
அணிநலம் பாடினும் அறியா ளென்றியான்
பெருமலை நெடுங்கோ டேறிப் பெறுகென்று
உருமிடித் தீயின் உடம்புசுடூர் வைத்த
என்னுறு விழுமம் நோக்கிப் பொன்னொடு
திருமணி இமைக்குங் கோடுயர் நனந்தலை
இரவுடைப் பெண்டி ரிடும்பை நோக்கித்
தெளிவுமனங் கொண்ட தீதறு காட்சி
வெளியன் வேள்மான் விளங்குகரி போல
மலிகடல் உடுத்த மணங்கெழு நனந்தலைப்
பலபா ராட்டவும் படுவ மாதோ
கடைந்து கவித்தன்ன கால்வீங்கு கருங்கட்
புடைதிரள் வனமுலை புலம்பல் அஞ்சிக்
காமர் நுழைநுண் நுசுப்பின்
தாமரை முகத்தியைத் தந்த பாலே" (குணநாற்பது)

எனவரும்.

அஞ்சவந்த உரிமைக்கண்ணும் என்றது—தலைவன் தானும் பிறரும் அஞ்சும்படியாகத் தலைவிமாட்டு உளதாகிய கற்பாகிய உரிமைக்கண்ணும் என்றவாறு.

உதாரணம் வந்தவழிக் காண்க.

நன்னெறிப்படரும் தொன்னலப் பொருளினும் என்றது—நன்னெறிக்கட் செல்லாநின்ற தொன்னலப் பொருண்மைக் கண்ணும் என்றவாறு.

நன்னெறியாவது அறம்பொருளின்பம் வழுவாத நெறி. தலைமகன் சிறப்புத் தொன்றுதொட்டு வருதலிற் குடிநலத்தைத் தொன்னல மென்றார். இதனாற் சொல்லியது அறம் பொருள் இன்பங்களை வழாமல் தன் குலத்திற்கேற்ற மனைவாழ்க்கையைத் தலைமகள் நடத்துதற்கண்ணும் தலைவன்கண் கூற்று நிகழும் என்றவாறு.

உதாரணம்

"தடமருப் பெருமை மடநடைக் குழவி
தூண்தொறும் யாத்த காண்தகு நல்லில்
கொடுங்குழை பெய்த செழுஞ்செய் பேதை*
சிறுதாழ் செறித்த மெல்விரல் சேப்ப
வாளை ஈர்ந்தடி வல்லிதின் வகைஇப்†
புகையுண் டமர்த்த கண்ணள் தகைபெறப்
பிறைநுதற் பொறித்த சிறுநுண் பல்வியர்
அந்துகில் தலையில் துடையினள் நப்புலந்து
அட்டி லோளே அம்மா அரிவை

(பாடம்) * பேழை. † வகையிறப்.

எமக்கே வருகதில் விருந்தே சிவப்பாள் அன்று*
சிறியமுள் எயிறு தோன்ற
முறுவல் கொண்ட முகங்காண் கம்மே."† (நற்றிணை. ௧௨0)

இதனுள் ஊடற்குறிப்பின ளாகிய தலைவி மனைவாழ்க்கைத் தரும மாகிய விருந்து புறந்தருதல் விருப்பினளாதலின் நன்னெறிப் படர்தல் ஆயிற்று.

பெற்ற தேஎத்துப் பெருமையின் நிலைஇக் குற்றஞ்சான்ற பொருள் எடுத்துரைப்பினும் என்றது—வரைந்து பெற்றவழித் தலைவியைப் பெருமையின் கண்ணே நிறுத்திக் களவுக் காலத்துக் குற்றஞ்சான்ற பொருளை யெடுத்துக் கூறியவழியும் என்றவாறு.

உதாரணம்

''அதிரிசை யருவிய பெருவரைத் தொடுத்த
பல்தேன் இறூஅல் அல்குநர்க் குதவு
நுந்தை நன்னாட்டு வெந்திறல் முருகென
நின்னோய்க் கியற்றிய வெறிநின் தோழி
என்வயி னோக்கலிற் போலும் பன்னாள்
வருந்திய வருத்தந் தீர நின்
திருந்திழைப் பணைத்தோள் புணர்ந்துவந் ததுவே.'

இதனுள் 'நுந்தை நன்னாட்டு' என்றதனால் தலைவி பெருமையும் 'நின்னோய்க்கியற்றிய வெறி நின்தோழி யென்வயி னோக்கலிற் போலும்' என்றதனால் குற்றஞ்சான்ற பொருள் என்பதும் அறிந்து கொள்க.

நாமக் காலத் துண்டெனத் தோழி ஏமுறு கடவுள் ஏத்திய மருங்கினும் என்பது—அச்சக்காலத்து நமக்குத் துணையாயிற் றெனத் தோழி ஏமுறுகடவுளை ஏத்துதற்கண்ணும் தலைவன்கட் கூற்று நிகழும் என்றவாறு.

உதாரணம் வந்தவழிக் காண்க.

அல்லல்தீர ஆர்வமொடு அளைஇச் சொல்லுறு பொருளின் கண்ணும் என்பது—தலைவி தன் துன்பந்தீர ஆர்வத்தொடு பொருந்தச் சொல்லப்பட்ட பொருண்மைக்கண்ணும் தலைவன் கூற்று நிகழும் என்றவாறு. என்றது களவுக்காலத்து வருந்திய வருத்தந்தீரத் தனது காதல் மிகுதி தோன்றச் சொல்லுதற் பொருளின் கண்ணும் என்றவாறு.

உதாரணம்

''யாயும் ஞாயும்‡ யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயனீர் போல
அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே'' (குறுந். ௪0)

எனவரும்.

(பாடம்) * சிவப்பார்ந்த. † கும்மே. ‡ யாயும்.

சொல்லென ஏனது சுவைப்பினும் நீ கை தொட்டது வானோர் அமிழ்தம் புரையுமால் எமக்கென அடிசிலும் பூவுந் தொடுத்தற்கண்ணும் என்பது—யாதானும் ஒன்றை நுகரினும் நீ கையால் தொட்டது வானோர் அமிழ்தம் புரையும், இதற்குக் காரணம் சொல்லுவாயாக என்று அடிசில் தொடுத்தற்கண்ணும் பூத்தொடுத்தற்கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு. வந்தது கொண்டு வாராதது முடித்தல் என்பதனால், சாந்து முதலியனவும் கொள்க.

உதாரணம் வந்தவழிக் காண்க.

> "வேம்பின் பைங்காயென் தோழி தரினே
> தேம்பூங் கட்டி" (குறுந். ககசு)

எனத் தலைவன் கூறினமை தோழி கூறலானும் அறிக.

அந்தணர் திறத்தும் சான்றோர் தேஎத்தும் அந்தமில் சிறப்பிற் பிறர் பிறர் திறத்தினும் ஒழுக்கம் காட்டிய குறிப்பினும் என்பது—பார்ப்பார்கண்ணும் சான்றோர்கண்ணும் மிக்க சிறப்பினையுடைய பிறராகிய அவரவரிடத்தும் ஒழுகும் ஒழுக்கத்தைக் *குறிப்பினால் காட்டிய இடத்தினும் என்றவாறு.

உதாரணம் வந்தவழிக் கண்டுகொள்க.

ஒழுக்கத்துக் களவினுள் நிகழ்ந்த அருமையைப் புலம்பி அலமர லுள்ளமோ டளவியவிடத்தும் என்பது—ஒழுக்கத்தினுங் களவுக்காலத்துநிகழ்ந்த அருமையைத் தனித்துச் சுழன்ற உள்ளத்தோடே உசாவிய விடத்தும் என்றவாறு.

உதாரணம் வந்தவழிக் காண்க.

அந்தரத் தெழுதிய வெழுத்தின் மான வந்த குற்றம் வழிகெட ஒழுகலும் என்பது—களவுக்காலத்தொழுகிய ஒழுக்கக் குறைபாட்டான் நிகழ்ந்த குற்றத்தை ஆகாயத்தெழுத்துப்போல வழிகெட ஒழுகுதற்கண்ணும் என்றவாறு.

உதாரணம் வந்தவழிக் காண்க.

அழியல் அஞ்சலென் றாயிரு பொருளினுந் தானவட் பிழைத்த பருவத்தானும் என்பது—அழியல், அஞ்சல் என இயற்கைப்புணர்ச்சிக்கட் கூறிய அவ்விருபொருளைப் பிழைத்த காலத்தினும் தலைவன்கண் கூற்று நிகழும் என்றவாறு.

---

*'பிறர் பிறர்' என்றார் தேவர் மூவர் என்பது பற்றி, தன்னையன்றித் தெய்வம் தொழாதாளை இத்தன்மையோரைத் தொழல் வேண்டும் என்று தொழுது காட்டினான். குறிக்கொளுங்கூற்றால் உரைத்தலிற் குறிப்பினும் என்றார். உதாரணம் வந்துழிக் காண்க. (தொல். பொருள் கசக.நச்சி.)

அஃதாவது, புறப்பெண்டிர்மாட்டுப் பிரிதல்.

"நகுகம் வாராய் பாண பகுவாய்
அரிபெய் *கிண்கிணி ஆர்ப்பத் தெருவில்
தேர்நடை பயிற்றுந் தேமொழிப் புதல்வன்
பூநாறு செவ்வாய் சிதைத்த சாந்தமொடு
காம நெஞ்சந் துரப்ப யாந்தம்
முயங்கல் விருப்பொடு குறுகினேம் ஆகப்
பிறைவனப் புற்ற† மாசறு திருநுதல்‡
நாறிருங் கதுப்பினெங் காதலி வேறுணர்ந்து
வெருஉமான் பிணையின் ஒரீஇ§
யாரை யோவென்று$ இகந்துநின் றதுவே" (நற்றிணை. உ௫0)

என வரும்.

நோன்மையும் பெருமையும் மெய்கொள வருளிப் பன்னல் சான்ற வாயிலொடு பொருந்தித் தன்னிணுகிய தகுதிக்கண்ணும் என்பது—பொறைமையும் பெருமையும் மெய்யெனக் கொள்ளுமாறு அருளி ஆராய்தல் அமைந்த வாயிலொடு பொருந்தித் தலைவன் தன்னான் ஆகிய தகுதிக்கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.

அருளிப் பொருந்திக் கூறும் எனக் கூட்டுக. எனவே தலைமகன் என்பதூஉந் தலைமகள் என்பதூஉம் எஞ்சிநின்றன. கூற்று என்றது அதிகாரத்தான் வந்தது. அஃதாவது, பொறுத்தல் வேண்டும் எனவும் சிறுமைசெய்தல் குற்றம் எனவும் கூறுதலும், தலைமகள் தன்னால் வந்த தனை என்னால் வந்தது எனவும் இவ்வாறு கூறுதல். பன்னல் சான்ற வாயிலாவது, நீ என் செய்தனை? இவள் வெகுடற்குக்காரணம் என்னை? என ஆராய்தலிற் பொருந்திய தோழி என்க. பொருந்தலாவது வேறு படாது உடம்படுதல். அவை வருமாறு:-

"யாரினுங் காதலம் என்றேனா¶ ஊடினாள்
யாரினும் யாரினும் என்று" (குறள். ௧௩௧௪)

"தும்முச் செறுப்ப அழுதாள் நுமர்உள்ளல்**
எம்மை மறைத்திரோ என்று" (குறள். ௧௩௧௮)

"இம்மைப் பிறப்பில்†† பிரியலம் என்றேனாக்‡‡
கண்ணிறை நீர்கொண் டனள்" (குறள். ௧௩௧௫)

"தன்னை யுணர்த்தினுங் காயும் பிறர்க்குநீர்
இந்நீரர் ஆகுதிர் என்று" (குறள். ௧௩௧௯)

"கோட்டுப்பூச் சூடினுங் காயும் ஒருத்தியைக்
காட்டிய சூடினீர் என்று" (குறள். ௧௩௧௩)

என வரும்.

பிறவும் அன்ன.

---

(பாடம்) * வரிபெய். † புனற்ற ‡ சுடர் நுதல்.
§ நோக்கி. $ யாரையோவென. ¶ என்மோ.
** நுமருள்ள. †† பிறப்போ. ‡‡ என்றேமா.

புதல்வற் பயந்த புனிறுதீர் பொழுதின் நெய்யணி மயக்கம் புரிந்தோள் நோக்கி ஐயர் பாங்கினும் அமரர்ச் சுட்டியுஞ் செய் பெருஞ் சிறப்பொடு சேர்தற்கண்ணும் என்பது—புதல்வனைப் பயந்த ஈன்றணிமை நீங்கினபொழுதின்கண் நெய்யணிமயக்கம் புரிந்தவளைக் குறித்து முனிவர்மாட்டும் அமரரைக் குறித்தும் செய்யாநிற்கும் பெரிய சிறப்பொடு சேர்தற்கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.

நெய்யணி மயக்கமாவது வாலாமை நீங்கி நெய்யணிதல் நோக்கிச் சேர்தல் எனக் கூட்டுக.

''வாராய் பாண நகுகம் நேரிழை
கடும்புடைக் கடுஞ்சூல் நங்குடிக் குதவி
நெய்யோ டிமைக்கும் ஐயவித் திரள்காழ்
விளங்குநகர் விளங்கக் கிடந்தோட் குறுகிப்
புதல்வனை யீன்றெனப் பெயர்பெயர்த்து அவ்வரித்
திதலை அல்குல் முதுபெண் டாகித்
துஞ்சுதி யோமெல் அஞ்சில் ஓதியெனப்
பன்மாண் அகட்டிற்* குவளை ஒற்றி
உள்ளினென் உறையும்† எற்கண்டு மெல்ல
முகைநாள் முறுவல் தோற்றித்‡
தகைமலர் உண்கண் புதைத்துவந் ததுவே§'' (நற்றிணை. ௩௭0)

என வரும்.

பயங்கெழு துணையணைப் புல்லிப்புல்லாது உயங்குவனள் கிடந்த கிழத்தியைக் குறுகிய அல்கல் முன்னிய நிறையழி பொழுதின் மெல்லென்சீறடி புல்லிய இரவினும் என்பது—தலைவன் பரத்தையிற் பிரிந்துழி ஊடற் கருத்தினளாய்ப் பயங்கெழுதுணை அணையைப் புல்லிப் புல்லாது வருந்திக் கிடந்த தலைவியைக் கிட்டித் தங்குதலைக் குறித்த நிறையழிபொழுதில் தலைவியது மெல்லென்ற சீறடியைப் புல்லிய இரத்தற்கண்ணும் தலைவன் கூற்று நிகழும் என்றவாறு.

உதாரணம்

''ஊடலின் உண்டாங்கோர் துன்பம் புணர்வது
நீடுவ தன்றுகொல் என்று'' (குறள். ௧௩0௭)

''ஊடுக மன்னோ ஒளியிழை$ யாம்இரப்ப
நீடுக மன்னோ இரா'' (குறள். ௧௩௨௯)

''ஊடலில் தோன்றுஞ் சிறுதுனி நல்லளி
வாடினும் பாடு பெறும்'' (குறள். ௧௩௨௨)

என வரும்.

(பாடம்) * படைமானகட்டிற். † உள்ளுறை. ‡ ஒன்றி.
§ கைபுதைந்ததுவே. $ ஒளியிழாய்.

உறலருங்குரைமையி னூடன் மிகுத்தோளைப் பிறபிற பெண்டிரிற் பெயர்த்தற்கண்ணும் என்பது—ஊடல் மிகுத்தோளை உறுதற்கருமையாற் பிறபிற பெண்டிர் ஏதுவாக ஊடல் உணர்த்தற்கண்ணும் என்றவாறு.

"புனவளர்* பூங்கொடி யன்னாய்" என்னும் மருதக் கலியுள்,

"ஒருத்தி புலவியாற் புல்லா திருந்தாள் அலவுற்று
வண்டினம் ஆர்ப்ப இடைவிட்டுக் காதலன்
தண்தார் அகலம் புகும்" (கலி. ௯௨.)

எனப் பிறபிற பெண்டிரைக் காட்டித் தலைவன் ஊடலுணர்த்தியவாறு அறிந்து கொள்க.

பிரிவினெச்சத்துப் புலம்பிய இருவரைப் பரிவு நீக்கிய பகுதிக்கண்ணும் என்பது - பிரிவு நிமித்தமாக வருந்திய மனையாளையும் காமக்கிழத்தியையும் அவ் வருத்தத்து நின்று நீக்கிய பகுதிக் கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு; அஃதாவது பிரியேன் என்றல்.

"பொன்னும் மணியும் போலும் யாழநின்
நன்னர் மேனியும் நாறிருங் கதுப்பும்
போதும் பணையும்† போலும் யாழநின்
மாதர் உண்கணும் வனப்பின் தோளும்
இவைகாண் தோறும் அகமலிந்து யானும்
அறநிலை பெற்றோர் அனையேன் அதன்தலைப்
பொலந்தொடிப் புதல்வனும் பொய்தல் கற்றனன்
வினையும் வேறுபுலத்து இலனே‡ நினையின்
யாதனிற் பிரிவாம் மடந்தை§
காதல் தானுங் கடலினும் பெரிதே." (நற்றிணை. ௧௬௬)

இக்கூற்று இருவர்மாட்டும் ஒக்கும்.

§நின்றுநனி பிரிவின் அஞ்சிய பையுளும் என்பது— நிலைநிற்க மிகப்பிரியும் பிரிவின்கண் அஞ்சிய நோயின்கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.

"ஆள்வழக் கற்ற சுரத்திடைக் கதிர்தெற
நீளெரி பரந்த நெடுந்தாள் யாத்துப்¶
போழ்வளி முழங்கும் புல்லென் உயர்சினை
முடைநசை இருக்கைப் பெடைமுகம் நோக்கி
ஊன்பதித்** தன்ன வெருவரு செஞ்செவி

(பாடம்) * புள்வளர். † மணையும். ‡ புலத்திலேன். § யாதினிற் பிரிகோ மடந்தை.

§ முன்னில்லா தொருசிறைப்போய் நின்று நீட்டித்துப் பிரிவினால் தலைவன் அஞ்சிய நோயின்கண்ணும்; இது துனி. (தொல். பொருள். ௧௪௪ நச்சி.)

¶ நெடுநிலை யாஅத்துப். ** ஊண்பழித்.

"எருவைச் சேவல் கரிபுசிறை தீய
வேனின் நீடிய வேயுயர் நனந்தலை
நீயுழந்* தெய்துஞ் செய்வினைப் பொருட்பிணி
பல்லிதழ் மழைக்கண் மாஅ யோள்வயிற்
பிரியிற்† புணர்வ தாயிற் பிரியாது
ஏந்துமுலை முற்றம் வீங்கப் பல்லூழ்
சேயிழை தெளிர்ப்பக் கவைஇ நாளும்
மனைமுதல் வினையொடும் உவப்ப
நினைமாண்‡ நெஞ்சம் நீங்குதல் மறந்தே" (அகம். ௰௯)

எனவரும்.

சென்று கையிகந்து பெயர்த்துள்ளிய வழியும் என்பது—மேற்கூறியவாறினைக் கையிகந்து முன்னொருகாற் சென்று மீட்டும் அந்நெறியினைப் போக நினைந்தவழியும் கூற்று நிகழும் என்றவாறு.

"இருங்கழி முதலை மேஎந்தோல் அன்ன
கருங்கால் ஓமைக் காண்பின் பெருஞ்சினைக்
கடியுடை நனந்தலை ஈன்றிளைப் பட்ட
கொடுவாய்ப் பேடைக் கல்கிரை தரீஇ§
மான்றுவேட் டெழுந்த செஞ்செவி எருவை
வான்தோய் சிமைய விறல்வரைக் கவாஅன்
துளங்குநடை மரையா வலம்படத் தொலைச்சி
ஒண்செங் குருதி யுவறியுண் டருந்துபு
புலவுப்புலி துறந்த கலவுக்கழி கடுமுடை
கொள்ளை மாந்தரின் ஆனாது கவரும்
புல்லிலை மராஅத்த அகன்சேண் அத்தங்
கலந்தரல் உள்ளமொடு கழியக் காட்டிப்
பின்நின்று துரக்கும் நெஞ்சம் நின்வாய்
வாய்போற் பொய்ம்மொழி எவ்வமென் களைமா$
கவிரிதழ் அன்ன காண்பின் செவ்வாய்
அந்தீங் கிளவி ஆயிழை மடந்தை
கொடுங்குழைக் கமர்த்த நோக்கம்
நெடுஞ்சேண் ஆரிடை விலங்கு ஞான்றே" (அகம். ௩)

எனவரும்.

காமத்தின் வலியும் என்பது—பொருளினுங் காமம் வலியுடைத்து என உட்கொண்ட வழியும் கூற்று நிகழும் என்றவாறு.

உதாரணம்

"விரிதிரைப் பெருங்கடல் வளைஇய உலகமும்
அரிதுபெறு சிறப்பிற் புத்தேள் நாடும்
இரண்டுந் தூக்கிற் சீர்சா லாவே

---

(பாடம்) * மலையுழந். † பிரியப். ‡ நினைமா.
§ தரீஇயர். $ எம் எவ்வங் களைஇயர்.

பூப்போல் உண்கண் பொன்போல் மேனி
மாண்வரி அல்குற் குறுமகள்
தோள்மாறு படூஉம் வைகலோ டெமக்கே" (குறுந். ௧0௧)

எனவரும்.

கைவிடின் அச்சமும் என்பது—தலைவியைக் கைவிட்டவழி அவளது உயிர்ப்பொருட்டு அஞ்சுதற் கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.

## உதாரணம்

"அளிநிலை பொருஅது அமரிய முகத்தள்
விளிநிலை கேளாள் தமியள் மென்மெல
நலமிகு சேவடி நிலம்வடுக் கொளாஅக்*
குறுக வந்துதன் கூரெயிறு தோன்ற
வறிதகத் தெழுந்த வாயல் முறுவலள்
கண்ணிய துணரா அளவை ஒண்ணுதல்
வினைதலைப் படுதல் செல்லா நினைவுடன்†
முளிந்த ஓமை முதையலங் காட்டுப்
பளிங்கத் தன்ன பல்காய் நெல்லி
மோட்டிரும் பாறை ஈட்டுவட் டேய்ப்ப
உதிர்வன படூஉங் கதிர்தெறு கவாஅன்
மாய்த்த போல மழுகுநுனை தோற்றிப்
பாத்தி அன்ன குடுமிக் கூர்ங்கல்
விரல்நுதி சிதைக்கும் நிரைநிலை யதர
பரன்முரம் பாகிய பயமில் கானம்
இறப்ப எண்ணுதி ராயின்‡ அறத்தாறு
அன்றென மொழிந்த தொன்றுபடு கிளவி
அன்ன வாக வென்னுநள் போல
முன்னம் காட்டி முகத்தின் உரையா
ஓவச் செய்தியின் ஒன்றுநினைந் தேற்றிப்
பாவை மாய்த்த பனிநீர் நோக்கமொடு
ஆகத் தொடுக்கிய புதல்வன் புன்தலைத்
தாநீர் பயந்த துணையமை பிணையல்
மோயினள் உயிர்த்த காலை மாமலர்
மணியுரு இழந்த அணியழி தோற்றம்
கண்டே கடிந்தனஞ் செலவே ஒண்தொடி
உழையம் ஆகவும் இனைவோள்
பிழையலள் மாதோ பிரிதுநாம் எனினே" (அகம். ௫)

என வரும்.

தானவட்பிழைத்த நிலையின்கண்ணும் என்பது—தலைவன் தலைவியை நின்னிற் பிரியேன் என்ற சொல்லிற் பிழைத்த நிலையின் கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.

---

(பாடம்) * நிலம்வரக் கொள்ளாக். † செல்லல் நினைவுடன்
‡ எண்ணினிராயின்.

பிழைத்தலாவது பிரிதல்:

"வயங்குமணி பொருத வகையமை வனப்பிற்
பசுங்காழ் அல்குல் மாஅ யோளொடு
வினைவனப்* பெய்திய புனைபூஞ் சேக்கை
விண்பொரு நெடுநகர்த் தங்கி இன்றே
இனிதுடன் கழிந்தன்று மன்னே நாளைப்
பொருந்தாக் கண்ணேம் புலம்புவந் துறுதரச்
சேக்குவங் கொல்லோ நெஞ்சே சாத்தெறிந்து
அதர்கூட் டுண்ணும் அணங்குடைப் பகழிக்
கொடுவில் ஆடவர் படுபகை வெரீஇ
ஊரெழுந் துலறிய பீரெழு முதுபாழ்
முருங்கை மேய்ந்த பெருங்கை யானை
வெரிந்ஓங்கு சிறுபுறம் உரிஞ† ஒல்கி
இட்டிகை நெடுஞ்சுவர் விட்டம் வீழ்ந்தென
மணிப்புறாத் துறந்த மரஞ்சோர் மாடத்து
எழுதணி கடவுள் போகலிற் புல்லென்று
ஒழுகுபலி மறந்த மெழுகாப் புன்திணைப்
பாணாய் துன்னிய‡ பறைக்கட்§ சிற்றில்
குயில்காழ் சிதைய மண்டி அயில்வாய்க்
கூர்முகச் சிதலை வேய்ந்த
போர்முடி நல்லிறைப்$ பொதியி லானே" (அகம். கசுஎ)

என வரும்.

உடன் சேறற் செய்கையொடு என்பது—உடன்போகவேண்டுமெனச் சொல்லியவழியும் என்றவாறு. ஒடு எண்ணின்கண் வந்தது.

"செருமிகு சினவேந்தன்" என்னும் பாலைக் கலியுள்,

"எல்வளை எம்மொடு நீவரின் யாழநின்
மெல்லியல் மேவந்த சீறடித் தாமரை
அல்லிசேர் ஆயிதழ் அரக்குத்தோய்ந் தவைபோலக்
கல்லுறின் அவ்வடி கறுக்குந அல்லவோ" (கலித். கக)

என வரும்.

அன்னவை பிறவும் மடம்பட¶ வந்த தோழிக்கண்ணும் என்பது—மேற்சொல்லப்பட்டவையிற்றினும் மடமைபட வந்த தோழி மாட்டும் கூற்று நிகழும் என்றவாறு.

அவையாவன:

"இல்லென இரந்தோர்க்கொன் றீயாமை இழிவெனக்
கல்லிறந்து செயல்சூழ்ந்த பொருள்பொரு ளாகுமோ" (கலித். உ)

என வரும்.

---

(பாடம்) * வினைபொலி. † உரிஞ்ச. ‡ துள்ளிய. § படைக்கட். $ நல்லிழைப்.

¶ உடன் கொண்டு போதல் முறைமை யன்றென்று அறியாமற் கூறலின், மடம்பட என்றார். (தொல். பொருள். கசுச நச்சி.)

இந்திகரன கூறியவழித் தலைவன் கூற்று நிகழும். இவ்வழிக் கூறும் கூற்றுக் காமமாகத் தோன்றாது பொருளாகத் தோன்றும், காமத்திற்கு மாறாகக் கூறல் வேண்டுதலின்,

"இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பந் துடைத்தூன்றுந் தூண்". (குறள். ௬௧௫)

என வரும்.

வேற்றுநாட் டகல்வயின் *விழுமத்தானும் என்பது—வேற்றுநாட்டு அகலும்வழி வரும் நோயின்கண்ணும் என்றவாறு.

அஃதாவது, பிரிவு ஒருப்பட்ட பின்பு போவேமோ தவிர்வேமோ எனச் சொல்லும் மனநிகழ்ச்சி.

உதாரணம்

"உண்ணா மையின் உயங்கிய மருங்கின்†
ஆடாப் படிவத் தான்றோர் போல
வரைசெறி‡ சிறுநெறி நிரையுடன் செல்லும்
கான யானை கவினழி குன்றம்
இறந்துபொருள் தருதலும் ஆற்றாய் சிறந்த
சில்ஐங் § கூந்தல் நல்லகம் பொருந்தி
ஒழியின் வறுமை யஞ்சுதி அழிதக $
உடைமதி வாழிய நெஞ்சே நிலவென
நெய்கனி நெடுவேல் எஃகிலை இமைக்கும்
மழைமருள் பஃறோல் மாவண் சோழர்
கழைமாய் காவிரிக் கடல்மண்டு பெருந்துறை
இறவொடு வந்து கோதையொடு பெயரும்
பெருங்கடல் ஒலிக்கும் போல
ஒன்றிற் கொள்ளாய் சென்றுதரு பொருட்கே" (அகம். ௧௨௩)

என வரும்.

மீட்டுவர வாய்ந்த வகையின் கண்ணும் என்பது பிரிந்த தலைவன் மீட்டு வரவு வாய்ந்த வகையின் கண்ணும் என்றவாறு.

'வரவு' என்பது கடைகுறைந்தது.

உதாரணம்

"தாழிருள் துமிய மின்னித் தண்ணென
வீழுறை இனிய சிதறி ஊழிற்
கடிப்பிடு¶ முரசின் முழங்கி இடித்திடித்துப்

* விழுமமாவன:—பிரியக்கருதியவன் பள்ளியிடத்துக் கனவிற் கூறுவனவும், போவேமோ தவிர்வேமோ என வருந்திக் கூறுவனவும்; இவள் நலன் திரியும் என்றலும், பிரியுங்கால் என்று ஐயுற்ற தலைவியை ஐயந்தீரக் கூறலும், நெஞ்சிற்குச் சொல்லி அழுங்குதலும் பிறவுமாம். (தொல். பொருள். ௪௪௪. நச்சி.)

(பாடம்) † மருங்குல். ‡ வரைசார். § சில்லிருங். $ அளித்தக உடைவை. ¶ கடிப்பிகு.

"பெய்யினி வாழியோ பெருவான் யாமே
செய்வினை முடித்த செம்மல் உள்ளமொடு
இவளின் மேவின மாகிக் குவளைக்
குறுந்தாள் நாள்மலர் நாறும்
நறுமென் கூந்தல் மெல்லணை யேமே." (குறுந். உஎ0)

இது வந்து புகுந்த தலைவன் கூற்று.

அவ்வழிப் பெருகிய சிறப்பின்* கண்ணும் என்பது—தலைவன் பிரிந்துழிப் பெருகிய சிறப்பினும் கூற்று நிகழும் என்றவாறு.

"கோடல் எதிர்முகைப் பசுவீ முல்லை
நாறிதழ்க் குவளையொ டிடைப்பட விரைஇ
ஐதுதொடை மாண்ட கோதை போல
நறிய நல்லோள் மேனி
முறியினும் வாயது முயங்குகம் இனியே†" (குறுந் சுஉ)

எனவரும்.

பேரிசை யூர்திப் பாகர் பாங்கினும் என்பது—தானுற்ற வின்பத்தினைப் பாகற்குக் கூறுதற் கண்ணும் என்றவாறு.

உதாரணம்

"மறத்தற் கரிதால் பாக பன்னாள்
வறத்தொடு பொருந்திய‡ உலகுதொழிற் கொளீஇய
பழமழை§ பொழிந்த புதுநீர் அவல
நாநவில் பல்கிளை கறங்க நாவுடை$
மணியொலி கேளாள்¶ வாணுதல் அதனால்
ஏகுமின் என்ற இளையர் வல்லே
இல்புக் கறியுந ராக** மெல்லெனை
மண்ணுக் கூந்தல் மாசறக் கழீஇச்
சில்போது கொண்டு பல்குரல் அழுத்திய
அந்நிலை புகுதலின் மெய்வருத் துரூஅ††
அவிழ்பூ முடியினள்‡‡ கவைஇய
மடமா அரிவை மகிழ்ந்தயர் நிலையே" (நற்றிணை. சுஉ)

என வரும்.

காமக் கிழத்தி மனையோ ளென்றிவ §§ரேமுறு கிளவி சொல்லிய வெதிரும் என்பது—காமக்கிழத்தியும் மனையாளும் என்று சொல்லு மிருவரும் பாதுகாவலாகக் கூறிய கூற்றி னெதிரும் தலைவன் கூற்று நிகழும் என்றவாறு.

* சிறப்பாவன பகைவென்று திறை முதலியன கோடலும் பொருள் முடித்தலும் துறைபோகிய ஒத்தும் பிறவுமாம்.
(தொல். பொருள். கசுசு நச்சி)

(பாடம்) †முயங்கற்கும் இனிதே. ‡வருந்திய. §மழைபெயல் வல்வர. $ கறங்கு மாண்வினை. ¶ கொள்ளாள். **கறிபுணர்வாக ††துராஅய். ‡‡ விழ்பூ முடியாள். §§ வருத்தமுற்ற கிளவியின் எதிரிடத்தும் கூற்று நிகழ்த்தும். காமக்கிழத்தி விரைந்து கூறும் என்றற்கு அவளை முற்கூறினார். (தொல். பொருள் கசுசு. நச்சி)

இவ்விருவரும் இல்லுறை மகளிராதலின், தலைவன்மாட்டு நிகழு மவை இருவருக்கும் ஒக்கும் என்க.

அஃதாவது வழிவந்தவா றென்னை யெனவும் வருத்தமுற்றீ ரெனவும் இந்நிகரன பல கூறுதல்.

உதாரணம்

"எரிகவர்ந் துண்ட என்றூழ் நீளிடை
அரிய வாயினும் எளிய அன்றே
அவவுறு நெஞ்சங் கவவுநனி விரும்பிக்
கடுமான் றிண்டேர் கடைஇ
நெடுமா ணேக்கிநின் உள்ளியாம் வரவே" (ஐங்குறு. கூசO)

என வரும்.

சென்ற தேஎத் துழப்பு நனிவிளக்கி யின்றிச் சென்ற தன்னிலை இளப்பினும் என்பது—தான் சென்ற தேயத்து வருத் தத்தை மிகவும் விளக்கித் தலைவியை யொழித்துச் சென்ற தன்னிலைமை இளப்பினும் கூற்று நிகழும் என்றவாறு.

உதாரணம்

"ஒழித்தது பழித்த நெஞ்சமொடு வழிப்படர்ந்து
உள்ளியும் அறிதிரோ எம்மென யாழநின்
முள்ளெயிற்றுத் துவர்வாய் முறுவல் அழுங்க
நோய்முந் துறுத்து நொதுமல் மொழியல்நின்
ஆய்நலம் மறப்பேனோ* மற்றே சேணிகந்து
ஒலிகழை பிசைந்த ஞெலிசொரி ஒண்பொறி
படுஞெமல் புதையப் பொத்தி நெடுநிலை
முளிபுல் மீமிசை வளிசுழற் றுறுஅக்†
காடுகவர் பெருந்தீ ஒடுவயின் ஓடலின்
அதர்கெடுத் தலறிய சாத்தொ டொராங்கு
மதர்புலி வெரீஇய மையல் வேழத்து
இனந்தலை மயங்கிய நனந்தலைப் பெருங்காட்டு
ஞான்றுதோன் றவிர்சுடர் மான்றற்‡ பட்டெனக்
கட்படர் ஓதி நிற்படர்ந் துள்ளி
அருஞ்செல வாற்று ஆரிடை ஞெரேரெனப்
பரந்துபடு பாயல் நவ்வி பட்டெனஃ§
இலங்குவளை செறியா இகுத்த நோக்கமொடு
நிலங்கிளை நினைவினை நின்ற நிற்கண்டு
இன்னகை இனைய மாகவும் எம்வயின்
ஊடல் யாங்குவந் தன்றென யாழநின்
கோடேந்து புருவமொடு குவவுநுதல் நீவி
நறுங்கதுப் புளரிய நன்னர் அமையத்து
வறுங்கை காட்டிய வாயல் கனவின்
ஏற்றேக் கற்ற உலமரல்$
போற்று யாகலின் புலத்தியால் எம்மே" (அகம். கூசு)

என வரும்.

(பாடம்) *மறப்பனோ: †றுறுவிற். ‡ மான்றுட். §யற்றெனை.
$ உலம்வரல்.

அருந்தொழில் முடித்த செம்மற் காலை விருந்தொடு நல்லவை வேண்டற்கண்ணும் என்பது—அரிய வினையை முடித்து வந்த தலைமைக்காலத்து விருந்தினரோடு கூட நல்லவற்றைக் களத்தி விருப்பமுறுதற்கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு

உதாரணம் வந்தவழிக் காண்க.

மாலை ஏந்திய பெண்டிரு மக்களுங் கேளி ரொழுக்கத்துப் புகற்சிக்கண்ணும் என்பது—தலைவனை எதிர்கொண்டு மங்கலமாக மாலையேந்தி நின்ற பெண்டிரும் மக்களும் கேளிரும் ஒழுகும் ஒழுக்கத்து விருப்பத்தின்கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.

கேளிரும் என்னும் உம்மை எஞ்சி நின்றது. ஈண்டு ஒழுக்கமாவது—சொல்லாது பெயர்ந்தீர் என்றுனும், இளமையும் காமமும் நோக்காது பெயர்ந்தீர் என்றுனும் கூறி இதற்குக் காரணம் என்னை எனத் தலைவன் வந்துழி அவர் நிகழ்த்தும் நிகழ்ச்சி.

உதாரணம்

"உள்ளினென் அல்லனே யானே உள்ளி
நினைந்தனென் அல்லனே பெரிதே நினைந்து
மருண்டனென் அல்லனே உலகத்துப் பண்பே
நீடிய மராத்த கோடுதோய் மலிநிறை*
யிறைத்துணைச் சென்றற் றுங்கம்
மனைப்பெருங்† காமம் மீண்டுகடைக் கொளவே" (குறுந். கக)

என வரும்.

ஏனைய வாயிலோ ரெதிரொடு தொகைஇ என்பது—பெண்டிரு மல்லாத வாயில்களாயினர் எதிர் கூறும் கூற்றும் தலைவன் மாட்டு நிகழும் என்றவாறு.

இவை யெல்லாம் காமப்பொருளாகத் தோன்ற, அவர் செயல் பொருளாகத் தோன்றும்.

உதாரணம் வந்தவழிக் காண்க.

‡பண்ணமைப் பகுதிப் பதினொரு மூன்றும் எண்ணருஞ் சிறப்பிற் கிழவோன் மேன என்பது—செய்தலமைந்த பகுதியினையுடைய முப்பத்துமூன் றிடத்தினும் நிகழும் கூற்று மிக்க சிறப்பினையுடைய கிழவோன் மேலன என்றவாறு.

---

(பாடம்) *மரத்தகோடு தோய்மலிர் நிறை. †ரு அங்கனைப்பெருங்.

‡ பண்ணிக்கொள்ளும் பகுதியாவன, யாம் மறைந்து சென்று இவனைக் கண்ணைப் புதைத்தால் தலைநின்றெழுகும் பரத்தையர் பெயர் கூறுவன் என்று உட்கொண்டு காமக் கிழத்தியாதல் தலைவியாதல் சென்று கண்புதைத்துழித் தலைவன் கூறுவனவும் பள்ளியிடத்து வந்திருந்து கூறுவனவும் பிரிந்த காலத்து இவளை மறந்தவாறு என் என்ற தோழிக்குக் கூறுவனவும், ஊடற்குக் காரணம் என் என்று தோழி வினையவழிக் கூறுவனவும், பிறவுமாம். (தொல். பொருள். கசசு. நச்சி)

மிக்க சிறப்பினையுடைய கிழவோன் மேலன என்றமையால், மிகாத சிறப்பினையுடையார் மாட்டு இவையெல்லாம் ஒருங்கு நிகழ்தலில் என்று கொள்க. செயலமை பகுதி என்றதனான், இவ்விடங்களின் வரும் பொருள் வேறுபாடுகட்கும் இவையே இடமாகக் கொள்க. (௬)

௧௪௫. அவனறி வாற்ற அறியும் ஆகலின்
ஏற்றற் கண்ணும் நிறுத்தற் கண்ணும்
உரிமை கொடுத்த கிழவோன் பாங்கின்
பெருமையில் திரியா வன்பின் கண்ணும்
கிழவனை மகடூஉப் புலம்புபெரி தாகலின்
அலமரல் பெருகிய காமத்து மிகுதியும்
இன்பமும் இடும்பையும் ஆகிய இடத்துங்
கயந்தலை தோன்றிய காமர் நெய்யணி
நயந்த கிழவனை நெஞ்சு புண்ணுறீஇ
நளியி னீக்கிய விளிவரு நிலையும்
புகன்ற உள்ளமொடு புதுவோர் சாயற்கு
அகன்ற கிழவனைப் புலம்புநனி காட்டி
இயன்ற நெஞ்சந் தலைப்பெயர்த் தருக்கி
எதிர்பெய்து மறுத்த ஈரத்து மருங்கினுந்
தங்கிய ஒழுக்கத்துக் கிழவனை வணங்கி
எங்கையர்க் குரையென இரத்தற் கண்ணுஞ்
செல்லாக் காலைச் செல்கென விடுத்தலும்
காமக் கிழத்தி தன்மகத் தழீஇ
ஏமுறு விளையாட் டிறுதிக் கண்ணுஞ்
சிறந்த செய்கை அவ்வழித் தோன்றி
அறம்புரி நெஞ்சமொடு* தன்வர வறியாமைப்
புறஞ்செய்து பெயர்த்தல் வேண்டிடத் தானுந்
தந்தையர் ஒப்பர் மக்களென் பதனால்
அந்தமில் சிறப்பின் மகப்பழித்து நெருங்கினும்†
கொடியோர் கொடுமை சுடுமென ஒடியாது
நல்லிசை நயந்தோர் சொல்லொடு தொகைஇப்
பகுதியின் நீங்கிய தகுதிக் கண்ணுங்
கொடுமை ஒழுக்கங் கோடல் வேண்டி
அடிமேல் வீழ்ந்த கிழவனை நெருங்கிக்

(பாடம்) *உள்ளமொடு. † நெருங்கலும்.

காதல் எங்கையர் காணின் நன்றெண
மாதர் சான்ற வகையின் கண்ணுந்
தாயர் கண்ணிய நல்லணிப் புதல்வனை
மாயப் பரத்தை உள்ளிய வழியுந்
தன்வயின் சிறப்பினு* மவன்வயின் பிரிப்பினும்
இன்னாத் தொல்சூள் எடுத்தற் கண்ணுங்
காமக் கிழத்தி† நலம்பா ராட்டிய
தீமையின் முடிக்கும் பொருளின் கண்ணும்
கொடுமை யொழுக்கத்துத்‡ தோழிக் குரியவை
வடுவறு சிறப்பிற் கற்பில் திரியாமைக்
காய்தலும் உவத்தலும் பிரித்தலும் பெட்டலும்
ஆவயின் வரூஉம் பல்வேறு நிலையினும்
வாயிலின் வரூஉம் வகையொடு தொகைஇக்
கிழவோள் செப்பல் கிழவ தென்ப.

என் - எனின், கற்பின்கண் தலைவிகூற்று நிகழும் இடம் தொகுத் துணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஏற்றல் முதலாக வாயிலின் வரூஉம் வகையொடு கூடத் தலைவி கூறல் உரிய தாகும் என்றவாறு.

அவனறி வாற்ற அறியு மாகலின் ஏற்றற் கண்ணும்§ என்பது— தலைவனது நினைவைத் தலைவி மிக அறியுமாகலின் அவனை யுயர்த்துக் கூறு தற்கண்ணும் தலைவி கூற்று நிகழும்.

உதாரணம்

''நின்ற சொல்லர் நீடுதோன் றினியர்
என்றும் என்றோள் பிரிபறி$ யலரே
தாமரைத் தண்தா தூதி மீமிசைச்
சாந்தின் தொடுத்த¶ தீந்தேன் போலப்
புரைய மன்ற புரையோர் கேண்மை
நீரின் றமையா உலகம் போலத்
தம்மின் றமையா நந்நயந் தருளி
நறுநுதல் பசத்த லஞ்சிச்
சிறுமை உறுபவோ** செய்பறி யலரே.'' (நற்றிணை. க)

என வரும்.

---

(பாடம்) * சிறைப்பினும். † கிழத்தியர். ‡ ஒழுக்கம்.

§ அந்தணர் முதலிய மூவரும் தத்தமக்குரிய வேள்வி செய்யுங்கால் தம்மனைவியர் பலருள்ளும்தமக்கு ஒத்தாளை வேள்விக்கண் உரிமைவகை யான் ஏனை மகளிரின் உயர்த்தச் செய்யுமிடத்தும்.
(தொல். பொருள். கஎச. நச்சி.)

$ பிரிவறி. ¶ கொண்ட ** உறுப.

நிறுத்தற் கண்ணும் என்பது—தலைவனது பண்பினைத் தோழி கூறியவாற்றால் தான் நிறுத்துக் கூறுதற்கண்ணும் என்றவாறு.

உதாரணம்

"முடவுமுதிர்* பலவின் குடமருள் பெரும்பழம்
பல்கிளைத் தலைவன் கல்லாக் கடுவன்
பாடிமிழ் அருவிப் பாறை மருங்கின்
ஆடுமயில் முன்னது† ஆகக் கோடியர்
விழவுகொள் மூதூர் விறலி‡ பின்றை
முழவன்§ போல அகப்படத் தழீஇ
இன்துணைப் பயிருங் குன்ற நாடன்
குடியன் குடையன் கூடுநர்ப் பிரியலன்
கெடுநா மொழியலன்$ அன்பினன் எனநீ
வல்ல கூறி வாய்ப்பதிற் புணர்த்தோய்
நல்லை காணில் காதலந் தோழி
கடும்பரிப் புரவி நெடுந்தேர் அஞ்சி
நல்லிசை நிறுத்த நயவரும் பனுவல்
தொல்லிசை நிறீஇய உரைசால் பாண்மகன்
எண்ணுமுறை நிறுத்த பண்ணின் உள்ளும்
புதுவது புனைந்த¶ திறத்தினும்
வதுவை நாளினும் இனியனால் எமக்கே" (அகம். ௩௫௨)

என வரும்.

உரிமை கொடுத்த கிழவோன் பாங்கின் பெருமையில் திரியா அன்பின் கண்ணும் என்பது—தலைவிக்கு உரிமையைக் கொடுத்த கிழவோன்மாட்டுப் பெருமையிற் றிரியா அன்பின் கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.

உதாரணம்

"நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப்பூக் கொண்டு
பெருந்தே னிழைக்கும் நாடனொடு நட்பே' (குறுந். ௩

என வரும்.

கிழவனை மகடூஉப் புலம்பு பெரிதாகலின் அலமரல் பெருகிய காமத்து மிகுதியும் என்பது—தலைவனைத் தலைவி நீங்கித் தனிமையுறுதல் பெரிதாகலின் ஆண்டு அலமரல் பெருகிய காமத்தின் மிகுதியின்கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.

(பாடம்) * முடமுதிர். † முன்னத். ‡ விறலியர். § மூரல்வன. $ நெடுநா மொழியன். ¶ புணர்ந்த.

உதாரணம்

"நீர்நீ டாடிற் கண்ணும் சிவக்கும்
ஆர்ந்தோர் வாயில் தேனும் புளிக்கும்
தணந்தனி ராயினெம்* இல்லுய்த்துக் கொடுமோ
அந்தண் பொய்கை எந்தை எம்மூர்க்
கடும்பாம்பு வழங்குந் தெருவில்
நடுங்கஞர் எவ்வங் களைந்த எம்மே" (குறுந். கூ௯௪)

எனவும்,

"என்கைக் கொண்டு தன்கண் ஒற்றியுந்
தன்கைக் கொண்டென் நன்னுதல் நீவியும்
அன்னை போல இனிய கூறியும்
கள்வர் போலக் கொடியன் மாதோ
மணியென இழிதரும் அருவிப் பொன்னென
வேங்கை தாய† ஓங்குமலை அடுக்கத்து
ஆடுகழை நிவந்த பைங்கண் மூங்கில்
ஓடுமழை கிழிக்குஞ் சென்னிக்‡
கோடுயர் பிறங்கல் மலைகிழ வோனே" (நற்றிணை. உஅ)

எனவும்,

"மனைநடு வயலை வேழம் சுற்றும்
துறைகேழ் ஊரன் கொடுமை நாணி
நல்லன் என்றும் யாமே
அல்ல னென்னும்என் தடமென் தோளே" (ஐங்குறு. கக)

எனவும்,

"விழுநர் விழப் படுவார்க்§ கமையுமே
வாழுநம் என்னுஞ் செருக்கு" (குறள். ககஙக)

எனவும் வரும்.

இன்பமும் இடும்பையும் ஆகிய இடத்தும் என்பது—தலைவிக்கு இன்பமும் துன்பமும் ஒருங்கு நிகழும் வழியுங் கூற்று நிகழும் என்றவாறு.

உதாரணம்

"இன்கண் உடைத்தவர் பார்வல் பிரிவஞ்சும்
புன்கண் உடைத்தால்$ புணர்வு" (குறள். ௬க௫௨)

எனவும்,

"குக்கூ என்றது கோழி அதனெதிர்
துட்கென் றற்றென் தூஉ¶ நெஞ்சம்
தோள்தோய் காதலர்ப் பிரிக்கும்
வாள்போல் வைகறை வந்தன்றால் எனவே" (குறுந். க௫எ)

எனவும் வரும்.

---

(பாடம்) * தணந்தனையாயின். † வீதரும்.
‡ சேண § படுவோர்க்கு
$ உடைத்தவாம். ¶ றன்வென்றாய.

*கயந்தலை தோன்றிய காமர் நெய்யணி நயந்த கிழவனை நெஞ்சு புண்ணுறீஇ நளியின் நீக்கிய இளிவரு நிலையும் என்பது—புதல்வன் தோன்றிய நெய்யணி நயந்த கிழவனை நெஞ்சு புண்ணுறுமாறு பண்ணிச் செறிவு நீக்கிய இளிவந்த நிலையின்கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.

இளிவந்த நிலையாவது தன்னை அவமதித்தான் என்னுங் குறிப்பு.

உதாரணம்

"கரும்புநடு பாத்திக் கதிர்த்த† ஆம்பல்
சுரும்புபசி களையும் பெரும்புனல் ஊர
புதல்வனை யீன்றவெம் மேனி
முயங்கல்மோ தெய்யநின்‡ மார்புசிதைப் பதுவே"

(ஐங்குறு. சுஉ)

என வரும்.

புகன்ற உள்ளமொடு புதுவோர் சாயற்கு அகன்ற கிழவனைப் புலம்பு நனிகாட்டி இயன்ற நெஞ்சம் தலைப்பெயர்த்து அருக்கி எதிர் பெய்து மறுத்த ஈரத்து மருங்கினும் என்பது—விருப்பமுடைய உள்ளத்தோடே புகுவோரது நலத்தின்பொருட்டு அகன்ற கிழவனைத் தனது தனிமை மிகவுங்காட்டி அவன்மாட்டுச் செல்கின்ற நெஞ்சத்தை மீட்டு அருகப்பண்ணி அவன் காதலித்தாளை எதிர்பெய்துகொண்டு புணர்ச்சியை மறுத்த ஈரத்தின் கண்ணும் கூற்று நிகழும்.

ஈரமாவது முற்றும் மருமை.

"கடல்கண் டன்ன கண்ணகன் பரப்பின்
நிலம்பக வீழ்ந்த வேர்முதிர் கிழங்கின்
கழைகண் டன்ன தூம்புடைத் திரள்கால்
களிற்றுச் செவியன்ன பாசடை மருங்கில்
கழுநிவந் தன்ன கொழுமுகை இடைஇடை
முறுவல் முகத்திற் பன்மலர் தயங்கப்
பூத்த தாமரைப் புள்ளிமிழ் பழனத்து
வேப்புநனை அன்ன நெடுங்கண் நீர்ஞெண்டு
இரைதேர் வெண்குருகு அஞ்சி அயலது
ஒலித்த பகன்றை இருஞ்சேற் றள்ளல்
திதலையின் வரிப்ப ஓடி விரைந்துதன்§
ஈர்மலி மண்ணளைச் செறியும் ஊர
மனைநகு வயலை மரனிவர்$ கொழுங்கொடி

---

* யானைக்கன்று போலும் புதல்வன் பிறத்தலான் உளதாகிய விருப்பத்தையுடைய நெய்யணிக்கு விரும்பிய தலைவனை நெஞ்சை வருத்தித் தன்னைச் செறிதலினின்றும் நீக்கிய இளிவந்த நிலைமைக் கண்ணும். (தொல். பொருள். கசள. நச்சி.)

(பாடம்) † பாத்தியிற் கலித்த. ‡ முயங்கல் அதுவே தெய்யநின். § ஓடாவிரைபுதன். $ மனைநடுவயலை மாணிவர்.

"அரிமலர் ஆம்பலோ டார்தழை தைஇ
விழவாடு மகளிரொடு தழுவணிப் பொலிந்து
மலரேர் உண்கண் மாணிழை முன்கைக்
குறுந்தொடி துடக்கிய நெடுந்தொடர் விடுத்தது
உடன்றனள் போலுநின் காதலி எம்போல்
புல்லுளைக் குடுமிப் புதல்வற் பயந்து
நெல்லுடை நெடுநகர் நின்னின் றுறைய
என்ன கடத்தளோ மற்றே தன்முகத்து
எழுதெழில் சிதைய அழுதனள் ஏங்கி
வடித்தென உறுத்த தித்தப் பல்லூழ்
நொடித்தெனச் சிவந்த மெல்விரல் திருகுபு
கூர்நுனை மழுகிய எயிற்றள்
ஊர்முழுது நுவலுநிற் காணிய சென்மே" (அகம். ௧௭௬)

என வரும்

தங்கிய ஒழுக்கத்துக் கிழவனை வணங்கி எங்கையர்க்கு உரையென இரத்தற்கண்ணும் என்பது—பிறள்மாட்டுத் தங்கிய ஒழுக்கத்துக் கிழவனைத் தாழ்ந்து எங்கையர்க்கு உரையென வேண்டிக்கோடற்கண்ணுங் கூற்று நிகழும் என்றவாறு.

'அகன்றுறை' என்னுங் கலியுள்,

"நோதக்காய் எனநின்னை நொந்தீவார் இல்வழித்
தீதிலேன் யானெனத் தேற்றிய வருதிமன்
ஞெகிழ்தொடி இளையவர் இடைமுலைத்* தாதுசோர்ந்து
இதழ்வனப் பிழந்தநின் கண்ணிவந் துரையாக்கால்
.........................................
.........................................
மண்டுநீர் ஆரா மலிகடல் போதுநின்†
தண்டாப் பரத்தை தலைக்கொள நாளும்
புலத்தகைப் பெண்டிரைத் தேற்றிமற் றியாமெனில்‡
தோலாமோ நின்பொய் மருண்டு" (கலித். எ௧)

எனக் கூறுதலால் தான் தாழ்ந்தவாறும், எங்கையர்க்கு உரை இற்றெனக் கூறியவாறும் காண்க.

"நினக்கே அன்றஃ தெமக்குமார் இனிதே
நின்மார்பு நயந்த நன்னுதல் அரிவை
வேண்டிய குறிப்பினை ஆகி
ஈண்டுநீ யருளாது ஆண்டுறை தல்லே." (ஐங்குறு. ௬௧)

இதுவும் அது.

செல்லாக் காலைச் செல்கென விடுத்தலும் என்பது—தலைவன் போகாத காலத்துப் போகெனக் கூறுதலும் என்றவாறு.

(பாடம்) * இளமுலைத். † போலுநின். ‡ றியாமேல்.

உதாரணம்

"பூங்கண் புதல்வனைப் பொய்பல பாராட்டி
நீங்காய் இகவாய் நெடுங்கடை நில்லாதி
ஆங்கே அவர்வயிற் சென்றீ* அணிசிதைப்பான்
ஈங்கெம் புதல்வனைத் தந்து" (கலித். எக)

என வரும்.

காமக் கிழத்தி தன்மகத் தழீஇ ஏமுறு † விளையாட்டு இறுதிக்கண்ணும் என்பது—காமக்கிழத்தி தலைவி மகனைத் தழீஇ ஏமுற்ற விளையாட்டின் இறுதிக்கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.

உதாரணம்

"நாயுடை முதுநீர்க் கலித்த தாமரைத்
தாதின் அல்லி அயலிதழ்‡ புரையும்
மாசில் அங்கை§ மணிமருள் அவ்வாய்
நாவொடு நவிலா நகைபடு தீஞ்சொல்
யாவரும் விழையும் பொலந்தொடிப் புதல்வனைத்
தேர்வழங்கு தெருவில் தமியோற் கண்டே
கூரெயிற் றரிவை குறுகினள் யாவருங்
காணுநர் இன்மையிற் செத்தனள் பேணிப்$
பொலங்கலஞ் சுமந்த பூண்தாங்கு இளமுலை
வருக மாளஎன் உயிரெனப் பெரிதுவந்து
கொண்டனள் நின்றோட் கண்டுநிலைச் செல்லேன்
மாசில் குறுமக ளெவன்பே துற்றனை
நீயுந் தாயை இவற்கென யான்தன்
கரைய வந்து விரைவனென்¶ கவைஇக்
களவுடம் படுநரிற் கவிழ்ந்துநிலங் கிளையா
நாணி நின்றோள் நிலைகண் டியானும்
பேணினென்** அல்லனோ மகிழ்ந வானத்து
அணங்கருங் கடவுள் அன்னோள் நின்
மகன்தா யாதல் புரைவதாங் கெனவே††" (அகம். கசு)

என வரும்.

சிறந்த செய்கை யவ்வழித் தோன்றி யறம்புரி நெஞ்சமொடு தன் வரவறியாமை புறஞ்செய்து பெயர்த்தல் வேண்டிடத் தானும் என்பது—சிறந்த செய்கையினையுடைய அவ்விடத்துத் தலைவன் தோன்றி அறம்புரி நெஞ்சத்தோடே தனது வரவைத் தலைவி யறியாதாக நின்று தலைவியைப் புறஞ்செய்து அவள் மாட்டுளதாகிய ஊடலைப் பெயர்த்தல் வேண்டின இடத்துந் தலைவிமாட்டுக் கூற்று நிகழும் என்றவாறு.

---

(பாடம்) * சென்றி. † தான் ஏமுறுதற்குக் காரணமான விளையாட்டின் முடிவின்கண்ணும் அவள் எம்மைப் பாதுகாப்பீரோ என வினுயவழி அவனும் அதற்கு உடன்பட்டான் போலக் கூறுவன உளவாதலின், ஏமுறு விளையாட்டு என்றார். (தொல். பொருள். கசஎ. நச்சி.)

(பாடம்) ‡ அவிரிதழ். § அல்கேழ் மணிமருள் செவ்வாய். $ சேர்த்தனள் வேண்டிப். ¶விரைவினள். **பேணினன், ††புரைவதால் எனவே.

அவ்வழி என்றது—தலைவியுங் காமக்கிழத்தியைப் போலத் தன் மகனைக்கொண்டு விளையாடிய வழியும் என்றவாறு.

"மையற விளங்கிய" என்னும் மருதக்கலியுள்,

"பெரும விருந்தொடு கைதூவா வெம்மையும் உள்ளாய்
பெருந்தெருவில் கொண்டாடி ஞாயர் பயிற்றத்
திருந்துபு நீகற்ற சொற்கள் யாம்கேட்ப*
மருந்தோவா நெஞ்சிற் கமிழ்தமயின் றற்றுப்†
பெருந்தகாய் கூறு சில"

எனவும்,

"எல்லிழாய்,
சேய்நின்று நாங்கொணர்ந்த பாணன் சிதைந்தாங்கே
வாயோடி ஏனுதிப் பாடியம் என்றற்று‡
நோய்நாந் தணிக்கும் மருந்தெனப் பாராட்ட
ஓவா தடுத்தடுத்தத் தத்தாஎன் பான்§மாண
வேய்மென்தோள் வேய்த்திறஞ் சேர்த்தலும் மற்றிவன்
வாயுள்ளிப் போகான் அரோ"

எனவும்,

"உள்ளி உழையே ஒருங்கு படைவிடக்
கள்வர் படர்தந் ததுபோலத் தாம்எம்மை
எள்ளுமார் வந்தாரே ஈங்கு" (கலித். அக)

எனவும், இவ்வாறு வரும்.

தந்தையர் ஒப்பர் மக்கள் என்பதனால், அந்தமில் சிறப்பின் மகப்பழித்து$ நெருங்கினும் என்பது—தந்தையரை மக்கள் ஒப்பர் என்பதனால் அந்தமில்லாத சிறப்பினையுடைய மக்களைப் பழித்தற் கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.

"மைபடு சென்னி மழகளிற் றோடை" என்னும் மருதக்கலியுள்,

"வீதல் அறியா விழுப்பொருள் நச்சியார்க்கு
ஈதன்¶மாட் டெர்த்தி பெருமமற் றெவ்வாதி
மாதர்மெல் நோக்கின் ** மகளிரை நுந்தைபோல்
நோய்கூர நோக்காய் விடல்" (கலித். அ௩)

என வரும்.

கொடியோர் கொடுமை சுடும் என ஒடியாது நல்லிசை நயந்தோர் சொல்லொடு தொகைஇப் பகுதியின் நீங்கிய தகுதிக் கண்ணும் என்பது—கொடியாரது கொடுமை சுடாநின்றதெனப் புணர்ச்சியை ஒடியாது புகழை விரும்பினோர் சொல்லோடே ஒருப் பட்டு வேறுபடுதலின் நீங்கிய தகுதிக்கண்ணும் என்றவாறு.

---

(பாடம்) * 'யான் கேட்க' † 'அமிழ்தயின்றற்றுப்'
‡ 'பாடியோமென்றற்றல்' § என்பவன்.

$ மகனுக்கும் இது படும் என்று கருதிக் கூறலில் தலைவனைப்பழித்து என்னாது, மகப் பழித்து என்றார். (தொல். பொருள். கசஎ. நச்சி.)

¶ 'நச்சியார் காதல்.' ** 'மானேக்கின்.'

அஃதாவது, அக்காலத்துத் தக்கதறிதல். புகழை விரும்பினோர் சொல்லும் சொல்லாவது, காமம் விரும்பும் பரத்தையரைப்போலாது அறத்தை விரும்புதல்.

உதாரணம்

'யாரிவனெங் கூந்தல்' என்னும் மருதக்கலியுள்,

"மாண மறந்துள்ளா நாணிலிக் கிப்போர்*
புறஞ்சாய்ந்து காண்டைப்பாய்† நெஞ்சே உறழ்ந்திவனைப்
பொய்ப்ப விடேஎ மென‡நெருங்கில் தப்பினேன்
என்றடி சேர்தலு முண்டு" (கலித். அசு)

என்பது ஆற்றுமை வாயிலாகப் பகுதியி னீங்கிய தகுதி.

பாணன் முதலானோர்க்கு வாயில் நேர்ந்தது வந்தவழிக் காண்க.

§கொடுமை யொழுக்கங் கோடல் வேண்டி யடிமேல் வீழ்ந்த கிழவனை நெருங்கிக் காத லெங்கையர் காணின் நன்றென மாதர் சான்ற வகையின் கண்ணும் என்பது—தலைவனது கொடுமை யொழுக்கத்தினைத் தலைவியே பொறுக்கவேண்டி அவளடிமேல் வீழ்ந்தவனை நெருங்கி நின்மாட்டுக் காதலையுடைய எங்கையர் காணின் இப்பணிதல் நன்று மெனக் காதலமைந்த வகையின் கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.

'நில்லாங்கு நில்லா' என்னும் மருதக்கலியுள்,

"நல்லாய், பொய்யெல்லாம் ஏற்றித் தவறு தலைப்பெய்து
கையொடு கண்டாய் பிழைத்தேன்; அருளினி;
அருளுகம் யாம்யாரே மெல்லா தெருள
அளித்துநீ பண்ணிய பூவெல்லா மின்னும்
விளித்துநின் பாணனோ டாடி யளித்தி§
விடலைநீ நீத்தலின்¶ நோய்பெரி தேய்க்கும்
நடலைப்பட் டெல்லா நின் பூழ்." (கலித். கூ)

இதனுள் 'கையொடு கண்டை பிழைத்தேனருள்' என அடிமேல் வீழ்ந்தவாறும், 'அருளுகம் யாம்யாரேம்' எனக் காதலமைந்தவாறும் 'நீ நீக்கலின் நின் பூவெல்லாம் நடலைப்பட்டு நோய்பெரிதேய்க்கும்' அவற்றை யின்னும் விளித்து நின் பாணனோடாடி யளித்துவிடும் எனவும், இப் பணிதல் நின் பெண்டிர்க்கு நன்றுகுமே எனவும் கூறிய வாறு காண்க. ஈண்டுப் பூழ் என்றது குறிப்பினுற் பரத்தையரை.

தாயர் கண்ணிய நல்லணிப் புதல்வனை மாயப் பரத்தை உள்ளியவழியும் என்பது—தாயரைக் கிட்டிய நல்ல அணியை யுடைய புதல்வனை மாயப் பரத்தை குறித்த வழியுங் கூற்று நிகழும் என்றவாறு.

---

(பாடம்) * 'குப்போர்' † 'கண்டைப்பாய்.' ‡ 'விடேனென.'

§ காதல் எங்கையர் மாதர் சான்ற என்பனவற்றுல் துனி கூறினோர், எனவே யாங்கண்டதனுற் பயனின்று என்றார். (தொல். பொருள். கசஎ. நச்சி.) § 'அளித்து.' ¶ நீக்கலின்,

புதல்வனைப் பரத்தைமை குறித்தலாவது, 'தலைவன் புறப்பெண்டிர் மாட்டுப் போகியவழி வெகுளுமாறு போலப் புதல்வனையும் அவரிடைச் சென்றவழி வெகுளல். கண்ணிய நல்லணி யெனவே அவர் கொடுத்த நல்லணி யென்பது பெறுதும். பரத்தைமை உள்ளாதவழி இவள் மாட்டுக் குறிப்பு நிகழாதாம். மாயமென்பது பரத்தைக்குப் பண்பாகி இனஞ் சுட்டாது வந்தது.

## உதாரணம்

"உறுவளி தூக்கும் உயர்சினை மாவின்
நறுவடி யாரிற் றவைபோ லழியக்
கரந்தியான் அரக்கவுங் கைநில்லா வீங்கிச்
சுரந்தஎன் மென்முலைப் பால்பழு தாகநீ
நல்வாயிற் போத்தந்த பொழுதினான்* எல்லா
கடவுட் கடிநகர் தோறும் இவனை
வலங்கொளீஇ வாவெனச் சென்றாய் விலங்கினை
ஈரமி லாத இவன்தந்தை பெண்டிருள்
யாரில் தவிர்ந்தனை கூறு;

நீருள், அடைமறை யாயிதழ்ப் போதுபோற் கொண்ட
குடைநிழல் தோன்றுநின் செம்மலைக் காணூஉ
இவன்மன்ற யான்நோவ உள்ளங்கொண் டுள்ளா
மகனல்லான் பெற்ற மகனென் றகநகர்
வாயில் வரை இறந்து போத்தந்து† தாயர்
தெருவில் தவிர்ப்பத் தவிர்ந்தனன் மற்றவர்
தத்தம் கலங்களுட் கையுறை என்றிவர்க்கு
ஒத்தவை ஆராய்ந்‡ தணிந்தார்; பிறன் பெண்டிர்,
ஈத்தவை கொள்வானும்§ இஃதொத்தன் சீத்தை
செறுதக்கான் மன்ற பெரிது.

சிறுபட்டி, ஏதிலார் கைஎம்மை எள்ளுபு நீ தொட்ட
மோதிரம் யாவோயாங் காண்கு;

அவற்றுள், நறுஇதழ் கண்டன்ன செவ்விரற் கேற்பச்
சுருவே றெழுதிய மோதிரம் தொட்டாள்
குறியறிந்தேன் காமன் கொடியெழுதி என்றுஞ்
செறியாப் பரத்தை இவன் தந்தை மார்பிற்
பொறியொற்றிக் கொண்டாள்வல் என்பது தன்னை
அறீஇய செய்த வினை ;

அன்னையோ, இஃதொன்று :
முந்தை$ கண்டும் எழுகல்லா தென்முன்னர்
வெந்தபுண் வேலெறிந் தற்று¶ இஃதொன்று
தந்தை இறைத்தொடி மற்றவன் தன்கைக்கண்
தந்தாரியார் எல்லா இது;

என்னொத்துக் காண்க பிறரும் **இவற் கென்னும்
தன்னலம் பாடுவி தந்தாளா நின்னை
இதுதொடு கென்றவர் யார்;

---

(பாடம்) * 'போழ்தினான்' † 'போதந்து' ‡ ஆய்பாய்ந்.
§ 'கொள்வார்' $ முந்தையே. ¶ 'தற்றால்'
** 'இவற்கெண்ணும்'

அஞ்சாதி, நீயுந் தவறிலை நின்கை இதுதந்த
பூவெழில் உண்கண் அவளுந் தவறிலள்
வேனிற் புனலன்ன நுந்தையை நோவார்யார்
மேனின்றும் எள்ளி இதுஇவன் கைத்தந்தாள்
தானியாரோ என்று வினவிய நேரப்பாலேன்
யானே தவறுடை யேன்'' (கலித். அ௪)

என வரும்.

* தன்வயிற் சிறப்பினும் அவன் வயிற் பிரிப்பினும் இன்னாத் தொல்சூள் எடுத்தற்கண்ணும் என்பது—தன்மாட்டு நின்ற மிகுதியானும் அவன்மாட்டு நின்ற வேறுபாட்டானும் இன்னாத பழைய சூளுறவைத் தலைவி யெடுத்தவழியுங் கூற்று நிகழும் என்றவாறு.

தலைமகள் மாட்டு மிகுதி யாதோ வெனின்,

''மனைவி உயர்வுங் கிழவோன் பணிவும்
நினையுங் காலைப் புலவியுள் உரிய'' (பொருளியல். ௩௨)

என்றாராகலான், அக்காலத்து மிகுதியுளதாம்.

''தேர்மயங்கி வந்த தெரிகோதை அந்நல்லார்
தார்மயங்கி வந்த தவறஞ்சிப் போர்மயங்கி
நீயுறும்† பொய்ச்சூள் அணங்காகின் மற்றினி
யார்மேல் விளியுமோ கூறு'' (கலித். அஅ)

என வரும்.

காமக்கிழத்தி நலம் பாராட்டிய தீமையின் முடிக்கும் பொருளின் கண்ணும் என்பது—காமக் கிழத்தி நலத்தினைப் பாராட்டிய தீமையின் முடிக்கும் பொருளின் கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.

நலம்பாராட்டுவாள் தலைவி: அவள் பாராட்டுதல் தீமைபற்றி வருதலான், அதனாற் சொல்லிமுடிப்பது பிறபொருளாயிற்று.

உதாரணம்

''கண்டிகும் அல்லமோ கொண்கநின் கேளே
ஒள்ளிழை உயர்மணல் வீழ்ந்தென
வெள்ளாங் குருகை வினவு வோளே.'' (ஐங்குறு. ௧௨௨)

இதனுன், அவள் மிக்க இளமைகூறித் தலைவனைப் பழித்தாளாம்; ஒருமுகத்தாற் புலந்தவாறு. இன்னுந் தலைமகள் நலம்பாராட்டியவழிக் கூறவும் பெறும்.

---

* தன்வயிற் சிறைப்பினும் - தலைவனில்தான் புதல்வற்குச் சிறந்தாளாகி அத்தலைவன்மாட்டும் அவன் காதலித்த பரத்தையர் மாட்டும் செல்லாமல் புதல்வனைத் தன்பாற் சிறைசெய்தற்கண்ணும் (தொல் - பொருள். ௧௪௭. நச்சி.)

† 'நீ கூறும்'

அணில்பல் அன்ன கொங்குமுதிர் முண்டகத்து
மணிக்கேழ் அன்ன மாநீர்ச் சேர்ப்ப
இம்மை மாறி மறுமை யாயினும்
நீயா கியர்என் கணவனை
யான் ஆகியர்நின் நெஞ்சுநேர் பவளே" (குறுந். சக)

என வரும்.

கொடுமை ஒழுக்கத்துத் தோழிக் குரியவை வடுவறு சிறப்பின் இரியாமைக் காய்தலும் உவத்தலும் பெட்டலும் ஆவயின் வரூஉம் பல்வேறு நிலையினும் என்பது—தலைவி கொடுமையொழுக் கத்துத் தோழிக்குக் கூறுதற் குரியவை குற்றமற்ற சிறப்பினை யுடைய கற்பின்கண் திரியாது தலைவனைக் காய்தலும் உவத்தலும் நீக்கி நிறுத்தலும் பேணிக்கோடலும் அவ்விடத்து வரும் பலவாங் வேறுபட்டு வரு நிலையினும் தலைவி கூற்று நிகழும் என்றவாறு.

தோழிக்குரியவை என்றதனால் தோழிக்குக் கூறத்தகாதனவும் உள என்று கொள்க.

உதாரணம்

"நன்னலந் தொலைய நலமிகச் சாஅய்
இன்னுயிர் கழியினும் உரையல் அவர்நமக்
கன்னையும் அத்தனும் அல்லரோ தோழி
*புல்லிய தெவனோ அன்பிலங் கடையே." (குறுந். கூக)

இது காய்தல் பற்றி வந்தது,

"தாமவர் திருந்தெயி றுண்ணவும் அவர்நம
தேந்துமுலை யாகத்துச் சாந்துகண் படுப்பவுங்
கண்டுசுடு பரத்தையின் வந்தோற் கண்டும்
ஊடுதல் பெருந்திரு உறுகெனப்
பீடுபெறல் அருமையின் முயங்கி யேனே"

எனவும்,

"காணுங்கால் காணேன் தவறாய காணாக்காற்
காணேன் தவறல் லவை" (குறள். கஉஅசு)

எனவும் இவை உவத்தல் பற்றி வந்தன.

"அடும்பவிழ் அணிமலர் சிதைஇ மீன் அருந்துந்
தடந்தாள் நாரை யிருக்கும் எக்கர்த்
தண்ணந் துறைவற் றொடுத்து நன்னலங் கொள்வாம்
இடுக்கண் அஞ்சி இரந்தோர் வேண்டக்
கொடுத்தவை தாஎனக் கூறலின்
இன்னா தோநம் மன்னுயிர் இழவே."

இது பிரித்தல் பற்றி வந்தது.

---

(பாடம்) * புலவி அஃ.

''நீரார்* செறுவில் நெய்தலொடு நீடிய
நேரிதழ் ஆம்பல் நிரையிதழ் கொண்மார்
சிரார் சேயிழை ஒலிப்ப ஓடும்
ஓரைமகளிர் ஓதை வெரீஇ† யெழுந்து
ஆர லார்கை அஞ்சிறைத் தொழுதி
உயர்ந்த பொங்கர் உயர்மரம் ஏறி
அமர்க்கண் மகளிர் அலப்பிய அந்நோய்
தமர்க்குரைப் பன்போற் பல்குரல் பயிற்றும்
உயர்ந்த போரின்‡ ஒலிநல் லூரன்
புதுவோர்ப் புணர்தல் வெய்ய னாயின்
வதுவை நாளால் வைகலும் அஃதியான்
நோவேன் தோழி நோவாய் நீயென
எற்பார்த் துறுவோய் கேளினித் தெற்றென;
எல்வினை வருதி எவன்குறித் தனையெனச்
சொல்லா திருப்பேன் ஆயின் ஒல்லென
விரிஉளைக் கலிமான் தேரொடு வந்த
விருந்தெதிர் கோடலின் மறப்பல் என்றும்;
வாடிய பூவொடு வாரல்எம் மனையென
ஊடி யிருப்பே னாயின் நீடா
அச்சா றுக உணரிய§ வருபவன்
பொய்ச்சூள் அஞ்சிப் புலவேன் ஆகுவல்;
பகலாண் டல்கினை பரத்த என்றியான்$
இகலி இருப்பே னாயின் தான்தன்
முதல்வன்பெரும்பெயர் முறையுளிப் பெற்ற
புதல்வற் புல்லிப் பொய்த்துயில் துஞ்சும்;
ஆங்க;
விருந்தெதிர் கொள்ளவும் பொய்ச்சூள் அஞ்சவும்
அரும்பெறற் புதல்வனை முயங்கக் காணவும்
ஆக் கவின்¶ தொழியும்என் புலவி தாங்கா
தவ்வவ் விடத்தான் அவையவை காணப்
பூங்கண் மகளிர் புனைநலஞ் சிதைக்கும்
மாய மகிழ்நன்** பரத்தைமை
நோவேன் தோழி கடன்நமக் கெனவே.'' (கலித். எ௫)

இது பெட்பின்கண் வந்தது.

''நகையா கின்றே தோழி நெருநல்
மணிகண் டன்ன துணிகயந் துளங்க
இரும்பியன் றன்ன கருங்கோட் டெருமை
ஆம்பல் மெல்லடை கிழியக் குவளைக்
கூம்புவிடு பன்மலர் மாந்திக் கரைய
காஞ்சி நுண்டா தீர்ம்புறத் துறைப்ப††
மெல்கிடு கவுள அல்குநிலை புகுதரும்
தண்துறை யூரன் தண்டார் அகலம்

(பாடம்) * நீரேந். † வெரீ. ‡ போரின்.
§ றுகப்புணரிய. $ பரத்தையென்றி. ¶ ஆங்கலாகி.
** மகிணன். †† திரைப்ப.

வதுவை நாளணிப் புதுவோர்ப் புணரிய
பரிவொடு வரூஉம் பாணன் தெருவில்
புனிற்றுப் பாய்ந்தெனக் கலங்கி அழிபட்*
டெம்மனை புகுதந் தோனே அதுகண்டு
மெய்ம்மலி உவகை மறையினென் எதிர்சென்
றிம்மனை யன்றஃ தும்மனை என்ற
என்னுந் தன்னும் நோக்கி
மம்மர் நெஞ்சினன் தொழுது† நின் றதுவே." அகம். (௫௬)

இது மேற்கூறியவாற்று னன்றிப் பிறவாற்றான் வந்தது.

"ஒலிபுனல் ஊரனை ஒருதலை யாக
வலிநமக் காவது வலியென் றொழியப்
பந்தர் மாட்டிய பரூஉச்சுடர் விளக்கத்துக்
கந்த முனித்தலைத் தும்பி ஆர்ப்பக்
காலை கொட்டிய தவர்தோற் சிறுபறை
மாலை யாமத்து மதிதர விடாது
பூண்டுகிடந்து வளரும் பூங்கட் புதல்வனைக்
காண்டலுங் காணான்தன் கடிமனை யானே"

எனவரும்.

‡வாயிலின் வரூஉம் வகையொடு தொகைஇக் கிழவோன் செப்பல் கிழவதென்ப என்பது—வாயில்கள்மாட்டு வரூஉங் கூற்றின்வகை யுளப்படத் தலைவி கூற்று நிகழும் என்றவாறு.

வாயில்களாவார்:—பார்ப்பார், பாங்கன், தோழி, செவிலி, பாணன், விறலி, இளையர், விருந்தினர், கூத்தர், அறிவர், கண்டோர்.

இவருள் தோழி வாயிலாதல் மேற்கூறுதலின் ஒழிந்த வாயில்கள் ஈண்டுக் கொள்ளப்படும்.

"அன்னாய் இவனோர் இளமா ணாக்கன்
தன்னூர் மன்றத் தென்னன் கொல்லோ
இரந்தூண் நிரம்பா மேனியொடு
விருந்தின் ஊரும் பெருஞ்செம் மலனே." (குறுந். ௩௩)

இது பாணன் வாயிலாக வந்துழிக் கூறியது.

"நீகண் டனையோ கண்டார்க் கேட்டனையோ
ஒன்று தெளிய நசையின மொழிமோ
வெண்கோட் டியானை சோணை படியும்
பொன்மலி பாடலி பெறீஇயர்
யார்வாய்க் கேட்டனை காதலர் வரவே." (குறுந். எ௫)

இது வருகின்றான் என்ற உழையர்க்குக் கூறியது.

---

(பாடம்) * பழிபட். † மருண்டு.

‡ வாயில்களாவார் செய்யுளியலுட் கூறும் பாணன் முதலியோர். வகை என்றதனான் ஆற்றாமையும் புதல்வனும் ஆடை கழுவுவாளும் பிறவும் வாயிலாதல் கொள்க. (தொல். பொருள். கசஎ. நச்சி.)

"ஆடியல் விழவின் அழுங்கல் மூதூர்
உடையோர் பான்மையிற்* பெருங்கை தூவா
வறனில் புலத்தி யெல்லித்† தோய்த்த
புகாப்புகர் கொண்ட புன்பூங்‡ கலிங்கமொடு
வாடா மாலை துயல்வர ஓடிப்
பெருங்கயிறு நாலும் இரும்பனம் பிணையல்
பூங்கண் ஆயம் ஊக்க§ ஊங்காள்
அழுதனள் பெயரும் அஞ்சி லோதி
நல்கூர் பெண்டின் சில்வளைக் குறுமகள்
ஊசல் உறுதொழிற் பூச லூட்டா
நயனின் மாக்களொடு குழீஇப்$
பயனின் றம்மவிவ் வேந்துடை அவையே" (நற்றிணை. ௬0)

இது பாங்கனைக் குறித்துக் கூறியது.

"நெய்யுங் குய்யும் ஆடி மையொடு
மாசுபட் டன்றே கலிங்கமுந் தோளுந்
திதலை மென்முலைத் தீம்பால் பிலிற்றப்
புதல்வர்ப் புல்லிப் புனிறுநா றும்மே
வாலிழை மகளிர் சேரித் தோன்றும்
தேரோற் கொத்தனெம் அல்லேம் இதனாற்¶
பொன்புரை நரம்பின் இன்குரற் சீறியாழ்
**எழாஅல் வல்லை யாயினுந் தொழாஅல்
புரையோ ரன்ன புரையு நட்பின்
இளையோர் கூம்புகை மருள்வோர் ஆங்குக்
கொண்டுசெல் பாணநின் தண்துறை யூரனைப்
பாடுமனைப் பாடல் கூடாது நீடுநிலைப்
புரவியும் பூணிலை†† முனிகுவ
விரகில மொழியல்யாம் வேட்டத்தில்‡‡ வழியே."
(நற்றிணை. ௩௮0)

§§'வாயிலின் வரூஉம் வகை' என்றமையான், தன் ஆற்றாமையும் வாயில்களாக் கொள்ளப்படும் என்பது பெற்றாம்.

"புல்லேன் மகிழ்ந புலத்தலும் இல்லேன்$$
கல்லா யானைக் கடுந்தேர்ச் செழியன்

---

(பாடம்) * பன்மையினி. † எல்லில். ‡ பூளைபூங். § முயங்க. $ கெழீஇப். ¶ பண்ணிலை.

** இங்கிருந்து $1\frac{3}{4}$ பக்கம் ஏட்டில் எழுதப்பெறாது விடப்பட்டுளது. 'புணர்ந்துடன் போகிய' என்ற சூத்திரமும், 'தோழியுள்ளுறுத்த' என்ற சூத்திரமும், 'பெறற்கரும்' என்ற சூத்திரமும், அதன் முதலிரண்டு அடிகளின் உரையும் மறைந்து விட்டனபோலும். இப்பகுதிக்கு நச்சினார்க்கினியத்தைத் தழுவி உரையெழுதி (இ. மு. சோ.) சேர்த்திருக்கின்றனர். இங்கே தரப்படுவது அவ்வாறு சேர்க்கப் பெற்றதேயாம். 'குற்றமில்லாத் தலைகமனைச் சுட்டிய தெய்வக் [கடன்] கொடுக்க வேண்டுமென்றனாம்' என்பது தொடங்கி யேட்டுப் பிரதியிற் காணப்படுகின்றது.

†† இல்லேன் இதனால். ‡‡ வேட்டதில்.

§§ இதில் ௩ஆவது அடிமுதல் ௧0ஆவது அடிவரை நற்றிணைப் பதிப்புக்களில் இல்லை $$ இலனே எ.

படைமாண் பெருங்குள மடைநீர் விட்டெனக்
காலணைந் ததிரிய கணைக்கோட்டு வாளை
அள்ளலங் கழனி உள்வா யோடிப்
பகடுசே றுதைத்த புள்ளிவெண் புறத்துச்
செஞ்சால் உழவர் கோற்புடை மதரிப்
பைங்காற் செறுவின் அணைமுதற் புரளும்
வாணன் சிறுகுடி அன்ன என்
கோல்நேர் எல்வளை நெகிழ்த்த* நும்மே.'' (நற்றிணை. கூச0)

இஃது ஆற்றாமை வாயிலாகச் சென்றாற்குக் கூறியது.

'புள்ளிமி முகல்வயின்' என்ற மருதக்கலியுள்,

''பூங்கட் புதல்வனைப் பொய்பா ராட்டி
நீங்காய் இகவாய் நெடுங்கடை நில்லாதி
ஆங்கே அவர்வயின் சென்றீ அணிசிதைப்பான்
ஈங்கெம் புதல்வனைத் தந்து'' (கலித். எக)

என்று புதல்வன் வாயிலாகக் கூறியது காண்க. (கூ)

கசகூ. புணர்ந்துடன் போகிய கிழவோள் மனையிருந்து
இடைச்சுரத் திறைச்சியும் வினையும் சுட்டி
அன்புறு தக்க கிளத்தல் தானே
கிழவோன் செய்வினைக்கு அச்ச மாகும்.

என்—எ னின், இதுவும் தலைமகட்குரிய கிளவிக்கட் படும் இலக்கணம் நுதலிற்று.

(இ - ள்.) களவிற்புணர்ந்து உடன்போகிய தலைமகள் கற்புக்கடன்பூண் டொழுகுங்காலத்து மனைக்கணிருந்து தான் முன்னர் இடைச்சுரத்தில் தலைவனுடன் கண்ட கருப்பொருண் முதலியவற்றையும் அவற்றின் தொழிலையும் குறித்துக் கிழவன் அன்புறுதற்குத் தக்கவற்றைக் கூறுதலே தலைமகன் இயற்றுந் தொழிற்கு அஞ்சும் அச்சமாகும் என்றவாறு.

எனவே புணர்ந்துடன் போகாத தலைவி அங்ஙனமிருந்து கூறல் தலைவற்கு அவன் செய்வினைக்கண் அச்சமாகாதென்றவாறு.

உதாரணம்

''கான யானை தோல்நயந் துண்ட
பொரிதாள் ஓமை வளிபொரு நெடுஞ்சினை
அலங்கல் உலவை யேறி ஒய்யெனப்
புலம்புதரு குரல புறவுப்பெடை பயிரும்
அத்தம் நண்ணிய அங்குடிச் சீறூர்ச்
சேர்ந்தனர் கொல்லோ தாமே யாம்தமக்கு

(பாடம்) * ஞெகிழ்த்த

ஒல்லேம் என்ற தப்பற்குச்
சொல்லா தகறல் வல்லு வோரே.''   (குறுந். எக)

இதனுள் அஞ்சியவாறு காண்க. பிறவும் அன்ன.   (எ)

கசஎ. தோழியுள் உறுத்த வாயில் புகுப்பினும்
ஆவயின் நிகழும் என்மனார் புலவர்.

என்—எனின், இதுவுமது.

(இ - ள்.) தோழியுள்ளிட்ட வாயில்களைப் போகவிட்ட அக் காலத்தும் முற்கூறிய நிகழுமென்றுரைப்பர் புலவர் என்றவாறு.

உதாரணம் வந்தவழிக் காண்க.   (அ)

கசஅ. பெறற்கரும் பெரும்பொருள் முடிந்தபின் வந்த
தெறற்கரு மரபிற் சிறப்பின் கண்ணும்
அற்றமழி வுரைப்பினும் அற்றம் இல்லாக்
கிழவோற் சுட்டிய தெய்வக் கடத்தினுஞ்
சீருடைப் பெரும்பொருள் வைத்தவழி மறப்பினும்
அடங்கா ஒழுக்கத் தவன்வயின் அழிந்தோளை
அடங்கக் காட்டுதற் பொருளின் கண்ணும்
பிழைத்துவந் திருந்த கிழவனை நெருங்கி
இழைத்தாங் காக்கிக் கொடுத்தற் கண்ணும்
வணங்கியல் மொழியான் வணங்கற் கண்ணும்
புறம்படு விளையாட்டுப் புல்லிய புகர்ச்சியுஞ்*
சிறந்த புதல்வனைத் தேராது புலம்பினும்
மாணலந் தாவென வகுத்தற் கண்ணும்
பேணு ஒழுக்கம் நாணிய பொருளினுஞ்
சூள்வயின் †திறத்தால் சோர்வுகண் டழியினும்
பெரியோர் ஒழுக்கம் பெரிதெனக் கிளந்து
பெறுதகை யில்லாப் பிழைப்பினும் அவ்வழி‡
உறுதகை யில்லாப் புலவியின் மூழ்கிய
கிழவோள் பால்நின்று கெடுத்தற் கண்ணும்
உணர்ப்புவயின் வாரா ஊடலுற் றோள்வயின்
உணர்த்தல் வேண்டிய கிழவோன் பால்நின்று
தான்வெகுண் டாக்கிய தகுதிக் கண்ணும்

(பாடம்) * புகற்சியுஞ். † சூள்நயத். ‡ அவ்வயின்.

அருமைக் காலத்துப் பெருமை காட்டிய
எளிமைக் காலத் திரக்கத் தானும்
பாணர் கூத்தர் விறலியர் என்றிவர்
பேணிச் சொல்லிய குறைவினை எதிரும்
நீத்த கிழவனை நிகழுமாறு படீஇயர்
காத்த தன்மையிற் கண்ணின்று பெயர்ப்பினும்
பிரியுங் காலத் தெதிர்* நின்று சாற்றிய
மரபுடை எதிரும் உளப்படப் பிறவும்
வகைபட வந்த கிளவி யெல்லாந்
தோழிக் குரிய என்மனார் புலவர்.

என் - எனின், கற்பின்கண் தோழிகூற்று நிகழும் இடம் தொகுத்துணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) பெறற்கரும் சிறப்பு முதலாக மரபுடை எதிரும் உளப்படப் பிறவும் ஈருக மொழியப்பட்டவை யாவும் தோழிக்குரிய என்று கூறுவர் புலவர் என்றவாறு.

பெறற்கரும் பெரும்பொருண் முடிந்தபின் வந்த தெறற்கரு† மரபிற் சிறப்பின்கண்ணும் என்பது—பெறுதற்கு அரிய பெரும்பொருளை முடித்த பின்னர்த் தோன்றிய தெறுதற்கரிய மரபு காரணத்தால் தலைவனைச் சிறப்பித்துக் கூறுமிடத்தும் தோழிகூற்று நிகழும் என்றவாறு.

பெரும்பொருள்—ஈண்டு வரைவிற்கேற்றது. தெறுதல்—அழல நோக்குதல்.

உதாரணம்

''அயிரை பரந்த அந்தண் பழனத்து
ஏந்தெழில் மலர்ந்த தூம்புடைத் திரள்கால்
ஆம்பல் குறுநர் நீர்வேட் டாங்கிவள்
இடைமுலைக் கிடந்து நடுங்க லானீர்
தொழுதுகாண் பிறையில் தோன்றி யான்உமக்கு
அரியம் ஆகிய காலைப்
பெரிய நோன்றனிர் நோகோ யானே'' (குறுந். ௧௭௮)

என வரும்.

---

* காலை எதிர்.

† தலைவியையும் தலைவனையும் வழிபாடாற்றுதலின் 'தெறற்கரு மரபின்' என்றார். தெறுதல் - அழன்று நோக்குதல். சிறப்பு, இவனை நீ ஆற்றுவித்தலின் எம் உயிர் தாங்கினேம் என்றற்போல்வன.

(தொல். பொருள். ௧௪௦. நச்சி.)

அற்றமழிவு உரைப்பினும் என்பது—முற்காலத்துற்ற வருத்தத்தின் நீங்கினமை கூறினும் என்றவாறு.

உதாரணம்

"எரிமருள் வேங்கை இருந்த தோகை
இழையணி மடந்தையில் தோன்று நாட
இனிதுசெய் தனையால் நுந்தை வாழியர்
நன்மனை வதுவை அயரஇவள்
பின்னிருங் கூந்தல் மலரணிந் தோயே" (ஐங்குறு. உ௯௪)

என வரும்.

அற்றம் இல்லாக் கிழவோற் சுட்டிய தெய்வக்கடத்தினும் என்பது—குற்றமில்லாத தலைமகனைச் சுட்டிய தெய்வக்கடன் கொடுத்தற்கண்ணும் என்றவாறு.

உதாரணம்

"நெஞ்சமொடு மொழிகடுத் தஞ்சுவர நோக்குந்
தாயவட் டெறுதரக் காக்கவெம் மகனெனச்
சிறந்த தெய்வத்து மறையுறை குன்ற
மறைந்துநின் றிறைஞ்சினம் பலவே
பெற்றனம் யாமே மற்றதன் பயனே."

"வாழி ஆதன் வாழி அவினி
வேந்துபகை தணிக யாண்டுபல நந்துக
எனவேட் டோளே யாயே யாமே
மலர்ந்த பொய்கை முகைந்த தாமரைத்
தண்டுறை ஊரன் வரைக
எந்தையுங் கொடுக்க எனவேட் டேமே." (ஐங்குறு. ௬)

"திண்தேர் நள்ளி கானத் தண்டர்
பல்ஆ பயந்த நெய்யில் தொண்டி
முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெண்சோறு
ஒருகலத் தேந்தினுஞ் சிறிதென் தோழி
பெருந்தோள் நெகிழ்சூழ்ந்த† செல்லற்கு
விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே" (குறுந். உ௧0)

என வரும்.

சீருடைப் பெரும்பொருள் வைத்தவழி மறப்பினும் என்பது—சீருடைய பெரும்பொருளாவது இற்கிழமை: அதனைத் தலைமகண்மாட்டு வைத்தவிடத்து அவனை மறந்து ஒழுகினவழியும் என்றவாறு,

அஃதாவது அறத்தினானதல் பொருளினானதல் அவனுக்காகிய இசையுங் கூத்தும் முதலியவற்றான் அத்திறம் மறத்தல். அவ்வழியுந் தோழிகூற்று நிகழும்.

(பாடம்) * எழுகலத். † நெகிழ்த்த.

உதாரணம்

"பொங்குதிரை பொருத வார்மணல் அடைகரைப்
புன்கால் நாவற் பொதிப்புற இருங்கனி
கிளைசெத்து மொய்த்த தும்பி பழஞ்செத்துப்
பல்கால் அலவன் கொண்டகோட் கூர்ந்து*
கொள்ளா நரம்பின் இமிரும் பூசல்
இரைதேர் நாரை யெய்தி† விடுக்குந்
துறைகெழு மாந்தை அன்ன இவள்நலம்
பண்டும் இற்றே கண்டிசின் தெய்ய
உழையிற் போகா தளிப்பினுஞ் சிறிய
ஞெகிழ்ந்த கவின்நலங்‡ கொல்லோ மகிழ்ந்தோர்
கட்களிய §செருக்கத் தன்ன
காமங் கொல்லிவள் கண்பசந் ததுவே"

என வரும்.

அடங்கா வொழுக்கத் தவன்வயி னழிந்தோளை யடங்கக் காட்டுதற் பொருளின்கண்ணும் என்பது - அடங்கா வொழுக்கத்தையுடைய தலைவன்மாட்டு மனன் அழிந்தோளை யடங்கக் காட்டுதற்கு ஏதுவான பொருட்பக்கத்தினும் கூற்று நிகழும் என்றவாறு.

உதாரணம்

"இதுமற் றெவனோ தோழி துனியிடை
இன்னர் என்னும் இன்னாக் கிளவி
இருமருப் பெருமை யீன்றணிக் காரான்
உழவன் யாத்த குழவியின் அகலாது
பாற்செய்$ பைம்பயிர் ஆரும் ஊரன்
திருமனைப் பல்கடம் பூண்ட
பெருமுது பெண்டிரே மாகிய நமக்கே" (குறுந். க அக)

என வரும்.

¶பிழைத்துவந் திருந்த கிழவனை நெருங்கி இழைத்தாங் காக்கிக் கொடுத்தற்கண்ணும் என்பது—பிழைத்து வந்திருந்த தலைமகனை நெருங்கித் தலைமகளிக்குமாறு கூறித் தலைமகன்மாட் டாக்கிக் கொடுத்தற்கண்ணுங் கூற்று நிகழும் என்றவாறு.

உதாரணம்

"பகலில் தோன்றும் பல்கதிர்த் தீயின்
ஆம்பலஞ் செறுவில் தேனூர் அன்ன

(பாடம்) * கசர்ந்து. † எய்தி. ‡ இவள் நலங். § கட்கழி. $ பாஅல்.

¶பிழைத்து வந்திருந்த கிழவனை—பரத்தையர் மனைக்கண் தங்கி வந்து அகனகர் புகுதாது புறத்திருந்த தலைவனை.
(தொல். பொருள். க௫0 நச்சி.)

இவள் நலம் புலம்பப் பிரிய*
அனைநல முடையளோ மகிழ்நநின் பெண்டே.''
(ஐங்குறு. கூ)

''கேட்டிசின் வாழியோ மகிழ்ந ஆற்றுற
மையல் நெஞ்சிற் கெவ்வந் தீர
நினக்குமருந் தாகிய யான் இனி
இவட்குமருந் தன்மை நோம்என் நெஞ்சே'' (ஐங்குறு. கூக)

என வரும்.

வணங்கியல் மொழியான் வணங்கற் கண்ணும் என்பது—தாழ்ந்த இயல்பினையுடைய மொழியினன் வணங்குதற்கண்ணுங் கூற்று நிகழும் என்றவாறு.

உதாரணம்

''உண்டுறைப் பொய்கை வராஅல் இனம்இரியுந்
தண்துறை யூர தகுவதோ—ஒண்டொடியைப்
பாராய் மனைதுறந் தச்சேரிச் செல்வதனை
ஊராண்மை யாக்கிக் கொளல்'' (ஐந்திணையெழு. கூஉ)

என வரும்.

புறம்படு விளையாட்டுப்† புல்லிய புகர்ச்சியும் என்பது—புறப்பட்ட விளையாட்டினைத் தலைவன் பொருந்திய புகர்ச்சிக் கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.

புகர்ச்சி—குற்றம்.

உதாரணம்

''காலை எழுந்து கடுந்தேர் பண்ணி
வாலிழை மகளிர் மரீஇய‡ சென்ற
மல்ல லூரன் எல்லினன் பெரிதென
மறுவருஞ் சிறுவர் தாயே
தெறுவ தம்மவித் திணைப்பிறத் தல்லே'' (குறுந். சகூ)

என வரும்.

சிறந்த புதல்வனைத் தேராது புலம்பினும் என்பது—இருவர்க்குஞ் சிறந்த புதல்வனை நினையாமையால் தலைமகன் தனிமையுறுதற் கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.

உதாரணம்

''நெடுநா ஒண்மணி கடிமனை§ இரட்டக்
குரையிலைப் போகிய விரவுமணற் பந்தர்ப்

---

* பிரியல்.

† விளையாட்டாவது யாறும் குளனும் காவும் ஆடிப் பதியிகந்து நுகர்தலாம். புல்லிய புகர்ச்சியும் - தலைவன் பொருந்திய மனநிகழ்ச்சிக் கண்ணும். (தொல். பொருள். கதூo நச்சி.)

(பாடம்) ‡ தழீஇய கடுமனை.

பெரும்பாண் காவல் பூண்டென ஒருசார்த்
திருந்திழை மகளிர் விரிச்சி நிற்ப
வெறியுற விரிந்த அறுவை மெல்லணைப்
புனிறுநாறு செவிலியொடு புதல்வன் துஞ்ச
ஐயவி அணிந்த நெய்யாட் டீரணிப்
பசுநெய்* கூர்ந்த மென்மை யாக்கைச்
சீர்கெழு மடந்தை யீரிமை பொருந்த
நள்ளென் கங்குற் கள்வன் போல
அகன்துறை ஊரனும் வந்தனன்
சிறந்தோன் பெயரன் பிறந்த மாறே'' (நற்றிணை. சO)

எனவும்,

''நுண்ஞாண் வலையிற் பரதவர் போத்தந்த
பன்மீன் உணங்கல் கவருந் துறைவனைக்
கண்ணினாற் காண அமையுங்கொல்† என்றோழி
வண்ணந்தா வென்கந் தொடுத்து'' (ஐந்திணையெழு. கச)

எனவும் வரும்.

மாணலந் தாவென வகுத்தற்கண்ணும் என்பது—நீ கொண்ட நலத்தினைத் தந்து போஎனக் கூறுதற்கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.

''விட்டென விடுக்குநாள் வருக அதுநீ
நொந்தனை யாயின் தந்தனை சென்மோ
குன்றத் தன்ன குவவுமணல் அடைகரை
நின்ற புன்னை நிலந்தோய் படுசினை
வம்ப நாரை சேக்குந்
தண்கடற் சேர்ப்பநீ உண்டவென் நலனே'' (குறுந். உருசு)

என வரும்.

பேணா வொழுக்கம் நாணிய பொருளினும் என்பது—தலைமகனைப் பேணாத ஒழுக்கத்தினால் தலைமகள் நாணிய பொருண்மைக் கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.

உதாரணம்

''யாயா கியளே மாஅ யோளே
மடைமாண் செப்பில் தமிய வைகிய
பொய்யாப் பூவின் மெய்சா யினளே
பாசடை நிவந்த கணைக்கால் நெய்தல்
இனமீன் இருங்கழி யோதம் மல்குதொறும்
கயமூழ்கு மகளிர் கண்ணின் மானுந்
தண்ணந் துறைவன் கொடுமை
நம்முள் நாணிக் கரப்பா டும்மே'' (குறுந். க)

என வரும்.

(பாடம்) * பசிநோய். † இயையுங்கொல்.

*சூள்வயிற் றிறத்தாற் சோர்வுகண் டழியினும் என்பது—தலைமகன் சூளுற்ற சூளுறவிற் சோர்வுகண்டு அழிந்து கூறினும் கூற்று நிகழும் என்றவாறு.

உதாரணம்.

''எம்மணங் கினவே மகிழ்நு முன்றில்
நனைமுதா புன்கின் பூத்தாழ் வெண்மணல்
வேலன் புனைந்த வெறிஅயர் களந்தொறுஞ்
செந்நெல் வான்பொரி சிதறி அன்ன
எக்கர் நண்ணிய எம்மூர் வியன்துறை
நேரிறை முன்கை பற்றிச்
சூரர மகளிரொ டுற்ற சூளே'' (குறுந். ௫௩)

என வரும்.

பெரியோரொழுக்கம் பெரிதெனக் கிளந்து பெறுதகை யில்லாப் பிழைப்பினும் என்பது—பெரியோ ரொழுக்கம் பெரிதாகுமெனச் சொல்லித் தலைமகளைப் பெறுந்தகைமை யில்லாத பிழைப்பின் கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.

உதாரணம்

''வெள்ளி விழுத்தொடி மென்கரும் புலக்கை
வள்ளி நுண்ணிடை வயின்வயின் நுடங்க
மீன்சினை அன்ன வெண்மணற் குவைஇக்
காஞ்சி நீழல் தமர்வளம் பாடி
ஊர்க்குறு மகளிர் குறுவழி விறந்த
இருஅல்† அருந்திய சிறுசிரல் மருதின்
தாழ்சினை யுறங்குந் தண்துறை யூர
விழையா உள்ளம் விழையு மாயினும்
என்றும், கேட்டவை தோட்டி யாக மீட்டாங்கு
அறனும் பொருளும் வழாமை‡ நாடித்
தற்றக வுடைமை நோக்கி மற்றதன்
பின்னா கும்மே முன்னியது முடித்தல்
அனைய பெரியோர் ஒழுக்கம் அதனால்
அரிய பெரியோர்த் தெரியுங் காலை
நும்மோர் அன்னோர் மாட்டும் இன்ன
பொய்யொடு மிடைந்தவை தோன்றின்
மெய்யாண் டுளதோஇவ் உலகத் தானே'' (அகம். உ௮௬)

என வரும்.

அவ்வழி யுறுதகை யில்லாப் புலவியின் மூழ்கிய கிழவோள் பால்நின்று கெடுத்தற் கண்ணும் என்பது—மேற் சொல்லிய

---

* சூள் நயத்திறத்தாற் சோர்வுகண்டு அழியினும்—கூடுதல் வேட்கைக் கூறுபாட்டால் தான் சூளுறக் கருதிய சூளுறவினது பொய்ம்மையைக் கருதித் தலைவி வருந்தினும் தோழிக்குக் கூற்று நிகழும். (தொல். பொருள். ௧௦௯. நச்சி.) (பாடம்) † ஆரல். ‡ வழாஅமை.

வாற்றுற் றலைவன் பிழைத்தவழி அவனு லுறுந்தகைமையில்லாத புலவியின் மூழ்கிய தலைவி பக்கத்தாளாகி நின்று அதனைக் கெடுத்தற்கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.

உதாரணம்

"மாணேக்கி நீயழ நீத்தவன் ஆனது
நாணில னாயின் நலிதந் தவன்வயின்
ஊடுவ தென்னோ வினி" (கலித். அஎ)

என வரும்.

உணர்ப்புவயின் வாரா வூடலுற் றோள்வயி னுணர்த்தல் வேண்டிய கிழவோன் பானின்று தான்வெகுண் டாக்கிய தகுதிக் கண்ணும் என்பது—தலைவன் ஊடல் தீர்க்கவும் அதன் வழி வாராத வூடலுற்றோள்வயின் அவ்வூடலைத் தீர்த்தல் வேண்டிய தலைவன் பக்கத்தாளாகி நின்று தலைவனை வெகுண்டு நின்றுண் டாக்கிய தகுதிக்கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.

"உப்பமைந் தற்றால் புலவி அதுசிறிது
மிக்கற்றால் நீள விடல்" (குறள். கக0உ)

என வரும்.

அருமைக் காலத்துப் பெருமை காட்டிய எளிமைக் காலத் திரக்கத்தானும் என்பது—தாமரிமராகக் களவுகாலத்துத் தமது பெருமையைக் காட்டிய தாம் எளியராகிய கற்புக்காலத்து இது இரக்கத்தின்கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.

பெருமைகாட்டிய விரக்கம் எனக் கூட்டுக. இதனாற் சொல்லியது வாளாதே இரங்குதலன்றிப் பண்டு இவ்வாறு செய்தனை இப்பொழு திவ்வாறு செய்யாநின்றனை எனத் தமதுயர்ச்சியுந் தலைமகனது நிலையின்மையுந் தோற்ற இரங்குதலாயிற்று. இதுவும் புலவிமாத்திரமன்றித் தலைவ னீங்கி யொழுகும் ஒழுக்கம் மிக்கவழிக் கூறுவதெனக் கொள்க.

உதாரணம்

"வேம்பின் பைங்காயென் றோழி தரினே
தேம்பூங் கட்டி என்றனிர் இனியே
பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர்
தைஇத் திங்கள் தண்ணிய தரினும்
வெய்ய உவர்க்கு மென்றனிர்
ஐய வற்றால் அன்பின் பாலே" (குறுந். கஉக)

என வரும்.

பாணர் கூத்தர் விறலிய ரென்றிவர் பேணிச் சொல்லிய குறைவினை யெதிரும்* என்பது—பாணராயினுங் கூத்தராயினும்

* எதிரும் என்றது அவர் வாயில் வேண்டியவழித் தோழி அவர்க்கு மறுத்தலும் மறுத்தாள்போல நேர்தலும் கூறியதாம். (தொல். பொருள். கடுO நச்சி.)

விறலியராயினும் இத்தன்மையர் விரும்பிச் சொல்லிய குறை யுறும் வினைக் கெதிராகவுங் கூற்று நிகழும் என்றவாறு.

குறையுறும் வினை குறைவினை யென ஒட்டிற்று: அது சொல்லிய என்னும் பெயரெச்சத்திற்கு முடிபாயிற்று.

உதாரணம்

"புலைமகன் ஆதலிற் பொய்ந்நின் வாய்மொழி
நில்லலி பாண செல்லினிப் பரியல்
பகல்எஞ் சேரிக் காணின்
அகல்வய லூரன் நாணவும் பெறுமே"

எனவும்,

"அணிநிறக் கெண்டை ஆடிடம் பார்த்து
மணிநிறச் சிறுசிரல் மயங்குநம் பொய்கை
விரைமல காற்று விருந்தினம் யாமென
முழவிமிழ் முன்றில் முகம்புணர் சேர்த்தி
எண்ணிக் கூறிய இயல்பினின் வழாஅது
பண்ணுக் கொளப் புகுவ கணித்தோ பாண
செவிநிறை உவகையேம் ஆக
இதுநா ணன்மைக் குரைத்துச்சென் றீமே"

எனவும் வரும்.

நீத்த கிழவனை நிகழுமாறு படீஇயர் காத்த தன்வயிற்கண் நின்று பெயர்ப்பினும் என்பது—தலைவியை நீத்த கிழவனை அவளுடன் நிகழுமாறு படுத்தல் வேண்டி அவனைப் புறங்காத்த தன்னிடத்துற்ற தலைமகனைக் கண்ணோட்டமின்றிப் பெயர்த்தற் கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.

உதாரணம்

"மனையுறு* கோழிக் குறுங்காற் பேடை
வேலி வெருகின மாலை யுற்றெனப்
புகுமிடன் அறயாது தொகுபுடன் குழீஇப்
பைதற் பிள்ளைக் கிளைபயிர்ந் தாஅங்
கின்னு திசைக்கும் அம்பலொடு
வாரல் வாழியர் ஐயஎம் தெருவே" (குறுந். கஙஙக)

என வ்ரும்.

பிரியுங்காலை யெதிர்நின்று சாற்றிய மரபுடை எதிரும் உளப்பட என்பது—தலைவன் சேயிடைப் பிரியுங் காலத்து முன் னின்று சொல்லிய மரபுடை மாறுபாடும் என்றவாறு.

எனவே, அகத்திணை யியலுட் கூறப்பட்டது களவுகாலத்தை நோக்கிக் கூறுதலான அயலிதாகக் கூறப்பெறும் என்பதூஉம் இவ்வோத்தினுட் செலவழுங்குவித்தல் பார்ப்பார்க் குரித்தாகக் கூறுதலானுங் கற்பினுட் பிரிவு மரபு கெடாமற் கூறவேண்டும்

(பாடம்) * யுறை.

என்பதூஉங் கருத்து. மரபினுற் கூறுதலாவது குற்றேவல் முறைமையாற் கூறுதல். பிரிவை அகத்திணையியலுள் வைத்ததனுன், ஆண்டுக் கூறிய இளவி இருவகைக் கைகோளிற் கும் பெரும்பான்மை யொக்கும் எனக் கொள்க. உடன்போக்கும் ஒக்குமோ எனின், கற்பினுள் உடன்போக்கு உலகியலுட் பெரும்பான்மையென்று கொள்க. இக்கூற்றுத் தலைமகன் மாட்டுந் தலைமகண்மாட்டுமாம்.

## உதாரணம்

'அறன்இன்றி அயல்தூற்றும் அம்பலை நாணியும்
வறனீந்தி நீசெல்லும் நீளிடை நினைப்பவும்
இறைநில்லா வளையோட இதழ் சோர்பு* பனிமல்கப்
பொறைநில்லா நோயொடு புல்லென்ற நுதலிவள்
விறல்நல னிழப்பவும் வினைவேட்டாய் கேளினி;

உடையிவள் உயிர்வாழாள் நீநீப்பின் எனப்பல
இடைகொண்டியாம் இரப்பவும் எமகொள்ளா†யாயினை
கடைஇய ஆற்றிடை நீர்நீத்த வறுஞ்சுனை
அடையொடு வாடிய அணிமலர் தகைப்பன;

வல்லைநீ‡ துறப்பாயேல் வகைவாடும் இவளென
ஒல்லாங்கியாம் உரைப்பவும் உணர்ந்தியா யாயினை
செல்லுநீ ளாற்றிடைச் சேர்ந்தெழுந்த மரம்வாடப்
புல்லுவிட் டிறைஞ்சிய பூங்கொடி தகைப்பன;

பிணிபுநீ விடல் சூழிற் பிறழ்தரும்§ இவளெனப்
பணிபுவந் திரப்பவும் பலசூழ்வா யாயினை
துணிபுநீ செலக்கண்ட ஆற்றிடை அம்மரத்து
அணிசெல வாடிய அந்தளிர் தகைப்பன;

எனவாங்கு;

யாநிற் கூறவும் எமகொள்ளாய் ஆயினை
ஆனு திவள்போல் அருள்வந் தவைகாட்டி
மேல்நின்று மெய்கூறுங் கேளிர்போல் நீசெல்லுங்
கானந் தகைப்ப செலவு'' (கலித். ௩)

என வரும்.

இனித் தலைமகட்குக் கூறியதற்குச் செய்யுள்:—

''அரிதாற்றி அல்லல்நோய் நீக்கிப் பிறிதாற்றிப்$
பின்இருந்து¶ வாழ்வார் பலர்'' (குறள். ககசுO)

என வரும்.

பிறவும் வகைபட வந்த கிளவி யெல்லாந் தோழிக்குரிய வென்மனுர் புலவர் என்பது—மேற்சொல்லப்பட்ட கிளவியன்

(பாடம்) * சேர்பு. † எம். ‡ வல்லையில். § பிறழாகும்.
$ பிரிதாற்றிப். ¶ பின்ஒழிந்து.

றிப் பிற வாய்பாட்டாற் பாகுபடவந்த கிளவி இயல்லாந் தோழிக்குரிய என்றுரைப்பர் புலவர் என்றவாறு.

வகைபடவந்த கிளவியாவன:—பிரிந்த தலைமகன் வருவனெனக் கூறுதலும், பருவங்கண்டு கூறுதலும், வற்புறுத்தலும், நிமித்தங்கண்டு கூறுதலும், வந்தான் எனக்கூறுதலும், இந்நிகரனவும், மேற்சொல்லப் பட்ட இடங்களிற் கூற்று வேறுபாடாகி வருவனவுங்கொள்க. அவற்றிற் களவுக்குங் கற்பிற்கும் பொதுவாகி வருவன அகத்திணை யியலுட் கொள்க. கற்பிற்கே உரித்தாகி வருவன ஈண்டுக் கொள்க.

உதாரணம்

"ஆமா சிலைக்கும் அணிவரை ஆரிடை
ஏமாண் சிலையார்க் கினமா இரிந்தோடும்
தாமாண்பில் வெஞ்சுரஞ் சென்றார் வரக்கண்டு
வாய்மாண்ட பல்லி படும்." (கைந்நிலை. கஅ)

இது நிமித்தங் கண்டு கூறியது.

"வாளிலங் குண்கண் வைஎயிற் றோயே
ஞாலங் காவலர் வந்தனர்
காலை அன்ன மாலைமுந் துறுத்தே."

இது தலைவன் வந்தமை கூறியது. பிறவும் அன்ன. (கூ)

கசகூ. புல்லுதல் மயக்கும் புலவிக் கண்ணும்
இல்லோர் செய்வினை இகழ்ச்சிக் கண்ணும்
பல்வேறு புதல்வர்க் கண்ணேனி உவப்பினும்
மறையின் வந்த மனையோள் செய்வினை
பொறையின்று பெருகிய பருவரற் கண்ணும்
காதற் சோர்விற் கடப்பாட் டாண்மையில்
தாய்போற் கழறித் தழீஇய மனைவியைக்
காய்வின் றவன்வயிற் பொருத்தற் கண்ணும்
இன்னகைப் புதல்வனைத் தழீஇ இழையணிந்து
பின்னை†வந்த வாயிற் கண்ணும்
மனையோ ளொத்தலின் தன்னோர் அன்னோர்
மிகையெனக்‡குறித்த கொள்கைக் கண்ணும்
எண்ணிய பண்ணையென் றிவற்றொடு பிறவும்
கண்ணிய காமக் கிழத்தியர் மேன.

என்—எனின், §காமக்கிழத்தியர் கூற்று நிகழும் இடம் உணர்த்திற்று.

(பாடம்) * தாய்போல் தழீஇக் கழறியம் மனைவியைக். † பின்னர் ‡ மிகைபடக்.

§ 149 ஆம் சூத்திரம் (259ஆம் பக்கம்) காமக்கிழத்தியராவார் கடனறியும் வாழ்க்கையுடையராகிக் காமக் கிழமைபூண்டு இல்லறம் நிகழ்த்

(௰ - ள்) புல்லுதன் மயக்கும் புலவி முதலாகச் சொல்லப்பட்ட இடத்தினும் அங்கிரான பிறவிடத்தினும் குறிக்கப்பட்ட கூற்றுக் காமக்கிழத்தியர் மேலன என்றவாறு.

கூற்றென்பது அதிகாரத்தான் வந்தது.

காமக்கிழத்தியராவார், பின்முறை ஆக்கிய கிழத்தியர். அவர் மூவகைப்படுவர்; ஒத்த கிழத்தியரும், இழிந்த கிழத்தியரும் வரையப்பட்டாரும் என. ஒத்த கிழத்தியர் முந்துற்ற மனையாளன்றிக் காமம் பொருளாகப் பின்னுந் தன் குலத்துள்ளாள் ஒருத்தியை வரைதல். இழிந்தாராவார்—அந்தணர்க்கு அரசகுலத்தினும் வணிககுலத்தினும் வேளாண் குலத்தினும் கொடுக்கப்பட்டாரும், அரசர்க்கு ஒனையிரண்டுகுலத்தினுங் கொடுக்கப்பட்டாரும், வணிகர்க்கு வேளாண்குலத்திற் கொடுக்கப்பட்டாரும். வரையப்பட்டார்—செல்வராயினார் கணிகைக் குலத்தினுள்ளார்க்கும் இற்கிழமை கொடுத்து வரைந்து கோடல். அவர் கன்னியில் வரையப்பட்டாரும் அதன் பின்பு வரையப்பட்டாரும் என இருவகையர். அவ்விருவரும் உரிமை பூண்டமையாற் காமக்கிழத்தியர்பாற் பட்டனர். பரத்தையராவார் யாரெனின், அவர் ஆடலும் பாடலும் வல்லராகி அழகும்இளமையுங் காட்டி இன்பமும் பொருளும் வெஃகி ஒருவர் மாட்டுந் தங்காதார். இவருள்ளும் ஒருவரைப்பற்றி மறுதலைப் பெண்டிரைச் சார்த்திக் கூறுவனவும் காமக்கிழத்தியர் கூற்றின்பாற் படும். இவற்றின் வேறுபாடு அவரவர் கூற்றானறிக. இச்சூத்திரத்திற் காமக்கிழத்தியென ஓதாது 'கிழத்தியர்' என ஓதுதலானும் பலவகையார் என்பது கொள்க.

புல்லுதன் மயக்கும் புலவிக்கண்ணும் என்பது—புல்லுதலைக் கலக்கும் புலவிமாட்டுங் காமக்கிழத்தியர் கூற்று நிகழும் என்றவாறு.

அஃதாவது முதிராத புலவிமாத்திரமாகிய புணர்ச்சியையுடன் பட்ட நெஞ்சத்தளாதல்.

உதாரணம்

'பொதுமொழி பிறர்க்கின்றி முழுதாளுஞ் செல்வர்க்கு
மதிமொழி யிடன்மாலை வினைவர்போல் வல்லவர்
செதுமொழி சீத்த செவிசெறு வாக
முதுமொழி நீராப்* புலனா உழவர்
புதுமொழி கூட்டுண்ணும் புரிசைசூழ் புனலூர;
ஊரன்மன் உரனல்லன் நமக்கென்ன உடன் வாளா†
தோரூர்தொக் கிருந்தநின் பெண்டிருள் நேராகிக் . .

தும் பரத்தையர். அவர் பலராதலிற் பன்மையாற் கூறினர். அவர் தலைவனது இளமைப்பருவத்திற் கூடி முதிர்ந்தோரும், அவன் தலைநின்று ஒழுகப்படும் இளமைப்பருவத்தோரும், இடைநிலைப் பருவத்தோரும், காமஞ்சாலா இளமையோரும் எனப் பலபகுதியாம். இவரைக் கண்ணிய காமக்கிழத்தியர் எனவே கண்ணாத காமக்கிழத்தியரும் உளராயிற்று. அவர் கூத்தும் பாட்டும் உடையராகிவரும் சேரிப்பரத்தையரும், குலத்தின்கண் இழிந்தோரும், அடியரும், வினைவல பாங்கினரும் பிறருமாம்.

(தொல். பொருள். கஉச. நச்சி.)

(பாடம்) *நீரால். † எமக்கென்ன உடன்வரா.

களையாநின் குறிவந்தெங் கதவஞ்சேர்ந் தசைத்தகை
வளையின்வாய் யிடன்மாலை மகளிரை நோவேமோ
கேளலன் நமக்கவன் குறுகன்மி னெனமற்றெம்
தோளொடு பகைபட்டு நினைவாடு நெஞ்சத்தேம்;

ஊடியார் நலந்தேம்ப ஒடியெறிந் தவர்வயின்
மால்தீர்க்கும் அவன் மார்பென் றெழுந்தசொல் நோவேமோ
முகைவாய்த்த முலைபாயக்* குழைந்தநின் றார்எள்ள
வகைவரிச் செப்பினுள் வைகிய கோதையேம்;

சேரியாற் சென்றுநீ சேர்ந்தவில் வினையினன்
தேரொடு திரிதரும் பாகனைப் பழிப்பேமோ
ஒலி† கொண்ட சும்மையான் மணமனை குறித்தெம்மில்
பொலிகெனப் புகுந்தநின் புலையனைக் கண்டயாம்;

எனவாங்கு‡

நனவினுள் வேறுகு வேளா முயக்கம்
மனைவரிற் பெற்றுவந்து மற்றெந்தோள் வாட
இளைய ரென உணர்ந்தா ரென்றேக்கற் றுங்குக்
கனவினு னெய்திய செல்வத் தனையதே
ஐய எமக்குநின் மார்பு.'' (கலித். ௬௮)

இது மூவகையார்க்கும் பொது.

இல்லோர் செய்வினை யிகழ்ச்சிக் கண்ணும் என்பது—மனையகத்தோர் செய்த வினையை யிகழ்ந்து கூறுதற்கண்ணும் என்றவாறு.

பன்மையால் தலைமகனை யிகழ்தலுந் தலைமகளை யிகழ்தலுங் கொள்க.

## உதாரணம்

''கழனி மாஅத்து விளைந்துகு தீம்பழம்
பழன வாளை கதூஉம் ஊரன்
எம்மிற் பெருமொழி கூறித் தம்மிற்
கையுங் காலுந் தூக்கத் தூக்கும்
ஆடியிற் பாவை§ போல
மேவன செய்யுந்தன் புதல்வன் தாய்க்கே'' (குறுந். ௮)

என்றும்,

''நன்மரங் குழீஇய நனைமுதிர் சாடிப்
பன்னாள் அரித்த கோஒய் உடைப்பின்$
மயங்குமழைத் துவலையின்¶ மறுகுடன் பனிக்கும்
பழம்பல் நெல்லின் வேளூர் வாயில்
நறுவிரை தெளித்த நாறிணர் மாலைப்
பொறிவரி இனவண் டூதல கழியும்
உயர்பலி பெறூஉம் உருகெழு தெய்வம்
புனையிருங் கதுப்பின் நீகடுத் தோள்வயின்

(பாடம்) * முகைவாய. † வலி. ‡ ஆங்க.
,, § ஆடிப்பாவை. $ கோதுடைவைப்பின். ¶ திவலை.

அனையேன் ஆயின் அணங்குக என்என*
மனையோள் தேற்று மகிழ்நன் ஆயின்
யார்கொல் வாழி தோழி நெருநல்†
தார்பூண் களிற்றில் தலைப்புணை தழீஇ
வதுவை யீரணிப் பொலிந்த‡ நம்மொடு
புதுவது வந்த காவிரிக்
கோடுதோய் மலிர்நிறை யாடி யோரே'' (அகம். கசுசு)

என்றும் வரும். இவை தலைவனை இகழ்ந்தன.

''அளியர் தாமே மகிழ்நநின் பெண்டிர்
தாமவற் பிணித்தல் தேற்றார் நாமழச்
செய்தார் அகலம் வவ்வினர் இவரென
எம்பழி அறையுநர் போலத்
தம்பழி தூற்றும் பெரும்பே தையரே.''

''எரிஅகைந் தன்ன தாமரைப் பழனத்துப்
பொரி அகைந்§ தன்ன பொங்குபல சிறுமீன்
வெறிகொள் பாசடை யுணீஇயர் பைப்பயப்
பறைதபு முதுசிரல் அசைபுவந் திருக்குந்
துறைகேழ் ஊரன் பெண்டுதன் கொழுநனை
நம்மொடு புலக்கும் என்ப நாமது$
செய்யா மாயின் உய்யா மையின்¶
செறிதொடி தெளிர்ப்ப வீசிச் சிறிதவண்
உலமந்து** வருகஞ் சென்மோ தோழி
ஒளிறுவாள் தானைக் கொற்றச் செழியன்
வெளிறில கற்பின் மண்டமர் அடுதொறும்††
களிறுபெறு வல்சிப் பாணன் எறியுந்
தண்ணுமைக் கண்ணின் அலை இயர்தன் வயிறே.''
(அகம். கOசு)

இவை பரத்தை கூற்று.

பல்வேறு புதல்வர்க் கண்டுநனி யுவப்பினும் என்பது—பல வகைப் புதல்வரைக் கண்டு மிகவும் உவந்து கூறியவழியு மென்றவாறு.

## உதாரணம்

''நயந்தலை மாறுவார் மாறுக மாறுஅக்
கயந்தலை மின்னுங் கதிர்விடு முக்காழ்ப்
பயந்தஎங் கண்ணார யாங்காண நல்கித்
திகழொளி‡‡ முத்தங் கரும்பாகத் தைஇப்
பவழம் புனைந்த பருதி சுமப்பக்
கவழம் அறியாநின் கைபுனை வேழம்
புரிபுனை பூங்கயிற்றிற் பைபய வாங்கி

(பாடம்) * எம்மென. † நெருனைத். ‡ பொலிந்து.
§ பொரிமுகைந். $ புல்குவமென்பல் அதுநாம்.
¶ உய்யா மரபின். ** உலம்வந்து. †† தொறும்.
‡‡ திவளொளி

அரிபுனை புட்டிலி னாங்கணித் திங்கே
வருகளம் பாக மகன்;

கிளர்மணி யார்ப்பார்ப்பச் சாஅய்ச்சா அய்ச் செல்லுந்
தளர்நடை காண்டல் இனிதுமற் றின்னாதே
உளமென்னா நுந்தைமாட் டெவ்வம் உழப்பார்
வளைநெகிழ் பியாங்காணுங் கால்;

ஐய, காமரு நோக்கினை அத்தத்தா என்னுநின்
தேமொழி கேட்டல் இனிதுமற் றின்னாதே
உய்வின்றி* நுந்தை நலனுணச் சாஅய்ச் சாஅய்மார்
எவ்வநோய் யாம்காணுங் கால்;

ஐய, திங்கட் குழவி வருகென யான்நின்னை
அம்புலி காட்டல் இனிதுமற் றின்னாதே
நல்காது நுந்தை புறமாறப் பட்டவர்
அல்குல்வரி யாங்காணுங் கால்;

ஐயஎம், காதில் கனங்குழை வாங்கிப் பெயர்தொறும்
போதில் வறுங்கூந்தற் கொள்வதை நின்னையான்
ஏதிலார் கண்சாய நுந்தை வியன்மார்பில்
தாதுதேர் வண்டின் கிளைபாடத் தைஇய
கோதை பரிபாடக் காண்கும்'' (கலித். அ0)

என வரும்.

மறையின் வந்த மனையோள் செய்வினை—பொறையின்று பெருகிய பருவரற் கண்ணும் என்பது—களவின் வருகின்ற மனையோள் செய்வினை பொறையின்றிப் பெருகிய துன்பத்தின் கண்ணும் என்றவாறு.

உதாரணம்

''வாளை வாளிற் பிறழ நாளும்
பொய்கை நீர்நாய் வைகுதுயில் ஏற்கும்
கைவண கிள்ளி வெண்ணி சூழ்ந்த
வயல்வெள் ஆம்பல் உருவ நெறித்தழை
ஐதக லல்குல் அணிபெறத் தைஇ
விழவிற் செலீஇயர் வேண்டு மன்னோ
யாணர் ஊரன் காணுநன் ஆயின்
வரையா மையோ அரிதே வரையின்
வரைபோல் யானை வாய்மொழி முடியன்
வரைவேய் புரையும் நற்றோள்
அளிய தோழி தொலையுந பலவே.'' (நற்றிணை. கூகூ0)

இது, பரத்தையராகி வத்த காமக்கிழத்தியர் கூற்று.

காதற் சோர்விற் கடப்பாட் டாண்மையிற் றாய்போற் கழறித் தழீஇய மனைவியைக் காய்வின் றவன்வயிற் பொருத்தற்கண்ணும்

(பாடம்) *எய்வின்றி

என்பது—காதற் சோர்வினாலும் ஒப்புர வுடைமை யானுந் தாய் போற் கழறிப் பொருத்தப்பட்ட மனைவியைக் காய்தலின்றித் தலைமகன்மாட்டுப் பொருத்தற்கண்ணுங் கூற்று நிகழும் என்றவாறு.

இதுவும் அவள் கூற்று. காதற்சோர்வு என்பது தன்மாட்டுக் காதல் சோர்தல். இது தலைமகன் மாட்டுத் துனியுளவழி நிகழும் நிகழ்ச்சி.

உதாரணம்

"வயல்வெள் ஆம்பல் சூடுதரு புதுப்பூக்
கன்றுடைப் புனிற்று தின்ற மிச்சில்
ஓய்விடு நடைப்பக டாரும் ஊரன்*
தொடர்புநீ வெஃகினை யாயின் என்சொற்
கொள்ளல் மாதோ முள்ளெயிற் றோயே
நீயே பெருநலத் தகையே அவனே
நெடுநீர்ப் பொய்கை நடுநாள் எய்தித்
தண்கமழ் புதுமலர் ஊதும்†
வண்டென மொழிப மகனென் னாரே." (நற்றிணை உ௯0)

இது காமக்கிழத்தியாகிய தலைமகட்கு முன் வரையப்பட்ட பரத்தை கூற்று.

இன்னகைப் புதல்வனைத் தழீஇ யிழையணிந்து பின்னை வந்த வாயிற் கண்ணும் என்பது—இனிய நகையையுடைய புதல்வனைத் தழீஇ இழையணிந்து பின்னை வந்த வாயிலின் கண்ணும் என்றவாறு. பின்னை என்றதனால் ஏனைய வாயில்களை மறுத்த வழியென்று கொள்க.

"புள்இமிழ் அகல்வயல் ஒலிசெந்நெ லிடைபூத்த
முள்ளரைத் தாமரை முழுமுதல் சாய்த்ததன்
வள்ளிதழ் உறநீடி வயங்கிய ஒருகதிர்
அவைபுக முரங்கின்மே லாடுவாள் அணிநுதல்
வகைபெறச் செரீஇய வயந்தகமே போல்தோன்றும்
தகைபெறு கழனியந் தண்துறை யூரகேள்;

அணியொடு வந்திங்கெம் புதல்வனைக் கொள்ளாதி
மணிபுரை செவ்வாய்நின் மார்பகல நனைப்பதால்
தோய்ந்தாரை அறிகுவல் யானெனக் கமழுநின்
சாந்தினாற் குறிகொண்டாள் சாய்குவள் அல்லளோ;

புல்லலெம் புதல்வனைப் புகலகல்‡ நின்மார்பின்
பல்காழ்முத் தணியாரம் பற்றினன் பரிவானன்
மாணிழை மடநல்லார் முயக்கத்தை நின்மார்பின்
பூணினாற் குறிகொண்டாள் புலக்குவள் அல்லளோ;

கண்டேஎம் புதல்வனைக் கொள்ளாதி நின்சென்னி
வண்டிமிர் வகையிணர் வாங்கினன் பரிவானல்

(பாடம்) * ஓய் நடைமுதுபகடு ஆரும் ஊரன். † கதூஉம். ‡ புகலநீ.

நண்ணியார்க் காட்டுவ திதுவெனக் கமழுநின்
கண்ணியாற் குறிகொண்டாள் காய்குவள் அல்லளோ;

எனவாங்கு,

பூங்கண் புதல்வனைப் பொய்பல பாராட்டி
நீங்காய் இகவாய் நெடுங்கடை நில்லாதி
ஆங்கே யவர்வயின் சென்றீ அணிசிதைப்பான்
ஈங்கெம் புதல்வனைத் தந்து'' (கலித். எக)

எனவரும்.

மனையோள் ஒத்தலின் தன்னோரன்னோர் மிகையெனக் குறித்த கொள்கைக் கண்ணும் என்பது—தான் மனையாளை ஒத்தலாற் றன் போல்வார் தலைவற்கு மிகையெனக் குறித்த கோளின் கண்ணும் கூற்று நிகழும் என்றவாறு.

உதாரணம்

''அரிற்பவர்ப் பிரம்பின் வரிப்புற விளைகனி
குண்டுநீர் இலஞ்சிக் கெண்டை கதூஉந்
தண்டுறை ஊரன் பெண்டினை யாயின்
பலவா குகநின் நெஞ்சிற் படரே
ஓவா தியு மாரி வண்கைக்
கடும்பகட் டியானை நெடுந்தேர் அஞ்சி
கொன்முனை இரவூர் போலச்
சிலவா குகநீ துஞ்சு நாளே'' (குறுந். கக)

என வரும்.

எண்ணிய பண்ணை*யென் றிவற்றொடு என்பது—எண்ணப் பட்ட விளையாட்டு என்று சொல்லப்பட்ட இவற்றொடென்றவாறு.

விளையாட்டாவது ஆறுங் குளனுங் காவும் ஆடுதல்.

உதாரணம்

''கூந்தல் ஆம்பல் முழுநெறி யடைச்சிப்
பெரும்புனல் வந்த இருந்துறை விரும்பி
யாமஃ தயர்கம்† சேறுந் தானஃ
தஞ்சுவ துடைய ளாயின் வெம்போர்
நுகம்படக் கடக்கும் பல்வேல் எழினி
முனையான் பெருநிரை போலக்
கிளையொடு நுகர்கதன்‡ கொழுநன் மார்பே.'' (குறுந். ௮0)

பிறவும் என்றதனால் தலைமகட்குரித்தாகச் சொல்லப்பட்டவற்றுள் ஒப்பன கொள்ளப்படும். அவற்றுட் சில வருமாறு:—

* எண்ணிய பண்ணை - தலைவற்குத் தகும் என்று ஆய்ந்த யாறும் குளனும் காவும் ஆடிப் பதியிகந்து நுகர்வன போல்வனவற்றுக்கண் தாமும் விளையாடுதற்கண்ணும். (தொல். பொருள். கஙக. நச்சி.)

(பாடம்) † யாமஃதையர்கம். ‡ காக்கதன்.

"ஞாலம் வறந்தீர" என்னும் மருதக்கலியுள்,

"அடக்கமில் போழ்தின்கண் தந்தைகா முற்ற
தொடக்கத்துத் தாயுழைப் புக்கான்"

எனவும்,

"வழிமுறை தாயுழைப் புக்கான்"

எனவும்,

"தலைக்கொண்டு நம்மொடு காயுமற் றீதோர்*
புலத்தகைப் புத்தேளில் புக்கான்" (கலித். அஉ)

எனவும்,

கூறுதலிற் புதல்வனை யீன்றாள் மூன்றாங் காமக்கிழத்தி யாயினவாறும் இவன்மாட்டுத் தாயர் கண்ணிய நல்லணிப் புதல்வனை மாயப் பரத்தை யுள்ளிக் கூற்று நிகழ்ந்தவாறுங் கண்டுகொள்க. பிறவும் அன்ன. தோழி கூற்றும் இவட்கும் ஒக்கும். (க0)

கரு0. கற்புங் காமமும் நற்பா லொழுக்கமும்
மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்
விருந்துபுறந் தருதலுஞ் சுற்றம் ஓம்பலும்
பிறவு† மன்ன கிழவோள் மாண்புகள்
முகம்புகல் முறைமையிற் கிழவோற் குரைத்தல்
அகம்புகல் மரபின் வாயில்கட் குரிய.

என்—எனின், அகம்புகல் மரபினவாய வாயில்கள் கூற்று நிகழுமாறு உணர்த்திற்று.

(இ - ள்.) கற்பு முதலாகச் சொல்லப்பட்டனவும் பிறவு மாகிக் கிழவோள்மாட் டுளதாகிய தன்மைகளை முகம்புகு தன்மையானே தலைமகற்கு உரைத்தல் அகம்புகு மரபின் வாயில் கட்குரிய என்றவாறு.

செய்யுளியலுள் "வாயி லுசாவே தம்மு ளுரிய" (சூ. ககக) என்ப தனால், தலைமகற் குரைத்தலே யன்றித் தம்முள்தாம் கூறுதலும் உரிய ரென்று கொள்க.

"மதவலி யானை மறலிய பாசறை
இடிஉமிழ்‡ முரசம் பொருகளத் தியம்ப
வென்றுகொடி எடுத்தனன் வேந்தனுங் கன்றொடு

(பாடம்) * றிஃதோர்.

† அன்னபிற ஆவன—அடிசிற்றொழிலும், குடிநீர்மைக்கேற்றவகை யான் ஒழிந்த தலைமகளிரையும் மனமகிழ்வுறுத்தலும், காமக்கிழத்தியர் நண்புசெய்து நன்கு மதிக்கப்படுதலும் போல்வன. (தொல். பொருள். கஙக நச்சி) (பாடம்) ‡இடியுறழ்.

கறவை புல்லினம் புறவுதொ றுகளக்*
குழல்வாய் வைத்தனர் கோவலர் வல்விரைந்
திளையர் ஏகுவனர்† பரிய விரியுளைக்
கடுநடைப் புரவி வழிவாய் ஓட‡
வலவன் வன்புவலி உறுப்பப் புலவர்§
புகழ்குறி$ கொண்ட பொலந்தா ரகலத்துத்
தண்கமழ் சாந்தம் நுண்டுகள் அணிய¶
வென்றிகொள் உவகையொடு புகுதல் வேண்டின்
யாண்டுறை வதுகொல் தானே மாண்ட
போதுறழ்** கொண்ட உண்கண்
தீதி லாட்டி திருநுதற் பசப்பே" (அகம். கூ௫௪)

எனவும்,

"கண்டிசின் பாண பண்புடைத் தம்ம
மாலை விரிந்த பசுவெண் ணிலவிற்
குறுங்காற் கட்டில் நறும்பூச் சேக்கை
பள்ளி யானையின் உயிர்த்தனன் நகையிற்
புதல்வற் புல்லினன்†† விறலவன்
புதல்வன் தாய்அவன் புறங்கவ வினளே" (குறுந். கூ௫௯)

எனவும்,

"யாயா கியளே மாஅ யோளே
மடைமாண் செப்பின் தமிய வைகிய
பெய்யாப் பூவின் மெய்சா யினளே
பாசடை நிவந்த கணைக்கால் நெய்தல்
இனமீன் இருங்கழி ஓத மல்குதொறும்
கயமூழ்கு மகளிர் கண்ணின் மானும்
தண்ணந் துறைவன் கொடுமை
நம்முள் நாணிக் கரப்பா டும்மே" (குறுந். கூ)

எனவும்,

"முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅ துடீஇக்
குவளை உண்கண் குய்ப்புகை கழுமத்‡‡
தான்துழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதல் முகனே" (குறுந். கசுஎ)

எனவும்,

"கானக் கோழிக் கவர்குரற் சேவல்
நுண்பொறி§§ எருத்தின் தண்சித ருறைப்பத்
தேநீர்$$ வாரும் பூநாறு புறவிற்
சீறூ ரோளே மடந்தை வேறூர்

(பாடம்) * பல்லினம்புறவுதொறுத்துகளா. † ஏகுநர்.
‡ வளிவாய் ஓட. § உலவிய. $ சுரும்புசடி ¶ இரிய. ** போதுடன்.
†† தழீஇனன். ‡‡ கமழத். §§ ஒண்பொறி. $$ புதனீ.

வேந்துவிடு தொழிலொடு வரினுஞ்*
சேர்ந்துவரல் அறியா செம்மல் தேரே'' (குறுந். உ௬உ)

எனவும்,

''பிரசம் கலந்த வெண்சுவைத் தீம்பால்
விரிகதிர்ப் பொற்கலத் தொருகை யேந்திப்
புடைப்பிற் சுற்றும் பூந்தலைச் சிறுகோல்
உண்ணென் றோக்குபு புடைப்பத்† தெண்ணீர்
முத்தரிப் பொற்சிலம் பொலிப்பத் தத்துற்
றரிநரைக் கூந்தற் செம்முது செவிலியர்
பரீஇமெலிந்‡ தொழியப் பந்த ரோடி
ஏவல் மறுக்குஞ் சிறுவிளை யாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்§ தனள்கொல்
கொண்ட கொழுநன் குடிவற னுற்றெனக்
கொடுத்த தந்தை§ கொழுஞ்சோ றுள்ளாள்
ஒழுகுநீர் நுணங்கறல் போலப்
பொழுதுமறுத் துண்ணுஞ்¶ சிறுமது கையளே'' (நற்றிணை. ௧௧0)

எனவும்,

''பாணர் முல்லை பாடச் சுடர்இழை
வாணுதல் அரிவை முல்லை மலைய
இனிதிருந் தனனே நெடுந்தகை
துனிதீர் கொள்கைத்தன் புதல்வனொடு பொலிந்தே''
(ஐங்குறு.௪0௮)

எனவும் வரும். இவையெல்லாம் வாயில்கள் தம்முட் கூறின. தலைவற்குக் கூறின வந்தவழிக் காண்க. (௧௧)

௧௫௧ கழிவினும் நிகழ்வினும் எதிர்வினும் வழிகோள
நல்லவை உரைத்தலும் அல்லவை கடிதலும்
செவிலிக் குரிய ஆகும் என்ப.

என்—எனின். செவிலிக்குரிய கூற்று வருமா றுணர்த்திற்று.

(இ - ள்.) இறந்த காலத்தினும் நிகழ்காலத்தினும் எதிர்காலத்தினும் தன்குலத்திலுள்ளார் வழிகொள்ளுமாறு நல்லவை கூறுதலும் அல்லவை கடிதலுஞ் செவிலிக்கு உரித்து என்றவாறு.

இறந்தகால முதலியவற்றுற் கூறுதலாவது முன்புள்ளார் இவ்வாறு செய்து நன்மை பெற்றூர் இவ்வாறு செய்து தீமைபெற்றூர் எனவும், இப்பொழுது இன்னோர் இவ்வாறு செய்து பயன்பெறு நின்றூரென வும், இவ்வாறு செய்தார் பின்பு நன்மை தீமை பெறுவர் எனவுங் கூறுதல்.

(பாடம்) *செலினும். †பிழைப்பத். ‡பரிமெலிந். §யாங்குணர்ந்.
§தாதை. ¶துய்க்கும்.

அவை, அறனும் பொருளும் இன்பமும் பற்றி நிகழும் : அவையா வன, தலைமகன் மாட்டும் உலகத்தார் மாட்டும் ஒழுகும் திறன் கூறுதல்.

அவை, மனையாளைப் பற்றி வருதலிற் காம தந்திரத்துட் பாரியாதி காரமெனக் கூறப்பட்டன. அறம்பற்றி வருதல் திருவள்ளுவப்பயன் முதலிய சான்றோர் செய்யுட்களுள் அறப்பகுதியிற் கூறப்பட்டன.

உதாரணம்

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்" (குறள். ருசு)

எனவும்,

"தெய்வந் தொழா அள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை" (குறள் ருரு)

எனவும்,

"மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை." (குறள். ருக)

எனவும்,

"கட்கினியாள் காதலன் காதல் வகைபுனைவாள்
உட்குடையாள் ஊர்நாண் இயல்பினாள்—உட்கி
இடனறிந் தூடி இனிதின் உணரும்
மடமொழி மாதராள் பெண்." (நாலடி. கஅ௪)

இதனுள், "கட்கினியாள்" என்றதனான் கோலஞ்செய்தல் வேண்டு மெனக் கூறியவாறும் ;

"அடிசிற் கினியாளை அன்புடை யாளைப்
படிசொற் பழிநாணு வாளை—அடிவருடிப்
பின்றுஞ்சி முன்னுணரும் பேதையை யான்பிரிந்தால்
என்றுஞ்சுங் கண்கள் எனக்கு"

எனவும் வரும். இவை நல்லவை யுரைத்தல்

"எறிசென் றெதிர் நிற்பாள் கூற்றம் சிறுகாலை
அட்டில் புகாதாள் அரும்பிணி—அட்டதனை
உண்டி உதவாதாள்* இல்வாழ்பேய் இம்மூவர்
கொண்டானைக் கொல்லும் படை" (நாலடி. கசுக)

எனவும்,

"தலைமகனில் தீர்ந்தொழுகல்† தான்பிறர்இல் சேறல்
நிலைமையில்தீப் பெண்டிரில் சார்தல்‡—கலனணிந்து
வேற்றூர் புகுதல் விழாக்காண்டல் நோன்பெடுத்தல்§
கோற்றொடியார் கோள்அழியும் ஆறு" (அறநெறிச்-கூ௪)

எனவரும் வரும். இந்நிகரன அல்லவை கடிதலாம்.

பிறவும் அன்ன.

(பாடம்) * யுவவாதாள். † தீர்ந்துறைதல். ‡ சேர்தல்.
§ நோன்பிடுதல். $ கோற்றொடியாள்.

கரு௨. சொல்லிய கிளவி *அறிவர்க்கும் உரிய.

என் - எனின். அறிவர் கூற்று நிகழுமா றுணர்த்திற்று.

(இ - ள்.) மேற் செவிலிக்குரித்தாகச் சொல்லப்பட்ட கிளவி அறிவர்க்கும் உரிய என்றவாறு.

உதாரணம் மேற்காட்டப்பட்டன. (௧௩)

கரு௩. இடித்துவரை நிறுத்தலும் அவர தாகுங்
கிழவனுங் கிழத்தியும் அவர்வரை நிற்றலின்.

என் - எனின். அறிவர்க்குரியதோர் மரபு உணர்த்திற்று.

(இ - ள்.) கழறிய எல்லையின்கண்ணே நிறுத்தலும் அறிவர்க்குரிய; தலைவனும் தலைவியும் அவர் ஏவல்வழி நிற்றலின் என்றவாறு.

உதாரணம்

"உடுத்துந் தொடுத்தும் பூண்டுஞ் செரீஇயுந்
தழையணிப் பொலிந்த ஆயமொடு துவன்றி
விழவொடு வருதி நீயே இஃதோ
ஓரான் வல்சிச் சீரில் வாழ்க்கை
பெருநலக் குறுமகள் வந்தென
இனிவிழ வாயிற் றென்னும்இவ் வூரே." (குறுந். ௨௯௫)

இது தலைமகற்குக் கூறியது.

"துறைமீன்† வழங்கும் பெருநீர்ப் பொய்கை
அரிமலர் ஆம்பல் மேய்ந்த நெறிமருப்
பீர்ந்தண் எருமைச் சுவல்படு முதுபோத்துத்
தூங்குசேற் றள்ளல் துஞ்சிப் பொழுதுபடப்
பைந்திணை வராஅல் குறையப் பெயர்தந்து‡
குரூஉக் கொடிப்§ பகன்றை சூடி மூதூர்ப்
போர்ச்செறி மள்ளரிற் புகுதரும் ஊரன்
தேர்தர வந்த தெரியிழை$ நெகிழ்தோள்
ஊர்கோள் கல்லா மகளிர் தரத்தரப்
பரத்தைமை தாங்கலோ இலனென¶ வறிதுநீ
புலத்தல் ஒல்லுமோ மனைகெழு மடந்தை
அதுபுலந் துறைதல்** வல்லி யோரே
செய்யோ ணீங்கச் சில்பதங் கொழித்துத்
தாமட் டுண்டு தமிய ராகித்
தேமொழிப் புதல்வர் திரங்குமுலை சுவைப்ப

---

* அறியாத தலைவியிடத்துச் சென்று அறிந்தார் முன்னுள்ளோர் அறம் பொருள் இன்பங்களாற் கூறிய புறப்புறச் செய்யுட்களைக் கூறிக் காட்டுவர் என்பதாம். (தொல். பொருள். ௧௯௪ நச்சி.)

(பாடம்) † நீர். ‡ பேர்ந்து. § பரூஉக் கொடிப். $ நேரிழை.
¶ பரத்தை தாங்கலோ அலனென் பதுநீ. ** தறுதல்.

வைகுநர் ஆத* லறிந்தும்
அறியார் அம்மவஃ துடலு மோரே." (அகம். ௩௧௬)

இது தலைவிக் குரைத்தது. (௧௪)

௧௫௪. உணர்ப்புவரை இறப்பினும் செய்குறி பிழைப்பினும்
புலத்தலும் ஊடலும் கிழவோற் குரிய.†

என் - எனின். தலைமகன் புலக்குமிடம் கூறுதல் நுதலிற்று.

(இ - ள்.) புலவி அண்மைக் காலத்தது; ஊடல் அதனின் மிக்கது. பொருள் சூத்திரத்தான் விளங்கும்.

உதாரணம்

"எவ்வி இழந்த வறுமையர் பாணர்
பூவில் வறுந்தலை போலப் புல்லென்
றினைமதி வாழிய நெஞ்சே மனைமரத்
தெல்லுறு மௌவல் நாறும்
பல்லிருங் கூந்த லாரே நினக்கே."‡ (குறுந். ௧௧)

என வரும். (௧௫)

௧௫௫. புலத்தலும் ஊடலும் ஆகிய இடத்துஞ்
சொலத்தகு கிளவி தோழிக் குரிய.

இது தோழிக்குரிய மரபுணர்த்திற்று.

"அலந்தாரை யல்லல்நோய் செய்தற்றால் தம்மைப்§
புலந்தாரைப் புல்லா விடல்." (குறள். ௧௩0௩.)

இது கற்பு.

"கலந்த நோய் கைம்மிகக் கண்படா என்வயின்$
புலந்தாயு நீயாயின்¶ பொய்யானே வெல்குவை
இலங்குதாழ் அருவியோ டணிகொண்ட நின்மலைச்
சிலம்புபோற் கூறுவ கூறும்
இலங்கேர் எல்வளை இவளுடை நோயே." (கலித். ௪௧)

இது களவு. (௧௬)

௧௫௬. பரத்தை** மறுத்தல் வேண்டியுங் கிளவி††
மடத்தகு கிழமை உடைமை யானும்
அன்பிலை கொடியை என்றலும் உரியள்.

இதுவும் தோழிக்கு உரியதோர் இயல்பு உணர்த்திற்று.

இது சூத்திரத் தாற் பொருள் விளங்கும்.

(பாடம்) * வைகுநள் ஆகுதல். † கற்பிற்கும் புலத்தலும் ஊடலும் உரிய; களவிற்கும் புலத்தலும் ஊடலும் உரிய என்றுர். (தொல். பொருள். ௧௮௬ நச்சி.) ‡ யாரளோ நீமக்கே. § காமம், $ எம்வயின். ¶ நீயாகிப். ** பரத்தமை. †† கிழத்தி.

உதாரணம்

"மகிழ்செய் தேமொழித் தொய்யில்சூழ் இளமுலை
முகிழ்செய முள்கிய* தொடர்பவள்† உண்கண்
அவிழ்பனி உறைப்பவும் நல்காது விடுவாய்
இமிழ்திரைக் கொண்க கொடியை காண்நீ;

இலங்கேர் எல்வளை ஏர்தழை தைஇ
நலஞ்செய‡ நல்கிய தொடர்பவள் சாஅய்ப்
புலந்தழப் புல்லாது விடுவாய்
இலங்குநீர்ச் சேர்ப்ப கொடியை காண்நீ." (கலித். கஉரு)

எனவரும். (கஎ)

கஎ. அவன்குறிப் பறிதல் வேண்டியுங் கிழவி
அகமலி யூடல் அகற்சிக் கண்ணும்
வேற்றுமைக் கிளவி தோற்றவும் பெறுமே.

இது, தலைவிக் குரியதொரு மரபுணர்த்திற்று.

(இ - ள்.) தலைவன் குறிப்பறிதல் வேண்டியுந் தலைவி தனது அகமலிந்த ஊடல் நீங்கும் இடத்தினும் வேற்றுமைக்கிளவி தோற்றவும் பெறும் என்றவாறு.

"யாரிவன் என்கூந்தல் கொள்வான்" (கலித். அக)

எனவும்,

"யாரையோ எம்மில் புகுதருவாய்." (கலித். கஅ)

எனவும் கூறியவாறு காண்க. (கஅ)

கஅ. காமக் கடப்பினுட் பணிந்த கிளவி
காணுங் காலைக்§ கிழவோற் குரித்தே
வழிபடு கிழமை* அவட்கிய லான.

இது, தலைமகற் குரியதொரு மரபுணர்த்திற்று.

இது, சூத்திரத்தாற் பொருள் விளங்கும்.

உதாரணம்

"ஒரூஉ, கொடியியல் நல்லார் குரல் நாற்றத்துற்ற"

என்னும் மருதக்கலியுள்,

"பெரியார்க் கடியரோ ஆற்றுதவர்"

எனத் தலைவி கூறியவழி,

---

(பாடம்) * முழ்கிய. † தொடர்பிவள். ‡ நலஞ்சொல.

§ காணுங்காலை என்றதனால் தலைவன் தலைவி எதிர்புலப்பது தன் தவறு சிறிதாகிய இடத்து எனவும், இங்ஙனம் பணிவது தன் தவறு பெரி தாகிய இடத்து எனவும் கொள்க. (தொல். பொருள். கக0. நச்சி.)

"கடியர் தமக் கியார்சொலத் தக்கார் மற்று" (கலித். அஅ)

எனவரும். (கக)

கருகூ. அருண்முந் துறுத்த *அன்புபொதி கிளவி
பொருள்பட மொழிதல் கிழவோட் குரித்தே.†

இது, தலைமகட்குரியதோர் இயல்புணர்த்திற்று.

(இ - ள்.) பொருள்பட மொழிதலாவது பொய்யாக்கூறுது மெய்யே கூறல்.

உதாரணம் வந்தவழிக் காண்க. (உ0)

ககூ0. களவுங் கற்பும் அலர்வரை வின்றே.

என் - எனின். அலர் ஆமாறு உணர்த்திற்று.

(இ - ள்.) களவினுங் கற்பினும் அலராகுமென்று கூறுதல் வரைவின்று என்றவாறு.

'தொகுத்துக்கூறல்' என்பதனுற் களவும் ஈண்டு ஓதப்பட்டது.

உதாரணம்

"கண்டது மன்னும் ஒருநாள் அலர்மன்னுந்
திங்களைப் பாம்புகொண் டற்று." (குறள். ககசசு)

இது களவு.

"வேதின வெரிநின் ஓதி முதுபோத்
தாறுசெல் மாக்கள் புட்கொளப் பொருந்துஞ்
சுரனே சென்றனர் காதலர் உரனழிந்
திங்கியான் அழுங்கிய எவ்வம்
யாங்கறிந் தன்றிவ் வழுங்க லூரே." (குறுந். கசூ0)

இது கற்பு. (உக)

ககூக. அலரில் தோன்றுங் காமத்து மிகுதி.‡

உதாரணம்

"ஊரவர் கௌவை எருவாக அன்னைசொல்
நீராக நீளும்இந் நோய்" (குறள். ககசஎ)

எனவும் வரும். (உஉ)

ககூஉ. கிழவோன் விளையாட் டாங்கும் அற்றே.

இதுவும் அது.

---

* பணிந்த மொழி தோற்றுது வேறோர் பொருள்பயப்பக் கூறுதல் தலைவிக்கும் உரித்து. தொல். பொருள் ககூக. நச்சி.)

(பாடம்) † கிழவோட்கும் உரித்தே. ‡ காமத்திற் சிறப்பே.

(இ - ள்.) கிழவோன் விளையாட்டும் காமத்தின் மிகுதியைக் காட்டும் என்றவாறு.

ஆங்கு—அசை.

"அகலநீ துறத்தலின் அழுதோவா உண்கணெம்
புதல்வனை மெய்தீண்டப் பொருந்துதல் இயைபவால்
நினக்கொத்த நல்லாரை நெடுநகர்த் தந்துநின்
தமர்பாடுந் துணங்கையுள் அரவம்வந் தெடுப்புமே."
(கலித். எO)

எனவரும்.

விளையாட்டாற் காமமிக்கு உறங்காமை கண்டுகொள்க. (உக)

கசுரு. மனைவி தலைத்தாட் கிழவோன் கொடுமை
தம்முள வாதல் வாயில்கட் கில்லை.

என் எனின், வாயில்கட் குரியதொரு மரபுணர்த்திற்று.

(இ - ள்.) மனைவிமாட்டுக் கிழவோன் கொடுமையைத் தாங்கள் கூறல் வாயில்கட்கு இல்லை என்றவாறு. (உ௨)

கசுச. மனைவி முன்னர்க் கையறு கிளவி*
மனைவிக் குறுதி உள்வழி உண்டே.

என்-எனின், இதுவு மது.

(இ - ள்) மனைவி முன்னர்ச் செயலற்றுக் கூறுஞ் சொல் மனைவிக்கு உறுதியுள்வழி வாயில்கட்கு உண்டு என்றவாறு.

உதாரணம்

"இனியவர், வரினும் நோய்மருந் தல்லாய் வாரா
தவணர் ஆகுக காதலர் இவண்நம்
காமம் படர்பட வருத்திய
நோய்மலி வருத்தங் காணன்மா ரவரே. (உ௩)

எனவரும்.

கசுரு. முன்னிலைப் புறமொழி எல்லா வாயிற்கும்
பின்னிலைத் தோன்றும் என்மனார் புலவர்.

இதுவுமது.

(இ - ள்.) முன்னிலைப் புறமொழியாகக் கூறுஞ் சொல் எல்லா வாயில்கட்கும் உரிய; பின்னிலைமுயலுங்கால் தோன்றும் என்றவாறு.

---

* தலைவன் காமக்கடப்பினுல் பணியுந் துணையன்றி நம்மைக் கையிகந்தான் எனக் கையற்றுக் கூறுங் கூற்று. (தொல். பொருள். கசுக. நச்சி.

முன்னிலைப் புறமொழியாவது முன்னிலையாக நிற்பாரைக் குறித்துப் பிறனைக் கூறுமாறுபோலக் கூறுதல்.

"உண்கடன் வழிமொழிந் திரக்குங்கால் முகனுந்தாங்
கொண்டது கொடுக்குங்கால் முகனும்வே றுகுதல்
பண்டுமிவ் வுலகத் தியற்கை" (கலித். உஉ)

என்றவழி அவ்வுரை தலைமகனை நோக்கியவாறு காண்க. (உ௬)

௧௬௬. தோல்லவை உரைத்தலும் நுகர்ச்சி ஏத்தலும்*
பல்லாற் றானும் ஊடலில் தகைத்தலும்†
உறுதி காட்டலும் அறிவுமெய்ந் நிறுத்தலும்
ஏதுவின் உரைத்தலும் துணியக்‡ காட்டலும்
அணிநிலை உரைத்தலும்§ கூத்தர் மேன.

என் - எனின், கூத்தர்க்குரிய திறங் கூறுதல் நுதலிற்று.

(இ - ள்.) தொல்லவை யுரைத்த லாவது—முன்புள்ளார் இவ்வாறு செய்வரெனக் கூறுதல்.

நுகர்ச்சி யேத்த லாவது—நுகர்ச்சி யிவ்வாறு இனிய தொன்றெனப் புகழ்தல்.

பல்லாற்றானும் ஊடலிற் றகைத்தலும் என்பது—பலநெறியானும் ஊடலினின்றுந் தலைமகளை மீட்டல்: அஃதாவது இவ்வாறு செய்தல் குற்றமென்றானும் அன்புடையார் செய்யாரென்றானும் மனைக்கிழத்தியர் செயலன்று என்றானும் இவ்வாறு கூறுதல்.

உறுதிகாட்ட லாவது—இவ்வூடல் தணிந்ததனாற் பயனிது வெனவும் நன்மை பயக்கும் எனவும் கூறுதல்.

அறிவு மெய்ந்நிறுத்தலாவது—தலைமகள் மெய்யின்கண் மிக்க துணிவினாற் கெட்டவறிவை இது தக்கதன்றென அறிவு கொளுத்துதல்.

ஏதுவினுரைத்தலும் என்பது—இவ்வாறு செய்யின் இவ்வாறு குற்றம் பயக்கும் என ஏதுவினாற் கூறுதல். அது பிறள் ஒருத்தி கெட்டபடி கூறுதல்.

துணியக்காட்ட லாவது—அவள் துணியுமாறு காரணங் காட்டுதல்.

---

(பாடம்) * ஏற்றலும். † தணித்தலும். ‡ துணிவு.

§ அணிநிலை யுரைத்தலாவது முலையினும் தோளினும் முகத்தினும் எழுதுங்காற் புணர்ச்சிதோறும் அழித்தெழுதுமாறு இது எனக் கூறுதல். (தொல். பொருள். ௧௬. நச்சி.)

அணிநிலை யுரைத்தலாவது — இவ்வாறு உளதாகிய அணியைப் புலரவிடுகின்றதனாற் பயன் என்னையெனக் கூறுதல்.

இவை யெல்லாம் கூத்தர் மேலன என்றவாறு. அவர் எல்லா நெறியினானும் புனைந் துரைக்க வல்ல ராதலான் அவர் மேலன என உரைத்தார். இவற்றிற்குச் செய்யுள் வந்தவழிக் கண்டுகொள்க. இந்நூல் வழக்குஞ் செய்யுளும் பற்றி நிகழ்தலின், இப்பொருண்மேல் வரும் வழக்குரை உதாரணமாம். (உஎ)

கசுஎ. நிலம் பெயர்ந் துரைத்தல் அவள்நிலை* உரைத்தல்
கூத்தர்க்கும் பாணர்க்கும் யாத்தவை உரிய.

இது, மேற்கூறப்பட்ட கூத்தர்க்குஞ் சொல்லாத பாணர்க்கும் உரிய கிளவி உணர்த்திற்று.

(இ - ள்.) நிலம் பெயர்ந்துரைத்தல் என்பது—தலைவன் பிரிந்தவிடத்துச் சென்று கூறுதல்.

அவள்நிலை யுரைத்தல் என்பது—அவள் நின்ற நிலையைத் தலைவற்குக் கூறுதல்.

"அருந்தவ மாற்றியா னுகர்ச்சிபோல்" என்னும் பாலைக்கலியுள்,

"தணியாநோய் உகந்தானைத் தகையவள் தகைபெற
அணிகிளர் நெடுந்திண்தேர் அயர்மதி பணிபுநின்
காமர் கழலடி சேரா†
நாமஞ்சால் தெவ்வரின் நடுங்கினள்‡ பெரிதே" (கலித். ௩0)

எனப் பாசறைக்கண் தலைவற்குத் தலைவி வருத்தங் கூறியவாறு காண்க. (உ அ)

கசுஅ. ஆற்றது பண்பும்§ கருமத்து விளையும்$
ஏவன் முடிபும் வினவுஞ் செப்பும்
ஆற்றிடைக் கண்ட பொருளும் இறைச்சியுந்
தோற்றஞ் சான்ற அன்னவை பிறவும்
இளையோர்க் குரிய கிளவி யென்ப.

இஃது, இளையோர்க்குரிய கிளவியாமா றுணர்த்திற்று.

சூத்திரத்தாற் பொருள் விளங்கும்.

---

(பாடம்) * துறைதல் வரைநிலை. † சேர்க. ‡ நடுங்குநள்

§ ஆற்றதுபண்பும் — இளையோர் தண்ணிது வெய்து செய்த்து அணித்து என்று ஆற்றது நிலைமை கூறுதலும்; இறைச்சியும்—ஆண்டு மாவும் புள்ளும் புணர்ந்து விளையாடுவனவற்றை அவ்விருவர்க்கு மாயினும் தலைவற்கேயாயினும் காட்டியும், ஊறு செய்யும் கோள்மாக்களை அகற்றியும் கூறுவனவும். (தொல். பொருள். கஎ0 நச்சி.)

(பாடம்) $ விளைவும்.

உதாரணம்

"விருந்தும் பெறுகுநள் போலுந் திருந்திழைத்
தடமென் பணைத்தோள் மடமொழி* அரிவை
தளிரியற்† கிள்ளை இனிதின் எடுத்த
வளராப் பிள்ளைத் தூவி அன்ன
வார்பெயல் வளர்த்த வீபம்பயிர்ப் புறவிற்
பறைக்கண் அன்ன நிறைச்சுனை தோறும்
துளிபடு மொக்குள் துள்ளுவன‡ சாலத்
தொளிபொரு பொகுட்டுத் தோன்றுவன மாய
வளிசினை§ உதிர்த்தலின் வெறிகொள்பு தாஅய்ச்
சிறற்சிற கேய்ப்ப அறற்கண் வரித்த
வண்டுண் நறுவீ துமித்த நேமி
தண்ணில மருங்கிற் போழ்ந்த வழியுள்
நிரைசெல் பாம்பின் விரைபுநீர் முடுகச்
செல்லு நெடுந்தகை தேரே
முல்லை மாலை நகர்புகல் ஆய்ந்தே" $ (அகம். ௩௨௪)

எனவரும். பிறவுமன்ன. (௨௯)

௩௯௯. உழைக்குறுந் தொழிலுங் காப்பும் உயர்ந்தோர்¶
நடக்கை யெல்லா மவர்கட் படுமே.

இதுவும் இளையோர்க்குரிய திறன் உணர்த்திற்று.

(இ - ள்.) இடத்தினின்று குற்றேவல் செய்தலும் மெய் காத்தலும் பிறவும் உயர்ந்தோர்க் குளதாகிய நடையெல்லாம் இளையோர் கட்படும் என்றவாறு.

உதாரணம் வந்தவழிக் காண்க. (௩௦)

௪௦௦. பின்முறை ஆகிய** பெரும்பொருள்†† வதுவைத்
தொன்முறை மனைவி எதிர்ப்பா டாயினும்
இன்னிழைப் புதல்வனை வாயில்கொண்டு புகினும்
இறந்த துணைய கிழவோன் ஆங்கட்‡‡
கலங்கலு முரியன் என்மனார் புலவர்.

இது, தலைமகற் குரியதொரு மரபுணர்த்திற்று.

---

(பாடம்) * மடமா. † தளரியற். ‡ எழுவன.
§ விரிசினை. $ நகர்புக நயந்தே. ¶ உயர்ந்தோர்க்கு.
** ஆக்கிய.

†† இளமைப் பருவம் கழியாத காலத்து அக் காதல் மீளாதாக லின், பெரும் பொருள் என்றார். (தொல். பொருள். ௧௭௨. நச்சி.)

(பாடம்) ‡‡ கிழவோன் இறந்தது நினை இ ஆங்கண்.

## உதாரணம்

"இம்மை உலகத் திசையொடும் விளங்கி
மறுமை யுலகமும் மறுவின் றெய்துப
செறுநரும் விழையுஞ் செயிர்தீர் காட்சிச்
சிறுவர்ப் பயந்த செம்ம லோரெனப்
பல்லோர் கூறிய* பழமொழி யெல்லாம்
வாயே யாகுதல்† வாய்த்தனந் தோழி
நிரைதார் மார்பன் நெருநல் ஒருத்தியொடு
வதுவை அயர்தல் வேண்டிப் புதுவதின்
இயன்ற அணியன் இத்தெரு இறப்போன்
மாண்தேர் மாமணி கறங்கக் கடைகழிந்து
காண்டல் விருப்பமொடு தளர்புதளர் போடும்
பூங்கட் புதல்வனை நோக்கி நெடுந்தேர்
தாங்குமதி வலவஎன் றிழிந்தனன் தாங்காது
மணிபுரை செவ்வாய்‡ மார்பகம் சிவணப்
புல்லிப் பெரும செல்லினி அகத்தெனக்
கொடுப்போற் கொல்லான் கலுழலின் தடுத்த
மாநிதிக் கிழவனும் போன்மென மகனொடு
தானே புகுதந் தோனே யானது
படுத்தனென் ஆகுதல் நாணி இடித்திவன்
கலக்கினன் போலுமிக் கொடிய னெனச்சென்
றலைக்குங் கோலொடு குறுகித் தலைக்கொண்
டிமிழ்கண் முழவின்§ இன்சீ ரவர்மனைப்
பயிர்வன போலவந் திசைப்பவுந் தவிரான்
கழங்கா டாயத் தன்றுநம் அருளிய
பழங்கண் ணோட்டமும் நலிய
அழுங்கினன் அல்லனோ அயர்ந்ததன் மணனே$" (அகம், சுசு)
(கூக)

என வரும்.

களஎக. தாய்போற் கழறித் தழீஇக் கோடல்
ஆய்மனைக் கிழத்திக்கும் உரித்தென மொழிப
கவவொடு மயங்கிய காலை யான.

இது தலைமகட் குரியதொரு கிளவி யுணர்த்திற்று.

(இ-ள்.) காமக்கிழத்திமாட்டுத் தாய்போற் கழறித் தழீஇக்கோடல் மனைக்கிழத்திக்கும் உரித்து கவவால்¶ வருத்த முற்றகாலத்தென்றவாறு; அஃதாவது புலவாவழி என்றவாறு.

இவ்வாறு கூறுவது தலைமகன் முதிர்ந்தவழி என்று கொள்க. உம்மை இறந்தது தழீஇயிற்று.

(பாடம்) * கூறும். † யாக. ‡ மணி. மருளவ்வாய். § டிமிழ் குரல்முரசின், $ அயர்ந்தனன் மனனே. ¶ அவன் முயக்கத்தால் மயங்கிய காலத்து. (தொல். பொருள். களஎ. நச்சி)

உதாரணம்

"வயல்வெள் ளாம்பல் சூடுதரு* புதுப்பூக்
கன்றுடைப் புனிற்று தின்ற மிச்சில்
ஒய்விடு† நடைப்பக டாரும் ஊரன்
தொடர்புநீ வெஃகினை யாயின் என்சொற்
கொள்ளல் மாதோ முள்ளெயிற் றோயே
நீயே பெருநலத் தகையே அவனே
நெடுநீர்ப் பொய்கை நடுநாளெய்தித்
தண்கமழ் புதுமலர் ஊதும்
வண்டென மொழிப மகனென் னாரே." (நற்றிணை. ௨௯0)

என்பது கொள்க. 'கவவொடு மயங்கிய காலை' என்பதற்குச் செய்யுள் வந்தவழிக் காண்க. (௩௨)

௩௭௨. அவன்சோர்வு காத்தல் கடனெனப் படுதலின்
மகன்தா யுயர்புந் தன்னுயர் பாகுஞ்
செல்வன் பணிமொழி இயல்பாக லான.

இதுவும் தலைமகட்குரிய கிளவி யுணர்த்திற்று. மேலதற்கொரு புறனடை.

(இ - ள்.) தலைமகனது சோர்வுகாத்தல் தலைமகட்குக் கடனாகலால் தன் மகனுக்குத் தாயாகிய காமக்கிழத்தியுயர்புந் தன்னுயர்பாகும்; இருவரும் தலைமகன் பணித்த மொழிகோடல் இயல்பாகலான்; என்றவாறு.

சோர்வாவது ஒழுக்கத்திற்சோர்வு. அது பரத்தையிற்பிரிவு. அதனை மறையாது காமக்கிழத்தி ஆற்றில் தலைமகற்குக் குறைபாடு வரும் என்பதனால், அவளை யுயர்த்தி யவ்வொழுக்கம் பிறர்க்குப் புலனாகாமை யேற்றுக் கோடல் வேண்டுமெனக் கூறுதலுந் தனக்கு இழிபு ஆகாது உயர்ச்சியாம் என்றவாறு. இது மேலதற்குக் காரணங் கூறிற்று. (௩௩)

௩௭௩. எண்ணரும் பாசறைப் பெண்ணொடும் புணரார்.

இது தலைமகட் குரியதொரு மரபு உணர்த்திற்று.

(இ - ள்.) நினைத்தற்கரிய பாசறைக்கண் தலைமகளிரோடும் புணரார் தலைமக்கள் என்றவாறு.

நினைத்தற்கருமை - மாற்றுரை வெல்லுங் கருத்து மேற்கோடலிற் றலைமகளிரை நினைக்கலாகாதாயிற்று. 'பாசறை' என விசேடித்தவதனால் ஏனைப் பிரிவுக்குமாமென்று கொள்க. (௩௪)

௩௭௪. புறத்தோ ராங்கண் புணர்வ தாகும்.‡

இது, மேலதற்குப் புறனடை.

(பாடம்) * சூடுதெரி. † ஒய்வுடை. ‡ புரைவ தென்ப.

'புரை தென்ப' என்ற பாடங்கொண்டு, அவரைப் பெண்ணொடு புணர்த்துப் புலனெறி வழக்கம் செய்தல் பொருந்துவது என்று கூறுவர் ஆசிரியர். (தொல் பொருள். ௩௭௪. நச்சி.)

(இ - ள்.) மேற் சொல்லப்பட்ட பாசறைக்கட் புறப் பெண்டிர் புணர்ச்சி பொருந்துவது என்றவாறு.

பொருந்துவது என்றதனாற் கூட்டமென்று கொள்க. அவராவார் தாதியருங் கணிகையரும். (கூ௫)

கஎ௬. காமநிலை யுரைத்தலுந் தேர்நிலை யுரைத்தலுங்*
கிழவோன் குறிப்பினை எடுத்துக் கூறலும்†
ஆவொடு பட்ட நிமித்தங் கூறலும்
செலவுறு கிளவியுஞ் செலவழுங்கு கிளவியும்
அன்னவை பிறவும் பார்ப்பார்க் குரிய.

இது, பார்ப்பார்க் குரிய கிளவி யுணர்த்திற்று.

(இ - ள்.) காமநிலை யுரைத்தலாவது—நீ பிரியின் இவள் காமமிகும் என்று கூறுதல்

"அறனின்றி அயல்தூற்றும் அம்பலை" என்பதனுள்,

"உடையிவ ளுயிர்வாழாள் நீநீப்பின் எனப்பல
இடைகொண்டியாம் இரப்பவும் எமகொள்ளாய் ஆயினை
கடைஇய வாற்றிடை நீர்நீத்த வறுஞ்சுனை‡
அடையொடு வாடிய அணிமலர் தகைப்பன" (கலித். ௬)

எனவரும்.

தேர்நிலை யுரைத்தலாவது—ஆராய்ச்சி நிலையாற் கூறுதல்.

அது வருமாறு :—

"வேனி லுழந்த வறிதுயங் கோய்களிறு
வானீங்கு வைப்பின் வழங்காத்தேர் நீர்க்கவாஅம்
கானங் கடத்திர் எனக்கேட்பின் யாநென்
றுசாவுகோ ஐய சிறிது ;
நீயே, செய்வினை மருங்கிற் செலவயர்ந் தியாழநின்
கைபுனை வல்வில் ஞாணுளர்§ தீயே
இவட்கே, செய்வுறு மண்டில மையாப் பதுபோல்‡
மையில் வாள்முகம் பசப்பூ ரும்மே :
நீயே, வினைமாண் காழகம் வீங்கக் கட்டிப்
புனைமாண் மரீஇய¶ அம்பு தெரிதியே
இவட்கே, சுனைமா ணீலங் காரெதிர் பவைபோல்
இனைநோக் குண்கண் நீர்நில் லாவே ;

---

* தேர்நிலை என்றதனால். தேர்ந்து பின்னும் கலங்கினும் கலங்காமல் தெளிவுநிலை நாட்டலும் கொள்க. (தொல். பொருள். கஎஎ. நச்சி.)

(பாடம்) † எடுத்தனர் மொழிதலும்.
‡ கடைய ஆற்றிடை நீரற்றவறுஞ்சுனை, § ஞாணூர்.
$ மைபரப்பது போல். ¶ வரிய.

நீயே, புலம்பின்* உள்ளமொடு பொருள்வயிற் செலீஇய†
வலம்படு திகிரி வாய்நீ வுதியே
இவட்கே, அலங்கிதழ்க் கோடல் வீயுகு பவைபோல்
இலங்கே ரெல்வளை இறையூரும்மே;‡
எனநின்
சென்னவை யரவத்து§ மினையவள் நீநீப்பின்
தன்னலங் கடைகொளப் பீடுதலின் மற்றிவள்
இன்னுயிர் தருதலும் ஆற்றுமோ
முன்னிய தேஎத்து முயன்றுசெய் பொருளே." (கலித். எ)

இழவோன் குறிப்பினை யெடுத்துக் கூறலும் என்பது—தலைவன் குறிப்பினைத் தலைவிக்கு விளங்கக் கூறலும் என்றவாறு.

ஆவொடு பட்ட நிமித்தங் கூறலும் என்பது—ஆவொடு பட்ட நிமித்தங் கூறுதலும் என்றவாறு. 'பட்ட நிமித்தம்' என்றதனால் எல்லா நிமித்தமுங் கொள்க

செலவுறு கிளவி என்பது—செலவுற்ற சொல்லும் என்றவாறு. அஃதாவது தலைமகன் போயினான் என்று கூறுதல். இவற்றிற்கு இலக்கியம் வந்தவழிக் காண்க.

செலவழுங்கு கிளவி என்பது—செலவழுங்கல் வேண்டுமெனக் கூறுதல்.

உதாரணம்

"நடுவிகந் தொரீஇ நயனில்லான் வினைவாங்கக்
கொடிதோர்த்த மன்னவன் கோல்போல ஞாயிறு
கடுகுபு கதிர்மூட்டிக் காய்சினந் தெறுதலின்
உறலூறு கமழ்கடாஅத் தொல்கிய எழில்வேழம்
வறனுழு நாஞ்சில்போல் மருப்பூன்றி நிலஞ்சேர
விறன்மலை வெம்பிய போக்கரு வெஞ்சுரஞ்
சொல்லாது இறப்பத் துணிந்தனிர்க் கொருபொருள்
சொல்லுவ துடையேன் கேண்மின்மற் றைஇய;
வீழுநர்க் கிறைச்சியாய் விரல்கவர் பிசைக்குங் கோல்
ஏழுந்தம் பயன்கெட இடைநின்ற நரம்பறூஉம்
யாழினும் நிலையிலாப் பொருளையும் நச்சுபவோ;
மரீஇத்தாங் கொண்டாரைக் கொண்டக்காற் போலாது
பிரியுங்காற் பிறரெள்ளப் பீடின்றிப் புறமாறும்
திருவினு நிலையிலாப் பொருளையும் நச்சுபவோ;
புரைதவப் பயனோக்கார் தம்மாக்கம் முயல்வாரை
வரைவின்றிச் செறும்பொழுதில் கண்ணோடா துயிர்வௌவும்
அரைசினும் நிலையிலாப் பொருளையும் நச்சுபவோ;
எனவாங்கு,

(பாடம்) * புலம்பியல். † செலீஇயர். ‡ இறைவாரும்மே.
§ சொன்னவை யாவது.

நச்சல் கூடாது பெரும இச்செல
வொழிதல் வேண்டுவல் சூழிற் பழியின்று
மன்னவன் புறந்தர வருவிருந் தோம்பித்
தன்னகர் விழையக் கூடின்
இன்னுறழ் வியன்மார்ப அதுமனும் பொருளே'' (கலித். அ)

என வரும்.

இவை பார்ப்பார்க் குரிய வென்றவாறு. 'ஒருபாற் கிளவி யேனைப் பாற்கண்ணும்' (பொருளியல் - உஎ) வரும் என்பதனால் தோழிமாட்டும் பாங்கன் மாட்டும் கொள்க. (௩௬)

௧எ௬. எல்லா வாயிலும் இருவர் தேஎத்தும்
†புல்லிய மகிழ்ச்சிப் பொருள என்ப.

இது வாயில்கட் குரியதொரு மரபு உணர்த்திற்று.

(இ - ள்) வாயில்கள் எல்லாம் இருவர்மாட்டும் பொருந்திய மகிழ்ச்சிப் பொருண்மையுடைய என்றவாறு.

இருவராவார் தலைவனுந் தலைவியும். எனவே வெகுட்சிப் பொருண்மை கூறப்பெறார் என்றவாறு. (௩௭)

௧எஎ. அன்புதலைப் பிரிந்த கிளவி தோன்றின்‡
சிறைப்புறங் குறித்தன் றென்மனார் புலவர்.

இது. மேலதற்கொரு புறனடை.

(இ - ள்.) வாயில்கண் மகிழ்ச்சிப் பொருண்மை கூறுதலன்றி அன்பு நீங்கிய கிளவி கூறினாராயிற் றலைவன் சிறைப்புறத்தானாகப் பெறுவர் எனச் சொல்லுவர் என்றவாறு.

இதுவும் ஓரிலக்கணங் கூறியவாறு. (௩௮)

௧எஅ. தற்புகழ் கிளவி கிழவன்முற் கிளத்தல்
எத்திறத் தானும் கிழத்திக் கில்லை
§முற்பட வகுத்த இரண்டலங் கடையே.

இது தலைவிக் குரியதொரு மரபுணர்த்திற்று.

---

(பாடம்) * கூடல்.

†'புல்லிய' என்றதனான் விருந்தும் புதல்வரும் ஆற்றுமையும் வாயிலாகுப என்று கொள்க - (தொல். பொருள். ௧எ௬. நச்சி.)

‡ தோன்றின்' என்பது படைத்துக்கொண்டு கூறுவர் என்பதாமாகலின் குறித்தன்று என்பது போயின்று என்பது போல நகரம் ஊர்ந்த குற்றியலுகரம் (தொல். பொருள். ௧எஎ. நச்சி.)

§ முற்பட வகுத்த இரண்டலங் கடையே - முன்பு கூறுபடுத்தோதிய ''தாய்போற் கழறித் தழீஇக் கோடலும் அவன் சோர்பு காத்தற்கு மகன் தாயுயர்பு தன் உயர்பு ஆதலும்'' அல்லாத இடத்து.
(தொல். பொருள். ௧அ0. நச்சி.)

(இ - ள்.) தலைவன் முன்னர்த் தன்னைப்புகழுங் கூற்று எவ்வழியானுங் கிழத்திக்கு இல்லை; முற்படக் கூறிய இரண்டிடமும் அல்லாதவழி யென்றவாறு.

அவையாவன தலைவன் பரத்தையிற் பிரிந்து வந்தவழி இரத்தலுந் தெளித்தலும் என அகத்திணையியலுட் கூறிய இரண்டும். அவ்வழிப் புகழ்தலாவது :

"ஒருஉநீ எம்கூந்தல் கொள்ளல் யாம்நின்னை
வெரூஉதுங் காணுங் கடை" (கலித். அ௭)

என்றவழித் தன்னை உயர்த்துக் கூறுதலாற் புகழ்ந்தாளாம்: நின்னை வெருவாதார் பிறர் என்னும் உள்ளக்கருத்தினால்.

"நீயுறும் பொய்ச்சூள் அணங்காகின் மற்றினி
யார்மேல் விளியுமோ கூறு" (கலித். அஅ)

என்றவழியும் பெண்டிர் பலர் உளராயினும் அவர் எல்லார்மாட்டுஞ் செல்லாது தன்மேல் வருமெனக் குறித்தாளாதலின், தன்னைப் புகழ்ந்தாளாம். பிறவுமன்ன. (௩௧)

௧௪௯. கிழவி முன்னர்த் தற்புகழ் கிளவி
கிழவோன் வினைவயின் உரிய என்ப.

இது, தலைவற் குரியதொரு மரபுணர்த்திற்று.

(இ - ள்.) தலைவி முன்னர்த் தலைவன் றன்னைப் புகழுங் கூற்று வினைவயிற் பிரியும் வழி யுரிய என்றவாறு.

"இல்லென இரந்தோர்க்கொன் றீயாமை இழிவு" (கலித். ௨)

என்றும்,

"இல்லிருந்து மகிழ்வோர்க் கில்லையால் புகழ்"

என்றும் இவ்வாறு கூறுதல். இவ்வாறு கூறவே "யான் செய்யேன்" எனத் தன்னைப் புகழ்ந்தவாறும். (௪0)

௧௫௦. மொழிஎதிர் மொழிதல் பாங்கற் குரித்தே.

இது, பாங்கற் குரியதொரு மரபுணர்த்திற்று.

இது களவிற்கும் கற்பிற்கும் பொது; ஒப்பக்கூறல் என்னும் உத்திவகையாற் கூறப்பட்டது.

(இ - ள்.) தலைவன் கூறியவழி எதிர்கூறுதல் பாங்கற்கு உரித்து என்றவாறு. எதிர் கூறுதலாவது மாறுபடக் கூறுதல். அவை களவு காலத்துக் கழறலுங் கற்புக்காலத்துப் பரத்தைபிற் பிரிவிற்கு உடம்படாது கூறலும் இவை போல்வனவும்.

---

(பாடம்) * நீ கூறும் பொய்ச்சூள் அணங்காயின்.

உதாரணம்

"காமங் காமம் என்ப காமம்
அணங்கும் பிணியும் அன்றே நுணங்கிக்
கடுத்தலும் தணித்தலும் இன்றே யானை
குளகு மென்று ஆள்மதம்* போலப்
பாணியும் உடைத்தது காணுநர்ப் பெறினே" (குறுந். கக௬)

என்றும்,

"பொருட்பொருளார் புன்னலந் தோயார் அருட்பொருள்
ஆயும் அறிவி னவர்" (குறள் - ககசு)

என்றும் வரும். (சக)

கஅக. குறித்தெதிர் மொழிதல் அஃகித் தோன்றும்.

இதுவு மது.

(இ - ள்.) மேற் குறித்ததற் கெதிர் கூறுதல் அருகித் தோன்றும் என்றவாறு. அது வந்தவழிக் காண்க. (சஉ)

கஅஉ. துன்புறு பொழுதினும் எல்லாங் கிழவன்
வன்புறுத் தல்லது சேறல் இல்லை.†

இது, தலைவற் குரியதொரு மரபுணர்த்திற்று.

(இ - ள்.) துன்புறு பொழுதினும் எல்லாப்பிரிவினும் தலைவன் தலைவியை வற்புறுத்தியல்லது சேறலில்லையென்றவாறு.

துன்புறுபொழுதாவது களவுகாலம். களவினும் கற்பினும் பொது என்றவாறு. (சங)

கஅங. செலவிடை அழுங்கல் செல்லாமை அன்றே
வன்புறை குறித்தல் தவிர்ச்சி யாகும்

இதுவு மது.

(இ - ள்.) தலைவன் போகக் கருதித் தவிர்தல் போகாமை யன்று; தலைவியை வற்புறுத்துதலைக் குறித்துத் தவிர்ந்த தவிர்ச்சியாம் என்றவாறு.

---

(பாடம்) * குளகு மெஃகுளம்.

† வன்புறுத்தல்லது சேறல் இல்லை - தலையளி செய்து தெருட்டிப் பிரிய அவை பற்றுக்கோடாக ஆற்றுதலின், அவள் குணங்கள் வற்புறுத்துவன ஆயின.

இனி, உலகத்தார் பிரிதலும் ஆற்றியிருத்தலும் உடையரென உலகியலாற் கூறலும் பிரிவுணர்த்திற்றேயாம். இனிப் பிரிவினை விளக்கம் கூறி 'ஆற்றியிரு' என்றலும் அவற்றை வற்புறுத்தலாம்.

(தொல். பொருள். கஅச. நச்சி.)

எனவே வினைமேற் செல்லுங்காலத்துத் தலைவி பொருள் எனப் போகாமை இல்லை; வற்புறுத்திப்போம் என்றவாறும். (சச)

கஅச. கிழவி நிலையே வினையிடத் துரையார்*
வென்றிக் காலத்து விளங்கித் தோன்றும்.

(இ - ள்.) உரையாமை யாவது உருவு வெளிப்பாடு. அதனை வினைநிகழு மிடத்து உரைக்கப்பெறுர்; தலைமக்கள் தமது வினைமுடிந்த காலத்து விளங்கித்தோன்று மென்றவாறு.

எனவே, வினையிடத்துள் நினைப்பாராயினும் அமையும்; உரைக்கப் பெறுர் என்பதூஉம், வென்றிக்காலத்துக் குற்றமறத் தோன்றும் என்ப தூஉம் கொள்ளப்படும்.

உதாரணம்

"தங்கிய ஒள்ளொளி யோலைய தாய்த்தட மாமதின்மேல்
பொங்கிய வேந்தர் எரிமுகந் தோன்றின்று போதுகண்மேற்
பைங்கயல் பாய்புனற் பாழிப்பற் றுரைப் பணித்ததென்னன்
செங்கய லோடு சிலையுங் கிடந்த திருமுகமே" (பாண்டிக்கோவை)

என வரும். (சரு)

கஅரு. †பூப்பின் புறப்பா டீரறு நாளும்
நீத்தகன் றுறையார் என்மனூர் புலவர்
பரத்தையிற் பிரிந்த காலை யான.

இதுவு மது.

(இ - ள்.) பூப்பினது புறம்பு பன்னிரண்டு நாளும் விட்டு அகன்றுறைவா ரல்லர் என்று சொல்லுவர் பரத்தையிற் பிரிந்த காலத்து என்றவாறு.

பரத்தையர் சேரியா ருயினும் பூத்தோன்றி மூன்றுநாள் கழிந்த பின்பு பன்னிரண்டு நாளும் நீங்குதல் அறமன்று என்றவாறு. இதனுற் பயன் என்னையெனின் அது கருத் தோன்றுங்காலம் என்க. (சகு)

---

* உரையார் எனவே நினைத்தல் உளதென்பதூஉம், அது போர்த் திறம் புரியும் உள்ளத்தால் கதுமென மாயும் என்பதூஉங் கொள்க. (தொல். பொருள், கஅசு, நச்சி.)

† பூப்பின் முன்னறு நாளும் பின்னறு நாளும் என்றும், பூப்புத் தோன்றியநாள் முதலாகப் பன்னிரண்டு நாளும் என்றும், நீத்தல் தலைவன்மேல்ஏற்றியும், அகறலைத் தலைவிமேல்ஏற்றியும்உரைப்பாரும்உளர்.

பூப்புப்புறப்பட்ட ஞான்றும் மற்றைநாளும் கருத்தங்கில், அது வயிற் றில் அழிதலும் மூன்றும் நாளில் தங்கில் அது சில்வாழ்க்கைத் தாகலும் பற்றி முந்நாளும் கூட்டம் இன்று என்றார். (தொல். பொருள், கஅஎ நச்சி.)

௧அ௬. வேண்டிய கல்வி யாண்டுமூன் றிறவாது

இதுவு மது.

(இ - ள்.) விரும்பப்பட்ட கல்விக்கட் பிரியுங் காலம் மூன்றியாண்டின் மிகாது என்றவாறு. எனவே, ஓரியாண்டா யினு மீரியாண்டாயினும் ஆமென்பது கொள்ளப்படும். (௪௭)

௧அ௭. வேந்துறு தொழிலே* யாண்டின தகமே.

இதுவு மது.

வேந்துறு தொழிலாவது பகைதணி வினை.

(இ - ள்.) வேந்தற்குற்றவழி, தூது காவல் என அவ்வழிப் பிரிவிற்கும் ஆண்டினது அகமே காலம் என்றவாறு.

எனவே அறுதிங்கள் முத்திங்கள் எல்லாங் கொள்ளப்படும். (௪௮)

௧அ௮. ஏனைப் பிரிவும் அவ்வியல் நிலையும்

இதுவு மது.

(இ - ள்.) ஒழிந்த பொருள்வயிற் பிரிவிற்குங் காலம் யாண்டினதகம் என்றவாறு. (௪௯)

௧அ௯. யாறுங் குளனுங் காவும் ஆடிப்
பதிஇகந்து நுகர்தலும் உரிய என்ப.

இது, தலைவற்குங் கிழத்திக்கு முரியதோர் மரபு உணர்த்திற்று.

(இ - ள்.) யாறுங் குளனும் காவும் ஆடி என்பது—விளை யாட்டு என்று கொள்க.

உதாரணம்

"அருந்தவ மாற்றியா னுகர்ச்சிபோ லணிகொள" என்னும் பாலைக் கலியுள்,

"துயிலின்றி யாநீந்தத் தொழுவையம் புனலாடி
மயிலியலார் மருவுண்டு மறந்தமைகு வான்மன்னோ†."
(கலித்-௩௦)

என்று தலைவன் பதியிகந்து நுகர்ந்தமை தலைவி கூறியவாறு காண்க. (௫௦)

*இளிப்பத்து என்றது யாண்டு என்றதனால் பின்பனிதானும் என் பதனாற் கொண்ட சிறப்பில்லாத பின்பனிக் குரிய மாசி தொடங்கித் தை ஈறாக யாண்டு முழுவதூஉம் கொள்ளக்கிடந்ததேனும், அதுவும் பன்னிரு திங்களும் கழிந்ததன்மையின் யாண்டினது அகமாமென்றுணர்க. (தொல். பொருள். ௧அ௯. நச்சி.)

(பாடம்) † வான் கொல்லோ.

கசூ0. காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
*சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே.

இது, தலைவற்கும் தலைவிக்கு முரியதோர் மரபுணர்த்திற்று.

(இ - ள்.) *சிறந்தது பயிற்ற லாவது—அறத்தின்மேல் மன நிகழ்ச்சி.*

சூத்திரத்தாற் பொருள் விளங்கும். (ருக)

கசூக. தோழி தாயே பார்ப்பான் பாங்கன்
பாணன் பாட்டி† இளையர் விருந்தினர்
கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர்
யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப.

இது, கற்பின்கண் வாயில்க ளாவாரை உணர்த்திற்று.

(இ - ள்.) *பாட்டி யென்பது பாடினி யென்றவாறு.*

*தோழிமுதலாகச் சொல்லப்பட்ட பன்னிருவரும் வாயில்க ளாவார் என்றவாறு.* (ருஉ)

கசூஉ. ‡வினைவயின் பிரிந்தோன் மீண்டுவரு காலை
இடைச்சுர மருங்கில் தவிர்தல் இல்லை
உள்ளம் போல உற்றுழி உதவும்
புள்ளியற் கலிமா உடைமை யான.

இது, வினைமுற்றி மீண்ட தலைவற் குரியதோர் மரபு உணர்த்திற்று.

சூத்திரத்தாற் பொருள் விளங்கும்.

'இடைச்சுர மருங்கிற் றவிர்த லில்லை' என்பது வழியில் இடையிற் றங்காது இரவும் பகலுமாக வருமென்பது கருத்து. தங்குவானாயின் மனையாள்மாட்டு விருப்பின்றும்.

---

*சிறந்தது—அறம்பொருள் இன்பத்திற் சிறந்த வீட்டின்பம். சான்ற காமம் என்றார், நுகர்ச்சியெல்லாம் முடிந்தமை தோன்ற. ஏமஞ்சான்ற வாவன— வானப்பிரத்தமும் சந்நியாசமும். (தொல். பொருள். கசூஉ. நச்சி.)

(பாடம்) †பாடினி.

‡இதனை மீட்சிக்கு எல்லை கூறிய சூத்திரங்களின் பின்வையாது ஈண்டுத் துறவு கூறியதன் பின்னர் வைத்தார். இன்பநுகர்ச்சியின்றி இருந்து அதன்மேல் இன்பம் எய்துகின்ற நிலையாமை நோக்கியும், மேலும் இன்பப்பகுதியாகிய பொருள் கூறுகின்றதற்கு அதிகாரப்படுத்தற்கும என்றுணர்க. (தொல். பொருள். கசூச, நச்சி.)

## உதாரணம்

"இருந்த வேந்தன் அருந்தொழில் முடித்தெனப்
புரிந்த காதலொடு பெருந்தேர் யானும்
ஏறிய தறிந்தன் றல்லது வந்தவாறு*
நனியறிந் தன்றோ இலனே தாஅய்
முயறீபறழ் உகளும் முல்லையம் புறவிற்
கவைக்கதிர் வரகின் சீறூர் ஆங்கண்
மெல்லியல் அரிவை இல்வயின் நிறீஇ
இழிமின் என்றநின் மொழிமருண் டிசினே
வான்வழங் கியற்கை வளிபூட்டினையோ
மானுரு வாகநின் மனம்பூட்டினையோ
உரைமதி வாழியோ வலவ எனத்தன்
வரைமருள் மார்பின் நளிப்பனன் முயங்கி
மனைக்கொண்டு புக்கனன் நெடுந்தகை
விருந்தேர் பெற்றனள் திருந்திழை யோளே." (அகம். கஅச)

என வரும். பிறவு மன்ன. (இக)

கற்பியல் முற்றிற்று

---

(பாடம்) *ஏறியல்லது வந்தவாறு.

ஐந்தாவது

# பொருளியல்

இவ்வோத்து என்ன பெயர்த்தோ எனின், பொருளியல் என்னும் பெயர்த்து; பொருளியல்பு உணர்த்தினமையாற் பெற்ற பெயர். என்னை பொருளியல்பு உணர்த்தியவாறு எனின், மேற் சொல்லப்பட்ட ஒத்துக்களினும் இனிச் சொல்லும் ஒத்துக்களினும் வரும் பொருளினது தன்மை யுணர்த்துதலிற் பொருளியல் உணர்த்திற்றும்.

இதனை 'ஒழிபியல்' எனினும் இழுக்காது: அகப்பொருள் புறப்பொருள் என்பன இரண்டு பொருண்மையினும் எஞ்சி நின்றன கூறினமையின்.

கக௫. இசைதிரிந் திசைப்பினும் இயையுமன்* பொருளே
அசைதிரிந் திசையா என்மனார் புலவர்.

என்பது சூத்திரம்.

இதன் தலைச்சூத்திரம் என்னுதலிற்றோ எனின், தொடர்மொழிக்கட் பொருள் இயையுமாறு உணர்த்திற்று.

*(இ - ள்.) இசை திரிந்து ஒலிப்பினும் பொருள் இயையும்; அவ்வழி அச்சொற்கு அங்கமாகிய அசை திரிந்தொலியா என்றவாறு.*

என்றது சொல்லொடுசொல் தொடர்வுபடும் வாய்பாட்டால் தொடராது பிறிதோர் வாய்பாட்டால் தொடுப்பினும் பொருட்டொடர்பு உண்டாயிற் பொருள் இயையும்வழி அசைச்சொற்கள் திரியாது நின்ற நிலையே பொருள்படுமாறாயிற்று.

உதாரணம்

"கார்விரி கொன்றைப் பொன்னேர் புதுமலர்த்
தாரன் மாலையன் மலைந்த† கண்ணியன்
மார்பி னஃதே மையில் நுண்ஞாண்
நுதல திமையா நாட்டம் இகலட்டுக்
கையது கணிச்சியொடு மழுவே மூவாய்
வேலும் உண்டத் தோலா தோற்கே
ஊர்ந்த தேறே சேர்ந்தோள் உமையே
செவ்வான் அன்ன மேனி அவ்வான்
இலங்குபிறை அன்ன விலங்கு‡வால் வையெயிற்று
எரியகைந் தன்ன அவிர்ந்துவிளங்கு புரிசடை
முதிராத் திங்களொடு சுடருஞ் சென்னி

(பாடம்) * இசையுமன். † தனைந்த. ‡ விளங்கு.

மூவா அமரரு முனிவரும் பிறரும்
யாவரும் அறியாத் தொன்முறை மரபின்
வரிகிளர் வயமான் உரிவை தைஇய
யாழ்கெழு மணிமிடற் றந்தணன்
தாவில் தாள்நிழல் தவிர்ந்தன்றால் உலகே.''

(அகம். கடவுள் வாழ்த்து.)

இதற்குக் கொன்றையாலமைந்த தாரினனுய் மாலையினுய்க் கண்ணியனுய் நுண் ஞாண் மார்பினனுய் இமையா நாட்டத்து நுதலினனுய்க் கணிச்சியு மழுவு மூவாய் வேலும் ஏந்திய கையினனுய் யாவர்க்குந்தோலா தோனுமாய் ஏற்றினையு மூர்ந்து உமையாளையுஞ் சேர்ந்து செவ்வானன்ன மேனியையும் பிறைபோன்ற எயிற்றினையும் எரிபோன்ற சடையினையும் திங்களோடு சுடருஞ் சென்னியையும் உடையனுய் மூவாவமரர் முதலிய யாவரு மறியாத் தொன்முறை மரபினனுய்ப் புலியதளையும் உடுத்த யாழ்கெழு மணிமிடற்றந்தணனது சிவானுபூதியிற் பேருலகந் தங்கிற்று எனப்பொருள் உரைக்குங் காலத்து, அதன்கண் இடைக்கிடந்த சொற்கள் முன்னொடுபின் வாய்பாடுகள் சேராதன்றே; அவ்வழி அவ்வாய்பாட்டாற் போந்த பொருளுரைப்பச் சேர்ந்தவாறும் இசைதிரித்து இசைத்தவாறும் அவை தத்தம் நிலையிற் குலையாமை நின்று பொருள் பட்டவாறுங் கண்டு கொள்க.

''ஊறொரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின்
ஆறென்பர் ஆய்ந்தவர் கோள்.'' (குறள். ௬௬௨)

இதுவும் இரண்டென்னுந் தொகைக்கு 'ஊறொராமை' எனப் பொருள் உரைக்க வேண்டும். (௧)

௧௩௪. நோயும் இன்பமும் இருவகை நிலையிற்
*காமம் கண்ணிய மரபிடை தெரிய
எட்டன் பகுதியும் விளங்க ஒட்டிய
உறுப்புடை யதுபோல் உணர்வுடை யதுபோல்
மறுத்துரைப் பதுபோல் நெஞ்சொடு புணர்த்துஞ்
சொல்லா மரபி னவற்றொடு கெழீஇச்
செய்யா மரபில் தொழிற்படுத் தடக்கியும்
அவரவர் உறுபிணி தமபோற் சேர்த்தியும்
அறிவும் புலனும் வேறுபட நிறீஇ
இருபெயர் மூன்றும் உரிய வாக
உவம வாயிற் படுத்தலும் உவமம்†
ஒன்றிடத்‡ திருவர்க்கும் உரியபாற் கிளவி.

* 'காமம் கண்ணிய' என்றதனுல் கைக்கிளையும் பெருந்திணையுமாகிய காமத்திற்கு வருவனவும் கொள்க. (தொல். பொருள். ௧௩௬. நச்சி.) (பாடம்) † உவமமொடு.

‡ 'ஒன்றிடத்து' என்றுர் வேண்டியவாறு உவமம் கோடலாகாதென்றற்கு.

என்—எனின். ஒருசார் காமப்பொருண்மைபற்றி நிகழ்வதோர் கிளவி யுணர்த்திற்று.

(இ - ள்.) நோயும் இன்பமும் இருவகை நிலையிற் காமங் கண்ணிய மரபிடை தெரிய எட்டன் பகுதியும் விளங்க ஒட்டிய உறுப்புடையதுபோல் உணர்வுடையதுபோல் மறுத்துரைப்பது போல் நெஞ்சொடு புணர்த்தும் என்பது—துன்பமும் இன்ப மும் ஆகிய இருவகை நிலையினையுடைய காமத்தைக் குறித்த மரபு இடையீடுபடுதலான் மெய்ப்பரிவு எட்டாகிய எட்டன் பகுதியும் விளங்கப் பொருந்திய உறுபபுடையது போலவும் உணர் வுடையது போலவும் மறுத்துரைப்பது போலவும் நெஞ்சொடு புணர்த்துக் கூறியும் என்றவாறு.

'காமங்கண்ணிய' என்றதனல் அகப்பொருளாகிய காமமும் புறப் பொருளாகிய காமமும் கொள்ளப்படும். 'இடைதெரிய' என்பதனை,

"... ... ... ... —இன்பம்
இடைதெரிந் தின்னமை நோக்கி மனையாறு
அடைவொழிந்தார் ஆன்றமைந் தார்." (நாலடி. ௫௭)

என்றாற் போலக் கொள்க. 'தெரிய' என்னும் செயவெனெச்சம் ஏதுப் பொருண்மை குறித்துநின்றது. மெய்ப்பாடு எட்டாவது:—நகை, அழுகை, உவகை, இளிவரல், அச்சம், பெருமிதம், மருட்கை, வெகுளி: இவற்றின் பகுதி மெய்ப்பாட்டியலுட் காண்க. இம் மெய்ப்பாடு உறுப் புடையதுபோலச் சொல்லப்பட்ட நெஞ்சின்கட் புலப்பட என்றவாறு.

சொல்லா மரபி னவற்றொடு கெழீஇச் செய்யா மரபிற்றொழிற்படுத்தடக்கியும் என்பது—சொல்லாத மரபினையுடையவற்றோடு கெழுமி அவை செய்யாத மரபை யாண்டுப் படுத்தியவற்றையும் நெஞ்சினைப்போல அடக்கியும் என்றவாறு.

சொல்லாமரபின ஆவன—புள்ளும், மாவும், மரனும், கடலும், கான லும் முதலாயின. செய்யா மரபாவன—தூதாச் சேறலும் வருதலும் உளபோலக்கூறும் அவைபோல்வனவும் பிறவும்.

அவரவருறுபிணி தமபோற் சேர்த்தியும் என்பது—யாவர் சிலர் யாதொரு பிணியுற்றார் அவருற்ற பிணியைத் தாமுற்ற பிணிபோலச் சேர்த்தியும் என்றவாறு.

'அவரவர்' என்பது உயர்திணையாய்க் கூறினும் இருதிணையுங் கொள்ளப்படும்:

"ஒருபாற் கிளவி ஏனைப்பாற் கண்ணும்
வருவகை தானே வழக்கென மொழிப." (பொருளியல். ௨௭)

என்பதனல்.

அறிவும் புலனும் வேறுபட நிறீஇ இருபெயர் மூன்றும் உரியவாகவுவம வாயிற் படுத்தலும் உவமம் ஒன்றிடத்து என்பது—அறிவையும் அறியப்படும்

பொருளையும் வேறுபட நிறுத்தி இருவகைப்பட்ட பெயரும் மூவகைப் பட்ட பொருட்கும் உரித்தாக உவமம் பொருந்து மிடத்து உவமவாயிற் படுத்தலும் என்றவாறு.

வேறுபட நிறுத்தலாவது—தத்தம் நிலைமை யொழிய வென்றவாறு. இருபெயராவது—உவமைப்பெயரும் உவமிக்கும் பெயரும். மூன்றும் உரிய வாகும் என்பது—தொழிலும் பண்பும் பயனும். 'உவமம் ஒன்றிடத்து' என்றதனை மொழி மாற்றுக.

இருவர்க்கும் உரியபாற் கிளவி என்பது—தலைமகற்குந் தலைமகட்கும் உரிய வொருகூற்றுக் கிளவி என்றவாறு.

அவற்றுள் நெஞ்சொடுபுணர்த்தற்கு உதாரணம் :—

"கைகவியாச் சென்று கண்புதையாக் குறுகிப்
பிடிக்கை யன்ன பின்னகந் தீண்டித்*
தொடிக்கை தைவரத் தோய்ந்தன்று கொல்லோ
நாணொடு மிடைந்த கற்பின் வாணுதல்
அந்தீங் கிளவிக் குறுமகள்
மென்தோள் பெறநசைஇச் சென்றஎன் நெஞ்சே. (அகம். க)

என்பது உறுப்புடையதுபோல உவகைபற்றி வந்தது.

"சென்றதுகொல் போந்ததுகொல் செவ்வி பெறுந்துணையும்
நின்றதுகொல் நேர்மருங்கிற் கையூன்றி—முன்றில்
முழங்குங் கடாயானை மொய்ம்மலர்த்தார் மாறற்கு
உழந்துபின் சென்றஎன் நெஞ்சு." (முத்தொள்ளாயிரம். கூக)

இது அவலம்பற்றி நெஞ்சினை உறுப்புடையதுபோற் கூறிய பெண்பாற் கூற்று.

"உள்ளம் பிணிக்கொண்† டோள்வயின் நெஞ்சஞ்
செல்லல் தீர்கஞ் செல்வா மென்னும்."‡ (நற்றிணை. உஅச)

என்றவழி உணர்வுடையது போல் இளிவரல் பற்றிவந்த தலைமகன் கூற்று.

"குறுநிலைக் குரவின் சிறுநனை நறுவீ
வண்டுதரு நாற்றம் வளிகலந்§ தியக்
கண்களி பெறூஉங் கவின்பெறு காலை
யெல்வளை நெகிழ்த்தோற் கல்ல லுறீஇயர்§
சென்ற நெஞ்சம் செய்வினைக் குசாவாய்¶
ஒருங்குவரல் நசையொடு வருந்துங் கொல்லோ
அருளா னாகலின் அழிந்திவண் வந்து
தொன்னலன் இழந்தஎன் பொன்னிறம் நோக்கி

(பாடம்) * தீண்டித்தன்.
† துணிகொண். ‡ மெனினும். § வண்டுக்க நாற்ற மவள்கலந். § நெகிழ்த்தோ ரகல வரீஇயர். ¶ உசாவா.

ஏதி லாட்டி இவளெனப்
பேரயின்று கொல்லோ நோதலை மணந்தே.''*

(நற்றிணை. இசு)

இஃது உணர்வுடையது போல் இளிவரல் பற்றி வந்த தலைமகள் கூற்று.

''நின்மொழி கொண்டியானோ விடுவனென் மொழிகொண்†
டென்னெஞ்சம் ஏவல் செயின்.''

(கலித். ககரு)

இது மறுத்துரைப்பது போல் தலைமகன் கூற்று: உவகைபற்றி வந்தது.

''அவர்நெஞ் சவர்க்காதல் கண்டும் எவனெஞ்சே
நீயெமக் காகா தது.''

(குறள். கஉகக)

இதுவும் மறுத்துரைப்பதுபோல் தலைவி கூற்று: இளிவரல்பற்றி வந்தது.

''இருளிடை மிதிப்புழி நோக்கியவர்
தளரடி தாங்கிய சென்ற தின்றே''‡

(அகம். கஉஅ)

இஃது அச்சம்பற்றி வந்தது. பிறவு மன்ன.

சொல்லாமரபி னவற்றொடுகெழீஇச் செய்யாமரபிற் றொழிற்படுத் தடக்கியும் என்பதற்குச் செய்யுள்:—

''கானலுங் கழறுது கழியுங் §கூறுது
தேனிமிர் நறுமலர்ப் புன்னையும் மொழியாது
ஒருநின் அல்லது பிறிதியாதும்$ இலனே
இருங்கழி மலர்ந்த கண்போல் நெய்தற்
கமழிதழ் நாற்றம் அமிழ்தென நசைஇத்
தண்டா தூதிய வண்டினங் களி¶ சிறந்து
பறைஇய தளருந்** துறைவனை நீயே
சொல்லல் வேண்டுமால்...''

(அகம். கஎ0)

என்பது தலைவி கூற்று. தலைவன் கூற்று வந்தவழிக் காண்க.

அவரவர் உறுபிணி தமபோற் சேர்த்தியதற்குச் செய்யுள்:—

''பாய்திரை பாடோவாப் பரப்புநீர்ப் பனிக்கடல்
தூவறத் துறந்தனன் துறைவனென் றவன்றிறம்
நோய்தெற உழப்பார்கண் இமிழ்தியோ எம்போலக்
காதல்செய் தகன்றாரை உடையை யோநீ.''

(கலித். கஉக)

பிறவு மன்ன.

அறிவும் புலனும் வேறுபட நிறீஇ உவமவாயிற் படுத்தற்குச் செய்யுள்:—

''ஓங்கெழிற் கொம்பர் நடுவி தெனப்புல்லும்
காந்தட் கிவருங் கருவிளம் பூக்கொள்ளும்
மாந்தளிர்க் கையில் தடவரு மாமயில்
பூம்பொழில் நோக்கிப் புகுவன பின்செல்லும்

(பாடம்) * நேர்தலை இழந்தே. † விடுவென் மற்றென் மொழி கொண். ‡ என்னெஞ்சு. § கழனியும். $ நீ அல்லது உறுதி யாதும். ¶ கழி. ** பறவை கிளரும்.

தோளெனச் சென்ற துளங்கொளி வேய்தொடும்
நீள்கதுப் பிஃதென நீரற் றறல்புகும்
வாளொளி முல்லை முகையை முறுவலென்று
ஆள்வலி மிக்கான் அஃதறி கல்லான்."

இவை, இடையுங் கையு முதலாகிய உறுப்புக்களைப் பற்றிய உவமவாயிற் படுத்தறியும் அறிவையும் அறியப்படும் பொருளையும் வேறுபட நிறுத்தி உவமம் பொருந்தியவழிக் கூறியவாறு காண்க. வேயைத்தோள் போலு மென்னுது தோளென்று தொட்டமையால் அறியப்படும் பொருள் வேறு பட்டது. அதனைத் திரியக் காண்டலால் அறிவு வேறுபட்டது. பித்துங் களியும் போல் முலையெனச் சென்று வேயைத்தொடும் என்னுது தோளெனச் சென்று வேயைத் தொட்டமையால் உவமம் ஒன்றியவழி உவமவாயிற் படுத்தது. (உ)

ககரு. கனவும் உரித்தால் அவ்விடத் தான.

என் - எனின். இதுவுங் காமம் இடையிடுபட்டுழி வருவதோர் பொருள் வேறுபாடு உணர்த்திற்று.

(இ - ள்.) மேற்கூறியவாற்றால் காமம் இடையீடுபட்டுழிக் கனக் காண்டலும் உரித் தென்றவாறு.

இது தலைமகற்குந் தலைமகட்கும் உரித்து.

"இன்னகை இனைய மாகவும் எம்வயின்
ஊடல் யாங்குவந் தன்றென யாழநின்
கோடேந்து புருவமொடு குவவு நுதல் நீவி
நறுங்கதுப் புளரிய நன்ன ரமையத்து
வறுங்கை காட்டிய வாயல் கனவின்
ஏற்றேக் கற்ற உலமரல்
போற்று யாகலிற் புலத்தியால் எம்மே." (அகம். ௩௯)

என்றது கனக் கண்டு கூறியது.

"கேட்டிசின் வாழி தோழி அல்கற்
பொய்வ லாளன் மெய்யுறல் மரீஇ
வாய்த்தரு* பொய்க்கன மருட்ட ஏற்றெழுந்து
அமளி தைவந் தனளே குவளை
வண்டுபடு மலரிற் சாஅய்த்
தமியேன் மன்ற அளியன் யானே." (குறுந். ௩0)

இது, தலைவி கனக் கண்டு கூறியது. (௩)

கககூ. தாய்க்கும் உரித்தாற் போக்குடன் கிளப்பின்.

என்—எனின். நற்றாய்க் குரியதோர் மரபு உணர்த்திற்று.

(இ - ள்.) மேற்சொல்லப்பட்ட கனவு † தாய்க்கும் உரித்து, உடன்போக்குக் கிளக்கப்பட்டுழி என்றவாறு.

(பாடம்) * வாய்த்தகைப்.

† தலைவி போகாமற் காத்தற்குரிய ளாதலானும் அவளை என்றும் பிரியாத பயிற்சியானும் செவிலிக்குக் கனவு உரித்தாயிற்று. (தொல். பொருள். ககஅ. நச்சி.)

உதாரணம்

'கண்படை பெறேன் கனவ' (அகம். ௫௫)

என வரும். வேறும் வந்தவழிக் காண்க. (௪)

கக௭. பால்கெழு கிளவி நால்வர்க்கும் உரித்தே
நட்பின் நடக்கை யாங்கலங் கடையே.

என்—எனின். எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுதனுதலிற்று.

(இ - ள்.) *பால்கெழு கிளவி நால்வர்க்கும் உரித்து என்பது—பான்மை கெழுமப்பட்ட கிளவி பெண்பாலா ராகிய நால்வர்க்கும் உரித்தென்றவாறு.*

நால்வராவார்—தலைவி, தோழி, நற்றாய், செவிலி. அஃதேல் தலைமகளை யொழிய மூவர் என்று அமையாதோ எனின் மேல் தலைமகட்கும் உரித்தென்றார் அவரொடு கூட நால்வர் என வகையறுத்தல் என்பது.

நட்பி னடக்கை யாங்கலங் கடையே என்பது—நட்பின் வழங்கும் வழக்கல்லாதவிடத்து என்றவாறு.

அஃதாவது, தலைவியொடு தோழி யொழுகும் ஒழுக்கம் அவ்வழியல்லாதவிடத்தென்றவாறு. அவண்மாட்டு நிகழ்வது தலைவன் தோழிக் குணர்த்தாது பிரிந்தவழி என்று கொள்ளப்படும். பாற்கிளவி என்பது பயிலாது வரும் ஒரு கூற்றுச்சொல் எனப்பட்டது. அதனைக் கெழுமிய சொல் பால்கெழு கிளவியாயிற்று. ஆண்டு நற்றாய் கூறியதற்குச் செய்யுள் :

"கருமணற் கிடந்த பாவைஎன்
அருமக ளே*யென முயங்கினள் அழுமே." (அகம். ௧௬௫)

செவிலி கூறியதற்குச் செய்யுள் :—

"தான்தாயாக் கோங்கம் தளர்ந்து† முலைகொடுப்ப
ஈன்றாய்நீ பாவை இருங்குரவே—ஈன்றாய்
மொழிகாட்டா யாயினும் முள்ளெயிற்றாள் சென்ற
வழிகாட்டாய் ஈதென்று‡ வந்து" (திணைமாலைநூற். ௬௫)

தோழி கூறியதற்குச் செய்யுள் வந்தவழிக்காண்க. (௫)

கக௮. உயிரும் நாணும் மடனும் என்றிவை
செயிர்தீர் சிறப்பின் நால்வர்க்கும் உரிய.

என்—எனின். மேற்சொல்லப்பட்ட நால்வர்க்கு முரியதோர் பொருண்மை யுணர்த்திற்று.

(இ - ள்.) *உயிரும் நாணும் மடப்பமும் என்று சொல்லப்பட்டவை குற்றந் தீர்ந்த சிறப்பினையுடைய தலைமகட்கும் தோழிக்கும் நற்றாய்க்கும் செவிலிக்கும் உரிய என்றவாறு.*

(பாடம்) * மருமகளே. † தளரா. ‡ நீ எனக்கு.

செயிர்தீர் சிறப்பின் என்றமையான் ஏனையோர் போலாது இவர் நால்வரும் ஒரு நீர்மையர் என்று கொள்க. இதனாற் சொல்லியது என்னை யெனின், இந்நால்வரும் ஆக்கமுங்கேடும் ஒருவர்மாட்டு வந்துழித் தமக் குற்றதுபோல் நினைப்பராதலான் ஒருவரையொருவர் இன்றியமையாது ஓருயிர் போல்வர் எனவும், நாணமும் மடனும் நால்வர்க்கும் ஒக்குமா கலான் அவலமாகிய வழியும் வருத்தம் ஒக்கும் எனவும் கூறியவாறு அதற்குச் செய்யுள் :—

"இவளே நின்னல திலளே யாயுங்
குவளை உண்கண் இவளல திலளே
யானும் ஆயிடை யேனே
மாமலை நாட மறவா தீமே." (௬)

எனவரும்.

௧௯௯. வண்ணந் திரிந்து* புலம்புங் காலை
உணர்ந்தது போல உறுப்பினைக் கிழவி
புணர்ந்த வகையாற் புணர்க்கவும் பெறுமே.

என்—எனின். தலைமகட்குரியதோர் பொருளுணர்த்திற்று.

(இ - ள்.) தலைமகள் வண்ணம் வேறுபட்டுத் தனிமையுறுங் காலைத் தலைமகன் பிரிவைத் தன் உறுப்புக்கள் உணர்ந்தன போலப் பொருந்தும் வகையாற் கூறவும் பெறும் என்றவாறு.

உம்மை எதிர்மறை.

"தணந்தமை சால அறிவிப்ப போலும்
மணந்தநாள் வீங்கிய தோள்." (குறள். ௧௨௩௩)

"தண்ணந் துறைவன் தணந்தமை† நம்மினும்
முன்னம் உணர்ந்த வளை." (குறள். ௧௨௭௭)

எனவரும். (௭)

௨௦௦. உடம்பும் உயிரும் வாடியக் கண்ணும்‡
என்னுற் றனகொல் இவையெனின் அல்லதைக்
கிழவோற் சேர்தல் கிழத்திக் கில்லை.

(இ - ள்.) இஃது உடம்பும் உயிரும் மெலிந்த இடத்தும் இவை என்னுற்றன எனக் கூறினல்லது, கிழவோன் உள்வழிப் படர்தல் கிழத்திக்கு இலலை என்றவாறு.

உதாரணம்

"கதுமெனத் தாநோக்கித் தாமே கலுழும்
இதுநகத் தக்க துடைத்து. (குறள். ௧௧௭௩)

எனவும்,

(பாடம்) * பசந்து. † துறந்தமை. ‡ காலும்.

"ஓஒ இனிதே எமக்கிந்நோய் செய்தகண்
தாஅம் இதற்பட் டது*." (குறள்.௧௧௭௬)

எனவும் வரும். (அ)

௨0௧. ஒருசிறை நெஞ்சோ டுசாவுங் காலை
உரிய தாகலும் உண்டென மொழிப.

என்—எனின். மேலதற்கோர் புறனடை உணர்த்திற்று.

(இ - ள்.) தனித்து நெஞ்சோடு உசாவுங்காலத்துக் கிழவோற்சேர்தல் உரியதாகலும் உண்டு என்றவாறு.

உம்மை எச்சவும்மை யாகலால் தோழியோடு உசாதலுங் கொள்க.

"கோடீர் இலங்குவளை நெகிழ நாடொறும்
பாடில கலிழுங் கண்ணொடு புலம்பி
ஈங்கிவண் உறைதலும் உய்குவம் ஆங்கே
எழுவினி வாழிய† நெஞ்சே." (குறுந். ௧௧)

எனவரும்.

"பகலே பலருங் காண வாய்விட்‡
டகல்வயற் படப்பை யவனூர்§ வினவிச்
சென்மோ வாழி தோழி." (நற்றிணை. ௩௬௫)

என்றிது தோழியொடு உசாவியது. (௧)

௨0௨. தன்வயிற் கரத்தலும் அவள்வயின் வேட்டலும்
அன்ன இடங்கள் அல்வழி யெல்லாம்
மடனொடு நிற்றல் கடனென மொழிப.

என்—எனின். தலைமகட் கின்றியமையாத மடன் அழியும் இடம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) தலைமகன் தனதொழுக்கம் தலைமகள்மாட்டுக் கரந்து உணர்த்தும் வழியும் தலைமகள்மாட்டுப் புணர்ச்சி வேட்கை தோற்றியவழியுமாகிய அத்தன்மைப்பட்ட விடங்களல்லாதவழி யெல்லாம் தலைமகள் மடனொடு நிற்றல் கடன் என்று சொல்லுவர் என்றவாறு.

தன்வயிற் கரந்தவழி மடனழிய நின்றதற்குச் செய்யுள்:—

"முத்தேர் முறுவலாய் நம்வலைப்§ பட்டதோர்
புத்தியானை வந்தது: காண்பான்¶ யான் றங்கினேன்."

என்றவழி, அதற்குடம்படாது.

(பாடம்) *இடர்ப்பட்டன. †வாழி என். ‡ நாண் விட்.
§ அகல்வயிற் படப்பையவனகர். $ மலை. ¶ காணயான்.

"அவ்வியானை வனப்புடைத் தாகலுங் கேட்டேன்." (கலித், ௬௭) என்றவழி, பொய்கூறினன் என்னுங் கருத்தினளாகிக் கூறுதலின் மடனழிதலாயிற்று.

"கவவுக்கை நெகிழ்ந்தமை போற்றி மதவுநடைச்
செவிலி கையென் புதல்வனை நோக்கி
நல்லோர்க் கொத்தனிர் நீயிர் இஃதோ
செல்வர்க் கொத்தனம் யாமென மெல்லவென்
மகன்வயிற் பெயர்தந் தேனே*." (அகம். ௨௬)

என்றவழி வேட்கை தணிதலாகாதாள் அது தணியுந்துணையு முயங்காது, கவவுக்கை நெகிழ்ந்ததெனப் பெயர்தல் மடனழிதலாயிற்று. (௧௦)

௨௦௫. அறத்தோடு நிற்குங் காலத் தன்றி
அறத்தியல் மரபிலள் தோழி என்ப.

இது, அறந்தொடு நிற்கு நிலைமரபு உணர்த்திற்று.

(இ - ள்.) தலைவி அறத்தொடு நிற்குங் காலத்தின்றித் தோழி தானே அறத்தொடு நிற்கும் மரபு இலள் என்றவாறு.

தலைவி அறத்தொடு நிற்குமாறு:—

"விழுந்த† மாரிப் பெருந்தண் சாரற்
கூதிர்க் கூதளத் தலரி நாறும்
மாதர் வண்டின் நயவருந் தீங்குரல்
மணநாறு சிலம்பின் அசுணம் ஓர்க்கும்
உயர்மலை நாடற் குரைத்தல் ஒன்றோ
துயர்மருங் கறியா அன்னைக் கிந்நோய்
தணியுமா றிதுவென உரைத்தல் ஒன்றோ
செய்யா யாதலிற் கொடியை தோழி
மணிகெழு நெடுவரை அணிபெற நிவந்த
செயலை அந்தளிர்‡ அன்னஎன்
மதனின் மாமெய்ப்§ பசலையுங் கண்டே." (நற்றிணை. ௨௪௪)

என வரும். தோழி யறத்தொடு நிற்றல் வருகின்ற சூத்திரத்தாற் கூறுப. (௧௧)

௨௦௬. எளித்தல் ஏத்தல் வேட்கை யுரைத்தல்
கூறுதல் உசாஅதல் ஏதீடு தலைப்பாடு
உண்மை செப்புங் கிளவியோடு தொகைஇய
$எழு வகைய என்மனார் புலவர்.

என்—எனின். இது தோழி யறத்தொடுநிற்குமாறு உணர்த்திற்று.

---

(பாடம்) *பெயர்தந்தெனனே. † வீழ்ந்த. ‡ மருதளிர். § மாமை.

$'அவ்வெழுவகைய' என்றதனால் உண்மை செப்புங்கால் ஏனை ஆறு பொருளினுள் சில உடன்கூறி உண்மை செப்பலும் ஏனைய கூறுங்காலும் தனித்தனி கூறுது இரண்டும் மூன்றும் உடனே கூறுதலும் கொள்க. (தொல். பொருள். ௨௦௭. நச்சி.)

இதற்குப் பொருள் களவியலுள் தோழிகூற்று உரைக்கின்றுழி உரைக்கப்பட்டது. (௩உ)

உ0௫. உற்றுழி யல்லது சொல்ல லின்மையின்
அப்பொருள் வேட்கைக் கிளவியி னுணர்ப.

என்—எனின். இது செவிலிக்குரியதோர் மரபுணர்த்திற்று.

(இ - ள்.) காமம் மிக்கவழி யல்லது சொல்நிகழ்ச்சி யின்மையின் தலைமகள் தான் கருதிய பொருண்மேல் வேட்கையைத் தலைமகள் தன்னுனே யறிவர் என்றவாறு.

பன்மையாற் கூறினமையால் அவ்வுணர்ச்சி செவிலிக்கும், நற்றாய்க்கும் ஒக்கும் என்றவாறு.

இதனுற் சொல்லியது அறத்தொடு நிற்பதன் முன்னம் செவிலி குறிப்பினுன் உணரும் எனக் கொள்க.

"அன்னாய் வாழிவேண் டன்னை நின்மகள்
பாலும் உண்ணுள் பழங்கண் கொண்டு
நனிபசந் தனளென வினவுதி" (அகம். ௪௮)

என்றவழிச் செவிலி குறிப்பினுன் உணர்ந்தவாறு காண்க. வேட்கை தோற்றத் தலைமகனில்லாதவழித் தோழிகூற்று நிகழும். அது "காமர் கடும்புனல்" கலித். ௩௧) என்னும் பாட்டினுள் காண்க. (௧௩)

உ0௬. செறிவும் நிறைவும் செம்மையுஞ் செப்பும்
அறிவும் அருமையும் பெண்பா லான.

என்—எனின். இது பெண்டிர்க் குரியதோர் இயல்புணர்த்திற்று.

(இ - ள்.) செறிவு என்பது—அடக்கம்.
நிறைவு என்பது—அமைதி.
செம்மை என்பது—மனங்கோடாமை
செப்பு என்பது—சொல்லுதல்
அறிவு என்பது—நன்மை பயப்பனவுந் தீமை பயப்பனவும் அறிதல்.

அருமை என்பது—உள்ளக் கருத்தறிதலருமை. இவை எல்லாம் பெண்பாலுக்கத்தன என்றவாறு.

இதனுற் சொல்லியது மேற்சொல்லிய அறத்தொடுநிலைவகை இனிக் கூறுகின்ற வரைவுகடாதற்குப் பகுதியும் உண்மைவகையானும் புனைந்துரைவகையானும் கூறுங்கால் இவை பேதையராகிய பெண்டிர்க்கு இயையுமோ என ஐயுற்ருர்க்குக் கூறப்பட்டது. (௧௪)

உ0௭. பொழுதும் ஆறுங் காப்புமேன் றிவற்றின்
வழுவி னுகிய குற்றங் காட்டலும்

தன்னை யழிதலும் அவணூ* றஞ்சலும்
இரவினும் பகலினும் நீவா† என்றலும்
கிழவோன் தன்னை வாரல் என்றலும்
நன்மையுந் தீமையும் பிறிதினைக் கூறலும்
புரைபட வந்த ‡அன்னவை பிறவும்
வரைதல் வேட்கைப் பொருள என்ப.

என்—எனின். இது தோழி கூற்றிற் கூறப்பட்ட சில கிளவிக்குப் பயன் உணர்த்திற்று.

(இ-ள்.) தலைமகன் வருகின்ற பொழுதும் நெறியும் ஊரின்கட் காவலும் என்று சொல்லப்பட்டவற்றின்கண் வரும் தப்பினால் உளதாகுங் குற்றங் காட்டலும், தான் மனனழிந்து கூறலும், தலைமகட்கு வரும் இடையூறு கூறலும், தலைமகனைப்§ பகற் குறிவிலக்கி இரவுக்குறி நீ வா என்றலும், இரவுக்குறி விலக்கிப் பகற்குறி நீ வா என்றலும், தலைமகனை வாரா தொழி யெனக் கூறலும், நன்மையாகவுந் தீமையாகவும் பிறபொருளை எடுத்துக் கூறலும், இத் தன்மையவாகிக் குற்றம் பயப்ப வந்த அத்தன்மைய பிறவும் புணர்ச்சி விருப்பமின்மையாற் கூறப் பட்டனவல்ல; வரைதல்வேண்டும் என்னும் பொருளையுடைய என்றவாறு.

இவையெல்லாந் தோழி கூற்றினுள் கூறப்பட்டன. ஆயின் ஈண்டோதிய தென்னை எனின், அவை வழுப்போலத் தோற்றும் என்ப தனைக் கடைப்பிடித்து அன்பிற்கு மாறுகாது ஒருபயன் படவந்த தென உணர்த்துதலே ஈண்டு ஓதப்பட்ட தென்ப. நன்மையுந் தீமையும் பிறி தினைக் கூறலும் என்பது நாடும் ஊரும் இல்லுங் குடியும் என ஆண் டோதப்பட்டது. இவை வரைதல் வேட்கைப் பொருளவாமாறும் ஆண்டுக்காட்டப்பட்ட உதாரணத்தான் உணர்க. (௪௭)

உ௦௮. வேட்கை மறுத்துக் கிளந்தாங் குரைத்தல்
மரீஇய மருங்கின் உரித்தென மொழிப.

என்—எனின். இதுவும் தலைமகட்குந் தோழிக்கும் உரியதோர் இயல்புணர்த்திற்று.

(இ-ள்.) வரைதல் வேட்கைப் பொருளாற் கூறுதலை மறுத்துப் பட்டாங்கு கூறிச் சொல்லுதல் மருவிய பக்கத்தின் உரித் தென்றவாறு. மருவிய பக்கமாவது களவொழுக்கம் நீட்டித்த இடம். அவ்வழிப் பட்டாங்கு கூறுதலும் ஆம் என்ற

(பாடம்) * அவனூ. † நீவரல்.

‡ அவை ஊடற்கண் இன்றியும் தலைவனைக் கொடியன் என்றலும், நொதுமலர் வரைகின்றார் என்றலும், அன்னை வெறி எடுக்கின்றாள் என்றலும் பிறவுமாம். (தொல். பொருள். ௨௧௧. நச்சி.)

§ தலைவனை. (நச்சி.)

வாறு. எனவே மேற்கூறியவாறு கூறுதல் மருவாதவழி என்ற வாறும்.

"கொடிச்சி யின்குரல் கிளைசெத்* தடுக்கத்துப்
பைங்குரல் ஏனற் படர்தருங் கிளியெனக்
காவலுங் கடியுநர் போல்வர்
மாமலை† நாட வரைந்தனை கொண்மே." (ஐங்குறு. உ௮௧)

என வரும். (௧௧)

௨0௯. தேரும் யானையுங் குதிரையும் பிறவும்
ஊர்ந்தனர் இயங்கலும் உரியர் என்ப.

என்—எனின். இது தலைமகற்குரியதோர் மரபுணர்த்திற்று.

(இ - ள்.) களவுகாலத்துத் தேரும் யானையும் குதிரையும் பிறவும் ஊர்ந்து சேறலும் உரியர் என்றவாறு. களவின்கண் என்பது அதிகாரத்தான் வந்தது.

"நெடுந்தேர் கடாஅய்த் தமியராய் வந்தோர்
கடுங்களிறு காணீரோ என்றீர்—கொடுங்குழையார்
யானை அதருள்ளி நிற்பரோ தம்புனத்து
ஏனல் கிளிகடிகு வார்."

பிறவு மன்ன.

'ஊர்ந்தன ரியங்கலு முரியர்' என்றமையால் தனி வருதல் பெரும் பான்மை. இதனை எச்ச வும்மையாக்கி வையமூர்தலும் இளையரோடு வருதலுங் கொள்க.

"வல்வே:லிளையரொ டெல்லிச் செல்லாது" (அகம். ௧௨0)

என வரும்.

பிறவுமன்ன. இதனால் சொல்லியது பெரியார் இவ்வாறு செய்வார் எனவுங் கூறியவாறும். (௧௭)

௨௧0. உண்டற் குரிய ‡அல்லாப் பொருளை
உண்டன போலக் கூறலும் மரபே.

என்—எனின். இஃது ஒருசார் வழுவமைத்தலை நுதலிற்று.

(இ - ள்.) உண்டற்றொழிலுக் குரியவல்லாத பொருளை உண்டனவாகக் கூறலும் மரபென்றவாறு.

'பசலையால் உணப்பட்டுப் பண்டைநீ ரொழிந்தக்கால்' (கலித். ௧௫)

எனவும்,

(பாடம்) * கிளிசெத். † மால்வரை.

‡ இன்னும் உய்த்துக் கொண்டுணர்தல் என்பதனான் உண்ணப்படு தற்குரிய அல்லாத பொருளதனைப் பிறர் உண்ணப்பட்டது போலக் கூறலும் மரபாம் என்பது பொருளாகக் கொள்க. (தொல். பொருள். ௨௧௩. நச்சி.)

' நீலமுண்ட துகில் '

எனவும்,

"கண்ணுங் கொளச்சேறி நெஞ்சே இவையென்னைத்
தின்னு மவர்க்காண லுற்று." (குறள். ௧௨௪௪)

எனவும் வரும்.

இது சொல்லின் கட் கிடந்ததோ ரொழிபு. (௧௮)

௨௧௧. பேசருளேன மொழிதலும் வரைநிலை யின்றே
காப்புக்கைம் மிகுதல் உண்மை யான
அன்பே யறனே யின்ப நாணொடு
துறந்த ஒழுக்கம் பழித்தன் றாகலின்
ஒன்றும் வேண்டா காப்பி னுள்ளே.

என்—எனின். இது களவுக் காலத்துத் தலைமகற் குரியதோர் இயல் புணர்த்திற்று.

(இ - ள்.) பொருள்வயிற் பிரிதல்வேண்டும் எனக்கூறுதலும் கடியப்படாது, தலைமகளைத் தமர் காக்குங்காவல் மிகுதியுள்ள வழி இவை நீங்கப்பெறும் என்றவாறு.

இதனாற் சொல்லியது அன்பையும் அறத்தையும் இன்பத்தையும் நினைத்து வருந்தப்பெறுன் எனவும், நாணத்தைக் கைவிட்டுத் தமர் கொடுக்குமாறு முயலவேண்டு மென்பதூஉம் கூறியவாறும். இவை ஒரு வழித் தணத்தற்கண் நிகழ்வன. (௧௯)

௨௧௨. சுரமென மொழிதலும் வரைநிலை யின்றே.

என்—எனின். இதுவும் தலைமகற்குரியதோர் திறன் உணர்த்திற்று.

(இ - ள்.) தலைமகன் பொருள்வயிற் பிரியும்வழி உடன் போக்குக் கருதிய தலைமகட்கு யான் போகின்ற நெறி கல்லுங் காடுமாகிய சுரம் எனக்கூறுதலும் நீக்கப்படாது என்றவாறு. இதனாற் சொல்லியது காப்புமிகுதிக்கண் வருத்தமுறுந் தலைமகளை உடன்கொண்டு போதல் தக்கது என்பார்க்கு நெறியருமை கூறிவிலக்கவும் பெறும் என்றவாறு. (௨௦)

௨௧௩. உயர்ந்தோர் கிளவி வழக்கொடு புணர்தலின்
வழக்குவழிப் படுதல் செய்யுட்குக் கடனே.

என்—எனின். இதுவுமோர் மரபு உணர்த்திற்று.

(இ - ள்.) உயர்ந்தோர் கூற்று வழக்குவழிப்படுதலின் வழக்குப்படுதல் செய்யுட்குக் கடன் என்றவாறு.

எனவே வழக்கழியவருவன செய்யுட்கண் வரப்பெறு என்றவாறு. இதனானே மேலதிகாரத்திற் கூறிய சொல்லும் இவ் வதிகாரத்திற் கூறுதற் கியன்ற பொருளும் வழக்கொடு புணர்ந்தனவே செய்யுட்கண் வருவன; புணராதன செய்யுட்கண் வரப்பெறு என்றவாறும். இன்னும் இந் நூலகத்து அகப்பொருளாகவும் புறப்பொருளாகவும் எடுத்தோதப் பட்டதன்றி உயர்ந்தோர் வழக்கொடு பொருந்தி வருவனவெல்லாஞ் செய்யுட்குப் பொருளாகப் புணர்க்கென வெஞ்சியதுணர்த்தியவாறுமாம். உயர்ந்தோர் வழக்கென்றமையானும், பொருளுமின்பமும் கெடாமல் மூன்றினுளொன்று பயப்பக் கூறுதல் கொள்க. (௨௧)

௨௧௪. அறக்கழி வுடையன பொருட்பயன் வரினே*
வழக்கென வழங்கலும் பழித்த தென்ப†.

என்—எனின். மேலதற் கோர் புறனடை.

(இ - ள்) அறத்திற் கழிவுடையன பொருட்குப் பயன்பட வரின், அதனை வழக்கென்று வழங்குதலும் பழித்ததென்றவாறு.

பொருளாவது அகப்பொருளும் புறப்பொருளும். அறத்திற் கழிவு வரும் அகப்பொருளாவது பிறன்மனைக் கூட்டம்.

பொருட்பயன் வருதலாவது அவ்வாலே பொருள் பெறுதல். அவ்விடத்து இன்பமும் பொருளும் பயப்பினும் அதனை வழங்குத லும் பழிக்கப்பட்டதென்றவாறு. உம்மை முற்றும்மையாகலான் வழக்கென் றுரையற்க என்றவாறு.

"எனைத்துணைய ராயினும் என்னாந் தினைத்துணையுந்
தேரான் பிறனில் புகல்." (குறள். ௧௪௪)

என வரும்.

புறப்பொருட்கண் அறக்கழி வுடையன பகைவர் தேளத்து நிரைகோடலும் அழித்தலும் போலப் பொருட்பயன் காரணத் தான் நட்டோர் தேளத்துஞ் செயல். இவையும் பொருள் பயப்பி னும் வழக்கென வழங்குத லாகா என்றவாறு. இதுவும் ஓர் முகத்தான் நீதி கூறியவாறு.

"பழிமலைந் தெய்திய ஆக்கத்திற் சான்றோர்
கழிநல் குரவே தலை." (குறள். ௬௫௭)

என வரும். (௨௨)

௨௧௫. மிக்க பொருளினுட் பொருள்வகை புணர்க்க
நாணுத்தலைப் பிரியா நல்வழிப் படுத்தே.

என்—எனின் இதுவுமது.

(பாடம்) * படவரின். † பழித்தன்றென்ப.

(இ - ள்.) மிக்க பொருளாவது மேற்கூறப்பட்ட அகப் பொருள். அப்பொருட் கண்ணும் நாண் நீங்காத நல்வழிக்கட் படுத்துப் பொருள்வகை புணர்க்க என்றவாறு. எனவே அற முதலாயின வழுவின் றாயினும் நாணழிய வரும் பொருண்மை புணர்த்தற்க என்றவாறு.

"பிறர்நாணத் தக்கது தான்நாணு னாயின்
அறன்*நாணத் தக்க துடைத்து." (குறள். ௧0௧அ)

என வரும். (உகூ)

உ௩௬. முறைப்பெயர் மருங்கினற்†கெழுதகைப் பொதுச்சொல்
நிலைக்குரி மரபின் இருவீற்றும் உரித்தே.

என்—எனின். இதுவும் வழுவமைத்தலை நுதலிற்று.

(இ - ள்.) முறைப்பெயராவது—இயற்பெயர் முதலியு பெய ரானன்றி முறைமைபற்றி வருவது ; அது தந்தைமகனைக் கூறும் பொழுது தம்முன், தம்பி, என்பனவும் கிழவன், தோழன் என்பன வும் போல வருவன.

அப்பெய ரகத்துவரும் நன்குகிய கெழுதகைப் பொதுச் சொல்லாவது—பயிற்சியாற்கூறும் 'எல்லா' என்பது.

நிலைக்குரி மரபி னிருவீற்று முரித்தே என்பது—நிற்றற்குரிய மரபினானே யிருபாற்கு முரித்தென்றவாறு. நிற்றற்குரிய மரபின் என்பது இவ்வாறு தோற்றுமையின் என்றவாறு.

"எல்லா, இஃதொத்த னென்பெருன் கேட்டைக்காண்" (கலித். ௬௧)

என்றவழிப் பெண்பால்மேல் வந்தது.

"எல்லா, தமக்கினி தென்று வலிதிற் பிறர்க்கின்னா
செய்வது நன்றாமோ மற்று." (கலித். ௬உ)

என்றவழித் தலைமகன்மேல் வந்தது.

இதுவும் ஒரு சொல்வழு அமைத்தவாறு. இச் சொற் காமப் பொருளாகத் தோற்றுதலாற் சொல்லதிகாரத்து ஓதாது ஈண்டு ஓதப் பட்டது. (உ௪)

உ௩௭. தாயத்தின் அடையா ஈயச் செல்லா
வினைவயின் தங்கா வீற்றுக் கோளப்படா
எம்மென வரூஉங் கிழமைத் தோற்றம்
அல்ல வாயினும் புல்லுவ உளவே.

என்—எனின் இதுவும் ஒருசார் மரபுவழுவமைத்தலை நுதலிற்று.

(பாடம்) * அறம். † மருங்கிற்.

(இ - ள்) தாயத்தான் எய்துதலாவது தந்தைபொருள் மகற்குறுதல். ஈயச் சேறலாவது ஒருவன் கொடுப்ப ஒருவன் கோடல். வினைவயிற் றங்கலாவது உழவுமுதலியன வற்றான் வருதல். வீற்றுக்கொளப் படுதலாவது வேறுபடுத்திக் கோடல். அஃதாவது பகையினால் ஏந்தது கோடல். இந்நான்கினும் வரும் பொருளினது உரிமைத்தோற்ற மல்ல வாயினும் பொருந்துவ உள என்றவாறு.

செய்யா என்னும் வினை யெச்சம் வரூஉம் என்னும் பெய ரெச்சத்தொடு முடிந்தது. அன்றியும் செய்யா என்பதனைப் பெயரெச்ச எதிர்மறையாக்கி இந்நான்கிலும் வருந்தகவு இல்லாத பொருள் பொருளலவாயினும் எமதெனவரும் உரிமைத்தோற்றம் பொருந்துவ என்றவாறு.

அல்லவாயினும் என்பதனை மாறிக்கூட்டுக. எனவே ஒரு முகத்தாற் பொருள் தேடுவார் திறன் கூறினாருமாம். இனி அக் கிழமைத் தோற்றம் ஆவது.

"விரும்பிநீ, என்தோள் எழுதிய தொய்யிலும் யாழநின்
மைந்துடை மார்பிற் சுணங்கும் நினைத்துக்காண்" (கலித். ௧௮)

என்றவழித் தலைமகள் தோளைத் தோழி தன்னையுமுளப்படுத்தி என தெனக் கூறியவாறு காண்க. பிறவுமன்ன. (உ௫)

௨௧௯. ஒருபாற் கிளவி ஏனைப்பாற் கண்ணும்
வருவகை தாமே வழக்கென மொழிப.

என்—எனின். இதுவு மொருசார் பொருள் கொளுந்திறன் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஒருபக்கத்துக் கூறிய பொருண்மை ஒழிந்த பக்கத்துக் கண்ணும் வருவகைதாம் வழக்கு நெறி என்றவாறு.

மனையோள்மாட்டுங்—காமக்கிழத்தி மாட்டும் நிகழும் புணர்ச்சியும் பிரிவும் ஊடலும் பரத்தையர் மாட்டு நிகழும். அது வருமாறு:—

"அன்னை கடுஞ்சொல் அறியாதாள்" (கலித். ௬௭) என்னுங் கலிப்புள்,

"சிறுகாலை யிற்கடை வந்து குறிசெய்த
அவ்வழி என்றும்யான் காணேன்"

என்பது புணர்வுகுறித்து வந்தது.

"உள்ளுதொறு நகுவன் தோழி வள்ளுகிர்
மாரிக் கொக்கின் கூர்அல கன்ன
குண்டுநீர் ஆம்பல் தண்துறை யூரன்
தேங்கம ழைம்பால் பற்றி என்வயின்
வான்கோல் எல்வளை வவ்விய பூசற்
சினவிய முகத்துச் சினவாது சென்றுநின்

மனையோட் குரைப்பல் என்றலின் முனையூர்ப்
பல்லா நெடுநிரை* வில்லின் ஒய்யும்
தேர்வண் மலையன் முந்தைப் பேரிசைப்
புலம்பிரி† வயிரியர் நலம்புரி முழவின்
மண்ணார் கண்ணின் அதிரும்
நன்ன ராளன் நடுங்கஞர் நிலையே. (நற்றிணை. கOO)

இஃது ஊடல் குறித்து வந்தது. இப் பரத்தையர் பொருட்பெண்டி ராகலின் இன்பம் பயக்குமோ எனின், அஃது இன்பமாமாறு வருகின்ற சூத்திரத்தான் எல்லாப் பொருட்கும் உளதாகும் பொதுவிலக்கணம் கூறியவாறு. (உசு)

உகக. எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தான் அமர்ந்து வரூஉம் ‡மேவற் றாகும்.

என்—எனின். மேலதற்கோர் புறனடை உணர்த்திற்று.

(இ - ள்.) எல்லாவுயிர்க்கும் இன்பமென்பது தான் மனம் பொருந்திவரும் விருப்பத்தை யுடைத்து என்றவாறு. எனவே மனம் பொருந்தியவழிப் பரத்தையர் மாட்டும் இன்பமுள தாகும் எனவும், பொருந்தாதவழி மனைவியர்மாட்டும் இன்பமின்றாம் எனவும் கொள்க. (உஎ)

உஉO. §பரத்தை வாயில் நால்வர்க்கும் உரித்தே
நிலத்திரி பின்றஃ தென்மனார் புலவர்.

என்—எனின். பரத்தையிற் பிரிவிற்கு உரியாரை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) பரத்தையர்மாட்டு வாயில் விடுதல் நான்கு வருணத்தார்க்கும் உரித்து; அவ்வழிப் பிரியும் பிரிவு நிலம் பெயர்தல் இல்லை என்றவாறு.

எனவே, தன்னூரகத்துஞ் சார்ந்தவிடமுங் கொள்க. நால்வர்க்கும் உரித்து என்றமையான் நான்கு வருணத்துப் பெண்பாலாரும் அவளொடு ஊடப்பெறுப என்றவாறாம்.

---

(பாடம்) * நெடு நெறி. † புலம்புரி.

‡ "மேவற்றாகும்" - ஆணும் பெண்ணும் என அடுக்கிக் கூறலுடைத் தாய் நுகர்ச்சி நிகழும். (தொல். பொருள். உஉரு. நச்சி)

§'பரத்தை வாயில்' என்றது குதிரைத் தேர்போல நின்றது. இதனாற் பயன் அந்தணர்க்கு நால்வரும் அரசர்க்கு மூவரும் வணிகர்க்கு இருவரு மாகிய தலைவியர் ஊடற்குரியர் என்பதூஉம்...............அவர் வாயில் மறுத்தலும் நேர்தலும் உடையர் என்பதூஉம், ஏனைப்பரத்தையர்க்கு வாயில் விடுதல் இன்றென்பதூஉம் கூறியவாறாயிற்று
(தொல். பொருள். உஉச. நச்சி.)

"யாரிவன் எங்கூந்தல் கொள்வான் இதுவுமோர்
ஊராண்மைக் கொத்த படிறுடைத்து." (கலித். ௮௧)

என்பது பார்ப்பனி கூற்று.

"பெரியார்க், கடியரோ ஆற்ரு தவர்." (கலித். ௮௮)

என்பது அரசி கூற்று. (உ௮)

௨௨௯. ஒருதலை உரிமை வேண்டினும் மகடூஉப்
பிரித லச்சம் உண்மை யானும்
அம்பலும் அலருங் களவுவெளிப் படுக்குமென்று
அஞ்ச வந்த ஆங்கிரு வகையினும்
நோக்கொடு வந்த இடையூறு பொருளினும்
போக்கும் வரைவும் மனைவிகண் தோன்றும்.

என்—எனின். இது களவின்கண் தலைமகட்குரியதோர் மரபு உணர்த்திற்று.

(இ - ள்.) ஒருதலையுரிமை வேண்டினும் என்பது—ஒருதலையாகத் தலைமகள் உரிமை பூண்டலை வேண்டியவிடத்து மென்றவாறு.

மகடூஉப் பிரித லச்ச முண்மை யானும் என்பது. பிரிதற்கண் வரும் அச்சம் பெண்பாற்கு இயல்பாகு மென்றவாறு.

அம்பலும் அலரும் களவுவெளிப்படுக்கு மென்று அஞ்சவந்த வாங்கிருவகையினும் என்பது—களவொழுக்கத்தை வெளிப்படுக்குமென்று அஞ்சும்படியாக வந்த அம்பலும் அலருமாகிய இருவகையின் கண்ணும் என்றவாறு.

நோக்கொடு வந்த இடையூறு பொருளினும் என்பது—தலைமகன் வரவுபார்த்திருந்தவழி வந்த இடையூருகிய பொருளின் கண்ணும் என்றவாறு.

அவையாவன :—தாய்துஞ்சாமை நிலவுவெளிப்படுதல் முதலியன.

போக்கும் வரைவும் மனைவிகண் தோன்றும் என்பது—தலைமகனுடன் போதற் குறிப்பும் வரைவுகடாதற் குறிப்பும் மனைவி மாட்டுத் தோன்றும் என்றவாறு.

உதாரணம்

"சிலரும் பலரும் கடைக்கண்* நோக்கி
மூக்கின் உச்சிச் சுட்டுவிரல் சேர்த்தி
மறுகிற் பெண்டிர் அம்பல் தூற்றச்

(பாடம்) * கட்கண்.

சிறுகோல் வலந்தனள்* அன்னை அலைப்ப†
அலந்தனென் வாழி தோழி கானற்
புதுமலர் தீண்டிய பூநாறு‡ குருஉச்சுவற்
கடுமா பூண்ட நெடுந்தேர் கடைஇ§
நடுநாள் வருஉம் இயல்தேர்க் கொண்கனொடு
செலவயர்ந் திசினல் யானே
அலர்சுமந் தொழிகஇவ் அழுங்க லூரே." (நற்றிணை. ௧௪௯)

இது போக்குக்குறித்தது. 'இரும்பிழி மகாஅர்' என்னும் பாட்டு வரைவு குறித்தது. (௨௧)

௨௨௨. வருத்த மிகுதி சுட்டுங் காலை
உரித்தென மொழிப வாழ்க்கையுள் இரக்கம்.

என்—எனின். இது தலைமகட்குந் தோழிக்கு முரியதோர் திறன் உணர்த்திற்று.

(இ - ள்.) வருத்தமிகுதியைக் குறித்தவழி மனைவாழ்க்கையுள் இரக்கம் உரித்தென்று சொல்லுவர் என்றவாறு.

எனவே, வருத்தமிகுதியைச் சுட்டாதவழி மனைவாழ்க்கையுள் இரக்கம் இன்றெனக் கொள்ளப்படும்.

"செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை." (குறள். ௧௧௫௧)

"அன்பற மாறியாம் உள்ளத் துறந்தவள்
பண்பும் அறிதிரோ என்று வருவாரை
என்திறம் யாதும் வினவல் வினவிற்
பகலின் விளங்குநின் செம்மல் சிதையத்
தவலருஞ் செய்வினை முற்றுமல் ஆண்டோர் $
அவலம் படுதலும் உண்டு.'' (கலித். ௧௯)

இதுவுமோர் மரபுவழு வமைத்தது. (௩௦)

௨௨௩. மனைவி உயர்வுங் கிழவோன் பணிவும்
நினையுங் காலைப் புலவியுள் உரிய.

என்—எனின். கற்புக்காலத்துத் தலைமகட் குரியதோர் மரபு உணர்த்திற்று.

(இ - ள்.) தலைமகள் உயர்வும் தலைமகன் தாழ்வும் ஆராயுங் காலத்துப் புலவிக்காலத்து உரிய வென்றவாறு.

எனவே ஒழிந்த ஊடல் துனியென்பனவற்றிற் குரியவாம்.

---

(பாடம்) * வலத்தனள். † அலைக்க. ‡ பூஞறு. § கடுமான் பரிய கதழளி கடை இ. $ முற்றுமையாண்டோர்.

"ஒருஉக் கொடியியல் நல்லார் குரனுற்றத் துற்ற*
முடியுதிர் பூந்தாது மொய்ம்பின வாகத்
தொடிய எமக்குநீ யாரைப் பெரியார்க்கு
அடியரோ ஆற்று தவர்;

கடியர்நமக்கி யார்சொலத் தக்கார் மாற்று†
வினைக்கெட்டு வாயல்லா வெண்மை யுரையாது கூறுநின் ‡
மாய மருள்வா ரகத்து ;

ஆயிழாய், நின்கண் பெறினல்லால் இன்னுயிர் வாழ்கல்லா
என்கண் எவனோ தவறு. (கலித். அஅ)

இதனுள் தலைமகன் பணிவுந் தலைவி யுயர்வுங் காண்க. இஃது ஈண்டுக் கூறியதென்னை? 'காமக் கடப்பினுட் பணிந்த கிளவி' (கற்பியல் - ௬௧) யென மேற்கூறப்பட்டதாலெனின், ஆண்டுக் கூறியது ஊடல் புலவி துனி யென்னு மூன்றிற்கும் பொதுப்பட நிற்றலின், இது புலவிக்கே உரித்தென்னுஞ் சிறப்பு நோக்கிக் கூறியவாறு காண்க. (௩௧)

௨௨௪. நிகழ்தகை மருங்கின் வேட்கை மிகுதியிற்
புகழ்தகை வரையார் கற்பி னுள்ளே.

என்—எனின். இதுவு மோர் மரபுணர்த்திற்று.

(இ - ள்.) கற்புக்காலத்து நிகழாநின்ற தகையின் பக்கத்து வேட்கை மிகுதியாற் புகழ்தலை நீக்கார் என்றவாறு.

களவுக்காலத்து நலம்பாராட்டிய தலைமகன் கற்புக்காலத்து மொழிநலம்§ பாராட்டப்பெறும் என்றவாறு.

தகை என்பது அழகு. அதனைப் பற்றிப் புகழும் எனக் கொள்க.

"அணைமருள் இன்றுயில் அம்பணைத் தடமென்றோள்
துணைமலர் எழில்நீலத்§ தேந்தெழில் மலருண்கண்
மணமௌவல் முகையன்ன மாவீழ்வான் நிரை¶வெண்பல்
மணநாறு நறுந்தண் மாரிவீழ்** இருங்கூந்தல்
அலர்முலை யாகத் தகன்ற அல்குல்
சிலநிரை வால்வளைச் செய்யா யோவெனப்
பலபல கட்டுரை பண்டையிற் பாராட்டி." (கலித். ௧௪)

என வரும். (௩௨)

௨௨௫. இறைச்சி†† தானே உரிப்புறத்‡‡ ததுவே.

என்—எனின். இறைச்சிப்பொருளாமா றுணர்த்திற்று.

(பாடம்) *தேற்ற. † கடியத்தமக்கினியார் சொலத்தக்கராமற்று
‡உரையாதி சென்றீநின். § மொழிநலம்.
§ஒளிநீலத். ¶ மாநிரை. ** மாரி மினிரும்.

†† இறைச்சிதானே - கருப்பொருட்கு நேயந்தான், பொருட் புறத்த ததுவே - கூற வேண்டுவதோர் பொருளின் புறத்தே புலப்பட்டு அதற்கு உபகாரப்படும் பொருட்டன்மையுடையதாம். (தொல். பொருள். ௨௨௧. நச்சி.) ‡‡பொருட்புறத்.

(இ - ள்.) இறைச்சிப் பொருளென்பது உரிப்பொருளின் புறத்தாகித் தோன்றும் பொருள் என்றவாறு.

அஃதாவது கருப்பொருளாகிய நாட்டிற்கும் ஊர்க்குந் துறைக்கும் அடையாகி வருவது.

"நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே." (குறுந். ௩)

என்றவழி நாட்டிற்கு அடையாகி வந்த குறிஞ்சிப்பூவுந் தேனும் இறைச்சிப் பொருள் என்று கொள்க. (௩௩)

௨௨௯. இறைச்சியிற் பிறக்கும் பொருளுமா ருளவே
திறத்தியல் மருங்கில் தெரியு மோர்க்கே.

என்—எனின். இஃது இறைச்சிப் பொருள்வயிற் பிறக்கும் பிறிது மோர் பொருள் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) இறைச்சிப் பொருள்வயிற் றோன்றும் பொருளும் உள; பொருட்டிறத்தியலும் பக்கத்து ஆராய்வார்க் கென்றவாறு.

இறைச்சிப் பொருள் பிறிதுமோர் பொருள்கொளக் கிடப்பனவுங் கிடவாதனவுமென இருவகைப்படும். அவற்றிற் பிறிதோர் பொருள்பட வருமாறு:—

"ஒன்றேன் அல்லென் ஒன்றுவென் குன்றத்துப்
பொருகளிறு மிதித்த நெறிதாள் வேங்கை
குறவர் மகளிர் கூந்தற் பெய்ம்மார்
நின்று கொய்ய மலரு நாடனொடு
ஒன்றேன் தோழி ஒன்றி னானே." (குறுந். ௨0௮)

என்பது வரைவெதிர் கொள்ளாது தமர் மறுத்தவழித் தலைமகனொடு ஒன்றுமாறு என்னெனக்கவன்ற தோழிக்கு உடன்போதற் குறிப்பினளாய்த் தலைமகள் கூறியதாகலின், இதனுட் பொருகளி றென்றமையால் தலைமகள்தமர் தலைமகன்வரைவிற் குடன்படுவாரும் மறுப்பாருமாகி மாறுபட்ட தென்பது தோற்றுகின்றது. 'பொருகளிறு மிதித்த வேங்கை' யென்றதனாற் பொருகின்ற விரண்டுகளிற்றினும் மிதிப்ப தொன்றாகலின் வரைவுடன்படாதார் தலைமகனை யவமதித்தவாறு காட்டிற்று. 'வேங்கை நின்று கொய்ய மலரும்' என்றதனான் முன்பு ஏறிப்பறித்தலை வேண்டுவது இப்பொழுது நின்று பறிக்கலாயிற்று என்னும் பொருள்பட்டது. இதனானே பண்டு நமக்கரியனாகிய தலைமகன் தன்னை யவமதிக்கவும் நமக் கெளியனாகி யருள் செய்கின்றானெனப் பொருள் கொளக் கிடந்தவாறு காண்க. (௩௪)

உ௨௭. *அன்புறு தகுவன இறைச்சியிற்† சுட்டலும்
வன்புறை யாகும் வருந்திய பொழுதே.

என்பது சூத்திரம்.

என்—எனின். இது இறைச்சிப்பொருளாற் படுவதோர் பொருள் உணர்த்திற்று.

(இ - ள்.) அன்புறுதற்குத் தகுவன இறைச்சிப்பொருட்கண் சுட்டுதலும் வற்புறுத்தலாம் என்றவாறு. உம்மை இறந்தது தழீஇயிற்று.

"அடிதாங்கும் அளவின்றி அழலன்ன வெம்மையாற்
கடியவே கனங்குழாஅய் காடென்றார் அக்காட்டுள்
துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்னுண்ணுங் களிறெனவும் உரைத்தனரே."
(கலித். ௧௧)

என்றது வற்புறுத்தற் குறிப்பு. (௩௫)

உ௨௮. செய்பொரு ளச்சமும் வினைவயிற் பிரிவும்
மெய்பெற உணர்த்துங் கிழவிபா ராட்டே.

என்—எனின். இது தலைமகட்குரியதோர் இயல்புணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) தலைமகன் பொருள்வயிற் பிரியு மிடத்து ஆற்றின்றைமையா னுளதாகிய அச்சமும் வினைவயிற் பிரியுங் காலத்தினுந் தலைவியைப் பாராட்டிப் பிரிதலினால், அப்பாராட்டினான் மெய்பெறவுணரும், என்றவாறு.

உதாரணம்

"நெஞ்சு நடுக்குறக் கேட்டுங் கடுத்துந்தாம்
அஞ்சியது ஆங்கே அணங்காகும் என்னுஞ்சொல்
இன்றீங் கிளவியாய் வாய்மன்ற நின்கேள்
புதுவது பன்னாளும் பாராட்ட யானும்
இதுவொன் றுடைத்தென எண்ணி." (கலித். ௨௪)

என்றமையாற் பாராட்டினால் தலைமகள்பிரிவு உணர்ந்தவாறு அறிக. (௩௬)

---

* இறைச்சியுள் அன்புறு தகுந சுட்டலும் - தோழி கருப்பொருள்களுள் தலைவன் அன்பு செய்தற்குத் தகுவனவற்றைக் கருதிக் கூறலும். (தொல். பொருள். உ௩௧. நச்சி.)

(பாடம்) † தகுந இறைச்சியுட்.

உஉக. கற்புவழிப் பட்டவள் பரத்தையை* ஏத்தினும்†
உள்ளத் தூட லுண்டென மொழிப.

என்—எனின். இதுவும் அது.

(இ - ள்.) கற்புக் காரணமாகத் தலைமகனது பரத்தைமைக் குடன்பட்டாளே யாயினும், உள்ளத்தின்கண் ஊடல் நிகழும் என்றவாறு. (கஎ)

உஙo. கிழவோள் ‡பிறள்குணம் இவையெனக் கூறிக்
கிழவோன் குறிப்பினை உணர்தற்கும் உரியள்.

என்—எனின். இது தலைமகட் குரியதோர் இலக்கணமுணர்த்து தல் நுதலிற்று.

(இ - ள்.) தலைவி மற்றொருத்தி குணம் இத்தன்மையள் எனச்சொல்லித் தலைமகன் குறிப்பினை யறிதற்கு முரியள் என்ற வாறு.

இது கற்பியலுட் கூறியதற் கிலக்கணம்.

''கண்டிகும் அல்லமோ கொண்கநின் கேளே
ஒள்ளிழை உயர்மணல் வீழ்ந்தென
வெள்ளாங் குருகை வினவு வோளே.'' (ஐங்குறு. கஉஉ)

என வரும். பிறவு மன்ன. (கஅ)

உஙக. தம்முறு விழுமம் பரத்தையர் கூறினும்
மெய்ம்மை யாக அவர்வயி னுணர்ந்தும்
தலைத்தாட் கழறல்தம் எதிர்ப்பொழு தின்றே
மலிதலும் ஊடலும் அவையலங் கடையே.

என்—எனின். இது தலைமகட்குரியதோர் மரபுணர்த்திற்று.

(இ - ள்.) பரத்தையர் தாமுற்ற துன்பத்தினைத் தலை மகட்குக் கூறியவழியும் அவரிடத்துத் துன்பத்தை மெய்ம்மை யாக உணர்ந்துவைத்துந் தலைமகன்மாட்டுக் கழறுதல் தலைவன் எதிர்ப்பட்ட பொழுது இல்லை, மகிழ்ச்சியும் புலவியும் அல்லாத காலத்து என்றவாறு.

---

(பாடம்) * பரத்தை.

† 'ஏத்தினும்' என்ற உம்மையால் கூறும் பொழுதெல்லாம் மாறுபடக் கூறல் உளது என்பது பெற்றும். (தொல். பொருள். உஙங. நச்சி.)

‡ 'பரத்தை' என்னது 'பிறள்' என்றதனால் தலைவியே யாயிற்று; அன்றிப்பரத்தையாயின், ஊடலின்மை 'அறனன்றுகலின் உள்ளத்தூடல் நிகழ்பவை வேண்டும். (தொல் பொருள். உகச. நச்சி.)

கூறினும் என்ற உம்மை எதிர்மறை. கூறுமை பெரும்பான்மை. அதனை ஐயப்படாது துணிதலான் மெய்ம்மையாகவென்றார். அதனைத் தலைமகன் வந்தவழிக் கூறுவாளாயின் தனக்குப் புணர்ச்சியிற் காதலில்லையாம். சொல்லாளாயின் அவள் கூறியவதனற் பயனில்லையாம். அதனைக் கலவியிறுதியினும் புலவியினும் கூறப்பெறும் என்றவாறு.

"நின்னணங் குற்றவர் நீசெய்யும்* கொடுமைகள்
என்னுழை வந்துநொந் துரையாமைற்† பெறுகற்பின்."
(கலித். எஎ)

எனப் புலவியிற் கூறியவாறு காண்க.

கலவியிறுதியிற் கூறுதல் வந்தவழிக் காண்க. (௩௧)

௨௩௨. பொழுது தலைவைத்த‡ கையறு காலை
இறந்த போலக் கிளக்குங் கிளவி
மடனே வருத்தம் மருட்கை மிகுதியொடு
அவைநாற் பொருட்கண் நிகழும் என்ப.

எ—எனின். இது பருவம் வந்துழித் தலைமகட் குரியதோர் வழுக் காத்தலை நுதலிற்று.

(இ - ள்.) பொழுது தலைவைத்த லாவது—யாதானுமொரு பருவத்தைக் குறித்தவழி யப்பருவம் இருதிங்களை யெல்லையாக வுடைத்தாயினும் அது தோற்றியவழி என்றவாறு.

கையிறு காலை என்பது—இது கண்டு செயலற்றகாலை என்றவாறு.

இறந்தபோலக் கிளத்த லாவது—அக்காலந் தோன்றியபொழுது கழிந்தது போலக் கூறுதல்.

மடனே வருத்தம் மருட்கை மிகுதியொடு அவை நாற்பொருட்கண் நிகழும் என்ப என்பது—அவ்வாறு கூறுதல் அறியாமையானுதல் வருத்தத்தானுதல் மயக்கத்தானுதல் அக்காலத்திற் குரிய பொருள் மிகத் தோன்றுதலானுதல் என இந்நான்கு பொருளானும் நிகழும் என்றவாறு.

சிறுபொழுதாயின் யாமங் கழிவதன்முன்னர்க் கூறுதல். எனவே இவ்வாறு வருஞ் செய்யுள் காலம் பிழைத்துக் கூறுகின்றதல்ல என்றவாறு.

---

(பாடம்) *நீ செய்த. †என்னுடன் நொந்துவந் துரையாமை.

‡ தலைவைத்த மெய்ப்பாடாவன - ஆறும் அவதியினும் ஒப்பத்தோன்றுதற்குரிய மெய்ப்பாடுகளாகிய மன்றத்திருந்த சான்றோர் அறியத் தன் துணைவன் பெயரும் பெற்றியும் அவனோடு புணர்ந்தமையும் தோன்றக் கூறியும் அழுதும்அரற்றியும் பொழுதொடு புலம்பியும் ஞாயிறு முதலியவற்றோடு கூறத்தகாதன கூறலும் பிறவுமாம்,
(தொல். பொருள். ௨௩௩. நச்சி.)

உதாரணம்

"பொருகடல் வண்ணன் புனைமார்பில் தார்போல்
திருவில் விலங்கூன்றித் தீம்*பெயல் தாழ
வருது மெனமொழிந்தார் வாரார்கொல் வானம்
கருவிருந்து ஆலிக்கும் போழ்து†" (கார்நாற். க)

இது பருவங்கண்டவழி வாராரர்கொல் என்றமையால் இறந்தபோலக் கிளந்தவாறுயிற்று. பிறவு மன்ன. இதுவு மோர் மரபுவழுவமைத்தல். (௪௦)

௨௩௩. இரந்து குறையுற்ற கிழவனைத் தோழி
நிரம்ப நீக்கி நிறுத்தல் அன்றியும்
வாய்மை கூறலும் பொய்தலைப் பெய்தலும்
‡நல்வகை யுடைய நயத்திற் கூறியும்
பல்வகை யானும் படைக்கவும் பெறுமே.

என் – எனின். களவுக்காலத்துத் தோழிக்குரியதோர் திறன் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) இரந்து குறையுற்ற தலைமகனைத் தோழி நிரம்ப நீக்கி நிறுத்தலன்றி மெய்ம்மை கூறுதலும் பொய்ம்மை கூறுதலும் நல்வகையுடைய நயத்தினுற் கூறியும் பல்வகையானும் படைத்து மொழிந்து சொல்லவும் பெறும் என்றவாறு.

உதாரணம் களவியலுட் காட்டப்பட்டனவுள்ளுங் காண்க. நல்வகை யுடைய நயத்திற்குச் செய்யுள் :—

'வெள்ளாங் குருகின் பிள்ளையும் பலவே
அவையினும் பலவே சிறுகருங் காக்கை
அவையினும் அவையினும் பலவே குவிமடல்
ஓங்கிரும் பெண்ணை மீமிசைத் தொடுத்த
தூங்கணங் குரீஇக் கூட்டுவாழ் சினையே.''

இது மடலேறுவல் என்ற தலைவனைப் பழித்து அருளுடையீராதலான் மடலேறுவது அரிது என நயத்திற் கூறியது.

இதுவு மோர் மரபுவழு வமைத்தவாறு. (௪க)

௨௩௪. உயர்மொழிக் கிளவி§ உறழுங் கிளவி
ஐயக் கிளவி ஆடூஉவிற் குரித்தே.

---

(பாடம்) *திருவிலங்கூன்றி றல்தீம். † ஆலி நகும்.

‡ நீயே சென்று கூறலென்றலும் அறியாள் போறலும் குறிப்பு வேறு கூறலும் பிறவும் நயத்திற்கூறும் பகுதியாற் படைத்தது பலவகையாற் படைத்துத் துறைவகையாம். (தொல். பொருள். ௨௩௭. நச்சி.)

(பாடம்) § குரிய

என்—எனின். தலைமகற்குந் தலைமகட்கும் உரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) உயர்த்துச் சொல்லுதற்குரிய கிளவி தலைமகற் குந் தலைமகட்கும் ஒத்தகிளவி, ஐயக்கிளவி, தலைமகற்கே உரித் தென்றவாறு.

தலைவிமாட்டு ஐயக்கிளவி யின்றென்றவாறும். அதனாற் குற்ற மென்னையெனின், தெய்வமென்று ஐயுறுங்கால் அதனை முன்பு கண்டறி வாளாதல் வேண்டும். காணாமையின் ஐயமிலள் என்க. இனி உயர்த் துச் சொல்லுதல் உளவாம்.

> "அவன்மறை தேஎம் நோக்கி மற்றிவன்
> மகனே தோழி யென்றனள்." (அகம். ௪௮)

என்பது உயர்த்துச் சொல்லியவாறு.

தலைவன் உயர்த்துச் சொல்லியதற்குச் செய்யுள் :—

> "மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்
> காதலை வாழி மதி." (குறள். ௧௧௧௮)

பிறவு மன்ன. ஐயக்கிளவி களவியலுட் கூறப்பட்டது. (௪௨)

௨௩௫. உறுகண் ஓம்பல் தன்னியல் பாகலின்
உரிய தாகும் தோழிகண் உரனே.

என்—எனின். இது தோழிக்குரியதோர் மரபுவழுக் காத்தலை நுத லிற்று.

(இ - ள்.) தலைமகற் குற்றதுன்பம் பரிகரித்தல் தோழி இயல்பாகலின் அவட்குரியதாகும் அறிவு என்றவாறு.

அதனானே யன்றே :

> "பால்மருள் மருப்பின் உரல்புரை பாவடி."

என்னும் பாலைக்கலியுள்,

> "கிழவர் இன்னோர்* என்னாது பொருள்தான்
> பழவினை மருங்கிற் பெயர்புபெயர் புறையும்." (கலித். ௨௧)

எனக் கூறினாள் என்று கொள்க. (௪௩)

௨௩௬. உயர்மொழிக் கிளவியும் உரியவால் அவட்கே.

என்—எனின். இதுவு மது.

(இ - ள்.) உயர்த்துச் சொல்லுங் கூற்றும் உரித்து தோழிக்கு என்றவாறு.

> "தாமரைக் கண்ணியை தண்நறுஞ் சாந்தினை
> நேரிதழ்க் கோதையாள் செய்குறி நீவரின்

---

(பாடம்) * இன்னார்.

மணங்கமழ் நாற்றத்த மலைநின்று பலிபெறூஉம்
அணங்கென அஞ்சுவர் சிறுகுடி யோரே." (கலித். ௫௨)

என்பது உயர்த்துச் சொல்லியவாறு. (௪௪)

௨௩௭. வாயிற் கிளவி வெளிப்படக் கிளத்தல்
தாவின் றுரிய* தத்தங் கூற்றே.

என்—எனின். வாயில்கட்குரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) தத்தங் கூறுபாட்டினன் வாயில்கள் கூறுங் கிளவி வெளிப்படக் கிளத்தல் கேடின்றி யுரிய வென்றவாறு.

தத்தங்கூறுவது அவரவர் சொல்லத்தகுங் கூறுபாடு. ஆனுருபு தொக்கு நின்றது. எனவே வாயில்களல்லாத தலைமகளும் நற்றாயும் மறைத்துச் சொல்லப்பெறுவர் என்றவாறு.

வருகின்ற சூத்திரம் மறைத்துச் சொல்லும் உள்ளுறை சொல்லுகின்றுராதலின், அவ்வுள்ளுறை வாயில்களை விலக்கியவாறு. இவர் மறைத்ததனுற் குற்ற மென்னை? இவர் குற்றேவல் முறைமையராதலானும் கேட்போர் பெரியோர் ஆதலானும் வெளிப்படக் கூருக்காற் பொருள் விளங்காமையானும் அவ்வாறு கூறினுல் இவர் கூற்றிற்குப் பயனின்மையானும் வெளிப்படவே கூறும் என்க. (௪௫)

௨௩௮. உடனுறை உவமம் சுட்டுநகை சிறப்பெனக்
கெடலரு மரபின் உள்ளுறை ஐந்தே.

என்—எனின். உள்ளுறையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) உடனுறையும் உவமமும் சுட்டும் நகையும் சிறப்பும் எனக் கெடலரு மரபினையுடைய உள்ளுறை ஐந்துவகைப் படும் என்றவாறு.

உள்ளுறையாவது பிறிதொருபொருள் புலப்படுமாறு நிற்பதொன்று. அது கருப் பொருள் பற்றிவருமென்பது அகத்திணையியலுள் (அகத். ௫0) கூறப்பட்டது.

உடனுறையாவது உடனுறைவ தொன்றைச் சொல்ல, அதனுனே பிறிதொரு பொருள் விளங்குவது.

"விளையா டாயமொடு வெண்மணல்† அழுத்தி
மறந்தனம் துறந்த காழ்முளை‡ யகைய
நெய்பெய் தீம்பால் பெய்தினி து வளர்ப்ப§
நும்மினுஞ் சிறந்தது நுவ்வை யாகுமென்று
அன்னை கூறினள் புன்னையது சிறப்பே$

(பாடம்) * 'உரிய' என்றதனுல் தோழிவாயிலாகச் சென்றுழித் தலைவிவெளிப்படக் கூறுதலுங்கொள்க. (தொல். பொருள். ௨௪௧. நச்சி.)
† வெண்மரல். ‡ காண்முளை. § பெய்தனம் வார்த்தது. $ நலனே.

அம்ம நாணுதும் நும்மொடு நகையே
விருந்திற் பாணர் விளரிசை கடுப்ப
வலம்புரி வான்கோடு நரலும் இலங்குநீர்த்
துறைகெழு கொண்கநீ நல்கின்
நிறைபடு நீழற் பிறவுமா ருளவே.'' (நற்றிணை. கஎஉ)

இதனுள் 'புன்னைக்கு நாணுதும்' எனவே, அவ்வழித்தான் வளர்த்த புன்னையென்றும். 'பல்காலும் அன்னை வருவள்' என்றுடனுறைகூறி விளக்கியவாறு. பிறவுமன்ன.

உவமம் என்பது உவமையைச் சொல்ல உவமிக்கப்படும் பொருள் தோன்றுவது.

''வெறிகொள் இனச்சுரும்பு மேய்ந்ததோர் காவிக்
குறைபடுந்தேன் வேட்டும் குறுகும்—நிறைமதுச் சேர்ந்து
உண்டாடும் தன்முகத்தே செவ்வி உடையதோர்
வண்டா மரைப்பிரிந்த வண்டு.'' (தண்டி. ருரு உரை.)

இது வண்டைக் கூறுவாள் போலத் தலைமகன் பரத்தையிற் பிரிவு கூறுதலின் உள்ளுறையுவமம் ஆயிற்று.

சுட்டு என்பது ஒருபொருளைச் சுட்டிப் பிறிதோர் பொருட்படுதல்.

''தொடிநோக்கி மென்தோளும் நோக்கி அடிநோக்கி
அஃதாண் டவள்செய் தது.'' (குறள். ககஎக)

இதனுள் இப் பூப்பறிப்பேமாயின் வளைகழன்று தோள்மெலிய நடத்தல் வல்லையாக வேண்டும் என ஒருபொருள் சுட்டித்தந்தமை காண்க.

நகையாவது நகையினுற் பிறிதொரு பொருளுணர நிற்றல்.

''அசையியற் குண்டாண்டோ ரேஎர்யான் நோக்கப்
பசையினள் பைய நகும்.'' (குறள். க0கஅ)

இதனுள் நகையினுற் பிறிதோர் குறிப்புத் தோன்றியவாறு காண்க.

சிறப்பு என்பது இதற்குச் சிறந்தது இஃது எனக் கூறுவதனுனே பிறிதோர் பொருள் கொளக் கிடப்பது. (சக)

உருகூ. அந்தமில் சிறப்பின் ஆகிய* இன்பம்
தன்வயின் வருதலும் வகுத்த பண்பே.

என்—எனின். இதுவும் உள்ளுறைப் பாற்படுவதோர் பொருள் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அந்தமிலாத சிறப்பினுகிய வின்பத்திடத்து உள்ளுறைப் பொருண்மை வருதலும் வகுத்த இயல்பு என்றவாறு.

'அந்தமில் சிறப்பு' என்பது மேன்மேலுஞ் சிறப்புச் செய்தல்.

---

(பாடம்) * ஆக்கிய.

"நுண்எழில் மாமைச்சுணங்கணி ஆகம்தம்
கண்ணொடு தொடுத்தென நோக்கியும் அமையார் என்
ஒண்ணுதல் நீவுவர் காதலர் மற்றவர்
எண்ணுவ தெவன்கொ லறியேன் என்னும்." (கலித். ௪)

என்றவழி, இன்பத்தின்கண்ணும் பிறிதோர் பொருள் உண்டென்பது தோற்றுகின்றது. (௪எ)

உ௪௦. மங்கல மொழியும் அவையல்* மொழியும்†
மாறில் ஆண்மையில் சொல்லிய மொழியுங்
கூறிய மருங்கிற் கொள்ளும் என்ப.

என்—எனின். இதுவும் உள்ளுறைப் பாற்படுவதோர் சொல் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) மங்கலமொழி முதலாகச் சொல்லப்பட்டனவும் உள்ளுறைப் பாற்படும் என்றவாறு.

மங்கலமொழியாவது—மங்கலத்தாற் கூறுஞ்சொல். அது செத்தாரைத் துஞ்சினர் என்றல்.

அவையல் மொழியாவது இடக்க ரடக்கிக் கூறுதல். அது கண் கழீஇ வருதும் என்றல்.

மாறிலாண்மையிற் சொல்லிய மொழியாவது ஒருவனைச் சிங்கம் வந்ததென்றாற்போற் கூறுவது.

அவையெல்லாஞ் சொல்லாற் பொருள்படாமையின் உள்ளுறைப் பாற்படும். இன்னும் இவ்வாற்றாற் பொருள் கொள்ளுமாறு 'ஒல்லுவ தொல்லும்' என்னும் புறப்பாட்டினுள் (புறம். ௧௯௬) 'நோயில ராகநின் புதல்வர்' எனவும் 'சிறக்கநின் ஞாளை' எனவும் வரும் மங்கலச் சொல் கெடுக என்னும் பொருள் பட்டவாறு காண்க.

"இதுவுமோர் ஊராண்மைக் கொத்த படிறுடைத்து" (கலித். ௬௧) என்றது தீயொழுக்கம் ஒழுகினாய் என இடக்கரடக்கி அவையல்மொழியால் ஒழுக்கக் குறைபாடு கூறியவாறு. (௪அ)

உ௪௧. சினனே பேதைமை நிம்பிரி‡ நல்குரவு
அனைநால் வகையுஞ் சிறப்போடு வருமே.

(பாடம்) * வைஇய.

(பாடம்) † வைஇய மொழியும்—தலைவன் தம்மை வஞ்சித்தானாகத் தலைவியுந் தோழியுங் கூறலும்; வைஇயமொழி—தீங்கைவைத்த மொழியுமாம். (தொல். பொருள். உ௪௪. நச்சி.)

‡ நிம்பிரி=பொறாமை தோன்றும் குறிப்பு. (தொல். பொருள். உ௪௫. நச்சி.)

என்—எனின். மெய்ப்பாட்டியலுள் நடுவண் ஐந்திணைக்குரிய தலை மக்கட்காகாதன எடுத்தோதுகின்றாராகலின், அவற்றுள் ஒருசாரன ஒரோவிடத்து வருமென்பது உணர்த்திற்று.

இச்சூத்திரம் எதிரது நோக்கிற்று.

(இ - ள்.) சினமும் பேதைமையும் நிம்பிரியும் நல்குரவும் என்று சொல்லப்பட்ட அந்நான்கு வகையும் மாதானும் ஒரு பொருளைச் சிறப்பித்தல் காரணமாக வரும் என்றவாறு.

"கொடியியல் நல்லார் குரல்நாற்றத் துற்ற
முடியுதிர் பூந்தாது மொய்ம்பின வாகத்
தொடிய வெமக்குநீ யாரை பெரியார்க்கு
அடியரோ ஆற்று தவர்." (கலித். அஅ)

இதனுள் 'தொடிய எமக்கு நீயாரை' என்பது சினம்பற்றி வரினும் காமக் குறிப்பினாற் புணர்ந்த தலைமகள் கூறுதலின் அவள் காதலைச் சிறப்பிக்க வந்தது.

"செவ்விய தீவிய* சொல்லி அவற்றொடு
பைய முயங்கிய அஞ்ஞான்று அவையெல்லாம்
பொய்யாதல் யான்யாங் கறிகோமற் றைய." (கலித். கக)

என்பதனுள் 'யான்யாங் கறிகோ' என ஏதம்பற்றி வந்த பிரிவாற்றாமையைச் சிறப்பிக்க வந்தது.

"அகனகர் கொள்ளா அலர்தலைத் தந்து
பகல்முனி வெஞ்சுரம் உள்ளல் அறிந்தேன்
மகனல்லை மன்ற இனி." (கலித். கக)

என்பதனுள் தலைவி 'மகனல்லை' எனல் நிம்பிரியாகிய வெறுப்புப்பற்றி வந்தது.

இதுவும் பிரிவாற்றாமையைச் சிறப்பிக்க வந்தது.

"உடுத்தும் தொடுத்தும் பூண்டுஞ் செரீஇயுந்
தழையணிப் பொலிந்த ஆயமொடு துவன்றி
விழைவொடு வருதி நீயே இஃதோ
ஓரான் வல்சிச் சீரில் வாழ்க்கைப்
பெருநலக் குறுமகள் வந்தென
இனிவிழ வாயிற் றென்னும்இவ் வூரே."† (குறுந். உ௯௫)

இதனுள் 'ஓரான் வல்சிச் சீரில் வாழ்க்கை' எனத் தலைமகன் செல்வக் குறைபாடு கூறிப் 'பெருநலக்குறுமகள் வந்தென விழவாயிற்றென்னு மிவ் வூர்' என்றமையான் நல்குரவு பற்றித் தலைமகனைச் சிறப்பிக்க வந்தது. இச்சூத்திரத்துள் வரைந்து கூறாமையின் தலைவியுந் தலைவனுந் தோழியுஞ் செவிலியுங் கூறப்பெறுவர் என்று கொள்க. (௬௧)

(பாடம்) * திவ்விய-
† இன்விழ வாயிற் றென்னும்இவ ளூரே.

௨௪௨. *அன்னை என்னை என்றலும் உளவே
தொன்னெறி முறைமை சொல்லினும் எழுத்தினுந்
தோன்றா மரபின என்மனார் புலவர்.

என்—எனின். இதுவுமொருசார் மரபுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அன்னை என்னை என்று சொல்லுதலும் உள. அவை முன்புள்ளார் சொல்லிப்போந்த முறைமை. அவை தாம் சொல்லினும் சொல்லிற் கங்கமாகிய எழுத்தினும் பொருள் தோன்றாத மரபினையுடைய என்றவாறு.

எழுத்தென்பது எழுத்தாகப் பிரித்தாற் படும் பொருள் வேறுபாடு. இவை அகத்தினும் புறத்தினும் வரும்.

"ஒரீஇ† ஒழுகு மென்னைக்குப்
பரியலென் மன்யான் பண்டொரு காலே." (குறுந். ௨௦௩)

என்பது தலைமகள் தலைமகனைக் கூறியது.

"அன்னாய் இவனோர் இளமா ணக்கன்." (குறுந். ௩௩)

என்பது தோழிக்குக் கூறியது.

"என்னைமுன் நில்லன்மின் தெவ்விர் பலரென்னை
முன்னின்று கன்னின் றவர்." (குறள். ௭௭௧)

"என்னை, புற்கை யுண்டும் பெருந்தோ ளன்னே." (புறம். ௮௪)

இவையும் 'என்றலும்' என்ற வும்மையால் நிகரனவுங் கொள்க.

"எந்தைதன் உள்ளங் குறைபடா வாறு."

என வரும். (௫௦)

௨௪௩. ஒப்பும் உருவும் வெறுப்பும் என்றா
கற்பும் ஏரும் எழிலும் என்றா
சாயலும் நாணும் மடனும் என்றா
நோயும் வேட்கையும் நுகர்வும் என்றாங்கு
ஆவயின் வரூஉங் கிளவி எல்லாம்
நாட்டியல்‡ மரபின் நெஞ்சுகொளின் அல்லது
காட்ட லாகாப் பொருள என்ப.

என்—எனின். மேற் பொருட்பாகுபாடு முதல் கரு வுரிப் பொருளென உணர்த்தி அவற்றின் பாகுபாடு இத்துணையும் ஓதினர். அவற்றுட் பாகுபடுத்திக் காட்டலாகாதன சிலபொருள் கண்டு அவற்றைத் தொகுத்துணர்த்துதல் நுதலிற்று.

* தலைவன் தலைவியை அன்னையெனக் கூறலும் உளது என்பாரும் உளர். (தொல். பொருள். ௨௪௧. நச்சி.)

(பாடம்) † ஒரியினன். ‡ நாட்டிய.

(இ - ள்.) ஒப்புமுதலாக நுகர்ச்சி யீருக அவ்வழிவருஞ் சொல்லெல்லாம் நாட்டின் வழங்குகின்ற மரபினானே பொருளை மனத்தினான் உணரினல்லது மாணாக்கர்க்கு இது பொருள் என வேறுபடுத்தி யாசிரியன் காட்டலாகாத பொருளையுடைய என்றவாறு.

ஒப்பாவது தந்தையையொக்கும் மகன் என்பது. அவ்விருவர்க்கும் பிறப்பு வேருயினவழி ஒப்பாகிய பொருள் யாதென்றார்க்கு இதுவெனக் காட்டலாகாமையின், அவ்விருவரையுங் கண்டான் அவ்வொருவ ரொருவரை ஒக்குமது பிறனொருவன் மாட்டுக் காணுமையிற் றனே யப்பொருண்மையை உணரும் என்பது.

உரு என்பது—உட்கு. அது பயிலாத பொருளைக் கண்டுழி வருவதோர் மன நிகழ்ச்சி. இவருட்கினர் என்றவழி மனத்தினான் உணரக் கிடந்தது

வெறுப்பு என்பது—செறிவு. அது அடக்கங்குறித்து நின்றது. அவரடக்கமுடையர் என்றவழி அதுவும் மனத்தினான் உணரக்கிடந்தது.

*கற்பு என்பது—மகளிர்க்கு மாந்தர்மாட்டு நிகழும் மனநிகழ்ச்சி. அதுவும் மனத்தான் உணரக் கிடந்தது.

ஏர் என்பது—தளிரின்கண் தோன்றுவதோர் பொலிவுபோல எல்லா வுறுப்பினும் ஒப்பக்கிடந்து கண்டார்க் கின்பத்தைத் தருவதோர் நிறவேறுபாடு. அது எல்லா வண்ணத்திற்கும் பொதுவாகலின் வண்ணம் அன்றுயிற்று. இது வண்ணம் பற்றிவரும். 'இவன் ஏருடையன்' என்றால் அதுவும் மனங்கொளக் கிடந்தது.

எழில் என்பது—அழகு. அது மிக்குங் குறைந்தும் நீடியும் குறுகியும் நேர்தி உயர்ந்தும் மெலிதாகியும் வலிதாகியும் உள்ள உறுப்புக்கள் அவ்வளவிற் குறையாமல் அமைந்தவழி வருவதோர் அழகு. இதுவும் அழகியன் என்றவழி அழகினைப் பிரித்துக் காட்டல் ஆகாமையின் ஈண்டோதப்பட்டது.

சாயல் என்பது—மென்மை. அது நாயும் பன்றியும் போலாது மயிலுங் குயிலும் போல்வதோர் தன்மை. அதுவும் காட்டலாகாமையின் ஈண்டோதப்பட்டது.

நாண் என்றது—பெரியோர் ஒழுக்கத்துமாருயின செய்யாமைக்கு நிகழ்வதோர் நிகழ்ச்சி அதுவும் காட்டலாகாது.

மடன் என்பது—பெண்டிர்க் குள்ளதோர் இயல்பு. அது உய்த்துணர்ந்து நோக்காது கேட்டவாற்றானுணரும் உணர்ச்சி. அதுவும் காட்டலாகாது.

நோய் என்பது—துன்பம். இவன் துன்பமுற்றான் என்றவழி அஃதெத்தன்மையது என்றார்க்குக் காட்டலாகாமையின் அதுவும் ஈண்டோதப்பட்டது.

---

*கற்பாவது—தன் கணவனைத் தெய்வமென்று உணர்வதோர் மேற்கோள் (தொல். பொருள். உசஎ. நச்சி.)

*வேட்கை என்பது—யாதானும் ஒன்றைப் பெறல்வேண்டு மெனச் செல்லும் மன நிகழ்ச்சி. இவன் வேட்கையுடையான் என்றவழி அஃது எத்தன்மை என்றார்க்குக் காட்டலாகாமையின் ஈண்டோதப்பட்டது.

ஆவயின் வரூஉங் கிளவியெல்லாம் என்றதனான் அன்பு அழுக்காறு பொறை அறிவு என்பனவும் இவைபோல்வனவுங் கொள்க. இவையெல்லாம் அகத்திணை புறத்திணை இரண்டிற்கும் பொது. இவை காட்டலாகாப் பொருளவாயின் இல்பொருண்மேற் சென்னிகழ்ந்த வென்றுலோ எனின், இது மேற்கூறப்பட்ட பொருள் பொருளென்பது அறிவித்தல். அவை உள்பொருள் என்பது வருகின்ற சூத்திரத்தான் உரைப்ப. (௯௩)

௨௫௪. இமையோர் தேஎத்தும் எறிகடல் வரைப்பினும்
அவையில்† காலம் இன்மை யான.

என்—எனின். இதுவும் மேற்கூறப்பட்ட பொருள், பொருள் என்பது அறிவித்தலை நுதலிற்று.

(இ - ள்.) தேவருலகத்தினுங் கடல்சூழ்ந்த வுலகத்தினும் மேற்சொல்லப்பட்ட பொருளில்லாத காலம் இன்மையான் உள் பொருளென்றே கொள்ளப்படும் என்றவாறு. (௯௨)

ஐந்தாவது பொருளியல் முற்றிற்று.

---

* வேட்கையாவது: பொருள்கள்மேல் தோன்றும் பற்றுள்ளம். (தொல். பொருள். ௨௭௭. நச்சி.)

† அவையில் காலம் இன்மையான—அறம் பொருள் இன்பங்களின் நுகர்வு இல்லாததோர் காலம் இன்றுகையால் அவற்றைப் பொருளென்றே கொள்க. (தொல். பொருள். ௨௫௮. நச்சி.)

## ஆறாவது

# மெய்ப்பாட்டியல்

---

இவ்வோத்து என்ன பெயர்த்தோ, எனின் மெய்ப்பாட்டியல் என்னும் பெயர்த்து; மெய்ப்பாடு உணர்த்தினமையாற் பெற்ற பெயர். அஃதியாதோ எனின், முன்னர்க் கூறுதும்.

௨௪௫. பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும்
கண்ணிய புறனே நானான்* கென்ப.

என்பது சூத்திரம்.

இச் சூத்திரம் என்னுதலிற்றோவெனின், பிறர் வேண்டுமாற்றால் சுவையுஞ் சுவைக்குறிப்பும் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) பண்ணைத் தோன்றிய என்பது—*விளையாட்டாயத்தின்கண் தோன்றிய என்றவாறு. பண்ணையுடையது பண்ணை என்றாயிற்று.*

எண்ணான்கு பொருளுங் கண்ணிய புறனே நானான் கென்ப என்பது—*முப்பத்திரண்டு பொருளையுங் குறித்ததன் புறத்து நிகழும் பொருள் பதினாறு என்று சொல்லுவர் என்றவாறு.*

*புறத்து நிகழ்வதனைப் புறம் என்றார்.*

*பண்ணைத் தோன்றிய கண்ணிய புறன் எனப் பெயரெச்ச அடுக்காகக் கூட்டுக. அன்றியும், எண்ணான்கு பொருளுங் கண்ணிய புறன் என ஒரு சொல் நடையாக ஒட்டித் தோன்றிய என்னும் பெயரெச்சத்திற்கு முடிபாக்கினும் அமையும். புறன் என்னும் எழுவாய் நானான்கென்னும் பயனிலைகொண்டு முடிந்தது.*

---

* பதினாறாயினவாறு என்னையெனின், வேம்பு முதலாயின பொருளும் அதனோடு நா முதலாயின பொறியும் வேறு வேறு நின்ற வழிச் சுவை என்று சொல்வதே பிறவாமையானும் அவ்விரண்டுங் கூடியவழிச் சுவையென்பது பிறத்தலானும் அவை பதினாறும் எட்டெனப்படும். இனிக் குறிப்புஞ் சத்துவமும் என்பனவும் உள்ள நிகழ்ச்சியும் உடம்பின் வேறுபாடும் என்பராதலின் அவ்வுள்ள நிகழ்ச்சியை வெளிப்படுப்பது சத்துவமாகலின் அவை பதினாறும் எட்டாய் அடங்குமாகலின் அவை ஈரெட்டுப் பதினாறாகும் என்பது. (தொல். பொருள். ௨௪௯. பேராசிரியர்.)

ஈண்டுச் சொல்லப்படுகின்ற பதினாறு பொருளும் கற்று நல்லொழுக்கு ஒழுகும் அறிவுடையார் அவைக்கண் தோன்றாமையாற் பண்ணைத் தோன்றிய என்றார். என்னை? நகைக்குக் காரணமாகிய எள்ளல் அவர் கண் தோன்றாமையின். பிறவும் அன்ன.

முப்பத்திரண்டாவன—நகை முதலானவற்றிற் கேதுவாம் எள்ளல் முதலாக விளையாட்டீறாக முன்னெடுத்தோதப்படுகின்றன. அவற்றைக் குறித்த புறனுவன சுவையுங் குறிப்பும். வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, காமம், அவலம், உருத்திரம், நகை, நடுவுநிலைமை என்றும், வீரக்குறிப்பு, அச்சக் குறிப்பு, இழிப்புக்குறிப்பு, வியப்புக்குறிப்பு, காமக்குறிப்பு, அவலக் குறிப்பு, உருத்திரக் குறிப்பு, நகைக் குறிப்பு, நடுவு நிலைமைக் குறிப்பு என்றும் சொல்லப்பட்ட பதினெட்டினும், நடுவுநிலைமையும் அதன் குறிப்பும் ஒழித்து ஏனைய பதினாறுமாம்.

வியப்பெனினும் அற்புதமெனினும் ஒக்கும். காமமெனினுஞ் சிங்காரமெனினும் ஒக்கும். அவலம் எனினும் கருணையெனினும் ஒக்கும். உருத்திரம் எனினும் வெகுளியெனினும் ஒக்கும். நடுவு நிலைமை எனினும் மத்திமம் எனினும் சாந்தம் எனினும் ஒக்கும் வீரம் என்பது மாற்றாரைக் குறித்து நிகழ்வது. அச்சம் என்பது அஞ்சத்தகுவன கண்டவழி நிகழ்வது. இழிப்பென்பது இழிக்கத்தக்கன கண்டுழி நிகழ்வது. வியப்பென்பது வியக்கத்தக்கன கண்டுழி நிகழ்வது. காமம் என்பது இன்ப நிகழ்ச்சியான் நிகழ்வது. அவலம் என்பது இழவுபற்றிப் பிறப்பது. உருத்திரம் என்பது அவமதிப்பாற் பிறப்பது. நகையென்பது இகழ்ச்சி முதலாயினவற்றாற் பிறப்பது. நடுவுநிலைமை யென்பது யாதொன்றானும் விகாரப்படாமை.

அவை இற்றாக, மத்திமமென்பதனை ஈண்டொழித்தது என்னையெனின்.

"மத்திமம் என்பது மாசறத் தெரியிற்
சொல்லப் பட்ட எல்லாச் சுவையொடு
புல்லா தாகிய பொலிவிற் றென்ப."

"நயனுடை மரபின் இதன்பயம் யாதெனிற்
சேர்த்தி யோர்க்குஞ் சார்ந்துபடு வோர்க்கும்
ஒப்ப நிற்கும் நிலையிற் றென்ப."

"உய்ப்போரிதனை யாரெனின் மிக்கது
பயக்குந் தாபதர் சாரணர் சமணர்
கயக்கறு முனிவர் அறிவரொடு பிறருங்
காமம் வெகுளி மயக்கம் நீங்கிய
வாய்மை யாளர் வகுத்தனர் பிறரும்
அச்சுவை யெட்டும் அவர்க்கில ஆதலின்
அச்சுவை ஒருதலை ஆதலின் அதனை
மெய்த்தலைப் படுக்கஇதன் மிகவறிந் தோரே."

என்பது செயிற்றியச் சூத்திரம். இதனானே இது வழக்கிலக்கணம் அன்று என உணர்க.

இனி சுவை* என்பது காணப்படு பொருளாற் காண்போரகத்தின் வருவதோர் விகாரம்.

"இருவகை நிலத்தின் இயல்வது சுவையே."

என்றும்,

"நின்ற சுவையே ... ...
ஒன்றிய நிகழ்ச்சி சத்துவம் என்ப."

என்றும்,

"சத்துவம் என்பது சாற்றுங் காலை
மெய்ம்மயிர் குளிர்த்தல் கண்ணீர் வார்தல்
நடுக்கங் கடுத்தல் வியர்த்தல் தேற்றம்
கொடுங்குரற்† சிதைவொடு நிரல்பட வந்த
பத்தென மொழிப சத்துவந் தானே."

என்றும் சார்பொருள் உரைப்ப.

அவை வருமாறு:

பேயானும் புலியானும் கண்டானொருவன் அஞ்சியவழி மயக்கமுங் கரத்தலும் நடுக்கமும் வியர்ப்பு முளவாகின்றே. அவற்றுள் அச்சத்திற் கேதுவாகிய புலியும் பேயும் சுவைப்படுபொருள். அவற்றைக் கண்ட காலந்தொட்டு நீங்காது நின்ற அச்சம் சுவை. அதன்கண் மயக்கமும் கரத்தலும் குறிப்பு. நடுக்கமும் வெயர்ப்புஞ் சத்துவம். இவற்றுள் நடுக்கமும் வியர்ப்பும் பிறர்க்கும் புலனாவது என்று கொள்க; ஏனைய மன நிகழ்ச்சி. பிறவு மன்ன. இவற்றின் பிரிவை நாடகநூலிற் காண்க. (௧)

௨௪௬. நாலிரண் டாகும் பாலுமா ருண்டே.

என்—எனின். மேலதற்கோர் புறனடை.

(இ - ள்.) மேற்சொல்லப்பட்ட பதினாறு பொருளும் எட்டென வரும் பக்கமு முண்டு என்றவாறு.

அவையாவன குறிப்புப் பதினெட்டனையுஞ் சுவையுள் அடக்கிச் சுவை யெட்டுமாக்கி நிகழ்தல். (௨)

௨௪௭. நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
அப்பால் எட்டாம்‡ மெய்ப்பா டென்ப.

என்—எனின். மெய்ப்பாடு ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

---

* சுவைப்பொருள் என்பன. அறுசுவைக்கு முதலாகிய வேம்பும் கடுவும் உப்பும் புளியும் கரும்பும் போல்வன. அவையாமாறு: நகைச் சுவைக்குப் பொருளாவன, ஆரியர் கூறுந் தமிழும், குருடரு முடவருஞ் செல்லுஞ் செலவும், பித்தருங் களியரும் சுற்றத்தாரை இகழ்ந்தாரும் குழவி கூறும் மழலையும் போல்வன. (தொல் பொருள். ௨௪௯. பேரா.)

(பாடம்) † கொடுகுரல்குண வற்றொடு. ‡ எட்டே.

(இ - ள்.) நகைமுதலாகச் சொல்லப்பட்ட எட்டும் மெய்ப்பாடு என்று சொல்லுவர் என்றவாறு.

மெய்ப்பாடென்பது யாதோவென்னின்,

"உய்ப்போன் செய்தது காண்போர்க் கெய்துதல்
மெய்ப்பா டென்ப மெய்யுணர்ந் தோரே."

எனச் செயிற்றியனார் ஓதுதலின்,

அச்சமுற்றான் மாட்டு நிகழும் அச்சம் அவன்மாட்டுச் சத்துவத்தினாற் புறப்பட்டுக் காண்போர்க்குப் புலனாகுந் தன்மை மெய்ப்பாடெனக் கொள்ளப்படும். மெய்யின்கண் தோன்றுதலின் மெய்ப்பாடாயிற்று. அஃதேல், இவ் விலக்கணங் கூத்தினுட் பயன்படல் உண்டாதலின் ஈண்டு வேண்டாவெனின், ஈண்டுஞ் செய்யுட் செய்யுங்காற் சுவைபடச் செய்யவேண்டுதலின் ஈண்டுங் கூறவேண்டு மென்க.

"உய்த்துணர் வின்றித் தலைவரு பொருளின்*
மெய்ப்பது முடிவது மெய்ப்பா டாகும்." (செய்யுளியல். ௧௯௯)

என இவ்வாசிரியர் மெய்ப்பாடுஞ் செய்யுளுறுப்பென ஓதினமை உணர்க.

நகை† என்பது இகழ்ச்சியிற் பிறப்பது. அழுகை என்பது அவலத்திற் பிறப்பது. இளிவரல் இழிப்பிற் பிறப்பது. மருட்கை வியப்பிற் பிறப்பது. அச்சம் அஞ்சத் தகுவனவற்றாற் பிறப்பது. பெருமிதம் வீரத்திற் பிறப்பது. வெகுளி வெறுக்கத் தக்கனவற்றாற் பிறப்பது. உவகை சிங்காரத்திற் பிறப்பது. (௧)

௨௪௮. ‡எள்ளல் இளமை பேதைமை மடனென்று
உள்ளப் பட்ட நகைநான் கென்ப.

என்—எனின். நகையும் நகைப்பொருளும் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) எள்ளுதற்பொருண்மை முதலாகச் சொல்லப்பட்ட நான்கும் நகைப்பொருளாம் என்றவாறு.

எனவே காரணம் பற்றி நகையும் நான்காயின.

"நகையெனப் படுதல் வகையா தெனினே
நகையெனச் செய்வோன் செய்வகை நோக்கு
நகையொடு நல்லவை நனிமகிழ் வதுவே."

---

(பாடம்) * பொருளான்.

† நகை முன்வைத்த தென்னையெனின் 'பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருட்கும் இவை யென்னும் இயல்பில்லனவல்ல என்றதற்கு விளையாட்டுப் பொருட்டாகிய நகையை முன்வைத்தான் என்பது. அதற்கு மறுதலையாகிய அழுகையை அதன்பின் வைத்தான். (தொல். பொருள். ௨௫௧. பேரா.)

‡ எள்ளல் என்பது தான் பிறரை எள்ளி நகுதலும் பிறரால் எள்ளப்பட்ட வழித் தான் நகுதலும் என இரண்டாம். (தொல். பொருள் ௨௫௨. பேரா.)

என்பதனுன் நகைபடுபொருள் கண்டதன்வழி முறுவலோடு வரும் மகிழ்ச்சிப் பொருளாமாறு நகையாவது என்று கொள்க.

''உடனிவை தோன்றும் இடயியா தெனினே
முடவர் செல்லுஞ் செலவின் கண்ணும்
மடவோர் சொல்லுஞ் சொல்லின் கண்ணும்
கவற்சி பெரிதுற் றுரைப்போர்க் கண்ணும்
பிதற்றிக் கூறும் பித்தர் கண்ணுஞ்
சுற்றத் தோரை இகழ்ச்சிக் கண்ணும்
மற்று மொருவர்கட் பட்டோர்க் கண்ணுங்
குழவி கூறு மழலைக் கண்ணும்
மெலியோன் கூறும் வலியின் கண்ணும்
வலியோன் கூறும் மெலிவின் கண்ணும்
ஒல்லார் மதிக்கும் வனப்பின் கண்ணுங்
கல்லார் கூறுங் கல்விக் கண்ணும்
பெண்பிரி தன்மை யலியின் கண்ணும்
ஆண்பிரி பெண்மைப் பேடிக் கண்ணும்
களியின் கண்ணுங் காவாலி கண்ணும்
தெளிவிலார் ஒழுகும் கடவுளார் கண்ணும்
ஆரியர் கூறுந் தமிழின் கண்ணும்
காரிகை யறியாக்* காமுகர் கண்ணும்
கூனர் கண்ணும் குறளர் கண்ணும்
ஊமர் கண்ணுஞ் செவிடர் கண்ணும்
ஆன்ற மரபின் இன்னுழி எல்லாந்
தோன்றும் என்ப துணிந்திசி னோரே.''

என இவ்வகையெல்லாம் உளவெனச் செயிற்றியனூர் ஓதுதலின், அவை நான்காகியவாறு என்னையெனின், முடவர் செல்லுஞ் செலவு எள்ளுதற் பொருண்மை யாயிற்று; மடவோர் சொல்லுஞ் சொல் மடமைப்பொருண்மை யாயிற்று; கவற்சி பெரிதுற்றுரைப்போர் கூற்றும் பேதைமையாயிற்று; குழவிகூறு மழலை இளமைப் பொருளாயிற்று; ஏனைய வெல்லாம் இவற்றின்பாற் படுதல் காண்க. புணர்ச்சி நிமித்தமாகக் கூற்று நிகழ்ந்துழி 'வரும் நகை இளமை என்பதனுற் கொள்க. இப் பொருண்மை செயிற்றியத்தில் 'வலியோன் கூறும் மெலிவு' என்பதனுற் கொள்க.

மடம் என்பதற்கும் பேதைமை என்பதற்கும் வேறுபாடு என்னையெனின், மடம் என்பது பொருண்மை யறியாது திரியக் கோடல்; பேதைமை யென்பது கேட்டதனை உய்த்துணராது மெய்யாக்க் கோடல்.

எள்ளல் இளமை எனப் பொதுப்பட்டு நின்றமையால் தன்மாட்டு நிகழும் வழியுங் கொள்க.

உதாரணம்

''நகையா கின்றே தோழி'' என்னும் நெடுந்தொகைப் பாட்டினுள்,

''தண்துறை ஊரன் திண்தார்† அகலம்
வதுவை நாளணிப் புதுவோர்ப் புணரிய

(பாடம்) * அறியார். † தண்தார்.

பரிவொடு வரூஉம் பாணன் தெருவிற்
புனிற்றுப் பாய்ந்தெனக் கலங்கி யாழிட்*
டெம்மனைப் புகுதந் தோனே அதுகண்டு†
மெய்ம்மலி உவகை மறையினென்‡ எதிர்சென்
றிம்மனை அன்றஃ தும்மனை யென்ற
என்னுந் தன்னும் நோக்கி
மம்மர் நெஞ்சினோன்§ தொழுதுநின் றதுவே.'' (அகம். ௫௬)

எனக்கூறி 'நகையாகின்றே தோழி' என்றமையின் எள்ளல்பற்றி நகை தோன்றியது.

ஏனவும் வந்தவழிக் காண்க. (௪)

௨௪௯. இழிவே இழவே அசைவே வறுமையென
விளிவில் கொள்கை அழுகை நான்கே.

என்—எனின். இது அழுகையாமாறும் அதற்குப் பொருளு முணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) இழிவு முதலாகச் சொல்லப்பட்ட நான்கு பொருண்மையும் அழுகைக்குப் பொருளாம் என்றவாறு.

இழிவு என்பது—பிறர் தன்னை யெளியன் ஆக்குதலாற் பிறப்பது.

இழவாவது—உயிரானும் பொருளானும் இழத்தல்.

அசை வென்பது—தளர்ச்சி. அது தன்னிலையிற்றாழ்தல்,

வறுமை என்பது—நல்குரவு.

இவை ஏதுவாக அழுகைபிறக்கும் என்றவாறு.

இதுவுந் தன்மாட்டுற்றதனானும் பிறர்மாட்டுற்றதனானும் பிறக்கும்.

''கவலை கூர்ந்த கருணையது பெயரே
அவல மென்ப அறிந்தோர் அதுதான்
நிலைமை யிழந்து நீங்குதுணை யுடைமை
தலைமை சான்ற தன்னிலை யழிதல்
சிறையணி துயரமொடு செய்கையற் றிருத்தல்
குறைபடு பொருளொடு குறைபா டெய்தல்
சாப மெய்தல் சார்பிழைத்துக் கலங்கல்
காவ லின்றிக் கலக்கமொடு திரிதல்
கடகந் தொட்டகை கயிற்றொடு கோடல்
முடியுடைச் சென்னிபிறர் அடியுறப் பணிதல்
உளைப்பரி பெருங்களி றூர்ந்த சேவடி

(பாடம்) * அழிபட் † அவற்கண்டு.
‡ உவகை யென். § நெஞ்சினன்.

தலைத்தி லைத்தொ லிப்பத் தளர்ந்தவை
நிறங்கிளர் அகல நீறொடு சேர்த்தல்
மறங்கிளர் கயவர் மனந்தவப் புடைத்தல்
கொலைக்களங் கோட்டங் கோல்முனைக் கவற்சி
அலைக்கண் மாறா அழுகுரல் அரவம்
இன்னோர் அன்னவை இயற்பட நாடித்
துன்னினர் உணர்க துணிவறிந் தோரே''
''இதன்பயனே இவ்வழி நோக்கி
அசைந்தனர் ஆகி அழுத லென்ப.''

என்பன செயிற்றிய மாகலின். இவையெல்லாம் இந்நான்கினுள் அடங்குமாறு அறிந்துகொள்க. இதற்குச் செய்யுள்.

''ஐயோ எனின்யான்* புலியஞ் சுவலே
அணைத்தனன் கொளினே அகன்மார்பெடுக்க வல்லேன் †
என்போற் பெருவிதுப் புறுக நின்னை
இன்னா துற்ற அறனில் கூற்றே‡
நிரைவளை முன்கை பற்றி
வரைநிழற் சேர்க§ நடத்திசிற் சிறிதே.'' (புறம். ௨௫௫)

இது இழிவுபற்றி வந்த அழுகை.

ஏனையவும் வந்தவழிக் கண்டுகொள்க. (௫)

௨௫௦. மூப்பே பிணியே வருத்த மென்மையொடு
$யாப்புற வந்த இளிவரல் நான்கே.

என்—எனின். இளிவரலாமாறும் அதற்குப் பொருளும் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) மூப்பு முதலாகச் சொல்லப்பட்ட நான்கு பொருண்மையும் இளிவரலுக்குப் பொருளாம் என்றவாறு.

இவைநான்குந் தன் மாட்டுத் தோன்றினும் பிறர்மாட்டுத் தோன்றினும் நிகழும்.

உதாரணம்

''தாழாத் தளராத் தலைநடுங்காத் தண்டூன்றா
வீழா இறக்கும் இவள்மாட்டும்—காழிலா
மம்மர்கொள் மாந்தர்க் கணங்காகும் தன்கைக்கோல்
அம்மனைக்கோல் ஆகிய ஞான்று.'' (நாலடி. ௧௪)

என்றது பிறர்மாட்டு மூப்புப்பற்றி இழிப்புப் பிறந்தது.

பிணி யென்பது—பிணியுறவு கண்டு இழித்தல். அதனானே உடம்பு தூயதன்றென இழித்தலுமாம்.

---

(பாடம்) * எனயான். † உய்த்தனன் கொளினே மார்பெடுக்கல்லேன். ‡ கூறே. § சேர.

$ 'யாப்புறவந்த' என்பது திட்பமுற வந்த என்றவாறு. அங்ஙனம் கூறிய மிகையானே வீரம் முதலாயின பற்றியும் இளிவரல்பிறக்கும் என்றவாறு. (தொல். பொருள். ௨௫௪. பேரா.)

"மாக்கேழ் மடநல்லாய் என்றரற்றுஞ் சான்றவர்
நோக்கார்கொல் நொய்யதோர் துச்சிலை—*யாக்கைக்கோர்
ஈச்சிற கன்னதோர் தோலறினும் வேண்டுமே
காக்கை கடிவதோர் கோல்." (நாலடி. சக)

இஃது உடம்பினை அருவருத்துக் கூறுதல்.

வருத்தமென்பது—தன்மாட்டும் பிறர்மாட்டும் ஆளதாகிய வருத்தத்தானும் இழிப்புப் பிறக்கும் என்றவாறு.

உதாரணம்

"செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை காமநோய்
உற்றார்அறிவதொன் றன்று." (குறள்.கஉ௫௫)

இது பிறன் வருத்தங் கண்டு இழிப்புப் பிறந்தது.

உதாரணம்

"தொடர்ப்படு ஞமலியின் இடர்ப்படுத் திரீஇய†
கேளல் கேளிர் வேளாண்‡ சிறுபதம்
மதுகை யின்றி வயிற்றுத்தீத் தணியத்§
தாமிரந் துண்ணு மளவை$
ஈன்ம¶ ரோவிவ் வுலகத் தானே" (புறம். எச)

இது தன் மாட்டு வருத்தத்தானே இழிப்புப் பிறந்தது.

மென்மை என்பது—நல்குரவு.

"அறஞ்சாரா நல்குர வீன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும்." (குறள் கOசஎ)

"இற்பிறந்தார் கண்ணேயும் இன்மை இளிவந்த
சொற்பிறக்கும் சோர்வு தரும்." (குறள். கOசச)

என வரும்.

இன்னும் 'யாப்புற' என்பதனான் இழிக்கத்தக்கன பிறவுங் கொள்க. அவை நாற்றத்தானும் தோற்றத்தானும் புல்லியன. இவற்றிற் கெல்லாஞ் செய்யுள் வந்தவழிக் காண்க. (சு)

உருக. புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு
மதிமை ** சாலா மருட்கை நான்கே.

---

(பாடம்) * புக்கிலை † இடர்ப்படத்திய. ‡ வேளன.
§ தணியோர். $ மளவையி. ¶ ஞம.

**'மதிமை சாலா மருட்கை' யென்பது அறிவினை உலக வழக்கினுள் நின்றவாறு நில்லாமல் திரித்து வேறுபடுத்து வருவதென்றவாறு. (தொல். பொருள். உருரு. பேரா.)

என்—எனின். இது மருட்கை யாமாறும் அதன்பொருண்மையும் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) புதுமை முதலாகச் சொல்லப்பட்ட நான்கி னும் மருட்கைபிறக்கும் என்றவாறு.

மதிமை சாலா மருட்கை என்றமையால் அறிவுடையார் இப்பொருட் கண் வியவார் என்று கொள்க.

புதுமையாவது—யாதொன்றுனும் எவ்விடத்தினும் *எக்காலத்தினுந் தோன்றுததோர் பொருள்தோன்றியவழி வியத்தல். அது கந்திருவர் அந்தரம் போவதுகண்டு வியத்தல் போல்வன.

பெருமை என்பது—பண்டு கண்ட பொருள்கள் போலாத பொருள் கள் அவ்வளவிற் பெருத்தன கண்டு வியத்தல் அவை மலையும் யானையும் செல்வமும் முன்கண்ட அளவின் மிக்கன கண்டவழி வியப்பு வரும்.

சிறுமை என்பது—பிறவும் நுண்ணியன கண்டு வியத்தல். அது 'கடுகின்கட் பல துளை' போல்வன.

ஆக்கம் என்பது—ஒன்றன் பரிணமங்கண்டு வியத்தல். அது தன் னளவின்றி நன்னிலஞ் சார்பாகத் தோன்று மரமுதலாயின ஆகியவழி வியத்தலும் \நல்கூர்ந்தான் யாதொன்று மிலாதான் !ஆக்கமுற்றுனுயின், அதற்குக் காரண முணராதான் அது கண்டு வியத்தலும், இளையான் வீரங் கண்டுவியத்தலுமாம். பிறவும் உலகத்து வியக்கத்தகுவன எல்லாம் இவற் றின்பாற் படுத்திக் கொள்க.

'இருந்தவேந்தன்' என்னும் அகப்பாட்டினுள்,

"... ... ... பெருந்தேர் யானும்
ஏறிய தறிந்தன் றல்லது வந்த வாறு*
நனியறிந் தன்றோ இலனே தாஅய்†
முயற்பறழ் உகளும் முல்லையம் புறவிற்
கவைக்கதிர் வரகின் சீறூர் ஆங்கண்
மெல்லியல் அரிவை இல்வயின் நிறீஇ
இழிமின் என்ற‡நின் மொழிமருண் டிசினே" (அகம். ௩௮௪)

என்றது வியந்தவாறு.

"பொலம்பூ வேங்கை நலங்கிளர் கொழுநிழல்
ஒருமுலை இழந்தாளோர் திருமா பத்தினிக்
கமரர்க் கரசன் தமர்வந் தீண்டியவள்
காதற் கொழுநனைக் காட்டி அவளொடெம்§
கட்புலங் காண விட்புலம் போயது$
இறும்பூது போலும்அஃ தறிந்தருள்¶ நீயென." (சிலப். பதிகம்)

என்றது புதுமை. (எ)

---

(பாடம்) * ஏறியதல்லது வந்த வாறு. † தாவும்.
‡ இழிமின் இல் என்ற. § அவளொடு. $ போகியது.
¶ போலும் அஃதறிந்தருள்.

உ®உ. அணங்கே* விலங்கே கள்வர்தம் இறையெனப்
பிணங்கல் சாலா அச்சம் நான்கே.

என்—எனின். அச்சமாகிய மெய்ப்பாடும் அதன் பொருளும் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அணங்குமுதலாகச் சொல்லப்பட்ட நான்கினும் பிறக்கும் மாறுபடுதல் அமையாத அச்சம் நால்வகைப்படும் என்றவாறு.

பிணங்கல் சாலுமாயின் நடுக்கம் முதலாயின உளவாகா; அவை பிணங்கல் சாலாத வழியே உளதாவ தென்று கொள்க.

அவை நாலச்சமும் வருமாறு :—

கொலை களவு கட் காமம் பொய் யென்பனவற்றை நிகழ்த்தினவர்க்கு அரசனால் அச்சம் வருதலின் அவனும் அஞ்சப்படும் பொருளாயினன்.

உதாரணம்

"மையல் வேழ மடங்கலின் நெரிதர
உய்விடம் அறியேம் ஆகி ஒய்யெனத்
திருந்துகோல் எல்வளை தெளிர்ப்ப நாணமறந்து
விதுப்புறு மனத்தேம் விரைந்தவற் பொருந்திச்
சூருறு மஞ்ஞையின் நடுங்கி" (குறிஞ்சிப். கசுகூ - அ)

என வரும். பிறவு மன்ன.

உடு௩. கல்வி தறுகண் புகழ்மை† கொடையெனச்
சொல்லப் பட்ட பெருமிதம்‡ நான்கே.

என்—எனின். பெருமிதமாமாறும் அதன் பொருண்மையும் உணர்த்துதல் நுதலிற்று.

---

* அணங் கென்பன பேயும் பூதமும் பாம்பும் ஈறுகிய பதினெண் கணனும் நிரயப்பாலரும் பிறரும் அணங்குதற் றொழிலராகிய சவந்தின் பெண்டிர் முதலாயினரும் உருமிசைத் தொடக்கத்தனவும் எனப்படும்... ......பிணங்கல் சாலா அச்சம் என்றதனான் முன்னையபோல இவை தன்கண் தோன்றலும் பிறன்கண் தோன்றலும் என்னும் தடுமாற்றம் இன்றிப் பிறிது பொருள்பற்றியே வரும் என்பது.
(தொல். பொருள். உ௬௬. பேரா.)

(பாடம்) † இசைமை.

‡ இச்சூத்திரத்துள் வீரத்தினைப் பெருமிதம் என்றெண்ணினன்; என்னை? எல்லாரொடும் ஒப்ப நில்லாது பேரெல்லையாக நிற்றல் பெருமிதம் எனப்படும்என்றற்கு என்பது. சொல்லப்பட்ட பெருமிதம் என்றதனால் காமம் பற்றியும் பெருமிதம் பிறக்குமென்று கொள்க.

"பல்லிருங் கூந்தல் மகளிர்
ஒல்லா முயக்கிடைக் குழைகஎன் தாரே." (புறம். எ௩)

என்பது காமம்பற்றிய பெருமிதம். (தொல். பொருள். உ௬எ. பேரா.)

(இ - ள்.) கல்வியானுந் தறுகண்மையானும் புகழ்மையானும் கொடையானும் பெருமிதம் நால்வகைப்படும் என்றவாறு.

இவை நான்கும் பிறனொருவனின் மிகுத்தவழிப் பிறக்கு மகிழ்ச்சி பெருமிதம் என்று கொள்க.

பெருமிதமாவது—தன்னைப் பெரியனாக நினைத்தல்.

"உறுசுடர் வாளோ டொருகால் விலங்கின்
சிறுசுடர்முற் பேரிருளாங் கண்டாய் · எறிசுடர்வேல்
தேங்குலாம் பூந்தெரியல் தேர்வந்த நின்னொடு
பாங்கலா வீரர்* படை." (புறப். வெ. எ, அ)

இது வீரம்பற்றி வந்தது. பிறவு மன்ன. (௯)

௨௫௪. உறுப்பறை குடிகோள்† அலைகொலை என்றன‡
வெறுப்ப வந்த வெகுளி நான்கே.

என்—எனின். வெகுளியாமாறும் அதற்குப் பொருளும் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) உறுப்பறை முதலாகச் சொல்லப்பட்ட நான்கினும் வெகுளி பிறக்கும் என்றவாறு.

இப்பொருள் நான்குந் தான் பிறரைச் செய்யுங்காலும் வெகுளி பிறக்கும்: தன்னைப் பிறர் செய்யுங்காலும் வெகுளி பிறக்கும் என்று கொள்க.

உறுப்பறையாவது—அங்கமாயினவற்றை அறுத்தல்.

குடிகோளாவது கீழ்வாழ்வாரை நலிதல்

அலை என்பது—வைதலும் புடைத்தலும்.

கொலை என்பது—கொல்லுதற் கொருப்படுதல்.

ஊடற்கண்ணும் வெகுளி தோற்றுமால் எனின், அஃது இன்பத்திற்குக் காரணமாதலால் தலைமகள் புருவநெரிவும் வாய்த்துடிப்புங் கண்ட தலைமகற்கு வெகுட்சிபிறவாது உவகை பிறக்கும். தலைமகன் வெகுளுவனாயின் அதன்பாற் படும்.

"உறுதுப் பஞ்சா துடல்சினஞ் செருக்கிச்
சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமந் ததையத் தாக்கி முரசமொ
டொருங்ககப் படேஎ னாயின்." (புறம். எ௨)

என்பது வெகுளிபற்றி வந்தது. பிறவு மன்ன. (௧0)

(பாடம்) * மன்னர்.

† குடி கோள் என்பது தாரமும் சுற்றமும் குடிப்பிறப்பும் முதலாயவற்றுக்கண் கேடு சூழ்தல். (தொல். பொருள். ௨௫அ. பேரா.) ‡ என்ற.

உருரு. செல்வம் புலனே புணர்வுவிளை யாட்டேன*
அல்லல் நீத்த உவகை† நான்கே.

என்—எனின். உவகை யாமாறும் அதன்பொருளும் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) செல்வ நுகர்ச்சியானும், கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலன்களான் நுகர்தலானும், மகளிரொடு புணர்தலானுஞ், சோலையும் ஆறும் புகுந்து விளையாடும் விளையாட்டினானும் உவகை பிறக்கும் என்றவாறு.

"ஒத்த காமத் தொருவனும் ஒருத்தியும்
ஒத்த காமத் தொருவனொடு பலரும்
ஆடலும் பாடலுங் கள்ளுங் களியும்‡
ஊடலும் உணர்தலுங் கூடலு மிடைந்து
புதுப்புனல் பொய்கை பூம்புனல் என்றிவை
விருப்புறு மனத்தொடு விழைந்து நுகர்தலும்
பயமலை மகிழ்தலும் பனிக்கடல் ஆடலும்
நயனுடை மரபின் நன்னகர்ப் பொலிதலும்
குளம்பரிந் தாடலும் கோலஞ் செய்தலும்
கொடிநகர் புகுதலும் கடிமனை விரும்பலும்
துயிற்கண் இன்றி இன்பந் துய்த்தலும்
அயிற்கண் மடவார் ஆடலுள் மகிழ்தலும்
நிலாப்பயன் கோடலும் நிலம்பெயர்ந் துறைதலும்
கலம்பயில் சாந்தொடு கடிமல ரணிதலும்
ஒருங்கா ராய்ந்த இன்னவை பிறவும்
சிருங்கா ரம்மென வேண்டுப இதன்பயன்
துன்பம் நீங்கத் துகளறக் கிடந்த
இன்பமொடு புணர்ந்த ஏக்கழுத் தம்மே."

எனச் செயிற்றியனார் விரித்தோதினா ராயினும் இவையெல்லாம் இந் நான்கினுள் அடங்கும்.

"தம்மி லிருந்து தமதுபாத் துண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு" (குறள். கக0எ)

என்றவழித் தம்மிலிருந்து தமது பாத்துண்ட செல்வ நுகர்ச்சி, முயக்கம் புணர்பு.

"வையை வருபுனல் ஆடல் இனிதுகொல்
செவ்வேற்கோ குன்ற நுகர்தல் இனிதுகொல்

---

(பாடம்) * விளையாட்டென்று.

† அல்லல் நீத்த உவகை என்றதனால் பிறர் துன்பங் கண்டுவரும் உவகையும் உவகை எனப்படாதென்பது. இதுவுந் தன்கண் தோன்றிய பொருள்பற்றி வரும் என்றூர்க்குப் பிறன்கண் தோன்றிய இன்பம் பற்றியும் உவகை பிறக்கும் அஃதெப்பாற் படுமெனின், அதுவும் அல்லல் நீத்த உவகை என்றதனான் உவகை எனப்படும். (தொல். பொருள் உ௫௪. பேரா.)

(பாடம்) ‡ கனியும்.

வைவ்வேல் நுதியன்ன கண்ணார் துணையாக
எவ்வாறு செய்வாங்கொல் யாமென நாளும்
வழிமயக் குற்று மருடல் நெடியான்
நெடுமாடக் கூடற் கியல்பு.'' (பரிபாடல்)

என வரும். பிறவு மன்ன. (கக)

உருசு. *ஆங்கவை ஒருபால் ஆக †வொருபா லாக
உடைமை இன்புறல் நடுவுநிலை யருளல்
தன்மை அடக்கம் வரைதல் அன்பெனாஅக்
கைம்மிகல் நலிதல் சூழ்ச்சி வாழ்த்தல்
நாணல் துஞ்ச லரற்றுக் கனவெனாஅ
முனிதல் நினைதல் வெரூஉதல் மடிமை
கருதல் ஆராய்ச்சி விரைவுயிர்ப் பெனாஅக்
கையா றிடுக்கண் பொச்சாப்புப் பொறாமை
வியர்த்தல் ஐயம் மிகைநடுக் கெனாஅ
அவையும் உளவே அவையலங் கடையே.

என்—எனின். மேற்சொல்லப்பட்ட எண்வகை மெய்ப்பாடும் ஒழிய வேறுபட்டுவருவன சிலமெய்ப்பாடு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) *மேற்சொல்லப்பட்டன ஒருபக்கமாக, ஒருபக்க முடைமை முதலாகச் சொல்லப்பட்ட முப்பத்திரண்டும் உள, அவையல்லாத விடத்து என்றவாறு.*

எனவே, ஆமிடத்து இவை யங்கம் ஆகும்.

உடைமையாவது—யாதானு மொருபொருளை உடையனாயினால் வருதலாகும் மன நிகழ்ச்சி.

---

* ஆங்கவை ஒருபாலாக—எள்ளல் முதலாக விளையாட்டிறுதியாகச் சொல்லப்பட்ட முப்பத்திரண்டும் ஒரு கூறாக: ஒரு பாலென்றது இனிச் சொல்லுகின்ற ஒரு கூறென்றவாறு. பின்னர் அவற்றையெல்லாம் எண்ணி 'இவையுமுளவே அவையலங்கடையே' என்றார் ஈண்டெண்ணப்பட்டவையே ஆண்டடங்குவனவும் உள. அப்பொருண்மைய அல்லாதவிடத்து இவை முப்பத்திரண்டும் ஈண்டு மெய்ப்பாடெனப்படும்.

இவை முப்பத்திரண்டெனத் தொகை கூறியதிலனாலெனின், ஆங்கவை ஒருபாலாக ஒருபால் என்றாராகலின். இருகூறெனப்படுவ தம்மின் ஒத்த எண்ணுதல் வேண்டுமாகலின் அவை முப்பத்திரண்டெனவே இவையும் முப்பத்திரண்டென்பது எண்ணி உணரவைத்தான் என்பது ..............இவை முப்பத்திரண்டும் மேற்கூறிய முப்பத்திரண்டும் போல அகத்திற்கும் புறத்திற்கும் பொதுவாகி நிகழும் மெய்ப்பாடெனக் கொள்க. இவையெல்லாம் உலகவழக்காகலான் இவ்வழக்கேபற்றி நாடக வழக்குள்ளும் கடியப்படா என்றவாறு. (தொல். பொருள். உசுဝ. பேரா.)

(பாடம்) † ஒருபால்.

"நெடுநல் யானையுந் தேரு மாவும்
படையமை மறவரு முடையம் யாமென்
றுறுதுப் பஞ்சாது." (புறம். எ௨

என வரும்.

இன்புறலாவது—நட்டாராகிப் பிரிந்து வந்தோரைக் கண்ட வழி வருவதோர் மன நிகழ்ச்சி போல்வது.

"கெடுத்துப்படு* நன்கலம் எடுத்துக் கொண்டாங்கு."
(நற்றிணை. ௧அ௨)

... ... ... உள்ளிய
வினைமுடித் தன்ன இனியோள்." (நற்றிணை. ௩)

"விட்டகன் றுறைந்த நட்டோர்க் கண்ட
நாளினும் இனிய நல்லாள்."

எனக் காம நுகர்ச்சியின்றி வரும் இன்புறுதல்.

நடுவுநிலைமையாவது—ஒருமருங்கு ஓடாது நிகழும் மன நிகழ்ச்சி.

"சமன்செய்து சீர் தூக்குங் கோல்போல் அமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி." (குறள். ௧௧௮)

என வரும்.

அருளாவது—எல்லாவுயிர்க்கும் அளிசெய்தல்.

"அரிதாய அறனெய்தி அருளியோர்க் களித்தலும்." (கலித். ௧௧)

என்றாற்போல வருவது.

தன்மை யென்பது—சாதியியல்பு.

பார்ப்பார் அரசர் இடையர் குறவர் என்றின்னோர்மாட்டு ஒருவரை யொருவர் ஒவ்வாமற் கிடக்கு மியல்பு. அது மெய்க்கடமையின் கண் வேறுபட்டுவருதலின் மெய்ப்பாடாயிற்று.

"வயலைக் கொடியின் வாடிய மருங்குல்†
உயவ லூர்திப் பயலைப் பார்ப்பான்." (புறம். ௩௧௫)

என்றும்,

"புலிநிறக் கவசம் பூம்பொறி சிதைய
எய்கணை கிழித்த பகட்டெழில் மார்பின்
மறலி அன்ன களிற்றின் மிசை யோனே." (புறம். ௧௩)

என்றும்,

"காயாம்பூக் கண்ணிக் கருந்துவ ராடையை
மேயு நிரைமுன்னர்க் கோலூன்றி நின்றாயோர்
ஆயனை யல்லை." (கலித். ௧0௮)

என்றும்,

(பாடம்) * கெடுத்தெடுய. † மருங்கின்.

"தேனொடு நீடு மயிற்குற மாக்கள்."

என்றும் வரும்.

அடக்கம் என்பது—மனமொழிமெய்யி னடங்குதல். அது பணிந்த மொழியும் தானைமடக்கலும் வாய்புதைத்தலும் போல்வன.

"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்." (குறள். ௧௨௬)

என்றும்,

"யாகாவா ராயினும் நாகாக்க." (குறள். ௧௨௭)

என்றும்,

"நிலையில் திரியா தடங்கியான் தோற்றம்." (குறள். ௧௨௪)

என்றும் வருவன. இதுவும் அடங்காமைபோலாமையின் மெய்ப்பாடாயிற்று.

வரைவு என்பது—செய்யத் தகுவனவும் தவிரத் தகுவனவும் வரைந்து ஒழுகும் ஒழுக்கம். அது,

"பெண்விழைந்து பின்செலினும் தன்செலவிற் குன்றுமை
கண்விழைந்து கையுறினுங்* காதல் பொருட்கின்மை.'
(திரிகடுகம். ௨௬)

என்றாற்போல வருவன.

அன்பு என்பது—பயின்றார்மாட்டுச் செல்லுங் காதல்.

"புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப் பன்பி லவர்க்கு." (குறள். ௭௯)

என்பதனான் அறிக.

கைம்மிகல் என்பது—குற்றமாயினுங் குணமாயினும் அளவின் மிகுதல்.

அது நிலையின் வேறுபடுதலின் மெய்ப்பாடாயிற்று. கையென்பது அளவுகுறித்த தோர் இடைச் சொல்.

"காதல் கைம்மிகல்". (தொல். மெய்ப்பாட்டியல். ௨௩)

என்றும்,

"குணனிலனாய்க் குற்றம் பலவாயின்." (குறள். ௮௬௮)

என்றும் இவ்வாறு வருவன.

நலிதல் என்பது—பிறரை நெருக்குதல்.

* கண்வீழ்ந்து கையறினும்.

அதன்கண் நிகழும் மனநிகழ்ச்சி நலிதலாயிற்று. இதுவும் மேற் சொல்லப்பட்ட எட்டும் இன்மையின் ஈண்டு ஓதப்பட்டது.

"பகைநலியப் பாசறையு ளான்." (நெடுநல். இறுதிவெண்பா.) எனவரும். பிறவும் அன்ன.

சூழ்ச்சி என்பது—எண்ணம்.

"சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்." (குறள். சசரு)

இதுவுமோர் மனநிகழ்ச்சி.

வாழ்த்தல் என்பது—பிறனை வாழ்த்துதல்.

அதுவும் மேற்கூறப்பட்டன போலாமையான் வேறோர் மெய்ப் பாடாக ஓதப்பட்டது.

"வாழியாதன் வாழி" (ஐங்குறு. க) என்றும், "எங்கோ வாழிய குடுமி" (புறம் க) என்றும் இவ்வாறு வருவழி ஆண்டு வரும் மன நிகழ்ச்சி மெய்ப்பாடாம். அஃதேல் வைதலும் மெய்ப்பாடாதல் வேண்டும் எனின் அது வெகுட்சியின் முதிர்வு. இது அன்பின் முதிர்வாகாதோ எனின், அன்பின்றியும் அரசன் முதலாயினாரைச் சான்றோர் வாழ்த்து தலின் அடங்காதென்க.

நாணல் என்பது...தமக்குப் பழி வருவன செய்யாமை.

"பிறர்பழியுந் தம்பழியும் நாணுவார் நாணுக்
குறைபதி என்னு முலகு," (குறள். க0கரு)

"நாணால் உயிரைத் துறப்பர் உயிர்ப்பொருட்டால்
நாண்துறவார் நாண்ஆள் பவர்." (குறள். க0கள)

எனவரும்.

துஞ்சல் என்பது—உறக்கம். அதுவும் உறங்காமை போலாமையின் மெய்ப்பாடாயிற்று.

"......................முனிவின்றி
நனந்தலை யுலகமுந் துஞ்சும்." (குறுந். சு)

எனவரும்.

அரற்று என்பது—உறக்கத்தின்கண் வரும் வாய்ச்சோர்வு.

அதுவும் ஏனைச்சொல்லின் வேறுபடுதலின் அரற்றென ஒரு மெய்ப் பாடாயிற்று. முன் உறக்கம் வைத்தலானும் பின் கனவு வைத்தலானும் இப்பொருள் உரைக்கப்பட்டது.

'பாயல்கொண் டென்தோட் கனவுவா ராய்கோல்
தொடிநிரை முன்கையாள் கையாறு கொள்ளாள்
கடிமனை காத்தோம்ப வல்லுவள் கொல்லோ

விடுமருப்பி யானை விலங்குதேர்க் கோடும்
நெடுமலை வெஞ்சுரம் போகி நடுநின்று
செய்பொருள் முற்று மளவு.'' (கலித். உ௪)

எனவரும்.

இது. களவியலின் பாத்யடுமெனின் அரற்றென்பது ஒருபொருளைப் பலகாற்கூறுதல்; ஆஃதி அப்பொருண்மேற் காதலாற் கூறுதலின் அதுவுமோர் மெய்ப்பாடாயிற்றெனவுமாம்.

"பொன்னுரை மார்பிற் புனைகழற்காற் கிள்ளிபேர்
உன்னேனென் றூழுலக்கை பற்றினேற் - கென்னோ
மனனொடு வாயெல்லா மல்குநீர்க் கோழிப்
புனல்நாடன் பேரே வரும்.'' (முத்தொள். ௧0௪)

எனவரும் என்பது கொள்க. கனவுநிலை நனவுபோலாமையின் மெய்ப்பாடாயிற்று.

"நனவினாற் கண்டதூஉ மாங்கே கனவுந்தான்
கண்ட பொழுதே இனிது'' (குறள். ௧உ௧௫)

எனவரும்.

முனிதல் என்பது—வெறுத்தல்.

"காலை யெழுந்து கடுந்தேர் பண்ணி
வாலிழை மகளிர்த் தழீஇச் சென்ற
மல்லல் ஊரன் மெல்லினன் பெரிதென
மூறுவஞ் சிறுவர் தாயே
தெறுக அம்மஇத் திணைப்பிறத் தல்லே'' (குறுந். ௪௫)

எனக் குடிப்பிறத்தலை வெறுத்தவாறு காண்க.

நினைத்தல் என்பது—கழிந்ததனை நினைத்தல். அது மறந்தாங்கு மறவாது பின்புந் தோற்றுதலின் மெய்ப்பாடாயிற்று.

"நினைப்பவர் போன்று நினையார்கொல் தும்மல்
சினைப்பது போன்று கெடும்.'' (குறள். ௧உ0௩)

வெரூஉதல் என்பது—அச்சம் போல நீடுநில்லாது கதுமெனத் தோன்றி மாய்வதோர் குறிப்பு. அதனைத் துணுக்கு என்றூ னென்பது.

"ஒரூஉநீ* எங்கூந்தல் கொள்ளல்யா நின்னை
வெரூஉதுங்† காணுங் கடை.'' (கலித். அஎ)

என்றவழி அஞ்சத்தகுவது கண்டு அஞ்சுதலின்மையும் அஞ்சினார்க் குள்ள வேறுபாடு அதன்பின் நிகழாமையுங் காண்க.

மடி என்பது—சோம்புதல்.

(பாடம்) * ஒருவுநீ. †வெருவுதூஉங்.

"மடிமை குடிமைக்கண் தங்கின் தன்ஒன்னார்க்
அடிமை புகுத்தி விடும்." (குறள். ௬௦௮)

என்றவழி மடி யென்பதோர் மெய்ப்பாடுண்மை யறிக.

கருதல் என்பது குறிப்பு.

"குறிக்கொண்டு நோக்காமை அல்லா லொருகண்
சிறக்கணித்தாள் போல நகும்." (குறள். ௧௦௯௫)

என்றவழிக் குறிக்கோள் என்பதோர் மெய்ப்பாடுண்மை யறிக.

ஆராய்ச்சி என்பது—ஒரு பொருளைக்குறித்து அதன் இயல்பு எத்தன்மைத்தென வாராய்தல்.

ஆராய்தல் எனினுந் தெரிதல் எனினுந் தேர்தலெனினும் நாடலெனினும் ஒக்கும்.

'நன்மையும் தீமையும் நாடி நலம்புரி' (குறள். ௫௧௧)

'ஆயும் அறிவினர்.' (குறள். ௯௧௮)

'தேரான் பிறனைத் தெளிந்தான்.' (குறள். ௫௦௮)

எனவும் ஆராய்த லென்பது தோற்றியவாறு காண்க.

விரைவு என்பது—ஒருபொருளைச் செய்ய நினைத்தான் அது தாழ்க்கில் அப்பயன் எய்தான் கடிதின் முடித்தல் வேண்டுமெனக் குறித்த மனநிகழ்ச்சி.

"கன்றமர் கறவை மான
முன்சமத் தொழிந்ததன் தோழற்கு வருமே." (புறம் ௨௭௫)

"போழ்தூண் டூசியின் விரைந்தன்று மாதோ." (புறம். ௮௨)

எனவரும். பிறவு மன்ன.

உயிர்ப்பு என்பது—முன்புவிடும் அளவினன்றிச் சுவாதம் நீள விடுதல்.

"... ... பாணட்
பள்ளி யானையி னுயிர்த்தென்
உள்ள மின்னுந் தன்னுழை யதுவே." (குறுந். ௧௪௨)

எனவரும்.

கையாறு என்பது—காதலர் பிரிந்தால் வருந் துன்பமும் அந்நிகரன வும் வருவது.

"தொடிநிரை முன்கையாள் கையாறு கொள்ளாள்.
கடிமனை காத்தோம்ப வல்லுவள் கொல்லோ." (கலித். ௨௬)

என்றவழிக் கையாறென்பதும் ஓர் மெய்ப்பாடாயிற்று.

இடுக்கண் என்பது—துன்பமுறுதல்.

மேலதனோடு இதனிடை வேறுபாடு என்னை யெனின், கையாறு என்பது இன்பம் பெறுமையான் வருந்துன்பம்; இடுக்கணுவது துன்பமாயின வந்துறுதல்.

" அடுக்கி வரினு மழிவிலா னுற்ற
இடுக்கண் இடுக்கட் படும்." (குறள் ௬௨௫)

என்றவழி இடுக்கணென்பது வருவதொன்றாகக் கூறியவாறு காண்க.

கையாறென்பது—மனத்தின்கண் நிகழ்வதோர் மெய்ப்பாடு. இடுக்கணென்பது - மெய்யானுந் தோற்றுவதோர் மெய்ப்பாடு.

பொச்சாப்பு என்பது—மறத்தல்.

" பொருள்தீர்ந்த பொச்சாந்துஞ் சொல்லார் மருள்தீர்ந்த
மாசறு காட்சி யவர்." (குறள். ௧௧௯)

என்பதனுற் பொச்சாப்பு மறத்தலாயிற்று.

பொறாமை என்பது—பிறர்க்கு ஆக்க முதலாயின கண்டவழி யதனைப் பொறாது நடக்கும் மனநிகழ்ச்சி அதனை அழுக்காறு என்ப.

" அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும்." (குறள். ௧௬௮)

என்றவழி அழுக்காறு என ஒருமெய்ப்பாடு உளதாகியவாறு கண்டு கொள்க.

வியர்த்தல் என்பது—தன்மனத்தின் வெகுட்சி தோன்றிய வழிப் பிறப்பதோர் புழுக்கம்.

" பொள்ளென வாங்கே புறம்வேரார் காலம்பார்த்
துள்வேர்ப்பர் ஒள்ளி யவர்." (குறள். ௪௮௭)

இதன்கண் உள்வேர்ப்பர் என்றதனுன் மனநிகழ்ச்சி ஆகியவாறு காண்க.

ஐயம் என்பது—ஒரு பொருளைக் கண்டவழி யிதுவெனத் துணியாத நிலைமை.

" அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலுமென் நெஞ்சு." (குறள். ௧௦௮௧)

என்றவழி ஐயம் மனத்தின்கண் நிகழ்ந்தவாறு காண்க.

மிகை என்பது—ஒருவனை நன்குமதியாமை.

" மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தம்
தகுதியான் வென்று விடல்." (குறள். ௧௫௮)

இதனுள் மிகுதி யென்பது நன்குமதியாமையாம்.

நடுக்கம் என்பது—யாதானும் ஒரு பொருளை இழக்கின்றோமென வரு மனநிகழ்ச்சி.

"கொடுங்குழாய் துறக்குநர் அல்லர்
நடுங்குதல் காண்மார் நகைகுறித் தனரே." (கலித். கக)

எனவரும். இத்துணையும் கூறப்பட்டன 'அகத்திற்கும் புறத்திற்கும் பொதுவென்று கொள்க. (கஉ)

உ௫எ. புகுமுகம் புரிதல்* பொறிநுதல் வியர்த்தல்
நகுநய மறைத்தல் சிதைவுபிறர்க் கின்மையொடு
தகுமுறை நான்கே ஒன்றென மொழிப.

என்—எனின். மேல் அகத்திணைக்கும் புறத்திணைக்கும் பொதுவா கிய மெய்ப்பாடு உணர்த்தி, இனி அகத்திற்கே யுரியன உணர்த்து கின்றார்; முற்பட்ட அவத்தை பத்தினும் முதலவத்தைக்கண் பெண் பாலார் குறிப்பினால் வரும் மெய்ப்பாடு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) புகுமுகம் புரிதல் என்பது—தலைமகன் புணர்ச் சிக் குறிப்பினனாய்ப் புகுது முகத்தினை மாறுபடாது பொருந் துதல்.

அஃதாவது.

"கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
நோக்கம்இம் மூன்றும் உடைத்து" (குறள். ௧0அ௫)

என்றாற்போலக் கூறியவழி ஒருவாதுநிற்றல்.

பொறிநுதல்வியர்த்தல் என்பது—அவ்வழி முகம்புக்கு அவனைப் பொருந்திய தலைமகள் உட்கும் நாணும் வந்துழி வரும் நுதல்வியர்ப்பு.

நகுநய மறைத்தல் என்பது—அதன்பின்னர்த் தலைமகன் கூறுவன கேட்டு நகை வந்துழி நயத்தலாகிய விருப்பத்தினைப் புலனாகாமை மறைத்தல்.

சிதைவு பிறர்க்கின்மை என்பது—தன்மனனழிவு பிறர்க்குப் புலனா காமை நிற்றல். ஒடு எண்ணின்கண் வந்தது.

---

* புகுமுகம்புரிதல் என்பது ஒருவனும் ஒருத்தியும் எதிர்ப்பட்ட வழித் தன்னை அவன் நோக்குதற்கண் விரும்பும் உள்ள நிகழ்ச்சி; புகுதல் என்பது தலைமகன் நோக்கிய நோக்கெதிர் தான் சென்று புகுதல். முகம் என்பது அங்ஙனம் தான் புகுதற்கிடமாகிய நோக்கு; நோக்கெதிர் நோக்குதலை முகநோக்குதல் என்பவாகலின் இந்நோக்கினை முகம் என் றான் என்பது. புரிதல் என்பது, மேவுதல் என்றவாறு; அஃதாவது, தலை மகன் காண்டலைத் தலைமகள் வேட்டல் என்றவாறும்...

ஒன்றென மொழிப களவிற்கு முதற் கூறென்ப......(தொல். பொருள். உகக. பேரா.)

தகுமுறை நான்கே யொன்றென மொழிப என்பது—இவ்வாறு தகுதி யுடைத்தாய் முறைப்பட வருவன நான்கும் முதல் அவத்தைக்கண் நிகழும் மெய்ப்பாடு என்றவாறு. (௧௩)

௨௫௮. கூழை விரித்தல்* காதொன்று களைதல்
ஊழணி தைவரல் உடைபெயர்த் துடுத்தலொடு
கெழீஇய நான்கே இரண்டென மொழிப.

என்—எனின். இரண்டாம் அவத்தையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) கூழைவிரித்தல் முதலாகச் சொல்லப்பட்ட முறைமையுடைய நான்கும் இரண்டாம் அவத்தைமெய்ப்பாடு என்றவாறு.

கூழை விரித்தலாவது—மேல் நகுநயமறைத்தாள் காதன் மேல் வேட்கை செல்லுமாயின் வாளாது நிற்றலாற்ருது மயிரினைக் குலைத்தல்.

காதொன்று களைதல் என்பது—காதிலணிந்த தொன்றை விழப்பண்ணி யதனைத் தேடுகின்ருர் போல நிற்றல்.

ஊழணி தைவரல் என்பது—முறைமுறையாக அணிந்த வணியைத் தைவருதல் என்றவாறு.

உடை பெயர்த் துடுத்தல் என்பது—ஆடையைக் குலைத்துடுத்தல்.

அவைநான்குங் காமத்திற்குறியிலாதார் தலைமக்கள்முன் செய்யாமையாற் றனது காமக் குறிப்பினுனும் அவள் வாளாது நிற்பின் இதற்குக் காரணம் என்னையெனப் பிறர் ஐயப்படாமற் சிறிது பொழுதாயினும் இவ்விடை நிற்கலாகும் எனவும் இவை நிகழ்த்தும் என்றவாறு. (௧௪)

---

* கூழைவிரித்தல் என்பது மெய்யும் மெய்யும் தீண்டியவழி மெல்லியல் மகளிர்க்கு வரும் வேறுபாடு நான்கனுள் முதற்கண்ணதெனப்படும்; என்னை? தன்னுள்ளத்தில் நிகழ்ந்த வேறுபாட்டினை அக்காலத்துத் தலைமகள் நிறையுடையளாகலான் கரந்தொழுகுதற்பாலள் அல்லளே, அங்ஙனம் கரக்குங்கால் தன் வயத்ததாகிய உடம்புபற்றி வரும் வேறுபாட்டினைத் தாங்கும்; அங்ஙனம் தாங்குங்கால் உடம்பொடு தொடர்புடையவாகி வேறுபட்ட தலைமயிரினது முடி உள்ள நெகிழ்ச்சியானே தன் வயத்ததன்றி ஞெகிழும் ஆகலின் இது முற்கூறப்பட்டது. (தொல். பொருள். ௨௬௨ பேரா.)

உருகூ. அல்குல் தைவரல் அணிந்தவை திருத்தல்
இல்வலி யுறுத்தல்* இருகையும் எடுத்தலோடு
சொல்லிய நான்கே மூன்றென மொழிப.

என்—எனின். மூன்றும் அவத்தைத்கண் நிகழும் மெய்ப்பாடு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அல்குல் தைவரல் முதலாகச் சொல்லப்பட்ட நான்கும் மூன்றும் அவத்தை மெய்ப்பாடென்க என்றவாறு.

அல்குல் தைவரல் என்பது—மேல் உடைபெயர்த்துடுத்தவள் அதனைப் பேணும் மதிப்பு உள்வழி தம்மைப் பேணுதல் பெண்டிர்க்கு அழகு.

அணிந்தவை திருத்தலும் அவ்வாறே கொள்க.

இல்வலி யுறுத்தல் என்பது—தமது இல்லதோர் வலியுறுத்தல். அது சாரநினைத்தாரைத் தமது இற்பிறப்புச் சொல்லி இசைவில்லாரைப் போல மறுத்துக் கூறுதல்.

இருகையு மெடுத்தல் என்பது—அவ்வழி மறுத்த வாய்பாட்டாற் கூறினும் இரண்டு கையினையும் பிறிதோர் காரணம் பற்றிக் கிளர்த்தல். தலைமக்கள் முன்னர்ப் பெண்டிர் கை கிளர்த்தாராதலாற் புணர்ச்சிக் கொருப்பட்ட வுள்ளத்தாள் கிளர்த்து மென்க. இதனாற் பயன் நாண் நீங்கல். (கரு)

உகூ0. பாராட் டெடுத்தல் மடந்தப† வுரைத்தல்
ஈரமில் கூற்றம் ஏற்றலர் நாணல்
கொடுப்பவை கோடல் உள்படத் தொகைஇ
எடுத்த நான்கே நான்கென மொழிப.

என்—எனின் நான்காம் அவத்தைக்கண் வரும் மெய்ப்பாடு உணர்த்துதல் நுதலிற்று.

---

* இல்வலியுறுத்தல் என்பது, புணர்ச்சியை வேண்டாதாள் போல்வதோர் வன்மைபடைத்துக்கொண்டு செய்தல்; என்னை? இல்லாத வலியை மிகுத்தல் என்றமையின் அப்பொருட்டாயிற்று.........இனி இற்பிறத்தலான் அதன்வலி தோற்றுவதெனவும் சொல்லுப.

(தொல். பொருள். உகூங. பேரா.)

† மடந்தப உரைத்தல்—விளையாடும் பருவத்து நிகழ்ந்த அறிமட நீங்கக் காமப் பொருட்கண்ணே சிறிதறிவு தோன்றுதலும் உரைத்தல் என்றதனால் அக்காலத்துப் பாங்கிக்குச் சில கூற்றுமொழி கூறவும்பெறும் என்பது கொள்க. அவை மேலை ஒத்துகளுள் கூறப்பட்டன. மடந்தப உரைத்தற்கு ஏதுவாகிய கருத்து ஈண்டு மெய்ப்பாடெனப்படும்.

(தொல். பொருள். உகூச. பேரா.)

(இ - ள்.) பாராட்டெடுத்தல் முதலாகச் சொல்லப்பட்ட நான்கும் நான்காமவத்தைதக்கண் நிகழும் மெய்ப்பாடென்க.

பாராட்டெடுத்த லாவது—தலைமகன் நின்றநிலையுங் கூறிய கூற்றையும் தனித்த வழியும் எடுத்துமொழிதல்.

மடந்தப வுரைத்தல்* என்பது—பெண்டிருது இயல்பாகிய மடப்பங் கெடச் சில கூறுதல். அது தலைமகன் கூற்று நிகழும் வழி யதற்கு மாற்றங் கொடுத்தலன்றித் தன் வேட்கை தோன்றக் கூறுஞ் சொல்.

ஈரமில் கூற்ற மேற்றலர் நாணல் என்பது—ஊராருஞ் சேரியாருங் கூறும் அருளில்லாத கூற்றைக் கேட்டு அலர் ஆயிற்றென நாணுதல்.

கொடுப்பவை கோடல் என்பது—கண்ணியாயினுந் தழையாயினும் பிறவாயினும் தலைமகன் கொடுத்தவற்றைக் கோடல் மன்றத்திணன் உரிமை பூண்டாளல்லது பிறன் பொருள் வாங்காமையின் இதுவுமோர் மெய்ப்பாடாக ஓதப்பட்டது. (௧௬)

உ௬௧. தெரிந்துடம் படுதல் திளைப்புவினை மறுத்தல்
கரந்திடத் தொழிதல் கண்டவழி உவத்தலொடு
பொருந்திய* நான்கே ஐந்தென மொழிப.

என்—எனின். ஐந்தா மவத்தைக்கண் வரும் மெய்ப்பாடு நிகழுமிடம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) தெரிந்துடம்படுதல் முதலாகச் சொல்லப்பட்ட நான்கும் ஐந்தாம் அவத்தைக்கு மெய்ப்பாடாம் என்றவாறு.

தெரிந்துடம்படுதலாவது—தலைமகன் கொடுப்பவை கொண்ட தலைமகள் ஆராய்ந்து உடம்படுதல் என்றவாறு. ஆற்றுமை பெருகுகின்ற காதலின் இத்துணையும் மறுத்தவள் உடம்படுதல் என்றுர் அவ்வழியுந் தெரிந்துடம்படுதல் என்றமையால் ஆராய்ந்தல்லது புணர்ச்சிக்கு உடம்படாமை கொள்க.

திளைப்புவினை மறுத்தல் என்பது—விளையாட் டாயமொடு திரிவாள் வேட்கை நலிதலான் அவ்விளையாட்டு வினையை மறுத்தல் என்றவாறு.

---

* பொருந்திய நான்கென்றது இவை இடையறவின்றி ஒருங்கு தொடர்தலுமுடைய என்பது. இதனானே இவை நன்னான்கினோடு வருகின்றதற்குச் சிறிது இடையறவும் படுமென்பது கொள்க......இங்ஙனம் பொருத்தமின்றி வருவனவல்ல நன்னான்கு பகுதியாற் கூறியவை தம்முள் தாம் என்பான் பொருந்திய நான்கென்பது.

(தொல். பொருள். உ௬௫. பேரா.)

கரந்திடத்தொழிதல் என்பது—தலைமகனைக் காண்டல் வேட்கையால் ஒளித்துப் படத்தினின்று மொழிதல் என்றவாறு.

கண்டவழி யுவத்தல் என்பது—தலைமகனைக் கண்டவழி மகிழ்தல் என்றவாறு. (௧எ)

௨௬௨. புறஞ்செயச் சிதைதல் புலம்பித் தோன்றல்
கலங்கி மொழிதல்* கையற வுரைத்தல்
விளம்பிய நான்கே ஆறெண மொழிப.

என்—எனின் ஆறும் அவத்தைக்கண்வரும் மெய்ப்பாடு நிகழு மாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) புறஞ்செயச் சிதைதல் முதலாகச் சொல்லப் பட்ட நான்கும் ஆறும் அவத்தைக்கண் மெய்ப்பாடாம் என்ற வாறு.

புறஞ்செயச் சிதைத லாவது—தலைமகன் கோலஞ் செய்யும் வழியதற்கு மகிழ்ச்சியின்றிச் சிதைவுடையளாதல்.

புலம்பித் தோன்ற லாவது—பொலிவழிந்து தோன்றல்.

கலங்கி மொழிதல் என்பது—கூறுங்கூற்றுக் கலக்கமுற்றுக் கூறுதல்.

கையறவுரைத்த லாவது—செயலறவு தோன்றக் கூறல்.

இச் சொல்லப்பட்ட ஆறு அவத்தையும் பெண்பாலார் எல்லார்க்கும் பொது. இவை புணராதவழித் தோன்றுதல் பெரும்பான்மை. (௧அ)

௨௬௩. அன்ன பிறவும் அவற்றொடு சிவணி
மன்னிய† வினைய நிமித்த மென்ப.

என்—எனின். மேலதற்கோர் புறனடை யுணர்த்துதல் நுதலிற்று.

---

* கையறவுரைத்தல் என்பதனை ஈற்றுக்கண் வைத்தான் களவொழுக் கத்தினுள் இதனினூங்கு மெய்ப்பாடு கூறப்படாதென்றற்கு; என்னை காரணமெனின், கையறவுரை தோன்றியதற் பின்னர் நிகழ்வன கைக் கிளைக்கும் பெருந்திணைக்கும் மெய்ப்பாடாவதன்றி நற்காமத்துக் காகா வென்பது கருத்து; ..................கையறவு உரைத்தல் என்றதனான் இம்மெய்ப்பாடு மனத்தவேயன்றி மாற்றத்தானும் பிறர்க்குப் புலனாக வெளிப்படுமென்பது கொள்க. (தொல். பொருள். ௨௬௬. பேரா.)

† 'மன்னிய வினைய' என்பது நடுவண் ஐந்திணைக்கேயுரிய மெய்ப் பாட்டினவை என்றவாறு; என்னை ? கந்தருவ வழக்கம் அல்லனவற்றை மன்னிய காமம் என்னாரன்றே, அஃது இடையறவுபடாதாகலின் எனவே; கைக்கிளைக்கும் பெருந்திணைக்கும் வரையறையின்றி வேண்டியவாறு வரப் பெறும் என்பதாம். (தொல். பொருள். ௨௬எ. பேரா)

(இ - ள்.) மேற் சொல்லப்பட்டனவும் அத்தன்மைய பிறவும் நிலைபெற்ற வினையுடைய நிமித்தமாம் என்றவாறு.

வினை என்பது—கற்பிற்குரிய கரணமாம். இவையெல்லாங் கற்பிற்குரிய கரணத்து................தற்கு நிமித்தமாம் என்றவாறு.

அன்னவை பிறவுமாவன: நேரக்காலை நோக்கி யின்புறுதல், தனியிடைநகுதல், நோக்குங் காலைச் செற்றார்போல் நோக்குதல், மறைந்து காண்டல், தற்காட்டுறுத்தல்.

இந்நிகரன அவத்தை பற்றி நிகழ்ந்தனவாயின் ஏழாவது முதலாகப் பத்தாவது ஈறாகக் கூறவெனின், ஏழாமவத்தை நாண் நீங்கிய காதலிற் றேறுத லொழிந்த காமத்து மிகுதியாகிய பெருந்திணைப்பாற்படும்; ஒத்த காமத்து நிகழாது; எட்டாவது உன்மத்தம்; ஒன்பதாவது. மயக்கம்; பத்தாவது சாக்காடு; ஆதலான் நடுவணைந்திணைக்கண் வருவன ஆறு எனக் கூறினர் என்று கொள்க. (கக)

உ௬௪. வினையுயிர் மெலிவிடத் தின்மையும் உரித்தே.

என்—எனின். மேலதற்கோர் புறனடை யுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) கரணநிகழ்ச்சி உயிர்மெலிந்தவிடத்து இன்மையும் உரித்து என்றவாறு.

எனவே இயற்கையும் நிகழும் என்றவாறும். உம்மை எதிர்மறையாகலால், கரணநிகழ்தல் பெரும்பான்மை உயிர் மெலிவிடம் என்றமையால் ஐந்தாவது முதலாக இயற்கை நிகழும் என்று கொள்க. அதனானே யன்றே யவ்வழி தெரிந்துடம்படுதல் என ஓதுவாராயிற்றென்க. (உ0)

உ௬௫. அவையும் உளவே அவையலங் கடையே.

என்—எனின். கைக்கிளைக் குரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) மேற்சொல்லப்பட்ட புகுமுகம் புரிதல் முதலாயின உள; நடுவணைந்திணை யல்லாத கைக்கிளைப் பொருண்மைக்கண் என்றவாறு.

அவையலங்கடை என்றமையாற் பாடாண்பாட்டிற் கைக்கிளையும் கொள்ளப்படும். அஃதேல், ஆண்டும் புகுமுகம் உளதோ வெனின், தலைமகள் காட்சி மாத்திரத்தைத் தனது வேட்கைமிகுதியாற் புகுமுகமாய்க் கொள்ளும் என்க. பிற்கூறிய அவை என்பன களவும் கற்பும்; முற்கூறிய அவை என்பன புகுமுகம் புரிதல் முதலாயின. அவையலங்கடை யவையுமுளவே என மாறிக் கூட்டுக. (உக)

உ௬௬. இன்பத்தை வெறுத்தல் துன்பத்துப் புலம்பல்
எதிர்பெய்து பரிதல் ஏதம் ஆய்தல்
பசியட நிற்றல் பசலை பாய்தல்
உண்டியிற் குறைதல் உடம்புநனி சுருங்கல்
கண்துயில் மறுத்தல் கனவொடு மயங்கல்

போய்யாக் கோடல் மெய்யே என்றல்
ஐயஞ் செய்தல் அவன்தம ருவத்தல்
அறனழிந் துரைத்தல் ஆங்குநெஞ் சழிதல்
எம்மெய் யாயினும் ஒப்புமை கோடல்
ஒப்புவழி யுறுத்தல் உறுபெயர் கேட்டல்
நலத்தக நாடிற் கலக்கமும் அதுவே.

என்—எனின். மேல் நடுவணைந்திணைப் பகுதியாகிய களவிற்கும் கற்பிற்கு முரிய மெய்ப்பாடு உணர்த்தி, அதன்பின் கைக்கிளைக் குரியவாமாறு உணர்த்தினர். இனி இச்சூத்திரத்தாற் பெருந்திணைக் குரிய மெய்ப்பாடு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) இன்பத்தை வெறுத்தல் முதலாகச் சொல்லப் பட்ட இருபதும் ஆராயின் நடுவணைந்திணை யல்வழி வரும் என்றவாறு.

அது என்பது—அவையு முளவே யவையலங் கடையே' என்பதைச் சுட்டி நின்றது. கலக்கமும் நாடின் என மாறுக. ஏற்புழிக்கோடல் என்பதனாற் பெருந்திணைப்பாற் கொள்ளப்படும். இது களவிற்கும் கற்பிற்கும் ஒக்கும். இவை தேறுதலொழிந்த காமத்தின்பாற் படுவனவும், மிக்க காமத்தின் மிடலின்பாற் படுவனவுமாம். (அகத்திணை. ருச)

இன்பத்தை வெறுத்தல் என்பது—கோலஞ்செய்தல் முதலியனவற்றை வெறுத்தலும் தென்றலும் நிலவுமுதலாயினவற்றை வெறுத்தலும். இவ்வாறு களவின்கண் வரிற் பிறர்க்கும் புலனும் கற்பின்கண்வரிற் பிறர் இயல்வழி மங்கல மின்றும்.

"கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்
எழுதேங் கரப்பாக் கறிந்து." (குறள். ககஉஎ)

"சிறுகுழல் ஓசை செறிதொடீஇ வேல்கொண்
டெறிவது போலும் எமக்கு."

எனவரும்.

துன்பத்துப் புலம்ப லாவது—துன்பத்தின் கண்ணே புலம்புறுதல்.

"இன்பங் கடல்மற்றுக் காமம் *அஃதடுங்கால்
துன்பம் அதனிற் பெரிது." (குறள். ககசுசு)

எனவரும்.

எதிர்பெய்து பரிதல் என்பது—தலைமகன் முன்னின்றி அவனின்றுகப் பெய்துகொண்டு வருந்துதல்.

(பாடம்) * அது.

"கண்ணுள்ளிற் போகார் இமைப்பிற் பருவரார்
நுண்ணியர்எங் காத லவர்." (குறள். ௧௧௨௬)

என வரும்.

ஏதமாய்தல் என்பது—குற்றமாராய்தல்.

"துப்பின் எவனாவர் மற்கொல் துயர்வரவு
நட்பினுள் ஆற்று பவர்." (குறள். ௧௧௬௫)

என வரும்.

பசியட நிற்றல் என்பது - உண்ணாமை.

"நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக் கறிந்து." (குறள். ௧௧௨அ)

பசலை பாய்தல் என்பது—பசலை பரத்தல்.

"பசந்தாள் இவளென்ப தல்லால் இவளைத்
துறந்தார் அவரென்பார் இல்." (குறள். ௧௧அஅ)

என வரும்.

உண்டியிற் குறைதல் என்பது—உணவு சுருங்குதல்.

"பாலும் உண்ணாள் பழங்கண் கொண்டு" (அகம். ௪அ)

என வரும்.

உடம்பு நனி சுருங்கல் என்பது—உண்ணாமை காரணமாகத் தன்னுடம்பு மிகச் சுருக்கமுறுதல்.

"பணைநீங்கிப் பைந்தொடி சோருந் துணைநீங்கித்
தொல்கவின் வாடிய தோள்" (குறள். ௧௨௩௪)

என வரும்.

கண்டுயின் மறுத்தல் என்பது—உறங்காமை.

"மன்னுயிர் எல்லாந் துயிற்றி அளித்திரா
என்னல்ல தில்லை துணை." (குறள். ௧௧௬அ)

என வரும்.

கனவொடு மயங்கல் என்பது—கனவை நனவென மயங்குதல்.

"நனவினால் நல்காக் கொடியார் கனவினால்
என்னெம்மைப் பீழிப் பது" (குறள். ௧௨௧௭)

என வரும்.

பொய்யாக் கோடல் என்பது—தலைவன் கூற்றுத் தன்னைப் பொய்யாகக் கோடல்.

"வாயல்லா வெண்மை யுரையாது சென்றீநின்
மாய மருள்வா ரகத்து."  (கலித். அஅ)

மெய்யே யென்றல் என்பது—உரைத்த மாற்றத்தை மெய்யெனக் கூறுதல்.

ஏகாரம் வினா.

"மெய்யே வாழி தோழி சாரல்
மைப்புட் டன்ன மாமுக முசுக்கலை
யாற்றப் பாயத் தப்பல் ஏற்ற
கோட்டொடும் போகி யாங்கு நாடன்
தான்குறி வாராத் தப்பற் கத்
தாம்பசந் தனவென் தடமென் தோளே."  (குறுந். கஉக)

இதனுட் 'கூறியது' என ஒரு சொல் வர வேண்டும்.

ஐயஞ் செய்தல் என்பது—தலைவன் குறிப்புக் கண்டு ஐயப்படுதல்.

"ஒண்ணுதல் நீவுவர் காதலர் மற்றவர்
கண்ணுவ தெவன்கொல் அறியேன் என்னும்."  (கலித். ச)

என வரும்.

அவன்றம ருவத்தல் என்பது—தலைவன் தமரைக் கண்ட வழி உவத்தல்.

"செய்வன சிறப்பிற் சிறப்புச்செய் திவ்விரா*
எம்மொடு சேர்ந்துசென் றீவாயாய் செம்மால்
நலம்புதி துண்டுள்ளா நாணிலி செய்த
புலம்பெலாந் தீர்க்குவேம் மன்."  (கலித். அக)

என வரும்.

அறனழீஇத் துரைத்தல் என்பது—அறத்தினை யழித்துக் கூறுதல்.

"விளியுமென் இன்னுயிர் வேறல்லம் என்பார்†
அளியின்மை யாற்ற நினைந்து"  (குறள். கஉ0க)

என வரும். அளியின்மை யறனின்மை கூறினாளுமாம்.

ஆங்கு நெஞ்சழிதல் என்பது—அறனழிந்துரைக்குமிடத்து நெஞ்சழிந்து கூறுதல்.

"பெரூஅமை அஞ்சும் பெறிற்பிரி வஞ்சும்
அரூஅ இடும்பைத்தென் நெஞ்சு"  (குறள். கஉகரு)

என வரும்.

எம்மெய் யாயினும் ஒப்புமை கோடல் என்பது—யாதானுமோர் உடம்பாயினுந் தன்னோடு ஒப்புமை கோடல் என்றவாறு.

---

(பாடம்) * செல்வஞ் சிறப்பிற் சிறப்புச்செய் திவாரால்.
† பெற்றல்லம் என்பார்.

"புன்கண்ணை வாழி மருள்மாலை எங்கேள்போல்
வன்கண்ண தோநின் துணை." (குறள். ௧௨௨௨)

என வரும்.

ஒப்புவழி யுவத்தல் என்பது—தலைமகனோடு ஒக்குமெனப் பிறிதொன்று கண்டவழி யுவத்தல்.

"யாவருங் காணுநர் இன்மையிற் செத்தனள் பேணி"

என வரும்.

உறுபெயர் கேட்டல் என்பது—தலைவன் பெயர்கேட்டு மகிழ்தல்.

"நசைஇயார் நல்கார் எனினும் அவர்மாட்
டிசையும் இனிய செவிக்கு" (குறள். ௧௧௯௯)

என வரும்.

கலக்கம் என்பது—மனங்கலங்குதல். மேற் 'கலங்கி மொழிதல்' என்பது ஒருகாற் சொல்லின்கண் வந்து பெயர்வது. இது மனங்கலங்கி நிற்கும் நிலை.

"பொங்கிரு முந்நீர் அகமெல்லாம்* நோக்கினை
திங்களுள் தோன்றி யிருந்த குறுமுயால்
எங்கேள் இதனகத் துள்வழிக் காட்டீமோ
காட்டீயா யாயிற் கதநாய் கொளுவுவேன்
வேட்டுவ ருள்வழிச் செப்புவே னாட்டி
மதியொடு பாம்பு மடுப்பேன் மதிதிரிந்த
என்னல்லல் தீராயென்னின்." (கலித். ௧௪௪)

"கோடுவாய் கூடாப் பிறையைப் பிறிதொன்று
நாடுவேன் கண்டெனன் சிற்றிலுட் கண்டாங்கே
ஆடையான்†மூஉ யகப்படுப்பேன் ‡சூடிய
காணான் திரிதருங் கொல்லோ மணிமிடற்று
மாண்மலர்க்§ கொன்றை யவன்" (கலித். ௧௪௨)

என வரும்.

இச் சூத்திரத்துள் 'நலத்தக நாடி' எனக் கலக்கத்தைப் பிரித்து வைத்தமையாற் சொல்லப்பட்ட பத்தொன்பதினும் முதிர்ந்துவந்த நிலை என்று கொள்ளப்படும். இச் சூத்திரம் பொதுப்படக் கூறினமையாற் றலைமகற்கு ஏற்ப வருவன கொள்க.$ (௨௨)

---

(பாடம்) * கலமெல்லாம். † மூடி. ‡ சூடி. § மாலை.

$ இவையெல்லாம் அறனும் பொருளும் அன்றி இன்பப்பொருள். நிகழ்ந்தவிடத்து அவரவர் உள்ளத்து நிகழ்வனவாதல் வழக்கு நோக்கி உணரப்படுமென்பது. மேற்கூறிய நகை முதலாயவற்றுக்கும் இஃது ஒக்கும். இவ்வெண்ணப்பட்டன எல்லாம் உள்ளத்து நிகழ்ந்தனவற்றை வெளிப்படுப்பனவாகலான் மெய்ப்பாடெனப்பட்டன.

(தொல். பொருள். ௨௭0. பேரா.)

உ௬எ. முட்டுவயிற் கழறல் முனிவுமெய்ந் நிறுத்தல்
அச்சத்தின் அகறல் அவன்புணர்வு மறுத்தல்
தூதுமுனி வின்மை துஞ்சிச் சேர்தல்
காதல் கைம்மிகல் கட்டுரை யின்மையென்
*றுயிரு நான்கே அழிவில் கூட்டம்.

என்—எனின். மேற்கூறப்பட்டன வெல்லாம் மனனழிவு நிகழ்ந்த வழி நிகழ்வனவாதலின், இவை மனன் அழியாதவழி நிகழ்வன என உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) முட்டுவயிற் கழறல் என்பது—களவு இடையீடு பட்டுழி யதற்கு வருந்தாது இவ்வாறாகி நின்றதென அவனைக் கழறியுரைத்தல் என்றவாறு.

முனிவு மெய்ந்நிறுத்தல் என்பது—வெறுப்பினைப் பிறர்க்குப் புலனாகாமல் மெய்யின்கண்ணே நிறுத்தல்.

அச்சத்தி னகறல் என்பது—இவ்வொழுக்கம் பிறர்க்குப் புலனும் எனக் கூட்டத்தின் அகன்றொழுகல்.

அவன் புணர்வு மறுத்தல் என்பது—இது தலைமகன் புணர்ச்சிக்கண் வாராக்காலத்துத் தானும் மனனழியாது நிற்கும் நிலை.

தூதுமுனிவின்மை என்பது—தூதுவிட்டவழி வெறாமை.

துஞ்சிச் சேர்தல் என்பது—கவற்சியான் உறங்காமையன்றி யுரிமை பூண்டமையான் உறக்கம் நிகழ்தல்.

காதல் கைம்மிகல் என்பது—அவ்வழியும் அன்பின்மையின்றிக் காதல் கைம்மிக்கு வருதல்.

கட்டுரை யின்மை என்பது—கூற்று நிகழ்த்துதலன்றி யுள்ளக் கருத்தினை மறைத்தமர்ந்திருத்தல்.

இவை நடுவணைந்திணைக்குரிய. இவற்றிற்குச் செய்யுள் களவியலுட் காட்டப்பட்டது வரைந்தோதாமையான். (உ௬)

---

* என்று ஆயிரு நான்கே அழிவில் கூட்டம்—என்றெண்ணப்பட்ட மெய்ப்பாடெட்டும் பின் அழியாக் கூட்டத்திற்கு ஏதுவாம் என்றவாறு. அஃதாவது வரைந்தெய்துங் கூட்டம் என உணர்க.

(தொல். பொருள். உ௭௪ : பேரா.)

௨௬௮. *தெய்வம் அஞ்சல் புரையறந் தெளிதல்
இல்லது காய்தல் உள்ள துவர்த்தல்
புணர்ந்துழி யுண்மை பொழுது மறுப் பாதல் †
அருண்மிக உடைமை அன்புமிக ‡ நிற்றல்
பிரிவாற் றாமை மறைந்தவை யுரைத்தல்
புறஞ்சொல் மாணாக் §கிளவியோடு தொகைஇச்
சிறந்த பத்துஞ் செப்பிய பொருளே.

என்—எனின். இஃது அழிவில் கூட்டத்திற் குரிய பொருள் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) தெய்வ மஞ்சல் என்பது — தெய்வத்தினை அஞ்சுதல்.

"மன்ற மராஅத்த பேமுதிர் § கடவுள்
கொடியோர்த் தெறூஉம் என்ப" (குறுந். ௮௭)

எனவும்,

"நீயுறும் ¶ பொய்ச்சூள் அணங்காகின் ** மற்றினி
யார்மேல் விளியுமோ கூறு" (கலித். ௮௮)

எனவும் வரும்.

புரையறந் தெளிதல் என்பது—'கடன்மிக் கனவே' என்றவழிப் பரத்தைமை கண்டு புலவாது இதனைப்போற்றல் இல்லுறை மகளிர்க் கியல்பென்னும் அறத்தினனே' எனக் கூறியவாறு கண்டுகொள்க.

இல்லது காய்தல் என்பது—தலைமகன்கணில்லாத குறிப்பினை யவன் மாட்டு உளதாகக் கொண்டு காய்தல்.

---

* தெய்வம் அஞ்சல் என்பது தலைமகற்குத் தொழுகுலமாகிய தெய்வமும் அவற்கு ஆசிரியராகிய தாபதரும் இன்னோரென்பது அவனான் உணர்த்தப் பட்டு உணர்ந்த தலைமகள் அத்தெய்வத்தினை அஞ்சி ஒழுகும் ஒழுக்கம் அவள்கட்டோன்றும்; அங்ஙனம் பிறந்த உள்ள நிகழ்ச்சியைத் தெய்வம் அஞ்சல் என்றான் என்பது. மற்றுத் தனக்குத் தெய்வம் தன் கணவனாதலான் அத்தெய்வத்தினைத் தலைமகள் அஞ்சுதல் எற்றுக் கெனின், அவனின் தான் வேறல்லளாக மந்திர விதியிற் கூட்டினமையின் அவனான் அஞ்சப்படும் தெய்வம் தனக்கும் அஞ்சப்படும் என்பது. அல்லதூஉம் தலைவற்கு ஏதம் வருமெனவும் அஞ்சுவள் என்பது.
(தொல். பொருள். ௨௭௨. பேரா.)

(பாடம்) † பொழுது மறுப்பாக்கம். ‡ அன்புதொக.

§ புறஞ்சொல் மாணாக்கிளவி என்பது தலைமகற்கு வந்த புறஞ்சொல்லின் பொல்லாங்கு குறித்து எழுந்த கிளவி. அவற்கு வரும் பழி காத்தலும் தனக்கு அறமாதலின் அதுவும் கற்பின்கண்ணே நிகழும் என்பது.
(தொல். பொருள் ௨௭௨. பேரா.)

(பாடம்) § மராஅத்த பே எழுதிர். ¶ நீகூறும். ** அணங்காகி.

"யாரினும் காதலம் என்றேனா ஊடினாள்
யாரினும் யாரினும் என்று." (குறள். ககஎச.)

இதனுள் சொன்ன மாற்றத்தை வேறாகப் பொருள்கொண்டு இல்லாத தனைச் சொல்லிக் காய்ந்தவாறு காண்க..

உள்ளதுவர்த்தல் என்பது—உள்ளதனை யுவர்த்துக் கூறுதல். அது தலைவன் செய்கின்ற தலையளியை வெறுத்தல்.

"வெய்யாரும் வீழ்வாரும் வேறாகக் கையின்
முகையலர்ந் தன்ன முயக்கின தொகையின்றே
தண்பனி வைகல் எமக்கு" (கலித். எஅ)

எனவரும்.

புணர்ந்துழி யுண்மை என்பது—புணர்ந்தவழி யூடலுள் வழிமறைத்துக் கூறாது அவ்வழி மனநிகழ்ச்சியுண்மை கூறுதல்.

"குளிரும் பருவத்தே ஆயினுந்* தென்றல்
வளியெறியின் மெய்யிற் கினிதாம்-ஒளியிழாய்
ஊடி யிருப்பினும் ஊரனறுமேனி
கூடல் இனிதா மெமக்கு" (ஐந்திணையைம். கO)

என வரும்.

பொழுதுமறுப்பாதல் என்பது—தலைவன் வரும்பொழுது நியமமின்றி மறுப்பு வந்துழிப் பொழுதினைப் பற்றி நிகழும் மனநிகழ்ச்சி.

"புல்லிய கேளிர் புணரும் பொழுதறியேன்
அல்லியா கெல்லையென் றுங்கே பகல்முனிவேன்
எல்லிய காலை யிராமுனிவேன் யானுற்ற
அல்லல் களைவார் இலேன்" (கலித். கசச)

எனவரும்.

இது பெருந்திணைக்கு உரியதன்றோ எனின், ஆண்டு, 'மரபுநிலை திரியா மாட்சிய வாகி விரவும் பொருளும்' (அகத்திணை. சஅ) விரிந்ததெனக் கொள்க.

அருண்மிக வுடைமையாவது—தலைமகன்மாட்டு அருள் புலப்பட நிற்கும் நிலை.

'முதைச்சுவற்கலித்த' என்னும் அகப்பாட்டினுள்,

"நடுங்குதுயர் களைந்த நன்ன ராளன்
சென்றனன் கொல்லோ தானே......
..................................
வடுவாழ் புற்றின வழக்கறு நெறியே" (அகம். அஅ)

---

(பாடம்) * தளிரும் பருவத்தே தம்மானும்.

என வரும். அவன் போனபின்பு இடையூறின்றிப் பெயர்ந்தான் கொல்லென அருள் மிகுத்தவாறு காண்க.

அன்புமிக நிற்றல் என்பது—அன்பு புலப்பட நிற்றல்.

"கொடிய னாயினும் ஆக
அவனே தோழிஎன் னுயிர்கா வலனே." (சிற்றெட்டகம்)

என்றவழி, அன்புதோன்ற நின்றவாறு காண்க.

பிரிவாற்றாமை என்பது—பிரிவின்கண் ஆற்றாமை.

"செல்லாமை யுண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை" (குறள். ௧௧௫௧)

என வரும்.

மறைந்தவை யுரைத்தல் புறஞ்சொல் மாணாக் கிளவியொடு தொகைஇ என்பது—மறைத்த ஒழுக்கத்தைக் கூறிய புறஞ்சொல்லாகிய அலர் மாட்சிமைப் படாத கிளவியொடுகூட என்றவாறு.

மறைந்தவை யுரைத்தல் புறஞ் சொல்லாவது—அலர். மாணாமை யாவது—அவ்வலர் மாட்சிமைப்படாமற் கற்புக்கடம் பூண்டல். அன்றியும்,

"மாண மறந்துள்ளா நாணிலி" (கலித். ௮௧)

என்றாற் போல மாணாமை என்பது மிகாமை என வுரைப்பினும் அமையும். அலர் மிகாமைக் கூறுங் கூற்றினுங் கற்புக்கடம் பூண்டு கூறுதல்.

"நடுநாள் வரூஉம் இயல்தேர்க் கொண்கனொடு
செலவயர்ந் திசினால் யானே
அலர்சுமந் தொழிகவிவ் வழுங்க லூரே" (நற்றிணை. ௧௪௯)

என வரும்.

அலர்மிகாக் கிளவி யாவது—அதற்கு உள்ளம் நாணுதல்.

"களிறுகவர் கம்பலை போல
அலரா கின்றது பலர்வாய்ப் பட்டே" (அகம். ௯௬)

என வரும்.

சிறந்த பத்துஞ் செப்பிய பொருளே என்பது—இச்சொல்லப்பட்ட பத்தும் மேற்சொல்லப்பட்ட அழிவில் கூட்டப் பொருள் என்றவாறு. என்றவழி நடுவணைந்திணைக்குரிய பொருள் என்றவாறு. (உ௪)

உகூகூ. பிறப்பே* குடிமை ஆண்மை யாண்டோ
டுருவு நிறுத்த காம வாயில்
நிறையே யருளே உணர்வோடு திருவென
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே.

என்—எனின். இது களவியலுட் கூறப்பட்ட தலைவற்குந் தலைவிக்கும் உளதாகும் ஒப்புப் பாகுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

இதற்குப் பொருள் களவியலுள் உரைத்தாம். (உகு)

உஎ௦. நிம்பிரி கொடுமை வியப்போடு‡ புறமொழி
வன்சொற் பொச்சாப்பு மடிமையோடு குடிமை
இன்புறல் ஏழைமை மறப்போ டொப்புமை
என்றிவை யின்மை என்மனார் புலவர்.

என்—எனின். இது தலைமக்கட்காகாத குணம் வரையறுத்து உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) நிம்பிரி என்பது அழுக்காறு. அவ்வியம் என்பதும் அது.

கொடுமை என்பது—அறனழியப் பிறரைச் சூழும் சூழ்ச்சி.

வியப்பென்பது—தம்மைப் பெரியராக நினைத்தல்.

புறமொழி என்பது—புறங்கூறுதல்.

வன்சொல் என்பது—கடுஞ்சொற்கூறல்.

பொச்சாப் பென்பது—தம்மைக் கடைப்பிடியாமை. அது சோர்வு.

மடிமை என்பது—முயற்சி யின்மை.

குடிமையின்புறல் என்பது—தன்குலத்தினானுந் தன்குடிப் பிறப்பினானுந் தம்மை மதித்து இன்புறுதல்.

---

* பிறப் பென்பது குடிப்பிறத்தல்; அதற்குத்தக்க ஒழுக்கம் குடிமை எனப்படும்;......உருவு நிறுத்த காமவாயில் என்பது, பெண்மை வடிவும் ஆண்மை வடிவும் பிறழ்ச்சியின்றி அமைந்தவழி அவற்றுமேல் நிகழும் இன்பத்திற்கு வாயிலாகிய அன்பு என்றவாறு
(தொல். பொருள். உஎங. பேரா.)

‡ வியப்பு—தலைமகள்பால் தெய்வத் தன்மை கண்டான்போல் வியந் தொழுகுதலும், குணத்தின் மேற்கொண்டு தன்னை வியத்தலும்......... வன்சொல்—கண்ணோட்டமின்றிச் சொல்லும் சொல்......ஏழைமை—நுழைந்த உணர்வினர் அன்றிவரும் வெண்மை....................(தொல். பொருள். உகூ௪. பேரா.)

ஏழைமை என்பது—பேதைமை.

மறப்பு என்பது—யாதொன்றாயினுங் கற்றதனையுங் கேட்டதனையும் பயின்றதனையும் மறத்தல். ஒடு எண்ணின்கண் வந்தது.

ஒப்புமை என்பது—ஆண்பாலாயினும் பெண்பாலாயினுந் தான் காதலிக்கப்பட்டாரைப்போல்வாரைக் கண்டவழி அவர்போல்வர் என ஆண்டு நிகழும் உள்ளநிகழ்ச்சி. அது உலகின்கட் கீழ்மக்கள்மாட்டுங் கண்ணிலோர்மாட்டும் நிகழ்தலின் அது தலைமக்கட்காகாதென விலக்கப் பட்டது.

என்றிவை யின்மை யென்மனார் புலவர் என்பது—இச் சொல்லப் பட்டன இல்லையாதலும் வேண்டும்; மேற் சொல்லப்பட்டவற்றோடுங் கூட்ட என்றவாறு.

மேற் சொல்லப்பட்டவற்றொடுங் கூடுதல் அதிகாரத்தான் வந்தது.

இவ்விரண்டு சூத்திரத்தானும் ஒருமுகத்தானுய இலக்கணங் கூறிய வாறு. (உசு)

உ௭௧. கண்ணினுஞ்* செவியினுந் திண்ணிதின் உணரும்
உணர்வுடை மாந்தர்க் கல்லது தெரியின்
நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே.

என்—எனின். இது அதிகாரப்புறனடை.

(இ - ள்.) ஈண்டுச் சொல்லப்பட்ட நல்ல நயத்தினையுடைய மெய்ப்பாடெல்லாம் ஆராயுங்காற் கண்ணானுஞ் செவியானும் விளங்க உணரும் அறிவுடைமாந்தர்க் கல்லது கருதல் அரிது என்றவாறு. (உ௭)

ஆறுவது மெய்ப்பாட்டியல் முற்றிற்று

---

*மனத்து நிகழ்ந்த மெய்ப்பாட்டினைக் கண்ணானும் செவியானும் உணர்தல் என்பது என்னை எனின், மெய்ப்பாடு பிறந்தவழி உள்ளம்பற்றி முகம் வேறுபடுதலும் உரை வேறுபடுதலும் உடைமையின் அவை கண்ணானும் செவியானும் உணர்ந்து கோடல் அவ்வத்துறை போயினரது ஆற்றலென்பது கருத்து. (தொல். பொருள். உ௭௫ பேரா.)

ஏழாவது

# உவமையியல்*

இவ்வோத்து என்ன பெயர்த்தோ எனின், உவமையியல் என்னும் பெயர்த்து. ஒருபுடை ஒப்புமைபற்றி யீவமை உணர்த்தினமையாற் பெற்ற பெயர். மெய்ப்பாடு பற்றித் தோன்றி வழங்குவது.

இதனாற் பயன் என்னை மதிப்பதோவெனின், புலன் அல்லாதன புலனாதலும் அலங்காரமாகிக் கேட்டார்க்கின்பம் பயத்தலும். ஆப் போலும் ஆமா என வுணர்த்தியவழி, அதனைக் காட்டகத்துக் கண்டான் முன் கேட்ட ஒப்புமைபற்றி இஃது ஆமாவென்று அறியும். "தாமரை போல் வாள்முகத்துத் தையலீர்" என்றவழி அலங்காரமாகிக் கேட்டார்க்கு இன்பம் பயக்கும். அஃதாவது மேற்சொல்லப்பட்ட எழுதிணையினும் யாதனுள் அடங்கும் எனின், அவையெல்லாவற்றிற்கும் பொதுவாகிப் பெரும்பான்மையும் அகப்பொருள் பற்றி வரும்.

மேற் குறிப்புப் பற்றி வரும் மெய்ப்பாடு கூறினர்; இது பண்புந் தொழிலும் பற்றி வருதலின் அதன்பின் கூறப்பட்டது.

உஎஉ. †வினைபயன் மெய்உரு என்ற நான்கே
வகைபெற வந்த உவமைத்‡தோற்றம்.

என்பது சூத்திரம்.

இதன் தலைச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், உவமத்தினை யோருவாற்றாற் பாகுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) வினைபயன் மெய்யுரு என்ற நான்கே வகைபெற வந்த உவமைத் தோற்றம் என்பது—தொழிலும் பயனும் வடிவும் நிறனும் என்று சொல்லப்பட்ட நான்குமே அப்பாகுபட வந்த உவமைக்கண் புலனாம் என்றவாறு.

எனவே கட்புலமல்லாதனவு முள என்றவாறும். அவை செவியினானும் நாவினானும் மூக்கினானும் மெய்யினானும் மனத்தினானும் அறியப்படுவன. இவ்விருவகையும் பாகுபடவந்த உவமையாம்.

---

*'உவமவியல்' என்பது பேராசிரியர் கொண்ட பாடம்.

† வினையாற்பயப்பது பயனாதலின் பயத்திற்குமுன் வினை கூறப்பட்டது; அதுபோலப் பிழம்பினால் தோன்றும் நிறத்தினை அதற்குப்பின் வைத்தான்; பயனும் பொருளாக நோக்கி மெய்யினையும் அதனுடன் வைத்தான்; என்பது மற்று. மெய்யெனப்படுவது பொருளாதலின் அதன் புடைபெயர்ச்சியாகிய வினை பிற்கூறுக எனின், வினையுவமம் தன்னுருபு தொக்கு நில்லாது விரிந்தே நிற்றற் சிறப்புடையனவும் உளவாக நோக்கி அதுமுற் கூறினன் என்பது............(தொல். பொருள். உஎசு. பேரா.)

(பாடம்) ‡ உவமத்.

அவற்றுள், கட்புலனாகியவற்றுள் வினையாவது நீட்டல் முடக்கல் விரித்தல் குவித்தல் முதலாயின. பயனாவது நன்மையாகவும் தீமையாகவும் பயப்பன. வடிவாவது வட்டம் சதுரம் கோணம் முதலாயின. நிறமாவன வெண்மை பொன்மை முதலாயின. இனிச் செவிப்புலனாவது ஓசை. நாவினான் அறியப்படுவது கைப்பு கார்ப்பு முதலிய சுவை மெய்யினான் அறியப்படுவன வெம்மை தண்மை முதலாயின. மூக்கால் அறியப்படுவன நன்னாற்றம் தீநாற்றம். மனத்தால் அறியப் படுவன இன்ப துன்ப முதலியன.

உதாரணம்

"புலிபோலப் பாய்ந்தான்" என்பது வினை.
"மாரி யன்ன வண்கை" (புறம். ௧௩௩) என்பது பயன்.
"துடி போலும் இடை" என்பது வடிவு.
"தளிர் போலும் மேனி" என்பது நிறம்.
"குயில்போன்ற மொழி" செவியாலறியப்பட்டது.
"வேம்புபோலக் கைக்கும்" நாவினாலறியப்பட்டது.
"தீப்போலச் சுடும்" மெய்யினாலறியப்பட்டது.
"ஆம்பல் நாறுந் துவர்வாய்" (குறுந். ௩00) மூக்காலறியப்பட்டது.

"தம்மி லிருந்து தமதுபாத் துண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு." (குறள். ௧௧0௭)
மனத்தானறியப்பட்டது.

பிறவு மன்ன. (௧)

௨௭௩. விரவியும் வரூஉம் மரபின* என்ப.

என்—எனின், மேலதற்கோர் புறனடை யுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) மேற்சொல்லப்பட்ட உவமைகள் ஒரோ வொரு பொருளான் வருதலின்றி இரண்டும் பலவும் விரவியும் வரும் மரபினையுடைய என்றவாறு.

உம்மை இறந்தது தழீஇயிற்று.

"இலங்குபிறை யன்ன விலங்குவால்† வையெயிற்று"
(அகம். கடவுள் வாழ்த்து)

என்றவழி வடிவும் நிறனும் விரவிவந்தது. பிறவும் அன்ன. இன்னும் "விரவியும் வரூஉம் மரபின" என்றதனாற் பலபொருள் விரவிவந்தது.

"அடைமரை யாயிதழ்ப் போதுபோற் கொண்ட
குடைநிழற் றோன்றுநின் செம்மலைக் காணூஉ." (கலித். ௮௪)

*'மரபின' என்றதனான் அவை அவ்வாறு விராய் வருதலும் மரபே வேறு வேறு வருதலே மரபெனப்படாதெனக் கொள்க. (தொல். பொருள். ௨௭௭. பேரா.)

(பாடம்) † விளங்குவால்.

என்றவழித் தாமரையிலையும் பூவும் குடைக்கும் புதல்வற்கும் உவமையாயினும் தோற்றத்திற் கிரண்டும் ஒருங்குவந்தமையான் வேறோதப் பட்டது. இன்னும் "விரவியும் வரூஉம் மரபின" என்றதனால் "தேமொழி" எனத் தேனின்கண் உளதாகிய நாவிற்கினிமையும் மொழிக் கண் உளதாகிய செவிக்கினிமையும் உவமிக்க வருதலுங் கொள்க. பிறவும் இந்நிகரனவெல்லாம் இதுவே ஒத்தாகக் கொள்க. (உ)

**உஎச. உயர்ந்ததன் மேற்றே உள்ளுங் காலை***

என்—எனின். மேலதற்கோர் சிறப்புவிதி புணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) மேற்சொல்லப்பட்ட உவமை ஆராயுங்காலத்து உயர்ந்ததன் மேலன என்றவாறு.

ஈண்டு உயர்ச்சியாவது—வினைமுதலாகச் சொல்லப்பட்டன உயர்தல்.

"அரிமான் அன்ன அணங்குடைத் துப்பின்" (பட்டினப். உ௯௮)

என்றவழித் துப்புடையன பலவற்றினும் அரிமா உயர்ந்ததாகலின் அதனை உவமையாகக் கூறப்பட்டது.

"தாமரை புரையுங் காமர் சேவடி" (குறுந். கடவுள்வாழ்த்து)

என்றவழிச் சிவப்புடைய பலவற்றினும் தாமரை யுயர்ந்ததாகலின் அதனை உவமையாகக் கூறப்பட்டது. அஃதேல்,

"கொங்கியர் ஈன்ற மைந்தரின்
ஏமந்துடை உழுவை திரிதருங் காடே"

என இழிந்ததன்மேல் உவமை வந்ததால் எனின், ஆண்டுக் கொங்கியரீன்ற மைந்தரின் என விசேடித்த தன்மையான் அவர் பிறநிலத்து மக்களொடு ஒரு நிகரன்மையின் அவரும் உயர்ந்தோராகக் கொள்க.

"சாறுதலைக் கொண்டெனப் பெண்ணீற் றுற்றெனப்
பட்ட மாரி ஞான்ற ஞாயிற்றுக்
கட்டி னிணக்கும் இழிசினன் கையது
போழ்தூண் டூசியின் † விரைந்தன்று மாதோ
ஊர்கொள ‡ வந்த பொருநனொ
டார்புனை தெரியல் நெடுந்தகை போரே" (புறம். உ௮)

என்பது இழிந்ததன்மேல் வந்ததாயின் ஆணியூசியினது விரைவு மற்றுள்ள விரைவின் உயர்ந்ததாகலின் அதுவும் உயர்ந்ததாம். (௩)

---

* 'உள்ளுங்காலை' என்றதனான் முன்னத்தின் உணருங்கிளவியான் உவமங் கோடலும் இழிந்த பொருள் உவமிப்பினும் உயர்ந்த குறிப்புப் படச்செயல் வேண்டும் எனவும் கொள்க. அவை 'என் யானை,' 'என் பாவை' என்றவழி, அவைபோலும் என்னும் குறிப்புடையான் பொருள் கூறிற்றிலனாயினும், அவன் குறிப்பினான் அவை வினை உவமை எனவும் மெய் உவமை எனவும் படும். (தொல். பொருள். உஎ௮. பேரா.)

(பாடம்) † போழ்துன் றூசியின். ‡ ஊர்தர.

உஎரு. சிறப்பே* நலனே காதல் வலியோடு
அந்நாற் பண்பும் நிலைக்கள மென்ப.

என்—எனின். இதுவுமது.

(இ - ள்.) மேற்சொல்லப்பட்ட நூவுமை தம்மின் உயர்ந்த வற்றோடு உவமிக்கப்பட்டனவேனும், சிறப்பாதல் நலனாதல் காதலாதல் வலியாதல் நிலைக்களனாக வரும் என்றவாறு. இவைபிற்றைப்பற்றித் தோன்றுமென்பது கருத்து.

"முரசுமுழங்கு தானை மூவரும் கூடி
அரசவை இருந்த தோற்றம் போலப்
பாடல் பற்றிய பயனுடை எழாஅல்"
(பொருநராற், ருச-சு)

எனச் சிறப்புப்பற்றி வந்தது.

'ஓவத் தன்ன வியனுடை வரைப்பின்" (புறம். உருக.)

என்பது நலம்பற்றி வந்தது.

"கண்போல்வான் ஒருவனுளன்"

என்பது காதல்பற்றி வந்தது.

"அரிமான் அன்ன அணங்குடைத் துப்பின்"
(பட்டினப். உகஅ)

என்பது வலிபற்றி வந்தது.

பிறவு மிவ்வாறே படுத்துநோக்கிக் கண்டுகொள்க. (௪)

உஎசு. கிழக்கிடும்† பொருளோ டைந்து மாகும்.

என்—எனின். எய்தியதன்மேற் சிறப்புவிதி வகுத்தல் நுதலிற்று.

---

* சிறப்பென்பது, உலகத்துள் இயல்புவகையானன்றி விகாரவகையாற் பெறும் சிறப்பு. காதல் என்பது அந்நலனும் (அழகும்) வலியும் இல்வழியும் உண்டாக்கி உரைப்பது. இவற்றை நிலைக்களம் எனவே இவைபற்றுது உவமம் பிறவாதென்பதாம்

உயர்ந்த பொருளின் இழிந்த தெனப்பட்ட பொருள் யாதானும் இயைபில்லதொன்று கூறலாகாதனவும், உவமையொடு முழுதும் ஒவ்வாமை மாத்திரையாகி அதனோடொக்கும் பொருண்மை உவமிக்கப்படும் பொருட்கண்ணும் உளவாகல் வேண்டும் எனவும் கூறி அவைதாமும் பிறர் கொடுப்பப் பெறுவனவும், ஒருபொருட்கண் தோன்றிய நன்மை பற்றியவும், காதல் மிகுதியால் உளவாகக்கொண்டு உரைப்பனவும், தன் தன்மையால் உளவாயின வலிபற்றினவும் என நான்காம் என்றவாறு, இவற்றுக்கெல்லாம் வினை பயன் மெய் உரு என்னும் நான்கும் தலைப்பெய்யும் என்பது. (தொல். பொருள். உஎக. பேரா.)

† இவை பொருளன்றி உவமையும் கிழக்கிடப் பட்டனவால் எனின், அங்ஙனமாயினும் அவை பொருளோடு சார்த்திநோக்க உயர்ந்தன எனப்படும். (தொல். பொருள். உஅ0. பேரா.)

(இ - ள்.) மேற்சொல்லப்பட்ட சிறப்பு முதலிய நான்கும் ஒழியத் தாழ்ந்த பொருளொடும் உவமை பொருந்துமிடத்து உவமிக்கப்படும் அதனொடுங்கூட ஐந்தாம் என்றவாறு.

என்றது பொருள் உவமமாயும் உவமம் பொருளாயும் நிற்குமிடமும் உள என்றவாறு.

"ஒண்செங் கழுநீர்க் கண்போ லாயிதழ்
ஊசி போகிய சூழ்செய் மாலையன்." (அகம். ௪௮)

என்றாற் போல்வன. மேற்சொல்லப்பட்ட நான்கும் உயர்வின் பகுதியாதலின் இதனொடுங்கூட ஐந்தென்றார். (௫)

உ௭௭. முதலுஞ்* சினையுமென் றாயிரு பொருட்கு
நுதலிய மரபி னுரியவை யுரிய.

என்—எனின், இஃது உவமைக்குரியதோர் மரபுணர்த்துதல் நுதலிற்று.

ஐயம் அறுத்ததூஉமாம்.

(இ - ள்.) முதலுஞ் சினையுமென்று சொல்லப்பட்ட இருவகைப்பொருட்குங் கருதிய மரபினான் அவற்றிற்கேற்பவை உரியவாம் என்றவாறு.

சொல்லதிகாரத்துட்,

"செப்பினும் வினவினுஞ் சினைமுதற் கிளவிக்
கப்பொரு ளாகும் உறழ்துணைப் பொருளே."

என்றார். அவ்வாறன்றி யுவமைக்கு நியமமில்லை என்றவாறாயிற்று.

"ஒருகுழை யவன்போல் இணர்சேர்ந்த மராஅமும்" (கலித். உ௬)

என்பது முதற்கு முதல் உவமமாயிற்று.

"அடைமரை யாயிதழ்ப் போதுபோற் கொண்ட
குடைநிழல் தோன்றுநின் செம்மலைக் காணூஉ" (கலித். ௮௪)

என்பது முதற்குச் சினை உவமமாயிற்று.

"தாமரை புரையுங் காமர் சேவடி" (குறுந். கடவுள் வாழ்த்து)

என்பது சினைக்குச் சினை யுவமமாயிற்று.

"நெருப்பின் அன்ன சிறுகட் பன்றி" (அகம். ௮௪)

என்பது சினைக்கு முதல் உவமமாயிற்று. (௬)

---

*இதன் கருத்து, முதலொடு முதலும், சினையொடு சினையும், முதலொடு சினையும், சினையொடு முதலும் வேண்டியவாற்றான் உவமஞ் செய்தற்கு உரிய எனவும் அங்ஙனம் செய்யுங்கால் மரபு பிறழாமைச் செய்யப்படும் எனவும் கூறியவாறு. (தொல். பொருள். உ௮௧. பேரா.)

உஎஅ. சுட்டிக்* கூறு உவம மாயின்
பொருளெதிர் புணர்த்துப் புணர்த்தன† கொளலே.

என்—எனின் இதுவுமோர் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) சுட்டிக் கூற வுவமை என்பது—உவமிக்கப்படும் பொருட்கு உவமை இதுவெனச் சுட்டிக்கூறுவமை. அவ்வாறு வருமாயின் உவமச்சொல்லொடு பொருந்த உவமிக்கப்படும் பொருளொடு பூணர்த்து உவமவாய்பாடு கொள்க என்றவாறு.

இதனாற் சொல்லியது உவமவாய்பாடு தோன்ற உவமம் பொருட்குப் புணராக்கண்ணும் உவமை உள என்றவாறும்.

"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து." (குறள். ௯0)

இதன்கண் 'அதுபோல' எனச் சுட்டிக்கூற வுவமையாயினவாறு கண்டுகொள்க. (எ)

உஎகூ. உவமமும்‡§ பொருளும் ஒத்தல் வேண்டும்.

என்—எனின். இஃது உவமைக்குரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) இரட்டைக் கிளவியாயினும், நிரனிறுத்தமைத்த நிரனிறைச்சுண்ணமாய் வரினும், மிக்குங்குறைந்தும் வருதலன்றி யுவமை யடையடுத்துவரினும, தொழிற்பட்டு வரினும், ஒன்றும் பலவுமாகி வரினும், வருமொழியும் அவ்வாறே வருதல் வேண்டும் என்றவாறு.

அவ்வழி வாராது மிக்குங்குறைந்தும் வருவது குற்றம் என்றவாறும்.

உஅ0. பொருளே யுவமஞ் செய்தனர் மொழியினும்
மருளறு சிறப்பினஃ$ துவம மாகும்.

என்—எனின். இதுவும் உவமைக்கண் வருவதோர் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

---

* 'பவளவாய்' என்கின்ற வழிச் சுட்டிக்கூறு உவமம். 'பவளம் போற் செந்துவர்வாய்' என்பது சுட்டிக்கூறிய உவமம். என்னை ? இரண்டிற்கும் பொதுவாகிய செம்மைக்குணத்தினைச் சொல்லியே உவமம் சொல்லினமையின் (தொல். பொருள். உஅ௨. பேரா.)

(ப டம்) † புணர்ந்தன. ‡ உவமையும்.

§ உவமானமும் பொருளும் தம்மின் ஒத்தன என்று உலகத்தார் மகிழ்ச்சி செய்தல் வேண்டும் (தொல். பொருள். உஅ௩. பேரா.)

(ஒத்ததறிதலவாது உலக நடையினை அறிந்து செய்தல்)

$'மருளறு சிறப்பின்' என்றதனான் அங்ஙனம் சிறப்பிக்குங்கால் மயக்கம் தீரச் சிறப்பித்தல் வேண்டும். அஃது உலகினுள் உயர்ந்ததென்று ஒப்பமுடித்த பொருளினையும் சிறப்பித்தற்கு உவமம செய்பவோ எனின் செய்யார் என்பது ; என்னை ? முகம் ஒக்கும் தாமரை என்றால் முகத்திற்கும் தாமரைக்கும் சிறப்புடைமை மயங்கிவாராது பின்னும் முகத்திற்கே சிறப்பாம் என்பது கருத்து. (தொல். பொருள். உஅ௪. பேரா.)

(இ - ள்.) உவமிக்கும் பொருடன்னை யுவமமாக்கிக் கூறினும் மயக்கமற்ற சிறப்பு நிலைமையான் எய்தும் உவமையாகு மென்றவாறு.

ஒருசாராசிரியர் ரூபகம் சொல்லப்பட்டது உவமைபற்றி வருதலின் இஃது உவமையின் பாகுபாடு என்பது இவ்வாசிரியர் கருத்து.

"இரும்புமுகஞ் செறித்த ஏந்தெழில் மருப்பிற்
கருங்கை* யானை கொண்மூ வாக
நீண்மொழி மறவ ரெறிவன ருயர்த்த
வாண்மின் னாக வயங்குகடிப் பமைந்த
குருதிப் பலிய முரசுமுழக் காக
அரசரா† பனிக்கும் அணங்குறு பொழுதின்
வெவ்விசைப் புரவி வீசுவளி யாக
விசைப்புறு வல்வில் வீங்குநா ணுதைத்த
கணைத்துளி பொழிந்த கண்ணகன் கிடக்கை
ஈரச் செறுவயிற்‡ றேரே ராக
விடியல் புக்கு நெடிய நீட்டிநின்
செருப்படை மிளிர்த்த திருத்துறு பைஞ்சால்
பிடித்தெறி வெள்வேல் கணையமொடு வித்தி
விழுத்தலை§ சாய்த்த வெருவரு பைங்கூழ்ப்
பேஎ யொற்றிய பிணம்பிறங்கு பல்போர்க்
கான நரியொடு கழுகுகளம் படுப்பப்
பூதங் காப்பப் பொலிகளந் தழீஇப்
பாடுநர்க் கீந்த பீடுடை யாளன" (புறம். ௩௬௯)

என வரும்.

"பாசடைப் பரப்பிற் பன்மல ரிடைநின்
றொருதனி யோங்கிய விரைமலர்த் தாமரை
அரச வன்னம் ஆங்கினி திருப்பக்
கரைநின் றாடும் ஒருமயில் தனக்குக்
கம்புட் சேவற் கனைகுரல் முழவாக்
கொம்பர் இருங்குயில் விளிப்பது காணாய்" (மணிமே. ௪:௮-௧௩)

என்பதும் அது. இவ்வாறு வருவனவெல்லாம் இச் சூத்திரத்தாற் கொள்க. (௬)

உ௮௧. பெருமையுஞ் சிறுமையுஞ் சிறப்பின் தீராக்
குறிப்பின் வரூஉ நெறிப்பா டுடைய.

என்—எனின். இதுவும் உவமைக் குரியதோர் மரபுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) உவமையும் பொருளும் ஒத்தன கூறலையன்றிப் பெருகக் கூறலுஞ் சிறுகக்கூறலும் மேற்சொல்லப்பட்ட சிறப்

(பாடம்) * பெருங்கை. † அரசர்ப் பணிக்கும். ‡ செவ்வியிற்
§ இருந்தலை.

பென்னும் நிலைக்களத்து நீங்காச் சிறப்பின் வரூஉம் வழக்கப் பாட்டினையுடைய என்றவாறு.

எனவே வழக்கின்கட் பயின்று வாராத இறப்பவுயர்தலும் இறப்ப விழிதலும் ஆகா வென்றவாறு.

"அவாப்போ லகன்றதன் அல்குன்மேற் சான்றோர்
உசாஅப்போல வுண்டே மருங்குல்"

என்றவழி அல்குல் பெரிதென்பான் ஆசையோடுவமித்தலின் இது தக்கதாயிற்று; மருங்குல் நுண்ணிதென்பான் சான்றோ ருசாவொடு உவமித்தலின் அதுவும் தக்கதாயிற்று. அவை சிறப்புப் பற்றி வந்தன.

இனி நெறிப்பாடின்றி வருவன இறப்ப உயர்தலும் இறப்ப இழிதலும் என இருவகைப்படும்

"இந்திரனே போலு மிளஞ்சாத்தன்...நாறுமிணர்." (யாப்.வி.ஒழி.)

இஃது இறப்பவுயர்ந்தது. வழக்கிறந்துவருதலின் இவ்வாறு வரும் உவமை கூறப்படாது.

"வள்ளெயிற்றுப் பேழ்வாய் ஞமலிக்கு மான்குழாம்
எள்ளி யிரிவதுபோ லெங்கெங்கும்—வள்ளற்கு
மாலார் கடல்போல மண்பரந்த வாட்டானை
மேலாரு மேலார் விரைந்து." (யாப். வி. ஒழி.)

இஃது இறப்ப இழிதலின் இதுவு மாகாது.

அஃதேல் "நாயனையார் கேண்மை தழீஇக் கொளல்வேண்டும்" (நாலடி ௨௧௩) என வருமால் எனின், அது நாயின்கட் கிடந்ததோர் நற்குணம்பற்றி வருதலின் இறப்ப இழிதல் ஆகாது. (௧0)

௨௮௨. அவைதாம்,
அன்ன ஏய்ப்ப உறழ ஒப்ப
என்ன மான என்றவை யெனாஅ
ஒன்ற ஒடுங்க ஒட்ட வாங்க
வென்ற வியப்ப மென்றவை யெனாஅ
எள்ள விழைய இறப்ப நிகர்ப்பக்
கள்ளக் கடுப்ப வாங்கவை யெனாஅக்
காய்ப்ப மதிப்பத் தகைய மருள
மாற்ற மறுப்ப வாங்கவை யெனாஅப்
புல்லப் பொருவப் பொற்பப் போல
வெல்ல வீழ வாங்கவை யெனாஅ
நாட நளிய நடுங்க நந்த
ஓடப் புரைய என்றவை யெனாஅ

**ஆரு றுவமையும்* அன்னவை பிறவும்†**
**கூறுங் காலைப் பல்குறிப் பினவே.**

**என்—எனின். இஃது உவமையுணர்த்துஞ் சொற்களை வரை யறுத்து உணர்த்துதல் நுதலிற்று.**

(இ - ள்.) மேற்சொல்லப்பட்ட உவமைகள் தாம் அன்ன என்பது முதலாகப் புரைய என்பதீருக வந்தனவும் அன்னவை பிறவுமாகிச் சொல்லுங்காலத்துப் பல குறிப்பினையுடைய என்ற வாறு.

சொல்லுங்காலத்து என்றமையிற் சொல்லென்பது கொள்க.

அன்னபிறவாற் கொள்ளப்படுவன: நோக்க, நேர, அனை, அற்று, இன், ஏந்து, ஏர், சீர், கெழு, செத்து, ஏர்ப்ப, ஆர என்றித் தொடக் கத்தன கொள்க.

'பல்குறிப்பின' என்றதனன் இச்சொற்கள் பெயரெச்ச நீர்மைய வாய் வருவனவும் வினையெச்ச நீர்மையவாய் வருவனவும் முற்று நீர்மைய வாய் வருவனவும் இடைச்சொல் நீர்மையவாய் வருவனவும் எனக் கொள்க. 'புலிபோன்ற சாத்தன்' 'புலிபோலுஞ் சாத்தன்' என்பன பெயரெச்சம். 'புலிபோன்று வந்தான்' 'புலிபோலப் பாய்ந்தான்' என்பன வினையெச்சம். 'புலிபோலும்' 'புலிபோன்றனன்' என்பன முற்று. அன்ன, இன்ன இடைச்சொல்.

இன்னும் 'பல்குறிப்பின' என்றதனன் விரிந்தும் தொக்கும் வரு வனவுங்கொள்க. 'தேன்போல இனியமொழி' இது விரிந்தது. 'தேன் போலும் மொழி.' இது உவமை விரிந்து ஒப்புமை குறித்துத் தொக்கு நின்றது. 'தேமொழி' என்பது எல்லாந்தொக்கது. பிறவு மன்ன.

ஈண்டு எடுத்தோதப்பட்ட முப்பத்தாறினும் ஒன்ற, என்ற, மாற்ற, பொற்ப, நாட, நடுங்க எனபனவொழித்து நின்ற முப்பதும் அன்னபிற வாற் கொள்ளப்பட்டவற்றுள் நோக்க என்பதும் நேர என்பதுஞ் சிறப்பு விதி யுடைத்தாதலின் அதற்கு உதாரணம் ஆண்டுக் காட்டுதும். ஏனைய ஈண்டுக் காட்டுதும்.

'வேலொன்று கண்'
'கயலென்ற கண்'
'மணிநிற மாற்றிய மாமேனி'
'மதியம் பொற்ப மலர்ந்த வாண்முகம்'
'வேயொடு நாடிய தோள்'
'படங்கெழு நாகம் நடுங்கு மல்குல்'

---

(பாடம்) * ஆரு றவையும்.

† 'பிறவும்' என்பதனன் எடுத்தோதினவேயன்றி, நேர நோக்க துணைப்ப மலைய அர அமர அனைய ஏர ஏர்ப்ப செத்து அற்று கெழுவ என்ற தொடக்கத்தன பலவும் ஐந்தாம் வேற்றுமைப் பொருள்பற்றி வருவனவும் எனவென் எச்சங்கள் பற்றி வருவனவும் பிறவும் எல்லாம் கொள்க. (தொல். பொருள். உஅ௬. பேரா.)

குன்றி னனையாருங் குன்றுவர்' (குறள். ௯௬௫)
'இறந்தாரை யெண்ணிக்கொண் டற்று' (குறள். ௨௨)
'மருப்பிற் றிரிந்து மறிந்துவீழ் தாடி' (கலித். ௧௫)
'துணைமல ரெழினீலத் தேந்தெழின் மலருண்கண்' (கலித். ௧௪)
'முத்தேர் முறுவலாய்' (கலித். ௧௩)
'எச்சிற் கிமையாது பார்த்திருக்கு மச்சீர்' (நாலடி. ௩௪௫)
'யாழ்கெழு மணிமிடற் றந்தணன்' (அகம். கடவுள் வாழ்த்து)
'கிளைசெத்து மொய்த்த தும்பி' (நற். ௩௫)

என வரும். பிறவுமன்ன. (௧௧)

௨௮௫. அன்ன வாங்கு* மான இறப்ப
என்ன உறழத் தகைய நோக்கோடு
கண்ணிய எட்டும் வினைப்பா லுவமம்.

என்—எனின். மேற்சொல்லப்பட்டவற்றுள் சிறப்பு விநிரயண்டான உணர்த்துவான் எடுத்துக்கொண்டார். அவற்றுள் வினையுவமத்திற் குரிய சொல் வரையறை யுணர்த்தல் நுதலிற்று.

(இ - ள்.) அன்ன முதலாகச் சொல்லப்பட்ட எட்டும் வினையுவமத்திற் குரிய சொல்லாம் என்றவாறு.

'கொன்றன்ன வின்னா செயினும்' (குறள். ௧0௯)
'பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாங்கு' (திருமுருகாற். ௨)
'புலவுநுனைப் பகழியுஞ் சிலையு மானச்
செவ்வரிக் கயலொடு பச்சிறாப் பிறழும்'
(பெரும்பாணாற். ௨௬௯. ௨௭௦)
'புலியிறப்ப வொலிதோற்றலின்'
'புலியென்னக் கலிசிறந் துராஅய்'
'செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை' (திருமுருகாற். ௫)
'பொருகளிற் றெருத்தின் புலிதகையப் பாய்ந்து'
'மானோக்கு நோக்கு மடநடை யாயத்தார்'

என வ்ரும். (௧௨)

௨௮௬. அன்னஎன் கிளவி பிறவோடுஞ் சிவணும்.

என்—எனின் எய்தாதது எய்துவித்தல் நுதலிற்று.

(இ - ள்.) மேற்சொலலப்பட்டவற்றுள் அன்ன என்னுஞ் சொல் ஒழிந்தபொருளொடுஞ் செலலும் என்றவாறு.

'மாரி யன்ன வண்கை' (புறம். ௧௩௩) இது பயன்.

(பாடம்) * வாங்க.

'பரியரைக் கமுகின் பாளையம் பசுங்காய்
கருவிருந் தன்ன கண்கூடு சிறுதுளை' (பெரும்பாணற். எ - அ)

இது மெய்.

'செவ்வா னன்ன மேனி' (அகம். கடவுள் வாழ்த்து)
'பாலன்ன மென்மொழி'

இவை உரு. பிறவுமன்ன. (௧௩)

௨௮௫. எள்ள விழையப் புல்லப் பொருவக்
கள்ள மதிப்ப வெல்ல வீழ
என்றுங் கேட்டே பயனிலை யுவமம்.

என்—எனின். பயனிலை யுவமைக்குரிய சொல் வரையறுத் துணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) எள்ள என்பது முதலாகச் சொல்லப்பட்ட எட்டும் பயனிலையுவமைக்குச் சொல்லாம என்றவாறு.

'எழிலி வானம் எள்ளினன் தரூஉங்
கவிகை வண்கைக் கடுமான் றோன்றல்'
'மழைவிழை தடக்கை வாய்வா ளெவ்வி'
'புத்தே ளுலகிற் பொன்மரம் புல்ல'
'விண்பொருபுகழ் விறல்வஞ்சி' (புறம். ௧௧)
'கார்கள்ள வுற்ற பேரிசை யுதவி'
'திருநிதி மதிக்கும் பெருவள வீகை'
'வீங்குகரை நல்லான் வென்ற வீகை'
'விரிபுனற் பேர்யாறு வீழ யாவதும்'
'வரையாது சுரக்கும் உரைசால் தோன்றல்'

என வரும். (௧௪)

௨௮௬. கடுப்ப ஏய்ப்ப மருளப் புரைய
ஒட்ட ஒடுங்க ஓட்ட நிகர்ப்பவென்
றப்பா *லெட்டே மெய்ப்பா லுவமம்.

என்—எனின். மெய்யுவமத்திற் குரிய சொல் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) கடுப்ப என்பது முதலாகச் சொல்லப்பட்ட எட்டும் மெய்யுவமத்திற்குரிய சொல்லாம் என்றவாறு.

---

* இவற்றை உரிமை கூறிப் பெருவரவின எனவே ஒழிந்தனவும் சிறுபான்மை வரும் என்பதூஉம் அவை பொதுச்சூத்திரத்தான் அடங்கும் என்பதூஉம் கொள்க. (தொல். பொருள். ௨௯0. பேரா.)

'விண்ணதிர் இமிழிசை கடுப்ப' (மலைபடு. ௨)
'அகலிரு விசும்பிற் குறைவில் ஏய்ப்ப'
'வேய்மருள் பணைத்தோள் நெகிழ' (அகம். ௧)
'வேய்புரை மென்றோள்' (கலித். ௯௧)
'முத்துடை வான்கோ டொட்டிய முலைமிசை வியப்பன தழீஇ'
'பாம்புரு வொடுங்க வாங்கிய நுசுப்பின்'
'செந்தீ யோட்டிய வஞ்சுடர்ப் பருதி'
'கண்ணொடு நிகர்க்குங் கழிப்பூங் குவளை'

என வரும். (௧௩)

௨௭௭. போல மறுப்ப ஒப்பக் காய்த்த
நேர வியப்ப நளிய நந்தவென்
றெத்துவரு கிளவி உருவி னுவமம்.

என்—எனின். உருவத்திற்குரிய சொல் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) போல என்பது முதலாகச் சொல்லப்பட்ட எட்டும் உருவுவமத்திற் குரியசொல்லாம் என்றவாறு.

'தன்சொ லுணர்ந்தோர் மேனி
பொன்போற் செய்யும் ஊர்கிழ வோனே.' (ஐங்குறு. ௪௧)
'மணிநிற மறுத்த மலர்ப்பூங் காயா'
'ஒண்செங் காந்த ளொக்கு நின்னிறம்'
'கணைக்கால் நெய்தல் காய்த்திய கண்ணியம்'
'கார்விரி கொன்றைப் பொன்நேர் புதுமலர்'
(அகம். கடவுள் வாழ்த்து)
'தண்டளிர் வியப்பத் தகைபெறு மேனி'

என வரும்.

நளிய நந்த என்பன வந்தவழிக் கண்டுகொள்க. (௧௪)

௨௭௮. தத்த மரபில் தோன்றுமன் பொருளே.

என்—எனின். மேலனவற்றிற் கோர் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) மேற்பாகுபடுத்துணர்த்தப்பட்ட சொற்கள் கூறியவாற்றானன்றித் தத்தமரபில் தோன்றும் பொருளும் உளவாமென்றவாறு.

மன் ஆக்கங்குறித்துவந்தது. ஈண்டு மரபென்றது பயிற்சியை. இதனானே நூல் செய்கின்ற காலத்து விளைமுதலாகிய பொருள்கள் ஓதிய வாய்பாட்டான் வருதல் பெருவழக்கிற்றென்று கொள்ளப்படும்.

'முழவுறழ் தடக்கையி னியல வேந்தி' (திருமுருகாற். ௨௧௫)
'மாவென்ற மடநோக்கின்' (கலித். ௫௭)
'வேய்வென்ற தோள்' (கலித். ௧௩௮)
'மாரிவீ ழிருங்கூந்தல்' (கலித். ௧௪)
'பொன்னுரை கடுக்குந் திதலையர்' (திருமுருகாற். ௧௪௫)
'குறுந்தொடி ஏய்க்கு மெலிந்துவீங்கு திவவின்' (பெரும்பாண். ௧௩)
'செயலையந் தளிரேய்க்கும் எழினலம்' (கலித். ௧௫)
'பாஅன்மருண் மருப்பி னுரல்புரை பாவடி' (கலித். ௨௧)
'வலம்புரி புரையும் வால்நரை முடியினர்' (திருமுருகாற். ௧௨௭)
'ஒளித்தியங்கு மரபின் வயப்புலி போல' (அகம். ௨௨)
'தாமரைபோல் வாள்முகம்' (திணைமாலை. ௧)
'காரவர்போ னேக்கினு நோக்கும்
ஒழுகு நோன்பக டொப்பக் குழீஇ' (அகம். ௩௫)
எனவும் வரும். பிறவுமன்ன. (௧௭)

௨௮௯. நாலிரண் டாகும் பாலுமா ருண்டே.

என்—எனின். எய்தியதன் மேற் சிறப்புவிதி வகுத்தல் நுதலிற்று.

(இ - ள்.) மேற்சொல்லப்பட்ட உவமை நான்குவகையாதலையன்றி எட்டாம் பக்கமும் உண்டு என்றவாறு.

அவையாவன: வினையும் வினைக்குறிப்புமென இருவகையாம். பயன் என்பது, நன்மை பயத்தலும் தீமை பயத்தலும் என இருவகையாம். மெய்யென்பது வடிவும் அளவும் என இருவகையாம். உருவென்பது, நிறமுங் குணமுமென இருவகையாம். இவ்வகையினு லெட்டாயின.

'பொன்னன்ன செல்வத்தன்'—இது வினைக்குறிப்பு.
'ஞாயி றனையைநின் பகைவர்க்கு' (புறம். ௫௯)—இது தீப்பயன்.
'நெடுவரை மிசையிற் பாம்பென விழிதருங்
கடுவரற் கலுழி'—என்பது அளவு.
'பாலன்னமொழி'—இது குணம்.
ஏனைய மேற் காட்டப்பட்டன. (௧௮)

௨௯௦. பெருமையுஞ் சிறுமையு மெய்ப்பா டெட்டன்
வழிமருங் கறியத் தோன்று மென்ப.

என்—எனின். இதுவுமோர் மரபுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) பெருக்கவுஞ் சிறுக்கவுங் கூறுதல் மெய்ப்பாட்டின் வழிப் பக்கம் புலப்படத் தோன்றும் என்றவாறு.

எனவே, மெய்ப்பாடு தோற்றுதவழி இப்புணர்ப்பினுற் பயனின்றும்.

"அவாப்போல் அகன்றதன் அல்குன்மேற் சான்றோர்
உசாஅப்போல உண்டே மருங்குல்"

என்பது பெருமையுஞ் சிறுமையும்பற்றி உவகை நிகழ்ந்தது.

"கலங்கவிழ்த்த நாய்கன்போற் களைதுணைப் பிறிதின்றி"
(யா. வி. ப. கூக௮)

என்பது துன்பப்பெருக்கம் சொல்லி யவலம் வந்தது.

"பெருஞ்செல்வர் இல்லத்து நல்கூர்ந்தார் போல
வருஞ்செல்லும் பேரும்என் நெஞ்சு" (முத்தொள். ௮௮)

இது பெருக்கம்பற்றி இழிவரல் வந்தது. பிறவுமன்ன. (௬௧)

௨௬௧. உவமப் பொருளின் உற்ற துணருந்
தெளிமருங் குளவே திறத்திய லான.*

என்—எனின். இதுவும் உவமைக்குரிய வேறுபாடுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) உவமப்பொருளாலே சொல்லுவான் குறிக்கப்பட்ட பொருளை யுணருந் தெளியும் பக்கமும் உள கூறுபாட்டியலான் என்றவாறு.

தெளிமருங்காவது துணிவுபக்கம். எனவே துணியாமை உவமத்தின்கண்ணே வந்தது. அவ்வாறு வரினும் இதுவேயெனத் துணிதவின் துணி பக்கமாவது.

"ஐதேய்ந் தன்று பிறையு மன்று
மைதீர்ந் தன்று மதியு மன்று
வேயமன் றன்று மலையு மன்று
பூவமன் றன்று சுனையு மன்று
மெல்ல வியலும் மயிலு மன்று
சொல்லத் தளருங் கிளியு மன்று" (கலித். ௫௫)

என்றவழித் துணியாது நின்றன நுதலும் முகனும் தோளுங் கண்ணும் சாயலும் மொழியு மெனத் துணிந்தவாறு கண்டுகொள்க.

---

* 'திறத்திய லான' எனப்பட்ட பகுதியாவன, மேற்கூறப்பட்ட மெய்ப்பாடு எட்டும்பற்றி உவமம் கொள்ளுங்கால், உற்றதுணரும் தெளிமருங்கென உவமான அடைக்கு உவமேய அடை குறைந்து வருவனவும் யாதும் அடையின்றி வருவனவும் என்று இவ்விரண்டும் உற்றுணராமல் சொல்லிய வழி, அவற்றுக்கும் உவமைப்பொருளே தெளிமருங்காம் எனவும் வாளாதே உவமஞ்செய்து உற்றுணர்த்தாதவழியும் அதுவே தெளிமருங்காம் எனவும் இன்னோரன்ன கொள்க. (தொல். பொருள். ௨௬௫. பேரா.)

இன்னும் இதனானே,

"கயலெழுதி வில்லெழுதிக் காரெழுதிக் காமன்
செயலெழுதித் தீர்ந்தமுகந் திங்களோ காணீர்"
(சிலப். கானல். ௧௧

என்றவழிக் கண் புருவங் கூந்தலை யுவமப் பெயரான் வழங்குதலுங் கொள்க. (௨0)

௨௬௨. உவமப் போருளை உணருங் காலை
மருவிய மரபின் வழக்கோடு வருமே *

என்—எனின். மேலதற்கோர் புறனடை புணர்த்துநல் நுதலிற்று.

(இ - ள்.) உவமப்பொருளை உவமிக்கப்படும் பொருளாக உணருங்காலை மருவிய மரபினானாய வழக்கொடுவரும் என்றவாறு.

எனவே மருவாதன அவ்வாறு கயல்சிலை என்றாற்போலக் கூறப்படா வென்றவாறு. (௨௧)

௨௬௩. இரட்டைக்† கிளவியும் இரட்டை வழித்தே.

என்—எனின். இதுவுமோர் மரபுணர்த்துநல் நுதலிற்று.

(இ - ள்.) இரட்டைக் கிளவியாவது உவமை யிரண்டு சொல்லோடு அடுத்துவருவதனோடு உவமிக்கப்படும் பொருளும் இரண்டு பொருளாகி வருதல்வேண்டும் என்றவாறு.

அவ்வழி இரண்டுசொல்லும் ஒருசொன் னீர்மைப்பட்டு வருதல் வேண்டுமென்று கொள்க.

"விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்." (குறள். ௪௧0)

இதனை வேறுபாடு அறிக. (௨௨)

௨௬௪. பிறிதோடு படாது பிறப்போடு நோக்கி
முன்ன‡ மரபிற் கூறுங் காலைத்
துணிவொடு வரூஉந் துணிவினோர் கொளினே.

என்—எனின். இதுவும் ஒருவமை வேறுபாடு உணர்த்துநல் நுதலிற்று.

(இ - ள்.) பிறிதெனபது—உவமப்பொருள் தானன்மை யான் உவமைப் பொருளோடு படாது பொருள்தோற்றிய இடத்

(பாடம்) * படுமே. ‡ முன்னை.

† இரட்டைக் கிளவி எனப் பொருளினை முற்கூறியதனான் இரண்டு பொருளினை ஒன்றாகக் கூட்டி உவமிக்கக் கருதினான். உவமையினையும் இரண்டு ஒன்றாக்கியே உவமிக்கும் என்பது கருத்து (தொல். பொருள். ௨௮௭. பேரா.)

தொடு நோக்கி முன்னமரபினாற் சொல்லுங்காலத்துத் துணிவுடையோர் கொளின் அவர் துணிந்த துணிவின்கண்ணே வரும் உவமை என்றவாறு.

முன்னமாவது.

"இவ்விடத் திம்மொழி இவரிவர்க் குரியவென்
றவ்விடத் தவரவர்க் குரைப்பது முன்னம்"
(தொல். செய்யு. ௧௯௯

என்பதாகலின், இடத்தொடு பார்த்து ஏற்கும் பொருட்கட் கூறுவது.

மேலைச்சூத்திரத்தளவும் பிறிதுபொருளொடு உவமைகூறிப் போந்தார். இனிப் பொருள் தன்னோடேயுவமை கூறுகின்றார் என்று கொள்க.

"நிலவுக்காண் பதுபோல அணிமதி ஏர்தர" (கலித். ௧௧௯)

என்றவழிக் காணப் பிறிதாகிய பொருளொடு உவமை கூறாமையிற் பிறிதொடு படாதாயிற்று. மதியினது எழுச்சியை நோக்குதலிற் பிறப்பொடு நோக்கிற்று. அவ்விடத்திற் கேற்பக் கூறுதலின் முன்னமாயிற்று. அம் மதியினது தோற்றம் இத்தன்மைத்தெனத் துணிதலின் அதன்கண் உவமைச்சொல் வந்தது.

"வள்ளிதழ் கூம்பிய மணிமரு ளிருங்கழிப்
பள்ளிபுக் கதுபோலும் பரப்புநீர்த் தண்சேர்ப்ப" (கலித். ௧௨௧)

என்பதும் அது. (௨௯௪)

௨௯௫. உவமப் போலி ஐந்தென மொழிப.

என்—எனின். இதுவுமோர் உவமைவிகற்பங் கூறுதல் நுதலிற்று.

(இ - ள்.) உவமையைப் போன்று வருவன ஐந்தென்று சொல்லுவர் என்றவாறு.

அவையாவன இதற்குவமையில்லை எனவும், இதற்கிதுதானே யுவமை எனவும், பலபொருளினு முளதாகிய வுறுப்புக்களைத் தெரிந்தெடுத்துக் கொண்டு சேர்த்தின் இதற்குவமையாம் எனவும், பலபொருளினுமுளதாகிய கவின் ஓரிடத்துவரின் இதற்குவமையாம் எனவும், கூடாப்பொருளோடு உவமித்து வருவனவும்.

உதாரணம்

"நின்னோர் அன்னோர் பிறரிவர் இன்மையின்
மின்னெயில் முகவைக்கு வந்திசிற் பெரும" (புறம். ௧௭௧)

என்றும்,

"மன்னுயிர் முதல்வனை யாதலின்
நின்னோர் அனையைநின் புகழொடு பொலிந்தே" (பரிபா. ௪)

என்றும்,

"நல்லார்கள் நல்ல வுறுப்பாயின தாங்கள் நாங்கள்
எல்லா முடனுதுமென் றன்ன வியைந்த வீட்டாற்
சொல்வாய் முகங்கண் முலைதோளிடை யல்குல் கைகால்
பல்வார் குழலென் றிவற்றுற்படிச் சந்த மானுள்"

என்றும்,

"நாள்கோள் திங்கள் ஞாயிறு கனையழல்
வந்தொருங்கு புணர்ந்த விளக்கத் தனையை" (பதிற்றுப். ௧௪)

என்றும்,

"வாரா தமைவானோ வாரா தமைவானோ
வாரா தமைகுவன் அல்லன் மலைநாடன்
ஈரத்து ளின்னவை தோன்றின் நிழற்கயத்து
நீருட் குவளைவெந் தற்று" (கலித். ௪௧)

என்றும் வரும். (௨௪)

௨௬௬. தவலருஞ் சிறப்பினத் தன்மை நாடின்
வினையினும் பயத்தினும் உறுப்பினும்* உருவினும்
பிறப்பினும் வருஉந் திறத்த வென்ப.†

என்—எனின். மேலதற்கோர் புறனடை.

(இ - ள்.) மேற்சொல்லப்பட்ட ஐந்தும் உரைத்த வாய்பாட்டாற் கூறும்வழிச் சொல்லப்பட்ட ஐந்தினும் ஏதுவாகச் சொல்லிப் பின்னர்க் கூறவேண்டும் என்றவாறு.

நினக்குவமையில்லை என்னும்வழிச் செயலானுதல், பயனுனுதல், உறுப்பானுதல், உருவானுதல், பிறப்பானுதல் ஒப்பாரில்லையெனல் வேண்டும் என்பது கருத்து. பிறவு மன்ன. (௨௫)

௨௬௭. கிழவி சொல்லின் அவளறி கிளவி.

என்—எனின். மேற்சொல்லப்பட்ட உவமைகூறுவார் பலருள்ளுந் தலைமகட்குரியதோர் பொருள் வரையறுத்துணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) உவமைப்பொருளைத் தலைமகள் கூறில் அவளறிந்த பொருட்கண்ணே உவமை கூறப்படும் என்றவாறு.

எனவே தானறியாத பொருட்கண் கூறினளாகச் செய்யுட் செய்தல் பெறாது என்றவாறு.

உதாரணம் தலைமகள்கூற்றுட் கண்டுகொள்க. (௨௬)

---

* உறுப்பென்றது மெய்யினை; உடம்பினை உறுப்பென்பவாகலானும் மெய்யுவமமெல்லாம் உறுப்பினையே பற்றிவருதல் பெரும்பான்மைய என்றற்கும் அவ்வாறு கூறினன் என்பது...'தவலரும் சிறப்பின் அத்தன்மை நாடின்' என்றதனன் ஏனை உவமத்தினும் உள்ளுறை உவமமே செய்யுட்கும் பொருள் இலக்கணத்திற்கும் சிறந்ததென்பது (தொல். பொருள் ௩00. பேரா.)

(பாடம்) † திறத்திய லென்ப.

௨௯௮. *தோழிக் காயின் நிலம்பெயர்ந் துரையாது.

என்—எனின். இது தோழியுவமை கூறுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) தோழி உவமைசொல்லின் அந்நிலத்தினுள்ளன வன்றிப் பிறநிலத்துள்ளன கூறப்பெறாள் என்றவாறு.

உரையாது உவமம் என ஒருசொல் வருவிக்க. உதாரணம் தோழி கூற்றுட் காண்க. (௨௭)

௨௯௯. கிழவோற் காயின் உரனொடு கிளக்கும்.

என்—எனின். இது தலைமகன் உவமை கூறுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) தலைவன் உவமை கூறுவானாயின், அறிவொடு கிளக்கப்படும் என்றவாறு.

அன்றியும், உரனொடு கிளக்கு முவமையெனப் பெயரெச்சமாக்கிப் பெயர் வருவித்தலுமாம். உதாரணம் தலைவன் கூற்றுட் காணப்படும். (௨௮)

௩௦௦. †ஏனோர்க் கெல்லாம் இடம்வரை வின்றே.

(இ - ள்.) மேற்சொல்லப்பட்ட மூவருமல்லாத கற்றாய் செவிலி முதலாயினார்க்கு உவமை கூறுமிடம் வரையறுக்கப் படாதென்றவாறு. (௨௯)

௩௦௧. இனிதுறு கிளவியும் துனியுறு கிளவியும்
உவம மருங்கில்‡ தோன்றும் என்ப.

என்—எனின். இது தலைவற்குந் தலைவிக்குந் தோழிக்கு முரிய தோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) மகிழ்ச்சி பயக்குங் கூற்றும் புலவிபயக்குங் கூற்றும் உவமப்பக்கத்தால் தோன்றும் என்றவாறு.

"மாரி யாம்பல் அன்ன கொக்கின்
பார்வ லஞ்சிய பருவரல் ஈர்ஞெண்டு
கண்டல் வேரளைச் செலீஇய ரண்டர்
கயிறரி யெருத்திற் கதழ்பூந் துறைவ§" (குறுந். ௧௧௭)

என்றது தலைமகள் உவமை கூறியவழி நின்ற பெண்டிர் தடுப்பக் கயிறரி யெருதுபோலப் போந்தனை யெனத் துனியுறு கிளவி வந்தது.

---

* ௨௯௭, ௨௯௮ இரண்டு சூத்திரங்களையும் ஒரு சூத்திரமாக்குவர் பேராசிரியர்.

† ௨௯௯, ௩௦௦ இரண்டையும் ஒன்றாக்குவர் பேராசிரியர்.

‡ 'மருங்கு' என்னும் மிகையானே ஏனையுவமத்தின் கண்ணும் இப் பகுதி கொள்ளப்படும்; அவை,

"மருந்தெனின் மருந்தே வைப்பெனின் வைப்பே." (குறுந். ௭௧) (தொல். பொருள். ௩௦௩. பேரா.)

(பாடம்) § கயிறரி எருத்தின் கதழுந் துறைவன்.

" ... ... வானத்
தணங்கருங் கடவு ளன்னோள்நின்
மகன்தா யாதல் புரைவதால் எனவே" (அகம். ௧௬)

என மகிழ்ச்சிபற்றி வந்தது. பிறவும் அன்ன. (௩0)

௩0௨. கிழவோட் குவமை ஈரிடத்* துரித்தே.

என்—எனின். தலைமகள் உவமை கூறுமிடன் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) தலைமகள் உவமை கூறுங்கால் மேற்சொல்லப் பட்ட இரண்டிடத்தும் உரித்து என்றவாறு.

எனவே இரண்டும் அல்வழி உவமை கூறப்பெருள் என்றவாறும்.

௩0௩. கிழவோற் காயின் இடம்வரை வின்றே.

என்—எனின். தலைமகற்குரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) தலைமகன் உவமை கூறுதல் எப்பொருட்கண்ணு மாம் என்றவாறு. (௩௨)

௩0௪. தோழியுஞ்† செவிலியும் பொருந்துவழி நோக்கிக்
கூறுதற் குரியர் கோள்வழி யான.

(இ - ள்.) தோழியுஞ் செவிலியும் உவமை கூறுங்காற் பொருந்துமிடம் பார்த்துக் கூறுதற்குரியர் கேட்டோர் கொள்ளு நெறியான் என்றவாறு.

"பருதியஞ் செல்வன் விரிகதிர்த் தானைக்
கிருள்வளை வுண்ட மருள்படு பூம்பொழில்"

என வரும். பிறவுமன்ன. மேற்காட்டினவற்றுள் கண்டுகொள்க. (௩௩)

---

* இரண்டிடம் என்பன. மருதமும் நெய்தலும். அந்நிலத்துப் பிறந்த பொருள்பற்றி யல்லது உள்ளுறை உவமம் சொல்லுதல் கிழத்திக்கு உரித்து அன்றென்பது கருத்து. 'கிழவோட்குவமம் பிரிவிடத்'துரித்து' என்பது பாடமாக உரைப்பாருமு உளர். யாதானும் ஒரு நிலத்தாயினும் பிரிந்திருந்த இடத்து உள்ளுறையுவமம் கூறப்பெறுங் கிழத்தி என்பது இதன் கருத்து. பெருந்தண் வாடையின் முந்துவந்தோன் என்பது பிரிவன் ருகலின் ஈரிடம் என்றலே வலிதென்பது.
(தொல். பொருள். ௩0௪. பேரா.)

† காலமும் இடனும் பொருந்துதல் என்பது வெளிப்படக் கிளவாது முன்னத்தான் மறைத்துச் சொல்ல வேண்டியவழி அவ்வாறு சொல்லப் பெறுப அவரும் என்றவாறு. இங்ஙனம் கூறவே, 'ஏனோர்க்கெல்லாம் இடம் வரைவின்று.' (௩00) என்றவழி. எல்லாரும் உள்ளுறையுவமம் சொல்லப்பெறுவா என்பதுபட்டது. (தொல். பொருள். ௩௦௬. பேரா.)

௩௦௫. வேறுபட* வந்த உவமைத் தோற்றம்
கூறிய மருங்கிற் கொள்வழிக் கொளாஅல்.

என்—எனின். மேலனவற்றிற் கெல்லாம் புறனடை யுணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) ஈண்டு எடுத்தோதப்பட்ட இலக்கணத்தின் வேறுபட்டுவந்த உவமைத்தோற்றம் எடுத்தோதிய நெறியிற் கொள்ளும்வழிக் கொளுவுக என்றவாறு.

"பருதியஞ் செல்வன் விரிகதிர்த் தானைக்
கிருள்வளை வுண்ட மருள்படு பூம்பொழில்" (௩-௭)

என வரும். பிறவுமன்ன.

௩௦௬. ஒரீஇக்† கூறலும் மரீஇய பண்பே.

என்—எனின். இதுவு முவமைக் குரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) உவமையை உவமிக்கப்படும் பொருளின் நீக்கிக் கூறலும் மருவிய இயல்பு என்றவாறு.

"கடந்தடு தானைச் சேர லாதனை
யாங்ஙனம் ஒத்தியோ வீங்குசெலல் மண்டிலம்
பொழுதென வரைதி புறக்கொடுத் திறத்தி
மாறி வருதி மலைமறைந் தொளித்தி
அகலிரு விசும்பி னானும்
பகல்விளங் குதியாற் பல்கதிர் விரித்தே" (புறம். ௮)

என வரும்.

"அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்." (குறள். ௧௧௨௦)

என்பது மது. (௩௫)

---

* வேறுபட வருதல் என்பது: உவமைக்கும் பொருட்கும் ஒப்புமை மாறுபடக் கூறுதலும், ஒப்புமைகூறு பெயர்போல்வனவற்று மாத்திரையானே மறுத்துக் கூறுதலும்...............உவமானத்தினை உவமேயம் ஆக்கியும் அது விலக்கியும் கூறுதலும்...இன்னோரன்ன எல்லாம் 'வேறுபடவந்த உவமத் தோற்றம்' எனப்படும். கொளாஅல்—கொளுவுதல். இவற்றைக் 'கூறிய மருங்கிற் கொளுத்துதல்' என்பது. முற்கூறிய ஏனை உவமத்தின்பாலும் பிற்கூறிய உள்ளுறை யுவமத்தின்பாலும் படுத்து உணரப்படும் என்பது. (தொல். பொருள். ௩௦௭. பேரா.)

† இவற்றுள், யாங்ஙனம் ஒத்தியோ என்பது ஒவ்வாய் என்னும் பொருட்டு, அஃதாவது ஒரீஇக்கூறியது. (தொல். பொருள். ௩௦௮. பேரா.)

௩௦எ. உவமைத் தன்மையும் உரித்தென மொழிப
*பயனிலை புரிந்த வழக்கத் தான.

என்—எனின். இதுவு மது.

(இ - ள்.) உவமிக்கப்படும் பொருளோடு உவமைதோன்ற வருதலேயன்றி யுவமையது தன்மை கூறலு முவமையாதற் குரித்து; பயனிலை பொருந்திய வழக்கின்கண் என்றவாறு.

எனவே இவ்வாறு வருவது பயனிலை யுவமைக்கண் என்று கொள்க.

"பாரி பாரி யென்றுபல ஏத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி யொருவனும் அல்லன்
மாரியு முண்டீண் டுலகுபுரப் பதுவே." (புறம். ௧0எ)

இது மாரி போலும் பாரியது கொடை என்னுது இவ்வாறு கூறும் பொருண்மையும் உவமமாம் என்றவாறு. (௩௬)

௩௦அ. †தடுமாறு வரலும் கடிவரை வின்றே.

என்—எனின். இதுவும் உவமைக்குரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) உவமைக்கண் தடுமாறு வருதல் நீக்கப்படாது என்றவாறு.

தடுமாறுந லாவது— ஐயமுறுதல். எனவே ஐயநிலையுவமமுங் கண்டு கொள்க.

"கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
நோக்கமிம் மூன்றும் உடைத்து" (குறள். ௧0அ௫)

என்றும்,

"ஈங்கே வருவாள் இவள்யார்கொ லாங்கேயோர்
வல்லவன் தைஇய பாவைகொல் நல்லார்
உறுப்பெலாங் கொண்டியற்றி யாள்கொல் வெறுப்பினால்
வேண்டுருவங் கொண்டதோர் கூற்றங்கொல்" (கலித். ௫௬)

என்றும் வரும்; பிறவும் அன்ன. (௩௭)

---

* இப் பாட்டினுள் உலகளித்தற்கு மாரியும் உண்டென மாரியை உவமித்துச்சிறப்பித்துக் கூறுவான், மாரியைச் சிறப்பித்துப் பாட்டுடைத் தலைவனாகிய பாரியை உயர்த்துக்கூறுதான் போல இயல்பினான் உவமை கூறினான். இது மாரிக்கும் பாரிக்கும் ஓர் இழிவு இல்லை என்னும் தன்மை படக்கூறவே அவன் உயர்வு கூறுதலின் 'பயனிலைபுரிந்த வழக் கெனப்படும்' என்பது. (தொல். பொருள். ௩0௧. பேரா.)

(பாடம்) † தடுமா றுவமம்.

௩௦௩ * அடுக்கிய தோற்றம் விடுத்தல் பண்பே
† நிரனிறுத் தமைத்தல் நிரனிறை சுண்ணம்
‡ வரன்முறை வந்த மூன்றலங் கடையே.

என்—எனின். உவமை பல வந்தவழி வருவதோர் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அடுக்கிய தோற்றமாவது—உவமைபல அடுக்கித் தோற்றுதல்.

நிரனிறுத்தமைத்த லாவது—ஒரு பொருளொடு தோற்று தொடரை யுடைத்தாகப் பலவுவமை வருதல்.

நிரனிறை யாவது—உவமை பலவற்றையுஞ் சேரநிறுத்தி யுவமிக்கப் படும் பொருளையுஞ் சேர நிறுத்தல்.

சுண்ணமென்பது—உவமையையும் பொருளையுந் துணித்து ஒட்டுதல்.

வரன்முறை வந்த மூன்றலங் கடையே என்பது—அடுக்கியவுவமை கடியப் படும்; ஆமென்று வரையப்பட்ட நிரனிறுத்தன் முதலிய மூன்றும் அல்லாதவழி என்றவாறு.

அவற்றுள், கடியப்பட்டது உவமைக் குவமையாக அடுக்கி வருவது.

"வெண்திங்கள் போன்றுளது வெண்சங்கம் வெண்சங்கின்
வணடிங்கு தாழை வளர்கோடு"

என்றவழி அவ்வாறு உவமைக்குவமையாகக் கூறியவதனுற் போதுவ தோர் பயன் இன்மையின் ஆகாதென்று கொள்க.

---

* இதனை ௩௧௧, ௩௧௨ என இரண்டாக்குவர் பேராசிரியர்.

† இவ்வோத்தினிற் கூறுகின்ற உவமங்களுள் சிலவற்றையும் சொல்லதிகாரத்துள்ளும் செய்யுளியலுள்ளும் சொல்லுகின்ற சில பொருள்களையும் வாங்கிக்கொண்டு மற்றவை செய்யுட்கணணே அணியாம் என இக்காலத்தாசிரியர் நூல் செய்தாருமுளர். அவை ஒரு தலையாகச் செய்யுட்கு அணி என்று இலக்கணங் கூறப்படா. என்னை? வல்லார் செய்யின் அணியாகியும் அல்லார் செய்யின் அணியன்றாகியும் வரும், தாங்காட்டிய இலக்கணத்தில் சிதையாவழியும் என்பது..........ஆனந்த உவமை என்பன சிலகுற்றம் அகத்தியனார் செய்தார் எனக் கூறுப ஆகலின் அவையிற்றை எவ்வாறு கோடும் எனின் அவைகள் தாம் அகத்துள்ளும் பிற சான்றோர் செய்யுளுள்ளும் வருதலின் குற்றமாகா; அகத்தியனரால் செய்யப்பட்ட மூன்று தமிழினும் அடங்காமை வேறு ஆனந்த ஒத்து என்பது ஒன்று செய்தாராயின் அகத்தியமும் தொல்காப்பியமும் நூலாக வந்த சான்றோர் செய்யும் குற்றம் வேறுபடா என்பது. (தொல். பொருள். ௩௧௧. பேரா.)

‡ வரைநிலை வைத்த.

நிரனிறுத்தமைத்தல் வருமாறு :—

"நிலநீர் வளிவிசும் பென்ற நான்கின்
அளப்பரி யையே" (பதிற்று. கச)

"மதிபோலுந் தாமரை போலும்"

என வரும்.

நிரனிறை வருமாறு :—

"கொடிகுவளை கொட்டை நுசுப்புண்கண் மேனி
மதிபவள முத்த முகம்வாய் முறுவல்
பிடிபிணை மஞ்ஞை நடைநோக்குச் சாயல்
வடிவினளே வஞ்சி மகள்" (யாப். வி. பக். கூ௰க)

என வரும். சுண்ணமாவது :—

"களிறும் கந்தும் போல நளிகடற்
கூம்பும் கலனுந் தோன்றும்
தோன்றன் மறந்தோர் துறைகெழு நாட்டே."
(அகத்திணை. கக. நச்.)

என்றவழி நிரனிறையன்றிக் களிறுபோலுங் கலன் எனத் துணிக்க வேண்டியவாறு கண்டுகொள்க. (௩அ)

ஏழாவது உவமையியல் முற்றிற்று.

---

## எட்டாவது

# செய்யுளியல்

இவ்வோத்து என்ன பெயர்த்தோ வெனின், செய்யுளியலென்னும் பெயர்த்து. செய்யுளிலக்கணம் உணர்த்தினமையாற் பெற்றபெயர். மேலுணர்த்தப்பட்ட பொருண்மை யெல்லாவற்றிற்கும் இஃதிடமாதலின் அவற்றின்பிற் கூறப்பட்டது.

௩௧௦. மாத்திரை யெழுத்தியல் அசைவகை எனாஅ
யாத்த சீரே அடியாப் பெனாஅ
மரபே தூக்கே தொடைவகை எனாஅ
நோக்கே பாவே அளவியல் எனாஅ
திணையே கைகோள்* பொருள்வகை எனாஅ
கேட்போர் களனே காலவகை எனாஅ
பயனே மெய்ப்பா டெச்சவகை எனாஅ
முன்னம் பொருளே துறைவகை எனாஅ
மாட்டே வண்ணமோ டியாப்பியல் வகையின்
ஆறு தலையிட்ட அந்நா லைந்தும்
அம்மை அழகு தொன்மை தோலே
விருந்தே இயைபே புலனே இழைபெனாஅப்
பொருந்தக் கூறிய எட்டோடுந் தொகைஇ
நல்லிசைப் புலவர் செய்யு ளுறுப்பென
வல்லிதிற் கூறி வகுத்துரைத் தனரே.

என்பது சூத்திரம்.

இதன் றலைச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், செய்யுளுறுப் பெல்லாந்† தொகுத்துணர்த்துதல் நுதலிற்று.

---

(பாடம்.) * கூற்றுவகை

† முற்கூறிய எழுவகை ஓத்தும் வழக்கிற்கும் செய்யுட்கும் பொது என்பதூஉம்; இது செய்யுட்கே உரித்தென்பதூஉம் பெற்றாம். மற்றிதனை யாப்பதிகாரம் என வேறோர் அதிகாரமாக்கி உரைப்பாரும் உளர்; அங்ஙனம் கூறின் வழக்கதிகாரம் எனவும் வேறு வேண்டுமென மறுக்க. அல்லதூஉம் எழுத்தும் சொல்லும் பொருளும் என மூன்றற்கு மூன்றதிகாரமாக்கி அதிகாரம் ஒன்றற்கு ஒன்பது ஓத்தாகத் தந்திரம் செய்ததனோடு மாறு கோளாம், இதனை வேறு அதிகாரம் என்பார்க்கென்பது. (தொல் பொருள் ௩௧௩. பேரா.)

(இ - ள்.) மாத்திரை முதலாகச் சொல்லப்பட்ட முப்பத்து நான்குஞ் செய்யுட்கு உறுப்பென்றவாறு.

பிற்கூறிய எட்டும் மேற்கூறிய இருபத்தாறினோடும் ஒருநிகரன அன்மையின், வேறுதொகை கொடுக்கப்பட்டது. அவையாமாறு தத்தஞ் சூத்திரத்துக் காட்டுதும். (௧)

௩௧௧. அவற்றுள்,
மாத்திரை வகையும்* எழுத்தியல்† வகையும்
மேற்கிளந் தனவே‡ யென்மனார் புலவர்.

(இ - ள்.) என்—எனின். மேற்சொல்லப்பட்டவற்றுள் மாத்திரை வகையு மெழுத்தியல் வகையு மேல் எழுத்ததிகாரத்துச் சொல்லப்பட்டன வென்று சொல்லுவர் புலவரென்றவாறு.

ஈண்டு வேறுபாடில்லை யென்றவாறு. அவையாவன குற்றெழுத்தொருமாத்திரை; நெட்டெழுத்து இரண்டு மாத்திரை; உயிரளபெடை மூன்றுமாத்திரை; குற்றிய லிகரமுங் குற்றியலுகரமும் ஆய்தமு மெய்யும் ஓரோவொன்று அரை மாத்திரை; ஒற்றளபெடை ஒரு மாத்திரை; ஐகாரக் குறுக்கம் ஒரு மாத்திரை; மகரக்குறுக்கங் கால்மாத்திரை; ஏறிய உயிரினளவே உயிர்மெய்க்களவு.

எழுத்தியலாவது—உயிரெழுத்து, மெய்யெழுத்து சார்பெழுத்தென மூவகைப்படும். உயிரெழுத்து குற்றெழுத்து, நெட்டெழுத்து, அளபெடை யென மூவகைப்படும். மெய்யெழுத்து வல்லினம், மெல்லினம், இடையின மென மூவகைப்படும். சார்பெழுத்து குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தமென மூவகைப்படும். மெய்யினுட் சிலவும் ஆய்தமும் அளபெடுக்கப் பெறும்.

குற்றெழுத்து அ, இ, உ, எ, ஒ. நெட்டெழுத்து ஆ, ஈ, ஊ, ஏ ஐ ஓ, ஔ. அளபெடை ஆஅ, ஈஇ, ஊஉ, ஏஎ, ஐஇ ஓஒ, ஔஉ. வல்லினம் க ச ட த ப ற. மெல்லினம் ங ஞ ண ந ம ன. இடையினம் ய ர ல வ ழ ள. குற்றியலுகர மாவது நெட்டெழுத்தின் பின்னரும் மூன்றெழுத்து முன்னுன மொழியினும் வல்லெழுத்தை ஊர்ந்து வந்த உகரம். நாகு - நாக்கு; காசு - காச்சு; காடு - காட்டு; காது - காத்து; காபு காப்பு; காறு- காற்று என இந்நிகரன. குற்றியலிகரமாவது இவ்வுகரந்திரிந்து மகர மூர்ந்து மகரமோடியைந்து வரும். நாகியாது உகரந்திரிந்தது; கேண்மியா மகர மூர்ந்தது பிறவு மன்ன. ஆய்தமாவது குற்றெழுத்திற்கும் வல்

(பாடம்) * அளவும்.

† உயிர் மெய்த்தொடக்கத்து ஐந்தனையும் மேல் எழுத்தென்றிலன் ஆகலான் ஈண்டு எழுத்தியல் வகையுள் எழுத்தாக்கி அடக்குமாறு என்னை யெனின் ஈண்டு அன்னை எனவே, ஆண்டு இரண்டெழுத்தின் கூட்டம் எனவும் மொழி எனவும் போலி எனவும் கூறினன் ஆயினும், அவற்றை எழுத்தியல்வகை எனப் பெயர் கொடுப்பவே ஆண்டு நின்றவகையானே ஈண்டு எழுத்தெனப்படும் - என்பதாயிற்று. (தொல். பொருள் ௩௧௪. பேரா.)

(பாடம்) ‡ தன்ன.

லெழுத்திற்கும் இடைவரும். அஃதாவது எஃகு என வரும். ஒற்றள பெடையாவது மெல்லினமும் வயலளவும் ஆய்தமும் அளபெடுக்கும். அவை மங்ங்கலம், மஞ்ஞ்சு என வரும்.

இனி உயிருமெய்யுங் கூடி உயிர்மெய்யெழுத்தாம். அவை ககர முதல் னகரவீறுகிய இருநூற்றொருபத்தாறும், இன்னும் ஐகாரக்குறுக்க மும் மகரக்குறுக்கமும் என்பவுமுள. ஐகாரக்குறுக்கம் அளபெடையுந் தனியு மல்லாதவழிக் குறுகும் மகரக்குறுக்கம் ணகர னகர ஒற்றின் பின்வரும். புணர்மொழிக்கண் வகரத்தின் மேனின்ற மகரங் குறுகும்.

இவையெல்லாம் எழுத்ததிகாரத்துட் காண்க. (உ)

௩௧௨. குறிலே நெடிலே குறிலிணை குறில்நெடில்
ஒற்றொடு வருதலொடு மெய்ப்பட நாடி
நேரும் நிரையு மென்றிசிற் பெயரே.

என்பது நிறுத்தமுறையானே அசையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) குறிலும் நெடிலுங் குறிலிணையுங் குறினெடிலுந் தனியே வரினும் ஒற்றொடு வரினும், ஆராயுங்காலத்து நேரசையும் நிரையசையுமா மென்றவாறு.

இதுவு மொரு நிரனிறை; முந்துற்ற நான்கு மொருபொருளாய்ப் பின்னிரண்டாகி வரினும், முற்பட்டவையும் இரண்டாகப் பகுத்தலான். கோ ழி வேந் தன், என நான்குநேரசையும், வெறி சுறு நிறம் குரால், என நான்கு நிரையசையும். (௩)

௩௧௩. இருவகை உகரமோ* டியைந்தவை வரினே
நேர்பு நிரையும் ஆகும் என்ப
குறிலிணை உகரம் அல்வழி யான.

இதுவுமது.

(இ - ள்.) மேற்சொல்லப்பட்ட இரண்டசையுங் குற்றிய லுகரமுமல்லாத முற்றியலுகரமும் பொருந்திவரின், நேர்பசையு நிரைபசையு மெனப்பெயராகும்; அவ்வழிக் குற்றெழுத்தொடு பொருந்தின உகரமல்லாத விடத்தென்றவாறு.

காது, காற்று, கன்று; காவு, சார்பு, கல்லு என்பன நேர்பசை. வரகு, அரக்கு, மலாடு பனட்டு. கதவு புணர்வு, உருமு, விறவு என்பன நிரைபசை. தொகுத்து நேர்க்குழி நேர், நிரை நேர்பு, நிரைபு என்பன

*உகர ஈறல்லாத தேமா என்பதனுன் முடியா என்பர். அத குற்றுகரத்தின் செய்கை முற்றுகரத்திற்கும் வேண்டி, நேர்பு நிரைபு கொண்டான் என்பது அற்றன்றியும் குற்றுகரம் சார்ந்து தோன்று மாறுபோல இம் முற்றுகரமும் வருமொழி காரணமாக நிலைமொழி சார்ந்து தோன்றுதல் ஒப்புமை நோக்கியும் அதனைக் குற்றுகரம்போல ஓரசைக்கு உறுப்பாம் என்றான் என்பது. (தொல். பொருள். ௩௧௬.பேரா)

தாமே யுதாரணமாம். அஃதேல் நேர்பசை நிரைபசையெனக் காக்கை பாடினியார் முதலாகிய ஒருசாராசிரியர் கொண்டிலரா லெனின், அவர் அதனை யிரண்டசையாக்கியுரைத்தாராயினும் அதனை முடியநிறுத்தராது, வெண்பா வீற்றின்கண் வந்த குற்றுகரநேரீற்றியற்சீரைத் தேமா புளிமா என்னும் உதாரணத்தான் ஓசையூட்டிற் செப்பலோசை குன்றுமென் றஞ்சி, காசு பிறப்பென உகரவீற்று னுதாரணங்காட்டினமையானும், சீருந்தளையுங் கெடுவழிக் குற்றியலுகரம் அல்குபெருதென்றமையானும், வெண்பா வீற்றினு முற்றுகரமுஞ் சிறுபான்மை வருமென உடன்பட் டமையானும், நேர்பசை நிரைபசை யென்று வருதல் வலியுடைத்தென்று கொள்க. அவை செய்யுளீற்றின்கண் வருமாறு:

> "பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
> இறைவனடி சேரா தார்" (குறள். க0)
>
> "வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்
> கியாண்டும் இடும்பை இல" (குறள். ச)
>
> "இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
> பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு" (குறள். ரு)
>
> "தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லான்
> மனக்கவலை மாற்றல் அரிது" (குறள். எ)

என வரும். பிறவு மன்ன.

அலகிடுங்கால் நேரசை ஓரலகு; நிரையசை யிரண்டலகு; நேர்பசை மூன்றலகு; நிரைபசை நான்கலகு பெறும். (ச)

ருகச. *இயலசை முதலிரண் டேனவை† உரியசை.

என்—எனின் மேற்சொல்லப்பட்ட அசைக்குப் பிறிதோர் குறியிடுதல் நுதலிற்று.

(இ - ள்) முற்பட்ட நேரசையும் நிரையசையும் இயலசை யெனக் குறிபெறும். நேர்பசையும் நிரைபசையும் உரியசை யெனக் குறிபெறும் என்றவாறு. (ரு)

ருகரு. தனிக்குறில் முதலசை மொழிசிதைந்‡ தாகாது.

என்—எனின். இதுவும் அசைக்குரியதோர் மரபுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) தொடர்மொழிக்கண் மொழி சிதைந்து தனிக் குறில் நேரசை யாகா தென்றவாறு.

---

*இயலசை உரியசை என்று ஆளும் ஆகலானும் இயற்கையால் இயறலின் இயலசை யெனவும், அவை செய்யும் தொழில் செய்தததற்கு உரிய வாகலான் உரியசை எனவும் ஆட்சியும் குணனுங் காரணமாகப் பெயர் எய்துவித்ததூஉம் ஆயிற்று. (தொல். பொருள். ருகஅ. பேரா.)

(பாடம்) † டேனைய. ‡ மொழிசிதைத்.

மொழிசிதைத்தலாவது—ஒற்றுமைப் பட்டிருக்கின்றதனைப் பிரித்தல். அஃதாவது புளிமா என்றவழி நிரைநேராக அலகிடாது முதனின்றதனை நேரசையாக்கி யிடை நின்றதூஉ மிறுதிநின்றதூஉம் நிரையசையாதல். அவ்வழிப் புளி யென்னுஞ் சொல்லைப் பிரிக்கவேண்டுதலின் நிரையசை யாகவே கோடல்வேண்டு மென்றவாறு. இனி, மொழி சிதையாக்கால் நேரசையாம். அது விட்டிசைத்து நிற்றல். "அஉ மறியா...ஞட்டைநீ" (யாப். வி. பக். கசஉ) ஏனவும், "அஆ இழந்தானென் றெண்ணப் படும்" (நாலடி. கூ) எனவும் வருவன முதலெழுத்து நேரசையாம். (சு)

ஙகசு. ஒற்றெழுத் தியற்றே* குற்றிய லிகரம்.

என்—எனின். இதுவுமது.

(இ - ள்.) குற்றியலிகரம் ஒற்றெழுத்து இயல்பிற்று என்றவாறு.

அடியினதிடைக்கண் ஒற்றுமைப்பட்ட சொல்லின்கண் நேரசை என்று.........எனவே அலகுபெறுதென்றவாறும்.

"பேதை யென்ப தியாதெனவினவின்
ஓதிய இவற்றை உணராது மயங்கி
இயற்படு பொருளாற் கண்டது மறந்து
முயற்கோ டுண்டெனக் கண்டது தெளிதல்."

இதன்கட் குற்றியலுகரம் அலகு பெறுதவாறு காண்க. (எ)

ஙகஎ. முற்றிய லுகரமும் மொழிசிதைத்துக் கொளாஅ
நிற்றல் இன்றே ஈற்றடி மருங்கினும்.

என்—எனின். முற்றியலுகரத்திற் குரிய வேறுபா டுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) முற்றியலுகரமு மொழிசிதைந்து நேர்பசை நிரைபசை யென்றுரைக்கப்படாது; அஃது ஈற்றடி மருங்கிற் றனியசையாகி நிற்றலும் இன்றென்றவாறு.

எனவே அடியின திடைக்கண் ஒற்றுமைப்பட்ட சொல்லின்கண் நேர்பசை நிரைபசையெனக் காட்டப்படாது. அது ஈற்றடி மருங்கிற் றனியசையாகி நில்லா வென்பதூஉம், ஒற்றுமைப்படாத சொல்லின்கண் தனியசையாமென்பதூஉம், ஈற்றடிக்கண் எவ்வழியானுந் தனியசை யாகாதென்பதூஉம் உணர்த்தியவாறும்.

* குற்றுகரத்திற்குப் புள்ளி பெறுதலுங் கூறினன்; அதுபோலக் குற்றிகரமும் புள்ளிபெற்று நிற்றல் உடைத்தெனவும் ஈண்டுக் குற்றுகரம் நேர்பும் நிரைபுமாகியவாறுபோலத் தானும் ஓர் அசையாகும் கொல் என்று ஐயுறுவது வேண்டா ஒற்றுநின்றாங்கு நின்று இயலசை உரியசை களைச் சார்ந்து வருதலும் ஒற்றுப்போல எழுத்தெண்ணப்படாமையும் உடைத்தது என்றவாறும் ஆயிற்று. (தொல். பொருள். ஙஉ0. பேரா.)

"அங்கண் மதியம் அரவுவாய்ப் பட்டெடன" (அகத்திணை. பக். உ0) என்றவழி அரவென்பது மொழிசிதையாமையின் நிரைபசை யாயிற்று.

"பெருமுத் தரையர் பெரிதுவந் தீயும்" (நாலடி. உ00)

என்றவழி பெரு முன்னர்க் குறித்துச் சீராக்கவேண்டுமாயின் ஈண்டு மொழிசிதைத்தலின் நிரைபசை யாகாதாயிற்று.

"இனமலர்க் கோதாய் இலங்குநீர்ச் சேர்ப்பன்
புணைமலர்த் தாரகலம் புல்லு" (யாப். வி. பக், உ0க)

"மஞ்சுசூழ் சோலை மலைநாட மூத்தாலும்
அஞ்சொன் மடவாட் கருளு" (யாப். வி. பக். உகக)

என்பதனுற்கொள்ளற்க. இவை புல்லு அருளு என வருமாலெனின்: "நிற்றலின்றே யீற்றடிமருங்கினும்" என்பதனுன் ஈற்றடியிறுதியினு மிடையடியிறுதியினு முற்றியலுகரம் நில்லாதெனவும் பொருளாம்: இத னுனே அவ்வாறு வருதலுங்கொள்க. முற்றியலுகரமு மென்ற வும்மை இறந்தது தழீஇய எச்சவும்மை. (அ)

ருகஅ. குற்றிய லுகரமும் முற்றிய லுகரமும்
*ஒற்றொடு தோன்றி நிற்கவும் பெறுமே.

என்—எனின். எய்தியது விலக்கல் நுதலிற்று.

(இ - ள்.) இருவகை யுகரமும் ஒற்றொடு தோன்றித் தனி யசையாகிநிற்கவும் பெறுமென்றவாறு.

உம்மை யிறந்தது தழீஇயிற்று.

உதாரணம்

"படுகிளி யாவும் பசுங்குரல் ஏனல்
கடிதின் மறப்பித்தா யாயின் இனிநீ
நெடிதுள்ளல் ஓம்புதல் வேண்டும்." (கலித். ௬0)

இதன்கட் குற்றியலுகரம் ஒற்றொடுவருதலான் நேரசையாயிற்று.

"கண்ணும் படுமோ என்றிசின் யானே." (நற்றிணை. சுக)

இதன்கண் முற்றியலுகரம் ஒற்றொடு வருதலான் நேரசையாயிற்று.

* இருவகை உகரமும் ஒற்றடுத்து உரியசை ஆயின. உம்மை எதிர் மறை ஆகலான் ஒற்றின்றி வருதலே பெரும்பான்மை. இங்ஙனம் வருமொழி ஒற்றுமிகின் அவை கொண்டு நேர்பும் நிரைபும் ஆம் எனவே, 'உண்ணும்' எனவும் நடக்கும் எனவும் நிலைமொழி ஒற்றுநின்றவழித் தேமாவும் புளிமாவும் ஆவதல்லது நேர்பசையும் நிரைபசையும் ஆகா தென்பதாம். (தொல். பொருள். ருஉஉ. பேரா.)

௩௧௯. அசையுஞ் சீரும் இசையோடு சேர்த்தி
வகுத்தனர்* உணர்த்தல்† வல்லோர் ஆறே.

என்—எனின். வகைபுளி புணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அசையையுஞ் சீரையும் ஓசையோடு சேர்த்திப் பாகுபாடுணர்த்தல் வல்லோர்கள் நெறி யென்றவாறு.

அஃதாவது பொருளொடு சொல்லை யறுத்தவழித் தளையுஞ் சீருஞ் சிதையின் அவ்வழி ஓசையை நோக்கி அதன்வழிச் சேர்த்துக என்றவாறு.

அது வருமாறு :

''மலர்மிசை ஏகினன் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்'' (குறள். ௩)

என்றவழி வாழ்வாரெனப் பொருணோக்கிச் சீராமாயின் ஓசை கெடும். அதன்கண் 'வாழ்' என்பதனை முதனின்ற சீரோடொட்டக் கெடாதாம். பிறவு மன்ன.

இத்துணையுங் கூறப்பட்டது அசைவகை. (௪0)

௩௨௦. ஈரசை கொண்டு மூவசை புணர்த்துஞ்
‡சீரியைந் திற்றது சீரெனப் படுமே.

என்—எனின். நிறுத்தமுறையானே சீராமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) இரண்டசைகொண்டு புணர்த்தும், மூன்றசை கொண்டு புணர்த்தும், ஓசை பொருந்தி யிற்றது சீரெனப்படும் என்றவாறு.

''தாமரை புரையுங் காமர் சேவடி'' (குறுந். கடவுள் வாழ்த்து)

என்றவழி நான்குசொல்லாகி ஓசை யற்றுநின்றவாறு கண்டு கொள்க.

---

*'வகுத்தல்' உணர்த்தல் என்றமையின் இனி, வெண்பாவினுள், வெண்சீர் ஒன்றிவந்த வழியும் வேற்றுத்தளை விரவும் இடனுடைய அவையும் இசையொடு சேர்த்தி வேறுபாடுணர்த்துக.
(தொல். பொருள். ௩௨௩. பேரா.)

(பாடம்) † உணர்த்தலும்.

‡ ஒருசீர் பலசொல் தொடர்ந்து வரினும் அவை ஒன்றுபட நிற்றல் வேண்டும் என்றவாறும். எனவே உலகத்துச் சொல்லெல்லாம் ஈரசை யானும் மூவசையானுமன்றி வாரா என்பது பெற்றும். இதனானே ஒரு சொல்லைப்பகுத்துச் சீர்க்கு வேண்டுமாற்றான் வேறு சீராக்கிய வழியும் அச்சீர்வகையானே வேறு சொல்லிலக்கணம் பெறும் என்பதும் கொள்க. ஈண்டு எனப்படும் என்பதேற்றி நாலசைச்சீர் கொண்டாரும் உளர். ஐயசைச்சீர் கொண்டாரைக் கண்டிலம் என்க.
(தொல். பொருள். ௩௨௪. பேரா.)

"எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு" (குறள். ௧௧0)

என்றவழி மூன்றசையினாற் சீராகியவாறும் அவ்வளவினான் ஓசையற்றுநின்றவாறுங் கண்டுகொள்க. (௧௧)

௩உ௧. இயலசை மயக்கம் இயற்சீர் ஏனை
உரியசை மயக்கம் ஆசிரிய உரிச்சீர்.

என்—எனின். ஈரசைச்சீர் பாகுபடுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) மேற்சொல்லப்பட்ட அசைகளில் இயலசை மயங்கிவந்தன இயற்சீர் எனப்படும்; உரியசை மயங்கிவந்தன ஆசிரியவுரிச்சீரெனப்படும் என்றவாறு.

மயங்குதலாவது ஒருங்குவருதல். நேர் நிரை நேர்பு நிரைபு: என்னு நான்கினையுந் தம்மினுறழப் பதினாறு அசைச்சீராம். அவற்றுள் இயலசையாகிய நேரும் நிரையுந் தம்மின் உறழ நான்கு சீராம். அவை இயற்சீர் எனப்படும்.

உதாரணம்

"தேமா, புளிமா, கருவிளம், கூவிளம்"

என வரும்.

இனி உரியசையாகிய நேர்பு நிரைபு மென்றவற்றைத் தம்மினுறழ நான்குசீராம். அவை ஆசிரிய உரிச்சீர் எனப்படும்.

உதாரணம்

"ஆற்றுநோக்கு, ஆற்றுவரவு, வரகுசோறு, வரகுதவிடு"

என வரும். (௧உ)

௩உஉ. முன்நிரை இறினும் அன்ன வாகும்.

என்—எனின். இதுவும் ஆசிரியவுரிச்சீ ராமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) நேர்பசை நிரைபசைப் பின், நிரை யிறுதியும் ஆசிரியவுரிச்சீரா மென்றவாறு

உதாரணம்

"யாற்றுமடை, குளத்துமடை"

என வரும். (௧௩)

௩உ௩. நேரவண் நிற்பின் இயற்சீர்ப் பால.

என்—எனின். இது இயற்சீர்க் குரியதோர் வேறுபாடு உணர்த்துதல்நுதலிற்று.

(இ - ள்.) உரியசைப் பின்னர் நேரசை வரின், அது இயற்சீ ரென வருமென்றவாறு.

உதாரணம்

"ஆற்றுக்கால், குளத்துக்கால்"

என வரும். (௧௪)

௩௨௪. *இயலசை ஈற்றுமுன் உரியசை வரினே
நிரையசை இயல ஆகு மேன்ப.

(இ - ள்.) இயலசைப் பின்னர் உரியசைவரின், நிரையசை வந்தாற்போலக் கொள்க வென்றவாறு.

எனவே இவையும் இயற்சீ ரென்றவாறும்.

உதாரணம்

"மாங்காடு, களங்காடு, பாய்குரங்கு, கடிகுரங்கு"

என வரும்

இத்துணையுங் கூறப்பட்டது ஈரசைச் சீர் பதினாறினும் இயற்சீர் பத்தும் ஆசிரிய வுரிச்சீர் ஆறுமா மென்றவாறு. (௧௫)

௩௨௫ †அளபெடை அசைநிலை ஆகலும் உரித்தே.

என்—எனின். சீர்க்கண் உயிரளபெடைக்குரியதோர் மரபுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) உயிரளபெடை அசையாக நிற்கவும் பெறும் என்றவாறு.

உம்மை எதிர்மறையாகலான் ஆகாமை பெரும்பான்மை.

உதாரணம்

"கடாஅ உருவொடு...வல்லதே ஒற்று." (குறள். ௫௮௫)

இது அளபெடை யலகுபெற்றது.

"இடைநுடங்க வீர்ங்கோதை பின்தாழ வாட்கண்
புடைபெயரப் போழ்வாய் திறந்த – கடைகடையின்
உப்போஒ எனவுரைத்து மீள்வாள் ஒளிமுறுவற்
கொப்போநீர் வேலி உலகு."

இதன்கண் அளபெடை யசைநிலையாகி யலகுபெறாதாயிற்று. (௧௬)

---

* இச்சூத்திரமும் சீராமாறே அன்றிச் சீர்தளைக்குமாறும் கூறிய வாறாயிற்று. (தொல். பொருள். ௩௨௮. பேரா.)

† இயலசை மயக்கமாகிய இயற்சீர் நான்குமாகி அளபெடை வந்தன. ஒழிந்த இயற்சீரும் மேல்நான்கனுள் அடங்குமாகலின் அளபெடை நான்கென்பாரும் உளர். அவை, தனிநிலை முதனிலை இடைநிலை இறுதிநிலை எனப்படும் என்ப (தொல். பொருள். ௩௨௧. பேரா.)

நஉகூ. ஒற்றள பெடுப்பினும் அற்றென மொழிப.

என்—எனின். ஒற்றளபெடைக் குரியதோர் மரபுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஒற்று அளபெடுத்துவரினும் அசை நிலையாக லும் உரித்து என்றவாறு.

மாட்டேற்று வகையான் ஆகாமை பெரும்பான்மை.

உதாரணம்

"கண்ண் டண்ண்ணெனக் கண்டுங் கேட்டும்" (மலைபடு. நஙஉ) என வரும். (கஎ)

நஉஎ. இயற்சீர் இறுதிமுன் நேரவண் நிற்பின்
உரிச்சீர் வெண்பா ஆகும் என்ப.

என்—எனின். வெண்பாவுரிச்சீர் ஆமா றுணர்த்துதல் நுத லிற்று.

(இ - ள்.) மேற்சொல்லப்பட்ட ஈரசைச்சீர் பதினாறோடு நான்கசையுங் கூட்டியுறழ, அறுபத்துநான்கு மூவசைச் சீராம். அவற்றுள் இயற்சீர்நான்கின்பின் நேரசை வந்த மூவசைச்சீர் நான்கும் வெண்பாவுரிச்சீராம் என்றவாறு.

உதாரணம்

"மாவாழ்கான், மாவருகான், புலிவாழ்கான், புலிவருகான்" என்பன. (கஅ)

நஉஅ. வஞ்சிச் சீரென வகைபெற் றனவே
வெண்சீ ரல்லா மூவசை என்ப.*

என்—எனின். வஞ்சியுரிச்சீர் ஆமா றுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) வஞ்சியுரிச்சீரெனப் பாகுபட்டன மேற்சொல்லப் பட்ட மூவசைச்சீர் அறுபத்து நான்கு சீரினும் வெண்சீரல்லாத அறுபது மென்றவாறு.

உதாரணம்

(க)

| | | | |
|---|---|---|---|
| க. | நேர் நேர் நிரை* | - | மா வாழ் நெறி |
| உ. | நேர் நேர் நேர்பு | - | மா வாழ் காடு |
| ங. | நேர் நேர் நிரைபு | - | மா வாழ் பொருப்பு |
| ச. | நேர் நிரை நிரை | - | மா வரு நெறி |

* இவ்வஞ்சிச் சீர்களுக்கு வாய்பாடுகள் புதியனவாகச் சேர்க்கப் பெற்றன.

| | | |
|---|---|---|
| ௯. | நேர் நிரை நேர்பு | - மா வரு காடு |
| ௧. | நேர் நிரை நிரைபு | - மா வரு பொருப்பு |
| ௭. | நேர் நேர்பு நேர் | - மா போகு கான் |
| ௮. | நேர் நேர்பு நிரை | - மா போகு நெறி |
| ௯. | நேர் நேர்பு நேர்பு | - மா போகு காடு |
| ௧௦. | நேர் நேர்பு நிரைபு | - மா போகு பொருப்பு |
| ௧௧. | நேர் நிரைபு நேர் | - மா வழங்கு கான் |
| ௧௨. | நேர் நிரைபு நிரை | - மா வழங்கு நெறி |
| ௧௩. | நேர் நிரைபு நேர்பு | - மா வழங்கு காடு |
| ௧௪. | நேர் நிரைபு நிரைபு | - மா வழங்கு பொருப்பு |

(௨)

| | | |
|---|---|---|
| ௧௫. | நிரை நேர் நிரை | - புலி வாழ் நெறி |
| ௧௬. | நிரை நேர் நேர்பு | - புலி வாழ் காடு |
| ௧௭. | நிரை நேர் நிரைபு | - புலி வாழ் பொருப்பு |
| ௧௮. | நிரை நிரை நிரை | - புலி வரு நெறி |
| ௧௯. | நிரை நிரை நேர்பு | - புலி வரு காடு |
| ௨௦. | நிரை நிரை நிரைபு | - புலி வரு பொருப்பு |
| ௨௧. | நிரை நேர்பு நேர் | - புலி போகு கான் |
| ௨௨. | நிரை நேர்பு நிரை | - புலி போகு நெறி |
| ௨௩. | நிரை நேர்பு நேர்பு | - புலி போகு காடு |
| ௨௪. | நிரை நேர்பு நிரைபு | - புலி போகு பொருப்பு |
| ௨௫. | நிரை நிரைபு நேர் | - புலி வழங்கு கான் |
| ௨௬. | நிரை நிரைபு நிரை | - புலி வழங்கு நெறி |
| ௨௭. | நிரை நிரைபு நேர்பு | - புலி வழங்கு காடு |
| ௨௮. | நிரை நிரைபு நிரைபு | - புலி வழங்கு பொருப்பு |

(௩)

| | | |
|---|---|---|
| ௨௯. | நேர்பு நேர் நேர் | - பாம்பு வாழ் கான் |
| ௩௦. | நேர்பு நேர் நிரை | - பாம்பு வாழ் நெறி |
| ௩௧. | நேர்பு நேர் நேர்பு | - பாம்பு வாழ் காடு |
| ௩௨. | நேர்பு நேர் நிரைபு | - பாம்பு வாழ் பொருப்பு |
| ௩௩. | நேர்பு நிரை நேர் | - பாம்பு வரு கான் |
| ௩௪. | நேர்பு நிரை நிரை | - பாம்பு வரு நெறி |
| ௩௫. | நேர்பு நிரை நேர்பு | - பாம்பு வரு காடு |
| ௩௬. | நேர்பு நிரை நிரைபு | - பாம்பு வரு பொருப்பு |
| ௩௭. | நேர்பு நேர்பு நேர் | - பாம்பு போகு கான் |
| ௩௮. | நேர்பு நேர்பு நிரை | - பாம்பு போகு நெறி |
| ௩௯. | நேர்பு நேர்பு நேர்பு | - பாம்பு போகு காடு |
| ௪௦. | நேர்பு நேர்பு நிரைபு | - பாம்பு போகு பொருப்பு |

சக. நேர்பு நிரைபு நேர் - பாம்பு வழங்கு கான்
சஉ. நேர்பு நிரைபு நிரை - பாம்பு வழங்கு நெறி
சங. நேர்பு நிரைபு நேர்பு - பாம்பு வழங்கு காடு
சச. நேர்பு நிரைபு நிரைபு - பாம்பு வழங்கு பொருப்பு

(சரீ

சரு. நிரைபு நேர் நேர் - களிறு வாழ் கான்
சசு. நிரைபு நேர் நிரை - களிறு வாழ் நெறி
சஎ. நிரைபு நேர் நேர்பு - களிறு வாழ் காடு
சஅ. நிரைபு நேர் நிரைபு - களிறு வாழ் பொருப்பு
சகூ. நிரைபு நிரை நேர் - களிறு வரு கான்
ருO. நிரைபு நிரை நிரை - களிறு வரு நெறி
ருக. நிரைபு நிரை நேர்பு - களிறு வரு காடு
ருஉ. நிரைபு நிரை நிரைபு - களிறு வரு பொருப்பு
ருங. நிரைபு நேர்பு நேர் - களிறு போகு கான்
ருச. நிரைபு நேர்பு நிரை - களிறு போகு நெறி
ருரு. நிரைபு நேர்பு நேர்பு - களிறு போகு காடு
ருசு. நிரைபு நேர்பு நிரைபு - களிறு போகு பொருப்பு
ருஎ. நிரைபு நிரைபு நேர் - களிறு வழங்கு கான்
ருஅ. நிரைபு நிரைபு நிரை - களிறு வழங்கு நெறி
ருகூ. நிரைபு நிரைபு நேர்பு - களிறு வழங்கு காடு
சுO. நிரைபு நிரைபு நிரைபு - களிறு வழங்கு பொருப்பு.

ஆக அறுபதும். " (கக)

ஙஉகூ. தன்பா அல்வழித் தான்நடை இன்றே.

என்—எனின். வஞ்சியுரிச்சீர்க்குரிய மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) வஞ்சியுரிச்சீர் வஞ்சிப்பாவினு ளல்லது நடை பெறுது என்றவாறு. (உO)

ஙஙO. வஞ்சி* மருங்கி னெஞ்சிய வுரிய.

என்—எனின். இது வஞ்சிப்பாவிற் குரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) வஞ்சிப் பாவினுள் ஒழிந்த சீர்கள் வரப்பெறும் என்றவாறு. (உக)

---

* வஞ்சியது பாவினை வஞ்சி என்ருன் ஆகுபெயரான். மற்றுச்சீர் கூறும்வழிப் பாக் கூறுவது என்னையெனின் அப்பாவினை ஆக்குவன சீர் ஆதலின் சீர் இலக்கணம் எய்தும் என்பது. (தொல். பொருள் ஙஙச. பேரா.)

௫௫௧. வெண்பா உரிச்சீர் ஆசிரிய உரிச்சீர்
இன்பா நேரடிக்* கொருங்குநிலை இலவே.

என்—எனின். வெண்பாவிற் குரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) வெண்பாவுரிச்சீரும் ஆசிரிய வுரிச்சீரும் வெண்பாவினது நேரடிக்கண் ஒருங்கு நிற்றலில்லை என்றவாறு. (௨௮)

௫௫௨. கலித்தளை† மருங்கிற் கடியவும் பெறாஅ.‡

என்—எனின். கலிப்பாவிற் குரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) கலித்தளை வரும்வழி மேற் சொல்லப்பட்ட இருவகைச்சீரு மொருங்கு நிற்கவும் பெறும் என்றவாறு. (௨௯)

௫௫௩. கலித்தளை யடிவயின் நேரீற் றியற்சீர்
நிலைக்குரித் தன்றே தெரியு மோர்க்கே.

என்—எனின். இதுவுமது.

(இ - ள்.) கலிப்பாவிற்குரிய கலித்தளைக்கண் நேரீற்றியற்சீர் நிற்றற்குரித் தன்று ஆராய்வார்க் கென்றவாறு.

௫௫௪. வஞ்சி§ மருங்கினும் இறுதி நில்லாது $

என்—எனின். வஞ்சிக் குரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

---

* 'இன்பா நேரடி' யென்பது ஆசிரிய அடி என்றவாறு. 'ஒருங்கு' என்றதனன் இயற்சீராகிய தன்சீரேபோல வெண்சீரும் வாராதென்பதாம். ஈண்டு உரியசைமயக்கத்தினையே ஆசிரிய உரிச்சீர் என்றான். (தொல். பொருள். ௧௫௫. பேரா.)

† 'கடியவும் படா' என்பது இறந்தது தழீஇய எச்சவும்மை. ஆசிரியத்தில் கடியப்படாவாதலே யன்றி ஈண்டுக் கடிதலும் படா என்றமையின் 'கலித்தளை மருங்கின்' என்பது வினைசெய் இடத்துக்கண் ஏழாவது வந்தது, 'தளைத்தல்' என்பது சீர்த்தொழில் ஆகலின். (தொல். பொருள். ௧௫௬. பேரா.)

(பாடம்) ‡ படாஅ.

§ வஞ்சித்தளை மருங்கின் என்னது வஞ்சி மருங்கின் என வாளாது கூறினன், அது கட்டளையடிக்கல்லாமையின். வஞ்சிப் பாவினுள் சீர் வருங்கால் ஒழிந்த பாவிற்குப்போலச் சீர் இயைந்திறுதல் மாத்திரையின்றிச் சீர்தோறும் தம்முள் வேறுபாடு தோன்றத் தூக்கப்படும். அவ்வாறு தூங்கல் ஓசைப்பட நில்லா தேமா புளிமா என்னும் இரண்டு சீரும் என்றவாறும். (தொல். பொருள். ௧௫௮. பேரா.)

(பாடம்) $ நில்லா.

(இ - ள்.) வஞ்சிப்பாவினும் அடியினீற்றின்கண் நில்லாது நேரீற்றியற்சீர் என்றவாறு. எனவே, அடிமுதற்கண் நிற்கப் பெறும் என்றவாறும். (உரு)

௩௫௫. இசைநிலை நிறைய நிற்குவ தாயின்*
அசைநிலை வரையார் சீர்நிலை பெறவே.

என்—எனின். ஓரசைச்சீ ராமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) இசை நிற்கின்றநிலை நிரம்பா நிற்குமாயின் அசையுஞ் சீராந் தன்மைபோல வரையார் ஆசிரியர் என்றவாறு.

உதாரணம்

'நாள், மலர், காசு, பிறப்பு'

என வரும். (உசு)

௩௫௬. இயற்சீர் பாற்படுத் தியற்றினர் கொளலே
தளைவகை† சிதையாத் தன்மை யான.

என்—எனின். அவ்வோரசைச் சீர் தளை யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஓரசைச்சீரைத் தளைவகை சிதையாத் தன்மை வேண்டுமிடத்து இயற்சீர்போலக்‡ கொள்க என்றவாறு. (உஎ)

௩௫௭. வெண்சீர்§ ஈற்றசை நிரையசை இயற்றே.

என்—எனின். இதுவுந் தளைவழங்குந் திறன் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) வெண்சீ ரீற்றசை தளைவழங்குமிடத்து இயற்சீரசை நிரையீறு போலும் என்றவாறு.

இயற்சீரென்பது அதிகாரத்தான் வந்தது. (உஅ)

---

* நிற்குவவாயின்.

† 'தளைவகை சிதையாத் தன்மை யான' என்று இடம் நியமித்த தென்னையெனின், சீர்வகையான் அசைச்சீர் என வேறாய் நிற்றலுடைய, தளைவகைச் சிதையாத்தன்மை நோக்கியே இயற்சீர்ப்பாற்படுத்து இயற்றுக என அடங்கக் கூறிற்றெனஅறிவித்தற்கென உணர்க (தொல் பொருள். கசO. பேரா.) (பாடம்) ‡ இயற்சீரின் ஈறுபோல.

§ 'வெண்சீர்களின் இறுதி' யெனவே, மூன்றும் சீரும் நான்காம் சீரும் வெண்சீராதல் கூறி நிரைமுதல் வெண்சீர் வந்து நிரைதட்டல் எனவே இரண்டாம் சீரும் வெண்சீர் வரல் வேண்டுமெனக் கூறி நிரை தட்டும் எனவே இயற்சீரானும் ஆசிரிய உரிச்சீரானும் நிரையீருயின வெள்ளாப் முதற்கண் நிற்கும் எனவும் கூறினன். கூறவே ஆசிரிய உரிச்சீர் இடை நில்லா எனவும் அங்ஙனம் நிற்பிற் கலியோசை அழியும் என்பதூஉம் ஆம் இவர் கருத்தென்பது. (தொல். பொருள். கசக. பேரா.)

ருருஅ. இன்சீ ரியைய வருகுவ தாயின்
வெண்சீர் வரையார் ஆசிரிய அடிக்கே.

என்—எனின். ஆசிரியப்பாவிற்கு உரியசீர் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) இனிய ஓசை பொருந்தி வருகுவதாயின் ஆசிரிய வடிக்கு வெண்பாவுரிச்சீர் வரையார் ஆசிரியர்* என்றவாறு. (உகூ)

ருருகூ. அந்நிலை மருங்கின் வஞ்சி உரிச்சீர்
ஒன்றுத லுடைய ஒரோவோரு வழியே.†

என்—எனின். இதுவுமது.

(இ - ள்.) இன்சீரியைய வருகுவதாயின் வஞ்சியுரிச்சீரும் ஒரோவழி ஆசிரிய அடிக்கண் வரும் என்றவாறு.

"ஈரசைகொண்டு" (செய்யு. கக) என்பது முதலாக இத்துணையுஞ் சொல்லப்பட்டது ஓரசைச்சீர் நான்கு, ஈரசைச்சீர் பதினாறு, மூவசைச்சீர் அறுபத்துநான்கு, ஆகச்சீர் எண்பத்துநான்கில் ஓர் அசைச்சீர் நான்கெனவும் அது தளைவழங்கும்வழி இயற்சீரொக்கு மெனவும், ஈரசைச்சீர் பதினாறும் சிறப்புடைய இயற்சீர் நான்கும் சிறப்பிலியற்சீர் ஆறும் எனப் பத்தாம் எனவும், ஆசிரியவுரிச்சீர் ஆறு எனவும், மூவசைச்சீர் அறுபத்து நான்கில் வெண்பாவுரிச்சீர் நான்கெனவும் ஏனைய வஞ்சியுரிச்சீர் எனவும் கூறியவாறு.‡ (ருo)

ருசo. நாற்சீர்§ கொண்ட தடியெனப் படுமே.

என்—எனின். நிறுத்தமுறையானே அடியாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) நான்குசீர் ஒருங்கு தொடுத்து வருவதனை அடியென்று சொல்லப்படுமென்றவாறு.

இதன் வேறுபாடு முன்னர்க் கூறப்படும். (ருக)

---

* சிலர்.

(பாடம்) † ஓரொரு வழியே. ‡ தொகை கூறியவாறு.

§ இருசீரானும் முச்சீரானும் ஐஞ்சீரானும் அறுசீர் முதலியவற்றானும் வருமாயினும் அவை சிறப்பில என்றவாறும். இருசீரடி குறளடி என்றும், முச்சீரடி சிந்தடி என்றும், நாற்சீர் அடி அளவடி என்றும், ஐஞ்சீரடி நெடிலடி என்றும், அறுசீர் முதலியன கழிநெடிலடி யென்றும் கோடும் என்பது. இவற்றின் எல்லாம் நாற்சீரடி சிறந்ததென்றது என்னையெனின், அளவிற்பட்டமைந்தமையானும் அது பயின்று வருதலானும் என்பது. (தொல் பொருள். ருசஉ. பேரா.)

௩௪௧. அடியுள் ளனவே* தளையொடு தொடையே.

என்—எனின். தளைக்குந் தொடைக்கும் இடம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) தளையுந் தொடையும் அடியின்கண் என்ற வாறு. (௩௨)

௩௪௨. அடி இறந்து வருதல் இல்லென மொழிப.

என்—எனின். மேலதற்கோர் புறனடை யுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) தளையுந் தொடையும் நான்குசீரடியின் வருத லின்றி யடியி னீங்கிவருத லில்லை யென்றவாறு.

அடிவரையறை யில்லாதனவற்றிற் கொள்ளப்படாது என்றவாறும். (௩௩)

௩௪௩. அடியின்† சிறப்பே பாட்டெனப் படுமே.

என்—எனின். இதுவும் அடிக்குரியதோர் சிறப்புணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அடியின் சிறப்பினானே பாட்டென்று சொல்லப் படு மென்றவாறு.

எனவே, பாட்டென்னுஞ் செய்யுட்கு அடி யின்றியமையாதென்று கொள்க. பாட்டாவன :— வெண்பா ஆசிரியம் கலி வஞ்சி என்பன.

இனி அவ்வடியினை எழுத்தளவினாற் குறியிடுகின்றார். (௩௪)

௩௪௪. நாலெழுத் தாதி ஆக ஆறெழுத்
தேறிய ‡நிலத்தே குறளடி யென்ப. 4, 5, 6

என்—எனின். குறளடி வரையறை உணர்த்துதல் நுதலிற்று.

---

* முன்னும் சீர்வகையான் வகுக்கும் அடியன்றிக் கட்டளையடியெல் லாம் தளைவகை உடைய என விதந்தோதி வந்ததனானே நாம் தளை கொள்வது நாற்சீர் அடிக்கண் என்பான் 'அடியுள்ளது தளை' என்றான் என்பது......கட்டளைப் படுப்பதூஉம் தொடை உறழ்தற்கு இடன் ஆவதூஉம் நேரடியே எனச் சிறப்பித்தவாறு. (தொல். பொருள். ௩௪௫. பேரா.)

† மாத்திரை முதலியவற்றை உறுப்புக்களான் இத்துணை மாத்திரை கொண்டது செய்யுள் என்றானும் இத்துணை அசையும் சீரும் தொடையும் கொண்டது செய்யுள் என்றானும் அளவியல் கூறிய உறுப்புக்களான் வரையறுக்கப்படா. அடியளவே கூற செய்யுட் புலப்பாடாம் என்பது. 'எனப்படும்' என்றதனான் ஒழிந்த அடிகளானும் அவ்வாறு வருமாயினும் அவை சிறப்பில என்பது தலை இடை கடைச் சங்கத்தாரும் பிற சான் றோரும் நாற்சீர் அடியான் வரும் ஆசிரியமும் வெண்பாவும் கலியுமே பெரும்பான்மையும் செய்தார். வஞ்சிப்பா சிறு வரவிற்றெனக் கொள்க. (தொல். பொருள். ௩௪௭. பேரா.)

‡ குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடியென நாற்சீரடி தானே ஐவகைப்படுமென்று அவற்றது பெயரும் முறையுந் தொகையுங்

(இ - ள்.) நாலெழுத்து முதலாக ஆறெழுத்திறுக ஏறிய மூன்றுநிலத்தை யுடைத்து குறளடியென்று சொல்லுவரென்றவாறு.

எனவே, குறளடிக்கு நிலம் நாலெழுத்தும் ஐந்தெழுத்தும் ஆறெழுத்துமாம். இதற்குரிய எழுத்து முன்னர்க் காட்டுதும். (கூ)

௩சரு. ஏழெழுத் தென்ப சிந்தடிக் களவே
ஈரெழுத் தேற்றம் அல்வழி யான.

என்—எனின். சிந்தடி யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஏழெழுத்தென்று சொல்லுவர் சிந்தடிக்கு அளவு; ஒன்பதெழுத்து ஏற்றம் அல்லாத விடத்தென்றவாறு.

எனவே ஏழும் எட்டும் ஒன்பதுமாகிய எழுத்தினாற் சிந்தடியாம் என்றவாறும். (௧௪)

௩சசு. பத்தெழுத் தென்ப நேரடிக் களவே
ஒத்த நாலெழுத் தேற்றலங்* கடையே

என்—எனின். அளவடி யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அளவடி யெனினும் நேரடியெனினும் ஒக்கும். பத்தெழுத்து முதலாகப் பதினான்கெழுத்தளவும் அளவடியாம் என்றவாறு.

எனவே பத்தும் பதினொன்றும் பன்னிரண்டும் பதின்மூன்றும் பதினாலுமென ஐந்து நிலம்பெறும். (௧எ)

௩சஎ. மூவைந் தெழுத்தே நெடிலடிக் களவே
ஈரெழுத்து மிகுதலும்† இயல்பென மொழிப.

என்—எனின். நெடிலடி யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) பதினைந்தெழுத்து முதலாகப் பதினேழெழுத்தளவு நெடிலடியாம் என்றவாறு.

எனவே பதினைந்தும் பதினாறும் பதினேழும் என மூன்றுநிலம் பெறும் என்றவாறும். (௧அ)

கூறினான்......இப் பெயரெல்லாம் காரணப்பெயர். மக்களுள் திரக் குறியானைக் குறளன் என்றும், அவனின் நெடியானைச் சிந்தன் என்றும், ஒப்பமைந்தானை அளவிற்பட்டான் என்றும், அவனின் நெடியானை நெடியான் என்றும், அவனின் நெடியானைக் கழிய நெடியான் என்றும் சொல்லுப. அவைபோல் கொள்க இப்பெயர் என்பது. (தொல். பொருள். ௩சஅ. பேரா.)

(பாடம்) * தொற்றலங். † மிகுதல் இவட்பெறும் என்றே.

நூசஅ. மூவா றெழுத்தே கழிநெடிற் களவே
ஈரேழுத்து மிகுதலும் இயல்பென மொழிப.

என்—எனின். கழிநெடிலடி உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) பதினெட்டெழுத்து முதலாக இருபதெழுத்தளவுங் கழிநெடிலடியாம் என்றவாறு.

எனவே பதினெட்டும் பத்தொன்பதும் இருபதும் என மூன்று நிலம் பெறும். (கூகூ)

நூசகூ. சீர்நிலை தானே ஐந்தெழுத் திறவாது
நேர்நிறை வஞ்சிக் காறும் ஆகும்.

என்—எனின். சீர்க்கு எழுத்து வரையறை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) சீர்நிலை ஐந்தெழுத்தின் மிகாது நேர் இறுதியாங் காலத்து; நிரையீறுகிய வஞ்சியுரிச்சீர்க்கு ஆறெழுத்தும் ஆகும் என்றவாறு.

எனவே இருபதெழுத்தின் மிக்க நாற்சீரடி யில்லை யென்றவாறும், வஞ்சிச்சீர் முச்சீரடியின்கண் வருதலின். (சo)

நூருo. எழுத்தள வெஞ்சினும் சீர்நிலை தானே
குன்றலும் மிகுதலும் இல்லென மொழிப.

இதுவுஞ் சீர்க்குரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஈண்டோதப்பட்ட அடிகள் பலதொடுக்கும் வழி ஓரடிக்கோரடி எழுத்தளவு குறைந்துவரினுஞ் சீர்நிலை நான்கின் இழிதலும் மிகுதலு மில்லை என்றவாறு. (சக)

நூருக. உயிரில்* லெழுத்தும் எண்ணப் படாஅ
உயிர்த்திறம் இயக்கம் இன்மை யான.

என்—எனின். மேற் சொல்லப்பட்ட அடிக்குரிய எழுத்து வரையறை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) உயிரில்லாத எழுத்தும் எண்ணப்படா, உயிர்போல இயக்கமின்மையான் என்றவாறு.

---

* சிறிது நாப்புடை பெயருந்துணையான் ஒலித்தலும் மொழிசார்ந்து ஒலித்தலும் உடைய அன்றே. அங்ஙனம் ஒருவாற்றான் உயிர்க்கும் திறம் உடைய வாயினும் அவ்வுயிர்க்கும் திறம் ஈண்டுச் செய்யுட்பாற்படுங்கால் உபகாரப்பட இயங்குமாறிலவாகலின் எண்ணப்படா.

(தொல். பொருள். கூருசு. பேரா.)

உம்மை எச்சவும்மை யாதலாற் குறுகிய வுயிர்த்தாகிய குற்றியலிகர மும் குற்றியலுகரமும் எண்ணப்படா என்று கொள்க. எனவே எண் ணப்படுவன உயிரும் உயிர்மெய்யுமாகி ஒரு மாத்திரையிற் குறையாதன என்று கொள்ளப்படும். (௪௨)

௩௫௨. வஞ்சி அடியே இருசீர்த் தாகும்.

என்—எனின். வெண்பா ஆசிரியங் கலிக்குரித்தாகிய அடியிலக் கணம் கூறினர். இனி வஞ்சிப்பாவிற்குரிய அடிவரையறை உணர்த்துதல் நுதலிற்று.

*(இ - ள்.) வஞ்சிப்பாவிற்குரிய அடி இரண்டு சீரை யுடைத்து என்றவாறு.* (௪௩)

௩௫௩. தன்சீர் எழுத்தின் சிறுமை* மூன்றே.

என்—எனின். வஞ்சியுரிச்சீர் குறைந்தநிலை உணர்த்துதல் நுதலிற்று.

*(இ - ள்.) வஞ்சியுரிச்சீரின் சிறுமை மூன்றெழுத்தென்று கொள்ளப்படும்.*

எனவே, மூன்றெழுத்தும் நான்கெழுத்தும் ஐந்தெழுத்தும் ஆறெழுத் தும் வஞ்சியுரிச்சீ ரெழுத்தென்றவாறாகும். (௪௪)

௩௫௪. முச்சீ ரானும் வரும்இடன் உடைத்தே.

என்—எனின். இதுவும் வஞ்சியடி யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

*(இ - ள்.) வஞ்சியடி மூன்று சீரானும் வரும் இட னுடைத்து என்றவாறு.*

எனவே வஞ்சியடி இருசீரடியானு முச்சீரடியானும் வரும் என்ற வாறும்.

உதாரணம்

'தூங்குகையான் ஓங்குநடைய
உறழ்மணியான் உயர்மருப்பின.' (புறம். ௨௨)

இதனுள் மூன்றெழுத்து முதலாக ஆறெழுத்துக் காறுஞ் சீர் வந்த வாறும் இருசீரடி யாயினவாறுங் காண்க.

'தொன்னலத்தின் புலம்பலைப்பத் தொடித்தோள்மேல்.'
(யாப். வி. பக். ௩0௬)

எனவும் வரும். (௪௫)

௩௫௫. அசைகூன் ஆகும் அவ்வயின் ஆன.

என்—எனின். மேற்சொல்லப்பட்ட வஞ்சியடிக்குரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

---

(பாடம்) * சின்மை.

(இ - ள்.) மேற்சொல்லப்பட்ட இருவகையடியினும் அசை கூனாகி வரும் என்றவாறு. (சகூ)

கூடுசூ. *சீர்கூன் ஆதல் நேரடிக் குரித்தே.

என்—எனின். இதுவுங் கூனுகுமிடன் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) சீர்முழுதுங் கூனாகி வருதல் அளவடிக் குரித்து என்றவாறு.

நேரடி என்றதனான் வெண்பாவினும் ஆசிரியத்தினுங் கலியினுங் கொள்ளப்படும்.

அவரே, 'கேடில் விழுப்பொருள் தருமார் பாசிலை
வாடா வள்ளியங் காடிறந் தோரே.' (குறுந். உகசு)

இது ஆசிரியத்திற் கூன்.

"உதுக்காண், சுரந்தானா வண்மைச் சுவர்னமாப் பூதன்
பரந்தானா பல்புகழ் பாடி—இரந்தான்மாட்
டின்மை அகல்வது போல இருள்நீங்க
மன்னும் அளிதேர் மழை.'' (யாப். வி. பக் கூகூசு)

இது வெண்பாவிற் கூன்.

"நீயே, வினைமாண் காழகம் வீங்கக் கட்டிப்
புனைமாண் வரீஇய அம்பு தெரிதியே.'' (கலித். எ)

இது கலிப்பாவிற் கூன். (சஎ)

கூடுஎ. ஐவகை அடியும் விரிக்குங் காலை
மெய்வகை அமைந்த பதினேழ் நிலத்தும்†
எழுபது வகையின்‡ வழுவில வாகி
அறுநூற் றிருபத் தைந்தா கும்மே.

என்—எனின். மேற்சொல்லப்பட்ட அடிக்கெல்லாம் விரியுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஐவகை அடியும் விரிக்குங்காலை என்பது—நாற்சீரடியை எழுத்தளவுபற்றி வகுக்கப்பட்ட குறளடி முதலாகிய ஐந்தடியினையும் விரித்துணர்த்துங் காலத்து என்றவாறு.

---

* மூன்று பாவினும் அளவடிக்கண் சீர்கூன் ஆயினவாறு என்னுர்க்கு, நேர்பசை நிரைபசைகளையும் சீர்நிலைப்பெறும் என்றான் ஆகலின் அவற்றையும்...............கொள்வல் எனின், அசைச் சீரினை வாளாது சீர்என்றான் என்பது. (தொல். பொருள் கூசுக. பேரா.)

(பாடம்) † நிலத்த : நிலத்தின். ‡ வகைமையின்.

மெய் என்பது—உடம்பு. அஃதாவது அசையுஞ் சீரும் தோற்றுதற் கிடமாகிய எழுத்து.

மெய்வகையமைந்த பதினேழ் நிலத்தும் என்பது—எழுத்து அமைந்த நாலெழுத்து முதலாக இருபதெழுத் தீறுகச் சொல்லப்பட்ட பதினேழ் நிலத்தும் என்றவாறு.

எழுபது வகையின் வழுவில வாகி என்பது—எழுபது வகைப்பட்ட உறழ்ச்சியின் வழுவுதலின்றி என்றவாறு.

எழுபது வகையாவது—இரண்டுசீர் தம்முட் புணரும் புணர்ச்சி எழுபது வகையாம் என்றவாறு.

மேற் சொல்லப்பட்ட எண்பத்துநான்கு சீரினும்

(தொல். பொரு. செய்யுளியல். ௯0. உரை.)

இயற்சீரான் வருவதனை இயற்சீரடி எனவும், ஆசிரியவுரிச்சீரான் வருவதனை ஆசிரியவுரிச்சீரடி எனவும், இயற்சீர் விகற்பித்து வருவதனை இயற்சீர் வெள்ளடி எனவும், வெண்சீரான் வருவதனை வெண்சீரடி* எனவும், நிரையீற்று வஞ்சிச்சீரான் வருவதனை நிரையீற்று வஞ்சியடி எனவும், உரியசையீற்றுன் வருவதனை உரியசையீற்று வஞ்சியடி எனவும் ஓரசைச்சீரான் வருவதனை அசைச்சீரடி எனவும் வழங்கப்படும்.

அவற்றுள், இயற்சீரடி நேரீற் றியற்சீரடி எனவும் நிரையீற் றியற்சீரடி எனவும் இருவகைப்படும். நேரீற் றியற்சீரடியாவது †நேரீறு நேர் முதலாகிய இயற்சீர் வருதலும் ‡நேர்புமுத லாசிரிய வுரிச்சீர் வருதலும் நேர்முதல் வெண்பா வுரிச்சீர் வருதலும் நேர்முதல் வஞ்சியுரிச்சீர் வருதலும் நேர்முதல் ஓரசைச்சீர் வருதலும் என ஐந்துவகைப்படும். நிரையீற் றியற்சீரும் இவ்வாறே§ நிரைமுதலாகிய ஐந்து சீரொடும் உறழ ஐந்து வகைப்படும்.

ஆசிரியவுரிச்சீரடியும் இருவகைப்படும் நேர்பு ஈறும் நிரைபு ஈறும் என. அவற்றுள், நேர்பீற்றுச் சீரை நேர்புநேரு முதலாகிய ஐந்து சீரொடும் உறழ ஐந்து வகைப்படும். நிரைபீற்றுச்சீரும் அவ்வாறே நிரைபுநிரையு முதலாகிய ஐந்து சீரொடும் உறழ ஐந்துவகைப்படும்.

இயற்சீர் வெள்ளடியும் நேரீறும் நிரையீறும் என இருவகைப்படும். அவற்றுள், நேரீறு நிரைபுநிரையு முதலாகிய ஐந்து சீரொடும் உறழ ஐவகையாம். நிரையீறும் அவ்வாறே நேர்புநேரு முதலாகிய ஐந்து சீரொடும் உறழ ஐவகையாம்.

வெண்சீர் நேர்முதலோடு உறழ்தலும் நிரைமுதலோடு உறழ்தலு மென இருவகைப்படும். அவற்றுள். நேர்பு நேரு முதலாகிய சீர்களொடு உறழ்தல் ஐந்துவகைப்படும். நிரைபுநிரையுமுதலாகிய சீர்களொடு உறழ்தலும் ஐந்து வகைப்படும்.

---

(பாடம்) * வெண்சீர் வெள்ளடி. † நேரியற்சீர் முதலாகிய.
‡ நேர்முத. § இவற்றுல்.

நிரையீற்று வஞ்சியுரிச்சீர் முதலசையோ r டொன்றுவனவும் ஒன்றாதனவும் என இருவகைப்படும். அவற்றுள், ஒன்றிவருவது நிரைபுநிரைபு முதலாகிய சீரொடு உறழ ஐந்து வகைப்படும். ஒன்றாதது நேர்புநேரு முதலிய சீரொடு உறழ ஐவகைப்படும்.

உரியசையீற்று வஞ்சியடியும் அவ்வாறே உறழப் பத்து வகைப்படும்.

அசைச்சீரடியும் அவ்வாறே இருவகையாக்கி உறழப் பத்துவகைப் படும்.

இவ்வகையால் தளை ஏழு பாகுபட்டன: இவை நேரொன் றாசிரியத் தளை, நிரையொன் றாசிரியத்தளை, இயற்சீர் வெண்டளை, வெண்சீர்வெண்டளை, கலித்தளை ஒன்றிய வஞ்சித்தளை, ஒன்றாத வஞ்சித்தளை என ஏழு வகையாம். அவ்வழி ஓரசைச்சீர் இயற்சீர்ப்பாற்படும். ஆசிரியவுரிச்சீரு மதுவேயாம். மூவசைச்சீருள் *வெண்பாவுரிச்சீ ரொழிந்தனவெல்லாம் வஞ்சியுரிச்சீராம். அவ்வழி இயற்சீர் நிற்ப வருஞ்சீர் முதலசையொடு நேராய் ஒன்றுவது நேரொன் றாசிரியத்தளையாம்; நிரையாய் ஒன்றுவது நிரையொன் றாசிரியத்தளையாம்; மாறுபட்டு வருவது இயற்சீர்வெண்டளையாம்; வெண்சீர் நிற்ப வருஞ்சீர் முதலசையோடு ஒன்றுவது வெண்சீர் வெண்டளையாம்; நிரையா யொன்றிற் கலித்தளையாம்; † வஞ்சியுரிச்சீர் நிற்ப வருஞ்சீர் முதலசையோடு ஒன்றுவது ஒன்றிய வஞ்சித்தளையாம்: ஒன்றாதது ஒன்றா வஞ்சித்தளையாம். இவ்வகையால் தளை ஏழாயின, இவ்வாறாகி வருதல் வருகின்ற சூத்திரங்களா னுணர்க.

இனி அடி அறுநூற்றிருபத்தைந்தாமாறு: அசைச்சீர் இயற்சீர் ஆசிரியவுரிச்சீர் வெண்சீர் வஞ்சியுரிச்சீர் என்னும் ஐந்தினையும் நிறுத்தி ‡இவ் வைந்துசீரும் வருஞ்சீராக வுறழும்வழி இருபத்தைந்து விகற்பமாம். அவ் விருபத்தைந்தின் கண்ணும் மூன்றாவது ஐந்துசீரையும் உறழ நூற்றிருபத்தைந்து விகற்பமாகும். அந் நூற்றிருபத்தைந்தின் கண்ணும் நான்காவது ஐந்துசீரையும் உறழ அறுநூற்றிருபத்தைந்தாம் §என்றவாறு. ()

டுடு அ. ஆங்ஙனம்$ விரிப்பின் அளவிறந் தனவே
பாங்குற உணர்ந்தோர் பன்னுங் காலை.

என்—எனின். அடி விரியுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

---

* வெண்பாவுரிச்சீரு மதுவேயாம். மூவசைச்சீருள் வெண்பா வுரிச் சீரொழிந்தனவெல்லாம் வஞ்சியுரிச்சீராம்.

† வஞ்சியுரிச்சீரீற்றசை.

(பாடம்) ‡ இவ்வைந்தினையும் வஞ்சியுரிச்சீராக.

§ என்றவாறு...சீரடி வேறுபாடென்று கொள்க.

$ அளவிறந்தன—எண்ணிறந்தன. அஃது இலக்கணங் கூறுமாறன் றென்றவாறு. அஃதெற்றாற் பெறுதும் எனின் முதல்நூல் செய்த ஆசிரியன் அகத்தியனார் சொல்லுமாற்றால் பெறுதும் என்றவாறு............ இதன் முதனூல் செய்த ஆசிரியனால் செய்யப்பட்ட யாழ்நூலுள்ளும் சாதியும் உவமத்துருபும் திருவிரி இசையும் எனக் கூறப்பட்டவற்றுள் கட்டளைப்பாட்டுச் சிறப்புடையன சாதிப்பாட்டுக்களே. (தொல். பொருள். ௩௬௩. பேரா.)

(பாடம்) $ ஆங்கனம்.

(இ - ள்.) ஈண்டுறழ்ந்த முறையானே அஞ்சடி முதலாக மேன்மேலும் உறழ வரம்பிலவாம் என்றவாறு.

அஃதாவது அறுநூற்றிருபத்தைந்தினோடும் ஐந்தாவது வரும் ஐஞ்சீரையும் உறழ மூவாயிரத்தொருநூற்றிருபத்தைந்து விகற்பமாம். அதன்கண் ஆறுவது இவ்வகை யைந்துசீரையும் உறழப் பதினையாயிரத்து அறுநூற்றிருபத்தைந்து விகற்பமாம். அதன்கண் ஏழாவது வரும் சீரைந்தினையும் உறழ எழுபத்தெண்ணாயிரத்தொரு நூற்றிருபத்தைந்து விகற்பமாம். இவ்வகையினானுறழ வரம்பிலவாய் விரியும். அன்றியும்,* இச்சொல்லப்பட்ட அடியினை † அசையானும் எழுத்தானும் விரிக்க வரம்பிலவாம். ‡ (௪௧)

௩௫௧. ஐவகை அடியும் ஆசிரியக் குரிய.

என்—எனின். ஆசிரியப்பா நாற்சீரான் வரும் என்பதூஉம் அதன்கண் விரிக்கப்பட்ட ஐவகையடியும் உரித்தென்பதூஉம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) நாற்சீரடிக்கண் வகுக்கப்பட்ட ஐவகையடியும் ஆசிரியப்பாவிற் குரிய என்றவாறு.

ஐவகை யடியு முரியவென, அவற்றிற்கு முதலாகிய நாற்சீரடியும் உரித்தாயிற்று.

உதாரணம்

"தேர்ந்து தேர்ந்து சார்ந்து சார்ந்து
நேர்ந்து வாமனை நினையின் §
சேர்ந்த $ வல்வினை தேய்ந்தக ¶ லும்மே."

இதன்கண் முதலடி நாலெழுத்தான் வந்தவாறு காண்க.

"குன்று கொண்டு நின்ற மாடு
பொன்ற வந்த மாரி
சென்று காத்த திறலடி தொழுமே."

இதன்கண் முதலடி ஐந்தெழுத்தான் வந்தது.

"ஆறு சூடி நீறு பூசி
ஏறும் ஏறும் இறைவனைக் **
கூறுநெஞ்சே குறையிலை நினக்கே." ††

இதன்கண் முதலடி ஆறெழுத்தான் வந்தது.

"போது சாந்தம் பொற்ப வேந்தி
யாதி நாதற் சேர்வோர்
சோதி வானந் துன்னு வாரே." (யாப். வி. ௪௯)

என்பது முதலடி ஏழெழுத்தான் வந்தது.

---

* அன்றி. † அடிவகையானும் எழுத்தானும்.
‡ வரம்பிலவாகும் எனவுமாம். § நேர்ந்து நேர்ந்து வாமனை நினையிற்.
$ சேர்தரு. ¶ சேர்ந்தக ** ஈசனைக். †† நமக்கே.

"தன்தோள் நான்கின் ஒன்று கைம்மிகூஉங்
களிறுவளர் பெருங்கா டாயினும்
ஒளிபெரிது சிறந்தன் றளியஎன் நெஞ்சே."

இது முதலடி எட்டெழுத்தான் வந்தது.

"கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி." (குறுந். உ.)

என்பது ஒன்பதெழுத்தான் வந்தது.

"காமம் செப்பாது கண்டன மொழிமோ." (குறுந். உ)

என்பது பத்தெழுத்தான் வந்தது.

"தாமரை புரையுங் காமர் சேவடி." (குறுந். கடவுள் வாழ்த்து)

என்பது பதினொரெழுத்தான் வந்தது.

"நாயுடை முதுநீர்க் கலித்த தாமரை." (அகம். சக)

என்பது பன்னிரண்டெழுத்தான் வந்தது.

"அகலிரு விசும்பிற் பாயிருள் பருகி." (பெரும்பாண். க)

என்பது பதின்மூன்றெழுத்தான் வந்தது.

"யாவரும் விழையும் பொலந்தொடிப் புதல்வனை." (அகம். கசு)

என்பது பதினாலெழுத்தான் வந்தது.

"ஏற்றுவலன் உயரிய எரிமருள் அவிர்சடை." (புறம். இசு)

என்பது பதினைந்தெழுத்தான் வந்தது.

"விரிதிரைப் பெருங்கடல் வளைஇய உலகமும்." (குறுந். க0க)

என்பது பதினாறெழுத்தான் வந்தது.

*"தேன் தூங்கும் உயர்சிமைய மலைநா றிய வியன்ஞாலம்."
(மதுரைக். ங)

என்பது பதினேழெழுத்தான் வந்தது.

"கடுஞ்சினத்த கொல்களிறும் கதழ்பரிய கலிமாவும்." (புறம். இஉ)

என்பது பதினெட்டெழுத்தான் வந்தது.

"நெடுங்கொடிய நிமிர்தேரும் நெஞ்சுடைய புகல்மறவரும்."
(புறம். இஉ)

என்பது பத்தொன்பதெழுத்தான் வந்தது.

"அமர்காணின் அமர்கடந்தவர் படைவிலக்கி எதிர்நிற்றலின்."
(புறம். கசஎ)

என்பது இருபதெழுத்தான் வந்தது. (இ0)

(பாடம்) * தேன்றூங்கிய வுயர்சிமைய மலைஞாறிய வியன்ஞாலம்.

௩௯௦. விராஅய் வரினும் ஒரூஉநிலை இலவே.

என்—எனின். மேற்சொல்லப்பட்ட அடி விரவி வருமாறு வரை யறுத்து உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) மேற் சொல்லப்பட்ட ஐந்தடியுந் தனித்தனி ஆசிரியப்பாவிற் குரித்தாகி வருதலே யன்றி விரவிவரினும் நீக்கப்படாது என்றவாறு.

'ஒரூஉநிலை' என்றதனால் தனித்தனிவரினும் விரவிவரினும் ஒக்கும் என்றுகொள்க.

உதாரணம்

"செங்களம் படக்கொன் றவுணர்த் தேய்த்த
செங்கோ லம்பின் செங்கோட் டியானைக்
கழறொடிச் சேய* குன்றங்
குருதிப் பூவின் குலைக்காந் தட்டே." (குறுந். ௧)

இதனுட் பலவடியும் வந்தவாறு காண்க. (௫௧)

௩௯௧. தன்சீர் வகையினுந் தளைநிலை† வகையினும்
இன்சீர் வகையின் ஐந்தடிக்கும் உரிய
தன்சீ ருள்வழித் தளைவகை வேண்டா.

என்—எனின். இந்நூலாயும் அடியும் அடிக்குரிய எழுத்துக்க ளும் ஓதினார்; இனி அவ்வடிக்கண் ஓசை வேறுபாடுந் தளையிலக்கணமு முணர்த்துவார் அத் தளைக்கண் வருவதோர் மரபு உணர்த்துதல் நுத லிற்று

(இ - ள்.) தத்தஞ் சீர்நிலை வகையானுந் தளைநிலை வகை யானும் இனிய ஓசைவேறுபாட்டினையுடைய ஐந்தடிக்கு முரிய தன சீருள்வழித் தளைவேறுபாடு கோடல் வேண்டா என்றவாறு.

எனவே சீர்தானே ஓசையைத் தரும் என்றவாறும்.

உரிய தன்சீர் என்றது ஐந்தடியினும் ஏற்ற வழிநிலை பெறுந் தன் சீரென்றுகொள்க. அஃதாவது குறளடியாகிய ஐந்தெழுத்தினும் ஆறெழுத் தினும் ஓரசைச்சீரும் ஈரசைச்சீரும் வருதலன்றி மூவசைச்சீர் வாராமை. பிறவாசிரியர் கொண்ட நேரொன்றாசிரியத்தளை. நிரையொன்றாசிரியத்

(பாடம்) * சேஎய்.

† தளைவகை என்னாது 'நிலை' என்றதனான் அவற்று இரண்டாசிரிய உரிச்சீரும் அடிமுதற்கண் நின்று சீராவதன்றி இடைவாரா என்பது கொள்க. 'தளைநிலை' என்னாது 'வகை' என்ற தென்னை யெனின், உரிச் சீரால் தளை வழங்கின் ஓரடிக்கண் இரண்டுவரின் ஓசை உண்ணாதென்பது உணர்வித்தற் கென்பது. இவையும் இன்சீர்வகையொடு வருமெனவே தன்சீர் இயற்சீரொடு தட்கும் என்பதாம்...'இன்சீர்' என்னாது 'வகை' என்றதனால் இயற்சீர்ப்பாற்படுத்து இயற்றிக்கொள்ளப்பட்ட அசைச் சீரும் சீரேயாம்; தன் சீர்வகையினும் தளைநிலை வகையினும் இடையிட்டு வந்ததென்பது. (தொல். பொருள். ௩௬௪. பேரா.)

தளை, இயற்சீர் வெண்டளை வெண்சீர்வெண்டளை, கலித்தளை, ஒன்றியவஞ்சித்தளை, ஒன்றுவஞ்சித்தளை என எழுவகையினும், வஞ்சித்தளை நிலைமொழி வஞ்சியுரிச்சீராக வருஞ்சீர்க்கு முதலசையோடு ஒன்றியது ஒன்றிய வஞ்சித்தளை எனவும் ஒன்றாதது ஒன்றுவஞ்சித்தளை எனவும் வழங்குபவாதலின் அவ்விருவாற்றானும் தளையாற் பயனின்றி நிலைமொழியாகிய வஞ்சியுரிச்சீர் தானே ஓசையுணர்த்துதலின் வஞ்சித்தளை கோடல் வேண்டாராயினர். இனி வெண்சீர் வெண்டளையும் வெண்சீர் நிற்ப வருஞ்சீர் வெள்ளையும் வெண்சீராதல் இயற்சீராதல் வந்து வெண்டளையாக வேண்டுதலின் நிலைமொழியாகிய வெண்சீரை "வெண்சீ ரீற்றசை நிரையசை யியற்றே" (செய்யு - உஅ) என ஓதுதலின், அதனை நிரையீற்றியற்சீர் ஆக்கினால் வருஞ்சீர் நேர்முத லியற்சீராயின் அதுவும் இயற்சீர் வெண்டளையாம்.

அவ்வாறன்றி வருமொழியும் வெண்சீராயின் 'தன்சீ ருள்வழித் தளைவகை வேண்டா' என்பதனான் அடங்கும். அதனான் இருவாற்றானும் வெண்சீர்வெண்டளை கொள்ளாராயினர். இனி ஒழிந்த நான்கு தளையுங் கூறுகின்றாராயின் ஆசிரியத்தளையுங் கூறல் வேண்டா, அதுவும் இயற்சீரான் வருதலின் எனின், அதன்கண்ணே இயற்சீர்வெண்டளை கூற வேண்டுதலின் ஆசிரியத்தளையுங் கூறவேண்டு மென்க. (ருஉ)

நகஉ. சீரியல்* †மருங்கின் ஓரசை யொப்பின்
ஆசிரியத் தளையென் றறியல்‡ வேண்டும்.

என்—எனின். ஆசிரியத்தளையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) சீர்கள் தம்முட்பொருந்தும்வழி நிலைமொழியாகிய இயற்சீரினீறும் வருமொழியாகிய சீரின் முதலசையும் நேராய் ஒன்றின் நேரொன்றாசிரியத் தளையாம்; நிரையாய் ஒன்றின் நிரை யொன்றாசிரியத் தளையாம் என்றவாறு.

இரண்டையும் ஆசிரியத்தளை என வேண்டுதலின் பொதுப்படக்§ கூறினார். அவ்வழி வருஞ்சீர் இயற்சீராயிற் சிறப்பின்றெனவுங் கொள்க. (ருந)

நகந. குறளடி முதலா அளவடி காறும்
உறழ்நிலை யிலவே வஞ்சிக் கென்ப.

என்—எனின். மேலதற்கோர் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

---

* சீரியை மருங்கின் ஓரசையே வரின் என்னாது 'ஒப்பின்' என்றது என்னையெனின் உரியசை முதலும் ஈறும் ஆகியவழி அவை இயலசையோடு ஒப்புமை நோக்கித் தளை கொள்ளின் அல்லது தம்மோடு தாம் ஒன்றுதல் கொள்ளார் என்றற் கென்பது இதனானும் பெற்றாம் ........ இனி 'ஈரசை ஒப்பின் என்பது பாடமாக உரைப்பின் நேரும் நிரையும் ஒன்றினென்றவாறுமாம்' எனக் கொள்க. (தொல். பொருள். நசஅ. பேரா.)

(பாடம்) † சீரியை. ‡ றறையல். § பொதுப்பெறக்.

(இ - ள்.) குறளடி முதலாக அளவடியளவும் வஞ்சியுரிச்சீர்வந்து உறழுநிலையில், இவ்வடிகள் இயற்சீரும் ஆசிரியவுரிச்சீருமாம் என்றவாறு.

எனவே பதினைந்தெழுத்து முதலாக நெடிலடியினுங் கழிநெடிலடியினு மெய் யுறழப்பெறுவ* தென்றவாறும். எடுத்தோத்துப் பெரும்பான்மை. அளவடிக்கண், வஞ்சியுரிச்சீர் மயங்குபவுளவேல் மேற்கொள்க†. (சஅ)

௩௯௪. அளவுஞ் சிந்தும் வெள்ளைக் குரிய
தளைவகை ஒன்றாத் தன்மை யான.

என்—எனின் வெண்பாவிற்குரிய அடியுந் தளையும் வரையறுத்துணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அளவடியும் சிந்தடியும் வெண்பாவிற்குரிய தளைவகை ஒன்றாத் தன்மைக்கண் என்றவாறு.

எனவே ஒன்றுந் தன்மைக்கண் நெடிலடியும் சில வரும் என்று கொள்க.

இச்சூத்திரத்தால் வெண்பாவிற் குரிய தோர் தளை உணர்த்தினாராம். சிந்தடியாவது ஏழெழுத்து முதல் ஒன்பதெழுத்தீறாகிய அடி. அளவடியாவது பத்தெழுத்து முதலாகப் பதினான் கெழுத்தீறாகிய அடி. தளைவகை ஒன்றாமையாவது நிலைமொழியும் வருமொழியும் ஆகிய இயற்சீர் நேராயொன்றுவதும் நிரையாயொன்றுவதுமன்றி மாறுபட வருவது. அவ்வழி நிரையீற்றியற்சீர் நிற்ப நேர்வரினும் நேரீற் றியற்சீர் நிற்ப நிரைவரினும் இயற்சீர் வெண்டளையாம். இனி ஒன்றுந் தன்மையாவது வெண்சீர் நிற்க வருஞ்சீர் முதலசையோ டொன்றுவது வெண்டளையாம். இவ்விரண்டும் வெண்பாவிற்குத் தளையாமென்று கொள்க.

உதாரணம்

"மட்டுத்தா னுண்டு மண்ஞ்சேர்ந்து விட்டுக்
களியானை கொண்டுவா வென்றான் அளியார்முன்
யாரோ வெதிர்நிற் பவர்." (யாப். வி. பக். சகரு.)

இஃது ஏழெழுத்தான் வந்த அடி.

'இன்றுகொல் அன்றுகொல் என்றுகொல் என்னாது.' (நால்டி. ௩௬)

இஃது எட்டெழுத்தான் வந்த அடி.

'சென்று முகந்து நுதல்சுட்டி மாறேர்த்து
வென்று வியர்த்தா னென்கோ.' (யாப். வி. பக். சகூச

இஃது ஒன்பதெழுத்தான் வந்த அடி.

'துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்கு.' (குறள். கஉ)

இது பத்தெழுத்தான் வந்த அடி.

(பாடம்) *பெறு. †வெனக்கொள்க.

'ஏரி னுழாஅர் உழவர் புயலென்னும்.' (குறள். ௧௪)
இது பதினேரெழுத்தான் வந்த அடி.

'மலர்மிசை ஏகினன் மாணடி சேர்ந்தார்.' (குறள். ௩)
இது பன்னிரண்டெழுத்தான் வந்த அடி.

'இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைவன்.' (குறள். ௫)
இது பதின்மூன்றெழுத்தான் வந்த அடி.

'கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்.' (குறள். ௨)
இது பதினன்கெழுத்தான் வந்த அடி.

'முகமறியார் மூதுணர்ந்தார் முள்ளெயிற்றூர் காமம்
அகமறைந்தான் வாழுமென் றூர—மகமறையாம்
மன்னைநீ வார்குழை வையெயிற்று யென்றேமற்
றென்னையும் வாழு மெனின்.' (யாப். வி. பக். ௪௪௫)
இது பதினைந்தெழுத்தான் வந்த அடி

'படியுடையார் பற்றமைந்தக் கண்ணு மடியுடையார்.'
(குறள். ௬௦௬)
இது பதினறெழுத்தான் வந்த அடி. இவையிரண்டும் நெடிலடி. (௫௫)

௩௬௫. அளவடி மிகுதி யுளப்படத் தோன்றி
இருநெடில் அடியுங் கலியிற் குரிய.

என்—எனின். இது கலிப்பாவிற்கு அடியரிமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) அளவடியின் மிக்க பதின்மூன்றெழுத்து முதலாக நெடிலடியுங் கழிநெடிலடியுமாகிய இருபதெழுத்தின்காறும் வரும் அடி கலிப்பாவிற்கு அடியாம் என்றவாறு.

இவ்விலக்கணங் கலித்தளை வருமிடத்தே கொள்க. கலியடியென்றது கலித்தளையடி என்றதூஉம் இவ்வேறுபாடு குறித்தென்க.

'மரல்சாய மலைவெம்ப மந்தி உயங்க.' (கலித். ௧௩)
இது பதின்மூன்றெழுத்தான் வந்தது.

'வீங்குநீர் அவிழ்நீலம் பகர்பவர் வயற்கொண்ட.' (கலித். ௧௧)
இது பதினன்கெழுத்தான் வந்த அடி.

'அடிதாங்கும் அளவின்றி அழலன்ன வெம்மையால்.' (கலித்.௧௧)
இது பதினைந்தெழுத்தான் வந்த அடி.

'அரிதாய அறனெய்தி அருளியோர்க் களித்தலும்.' (கலித். ௧௧)
இது பதினறெழுத்தான் வந்த அடி.

முதிர்கோங்கின் முகையென முகஞ்செய்த குரும்பையென.'
(கலித். ௫௬)

இது பதினேழெழுத்தான் வந்த அடி.

'அறனின்ற விதையொழியா னவலங்கொண் டதுநினையான்.'
(யாப். வி பக். ௪௬௮)

இது பதினெட்டெழுத்தான் வந்த அடி.

'உகுபனிகண் உறைப்பவுநீ ஒழிபொல்லாய் செலவலித்தல்.'
(யாப். வி பக். ௪௬௮)

இது பத்தொன்பதெழுத்தான் வந்த அடி.

'நிலங்கிளையா நெடிதுயிரா நிறைதளரா நிரைதொடியாள்.'
(யாப் வி. பக். ௪௬௮)

இஃது இருபதெழுத்தான் வந்த அடி. (௬௬)

௩௬௬. நிரைமுதல் வெண்சீர் வந்துநிரை தட்டல்*
வரைநிலை இன்றே அவ்வடிக் கென்ப.

என்—எனின் கலித்தளையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) மேற்சொல்லப்பட்ட அடி கலித்தளை தட்ட வழியே கொள்ளப்படுவது என உணர்த்தியவாறும். வெண்பா வுரிச்சீர் நிற்ப நிரைமுதல் வெண்சீர்வந்து அதன்கண் நிரை யாய்த் தளைத்தல் கலியடிக்கு வரைநிலையில்லை என்றவாறு.

'நிரைதட்டல்' என்றதனால் பிறிதாகிவருஞ் சீர் முதலாகிய நிரை யோடு தளைப்பினுங் கலித்தளையாம் என்று கொள்க.

நிரைமுதல் வெண்சீர் என்பது உய்த்துணர்ந்து கொள்ளப்பட்டது. உதாரணம் மேற்காட்டிய அடிகளுட் காண்க. (௬௭)

௩௬௭. விராஅய தளையு மொரூஉநிலை யிலவே.†

என்—எனின். இதுவுங் கலியடிக் குரியதோர் தளை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) பிறவாகி விரவிய தளையும் நீக்குதலில்லை என்றவாறு.

அஃதாவது வெண்டளையும் ஆசிரியத்தளையும் விரவுதல்.

"இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்
உமையமர்ந் துயர்மலை இருந்தனன் ஆக
ஐயிரு தலையின் அரக்கர் கோமான்." (கலித். ௩௮)

இதன்கண் முந்துற்ற இரண்டுசீரும் வெண்சீர்வெண்டளை இரண் டாஞ்சீரோடு மூன்றுஞ்சீர் இயற்சீர் வெண்டளை. நாலாஞ்சீரோடு மற்றை யடிமுதற்சீர் நிரையொன்றுசிரியத்தளை; 'அரக்கர் கோமான்' நேரொன்

(பாடம்) * தட்பினும். † இன்றே.

ஆசிரியத்தளை. அஃதேல், நேரீற்றியற்சீர் கலிக்கண் வரப்பெறு தென்ற தென்னை? கண்டுக் கோமான் வந்ததால் எனின், அவ்விலக்கணங் கலித்தளையான் வரும் அடிக்கென்க. சிறுபான்மை வஞ்சித்தளை வருதலுங் கொள்க. (௬௮)

௩௯௭. இயற்சீர்* வெள்ளடி ஆசிரிய மருங்கின்
நிலைக்குரி மரபின் நிற்பவும் உளவே.

என்—எனின் இஃது ஆசிரியப்பாவின்கண் வெண்பாவடி மயங்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) இயற்சீர்வெண்டளையா னாகிய வெண்பாவடி ஆசிரியப்பாவின்கண் நிற்றற்குரிய மரபினான் நிற்பனவுமுள என்றவாறு.

'உள' என்றதனாற் பலவடியும் வரப்பெறும் என்று கொள்க. வெண்டளை என்னாது 'அடி' என்றதனால் தளைவிரவுதல் பெரும்பான்மை அடிவிரவுதல் சிறுபான்மை என்றுகொள்க.

உதாரணம்

'நெடுங்கயிறு வலந்த' என்னும் பாட்டினுள்,
'கடல்பா டொழிய இனமீன் முகந்து' (அகம். ௩0)
என்றது இயற்சீர் வெண்டளை யடி. பிறவு மன்ன. (௬௯)

௩௯௮. வெண்டளை விரவியும் ஆசிரியம் விரவியும்
ஐஞ்சீர்† அடியும் உளவென மொழிப.

என்—எனின். இதுவும் ஆசிரியப்பாவிற் குரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) இயற்சீர் வெண்டளை விரவியும் ஆசிரியத்தளை விரவியும் ஐஞ்சீரடியும் ஆசிரியப்பாவின்கண் வருவன உள என்றவாறு.

---

* முழுவதும் ஆசிரியத் தளைவரின் வெண்பா சிதையுமாகலின் இதனையே சொல்லின் முடிவிலக்கணத்தான் வெண்பா என்றான். எனவே வேற்றுசை விராயவழித் தன்னோசை அழிதல் இதற்குப் பெரும்பான்மையாயிற்று. ஆசிரியமாயின் அவ்வாறு அழியாது என்பது கருத்து. என்போலவோ எனின் பளிங்குடன் அடுத்த பஞ்சி வேற்றுமையால், பளிங்கு வேறுபடினல்லது பஞ்சி வேறுபடாததுபோல என்பது. இதனானே வெள்ளை என்பது ஒப்பினான் ஆகிய பெயர் என்பதூஉம் பெற்றும். (தொல். பொருள் ௨௭௪. பேரா.)

† 'ஐஞ்சீரடி' என்பதனை அளவடி மூன்றுபாவிற்கு உரித்தென்றால், அவ்வப்பாவிற்கு வேறுவேறு கொண்டாற்போல ஐஞ்சீரடியும் பாத்தோறும் வேறுபடுத்துக்கொள்க. (தொல். பொருள். ௩௭௫. பேரா)

'உண்டு' என்றது 'உள்' என்றதனான் ஒருபாட்டிற் பல வருதலும் கொள்க. ஆசிரியமென்பது அதிகாரத்தான் வந்தது. உதாரணம் முன்னர்க் காட்டுதும். (சுO)

௩எO. அறுசீர் அடியே ஆசிரியத் தளையொடு
நெறிபெற்று வரூஉம் நேரடி முன்னே.

என்—எனின். இதுவுமது.

(இ - ள்.) அறுசீரடி யாசிரியத்தளையொடு பொருந்தி நடைபெற்று வரூஉம், நேரடிக்கு முன்னாக ஆசிரியப்பாவின்கண் என்றவாறு.

ஆசிரியப்பா என்ப ததிகாரத்தான் வந்தது.

"சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே
பெரியகட் பெறினே யாம்பாடத் தான்மகிழ்ந் துண்ணு மன்னே"
(புறம். உ௩௫)

என்பதன்கண் முதலடி நாற்சீரான் வந்தது; இரண்டாமடி ஆசிரியத் தளையொடு பொருந்தி யறுசீரடியாகி வந்தது.

'பொருந்தி' என்றதனான் அத்தளை சில வருதல் கொள்க. ஏனையவை புணருஞ்சீரான் வந்தன. (சுக

௩எக. *எழுசீ ரடியே முடுகியல் நடக்கும்.

என்—எனின். எழுசீரடிக்குரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) எழுசீரான் வரும் முடுகியலடி என்றவாறு. உதாரணம் முன்னர்க் காட்டுதும். (சுஉ)

௩எஉ. முடுகியல் வரையார் முதலிரண் டடிக்கும். †

என்—எனின் எய்தியதன்மேற் சிறப்புவிதி உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) மேற்சொல்லப்பட்ட ஐஞ் சீரடிக்கும் அறுசீரடிக்கும் முடுகியல் நீக்கப்படாதென்றவாறு.
உதாரணம் முன்னர்க் காட்டுதும். (சு௩)

௩எ௩. ஆசிரிய மருங்கினும் வெண்பா மருங்கினும்
மூவகை யடியு முன்னுதல் இலவே.

என்—எனின். எய்தியது விலக்குதல் நுதலிற்று.

(இ - ள்.) ‡முடுகியலாகி வரு மூவகை யடியும் ஆசிரியப்பாவினும் நிற்றல் இல என்றவாறு.

---

* முடுகாதவழி அத்துணை நடையாட்டம் இல எழுசீரடி என்பதாம். ......................இவை பரிபாடலுள்ளும் கலியுள்ளும் காணப்படும். (தொல். பொருள். ௩எஎ. பேரா.)

(பாடம்) † முதலீரடிக்கும். ‡ முடுகியலாகிய.

எனவே,*கலிப்பாவினுள் நிற்கப்பெறும் என்றவாறாயிற்று.

உதாரணம் முன்னர்க் காட்டுதும்.

'நாற்சீர் கொண்டதடி' என வோதிப் பின்னும் இருசீரடி வஞ்சிக் கண் உரித்தென ஓதி ஐஞ்சீரடியும் அறுசீரடியும் எழுசீரடியும் உள என ஓதினமையான், †அடியாவது இரண்டு முதலாக வருமெனவும் அவற்றுள் இருசீரடி குறளடி எனவும் முச்சீரடி சிந்தடி எனவும் நாற்சீரடி அளவடி எனவும் ஐஞ்சீரடி நெடிலடி எனவும்‡ அறுசீர் முதலாக வரும் அடியெல்லாங் கழிநெடிலடியா மெனவும் பிறநூலாசிரியர் கூறிய இலக்கணமும் இவ்வாசிரியர்க்கு உடம்பாடென்றுகொள்க. § அறுசீர் முதலான $ அடிகளுள் ¶எழுசீர் எண்சீர் சிறப்புடையன எனவும் எண்சீரின் மிக்கன சிறப்பில்லன எனவும் அவ்வாசிரிய ருரைப்ப. இவ்வாசிரியரும் அடிக்குச் சீர் வரையறையின்மை 'ஆங்கனம் விரிப்ப வளவிறந் தனவே, பாங்குற வுணர்ந்தோர் பன்னுங் காலே' (செய்யுளியல் - சக) என்றதனான் உணர்த்தினார் என்றுகொள்க. ஈண்டு நாற்சீரடியை எடுத்தோதியது வெண்பாவும் ஆசிரியப்பாவுங் கலிப்பாவும் அவ்வடியினான் வருதலின் என்று கொள்க. (சுச)

௩எச. ஈற்றயல் ** அடியே ஆசிரிய மருங்கில்
தோற்ற முச்சீர்த் தாகு மென்ப.

என்—எனின். இதுவும் ஆசிரியப்பாவிற் குரியதோர் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஆசிரியப்பாவின் ஈற்றயலடி தோன்றுமிடத்து முச்சீர்த்தாகவும் பெறும் என்றவாறு.

உதாரணம்

"முதுக்குறைந் தனளே முதுக்குறைந் தனளே
மலையன் ஒள்வேற் கண்ணி
முலையும் வாரா முதுக்குறைந் தனளே."

இதனுள் ஈற்றயலடி முச்சீரான் வந்தது. (சுரு)

௩எரு. இடையும் வரையார் தொடையுணர்ந்†† தோரே.

என்—எனின். இதுவுமது.

---

(பாடம்) * கலிப்பாவினறியப் பெறுமாயிற்று.
† அடியாவதற்கு முடுகியல் நீக்கப்படா தென்றவாறு. எனவே கலிப்பாவிற்கு அடியாவது இரண்டசை.
‡ அறுசீரடி § அறுசீரடி. $ அடிகளின.
¶ எண்சீரிறுதி சிறப்புடைத் தெனவும்.

**'முச்சீர்த்து' என்று ஒருமை கூறினமையின் அஃது ஒன்றாகலும், தொடையுணர்வோர் என்றமையின் இடைவருவன இரண்டாகலுங் கூறினன் என்பது. (தொல். பொருள். ௩௮0. பேரா.)

(பாடம்) †† தொடை உணர்வோரே.

(இ - ள்.) மேற்சொல்லப்பட்ட முச்சீரடி ஆசிரியப்பாவி னுள் இடையும் வரப்பெறும் என்றவாறு.

"நீரின் தண்மையுந் தீயின் வெம்மையுஞ்
சாரச் சார்ந்து தீரத் திருஞ்
சாரல் நாடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரத் தீர்பொல் லாவே."

இதனுள் மூன்றுமடியும் நான்காமடியும் முச்சீரான் வந்தவாறு கண்டு கொள்க. (சுசு)

௩எசு. முச்சீர் முரற்கையுள் நிறையவும் நிற்கும்.

என்—எனின். கலிப்பாவிற்கு ஈற்று வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

*(இ - ள்.) ஈற்றயலடி முச்சீரென வோதப்பட்டது கலிப்பா வின்கண் நாற்சீர் ஆகியும் வரும் என்றவாறு.

இச்சூத்திரம் எதிரது நோக்கிக் கூறப்பட்டது: 'எழுசீ ரிறுதி யாசிரியங்கலியே' (செய்யுளியல் - எஉ) என ஓதுகின்றராதலின்.

உதாரணம்

"அரிமான் இடித்தன்ன" என்னும் பாலைக்கலியுள்,† சுரிதகம்

"முளைநிரை முறுவல்‡ ஆயத்துள் எடுத்தாய்ந்த
இளமையுந் தருவதோ இறந்த பின்னே" (கலித். கரு)

என ஈற்றயலடி நாற்சீரான் வந்தது.§ (சுஎ)

௩எஎ. வஞ்சித்$ தூக்கே செந்தூக் கியற்றே.

என்—எனின். வஞ்சிப்பாவிற்கு ஈறு உணர்த்துதல் நுதலிற்று.

---

* நிறைய நிற்றல் என்பது அச்செய்யுள் முழுவதும் அவ்வடியே வருதலாம். உம்மையான் ஒரு செய்யுள் நிறையவாராது ஒன்றும் இரண்டும் பலவுமாகி அம்முச்சீரடி வருதல் பெருவரவிற்று என்பது. தாங்குறைந்த அடியாதலிற் கலிப்பாவிற்கு உறுப்பாகிய சின்னத்துக் குறைய நிற்கும் இயல்பினவாயினும், நிறைய நிற்றலுடைய கொச்சகத்துள் என்றவாறு. (தொல். பொருள். ௩அஉ. பேரா.)

(பாடம்) † கொச்சகக் கலியினுள் ‡ முறுவலராயத்து.

§ வந்தவாறு கண்டு கொள்க.

$ தனிச்சொல் வேண்டுமென்று பிற்காலத்து நூல் செய்தாரும் உளர். அது சான்றோர் செய்யுள் எல்லாவற்றோடும் பொருந்தாமையா னும் பிற்காலத்தில் செய்த நூல்பற்றி முற்காலத்துச் செய்யுட்கெல்லாம் இலக்கணம் சேர்த்துதல் பயமின்றுதலானும் அஃதமையாது என்பது. வஞ்சிப்பாவின் ஈற்றடி வரைந்தோதவே இடையாயின எல்லா அடியும் வரப்பெறும் என்பதாம். (தொல். பொருள். ௩அ௩. பேரா.)

(இ - ள்.) வஞ்சிப்பாவின் இறுதி ஆசிரியப்பாவின் இயல் பிற்று என்றவாறு.

தூக்கெனினும் இறுதியெனினும் ஒக்கும். செந்தூக்கெனினும் ஆசிரிய வீறு எனினும் ஒக்கும். 'செந்தூக் கியற்று' என்றமையால் ஈற்றயலடி முச்சீரான் வருதலும் நாற்சீரான் வருதலுங் கொள்க.

உதாரணம்

"தொடியுடைய தோள்மணந்தனன்" என்னும் பாட்டுள்,

"இடுக ஒன்றோ* சுடுக ஒன்றோ
படுவழிப் படுகவிப் புகழ்வெய்யோன் தலையே." (புறம். உ௩௯)

இதனுள் ஈற்றயலடி நாற்சீரான் வந்தது.

"பூந்தாமரைப் போதலமர" என்னும் பாட்டுள்,

"மகிழு மகிழ்தூங் கூரன்
புகழ்த லானுப் பெருவண் மையனே." (யாப். வி. பக். எச)

இதனுள் ஈற்றயலடி முச்சீரான் வந்தது. (சுஅ)

௩ளஅ. வெண்பா ஈற்றடி† முச்சீர்த் தாகும்
அசைச்சீர்த் தாகும் அவ்வழி யான.‡

என்—எனின். வெண்பாவிற்கு இறுதியடியும் இறுதிச்சீரும் உணர்த்துதல் நுதலிற்று.

(இ- ள்.) வெண்பாவினீற்றடி மூன்றுசீரையுடைத்தாகும்; அதன்கண் இறுதிச்சீர் அசைச்சீரான்வரும் என்றவாறு.

§உதாரணம் முன்னர்க் காட்டுதும். (சு௯)

௩ள௯. நேரீற் றியற்சீர் நிரையும் நிரைபும்
சீரேற் றிறூஉம் இயற்கைய என்ப.

என்—எனின். மேலதற்கோர் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) வெண்பாவி னிறுதிச்சீரின் அயற்சீர் நேரீற் றியற்சீராயின் நிரையசையும் நிரைபு அசையுஞ் சீராந்தன்மையைப் பெற்று முடியும்$ இயற்கையை யுடைய என்றவாறு.

---

(பாடம்) * வொன்றே. † வெண்பாட்டீற்றடி.
‡ அசைச்சீராகு மவ்வயினான.
§ ஒருபடியில் காணப்படுவது:
"'பாசடை வெண்பாட் டவரே வடியாணிசிற்
சமநிலை வெண்பாட் டெனப்பெயர் பெறும்'
என்பாரும் உளராலே தெல்பவாறு வந்தவழிக்காண்க."
$ பெறுமுடிபாகும்.

"கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை" (குறள். ௯)

"தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது." (குறள். எ)

என வரும். (௭௦)

௩௭௦. நிரையவண் நிற்பின் நேரு நேர்பும்
வரைவின் றென்ப வாய்மொழிப் புலவர்.

என்—எனின் இதுவுமது.

(இ - ள்.) வெண்பாவி னீற்றயற்சீர் நிரையீற் றியற்சீரா யின் நேரசையும் நேர்பசையும் முடிபாம் என்றவாறு.

உதாரணம்

"பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி*
வாலெயி றூறிய நீர்" (குறள். ௧௦௨௧)

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல†
தன்றே மறப்பது நன்று." (குறள். ௧௦௮)

என வரும்.

'வெண்சீ ரீற்றசை நிரையசை யியற்றே.' (செய்யுளியல். ௨௮)

என்பதனான் ஈற்றயற்சீர் முதலசையான் வரினும் நேரும் நேர்பும் முடிபாகக் கொள்ளப்படும்.‡

உதாரணம்

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தார்." (குறள். ௧௦)

"இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு." (குறள். ௫)

என வரும். (௭௧)

௩௭௧. எழுசீர்§ இறுதி யாசிரியங் கலியே.

என்—எனின். கலிப்பாவிற்கு முடிபுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) கலிப்பாவிற்கு ஈற்றயலடி முச்சீரான்வரும் ஆசிரியமுடிபாகும் என்றவாறு.

உதாரணம்

"தொடங்கற்கட் டோன்றிய" என்னுங் கலியுள், சுரிதகம்.

(பாடம்) * பனிமொழி. † நன்றல்லா.
‡ கொள்ளப்படுமென்றவாறு. § முச்சீர்.

§ எழுசீர் இறுதி ஆசிரியம் எனவே ஆசிரிய அடி பலவும் வந்து ஈருத்தடி முச்சீராக வரும் என்பது கொள்க......
(தொல். பொருள். ௩௮௮. பேரா.)

"தொல்கவின் தொலைதல் அஞ்சியென்
சொல்வரைத் தங்கினர் காத லோரே" (கலித். உ)

என வந்தது. ஈற்றயலடி நாற்சீரான் வருமென்பது மேற்கூறப்பட்டது. (எஉ)

௩௪உ. வெண்பா இயலினும் பண்புற* முடியும்.

(இ - ள்.) கலிப்பா வெண்பாச்சுரிதகமாக முடியும் என்ற வாறு.

உதாரணம்

"அறனின்றி அயல்தூற்றும்" என்னும் கலியுள், சுரிதகம்.

"யாநிற் கூறவும் எமகொள்ளாய் ஆயினை
ஆனு திவள்போல் அருள்வந் தவைகாட்டி
மேனின்று மெய்கூறுங் கேளிர்போல் நீசெல்லுங்
கானந் தகைப்ப செலவு' (கலித். ௩)

என வெண்பாவினியலான் இற்றவாறு காண்க.

இத்துணையும் அடியிலக்கணம். (எ௩)

௩௪௩. எழுத்து† முதலா ஈண்டிய அடியிற்
குறித்த பொருளை முடிய நாட்டல்
யாப்பென மொழிப யாப்பறி புலவர்.

என்—எனின். யாப்பாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) எழுத்து முதலாக அசைச்சீர் அடி என ஈண்டோதப்பட்ட அடியினானுற் றான் குறித்தபொருளை யிறுதியடி யளவு முற்றுப்பெற நிறுத்துதல் யாப்பென்று சொல்லுவர் புலவர் என்றவாறு.

இது சொல்ல வேண்டிய தென்னை? செய்யுட்பாடுவார்க்கு இயல் பன்றோ எனின்' ஈண்டுச் செய்யுளுறுப்புள் ஓதுகின்றாராதலின் யாதானு

*பண்பற என்பது விசேடம்; மிகமுடியும் என்றவாறு. எனவே, ஈண்டுக் கூறுத இரு சீரடியானும், நாற்சீரான் வந்த கலிப்பா அடியானும் ஐஞ்சீரடியானும் முடிவன கொச்சகக் கலியுள்; அவை இத்துணை விசேடம் இல என்றவாறு......பண்புற என்றதனான் மூன்றடியின் இழி யிற் பண்புபடவாரா வெள்ளைச் சுரிதகம் எனவும் கொள்க.
(தொல். பொருள். ௩௪௧ பேரா.)

† மாத்திரை முதலாக என்னாது 'எழுத்து' என்றது என்னை யெனின், எழுத்தும் அசையும் சீருங் கொண்டியன்ற ஓரோ அடிக் கண்ணே இன்பஞ் செய்யும் ;அது பொருட்காய் இன்றியமையாமையின் எழுத்து முதலாக என்றான் என்பது ஈண்டிய அடி' என்பது அவை மூன்றும் ஒன்றாகத் தொடர்ந்து ஈண்டிய அடி என்றவாறு.
(தொல். பொருள். ௩௪0. பேரா.)

மொருபொருட்கட் பல சொற்றொடுத்து வழங்குங்கால் குறித்தபொருளை முடிக்கவேண்டுஞ் சொல்லே சேர்த்துக் கூறல் வேண்டும் எனவும் அது மிகாமற் குறையாமற் கூறல்வேண்டும் எனவும் இலக்கணங் கூறல் வேண்டும் என்க. அதன் வகை முன்னர்க் காட்டுதும். (எச)

௩அச. பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே
அங்கதம் முதுசொல் அவ்வேழ்* நிலத்தும்
வண்புகழ்† மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பே ரெல்லை அகத்தவர் வழங்கும்
யாப்பின் வழிய தென்மனார் புலவர்.

என்—எனின். இதுவும் அதன்பகுதி உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) பாட்டுமுதலாக முதுசொல்லீருகச் சொல்லப்பட்ட எழுநிலத்தினும், வளவிய புகழையுடைய சேரன் பாண்டியன் சோழன் என்னும் மூவரது தமிழ்நாட்டகத்தவர் வழங்கும் தொடர்மொழிக்கண் வரும் மொழி யாப்பாவது என்றவாறு.

எனவே யாப்பாவது :—பாட்டியாப்பு, உரையாப்பு, நூலியாப்பு, மொழியாப்பு, பிசியாப்பு, அங்கதயாப்பு, பழமொழியாப்பு என எழு வகைப்படும். மேலைச் சூத்திரத்துள்.

'குறித்த பொருளை முடிய நாட்டல்'

என்றமையானும், இச் சூத்திரத்துள்,

'நாற்பேரெல்லை யகத்தவர் வழங்கும் யாப்பின் வழியது'

என்று ஓதினமையானும், குறித்த பொருள் முடியுமாறு சொற்றொடுத்தல் என்று கொள்ளப்படும்.

உதாரணம்

"தாமரை புரையுங் காமர் சேவடிப்
பவளத் தன்ன மேனித் திகழொளிக்
குன்றி ஏய்க்கும் உடுக்கைக் குன்றின்
நெஞ்சுபக எறிந்த அஞ்சுடர் நெடுவேற்
சேவலங் கொடியோன் காப்ப
ஏம வைகல் எய்தின்றால் உலகே."

(குறுந். கடவுள் வாழ்த்து)

(பாடம்) * முதுசொலோ டவ்வேழ்.

† 'வண்புகழ் மூவர்' என்பது வளனுடைமையாற் புகழ்பெற்றோர் என்றவாறு. அஃதாவது கொடுத்துப்பெறும் புகழ் எனக்கொள்க. மூவர் எனப்படுவார் தமிழ்நாட்டு மூவேந்தருமாயினர் 'தண்பொழில் வரைப்பு' என்பது நிலத்துக்கு நிழல் செய்யும் நாவலம் பொழிலுள் வரைந்து கொள்ளப்படும் வரைப்பினையுடைய என்றவாறு.........'வடவேங்கடந் தென்குமரி யாயிடை' என்புழி நான்கெல்லையும் கூறினன் என்பது.
(தொல். பொருள். ௩கக. பேரா.)

இதனுட் குறித்த பொருள் முருகவேள் காப்ப உலகங் காவற்பட்டது என்னும் பொருள், இதனை முடித்தற்பொருட்டு எழுத்துமுதலாகி வந்து ஈண்டிய அடிகளெல்லாவற்றானும் நாட்டியவாறு கண்டு கொள்க. (எ௫)

௩௮௫. மரபே* தானும்
நாற்சொல் லியலான் யாப்புவழிப் பட்டன்று.†

என்—எனின். மரபு ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று

(இ - ள்.) மரபாவது தான் இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் என்னும் நாற்சொல்லின் இயற்கையானே யாப்பின் வழிபட்டது என்றவாறு.

குறித்த ஒருபொருளை முடியச் சொற்றொடுக்குங்கால் இயற்சொலாகிய பெயர் வினை யிடை யுரியானும், ஏனைத் திரிசொல் திசைச்சொல் வடசொல்லானும், எழுவகை வழுவும் படாமல் புணர்ப்பது என்றவாறும்.

அவற்றுள் இயற்சொல் மரபாவது சொல்லதிகார இலக்கணத்தோடு பொருந்துதல்.

திரிசொல் மரபாவது தமிழ்நாட்டகத்தும் பலவகை நாட்டினும் தத்தமக்குரித்தாக வழங்கும் மரபு.

திசைச்சொன் மரபாவது செந்தமிழ்சூழ்ந்த பன்னிருநிலத்தினும் வழங்கும் மரபு.

வடசொன் மரபாவது திரிந்தவகையாகிய சொல்மரபு.

யாதானும் ஒருசெய்யுட் செய்யுங் காலத்துப் பொருளுணர்த்துஞ் சொற்கள் இவையாதலின் இவை ஒருபொருட்குரித்தாகிய ஆண்பெயரும் பெண்பெயரும் குழவிப் பெயரும் முதலாயின பிறபொருட்கண் வாராமை யான் அவற்றை அவ்வம்மரபினாற் கூறுதலும் ஒருமை பன்மை மயங்காமையும் பெயரும் வினையும் முடிவுபெறக் கூறுதலும் வேண்டுதலின் இவ்விலக்கணமுங் கூறல் வேண்டிற்று. (எ௬)

௩௮௬. அகவ‡ லென்ப தாசிரி யம்மே.

என்—எனின். இது தூக்காமாறு உணர்த்துவார் அவற்றுள் ஆசிரியத்திற்குரிய ஓசை உணர்த்துதல் நுதலிற்று.

---

* ஒருகாலத்து வழங்கப்பட்ட சொல் ஒரு காலத்து இலவாகலும் பொருள் வேறுபடுதலும் உடைய. அதோளி இதோளி உதோளி எனவும் குயின் எனவும் நின்ற இவை ஒரு காலத்துளவாகி இக்காலத்திலவாயின. இவை முற்காலத்துள வென்பதே கொண்டு வீழ்ந்த காலத்தும் செய்யுள் செய்யப்படா. அவை ஆசிரியர் நூல்செய்த காலத்துளவாயினும் கடைச் சங்கத்தார்காலத்து வீழ்ந்தமையிற் பாட்டினுந் தொகையினும்அவற்றை நாட்டிக்கொண்டு செய்யுள் செய்திலர்: அவற்றுக்கு இது மரபிலக்கண மாகலின் என்பது (தொல். பொருள். ௩௯௨: பேரா. (பாடம்) † பட்டன.

‡ அகவிக் கூறுதலான் அகவல் எனக் கூறப்பட்டது. அஃதாவது கூற்றும் மாற்றமுமாகி ஒருவன் கேட்ப அவற்கு ஒன்று செப்பிக் கூறுது தாம் கருதியவாறெல்லாம் வரையாது சொல்லுவதோர் ஆறும் உண்டு.

(இ - ள்.) அகவல் என்னும் ஓசை ஆசிரியத்திற் கென்ற வாறு.

தூக்கெனினும் ஓசையெனினுமொக்கும். அகவல் என்பது ஆசிரியன் இட்டதோர் குறி. அது வருமாறு:

"செங்களம் படக்கொன் றவுணர்த் தேய்த்த
செங்கோல் அம்பின் செங்கோட் டியானை
கழல்தொடிச் சேஎய் குன்றங்
குருதிப் பூவின் குலைக்காந் தட்டே." (குறுந். க)

இதனுள் எழுத்தளவு மிகாமற் குறையாமல் உச்சரிக்க அவ்வழி நின்ற ஓசையால் ஆசிரியம் வந்தவாறு காண்க. (எஎ)

நூஅஎ. அஃதன்* றென்ப வெண்பா யாப்பே.

என்—எனின். வெண்பாவிற் குரிய ஓசை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) வெண்பாவாக யாக்கப்பட்டது அகவலோசை யன்று என்றவாறு.

எனவே அகவுதலில்லாத ஓசையாம். இதனைப் பிறநூலாசிரியர் செப்பலோசை என்ப. அகவுதல் என்பது ஒரு தொழில். அத்தொழில் இதன்கண் இல்லாமையின் 'அஃதன்று' என்றார்.

உதாரணம்

"பொன்னுரை மார்பிற் புனைகழற்காற் கிள்ளிபேர்
உன்னேனென் றாழுலக்கை பற்றினேற்—கன்னோ
மனனோடு வாயெல்லாம் மல்குநீர்க் கோழிப்
புனல்நாடன் பேரே வரும்" (முத்தொள். கOசு)

இது மேற்சொல்லப்பட்டதுபோல இசைகுறித்து வருதலின்றிச் செப்புதலாகிய வாக்கியம்போன்ற ஓசைத்தாகி வந்தவாறு காண்க. (எஅ)

நூஅஅ. துள்ளல் ஓசை கலியென மொழிப.

என்—எனின். கலிப்பாவிற்கு ஓசையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) துள்ளலோசை கலிப்பாவிற்காம் என்றவாறு.

*துள்ளுதலாவது ஒழுகுநடைத்தன்றி இடையிடை யுயர்ந்து வருதல்; கன்று துள்ளிற்றென்றாற் போலக் கொள்க.

---

அதனை வழக்கின் உள்ளார் அழைத்தல் என்றும் சொல்லுப. அங்ஙனம் சொல்லுவார் சொல்லின்கண் எல்லாம் தொடர்ந்து கிடந்த ஓசை அகவல் எனப்படும்..... கழங்குமிட்டு உரைப்பார்......அங்ஙனமே வழக்கின் உள்ளதாய்க் கூறும் ஓசை ஆசிரியப்பா எனப்படும் என்றவாறு.
(தொல். பொருள். நகூந. பேரா.)

(பாடம்) * அஃதான்

உதாரணம்

"அரிதாய அறனெய்தி அருளியோர்க் களித்தலும்
பெரிதாய பகைவென்று பேணாரைத் தெறுதலும்
புரிவமர் காதலிற் புணர்ச்சியுந் தருமெனப்
பிரிவெண்ணிப் பொருள்வயிற் சென்றநங் காதலர்
வருவர்கொல் வயங்கிழாஅய் வலிப்பல்யான் கேளினி" (கலித். கக)

என்றவழி 'அரிதாயவறன்' என நின்றவழிச் செம்பலோசைத்தாகிய வெண்சீர்ப் பின்னும் வெண்டளைக்கேற்ற சொல்லொடு புணராது ஆண்டெழுந்த ஓசை திள்ளிவந்தமையால் துள்ளலோசை யாயிற்று. (எக)

௩அகூ. தூங்கல் ஓசை வஞ்சி யாகும்.

என்—எனின். வஞ்சிப்பாவிற்குரிய ஓசை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) தூங்கலாவது அறுதியற்ற ஓசைத்தாகி வரும் வஞ்சி என்றவாறு.

"சுரமறிவன துறையெல்லாம்
இறவீன்பன இல்லெல்லாம்
மீன்திரிவன கிடங்கெல்லாந்
தேன்தாழ்வன பொழிலெல்லாம், எனத்
தண்பணை தழீஇய இருக்கை
மண்கெழு நெடுமதில் மன்னன் ஊரே." (யாப், வி. பக். சுடு)

இதனுட் சீர்தோறும் ஓசை யற்றவாறு கண்டுகொள்க. (அ0)

௩கூ0. *மருட்பா ஏனை இருசார் அல்லது
தானிது என்னும் †தன்மை யின்றே.

என்—எனின். மருட்பாவிற்கு ஓசை இதுவென உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) மருட்பாவிற்கு ஓசை இதுவென்னுந் தன்மை இல்லை;. அதற்கு வெண்பாவும் ஆசிரியப்பாவும் உறுப்பாக, இவ்விரண்டின் ஓசையே அதற்கு ஓசை என்றவாறு.

---

* செப்பல் முன்னாகவும் அகவல் பின்னாகவும் வருவதாயிற்று மருட்பா. இனி, நிறுத்த முறையானே கொள்வார் வெண்பா முதல் அகவல் பின்னாக வருவது மருட்பா அன்றெனவும் வெண்பா ஒழித்து ஒழிந்த பா தம்முள் மயங்குவனவே மருட்பா எனவும் கூறுப. கலிப்பாவும் வஞ்சிப்பாவும் ஆசிரியத்தோடும் வெண்பாவோடும் மயங்கி இறினும் அவை மருட்பா எனப் படாமையின் அது பிழைக்கும் என்பது

(தொல். பொருள். ௩கஎ. பேரா.)

(பாடம்) † தனிநிலை.

"திருநுதல் வேரரும்புந் தேங்கோதை வாடும்
இருநிலனுஞ் சேவடி யெய்தும்*—அரிபரந்த
போகிதழ் உண்கண் இமைக்கும்
ஆகு மற்றிவள் அகலிடத் தணங்கே" (பு. வெ. கைக்கிளை. ௩)

என்பதனுட் கண்டு கொள்க. (அக)

௩கூக. அவ்வியல் புல்லது† பாட்டாங்குக் கிளவார்.

என்—எனின். பாக்கள் எல்லாவற்றிற்கும் உரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) மேற் சொல்லப்பட்ட ஓசை வகையா னல்லது பாட்டாங்குக் கூறுர் என்றவாறு.

பாட்டாங்குக் கூறுதலாவது ஓசை ஒழித்துச் சீருந்தளையும் அடியும் படக் கூறுதல். அவ்வாறு படக் கூறுதலால் பாட்டாங்கு ஆசாதென்ப தூஉம் அடியுந்தொடையும் பெறவந்தாயினும் நூலின்பாற்படுதல் உரையின்பாற்படுதல் என்பதூஉம் கூறியவாறும். அது வருமாறு :

"ஐவகை அடியும் விரிக்குங் காலை
மெய்வகை அமைந்த பதினேழ் நிலத்தும்
எழுபது வகையின் வழுவில வாகி
அறுநூற் றிருபத் தைந்தா கும்மே" (செய்யுளியல். சுஅ)

என்பது ஆசிரியப்பாவிற்குரிய இலக்கணமுடைத்தாயினும் ஓசையின்மையான் ஆசிரியம் எனப்படாது நூலெனப்படும் என்று கொள்க. (அஉ)

௩கூஉ. ‡தூக்கியல் வகையே ஆங்கென மொழிப.

என்—எனின். ஐயமறுத்தலை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) மேல் அதிகாரப்பட்ட தூக்கியலும் வகை சொல்லப்பட்ட நாலுமே என்றவாறு.

எனவே இன்னும் உளவோ எனக்கருதற்க வென ஐயந்தீர்த்தவாறு. ஈங்கு ஓதப்பட்ட தூக்குச் செவிப்புலனாதலின் அதனானே ஓர்ந்துணர்ந்து பாகுபாடறிக. (அ௩)

௩கூ௩. மோனை எதுகை முரணே இயைபென
நால்நெறி மரபின தொடைவகை என்ப.

என்—எனின் தொடைப் பாகுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

---

(பாடம்) * இருநிலம் சேவடியும் தோயும். † அவ்வியல் அல்லது.

‡ தூக்கென்பது சொல்லின் முடியும் இலக்கணத்திற்றது தூக்கென்பது நிறுத்தலும் அறுத்தலும் பாடலும் என்று இன்னோரன்னவற்று மேல் நிற்கும்; ஈண்டும் அவ்வாறே பாவினை இத்துணை அடிஎன நிறுத்துக் கூறுபாடறிதலும் அவ்வத் தூக்குள்வழிச் சொல்லுவாரது உறுப்பு, விகாரப்பட்டு ஓடுவதுபோன்று அசையுமாறும் கண்டுகொள்க. (தொல். பொருள். ௩கூக. பேரா.)

(இ - ள்.) மோனை எனவும் எதுகை யெனவும் முரணெனவும் இயைபெனவும் நான்குநெறிப்பட்ட மரபினையுடைய தொடையினது பாகுபாடு என்றவாறு.

உதாரணந் தத்தஞ் சிறப்புச் சூத்திரங்களுட் காட்டுதும். (அ௪)

௩௯௪. *அளபெடை தலைப்பெய் ஐந்தும் ஆகும்.

என்—எனின். இதுவுமது.

(இ - ள்.) அளபெடைத் தொடையோடே கூட ஐந்தென்று சொல்லவும்பெறும் என்றவாறு. (அ௫)

௩௯௫. பொழிப்பும் ஒரூஉஞ் செந்தொடை மரபும்
அமைந்தவை தெரியின்† அவையுமா ருளவே.‡

என்—எனின். இதுவுமது.

(இ - ள்.) பொழிப்பெனவும் ஒரூஉ வெனவும் செந்தொடையாம் எனவும் அமைந்தன ஆராயின் அவையுந் தொடைப் பாகுபாடாம் என்றவாறு. (அ௬)

௩௯௬. நிரனிறுத் தமைத்தலும் இரட்டை யாப்பும்
மொழிந்தவற் றியலான் முற்றும் என்ப.

என்—எனின். இதுவுமது.

(இ - ள்.) நிரலே நிறுத்தியமைத்துக் கோடலும் இரட்டைத் தொடையும் மேற்சொன்னவற்றான் முடியவும் பெறும் என்றவாறு.

நிரனிறைத் தொடையாவது பொருளைச் சேரநிறுத்திப் பயனையுஞ் சேரநிறுத்துதல்.

* நான்கின்மேல் ஒன்றேறியக்கால் ஐந்தாம் என்பது ஈண்டுச் சொல்லவேண்டுவதன்று பிற எனின், அற்றன்று; நான்கினொடு ஒன்றினைச் சொல்லுகின்றானாயின் அது கடா ஆவது; ஐந்தெனவும் ஆறெனவும்படும் என்றதற்கு இது கூறினான்: எனவே, உயிரளபெடையும் ஒற்றளபெடையும் என அளபெடை இரண்டாதலின் என்பது. (தொல். பொருள். ௪0௧. பேரா.)

† 'அமைத்தனர் தெரியின்' என்றதனான் அமையுமாற்றான் அமைத்துக்கொள்ளப்படும். யாங்ஙனம்? பொழிப்பும் ஒரூஉவும் ஓரடியுள்ளே வரும் எனவும் செந்தொடை ஓரடியுள் வரினும் இரண்டடியான் அன்றி அறியவாராதெனவும் கொள்க.

'அவையுமாருளவே' என்ற உம்மையான் இவைபோல ஓரடிக்கண்ணே வரும் முற்றெதுகையும் கிளை முற்றெதுகையும் இரண்டந்தாதியும் இருவகை விட்டிசைத் தொடையும் கொள்ளப்படும். (தொல். பொருள். ௪0௨. பேரா.)

(பாடம்) ‡ அமைத்தனர்.

இரட்டைத்தொடையாவது ஓரடிமுழுவதும் ஒரு சொல்லே வருதல்.

இத்துணையுங் கூறப்பட்டது அடிதொறும் வருவன ஐந்துதொடை எனவும் அடிக்கண் வருவன ஐந்துதொடை எனவும் அவ்வைந்தும் மூன்றாகி அடங்குமெனவும் கூறியவாறும். (அஎ)

௩கூஎ. அடிதோறுந் தலையெழுத் தொப்பது மோனே.

என்—எனின். மோனை யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அடிதோறும் தலையெழுத்து ஒப்பது மோனைத் தொடையாம் என்றவாறு.

அஃதேல் 'அடியுள் ளனவே தலையொடு தொடையே' (செய்யுளியல். கூஉ) எனவோதி ஈண்டும் அவற்றை யடியினும் வருமென்றல் பொருந்தாதெனின் ஆண்டு மற்றையடியில் வாராதென்று ரல்லர்: அடியல்லாத உரை முதலாயினவற்றில் தளையொடு தொடையில்லை என்பார் 'அடியுள் ளனவே தளையொடு தொடையே' என்றார்.

"மாவும் புள்ளும் பதிவயின் படர
மாநீர் விரிந்த பூவுங் கூம்ப
மாலை தொடுத்த கோதையுங் கமழ
மாலை வந்த வாடையும்
மாயோய் நின்வயின் புறத்திறுத் தற்றே" (யாப். வி. ப. ககூ0)

என வரும். (அஅ)

௩கூஅ. அஃதொழித் தொன்றின் எதுகை ஆகும்.

என்—எனின். எதுகை யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அடிதொறும் முதலெழுத்தொன்றாமல் இரண்டாமெழுத்து ஒன்றின் எதுகை யாகும் என்றவாறு.

அஃதேல் முதலெழுத்தும் ஒன்றி இரண்டாமெழுத்தும் ஒன்றில் யாதாகு மெனின், முந்துற்ற மோனையாற் பெயரிட்டு வழங்கப்படும் என்க.

உதாரணம்

"அடிதாங்கும் அளவின்றி அழலன்ன வெம்மையாற்
கடியவே கனங்குழாஅய் காடென்றார் அக்காட்டுள்
துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்னுண்ணுங் களிறெனவும் உரைத்தனரே"
(கலித். கக)

என வரும். (அகூ)

௩கூகூ. ஆயிரு தொடைக்குங் கிளையெழுத் துரிய.

என்—எனின். எய்தியதன்மேற் சிறப்புவிதி உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) மோனைத்தொடைக்கும் எதுகைத்தொடைக்கும் எடுத்த வெழுத்தே வருதலன்றி வருக்க வெழுத்தும் உரிய என்றவாறு.

"பகலே, பல்பூங் கானற் கிள்ளை ஒப்பியும்
பாசிலைக் குளவியொடு கூதளம் விரைஇய
பின்னுப்பிணி அவிழ்ந்த நன்னெடுங் கூந்தல்
பீர்ங்கப் பெய்து தேம்படக் கருதி" (யாப். வி. ப. ௧௩௫)

என்பது வருக்க மோனை.

"ஆறறி அந்தணர்க் கருமறை பலபகர்ந்து
தேறுநீர் சடைக்கரந்து திரிபுரம் தீமடுத்துக்
கூறுமற் குறித்ததன்மேற் செல்லுங் கடுங்கூளி
மாறுப்போர் மணிமிடற் றெண்கையாய் கேள்இனி."
(கலித். கடவுள்வாழ்த்து)

என்பது வருக்கவெதுகை. பிறவுமன்ன. (௯0)

௪00. மொழியினும் பொருளினும் முரணுதல் முரணே.

என்—எனின். முரணுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்.) அடிதொறும் வந்த சொல்லினானும் பொருளினானும் மாறுபடத் தொடுப்பது அடிமுரண்தொடையாம் என்றவாறு.

சொல்முரணுவது சொல்லானன்றிப் பொருளான் மாறுபடாமை. பொருள் முரணுவது மாறுபாடுடைய பொருளைச் சொல்வது.

"இரும்பின் அன்ன கருங்கோட்டுப் புன்னை
பொன்னின் அன்ன நுண்தா துறைக்கும்" (யாப். வி. ப. ௧௪௬)

என்பது இரும்பும் பொன்னும் மாறுபாடுடைத்தாதலிற் பொருள்முரண் ஆயிற்று.

"சிறுகுடிப் பரதவர் மடமகள்
பெருமதர் மழைக்கணும் உடையவால் அணங்கே."
(யாப். வி. ப. ௧௪௬)

என்றவழிக் குடியுங் கண்ணுமாகாது சிறுமைபெருமை என்னும் சொல்லே மாறு கோடலிற் சொன்முரணாயிற்று. (௯௧)

௪0௧. இறுவாய்* ஒப்பினஃ† தியைபென மொழிப.

என்—எனின். இயைபுத்தொடை யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அடிதோறும் ஈற்றெழுத்து ஒன்றிவரின் அஃது இயைபுத்தொடை என்று சொல்வர் என்றவாறு.

---

* 'இறுவாய் ஒன்றல்' என்றுன் ஆயினும் ஆண்டு ஒன்றுவது பொருள் இயைபின்றி எழுத்தும் சொல்லும் ஒன்றி அடையின் இயைபாம் என்பது. எனவே எழுத்தடி இயைபும் சொல்லடி இயைபும் என இத் தொடை இரண்டாயின. (தொல். பொருள். ௪0அ. பேரா.)

(பாடம்.) † ஒன்றல் இயைபின் யாப்பே.

"இன்னகைத் துவர்வாய்க் கிளவியும் அணங்கே
நன்மா மேனிச் சுணங்குமார் அணங்கே
ஆடமைத் தோளி கூடலும் அணங்கே
அரிமதர் மழைக்கணும் அணங்கே
திருநுதற் பொறித்த திலதமும் அணங்கே." (யாப். வி. ப. ௧௫௩)

என வரும்.

அசை சீரென் வரையாது கூறினமையான் ஓரெழுத்து இறுதிக்கண் ஒப்பினும் இயைபாம் என்று கொள்க. (௯௨)

௪௦௨. அளபெழின் *அவையே அளபெடைத் தொடையே.

என்—எனின். அளபெடைத்தொடையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அடிதொறும் அளபெழத் தொடுப்பின் அஃது அளபெடைத் தொடையாம் என்றவாறு.

'ஓஒ இனிதே எமக்கிந்நோய் செய்தகண்
தாஅம் †இதற்பட் டது' (குறள். ௧௧௭௬)

என வரும். (௯௩)

௪௦௩. ஒருசீ ரிடையிட் டெதுகை யாயின்
பொழிப்பென மொழிதல் புலவர் ஆறே‡

என்—எனின். பொழிப்புத்தொடை யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஒரு சீரிடையிட்டு எதுகையாயிற் பொழிப்புத் தொடையாம் என்றவாறு.

எதுகையென ஓதினார் ஆயினும், 'வந்தது கொண்டு வாராதது முடித்தல்' என்பதனான் மோனை இயைபு முரண் அளபெடை என்பனவும் பொழிப்புத் தொடையாம் §என்று கொள்ளப்படும்.

உதாரணம்

'அரிக்குரற் கிண்கிணி யரற்றுஞ் சீறடி.' (யாப். வி. ப். ௧௩௦)

இது பொழிப்பு மோனை.

---

* அளபெடைத் தொடை இரண்டுங் கூட்டிப்பெற்ற தொடை (378 ஆக முதற்றொடை இருபத்திரண்டனானும் பெற்ற தொடை (9820.) (தொல். பொருள். ௪௦௧. பேரா ) (பாடம்) † இடர்ப்பட்டன

‡ புலவராறே என்று மிகுத்துச்சொல்லிய அதனானே அமைவன வேறு எனத் தழீஇப் புகுந்தவற்றுள் ஈண்டுக் கூறாத அந்தாதித் தொடையும் மற்றை விகற்பத் தொடையாகிய ஒரூஉத் தொடையும் கூறிக் கொள்க. (தொல். பொருள். ௪௧௦. பேரா.)

(பாடம்) § என்றவாறு.

'பன்னருங் கோங்கின் நன்னலங் கவற்றி' (யாப். வி. ப. கந௬)
என்பது பொழிப்பெதுகை.

'சுருங்கிய நுசுப்பிற்* பெருகுவடந் தாங்கி.' (யாப். வி. ப. கசஎ)
என்பது பொழிப்பு முரண்.

'கடலே, கானலங் கழியே கைதையந் துறையே.'
என்பது பொழிப்பியைபு.

'பூஉங் குவளைப் போஒ தருந்தி.' (யாப். வி. ப. கருஅ)
என்பது பொழிப்பளபெடை. (கச)

சoச. இருசீர் இடையிடின் ஒரூஉவேன மோழிப.

என்—எனின். ஒரூஉத்தொடை யாமாறுஉணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) இரண்டு சீர் இடையிட்டு மோனை முதலாயின வரத்தொடுப்பது ஒரூஉத் தொடையாம் என்றவாறு.

'அம்பொற் கொடிஞ்சி நெடுந்தேர் அகற்றி.' (யாப். வி. ப. கந0)
என்பது ஒரூஉமோனை.

'மின்னிவர் ஒளிவடந் தாங்கி மன்னிய' (யாப். வி. ப.கநச)
என்பது ஒரூஉ வெதுகை.

'குவிந்துசுணங் கரும்பிய கொங்கை விரிந்து' (யாப். வி. ப. கசஎ)
என்பது ஒரூஉமுரண்.

'நிழலே இனியதன் அயலது கடலே' (யாப். வி. ப. கருந)
என்பது ஒரூஉ வியைபு.

'காஅய்ச் செந்நெற் கறித்துப் போஒய்' (யாப். வி. ப. கருஅ)
என்பது ஒரூஉ அளபெடை. (கரு)

சoரு. சோல்லியர் தோடையோடு வேறுபட் டியலின்
சோல்லியற் புலவர் அது சேந்தோடை என்ப.

என்—எனின். செந்தொடை யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

---

(பாடம்) * பெருவடந்.

† இவ்வாறு தொடை கூறப்பட்ட தொடைப்புகுதி எல்லாம்' அவ்வச் சூத்திரங்கள் தோறும் எடுத்தோதாது கட்டளை அடிக்கும் அல்லாவடிக்கும் பொதுவகையாற் கூறிவந்தான் ஆசிரியனுயினும் 'மெய்பெறு மரபிற் றொடை வகை' என்னும் தொடைச்சூத்திரத்திற்கேற்பதாம்......முற் கூறிய 33 தொடையினையும் 625 அடியோடு மாறியக்கால் 20625 தொடை ஆகற்பாலனவாம்; அன்னவை தொடைக்கும் தளைக்கும் ஆகாதன களைந்து கொள்ள 13705 ஆயின என்பது. 1920 நிலம் களையப் பட்டன. இங்ஙனம் இவை களைந்து பெற்ற தொடையோடும் இரண்டடி எதுகை இரண்டும் இடையீடு ஒன்றும் கூட்டத் தொடை 13708 ஆயின. (தொல். பொருள். சகஉ. பேரா )

(இ - ள்.) மேற்சொல்லப்பட்ட தொடையும் தொடை விகற்பமும் போலாது வேறுபடத் தொடுப்பது செந்தொடையாம் என்றவாறு.

"பூத்த வேங்கை வியன்சினை ஏறி
மயிலினம் அகவும் நாடன்
நன்னுதற் கொடிச்சி மனத்தகத் தோனே" (யாப். வி. ப. களக)

என வரும்.

இனி நிரனிறுத்தியற்றலும் இரட்டையாப்பும் மொழிந்தவற்றியலான் (செய்யுளியல், அஎ) வருமாறு :

"அடல்வேல் அமர்நோக்கி நின்முகங் கண்டே
உடலும் இரிந்தோடும் ஊழலரும் பார்க்குங்
கடலுங் கனையிருளும் ஆம்பலும் பாம்புந்
தடமதி யாமென்று தாம்" (யாப். வி. ப. கஅஉ)

இது பொருளான் வேறுபட்ட துணையல்லது எழுத்தான் வேறுபடாமையின் எதுகைத் தொடையாயிற்று. இனி, இரட்டைத் தொடை வருமாறு :

"ஒக்குமே ஒக்குமே ஒக்குமே யொக்கும்
விளக்கினிற் சீறெரி ஒக்குமே ஒக்கும்
குளக்கொட்டிப் பூவின் நிறம்." (யாப். வி. ப. கஅ0)

இதுவுஞ் சொல்லிய தொடைப்பாற் பட்டவாறு காண்க.

இணைமோனை, கூழைமோனை, மேற்கதுவாய்மோனை, கீழ்க்கதுவாய் மோனை முற்றுமோனை முதலாயினவும் அந்தாதித் தொடையுங் கூறாததென்னையெனின், 'தெரிந்தனர் விரிப்பில் வரம்பில வாகும்' என வருகின்ற சூத்திரங் கூறுகின்றாராதலின், அச்சூத்திரத்தின்காறும் பாட்டிற்கின்றியமையாத தொடையுணர்த்தினாரென்று கொள்க. (கசு)

சOசு. மெய்பெறு மரபின் தொடைவகை தாமே
ஐயீ ராயிரத் தாறைஞ் ஞூற்றொடு
தொண்டுதலை யிட்ட பத்துக்குறை யெழுநூற்
றொன்பஃ* தென்ப உணர்ந்திசி னோரே.

என்—எனின் மேற்சொல்லப்பட்ட தொடையெல்லாம் விரிவகையான் உணர்த்துதல் நுதலிற்று.

---

* பதின்மூவாயிரத் தறுநூற்றுத் தொண்ணூற் றொன்பது என்ற தொகை பெறுதற்கு 'றொன்று மென்ப வுணர்ந்திசி னோரே' எனப் பாடங் கொண்டதாகக் கருதுவர் பேராசிரியர் முதலியோர். ஆயினும் கிடைத்த ஏட்டுப்படிகள் இரண்டிலும் உள்ளபடியே இங்குப் பதிப்பிக்கலாயிற்று. யாப்பருங்கல விருத்தியிற் (பக். களச) காட்டப்பெறும் சங்கயாப்புடையார் சூத்திரம் இத்தொகை வரலாற்று முறையில் வந்துள்ளதேயென வற்புறுத்துகின்றது.

(இ - ள்) வடிவுபெற்ற மரபினையுடைய தொடையினது பாகுபாடு பதின்மூவாயிரத் தறுநூற்றுத்தொண்ணூற்றொன்பது என்றவாறு.

அவையாமாறு: மொழிமுதலாகிய எழுத்து உயிர் பன்னிரண்டு. இதன் கிளையெழுத்து ஒரோவொன்றிற்குப் பதினொன்றுளவாகலின் அவற்றை உறழ, நூற்று முப்பத்திரண்டாம். 'கதநபம' என்பவற்றை உயிர் பன்னிரண்டோடுமுறழ் அறுபதாம்; அவ்வறுபதையும் முதற்றொடையாக்கிக் கிளையெழுத்தோடுறழ அறுநூற்றறுபதாம். சகரத்தின் முதலாமெழுத்து ஒன்பது; அவற்றைக் கிளையெழுத்தோடுறழ எழுபத்திரண்டாம். வகரத்தின் முதலாமெழுக்து எட்டு; அவற்றைக் கிளையெழுத்தோடுறழ ஐம்பத்தாறும். யகரத்தின் முதலாமெழுத்து ஒன்று; கிளையெழுத்தில்லை. ஞகரத்தின் முதலாமெழுத்து மூன்று; அவற்றைக் கிளையெழுத்தோடுறழ ஆறும். இவ்வகையினான் முதலெழுத்துத் தொண்ணூற்றுமூன்றுங் கிளையெழுத்துத் தொளாயிரத்திருபத்தாறும் ஆக மோனைத்தொடை ஆயிரத்தொருபத்தொன்பதாம்.

எதுகையாமாறு: உயிரெழுத்து மொழியிடையில் வாராது. உயிர்மெய்யெழுத்து இருநூற்றொருபத்தாறில் ஙவ்வருக்கம் ஒழிந்த எழுத்து இருநூற்றுநாலினையுங் கிளையெழுத்தினோடு உறழ இரண்டாயிரத்து நானூற்றுநாற்பத்தெட்டாம். இதனொடு ஒற்றுப் பத்தொன்பதுங் குற்றுகரப் ஆறுங்கூட்ட எதுகைத்தொடை இரண்டாயிரத்து நானூற்று எழுபத்துமூன்று பாகுபாடாம்.

முரண்தொடை சொன்முரண் பொருண்முரண் என இரண்டாம்.

இயைபுத்தொடையாமாறு: உயிரெழுத்து மொழியீற்றின்கண் உயிர்மெய்யாகி வருதலின் அவையாகா உயிர்மெய் இருநூற்றொருபத்தாறில் இறுதிக்கண் வாராத ஙகரவுயிர்மெய் பன்னிரண்டும் அகரம் பதினேழும் இகரம் பதினொலும் உகரம் இரண்டும் எகரம் ஒன்றும் ஒகரம் ஒன்றும் இவை ஒழிந்து நின்ற எழுத்து நூற்றறுபத்தைந்தும் ஞணநமன யரலவழள என்னும் புள்ளியிறுதி பதினொன்றும் குற்றுகரவீறு ஆறும் ஆக இயைபுத்தொடை நூற்றெண்பத்திரண்டு பாகுபாடாம்.

அளபெடைத்தொடையாமாறு: மொழிமுதலாகு முயிரளபெடை ஏழு, கதநபம என்னும் உயிர்மெய்யளபெடை முப்பத்தைந்து, சகர அளபெடை ஐந்து, வகர அளபெடை ஐந்து, யகர அளபெடை இரண்டு, இவை ஐம்பத்துநான்கில உயிரளபெடை தனிநிலையாம்: ஏனையவற்றை முதனிலை இடைநிலை இறுதிநிலை எனவுறழ நூற்றுநாற்பத்தொன்றும். ஒற்றுக்களுள் வல்லெழுத்தாறும் மகரமும் ழகரமும் ஒழித்து ஏனைய பதினொன்றும் அளபெடுக்க ஒற்றளபெடை பதினொன்றும் இவ்வகையினான் அளபெடைத்தொடை நூற்றைம்பத்தொன்பது வகையாம்.

இவ்வகையினோடு இத்தொடை மூவாயிரத்தெண்ணூற்று முப்பத்தைந்து வகையாம்.

பொழிப்புத் தொடையிற் கிளையெழுத்து வாராது.

மோனைப்பொழிப்புத் தொண்ணூற்றுமூன்று, எதுகைப்பொழிப்பு இருநூற்றிருபத்தொன்பது, முரண்பொழிப்பு இரண்டு, இயைபுப்

பொழிப்பு நூற்றெண்பத்திரண்டு; அளபெடையுள் ஒற்றளபெடை பொழிப்பாகி வாராமையின் உயிரளபெடைப் பொழிப்பு நூற்று நாற்பத்தெட்டு. இவையெல்லாங் கூட்டப் பொழிப்புத்தொடை அறுநூற்றைம்பத்து நாலுவகையாம்.

ஒரூஉத்தொடையும் இவ்வகையினுல் அறுநூற்றைம்பத்து நாலாம்.

இனிச் செந்தொடை, யாமாறு மொழி முதலாகும் எழுத்துத் தொண்ணூற்று மூன்று. மற்றையடியினு மொத்து வருங்கால் அவை மோனையுள் அடங்குதலின் அவற்றை ஒழித்து ஏனை யெழுத்துத், தொண்ணூற்றிரண்டோடும் உறழ எண்ணாயிரத்தைந் நூற்றைம்பத்தாறு வகையாம்.

இவ்வகையினுல் தொடைவிகற்பம் பதின்மூவாயிரத் தறுநூற்றுத் தொண்ணூற்றொன்பதாம். (கள)

கூ0எ. தெரிந்தனர் விரிப்பின் வரம்பில ஆகும்.*

என்—எனின். எய்தியதன்மேற் சிறப்புவிதி உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) மேற்சொல்லப்பட்ட தொடையினை ஆராய்ந்து விரிப்பின் வரம்பிலவாகி விரியும் என்றவாறு.

அவையாவன மோனை, எதுகை, முரண், இயைபு, அளபெடை என்பனவற்றின்கண் இணை, கூழை முற்று. மேற்கதுவாய் கீழ்க்கதுவாய், கடை, கடையிணை கடைக்கூழை. இடைப்புணரென வேறுபடுத்துறழ்ந்தும், எழுத்தந்தாதி அசையந்தாதி சீரந்தாதி அடியந்தாதி எனவும். உயிர் மோனை உயிரெதுகை நெடில்மோனை நெடிலெதுகை வருக்க மோனை வருக்க எதுகை இனமோனை இனவெதுகை ஆசெதுகை எனவும், மூன்றாமெழுத்தொன்றெதுகை இடையிட்டெதுகை எனவும். இவ்வாறு வருவனவற்றை மேற்கூறிய வகையினன் எழுத்து வேறுபாட்டினானுறழவும். நிரனிறையாகிய பொருள்கோள் வகையானும் ஏகபாதம் எழுகூற்றிருக்கை முதலாகிய சித்திரப்பாக்களானும் உறழவும், வரம்பிலவாகி விரியும்.

அவற்றுட் சில வருமாறு: இணையாவது முதலிருசீர்க்கண்ணும் மோனைமுதலாயின வரத் தொடுப்பது. கூழையாவது முந்துற்ற மூன்று சீரினும் வந்து இறுதிச்சீரின் வாராதது.

"அணிமலர் அசோகின் தளிர்நலங் கவற்றி."
(யாப். வி. ப. கக0)

இஃது இணைமோனை.

"பொன்னின் அன்ன பொறிசுணங் கேந்தி." (யாப். வி. ப. ககச)

இஃது இணையெதுகை:

"சிறடிப் பேரகல் அல்குல் ஒல்குபு." (யாப். வி. ப. கசஎ)

இஃது இணைமுரண்:

"மொய்த்துடன் தவழு முகிலே பொழிலே." (யாப். வி. ப. கஙக)

இஃது இணையியைபு:

---

(பாடம்) * பல்கும்.

"தாஅட் டாஅ மரைமல ருழக்கி." (யாப். வி. ப. கஙஅ)

இஃது இணையளபெடை : என வரும்.

இனிக் கூழை வருமாறு :

"அகன்ற அல்குல் அந்நுண் மருற்குல்." (யாப். வி. ப. கரு0)

இது கூழைமோனை :

"நன்னிற மென்முலை மின்னிடை வருந்த." (யாப். வி. ப. கசுச)

இது கூழையெதுகை :

"சிறிய பெரிய நிகர்மலர்க் கோதைதன்." (யாப். வி. ப. கசஎ)

இது கூழைமுரண் :

"மாதர் நகிலே வல்லே இயலே." (யாப். வி. ப. கஙரு)

இது கூழையியைபு :

"மாஅத் தாஅண் மோஒட் டெருமை." (யாப். வி. ப. கஙஅ)

இது கூழையளபெடை : என வரும்.

முற்றுவது நான்கு சீரும் ஒத்துவருவது.

"அயில்வேல் அனுக்கி அம்பலைத் தமர்த்த." (யாப். வி. ப. கரு0)

இது முற்றுமோனை : பிறவுமன்ன.

இனி மேற்கதுவா யாவது நான்கு சீரினும் இரண்டாம் சீரொழிய ஏனைய வருவது.

"அரும்பிய கொங்கை அவ்வளை அமைத்தோள்." (யாப்.வி.ப. கருக)

பிறவுமன்ன.

கீழ்க்கதுவா யாவது மூன்றுஞ் சீரொழிய ஏனைய வருவது.

"அவிர்மதி அனைய திருநுதல் அரிவை." (யாப். வி. ப. கருக)

பிறவுமன்ன.

அந்தாதித்தொடைக்குதாரணம் :

"உலகுடன் விளங்கும் ஒளிதிகழ் அவிர்மதி
பதிநலன் அழிக்கும் வளங்கெழு முக்குடை
முக்குடை நீழல் பொற்புடை ஆசனம்
ஆசனத் திருந்த திருந்தொளி அறிவன்
ஆசனத் திருந்த திருந்தொளி அறிவனை
அறிவுசேர் உள்ளமொ டருந்தவம் புரிந்து
துன்னிய* மாந்தர் அஃதென்ப
டன்னருஞ் சிறப்பின் விண்மிசை உலகே" (யாப். வி. ப. கஅஙு)

என வரும்.

(பாடம்) * துன்னுபுமாந்தரென்ப.

இவ்வகையினன் ஒருபாட்டிறுதி மற்றைப்பாட்டி னுதிச்சீராகி வருதல் கொள்க.

இத்துணையுங் கூறப்பட்டன சிறப்புடையவென ஒரு நிகராகக் கூறுப.

இனி மீன்தேர்ந்* தருந்திய கருங்கால் வெண்குருகு.' (யாப். வி. ப. ௧௪௮)

இது கடையிணைமுரண்.

பின்முரணாவது நாலாஞ்சீரும் இரண்டாஞ்சீரு மொன்றத் தொடுப்பது: அது

'கொய்ம்மலர் குவிந்து தண்ணிழல் விரிந்து' (யாப். வி. ப. ௧௪௮)

என வரும்.

கடைக்கூழை முரணாவது முதற்சீரொழித்து மூன்றுசீரும் ஒத்து வருவது.

உதாரணம் வந்தவழிக் காண்க.

இடைப்புணர் முரணாவது இடை யிருசீரும் ஒன்றத் தொடுப்பது; அது

"போதுவிடு† குறிஞ்சி நெடுந்தண் மால்வரைக்
கோதையில் தாழ்ந்த ஓங்கு வெள் அருவிக்
காந்தளஞ் செங்குலைப் பசுங்கூ தாளி
வேரல் விரிமலர் முகையொடு விரை இப்
பெருமலைச் சீறூர் இழிதரு நலங்கவர்ந்
தின்னு வாயின இனியோர் மாட்டே" (யாப். வி. ப. ௧௪௧)

என வரும்.

மோனை எதுகை இயைபு அளபெடையினும் இவ்வாற்றான் வருவன வந்தவழிக் காண்க.

இனி, உயிர்மோனை யாவது முதலெழுத்தாகிவந்த உயிரெழுத்து மற்றை யடியினும் வருவது: அது

‡"கயலேர் உண்கண் கலுழ நாளுஞ்
சுடர்புரை§ திருநுதல் பசலை பாய" (யாப். வி. ப. ௧௩௯)

என வரும்.

எதுகைக்கும் இதுதானேயாம்.

நெடின்மோனையாவது நெட்டெழுத் தொத்துவருவது:

"தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்" (குறள். ௩௯௯)

என வரும்.

நெடிலெதுகையாவது:

"ஆவா என்றே அஞ்சினர் ஆழ்ந்தார்$ ஒருசாரார்
கூகூ என்றே கூவிளி கொண்டார் ஒருசாரார்" (யாப். வி. ப. ௧௩௯)

என வரும்.

(பாடம்) * மீன் றேர்ந்து வருந்திய. † தேம்படுகுறுஞ்சுனை.
‡மேலும் யாப்பருங்கலவிருத்தியில் வல்லினமோனைக்குக் காட்டப் பட்டுள்ளது, இது. (பாடம்) § சுடர்புனை. $ ஆழா வொருசாரார்.

இனவெதுகை மூன்றுவகை.

"தக்கார் தகவிலர் என்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும்" (குறள். ககச)

இது வல்லின வெதுகை.

"அன்பீனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு" (குறள். எச)

இது மெல்லின வெதுகை.

"எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு." (குறள் உகக)

இஃது இடையின வெதுகை.

மோனையும் இவ்வாறு வருவன பாகுபடுத்துக்கொள்க.

ஆசெதுகையாவது இடையினவொற்று இடைவரத் தொடுப்பது.

"காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகின் எற்றிப்
பூமாண்ட தீந்தேன் தொடைகீறி வருக்கை போழ்ந்து
தேமாங் கனிசிதறி வாழைப் பழங்கள் சிந்தும்
ஏமாங் கதமென் றிசையால்திசை போய துண்டே"
(சீவகசிந். நக)

என வரும். இதன்கண் யகரம் ஆசாகி வந்தது. பிறவுமன்ன.

இனி இரண்டடியெதுகை யாவது முதலிரண்டடியு மோரடியாய்ப் பின்னிரண்டும் ஒரெதுகையாகி வருவது.

"உலக மூன்றும் ஒருங்குட னேத்துமாண்
திலக மாய திறலறி வன்னடி
வழுவில் நெஞ்சொடு வாலிதின் ஆற்றவுந்
தொழுவல் தொல்வினை நீங்குக என்றியான்" (யாப். வி. ப. ககக)

என வரும்.

இடையிட் டெதுகையாவது ஓரடி யிடையிட்டுத் தொடுப்பது

"தோடார் எல்வளை நெகிழ நாளும்
நெய்தல் உண்கண் பைதல் உழப்ப*
வாடா வவ்வரி† புதைஇப் பசலையும்
வைகல் தோறும் பையப் பெருகின
நீடார் அவரென நீமனங்‡ கொண்டார்
கேளார் கொல்லோ காதலர் தோழீஇ
வாடாப் பவ்வ மறமுகந் தெழிலி
பருவஞ் செய்யாது வலனேர்பு வளைஇ
ஓடா மலையன் வேலிற்
கடிது மின்னுமிக் கார்மழைக் குரலே" (யாப். வி. ப. கசக)

எனவரும்.

---

(பாடம்) * கலுழ. † வாடாப்புலரி. ‡ அலரென்னீர்மனங்

இவ்வகையினன் மோனை வருவனவுங் கொள்க. பிறதொடையும் இவ்வகையினன் வருவனவும் கொள்க.

மூன்ற மெழுத்தொன் றெதுகையாவது இரண்டா மெழுத்தும் ஒன்றாது மூன்றும் எழுத்து ஒன்றுவது. இதுவும் அவ்வாறே உதாரணம் வந்தவழிக் காண்க.

இவை யெல்லாம் மேலெடுத்தோதப்பட்ட தொடைக்கட்படும் நாற் சீரடியொழிந்த அடிக்கண்ணும் இப்பாகுபாடெல்லாம் விரிப்பின் வரம்பிலவாகும். (௧அ)

௪௦௬. தொடைநிலை வகையே யாங்கென மொழிப.

என்—எனின். இதுவுந் தொடைக் குரியதோர் மரபுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) தொடைநிலைவகை மேற்சொல்லப்பட்ட பாகு பாட்டினஃ என்றவாறு.

எனவே வகுத்துணர்த்துவார்க் கெல்லாம் இடனுடைத்து என்ற வாறும்.

அஃதாவது எழுத்தான் வேறுபடுதலும் சொல்லான் வேறுபடு தலும் பொருளான் வேறுபடுதலுமாம்.

இத்துணையுந் தொடை கூறப்பட்டது. (௧௯)

௪௦௭. மாத்திரை முதலா* அடிநிலை காறும்
நோக்குதற் காரணம் நோக்கெனப் படுமே.

என்—எனின். இது நோக்கென்னும் உறுப்பு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) மாத்திரை முதலாக அடிநிலையளவும் நோக்குத லாகிய கருவி நோக்கென்று சொல்லப்படும் என்றவாறு.

காரணமெனினுங் கருவியெனினும் ஒக்கும். நோக்குதற்காரண மென்பதனை உண்டற்றொழில் என்றாற்போலக் கொள்க.

அஃதாவது யாதானும் ஒன்றைத் தொடுக்குங் காலத்துக் கருதிய பொருளை முடிக்குங்காறும் பிறிது நோக்காது அது தன்னையே நோக்கி நிற்கு நிலை. அடிநிலை காறும் என்றதனல் ஓரடிக்கண்ணும் பலவடிக் கண்ணும் நோக்குதல் கொள்க. அஃது ஒரு நோக்காக ஓடுதலும் பல நோக்காக ஓடுதலும் இடையிட்டு நோக்குதலும் என மூன்றுவகைப்படும்.

* இவ்வாறே பலவும் நோக்கி உணர்தற்குக் கருவியாகிய சொல்லும் பொருளும் எல்லாம் மாத்திரைமுதலா அடிநிலைகாறும் என அடங்கக் கூறி நோக்குதற் காரணம் நோக்கென்றான் என்பது. மாத்திரை முதலா யினவும் தத்தம் இலக்கணத்தில் திரியாது வந்தமையின் அவையும் இலக்கணம் அறிவார்க்கு நோக்கிப் பயன் கொள்ளுதற்கு உரியவாயின வாறு கண்டுகொள்க. 'எனப்படும்' என்றதனல் இவ்வாறு முழுவதும் நோக்குதற்குச் சிறப்புடைய எனவும் இவை இடையிட்டு வந்தன சிறப்பில எனவும் கொள்ளப்படும். பிறவும் அன்ன.

(தொல். பொருள். ௪௧௬. பேரா.)

"அறுசுவை உண்டி அமர்ந்தில்லாள் ஊட்ட
மறுசிகை நீக்கியுண் டாரும்—வறிஞராய்ச்
சென்றிரப்பர் ஓரிடத்துக் கூழெனிற் செல்வமொன்
றுண்டாக வைக்கற்பாற் றன்று" (நாலடி. க)

இஃது ஒரு நோக்காக ஓடிற்று.

"அறிமின் அறநெறி அஞ்சுமின் கூற்றம்
பொறுமின் பிறர்கடுஞ்சொற் போற்றுமின் வஞ்சம்
வெறுமின் வினைதீயார் கேண்மையெஞ் ஞான்றும்
பெறுமின் பெரியார்வாய்ச் சொல்." (நாலடி. கஎஉ)

இது பல நோக்காகி வந்தது.

"உலக முவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்
கோவற இமைக்குஞ் சேண்விளங் கவிரொளி
உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்தாட்
செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை
மறுவில் கற்பின் வாணுதல் கணவன்" (முருகாற். க-ச)

என்றவழி 'ஒளி' என்பது அதனயற் கிடந்த தாளை நோக்காது கணவனை நோக்குதலின் இடையிட்டு நோக்கிற்று. பிறவுமன்ன. (க00)

சசo. ஆசிரியம்* வஞ்சி வெண்பாக் கலியென
நாலியற் றென்ப பாவகை விரியே.

என்—எனின். நிறுத்த முறையானே பாவாமாறு உணர்த்துவான் எடுத்துக்கொண்டார். அவை யினைத்தென வரையறுத்துணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஆசிரியமெனவும் வஞ்சியெனவும் வெண்பாவெனவும் கலியெனவும் நான்கு இயல்பினையுடைத்து என்று சொல்வர் பாவினது வகையை விரிக்குங் காலத்து என்றவாறு.

அஃதேல் ஒருசாராசிரியர் வெண்பா ஆசிரியங் கலி வஞ்சி என ஓதினார் யாதெனின், அவரும் ஒரு பயனோக்கி யோதினர் இவரும் ஒருபயன் நோக்கி ஓதினர் என்க.

என்னை? வெண்பாவாவது பிறதளையோடு மயங்காமையானும் மிக்குங் குறைந்தும் வாராத அடியான் வருதலானும் அந்தணர் நீர்மைத்தென முற்கூறினர். அதன்பின் அந்நிகர்த்தாகிப் பிறதளையும் வந்து இனிய ஓசையையுடைத்தாய்ப் பரந்து வருதலின் அரசத்தன்மையது

* பாக்கூற்று விரி நான்கெனவே பாவினை உறுப்பாக உடைய செய்யுட்கு வரையறை கூறிற்றிலன் என்பது பெற்றாம். என்னை? அவற்றுப் போதுங்கால் அவற்றது பெயர் வேறுபாடும் அச் சூத்திரங்களான் அறிதும் என்பது; என்றூர்க்கு இவை நான்கேயன்றிப் பாவாமாறு கூறுதேனே எனின் இவையின்றித் தூக்குப் பிறவாமையின் இப் பாவிலக்கணமும் நோக்கோத்தினுட் கூறினுகலான் ஆண்டோதிய வாறே அமையும் என்பது. (தொல். பொருள். சகஎ- பேரா.)

என்பதனான் ஆசிரியப்பாக் கூறினார். அதன்பின் அந்நிகர்த்தாகிச் சிறுபான்மை வேற்றுத்தளை விரவலின் வணிகர் நீர்மைத்தெனக் கலிப்பாக் கூறினார். அதன்பின் வஞ்சிப்பா அளவடியான் வருதலின்றிக் குறளடியுஞ் சிந்தடியுமாய் வந்து பல தளையும் விரவுதலின் வேளாண்மாந்தரியல்பிற்றென வஞ்சிப்பாக் கூறினார். இவ்வாசிரியரும் பதினேழ்நிலத்தினும் வருதலானும் இனிய ஓசைத்தாகலானும் அடிப்பரப்பினானும் ஆசிரியப்பா முற்கூறினார். அதன்பின் ஆசிரிய நடைத்தாகி ஒறுதியாசிரியத்தான் இறுதலின் வஞ்சிப்பாக் கூறினார்; இந்நிகர்த்தன்றி வேறுபட்ட ஒசைத்தாகலான் வெண்பா அதன்பின் கூறினார்; அதன்பின் வெண்சீர் பயின்று வருதலானும் வெண்பாவுறுப்பாகி வருதலானும் கலிப்பாக் கூறினரெனவறிக. (௧0௪)

௪௧௧. அந்நிலை* மருங்கின் அறமுத லாகிய
மும்முதற் பொருட்கும் உரிய வென்ப.

என்—எனின் மேற்கூறப்பட்ட பாக்கள் பொருட்குரியவாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அப் பாக்கள் நான்கும் பொதுப்பட நின்றவழி அறம்பொருளின்ப மென்னும் மூன்று முதற் பொருட்கும் உரிய என்றவாறு.

முதற்பொருள் என்றது பாகுபாடல்லாத பொதுமைகுறித்த பொருள். சில பொருள்களை எடுத்து விளக்குகின்றாராதலின் இவ்வாறு கூறப்பட்டது. அப்பொருட்கண் உரியவாகியவாறு சான்றோர் செய்யுளகத்துக் கண்டுகொள்க. (௧0௨)

௪௧௨. பாவிரி மருங்கினைப் பண்புறத் தொகுப்பின்
ஆசிரி யப்பா வெண்பா என்றாங்
காயிரு பாவினுள் அடங்கும் என்ப.

என்—எனின் மேற்சொல்லப்பட்ட பாக்களைத் தொகைவகையான் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) மேற்சொல்லப்பட்ட நான்கு பாவும் ஆசிரியப்பா வெண்பா என இரண்டாய் அடங்கும் என்றவாறு.

அவையடங்குமாறு மேலே வருகின்ற சூத்திரத்தான் உரைப்ப. (௧0௩)

௪௧௩. ஆசிரிய நடைத்தே வஞ்சி ஏனை
வெண்பா நடைத்தே கலியென மொழிப.

என்—எனின். மேல் அடங்குமெனக் கூறப்பட்ட பாக்கள் அடங்குமாறு உணர்த்துதல் நுதலிற்று

---

* அந்நிலை மருங்கின் எனவே, அவை மும்முதற் பொருட்கு உரியவாங்கால் செய்யுளிடத்தன்றித் தாமாக உரிமை பூணா என்பது. வீடென்பது செய்யுளுள் வாராதோ எனின், அறமுதல் என்பது புறப்பாட்டெல்லையாகக் கூறினன் என்பார் நான்கு பொருளும் தழீஇ உரைப்ப. (தொல். பொருள். ௪௧௮. பேரா.)

(இ - ள்) ஆசிரியம் போன்ற நடையை உடைத்து வஞ்சி; வெண்பாப் போன்ற நடையை உடைத்து கலி என்றுரைப்ப என்றவாறு.

நடையென்றது அப்பாக்கள் இயலுந் திறம். (கoச)

சகச. வாழ்த்தியல் வகையே* நாற்பாக்கும் உரித்தே.

என்—எனின். வாழ்த்தியற் குரிய பாவாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) வாழ்த்தியலின்வகை நான்கு பாவிற்குமுரித்து என்றவாறு.

வகையென்றது தேவரை வாழ்த்தலும் முனிவரை வாழ்த்தலும் ஏனையோரை வாழ்த்தலும். செய்யுள் வந்தவழிக் கண்டுகொள்க. (கoஇ)

சகரு. வழிபடு† தெய்வம் நிற்புறங் காப்பப்
பழிதீர் செல்வமோடு வழிவழி சிறந்து
பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே
கலிநிலை வகையும் வஞ்சியும் பெறாஅ.

என்—எனின். இது புறநிலைவாழ்த்திற்குரிய பாவாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) வழிபடு தெய்வம் நின்னைப் புறங்காப்பக் குற்றந் தீர்ந்த செல்வத்தொடு வழிவழியாகச் சிறந்து பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்துக் கலிப்பாவகையினும் வஞ்சிப்பா வகையினும் வரப்பெறாது என்றவாறு.

எனவே, வெண்பாவினும் ஆசிரியப்பாவினும் இவையிரண்டும் புணர்ந்த மருட்பாவினும் வரப்பெறும் என்றவாறும். (கoசு)

---

* 'வகை என்றதனுன் மேற்கூறிய மும்முதற் பொருளின் அறு வகையும் பெரும்பான்மை எனப்படும் என்பதூஉம், அங்ஙனம் வாழ்த்துங் கால் தனக்குப் பயன்படுதலும் படர்க்கைப் பொருட்குப் பயன்படுதலும் என இருவகையான் வாழ்த்தும் என்பதூஉம், இனி முன்னிலையாக வாழ்த்துதலும் என இருவகைப்படும் என்பதூஉம் எல்லாம் கொள்க. அங்ஙனம் வாழ்த்தப்படும் பொருளாவன கடவுளும் முனிவரும் பசுவும் பார்ப்பாரும் அரசரும் மழையும் நாடும் என்பன. (தொல். பொருள். சஉக பேரா.)

†தெய்வத்தைப் புறம் நிறுத்தி வாழ்த்துதலின் புறநிலை வாழ்த்தா யிற்று. எடுத்துக்கொண்ட காரியத்துக்கு ஏதுவாகிய கடவுள் நிற்ப அக்கடவுளால் பயன்பெற நின்றான் ஓர் சாத்தனை முன்னிலையாக்கி அவற்குக் காரியங் கூறுதலின் இது புறநிலையாயிற்று. கலிநிலைவகை என்றதனுன் கலிவகைத்தாகிய பரிபாடற்கும் இஃது ஒக்கும். (தொல். பொருள். சஉஉ. பேரா.)

௪௧௬. வாயுறை *வாழ்த்தே அவையடக் கியலே
செவியறி வுறூஉஎன அவையும் அன்ன.

என்—எனின். ஒருசார் பொருட்குரிய மரபுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) வாயுறைவாழ்த்தும் அவையடக்கியலும் செவியறிவுறுத்தற்பொருளுங் கலியிலும் வஞ்சியினும் வரப்பெறு என்றவாறு.

எனவே, முன்னையவொப்ப ஏனையிரண்டிலும் வரப்பெறும் என்றவாறும். (௧0எ)

௪௧எ. வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்
வேம்புங் கடுவும் போல வெஞ்சொல்
தாங்குதல் இன்றி வழிநனி பயக்குமென்று
ஓம்படைக் கிளவியின் வாயுறுத் தற்றே.

என்—எனின். வாயுறைவாழ்த்து ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) வாயுறை வாழ்த்தை விளங்க ஆராயின் வேம்பினையுங் கடுவினையும் போல வெஞ்சொ லடக்காது பிற்பயக்குமெனக் கருதிப் பாதுகாவற் கிளவியானே மெய்யறிவித்தல் என்றவாறு.

உதாரணம்

"இருங்கடல்† உடுத்தஇப் பெருங்கண் மாநிலம்
உடையிலை நடுவண திடைபிறர்க் கின்றித்
தாமே ஆண்ட ஏமங் காவலர்
இடுதிரை மணலினும் பலரே சுடுபிணக்
காடுபதி யாகப் போகித் தத்தம்
நாடு பிறர்கொளச் சென்றுமாய்ந் தனரே
அதனால், நீயுங் கேண்மதி யத்தை வீயா
துடம்பொடு நின்ற உயிரும் இல்லை
மடங்க லுண்மை மாயமோ அன்றே
கள்ளி வேய்ந்த முள்ளியம் புறங்காட்டு
வெள்ளில் போகிய வியலுள் ஆங்கண்
உப்பிலாஅ அவிப்புழுக்கல்
கைக்கொண்டு பிறக்குநோக்கா

* வாய் - வாய்மொழி. உறை - மருந்து; வாயுறை என்பது சொல் மருந்தெனப் பண்புத்தொகையுமாம். இனி வாய்க்கண் தோன்றிய மருந்தென வேற்றுமைத் தொகையுமாம். மருந்து போறலின் மருந்தாயிற்று. அவன் சிறப்புக் கூறி வழுத்தி ஒரு சாத்தற்குப் பயன்படச் சொல்லினமையின் வாயுறை வாழ்த்தெனப்படும் என்பது. (தொல். பொருள். ௪௨௩. பேரா.)

(பாடம்) † இருங்கடல் தானையொடு பெருநிலம் கவைஇ.

திழிபிறப்பினேன் ஈயப்பெற்று
நிலீங்கல னாக விலங்குபலி மிசையும்
இன்னா வைகல் வாரா முன்னே
செய்ந்நீ முன்னிய வினையே
முந்நீர் வரைப்பக முழுதுடன் துறந்தே'' (புறம். ௩௬௩)

என்னும் பாட்டு. (௪0௮)

௪௧௯. அவையடக் கியலே அரில்தபத் தெரியின்
வல்லா கூறினும் வகுத்தனர் கொண்மினென்
றெல்லா மாந்தர்க்கும் வழிமொழிந் தன்றே.

என்—எனின். அவையடக்கியல் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அவையடக்கியலைக் குற்றமற ஆராயின் அறியாதன சொல்லினும் பாகுபடுத்துக் கோடல்வேண்டும் என எல்லா மாந்தர்க்குந் தாழ்ந்துகூறல் என்றவாறு.

உதாரணம் வந்தவழிக் கண்டுகொள்க. (௪0௯)

௪௪௯. செவியுறை தானே,
பொங்குத லின்றிப் புரையோர் நாப்பண்
அவிதல் கடனெனச் செவியுறுத் தன்றே.

என்—எனின். செவியறிவுறூஉ வருமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) செவியுறையாவது பெரியோர் நடுவு வெகுடலின்றித் தாழ்ந்தொழுகுதல் கடன் எனச் செவியறிவுறுத்துதல் என்றவாறு.

''அறிமி னறநெறி...பெரியார்வாய்ச்சொல்'' (நாலடி. ௧௭௨)

என வரும்.

இத்துணையும் பாக்கட் குரிய பொருளுணர்த்தியது. (௪௧0)

௪௨0. ஒத்தா ழிசையும் மண்டில யாப்புங்
குட்டமும் நேரடிக் கொட்டின வென்ப.

என்—எனின். சில செய்யுட்களில் அடிவரை யறுத்தலை நுதலிற்று.

(இ - ள்.) ஒத்தாழிசைக் கலிக்கு உறுப்பாகிய ஒத்தாழிசையும், ஆசிரியப்பாவின்கண் நிலைமண்டிலம் அடிமறிமண்டிலம் என்பனவும், ஒத்தாழிசைக்கும் கொச்சகத்திற்கும் பொதுவாகிய குட்டமும் நாற்சீரடிக்குப் பொருந்தின என்றவாறு.

மேல் ஆசிரியப்பாவின் ஈற்றயலினும், இடையினும், முச்சீரும் இருசீரும் ஐஞ்சீரும் அறுசீரும் வரும் என்றதனானே, எல்லாவடியும் ஒத்து வருவனவு முள வென மண்டிலம் கூறவேண்டிற்று.

கலிப்பாவிற்குச் சுரிதகம் ஈற்றடி மூச்சீரானும் ஈற்றயலடி முச்சீரானும் வரும் என்றமையால், நாழிசையுந் தரவும் நாற்சீரானல்லது பிற வாற்ருன் வாராவெனக் கூறல் வேண்டிற்று. குட்டமெனினும் தரவெனினும் ஒக்கும்.

இனிக் கலிக்குறுப்பாகிய சின்னங்கள் இருசீரானும் முச்சீரானும் வருதலானும் தனிச்சொல் ஓருசீரானும் வருதலானும் வேறு ஓதவேண்டிற்று.

உதாரணம் முன்னர்க் காட்டுதும். (கக௧)

சஉக. குட்டம் எருத்தடி உடைத்தும் ஆகும்.

என்—எனின். மேலதற்கோர் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) தரவு ஈற்றயலடி மூச்சீரான் வரவும்பெறும் என்றவாறு.

எருத்தடியுடைத் தென்றதனுனே ஈற்றயலடி முச்சீர் எனப் பொருள் படுமோ எனின், ஆசிரியப்பாவின் ஈற்றயலடி முச்சீரான் வருதல் பெருவழக்காதலானும் இனிவருகின்ற சூத்திரம் தூக்கியலென ஓதுகை யானும் இவ்வாறு பொருள்படுமென்று கொள்க. உதாரணம் முன்னர்க் காட்டுதும்.

இன்னும் குட்டம் என்பதனைத் தரவு கொச்சகமாகிய கொச்சக வொருபோகிற்குப் பெயராக வழங்கினும் அமையும். அவ்வழி ஒத்தாழிசை என்பதனை ஒத்தாழிசை யெனத் தரவெனத் தரவையுங் கூட்டிப் பொருளுரைக்கப்படும். (ககஉ)

சஉஉ. மண்டிலங் குட்டம் என்றிவை இரண்டும்
சென்தூக் கியல என்மனார் புலவர்.

என்—எனின். மேற் சொல்லப்பட்டவற்றுள் மண்டிலம் குட்டம் என்பவற்றிற்குரியதோர் ஓசை வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) மண்டிலமாகக் கூறப்படும் பாவும் குட்டமெனக் கூறப்படும் பாவும் அகவலோசை இயல என்றவாறு.

உதாரணம் முன்னர்க் காட்டுதும்.

இனி நான்குபாவினும் வெண்பாவுங் கலிப்பாவும் முன்னெடுத் தோதுகின்ருராதலானும், ஆசிரியப்பாவும் வஞ்சிப்பாவும் இத்துணையும் ஓதிய இலக்கணத்தான் முடித்தலானும், அளவயிற்றிற்கு உதாரணம் ஈண்டே காட்டுதும். ஆசிரியப்பாவாவது பெரும்பான்மை இயற்சீரானும் ஆசிரிய வுரிச்சீரானும் ஆசிரியத்தளையானும் அகவலோசையானும் நாற்சீரடியானும் சிறுபான்மை ஒழிந்த சீரானும் தளையானும் அடியானும் வருவது அவ்வாருதல் மேற்கூறப்பட்ட சூத்திரங்களான் உணர்க.

இப்பாவிற்கு ஈற்றெழுத்து வரையறுத்துணர்த்தாமையின் எல்லா வீறுமாம். எற்றுக்கு?

"அகவல் இசையன அகவல் மற்றவை
ஏஓ. ஈஆ. என் ஐ என் றிறுமே" (யாப். வி. ப. சுக)

என்று வரைந்தோதினர் உளரால் எனின்,

"கோள்மா கொட்குமென் றஞ்சுவல் ஒன்னார்க்
கிருவிசும்பு கொடுக்கும் நெடுவேல் வழுதி
கூடல் அன்ன குறுந்தொடி அரிவை
ஆடமை மென்றோள் நசைஇ நாடொறும்
வடியமை* எஃகம் வலவயின் ஏந்திக்
கைபோற் காந்தட் கடிமலர் கமழும்
மைதோய் வெற்பன் வைகிருள் † வருமிடம்"
(யாப். வி. ப. உசஉ).

எனப் பிறவாற்றானும் வருதலின் ஈறு வரையறுக்கப்படா தென்று கொள்க.

இனி இவ்வாசிரியப் பாவினை அடிநிலையாற் பெயரிட்டு வழங்கப் படும். அஃதாமாறு:

ஈற்றயலடி முச்சீரான் வருவதனை நேரிசையாசிரியம் என்ப.

உதாரணம்

"முதுக்குறைந் தனளே முதுக்குறைந் தனளே
மலையன் ஒள்வேற் கண்ணி
முலையும் வாரா முதுக்குறைந் தனளே"
(யாப். வி. ப. கஉஉ)

எனவரும்.

இடையிடை முச்சீர் வரின் இணைக்குற ளாசிரியம் என்ப.

உதாரணம்

"நீரின் தண்மையுந் தீயின் வெம்மையுஞ்
சாரச் சார்ந்து தீரத் தீரும்
சாரல் நாடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரத் தீர்பொல் லாவே" (யாப். வி. ப. உஙஎ)

எனவரும்.

எல்லா அடியும் ஒத்துவருவதனை நிலைமண்டில ஆசிரியம் என்ப. இதற்கு இலக்கணம் முன்னர்க் காட்டுதும்.

"வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சாரல் நாட செவ்வியை யாகுமதி
யாரஃ தறிந்திசி னோரே சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே" (குறுந். கஅ)

என வரும்.

---

(பாடம்) * நுனை எஃகம்.
† அவிழும்மை தோய்சிலம்பன் நள்ளிருள்.

இனி எல்லா அடியும் ஒத்துவரும் பாட்டினையே அடிமறிமண்டில ஆசிரியம் என்றும் வழங்குப. இதற்கிலக்கணஞ் சொல்லதிகாரத்துள் 'நிரனிறைசுண்ணம்' (எச்சவியல் அ) என்னும் சூத்திரத்தாற் கொள்க.

"சூரல் பம்பிய சிறுகான் யாறே
சூரர மகளிர் ஆரணங் கினரே
வாரல் எனினே யானஞ் சுவலே
சாரல் நாட நீவர லாறே" (யாப். வி. ப. உ௲௩)

என வரும்.

இதனுள் யாதானும் ஓரடியை முதலுமுடிவுமாக உச்சரித்தாலும் ஓசையும் பொருளும் வழுவாது வருதலின் அடிமறியாயிற்று.

இனி முச்சீரடி முதலாக அறுசீரடி யீறாக மயங்கிய ஆசிரியத்தினை அடிமயங்காசிரிய மெனவும் வெண்பாவடி மயங்கிய ஆசிரியத்தினை வெள்ளடிமயங்காசிரிய மெனவும், வஞ்சியடி மயங்கிய ஆசிரியத்தினை வஞ்சி அடி மயங்காசிரிய மெனவும் வழங்கப்படும். இதற்கு இலக்கணம்:

"வெண்டளை விரவியும் ஆசிரியம் விரவியும்
ஐஞ்சீ ரடியும் உளவென மொழிப" (தொல். செய். ௬0)

"அறுசீ ரடியே ஆசிரியத் தளையொடு
நெறிபெற்று வரூஉ நேரடி முன்னே" (தொல். செய். ௬௧)

"இயற்சீர் வெள்ளடி ஆசிரிய மருங்கின்
நிலைக்குரி மரபின் நிற்கவும் பெறுமே" (தொல். செய். ௬௧)

என்வும்,

"ஆசிரிய நடைத்தே வஞ்சி" (தொல். செய். ௱0௪)

என ஒற்றுமைப் படுத்துதலானுங் கொள்க.

உதாரணம்

"சிறியகட் பெறினே யெமக்...தவப்பலவே." (புறம். உ௲௫)

இப்பதினேழடியாசிரியத்துள் ஏழாமடியும் பன்னிரண்டாமடியும் முச்சீரான் வந்தன. மூன்றாமடி முதலாக ஆறாமடியீறாக நான்கடியும் பதினலாமடியும் ஐஞ்சீரான் வந்தன இரண்டாமடியும் பதினொன்றாமடியும் அறுசீரான் வந்தன. ஏனைய நாற்சீரான் வந்தன. இவ்வாறு வருதலின் அடிமயங்காசிரியம் ஆயிற்றும்.

"எறும்பி அளையிற் குறும்பல் சுனைய
உலைக்கல் லன்ன பாறை யேறிக்
கொடுவில் லெயினர் பகழி மாய்க்குங்
கவலைத் தென்ப அவர் தேர்சென்ற வாறே
அதுமற் றவலங் கொள்ளாது
நொதுமலர்க் கலிழுமிவ்* அழுங்க லூரே." (குறுந். ௧உ)

இதனுள், முதலடி இயற்சீர் வெள்ளடியாதலின் வெள்ளடி விரவிய ஆசிரிய மெனப்படும்.

(பாடம்) * நொதுமற் கழறுமிவ்.

"இருங்கட லுடுத்தவிப் பெருங்கண் மாநிலம்
உடையிலை நடுவண திடைபிறர்க் கின்றித்
தாமே யாண்ட ஏயங் காவலர்
இடுதிரை மணலினும் பலரே சுடுபிணக்
காடுபதி யாகப் போகித் தத்தம்
நாடு பிறர்கொளச் சென்றுமாய்ந் தனரே
அதனால். நீயுங் கேண்மதி யத்தை வீயா
துடம்பொடு நின்ற உயிரும் இல்லை
மடங்க லுண்மை மாயமோ அன்றே
கள்ளி ஏய்ந்த முள்ளியம் புறங்காட்டு
வெள்ளில் போகிய வியலுள் ஆங்கண்
உப்பிலாஅ அவிப்புழுக்கல்
கைக்கொண்டு பிறக்குநோக்கா
திழிபிறப்பினோன் ஈயப்பெற்று
நிலங்கலனாக விலங்குபலி மிசையும்
இன்னா வைகல் வாரா முன்னே
செய்ந்நீ முன்னிய வினையே
முந்நீர் வரைப்பக முழுதுடன் துறந்தே" (புறம். ங௱சுங)

இதனுள்,

"உப்பிலாஅ அவிப்புழுக்கல்"

என்பது முதலாக மூன்றடியும் வஞ்சியடி.

இனி வஞ்சிப்பா ஆவது வஞ்சியுரிச்சீரானும் ஏனைச்சீரானும் இருசீரடியானும் முச்சீரடியானுந் தூங்கலோசையானும் வந்து தனிச்சொற் பெற்று ஆசிரியச் சுரிதகத்தான் இறுவது. இதற்கு இலக்கணம்:

"வஞ்சிச் சீரென வகைபெற் றனவே
வெண்சீ ரல்லா மூவகை யென்ப" (தொல். செய். கக)

"தன்பா வல்வழித் தாணடை யின்றே" (தொல். செய். உ0)

"வஞ்சி மருங்கின் எஞ்சிய வுரிய" (தொல். செய். உக)

"வஞ்சி யடியே இருசீர்த் தாகும்" (தொல். செய். சங)

"முச்சீ ரானும் வருமிடன் உடைத்தே" (தொல். செய். சரு)

"வஞ்சித் தூக்கே செந்தூக் கியற்றே" (தொல். செய். சுஅ)

என்பனவற்றாற் கொள்க. இப்பா இருசீரடி வஞ்சிப்பா, முச்சீரடி வஞ்சிப்பா என இருவகைப்படும்.

"பூந்தாமரைப் போதலமரத்
தேம்புனலிடை மீன்திரிதரும்
வளவயலிடைக் களவயின் மகிழ்
வினைக்கம்பலை மனைச்சிலம்பவும்
மனைச்சிலம்பிய மணமுரசமும்*
வயற்கம்பலைக் கயலார்ப்பவும், நாளும்
மகிழின்† மகிழ்தூங் கூரன்
புகழ்தல் ஆனாப் பெருவண் மையனே."
(யாப். வி. ப. ஙஙசு)

(பாடம்) * மணமுரசொலி. † மகிழு.

இது குறளடியான் வந்து தனிச்சொற்பெற்று ஈற்றயலடி முச்சீரான் வந்தது. ஆசிரியச் சுரிதகத்தாலிற்ற இருசீரடி வஞ்சிப்பா தனிச்சொற் பெறுதல் எடுத்தோதிற்றிலராயினும் 'உரையிற் கோடல்' என்பதனாற் கொள்க.

"கொடிவாலன கருநிறத்தன குறுந்தாளன
வடிவாளெயிற், றழலுளேயன வள்ளுகிரன
பணைபெருத்தின் இணையரிமான் அணையேறித்
துணையில்லாத் துறவுநெறிக் கிறைவனுகி
எயில்நடுவ ணினிதிருந் தெல்லோர்க்கும்
பயில்படுவினை பத்தியலாற் செப்பியோன், புணையெனத்
திருவுறு திருந்தடி திசைதொழ
வெருவுறு நாற்கதி வீடுநனி எளிதே." (யாப். வி. பக்.நநஎ)

இது முச்சீரடி வஞ்சிப்பா.

இனி,

"வஞ்சி மருங்கின் எஞ்சிய உரிய" (தொல். செய். உக)

என்றோதியவதனால் ஆசிரியவடியோடும் வெண்பாவடியோடுங் கலியடியோடும் மயங்கி வருவன கொள்க.

பட்டினப் பாலையுள்,

"நேரிழை மகளிர் உணங்குணாக் கவரும்" (உஉ)

என்பது ஆசிரியவடி.

"கோழி எறிந்த கொடுங்காற் கணங்குழை" (உங)

என்பது வெண்பாவடி

"வயலாமைப் புழுக்குண்டு வறளடும்பின் மலர்மலைந்து" (சுச-ரு)

என்பது கலியடி.

இனி வெண்பா வாமாறும் கலிப்பா வாமாறும் முன்னர்க் காட்டுதும். (கக௩)

சஉ௩. நெடுவெண்* பாட்டே குறுவெண் பாட்டே
கைக்கிளை பரிபாட் டங்கதச் செய்யுளோ
டொத்தவை எல்லாம் வெண்பா யாப்பின.

என் - எனின். வெண்பாவாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

---

* நெடுவெண்பாட்டென்பன தாமுடைய பன்னீரடி உயர்வு இழிவு ஏழடியாக வருவன என்பது; எனவே, நாற்சீர் அளவடி ஆயினாற்போல நாலடியான் வருதலே அளவிற்பட்டதாகலான் ஐந்தடிமுதலாக வருவன எல்லாம் நெடுவெண்பாட்டென்றலே வலியுடைத்து. குறுவெண்பாட்டென்பன இரண்டடியானும் மூன்றடியானும் வருவன. (தொல். பொருள். சந௦ பேரா.)

(இ - ள்.) நெடுவெண்பாட்டு முதலாக அங்கதச்செய்யுள் ஈறுகச் சொல்லபபட்டவையும் அளவொத்தவையும் எல்லாம் வெண்பாயாப்பினை யுடைய என்றவாறு.

வெண்பாயாப்பாவது, வெண்சீரானும் இயற்சீரானும் வெண்டளை யானும் செப்பலோசையானும் அளவடியானும் முச்சீரீற்றடியானும் வருவது.

இவற்றிற்கு இலக்கணம் மேலோதப்பட்டது. ஈண்டு ஓதப்பட்டன வெல்லாம் இவ்வாறு வரும் என்றவாறு.

இவையெல்லாம் ஓசையான் ஒக்குமாயினும் அளவானுந் தொடை யானும் பொருளானும் இனத்தானும் வேறுபடுத்திக் குறியிடுகின்றார் என்றுகொள்க.

நெடுவெண்பாட்டாவது அளவடியி* னெடிய பாட்டு.

குறுவெண்பாட்டாவது அளவடியிற்† குறிய பாட்டு.

கைக்கிளையென்பதூஉம் அங்கதமென்பதூஉம் பொருளாறுகிய பெயர்.

பரிபாட்டாவது பரிந்த‡ பாட்டாம். அஃதாவது ஒரு வெண்பாவாக வருதலின்றிப் பலவுறுப்புக்களோடு§ தொடர்ந்து ஒருபாட்டாகி முற்றுப் பெறுவது. 'ஒத்தவை' என்பது அளவானும் பொருளானும் இனத் தானும் வேறுபடுக்கப்படாத சமநிலை வெண்பாக்களாம். அவையாவன நான்கடியான் வருவன. இவ்வாசிரியர் நான்கினை அளவென்றும் ஏறின வற்றை நெடிலென்றும் குறைந்தவற்றைக் குறள் சிந்து என்றும் வழங்குவ ராகலின், இவற்றுள்$ பொருளானும் இனத்தானும் வேறுபடுக்கப்படாத நெடுவெண்பாட்டும் குறுவெண்பாட்டும் சமநிலை வெண்பாட்டும் என மூவகையானும் வரும்.

குறுவெண்பாட்டாவது இரண்டடியானும் மூன்றடியானும் வரும்.

உதாரணம்

"அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானொ டூர்ந்தான் இடை." (குறள். ௩௭)

இஃது இரண்டடியும் ஒரு தொடையான் வருதலின் குறள்வெண்பா என்ப.

"உருவுகண் டெள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்
கச்சாணி அன்னார் உடைத்து." (குறள். ௬௬௭)

இது விகற்பத்தொடையான் வருதலின் விகற்பக்குறள் வெண்பா என்ப.

மூன்றடியான் வருவதனைச் சிந்தியல் வெண்பா என வழங்கப்படும்.

---

(பாடம்.) * அளவி. † அளவிற். ‡ பரிந்தபாட்டுப் பரிபாட்டென வரும். § பல வெண்பாவாகிப் பலவுறுப்புக்களோடு. $ வேற்றுப்.

உதாரணம்

"நறுநீல நெய்தலும் கொட்டியுந் தீண்டப்
பிறர்நாட்டுப் பெண்டிர் முடிநாறும் பாரி
பறநாட்டுப் பெண்டிர் அடி." (யாப். வி. பக். ௨௨௬

இஃது ஒத்து ஒருதொடையான் வருதலின், இன்னிசைச் சிந்தியல் வெண்பாவாம்.

"நற்கொற்ற வாயில் நறுங்குவளைத் தார்கொண்டு
சுற்றும்வண் டார்ப்பப் புடைத்தாளே—பொற்றேரான்
பாலைநல் வாயில் மகள்" (யாப். வி. பக். ௨௨௬)

எனவும்,

"சுரையாழ அம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை" (யாப். வி. பக். ௨௨௬)

எனவும் இவை வேறுபட்ட தொடையான் வருதலின் நேரிசைச் சிந்தியல் வெண்பாவாம்.

இனி நான்கடியான் வருவன சமநிலை வெண்பா வெனப்படும். அவற்றுள் இரண்டாமடியின் இறுதிக்கண் ஒரூஉத்தொடை பெற்று வருவனவற்றை நேரிசை வெண்பா எனவும், ஒரூஉத்தொடை பெறாது வருவனவற்றை இன்னிசை வெண்பா எனவும் வழங்கப்படும். ஒரூஉத் தொடை வருக்கவெதுகையாகியும் வரும். இவையெல்லாம் 'உரையிற் கோடல்' என்பதனாற் கொள்க.

"அறுசுவை உண்டி அமர்ந்தில்லாள் ஊட்ட
மறுசிகை நீக்கியுண் டாரும்—வறிஞராய்ச்
சென்றிரப்பர் ஓரிடத்துக் கூழெனிற் செல்வமொன்
றுண்டாக வைக்கற்பாற் றன்று." (நாலடி. க)

இது நேரிசை வெண்பா.

"கல்வரை ஏறிக் கடுவன் கனிவாழை
எல்லுறு போழ்தின் இனிய* பழங்கைக்கொண்
டொல்லொலை† யோடு மலைநாடன் தன்கேண்மை
சொல்லச் சொரியும் வளை." (கைந்நிலை. எ)

இஃது இன்னிசை வெண்பா.

"வளம்பட வேண்டாதார் யார்யாரும் இல்லை
அளந்தன போகம் அவரவர் ஆற்றான்
விளங்காய் திரட்டினார் இல்லை-களங்கனியைக்
காரெனச் செய்தாரும் இல்." (நாலடி. க0௩)

நான்கடியாயும் மூன்றுமடிக்கண் தனிச்சொற் பெற்று வருதலின் நேரிசைப்பாற்படும். பிறவுமன்ன.

(பாடம்) * இனிய பழங்கொண்டே, † யெல்லையே; டொல்லென.

ஐந்தடி முதற் பன்னிரண்டடிகாறும் வருவன பஃறொடை வெண்பா எனப்படும். இதனுள்ளும் ஒரூஉத்தொடை பெற்று வருவனவற்றை நேரிசைப் பஃறொடை எனவும், ஒரூஉத்தொடையின்றி வருவனவற்றை இன்னிசைப் பஃறொடை எனவும் வழங்கப்படும்.

"சேற்றுக்கால் நீலம் செருவென்ற வேந்தன்வேற்
கூற்றுறழ் மொய்ம்பிற் பகழி பொருகயல்
தோற்றந் தொழில்வடிவு தம்முள் தடுமாற்றம்
வேற்றுமை இன்றியே யொத்தன மாவேடர்
ஆற்றுக்கா லாட்டியர் கண்."  (யாப். வி. பக். உநசு)

இஃது இன்னிசைப் பஃறொடை.

"பன்மாடக் கூடல் மதுரை நெடுந்தெருவில்
என்னோடு நின்றார் இருவர் அவருள்ளும்
பொன்னோடை நன்றென்றாள் நல்லளே பொன்னோடைக்
கியானைநன் றென்றாளும் அந்நிலையள் யானை
யெருத்தத் திருந்த இலங்கிலைவேல் தென்னன்
திருத்தார்நன் றென்றேன் தியேன்."  (யாப். வி. பக். உநஎ)

இஃது ஆறடியான் வந்து ஒரூஉத்தொடை பெறுதலின் நேரிசைப் பஃறொடை வெண்பா.

"சிற்றாறு பாய்ந்துகளுஞ்* சேயரிக் கண்ணினாய்
வற்றா வளவயலும் வாய்மாண்ட ஏரியும்
பற்றார்ப் பிணிக்கு மதிலும் படுகிடங்கும்
ஒப்ப வுடைத்தா ஒலியோவா நீர்ப்புட்கள்
தத்தி இரைதேருந் தையலாய் நின்னூர்ப்பேர்
ஒத்துணரும் வண்ண முரைத்தி யெனக்கூறக்
கட்டலர் தாமரையுள் ஏழுங் கலிமான்றேர்க்†
கத்திருவர் ஐவருங் காயா மரமொன்றும்
பெற்றவழி தேர்ந்துண்ணும் பேயின் இருந்தலையும்
வித்தாகா நெல்லின் இறுதியும் பெற்றக்கால்‡
ஒத்தியைந்த தெம்மூர்ப்பேர் போலென்றாள் வானவல்லை
விற்பொலிந்த வெம்புருவத் தாள்."  (யாப். வி. பக். உநஎ

இது பன்னிரண்டடியான் (பெருவல்லத்தைக் கூற) வந்த இன்னிசைப் பஃறொடை வெண்பா. ஏனையவும் வந்தவழிக் கண்டுகொள்க.

இவற்றுள்,

"ஒருபொருள் நுதலிய வெள்ளடி இயலால்
திரிபின்றி நடப்பது§ கலிவெண்பாட்டே" (தொல்.செய்.கரு௭)

என ஓதினமையாற் புணர்தல் முதலாகிய பொருள்களுள் யாதானும் ஒருபொருளைக் குறித்துத் திரிபின்றி முடியும் பஃறொடை வெண்பா

(பாடம்) * பாய்ந்தாடும் சேயரியுண்கணாய்; பாய்ந்தொழுகும்.
† கடுமான்தேர்க்,
‡ பெற்றவிழ் தேர்ந்துண்ணாத பேயே இருதலையும், வித்தாதநெல்லின் இறுதியும் கூட்டியக்கால்.
§ வருவது.

வினைக் கலிவெண்பா எனவும், குறள்வெண்பா முதலாகிய எல்லா வெண் பாக்களுங் கொச்சகக்கலிக்கு உறுப்பாய் வரிற் கொச்சகம் எனவும், பரி பாட்டற்கு உறுப்பாய் வரிற் பரிபாடலெனவுங் கொள்ளப்படும்.

கைக்கிளை என்பது கைக்கிளைப் பொருண்மை. மேற்சொல்லப்பட்ட வெண்பாக்கள் இப்பொருள்மேல் வரிற் கைக்கிளை வெண்பா எனப்படும்.

"பொன்னாரை மரர்பிற் புனைகழற்காற் கிள்ளிபேர்
உன்னேனென் றாமுலக்கை பற்றினேற் —கன்னே
மனனோடு வாயெல்லாம் மல்குநீர்க் கோழிப்
புனல்நாடன் பேரே வரும்." (யாப். வி. பக். ௬௨)

கைக்கிளை வெண்பாயாப்பினல் வரும் எனவே, ஆசிரியப் பாவினல் வரப்பெறுதென்பதும், வந்ததேயாயினும் பாடாண்பாட்டுக் கைக்கிளை யாகுமெனவும் கொள்ளப்படும்.

பரிபாட்டும் அங்கதமும் தத்தஞ் சிறப்புச் சூத்திரத்துட் சொல்லு தும். (௧௧௪)

௪௨௪. கைக்கிளை தானே வெண்பா வாகி
ஆசிரிய இயலான் முடியவும் பெறுமே.

என்—எனின். எய்தியதன்மேற் சிறப்புவிதி யுணர்த்துதல் நுத லிற்று.

(இ - ள்.) கைக்கிளைப் பொருண்மை வெண்பாவினல் வருதலின்றி முதலிரண்டடியும் வெண்பாவாகிக் கடையிரண்டடி யும் ஆசிரியமாகி இருபாவினலும் வரும் என்றவாறு.

இவ்வாறு வருவதனை மருட்பா என்ப. இக்கருத்தினனே மேல்,

"மருட்பா ஏனை இருசார் அல்லது
தானிது என்னுந் தன்மை இன்றே." (தொல். செய். அக)

என ஓதினர் என்று கொள்க. அது,

"உரவொலி முந்நீர் உலாய்நிமிர்ந் தன்ன
கரவரு காமங் கனல* —இரவெதிர
முள்ளெயி றிலங்கு முகிணகை
வெள்வளை நல்காள் வீடுமென் உயிரே" (பு. வெ. கைக்கிளை-௧)

என வரும். (௧௧௫)

௪௨௫. பரிபா டல்லே தொகைநிலை †வகையின்
இதுபா என்னும் இயனெறி இன்றிப்
பொதுவாய் நிற்றற்கும் உரித்தென மொழிப.

என்—எனின். பரிபாடலாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) பரிபாடலாவது தொகைநிலை வகையாற் பா இது என்று சொல்லப்படும் இலக்கணம் இன்றி எல்லாப் பாவிற்கும் பொதுவாய் நிற்றற்கு முரித்தென்று சொல்லுவர் என்றவாறு.

(பாடம்) * கனற்ற. † விரியின்.

உம்மை எச்சவும்மையாகலான் இலக்கணங் கூறவும்படும். அது வருகின்ற சூத்திரத்துட் காட்டுதும்.

பொதுவாய் நிற்றலாவது,

"ஆசிரியம் வஞ்சி வெண்பா கலி மருட்பா" (செய்யுளியல். கக)

என்றோதப்பட்ட எல்லாப்பாவின் உறுப்பும் உடைத்தாதல். (ககசு

௪உசு. கோச்சகம் அராகஞ் சுரிதகம் எருத்தொடு
சேப்பிய* நான்கும் தனக்குறுப் பாகக்
காமங் கண்ணிய நிலைமைத் தாகும்.

என்—எனின். இதுவுமது.

(இ - ள்.) மேற்சொல்லப்பட்ட பரிபாடற் பாட்டுப் பொதுவாய் நிற்றலேயன்றிக் கொச்சகமும் அராகமும் சுரிதகமும் எருத்தும் என்று சொல்லப்பட்ட நான்குந் தனக்குறுப்பாகக் காமங் கண்ணிய நிலைமையை உடைத்து என்றவாறு.

எனவே, அறத்தினும் பொருளினும் வாராதாம்.

"வாழ்த்தியல் வகையே நாற்பாக்கும் உரித்தே"
(தொல். செய். க0கு)

எனச் சிறப்புவிதி யோதினமையால் நான்கு பாவினும் பரிபாடல் வெண்பா யாப்பிற்றாதலிற் கடவுள் வாழ்த்தாகியும் வரப்பெறும். கொச்சகமென்பது ஐஞ்சீரடுக்கி வருவனவும் ஆசிரியவடி, வெண்பாவடி, வஞ்சியடி, கலியடி, சொற்சீரடி. முடுகியலடி என்று சொல்லப்பட்ட அறுவகையடியானும் அமைந்த பாக்களை உறுப்பாக வுடைத்தாகி வெண்பா வியலாற் புலப்படத் தோன்றுவது. இதனுட்,

"சொற்சீ ரடியும் முடுகியல் அடியும்
அப்பா நிலைமைக் குரிய வாகும்" (செய்யுளியல். ககஅ)

என வேறு ஓதுதலின், ஏனை நான்குங் கொச்சகப் பொருளாகக்கொள்ளப் படும்.

"தரவும் போக்கும் இடையிடை† மிடைந்தும்
ஐஞ்சீ ரடுக்கியும் ஆறுமெய் பெற்றும்
வெண்பா இயலான் வெளிப்படத் தோன்றும்
பாநிலை வகையே கொச்சகக் கலியென
நூல்நவில் புலவர் நுவன்றறைந் தனரே"
(செய்யுளியல். க௫அ)

என்றாராகலின், இவ்விலக்கணத்தானே பரிபாடலுட் கொச்சகம் வரும் வழித் தரவுஞ் சுரிதகமும் இடையிடை வருதலுங் கொள்க. 'வெண்பா வியலான்' என்றதனால் தன்தளையானும் பிறதளையானும் வந்து ஈற்றடி முச்சீரான் வருவனவெல்லாங் கொள்க.

---

* 'செப்பிய நான்கு' என்றது எண்ணப்பட்ட நான்கனையும் அன்று; அன்னவற்றோடு மேற்கூறிய நான்கு பாவும் இடைவந்து விரவும் என்பது. அதுவும் நோக்கிப் போலும் பரிபாடல் என்றது. (தொல். பொருள். ௪கடு. பேரா.)

(பாடம்) † பாட்டிடை.

அராகமென்பது ஈரடியானும் பலவடியானுங் குற்றெழுத்து நெருங்கி வரத் தொடுப்பது. பெருமைக்கெல்லை ஆறடி. என்னை?

"அராகந் தாமே நான்காய் ஒரோவொன்று
வீதலும் உடைய மூவிரண் டடியே."

"ஈரடி யாகு மிழிபிற் கெல்லை"

என அகத்தியனார் ஓதுதலின்.

சுரிதகம் என்பது ஆசிரிய இயலானுதல் வெண்பா இயலானுதல் பாட்டிற் கருதிய பொருளை முடித்து நிற்பது.

எருத்தென்பது இரண்டடி யிழிபாகப் பத்தடிப் பெருமையாக வருவதோ ருறுப்பு. பாட்டிற்கு முகம் தரவாதலானுங் கால் சுரிதகமாதலானும் இடைநிலைப் பாட்டாகிய தாழிசையுங் கொச்சகமு மராகமுங் கொள்ளக கிடத்தலின் எருத்தென்பது கழுத்தின் புறத்திற்குப் பெயராக வேண்டுமாதலான் அவ்வுறுப்புத் தரவைச் சார்ந்து கிடத்தல் வேண்டுமென்று கொள்க.

"தரவே எருத்த மராகங் கொச்சகம்
அடக்கியல் வகையோ டைந்துறுப் புடைத்தே"

என்பது அகத்தியமாதலின், தரவென்பதோருறுப்புங் கோடல் வேண்டுமெனின், இவ்வாசிரியர் 'கொச்சகம்' என ஓதியவதனுனே தரவும் அவ் விலக்கணத்திற் படுமென்பது ஒன்று. எருத்து என்பது இவ்வாசிரியர் கருத்தினுல் தரவென்பது போலும்.

பரிபாடற்கண் மலையும் யாறும் ஊரும் வருணிக்கப்படும்.

"அதுதான், மலையே யாறே யூரென் றிவற்றின்
நிலைபெறு மரபி னீங்கா தாகும்"

என்றாராகலின். இனிச் சுரிதகமின்றியும் பரிபாடல் முற்றுப்பெறும்.

"கொச்சக வகையின் எண்ணொடு விராஅய்
அடக்கிய லின்றி அடங்கவும் பெறுமே"

என அகத்தியனார் ஓதுதலின். (கக௭)

சஉ௭. சொற்சீ* ரடியும் முடுகிய லடியும்
அப்பா நிலைமைக் குரிய வாகும்.

என்—எனின். இதுவுமது.

(இ - ள்.) சொற்சீரடியும் முடுகியலடியும் பரிபாடற்கு உரிய வாகும் என றவாறு.

---

* சொற்சீரும் முடுகியலும் என்றது அடி என்றதனேன் மேற்கூறிய அடியொடு தொடர்ந்தல்லது வாரா என்பதாம்......முடுகியல் அடி என்பது முடுகியலோடு விராய்த் தொடர்ந்தொன்றுகிய வெண்பா அடி. (தொல். பொருள். சகஉ. பேரா.)

சொற்சீரடியாவது வருகின்ற சூத்திரத்துட் காட்டுதும்.

முடுகியலாவது ஐந்தடியானும் ஆறடியானும் ஏழடியானுந் தொடுத்துப் பயிலத் தொடுப்பது. (கக அ)

சஉஅ. சட்டுரை வகையான் எண்ணொடு புணர்ந்து
முற்றடி யின்றிக் குறைவுசீர்த் தாகியும்
ஒழியசை யாகியும் வழியசை புணர்ந்துஞ்
சொற்சீர்த் திறுதல் சொற்சீர்க் கியல்பே.

என்—எனின். சொற்சீராமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) கட்டுரையாவது பாட்டின்றித் தொடுக்கப்பட்டு வருவது.

எண்ணென்பது ஈரடியாற் பலவாகியும் ஓரடியாற் பலவாகியும் வருதல். பலவருதலின் எண்ணென்றார்.

முற்றடி யின்றிக் குறைவுசீர்த் தாகியும் என்பது நாற்சீரடியின்றி முச்சீரடியானும் இருசீரடியானும் வருதல்.

ஒழியசையாகியும் என்றது ஒழிந்த அசையினை யுடைத்தாகியும் என்றவாறு.

எனவே இறுதிச்சீர் ஒன்றும் இரண்டும் அசை குறையப் பெறும் என்றவாறும்.

வழியசை புணர்தலாவது ஒரு சீரின்கண்ணே பிறிதொருசீர் வரத் தொடாது ஓரசைவரத் தொடுப்பது.

சொற்சீர்த்திறுதல் என்பது சொற்றானே சீராந்தன்மையைப் பெற்று நிற்றல்.

சொற்சீர்க் கியல்பே என்றது இப்பெற்றியை யுடைத்துச் சொற் சீரின தியல்பு என்றவாறு.

இவ்விலக்கணம் பரிபாடற் செய்யுட்கண் வருமாறு:

''ஆயிரம் விரித்த அணங்குடை அருந்தலைத்
தீயுமிழ் திறலொடு முடிமிசை அணவர
மாயுடை மலர்மார்பின் மையில்வால் வளைமேனிச்
சேயுயர் பணைமிசை எழில்மேழி* ஏந்திய
வாய்வாங்கும் வளைநாஞ்சில் ஒருகுழை ஒருவனை;

இது தரவு.

எரிமலர் சினைஇய கண்ணை பூவை
விரிமலர் புரையு மேனியை மேனித்
திருஞெமர்ந் தமர்ந்த மார்பினை மார்பில்
தெரிமணி விளங்கும்† பூணினை மால்வரை

(பாடம்) * எழில்வேழம். † பிறங்கும்.

எரிதிரிந் தன்ன பொன்புனை உடுக்கையை
சேவலங் கொடியோய்நின் வலவயின் நிறுத்து
மேவ லுழந்தமை கூறு
நாவ லந்தணர் அருமறைப் பொருளே ;

இஃது எருத்து

இணை பிரியணி துணிபணி யெரிபுரைய*
விடரிடு சுடர்படர் பொலம்புனை வினைமலர்
நெரிகிட ரெரிபுரை தனமிகுதன முரண்மிகு
கடறரு மணியொடு முததியா கத்தொனறி
நெறிசெறி வெறியுறு முரல்விறல் வணங்கணங்குவில்
தாரணி துணிமணிவிய லெறுமெழில் புகழலர்மார்பி
னெரிவயிர் நுதியெறி படையெருதது மலையிவர் நவையில்
துணிபட விலமணி வெயிலுற ழெழினக்
கிமையிருள கலமுறு கிறுபுரி யொருபுரி நாண்மலர்
மலரிலகினவளர் பருதியி ஞெளிமணி மார்பணி
மிகநாறுரு வினவிரை வளிமிகு கடிவிசை
உடுவுறு தலைநிரை யிதழணி வயிறிரிய அமரரைப்
போரெ ழுந்துடன் றிரைத்துரைஇய தானவர்
சீரழிப் புனல்மொழி பிழந்தார
முதிர்பதி ரப்பல புலவந்தொடவமர் வென்றகணை ;

இவை நான்கும் அராகம்.

பொருவ மென்ற மறந்தபக் கடந்து
செருவிடம் படுத்தது செயிர்தீர் அண்ணல்
இருவர் தாதை யிலங்குமுன் மாஅன்
றெருள நின்வர வறிதல்
மருளறு தேர்ச்சி முனைவர்க்கும் அரிது ;

இஃது ஆசிரியம்.

அன்ன மரபி னனையோய் நின்னை
யின்னனென் றுரைத்த லெமக்கெவன் எளிது ;

இது பேரெண்.

அருமைநற் கறியினும் ஆய நிற்பயில்
பெருமையின் வல்லா யாம்இவண் மொழிபவை
மெல்லிய எனுஅது வெரூஅ
தல்லியந் திருமார்ப நீயருளல் வேண்டும் ;

இதுவும் ஆசிரியம்.

விறல்மிகு விழுச்சீ ரந்தணர் காக்கும்
அறனு மார்வலர்க் கருளுநீ ;
திறனிலோர்த் திருத்திய தீதுதீர் கொள்கை
மறனு மாற்றலர்க் கணங்கு நீ ;

---

(பாடம்) *இணைபிரி யணிதுணி பிணிமணி எரிபுரை.

அங்கண் வானத் தணிநிலாத் திகழ்தருந்
திங்களுந் தெறுகதிர்க் கனலியு நீ ;
ஐந்தலை யுயரிய அணங்குடை யருந்திறல்
மைந்துடை யொருவனு மடங்கலும் நீ;
நலமுழு தளைஇய புகரறு காட்சிப்
புலம்பு வின்னு னாற்றமு நீ ;
வலனுயர் எழிலியும் மாக விசும்பும் .
நிலனு நீடிய இமயமும் நீ ;

இவை யாறும் பேரெண்;

அதனால் ;

தனிச்சொல்.

இன்னோர் அனையை இனையை யாலென
அன்னோர் யாமிவட் காணா மையிற்
பொன்னணி நேமி வலங்கொண் டேந்திய
மன்னிய முதல்வனை யாகலின்
நின்னோ ரனையைநின் புகழொடும் பொலிந்தே ;

இது சுரிதகம்.

அன்றெனின்,

நின்னொக் கும்புகழ் நிழலவை
பொன்னொக்கு முடையவை
புள்ளின் கொடியவை புரிவளை யினவை
எள்ளுநர்க் கடந்திட்ட இகனேமியவை
மண்ணுற்ற மணிபா யுருவினவை
எண்ணிறந்த புகழவை எழின்மார் பினவை ;

இவை சிற்றெண்ணும், இடையெண்ணும், அளவெண்ணும்.

ஆங்கு ;

தனிச்சொல்.

காமரு சுற்றமொ டொருங்குநின் னடியுறை
யாமியைந் தொன்றுபு வைகலும் பொலிகென
ஏமுறு நெஞ்சத்தேம் பரவுதும்
வாய்மொழி முதல்வநின் தாள்நிழல் தொழுதே. ''

இது சுரிதகம்.

இது கடவுள்வாழ்த்து. ஈண்டோதப்பட்ட உறுப்புக்கள் மிக்கும் குறைந்தும் வருதல் இப்பாவிற் கியல்பென்று கொள்க. பிறவும் பரிபாடலகத்துக் கண்டுகொள்க.

''மாநிலந் தோன்றுமை மலிபெய லிலைஇ
ஏமநீ ரெழில்வான மிகுத்தரும் பொழுதினன்

நாகநீள் மணிவரை நறுமலர் பலவிரைஇக்
காமரு வையை கடுகின்றே கூடல் ;

நீரணி கொண்டன்று வையை யெனவிரும்பித்
தாரணி கொண்ட உவகை தலைக்கூடி
ஊரணி கோலம் ஒருவர் ஒருவரிற்
சேரணி கொண்டு நிறமொன்று வெவ்வேறு
நீரணி கொண்ட நிறையணி அங்கர்டி
ஏரணி கொண்டார் இகல் ;

கைபுனை தாரினர் கண்ணியர்
ஐயெனு மாவியர் ஆடையர்
நெய்யணி கூந்தலர் பித்தையர்
மெய்யணி யானை மிசைக் கொண் டொய்யெனத்
தங்காச் சிறப்பில் தளிரியலார் செல்லப்
பொங்கு புரவிப்புடைப் போவோரும் பொங்குசீர்
வையமுந் தேரும் அமைவோரும் எவ்வாயும்
பொய்யாம்போ யென்னுப் புடைபடைகூட் டிப்போவார்
மெய்யாப்பு மெய்யார மூடுவார் வையத்துக்
கூடுவார் ஊட லொழிப்பார் உணர்குவார்
ஆடுவார் பாடுவார் ஆர்ப்பார் நகுவார்நக்
கோடுவார் ஓடித் தளர்வார்போ யுற்றவரைத்
தேடுவார் ஊர்க்குத் திரிவார் இலராகிக்
கற்றாருங் கல்லா தவருங் கயவரும்
பெற்றாரும் பெற்றார்ப் பிழையாத பெண்டிரும்
பொற்றேரான் தானும் பொலம்புரிசைக் கூடலும்
முற்றின்று வையைத் துறை ;

துறையாடுங் காதலர் தோள்புணை யாக
மறையாடு வாரை அறியார் மயங்கிப்
பிறையேர் நுதலியர் எல்லாருந் தம்முன்
நிகழு நிகழ்ச்சி யெம்பாலென் றுங்கே
இகலுவ செல்வ நினைத்தெவட் கண்டிப்பால்
அகலல்கும் வையைத் துறை ;

காதலான் மார்பிற் கமழ்தார் புனல்வாங்கி
ஏதிலாள் கூந்தல் இடக்கண்டு மற்றது
தாதாவென் றுட்குத் தானே புனல்தந்து
வேய்தந்த தென்னை விளைந்தமை மற்றது
நோதலே செய்யேன் நுணங்கிழையா யச்செல்வி
போதலுண் டாங்கொல் அறிந்து புனல்புணர்த்த
தோஒ பெரிதும் வியப்பு ;

கயத்தகப் பூப்பெய்த காமக் கிழமை
நயத்தகு நல்லாளைக் கூடுமா கூடு
முயக்குக்குச் செல்வல் முலையும் முயக்கத்து
நீரு மவட்குத் துணைக்கண்ணி னீர்விட்டோய்
நீயு மவட்குத் துணை ;

பணிவில் உயர்சிறப்பிற் பஞ்சவன் கூடல்
மணியெழில் மாமேனி முத்த முறுவல்
அணிபவளச் செவ்வாய் அறங்காவற் பெண்டிர்
மணியணி தம்முரிமை மைந்தரோ டாடத்
தணிவின்று வையைப் புனல்;

புனலூடு போவதோர் பூமாலை கொண்டை
எனலூழ் வகையெய்திற் றென்றேற்றுக் கொண்டை
புனலூடு நாடறியப் பூமாலை அப்பி
நினைவாரை நெஞ்சிடுக்கண் செய்யுங் கனல்புடன்
கூடாமுன் ஊடல் கொடியதிறங் கூடினல்
ஆடாளோ வூர்க்கலர் வந்து;

எனவாங்கு,

ஈப்பா யடுநறுக் கொண்டதிவ் வியாறெனப்
பார்ப்பார் ஒழிந்தார் படிவு;

மைந்தர் மகளிர் மணவிரை பூசிற்றென்
றந்தணர் தோயலர் ஆறு;

வையைத் தேமொழி வழுவழுப் புற்றன
ஐயர்வாய் பூசுறுர் ஆறு;

விரியுரை விரைதுறை கரையழி பிழியூர ஊர்தரும் புனல்
கரையொடு கடலிடை வரையொடு கடலிடை நிரைநிரை நீர்தருநுரை
நுரையுடன் மதகுதொ றிழிதரு புனல்கரை புரளிய செலமறிகடல்
புகுமள வளவிய விச்சிறை தணிவின்று வெள்ளமிகை;

வரைபல புரையுயர் கயிறணி பயிரெழில்
மணியணி யானைமிசை மைந்தரும் மடவாரும்
நிரைநிரை குழீஇயினர் உடன்சென்று
குருமணி யானை இயறேர்ப் பொருநன்
திருமருத முன்றுறை முற்றங் குறுகித்
தெரிமருதம் பாடும் பிணிதோள்யாழ்ப் பாணர்
பாய் புனலாட *
ஆடி யாடி யருளியவர்
ஊடி யூடி யுணர்த்தப் புகன்று
கூடிக் கூடி மகிழ்பு மகிழ்பு
தேடித் தேடிச் சிதைசிதைபூச்
சூடிச் சூடிக்கை தொழுது தொழுதும்
இழுதொடு நின்ற புனல் வையை
விழுதொகை நல்லாரு மைந்தரும் ஆடி
இமிழ்வது போன்றதிந் நீர்குணக்குச் சான்றீர்
முழுவது மிச்சிலா உண்டு;

சாந்தும் கழழ்தாருங் கோதையுஞ் சுண்ணமுங்
கூந்தலும் பித்தையுஞ் சோர்ந்தன
பூவினு மல்லாற் சிறிதானு நீர்நிறந்தா
ஆறென்றே திவ்வையை யாறு;

---

(பாடம்) * பாடிப் பாடிப் பாய்புனல்.

மழைநீர்க் குளத்து வாய்பூசி யாடுங்
கழுநீர மஞ்சனக் குங்குமக் கலக்கல்
வழிநீர வீழுநீரன்று வையை
வெருவரு கொல்லியானை வீங்குதோள் மாறன்
உருகெழு கூட லவரொடும் வையை
வருபுன லாடிய தன்மை பொருவுங்கால்
இருமுந்நீர் வையம் பிடித்தென்னை யானூர்க்
கொருநிலையு மாற்ற இயையா வருமாவில்*
அந்தர வான்யாற் றுயிரங் கண்ணினன்
இந்திரன் ஆடுந் தகைத்து.''

இது காமப் பொருளாகி வரும் வெண்பா மிக்குவந்த பாட்டு (௧௧௯)

௪௨௯. அங்கதந் தானே அரில்தபத்† தெரியிற்
செம்பொருள் கரந்த தெனவிரு வகைத்தே.

என்—எனின். அங்கதச் செய்யுளாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அங்கதமாவது குற்றமற ஆராயிற் செம்பொருளெனவும், கரந்த தெனவும் இருவகைப்படும் என்றவாறு.

அவை முன்னர்க் காட்டுதும். (௧௨௦)

௪௩௦. செம்பொரு ளாயின வசையெனப் படுமே.

என்—எனின். செம்பொருளாகிய அங்கதம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) செம்பொருளங்கதம் வசையெனப் பெயர்பெறும் என்றவாறு. (௧௨௧)

௪௩௧. மொழிகரந்து மொழியின்அது‡ பழிகரப் பாகும்.

என்-எனின். மறைபொருளாகிய அங்கதம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) தான்மொழியும் மொழியை மறைத்து மொழியின் அது பழிகரப்பெனப் பெயர்பெறும் என்றவாறு. (௧௨௨)

---

(பாடம்) * வருமரபின்.

†''அரில்தப' என்றது என்னையெனின் அவை புகழ்போன்று வசையாதலும் பட்டுத் தோன்றும் மயக்கமுடைய ஆதலின் மயக்கமறத் தெரியின் என்றவாறு. ''நூற்றுவர் தலைவனைக் குறங்கறுத் திடுவான்'' என்பது புகழ்போன்று வசையாயிற்று என்னை? கொன்றுனுயினும் குறங்கினைக் கதத்தண்டு கொண்டு எற்றுதல் குற்றமாதலின் என்பதறிக. கொடை மடங்கூறுதல் வசைபோன்று புகழ் எனப்படும். அஃது அங்கதம் ஆகா தென்பான் அரில்தப என்றான் என்பது. (தொல். பொருள். ௪௩௬. பேரா.)

(பாடம்) ‡ சொல்லினது.

சரு௨. செய்யுள் தாமே இரண்டென மொழிப.

என்—எனின். மேற்சொல்லப்பட்டன தொகுத்துணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஈண்டு, தம்மாற் சொல்லப்பட்ட செய்யுள் இரண்டுவகை என்று சொல்லுவர் என்றவாறு.

அவை முன்னர்க் காட்டுதும். (கஉக)

சருரு. புகழொடும்* பொருளொடும் புணர்ந்தன் றாயின்
செவியுறைச் செய்யுள் என்மனார்† புலவர்.

என்—எனின். செய்யுளைப் பாகுபடுத்தலை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) புகழொடும் பொருளொடும் புணரவரிற் செவியுறைச்செய்யுள் என்று சொல்லுவர் என்றவாறு. (கஉச)

சருச. வசையொடும் நசையொடும் புணர்ந்தன் றாயின்
அங்கதச் செய்யுள் என்மனார் புலவர்.

என்—எனின். இதுவுமது.

(இ - ள்.) வசையொடும் நசையொடும் புணர்ந்தசெய்யுள் அங்கதச் செய்யுள் எனப்பெயர் பெறும் என்றவாறு.

எனவே, இருவாற்றானும் செய்யுட் செய்யப்பெறும் என்றவாறு,

சருடு. ஒத்தா ழிசைக்கலி கலிவெண் பாட்டே
கோச்சகம் உறழொடு கலிநால் வகைத்தே.

என்—எனின். இனிக் கலிப்பாப் பாகுபடுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள் ) ஒத்தாழிசைக் கலியும் கலிவெண்பாட்டும் கொச்சகமும் உறழுகலியும என நான்கு வகைப்படுங் கலிப்பா என்றவாறு.

அவையாமாறு முன்னர்க் காட்டுதும்.

"இருவயின் ஒத்தும் ஒவ்வா இயலினுந்
தெரியிழை மகளிரொடு மைந்தரிடை வரூஉங்
கலப்பே யாயினும் புலப்பே யாயினும்
ஐந்திணை மரபின் அறிவுவரத் தோன்றிப்
பொலிவொடு புணர்ந்த பொருட்டிற முடையது
கலியெனப் படூஉங் காட்சித் தாகும்"

என்று அகத்தியனார் ஓதுதலின் கலிப்பா அகப்பொருளென வழங்கும். (கஉரு)

---

(பாடம்) *துகளொடும் †அதுவெனமொழப.

சரு௬. அவற்றுள்,
ஒத்தா ழிசைக்கலி இருவகைத் தாகும்.

என்—எனின். ஒத்தாழிசைக்கலி பாகுபடுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஒத்தாழிசைக்கலி இரண்டு வகைப்படும் என்றவாறு.

அவை முன்னர்க் காட்டுதும். (கஉஎ)

சரு௭. இடைநிலைப் பாட்டே தரவுபோக் கடையென
நடைநவின் றொழுகும்* ஒன்றென மொழிப.

என்—எனின். ஒத்தாழிசைக்கலி பாகுபடுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) தாழிசையுந் தரவுஞ் சுரிதகமும் அடைநிலைக் கிளவியும் என நான்கு உறுப்பினை யுடைத்து ஒததாழிசைக் கலி என்றவாறு.

தரவு தாழிசை தனிச்சொல் சுரிதகம் எனக் கிடக்கை முறையாற் கூறுது தாழிசை முற்கூறிய வகையான் இப்பாவிற்கும் ஒத்தாழிசை சிறந்ததாதலின் முற்கூறினர். முற்கூறுகின்றவழியும் 'இடைநிலைப் பாட்டே' எனக்கூறுதலின் முந்துற்றது தரவு என்றவாறும். இடைநிலைப்பாட்டெனினும் தாழிசையெனினும் ஒக்கும். போக்கெனினும் சுரிதகம் எனினும் வாரம் எனினும் அடக்கியல் எனினு மொக்கும். அடை எனினும் தனிச்சொல் எனினும் ஒக்கும். தனிச்சொல்லைப் பின் எண்ணியவதனன் தாழிசைதோறுந் தனிச்சொல் வரவும் பெறும் என்று கொள்க. (கஉஅ)

சரு௮. தரவே தானும் நாலடி யிழிபாய்
ஆறிரண் டுயர்வும் பிறவும் பெறுமே.†

என்—எனின். தரவிற்கு அடிவரையறை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) தரவு நாலடியிழிபாகப் பன்னிரண்டடியுயர்பாக, இடைவரும் அடியெல்லாவற்றானும் வரப்பெறும் என்றுகொள்க. (கஉகூ)

சரு௯. இடைநிலைப் பாட்டே,
தரவகப் பட்ட மரபின என்ப.

என்—எனின், தாழிசைக்கு அடியாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

---

*'நடைநவின் றொழுகும்' என்ற தென்னை யெனின், இத்துணை பயின்று வாராது ஏனை யொன்றும் என்றற்கு என்பது. இடைநிலைப் பாட்டென்பது தாழிசையினை நோக்காது என்னை ? தாழம்பட்ட ஓசை யல்லாதனவும் இடைநிலைப்பாட்டாய் வருமாதலின் என்பது. (தொல். பொருள். சசச. பேரா.)

(பாடம்.) †ஆறிரண் டுயர்வென் றேறவும் பெறுமே.

(இ - ள்.) தாழிசைகள் தரவிற் சுருங்கிவரும் என்றவாறு.

'தரவகப்பட்ட மரபின' என்றதனால் தரவிற்கு ஓதப்பட்ட நான்கடியின் மிகாதென்பதூஉம் மூன்றடியானும் இரண்டடியானும் வரப்பெறும் என்பதூஉங் கொள்க. வருகின்ற சூத்திரத்துள் "ஒத்து மூன்றாகு மொத்தா ழிசையே" (செய்யு. கந௬) எனக்கூறுதலானும் இப்பாவினை ஒத்தாழிசைக்கலி யெனக் கூறுதலானுந் தாழிசை ஒருபொருண்மேல் மூன்றடுக்கி வருமென்று கொள்க. (கக௦)

ச௪௦. அடைநிலைக்* கிளவி தாழிசைப் பின்னர்
நடைநவின் றொழுகும் ஆங்கென மொழிப.†

என்—எனின். தனிச்சொல்லாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அடைநிலைக் கிளவியாகிய தனிச்சொல் தாழிசைப் பின்னர் நடத்தலைப் பயின்றொழுகும் எனச் சொல்லுவர் என்றவாறு.

ஆங்கு அசை. தாழிசைப் பின்னர் நடத்தலைப் பயின்றொழுகு மெனவே, தாழிசைக்கு முன்னர்வருதலும் சிறுபான்மை உள தென்று கொள்க. (கக௧)

ச௪௧. போக்கியல் வகையே வைப்பெனப் படுமே
தரவியல் ஒத்தும் அதனகப் படுமே
புரைதீர் இறுதி நிலையுரைத் தன்றே.

என் —எனின். சுரிதகமாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) சுரிதகம் என்பது வைப்பெனவும் படும். அது தரவோ டொத்த அளவிற்றாகியும் அதனிற்குறைந்த அளவிற்றாகியும் குற்றந்தீர்ந்த பாட்டி னிறுதிநிலையை உரைத்ததென்றவாறு.

தரவியலொத்தலாவது சிறுமை நான்கடி யாகியும் பெருமை பன்னிரண்டடி யாகியும் வருதல். அதனகப்படுதலாவது சிறுமை மூன்றடியானும் இரண்டடியானும் வருதல். இச்சூத்திரங்கள் ஓதினமுறையானே பாட்டு வருமென்றுகொள்க. மேல் துள்ளலோசைத்தாகியும், நிரைமுதலாகிய வெண்பாவுரிச்சீர் மிக்கும், சுரிதகம் ஆசிரியத்தானதல் வெண்பாவானதல் வருமெனவுங் கூறிய இலக்கணங்களும் அறிந்து கொள்க.

உதாரணம்

"பாடின்றிப் பசந்தகண் பைதல பனிமல்க
வாடுபு வனப்போடி வணங்கிறை வளையூர
ஆடெழில் அழிவஞ்சா தகன்றவர் திறத்தினி
நாடுங்கால் நினைப்பதொன் றுடையேன்மன் அதுவுந்தான் ;

இது தரவு.

---

(பாடம்) *இடைநிலைக். † ஆங்கென்கிளவி.

தொன்னலந் தொலைபீங்கியாந் துயருழப்பத் துறந்துள்ளார்
துன்னிநங் காதலர் துறந்தேகு மாரிடைக்
கன்மிசை உருப்பறக் கனைதுளி சிதறென
இன்னிசை யெழிலியை யிரப்பவும்* இயைவதோ ;

புனையிழாய் ஈங்குநாம் புலம்புறப் பொருள்வெஃகி
முனையென்னார் காதலர் முன்னிய ஆரிடைச்†
சினைவாடச் சிறக்குநின் சினந்தணிந் தீகெனக்
கனைகதிர்க் கனலியைக் காமுறல் இயைவதோ ;

ஒளியிழாய் ஈங்குநாம் துயர்கூரப் பொருள்வயின்
அளியொரீஇக் காதலர் அகன்றேகு மாரிடை
முளிமுதல் மூழ்கிய வெம்மைதீர்ந் துறுகென ‡
வளிதருஞ் செல்வனை வாழ்த்தவும் இயைவதோ ;

இவை தாழிசை.

எனவாங்கு,

தனிச்சொல்.

செய்பொருட் சிறப்பெண்ணிச் செல்வார்மாட் டினையன
தெய்வத்துத் திறனோக்கித் தெருமரல் தேமொழி
வறனோடின் வையத்து வான்றருங் கற்பினுள்
நிறனோடிப் பசப்பூர்த லுண்டெனை
அறனோடி விலங்கின்றவர் ஆள்வினைத் திறத்தே'' (கலி. கக)

இது சுரிதகம்.

இது நான்கடித்தரவும் நான்கடியான் மூன்று தாழிசையுந் தனிச்சொல்லும் ஐந்தடிச் சுரிதகமும் வந்த ஒத்தாழிசைக் கலிப்பா. இதனை நேரிசை யொத்தாழிசைக் கலிப்பா என்ப.

''வெல்புகழ் மன்னவன் விளங்கிய ஒழுக்கத்தான்
நல்லாற்றின் உயிர்காத்து நடுக்கறத் தான்செய்த
தொல்வினைப் பயன்துய்ப்பத் துறக்கம்வேட் டெழுந்தாற்போற்
பல்கதிர் ஞாயிறு பகலாற்றி மலைசேர
ஆனாது கலுழ்கொண்ட உலகத்து மற்றவன்
ஏனையான் அளிப்பான்போல் இகலிருள் மதிசீப்பக்
குடைநிழல் ஆண்டாற்கும் ஆளிய வருவாற்கும்
இடைநின்ற காலம்போல் இறுத்தந்த மருண்மாலை ;

இது தரவு.

மாலைநீ, தூவறத் துறந்தாரை நினைத்தலிற் கயம்பூத்த
போதுபோற் குவிந்தஎன் எழினலம் எள்ளுவாய்
ஆய்சிறை வண்டார்ப்பச் சினைப்பூப்போல் தளைவிட்ட
காதலர்ப் புணர்ந்தவர் காரிகை கடிகல்லாய் ;

மாலைநீ, தையெனக் கோவலர் தனிக்குழல் இசைகேட்டுப்
பையென்ற நெஞ்சத்தேம் பக்கம்பா ராட்டுவாய்
செவ்வழியாழ் நரம்பன்ன கிளவியார் பாராட்டும்
பொய்தீர்ந்த புணர்ச்சியுட் புதுநலம் கடிகல்லாய் ;

---

(பாடம்) * இரக்கவும். † ஆற்றிடைச்.
‡ முளியரின் மூழ்கிய வெம்மைதீர்ந் தொழிகென.

மாலைநீ. தகைமிக்க தாழ்சினைப் பதிசேர்ந்து புள்ளார்ப்பப்
பகைமிக்க* நெஞ்சத்தேம் புன்மைபா ராட்டுவாய்
தகைமிக்க புணர்ச்சியார் தாழ்கொடி நறுமுல்லை
முகைமுகந் திறந்தன்ன முறுவலுங் கடிகல்லாய்;

இவை தாழிசை.

ஆங்க,

தனிச்சொல்.

மாலையு மலரு நோனா தெம்வயின்
நெஞ்சமும் எஞ்சுமற் றில்ல எஞ்சி
உள்ளா தமைந்தோர் உள்ளும்
உள்ளில் உள்ளம் உள்ளுள் உவந்தே." (கலி. ககஅ)

இது சுரிதகம்.

இது தாழிசைதோறுந் தனிச்சொற் பெற்றுவந்த நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா.

'வயக்குறு மண்டிலம்' என்னும் (கலி. உ௯) கலிப்பாவில் தரவு பன்னிரண்டடியான் வந்தது.

'இலங்கொளி மருப்பிற் கைம்மா' என்னுங் (கலி. உங) கலிப்பாவினுள் இரண்டடியால் தாழிசை வந்தன.

'உண்கடன் வழிமொழிந் திரக்குங்கான் முகனும்' என்னுங் (கலி. உஉ) கலிப்பாவில் தாழிசை மூன்றடியான் வந்தன.

'ஆறறியந்தணர்' என்னும் கடவுட்பாட்டினுள் மூன்றடிச்சுரிதகம் வந்தது.

இனி, ஏனையடிகளால் வரும் தரவுந் தாழிசையும் சுரிதகமும் கலித்தொகையுட் கண்டு கொள்க. (கஙஉ)

சசஉ. ஏனை யொன்றே,
தேவர்ப் பராஅய முன்னிலைக் கண்ணே.

என்—எனின். சொல்லாதொழிந்த ஒத்தாழிசைக்கலிப்பா உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) ஒத்தாழிசைக்கலிப்பா முன்னிலையிடத்துத் தேவரைப் பராவும் பொருண்மைத்து என்றவாறு. (கஙங)

சசங. அதுவே,
வண்ணகம் ஒருபோ கெனவிரு வகைத்தே.

என்—எனின். மேற்சொல்லப்பட்ட முன்னிலைப் பரவலாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(பாடம்) * புரிமிக்க.

(இ - ள்.) தேவரிடத்து முன்னிலைப்பரவ லாகிய அது தான் வண்ணகமெனவும் ஒருபோகு எனவும் இருவகைப்படும் என்றவாறு. (௧௩௪)

௪௪௪. வண்ணகம் தானே,
தரவே தாழிசை எண்ணே வாரமென்
றந்நால் வகையில் தோன்று மென்ப.

என்—எனின். வண்ணக வொத்தாழிசைக்கலிப்பா ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) வண்ணக ஒத்தாழிசையாவது தரவும் தாழிசையும் எண்ணும் சுரிதகமும் என்று சொல்லப்பட்ட நான்கு உறுப்பிணையும் உடைத்து என்றவாறு. (௧௩௫)

௪௪௫. தரவே தானும்,
நான்கும் ஆறும் எட்டும் என்ற
நேரடி பற்றிய நிலைமைத் தாகும்.

என்—எனின். தரவிற்கு அடிவரையறை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாவிற்குத் தரவு நான்கும் ஆறும் எட்டுமாகிய அளவடியினாலே வரும் என்றவாறு.

ஈண்டு நேரடி என்றது கொச்சகத்தரவுபோல வாராமைக்கு என்று கொள்க சொல்லப்பட்ட ஒன்பதடியினும் மூன்றடியே இதற்கு வருவதென்றவாறாயிற்று. (௧௩௬)

௪௪௬. ஒத்துமூன் றாகும் ஒத்தா ழிசையே
தரவிற் சுருங்கித் தோன்று மென்ப.

என்—எனின். தாழிசைக்கு அடிவரையறை உணர்த்துதல் நுதலிற்று.

இச் சூத்திரம் இறந்தது காத்தது என்று கொள்க.

(இ - ள்.) தாழிசையுந் தம்முள் அளவும் ஒத்து மூன்றாகி வரும். அவை தரவிற் சுருங்கித் தோன்றும் என்றவாறு. (௧௩௭)

௪௪௭. அடக்கியல் வாரம் தரவோ டொக்கும்.

என்—எனின். சுரிதகம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அடக்கியலாகிய சுரிதகம் தரவோடொத்த இலக்கணத்த தென்றவாறு. (௧௩௮)

௪௪௮. முதற்றொடை பெருகிச் சுருங்குமன் எண்ணே.

என்—எனின். எண்ணுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) முதற்கொடுத்த உறுப்புப் பெருகிப் பின்கொடுக்கும் உறுப்புச் சுருங்கிவரும் என்றவாறு.

அதனை இரண்டடியான் வருவன இரண்டும், ஓரடியான்வருவன நான்கும், சிந்தடியான் வருவன எட்டும், குறளடியான் வருவன பதினாறும் எனப் பிறநூலாசிரியர் உரைப்பர். இவ்வாசிரியர்க்கு வரையறையிலவாம். (கங்க)

௪௪௧. எண்ணிடை ஒழிதல் ஏதம் இன்றே
சின்னம் அல்லாக் காலை யான.

என்—எனின். மேலதற்கோர் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) மேற் சொல்லப்பட்ட எண் ஒரோவொன்று இடையொழிந்து வருதல் குற்றமாகாது தனிச்சொல் இல்லாதவழி யென்றவாறு.

எனவே, சொல்லப்பட்ட உறுப்புக்கள் தனிச்சொல் வருவழி இடையொழியாமல் வருதல் வேண்டுமென்றவாறு. தனிச்சொல் உளப்பட ஐந்துறுப்புடைத்தாயிற்று.

இனித் தனிச்சொல்லின்றி எண்ணிடையிட்டவழி ஒருபோகெனப் பெயர் பெறும்.

உதாரணம்

"கெடலரு மாமுனிவர் கிளர்ந்துடன் தொழுதேத்தக்
கடல்கெழு கனைசுடரிற் கலந்தொளிரும் வாலுளைய
அழல்வளை சுழல்செங்கண் அரிமாவாய் மலைந்தானைத்
தாரொடு முடிபிதிரத் தமனியப் பொடிபொங்க
வார்புன விழிகுருதி அகலிடம் உடனனைப்பக்
கூருகிரான் மார்பிடந்த கொலைமலி தடக்கையோய்;

இது தரவு.

முரசதிர வியன்மதுரை முழுவதூஉந் தலைபனிப்பப்
புரைதொடித் திரள்திண்டோட் போர்மலைந்த மறமன்னர்
அடியொடு முடியிறுப்புண் டயர்ந்தவர் நிலம்சேரப்
பொடியெழ வெங்களத்துப் புடைத்ததுநின் புகழாமோ;

கலியொலி வியனுலகங் கலந்துடன் நனிநடுங்க
வலியியல் அவிராழி மாறெதிர்ந்த மருட்சோர்வு
மாணுதா ருடம்பொடு மறம்பிதிர எதிர்கலங்கச்
சேணுயர் இருவிசும்பிற் செகுத்ததுநின் சினமாமோ;

படுமணி இனநிரை பரந்துடன் இரிந்தோடக்
கடுமுரண் எதிர்மலைந்த காரொலி எழிலேறு
வெரிநொடு மருப்படர வீழ்ந்துதிறம் வேறுக
எருமலி பெருந்தொழுவில் இறுத்ததுநின் இகலாமோ;

இவை மூன்றுந் தாழிசை.

இலங்கொளி மரகதம் எழின்மிகு வியன்கடல்
வலம்புரித் தடக்கையோய் மானு நின்னிறம்;

விரியிணர்க் கோங்கமும் வெந்தெரி பசும்பொன்னும்
பொருகளி றட்டோய் புரையும் நின்னுடை;

இவை பேரெண்.

கண்கவர் கதிர்முடி கனலுஞ் சென்னியை;
தண்சுடர் உறுபகை தணித்த ஆழியை;
ஒலியியல் உவணம் ஓங்கிய கொடியினை;
வலிமிகு சகட மாற்றிய அடியினை;

இவை அளவெண்.

போரவுணர்க் கடந்தோய் நீஇ
புணர்மருதம் பிளந்தோய் நீஇ
நீரகலம் அளந்தோய் நீஇ
நிழல் திகழ்ஐம் படையோய் நீஇ

இவை இடையெண்.

ஊழிநீஇ, உலகுநீஇ, உருவுநீஇ, அருவுநீஇ,
ஆழிநீஇ, அருளும்நீஇ, அறமும்நீஇ மறமும்நீஇ;

இவை சிற்றெண்.

எனவாங்கு,

தனிச்சொல்.

அடுதிறல் ஒருவநிற் பரவுதும் எங்கோன்
தொடுகழற் கொடும்பூட் பகட்டெழின் மார்பிற்
கயலொடு கிடந்த சிலையுடைக் கொடுவரிப்
புயலுறழ் தடக்கைச் செவ்வேல் அச்சுதன்
† தொன்று முதிர்கடல் உலகம் முழுதுடன்
ஒன்றுபு திகிரி உருட்டுவோ னெனவே."

இது ஆறடிச்சுரிதகம்.

இவ்வாறு வருவதனை ஒருசாராசிரியர் அம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பாவெனக் கூறுப. (௧௪0)

௪௫0. ஒருபோ கியற்கையும் இருவகைத் தாகும்.

என்—எனின். ஒருபோகு பாகுபடுமாறுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஒரு போகென்னும் கலி இரண்டுவகைப்படும் என்றவாறு. (௧௪௧)

௪௫௧. கொச்சக‡ ஒருபோ கம்போ தரங்கமென்
றொப்ப நாடி உணர்தல் வேண்டும்.

என்—எனின். என்பதுமது.

(பாடம்) * நிழல்திகழும். † தொன்றியல் உலகம் முழுவதும்.

‡ ஒருபோகு என்பது பண்புத்தொகை. இடையீடில்லாத நிலத்தினை ஒருபோ கென்பவாகலின் அஃது ஒப்பினாகிய பெயர். ஒருபோ கென்பதனைத் திரிகோட்ட வேணி என்றது போலக் கொள்க. (தொல். பொருள். ௪௬0. பேரா.)

(இ - ள்.) ஒரு போகென்னும் கலி கொச்சகவொருபோகு எனவும் அம்போ தரங்கமெனவும் பொருந்த நாடியறிதல் வேண்டும் என்றவாறு. (கசஉ)

சஙஉ. தரவின் ருகித் தாழிசை* பெற்றும்
தாழிசை யின்றித் தரவுடைத் தாகியும்
எண்ணிடை யிட்டுச் சின்னங் குன்றியும்
அடக்கிய லின்றி அடிநிமிர்ந் தொழுகியும்
யாப்பினும் பொருளினும் வேற்றுமை யுடையது
கோச்சக வொருபோ காகும் என்ப.

என்—எனின். நிறுத்த முறையானே கொச்சகவொருபோகு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) தரவின்ருகித் தாழிசை பெற்றும் என்பது - தரவு முதலாயின உறுப்புக்களுள், தரவின்றித் தாழிசை முதலிய வுறுப்புக்கள் பெற்றும் என்றவாறு.

'தாழிசை பெற்றும்' என்றதனல் தரவுதாமே வரினும் கொச்சக வொருபோகு ஆகுமென்று கொள்க.

தாழிசையின்றித் தரவுடைத்தாகியும் என்பது—தாழிசையின்றித் தரவு முதலியன உடைத்தாகியும் என்றவாறு.

'தரவுடைத்தாகியும்' என்றதனல் தாழிசை தானே வரினும் என்று கொள்க.

எண்ணிடை யிட்டுச் சின்னங்குன்றியும் என்பது—எண்ணுகிய உறுப்புக்களை யிடையிட்டுத் தனிச்சொல் வாராதொழியினும் என்றவாறு.

'சின்னம்' என்றதனல் எண்ணின்கண் இடையெண் சிற்றெண் என்பன குறையினும் என்றுமாம்.

அடக்கியலின்றி அடிநிமிர்ந் தொழுகியும் என்பது—சுரிதகமின்றித் தரவு தானே நிமிர்ந்தொழுகி முடியினும் என்றவாறு.

யாப்பினும் பொருளினும் வேற்றுமையுடையது என்பது—ஒத்தாழிசையின் யாக்கப்பட்ட யாப்பினும் அதற்குரித்தாக ஓதப்பட்ட கடவுள் வாழ்த்துப்

---

* தாழிசை மூன்றுகியவழி மூன்றடியானும் நான்கடியானும் வரும். இனிப் பத்தும் பன்னிரண்டுமாகி ஒருபொருள்மேல் வரும் பதினொன்றும் அகப்பட்டு நான்கடியின் ஏறுது வருதலும் அங்ஙனம் வருங்கால் தாழ்ந்த ஓசை பெற்றும் பெருதும் வருதலும் அவையும் இருசீர் முதலாக எண் சீரளவும் வருதலும் என்றின்னேரன்ன பகுதியெல்லாம் அவ்வரையறை யின்றித் தழுவப்பட்டன. (தொல். பொருள். சசுக. பேரா.)

பொருண்மையின்றிக் காமப் பொருளாக வரினும் என்றவாறு.

கொச்சக வொருபோகாகும் என்ப என்பது—இவ்வகையினுற் சொல்லப் பட்டன கொச்சக வொருபோகெனக் குறிபெறும் என்றவாறு.

எனவே ஒத்தாழிசைக்கு உறுப்பாகியவற்றுள் ஒன்றும் இரண்டும் குறைந்து வருவன கொச்சக வொருபோகெனப் பெயர்பெறும் என்று கொள்க.

அவற்றுள் தரவின்றாகித் தாழிசைபெற்று வந்ததற்குச் செய்யுள்:—

"நிரைதிமில் களிறாகத் திரையொலி பறையாகக்
கரைசேர் புள்ளினத் தஞ்சிறை படையாக
அரைசுகால் கிளர்ந்தன்ன வுரவுநீர்ச் சேர்ப்பகேள் ;

இது நான்கடியாகி வாராமையின் தாழிசை யாயிற்று.

கற்பித்தான் நெஞ்சழுங்கப் பகர்ந்துண்ணான் விச்சைக்கண்
தப்பித்தான் பொருளேபோல் தமியவே தேயுமால்
ஒற்கத்துள் உதவியார்க் குதவாதான் மற்றதன்
எச்சத்துள் ஆயினுமஃ தெறியாது விடாதேகாண் :

கேளிர்கள் நெஞ்சழுங்கக் கெழுவுற்ற செல்வங்கள்
தாளிலான் குடியேபோல் தமியவே தேயுமாற்
சூள்வாய்த்த மனத்தவன் வினைபொய்ப்பின் மற்றவன்
வாள்வாய்நன் றாயினும்அஃ தெறியாது விடாதேகாண் :

இவை யிரண்டும் தாழிசை.

ஆங்கு,

தனிச்சொல்.

அனைத்தினிப் பெரும அதனிலை நினைத்துக்காண்
சினைஇய வேந்தன் எயிற்புறத் திறுத்த
வினைவரு பருவரல் போலத்
துணைவரு நெஞ்சமொடு வருந்தினள் பெரிதே" (கலி., ௧௨௩)

இது சுரிதகம்.

என வரும்.

தாழிசை தாமேயும் வரும்.

தாழிசையின்றித் தரவு முதலாயின வந்ததற்குச் செய்யுள் :

"செவ்விய தீவிய* சொல்லி யவற்றொடு
பைய முயங்கிய அஞ்ஞான் றவையெல்லாம்

(பாடம்) * திவ்விய.

பொய்யாதல் யான்யாங் கறிகோமற் றைய *
அகன்சுர் கொள்ளா அலர்தலைத் தந்து
பகல்முனி வெஞ்சுர முள்ளல் அறிந்தேன்
மகனல்லை மன்ற வினி ;

இது தரவு.

செல்லினிச் சென்றுநீ செய்யும் வினைமுற்றி
அன்பற மாறியாம் உள்ளத் துறந்தவள்
பண்பு மறிதிரோ வென்று வருவாரை
என்திறம் யாதும் வினவல் வினவிற்
பகலின் விளங்குநின் செம்மல் சிதையத்
தவலருஞ் செய்வினை முற்றாமல் ஆண்டோர் †
அவலம் படுதலும் உண்டு. (கலி. ௧௧)

இது சுரிதகம்.

தாழிசையுந் தனிச்சொல்லு மில்லை.

எண்ணிடையிட்டுச் சின்னங் குன்றியவதற்குச் செய்யுள் :

"மாமலர் முண்டகந் தில்லையோ டொருங்குடன்
கானல் அணிந்த உயர்மணல் எக்கர்மேற்
சீர்மிகு சிறப்பினோன் மரமுதற் கைசேர்த்த
நீர்மலி கரகம்போற் பழந்தூங்கு முடத்தாழைப்
பூமலர்ந் தவைபோலப் புள்அல்குந் துறைவகேள் ;

இது தரவு.

ஆற்றுத லென்பதொன் றலந்தவர்க் குதவுதல்
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பெனப் படுவது பாடறிந் தொழுகுதல்
அன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை
அறிவெனப் படுவது பேதையார் சொல்நோன்றல்
செறிவெனப் படுவது கூறியது மறாஅமை
நிறையெனப் படுவது மறைபிறர் அறியாமை
முறையெனப் படுவது கண்ணோடா துயிர்வௌவல்
பொறையெனப் படுவது போற்றாரைப் பொறுத்தல் ;

இவை எண்.

ஆங்கதை அறிந்தனிர் ‡ ஆயினென் தோழி
நன்னுதல் நலனுண்டு துறத்தல் கொண்க
தீம்பா லுண்பவர் கொள்கலம் வரைதல்
நின்தலை வருந்தியாள் துயரஞ்
சென்றனை களைமோ பூண்கநின் தேரே." (கலி. ௧௩௩)

இது சுரிதகம்.

(பாடம்) * றைஇய. † முற்றாமை ஆண்டோர்.
‡ ஆங்கறிந் தொழுகினை.

அடக்கிய லின்றி யடிநிமிர்ந்தொழுகல் வருமாறு :

"பால்மருள் மருப்பின் உரல்புரை பாவடி
ஈர்நறுங் கமழ்கடாஅத் தினம்பிரி யொருத்தல்
ஆறுகடி கொள்ளும் வேறுபுலம் படர்ந்து
பொருள்வயிற் பிரிதல் வேண்டும் என்னும்
அருளில் சொல்லும் நீசொல் லினையே
நன்னர் நறுநுதல் நயந்தனை நீவி
நின்னிற் பிரியலென் அஞ்சலோம் பென்னும்
நன்னர் மொழியும் நீமொழிந் தனையே
அவற்றுள், யாவோ வாயின மாஅன் மகனே
கிழவர் இன்னோர் என்னாது பொருள்தான்
பழவினை மருங்கிற் பெயர்புபெயர் புறையும்
அன்ன பொருள்வயிற் பிரிவோய் நின்னின்
றிமைப்புவரை வாழாள் மடவோள்
அமைக்கவின் கொண்ட தோளிணை மறந்தே" (கலி. ௨௧)

என வரும். (௧௪௩)

௪௫௩. ஒருபான் சிறுமை இரட்டியதன் உயர்பே.

என்—எனின். மேலதற்கோர் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) மேற் சொல்லப்பட்ட கொச்சகவொருபோகு பத்தடிச் சிறுமையாகவும் இருபதடிப் பெருமையாகவும் வரும் என்றவாறு. (௧௪௪)

௪௫௪. *அம்போத ரங்கம் அறுபதிற் றடித்தே
செம்பால் வாரஞ் சிறுமைக் கெல்லை.

என்—எனின். அம்போதரங்க வொருபோகுக்கு அடிவரையறை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அம்போதரங்க வொருபோகு அறுபதடி பெருமைக் கெல்லையாம் ; நடுவாகிய நிலை சிறுமைக்கெல்லையாம் என்றவாறு.

செம்பால் வாரம் என்பது செம்பாதி எனவுமாம்; முப்பதடிச் சிறுமை என்றவாறு. (௧௪௫)

௪௫௫. எருத்தே கொச்சகம் அராகஞ் சிற்றெண்
அடக்கியல் வாரமோ டந்நிலைக் குரித்தே.

என்—எனின். அம்போதரங்கத்திற்கு உறுப்பாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

* இனிச், சிற்றெண் பதினாறும் அராகஅடி நான்குமாக இருபதடி பெறப்படுங் கொச்சகம் இருமூன்றாகிய பத்தடியின் இகவாது அறுபதடி பெறும் என்றவாறாயிற்று. (தொல். பொருள். ௪௬௩. பேரா.)

(இ - ள்.) ஈண்டு எருத்து என்பது தரவு. கொச்சகமும் அராகமும் மேற்சொல்லப்பட்டன. எண்ணினுட் பேரெண்ணிற் சிற்றெண் வரப்பெறுமாயினும் இனிச் சொல்லப்பட்ட உறுப்பு முறையான் வருதலும் மயங்கிவருதலுங் கொள்க.

பரிபாடற்கும் இவைதாமே உறுப்பாயின் அதனோடிதனிடை வேறுபாடு என்னையெனில் அறுபதிற்றடியிற் குறைந்துவரின் முறை பிறழ்ந்து வருமெனவும் ஒத்துவரின் அறுபதின் மிக்கு வருமெனவுங் கொள்ளப்படும்.

## உதாரணம்

"கண்ணகன் இருவிசும்பிற் கதழ்பெயல் கலந்தேற்ற
தண்நறும் பிடவமுந் தவழ்கொடித் தளவமும்
வண்ணவண் தோன்றியும் வயங்கிணர்க் கொன்றையும்
அன்னவை பிறவும் பன்மலர் துதையத்
தழையுங் கோதையும் இழையும் என்றிவை
தைஇனர் மகிழ்ந்து திளைஇ விளையாடும்
மடமொழி யாயத் தவருள் இவள்யார்
உடம்போ டென்னுயிர் புக்கவ ளின்று ;

இது தரவு.

ஓஒ இவள், பொருபுகல் நல்லேறு* கொள்பவ ரல்லால்
திருமாமெய் தீண்டலர் என்று கருமமா
எவ்லாருங் கேட்ப அறைந்தறைந் தெப்பொழுதுஞ்
சொல்லால் தரப்பட் டவள் ;

சொல்லுக, பாணியேம் என்றார் அறைகென்றார் பாரித்தார்
மாணிழை யாறுகச் சாறு ;

சாற்றுள், பெடையன்னார் கண்பூத்து நோக்கும்வா யெல்லாம்
மிடைபெறின் நேராத் தகைத்து ;

இவை கொச்சகம்.

தகைவகை மிசைமிசைப் பாயியர்† ஆர்த்துடன்
எதிரெதிர் சென்றார் பலர் ;
கொலைமலி சிலைசெறி செயிரயர் சினஞ்சிறந்
துருத்தெழுந் தோடின்று மேல் ;

இவை அராகம்.

எழுந்தது துகள்
ஏற்றனர் மார்பு
கவிழ்ந்தன மருப்புக்
கலங்கினர்பலர் ;

இவை சிற்றெண்.

அவருள், மலர்மலி புகலெழ அலர்மலி மணிபுரை நிமிர்தோள்
பொருத்தோ டிமிலிடைத் தோன்றினன் தோன்றி [பிணைஇ
வருத்தினான் மன்றஅவ் வேறு ;

இது முடுகியலடி வந்த கொச்சகம்.

(பாடம்) * பொருபுகர் நல்லேறு. † பாய்மார்.

ஏறெவ்வங் காணு எழுந்தார் எவன்கொலோ
வேறுடை நல்லார் பகை;

மடவரே நல்லாயர் மக்கள் நெருநல்*
அடலேற் றெருத்திறுத்தார்க் கண்டுமற் றின்று
முடலேறு கோட்சாற் றுவார்;

இவையுங் கொச்சகம்.

ஆங்கினி,

தனிச்சொல்.

தண்ணுமைப் பாணி தளரா தெழூஉக
பண்ணமை யின்சீர்க் குரவையுட் டெண்கண்ணித்
திண்தோள் திறலொளி மாயப்போர் மாமேனி
அந்துவ ராடைப் பொதுவனோ டாய்ந்த
முறுவலாள் மென்றோள்பா ராட்டிச் சிறுகுடி
மன்றம் பரந்த துரை'' (கலி. ௧0௨)

இது சுரிதகம்.

பிறவும் இந்நிகரன கொள்க.

யாப்பினும் பொருளினும் வேறுபட்ட கொச்சகவொருபோகை அதன்பி னேதினமையால் இதற்குங் காமப் பொருளே பெறப்பட்டது. (௧௪௬)

௪௫௬. ஒருபொருள் நுதலிய வெள்ளடி இயலால்†
திரிபின்றி முடிவது‡ கலிவெண் பாட்டே.

என்—எனின். கலிவெண்பாவாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஈற்றடியளவும் ஒருபொருளைக் குறித்து வெள்ளடியியலாற் றிரிபின்றி முடிவது கலிவெண்பாட்டாம் என்றவாறு.

கலிவெண் பாட்டெனினும் வெண்கலிப் பாட்டெனினும் ஒக்கும். வெள்ளடியியலா னென்றமையான் வெண்டளையான்வந்து ஈற்றடி முச்சீரான் வருவனவும் பிறதளையான் வந்து ஈற்றடி முச்சீரான் வருவனவுங் கொள்க.

---

(பாடம்) * நெருநை.

† 'இயல்' என்றதனான், வெண்பா இலக்கணம் சிதையாதவற்றுக்கே ஒரு பொருள் நுதலவேண்டுவ தெனவும், அவ்வாறன்றித் திரிந்து வருவன எல்லாம் ஒரு பொருள் நுதலா என்றும் கலிவெண்பா ஆம் எனவும் கூறியவாறு.

‡ 'திரிபின்றி முடியும்' என்றதனானே ஒரு பொருளன்றிப் பல உறுப்புடைத்தாகித் திரிபு உடையதூஉம் கலிவெண்பாட்டுளதென்று கொள்ள வைத்தானும் (தொல். பொருள். ௪௬௫. பேரா.)

(பாடம்) ‡ வருவது.

## உதாரணம்

"மரையா மரல்கவர மாரி வறப்ப
வரையோங் கருஞ்சுரத் தாரிடைச் செல்வோர்
சுரையம்பு மூழ்கச் சுருங்கிப் புரையோர்தம்
உண்ணீர் வறப்பப் புலர்வாடு நாவிற்குத்
தண்ணீர் பெறூஅத் தடுமாற் றருந்துயரங்
கண்ணீர் நனைக்குங் கடுமைய காடென்றால்
என்னீர் அறியாதீர் போல இவைகூறின்*
நின்னீர அல்ல நெடுந்தகாய் எம்மையும்
அன்புறச் சூழாதே ஆற்றிடை நும்மொடு
துன்பந் துணையாக நாடின் அதுவல்ல
தின்பமும் உண்டோ எமக்கு" (கலி. ௬)

என வரும்.

இது வெண்டளையான் வந்த வெண்கலிப்பா.

அஃதேல் இது நெடுவெண்பாட்டிற்கு ஒதிய இலக்கணத்தான் வருதலிற் பஃறொடை வெண்பாவாம். வெண்கலிப்பா வென்றதென்னை யெனின், புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல் ஊடல் எனவுங் கைக்கிளை பெருந்திணை யெனவுஞ் சொல்லப்பட்ட பொருளேழனுள்ளும் யாதானு மொருபொருளைக் குறித்து ஏனைக்கலிப்பாக்கள் போலத் தரவுந் தாழிசையுந் தனித்தனி பொருளாக்கிச் சுரிதகத்தாற் றொகுத்துவரு நிலைமைத்தன்றித் திரிபின்றி முடிவதனைக் கலிவெண்பா வெனவும், புறப் பொருட்கண் வரும் வெண்பாக்களைப் பஃறொடை வெண்பா வெனவும். பரிபாடற்கு உறுப்பாய் வரும் பஃறொடை வெண்பாக்களைப் பரிபாட லெனவும், கொச்சகக் கலிப்பாவிற் குறுப்பாய் வரும் பஃறொடை வெண்பாவைக் கொச்சகக் கலிப்பாவெனவும் கூறுதல் இவ்வாசிரியர் கருத்தென்று கொள்க. அன்னதாதல் 'நெடுவெண்பாட்டே குறுவெண் பாட்டே' (செய்யுளியல் ௧௧௬) என யாப்பினுலே வேறுபடுத்தாராகிக் 'கைக்கிளை பரிபாட் டங்கதச் செய்யுள்' எனப் பொருளானும் இனத் தானும் வேறுபடுத்தோதினமையானுங் கொள்க.

"தீம்பால் கறந்த கலமாற்றிக் கன்றெல்லாம்
தாம்பிற் பிணித்து மனைநிறீஇ யாய்தந்த
பூங்கரை நீலம் புடைதாழ மெய்யசைஇப்
பாங்கரு முல்லையுந் தாய பாட்டங்கால் தோழிநம்
புல்லினத் தாயர் மகளிரோ டெல்லாம்
ஒருங்கு விளையாட அவ்வழி வந்த
குருந்தம்பூங் கண்ணிப் பொதுவன்மற் றென்னை
முற்றிழை ஏஎர் மடநல்லாய் நீயாடுஞ்
சிற்றில் புனைகோ சிறிதென்றான் எல்லாநீ
பெற்றேம்யா மென்று பிறர்செய்த இல்லிருப்பாய்
கற்ற திலைமன்ற காணென்றேன் முற்றிழாய்†
தாதுசூழ் கூந்தல் தகைபெறத் தைஇய
கோதை புனைகோ நினக்கென்றான் எல்லாநீ
ஏதிலார் தந்தபூக் கொள்வாய் நனிமிகப்
பேதையை மன்ற பெரிதென்றேன் மாதராய்‡

---

(பாடம்) * இவை கூறல். † முற்றிய. ‡ ஆயிழாய்.

ஐய பிதிர்ந்த சுணங்கணி மென்முலைமேல்
தொய்யி லெழுதுகோ மற்றென்றான் யாம்பிறர்
செய்புற நோக்கி இருத்துமோ நீபெரிது
மையலை மாதோ விடுகென்றேன் தையலாய்
சொல்லிய வாறெல்லா மாறுமா றியான்பெயர்ப்ப
அல்லாந்தான் போலப் பெயர்ந்தான் அவனைநீ
யாயர் மகளி ரியல்புரைத் தெந்தையும்
யாயும் அறிய உரைத்தியின் யானுற்ற
நோயுங் களைகுவை மன்'' (கலி. ௧௧௧)

என்னும் முல்லைக்கலி அயற்றளையான் வந்த கலிவெண்பா. (௧௪௭)

௪௫௭. தரவும் போக்கும் இடையிடை* மிடைந்தும்
ஐஞ்சீர் அடுக்கியும் ஆறுமெய் பெற்றும்
வெண்பா இயலான் வெளிப்படத் தோன்றும்
பாநிலை வகையே கொச்சகக் கலியென
நூல்நவில் புலவர் நுவன்றறைந் தனரே.

என்—எனின். கொச்சகக்கலியாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) தரவும் போக்கும் இடையிடை மிடைந்தும் என்பது—தரவாகிய உறுப்புஞ் சுரிதகமாகிய உறுப்பு முதலு முடிவும் வருதலின்றி இடையிடைவந்து தோன்றியு மென்றவாறு.

உம்மையால் இயற்கை வழாமற் றோன்றியு மென்று கொள்ளப்படும்.

ஐஞ்சீரடுக்கியும் என்பது—ஐஞ்சீரடி பலவந்தும் என்றவாறு.

உம்மையால் வாராதுமென்று கொள்க.

ஆறுமெய்பெற்றும் என்பது—தரவு தாழிசை தனிச்சொல் சுரிதகஞ் சொற்சீரடி முடுகியலடி யென்னும் ஆறுறுப்பினையும் பெற்றும் என்றவாறு.

உம்மையாற் பெறுதுமென்று கொள்க.

வெண்பாவியலான் வெளிப்படத் தோன்றும் பாநிலைவகை என்பது—மேற் சொல்லப்பட்ட வுறுப்புக்களை யுடைத்தாகியும் இலதாகியும் வெண்பாவி னியல்பினாற் புலப்படத் தோன்றும் பாநிலைவகை யென்றவாறு.

புலப்படத் தோன்றுதலாவது ஏனையுறுப்புக்களில் வெண்பாமிகுதல். இன்னும் அதனானே பிற பாவடிகளும் வந்து வெண்பாவியலான் முடிதலுங் கொள்க.

---

(பாடம்) * பாட்டிடை.

**கொச்சகக்... அறைந்தனரே** என்பது—கொச்சகக் கலிப்பாவென்று இலக்கணமறிந்த புலவர் கூறினரென்றவாறு.

ஆறுமெய் பெற்றும் என்பதற்கு அராகமென்னும் உறுப்பைக்கூட்டி முடுகியலென்னும் உறுப்பைக் கழித்து உரைப்பதும் ஒன்று.

உதாரணம்

குறிஞ்சிக் கலியுள்,

"காமர் கடும்புனல் கலந்தெம்மோ டாடுவாள்
தாமரைக் கண்புதைத் தஞ்சித் தளர்ந்ததனோ டொழுகலான்
நீள்நாக நறுந்தண்டார் தயங்கப்பாய்ந் தருளினாற்
பூணாக முறத்தழீஇப் போதந்தான் அகனகலம்
வருமுலை புணர்ந்தன என்பதனால் என்தோழி
அருமழை தரல்வேண்டில் தருகிற்கும் பெருமையளே ;

இது தரவு :

இதனுள் இரண்டாமடி ஐஞ்சீரான் வந்தது.

அவனுந்தான், ஏனல் இதணத் தகிற்புகை யுண்டியங்கும்
வானூர் மதியம் வரைசேரின் அவ்வரைத்
தேனின் இறாலென ஏணி இழைத்திருக்குங்
கானகல் நாடன் மகன் ;

இதனுள் முதற்கணின்றது கூன்.

சிறுகுடி யீரே சிறுகுடி யீரே
வள்ளிகீழ் வீழா வரைமிசைத் தேன்தொடா
கொல்லை குரல்வாங்கி ஈனா மலைவாழ்நர்
அல்ல புரிந்தொழுக லான் ;

இதன் முதல் ஆசிரியவடி.

காந்தள் கடிகமழுங் கண்வாங் கிருஞ்சிலம்பின்
வாங்கமை மென்தோட் குறவர் மடமகளிர்
தாம்பிழையார் கேள்வர்த் தொழுதெழலால் தம்மையருந்
தாம்பிழையார் தாந்தொடுத்த கோல் ;

இவை மூன்றுங் கொச்சகம்.

எனவாங்கு,

தனிச்சொல்.

அறத்தொடு நின்றேனைக் கண்டு திறப்பட
என்னையர்க் குய்த்துரைத்தாள் யாய் ;

இது வெள்ளைச் சுரிதகமாகி இடை வந்தது.

அவரும், தெரிகணை நோக்கிச் சிலைநோக்கிக் கண்சேந்
தொருபக லெல்லாம் உருத்தெழுந் தாறி
இருவர்கட் குற்றமும் இல்லையால் என்று
தெருமந்து சாய்த்தார் தலை ;

தெரியிழாய் நீயுநின் கேளும் புணர
வரையுறை தெய்வம் உவப்ப உவந்து
குரவை தழீ இயாம் ஆடக் குரவையுட்
கொண்டு நிலைபாடிக் காண் ;

இவை யிரண்டுங் கொச்சகம்.

நல்லாய்

தனிச்சொல்.

நன்னாள் தலைவரும் எல்லை நமர்மலைத்
தந்நாண்தாந் தாங்குவா ரென்னோற் றனர்கொல் ;

இது பேரெண்.

புனவேங்கைத் தாதுறைக்கும் பொன்னறை முன்றில்
நனவிற் புணர்ச்சி நடக்குமாம் அன்றோ
நனவிற் புணர்ச்சி நடக்கலும் ஆங்கே
கனவிற் புணர்ச்சி கடிதுமாம் அன்றோ ;

விண்டோய்கன் னாடனும் நீயும் வதுவையுட்
பண்டறியா தீர்போல் படர்கிற்பீர் மற்கொலோ ;

பண்டறியா தீர்போல் படர்ந்தீர் பழங்கேண்மை
கண்டறியா தேன்போற் கரக்கிற்பென் மற்கொலோ ;

இவை யிரண்டுந் தாழிசை.

மைதவழ் வெற்பன் மணஅணி காணமற்
கையாற் புதைபெறூஉங் கண்களும் கண்களோ ;*

இது பேரெண்.

என்னைமன், நின்கண்ணாற் காண்பென்மன் யான்
நெய்தல் இதழுண்கண், நின்கண்ணா கென்கண்மன் ;

இதுவுங் கொச்சகம்.

எனவாங்கு,

தனிச்சொல்.

நெறியறி செறிகுறி புரிதிரி பறியா வறிவனை முந்துறீஇத்
தகைமிகு தொகைவகை யறியுஞ் சான்றவர் இனமாக
வேய்புரை மென்றோட் பசலையும் அம்பலும்
மாயப் புணர்ச்சியும் எல்லாம் உடனீங்கச்
சேயுயர் வெற்பனும் வந்தனன்
பூவெழில் உண்கணும் பொலிகமா இனியே." (கலித். ௩௯)

இது சுரிதகம்.

இதனுள் முதலடி அறுசீர் முடுகியல்; இரண்டாவது ஐஞ்சீர் முடுகியல்.

---

(பாடம்) * கண்ணுங்கண் ணாகுமோ.

இவ்வாறு வருவன கொச்சகக்கலிப்பா வெனப்படும்.

ஒத்தாழிசைக்குத் தாழிசையாகிய உறுப்பு மிக்குவந்தாற்போலக் கொச்சகக் கலிக்கும் வெண்பாவாகிய உறுப்பு மிக்குவரும் என்று கொள்க.

இனி ஈண்டோதப்பட்ட உறுப்புக்கள் குறைந்தும் மயங்கியும் மிக்கும் வரப்பெறும். அவை கலித்தொகையுட் கண்டுகொள்க. (௧௪௮)

சரு௮. கூற்றும் மாற்றமும் இடையிடை மிடைந்தும்
போக்கின்* றாகல் உறழ்கலிக் கியல்பே.

இது உறழ்கலி யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) உறழ்கலிப்பாவிற்கு இலக்கணங் கூற்று மாற்றமும் விரவிவந்து சுரிதகமின்றி முடிதலென்றவாறு.

இதனைக் கொச்சகக்கலியின்பின் வைத்தமையான் அக்கொச்சக வுறுப்பினைப்பன இதற்கு உறுப்பாகக் கொள்ளப்படும்.

உதாரணம்

"யாரிவன் எங்கூந்தல் கொள்வான் இதுவுமோர்
ஊராண்மைக் கொத்த படிறுடைத் தெம்மனை
வாரல்நீ வந்தாங்கே மாறு;

இது தலைமகள் கூற்று.

என்னிவை ஒருயிர்ப் புள்ளின் இருதலை யுள்ளொன்று
போரெதிர்ந் தற்றாப் புலவல்நீ கூறினென்
ஆருயிர் நிற்குமா றியாது;

இது தலைவன் கூற்று.

ஏஎ, தெளிந்தேம்யாங் காயாதி எல்லாம்வல் எல்லா†
பெருங்காட்டுக் கொற்றிக்குப் பேய்நொடித் தாங்கு
வருந்தல்நின் வஞ்ச முரைத்து;

இது தலைமகள் கூற்று.

மருந்தின்று, மன்னவன் சீறில் தவறுண்டோ நீ நயந்த
இன்னகை தீதோ இலேன்;

இது தலைமகன் கூற்று.

---

* 'போக்கின்று' எனவே தரவு பெறுதலும் பாட்டிடை மிடைதலும், ஐஞ்சீரடுக்கலும், ஆறு மெய்பெறுதலும், பாமயங்கிவருதலும், அம்போதரங்கத்திற்கு ஓதிய அளவை பெறுதலும் எல்லாம் வெண்கலிப் பாட்டிற்குப் போல மேனின்ற அதிகாரத்தாற் பெறப்படுவதாயிற்று. (தொல். பொருள். ௪௬௮. பேரா.)

(பாடம்) † ஏடா.

மாண மறந்துள்ளா நாணிலிக் கிப்போர்
புறஞ்சாய்ந்து காண்டைப்பாய் நெஞ்சே உறழ்ந்திவனைப்
பொய்ப்ப விடேஎம் எனநெருங்கில் தப்பினேன்
என்றடி சேர்தலும் உண்டு.'' (கலி. அக)

இப்பாட்டுச் சுரிதகமின்றி வந்தவாறு கண்டுகொள்க.

எற்றிற்கு? இறுதியின்கண் வந்தது சுரிதக மாகாதோவெனின், சுரிதகமாகாது. சுரிதகமாவது ஆதிப்பாட்டினும் இடைநிலைப்பாட்டினு முள்ள பொருளைத் தொகுத்து முடிப்பது. இஃது அன்ன தன்றென்க. (கசஅ)

சஅக. ஆசிரியப் பாட்டின் அளவிற் கெல்லை
ஆயிர மாகும் இழிபுமுன் றடியே.

என்—எனின். ஆசிரியப்பாவிற்கு எல்லை கூறுதல் நுதலிற்று.

(இ - ள்) ஆசிரியப்பாவின் அளவிற்கு எல்லையாவது: சுருங்கினது மூன்றடி; பெருமை ஆயிரமடியாக இடைப்பட்டன எல்லா வடியானும் வரப்பெறும என்றவாறு.

சுருங்கின பாட்டிற்கு உதாரண மேற் காட்டப்பட்டன. பெரிய பாட்டு பத்துப்பாட்டினுள்ளும் சிலப்பதிகாரத்துள்ளும், மணிமேகலையுள்ளுங் கண்டுகொள்க. 'ஆசிரிய நடைத்தே வஞ்சி' (செய்யுளியல்-௧0அ) என்றதனன் வஞ்சிப்பாவிற்கும் ஆயிரமடிப் பெருமையாகக் கொள்ளப்படும். (௧௫0)

சகூ0. நெடுவெண் பாட்டே முந்நான் கடித்தே*
குறுவெண் பாட்டிற் களவேழ்† சீரே.

என்—எனின். வெண்பாவிற்கு அடிவரையறை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) நெடுவெண்பாட்டிற்கு எல்லை பன்னிரண்டடி. குறுவெண்பாட்டிற்கு அடி அளவடியுஞ் சிந்தடியுமாகிய இரண்டடியும் என்றவாறு.

எனவே இடையுள்ள அடிகளெல்லாம் உரிய உதாரண மேற் காட்டப்பட்டது. (௧௫௧)

சகூக. அங்கதப் பாட்டள வவற்றோ டொக்கும்.‡

என்—எனின். அங்கதப்பாட்டிற்கு அளவுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அங்கதப் பாட்டாகிய வெண்பாவிற்கு எல்லை சிறுமை இரண்டடி, பெருமை பன்னிரண்டடி என்றவாறு.

உதாரணம் சில காட்டப்பட்டன; ஏனைய வந்தவழிக் கண்டு கொள்க. (௧௫௨)

(பாடம்) * முந்நாலடித்தே. † பாட்டின் அளவெழு.
‡ பாட்டவற்றளவோடொக்கும்.

௪௬௨. கலிவெண் பாட்டே கைக்கிளைச் செய்யுள்*
செவியறி வாயுறை புறநிலை என்றிவை
தொகைநிலை மரபின்† அடியில என்ப.

என்—எனின். அடியளவு வரையறையில்லாத செய்யுள் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) கலிவெண் பாட்டும், கைக்கிளைப் பொருளைப் பற்றிய பாவும், செவியுறை வாழ்த்து, வாயுறைவாழ்த்து, புறநிலை வாழ்த்து என்ற பொருண்மைக்கண் வரும் வெண்பாக்களும் அளவு வரையறுக்கப்படா. பொருள் முடியுங்காறும் வேண்டிய அடிவரப்பெறும் என்றவாறு. (௧௫௩)

௪௬௩. புறநிலை வாயுறை செவியறி வுறூஉவெனத்
திறநிலை மூன்றுந்‡ திண்ணிதில் தெரியின்
வெண்பா இயலினும் ஆசிரிய இயலினும்
பண்புற முடியும் பாவின என்ப.

என்—எனின். மேலனவற்றுட் சிலபொருட்குரிய வேறுபாடுணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) புறநிலை வாழ்த்தும் வாயுறைவாழ்த்துஞ் செவியறிவுறூஉவும் மருட்பாவினால் வரப்பெறும் என்றவாறு.

எனவே மருட்பா நான்கு பொருளினல்லது வரப்பெறாதாயிற்று.

உதாரணம் வந்தவழிக் காண்க. (௧௫௪)

௪௬௪. பரிபா டல்லே§
நாலீ ரைம்ப துயர்படி யாக
ஐயைந் தாகும் இழிபடிக் கெல்லை.

என்—எனின். பரிபாடற்கு அடிவரையறை உணர்த்துதல் நுதலிற்று.

---

* 'கைக்கிளைச் செய்யுள்' என்பது, கைக்கிளைப்பொருட்கு உரித்தாய் வரும் 'மருட்பா என்றவாறு. அஃதேல், ஈண்டோதிய கலிவெண்பாட்டு மொழிந்த கைக்கிளைப்பொருள்மேல் வாராவோ எனின்,—வரும் என்பது. (தொல். பொருள். ௪௭௨. பேரா.)

(பாடம்) † தொகுநிலை அளவின்.

‡ 'திறநிலை மூன்று' என்றான், முற்கூறியன எல்லாம் அகத்திணையாக லின். இவை புறத்திணையுள்ளல்லது வாரா என்றற்கென்பது. 'திண்ணி திற்றெரியின்' என்பது இவை மூன்றும் கைக்கிளை மருட்பாப் போல ஆண்பாற் கைக்கிளையும் பெண்பாற் கைக்கிளையுமாகி அகனும் புறனும் பற்றி வாராது ஒருதலையாகவே புறத்திணையென்று தெரியப்படுவன என்றவாறு. (தொல். பொருள். ௪௭௩. பேரா.)

(பாடம்) § பரிபாட் டெல்லை.

(இ - ள்.) பரிபாட்டிற் செய்யுள் நானூறடி யுயர்பாக இருபத்தைந்தடி இழிபாக வரும் என்றவாறு.

எனவே, இடையெல்லா அடியானும் வரப்பெறும் என்றவாறு.

கலிப்பாவினுள் ஒத்தாழிசைக்கு அளவு மேற்கூறப்பட்டது.

கலிவெண்பாட்டுக்கு வரையறை யில்லை யெனப்பட்டது.

கொச்சகக்கலிக்கு வரையறை கூறாமையாற் பொருண் முடியுங்காறும் வரப்பெறும் என்று கொள்க. அவ்வழிப் பலவுறுப்பாகி வருதலின் அதற்குறுப்பாகிய செய்யுளளவிற்றுதல் வேண்டும்.

உறழ்கலியுங் கொச்சகக் கலிப்பாற்படும். (௧௩௫)

௪௬௫. அளவியல் வகையே அனைவகைப் படுமே.

என்—எனின். மேற்சொல்லப்பட்டவை தொகுத்துணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) இவ்வதிகாரத்துள் ஈண்டு அதிகரிக்கப்பட்ட அளவியல் ஈண்டுச் சொன்ன வகைபெறும் என்றவாறு. (௧௩௬)

௪௬௬. எழுநிலத் தெழுந்த செய்யுள் தெரியின்
அடிவரை யில்லன ஆறென மொழிப.

என்—எனின். அடிவரையறை யில்லாதன வரையறுத்துணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) எழுநிலமாவன பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல் என்பன. அவற்றுட் பாட்டொழிந்த ஆறும் அடிவரையில வென்றவாறு. (௧௩௭)

௪௬௭. அவைதாம்
நூலி னான உரையி னான
நொடியொடு புணர்ந்த* பிசியி னான
ஏது நுதலிய முதுமொழி யான
மறைமொழி கிளந்த மந்திரத் தான
கூற்றிடை வைத்த குறிப்பி னான.

என்—எனின். மேற்சொல்லப்பட்ட அறுவகையுமாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) வாய்மொழியெனினும் மந்திரமெனினும் ஒக்கும். அங்கதமாவது 'செம்பொருள் கரந்ததெனா இருவகைத்தே'

---

* 'நொடியொடு புணர்ந்த' என்ற மிகையான் இதுவன்றி இது போல்வது பண்ணத்தியென்பதும் ஒன்று உண்டென்பது கொள்க.
(தொல். பொருள். ௪௭௭. பேரா.)

(செய்யுளியல்-௧௨0) என்றதனாற் கரந்தவங்கதமெனினுஞ் சொற் குறிப்பெனினு மொக்கும். அவையாமாறு வருகின்ற சூத்திரத் தாற் காட்டுதும். (௧௬௮)

௪௬௯. அவற்றுள்,

நூலெனப் படுவது நவலுங் காலை
முதலும் முடிவும் மாறுகோ ளின்றித்
தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி
உண்ணின் றகன்ற உரையொடு புணர்ந்து*
நுண்ணிதின் விளக்கல் அதுவதன் பண்பே.

என்—எனின். நூலாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) நூலென்று சொல்லப்பட்டது எடுத்துக் கொண்ட பொருளொடுமுடிக்கும் பொருண்மை மாறுபடாமற் கருதியபொருளைத் தொகையானும் வகையானுங் காட்டி யதனகத்து நின்றும் விரிந்தவுரையோடு பொருந்த முடைத்தாகி நுண்ணியதாகி விளக்குவது நூற்கியல்பு என்றவாறு.

அகன்றவுரையோடு பொருந்துத லாவது சொல்லாத பொருண்மையெல்லாம் விரிக்கவேண்டியவழி அதற்கெல்லாம் இடனுண்டாதல். (௧௬௯)

௪௬௰. அதுவே தானும் ஒருநால் வகைத்தே.

என்—எனின். நூல் பாகுபடுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) மேற்சொல்லப்பட்ட நூல் நான்குவகையை யுடைத்து என்றவாறு.

அவையாமாறு முன்னர்க் கூறப்படும். (௧௭0)

௪௭0. ஒருபொருள் நுதலிய சூத்திரத் தானும்
இனமொழி கிளந்த ஓத்தி னானும்
பொதுமொழி கிளந்த படலத் தானும்
மூன்றுறுப் படக்கிய பிண்டத் தானும் என்று
ஆங்கனை மரபின் இயலும் என்ப.

என்—எனின். மேல் தொகை கொடுக்கப்பட்ட நான்குமாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஒருபொருள் நுதலிய சூத்திரத்தானும் என்பது—ஆசிரியன் யாதானு மொருபொருளைக் குறித்துக்கூறுஞ் சூத்திரத் தானும் என்றவாறு.

(பாடம்) * பொருந்தி.

இனமொழி கிளந்த ஒத்தினானும் என்பது—இனமாகிய பொருள்கள் சொல்லப்படும் ஒத்தினானும் என்றவாறு.

பொதுமொழி கிளந்த படலத்தானும் என்பது—மேற் சொல்லப்பட்ட இனங்கள் பலவற்றையுங் கூறப்படும் படலத்தானும் என்றவாறு.

மூன்றுறுப் படக்கிய பிண்டத்தானும் என்பது—இம்மூன்றனையும் உறுப்பாக அடக்கிய பிண்டத்தானும் என்றவாறு.

ஆங்கனை மரபின் இயலு மென்ப என்பது — அம்மரபினான் இயலும் நூலென்ப என்றவாறு.

அவற்றிற்கு இலக்கண முன்னர்க் கூறப்படும். (௪௬௪)

௪௭௧. அவற்றுள்,
சூத்திரம் தானே
ஆடி நிழலின் அறியத் தோன்றி
நாடுதல் இன்றிப் பொருள்நனி விளங்க
யாப்பினுள் தோன்ற யாத்தமைப் பதுவே.

என்—எனின். சூத்திரத்திற்கு இலக்கண முணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்.) சூத்திரமாவது கண்ணாடியி னிழற்போல விளங்கத்தோன்றி ஆராயாமற் பொருள் நனிவிளங்குமாறு யாப்பின் கண்ணே தோன்ற யாப்ப தென்றவாறு.

ஆடிநிழலி னறியத் தோன்றுவதாவது—சூத்திரம் படித்த வளவிலே அதனாற் சொல்லப்படுகின்ற பொருள் ஒருங்கு தோற்றல்.

நாடுதலின்றிப் பொருணனி விளங்க யாத்தலாவது—அதன் கண் யாக்கப்பட்ட சொற்குப் பொருள் ஆராயாமற் புலப்படத் தோன்றுமாறு யாத்தல்.

உதாரணம்

"வேற்றுமை தாமே ஏழென மொழிப
விளிகொள் வதன்கண் விளியோ டெட்டே."
(தொல். வேற்றுமையியல். ௧ )

என்றவழி யாப்பின்கண்ணே பொருடோன்ற யாத்தவாறுங் கண்ணாடி நிழற்போலக் கருதிய பொருளுந் தோற்றியவாறுங் கண்டுகொள்க.

௪௭௨. நேரின மணியை* நிரல்பட வைத்தாங்கு
ஓரினப் பொருளை ஒருவழி வைப்பது
ஓத்தென மொழிப உயர்மொழிப் புலவர்.

என்—எனின். ஒத்திற்கு இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஒத்தவினத்ததாகிய மணியை ஒருங்கே கோவைப்பட வைத்தாற்போல ஓரோரினமாக வரும்பொருளை ஓரிடத்தே சேரவைத்தல் ஒத்தென்று பெயராம் என்றவாறு.

எனவே அவ்வினமாகிச் சேர்ந்தநிலைக்கு ஒத்தென்று பெயராயிற்று. அது 'வேற்றுமையோத்து' என்பதனை அறிக. (௧௬௩)

௪௭௩. ஒருநெறி இன்றி விரவிய பொருளால்
பொதுமொழி தொடரின் அது படலம் ஆகும்.

என்—எனின். படலத்திற்கு இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஓரினமாகிய நெறியின்றிப் பல நெறியான் வருவன பொருளானே பொதுமொழியாற் றொடர்வுபடின அது படலமெனப் பெயராம் என்றவாறு.

அது கிளவியாக்க முதலாக எச்சவியல் ஈறாகக் கிடந்த ஒன்பதோத்தினும் வேறுபாடுடையவாயினும், சொல்லிலக்கணம் உணர்த்தினமையாற் சொல்லதிகாரம் எனப் பெயர் பெறுதல்.

அதிகாரம் எனினும் படலமெனினும் ஒக்கும். (௧௬௪)

௪௭௪. மூன்றுறுப் படக்கிய தன்மைத் தாயின்
தோன்றுமொழிப் புலவர் அது பிண்டம்† என்ப.

என்—எனின். பிண்டமென்பது உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) மூன்று றுப்பினையும் அடக்கின தன்மைத்தாயின் அதனைப் பிண்டமென்று சொல்லுவர் என்றவாறு.

மூன்றுறுப்படக்குதலாவது சூத்திரம் பலவுண்டாகி ஒத்தும் படலமுமின்றாகி வரினும் ஒத்துப்பலவுண்டாகிப் படலமின்றிவரினும், படலம் பலவாகிவரினும், அதற்குப் பிண்டமென்று பெயராம் என்றவாறு.

---

* 'நேரினமணி' யெனவே ஒரு சாதியாயினும் தம்மின் ஒத்தனவே கூறல் வேண்டும் என்பதாம். வேற்றுமை ஒத்தும் வேற்றுமைமயங்கியலும் விளிமரபும் என மூன்றன் பொருளும் வேற்றுமையென ஓரினமென்று ஓரோத்தாக வையாது வேறுவேறு வைக்கப்படும் என்பது. (தொல். பொருள். ௪௮௨ பேரா.)

† 'அது பிண்டம்' என்ப என்றதனால் பிண்டத்தினையும் அடக்கி நிற்பது வேறு பிண்டம் உளதென்பது. அது முதனூலாகிய அகத்தியமே போலும். என்னை? அஃது இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத்தமிழ் என்னும் மூன்று பிண்டத்தினையும் அடக்கி நிற்றலின். (தொல். பொருள். ௪௮௪. பேரா.)

அவற்றுட் சூத்திரத்தாற் பிண்டமாயிற்று இறையனார் களவியல். ஒத்தினாற் பிண்டமாயிற்று பன்னிருப்படலம். அதிகாரத்தாற் பிண்டமாயிற்று இந்நூலென்று கொள்க. இவற்றைச் சிறுநூல் இடைநூல் பெருநூல் எனப்படும். (௪௬௫)

௪௭௫. பாட்டிடை வைத்த குறிப்பி னானும் *
பாவின் றெழுந்த கிளவி யானும்
பொருள்மர பில்லாப் † பொய்ம்மொழி யானும்
பொருளொடு புணர்ந்த நகைமொழி யானும் என்று
உரைவகை நடையே நான்கென மொழிப.

என்—எனின். உரை பாகுபடுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) பாட்டிடை வைத்த குறிப்பாவது—பாட்டினிடை வைக்கப்பட்ட பொருட்குறிப்பினானும் உரையாம் என்றவாறு.

பலசொல் தொடர்ந்து பொருள்காட்டுவனவற்றுள் ஓசைதழீஇயவற்றைப் பாட்டென்றார். ஓசையின்றிச் செய்யுட் டன்மைத்தாய் வருவது நூலெனப்பட்டது.

அவ்வகையுமன்றி வரும் உரைத்திறன் ஈண்டு உரையெனப்பட்டது.

அவைவருமாறு:

'ஊர்க்கால் நிவந்த பொதும்பருள்' என்னுங் குறிஞ்சிக்கலியுள்,

"இவளைச் சொல்லாடிக் காண்பேன் தகைத்து" (கலித். ௬௰)
என்றது உரைக்குறிப்பு.

'ஒருஉ, கொடியியல் நல்லார்' என்னும் மருதக்கலியுள்,

"கடியர் ‡ தமக் கியார்சொலத் தக்கார் § மற்று" (கலித். ௮௮)
என்றதுமது.

சிலப்பதிகாரத்து ஆய்ச்சியர் குரவையுள்,

"கயலெழுதிய இமயநெற்றியின்
அயலெழுதிய புலியும் வில்லும்
நாவலந்தண் பொழின்மன்னர்
ஏவல் கேட்பப் பார் அரசாண்ட
மாலை வெண்குடைப் பாண்டியன் கோயிலுட்
காலை முரசம் கனைகுரல் இயம்புமாதலின்
நெய்ம்முறை நமக்கின்றாகுமென

* 'பாட்டிடை வைத்த குறிப்பினானும்' என்பது ஒரு பாட்டு இடையிடை கொண்டு நிற்கும் குறிப்பினான் வருவன வெனப்படும்; என்னை? பாட்டு வருவது சிறுபான்மையாகலின். அவை தகடூர் யாத்திரை போல்வன. (தொல். பொருள். ௪௮௫ பேரா.)

(பாடம்) † பொருளொடு புணராப். ‡ கடிய. § தக்கரா.

ஐயைதன் மகளைக்கூஉய்க்
கடைகயிறு மத்துங்கொண்
டிடைமுதுமகள் வந்துதோன்றுமன்..'' (சிலப், ஆய்ச்சியர் குரவை.

என்றது மது.

பாவின்றெழுந்த கிளவியானும்என்பது—பாக்களை யொழியத் தோற்றிய சொல்வகையானும் உரையாம் என்றவாறு.

அஃதாவது, வழக்கின்கண் ஒரு பொருளைக் குறித்து வினவுவாருஞ் செப்புவாருங் கூறுங் கூற்று.

அதுவும் இலக்கணம் பிழையாமற் கூறவேண்டுதலானும் ஒரு பொருளைக் குறித்துச் செய்யப் படுதலானுஞ் செய்யுளாம் இதனைக்குறித் தன்றே 'செப்பும் வினாவும் வழாஅ லோம்பல்' (தொல். கிளவியாக்கம். கங) என்பது முதலாகக் கூறப்பட்ட இலக்கணமெல்லாம் என்று கொள்க.

பொருள்மரபில்லாப் பொய்ம்மொழியானும் என்பது—பொருளியல்பில்லாப் பொய்ம்மொழியானும் உரைவரும் என்றவாறு.

பொருளொடு புணர்ந்த நகைமொழியானும் என்பது—பொருளைப் பொருந்திய நகைவழிமொழியாய் வருகின்றது என்றவாறு.

நகைமொழியாவது—மேற்சொல்லப்பட்ட உரை பொருந்தாதென இகழ்ந்து கூறுதல். அவ்விகழ்ச்சியின் பின்னர்ப் பொருளுணர்த்தும் உரை பிறக்குமாதலின் பொருளொடு புணர்ந்த நகைமொழியானும் உரை வரு மென்றார்.

என்று உரைவகை நடையே நான்கென மொழிப என்பது—இவ்வகையினானுரை நான்கு வகைப்படும் என்றவாறு. (கசசு)

சஎசு. அதுவே தானும் இருவகைத் தாகும்.

(இ - ள்.) மேற்சொல்லப்பட்ட உரை இரண்டு வகைப் படும் என்றவாறு.

அது மைந்தர்க்கு உரைப்பனவும் மகளிர்க்கு உரைப்பனவுமாம். (கசஎ)

சஎஎ. ஒன்றே* மற்றுஞ் செவிலிக் குரித்தே
ஒன்றே யார்க்கும் வரைநிலை யின்றே.

என்—எனின். மேல் இருவகைப்படும் என்ற உரையை யுரைத் தற்குரியாரை உணர்த்துதல் நுதலிற்று.

---

* தலைமகளை வற்புறுத்தும் செவிலியர் புனைந்துரைத்து நகுவித்துப் பொழுது போக்குதற்குரியர் என்பது இதன் கருத்து............'மற்றும்' என்றதனன் அவையன்றி வருகின்ற பிசியும் செவிலியர்க்கு உரித்தென்பது கொள்க. (தொல். பொருள். சஅஎ. பேரா.)

(இ - ள்.) மகளிர்க்கு உரைக்குமுரை செவிலிக்குரித்து. மைந்தர்க்கு உரைக்குமுரை யெல்லார்க்கு முரித்தென்றவாறு.

செவிலி இலக்கணத்தின் உரைக்கின்றவுரையும், பாட்டிலுரைக் கின்றவுரையும் கூறுவளோவெனின், அவ்விடங்களில் வரும் உரை பொருள்பற்றி வருதலின் அப்பொருள் கூறுவளென்க.

அன்றியும் 'அதுவே தானும்' என்பது பொருளொடு புணர்ந்த நகை மொழியைச் சுட்டிநிற்குக்கி அம் மொழி யிரண்டு கூறுபடுமெனப் பொரு ளுரைப்பினும் அமையும். (௧௬௮)

௧௭௮. ஒப்பொடு புணர்ந்த உவமத் தானுந்
தோன்றுவது கிளந்த துணிவி னானும்
என்றிரு வகைத்தே பிசிநிலை வகையே*.

என்—எனின். பிசியாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஒப்போடே புணர்ந்த உவமை நிலையானும் பிசி யாம்; தோன்றுவதனைச் சொன்ன துணிவினானும் பிசியாம் என்றவாறு.

'அச்சுப்போலே பூப்பூக்கும். அமலேயென்னக் காய்காய்க்கும்' என் பது பிசி. இது உவமைபற்றி வந்தது. (௧௬௯)

௧௭௯. நுண்மையுஞ் சுருக்க மும் ஒளியு முடைமையும்
மென்மையும்† என்றிவை விளங்கத் தோன்றிக்
குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்
ஏது நுதலிய முதுமொழி யென்ப.

என்—எனின். முதுமொழி யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) நுண்மை விளங்கவுஞ் சுருக்கம் விளங்கவும் ஒளியுடைமை விளங்கவும் மென்மை விளங்கவுமென்று இன்னோ ரன்ன விளங்கவும் தோன்றிக் கருதினபொருளை முடித்தற்கு வரும் ஏதுவைக் குறித்தன முதுமொழியென்று சொல்லுவர் என்றவாறு. (௧௭௦)

௧௮௦. நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளக்கும்‡
மறைமொழி தானே §மந்திரம் என்ப.

என்—எனின். மந்திரம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(பாடம்) * பிசிவகை நிலையே.

† ஒளியுடைமையும் எண்மையும். ‡ கிளந்த.

§ தானே என்று பிரித்தான் இவை தமிழ் மந்திரம் என்றற்கும் பாட் டாகி அங்கதம் எனப்படுவனவும் உள. அவை நீக்குதற்கும் என உணர்க. (தொல். பொருள். ௪௮௦. பேரா.)

(இ - ள்.) நிறைந்த மொழியையுடைய மாந்தர் தமதாணையாற் சொல்லப்பட்ட மறைந்தசொல் முந்திரமாவ தென்றவாறு.

அது வல்லார்வாய்க் கேட்டுணர்க. (௪௭௧)

௪௭௧. எழுத்தொடுஞ் சொல்லொடும் புணரா தாகிப்
பொருட்புறத் ததுவே குறிப்பு மொழியே.

என்—எனின். குறிப்புமொழி ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) எழுத்தொடும் சொல்லொடும் புணராதாகிச் சொல்லினு னுணரப்படும பொருளின புறத்ததுவே குறிப்பு மொழி என்றவாறு.

மேல் அங்கதமென்று சொல்லி ஈண்டுக் குறிப்புமொழி யென்றதனான் இச்சொல் வசைகுறித்து வருமென்றுகொள்க.

புகழ்குறித்து வந்தாற் குற்றமென்னையெனின், அதனை வெளிப்படக் கூறக் கேட்டார்க்குந் தனக்கும் இன்பம் பயத்தலிற் குறிப்பினாற் கூறல் வேண்டுவது வசையென்று கொள்ளப்படும். (௪௭௨)

௪௭௨. பாட்டிடைக்* கலந்த பொருள வாகிப்
பாட்டின் இயல பண்ணத் திய்யே.†

என்—எனின். பண்ணத்தி யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) மேல் இத்துணையும் பாவும் பாவின்றி வழங்குவனவும் எடுத்தோதினார். இனிப் பிறநூலாசிரியர் விரித்துக் கூறின இசைநூலின் பாவினமாமாறு உணர்த்துதலின் இது.... பாட்டிடைக் கலந்த பொருளவாகி என்பது—பாட்டின்கட் கலந்த பொருளையுடைத்தாகி யென்றவாறு.

எனவே, அவ்வடி பாவிற்குரிய பொருள் கொள்ளப்படும்.

பாட்டினியல பண்ணத்திய்யே என்பது—பாட்டுக்களின் இயல்பையுடையவாம் பண்ணைத் தோற்றுவிக்குஞ் செய்யுட்கள் என்றவாறு.

பண்ணைத் தோற்றுவித்தலாற் பண்ணத்தியென்றார்.

அவையாவன சிற்றிசையும் பேரிசையு முதலாக இசைத்தமிழில் ஓதப்படுவன. அவையாமாறு வருகின்ற சூத்திரத்தாற் கூறுப. (௪௭௩)

* மெய்வழக்கல்லாத புறவழக்கினைப் பண்ணத்தி என்ப. இஃது எழுதும் பயிற்சி இல்லாத புறஉறுப்புப் பொருள்களைப் பண்ணத்தி என்ப என்பது. அவையாவன: நாடகச் செய்யுளாகிய பாட்டும் மடையும் வஞ்சிப்பாட்டும் மோதிரப்பாட்டும் கடகண்டும் முதலாயின.

(தொல். பொருள். ௪௯௨. பேரா.)

(பாடம்) † பண்ணத்தி இயல்பே.

௪௮௫. அதுவே தானும் பிசியொடு மானும்.

என்—எனின். மேற்சொல்லப்பட்டதனுள் ஓர் உதாரணம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) மேற்சொல்லப்பட்ட பண்ணத்தி பிசியோ டொத்த அளவிற்று என்றவாறு.

பிசியென்பது இரண்டடி அளவின்கண்ணே வருவதாதலின் இதுவும் இரண்டடியான் வருமென்று கொள்ளப்படும்.

உதாரணம்

"கொன்றை வேய்ந்த செல்வன் அடியை*
என்றும் ஏத்தித் தொழுவோம் நாமே."†

இது பிசியோடு ஒத்தவளவிற்றுகிப் பாலையாழென்னும் பண்ணிற்கு இலக்கணப் பாட்டாகி வந்தமையிற் பண்ணத்தியாயிற்று. பிறவு மன்ன. (௧௭௪)

௪௮௬. அடிநிமிர் கிளவி ஈரா றாகும்
அடியிகந்து வரினுங் கடிவரை யின்றே.

என்—எனின். இதுவும் பண்ணத்தி பாகுபடுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

பண்ணத்தி யெனினும் பாவினமெனினு மொக்கும்.

'நாற்சீர் கொண்ட தடியெனப் படுமே' (செய்யுளியல். ௩௧) யென்றமையான் அடியென்பது நாற்சீரான் வருவதென்று கொள்க.

(இ - ள்.) நாற்சீரடியின் மிக்குவரும் பாட்டுப் பன்னிரண்டும் அவ்வழி அவ்வடியின் வேறுபட்டு வருவனவுங் கொள்ளப் படும் என்றவாறு.

இதனுற் சொல்லியது இருசீரடி முதலிய எல்லாவடிகளானு மூன்றடிச் சிறுமையாக ஏறிவரும் பாவினம் என்றவாறும்.

பன்னிரண்டாவன ஆசிரியம் வஞ்சி வெண்பா கலியெனச் சொல்லப்பட்ட நான்கு பாவினோடுந் தாழிசை துறை விருத்தமென்னு மூன்றினத்தையும் உறழப் பன்னிரண்டாம்.

அவற்றுள் தாழிசையாவது :—ஆசிரியத்தாழிசை, வஞ்சித்தாழிசை, வெண்டாழிசை, கலித்தாழிசை என நான்காம்.

துறையாவது :—ஆசிரியத்துறை, வஞ்சித்துறை, வெண்டுறை, கலித்துறை என நான்காம்.

விருத்தமாவது :—ஆசிரியவிருத்தம், வஞ்சிவிருத்தம், வெளிவிருத்தம், கலிவிருத்தம் என நான்காம்.

(பாடம்) * அடியிணே. † யாமே.

அவற்றுள் ஆசிரியத் தாழிசையாவது மூன்றடி யொத்துவருவது.

"நீடற்க வினையென்று நெஞ்சின் உள்ளி
நிறைமலர்சாந் தொடுபுகையும் நீரு மேந்தி ‡
வீடற்குந் தன்மையின் † விரைந்து சென்று
விண்ணோடு மண்ணிடை நண்ணும் பெற்றி
பாடற்கும் பணிதற்குந் தக்க தொல்சீர்ப்
பகவன்ற னடியிரண்டும் பணிது நாமே§"

(யாப். வி. ப. ௨௬௪)

என வரும்.

அவ்வழி ஒருபொருள்மேல் மூன்றடுக்கி வருவன சிறப்புடைத்தென ஒரு சாரார் உதாரணங் காட்டுமாறு :—

"கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்
இன்றுநம் மானுள் வருமே லவன் வாயிற்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ;

பாம்பு கயிறாக் கடல்கடைந்த மாயவன்
ஈங்குநம் மானுள் வருமேல் அவன்வாயில்
ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ

கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த மாயவன்
எல்லைநம் மானுள் வருமேல் அவன்வாயில்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ." (சிலப். ஆய்ச்சி.)

இவை மூன்றடியான் மூன்றடுக்கிவந்த ஆசிரியத் தாழிசை யென்றவாறு.

இவை அளவடியான் வருதலானும் ஒத்து மூன்றாகிவருதலானும் இவ்வாசிரியர் மதத்தால் தரவின்றாகித் தாழிசை பெற்ற கொச்சக வொரு போகெனப்படும். மேற்காட்டியதே ஆசிரியத்தாழிசை.

இனி, வஞ்சித்தாழிசையாவது குறளடி நான்கினால் ஒருபொருள் மேன் மூன்றடுக்கி வரும்.

"மடப்பிடியை மதவேழந்
தடக்கையால் வெயில் மறைக்கும்
இடைச்சுரம் இறந்தார்க்கே
நடக்குமென் மனனேகாண் ;

இரும்பிடியை இகல்வேழம்
பெருங்கையால் வெயில்மறைக்கும்
அருஞ்சுரம் இறந்தார்க்கே
விரும்புமென் மனனேகாண் ;

பேடையை இரும்போத்துத்
தோகையால் வெயில்மறைக்கும்

(பாடம்) * நிறைமலரஞ்சாந்தமொடு புகையும் நீவி.
† வீடற்குந் தன்மையினன். ‡ மண்ணினிடை.
§ அடியிணையைப் பற்றும் நாமே.

காடகம் இறந்தார்க்கே
ஓடுமென் மனனேகாண்."  (யாப். வி. ப. ௩௭௧)

என வரும்.

அஃதேல் இவை மூன்றடுக்கி வருதலிற் கொச்சக வொருபோகா தல் வேண்டுமெனின், அளவடியான் வாராமையான் ஆகாதென்க.

இனி, வெண்டாழிசையாவது மூன்றடியான் வந்து வெண்பாப் போல இறும். அது

"நண்பி தென்று தீய சொல்லார்
முன்பு நின்று முனிவு செய்யார்
அன்பு வேண்டு பவர்"  (யாப். வி. ப. உ௭௭)

என வரும்.

இந்தியல் வெண்பா ஒருபொருள்மேல் மூன்றடுக்கி வருவதனை வெள்ளொத் தாழிசை யென்ப. அது

"அன்னாய் அறங்கொல் நலங்கிளர் சேட்சென்னி
ஒன்னார் உடைபுறம் போல நலங்கவர்ந்து
துன்னான் துறந்து விடல்;

ஏடி அறங்கொல் நலங்கிளர் சேட்சென்னி
கூடார் உடைபுறம் போல நலங்கவர்ந்து
நீடான் துறந்து விடல்;

பூவாய் அறங்கொல் நலங்கிளர் சேட்சென்னி
மேவார் உடைபுறம் போல நலங்கவர்ந்து
காவான் துறந்து விடல்"  (யாப். வி. ப. உ௭௭)

என வரும்.

கலித்தாழிசையாவது அடிவரையின்றி ஒத்துவந்து ஈற்றடி சில சீர் மிக்குங் குறைந்தும் வருவது. அது

"வாள்வரி வேங்கை வழங்குஞ் சிறுநெறியெங்
கேள்வரும் போழ்தின் எழால்வாழி வெண்திங்காள்
கேள்வரும் போழ்தின் எழாதாய்க் குறுஅலியரோ
நீள்வரி நாகத் தெயிறே வாழி வெண்திங்காள்"
(யாப். வி. ப. ௩௩0)

என வரும்.

இத்தாழிசை ஒருபொருள்மேல் மூன்றடுக்கிவரினுங் கொச்சக வொருபோ கெனப்படா; கலித்தாழிசை யெனப்படும், ஈற்றடி மிக்கு வருதலான்.

இனி ஆசிரியத்துறையாவது நான்கடியாய் இடையிடை சீர் குறைந்து வரும். அது

"கரைபொரு கான்யாற்றங் கல்லதரில் எம்உள்ளி வருதிராயின்
அரையிருள் யாமத் தடுபுலியேறு நும்மஞ்சி யகன்று போக
நரையுருமே றுங்கை வேலஞ்சு* நும்மை
வரையர மங்கையர் வௌவுதல் அஞ்சுதும் வாரலையோ."
(யாப். வி. ப. உகூ௫)

என வரும்.

வஞ்சித்துறையாவது குறளடி நான்கினால் தனித்துவரும். அது

"முல்லைவாய் முறுவலித்தன
கொல்லைவாய்க் குருந்தீன்றன
மல்லல்வான் மழைமுழங்கின
செல்வர்தேர் வரவுகாண்குமே" (யாப். வி. ப. ௲௪௧)

என வரும்.

இனி வெண்டுறையாவது மூன்றடிச் சிறுமையாக ஏழடிப் பெருமை யாக வந்து இறுதியடிகளில் சில சீர் குறைந்துவரும்.

"குழலிசைய வண்டினங்கள் கோளிலைய செங்காந்தட் குலைமேற் பாய
அழலெரியின் மூழ்கினவால் அந்தோ வளியவென் றயல்வாழ் மந்தி
கலுழ்வனபோல் நெஞ்சயர்ந்து கல்லருவி தூஉம்
நிழல்வரை நன்னாடன் நீப்பனோ அல்லன்" (யாப். வி. ப.உ௪கூ)

என வரும்

பிறவும் வந்தவழிக்காண்க.

கலித்துறையாவது நெடிலடி நான்கினான் வருவது.

அஃதாவது, ஐஞ்சீரான் வருவதும், பதினாறும் பதினேழும் எழுத் துப்பெற்று நான்கடியான் வருவனவுமாம்.

"யானுந் தோழியும் ஆயமும் ஆடுந் துறைநண்ணித்
தானுந் தேரும் பாகனும் வந்தென் நலனுண்டான்
தேனும் பாலும் போல்வன சொல்லிப் பிரிவானேல்
கானும் புள்ளுங் கைதையும் எல்லாங் கரியன்றே."
(யாப். வி. ப. ௲௲உ)

"நல்லார் பழிப்பில் எழிற்செம் பவளத்தை நாணநின்ற
பொல்லா முகத்தெங்கள் போதக மேபுர மூன்றெரித்த
வில்லான் அளித்த விநாயக னேயென்று மெய்ம்மகிழ
வல்லார் மனத்தன்றி மாட்டாள் இருக்க மலர்த்திருவே.
(மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை. உ0)

இது நேரசை முதலாகிப் பதினாறெழுத்தான் வந்தது.

"கனிய நினைவொடு நாடொறுங் காதல் செயுமடியார்க்†
கினிய னவனொரு வின்னாங் கிலமெவ ரும்வணங்கப்
பனிவெண் பிறைநறுங் கொன்றைச் சடைப்பலி தேரியற்கை
முனிவன் சிறுவன் பெருவெங்கொல் ‡ யானை முகத்தவனே."
(மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை. கூ)

இது நிரையசை முதலாகிப் பதினேழெழுத்தான் வந்தது.

---

(பாடம்) † வேலஞ்சுக. † படுமடியார்க். ‡ வன்கொல்.

இனி, ஆசிரியவிருத்தமாவது அறுசீரடி முதலாகிய மிக்க அடியினன் நான்கடியு மொத்துவரும். அது

" இரைக்கும் அஞ்சிறைப் பறவைகள் எனப்பெயர்
இனவண்டு புடைசூழ
நுரைக்க ளென்னுமக் குழம்புகொண் டெதிர்ந்தெழ
நுடங்கிய விலயத்தால்
திரைக்க ரங்களிற் செழுமலைச் சந்தனத்
திரள்களைக் கரைமேல்வைத்
தரைக்கு மற்றிது குணகடற் றிரையொடு
பொருதல தவியாதே" (சூளாமணி. கல்யாண. ௯௧)

என வரும்.

பிறவும் வந்தவழிக் காண்க.

இனி வஞ்சிவிருத்தமாவது முச்சீரடி நான்காகி வரும். அது

"இருது வேற்றுமை இன்மையால்
சுருதி மேற்றுறக் கத்தினே
டரிது வேற்றுமை யாகவே
கருது வேல்தடங் கையினய்" (சூளாமணி. சீயவதை. ௧௭0)

என வரும்.

இனி, வெளிவிருத்தமாவது நான்கடியானயினும் மூன்றடியானயினும் அடிதொறுந் தனிச்சொற் பெற்றுவரும். அது

" ஆவா என்றே அஞ்சினர் ஆழ்ந்தார் - ஒருசாரார்
கூகூ என்றே கூவிளி கொண்டார் - ஒருசாரார்
மாமா வென்றே மாய்ந்தனர் நீந்தார் - ஒருசாரார்
ஏகீர் நாய்கீர் என்செய்தும் என்றார் - ஒருசாரார்"

என வரும்.

இது நான்கடியான் வந்தது.
மூன்றடியான் வருவது வந்தவழிக் காண்க.
இனி, கலிவிருத்தமாவது நாற்சீரடி நான்கினல் வரும்.

" தேம்பழுத் தினியநீர் மூன்றுந் தீம்பலா
வேம்பழுத் தளித்தன சுளையும் வேரியம்
மாம்பழக் கனிகளு மதுத்தண் டீட்டமுந்
தாம்பழுத் துளசில தவள மாடமே" (சூளாமணி. நகர.௧௪)

என வரும்.

இவையெல்லாம் உரையிற்கோடல் என்பதனனும் பிறநூல் முடிந்தது தானுடம்படுத லென்பதனனுங் கொள்க. (௧௭௯)

௪௮௫. கிளரியல் வகையிற் கிளந்தன தெரியின்
அளவியல் வகையே அனைவகைப் படுமே.

என்—எனின். மேற்சொல்லப்பட்டன தொகுத்து உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஈண்டுச் சொன்ன வகையினற் சொல்லப்பட்டன வற்றை யாரர்யுங்காலத்து அவ்வியல்வகை யத்துணைப் பாகுபடும் என்றவாறு.

இதனற் சொல்லியது செய்யுளாமது அடிவரையுள்ளனவும் அடிவரையில்லனவுமென இருவகைப்படுமென்பதூஉம் அடிவரையுள்ளன ஆசிரியம், வஞ்சி, வெண்பா, கலி எனவும்; தாழிசை, துறை, விருத்த மெனவும்; அடிவரையில்லன், நூல், உரை, பிசி, முதுமொழி மந்திரம், குறிப்புமொழி என அறுவகைப் படுமென்பதூஉம் உணர்த்தியவாறு.

அஃதேல் மேல் 'அளவியல் வகையே அனைவகைப் படுமே' என்ற சூத்திரமிகையாதல் வேண்டுமெனின், அது பாவிற்கு அடிவரையறுத்துக் கூறப்பட்டது. இது செய்யுள் இனைத்தென வரையறுத்துணர்த்திற்று.

௪௮௬. கைக்கிளை முதலா ஏழ்பெருந்* திணையும்
முற்கிளந் தனவே முறையி† ஞன.

என்—எனின். நிறுத்தமுறையானே திணையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) திணையாவது கைக்கிளை முல்லை குறிஞ்சி பாலை மருதம் நெய்தல் பெருந்திணை யென்பன. அவை முறைமை யினன் மேற்சொல்லப்பட்டன என்றவாறு.

முறைமையினற் சொல்லுதலாவது, பாடாண்பாட்டினைக் கைக்கிளைப்புறமெனவும், வஞ்சியை முல்லைப்புறமெனவும், வெட்சியைக் குறிஞ்சிப்புறமெனவும், வாகையைப் பாலைப்புற மெனவும், உழிஞையை மருதப் புறமெனவும், தும்பையை நெய்தற்புறமெனவும், காஞ்சியைப் பெருந் திணைப்புறமெனவும் ஓதிய நெறிகொள்ளப்படும். இவ்வாறு கொள்ளவே பதினன்கு திணையும் ஏழாகியடங்குமாயின. (௧௭௭)

௪௮௭. காமப் புணர்ச்சியும் இடந்தலைப் படலும்‡
பாங்கொடு தழாஅலுந் தோழியிற் புணர்வுமேன்
றுங்கநால் வகையினும் அடைந்த சார்வொடு
மறையென மொழிதல் மறையோர் ஆறே.§

என்—எனின். கைகோள் வகையிற் களவாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) இயற்கைப் புணர்ச்சியும் இடந்தலைப்படலும் பாங்கற்கூட்டமும் தோழியிற் கூட்டமுமென்று சொல்லப் பட்ட நான்குவகையானும் அவற்றைச் சார்ந்துவருகின்ற களவி

(பாடம்) * எழுபெருந். † முறைநெறி வகையின். ‡ பாடும்.

§ கந்திருவ வழக்கம் மறையோர் ஒழுகிய நெறியது வாகலான் 'மறை யோர் ஆறு' என்றுன் என்பது. எனவே பாங்கனும் தோழியும் உணர்ந்த வழியும் அது மறையோர் வழித்து என்றவாறு. (தொல். பொருள் ௪௩௮. பேரா.)

மானும் வருவன களவென்று கூறுதல் வேதமறிவோர் நெறி என்றவாறு.

இதனுள் களவென்றது மறையென்றதனான் இது தீமை பயக்குங் களவன்மை கொள்க.

இன்—ஆன் பொருள்பட வந்தது. ஒடு—எண். (கஎஅ)

சஅஅ. மறைவெளிப் படுதலுந் தமரிற் பெறுதலும்
இவைமுத லாகிய இயனெறி திரியாது
மலிவும்* புலவியும் ஊடலும் உணர்வும்
பிரிவொடு புணர்ந்தது கற்பெனப் படுமே.

என்—எனின். கைகோள்வகையிற் கற்பாகிய கைகோள் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்) களவொழுக்கம் வெளிப்படுதலுங் களவொழுக்கமின்றித் தமரானே பெறுதலுமென்று சொல்லப்பட்ட இவை முதலாகிய இயற்கை நெறியிற் றப்பாது மகிழ்தலும் புலத்தலும் ஊடலும் ஊடல் தீர்தலும் பிரிதலுமென்று சொல்லப்பட்ட இவற்றொடு கூடிவருவது கற்பென்று சொல்லப்படுவது என்றவாறு.

இயனெறி என்றதனாற் கரணத்தின் அமைதல் இன்றியமையாதென்று கொள்க. (கஎக)

சஅக. மெய்பெறும் அவையே கைகோள்† வகையே.

என்—எனின். மேற்சொல்லப்பட்டவற்றைத் தொகுத்து உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்.) பொருள்பெற வந்த மேற்சொல்லப்பட்ட களவு கற்பென்னும் இருவகையே கைகோள் வகையாவன என்றவாறு.

ஏகாரந் தேற்றம். (கஅ0)

---

* மலிதல் என்பது இல்லொழுக்கமும் புணர்ச்சியும் முதலாயவற்றால் மகிழ்தல். புலவி என்பது புணர்ச்சியான் வந்த மகிழ்ச்சி குறைபடாமல் காலம் கருதிக்கொண்டு உய்ப்பதோர் உள்ள நிகழ்ச்சி. ஊடல் என்பது உள்ளத்து நிகழ்ந்ததனைக் குறிப்பு மொழியான் அன்றிக் கூற்றுமொழியான் உரைப்பது.........ஊடல் நிகழ்ந்தவழி அதற்கு ஏதுவாகிய பொருளின்மை உணர்வித்தல் உணர்வெனப்படும்......புலவிக்காயின் உணர்த்தல் வேண்டா, அது குளிர்ப்பக் கூறலும் தளிர்ப்ப முயங்கலும் முதலாயவற்றான் நீங்குதலின்......துனித்தல் என்பது வெறுத்தல் (தொல். பொருள். சகக. பேரா.)

† கைகோள் என்பது ஒழுக்கங் கோடல்; எனவே, அகத்திற்குப் புறனாயினும் புறத்திணைக்குக் கைகோள் அவ்வாறு வேறுவகைப்படக் கூறப்படா; பொதுவகையானே மறைந்த ஒழுக்கமும் வெளிப்பாடும் என இரண்டாகி அடங்கும், அவையும் என்றவாறு அவை வெட்சியுள்ளும் ஒழிந்த திணையுள்ளும் காட்டப்பட்டன. (தொல். பொருள். ருOO. பேரா.)

சுகூ0. பார்ப்பான்* பாங்கன் தோழி செவிலி
சீர்த்தகு சிறப்பிற் கிழவன் கிழத்தியோடு
அளவியல் மரபின் அறுவகை யோருங்
களவினிற் கிளவிக் குரியர் என்ப.

என்—எனின். இனிக் கூறப்படுவாரன்றி உணர்த்துவார் களவின்கட் கூறுவாரை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) பார்ப்பான் முதலாகச் சொல்லப்பட்ட கலந்தொழுகு மரபினையுடைய அறுவகையோரும் களவொழுக்கக் கிளவி கூறுதற்குரியரென்றவாறு.

ஓடு எண்ணின்கண் வந்தது. கலந்தொழுகு மரபென்றதனாற் பார்ப்பாரினும் பாங்கரினுஞ் சிலரே இதற் குடம்படுவாரென்று கொள்க.

பார்ப்பான் உயர்குலத்தானாகிய தோழன்.

பாங்கன் ஒத்த குலத்தானும் இழிந்த குலத்தானுமாகிய தோழன். (கஅக)

சகூக. பாணன் கூத்தன் விறலி பரத்தை
யாணஞ் சான்ற அறிவர் கண்டோர்
பேணுதகு சிறப்பிற் பார்ப்பான் முதலா
முன்னுறக் கிளந்த அறுவரொடு† தொகைஇத்
தொன்னெறி மரபிற் கற்பிற் குரியர்.

என்—எனின். கற்பின்கட் கூறத்தகுவாரை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) பாணன் முதலாகச் சொல்லப்பட்ட அறுவரும் மேற்சொல்லப்பட்ட பார்ப்பான் முதலிய அறுவருங்கூடப் பன்னிருவருங் கற்பின்கட் கூறுதற்குரியர் என்றவாறு.

'தொன்னெறி மரபிற் கற்பு' என்றதனான் அவர் குலந்தோறுந் தொன்றுபட்டு வருகின்ற நெறியையுடைத்தென்று கொள்க. (கஅஉ)

சகூஉ. ஊரும் அயலுஞ் சேரி யோரும்
நோய்மருங் கறிநருந் தந்தையுந் தன்ஐயும்
கொண்டெடுத்து மொழியப் படுத லல்லது
கூற்றவண் இன்மை யாப்புறத் தோன்றும்.

என்—எனின். மேற்சொல்லப்பட்ட இருவகைக் கைகோளிற்கும் உரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

---

* பார்ப்பான் என்பான் நன்றும் தீதும் ஆராய்ந்து உறுதி கூறுவான் எனப்படும். பாங்கன் என்பான் அவ்வாறன்றித் தலைமகன் வழி நின்றொழுகிவருமாகலின் அவனை அவன்பின் வைத்தான். (தொல். பொருள். ருOக. பேரா.) (பாடம்) † கிளவியொடு.

(இ - ள்.) ஊரிலுள்ளாருஞ் சேரியிலுள்ளாரும் அயன் மனையுள்ளாரும் நோய்பபக்கங் குறிப்பினலறிவாருந் தந்தையுந் தம்மையனும் இருவகைக் கைகோளினும் பட்டதனையுட்கொண்டு பிறிதொன்றை யெடுத்துமொழியினல்லது பட்டாங்குக் கூறுதலின்மை வலியுறுத்தத் தோன்றும் என்றவாறு.

எனவே, வலியில்வழிச் சிறுபான்மை நிகழவும் பெறும்.

"எந்தையும்,

நிலனுறப் பொறுஅன் சீறடி சிவப்ப
எவன்இல குறுமகள் இயங்குதி என்னும்" (அகம். கஉ)

இது தந்தை யுட்கொண்டு கூறியது. பிறவுமன்ன. (கஅரு)

சகரு. கிழவன் தன்னொடுங் கிழத்தி தன்னொடும்
நற்றாய் கூறல் முற்றத்* தோன்றாது.

என்—எனின். நற்றாய்க்குரிய மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) தலைவனொடுந் தலைவியொடும் நற்றாய்கூற்று நிரம்பத் தோன்றாது என்றவாறு.

எனவே, ஏனையோர்க்கே கூறும் என்றவாறும். உதாரணம் வந்துழிக் காண்க. (கஅச)

சகச. ஒண்தொடி மாதர் கிழவன் கிழத்தியோடு
கண்டோர் மொழிதல் கண்ட தென்ப.

என்—எனின். கண்டோர்க்குரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஒண்டொடி மாதராவார் நற்றாயுந் தோழியுஞ் செவிலியும். இவரொடுந் தலைவனொடுந் தலைவியொடுங் கண்டோர் கூறுதல் காணப்பட்டது என்றவாறு.

எனவே ஏனையோர் கேட்பக்கூறிற்றில்லை என்றவாறும். (கஅ௫)

சகரு. இடைச்சுர மருங்கிற் கிழவன் கிழத்தியோடு
வழக்கியல் ஆணையிற் கிளத்தற்கும்† உரியன்.

என்—எனின். இது தலைவற் குரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

* 'முற்ற' என்றதனால் தானே தலைவனுதலால் தலைவன் தமர் யாவரும் கூறார்; முற்கூறப்பட்டார் அல்லர் என்பது கொள்க. (தொல். பொருள். ௫0ச. பேரா.)

† நீதிநூல் வகையால் கிளத்தல்' என்பது கிழத்தி தன்தமர் இடைச்சுரத்திற் கண்ணுறின் அவர் கேட்பத் தலைவிக்குச் சொல்லுவானாய் வழக்கியல் கூறுதலும் உரியன் என்பது. (தொல். பொருள். ௫0௫. பேரா.)

(இ - ள்.) தலைவியை யுடன்கொண்டுபோம் இடைச்சுரத்தின்கண் தலைவியைத் தலைவன் வழக்குநெறியாணையானே கூறுதற்குரியன் என்றவாறு.

உம்மை எதிர்மறை. ஆணையென்பது ஆக்கினை. வடமொழித் திரிபு. மெல்லிய காம நிகழுமிடத்து ஆக்கினை கூறப்பெறானாயினும் அவ்விடத்து வேண்டுமென்பது எடுத்தோதப்பட்டது.

உதாரணம்

"நீவினை யாடுக சிறிதே யானே
மழகளி றுரிஞ்சிய பராரை வேங்கை
மணலிடு மருங்கின் இரும்புறம் பொருந்தி
அமர்வரின் அஞ்சேன் பெயர்க்குவென்
நுமர்வரின் மறைகுவன் மாஅ யோளே." (நற்றிணை. ருசுஉ)

என்பதனுட் கண்டுகொள்க.

மெல்லிய மகளிர்முன் வன்மை கூறலாகாமையின் இது வழுவமைத்தவாறு. (ருஅசு)

ருகூசு. ஒழிந்தோர் கிளவி கிழவன் கிழத்தியோடு
மொழிந்தாங் குரியர் முன்னத்தின் எடுத்தே.

என்—எனின். இது தலைவனுந் தலைவியும் அல்லாதார்க்குரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) தலைவனையுந் தலைவியையும் ஒழிந்த பதின்மரும் அத்தலைவனொடுந் தலைவியொடுஞ் சொல்லிப்போந்த மரபினாற் சொல்லப்பெறுவர்; இடமுங் காலமுங் குறித்து என்றவாறு.

மொழிந்தாங்கு என்பதனை வழக்கியலானை யெனினு மமையும். முன்னமாவது :—

"இவ்விடத் திம்மொழி இவரிவர்க் குரித்தென்
றவ்விடத் தவரவர்க் குரைப்பது."

(தொல். செய்யுளியல். ககக)

எடுத்தென்பது அறம்பொருளின்பங்கட்குத் தகாத சொற்களையெடுத்துக்கூறுதல். அஃதாவது தலைவனைப் பார்ப்பானும் பாங்கனும் கழறலும், தோழி இயற்பழித்தலும் தலைவியைச் செவிலி யலைத்தலும் பாணர் கூத்தர் பாசறையிற்சென்று கூறுதலும், தோழி தலைமகனை வற்புறுத்தலும் முதலாயின. (ருஅஎ)

ருகூஎ. மனையோள் கிளவியுங் கிழவன் கிளவியும்
நினையுங் காலைக்* கேட்குநர் அவரே.

என்—எனின். இதுவு மது.

* 'நினையுங்காலை' என்றதனால் தலைமகள் சொல்லக் கேட்போரும் தலைமகன் சொல்லக் கேட்போரும் தலைவனும் தலைவியும் தம்முள் கேட்டனவற்றுக் குரியனவும் ஆராய்ந்து கொள்ளப்படும் மேற்கூறிய வகையான் என்பது. (தொல். பொருள். ௵0சு. பேரா.)

(இ - ள்) தலைவியுந் தலைவனுங் கூறக் கேட்போர் மேற் சொல்லப்பட்ட பதின்மரும் என்றவாறு.

இது முதலாகக் கேட்போரைக் கூறுகின்றது. (கஅஅ)

சகூஅ. பார்ப்பார் அறிவர்* என்றிவர் கிளவி
யார்க்கும் வரையார் யாப்பொடு புணர்ந்தே.

என்—எனின். பார்ப்பாரும் அறிவருங் கூறுங் கூற்றுக் கேட்போரை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) பார்ப்பார் அறிவரென்று சொல்லப்பட்ட இருவர் கூற்றும் எல்லாருங் கேட்கப்பெறுவ ரென்றவாறு. (கஅக)

சகூகூ. பரத்தை வாயில் எனவிரு வீற்றுங்†
கிழத்தியைச் சுட்டாக் கிளப்புப் பயனிலவே.

என்—எனின். இதுவு மொருசார் கூற்றிற்குரியா ரியல்பு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) பரத்தையென்று சொல்லப்படும் வேறுபாட்டி னும் வாயிலென்று சொல்லப்படும் வேறுபாட்டினுந் தலைமகளைச் சுட்டாத கூற்றுப் பயனில்லை என்றவாறு. (ககூ0)

ரு00. வாயில் உசாவே தம்மு ளுரிய.‡

என்—எனின்., வாயில்கட்குரியதோர் மரபு உணர்த்துதல் நுத லிற்று.

(இ - ள்.) வாயில்கள் உசாவுமிடத்துக் கிழத்தியைச் சுட் டாது தம்முள் உசாவுதலுரித்து என்றவாறு.

உதாரணம் வந்தவழிக் கண்டுகொள்க. (கககூ)

ரு0க. ஞாயிறு திங்கள் அறிவே நாணே
கடலே கானல் விலங்கே மரனே
புலம்புறு பொழுதே§ புள்ளே நெஞ்சே
அவையல பிறவு நுதலிய$ நெறியாற்

---

* அறிவர் எனப்படுவார் மூன்றுகாலமும் தோன்ற நன்குணர்ந் தோரும், புலன்நன்குணர்ந்த புலமையோரும் ஆகலானும், இனி பார்ப் பாரும் அவ்வாறே சிறப்புடையராகலானும் அவர்வழி நிற்றல் அவர்க்குக் கடனாகலானும் என்பது. (தொல் பொருள் ருOக. பேரா.)

(பாடம்) † கூற்றும். ‡ தம்முளும் உரிய.

§ புலம்புறு பொழுதென்பது மாலையும் யாமமும் எற்பாடும், காரும் கூதிரும் பனியும் இளவேனிலும் போல்வன.

(தொல். பொருள். ருகூ. பேரா.)

(பாடம்) $நுவலிய.

சொல்லுந போலவுங் கேட்குந போலவுஞ்
சொல்லியாங் கமையும் என்மனார் புலவர்.

என்—எனின். இதுவுங்கேட்டற் பொருண்மைக்கண் வருவதோர் மரபு வழுவமைத்தலை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஞாயிறு முதலாக நெஞ்சு ஈறுகச் சொல்லப் பட்ட பதினொன்றும் அத்தன்மைய பிறவுமாகிய மக்களல்லாத பொருள்கள் தாங்கருதிய நெறியினானே சொல்லுவனபோலவுங் கேட்குநபோலவுஞ் சொல்லியமையப்பெறும் என்றவாறு.

ஆங்கு - அசை.

"பழிதபு ஞாயிறே பாடறியா தார்கட்
கழியக் கதழ்வை யெனக்கேட்டு நின்னை
வழிபட் டிரக்குவேன் வந்தேனென் நெஞ்சம்
அழியத் துறந்தானைச் சீறுங்கால் என்னை
ஒழிய விடாதீமோ என்று." (கலித். ௧௪௩)

"மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேற்
காதலை வாழி மதி." (குறள். ௧௧௧௮)

"உறுதி தூக்கத் தூங்கி அறிவே
சிறிதுநனி விரையல் என்னும் ஆயிடை." (நற்றிணை. ௨௮௪)

"நேர்ந்தநங் காதலர் நேமி நெடுந்திண்டேர்
ஊர்ந்த வழிசிதைய ஊர்கின்ற ஓதமே
பூந்தண் பொழிலே புணர்ந்தாடும் அன்னமே
ஈர்ந்தண் துறையே இதுதகா தென்னீரே." (சிலப். கானல்)

இதனுட் கடலுங் கானலும் புள்ளு மரனுங் கூறப்பட்டது.

"மாலைநீ,
தையெனக் கோவலர் தனிக்குழல் இசைகேட்டுப்
பையென்ற நெஞ்சத்தேம் பக்கம்பா ராட்டுவாய்."
(கலித். ௧௦௮)

"வருந்தினை வாழிய நெஞ்சே." (அகம். எ௧)

பிறவு மென்றதனான்,

"மன்றப் பனைமேல் மலைமாந் தளிரேநீ
தொன்றிவ் வுலகத்துக் கேட்டும் அறிதியோ
மென்தோள் நெகிழ்த்தான் தகையல்லால் யான்காணேன்
நன்றுதீ தென்று பிற." (கலித். ௧௪௨)

எனவும் இந்நிகரன கொள்க.

இத்துணையுங் கூறப்பட்டது கேட்போ ரியல்பு. (௪௧௨)

௫௦௨. ஒருநெறிப் பட்டாங் கோரியல் முடியுங்
கரும நிகழ்ச்சி இடமென மொழிப.

என்—எனின். நிறுத்த முறையானே இடமாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஒருநெறிப்பட்டு ஓரியல்பாக முடியும் வினை நிகழ்ச்சி இடமென்று சொல்லுவர் என்றவாறு.

நிகழ்ச்சி, நிகழ்ந்தவிடம்.

ஒருநெறிப் படுதலாவது—அகமாயினும் புறமாயினும் ஒரு பொருண் மேல் வருதல்.

ஓரியல் முடிதலாவது—அகத்தின்கட் களவென்றானும் கற்பென்றானும் அவற்றின் விரிவகையில் ஒன்றானும்பற்றி வருதல். புறத்தின்கண் நிரைகோடலானு மீட்டலானு மேற் செலவானும் எயில்வளைத்தலானும் யாதானு மோரியல்புபற்றி வருதல்.

கரும நிகழ்தலாவது—அப்பொருளைப்பற்றி யாதானு மொருவினை நிகழுமிடம். இன்னுங் கருமநிகழ்ச்சி என்றதனால் தன்மை முன்னிலை படர்க்கை யென்பனவுங் கொள்ளப்படும்.

"செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை." (குறள். ௧௫௧)

என்றவழிப் பிரிவுப் பொருண்மை நிகழும் இடமாயிற்று. முன்னின்றானைக் கூறுதலின் முன்னிலை யென்னும் இடமாயிற்று.

யாதானுமோர் கருமநிகழ்வுழி அதற்காகும் இடத்தொடுங்கூட நிகழ்தல்வேண்டுமென்று இப்பொருள் கூறப்பட்டது.

ஒருநெறிப்படாதும் ஓரியன் முடியாதும் வருமிடம் வழுவாம், அஃதாவது, தலைமகளொடு புணர்தல்வேண்டித் தோழியை யிரந்து குறையுறுவான் அவ்விடத்திற்குத் தக்கவுரை கூறாது தன்னாற்றலும் பிறவுங் கூறுதல்.

"மெல்லியல் நல்லாருள் மென்மை அதுவிறந்
தொன்னாருள் கூற்றுட்கும் உட்குடைமை யெல்லாஞ்
சலவருட் சாலச் சலமே நலவருள்
நன்மை வரம்பாய் விடல்." (நாலடி. ௧அஅ)

இதனை மறிக. அன்றியும்,

"நெடும்புனலுள் வெல்லு முதலை அடும்புனலுள்
நீங்கி னதனைப் பிற." (குறள். ௪௯௫)

இதுவும் இடனறிதல்.

"உண்ணற்க கள்ளை உணிலுண்க சான்றோரால்
எண்ணப் படவேண்டா தார்." (குறள். ௯௨௨.)

இது தன்மையானையும் முன்னின்றானையும் ஒழித்துப் படர்க்கையானைத் தொழிற்படுத்துதல். உண்ணற்க வென்னும் படர்க்கைச்சொல் படர்க்கைப் பெயரொடு முடிந்தது. பிறவுமன்ன. (௧௧௬)

௫0௩. இறப்பே நிகழ்வே எதிர தேன்னுந்
திறத்தியல் மருங்கில் தெரிந்தனர் உணரப்*
பொருள்நிகழ் வுரைப்பது கால மாகும்.

என் — எனின். நிறுத்தமுறையானே காலமாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலமெனக் கூறப்பட்டவியலும் பக்கத்தின் ஆராய்ந்து நோக்குமாறு பொருணிகழ்ச்சியைக் கூறுவது காலமாகும் என்றவாறு.

"முதுக்குறைந் தனளே முதுக்குறைந் தனளே
மலையன் ஒள்வேற் கண்ணி
முலையும் வாரா முதுக்குறைந் தனளே."

இஃது இறந்தகாலத்தின்கட் புணர்ச்சியுண்மை தோன்ற வந்தது. இனி,

"அண்ணாந் தேந்திய வனமுலை தளரினும்
பொன்னேர் மேனி மணியில் தாழ்ந்த
நன்னெடுங் கூந்தல் நரையொடு முடிப்பினும்
நீத்த லோம்புமதி பூக்கேழ் ஊர." (நற்றிணை. ௧0)

என்றவழி நிகழ்காலம் இளமைப் பருவமென்பது தோன்றவந்தது. இதனுள், நீத்தலோம்புமதி யென்பது எதிர்காலங் குறித்து நின்றது. இவ்வகையினாற் காலமுமிடமும் எல்லாச் செய்யுளின் கண்ணும் வருமென்று கொள்க. (௧௯௪)

௫0௪. இதுநனி[†] பயக்கும் இதன்மா றென்னுந்
தொகுநிலைக்† கிளவி பயனெனப் படுமே.

என்—எனின். நிறுத்தமுறையானே பயனுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) யாதானும் ஒரு பொருளைக் கூறியவழி இதன் பின்பு மிதனைப்பயக்கு மென விரித்துக்கூறுது முற்கூறிய சொல்லினானே தொகுத்துக்கூறுதல் பயனெனப்படும் என்றவாறு.

"சூரல் பம்பிய சிறுகான் யாறே
சூரர மகளிர் ஆரணங் கினரே
வாரல் வரினே யானஞ் சுவலே
சாரல் நாட நீவர லாறே."

இதனாற் பயன் வரைந்து கோடல் வேண்டும் என்பது.

"ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று." (குறள். ௩௨௩)

இதனாற் பயன் நன்மை வேண்டுவார் இவ்வாறு செய்தல் வேண்டுமென்றல்.

---

(பாடம்) * உள்ளப். † இதனானென்னும் தொகைநிலைக்.

இவ் வகையினால் யாதரனுமொரு செய்யுளாயினும் பயன்படக்கூறல் வேண்டு மென்பது கருதிப் பயனென ஒருபொருள் கூறினார். (௧௧௫)

௫௦௫. உய்த்துணர்* வின்றித் தலைவரு பொருண்மையின் †
மெய்ப்பட முடிப்பது மெய்ப்பா டாகும்.

என்—எனின். நிறுத்தமுறையானே மெய்ப்பாடு ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) யாதானுமொன்றைக் கூறியவழி யதன்கட் பொருண்மையை விசாரித்துணர்தலன்றி அவ்விடத்து வரும் பொருண்மையானே மெய்ப்பாடு தோன்ற முடிப்பது மெய்ப்பா டென்னும் உறுப்பாம் என்றவாறு.

"ஐயோ எனின்யான் புலியஞ் சுவலே
அணைத்தனன் கொளினே அகன்மார்பெடுக்க வல்லேன்
என்போற் பெருவிதுப் புறுக நின்னை
இன்னா துற்ற அறனில் கூற்றே
நிரைவளை முன்கை பற்றி
வரைநிழற் சேர்க நடத்திசிற் சிறிதே." (புறம். உ௫௫)

இதனுள் அழுகையாகிய மெய்ப்பாடு புலப்பட வந்தவாறு கண்டுகொள்க.

செய்யுட் செய்வார் மெய்ப்பாடு தோன்றச் செய்தல் வேண்டு மென்பது கருத்து. (௧௧௬)

௫௦௬. எண்வகை இயனெறி பிழையா தாகி
முன்னுறக் கிளந்த முடிவின தவே.

என்—எனின். மெய்ப்பாடாவது உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அது நகை முதலாகிய எட்டுமெய்ப்பாட்டு நெறியையும் பிழையா தாகி மேற்சொல்லப்பட்ட இலக்கணத்தை யுடைத்து என்றவாறு.

அஃதாமாறு மெய்ப்பாட்டியலுட் காண்க. (௧௧௭)

௫௦௭. சொல்லொடுங் குறிப்பொடும் முடிவுகொள் இயற்கை
புல்லிய கிளவி எச்சம் ஆகும்.

என்—எனின். நிறுத்தமுறையானே எச்சவகையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

*கவிப்பொருள் உணர்ந்தால் அதனானே சொல்லப்படு பொருள் உய்த்து வேறுகண்டாங்கு அறிதலை மெய்ப்பாடென்றான், அது தேவர் உலகம் கூறினும் அதனைக்கண்டாங்கறியச் செய்தல் செய்யுள் உறுப்பாம் என்றவாறு. (தொல். பொருள் ௫௧௬. பேரா.)

(பாடம்) †பொருளான்.

(இ - ள்.) பிறிதோர் சொல்லொடும் பிறிதோர் குறிப்பொடும் முடிவுகொள்ளும் இயற்கையைப் பொருந்திய செய்யுள் எச்சமாகும் என்றவாறு.

எனவே சொல்லெச்சம் குறிப்பெச்சமென இருவகையாயின. அது எச்சவியலுட் 'பிரிநிலை வினை' யென்னுஞ் சூத்திரத்துள் (தொல். சொல். எச்ச. ௩௪) பிரிநிலையென்பது முதலாகச் சொல்லப்பட்ட எண்வகையானும் வருவன சொல்லெச்சமாம். குறிப்பின்றேதப்பட்டது குறிப்பெச்சமாம். (௧௧௮)

௫௦௯. இவ்விடத் திம்மொழி இவரிவர்க் குரியவென் றவ்விடத் தவரவர்க் குரைப்பது முன்னம்.

என்—எனின். நிறுத்தமுறையானே முன்னமாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) இவ்விடத்து இம்மொழியை இவர்க்குச் சொல்லத்தகுமெனக் குறித்து அவ்விடத்து அவர்க்கு அம்மொழியை யுரைப்பது முன்னமாம் என்றவாறு.

எனவே, இடமுங் காலமுமுணர்ந்து கேட்போர்க்குத் தக்கவாறு மொழிதலுஞ் செய்யுளுறுப்பாம் என்றவாறு.

வந்ததுகொண்டு வாராதது முடித்த லென்பதனாற் காலமுங்கொள்க. (௧௧௧)

௫௧௧. இன்பமும் இடும்பையும் புணர்வும் பிரிவும்
ஒழுக்கமும் என்றிவை இழுக்குநெறி யின்றி
இதுவா கித்திணைக் குரிப்பொருள் என்னாது
பொதுவாய் நிற்றல் பொருள்வகை என்ப.

என்—எனின். நிறுத்தமுறையானே பொருள்வகை யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) இன்பமுந் துன்பமும் புணர்வும் பிரிவும் ஒழுக்கமுமென்று சொல்லப்பட்டவை வழுவுநெறியின்றி இத்திணைக்குரிய பொருள் இப்பொருளென்னாது எல்லாப் பொருட்கும் பொதுவாகி நிற்கும் பொருளே பொருள்வகையாம் என்றவாறு. (உ௦௦)

௫௧௦. அவ்வவ* மாக்களும் விலங்கும் அன்றிப்
பிறவவண் வரினுந் திறவதின் நாடித்
தத்தம் இயலான்† மரபொடு முடியின்
அத்திறந் தானே துறையெனப் படுமே.

என்—எனின். நிறுத்தமுறையானே துறையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

---

(பாடம்) * அவ்வம். † இயலின்.

(இ - ள்.) அகப்பொருளாகிய எழு பெருந்திணைக்கும் புறப்பொருளாகிய எழு பெருந்திணைக்குமுரிய மாந்தரும் பரந்துபட்ட மாவும் புள்ளும், உம்மையால் மரமுதலாயினவும், பிறவவண் வரினுமென்றதனால் நிலம் நீர் தீ வளி முதலாயினவும் செய்யுட்கண் வருமிடத்துத், திறப்பாடுடைத்தாக ஆராய்ந்து தத்தமக்கேற்ற பண்போடும் பொருந்திய மரபோடும் முடியின், அவ்வாறு திறப்பாடுடைத்தாய் வருவது துறையென்று கூறப்படும் என்றவாறு. (௨0௧)

௫௧௧. அகன்றுபொருள் கிடப்பினும் அணுகிய நிலையினும்
இயன்றுபொருள் முடியத் தந்தனர் உணர்த்தல்
மாட்டென மொழிப பாட்டியல் வழக்கின்.

என்—எனின். நிறுத்தமுறையானே மாட்டேறு உணர்த்துதல் நுதலிற்று. (௨0௨)

௫௧௨. மாட்டும் எச்சமும் நாட்டல் இன்றி
உடனிலை மொழியினுந் தொடைநிலை பெறுமே.

இவையிரண்டுஞ் சூத்திரத்தாற் பொருள் விளங்கும். (௨0௩)

௫௧௩. வண்ணந் தாமே* நாலைந் தென்ப,

என்—எனின். இனி நிறுத்த முறையானே வண்ணமாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) வண்ணமாவன இருபதாம் என்றவாறு.

அவற்றின் பெயர் வருகின்ற சூத்திரத்தாற் காட்டுதும். (௨0௪)

௫௧௪. அவைதாம்
பாஅ வண்ணம் தாஅ வண்ணம்
வல்லிசை வண்ணம் மெல்லிசை வண்ணம்
இயைபு வண்ணம் அளபெடை வண்ணம்
நெடுஞ்சீர் வண்ணம் குறுஞ்சீர் வண்ணம்
சித்திர வண்ணம் நலிபு வண்ணம்
அகப்பாட்டு வண்ணம் புறப்பாட்டு வண்ணம்
ஒழுகு வண்ணம் ஒரூஉ வண்ணம்
எண்ணு வண்ணம் அகைப்பு வண்ணம்
தூங்கல் வண்ணம் ஏந்தல் வண்ணம்
உருட்டு வண்ணம் முடுகு வண்ணமென்று
ஆங்கென† மொழிப அறிந்திசி னோரே.

(பாடம்) * தானே. † ஆங்கன.

என்—எனின். வண்ணத்திற்குப் பெயர் கூறுதல் நுதலிற்று.

இதுவுஞ் சூத்திரத்தாற் பொருள் விளங்கும். (உ௦௫)

ௐகரு. அவற்றுட்
பாஅ வண்ணம்
சொற்சீர்த் தாகி நூற்பாற் பயிலும்

என்—எனின். பா வண்ணமாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) பாஅ வண்ணமாவது சொற்சீரடியாகி நூலின்கட் பயின்றுவரும் என்றவாறு.

'அ இ உ அம்மூன்றுஞ் சுட்டு.' (தொல். எழுத். நூன்மரபு. ௩௧
'கொல்லே ஐயம் எல்லே இயக்கம்.' (தொல். சொல். இடை. உ௦
என வரும். (உ௦௬)

ருகசு. தாஅ வண்ணம்
இடையிட்டு* வந்த எதுகைத் தாகும்.

என்—எனின். தாவண்ணமாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) தாஅ வண்ணமாவது இடையிட்டெதுகையான் வரும் என்றவாறு.

உதாரணம்

"தோடார் எல்வளை நெகிழ நாளும்
நெய்தல் உண்கண் பைதல் கலுழ†
வாடா அவ்வரி தைஇப் பசலையும்
வைக லூறும் பைபயப் பெருக‡
நீடார் இவணென நீமனங்§ கொண்டோர்
கேளார் கொல்லோ காதலர் தோழீ
வாடாப் பௌவம் அறமுகந்$ தெழிலி
பருவஞ் செய்யாது வலனேர்பு வளைஇ
ஓடா மலையன் வேலிற்
கடிது மின்னுமிக் கார்மழைக் குரலே."

(யாப். வி. ப. ௩அ௩)

என்னும் பாட்டு. (உ௦௭)

---

* அடியிடையிட்டு வருவது தொடை வேற்றுமையாவதல்லது வண்ண வேற்றுமையாகாதென்பது. ஒரு செய்யுளுட் பல அடி வந்தால் அவையெல்லாம் இடையிட்டுத் தொடுத்தல் வேண்டுமோ எனின் வேண்டா. அவை வந்தவழித் தாஅ வண்ணம் எனப்படும் என்பது. (தொல். பொருள். ௫உ௭ பேரா.)

(பாடம்) † பைதல் உழவா. ‡ பெருகின. § இவரென நீள்மணம். $ வார்முகந்.

௫கஎ. வல்லிசை வண்ணம் வல்லெழுத்து மிகுமே.*

என்—எனின். வல்லிசை வண்ணமாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) வல்லெழுத்து மிக்குவருவது வல்லிசை வண்ணமாம் என்றவாறு.

"வட்டொட்டி யன்ன வனமுடப்† புன்னைக்கீழ்க்
கட்டிட்டுக் கண்ணி தொடுப்பவர் தாழைப்பூத்
தொட்டிட்டுக் கொள்ளுங் கடற்சேர்ப்பன் நின்னொடு
பட்டொட்டி யுள்ளம் விடாது நினையுமேன்
விட்டொட்டி நீங்காதே ஒட்டு." (யாப். வி. ப. ௩௮௨) (௨0௮)

௫௧௮. மேல்லிசை வண்ணம் மேல்லெழுத்து மிகுமே.

என்—எனின். மெல்லிசை வண்ணம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) மெல்லெழுத்து மிக்கது மெல்லிசை வண்ணமாம் என்றவாறு.

"பொன்னின் அன்ன புன்னை நுண்தாது
மணியின் அன்ன நெய்தலங் கழனி
மனவென உதிரு மாநீர்ச் சேர்ப்ப
மாண்வினை நெடுந்தேர் பூண்மணி யொழிய
மம்மர் மாலை வாநீ
நன்மா மேனி நயந்தனை எனினே," (யாப். வி. ப. ௩௮௨) (௨0௯)

என வரும்.

௫௧௯. இயைபு வண்ணம் இடையெழுத்து மிகுமே.

என்—எனின். இயைபு வணணம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) இடையெழுத்துமிக்கு வருவது இயைபுவண்ணமாம் என்றவாறு

"வால்வெள் ளருவி வரைமிசை இழியவும்
கோள்வல் உழுவை விடரிடை இயம்பவும்
வாளுகிர் உளியம் வரையகம் இசைப்பவும்
வேலொளி விளக்கிநீ வரினே
யாரோ தோழி வாழ்கிற் போரே." (யாப். வி. ப. ௩௮௩) (௨௧0)

என வரும்.

௫௨௦. அளபேடை வண்ணம் அளபேடை பயிலும்.

என்—எனின். அளபெடை வண்ணம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்) அளபெடைபயின்று வருவது அளபெடை வண்ணமாம் என்றவாறு.

(பாடம்) * பயிலும். †பட்டொட்டி யன்ன தொடர்பு முடப்.

"தாஅட் டாஅ மரைமலர் உழக்கி
பூஉக் குவளைப் போஓ திருந்திக்
காஅய்ச் செந்நெற் கறித்துப் போஒய்
மாஅத் தாஅள் மோஒட் டெருமை" (யாப். வி. ப. ௩௭௮)

என வரும். (உ௧௧)

௫உ௧. நெடுஞ்சீர் வண்ணம் நெட்டெழுத்துப் பயிலும்.

என்—எனின். நெடுஞ்சீர் வண்ணம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) நெட்டெழுத்துப் பயின்றுவருவது நெடுஞ்சீர் வண்ணமாம் என்றவாறு.

"நீரூர் பாணு யாறே காடே
நீலூர் காயாப் பூவீ யாவே
காரூர் பாணு மாவே யானே
யாரோ தாமே வாழா மோரே.
ஊரூர் பாகா தேரே
பீரூர் தோளாள் பேரூ ராளே." (யாப். வி. ப. ௩௮௩)

என வரும். (உ௧உ)

௫உஉ. குறுஞ்சீர் வண்ணங் குற்றெழுத்துப் பயிலும்.

என்—எனின். குறுஞ்சீர் வண்ணம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) குற்றெழுத்துப் பயின்று வருவது 'குறுஞ்சீர் வண்ணமாம் என்றவாறு.

"உறுபெய லெழிலி தொகுபெயல் பொழியச்
சிறுகொடி அவரை பொரிதளை யவிழக்
குறிவரு பருவம் இதுவென மறுகுபு
செறிதொடி நலமிலை யழியல்
அறியலை அரிவை கருதிய பொருளே." (யாப். வி. ப. ௩௮௪)

என வரும். (உ௧௩)

௫உ௩. சித்திர வண்ணம்
நெடியவுங் குறியவும் நேர்ந்துடன் வருமே.

என்—எனின். சித்திரவண்ணம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) சித்திரவண்ணமாவது நெட்டெழுத்துங் குற்றெழுத்தும் சார்ந்துவரும் என்றவாறு.

"ஒரூர் வாழினுஞ் சேரி வாரார்
சேரி வரினும் ஆர முயங்கார்." (குறுந். உ௩௧)

என வரும், (உ௧௪)

௫௨௪. நலிபு வண்ணம் ஆய்தம் பயிலும்.

என்—எனின். நலிபுவண்ணம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஆய்தம் பயின்றுவருவது நலிபுவண்ணமாம் என்றவாறு.

> "அஃகாமை செல்வத்துக் கியாதெனின் வெஃகாமை
> வேண்டும் பிறன்கைப் பொருள்" (குறள். ௧௭௮)

என வரும். (௨௧௫)

௫௨௫. அகப்பாட்டு வண்ணம்
முடியாத் தன்மையின் முடிந்ததன் மேற்றே.

என்—எனின். அகப்பாட்டு வண்ணம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அகப்பாட்டு வண்ணமாவது முடியாத்தன்மையான் முடிந்ததன் மேலதென்றவாறு.

> "பன்மீன் உணங்கற் படுபுள் ளோப்பியும்
> புன்னை நுண்தாது நம்மொடு தொடுத்தும்
> பன்னாள் வந்து பணிமொழி பயிற்றி
> தோழி நீங்காமை சூளில் தேற்றியும்
> மணந்ததற் கொவ்வான் தணந்து புறமாறி
> இனைய ளாகி ஈங்குனைத் துறந்தோன்
> பொய்த லாயத்துப் பொலங்கொடி மகளிர்
> கோடுயர் மெண் மணல் ஏறி
> ஒடுகலம் எண்ணும் துறைவன் தோழி." (யாப். வி. ப. ௩௮௫)

என வரும். (௨௧௬)

௫௨௬. புறப்பாட்டு வண்ணம்
முடிந்தது போன்று முடியா தாகும்.

என்—எனின். புறப்பாட்டு வண்ணம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) புறப்பாட்டு வண்ணமாவது முடிந்தது போன்று முடியாதாகிவரும் என்றவாறு.

உதாரணம்

> "நிலவுமண லகன்துறை வலவ னேவலின்
> எரிமணிப் புள்ளின மொய்ப்ப* நெருநலும்
> வந்தன்று கொண்கின் தேரே இன்றும்
> வருகுவ தாயின் சென்று சென்று
> தோன்றுபு துதைந்த புன்னைத் தாதுகு
> தண்பொழில் மெல்லக வனமுலை நெருங்கப்

(பாடம்) * இன்றி மணிப்புள் இனமெடுப்ப-

புல்லின் எவனே மெல்லியல் நீயும்
நல்கா து விடுகுவை யாயின் அல்கலும்
படர்மலி உள்ளமொடு மடல்மா வேறி
உறுதுயர் உலகுட னறியநம்
சிறுகுடிப் பாக்கத்துப் பெரும்பழி தருமே " (யாப். வி. ப. ௩௮௫)

என வரும். (உ௧எ)

௫௨எ. ஒழுகு வண்ணம் ஓசையி னொழுகும்.

என்—எனின். ஒழுகு வண்ணம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஓசையான் ஒழுகிக்கிடப்பது ஒழுகுவண்ணமாம் என்றவாறு.

உதாரணம்

"அம்ம வாழி தோழி காதலர்
இன்முன் பனிக்கும் இன்னா வாடையொடு
புன்கண் மாலை அன்பின்று நலிய
உய்யலள் இவளென உணரச் சொல்லிச்
சொல்லுநர்ப் பெறினே செய்ய வல்ல
இன்னளி யிறந்த மன்னவர்
பொன்னணி நெடுந்தேர் பூண்ட மாவே." (யாப். வி. ப. ௩௮௬)

என வரும். (உ௧அ)

௫௨அ. ஒரூஉ வண்ணம் ஒரூஉத்தொடை தொடுக்கும். *

என்—எனின். ஒரூஉ வண்ணம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஒரூஉ வண்ணமாவது நீங்கின தொடையாகித் தொடுப்பது என்றவாறு.

அது செந்தொடையாம்.

உதாரணம்

"தொடிநெகிழ்ந் தனவே கண்பசந் தனவே
யானின்சென் றுரைப்பின் மாண்பின் றெவனோ
சொல்லாய் வாழி தோழி வரைய
முள்ளிற் பொதுளிய அலங்குகுலை நெடுவெதிர்
பொங்குவா ளிளமழை துவைப்ப
மணிநிலா விரியுங் குன்றுகிழ வோற்கே." (யாப். வி. ப. ௩௮௬)

என வரும். (உ௧௯)

௫௨௯. எண்ணு வண்ணம் எண்ணுப் பயிலும்.

என்—எனின். எண்ணுவண்ணம் உணர்த்துதல் நுதலிற்று.

---

(பாடம்) * ஓரீஇத் தொடுக்கும்.

(இ - ள்.) எண்ணுப் பயின்றுவருவது எண்ணுவண்ண மாம் என்றவாறு.

உதாரணம்

"நிலம் நீர் வளிவிசும் பென்ற நான்கின்
அளப்பரியையே
நாள்கோள் திங்கள் ஞாயிறு கனையழல்
ஐந்தொருங்கு புணர்ந்த விளக்கத் தனையை" (பதிற்றுப். ௧௪)

என வரும். (௨௨௦)

௫௩௦. அகைப்பு வண்ணம் அறுத்தறுத் தொழுகும்.

என்—எனின். அகைப்பு வண்ணம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அறுத்தறுத்தியலுவது அகைப்பு வண்ணமாம் என்றவாறு.

உதாரணம்

"தொடுத்த வேம்பின்மிசைத் துதைந்த போந்தையிடை
அசைத்த வாரமலைப் பட்டு ரண்ணலென்பான்
இயன்ற சேனைமுர சிரங்குந் தானையெதிர்
முயன்ற வேந்தருயிர் முருக்கும் வேலினவன்"

(யாப். வி. ப. ௩௮௭)

என வரும். (௨௨௧)

௫௩௧. தூங்கல் வண்ணம் வஞ்சி பயிலும்.

என்—எனின். தூங்கல் வண்ணம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) தூங்கல் வண்ணமாவது வஞ்சியுரிச்சீர் பயின்று வரும் என்றவாறு.

உதாரணம்

"வசையில்புகழ் வயங்குவெண்மீன்
திசைதிரிந்து தெற்கேகினும்" (பட்டினப். ௧)

என வரும். (௨௨௨)

௫௩௨. ஏந்தல் வண்ணம்
சொல்லிய சொல்லிற் சொல்லியது சிறக்கும்.

என்—எனின். ஏந்தல் வண்ணம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஏந்தல் வண்ணமாவது சொல்லிய சொல்லினானே சொல்லப்பட்டது சிறக்கவரும் என்றவாறு.

உதாரணம்

"கூடுவார் கூடல்கள் கூட லெனப்படா
கூடலுட் கூடலே கூடலுங்—கூடல்
அரும்பிய முல்லை யரும்பவிழ் மாலைப்
பிரிவிற் பிரிவே பிரிவு" (யாப். வி. ப. ௩அஅ)

என வரும். (உஉ௩)

ருடுடு. உருட்டு வண்ணம்* அராகந் தொடுக்கும்.

என்—எனின். உருட்டு வண்ணம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) உருட்டு வண்ணமாவது அராகந் தொடுக்கும் என்றவாறு.

உதாரணம்

"தாதுறு முறிசெறி தடமல ரிடையிடை
தழலென விரிவன பொழில்" (யாப். வி. ப. உ௬௬)

என வரும். (உஉச)

ருடுச. முடுகு வண்ண முடிவறி யாமல்
அடியிறந் தொழுகி அதனோ் அற்றே.†

என்—எனின். முடுகு வண்ணம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) முடுகு வண்ணமாவது நாற்சீரடியின் மிக்கோடி அராகத்தோடு ஒக்கும் என்றவாறு.

உதாரணம்

"நெறியறி செறிகுறி புரிதிரி பறியா வறிவனை முந்துறீஇ."
(கலித். ௩௯.) (உஉரு)

ருடுரு. வண்ணந் தாமே அவையென மொழிப.

என்—எனின். மேற்கூறப்பட்ட வண்ணமெல்லாந் தொகுத்து உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) வண்ணங்களாவன மேற்சொல்லப்பட்டன என்றவாறு.

இதனாற் பெற்றது என்னை ? இப்பொருண்மை மேலே பெறப்பட்டதால் எனின், ஒருபயன் கருதிக் கூறினார் என்க. வண்ணம் பாகுபடுகின்றது தொடையினான் அன்றே ; இன்னும் வேறொருவாற்றாற் பாகுபடுப்பப் பலவாம் என்பது அறிவித்தல். அது குறில் நெடில் வல்லினம் மெல்லி

* இது நெகிழாது உருண்ட ஓசையாகலிற் குறுஞ்சீர் வண்ணம் எனப்படாது உருட்டு வண்ணம் எனப்படும் என்பது. (தொல். பொருள். ருசச. பேரா.)

(பாடம்) † அடியிறந்தோடி யதனோரற்றே.

னம் இடையினம் என நிறுத்து அகவல், ஒழுகிசை, வல்லிசை, மெல்லிசை என்ற நான்கனெடும் உறழ இருபதாம். அவற்றைத் தூங்கிசை, ஏந்திசை, அடுக்கிசை, பிரிந்திசை, மயங்கிசை என்பனவற்றேடுறழ நூறும். அவற்றைக் குறிலகவற் றூங்கிசை வண்ணம், நெடிலகவற்றூங்கிசை வண்ணம் என ஒரு சாராசிரியர் பெயரிட்டு வழங்குப. (௨௨௬)

௫௩௬. *சின்மென் மொழியால்† சீர்புனைந் தியாப்பின்
அம்மை தானே அடிநிமிர் வின்றே.

என்—எனின். நிறுத்தமுறையானே அம்மையாகிய செய்யுள் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்.) சிலவாய் மெல்லியவாகிய மொழியினனே தொடுக்கப் பட்ட அடிநிமிர்வில்லாத செய்யுள் அம்மையாம் என்றவாறு.

உதாரணம்

"அறிவினன் ஆகுவ துண்டோ பிறிதினோய்
தன்னோய்போற் போற்றாக் கடை" (குறள். ௩௧௫)

என வரும். (௨௨௭)

௫௩௭. செய்யுள் மொழியால் சீர்புனைந் தியாப்பின்
அவ்வகை தானே அழகெனப் படுமே.‡

என்—எனின். நிறுத்தமுறையானே அழகென்னும் செய்யுள் உணர்த்துதல் நுதலிற்று

(இ - ள்.) செய்யுட்குரிய சொல்லினற் சீரைப்புணர்த்துத் தொடுப்பின் அவ்வகைப்பட்ட செய்யுள் அழகு எனப்படும் என்றவாறு.

உதாரணம்

"துணியிரும் பரப்பகங் குறைய வாங்கி
மணிகிளர் அடுக்கல் முற்றிய எழிலி
காலொடு மயங்கிய கனையிருள் நடுநாள்

---

(பாடம்.) * வனப்பி யலுனே வகுக்குங் காலைச்
சின்மென் மொழியால் சீர்புனைந் தியாப்பின்
அம்மை தானே யடிநிமிர் வின்றே.

† பல செய்யுளும் உறுப்பாய்த் திரண்டு பெருகிய தொடர்நிலையதே வனப்பென்னும் பெயர்ப்பகுதிவகையான் ஏற்பது......அம்மை என்பது குணப்பெயர், அமைதிப்பட்டு நிற்றலின். (தொல். பொருள். ௫௩௭. பேரா.)

‡ அழகு செய்யுள்மொழி என்றது என்னை எனின் அது பெரும் பான்மையாற் கூறினன். அம்மொழியானே இடைச் சங்கத்தாரும் கடைச் சங்கத்தாரும் இவ்விலக்கணத்தாற் செய்யுள் செய்தார். இக் காலத்துச் செய்யினும் விலக்கின்றென்பது. மற்று மூவடி முப்பது முதலாயின அம்மை எனப்படுமோ அழகெனப்படுமோ எனின் தாயபனுவல் இன்மையின் அம்மை எனப்படா என்பது. (தொல். பொருள். ௫௩௮. பேரா.)

யாங்குவந் தனையோ வோங்கல் வெற்ப
நெடுவரை மருங்கிற் பாம்பெனை இழிதருங்
கடுவரற் கலுழி நீந்தி
வல்லியம் வழங்குங் கல்லதர் நெறியே'' (யாப். வி. ப. ௩௭௭)

என வரும். (௨௨௮)

௫௩௮. தொன்மை தானே சொல்லுங் காலை
உரையொடு புணர்ந்த பழமை மேற்றே.*

என்—எனின். நிறுத்தமுறையானே தொன்மைச் செய்யுள் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) தொன்மையாவது உரையொடு பொருந்திப் போந்தப் பழமைத்தாகிய பொருண்மேல் வருவன. அவை இராம சரிதமும், பாண்டவ சரிதமும் முதலாகியவற்றின்மேல் வருஞ் செய்யுள். (௨௨௯)

௫௩௯. இழுமென் மொழியால் விழுமியது நவலினும்
பரந்த மொழியால் அடிநிமிர்ந் தொழுகினுந்
தோலென மொழிப தொன்னெறிப்† புலவர்.

என்—எனின். நிறுத்தமுறையானே தோலாகிய செய்யுள் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) இழுமென்மொழியால் விழுமிய பொருளைக் கூறினும் பரந்த மொழியினால் அடி நிமிர்ந்து ஒழுகினும் தோல் என்னுஞ் செய்யுளாம் என்றவாறு.

உதாரணம்

''பாயிரும் பரப்பகம் புதையப் பாம்பின்
ஆயிர மணிவிளக் கழலுஞ் சேக்கைத்
துளிதரு வெள்ளந் துயில்புடை பெயர்க்கும்
ஒளியோன் காஞ்சி எளிதெனக் கூறின்
இம்மை யில்லை மறுமை யில்லை
நன்மை யில்லைத் தீமை யில்லைச்
செய்வோ ரில்லை செய்பொரு ளில்லை
அறிவோர் யாரஃ திறுவழி இறுகென''

(மார்க்கண்டேயனார் காஞ்சி)

என்றது இழுமென் மொழியால் விழுமியது நுவல வந்தது.

''திருமறை தலைஇய இருள்நிற விசும்பு'' (மலைபடுகடாம். ௧)

என்னுங் கூத்தராற்றுப்படை பரந்தமொழியான் அடிநிமிர்ந்து வந்தது. (௨௩௦)

(பாடம்) * தொன்மைதானே, உரையொடு புணர்ந்த பழமை மேற்றே. † தொன்மொழிப்.

ருசO. விருந்தே* தானும்
புதுவது புனைந்த† யாப்பின் மேற்றே.

என்—எனின். நிறுத்தமுறையானே விருந்தென்னுஞ் செய்யுள் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) விருந்தாவது முன்புள்ளார் சொன்ன நெறி போய்ப் புதிதாகச் சொன்ன யாப்பின் மேலது என்றவாறு.

புதிதாகப் புனைதலாவது ஒருவன் சொன்ன நிழல்வழியன்றித் தானே தோற்றுவித்தல். அது வந்தவழிக் காண்க.

இது பெரும்பான்மையும் ஆசிரியப்பாவைக் குறித்தது. (உகக)

ருசக ஞகார‡ முதலா னகார ஈற்றுப்
புள்ளி இறுதி இயைபு§எனப் படுமே.

என்—எனின். நிறுத்தமுறையானே இயைபாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஞணநமன யரலவழள என்னும் பதினொரு புள்ளியும் ஈறாகவருஞ் செய்யுள் இயைபென்னுஞ் செய்யுளாம் என்றவாறு.

உதாரணம் வந்தவழிக் காண்க. (உகஉ)

ருசஉ. தெரிந்த$ மொழியாற் செவ்விதிற் கிளந்து
தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றிற்
புலனென மொழிப புலனுணர்ந் தோரே.

என்—எனின். நிறுத்தமுறையானே புலன் என்னுஞ் செய்யுள் உணர்த்துதல் நுதலிற்று.

---

* தானும் என்ற உம்மையான் முன்னைத் 'தோல்' எனப்பட்டதூஉம் பழைய கதையைப் புதியதாகச் சொல்லியதாயிற்று. இது பழங்கதைமேற் றன்றிப் புதிதாகச் சொல்லப்படுதல் ஒப்புமையின் உம்மையான் இறந்தது தழீஇயினன் என்பது. (தொல். பொருள். ருருக. பேரா.)

(பாடம்) † கிளந்த. ‡ ஞகாரை முதலா னகாரை யீற்று.

§ 'இயைபு' என்றதனானே பொருளும் இயைந்து சொல்லும் இயைந்து வரும் என்பது கருத்து. சீத்தலைச்சாத்தனாரால் செயயப்பட்ட மணிமேகலையும் கொங்கு வேளிரால் செய்யப்பட்ட தொடர்நிலைச் செய்யுளும் (பெருங்கதை) போல்வன.

பரந்த மொழியான் அடிநிமிர்ந்தொழுகிய தோலோடு இதனிடை வேற்றுமை என்னையெனின் அவை உயிர் ஈற்றவாதல் பெரும்பான்மையாகலான் வேறுபாடுடைய சொற்றொடரான் வருதலும் உடைய என்பது. சொற்றொடர் என்பது அந்தாதி எனப்படுவது; என்றதனன் உயிரீற்றுச் சொற்றொடர் சிறுபான்மை என்பது கொள்க. (தொல். பொருள். ருருஉ. பேரா.)

(பாடம்) $ சேரி.

(இ - ள்.) வழக்குச் சொல்லினானே தொடுக்கப்பட்டு ஆராய வேண்டாமற் பொருள் தோன்றுவது புலனென்னுஞ் செய்யுளாம் என்றவாறு.

உதாரணம்

"பாற்கடல் முகந்த பருவக் கொண்மூ
வார்ச்செறி முரசின் முழங்கி ஒன்னார்
மலைமுற் றின்றே வயங்குதுளி சிதறிச்
சென்றவள் திருமுகங் காணக் கடுந்தேர்
இன்றுபுகக் கடவுமதி பாக உதுக்காண்
மாவொடு புணர்ந்த மாஅல் போல
இரும்பிடி யுடைய தாகப்
பெருங்காடு மடுத்த காமர் களிறே" (யாப். வி. ப. ௩௭௧)

என வரும். (௨௩௩)

௫௪௩. ஒற்றொடு* புணர்ந்த வல்லெழுத் தடங்காது†
குறளடி முதலா ஐந்தடி ஒப்பித்து
ஓங்கிய மொழியான் ஆங்கவண்‡ மொழியின்
இழைபின் இலக்கணம் இயைந்த தாகும்.

என்—எனின். நிறுத்தமுறையானே இழைபாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஒற்றொடு புணர்ந்த வல்லெழுத்தடங்காது ஆசிரியப்பாவிற் கோதப்பட்ட நாலெழுத்தாதியாக இருபதெழுத்தின் காறும் உயர்ந்த பதினேழு நிலத்தும் ஐந்தடியும் முறையானே வரத்தொடுப்பது இழைபு என்னும் செய்யுளாம் என்றவாறு.

உதாரணம்.

"பேர்ந்து பேர்ந்து சார்ந்து சார்ந்து
தேர்ந்து தேர்ந்து மூசி நேர்ந்து
வண்டு சூழ விண்டு நீங்கி
நீர்வாய்க் கொண்ட நீல மூர்வாய்
ஊதை வீச ஊர வாய
மதியேர் நுண்டோ டொல்கி மாலை
நன்மணங் கமழும் பன்னல் லூர
அமையேர் வளைத்தோள் அம்பரி நெடுங்கண்
இணையீர் ஓதி ஏந்திள வனமுலை

---

* அவையாவன கலியும் பரிபாடலும் போலும் இசைப்பாட்டாகிய செந்துறை மார்க்கத்தன என்பது. இவற்றுக்குக் காரணம் தேர்தல் வேண்டாது பொருள் இனிது விளங்கல் வேண்டும் என்றது. (தொல் பொருள். ௪௬௪. பேரா.)

(பாடம்) †தடக்காது. ‡ ஆங்கன.

இரும்பன் மலரிடை எழுந்த மாவின்
நறுந்தழை துயல்வருஞ் செறிந்தேந் தல்குல்
அணிநகை நசைஇய அரியமர் சிலம்பின்
மணிமருள் வார்குழல் வளரிளம் பிறைநுதல்
ஒளிநிலவு வயங்கிழை உருவுடை மகளிரொடு
நளிமுழவு முழங்கிய அணிநிலவு மணிநகர்
இருந்தளவு மலரளவு சுரும்புலவு நறுந்தொடையலள்
கலனளவு கலனளவு நலனளவு நலனளவு
பெருமணம் புணர்ந்தனை யென்பவஃ
தொருநீ மறைப்ப ஒழிகுவ தன்றே" (யாப். வி. ப. கூ௪0)

என வரும். (உகூச)

ருசச. செய்யுள்* மருங்கின் மெய்பெற நாடி
இழைத்த இலக்கணம் பிழைத்தன போல
வருவன† உளவெனும் வந்தவற் றியலால்
திரிபின்றி முடித்தல் தேர்ளியோர் கடனே.

என்—எனின். யாப்பிற்கோர் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

இது சூத்திரத்தாற் பொருள் விளங்கும். (உகூரு)

எட்டாவது செய்யுளியல் முற்றிற்று.

---

* அவை எண்சீர் முதலாயின வரின் கழிநெடிலடிப்பாற் சார்த்திக் கோடலும் ஏது நுதலிய முதுமொழியோடு பாட்டிற்கு இயைபின்றியும் தொடர்பு படுப்பனவும் யாப்பென்னும் உறுப்பின்பாற் கோடலும் பிறவும் ஈண்டு ஓதாதன உளவெனின் அவையுமெல்லாம் செய்யுளிலக்கணம் முடிபாகும் என்றவாறு. (தொல். பொருள். ருருரு. பேரா.)

(பாடம்) † வருவ உளவெனினும்.

ஒன்பதாவது

# மரபியல்

இவ்வோத்து இவ்வதிகாரத்துக் கூறப்பட்ட பொருட்கு மரபு உணர்த்தினமையான், மரபியல் என்னும் பெயர்த்து.

ருசரு. மாற்றருஞ் சிறப்பின் மரபியல்* கிளப்பிற்
பார்ப்பும் பறழும் குட்டியும் குருளையும்
கன்றும் பிள்ளையும் மகவும் மறியுமென்†
றொன்பதும் குழவியோ டிளமைப் பெயரே.

இவ்வோத்தினுள் ‡ இத் தலைச்சூத்திரம் என்னுதலிற்றோ எனின் இளமைப் பெயராமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) *குழவியொடு இவ்வொன்பதும் இளமைப் பெயராம் என்றவாறு.*

இதன் பொருள் மேல் விரிக்கின்றார். (க)

---

* மரபென்ற பொருண்மை என்னையெனின், கிளவியாக்கத்து மரபென்று வரையறுத்து ஓதப்பட்டனவும் செய்யுளியலுள் மரபென்று வரையறுத்து ஓதப்பட்டனவுமன்றி, இருதிணைப் பொருட் குணனாகிய இளமையும் ஆண்மையும் பெண்மையும் பற்றிய வரலாற்று முறைமையும், உயர்திணை நான்கு சாதியும் பற்றிய மரபும், அஃறிணைப் புள்ளும் மரனும் பற்றிய மரபும், அவைபற்றி வரும் உலகியல் மரபும், நூல் மரபும் என இவையெல்லாம் மரபெனப்படும் என்பது. (தொல். பொருள். ருருசு. பேரா.)

(பாடம்) † மறியுமொன்பதும்.

‡ என்பது சூத்திரம். இவ்வோத்து என்னபெயர்த்தோ வெனின், மரபியலென்னும் பெயர்த்து. உலகத்து வழங்கும்பொருளை யிவ்வாறு சொல......ற் பெற்றபெயர். மேற்செய்யுளிலக்கண முணர்த்தி வழக்கிலக்கணம் உணர்த்துகின்றாராகலின் பிற்கூறப்பட்டது. இத்தலைச் சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், இருதிணைப் பொருளும்பற்றிவரும் இளமைப் பெயர் உணர்த்துதல் நுதலிற்று. மாற்றருஞ் சிறப்பின் மரபியல் கிளப்பி ...டைய மரபியலைக் கூறுங்காலத் தென்றவாறு. விலக்குத லருமை யாவது பார்ப்பென்பதனை வழங்கியன் மரபி...றுங்காற் கூறலாகாமை. பார்ப்பு முதலாகக் குழவியீறாகச் சொல்லப்பட்ட வொன்பதும் இளமைப் பெயரென்றவாறு...குழவியோடொன்பதுமென மொழி மாற்றுக. அவை யாமாறு தத்தஞ் சூத்திரத்துக் காட்டுதும்.

௫௪௬. எருதும்* ஏற்றையும்† ஒருத்தலுங் களிறும்
சேவும் சேவலும் இரலையும் கலையும்
மோத்தையுந் தகரும் உதளும் அப்பரும்
போத்தும் கண்டியும் கடுவனும் பிறவும்
யாத்த ஆண்பாற் பெய‡ரென மொழிப.

என்—எனின். ஆண்பாற் பெயர் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) *ஆண்பாற் பெயர் இவ்வெண்ணப்பட்ட பதினெந்தும் பிறவுமாம் என்றவாறு.*

*பிறவும் என்றதனன் ஆண் என்றும் விடை என்றும் வருவனபோல்வனகொள்க.* (௨)

௫௪௭. பேடையும் பெடையும் பெட்டையும் பெண்ணும்
மூடும் நாகுங் கடமையும் அளகும்
மந்தியும் பாட்டியும் பிணையும் பிணவும்
அந்தஞ் சான்ற பிடியொடு பேண்ணே.

என்—எனின் பெண்பாற்பெயர் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) *இக்கூறப்பட்ட பதின்மூன்றும் பெண்பாற் பெயராம் என்றவாறு.* (௩)

௫௪௮. அவற்றுள்,
பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற் றிளமை.

என்—எனின். மேல் அதிகரிக்கப்பட்ட மூவகைப் பெயர்க்குஞ் சிறப்பு விதியுடையன இச்சூத்திர முதலாக வருகின்ற சூத்திரங்களாற் கூறப்படுகின்றன.

(இ - ள்.) *மேற் சொல்லப்பட்டவற்றுட் பார்ப்பு பிள்ளை யென்னும் இரண்டும் பறவையி னிளமைப் பெயர் என்றவாறு.*

---

(பாடம்) * ஏறும். † ஏறுமுதலாகச் சொல்லப் பட்டனவும் அத்தன்மையபிறவும் ஆண்பாற் பெயரென்றவாறு. பிறவுமென்றதனற் கொள்ளப்படு...ல் மக்கட்குரிய ஆண்பெயர் கூருத தென்னையெனின், அவை 'பாலறியவந்த வுயிர்திணைப் பெயரெனச் சொல்லதிகாரத்துள் (பெயரியல். அ) எடுத்...தத்தஞ் சிறப்புச் சூத்திரத்துட் காட்டுதும்.

‡ 'யாத்த ஆண்பாற் பெயர்' என்றதனல் போத்து என்பது இளமைப்பெயரா மாயினும் இங்ஙனம் ஆண்பாற்குச் சிறந்து வருமாறு போலச் சிறவாது அதற்கென்பது கொள்க. (தொல் பொருள். ௫௫௭. பேரா.)

ஆண்மை பெண்மை புல்லிற்கு இன்மையின் அவையும் முடிபுடையன ஆகாவாயினும் காயாப்பனையை ஆண்பனை என்றும் காய்ப்பனவற்றைப் பெண்பனை என்றும் வழங்குப. இவையெல்லாம் வழக்காகலின் செய்யுளுள் வருமாறு அறிந்து கொள்ளப்படும். (தொல் பொருள். ௬௩௮. பேரா.)

இவ்வோத்திற் சூத்திரத்தாற் பொருள் விளங்குவனவற்றிற்கு உரையெழுதுகின்றிலம். (௪)

௫௪௯. தவழ்பவை தாமும் அவற்றோர் அன்ன.

(இ - ள்.) என்றது, ஊர்வனவற்றிற்கு மேற் சொல்லப்பட்ட இருவகை இளமைப் பெயரும் ஆம் என்றவாறு. (௫)

௫௫௦. மூங்கா வெருகெலி மூவரி அணிலொடு
ஆங்கவை நான்குங் குட்டிக் குரிய.

(இ - ள்.) என்றது, இவை நான்குங் குட்டி என்று சொல்லப்படும் என்றவாறு.

மூங்கா என்பது கீரி. (௬)

௫௫௧. பறழெனப் படினும் உறழாண் டில்லை.

(இ - ள்.) என்றது, மேற்சொல்லப்பட்ட நால்வகை யுயிர்க்கும் இளமைப்பெயர் பறழ் எனினும் உறழ்ச்சியில்லை என்றவாறு.

எனவே, இரண்டுமாம் என்றவாறும். (௭)

௫௫௨. நாயே பன்றி புலிமுயல் நான்கும்
ஆயுங் காலைக்* குருளை என்ப.

(இ - ள்.) என்றது, நாய்முதலாகச் சொல்லப்பட்ட நான்கின் இளமைப்பெயர் குருளை யென்று வழங்கும் என்றவாறு. (௮)

௫௫௩. நரியும் அற்றே நாடினர் கொளினே

(இ - ள்.) என்றது, நரியின் இளமைப் பெயரும் ஆராயுங் காலத்துக் குருளை எனப்படும் என்றவாறு.

இது மேலனவற்றோடு ஒருநிகரனவாக ஓதாமையிற் சிறுபான்மை வருமென்று கொள்க. (௯)

௫௫௪. குட்டியும் பறழுங் கூற்றவண் வரையார்.

என்—எனின். எய்தாத தெய்துவித்தல் நுதலிற்று.

(இ - ள்.) மேற் சொல்லப்பட்ட ஐவகையுயிர்க்குங் குட்டி பறழ் என்பனவும் ஆம் என்றவாறு. (௧௦)

* ஆயுங்காலை என்றதனால் 'சிறு வெள்ளரவின் அவ்வரிக் குருளை' என்பதும் கொள்க. (தொல். பொருள். ௬௩௩. பேரா.)

௫௫௫. பிள்ளைப் பெயரும் பிழைப்பாண் டில்லை
கொள்ளுங் காலை* நாயலங் கடையே.

என்—எனின். இதுவுமது.

(இ - ள்.) மேற்கூறியவற்றுள் நாயன்றி ஒழிந்தவை பிள்ளை என்னும் இளமைப்பெயர்க்கு உரிய என்றவாறு.

பன்றிக்குருளை பன்றிக்குட்டி பன்றிப்பறழ் பன்றிப்பிள்ளை எனவுமாம்.

ஏனையவும் இவ்வாறே ஒட்டிக் கொள்க. (௧௧)

௫௫௬. யாடுங் குதிரையும் நவ்வியும் உழையும்†
ஓடும் புல்வாய் உளப்பட மறியே.

(இ - ள்.) என்றது யாடு முதலாகச் சொல்லப்பட்ட ஐந்துயிரும் மறி என்னும் இளமைப்பெயர் பெறும் என்றவாறு.

நவ்வி—புள்ளிமான். (௧௨)

௫௫௭. கோடுவாழ் குரங்கு‡ குட்டியுங் கூறுப.

(இ - ள்.) கோடுவாழ் குரங்கென்பது ஊகமு முசுவுங் கொள்ளப்படும்.

உம்மை எதிரதுதழீஇய எச்சவும்மை. (௧௩)

௫௫௮. மகவும் பிள்ளையும் பறழும் பார்ப்பும்
அவையும் அன்ன அப்பா லான.

என்—எனின். இதுவுங் குரங்குக் குரியதோர் இயல்பு உணர்த்துதல் நுதலிற்று.

* 'கொள்ளுங்காலை' என்றதனான் முற்கூறிய நாய் முதலாகிய நான்கும் விலக்கி நரிப்பிள்ளை என்பதே கோடலும் ஒன்று. (தொல். பொருள். ௫௬௬. பேரா.)

† நவ்வியும் உழையும் புல்வாயுள் அடங்குமன்றே, அவற்றை மூன்றாக ஓதியதென்னை? நாய் என்றதுபோல அடங்காதோ எனின், மா வென்பது குதிரையும் யானையும் புலியும் சிங்கமும் முதலாயவற்றுக் கெல்லாம் பெயராகலின் அவ்வாறு ஓதான் என்பது. 'ஓடும் புல்வாய்' என்றதனானே மடனுடையன நவ்வி எனவும் இடைநிகரன உழை எனவும் கொள்க. (தொல். பொருள். ௫௬௭. பேரா.)

‡ 'கோடுவாழ் குரங்கு' எனவே குரங்கின் பிறப்புப்பகுதி எல்லாம் கொள்க. அவை குரங்குக்குட்டி, முசுக்குட்டி, ஊகக்குட்டி என்பன. உம்மை இறந்தது தழீஇயிற்று. ஆதலான் மேற் கூறிய யாடு முதலாகிய ஐந்து சாதிக்கும் குட்டி என்னும் பெயர் கூறப்படும் என்பது. (தொல் பொருள். ௫௬௮. பேரா.)

(இ - ள்.) மகவு முதலாகிய நான்குங் குரங்குச்சாதி இளமைப் பெயராம் என்றவாறு.

குரங்குக்குட்டி, குரங்குமகவு, குரங்குப்பிள்ளை, குரங்குப்பறழ், குரங்குப்பார்ப்பு. (கச)

ருருகூ. யானையுங் குதிரையுங் கழுதையுங் கடமையும்
மானோ டைந்துங் கன்றெனற் குரிய.

(இ - ள்.) என்றது யானை முதலாக மானீறாகச் சொல்லப் பட்ட ஐந்தினது இளமைப் பெயர் கன்று என்று வரும் என்ற வாறு. (கரு)

ருசூo. எருமையும் மரையும் வரையா ராண்டே.

(இ - ள்.) என்றது, கன்றெனக் கூறும் இளமைப்பெயர் எருமைக்கும் மரைக்கும் உரித்து என்றவாறு. (கசு)

ருசூக. கவரியும் கராகமும்* நிகரவற் றுள்ளே.

(இ - ள்.) என்றது கவரி என்று சொல்லப்படுவதும் கராகமென்று சொல்லப்படுவதும் கன்றென்னும் பெயர் பெறும் என்றவாறு.

கராகமென்பது கரடி. (கஎ)

ருசூஉ. ஒட்டகம் அவற்றொ டொருவழி நிலையும்.

(இ - ள்.) என்றது, ஒட்டகமென்று சொல்லப்படுவதுங் கன்றென்னும் பெயர் பெறும் என்றவாறு. (கஅ)

ருசூங. குஞ்சரம் பெறுமே குழவிப் பெயர்க்கொடை.

(இ - ள்.) என்றது, குழவியென்னும் இளமைப் பெயர் யானை பெறும் என்றவாறு. (கசு)

ருசூச. ஆவும் எருமையும் அதுசொலப் படுமே.

(இ - ள்.) என்றது, ஆவும் எருமையுங் குழவிப்பெயர் பெறும் என்றவாறு. (உo)

ருசூரு. கடமையும் மரையு முதனிலை யொன்றும்.

(இ - ள்.) என்றது, கடமாவும் மரையுங் குழவி எனப் பொருந்தும் என்றவாறு. (உக)

ருசூசு. குரங்கும் முசுவும் ஊகமும் மூன்றும்
நிரம்ப நாடின் அப்பெயர்க் குரிய.

---

(பாடம்) * கராம் - முதலை. (பேரா.)

(இ - ள்.) என்றது, குரங்கு முதலிய மூன்றும் ஆராயுங் காலத்துக் குழவிப்பெயர்க்குரிய என்றவாறு. (உஉ)

௫௬எ. குழவியும் மகவும் ஆயிரண் டல்லவை
கிழவ அல்ல மக்கட் கண்ணே.

(இ - ள்.) என்றது, குழவி மகவென்று சொல்லப்பட்ட இரண்டு இளமைப்பெயரு மல்லாத ஏனையவை மக்கட்குரியவல்ல என்றவாறு. (உங)

௫௬அ. பிள்ளை குழவி கன்றே போத்தெனக்
கொள்ளவும் அமையும் ஓரறி வுயிர்க்கே.

(இ - ள்.) என்றது, ஓரறிவுயிராகிய புல்லும் மரனும் இளமைப்பெயர் பிள்ளை முதலாகச் சொல்லப்பட்ட நான்குங் கொள்ளவும் அமையும் என்றவாறு.

உம்மை எதிர்மறையாகலான் கன்றென்றதே பெரும்பான்மை. (உச)

௫௬௯. நெல்லும் புல்லும் நேரார் ஆண்டே.

என்—எனின். எய்தியது விலக்கல் நுதலிற்று.

(இ - ள்.) மேற்கூறப்பட்ட நான்கின் இளமைப் பெயரும் கொள்ளார் நெல்லும் புல்லுமென வரும் ஓரறிவுயிர்க்கு என்றவாறு.

உம்மை எதிர்மறையாதலின் மேற்சொல்லப்பட்ட இளமைப்பெயர் கூறப்பெறுர் என்றவாறு. (உரு)

௫எ०. சொல்லிய மரபின் இளமை தானே
சொல்லுங் காலை அவையல திலவே.

என்—எனின். இளமைப்பெயரை வரையறுத்து உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) சொல்லிப்போந்த மரபுடையனவன்றிச் சொல்ல வேண்டு மரபுடையனவற்றிற்குஞ் சொல்லுமிடத்து இவைதாமே இளமைப்பெயர் என்றவாறு.

என்பது என்சொன்னவாறேவெனின், பரந்து பட்டவுயிர்த்தன்மையெல்லாம் ஈண்டு ஓதப்பட்டனவல்ல, எடுத்தோதாதனவற்றிற்கு ஈண்டு ஓதப்பட்ட இளமைப் பெயரல்லது பிற பெயரின்மையின், இவற்றுள் ஏற்பனவற்றோடு கூட்டியுரைக்க என்றவாறும்.

இத்துணையும் கூறப்பட்ட சூத்திரத்திற்கு,

உதாரணம்

"பறவைதம் பார்ப்புள்ள." (கலித். கக௧)

'வெள்ளாங் குருகின் பிள்ளையும் பலவே.''

''யாமைப் பார்ப்பின் அன்ன.'' (குறுந். ௧௫௨)

''தன்புறப்புத் தின்னும் பண்பின் முதலை.'' (ஐங்குறு ௪௧)

பார்ப்பு, பிள்ளை பிறவும் பறப்பன ஊர்வனவெல்லாம் இவ்வகையினுற் கூறுப. நடப்பனவற்றுள், மூங்காக்குட்டி, மூங்காப்பறழ், வெருகுக்குட்டி, வெருகுப்பறழ்; எலிக்குட்டி, எலிப்பறழ்; அணிற்குட்டி, அணிற்பறழ்; நாய்க்குட்டி, நாய்க்குருளை; நரிக்குட்டி நரிக்குருளை; நரிப்பறழ், நரிப்பிள்ளை; பன்றிக்குட்டி பன்றிக்குருளை; பன்றிப்பறழ்; பன்றிப்பிள்ளை; புலிக்குட்டி, புலிக்குருளை; புலிப்பறழ், புலிப்பிள்ளை; குரக்குக்குட்டி, குரக்குமக; குரக்குப்பிள்ளை, குரக்குப் பார்ப்பு; குரக்குப்பறழ் குரக்குக்குழவி; ஊக முசுவென்பனவும் இவ்வாறே கொள்க. யாட்டுமறி; குதிரைமறி, குதிரைக்கன்று; நவ்விமறி; உழைமறி; புல்வாய்மறி; யானைக்கன்று; யானைக்குழவி; கழுதைக்கன்று; கடமைக்கன்று, கடமைக்குழவி; ஆன்கன்று, ஆன்குழவி; எருமைக்கன்று எருமைக்குழவி; மரைக்கன்று, மரைக்குழவி; கவரிக்கன்று; கராகக்கன்று; ஒட்டகக்கன்று; மக்கட்குழவி, மக்கண்மக; தெங்கம்பிள்ளை; கமுகங்கன்று; கருப்பம்போத்து. ஓரறிவுயிர்க்கட் குழவியென்பது வந்தவழிக் கண்டுகொள்க.

இனி அவையல்லது பிறவில்லை யென்றமையின், ஒன்றற்குரியவற்றை ஒன்றற்குரித்தாக்கி வழங்குவனவுஞ் சிறுபான்மை கொள்ளப்படும். கழுதை மறியென்பனவும் 'பிள்ளை வெருகிற் கல்கிரை யாகி' (குறுந். ௧௭) என்றாற்போலவும் சான்றோர் செய்யுளகத்து வருவன கடியப்படாவென்றவாறு. எடுத்தோதாதது பெரும்பான்மை. இனி எடுத்தோதாதன: சிங்கம் புலிப்பாற்படும்; உடும்பு, ஓந்தி, பல்லி அணிற் பாற்படும்; நாவியென்பது மூங்காவின் பாற்படும். பிறவும் இவ்வகையின் ஏற்பன கொள்க. (௨௬)

௫௭௧. ஒன்றறி* வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே.

---

* ஒன்றுமுதல் ஐந்தீறாகிய பொறியுணர்வு மனமின்றியும் பிறப்புன போல வேறு கூறியது என்னையெனின் ஓரறிவுயிர்க்கு மனமின்மையின் அங்ஙனங் கூறினர் என்பது. அதற்கு உயிர் உண்டாயின் மனமின்றாமோ எனின், உயிருடையவாகிய நந்து முதலாகியவற்றுக்கு செவிமுதலாய பொறியின்மை கண்டிலையோ என்பது.

அல்லதூஉம் தேன், நெய்யினை நாவின் பொறி உணர்ந்தவழி இன்புற்றும், கண்ணுள் வார்த்து மெய்யுணர்வு உணர்ந்தவழித் துன்புற்றும், நறிதாயின மான்மதத்தினை மூக்குணர்வு உணர்ந்த வழி இன்புற்றும், கண் உணர்வு உணர்ந்தவழி இன்பம் கொள்ளாமையும் வருதலின் அவை பொறி உணர்வெனப்படும். மன உணர்வும் ஒரு தன்மைத்தாகல் வேண்டுமால் எனின், ஐயுணர்வின்றிக் கனுப்போலத் தானே உணர்வது மன உணர்வெனப்படும். பொறி உணர்வு மனமின்றிப் பிறவாதெனின் முற்பிறந்தது மனவுணர்வாமாகவே பொறி உணர்வென்பது ஓர் அறிவின்றாகியே செல்லும் என்பது. (தொல். பொருள். ௫௮௨. பேரா.)

ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே.

என்—எனின். உலகத்துப் பல்லுயிரையும் அறியும் வகையாற் கூறப்படுதலை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஓரறிவுயிராவது உடம்பினானறிவது; ஈரறிவுயிராவது உடம்பினானும் வாயினானும் அறிவது; மூவறிவுயிராவது உடம்பினானும் வாயினானும் மூக்கினானும் அறிவது; நாலறிவுயிராவது உடம்பினானும் வாயினானும் மூக்கினானும் கண்ணினானும் அறிவது; ஐயறிவுயிராவது உடம்பினானும் வாயினானும் மூக்கினானும் கண்ணினானும் செவியினானும் அறிவது; ஆறறிவுயிராவது உடம்பினானும் வாயினானும் மூக்கினானுங் கண்ணினானும் செவியினானும் மனத்தினானும் அறிவது, இவ்வவகையினான் உயிர் ஆறு வகையினான் ஆயின.

இவ்வாறு அறிதலாவது: உடம்பினால் வெப்பம் தட்பம் வன்மை மென்மை அறியும். நாவினாற் கைப்பு, காழ்ப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, புளிப்பு, மதுரம் என்பன அறியும். மூக்கினால் நன்னாற்றம் தீயநாற்றம் அறியும். கண்ணினால் வெண்மை, செம்மை, பொன்மை, பசுமை, கருமை, நெடுமை குறுமை, பருமை, நேர்மை வட்டம், கோணம், சதுரம் என்பன அறியும். செவியினால் ஓசை வேறுபாடும், சொற்படும் பொருளும் அறியும். மனத்தினாலறியப்படுவது இதுபோல்வன வேண்டுமெனவும், இது செயல் வேண்டுமெனவும், இஃது எத்தன்மையெனவும் அனுமானித்தல். அனுமானமாவது புகை கண்டவழி நெருப்புண்மை கீட்புலன் அன்றாயினும் அதன்கண் நெருப்பு உண்டென்று அனுமானித்தல்.

இவ்வகையினான் உலகிலுள்ளவெல்லாம் மக்கட்கு அறிதலாயின. இனி அவற்றை அறியும் உயிர்களை வருகின்ற சூத்திரங்களாற் கூறுதும். (உஎ)

ருஎஉ. புல்லும் மரனும் ஓரறி வினவே.
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.

(இ - ள்.) ஓரறிவுயிராமாறு புல்லும் மரனும் என்று சொல்லப்பட்ட இருவகை உடம்பினாலறியும்; அக்கிளைப்பிறப்பு பிறவும் உள என்றவாறு.

பிறஆவன கொட்டியுந் தாமரையுங் கழுநீரும் என்பன.

புல்லென்பது புறவயிர்ப்பு உடையன; மரமென்பது அகவயிர்ப்புடையன. அவையாமாறு முன்னர்க் கூறப்படும். (உஅ)

ருஎங. நந்தும் முரளும் ஈரறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.

என்—எனின். ஈரறிவுயிர் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஈரறிவுயிராவன நந்தும், முரளுமென்று சொல்லுவ; பிறவுமுள ஈரறிவுயிரென்றவாறு.

நந்து என்றதனால் சங்கு, நத்தை, அலகு, நொள்ளை என்பன கொள்க. முரள் என்றதனால் இப்பி, கிளிஞ்சில், ஏரல் என்பன கொள்க. (உக)

ருஎச. சிதலும் எறும்பும் மூவறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.

என்—எனின். மூவறிவுயிராமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) சிதலும், எறும்பும், மூவறிவின; அக்கிளைப் பிறப்பு பிறவு முள என்றவாறு.

பிற ஆவன அட்டை முதலாயின. (௩0)

ருஎரு. நண்டுந் தும்பியும் நான்கறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.

என்—எனின். நாலறிவுயிராமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) நண்டும், தும்பியுமென நாலறிவையுடைய; அக்கிளைப் பிறப்பு பிறவு முள என்றவாறு.

பிறவு மென்றதனன் ஞிமிறு, சுரும்பென்பன கொள்க. (௩க)

ருஎசு. மாவும்* †புள்ளும் ஐயறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.

என்—எனின். ஐயறிவுயிராமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) நாற்கால் விலங்கும் புள்ளும் ஐயறிவுடைய; அக்கிளைப் பிறப்பு பிறவும் உள என்றவாறு.

பிற ஆவன தவழ்வனவற்றுள் பாம்பு முதலாயினவும் நீருள் வாழ்வனவற்றுள் மீனும் முதலையும் ஆமையும் முதலாயினவுங்கொள்ளப்படும். (௩உ)

ருஎஎ. மக்கள்‡ தாமே ஆறறி வுயிரே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே.

என்—எனின். ஆறறிவுயிராமாறு உணர்த்துதல் நுதலிற்று.

---

* மா என்பன—நாற்கால் விலங்கு. மாக்கள் எனப்படுவார் மன உணர்ச்சி இல்லாதார். கிளை என்பன எண்கால்வருடையும் குரங்கும் போல்வன. எண்காலவாயினும் மா வெனப்படுதலின் வருடை கிளையாயிற்று. குரங்கு நாற்காலவாகலின் கிளையாயிற்று. (தொல். பொருள் - ருஅஎ. பேரா.)

(பாடம்) † மாக்களும்.

‡முப்பத்திரண்டு அவயவத்தான் அளவிற்பட்டு அறிவொடு புணர்ந்த ஆடூஉ மகடூஉ மக்கள் எனப்படுவர். அவ்வாறு உணர்விலும் குறைவு பட்டாரைக் குறைந்தவகை அறிந்து முற்கூறிய சூத்திரங்களானே

(இ - ள்) மக்கள் ஆறறிவுயிரெனப்படுவர்; அக்கிளைப் பிறப்பு பிறவுமுள என்றவாறு.

பிறவாவன தேவர், அசுரர், இயக்கர் முதலாயினோர் பிறப்புக்கள். (௩௩)

௫௭௮. ஒருசார் விலங்கும் உளவேன மொழிப.

என்—எனின். இதுவு மது.

(இ - ள்.) விலங்கினுள் ஒருசாரனவும் ஆறறிவுயிராமென்றவாறு.

அவையாவன கிளியுங் குரங்கும் யானையும் முதலாயின.

மேல் ஓரறிவுயிரெனத் தோற்றுவித்தார்; அதனானே இச்சூத்திரங்கள் ஈண்டுக் கூறப்பட்டன. (௩௪)

௫௭௯. வேழக் குரித்தே விதந்துகளி றென்றல்.

என்—எனின் நிறுத்த முறையானே ஆண்பாற் குரிய பெயர் கூறுதல் நுதலிற்று, இச்சூத்திர முதலாயின.

(இ - ள்.) களிறென்று விதந்துகூறுதல் யானைக்குரித்து என்றவாறு. (௩௫)

௫௮௦. கேழற் கண்ணுங் கடிவரை இன்றே.

(இ - ள்.) பன்றியின்கண்ணும் ஆண்பாலைக் களிறென்றல் கடியப்படா தென்றவாறு. (௩௬)

௫௮௧. புல்வாய் புலிஉழை மரையே கவரி
சொல்லிய கராமோ டொருத்தல் ஒன்றும்.

(இ - ள்.) புல்வாய் முதலாயின் அறுவகையுயிரும் ஒருத்தலென்ன ஆண்பெயர் ஒன்றும் என்றவாறு. (௩௭)

௫௮௨. வார்கோட் டியானையும் பன்றியும் அன்ன.

(இ - ள்.) யானையும் பன்றியும் ஒருத்தலெனப்படு மென்றவாறு. (௩௮)

௫௮௩. ஏற்புடைத் தென்ப எருமைக் கண்ணும்.

---

அவ்வப் பிறப்பினுள் சேர்த்திக்கொள்ளவைத்தான் என்பது. அவை ஊமும் செவிடும் குருடும் போல்வன. கிளை யெனப்படுவார் தேவரும் தானவரும் முதலாயினார். பிறப்பு என்றதனால் குரங்கு முதலாகிய விலங்கினுள் அறிவுடையன எனப்படும் மன உணர்வு உடையன உள வாயின் அவையும் ஈண்டு ஆறறிவுயிராய் அடங்கும் என்பது. தாமே எனப் பிரித்துக் கூறினமையான் நல்லறிவுடையார் என்றற்குச் சிறந்தார் என்பதும் கொள்க. (தொல். பொருள். ௫௮௮. பேரா.)

(இ - ள்.) எருமையினும் ஆணினை ஒருத்தலென்று கூறப்படும் என்றவாறு. (௩௯)

௫௮௪. பன்றி புல்வாய் உழையே கவரி
என்றிவை நான்கும் ஏறெனற் குரிய.

(இ - ள்.) பன்றி முதலாகிய நான்கும் ஆணினை ஏறென்று கூறலா மென்றவாறு. (௪௦)

௫௮௫. எருமையும் மரையும் பெற்றமும் அன்ன.

சூத்திரத்தாற் பொருள் விளங்கும். (௪௧

௫௮௬. கடல்வாழ் சுறவும் ஏறெனப் படுமே.

(இ - ள்.) கடல்வாழ் சுறாவின் ஆணினையும் ஏறெனலாகு மென்றவாறு. (௪௨)

௫௮௭. பெற்றம் எருமை புலிமரை புல்வாய்
மற்றிவை எல்லாம்* போத்தெனப் படுமே.

(இ - ள்.) பெற்ற முதலாகிய ஐந்துள் ஆணினையும் போத்தெனலாகு மென்றவாறு. (௪௩)

௫௮௮. நீர்வாழ் சாதியும் அதுபெறற் குரிய.†

(இ - ள்.) நீருள் வாழும் முதலை முதலாயினவற்றுள் ஆண்பால் போத்தெனக் கூறுதற்குரிய என்றவாறு. (௪௪)

௫௮௯. மயிலு மெழாஅலும் பயிலத் தோன்றும்.

(இ - ள்.) மயிலுள்ளும் எழாலுள்ளும் ஆணினைப் போத்தென்றல் பெரும்பான்மை, என்றவாறு. (௪௫)

௫௯௦. இரலையுங் கலையும் புல்வாய்க் குரிய.

(இ - ள்.) இரலை என்னும் பெயரும் கலை என்னும் பெயரும் புல்வாயில் ஆண்பாற்குரிய என்றவாறு. (௪௬)

௫௯௧. கலையென் காட்சி உழைக்கும் உரித்தே
நிலையிற் றப்பெயர் முசுவின் கண்ணும்.

(இ - ள்.) கலை என்னும் பெயர் உழைக்கும் முசுவிற்கும் உரித்தென்றவாறு. (௪௭)

---

* 'மற்றிவையெல்லாம்'' என்றதனுல் பன்றியும் ஒந்தியும் முதலாயினவும் கொள்ளப்படும். நீர்வாழ் சாதியும் அறுபிறப்பென்பன சுறவும், முதலையும், இடங்கரும், கராமும் வராலும், வாளையும் என இவை. (தொல். பொருள். ௫௯௯ பேரா.)

(பாடம்) † அறு பிறப்புரிய.

௫௯௨. மோத்தையுந் தகரும் உதளும் அப்பரும்*
யாத்த என்ப யாட்டின் கண்ணே.

(இ - ள்.) மோத்தை முதலாகச் சொல்லப்பட்டன யாட்டில் ஆணிற்குரிய வென்றவாறு. (௫௮)

௫௯௩. சேவற் பெயர்க்கொடை சிறகொடு சிவணும்
மாயிருந் தூவி மயில்†லலங் கடையே.

(இ - ள்.) மயிலல்லாத புள்ளின்கண் ஆண்பெயர் சேவலென்று கூறப்படு மென்றவாறு.

சிறகு என்றது ஆகுபெயர். (௫௯)

௫௯௪. ஆற்றலொடு புணர்ந்த ஆண்பாற் கெல்லாம்
ஏற்றைக் கிளவி உரித்தென மொழிப.

(இ - ள்.) ஆற்றலுடைத்தாகிய ஆண்பாற் கெல்லாம் ஏற்றையென்னும் பெயர் உரித்தென்றவாறு.

ஏற்புழிக்கோடல் என்பதனான் அஃறிணைக்கண்ணும் கொள்ளப்படும். (௬௦)

௫௯௫. ஆண்பால் எல்லாம் ஆணெனற் குரிய
பெண்பால் எல்லாம் பெண்ணெனற் குரிய
காண்பவை‡ அவையவை அப்பா லான.

(இ - ள்.) ஆண்பா லுயிரெல்லாம் ஆண் என்னும் பெயர் பெறும்; பெண்பா லுயிரெல்லாம் பெண் எனனும் பெயர் பெறும்; அவ்விரு வகைக்கும் அறிகுறி காண்டலான் என்றவாறு.

வேழக்குரித் தென்னும் சூத்திர (௩௰) முதலாக இத்துணையும் ஆண் பெயர் கூறினர். இனிப் பெண்பெயர் கூறுகின்றாராகலின் அதிகாரப் பட்ட பொருள் சே. கடுவன். கண்டி என்பன சிறப்புச் சூத்திரத்தாகலின் அதற்குரியவெனக் கூறிற்றிலராலெனின்; அவற்றுள் கடுவனும் கண்டியும் முன்னரெடுத்தோதப்படும். சே என்பது ஆவினுள் ஆணையே குறித்து வழங்கலின் ஓதாராயினர். ஈண்டு ஓதப்பட்டன பல பொருள் ஒரு சொல்லும் ஒரு பொருட் பல சொல்லும் என்று கொள்க.

---

* 'அப்பர்' என்பது இக்காலத்து வீழ்ந்ததுபோலும். 'யாத்த' என்றதனால் கடா என்பதும் யாட்டிற்குப் பெயராகக் கொள்க. இனிக் குரங்கினை 'அப்பர்' என்றலுங் கொள்க. (தொல். பொருள். ௬௦௨. பேரா.)

† 'மாயிருந்தூவி மயில்' என்றதனான் அவை தோகை உடையவாகிப் பெண்பால் போலும் சாயலவாகலான் ஆண்பால் தன்மை இல என்பது கொள்க. எனவே செவ்வேள் ஊர்ந்த மயிற்காயின் அதுவும் நேரவும் படும் என்பது. (தொல். பொருள். ௬௦௩. பேரா.)

(பாடம்) ‡ காண்ப.

இத்துணையுங் கூறப்பட்டது: வேழத்துள் ஆண், களிறு, ஒருத்தல், ஏற்றை எனப்படும்; பன்றியுள் ஆண் ஒருத்தல் ஏற்றை எனப்படும்; புல்வாயுள் ஆண், ஒருத்தல், ஏறு, ஏற்றை, போத்து, இரலை, கலை எனப்படும்; புலியுள் ஆண், ஒருத்தல், போத்து, ஏற்றை எனப்படும்; உழையுள் ஆண், ஒருத்தல், ஏறு, கலை, ஏற்றை எனப்படும்; மரையுள் ஆண், ஒருத்தல், ஏறு, போத்து, ஏற்றை எனப்படும்; கவரியுள் ஆண், ஒருத்தல், ஏறு, ஏற்றை எனப்படும்; கராத்துள் ஆண், ஒருத்தல், ஏறு, ஏற்றை எனப்படும்; எருமையுள் ஆண், ஒருத்தல், போத்து, ஏற்றை, கண்டி எனப்படும்; சுறவில் ஆண் என்பன, ஏற்றை எனப்படும்; பெற்றத்துள் ஆண், போத்து, ஏறு, ஏற்றை எனப்படும்; 'எருது காலுறு திளையர் கொன்ற' என வருதலின் எருதும் ஆம்; அதிகாரப் புறனடையாற் கொள்க நீர்வாழ் சாதியுள் ஆண், வராற் போத்து வாளைப்போத்து என வரும் மூசுவில் ஆண், கலை எனப்படும்; குரங்கும், ஊகமும் இவ்வாறே கொள்ளப்படும்; கடுவன் எனவும் வரும். ஆட்டினுள் ஆண், மோத்தை, தகர், உதள், அப்பர் என வரும்; புள்ளினுள் மயிலாண், எழால், சேவல், போத்து, ஏற்றை எனப்படும்; புள்ளினுள் ஆணெல்லாவற்றிலும் மயிலல்லாதனவெல்லாம்சேவல், ஏற்றை எனப்படும். ஓரறிவுயிருள் ஆண் பெண் என வேறுபடுத்தலாவன ஏற்றைப்பனை ஆண்பனை எனவரும். (௫௧)

௫௯௬. பிடியென் பெண்பெயர் யானை மேற்றே.

இனிப் பெண்பெயர் உணர்த்துகின்றார் இச்சூத்திர முதலாக.

(இ - ள்.) பிடி என்னும் பெண்பெயர் ஆனையின் மேலது என்றவாறு. (௫௨)

௫௯௭. ஒட்டகம் குதிரை கழுதை மரையிவை
பெட்டை யென்னும் பெயர்க்கொடைக் குரிய.

(இ - ள்.) பெட்டை என்னும் பெயர் ஒட்டக முதலாகச் சொல்லப்பட்ட நான்குக்கும் பெண்பாற்குப் பெயராம் என்றவாறு. (௫௩)

௫௯௮. புள்ளும் உரிய அப்பெயர்க் கென்ப.

(இ - ள்.) பெட்டை என்னும் பெயருக்குப் புள்ளிற் பெண்பாலு முரிய என்றவாறு. (௫௪)

௫௯௯. பேடையும்* பெடையும் நாடின் ஒன்றும்.

(இ - ள்.) பேடை என்னும் சொல்லும் பெடை என்னும் சொல்லும் ஆராயுமிடத்துப் பெட்டை என்பதனோடு ஒன்றும் என்றவாறு.

இது புள்ளின் வைத்தகைமையாற் புள்ளின்பின் வருதல் பெரும்பான்மை. (௫௫)

---

* அவை குயிற்பேடை அன்னப்பெடை எனவரும். 'நாடின்' என்றதனல் பெட்டை என்பது வழக்கினுள் பயிலா என்பது. (தொல். பொருள். ௬0௧. பேரா.)

சு௦௦. கோழி கூகை ஆயிரண் டல்லவை
சூழுங் காலை அளவெனல் அமையா.

(இ - ள்.) கோழியுங் கூகையும் அளவெனப்படும். (௫சு)

சு௦க. பெண்பா லான*
அப்பெயர்க் கிழமை மயிற்கு முரித்தே.

(இ - ள்.) அளவென்னும் பெண்பாற் பெயர் மயிலுக்குப் பெண்பாற்கும் உரித்து என்றவாறு. (௫எ)

சு௦உ. புல்வாய் நவ்வி உழையே கவரி
சொல்வாய் நாடிற் பிணையெனப் படுமே.

(இ - ள்.) புல்வாய் முதலாகிய நான்கிற்கும் பிணை என்னும் பெண்மைப்பெயர் வழங்குதற்குரித்து என்றவாறு. (௫அ)

சு௦ங. பன்றி புல்வாய் நாயென மூன்றும்
ஒன்றிய என்ப பிணவென் பெயர்க்கொடை.

(இ - ள்.) பன்றி முதலாகிய மூன்றிற்கும் பெண்பாற்குப் பிணவு என்னும் பெயர் பொருந்திற்று என்றவாறு. (௫௯)

சு௦ச. பிணவல் எனினும் அவற்றின் மேற்றே.

(இ - ள்.) பிணவல் என்று சொல்லினும் மேற்சொல்லப் பட்டவற்றின் மேல என்றவாறு. (சு௦)

சு௦௫. பெற்றமும் எருமையும் மரையும் ஆவே.

(இ - ள்.) ஆ என்னும் பெண்பெயர் பெற்றம் முதலாகிய மூன்றிற்கு முரித்து என்றவாறு. (சுக)

சு௦சு. பெண்ணும் பிணவு† மக்கட் குரிய.

(இ - ள்.) பெண்ணென்னும் பெயரும் பிணவு என்னும் பெயரும் மக்களிற் பெண்பாற் குரித்து என்றவாறு. (சுஉ)

சு௦எ. எருமையும் மரையும் பெற்றமும் நாகே.

(இ - ள்.) எருமை முதலாகச் சொல்லப்பட்ட மூன்றற்கும் நாகு என்னும் பெண்பெயர் உரித்து என்றவாறு. (சுங)

சு௦அ. நீர்வாழ் சாதியுள் நந்தும் நாகே.

(இ - ள்.) நீர்வாழ்வனவற்றுள் நந்தென்பதூஉம் நாகு என்னும் பெண்பெயர் பெறும் என்றவாறு. (சுச)

---

(பாடம்) * பெண்பாலான - என்பது பேராசிரியர் பாடத்தின்று.
† பிணவும்.

சூ௫௯. மூடுங் கடமையும் யாடல பெறூஉ.

(இ - ள்) மூடும் கடமையும் ஆட்டின் பெண்பால என்றவாறு. (௬௪)

சூ௬௦. பாட்டி என்ப பன்றியும் நாயும்.

(இ - ள்.) பாட்டி என்னும் பெயர் பன்றியின தூஉம் நாயின தூஉம் பெண்பெயர்க்குரிய என்றவாறு. (௬௬)

சூ௬௧. நரியும் அற்றே நாடினர் கொளினே.

(இ - ள்.) நரியும் பெண்பாற்குப் பாட்டி என்னும் பெயர் பெறும் என்றவாறு. (௬௭)

சூ௬௨. குரங்கு முசுவும் ஊகமும் மந்தி.

(இ - ள்.) குரங்கு முதலாயின மூன்றும் பெண்பால் மந்தி என்னும் பெயர்பெறும் என்றவாறு.

இத்துணையுங் கூறப்பட்டன பெண்பாற் பெயராவன : யானையுட் பெண் பிடி; ஒட்டகம்-பெட்டை; குதிரை-பெட்டை; கழுதை-பெட்டை; மரை-பெட்டை; நாகு, ஆ; புள்ளு-பெட்டை, பேடை, பெடை; கோழி - அளகு; கூகை, மயில் - அளகு; புல்வாய் - பிணை; பிணா, பிணவு, பிணவல்; நவ்வி-பிணை; உழை, கவரி-பிணை; பன்றி-பிணவு, பிணவல், பாட்டி; நாய்-பிணவு, பிணவல், பாட்டி; பெற்றம்-ஆ, நாகு; எருமை-ஆ, நாகு; மக்கள்-பெண், பிணவு; நந்து-நாகு; ஆடு-மூடு, கடமை; நரி-பாட்டி; குரங்கு-முசு, ஊகம், மந்தி எனவரும்.

இந்நூனுள் எடுத்தோதாதன சான்றோர் செய்யுளகத்துக் கண்டு கொள்க. வழக்கினுள்ளும் வந்தவாறு கண்டுகொள்க. (௬௮)

சூ௬௫. குரங்கினுள் ஏற்றைக்* கடுவன் என்றலும்
மரம்பயில் கூகையைக் கோட்டான் என்றலும்
செவ்வாய்க் கிள்ளையைத் தத்தை என்றலும்
வெவ்வாய் வெருகினைப் பூசை என்றலும்
குதிரையுள் ஆணினைச் சேவல் என்றலும்
இருள்நிறப் பன்றியை ஏனம் என்றலும்
எருமையுள் ஆணினைக் கண்டி என்றலும்
முடிய வந்த வழக்கின்† உண்மையிற்
கடிய லாகா கடனறிந் தோர்க்கே.

இது அதிகாரப் புறனடை.

(இ - ள்.) குரங்கு முதலாகச் சொல்லப்பட்டவற்றை இப் பெயரான் உலகத்தார் வழங்குதலின் ஈண்டோதிய இலக்கணத்

(பாடம்) * ஏற்றினைக். † அவ்வழக்கு.

தின் மாறுபட்டு வருவன வழக்கினுஞ் செய்யுளினும் அடிப்பட்டு வரின் வழுவென்று கடியப்படா வென்றவாறு. (சுசு)

சுகச. பெண்ணும் ஆணும் பிள்ளையும் அவையே.

(இ - ள்.) பெண்ணும், ஆணும், பிள்ளையும் பற்றிவருஞ் சொல் மேலெடுத்தோதினவை என்றவாறு.

இனிச் சிறப்புவிதியுடைய அந்தணர்க் குரியன கூறப்படுகின்றது. (எ0)

சுகரு. நூலே கரகம் முக்கோல் மணையே
ஆயுங் காலை அந்தணர்க் குரிய.

(இ - ள்.) நூலும் கரகமும் முக்கோலும் மணையும் ஆராயுங்காலத்து அந்தணர்க்கு உரிய என்றவாறு (எக)

சுகசு. படையுங் கொடியுங் குடையும் முரசும்
நடைநவில் புரவியுங் களிறுந் தேரும்
தாரும் முடியும் நேர்வன பிறவும்
தெரிவுகொள் செங்கோல் அரசர்க் குரிய.

(இ - ள்.) படை - கருவி. படை முதலான ஒன்பதும் செங்கோலும் பிறவுமென்றதனுன் ஆரமுங் கழலு மெல்லாம் அரசர்க் குரிய என்றவாறு. (எஉ)

சுகஎ. அந்த ணாளர்க் குரியவும் அரசர்க்கு
ஒன்றிய வரூஉம் பொருளுமா ருளவே.

(இ - ள்.) அவை நாலுதொழில்: ஈதல் வேட்டல் வேட்பித்தல் ஓதல். (எங)

சுகஅ. *பரிசில் பாடாண் திணைத்துறைக் கிழப்பெயர்†
நெடுந்தகை செம்மல் என்றிவை பிறவும்
பொருந்தச் சொல்லுதல் அவர்க்குரித் தன்றே.

(இ - ள்.) இப்பொருண்மையும் அரசர்க்கு முரித்து அந்தணர்க்கு முரித்து என்றவாறு. (எச)

---

* பாடாண்திணைத் துறைப்பெயர் என்னுது கிழமைப்பெயர் என்றது என்னையெனின், அவை ஐந்திணைப் பெயராகி வருங்காலும் அவர்க்கு உரிய அல்ல என்றற்கு; எனவே அரசர்க்காயின் இவை எல்லாம் உரிய என்ப ஆயிற்று. (தொல். பொருள். சுஉஅ. பேரா.)

(பாடம்) † துறைக் கிழமைப்பெயர்.

௬௧௯. ஊரும் பெயரும் உடைத்தொழிற் கருவி*யும்
யாரும் சார்த்தி அவையவை பெறுமே.

(இ - ள்.) நகரும் தமது இயற்பெயரும் சிறப்புப்பெயரும் தத்தம் தொழிற்கேற்ற கருவியும் எல்லாரையுஞ் சார்த்தி, அவையவை வருதல் பெறும் என்றவாறு. (எ௫)

௬௨௦. தலைமைக் குணச்சொலுந் தத்தமக் குரியதோர்
நிலைமைக் கேற்ப நிகழ்த்துப என்ப.

(இ - ள்.) தலைமைக் குணமுடையராகக் கூறுதலும் தத்தமக்கேற்ற நிலைமைக்குப் பொருந்துமாறு நிகழ்த்துப என்றவாறு.

எனவே இறப்பவுயர்தல் இறப்பவிழிதல் ஆகாதென்றவாறும். (எ௬)

௬௨௧. இடையிரு வகையோர் அல்லது நாடிற்
படைவகை பெறாஅர் என்மனார் புலவர்.

(இ - ள்.) அரசரும் வணிகரும் அல்லாதோர்க்குப் படைக்கலவகை கூறப்பெறார் என்றவாறு (எஎ)

௬௨௨. வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை.

(இ - ள்.) வைசிகன் வாணிகத்தான வாழும் வாழ்க்கையைப் பெறும் என்றவாறு. (எ௮)

௬௨௩. மெய்திரி வகையின் எண்வகை உணவின்
செய்தியும் வரையார் அப்பா லான.

(இ - ள்) எண்வகை உணவாவன : நெல்லு, காணம், வரகு, இறுங்கு, தினை, சாமை, புல்லு, கோதும்பை.

இவையிற்றை உண்டாக்குகின்ற உழவுத்தொழிலும் வாணிகர்க்கு வரையாரென்றவாறு. (எ௯)

௬௨௪. கண்ணி†யுந் தாரும் எண்ணினர் ஆண்டே.

---

* 'உடைத் தொழிற் கருவி' என்பன அந்தணாளர்க்குச் சுருவையும் சமிதை குறைக்கும் கருவியும் முதலாயின; அரசர்க்குக் குடியும் கூழும் அமைச்சும் நட்பும் முதலாயின; வணிகர்க்கு நாவாயும் மணியும் மருந்தும் முதலாயின; வேளாளர்க்கு நாஞ்சிலும் சகடமும் முதலாயின.. (தொல் பொருள் - ௬௨௧. பேரா.)

† 'கண்ணி' என்பது சூடும்பூ. தார் என்பது ஒரு குடிப்பிறந்தார்க்கு உரித்தென வரையறுக்கப்படுவதாயிற்று. எண்ணப்படும் எனவே அவரவர்க் குரியவாற்றால் பலவாகி வரும். அவை வந்தவழிக் கண்டுகொள்க. (தொல். பொருள். ௬௩௪. பேரா.)

(இ - ள்.) வைசிகருக்குங் கண்ணியுந் தாருஞ் சொல்லப் பெறு மென்றவாறு. (அ௦)

சூ௨௫. *வேளாண் மாந்தர்க் குழுதூ ணல்லது
இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி.

(இ - ள்.) என்றது வேளாண் மாந்தர்க்குத் தொழில் உழவே என்றவாறு. (அக)

சூ௨௬. வேந்துவிடு தொழிலிற் படையுங் கண்ணியும்
வாய்ந்தனர் என்ப அவர்பெறும் பொருளே.

எய்தியதன்மேற் சிறப்புவிதி.

(இ - ள்.) வேந்தரால் ஏவப்பட்ட தொழிலினானே படையுங் கண்ணியும் வேளாண்மாந்தர்க்கும் உளதாகு மென்றவாறு. (அ௨)

சூ௨எ. அந்த ணாளர்க் கரசுவரை வின்றே.

(இ - ள்.) அமாத்திய நிலையும் சேனாபதி நிலையும் பெற்ற அந்தணாளர்க்கு அரசர் தன்மையும் வரைவில வென்றவாறு.

அஃதாவது மந்திரி புரோகிதனாகியவழிக் கொடியுங் குடையுங் கவரியுந் தாரு முதலாயின அரசராற்பெற்று அவரோடு ஒரு தன்மைய ராகி யிருத்தல். (அங)

சூ௨அ. வில்லும் வேலுங் கழலுங் கண்ணியும்
தாரும் ஆரமுந் தேரு மாவும்
மன்பெறு மரபின் ஏனோர்க் குரிய.

(இ - ள்.) வில்லு முதலாகச் சொல்லப்பட்டனவெல்லாம் மன்னனாற்பெற்ற மரபினால் வைசிகர்க்கும் வேளாளர்க்குமுரிய என்றவாறு. (அச)

சூ௨௯. அன்ன ராயினும் இழிந்தோர்க் கில்லை.

---

*பார்ப்பியலும் அரசியலும் வாணிகத் தொழிலுமாகிப் பொதுப்பட நின்ற ஓதலும் வேட்டலும் ஈதலும் இவர்க்கு ஒத்த சிறப்பினவாகலானும் அவருள் வணிகர்க்கும் ஒழிந்த வேளாளர்க்கும் ஒத்த செய்தியனவாகிய உழவுத் தொழிலும் நிரைகாத்தலும் வாணிகமும் என்பன அவற்றின் ஒத்தசிறப்பின அன்றி அவற்றுள்ளும் ஒரோ ஒன்று ஒரோ வருணத்தார்க்கு உரியவாமாகலானும் ஈண்டு அவை விதந்து கூறினான் என்பது. நிரை காவலும் உழவுத்தொழிலும் வணிகர்க்கும் வேளாளர்க்கும் தடுமாறுதல் போலாது வாணிக வாழ்க்கை வேளாண்மாந்தர்க்குச் சிறுவரவிற்றெனவும், உழுதுண்டல் வணிகர்க்குச் சிறுவரவிற்றெனவும், எண்வகைக் கூலத்தோடுபட்டதே பெருவரவிற்றெனவும் கூறினான், இச் சூத்திரங்களான் என்பது. (தொல். பொருள். சூ௬௫. பேரா.)

(இ - ள்.) அன்னர்தா மிழிந்தோராயினும் மேற்சொல்லப்பட்ட மன்னனால் வில்லு முதலாயின பெற்ற மரபினராயினும் நான்கு குலத்திலும் இழிந்த மாந்தர்க்கு அவை உளவாகக் கூறப்படா வென்றவாறு. எனவே அவரவர்க் குரியவாற்றாற் கூறப்பெறு மென்றவாறு. (௮௫)

௬௩௦. புறக்கா ழனவே*புல்லெனப்† படுமே.

(இ - ள்.) ஓரறிவுடையன புறவயிர்ப்புடையனவற்றைப் புல் என்று சொல்லுவர் என்றவாறு.

அவையாவன : தெங்கு, பனை, கமுகு, மூங்கில் முதலாயின. (௮௬)

௬௩௧. அகக்கா ழனவே மரமெனப் படுமே.

(இ - ள்.) உள்வயிர்ப் புடையனவற்றை மரமெனப்படு மென்றவாறு (௮௭)

௬௩௨. தோடே மடலே ஓலை என்றா
ஏடே இதழே பாளை என்றா
ஈர்க்கே குலையே நேர்ந்தன பிறவும்
புல்லொடு வருமெனச் சொல்லினர் புலவர்.

(இ - ள்.) தோடு முதலாகச் சொல்லப்பட்ட உறுப்பின் பெயரெல்லாம் புல்லாகிய உறுப்பின்கண்ணே வருமென்றவாறு.

இதனானே புறவயிர்ப்பும் உள்வயிர்ப்புமில்லாதனவற்றுள் ஒருசாரன இவ்வகைப்பட்ட உறுப்புப்பெயருடையனவாகி இவையும் புல்லெனப் படும் என்றவாறு.

அவையாவன : வாழை ஈந்து தாமரை கழுநீர் என்றித் தொடக்கத்தன. (௮௮)

௬௩௩. இலையே முறியே தளிரே தோடே
சினையே குழையே பூவே அரும்பே

---

* 'புறக்காழன' எனவே, அவ்வழி வெளிறென்பது அறியப்படும். அவை பனையும் தெங்கும் கமுகும் முதலாயின புல் எனப்படும்; இருப்பையும் புளியும் ஆச்சாவும் முதலாயின மரம் எனப்படும்; இங்ஙனம் வரையறைகூறிப் பயந்ததென்னை? புறத்தும் அகத்தும் கொடி முதலாயின காழ்ப்பின்றியும் அகில்மரம் போல்வன இடையிடை பொய்பட்டும் புல்லும் மரனும் வருவன உள. (தொல். பொருள். ௬௪௦. பேரா.)

(பாடம்) † புல்லென மொழிப.

நனையே உள்ளுறுத் தனையவை யெல்லாம்
மரனொடு வரூஉங் கிளவி* 'என்ப.

(இ - ள்.) இலை முதலாகச் சொல்லப்பட்ட உறுப்புப்பெயர் மரத்துக்கு அங்கமாம் என்றவாறு.

இதனானே புறவயிர்ப்பும் உள்வயிர்ப்பும் இல்லாதனவற்றுள் ஒரு சாரன இவ்வுறுப்புப்பெயர் உடையன மரமெனப்படுமென்று கொள்க.

அவையாவன : முருக்கு தணக்கு முதலாயின. (அக)

௬௩௪ காயே பழமே தோலே செதிளே
வீழொ டென்றாங் கவையும் அன்ன.

(இ - ள்.) இச்சூத்திரம் அவ்விருவகைக்கும் பிறகூறலிற் காய் முதலாகச் சொல்லப்பட்ட அவ்வுறுப்புப்பெயர் அவ்விரு வகைக்கும் பொதுவெனப்படு மென்றவாறு.

தாழை பூவுடைத் தாகலானும் கோடுடைத் தாகலானும் புறவயிர்ப் பின்மையானும் மரமெனப்படு மாயினும் புல் என்றல் பெரும்பான்மை. (௯0)

௬௩௫. †நிலம்தீ நீர்வளி விசும்போ டைந்துங்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்
இருதிணை ஐம்பால் இயனெறி வழாமைத்
திரிவில் சொல்லொடு தழாஅல் வேண்டும்.

என்—எனின். இதுவுமோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) உலகு நிலமுதலாகிய ஐம்பெரும்பூதங் கலந்த மயக்கமாதலான் மேற்சொல்லப்பட்ட பொருள்களைத் திணையும் பாலும் வழாமல் திரிபுபடாத சொல்லோடே தழுவுதல் வேண்டும் என்றவாறு.

---

* 'மரனொடு வரூஉம் கிளவி' என மிகைபடக் கூறியது என்னை யெனின், அம்மிகையானே எடுத்தோதிய புறக்காழனவும் அகக்காழனவு மன்றி அவற்றோடு தழீஇக் கொள்ளப்படுவனவும் எல்லாம் இவற்றுக்கு உரிய என்பது கொள்க. அவை ஊகம் புல்லும் சிழகம் புல்லும் பஞ்சாய் முதலியனவும் புழற்கால் ஆம்பல் முதலியனவும் புல்லெனப்பட்டு அடங்கி அவற்றின் பெயரும் பெறும் என்பது. (தொல். பொருள். ௬௪௨. பேரா.)

† நிலம், நீர், தீ, வளி, ஆகாயம் என ஒன்று ஒன்றனுள் அடங்கும் முறையால் கூறுதல் செய்யாது மயங்கக் கூறியது என்னையெனின், அவை கலக்குங்கால் ஒரோ பொருளின் கண்ணும் அம்முறையானே நிற்கும் கொல் என்று கருதினும் கருதற்க, மயங்கி நிற்கும் என்றற்கு அவ்வாறு கூறினன் என்பது. (தொல். பொருள். ௬௪௪ பேரா.)

கலத்தலாவது முத்தும் பவளமும் நீலமும் மாணிக்கமும் விரவினாற் போறல்.

மயக்கமாவது பொன்னும் வெள்ளியும் செம்பும் உருக்கியொன்றுதல் போறல்.

உலகமென்றது உலகினையும் உலகினுட் பொருளையும். உலகமாவது முத்தும் மணியுங் கலந்தாற்போல நிலம் நீர் தீ வளி ஆகாயம் என விரவிநிற்கும். உலகினுட் பொருள் பொன்னும் வெள்ளியும் செம்பும் உருக்கி யொன்றுனாற்போல வேற்றுமைப்படாது நிற்கும். அவ்விரண்டினையும் உலகம் உடைத்தாகலிற் கலந்த மயக்கமென்றார்.

இப்பொருள் எல்லா வுலகத்தையும் விட்டுநீங்காமையின் இவற்றை ஒருமுகத்தான் நோக்க வேறுபாடிலவா மாதலான் மேற்கூறிப்போந்த முறையினான் வேறுபடுத்து இருதிணையாகவும் ஐம்பாலாகவும் இயன்ற நெறி வழுவாமைத் திரிபுபடாத சொல்லோடே புணர்க்க என்றவாறும்.

உதாரணம்

சாத்தன் சோற்றை உண்டான் என்பது. இது உண்டற் குரியானெனக் கூறுதலின் மரபாயிற்று. அஃதேல் வழாமை நழால்வேண்டுமெனக் கருதியபொருள் முடியும்: திரிவில்சொல் என்றது மிகையெனின், ஒக்கும். குழவி என்பது உயர்திணைக்கண் வரின் அதற்குரிய பாலாற் கூறாது அஃறிணைக்குரிய பாலாற் கூறப்படுதலின் அவ்வகையான் வருவன வழுவாயினும் திரிவில்சொல் என்றதனான் இதுவும் அடக்கிக் கூறினார். (௬௧)

௬௩௬. மரபுநிலை திரிதல் செய்யுட் கில்லை
மரபு வழிப்பட்ட சொல்லினான.

என்—எனின். செய்யுட் குரியதோர் மரபுஉணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஈண்டுச் சொல்லப்பட்ட மரபுநிலையிற் றிரிதல் செய்யுட்கில்லை; மரபு வழிப்பட்ட சொல்லினாற் செய்யவேண்டுதலின் என்றவாறு.

எனவே யாதானும் ஒரு செய்யுளும் ஈண்டோதிய மரபினாற் செய்ய வேண்டும் என்றவாறும்.

செய்யுட்கில்லை எனவே வழக்கினுட் சில திரியவும் பெறும். அவை வழக்கினுள் ஆணினைப் போத்தென்றல் போல்வன. (௬௨)

௬௩௭. மரபுநிலை திரியிற் பிறிது பிறிதாகும்.

(இ - ள்.) மரபுநிலை திரிந்துவரிற் பொருள் வேறுவேறாகுமென்றவாறு.

எனவே வழுவென்றவாறும். (௬௩)

௬௩௮. * வழக்கெனப் படுவ துயர்ந்தோர் மேற்றே
நிகழ்ச்சி அவர்கட் டாக லான.

என்—எனின். ஐயமறுத்தலை நுதலிற்று.

(இ - ள்.) வழக்கென்று சொல்லப்பட்டது உயர்ந்தோர் மேலது; நூலின் நிகழ்ச்சி அவர்மாட்டாதலான் என்றவாறு.

மரபுநிலை திரிதல் செய்யுட் கில்லையெனவும் "அதனானே வழக்கிற் சிறுபான்மை வருமெனவும் செய்யுள் மரபு ஒழியவரின் அது வழுவா மெனவும் கூறினாராயிற் பாயிரத்துள் 'வழக்குஞ் செய்யுளு மாயிரு முதலி னெழுத்துஞ் சொல்லும் பொருளு நாடி' என்றதனோடு மாறுகொள்ளு மோவென ஐயுற்றார்க்கு ஆண்டு வழக்கென்று சொல்லப்பட்டது உயர்ந்தோர் வழக்கினை எனவும் இழிந்தோர் வழக்கு வழக்கெனப்படா தென வும் கூறியவாறு. (௬௪)

௬௩௯. மரபுநிலை திரியா மாட்சிய வாகி
உரைபடு நூல்தாம் இருவகை நிலைய
முதலும் வழியுமென நுதலிய நெறியின.

என்—எனின். மேற் செய்யுளியலுள் தோற்றுவாய் செய்தநூலை இலக்கண வகையான் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) மரபாவது நூற்கு இன்றியமையாத இயல்பு. அவ்வியல்பு திரியாத மரபுடைத்தாகி உரைக்கப்படும் நூல்தாம் இருவகைய; முதனூல் எனவும் வழி நூல் எனவும் என்றவாறு.

உரைக்கவென்பது விகாரத்தால் தொக்கது.

அது வருகின்ற சூத்திரத்தாற் கூறுப.

சார்புநூல் என்பதும் ஒன்றுண்டாலெனின், அஃது இருவர் ஆசிரி யர் கூறியவதற்கு உடம்பட்டு வருதலின் அதுவும் வழிநூலென அடங் கும்: எதிர் நூல் என்பதும் ஒன்றுண்டு. அதுவும் ஒரு முனைவனாற் செய்யப்படின் முதனூலாம்; பிறர் செய்யின் வழங்காது. (௬௫)

௬௪௦. வினையின்† நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதனூ லாகும்.

என்—எனின். நிறுத்தமுறையானே முதனூலாமாறு உணர்த் துதல் நுதலிற்று.

சூத்திரத்தாற் பொருள் விளங்கும். (௬௬)

---

* அவரையே நோக்குதல் என்பது அவர் ஆணையான் உலக நிகழ்ச்சி செல்கின்ற தென்றவாறு. எனவே உயர்ந்தோர் எனப்படுவார் அந்தண ரும் அவர்போலும் அறிவுடையோரும் ஆயினர் என்பது. (தொல். பொருள். ௬௪௭. பேரா.)

† வினை என்பன இரு வினை. 'இன்' நீக்கத்துக்கண் வந்தது. 'விளங் கிய அறிவு' என்பது முழுதும் உணரும் உணர்ச்சி. அறிவின் என நின்ற 'இன்' சாரியை. இன்ன அறிவினொடு கூடிய முனைவன் அறிவின் முனை வன் எனப்படும். முன்னோனை முனைவன் என்பது ஓர் சொல் விழுக் காடாம். (தொல். பொருள். ௬௪௯. பேரா.)

சூ௪௧. வழியெனப் படுவ ததன்வழித் தாகும்.

என்—எனின். வழிநூல்ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) வழிநூல் எனப்படுவது முதல்வன் கண்ட நூல்வழியே செய்வது என்றவாறு.

அஃதேல், இதனாற் பயன் என்னையெனின், அது வருகின்ற சூத்திரத்தான் விளங்கும். (௧௭)

சூ௪௨. வழியின் நெறியே நால்வகைத் தாகும்.

என்—எனின். வழிநூல் பாகுபடுமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) வழிநூல் எனப்படுவது நான்கு வகைப்படும் என்றவாறு.

அது முன்னர்க் கூறுதும். (௧௮)

சூ௪௩. தொகுத்தல்* விரித்தல் தொகைவிரி மொழிபெயர்த்
ததர்ப்பட யாத்தலோ டனைமர பினவே.

என்—எனின். வழிநூல் வகையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

---

முனைவனால் செய்யப்படுவதோர் நூல் இல்லை என்பார் அவன்வழித் தோன்றிய நல்லுணர்வுடையார் அவன்பால் பொருள்கேட்டு முதனூல் செய்தார் எனவும் அம்முனைவன் முன்னர் ஆகமத்துப் பிறந்ததோர் மொழியைப்பற்றி அனைத்துப் பொருளுங்கண்டு பின்னர் அவற்றவற்றுக்கு நூல் செய்தார் அவர் எனவும், அவ்வாகமத்தினையே பிற்காலத்தாரும் ஒழுக்கம் வேறுபடுந்தோறும் வேறுபடுத்து வழிநூலும் சார்புநூலும் எனப் பலவுஞ் செய்தார் எனவும் கூறுப. அவை எவ்வாற்றானும் முற்ற உணர்ந்தோர் செய்தநூல் அன்மையின் அவை தேறப்படா;...... அவை தமிழ் நூல் அன்மையின் ஈண்டு ஆராய்ச்சி இல என்பது.

மற்று, மேலைச்சூத்திரத்து நுதலிய நெறியானே முதலும் வழியுமாமெனவே எல்லார்க்கும் முதல்வனாயினான் செய்தது முதனூலேயாமென்பது பெறுதுமாகலின், ஈண்டு இச்சூத்திரங் கூறியதென்னையெனின்.—தாமே தலைவராவாரும் அத்தலைவரை வழிபட்டுத் தலைவராயினாரும் பலராகலின் தாமே தலைவராயினார் நூல்செய்யின் முதனூலாவதெனின், அற்றன்று, தாமே தலைவராயினார் முற்காலத்துத் தமிழ்நூல் செய்திலராதலின்; தலைவர் வழிநின்று தலைவனாகிய அகத்தியனால் செய்யப்பட்டதும் முதனூல் என்பது அறிவித்தற்கும். பிற்காலத்துப் பெருமான் அடிகள் களவியல் செய்தாங்குச் செய்யினும் பிற்காலத்தானும் முதனூலாவதென்பது அறிவித்தற்கும். அங்ஙனம் 'வினையினீங்கி விளங்கிய அறிவினன்' முதனூல் செய்தான் என்பது அறிவித்தற்கும் இது கூறினான் என்பது. எனவே, அகத்தியமே முற்காலத்து முதனூலென்பதூஉம். அதன்வழித்தாகிய தொல்காப்பியம் அதன் வழிநூலென்பதூஉம் பெற்றாம். (தொல் பொருள். ௬௪௯ பேரா.)

*இனிப் படர்ந்துபட்ட பொருண்மையவாகிய மாபுராணம், பூதபுராணம் என்பன சில்வாழ்நாட் சிற்றறிவின் மாக்கட்கு உபகாரப்படா

(இ - ள்.) முதனூலாசிரியன் விரித்துச் செய்ததனைத் தொகுத்துச் செய்தலும், தொகுத்துச் செய்ததனை விரித்துச் செய்தலும், அவ்விருவகையினையும் தொகைவிரியாகச் சொல்லுதலும், வடமொழிப் பனுவலை மொழிபெயர்த்துத் தமிழ்மொழியாற் செய்தலும் என்றவாறு.

இது வழிநூலாகுைய பயன். (௬௬)

௬௪௪. ஒத்த* சூத்திரம் உரைப்பிற் காண்டிகை
மெய்ப்படக் கிளந்த வகைய தாகி
ஈரைங் குற்றமும் இன்றி நேரிதின்
முப்பத் திருவகை உத்தியோடு புணரின்
நூலென மொழிப நுணங்குமொழிப் புலவர்.

என்—எனின். நூற்கு இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) இனி, ஒத்த சூத்திரத்தானும் காண்டிகையானும் பொருண்மேற கூறிய வகையுடைத்தாகிப் பத்துக்குற்றமும் இன்றி நுண்ணிதாகிய முப்பத்திரண்டு வகைப்பட்ட தந்திர வுத்தியோடு புணருமாயின் நூலெனச் சொல்லுவர் புலவர் என்றவாறு.

உரைப்பின் என்பதனை முன்னே கூட்டி நாலுரைப்பின் எனப் பொருளுரைக்க அவையாமாறு முன்னர்க் காட்டுதும். (௧௦௦)

---

மையின், தொகுத்துச் செய்யப்பட்டு வழக்கு நூலாகிய தொல்காப்பியம் இடைச்சங்கம் முதலாக இன்றுகாறும் உளதாயிற்றெனக் கொள்க. (தொல். பொருள். ௬௫௨. பேரா )

*ஒத்த சூத்திரம் என்றதனுன் நூலின் வேறாகிய இருவகைப் பாயிரமும் சூத்திரத்தோடு ஒத்த இலக்கணத்த என்பது கொள்க. உரைப்பின் என்றதனுன் 'உண்ணின்றகன்ற உரையொடு பொருந்தி' வருதலை நூல் இலக்கணம் எனச் செய்யுளியலுள் கூறிப்போந்தாம். அங்ஙனம் வேறாகிப் பொருந்திவரும் எனப்பட்ட உரையின்றிச் சூத்திரத்தானே பொருள் நிகழ்ந்த காலமும் உண்டென்பதாம்

'ஒத்த' என்றதனுல் பொதுப்பாயிரமும் சிறப்புப் பாயிரமும் சூத்திரமும் தம்மின் வேறு என்றலும், அவ்விருவகைப் பாயிர உரையும் சூத்திர உரையும் வேறு எழுதப்படும் என்றலும், சூத்திர உரையுள் பாயிர உரை மயங்கிவருவன உள என்றலும், அவ்விருவகை உரைக்கும் வேறாயினும் அவ்வுரை செய்தான் பெயர் கூறுதல் முதலாகிய பாயிர உரை கூற அமையும் என்றலும், சூத்திரம்தானே பாயிரம் இல்லாத வழிப் பாயிரம் போல நூல்முகத்து நிற்குமென்றலும், அங்ஙனம் நின்றவழிப் பொதுப் பாயிரமும் சிறப்புப் பாயிரமும் உரை வகைத்தால் பெய்துரைத்தலும், அவ்விருவகைப் பாயிரமும் செய்தார் இன்னர் என்றலும் என்று இன்னோரன்ன கோடலாயிற்று.

வட'வேங்கடந் தென்குமரி' என்னும் சிறப்புப்பாயிரம் செய்தார் பனம்பாரனர் எனவும் 'வலம்புரி முத்திற் குலம்புரி பிறப்பும்' என்னும் பொதுப்பாயிரம் செய்தான் ஆத்திரையன் பேராசிரியன் எனவும் பாயிரம் செய்தான் பெயர் கூறியவாறு. (தொல். பொருள். ௬௫௩. பேரா.)

சூ௪௫. உரையெடுத்* ததன்முன் யாப்பினுஞ் சூத்திரம்
புரைதப உடன்பட்க் காண்டிகை புணர்ப்பினும்
விதித்தலும் விலக்கலும் எனவிரு வகையொடு
புணர்ந்தவை நாடிப் புணர்க்கவும் பெறுமே.†

இதுவுமது.

(இ - ள்.) சூத்திரத்தின் முன்னர் உரையை விரித்துரைக்கு மிடத்துஞ் சூத்திரப் பொருள் விளங்கக் காண்டிகை புணர்க்கு மிடத்தும் ஆசிரியன் இப்பொருள் இவ்வாறு கூறல்வேண்டுமென விதித்தலும் இப்பொருள் இவ்வாறு கூறப்பெறுனென விலக்கலு மாகிய இருவகையோடே கூடப் பொருந்தினவவை ஆராய்ந்து புணர்க்கவும் ஆம் என்றவாறு.

இதனுற் சொல்லியது ஆசிரியன் சொன்ன சூத்திரத்தினைக் குறை படக்* கூறினுனென்றல் அமையாமையானும் அவன் கூறுகின்ற பொரு ளினை நிலைபெறுத்தற்குப் பிறிதொன்றை விரித்தோதிய நெறியை விலக்கி யும் பொருள் உரைத்துக்கொள்ளப்படுமென்றவாறு.

செய்யுளியலுள்,

நூலெனப் படுவது நுவலுங் காலை
முதலும் முடிவும் மாறுகோ ளின்றித்
தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி
உண்ணின் றகன்ற உரையொடு பொருந்தி
நுண்ணிதின் விளக்கல் அதுவதன் பண்பே.

(செய்யுளியல். ௧௬௧)

என்று கூறுதலின் இதுவும் இலக்கணமாகக் கொள்க. (௧0௧)

சூ௪௬. மேற்கிளந் தெடுத்த யாப்பினுட் பொருளொடு
சிலவகை எழுத்தின் செய்யுட் டாகிச்
சொல்லுங் காலை உரையகத் தடக்கி
நுண்மையொடு புணர்ந்த‡ ஒண்மைத் தாகித்
துளக்கல் ஆகாத் துணைமை யெய்தி

* அஃதாவது காண்டிகைப்பகுதி இரண்டற்கும் விடுத்தலும் விலக் கலும் உடையோர் குறிப்பினுற் கொள்ளவைத்தலும் ஒழிந்த உரையிரண் டன் கண்ணும் அவை கூற்றினுற் கொள்ளவைத்தலும் என உணர்க. (தொல். பொருள். சுடுச. பேரா.)

(பாடம்) † படுமே.

‡ தொகை மரபினுள்ளும் உயிர்மயங்கியலினுள்ளும் புள்ளிமயங்கியலி னுள்ளும் புணரியலினுள்ளும் பரந்துபட்ட பொருளினை நுழைந்து வாங் கிக்கொள்ள வைத்தமையின் நுண்மையொடு புணர்ந்ததூஉமாயிற்று. இச் சூத்திரம் பொருள் உரைத்தவழியும் வெள்ளிதன்றி உள்ளுடைத்தாகலின் நுண்மை உடைத்தெனவும் பட்டது. (தொல். பொருள். சுடுடு. பேரா.)

அளக்சல் ஆகா அரும்பொருட் டாகிப்
பல்வகை யானும் பயன்தெரி புடையது
சூத்திரத் தியல்பென யாத்தனர் புலவர்.

என்—எனின். நூற்கு அங்கமாகிய சூத்திரத்திலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) மேல் 'தொகுத்தல்' விரித்தல் தொகைவிரி மொழிபெயர்த்து அதர்ப்பட யாத்தல் என நால்வகையினும் சொல்லப்பட்ட பொருளோடு, சிலவெழுத்தினான் இயன்ற செய்யுட்டாகி, உரைக்குங்காலத்து அவ்வுரையிற் பொருளெல்லாம் தன்னகத்தடக்கி, நுண்ணிய பொருண்மையொடு பொருந்திய விளக்கமுடைத்தாகி, கெடுக்கலாகாத துணைச்சூத்திரங்களையுடைத்தாகி வரையறுக்கப்படாத அரிய பொருளையுடைத்தாகிப் பலவாற்றானும் பயனையாராய்தல் உடையது சூத்திரம் எனக் கூறினார் புலவர் என்றவாறு.

அளக்கலாகா அரும்பொருளாவது பலமுகத்தானும் பொருள் கொள்ளக்கிடத்தல்.

செய்யுளியலுள்,

சூத்திரந் தானே
ஆடி நிழலின் அறியத் தோன்றி
நாடுத லின்றிப் பொருள்நனி விளங்கி
யாப்பினுள் தோன்ற யாத்தமைப் பதுவே.
(செய்யுளியல். ௧௬௨)

என்பதூஉம் இதற் கிலக்கணம். (௧0௨)

௬௪௭. பழிப்பில் சூத்திரம் பட்ட பண்பிற்
கரப்பின்றி முடிவது காண்டிகை யாகும்.

என்—எனின். காண்டிகை யாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) குற்றமில்லாத சூத்திரஞ்சொன்ன இயல்பினான் மறைவின்றி விளக்குவது காண்டிகையாமென்றவாறு. (௧0௩)

௬௪௮. விட்டகல் வின்றி* விரிவொடு பொருந்திச்
சுட்டிய சூத்திர முடித்தற் பொருட்டா

---

* இது மெய்ந்நெறி என்பது சூத்திரத்துச் சொல்லிற்கருதிய பொருள் இலக்கணம். அதனை அவன் வேண்டியாங்குச் சொல்லி முடிப்பின் அல்லது சூத்திரத்துச் சொற்கண் வந்த சொல்லாராய்ச்சியும், எழுத்தாராய்ச்சியும் அறியவேண்டுவன எல்லாம் சொல்லார் என்பது கருத்து. இதனை ஈற்றுக்கண் வைத்ததனானே வருகின்ற உரையும் இங்ஙனம் விட்டு அகல்வின்றி வருதலுடைத்தெனக் கொள்க. (தொல். பொருள். ௬௫௭. பேரா.)

ஏது நடையினும் எடுத்துக் காட்டினும்
மேவாங் கமைந்த மெய்ந்நெறித் ததுவே.

இதுவுமது

(இ - ள்.) சூத்திரத்திற்படுஞ் சொற்பொருளை விட்டுநீங்குத லின்றி விரிவோடே பொருந்திக் குறித்த சூத்திர முடித்தற்காக ஏது நெறியானும் எடுத்துக் காட்டினானும் பொருந்தியாங்கமையும் பொருணெறியை யுடைத்துக் காண்டிகை யென்றவாறு.

விட்டகல்வின்றி விரிவொடு பொருந்தலாவது மிக அகலாமை. இம் மலை நெருப்புடைத் தென்றது சூத்திரப்பொருள்; புகையுடைத்தாதலா னென்பது ஏது? அடுக்களைபோலவென்பது எடுத்துக்காட்டு. இவ்வகையினாற் சூத்திரப் பொருளுரைக்க வென்றவாறு. (கO௭)

சூ௬௯. சூத்திரத் துட்பொரு ளன்றியும்* யாப்புற
இன்றி யமையா தியைபவை எல்லாம்
ஒன்ற உரைப்ப துரையெனப் படுமே.

உரையாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) சூத்திரத்துட் பொருளொழியவும் அந்நூலகத்தில் யாப்பிற்கும் பொருந்த இன்றி யமையாதனவெல்லாங் கொணர்ந்து பொருந்த உரைப்பது உரையாகு மென்றவாறு. (கO௮)

சூ௱௦. மறுதலைக் கடாஅ† மாற்றமு முடைத்தாய்த்
தன்னூ லானும் முடிந்தநூ லானும்
ஐயமு மருட்கையுஞ் செவ்விதின் நீக்கித்
தெற்றென ஒருபொருள் ஒற்றுமை கொளீஇத்
துணிவோடு நிற்றல் என்மனார் புலவர்.

இதுவுமது.

---

*மேற் காண்டிகைக்கு ஓதிய இலக்கணங்களுள் இதற்கு ஏற்பன எல்லாம் அதிகாரத்தால் கொள்ளப்படும். அவை ஏதுவும் நடையும் எடுத்துக்காட்டும் சூத்திரம் சுட்டுதலும் என்று இன்னோரன்ன கொள்க. (தொல் பொருள். சூ௬௯ பேரா.)

† மறுதலையும் மாற்றமும் என்பது கடாவிடை; ஐயமும் மருட்கையும் செவ்விதின் நீக்கல் ஒருபுடை ஒப்புமையுடைய போலியும் அதற்கு ஒன்றும் இயைபில்லாத பொய்ப்பொருளும் எனப்படும். 'பிறிது பிறிது ஏற்றலும் உருபுதொக வருதலும்' என்னும் இரண்டு உம்மையும் பொருளில என்று பிறிது பிறிது ஏற்றலும் உருபுதொக வருவதற்கண் என்று பொருள் கூறுதல் போல்வன சூத்திரத்தின் கருத்து அறியாது பொய்யை மெய்யென்று மயங்கிய மருட்கை யெனப்படும். இவ்விரண்டனையும் நீக்கி உண்மை உணர்த்துதல் உரை எனப்படுவதாயிற்று. நிற்றல் என்பது 'நிற்க அவ்வுரை' என்றவாறு. (தொல். பொருள் சூ௱௦. பேரா.)

(இ - ள்.) உரையாவது, மறுதலைக்கடாஅ மாற்றமு முடைத்தாக, ஐயப்பட்டு நிற்றலு மருண்டு நிற்றலு நீக்கி, தன் னூலானுதல் அப்பொருண்முடிவுறக் கூறின நூலானுதல் தெளிய வொரு பொருளை யொற்றுமைப்படுத்து, இதுவே பொருளெனத் துணிதல் உரையிற் இயல்பென்றவாறு.

மாற்றமுமுடைத்தாகி யென்ற வும்மையால் விடையு முடைத்தாகி யென்க. (௧0௬)

சூ௫௧. சொல்லப் பட்டன எல்லா மாண்பும்
மறுதலை யாயின் மற்றது சிதைவே.

(இ - ள்) மேலவற்றிற் கோதலான நூற்குரியதோர் மரபு முதனூலாயிற் சிதைவில்லை யென்றவாறு.

என்னை ஆவன கூறியது விரியகலாதன சிதைவது வழிநூ லென்ற வாறும். (௧0௭)

சூ௫௨. சிதைவில என்ப* முதல்வன் கண்ணே. (௧0௮)

சூ௫௩. முதல்வழி யாயினும் யாப்பினுட் சிதையும்
வல்லோன் புனையா† வாரம் போன்றே.

வழி நூற் குரியதோர் மரபுணர்த்துதல் நுதலிற்று

(இ - ள்.) முதனூலின் வழிச்செய்யினும் அந்நூல் யாப்பி னுட் சிதையும் வல்லவன் புனையாத வாரம்போல வென்றவாறு.

கோவைவாசியா (?) னென்றவாறும். (௧0௯)

சூ௫௪. சிதைவெனப் படுபவை வசையற நாடிற்‡
கூறியது கூறல் மாறுகொளக் கூறல்
குன்றக் கூறல் மிகைபடக் கூறல்
பொருளில கூறல் மயங்கக் கூறல்
கேட்போர்க் கின்னா யாப்பிற் றாதல்
பழித்த மொழியான் இழுக்கக் கூறல்

---

*சிதைவில என்பது அறிவானே உணர்வல் எனின் எடுத்தோத்துக் களைந்து உய்த்துணர்தல் பயமின்றென்பது அல்லதூஉம் முதனூற்கு முன்னையதோர் நூலினை இலக்கியமாகப்பெறின் அன்றேமுதல்வன்தான் நூலிலக்கணம் செய்வது. (தொல். பொருள். ௬௬௧ பேரா.)

(பாடம்) †புணரா.

‡'வசையறநாடின்' என்றதனான் இங்ஙனம் குற்றம் என்று வரையப் பட்டனவற்றைக்கொண்டு புகுந்து மற்றொரு பொருள்கொள்ளின் அவை வசையற்றனவாம் என்பது. (தொல். பொருள். ௬௬௫. பேரா.)

தன்னான் ஒருபொருள் கருதிக் கூறல்
என்ன வகையினும் மனங்கோள் இன்மை
அன்ன பிறவும் அவற்றுவிரி யாகும்.

மேலதிகாரப்பட்ட ஈரைங் குற்றமும் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) *கூறியது கூறலாவது ஒருகாற் கூறியதனைப் பின்னுங்கூறல்.*

கொள மாறுபடக் கூறலாவது ஒருகாற் கூறிய பொருளோடு மாறுகொள்ளுமாறு பின்கூறல். அஃதாவது தவம்நன்று என்றவன்றான் தவந் தீதென்று கூறல்.

குன்றக் கூறலாவது தானதிகரித்த பொருள்களுட் சிலவற்றைக் கூறுதொழிதல்.

மிகைபடக் கூறலாவது அதிகாரப் பொருளன்றிப் பிற பொருளுங் கூறுதல். அஃதாவது தமிழிலக்கணஞ் சொல்லுவானெடுத்துக்கொண்டான் வடமொழியிலக்கணமும் கூறல்.

பொருளில கூறலாவது முன்னும் பின்னும் வருகின்ற பொருண்மைக் கொப்பின்றிப் பயனில்லாதன கூறல்.

மயங்கக் கூறலாவது கேட்டார்க்குப் பொருள் விளங்குமாறின்றிக் கூறல்

கேட்போர்க்கின்னா யாப்பிற்றாதலென்பது பொருள் யாக்கப்பட்ட சூத்திரஞ் சந்தவின்பமின்றி யிருத்தல்.

பழித்தமொழியான் இழுக்கக் கூறலாவது தானொரு பொருளை யொரு வாய்பாட்டாற்றிரித்துப் பிறிதொரு வாய்பாட்டாற் கூறுதல். அக்குறிப்பு உலகவழக் கின்மையாற் பிறர்க்குப் புலப்படாதாம்; அதனால் அதுவுங் குற்றமாயிற்று.

என்ன வகையினும் மனங்கோள் இன்மையாவது எழுத்தினானுஞ் சொல்லினானும் பொருளினானு மனங்கொள்ளுமாறு கூறாமை. (௧௧௦)

௬௫. எதிர்மறுத் துணரினத் திறத்தவும் அவையே.

இதுவுமது. நூற்குற்றம் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) *எதிர்மறுத்து உணர்வாராயின், அத்திறத்தவுங் குற்றமா மென்றவாறு.*

உதாரணம்

பாவஞ் செய்தான் நிரையம்புகு மெனக் கருதிக் கூறுவான் தவஞ் செய்வான் சுவர்க்கம் புகுமென்றல். இவ்வாறு கூறிச் சுவர்க்கம் பெறு மென்னும் பொருட்......நிரையம்புகுமென்ற பொருள் தோன்றாமையிற் குற்றமாயிற்று. (௧௧௧

௬௫௬. ஒத்த காட்சி உத்திவகை விரிப்பின்
நுதலிய தறிதல் அதிகார முறையே
தொகுத்துக் கூறல் வகுத்துமெய்ந் நிறுத்தல்
மொழிந்த பொருளோ டொன்ற வைத்தல்*
மொழியா ததனை முட்டின்றி† முடித்தல்
வாரா ததனான் வந்தது முடித்தல்
வந்தது கொண்டு வாராதது முடித்தல்
முந்து மொழிந்ததன் தலைதடு மாற்றே
ஒப்பக் கூறல் ஒருதலை மொழியே‡
தன்கோட் கூறல் உடம்பொடு புணர்த்தல்§
பிறனுடம் பட்டது தானுடம் படுதல்
இறந்தது காத்தல்§ எதிரது போற்றல்
மொழிவாம் என்றல் கூறிற் றென்றல்
தான்குறி யிடுதல் ஒருதலை யன்மை
முடிந்தது காட்டல் ஆணை கூறல்
பல்பொருட் கேற்பின் நல்லது கோடல்
தொகுத்த மொழியான் வகுத்தனர் கோடல்
மறுதலை சிதைத்துத் தன்துணி புரைத்தல்
பிறன்கோட் கூறல் அறியா துடம்படல்¶
பொருளிடை யிடுதல் எதிர்பொருள் உணர்த்தல்
சொல்லின் எச்சம் சொல்லியாங் குணர்த்தல்
தந்துபுணர்ந் துரைத்தல் ஞாபகம் கூறல்

---

(பாடம்) *அவ்வயின். † முட்டின்று. ‡ மொழிதல்
§ முறைபிற ழாமை.

§இறந்தது காத்தல் முற்கூறிய ஓர் சூத்திரப் பொருண்மை பின்னொரு சூத்திரத்தான் விலக்குதல்.

¶ அறியாதுடம்படல் என்பது தான் ஓதிய இலக்கணத்தின் வேறுபட வருவன தான் அறிந்திலனாகக்கூறி அதன் புறத்துச்செய்வதோர் புறனடை. இறந்தது காத்தலோடு இதனிடை வேற்றுமை என்னை என்னின். இறந்ததென்பது தான் துணிந்து சொல்லப்பட்ட பொருளாகல் வேண்டும். இஃது அன்னதன்றிச் சொல்லப்படாத பொருள் மேற்றாகி அதுவும் தான் துணியப்படாத பொருளாகித் தான் நூல் செய்தகாலத்தே உள்ளவற்றுள் ஒழியப்போயின உளவாயினும் கொள்க என்பான், வேறு பிற தோன்றினும் எனவும்; வருப உள எனினும் எனவும் தேருது அதன் ஐயப்பாடு தோன்றச் சொல்லுதலின் இது வேறென்க. முழுதுணர்ந்தாற்கல்லது பழுதறச் சொல்லலாகாமையின் அஃது அவையடக்கியற் போல்வதோர் உத்தி எனக் கொள்க.

உய்த்துக்கொண் டுணர்த்தலொடு மெய்ப்பட நாடிச்
சொல்லிய அல்ல பிறவவண் வரினும்
சொல்லிய வகையாற் சுருங்க நாடி
மனத்தி னெண்ணி மாசறத் தெரிந்துகொண்டு
இனத்திற் சேர்த்தி உணர்த்தல் வேண்டும்
நுனித்தகு புலவர் கூறிய நூலே.*

தந்திரவுத்தி யாமா றுணர்த்துதல் நுதலிற்று

இதன் பொழிப்பு: நுதலிய தறிதல் முதலாகச் சொல்லப்பட்டனவும் அத்தன்மைய பிறவுந் தந்திர உத்தியாம் என்றவாறு.

தந்திரமெனினும் நூலெனினும் ஒக்கும். உத்தியென்பது வடமொழிச் சிதைவு. அது சூத்திரத்தின்பாற் கிடப்பதோர் பொருள் வேறுபாடு காட்டுவது.

(இ - ள்.) ஒத்த காட்சி உத்திவகை விரிப்பினென்பது நூற்குப் பொருந்திய காட்சியினானுரைக்கும் உத்திவகையை விரிக்குங்காலத் தென்றவாறு.

நுதலியதறிதலாவது—சூத்திரத்திற் சொற்றபொருளுணர்த்தலன்றி, இதன் கருத்திதுவென உணர்த்தல்.

அஃதாவது 'எழுத்தெனப்படுப' (நூன்மரபு : க) என்னுஞ் சூத்திரத்துள் 'எழுத்து இனைத்தென வரையறுத்துணர்த்துதல் நுதலிற்று' என்றல்.

அதிகார முறையாவது—முன்னம் பலபொருளை யதிகரித்த வழிப் பின்னும் அம்முறையினானே விரித்துணர்த்துதல்.

அஃதாவது உயர்திணை யஃறிணையென அதிகரித்து 'ஆடூஉ வறிசொல்' (கிளவியாக்கம் - உ) என்னுஞ் சூத்திரத்தான் நிறுத்தமுறை பிறழாமல் உயர்திணைகூறல். இன்னும் இதனானே ஒரு சூத்திரத்திலே கருதின பொருளை வைத்து வருகின்ற சூத்திரத்துள் ஓதாது அதன் காரியமாயின கூறியவழி அதனைச் சூத்திரந்தோறுங் கொணர்ந்துரைத்தல். அஃதாவது 'அகர விறுதிப் பெயர்நிலை முன்னர்' உயிர்மயங்கியல் - க) என்னுஞ் சூத்திரத்திற் 'கசதபத் தோன்றி' னெனவோதி வினையெஞ்சு கிளவியு' (உயிர் மயங்கியல் - உ) மென்னுஞ் சூத்திரத்துள் ஓதிற்றிலராயினும் அதிகாரமுறைமையினான் வல்லெழுத்து வருவழியென வுரைத்தல்.

---

* 'நுனித்தகு புலவர் கூறிய நூல்' என்றதனானே, பாயிரச் செய்யுளும் சூத்திரச் செய்யுளும் ஆசிரியப்பாவும் வெண்பாவும் பெற்றுவருதலும் அவ்விருபாவும் பெற்றுவருதலும், பாட்டுப்போல எல்லா உறுப்பும் பெறுதற்குச் செல்லா என்பதூஉம், மாத்திரை முதலாகப் பாவீறாக வந்த பதினொன்றும் வண்ணங்களுள் ஏற்பன கொள்ளினும் கொள்ளுமெனவும் யாப்புறுப்புக் கொள்ளுங்கால் ஈண்டோதிய மரபும் கொள்ளப்படுமெனவும் கொள்க. உரைக்குங் காண்டிகைக்கும் இவற்றுள்ளும் ஏற்பன அறிந்து கொள்க. (தொல். பொருள். கசுரு. பேரா.)

தொகுத்துக் கூறலாவது—வகைபெறக் கூறல் வேண்டுமாயினும் அதனைத் தொகுத்துக் கூறல்.

'எழுத்தெனப் படுப அகரமுத னகர விறுவாய் முப்பஃ தென்ப' (நூன்மரபு. ௧) என்றுற்போல்வன. இன்னும் பல சூத்திரத்தாற் கூறிய பொருளை இத்துணையுங் கூறப்பட்டதிதுவெனக் கூறலுமாம். 'தூக்கியல் வகையே யாங்கென மொழிப.' (செய்யுளியல்-அ௩) என்பதனுற் கொள்க.

வகுத்து மெய்ந் நிறுத்தலாவது—தொகைபடக் கூறிய பொருளை வகைபடக் கூறல்.

அது 'அ, இ, உ, எ ஒ' (நூன்மரபு-௩) என்னுஞ் சூத்திரத்தாற் கொள்க. இன்னுமதனுனே தொகைபடச் சூத்திரஞ்செய்தவழி அவற்றுள் ஒரோவொன்று பொதுவிலக்கணத்தான் முடியாதவழிப் பெரும்பான்மை சிறுபான்மைகொண்டு வகுத்துப் பொருளுரைத்தலுமாம். இன்னுமதனுனே தொகைபடக் கூறியவதனை வகுத்துப் பொருளுரைத்தலுமாம்.

மொழிந்த பொருளோடொன்ற வைத்தலாவது—சூத்திரத்துட்பொருள் பலபடத் தோன்றுமாயின் முற்பட்ட சூத்திரத்திற்கொக்கும் பொருளுரைத்தல்.

அன்றியும் முற்பட்ட சூத்திரத்தினுன் ஒருபொருளோதியவழிப் பிற்பட்ட சூத்திரமும் பொருளோடொன்ற வைத்தலுமாம்.

மொழியாததனை முட்டின்றி முடித்தலாவது—எடுத்தோதாதபொருளை முட்டுப்படாமல் உரையினுன் முடித்தல்.

இதனை 'உரையிற்கோடல்' என்ப. இக்கருத்தினுனே

சூத்திரத் துட்பொரு ளன்றியும் யாப்புற
இன்றி யமையா தியைபவை யெல்லாம்
ஒன்ற வுரைப்ப துரையெனப் படுமே. (மரபியல் - ௧0௫)

என ஓதுவராயிற்றென்க.

வாராததனுன் வந்தது முடித்தலாவது—ஒருங்கெண்ணப்பட்ட பொருளொன்றனைப் பகுத்துக் கூறியவழி ஆண்டு வாராததற்கோதிய விலக்கணத்தை இதன்கண்ணும் வருவித் துணர்த்துதல்.

வந்ததுகொண்டு வாராதது முடித்தலாவது—ஒருங்கெண்ணப்பட்டவற்றுளொன்றைப் பகுத்து இலக்கணங் கூறியவழி வாராததன்கண்ணும் இவ்விலக்கணத்தைக் கூட்டிமுடித்தல்.

முந்துமொழிந்ததன் தலைதடுமாற்றாவது—முற்பட அதிகரித்தபொருளை யவ்வகையினுற் கூருது முறைபிறழக் கூறுதல்.

இவ்வாறு கூறுங்கால் ஒருபயனேக்கிக் கூறல்வேண்டும். அது புள்ளி மயங்கியலுட் கண்டுகொள்க.

ஒப்பக்கூறலென்பது—ஒரு பொருளெடுத்து இலக்கணங் கூறிய வழி அதுபோல்வனவற்றையு மிலக்கணத்தான் முடித்தல்.

ஒருதலைமொழியாவது—ஏகாக்கர மென்னும் வடமொழிப் பொருண்மை. அஃதாவது, சூத்திரத்திற்குப் பொருள் கவர்த்துத் தோன்றின் அதனு ளொன்றனைத் துணிந்து கூறல்.

தன்கோட் கூறலாவது—பிறநூலாசிரியர் கூறியவாறு கூறாது தன் கோட்பாட்டால் கூறுதல்.

அது வேற்றுமை எட்டென்றல்

உடம்பொடு புணர்த்தலாவது—இலக்கணவகையான் ஓதுதலன்றி யாசிரியனுக்கின்றிச் சூத்திரத்தின்கண்ணே யொரு சொல்லை வைப்பனுயினை அவ்வைப்பினை இலக்கணமாகக் கோடல்

ஒற்றீற்றுச் சொல்லை யுகரங்கொடுத்துக் கூறுகவென விலக்கணங் கூறிற்றில ராயினும் 'ஆரும் அருவும் ஈரொடு சிவணும்' விளிமரபு. (உக) என ஓதுதலின், 'ஆர்' என்பது 'ஆரும்' என உகரம் பெற்றது. இதனைப் பிறுண்டுங் கோடல்.

பிறனுடம் பட்டது தானுடம்படுதலாவது—பிறநூலாசிரியன் உடம்பட்ட பொருட்குத் தானுடம்படுதல்

அஃதாவது இரண்டாம் வேற்றுமை செயப்படுபொருட்கண் வருமெனப் பாணினியார் ஓதினர்; அது இவர்க்கும் உடம்பாடு.

இறந்தது காத்தலாவது—மேற்கூறப்பட்ட சூத்திரத்தாற் கூறப் படாத பொருளைப் பின்வருகின்ற சூத்திரத்தா னமைத்தல்.

எதிரது போற்றலாவது—முன் கூறப்பட்ட சூத்திரத்தானே வருகின்ற சூத்திரத்திற் பொருளினையும் பாதுகாக்குமாறு வைத்தல்.

மொழிவாமென்றலாவது—சில பொருளைக் கூறி அவற்று ளொன்றனை யின்னவிடத்துக் கூறுவாமென வுரைத்தல்.

'புணரிய னிலையிடைக் குறுகலும்' (மொழிமரபு. உ;) என்பதனுற் கொள்க.

கூறிற்றென்றலாவது—பல பொருளா யதிகரித்தவற்றுட் சில பொருளை மேற்சொல்லப்பட்டனவென்றல்.

'மாத்திரை வகையும் எழுத்தியல்வகையு மேற்கிளந்தன்ன' (செய்யுளியல். உ) என்றதனுற் கொள்க.

தான் குறியிடுதலாவது—உலகின்கண் வழக்கின்றி யொருபொருட்கு ஆசிரியன்றான் குறியிடல்

அஃது உயர்திணை யஃறிணையென்பன.

ஒருதலையன்மை முடிந்தது காட்டலாவது—ஒரு பொருளை யோதிய வழிச் சொல்லுவதற்கே யுரித்தன்றிப் பிறபொருட்கும் பொதுவாக முடித்தமை காட்டல்.

ஆணை கூறலாவது—ஒரு பொருளைக் கூறும்வழி ஏதுவினாற் கூறலன்றித் தன் ஆணையாற் கூறல்.

வேற்றுமை யேழெனப் பாணினியார் கூறினமையின் அவர் விளியை முதல்வேற்றுமையி லடக்கினார். அதற்குத் திரிபுகூறாது அதனை எட்டாம் வேற்றுமையென்றல் ஆண்டுக் கடாவப்படா.

பல்பொருட் கேற்பின் நல்லது கோடலாவது—ஒரு சூத்திரம் பல பொருட் கேற்குமாயின் அவற்றுள் நல்லதனைப் பொருளாகக் கோடல்.

தொகுத்த மொழியான் வகுத்தனர் கோடலாவது—தொகுத்துக் கூறியசொல் தன்னானே பிறிதுமொருபொருள் வகுத்துக்காட்டல்.

'அது குற்றியலுகர முறைப்பெயர் மருங்கின்' (விளிமரபு ௬) என்னுஞ் சூத்திரத்தான் மொழிமுதற் குற்றுகரமுங் கோடல்.

சொல்லின் முடிபின் அப்பொருண் முடித்தலென்பதுமது

மறுதலை சிதைத்துத் தன்றுணி புரைத்தலாவது—பிற நூலாசிரியன் கூறின பொருண்மையைக் கெடுத்துத் தன்றுணிவு கூறுதல்.

அஃதாவது நெட்டெழுத்தேழ் அளபெடை யென்பன குற்றெழுத்தின் விகாரமென்பாரை மறுத்து வேறோரெழுத்தாக வோதுதல்.

பிறன்கோட் கூறலாவது—பிற நூலாசிரியன் கொண்ட கோட்பாட்டைக் கூறுதல்.

அது 'வேற்றுமை தாமே யேழென மொழிப' (வேற்றுமையியல். ௧) என்றல்.

அறியா துடம்படலாவது—தானறியாத பொருளைப் பிறர் கூறியவாற்றா னுடம்படுதல்.

அது ஏழாநரகம் இத்தன்மைத் தென வொருவன் கூறியவழி அது புலனாகாதாதலின் அவன் சொன்னதற் குடம்படுதல் இது வழிநூலாசிரியர்க் குரித்து

பொருளிடை யிடுதலாவது—ஒருபொருளை யோதியவழி யதற்கினமாகிய பொருளைச் சேரக்கூறாது இடையிட்டுக் கூறுதல்.

'அது பெண்மை சுட்டிய' (பெயரியல். ௨௭) வென்னுஞ் சூத்திரமோதி அதன் பகுதியாகிய ஆண்மைதிரிந்த பெயர்நிலைக்கிளவி யென்பதனை இடையிட்டு வைத்தல் போல்வன.

எதிர்பொருளுணர்த்தலாவது—இனிக் கூறவேண்டுவதிது வென வுணர்த்தல்.

சொல்லின் எச்சம் சொல்லியாங் குணர்த்தலென்பது—பிரிநிலை முதலாகச் சொல்லப்பட்ட எச்சங்களைக் கண்டு ஆங்குச் சொல்லியவாற்றாற் பொருள்கோடல்.

தந்துபுணர்ந்துரைத்தலாவது—முன்னுயினும் பின்னுயினும் நின்ற சூத்திரத்திற் சொல்லை இடைநின்ற சூத்திரத்தினுங் கொணர்ந்து புணர்ந்துரைத்தல்.

ஞாபகங் கூறலாவது—இரட்டுறமொழிந்து இரண்டு சொற்கும் பொருள்கோடல்.

உய்த்துக்கொண்டுணர்தலாவது—ஒரு சூத்திரத்தான் ஓரிலக்கணம் ஓதியவழி அதற்குப் பொருந்தாமை யுளதாகத் தோன்றின் அதற்குப் பொருந்துமாறு விசாரித்துணர்தல்.

பனியென்னுஞ் சொல்லுக்கு அத்தும் இன்னுஞ் சாரியையா மென்றுராயினும் (உயிர்மயங்கியல் ௬௯) அவற்றுள் ஏற்பதொன்றுத லின் இன்னீற்றுயவாறு வருவன வுய்த்துணர்தலாம்.

இவை முப்பத்திரண்டுந் தந்திரவுத்தியாவன.

மெய்ப்பட......நூலென்பது மேற்சொல்லப்பட்டவற்றோடு கூடப் பொருள்பட ஆராய்ந்து சொல்லிய வல்லாதனவாகிய பிறவவண் வரினுஞ் சொல்லிய நெறியினுற் சுருங்கவாராய்ந்து மனத்தினு ஞோர்ந்து குற்ற மறத்தெரிந்து சொல்லிய வினத்தோடு பாகுபடுத்துரைத்தல் வேண்டு மது நுண்மைதகப் புலவர் கூறிய நூலினை யென்றவாறு.

பிறவாறுகொளப்படுவன மாட்டெறிதல், சொற்பொருள் விரித்தல், ஒன்றென முடித்தல், தன்னின முடித்தலென்பன. இவற்றுள் மாட்டெறித'லாவது முன்னெரு பொருள் கூறிப் பின்வருவதும் அதுபோலு மென்றல். அஃதாவது 'உகர விறுதி அகர வியற்றே' (உயிர்மயங்கியல். ௬உ) என வரும்.

சொற்பொருள் விரித்தலாவது—பதந்தோறும் பொருள் விரித்துக் கடாவும் விடையுங் கூறுதல்.

ஒன்றென முடித்தல் தன்னின முடித்தலென்பது சொல்லப்பட்ட வாற்றான் வருமுத்திரமேயாகத் தொகைப்பட முடியும் இனவுஞ் சில வாசிரியர்மதம் பலவுத்திக்கும் ஏற்கும் ஒரு சூத்திரம் இந்நூலகத்துள்...... பொருள் கொண்டாமாயினும் ஈண்டுரைத்த பாகுபாடெல்லாவற்றிற்கும் இந்நூலகத் துதாரணமே கண்டுகொள்க.

இன்னுஞ் சொல்லியவல்ல பிறவெவன்றதனுன் யாற்றொழுக்கு அரிமா நோக்கு தவளைப்பாய்த்துள் பருந்து விழுக்காடென்னுஞ் சூத்திரக் கிடக்கையும் ஆதிவிளக்கு மத்திம தீபம் இறுதிவிளக்கு என்னும் பொருள் கோணிலையுங் கொள்ளப்படும். யாற்றொழுக்காவது கருதியபொருளை வழுவாமற் சூத்திரம் ஒருங்குபடக் கிளத்தல், அரிமாநோக்காவது முன்

னும் பின்னுங் கூறுகின்ற விரண்டு சூத்திரத்தினையு மிடைநின்ற சூத்திரம் நோக்குதல். தவளைப்பாய்த்துளாவது இடையறுத்தோடுதல். பருந்து விழுக்காடாவது அவ்வதிகாரத்துட் பொருத்தமில்லாத பொருள் யாதானு மொருகாரணத்தால் இடைவருதல். ஆதிவிளக்காவது சூத்திரத்தினுல் ஆதியின் அமைத்தபொருள் அந்தத்தளவு மோடுதல். மத்திம தீபமாவது இடைநின்ற பொருள் முன்னும் பின்னும் நோக்குதல். இறுதிவிளக்காவது இறுதிநின்ற பொருள் இடையு முதலு நோக்குதல். (கக௨)

ஒன்பதாவது மரபியல் முற்றிற்று.

பொருளதிகாரம் மூலமும் உரையும் முற்றிற்று.

# நூற்பா முதற்குறிப்பு அகரவரிசை

[எண் பக்கத்தைக் குறிக்கும்]


| | பக். |
|---|---|
| அஃதன் றென்ப | ௪௫௭ |
| அஃதொழித் தொன்றின் | ௪௬௧ |
| அகக்கா ழனவே | ௫௭௧ |
| அகத்திணை மருங்கின் | ௭௪ |
| அகப்பாட்டு வண்ணம் | ௫௪௩ |
| அகவ லென்ப | ௪௫௬ |
| அகன்று பொருள் | ௫௩௯ |
| அகைப்பு வண்ணம் | ௫௪௫ |
| அங்கதந் தானே | ௪௯௩ |
| அங்கதப் பாட்டள | ௫௧௩ |
| அசைகூன் ஆகும் | ௪௩௭ |
| அசையுஞ் சீரும் | ௪௨௫ |
| அச்சமும் நாணும் | ௧௬௭ |
| அடக்கியல் வாரம் | ௪௯௯ |
| அடிஇறந்து வருதல் | ௪௩௪ |
| அடிதொறுந் தலையெழுத் | ௪௬௧ |
| அடிநிமிர் கிளவி | ௫௩௩ |
| அடியின் சிறப்பே | ௪௩௪ |
| அடியுள் ளனவே | ௪௩௪ |
| அடியோர் பாங்கினும் | ௨௭ |
| அடுக்கிய தோற்றம் | ௪௧௬ |
| அடைநிலைக் கிளவி | ௪௯௬ |
| அணங்கே விலங்கே | ௩௬௮ |
| அதுவே...இருநால் | ௯௫ |
| அதுவே...இருவகை | ௫௨௦ |
| அதுவே...ஒருநாள் | ௫௧௬ |
| அதுவே...பிசியொடு | ௫௨௩ |
| அதுவே வண்ணகம் | ௪௯௮ |
| அந்த ணாளர்க் கரசு | ௫௭௦ |
| அந்த ணாளர்க் குரியவும் | ௫௬௮ |
| அந்தமில் சிறப்பின் | ௩௫௩ |
| அந்நிலை...அறமுத | ௪௭௩ |
| அந்நிலை...வஞ்சி | ௪௩௩ |
| அமரர்கண் முடியும் | ௧௩௫ |
| அம்பலும் அலரும் | ௨௪௬ |
| அம்போத ரங்கம் | ௫௦௫ |
| அயலோர் ஆயினும் | ௪௦ |
| அருண்முந் துறுத்த | ௩[illegible]௮ |
| அலரில் தோன்றும் | ௩௦௮ |
| அல்குல் தைவரல் | ௩௮௦ |
| அல்லகுறிப் படுதலும் | ௨௪௪ |
| அவற்றுட், பாஅ | ௫௪௦ |
| அவற்றுள், ஒத்தாழிசைக்கலி | ௪௯௫ |
| அவற்றுள், ஓதலுந் தூதும் | ௩௦ |
| அவற்றுள், சூத்திரம் | ௫௧௭ |
| அவற்றுள், நடுவண் ஐந் | ௬ |
| அவற்றுள், நூலெனப் | ௫௧௬ |
| அவற்றுள், பார்ப்பும் | ௫௫௪ |
| அவற்றுள், மாத்திரை | ௪௨௦ |
| அவனறி வாற்ற | ௨௬௮ |
| அவன்குறிப் பறிதல் | ௩௦௭ |
| அவன்சோர்வு காத்தல் | ௩௧௪ |
| அவன்வரம் பிறத்த | ௨௪௦ |
| அவைதாம், அன்ன | ௪௦௨ |
| அவைதாம், நூலி னான | ௫௧௫ |
| அவைதாம், பாஅ | ௫௩௯ |
| அவையடக் கியலே | ௪௭௬ |
| அவையும் உளவே | ௩௮௩ |
| அவ்வவ மாக்களும் | ௫௩௮ |
| அவ்வியல் பல்லது | ௪௫௯ |
| அளபெடை அசைநிலை | ௪௨௭ |
| அளபெடை தலைப்பெய | ௪௬௦ |
| அளபெடை வண்ணம் | ௫௪௧ |
| அளபெழின் அவையே | ௪௬௩ |
| அளவடி மிகுதி | ௪௪௬ |
| அளவியல் வகையே | ௫௧௫ |
| அளவுஞ் சிந்தும் | ௪௪௫ |
| அறக்கழி வுடையன | ௩௩௯ |
| அறத்தொடு நிற்குங் | ௩௩௪ |
| அறுசீர் அடியே | ௪௪௯ |
| அறுவகைப் பட்ட | ௧௦௯ |
| அன்புதலைப் பிரிந்த | ௩௧௭ |
| அன்புறு தகுவன | ௩௪௭ |
| அன்னஎன் கிளவி | ௪௦௭ |
| அன்ன பிறவும் | ௩௮௨ |
| அன்ன ராயினும் | ௫௭௦ |
| அன்ன வகையான் | ௨௪௩ |
| அன்ன வாங்கு | ௪௦௪ |
| அன்னை என்னை | ௩௫௬ |
| ஆங்கவை, ஒருபால் | ௩௭௧ |
| ஆங்காங் கொழுகும் | ௨௪௫ |
| ஆங்ஙனம் விரிப்பின் | ௪௪௦ |
| ஆசிரிய நடைத்தே | ௪௭௩ |
| ஆசிரியப் பாட்டின் | ௫௧௩ |

| | பக் | | பக் |
|---|---|---|---|
| ஆசிரிய மருங்கினும் | ௪௪௯ | இன்பமும் பொருளும் | ௧௫௮ |
| ஆசிரியம் வஞ்சி | ௪௭௯ | ஈரசை கொண்டு | ௪௨௫ |
| ஆண்பால் எல்லாம் | ௫௬௪ | ஈற்றயல் அடியே | ௪௫௦ |
| ஆயர் வேட்டுவர் | ௨௦ | உடம்பும் உயிரும் | ௩௩௨ |
| ஆயிரு கொடைக்குந் | ௪௬௧ | உடனுறை உவமம் | ௩௫௨ |
| ஆய்பெருஞ் சிறப்பின் | ௨௪௨ | உணர்ப்புவரை இறப்பினும் | ௩௦௬ |
| ஆவும் எருமையும் | ௫௫௭ | உண்டற் குரிய | ௩௯௭ |
| ஆறின தருமையும் | ௨௪௫ | உயர்ந்ததன் மேற்றே | ௩௯௭ |
| ஆற்றது பண்பும் | ௩௧௧ | உயர்ந்தோர் கிளவி | ௩௩௮ |
| ஆற்றலொடு புணர்ந்த | ௫௬௪ | உயர்ந்தோர்க் குரிய | ௩௩ |
| இசைதிரிந் திசைப்பினும் | ௩௨௫ | உயர்ந்தோர் பொருள்வயின் | ௩௪ |
| இசைநிலை நிறைய | ௪௩௨ | உயர்மொழி கிளவியும் | ௩௫௧ |
| இடித்துவரை நிறுத்தலும் | ௩௦௫ | உயர்மொழிக் கிளவி | ௩௫௦ |
| இடைச்சுர மருங்கிற் | ௫௩௧ | உயிரில் லெழுத்தும் | ௪௩௬ |
| இடைநிலை...தரவகப் | ௪௯௫ | உயிரினும் சிறந்தன்று | ௨௧௦ |
| இடைநிலை...தரவு | ௪௯௫ | உயிரும் நாணும் | ௩௩௧ |
| இடையிரு வகையோர் | ௫௬௯ | உய்த்துணர் வின்றித் | ௫௩௭ |
| இடையும் வரையார் | ௪௫௦ | உரிப்பொருள் அல்லன | ௧௫ |
| இதுநனி பயக்கும் | ௫௩௬ | உருட்டு வண்ணம் | ௫௪௬ |
| இமையோர் தேஎத்தும் | ௩௫௮ | உரையெடுத் ததன்முன் | ௫௭௭ |
| இயங்குபடை அரவம் | ௮௮ | உவமப் பொருளின் | ௪௦௮ |
| இயலசை ஈற்றுமுன் | ௪௨௭ | உவமப் பொருளை | ௪௦௯ |
| இயலசை மயக்கம் | ௪௨௬ | உவமப் போலி | ௪௧௦ |
| இயலசை முதலிரண் | ௪௨௨ | உவமமும் பொருளும் | ௪௦௦ |
| இயற்சீர் இறுதிமுன் | ௪௨௮ | உவமைத் தன்மையும் | ௪௧௫ |
| இயற்சீர் பாற்படுத் | ௪௩௨ | உழிஞைதானே | ௯௪ |
| இயற்சீர் வெள்ளடி | ௪௪௮ | உழைக்குறுந் தொழிலுங் | ௩௧௨ |
| இயைபு வண்ணம் | ௫௪௧ | உள்ளுறுத்து இதனொடு | ௬௩ |
| இரட்டைக் கிளவியும் | ௪௦௯ | உள்ளுறை உவமம் | ௬௨ |
| இரந்து குறையுற்ற | ௩௫௦ | உள்ளுறை தெய்வம் | ௬௨ |
| இரலையுங் கலையும் | ௫௬௩ | உறுகண் ஓம்பல் | ௩௫௧ |
| இரவுக் குறியே | ௨௪௪ | உறுப்பறை குடிகோள் | ௩௬௯ |
| இருசீர் இடையிடின் | ௪௬௪ | உற்றுழி யல்லது | ௩௩௫ |
| இருவகை உகரமோ | ௪௨௧ | ஊரும் அயலுஞ் | ௫௩௦ |
| இருவகைக் குறிபிழைப் | ௧௮௫ | ஊரும் பெயரும் | ௫௬௯ |
| இருவகைப் பிரிவும் | ௧௩ | ஊரொடு தோற்றமும் | ௧௩௯ |
| இலையே முறியே | ௫௭௧ | ஏஞ்சி யோர்க்கு | ௫௬ |
| இவ்விடத் திம்மொழி | ௫௩௮ | எண்ணரும் பாசறைப் | ௩௧௪ |
| இழிவே இழவே | ௩௬௪ | எண்ணிடை ஒழிதல் | ௫௦௦ |
| இழுமென் மொழியால் | ௫௪௮ | எண்ணும் வண்ணம் | ௫௪௪ |
| இறப்பே நிகழ்வே | ௫௩௬ | எண்வகை இயனெறி | ௫௩௭ |
| இருவாய் ஒப்பினஃ | ௪௬௨ | எதிர்மறுத் துணரினற் | ௫௮௧ |
| இறைச்சி தானே | ௩௪௫ | எத்திணை மருங்கினும் | ௩௬ |
| இறைச்சியிற் பிறக்கும் | ௩௪௯ | எந்நில மருங்கிற் | ௧௯ |
| இனிதுறு கிளவியும் | ௪௧௨ | எருதும் ஏற்றையும் | ௫௫௪ |
| இன்சீ ரியைய | ௪௩௩ | எருத்தே கொச்சகம் | ௫௦௫ |
| இன்பத்தை வெறுத்தல் | ௩௮௩ | எருமையும்...அன்ன | ௫௬௩ |
| இன்பமும் இடும்பையும் | ௫௩௮ | எருமையும்...நாகே | ௫௬௬ |

எருமையும்...வரையார் ௫௫௭
எல்லா உயிர்க்கும் ௯௪௨
எல்லா வாயிலும் ௩௧௭
எழுசீ ரடியே ௪௪௯
எழுசீர் இறுதி ௪௫௩
எழுத்தள வெஞ்சினுஞ் ௪௩௯
எழுத்து முதலா ௪௫௪
எழுத்தொடுஞ்சொல்லொடு ௫௨௨
எழுநிலத் தெழுந்த ௫௧௫
எளித்தல் ஏத்தல் ௩௩௪
எள்ளல் இளமை ௩௬௨
எள்ள விழையப் ௪௦௫
எற்பாடு நெய்தல் ௧௨
ஏந்தல் வண்ணம் ௫௪௫
ஏமப் பேரூர்ச் ௩௮
ஏவல் மரபின் ௨௯
ஏழெழுத் தென்ப ௪௩௫
ஏறிய மடல்திறம் ௬௫
ஏற்புடைத் தென்ப ௫௬௨
ஏனை உவமம் ௬௩
ஏனைப் பிரிவும் ௩௨௧
ஏனை யொன்றே ௪௯௮
ஏனோர்க் கெல்லாம் ௪௧௨
ஏனோர் மருங்கினும் ௨௦
ஐவகை...ஆசிரியக் ௪௪௧
ஐவகை...விரிக்குங் ௪௩௯
ஒட்டகங் குதிரை ௫௬௫
ஒட்டகம் அவற்றோ ௫௫௭
ஒண்டொடி மாதர் ௫௩௧
ஒத்த காட்சி ௫௮௨
ஒத்த சூத்திரம் ௫௭௬
ஒத்தா ழிசைக்கலி ௪௯௪
ஒத்தா ழிசையும் ௪௭௬
ஒத்துமூன் றாகும் ௪௯௯
ஒப்பும் உருவும் ௩௫௬
ஒப்பொடு புணர்ந்த ௫௨௧
ஒரீஇக் கூறலும் ௪௧௪
ஒரூஉ வண்ணம் ௫௪௪
ஒருசார் விலங்கும் ௫௬௨
ஒருசிறை நெஞ்சோ ௩௩௩
ஒருசீ ரிடையிட் ௪௩௩
ஒருதலை உரிமை ௩௪௫
ஒருநெறி இன்றி ௫௧௮
ஒருநெறிப் பட்டாங் ௫௨௪
ஒருபாற் கிளவி ௩௪௧
ஒருபான் சிறுமை ௫௦௫
ஒருபொருள்...சூத்திரத் ௫௧௬
ஒருபொருள்...வெள்ளடி ௫௦௭
ஒருபோ கியற்கையும் ௬௦௧
ஒழிந்தோர் கிளவி ௫௩௨
ஒழுகு வண்ணம் ௫௪௪
ஒற்றள பெடுப்பினும் ௪௨௮
ஒற்றெழுத் தியற்றே ௪௨௩
ஒற்றொடு புணர்ந்த ௫௫௦
ஒன்றறி வதுவே ௫௫௯
ஒன்றாத் தமரினும் ௪௭
ஒன்றே மற்றுஞ் ௬௨௦
ஒன்றே வேறே ௧௬௧
ஓதல் பகையே ௩௦
கடமையும் மரையு ௫௫௭
கடல்வாழ் சுறவும் ௫௬௩
கடுப்ப ஏய்ப்ப ௪௦௫
கட்டுரை வகையான் ௪௮௮
கணையும் வேலும் ௧௦௩
கண்ணியுந் தாரும் ௫௬௯
கண்ணினுஞ் செவியினுந் ௩௯௩
கரணத்தின் அமைந்து ௨௫௧
கலந்த பொழுதும் ௧௭
கலித்தளை மருங்கிற் ௪௩௧
கலித்தளை யடிவயின் ௪௩௧
கலிவெண் பாட்டே ௫௧௪
கலையென் காட்சி ௫௬௩
கல்வி தறுகண் ௩௬௮
கவரியும் கராகமும் ௫௫௭
கழிவினும் நிகழ்வினும் ௩௦௩
களவல ராயினுங் ௨௩௬
களவுங் கற்பும் ௩௦௮
கற்புங் காமமும் ௩௦௧
கற்புவழிப் பட்டவள் ௩௪௮
கற்பெனப்படுவது ௨௪௯
கனவும் உரித்தால் ௩௩௦
காஞ்சி தானே ௧௨௬
காமக் கடப்பினுட் ௩௦௭
காமக் கூட்டந் ௨௪௦
காமஞ் சாலா ௬௪
காமஞ் சான்ற ௩௨௨
காமஞ் சொல்லா ௧௯௧
காமத் திணையிற் ௧௯௦
காமநிலை யுரைத்தலும் ௩௧௫
காமப் பகுதி ௧௩௮
காமப் புணர்ச்சியும் ௫௨௮
காயே பழமே ௫௭௨
காரும் மாலையும் ௧௦
கிழக்கிடும் பொருளோ ௩௯௮
கிழவன் தன்னொடுங் ௫௩௧
கிழவி சொல்லின் ௪௧௧

| | பக். |
|---|---|
| கிழவி நிலையே | ௩௨௦ |
| கிழவி முன்னர்த் | ௩௧௮ |
| கிழவோட் குவமை | ௪௧௩ |
| கிழவோள் பிறள்குணம் | ௩௪௮ |
| கிழவோற்...இடம் | ௪௧௩ |
| கிழவோற்...உரனொடு | ௪௪௨ |
| கிழவோன் ...றியா | ௨௩௯ |
| கிழவோன் விளையாட் | ௩௦௮ |
| கிளரியல் வகையிற் | ௫௨௭ |
| குஞ்சரம் பெறுமே | ௫௫௭ |
| குடையும் வாளும் | ௯௯ |
| குட்டம் எருத்தடி | ௪௭௭ |
| குட்டியும் பறழும் | ௫௫௫ |
| குரங்கினுள் ஏற்றைக் | ௫௬௭ |
| குரங்கு...ஊகமும் | ௫௯௭ |
| குரங்கும்...மூன்றும் | ௫௫௭ |
| குழவி மருங்கினும் | ௧௩௯ |
| குழவியும் மகவும் | ௫௫௮ |
| குறளடி முதலா | ௪௪௪ |
| குறிஞ்சி கூதிர் | ௧௧ |
| குறித்தெதிர் மொழிதல் | ௩௧௯ |
| குறிப்பே குறித்தது | ௧௬௫ |
| குறியெனப் படுவ | ௨௪௪ |
| குறிலே நெடிலே | ௪௨௧ |
| குறுஞ்சீர் வண்ணங் | ௫௪௨ |
| குறையுற உணர்தல் | ௨௪௨ |
| குற்றிய லுகரமும் | ௪௨௪ |
| கூதிர் வேனில் | ௧௧௬ |
| கூழை விரித்தல் | ௩௭௯ |
| கூற்றும் மாற்றமும் | ௫௧௨ |
| கேழற் கண்ணுங் | ௫௬௨ |
| கைக்கிளை தானே | ௪௮௫ |
| கைக்கிளை...ஏழ்பெருந் | ௫௨௮ |
| கைக்கிளை முதலாப் | ௫ |
| கொச்சக ஒருபோ | ௫௦௧ |
| கொச்சகம் அராகஞ் | ௪௮௬ |
| கொடிநிலை கந்தழி | ௧௪௦ |
| கொடுப்போர் இன்றியுங் | ௨௫௦ |
| கொடுப்போர் ஏத்திக் | ௧௬௨ |
| கொண்டுதலைக் கழிதலும் | ௧௬ |
| கொள்ளார் தேஎங் | ௬௫ |
| கொற்ற வள்ளை | ௧௪௧ |
| கோடுவாழ் குரங்கு | ௫௫௬ |
| கோழி கூகை | ௫௬௬ |
| சுட்டிக் கூறா உவம | ௪௦௦ |
| சுரமென மொழிதலும் | ௩௩௮ |
| சூத்திரத் துட்பொருள் | ௫௭௯ |
| சூழ்தலும் உசாத்துணை | ௨௪௨ |
| சீதலும் எறும்பும் | ௫௬௧ |
| சிதைவில என்ப | ௫௮௦ |
| சிதைவெனப் படுபவை | ௫௮௦ |
| சித்திர வண்ணம் | ௫௪௨ |
| சிறந்துழி ஐயஞ் | ௧௬௩ |
| சிறப்பே நலனே | ௩௯௮ |
| சினனே பேதைமை | ௩௫௪ |
| சின்னென் மொழியால் | ௫௪௭ |
| சீரியல் மருங்கின் | ௪௪௪ |
| சீர்கூன் ஆதல் | ௪௩௮ |
| சீர்நிலை தானே | ௪௩௬ |
| செம்பொரு ளாயின | ௪௯௩ |
| செய்பொரு ளச்சமும் | ௩௪௭ |
| செய்யுள் தாமே | ௪௯௪ |
| செய்யுள் மருங்கின் | ௫௫௧ |
| செய்யுள் மொழியால் | ௫௪௭ |
| செலவிடை அழுங்கல் | ௩௧௯ |
| செல்வம் புலனே | ௩௭௦ |
| செவியுறை தானே | ௪௭௬ |
| செறிவும் நிறைவும் | ௩௩௫ |
| சேவற் பெயர்க்கொடை | ௫௬௪ |
| சொல்லப் பட்டன | ௫௮௦ |
| சொல்லிய கிளவி | ௩௦௫ |
| சொல்லிய தொடையொடு | ௪௬௪ |
| சொல்லிய மரபின் | ௫௫௮ |
| சொல்லெதிர் மொழிதல் | ௧௯௧ |
| சொல்லொடுங் குறிப்பொடு | [illegible]௭ |
| சொற்சீ ரடியும் | ௪௮௭ |
| ஞகார முதலா | ௫௪௯ |
| ஞாயிறு திங்கள் | ௫௩௩ |
| தடுமாறு வரலும் | ௪௧௫ |
| தத்த மரபில் | ௪௦௬ |
| தந்தையுந் தன்னையும் | ௨௪௫ |
| தம்முறு விழுமம் | ௩௪௮ |
| தரவின் றாகித் | ௫௦௨ |
| தரவும் போக்கும் | ௫௦௯ |
| தரவே தானும் நாலடி | ௪௯௯ |
| தரவே தானும் நான்கும் | ௪௬௩ |
| தலைமைக் குணச்சொலுந் | ௫௬௯ |
| தலைவரும் விழும | ௪௦ |
| தவலருஞ் சிறப்பினத் | ௪௧௧ |
| தவழ்பவை தாமும் | ௫௫௫ |
| தற்புகழ் கிளவி | ௩௧௭ |
| தனிக்குறில் முதலிசை | ௪௨௨ |
| தன்சீர் எழுத்தின் | ௪௩௭ |
| தன்சீர் வகையினுந் | ௪௪௩ |
| தன்பா அல்வழித் | ௪௩௦ |
| தன்வயிற் கரத்தலும் | ௩௩௩ |

| | பக் |
|---|---|
| தன்னும் அவனும் | ௩௬ |
| தன்னுறு வேட்கை | ௨௩௯ |
| தாஅ வண்ணம் | ௫௪௦ |
| தாய் அறிவுறுதல் | ௨௪௯ |
| தாய்க்கும் உரித்தாற் | ௩௩௦ |
| தாய்க்கும் வரையார் | ௨௩௮ |
| தாயத்தின் அடையா | ௩௪௦ |
| தாய்போற் கழறித் | ௩௪௩ |
| தாவில் நல்லிசை | ௧௪௮ |
| தானே சேறலுங் | ௩௧ |
| தானை யானை | ௧௦௩ |
| திணைமயக் குறுதலும் | ௧௪ |
| தும்பை தானே | ௧௦௨ |
| துள்ளல் ஓசை | ௪௫௭ |
| துன்புறு பொழுதினும் | ௩௧௯ |
| தூக்கியல் வகையே | ௪௫௯ |
| தூங்கல் ஓசை | ௪௫௮ |
| தூங்கல் வண்ணம் | ௫௪௫ |
| தெய்வம் அஞ்சல் | ௩௮௯ |
| தெய்வம் உணாவே | ௧௭ |
| தெரிந்த மொழியாற் | ௫௪௯ |
| தெரிந்தனர் விரிப்பின் | ௪௬௭ |
| தெரிந்துடம்படுதல் | ௩௮௧ |
| தேரும் யானையுங் | ௩௩௭ |
| தொகுத்தல் விரித்தல் | ௫௭௫ |
| தொடைநிலை வகையே | ௪௭௧ |
| தொல்லவை உரைத்தலுங் | ௩௧௦ |
| தொன்மை தானே | ௫௪௮ |
| தோட்டே மடலே | ௫௭௧ |
| தோழிக் காயின் | ௪௧௨ |
| தோழி தாயே | ௩௨௨ |
| தோழி தானே | ௨௪௨ |
| தோழியின் முடியும் | ௨௪௦ |
| தோழியும் செவிலியும் | ௪௧௩ |
| தோழியுள் உறுத்த | ௨௮௪ |
| நகையே அழுகை | ௩௬௧ |
| நடுவுநிலைத் திணையே | ௧௨ |
| நண்டுந் தும்பியும் | ௫௬௧ |
| நீந்தும் முரளும் | ௫௬௦ |
| நரியும் அற்றே | ௫௫௫, ௫௬௭ |
| நலிபு வண்ணம் | ௫௪௩ |
| நாடக வழக்கினும் | ௭௦ |
| நாட்டம் இரண்டும் | ௧௭௪ |
| நாயே பன்றி | ௫௫௫ |
| நாலிரண் டாகும் | ௩௬௧ |
| நாளிரண் டாகும்பாலுமா | ௪௦௭ |
| நாலெழுத் தாதி | ௪௩௪ |
| நாற்சீர் கொண்ட | ௪௩௩ |
| நாற்றமும் தோற்றமும் | ௨௧௧ |
| நிகழ்தகை மருங்கின் | ௩௪௫ |
| நிகழ்ந்தது கூறி | ௬௦ |
| நிகழ்ந்தது நினைத்தற்கு | ௬௦ |
| நிம்பிரி கொடுமை | ௩௯௨ |
| நிரனிறுத் தமைத்தலும் | ௪௬௦ |
| நிரைமுதல் வெண்சீர் | ௪௪௭ |
| நிரையவண் நிற்பின் | ௪௫௩ |
| நிலம்தீ நீர்வளி | ௫௭௨ |
| நிலம்பெயர்ந் துரைத்தல் | ௩௧௧ |
| நிறைமொழி மாந்தர் | ௫௨௧ |
| நீர்வாழ் சாதியும் | ௫௬௩ |
| நீர்வாழ் சாதியுள் | ௫௬௬ |
| நுண்மையுஞ் சுருக்கமும் | ௫௨௧ |
| நூலே கரகம் | ௫௬௮ |
| நெடுஞ்சீர் வண்ணம் | ௫௪௨ |
| நெடுவெண்...குறுவெண் | ௪௮௧ |
| நெடுவெண்...முந்நான் | ௫௧௩ |
| நெல்லும் புல்லும் | ௫௫௮ |
| நேரவண் நிற்பின் | ௪௨௬ |
| நேரின மணியை | ௫௧௮ |
| நேரீற் றியற்சீர் | ௪௫௨ |
| நோயும் இன்பமும் | ௩௨௬ |
| பகற்புணர் களனே | ௨௪௪ |
| படையியங்கு அரவம் | ௭௫ |
| படையுங் கொடியுங் | ௫௬௮ |
| பண்ணைத் தோன்றிய | ௩௫௯ |
| பண்பிற் பெயர்ப்பினும் | ௧௮௧ |
| பத்தெழுத் தென்ப | ௪௩௫ |
| பரத்தை மறுத்தல் | ௩௦௬ |
| பரத்தை...எனவிரு | ௫௩௩ |
| பரத்தை...நால்வர்க்கும் | ௩௪௨ |
| பரிசில் பாடாண் | ௫௬௮ |
| பரிபா...தொகைநிலை | ௪௮௫ |
| பரிபா...நாலீரைம்ப | ௫௧௪ |
| பழிப்பில் சூத்திரம் | ௫௭௮ |
| பறழெனப் படினும் | ௫௫௫ |
| பனிஎதிர் பருவமும் | ௧௧ |
| பன்றி...உழையே | ௫௬௩ |
| பன்றி...நாயென | ௫௬௬ |
| பன்னாறு வகையினுந் | ௨௪௧ |
| பாங்கர் நிமித்தம் | ௧௮௩ |
| பாடாண் பகுதி | ௧௩௫ |
| பாட்டி என்ப | ௫௬௭ |
| பாட்டிடைக் கலந்த | ௫௨௨ |
| பாட்டிடை வைத்த | ௫௧௯ |
| பாட்டுரை நூலே | ௫௪௫ |

பரணன் கூத்தன் ௫௩௦
பாராட் டெடுத்தல் ௩௮௦
பார்ப்பார் அறிவர் ௫௩௩
பார்ப்பான் பாங்கன் ௫௩௦
பால்கெழு கிளவி ௩௩௧
பாவிரி மருங்கினைப் ௪௭௩
பிடியென் பெண்பெயர் ௫௬௫
பிணவல் எனினும் ௫௬௬
பிள்ளை குழவி ௫௫௮
பிள்ளைப் பெயரும் ௫௫௬
பிறப்பே குடிமை ௩௬௨
பிறிதொடு படாது ௪௦௯
பின்பனி தானும் ௧௨
பின்முறை ஆகிய ௩௧௨
பின்னர் நான்கும் ௧௮௪
புகழொடும் பொருளொடும் ௪௯௪
புகுமுகம் புரிதல் ௩௭௮
புணர்தல் பிரிதல் ௧௫
புணர்ந்துடன் போகிய ௨௮௩
புதுமை பெருமை ௩௬௬
புலத்தலும் ஊடலும் ௩௦௬
புல்லுதல் மயக்கும் ௨௯௪
புல்லும் மரனும் ௫௬௦
புல்வாய் நவ்வி ௫௬௬
புல்வாய் புலிஉழை ௫௬௨
புள்ளும் உரிய ௫௬௫
புறக்கா ழனவே ௫௭௧
புறஞ்செயச் சிதைதல் ௩௮௨
புறத்திணை மருங்கின் ௭௧
புறத்தோ ராங்கண் ௩௧௪
புறநிலை வாயுறை ௫௧௪
புறப்பாட்டு வண்ணம் ௫௪௨
பூப்பின் புறப்பா ... ௩௨௦
பெண்ணும் ஆணும் ௫௬௮
பெண்ணும் பிணவு ௫௬௬
பெண்பா லான ௫௬௬
பெயரும் வினையுமென்று ௧௯
பெருமையுஞ்...சிறப்பின் ௪௦௧
பெருமையுஞ்...மெய்ப்பா ௪௦௭
பெருமையும் உரனும் ௧௬௬
பெறற்கரும் பெரும்பொருள் ௨௮௪
பெற்றமும் எருமையும் ௫௬௬
பெற்றம் எருமை ௫௯௩
பேடையும்...நாடின் ௫௯௫
பேடையும்...பெட்டையும் ௫௫௪
பொய்யும் வழுவுங் ௨௫௧
பொருளென மொழிதலும் ௩௩௮
பொருளேயுவமஞ் ௪௦௦
பொருள்வயின் பிரிதலும் ௩௪
பொழிப்பும் ஒரூஉஞ் ௪௬௦
பொழுது தலைவைத்த ௩௪௯
பொழுது மாறும் ௪௫
பொழுதும் ஆறுங் ௩௩௫
போக்கியல் வகையே ௪௯௬
போலு மறுப்ப ௪௦௬
மகவும் பிள்ளையும் ௫௫௧
மக்கள் தாமே ௫௯௧
மக்கள் நுதலிய ௭௧
மங்கல மொழியும் ௩௫௪
மண்டிலங் குட்டம் ௪௭௭
மயிலும் எழாஅலும் ௫௬௩
மரபுநிலை திரிதல் ௫௭௩
மரபுநிலை திரியிற் ௫௭௩
மரபுநிலை...உரைபடு ௫௭௪
மரபுநிலை...விரவும் ௬௧
மரபே தானும் ௪௫௬
மருட்பா ஏனை ௪௫௮
மறங்கடைக் கூட்டிய ௭௯
மறுதலைக் கடாஅ ௫௭௯
மறைந்த ஒழுக்கத் ௨௪௫
மறைந்தவற் காண்டல் ௫௧௯
மறைவெளிப் படுதலும் ௫௨௯
மனையோள் கிளவியுங் ௫௩௨
மனைவி உயர்வுங் ௩௪௪
மனைவி தலைத்தாட் ௩௦௯
மனைவி முன்னர்க் ௩௦௯
மன்னர் பாங்கின் ௩௩
மாட்டும் எச்சமும் ௫௩௯
மாத்திரை முதலா ௪௭௧
மாத்திரை யெழுத்தியல் ௪௧௯
மாயோன் மேய ௯
மாவும் புள்ளும் ௫௬௧
மாற்றருங் கூற்றஞ் ௫௬௧
மாற்றருஞ் சிறப்பின் ௧௨௭
மிக்க பொருளினுட் ௫௫௩
முச்சீ ரானும் ௪௩௭
முச்சீர் முரற்கையுள் ௪௫௧
முடுகியல் வரையார் ௪௪௯
முடுகு வண்ணம் ௫௪௬
முட்டுவயிற் கழறல் ௩௮௮
முதலுஞ் சினையுமென் ௩௯௯
முதலொடு புணர்ந்த ௧௮௪
முதல்எனப் படுவ ௧௭
முதல் எனப்படுவது ௮
முதல்கரு உரிப்பொருள் ௭
முதல்வழி யாயினும் ௫௦௮

| | பக். |
|---|---|
| முதற்றொடை பெருகிச் | ௪௯௯ |
| முந்நா லல்லது | ௨௪௧ |
| முந்நீர் வழக்கம் | ௩௫ |
| முயற்சிக் காலத் | ௨௪௩ |
| முறைப்பெயர் மருங்கினற் | ௩௪௦ |
| முற்றிய லுகரமும் | ௪௨௩ |
| முன்னிரை இறினும் | ௪௨௬ |
| முன்னிலைப் புறமொழி | ௩௦௯ |
| முன்னிலை யாக்கல் | ௧௭௦ |
| முன்னைய நான்கும் | ௬௯ |
| முன்னைய மூன்றும் | ௧௮௩ |
| மூங்கா வெருகெலி | ௫௫௫ |
| மூடுங் கடமையும் | ௫௬௭ |
| மூப்பே பிணியே | ௩௬௫ |
| மூவா றெழுத்தே | ௪௩௬ |
| மூவைந் தெழுத்தே | ௪௩௫ |
| மூன்றுறுப் படக்கிய | ௫௧௮ |
| மெய்தெரி வகையின் | ௫௬௯ |
| மெய்தொட்டுப் பயிறல் | ௧௭௨ |
| மெய்பெறு மரபின் | ௪௬௫ |
| மெய்பெறும் அவையே | ௫௨௯ |
| மெய்ப்பெயர் மருங்கின் | ௧௪௦ |
| மெல்லிசை வண்ணம் | ௫௪௧ |
| மேலோர் முறைமை | ௩௩ |
| மேலோர் மூவர்க்கும் | ௨௫௦ |
| மேவிய சிறப்பின் | ௩௧ |
| மேற்கிளந் தெடுத்த | ௫௭௭ |
| மொழிஎதிர் மொழிதல் | ௩௧௮ |
| மொழிகரந்து மொழியின் | ௪௯௩ |
| மொழியினும் பொருளினும் | ௪௬௨ |
| மோத்தையுந் தகரும் | ௫௬௪ |
| மோனை எதுகை | ௪௫௯ |
| யாடுங் குதிரையும் | ௫௫௬ |
| யாறுங் குளனுங் | ௩௨௧ |
| யானையுங் குதிரையுங் | ௫௫௭ |
| வசையொடும் நசையொடும் | ௪௯௪ |
| வஞ்சி அடியே | ௪௩௭ |
| வஞ்சிச் சீரென | ௪௨௮ |
| வஞ்சி தானே | ௮௭ |
| வஞ்சித் தூக்கே | ௪௫௧ |
| வஞ்சி மருங்கி | ௪௩௦ |
| வஞ்சி மருங்கினும் | ௪௩௧ |
| வண்டே இழையே | ௫௬௪ |
| வண்ணகம் தானே | ௪௯[illegible] |
| வண்ணந் திரிந்து | ௩௩௨ |
| வண்ணம்...அவையென | ௫௪௬ |
| வண்ணம்...நாலைந் | ௫[illegible]௯ |
| வருத்த மிகுதி | ௩௪௪ |
| வரைவிடை வைத்த | ௨௦௯ |
| வல்லிசை வண்ணம் | ௫௪௧ |
| வழக்கியல் மருங்கின் | ௧௩௬ |
| வழக்கெனப் படுவ | ௫௭௪ |
| வழிபடு தெய்வம் | ௪௭௪ |
| வழியின் நெறியே | ௫௭௫ |
| வழியெனப் படுவ | ௫௭௫ |
| வாகை தானே | ௧௦௮ |
| வாயில் உசாவே | ௫௩௩ |
| வாயிற் கிளவி | ௩௫௨ |
| வாயுறை...அவைய | ௪௭௫ |
| வாயுறை...வயங்க | ௪௭௫ |
| வார்கோட் டியானையும் | ௫௬௨ |
| வாழ்த்தியல் வகையே | ௪௭௪ |
| விட்டகல் வின்றி | ௫௭௮ |
| விரவியும் வரூஉம் | ௩௯௬ |
| விராஅய தளையு | ௪௪௭ |
| விராஅய் வரினும் | ௪௪௩ |
| விருந்தே தானும் | ௫௪௯ |
| வில்லும் வேலுங் | ௫௭௦ |
| வினைபயன் மெய்உரு | ௩௧௫ |
| வினையின் நீங்கி | ௫௭௪ |
| வினையுயிர் மெலிவிடத் | ௩௮௩ |
| வினைவயின் பிரிந்தோன் | ௩௨௨ |
| வெண்சீர் ஈற்றசை | ௪௩௨ |
| வெண்டளை விரவியும் | ௪௪௮ |
| வெண்பா இயலினும் | ௪௫௪ |
| வெண்பா ஈற்றடி | ௪௫௨ |
| வெண்பா உரிச்சீர் | ௪௩௧ |
| வெளிப்பட வரைதல் | ௨௪[illegible] |
| வெளிப்படை தானே | ௨௪௭ |
| வெறியறி சிறப்பின் | ௮௦ |
| வேட்கை ஒருதலை | ௧௬௮ |
| வேட்கை மறுத்துக் | ௩௩௬ |
| வேண்டிய கல்வி | ௩௨௧ |
| வேந்துவிடு தொழிலிற் | ௫௭௦ |
| வேந்துவிடு முனைஞர் | ௭௪ |
| வேந்துவினை இயற்கை | ௩௪ |
| வேந்துறு தொழிலே | ௩௨௧ |
| வேழக் குரித்தே | ௫௯௨ |
| வேளாண் மாந்தர்க் | ௫௭௦ |
| வேறுபட வந்த | ௪௧௪ |
| வைகறை விடியல் | ௧௧ |
| வைசிகன் பெறுமே | ௫௬௬ |

# மேற்கோள் செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை


அஃகாமை செல்வத்துக்
(குறள், ௱எஅ) ரு௪௩
அகத்தன வாழ்கழல்
(வெண்பா. நொச்சி, எ) க0க
அகலநீ துறத்தலின்
(கலித், எ0) ௩0௯
அகலிரு விசும்பிற்
(பெரும்பாண், க) ௪௪௨
அகல்இரு விசும்பிற்
(பெரும்பாண், க) ௪0௬
அகவல் இசையன
(யாப். வி. ப. ௬௯) ௪எஅ
அகழ்வாரைத் தாங்கும்
(குறள், கருக) க௨௪
அகனகர் கொள்ளா
(கலித், க௯) ௩ருரு
அகன்ற அல்குல்
(யாப், வி. ப. க௩0) ௪௬அ
அங்கையுள் நெல்லி
(வெண்பா-கரந்தை க௩) அ௪
அசைஇயற்கு உண்டாண்டோர்
(குறள், க0௯அ) க௬௬, ௩ரு௩
அஞ்சுவல் வாழி ருஅ
அடக்கமில் போழ்தின்கண்
(கலித், அ௨) கஅ௩, ௩0க
அடல்வேல் அமர்நோக்கி
(யாப். வி. ப. கஅ௨) ௪௬ரு
அடிசிற் கினியாளே ௩0௪
அடிதாங்கும் அளவின்றி
(கலித், கக) ௩௪எ, ௪௪௬, ௪௬க
அடுக்கிவரினு (குறள், ௬௨ரு) ௩எஎ
அடுதிறல் ஒருவநிற் (யாப். விரு. அ௩ மேற்கோள்) க௪க, ரு0க
அடுநை ஆயினும் (புறம், ௩௬) ௯௬
அடும்பமலங்கொடி
(ஐங்குற்-தனி, ௬) ௨0எ
அடும்பவிழ் அணிமலர் ௨எ௯
அடும்புகழ் பாடி (வெண்பா-பொது, க௩) அ௬
அடைமரை யாயிதழ்ப்
(கலித், அ௪) ௩௯௬ ௩௯௯
அணங்குகொல் ஆய்மயில்
(குறள், க0அக) ௩எஎ
அணங்குடைப் பனித்துறைத்
(ஐங்குறு, கஎ௪) கஅ௨
அணிகடல் தண்சேர்ப்
(ஐந்திணை யைம், ரு0) ௨0௪
அணிநிறக் கெண்டை ௨௯௨
அணிமலர் அசோகின்
(யாப். வி. ப. க௩0) ௪௬எ
அணியாய செம்பழு க௪அ
அணிற்பல் அன்ன
(குறுந், ௪௯) ௨எ௯
அணை மருள் இன்றுயில்
(கலித், க௪) ௩௪ரு
அண்ணாந் தேந்திய
(நற்றிணை, க0) ரு௩௬
அதிரிசை யருவிய ௨ரு௬
அது கொல் தோழி
(குறுந், ரு) க௯எ
அதுதான் மலையே ௪அஎ
அந்தணர் ஆவொடு
(முத்தொள், அ௨) கரு0
அந்தணர் சான்றோர் (வெண்பா. பாடாண், ௩௩) க௪எ
அமர்க்காணின் அமர்
(புறம், க௬எ) ௪௪௨
அம்பொற் கொடிஞ்சி
(யாப். வி. ப. க௩0) ௪௬௪
அம்ம வாழியோ ௨௨௪
அம்ம...காதலர்
(ஐங்குறு, ௨௨க) க௯௬
அம்ம...காதலர்
(யா. வி. ப. ௩அ௬) ரு௪௪
அம்ம...நம்மொடு
(ஐங்குறு, ௨௩0) ௨௩ரு
அம்ம...நலமிக (ஐங்குறு, க௨0) க௯௯
அம்ம...நலனே
(ஐங்குறு, ககஎ) ௨0எ
அம்ம...பன் மாண்
(ஐங்குறு, ககரு) க௯அ

அம்ம...பன்மலர்
(ஐங்குறு, உசச) உநூ0
அயிரைபரந்த (குறுந், கஎஅ) உஅரு
அயில்வேல் அனுக்கி
(யாப். வி. ப. கநூ0) சசுஅ
அரம்போழ் அவ்வளை
(அகம், கஉரு) நூஉ
அரவின் பொறியும்
(கலித், ரு0) உகஅ
அராகந் தாமே (அகத்தியம்) சஅஎ
அரிகொண்ட கண்சிவப்ப
(வெண்பா பாடாண், சகூ) கநூகூ
அரிக்குரற் கிண்கிணி
(யாப். வி. ப. கநூ0) சசுநூ
அரிதரோ தேற்ற
(குறள். ககருநூ) சஅ
அரிதாய அறனெய்தி (கலித், கக)
சச, நூஎஉ, சசசு, சருஅ
அரிதாற்றி அல்லல்
(குறள், ககசு0) உகநூ
அரிமான் அன்ன
(பட்டினப், உகூஅ) நூகூஎ
அரிற்பவர்ப் பிரம்பின்
(குறுந், கூக) நூ00
அருங்கடி அன்னை
(நற்றிணை. நூசுரு) ககூகூ
அருட்செல்வம் செல்வத்துட்
(குறள், உசக) கஉரு
அருமைநற் கறியினும் சஅகூ
அரும்பிய கொங்கை
(யாப். வி. ப. கநூக) சசுஅ
அரும்பிற்குமுண்டோ (வெண்பா.
இருபாற் பெருந், கக) கூஎ
அரும்பெறற் காதல ருகூ
அருவி ஆர்க்கும்
(நற்றிணை. உகநூ) கஎகூ
அருளும் அன்பும் ருஎ
அலந்தாரை யல்லல்
(குறள், கநூ0நூ) நூ0சு
அல்கன்மழை பொழிந்த
(ஐங்குறு, உஉ0) உநூச
அலரும் தெரிகணை
(கலித், நூகூ) உசகூ
அவருள் மலர்மலி ருசு
அவரை பொருந்திய
(ஐந்திணை யெழு, க) கருஅ
அவர்நெஞ் சவர்க்காதல்
(குறள், கஉகூக) நூஉகூ
அவன்மறை தேஎம்
(அகம், சஅ) நூருக
அவாப்போ லகன்றதன்
ச0உ, ச0அ
அவிர்மதி அனைய
(யாப். வி. ப. கநூக) சசுஅ
அவ்வியானை வனப்புடைத்
(கலித், கூஎ) நூநூச
அழியல் ஆயிழை
(குறுந், கசநூ) உஉச
அழிவில முயலும் (நற், கூ) சகூ
அழிவின் அவைநீக்கி
(குறள், எஅஎ) கஉரு
அழிவின்று அறைபோகா
(குறள், எசுச) கஉரு
அழுக்கா றெனவொரு
(குறள், கசுஅ) நூஎஎ
அழுங்கல்நீர் வையகத்து
(வெண்பா-கரந்தை, க) அச
அழுந்துபட வீழ்ந்த (நற், உ) சசு
அளந்த திறையார்
(வெண்பா. பாடாண், கூ) கசகூ
அளிதோ தானே
(குறுந், க0சகூ) உகக
அளிதோ தானே
(புறம், க0கூ) கூஎ
அளிநிலை பொருஅது
(அகம், ரு) உசுஉ
அளியதாமே (புறம், உசஅ) கநூச
அளியர் தாமே (அகம், கசு) உகூஎ
அறங்கூறான் அல்ல
(குறள், கஅக) கஉநூ
அறஞ்சாரா நல்குர
(குறள், க0சஎ) நூசுகூ
அறஞ்சா லியரோ
(ஐங்குறு. நூகஉ) ருஅ
அறத்தா றிதுவென
(குறள், நூஎ) சஅஉ
அறத்திற்கே அன்பு
(குறள், எசு) கருகூ
அறத்தினூஉங் காக்கமு
(குறள், நூஉ) ருக
அறத்தொடு நின்றேனைக்
(கலித், நூகூ) உசசு
அறம்புரி அருமறை
(ஐங்குறு, நூஅஎ) சசு
அறவினை யாதெனிற்
(குறள், நூஉக) கஉரு

அறனின்ற விதையொழியா (யாப். வி. பக். ௪௬௮) ௪௪௭
அறனு மீகையு ௫௧
அறன்இன்றி அறல் (கலித், ௩) ௨௯௩
அறன்நிலை ஒப்பே ௧௬௦
அருஅ யாணர் (பதிற்று, ௭௧) ௯௨ - ௯௩
அறிமி னறநெறி (நாலடி. ௧௭௨) ௪௭௬
அறிமின் அறநெறி (நாலடி, ௧௭௨) ௪௭௨
அறியாமையின் (நற்றிணை, ௫௦) ௨௦௯-௨௧௦
அறியாய் வாழி (அகம், ௫௩) ௨௪
அறிவிலா ரெல்லாரும் (குறள், ௧௧௩௯) ௧௮௦
அறிவினன் ஆகுவ (குறள், ௩௧௫) ௫௪௭
அறுசுவை உண்டி (நாலடி, செல்வம், ௧) ௧௨௭, ௪௭௨, ௪௮௩
அனிச்சமும் அன்னத்தின் (குறள், ௧௧௨௦) ௪௧௪
அனைத்தினிப் பெரும (கலித், ௧௪௯) ௫௦௩
அன்பற மாறியாம் (கலித், ௧௯) ௩௪௪
அன்பினும் ஆர்வம் (குறள், ௭௪) ௪௭௦
அன்றெறிந் தானும் (வெண்பா. உழிஞை, ௭) ௧௪௧
அன்ன மரபி ௪௮௯
அன்னாய் அறங்கொல் (யாப். வி. ப. ௨௪௪) ௫௨௫
அன்னாய் இவனோர் (குறுந், ௩௩) ௨௮௧, ௩௫௬
அன்னாய்...என்றோழி (ஐங்குறு, ௨௧௫) ௨௩௩
அன்னாய் நின்மகள் (அகம், ௪௮) ௨௩௨, ௨௩௩
அன்னாய் வாழிவேண் (அகம்,௪௮) ௩௩௫
அன்னாய்...வாழிவேண் (ஐங்குறு,௨௦௧) ௨௩௪
அன்னை அறியினும் (அகம்,௧௧௦) ௨௩௧-௨௩௨
அன்னை கடுஞ்சொல் (கலித்,௯௦) ௧௮௫
அன்னை...புன்னை (ஐங்குறு,௧௧௦) ௨௦௨
அன்னை...முழங்கு (ஐங்குறு,௧௦௫) ௨௩௧
அன்னையும் அறிந்தனள் (ஐங்குறு, ௨௩௮) ௨௨௧
அன்னையோ மன்றத்துக் (கலித், ௧௧௦) ௧௯௪
ஆங்கதை அறிந்தனிர் (கலித், ௧௩௩) ௫௦௪
ஆங்ஙனம் உரைப்பின் ௭௩
ஆசாகு எந்தை (புறம், ௩௦௭) ௧௦௬
ஆடியல் அழற்குட் (புறம், ௨௨௯) ௧௫௪
ஆடியல் விழவின் (நற்றிணை, ௯௦) ௨௮௨
ஆடுநனி மறந்த (புறம், ௧௬௧) ௧௫௪
ஆண்டலைக் கின்ற (கலித். மருதம், ௨௯) ௬௭
ஆமா சிலைக்கும் (கைந்நிலை, ௧௮) ௨௯௪
ஆம்பல் நாறுந் (குறுந், ௩௦௦) ௩௯௬
ஆயிரம் விரித்த ௪௮௮
ஆயும் அடுதிறலாற் (வெண்பா. காஞ்சி, ௧௬) ௧௩௦
ஆயும் அறிவினர் (குறள், ௯௧௮) ௩௭௯
ஆர்களிறு மிதித்த (குறுந், ௫௨) ௧௮௯
ஆவா என்றே (யாப். வி. ப. ௧௩௬) ௪௬௯, ௫௨௭
ஆவும் ஆனியற் (புறம், ௯) ௯௧, ௧௪௪
ஆளமர் வெள்ளம் (வெண்பா. கரந்தை ௧௧) ௮௫
ஆளி மணிக்கொடிப் (வெண்பா வெட்சி, ௮௦) ௮௦
ஆள்வழக் கற்ற (அகம், ௫௧) ௨௬௦
ஆறறி அந்தணர்க் (கலித், க. வாழ்த்து) ௪௬௨
ஆறுகுடி நீறுபூசி ௪௪௧
ஆறுசெல் வருத்தஞ் ௪௮
ஆற்றுத லென்பதொன் ௫௦௪
ஆற்றவுங் கற்றார் (பழமொழி, ௧௧௬) ௧௧௦
ஆனா ஈகை (புறம், ௪௨) ௯௫

ஆன்முலை அறுத்த (புறம், ௩௪) ௧௪௪
ஆன்ற கேள்வி (புறம் ௨௬) ௧௧௧
ஆன்ற சிறப்பின் (பன்னிரு படலம்) ௭௩
இகலே துணையா (வெண்பா. வெட்சி, அ) ௭௭
இகல்வேந்தன் சேனை (கலித், ௧௦௮) ௧௯௩
இடம்படு ஞாலத் (வெண்பா. சிறப்பிற் பொது, ௫) ௧௩௪
இடிக்குங் கேளிர் (குறுந், ௫௮) ௧௭௬
இடுக ஒன்றோ (புறம், ௨௩௯) ௪௫௨
இடுமணல் எக்கர் (ஐந்திணையெழு, ௫௭) ௨௨௪
இடை நுடங்கவீங்கோதை ௪௨௭
இணர்ததை ஞாழல் (பதிற்று, ௩௦) ௯௧
இணை பிரியணி ௪௮௯
இதுஎன் பாவைக் (ஐங்குறு, ௩௭௫) ௩௯
இதுமற் றெவனோ (குறுந், ௧௮௧) ௨௮௭
இந்திரனே போலும் (யாப். வி. ஒழி) ௪௦௨
இந்திரன் என்னின் (முத்தொள்ளாயிரம்) ௮௩
இமையவில் வாங்கிய (கலித், ௩௮) ௪௪௭
இம்மை உலகத் (அகம், ௬௬) ௩௧௩
இம்மை பயக்குமால் (நாலடி, கல்வி. ௨) ௧௧௦
இம்மைப் பிறப்பில் (குறள், ௧௩௧௫) ௨௫௮
இரண்டறி களவின் (குறுந், ௩௧௨) ௧௮௭
இரந்து குறையுறாது (இறையனாரகப், ௬) ௨௧௭
இரவலர் புரவலை (புறம், ௧௬௨) ௧௧௧
இரவார் இரப்பார்க் (குறள், ௧௦௩௫) ௧௧௩
இரவி னானும் (ஐங்குறு, ௧௭௩) ௧௭௭
இருக்கை எழலும் (நாலடி, குடிப்பிறப்பு. ௪) ௧௧௩
இருங்கடல் உடுத்தஇப் (புறம், ௩௬௩) ௧௨௯, ௪௭௫, ௪[illegible]௦
இருங்கண் யானையொடு (பதிற்றுப் பத்து) ௮௯
இருங்கழி முதலை (அகம், ௩) ௨௬௧
இருது வேற்றுமை (சூளாமணி. சீய. ௧௭௦) ௫௨௭
இருநிதி மதிக்கும் ௪௦௫
இருந்த வேந்தன் (அகம், ௩௮௪) ௩௨௩
இருப்புமுகஞ் செறித்த (புறம், ௩௬௯) ௧௧௭
இருமுந்நீர்க் குட்டமும் (புறம், ௨௦) ௧௧௨
இரும்பிடித் தொழுதியொடு (புறம், ௪௪) ௯௬
இரும்பிழி மாரி (அகம், ௧௨௨) ௨௦௨
இரும்பின் அன்ன (யாப். வி. ப. ௧௪௬) ௪௬௨
இரும்பு முகம் செறித்த (புறம், ௩௬௯) ௪௦௧
இரும்புலிக் கிரிந்த ௪௩
இருவகை நிலத்தின் ௩௬௧
இருவயின் ஒத்தும் (அகத்தியம்) ௪௯௪
இருளிடை மிதிப்புழி (அகம், ௧௨௮) ௩௨௯
இருள்சேர் இருவினை (குறள், ௫) ௪௨௨, ௪௪௬, ௪௫௩
இருள்திணிந் தன்ன (குறுந், ௧௨௩) ௨௨௩
இறைக்கும் அஞ்சிறைப் (சூளாமணி. கல், ௫௧) ௫௨௭
இலங்குபிறை யன்ன (அகம், கடவுள் வாழ்த்து) ௩௯௬
இலங்கொளி மரகதம் ௫௦௦
இலனென்னும் எவ்வம் (குறள், ௨௨௩) ௧௧௧
இலைசூழ்செங் காந்தள் ௨௧௯
இலைபடர் தண்குளவி (ஐந்திணையெழு, ௩) ௨௦௫
இல்லிருந்து மகிழ்வோர்க் (கலித், ௨) ௩௦௮
இல்லுடைக் கிழமை ௧௭௯
இல்லெனை இரந்தோர்க் (கலித், ௨) ௨௬௩, ௩௧௮
இல்லொடு மிடைந்த ௨௧

இல்லோன் இன்பங்
(குறுந், ௬௨0) ௧௮௬
இவளே, கானல்
(நற்றிணை, ௪௫) ௨௧௪
இவளே, நின்சொற்
(குறுந், ௮௧) ௨௨௨
இவளே நின்னல ௩௩௨
இவளைச் சொல்லாடிக்
(கலித், ௫௬) ௫௧௬
இவ்வே, பீலி (புறம், ௬௫) ௧௧௬
இழைத்தது இகவாமைச்
(குறள், எஎ௬) ௧௨0
இளமா எயிற்றி
(சிலப், வேட்டுவவரி) எ௬
இளிகொண்ட தீஞ்சொல்
(வெண்பா. வெட்சி, ௧௫) எ௬
இறந்தாரை யெண்ணிக்கொண்
(குறள், ௨௨) ௪0௪
இறவுப்புறத் தன்ன
(நற்றிணை, ௧௬) ௨௨௨
இருஅல் அருந்திய
(அகம், ௨௮௬) ௧0
இற்பிறந்தார் கண்ணேயும்
(குறள், ௧0௪௪) ௩௬௬
இனமலர்க் கோதாய்
(யாப். வி. பக். ௨0௬) ௪௨௪
இனமீ னிருங்கழி
(திணைமொழி, ௪௪) ௨௨௮
இனியவர், வரினும் ௩0௬
இன்கடுங் கள்ளின்
(புறம், ௮0) ௧௧௫
இன்கண் உடைத்தவர்
(குறள், ௧௧௫௨) ௨எ௧
இன்பத்தின் இகந்தொரீஇ ௪௪
இன்பம் இடைதெரிந்
(நாலடி, ௫௪) ௩௨எ
இன்பம்விடல்லுற்றுக்
(குறள், ௧௧௬௬) ௩௮௪
இன்பம் விழையான்
(குறள், ௬௧௫) ௨௬௪
இன்றியாண் டையனே
(குறுந், ௩எ௬) ௨௩௪
இன்று கொல் அன்று
(நாலடி, ௩௬) ௪௪௫
இன்றே சென்று
(குறுந், ௧௮௬) ௧௮௮
இன்னகை இனைய
(அகம், ௩௬) ௩௩0
இன்னகைத் துவர்வாய்க்
(யாப். வி. பக் ௧௫௩) ௪௬௩
இன்ன ளாயினள்
(குறுந், ௬௮) ௨00
இன்னோர் அனைய ௪௬0
ஈங்கேவருவாள் (கலித், ௫௬) ௪௧௫
ஈரடி யூகு (அகத்தியம்) ௪௮எ
ஈன்பருந் தியவும்
(நற்றிணை, ௩) ௬௧
ஈன்றுபுறந் தந்த (அகம் ௩௫) ௩௮
உகுபனிகண்
(யாப். வி. பக். ௪௬௮) ௪௪எ
உக்கத்து மேலும்
(கலித். மருதம், ௨௬) ௬எ
உடனிவை தோன்றும்
(செயிற்றியம்) ௩௬௩
உடுத்துந் தொடுத்தும்
(குறுந், ௨௬௫) ௩0௫, ௩௫௫
உடையிவ ளுயிர்வாழாள்
(கலித், ௩) ௩௧௫
உண்கடன் வழிமொழிந்,
(கலித், ௨௨) ௩௧0
உண்டார்கண் அல்லது
(குறள், ௧0௬0) ௧௬௯, ௧௬0
உண்டால் அம்மஇவ்
(புறம், ௧௮௨) ௧௨௧
உண்ணற்க கள்ளை
(குறள், ௬௨௨) ௫௩௫
உண்ணாமையின்
(அகம். ௧௨௩) ௨௬௪
உண்துறைப் பொய்கை
(ஐந்திணை யெழு. ௫௨) ௨௮௮
உதுக்காண், சுரந்தானை
(யாப். வி. பக் ௩௫௬) ௪௩௮
உப்பமைந் தற்றால்
(குறள், ௧௩0௨) ௨௬௧
உயர்கரைக் கானியாற்
(ஐங்குறு, ௩௬௧) ௨௫
உய்ந்தொழிவார் ஈங்கில்லை
(வெண்பா. வெட்சி, எ) எஎ
உய்ப்போன் செய்தது
(செயிற்றியம்) ௩௬௨
உரவரும் மடவரும்
(பதிற்று. எ௧) ௬௪
உரவொலி முந்நீர்
(பு. வெ. கைக்கிளை, ௬) ௪௮௫
உருமுரறு கருவிய
(அகம், ௧௫௮) ௨௨௬

உருவுகண் டெள்ளாமை (குறள், ௬௬௭) ௪௮௨
உரைத்திசிற் றோழியது (சிற்றெட்டகம்) ௬௪
உரைப்பின் அதுவியப்போ (வெண்பா. கரந்தை, ௬) ௮௫
உலக முவப்ப (திருமுருகாற், ௧-௬) ௪௭௨
உலக மூன்றும் (யாப். வி. ப, ௧௩௧) ௪௭0
உலகுகிளர்ந் தன்ன (அகம், உ௫௫) ௩௫
உலகுடன் விளங்கும் (யாப். வி. ப. ௧௮௫) ௪௬௮
உழுதுபயன் கொண்டு (வெண்பா. வாகை,) ௧0, ௧௧௩
உழுந்து தலைப்பெய்த (அகம், ௮௬) உ௫௪
உளைத்தவர் கூறும் வெண். (இருபாற்,பெருந், ௧௪) ௬௬
உள்ளம் பிணிக்கொண் (நற்றிணை. உ௮௪) ௩உ௮
உள்ளிக் காண்பென் (குறுந், உ௮௬) ௧௬௬, ௧௮௬
உள்ளினென் அல்லனே (குறுந், ௯௯) உ௬௭
உள்ளிய வினைமுடித் (நற்றிணை ௩) ௩௭உ
உள்ளுதொறு நகுவன் (நற்றிணை, ௧00) ௩௪௧
உறுஅதோ ஊரறிந்த (குறள், ௧௧௪௩) ௧௮௮
உறுகழி மருங்கின் (அகம், உ௩0) ௧௬௭
உறுசுடர் வாளோ (புறப். வெ. எ, ௮) ௩௬௯
உறுதி தூக்கத் (நற்றிணை, உ௮௪) ௫௩௪
உறுதுப்பஞ்சா(புறம்,௭உ) ௩௬௯
உள்பெய லெழிலி (யாப். வி. ப ௩௮௬) ௫௪உ
உறுபொருளும் உல்கு (குறள், ௭௫௬) ௧௮௪
உறுவளி தூக்கும் (கலித், ௮௪) உ௭௭
உன்னங் கொள்கையொடு (அகம், ௬௫) ௪௧
ஊடலில் தோன்றுஞ் (குறள், ௧௩உஉ) உ௫௯
ஊடலின் உண்டாங்கோர் (குறள், ௧௩0௭) உ௫௯
ஊடுக மன்னோ (குறள், ௧௩உ௯) உ௫௯
ஊரவர் கௌவை (குறள், ௧௧௪௭) ௩0௮
ஊர்க்கால் நிவந்த (கலித். குறிஞ்சி. உ0) ௬௪
ஊர்க்கும் அணித்தே (குறுந், ௧௧௩) உஉஉ
ஊர்க்குறு மாக்கள் (புறம், ௯௪) ௧௪௪
ஊழிநீஇ உலகுநீஇ ௫0௧
ஊறொரால் உற்றபின் (குறள், ௬௬உ) ௩உ௬
ஊனும் ஊனும் (புறம்,௩௮௧) ௧௫உ
எங்கண் மலர (வெண்பா. உழிஞை, உ௮) ௧0௧
எச்சிற் கிமையாது (நாலடி, ௩௪௫) ௪0௪
எண்பொருள ஆகச் (குறள், ௪உ௪) ௧௧0
எந்தையும், நிலனுறப் (அகம், ௧உ) ௫௩௧
எந்நன்றி கொன்றார்க்கு (குறள், ௧௧0) ௪உ௬
எமக்குநயந் தருளினை (ஐங்குறு, ௧௭௫) ௧௮உ
எம்மணங் கினவே (குறுந், ௫௩) ௧௭௫, உ௯உ
எம்மூர் அல்லது (சிற்றெட்டகம்) ௪௬
எரிஅகைந் தன்ன (அகம், ௧௬) உ௯௭
எரிகவர்ந் துண்ட (ஐங்குறு, ௩௬0) உ௬௯
எரிமருள் வேங்கை (ஐங்குறு, உ௯௪) உ௮௬
எரிமலர் சினைஇய ௪௮௮
எருது கால்உறுஅது (புறம், ௩உ௭) ௧உ0
எலுவ சிறுஅர்(குறுந்,௧உ௯) ௧௭௭
எல்லா, இஃதொத்த (கலித்; ௬௧) ௩௪0
எல்லா தமக்கினி (கலித், ௬உ) ௩௪0

எல்லா விளக்கும் (குறள், ௨௯) ௪௭0
எல்வளை எம்மொடு (கலித், ௧௩) ௨௬௩
எவன்கொலோ (கலித், ௧௧௨) ௧௯௨
எவ்வி இழந்த குறுந், ௧௯ ௩0௬
எழிலிவானம் ௪0௫
எழின்மருப் பெழில்வேழ (கலித். நெய். ௨௧) ௬௬
எழுந்தது துகள் ௫0௬
எழுவணி சிறார் (வெண்பா. வெட்சி, ௪) ௭௬
எறித்தரு கதிர்தாங்கி (கலித்-பாலை. ௮) ௩௯
எறிந்தெமர் தாமுழுத (ஐந்திணையம். ௧௮) ௨௨௫
எறியென் றெதிர்நிற்பாள் (நாலடி, ௩௬௩) ௩0௪
எறும்பி அளையிற் (குறுந். ௧௨) ௪௭௯
எனவாங்கு. இனைநலம் (கலித்-பாலை, ௧௧) ௪௪
எனைத்துணைய ராயினும் (குறள், ௧௪௪) ௩௩௧
என்னோற் றனைகொல் (கலித், மரு, ௨௯) ௨௮
என்ஐமுன் நில்லன்மின் (குறள், ௭௭௧) ௧௨0, ௩௫௬
என்கைக் கொண்டு (நற்றிணை, ௨௮) ௨௭௧
என்றும் இனிய ௧௭௬
என்னும் உள்ளினள் (ஐங்குறு, ௩௭௨) ௩௮
என்னைகொல் தோழி (ஐந்திணையெழு, ௫௯) ௨௧0
என்னை, புற்கை யுண்டும் (புறம், ௮௪) ௩௫௬
என்னொடு புலந்தனர் ௫௯
ஏஎ இஃதொத்தன் (கலித். குறிஞ். ௨௬) ௨௯
ஏந்துவாள் தானை (வெண்பா. வாகை, ௨௬) ௧௧௫
ஏரினுழாஅர் குறள், ௧௪ ௪௪௬
ஏறிரங் கிருளிடை (கலித், ௪௬) ௧௯௬
ஏறுடைப் பெருநிரை (புறம், ௨௫௯) ௮௪
ஏதெவ்வங் காணு ௫0௭
ஏற்றுவலன் உயரிய (புறம், ௫௬) ௪௯௨
ஏற்றார்தி யானும் (முத்தொள்ளாயிரம்) ௮௪
ஏனல் காவல் ௨௧௭
ஐதேய்ந் தன்று (கலித், ௫௫) ௪0௮
ஐயுணர்வு எய்தியக் (குறள், ௩௫௪) ௧௨௪
ஐயோஎனின்யான் புறம், ௨௫௫ ௧௩௩, ௩௬௫, ௫௩௭
ஒக்குமே ஒக்குமே (யாப். வி. பக். ௧௮0) ௪௬௫
ஒண்செங் கழுநீர்க் (அகம். ௪௮) ௧௫, ௩௯௯
ஒண்செங் காந்த ௪0௬
ஒண்ணுதல் நீவுவர் கலித், ௪ ௩௮௬
ஒண்டொடி அரிவை (ஐங்குறு, ௧௭௨) ௧௬௯
ஒத்தகாமத் தொருவனும் (செயிற்றியம்) ௩௭0
ஓரீஇ ஒழுகு குறுந், ௨0௩ ௩௫௬
ஒருகுழை யவன்போல் (கலித், ௨௬) ௩௯௯
ஒருத்தி, புலவியாற் கலித், ௯௨ ௨௬0
ஒருநாள் வாரலன் குறுந், ௧௭௬ ௨௧௯, ௨௩0
ஒருமையுள் ஆமை (குறள், ௧௨௬) ௧௨௨, ௩௭௩
ஒருவனை ஒருவன் புறம், ௭௬ ௧௮0
ஒரூஉக், கொடியியல் கலித், (மரு, ௨௩) ௫௫, ௩௪௫
ஒரூஉநீ எங்கூந்தல் (கலித், ௮௭) ௩௧௮, ௩௭௫
ஒலிபுனல் ஊரனை ௨௮௧
ஒலிவெள் ளருவி (குறுந், ௮௮) ௨௨௨
ஒல்லுவது ஒல்லும் (புறம், ௧௯௬) ௧௪௩
ஒழித்தது பழித்த (அகம், ௩௯) ௨௬௬
ஒழுகு நோன்பக (அகம், ௩௫) ௪0௭
ஒழுக்கம் விழுப்பம் (குறள், ௧௩௧) ௧௨௨
ஒழுக்காறுக் கொள்க (குறள், ௧௬௧) ௧௨௩

ஒடுங்கி ரோதி (குறுந், ௭௦) ௧௭௬
ஒலித்தியங்கு மரபின் (அகம், ௯௨) ௪௦௭
ஒள்வாள் மலைந்தார்க்கும் (வெண்பா. வெட்சி, ௧௪) ௭௮
ஒள்ளிழை மகளிரோ (நற்றிணை, ௧௫௫) ௧௭௧
ஒன்றாக நல்லது (குறள், ௩௨௩) ௫௩௬
ஒன்றேன் அல்லென் (குறுந், ௨௦௮) ௩௪௬
ஓஒஇவள் பொருபுகல் ௫௦௬
ஓஒ இனிதே (குறள், ௧௧௭௬) ௩௩௩, ௪௬௩
ஓஒ உவமை (களவழி, ௩௬) ௧௧௮
ஓங்கல் இருவரைமேற் (திணைமொழி, ௩) ௨௦௮
ஓங்கெழிற்கொம்பர் ௧௬௯, ௩௨௯
ஓம்புமதி வாழியோ (குறுந், ௨௩௫) ௧௮௩, ௧௮௮
ஓருயி ராக (வெண்பா, சிறப்பிற் பொது, ௯) ௧௩௩
ஓரூர் வாழினுஞ் (குறுந், ௨௩௧) ௫௪௨
ஓரை ஆயம் ௨௬
ஓவத் தன்ன (புறம், ௨௫௧) ௩௯௮, ௧௧௪
கங்குலும் பகலுங் ௨௭
கடந்தடு தானைச் (புறம், ௮) ௪௧௪
கடலன்ன காமம் (குறள், ௧௧௩௭) ௧௯௧
கடலே, கானலங் ௪௬௪
கடல்கண் டன்ன (அகம், ௧௭௬) ௨௭௨
கடல்பா டொழிய (அகம், ௩௦) ௪௪௮
கடல்புக் குயிர்கொன்று (சிலப், கானல், ௧௭) ௧௭௩, ௧௭௮
கடவுட் கற்சுனை (நற்றிணை, ௩௪) ௨௩௧
கடாஅ உருவொடு (குறள், ௫௮௫) ௧௨௫, ௪௨௭
கடிமலர்ப் புன்னைக் (கலித், ௧௩௫) ௨௨௯
கடியர் தமக் (கலித், ௮௮) ௫௧௯
கடுங்கட் காளையொடு (ஐங்குறு, ௩௮௫) ௫௮
கடுங்கண்ண கொல்களிற்றால் (புறம், ௧௪) ௧௨
கடுஞ்சினத்த கொல்களிறும் (புறம், ௫௫) ௪௪௨
கடும்புலால் புன்னை (திணைமாலை, ௪௪) ௨௨௦
கட்கினியாள் காதலன் (நாலடி, ௩௮௪) ௩௦௪
கணங்கொள் இடுமணற் (கலித், ௧௩௧) ௨௦௮
கணைக்கால் நெய்தல் ௪௦௬
கண்கவர் கதிர்முடி ௫௦௧
கண்டது மன்னும் (குறள், ௧௧௪௬) ௩௦௮
கண்டிகும் அல்லமோ (ஐங்குறு, ௧௨௨) ௨௭௮, ௩௪௮
கண்டிசின் பாண (குறுந், ௩௫௯) ௩௦௨
கண்டுகேட் டுண்டுயிர்த் (குறள், ௧௧௦௧) ௧௭௫
கண்ணகல் ஞாலம் (திரிகடுகம். கடவுள் வாழ்த்து) ௧௩௭
கண்ணகன் இருவிசும்பிற் ௫௦௯
கண்ணுங் கொளச்சேறி (குறள், ௧௨௪௪) ௩௩௮
கண்ணுஞ் சேயரி (சிற்றெட்டகம்.) ௨௧௪
கண்ணும் படுமோ (நற்றிணை ௬௧) ௪௨௪
கண்ணுள்ளார் காத (குறள், ௧௧௨௭) ௧௯௮, ௩௮௪
கண்ணுள்ளிற் போகார் (குறள், ௧௧௨௬) ௩௮௫
கண்ணொடு கண்ணிணை (குறள், ௧௧௦௦) ௧௯௧
கண்ணொடு நிகர்க்குங் ௪௦௬
கண்ண் டண்ண் (மலைபடு, ௩௫௨) ௪௨௮
கண்டிரள் முத்தம் (ஐந்திணையெழு, ௫௬) ௧௯௬
கண்நிறைந்த காரிகைக் (குறள், ௧௨௭௨) ௨௩௭
கண்படை பெறேன் (அகம், ௫௫) ௩௩௧
கண்போல்வான் ஒருவ ௩௯௮
கதிர்கை யாக (அகம், ௧௬௪) ௨௨
கதுமெனத் தாநோக்கித் (குறள், ௧௧௭௩) ௩௩௨

கயலெழுதி வில்லெழுதிக்
(சிலப். கானல், கக) சOகூ,
கயலெழுதிய இமய
(சிலப். ஆய்ச்சி,) ருககூ
கயலேர் உண்கண்
(யாப். வி. ப, கஙசு) சசுகூ
கரந்தை விரைஇய உஉ
கருங்கண் தாக்கலை
(குறுந், சுகூ) உஉஎ
கருங்கோற் குறிஞ்சிப்
(குறுந். ங) கO
கருமஞ் செயஒருவன்
(குறள், கOஉக) ககங
கருமணற் கிடந்த
(அகம், கசுரு) ஙஙக
கரும்புநடு பாத்திக்
(ஐங்குறு சுரு) உஎஉ
கரைபொரு கானியாற்றங் உஉஅ
கரைபொரு கான்யாற்றங்
(யாப். வி. ப. உஉரு) ருஉரு, ருசுசு
கலங்கவிழ்த்த நாய்கன்
(யா. வி. ப. ஙகஅ) சOஅ
கலந்தநோய் கைம்மிக
(கலித், சகூ) ஙOசு
கல்வரை ஏறிக்கடுவன்
(கைந்நிலை எ) ககூகூ, சஅங
கவர்பரி நெடுந்தேர்
(நற்றிணை, ஙOஎ) உஉO
கவலை கூர்ந்த (செயிற்றியம்)
ஙசுச-ஙசுரு
கவலை மறுகின்
(வெண்பா. வாகை, கரு) ககஎ
கவவுக்கை நெகிழ்ந்தமை
(அகம், உசு) ஙஙச
கவிழ்மயி ரெருத்திற்
(ஐங்குறு. ஙகூஎ) ருஅ
கழகத் தியலுங் (வெண்பா.
பெருந்திணை, ககூ) ககசீ
கழனி மாஅத்து (குறுந், அ) உகூசு
கழைபாடு இரங்கப்
(நற்றிணை, கூரு) கஎஎ
களங்கனி அன்ன
(புறம், கஉஎ) கசங
களம்புகலீ ஓம்புமின்
(புறம். அஎ) கககூ
களரி பரந்து
(புறம், ஙருசு) சஙச
களவென்னுங் காரறி
(குறள், உஅசு) கஉசு
களிறும் கந்தும்
(அகத்திணை, கக, நச்) சகஎ
களிறுகவர் கம்பலை
(அகம், சுசு) ஙகூக
களித்தறியேன் என்பது
(குறள், கூஉஅ) கஉசு
களித்தொறுங் கள்ளுண்டல்
(குறள், கOசரு) கஅஅ
களிற்றுக்கோட் டன்ன
(புறம், ஙஎக) ககசு
கற்பித்தாள் நெஞ்சழுங்கப் ருOங
கற்றதனா லாய (குறள், உ) சசசு
கற்றுக்கண் அஞ்சான்
(குறள், கூஅசு) கஉரு
கறங்குவெள் அருவி
(புறம், உருஉ) ககரு
கறிவளர் சிலம்பிற்
(ஐங்குறு, உசங) உஙங
கனிய நினைவொடு [மூத்.
திருவிரட். ம. மாலை, சு) ருஉசு
கனைபெயல் நடுநாள்
(கலித், சசு) உOரு
கன்மிசை வேய்வாடக் சச
கன்றமர் கறவை
(புறம், உஎரு) ஙஎசு
கன்று குணிலாக்
(சிலப். ஆய்ச்சி) ருஉச
கன்றும் உண்ணாது
(குறுந், உஎ) உOச
காஅய்ச் செந்நெற்
(யாப். வி. ப. கருஅ) சசுச
காடு கனற்றக்
(வெண்பா. பொது, கO) அசு
காணிற் குவளை
(குறள். கககச) கஅஉ
காணுங்கால் காணேன்
(குறள், கஉஅசு) உஅகூ
காண்மதி பாணநீ
(ஐங்குறு கசO) ருகூ
காமங் கடப்ப
(ஐங்குறு. உஙஎ) உஉஅ
காமங்காமம் (குறுந், கஙசு) ஙககூ
காமம் செப்பாது (குறுந், உ) சசஉ
காமம் விடுவொன்றோ
(குறள், கஉசஎ) ககசுகூ
காமம்வெகுளி (குறள். ஙசுO) கஉசு

காமரு சுற்றமொ சகூ0
காமர் கடும்புனல் (கலித், நக) உநச, ருக0
காயாம்பூக் கண்ணிக் (கலித், க0அ) நஎஉ
காய்ந்து கடுங்களிறு (வெண்பா - தும்பை, கஉ) க0சு
காய்நெல் அறுத்துக் (புறம், கஅச) கசசு
காய்மாண்ட தெங்கின் (சீவகசிந், நக) சஎ0
காரவர்போ னேக்கினு ச0எ
காராப்பெய்த (கலித், க0கூ) கசுந
கார்கள்ள உற்ற ச0ரு
கார்விரி கொன்றைப் (அகம். கடவுள் வாழ்த்து.) நஉரு
காலனுங் காலம் (புறம், சக) கருச
காலே பரிதப் (குறுந், சச) நகூ
காலை எழுந்து (குறுந், சரு) உஅஅ
காலை முரசம் (வெண்பா. உழிஞை உந) க00
கானக் கோழிக் (குறுந், உசஉ) ந0உ
கான யானை (குறுந், எக) உஅந
கானலம் பெருந்துறைக் (ஐங்குறு, ககூ) உஉந
கானலுங் கழறுது (அகம், கஎ0) நஉகூ
கானன் மாலைக் (அகம், ச0) உசு
கான்யாறு தழீஇய (முல்லைப், உச-உஅ) அஎ
கிண்கிணி களைந்தகால் (புறம், எஎ) கூஅ
கிழவர் இன்னோர் (கலித். உக) நருக
கிளிபுரை கிளவியாய் (கலித், பாலை, கஉ) சகூ
கிளைசெத்து (நற், நரு) ச0ச
குக்கூ என்றது (குறுந், கருஎ) உஎக
குடிப்பிறப் புடுத்துப் (ஆசிரிய மாலை) கஉஉ
குடையலர் காந்தட்டன் (வெண்பா. பொது, க) அஉ
குணனிலனாய்க் குற்றம் (குறள், அசுஅ) நஎந
குருதி வேட்கை (நற்றிணை, ககஉ) கஅஉ, கஅஎ
குவிந்துசுணங் கரும்பிய (யாப். வி. ப. கசஎ) சுசு
குழலிசைய வண்டினங்கள் (யாப். வி. ப. உசசு) ருஉசு
குழவி இறப்பினும் (புறம், எச) கநஉ
குளிரும் பருவத்தே (ஐந்திணையம், ந0) நகூ0
குறிக்கொண்டு நோக்காமை (குறள். க0கூரு) நஎசு
குறியா வின்பம் (நெடுந்தொகை) உஉஅ
குறுங்கை இரும்புலி (ஐங்குறு, உககூ) உஉசு
குறுநிலைக் குரவின் (நற்றிணை. ருசு) நஉஅ
குறுந்தொடி ஏய்க்கு (பெரும்பாண். கந) ச0எ
குனிகா யெருக்கின் (குணநாற்பது.) உருரு
குன்றக்...அணிமயி (ஐங்குறு, உருஅ) உநக
குன்றக்...மென்தோட் (ஐங்குறு, உசு0) உஉஎ
குன்றக்...வண்டுபடு (ஐங்குறு, உருசு) கஅக
குன்றி னனையாரும் (குறள், கசுரு) ச0ச
குன்று கொண்டு சசக
கூடுவார் கூடல்கள் (யாப். வி. ப. நஅஅ) ருசசு
கூந்தல் ஆம்பல் (குறுந், அ0) ந00
கூர்முள் முண்டகக் (குறுந், ருக) உநரு
கூறுவம் கொல்லோ (அகம், ககூஅ) கருஎ
கூற்றமோ கண்ணோ (குறள், க0அரு) நஎஅ, சுகரு
கூற்றினத்து அன்னோர் (வெண்பா. வெட்சி, ரு) எசு
கெடலரு மாமுனிவர். ரு00
கெடுத்தபடு நன்கலம் (நற்றிணை, கஅஉ) நஎஉ
கேடில் விழுப்பொருள் (குறுந், உககூ) சநஅ
கேட்டிசின் வாழி (குறுந், ந0) நந0

கேட்டிசின் வாழியோ
(ஐங்குறு, ௫௯) ௨௮௮
கேள்கேடு ஊன்றவும்
(அகப், ௯௩) ௫௩
கைகவியாச் சென்று
(அகம், ௯) ௩௨௮
கைகால் புருவங்கண் (வெண்பா. பெருந்திணை, ௧௭) ௧௧௬
கைக்கிளை ஏனைப் ௭௩
கைக்கிளை செந்திறம் ௭0
கையொடு கையொடு ௧0௫
கைவேல் களிற்றொடு
(குறள், ௭௭௪) ௧0௪
கொங்கியர் ஈன்ற ௩௯௭
கொங்குதேர் வாழ்க்கை
(குறுந், ௨) ௪௪௨
கொச்சக வகையின் ௪௮௭
கொடிகுவளை கொட்டை
(யாப். வி. பக். ௩௫௯) ௪௧௭
கொடிச்சி யின்குரல்
(ஐங்குறு, ௨௮௯) ௨௨௭, ௩௩௭
கொடிய ரெயினும்
(சிற்றெட்டகம்) ௩௯௧
கொடியியல் நல்லார்
(கலித், ௮௮) ௩௫௫
கொடிவாலன கருநிறத்தன
(யாப் வி. பக். ௩௩௭) ௪௮௧
கொடுங்குழாய் துறக்குநர்
(கலித் ௧௩) ௩௭௮
கொடுந்தாள் அலவ
(ஐந்திணையைம், ௪௨) ௨0௭
கொடுமுள் மடல்தாழைக்
(ஐந்திணையைம், ௪௯) ௨௨௪
கொடுவரி கூடிக்
(வெண்பா. வெட்சி, ௯) ௭௭
கொடுவரி வேங்கை
(ஐந்திணையைம், ௧௬) ௨0௭
கொண்டல் மாமழை
(நற்றிணை, ௧௪0) ௧௭௮, ௧௫௭
கொய்ம்மலர் குவிந்து
(யாப். வி. ப. ௧௪௮) ௪௯௧
கொலையானைக் கூற்றே
(வெண்பா. காஞ்சி, ௧௩) ௧௯௨
கொல்களிறு ஊர்வர்
(வெண்பா. பொது, ௯) ௮௨
கொல்யானை வெண்மருப்பும்
(திணைமாலை, ௨௨) ௧௭௪
கொல்லைப் புனத்த
(ஐந்திணையெழு, ௨) ௨0௫
கொல்வினைப் பொலிந்த
(அகப், ௯) ௫௪
கொள்ளற்கரிதாய்க்
(குறள், ௭௪௫) ௧௨௪
கொன்றன்ன வின்னா
(குறள், ௧0௯) ௪0௪
கொன்றை வேய்ந்த ௫௨௩
கோடல் எதிர்முகைப்
(குறுந், ௬௨) ௨௬௫
கோடீர் இலங்குவளை
(குறுந், ௧௧) ௨௧௧, ௩௩௩
கோடீர் எல்வளைக்
(ஐங்குறு, ௧௯௯) ௨௧௪
கோடுயர் வெற்பில்
(வெண்பா. உழிஞை, ௨0) ௧0௧
கோடுவாய் கூடாப்
கலித், ௧௪௨) ௩௮௭
கோட்டக மலர்ந்த ௨௭
கோட்டங் கண்ணியும்
(புறம், ௨௭௫) ௧0௬
கோட்டுப்பூச் சூடினுங்
(குறள், ௧௩௧௩) ௨௫௮
கோளில் பொறியிற்
(குறள் ௯) ௪௫௩
கோள்மா கொட்குமென்
(யாப். வி. ப. ௨௬௨) ௪௭௮
கௌவைநீர் வேலிக்
(வெண்பா. காஞ்சி, ௨௩) ௧௩௧
சத்துவம் என்பது ௩௬௧
சமன்செய்து சீர் தூக்கும்
(குறள், ௧௧௮) ௧௨௨, ௩௭௨
சாரற் பலவின்
(ஐங்குறு, ௨௧௪) ௨௨௩
சாரற் புனத்த
(ஐங்குறு, ௨௮௨) ௨௨௬
சார்புணர்ந்து சார்புகெட
(குறள், ௩௫௧) ௧௨௪
சாறுதலைக் கொண்டெனப்
(புறம், ௮௨) ௩௯௭
சிதைவெனப் படும்அவை
(தொல். மரபு, ௧௧0) ௭௫
சிலம்புகமழ் காந்தள்
(ஐங்குறு, ௨௯௩) ௧௮௭
சிலரும் பலருங் (நற்றிணை, ௧௪௯) ௫௮, ௩௪௩

சிலையுலாய் நிமிர்ந்த
(புறம், நகூஎ) கரு0
சிலைவிற் பகழிச்
(ஐங்குறு, நகூந.) உரு
சிறந்த நிதுவெனச்
(வெண்பா. வாகை, ந0) சஉ0
சிறப்புடை மரபின்
(புறம், நக) அஅ
சிறியகட் பெறினே (புறம்,உநரு)
சந0' சசக, சஎக
சிறிய பெரிய
(யாப். வி. ப. கசஎ) சகூஅ
சிறுகாலை யிற்கடை
(கலித், கஎ) நசக
சிறுகுடிப் பரதவர்
(யாப். வி. ப. கசகூ) சகூஉ
சிறுகுழல் ஓசை நஅச
சிறுதினை மேய்ந்த
(ஐங்குறு, உகூஉ) ககஅ
சிற்றுறு பாய்ந்துகளுஞ்
(யாப். வி. ப. உநஎ) சஅச
சீறடிப் பேரகல்
(யாப். வி. ப. கசஎ) சகூஎ
சுடுகல் நெடுமதில்
(வெண்பா. உழிஞை, கக) க00
சுருங்கிய நுசுப்பிற்
(யாப். வி. ப. கசஎ) சகூச
சுரையாழ அம்மிமிதப்ப
(யாப். வி. ப. உஉக) சஅந
சுழன்றும் ஏர்ப்பின்னது
(குறள், க0நக) ககந
சுள்ளி சுனை நீலஞ்
(திணைமாலை நாற், உ) உநச
சுறமறிவன துறையெல்
(யாப். வி, ப. கூஉ) சருஅ
சுறவுப்பிறழ் இருங்கழி
(சிற்றெட்டகம்) உஎ
சூரல் பம்பிய (யாப். வி. ப. உருக)
சஎக, ருநகூ
சூழ்ந்த நிரைபெயரச்
(வெண்பா. வெட்சி, க0) எஎ
சூழ்வார்கண் ணாக
(குறள், சசரு) நஎச
செங்களம் படக்கொன்
(குறுந், க) சசந, சருஎ
செந்தீ யோட்டிய ச0கூ
செயலையந் தளிரேய்க்கு
(கலித். கரு) ச0எ
செய்பொருட் சிறப்பெண்ணிச்
(கலித், சகூ) சநஎ
செய்வன சிறப்பிற்
(கலித், அந) நஅகூ
செய்வினை பொலிந்த
(ஐங்குறு, நஅக) நக
செருப்பிடைச் சிறுபரல்
(புறம், உருஎ) எஅ
செல்லாமை உண்டேல் (குறள்,
ககருக) ருஎ, நசச, நகூக, ருநரு
செல்லினிச் சென்றுநீ
(கலித், கக) ரு0ச
செவ்வா னன்ன
(அகம், கடவுள் வாழ்த்து) ச0ரு
செவ்விய தீவிய (கலித், பாலை, கஅ)
ருஎ, நருகூ, ரு0ந
செறுநர்த் தேய்த்த
(திருமுருகாற் ரு) ச0ச
செற்றன் றாயினுஞ்
(புறம், உஉகூ) கநந
செற்றார்பின் செல்லாப்
(குறள், கஉருரு) ககூகூ
சென்ற இடத்தால்
(குறள், சஉஉ) ககூகூ
சென்றதுகொல் போந்தது
(முத்தொள்ளாயிரம், கூக) நஉஅ
சென்று முகந்து
(யாப். வி. ப. சகூச) சசரு
சேட்புல முன்னிய
(ஐங்குறு, நஅச) ருஅ
சேணோன் மாட்டிய
(குறுந், கரு0) உ0அ
சேரல் மடவன்னம் (சிலப்.
கானல், உந) கஎக
சேர்ந்தனிர் செல்குவி
(அகம். உ00) உஉச
சேற்றுக்கால் நீலம்
(யாப். வி. ப. உநகூ) சஅச
சேற்றுநிலை முனைஇய
(அகம், சகூ) உரு
சொல்லிற் சொல்லெதிர்
(நற்றிணை, நக) கஎக
ஞாயி றனையைநின்
(புறம், ருக) ச0எ
தகைவகை மிசைமிசைப் ரு0கூ
தக்கார்தகவிலர் (குறள், ககச) சஎ0
தங்கிய ஒள்ளொளி
(பாண்டிக் கோவை) நஉ0

தடமருப் பெருமை (நற்றிணை, ௧௨0) ௨௫௫
தடவுநிலைப் பலவின் (புறம், ௧௪0) ௧௪௩
தணந்தமை சால (குறள், ௧0௩௩) ௩௩௨
தணியாநோய் உழ (கலித், ௩0) ௩௧௧
தண்டளிர் வியப்பத் ௪0௬
தண்டா விருப்பினள் (வெண்பா. வெட்சி, ௧௩) ௭அ
தண்ணந் துறைவன் (குறள், ௧௨௭௭) ௩௩௨
தண்ணுமைப் பாணி (கலித், ௧0௨) ௫0௭
தண் துறை ஊரன் (அகம், ௫௬) ௩௬௩
தம்மி லிருந்து (குறள், ௧௧0௭) ௩௭0, ௩௯௬
தம்மை இகழ்ந்தமை (நாலடி, துறவு, அ) ௧௨௪
தரவே எருத்த(அகத்தியம்) ௪அ௭
தலைப்புணைக் கொளினே (குறுந், ௨௨௨) ௧௭அ
தலைமகனில் தீர்ந் (அறநெறிச், ௯௪) ௩0௪
தழையணி அல்குல் (குறுந், ௧௫௯) ௨00
தள்ளா விளையுளும் (குறள், ௭௩௧) ௧௨௪
தற்காத்துத் தற்கொண் (குறள், ௫௬) ௩0௪
தற்கொள் பெருவிறல் ௧0௫
தனக்குவமை இல்லாதான் (குறள், ௭) ௪௨௨, ௪௫௩
தன்எவ்வங் கூரினும் (கலித், ௪௪) ௨௨அ
தன்குறையீ தென்றன் (திணைமாலை, ௩௧) ௨௧௯
தன்சொ லுணர்ந்தோர் (ஐங்குறு, ௪௧) ௪0௬
தன்தோள் நான்கின் ௪௪௨
தன்பார்ப்புத் தின்னும் (ஐங்குறு, ௪௧) ௫௫௯
தன்னை யுணர்த்தினுங் (குறள், ௧௩௧௯) ௨௫அ
தன்னையுந் தான்நாணுஞ் ௨௧௫
தாஅட் டாஅ (யாப் வி. ப. கீ௩அ) ௪௬அ, ௫௪௨
தாதுறு முறிசெறி (யாப். வி, ப. ௨௯௯) ௫௪௬
தாமரைக் கண்ணியைத் (கலித். ௫௨) ௨௨௯, ௩௫௧
தாமரை புரையுங் (குறுந், கடவுள் வாழ்த்து) ௩௯௭, ௩௯௯, ௪௨௫, ௪௪௨, ௪௫௫
தாமரைபோல் வாள்முகம் (திணைமாலை, ௧) ௪0௭
தாமின் புறுவ(குறள், ௩௯௯) ௪௬௯
தாழாத் தளராத் (நாலடி, ௧௪) ௩௬௫
தாழிருள் துமிய (குறுந், ௨௭0) ௨௬௪
தாழை குருகீனுங் (கைந்நிலை, ௫௯) ௨0௯
தான் தாயாக் கோங்கம் (திணைமாலை நாற், ௬௫) ௩௩௧
திங்களைப் போற்றுதும் (சிலப், மங்கல, ௧) ௧௫௧
திண்தேர் நள்ளி (குறுந், ௨௧0) ௨அ௯
திண்பிணி முரசம் (புறம், ௯௩) ௯0
திருநகர் விளங்கு ௨௧
திருநுதல் வேரரும்புந் (பு வெ. கைக், ௩) ௪௫௯
திருமழை தலைஇய (கூத்தராற் - றுப்படை, ௧) ௧௪௯, ௫௪அ
தீங்கனி இரவமொடு (புறம். ௨அ௧) ௧௩௧
தீண்டலும் இயைவது (குறுந். ௨௭௨) ௧௭௩
தீம்பால் கவந்த (கலித், ௧௧௧) ௧௯அ, ௫0அ
தீர்த்தநீர் பூவொடு (வெண்பா. உழிஞை,௨௭) ௧0௨
தீவினையார் அஞ்சார் (குறள், ௨0௧) ௧௨௩
துடியுடித் தோற்செவி (முத்தொள், ௫0) ௧௪௭
துடியெறியும் புலைய (புறம், ௨௬௭) ௬0
துணியிரும் பரப்பகல் (யாப். வி. ப. ௩௭௭) ௫௪௭

துணைமலரெழினீலத் (கலித், கச) சு0ச
தப்பார்க்குத் துப்பாய (குறள், கஉ) சசரு
துப்பின் எவனாவர் (குறள், கககூரு) ங அரு
தும்முச் செறுப்ப (குறள், கஙகஅ) உருஅ
துயிலின்றி யாநீந்தத் (கலித் ங0) ஙஉக
துறந்ததற் கொண்டு (ஐங்குறு, ஙகூங) கூ0
துறைமீன் வழங்கும் (அகம், ஙககூ) ங0ரு
துறைவன் துறந்தெனத் உ0உ
துன்னருந்தானைத் (வெண்பா, பொது, ச) அங
தூங்குகையான் (புறம், உஉ) சஙஎ
தெய்வந் தொழாஅள் (குறள், ருரு) ங0ச
தென்பரதவர் மிடல் (புறம், ஙஎஅ) கருஉ
தென்றல் இடை (யா விருத். ருகி மேற்கோள்) கசஎ
தேம்பிழித் தினியநீர் (சூளா. நகர, கங) ருஉஎ
தேரான் பிறனைத் (குறள், ரு0அ) ஙஎகூ
தேரோன் தெறுகதிர் கஎகூ
தேர்ந்து தேர்ந்து சூசக
தேர்மயங்கிவந்த (கலித், அஅ) உஎஅ
தேனெடு நீடு ஙஎங
தேன் தூங்கும் உயர் (மதுரைக், ங) சசஉ
தொடர்ப்படு ஞமலியின் (புறம், எச) ஙகூகூ
தொடலைக் குறுந்தொடி (குறள், ககஙரு) கஅக
தொடி நிறை முன்கையாள் (கலி, உச) ஙஎகூ
தொடி நெகிழ்ந் தனவே (யாப். வி. ப. ஙஅகூ) ருசச
தொடிநோக்கி (குறள் கஉஎக) ஙருங
தொடியணிதோள் ஆடவர் (வெண்பா. பொது, உ) அஉ
தொடுத்த வேம்பின் (யாப். வி. ப. ஙஅஎ) ருசரு
தொல்ஊழி தடுமாறித் (கலி, நெய், கஉ) கச
தொல்கவின் தொலைதல் (கலித், உ) சருச
தொன்னலத்தின் (யாப். வி. பக், க0அ) சஙஎ
தோடார் எல்வளை (யாப். வி. ப. ஙஅக) சஎ0, ருச0
தோழியர் சூழத் (ஐந்திணை ஐம், ஙஎ) கஎ
தோளுங் கூந்தலும் (ஐங்குறு, கஎஅ) கஅ0
தோளுந் தொடியும் ருகூ
நகுகம் வாராய் (நற்றிணை, உரு0) உருஅ
நகுதக் கனரே புறம், எஉ) கஙக
நகையமர் ஆயம் (வெண்பா. காஞ்சி. கரு) ககூ0
நகையா கின்றே (அகம், ருகூ) (உஅ0)
நகையெனப் படுதல் ஙகூஉ
நசைஇயார் நல்கார் (குறள், கககூக) ஙஅஎ
நஞ்சுடை வாலெயிற்று (புறம், ஙஎ) கூஅ
நடுங்கி நறுநுதலான் (வெண். இருபாற் பெருந், க) கூக
நடுங்குதுயர் களைந்த (அகம், அகூ) ஙகூ0
நடுநாள் வருஉம் (நற்றிணை, (கசக) ஙகூக
நடுவிகந் தொரீஇ (கலித். அ) ஙககூ
நண்பி தென்று (யாப். வி. ப. உஙச) ருஉரு
நம்முறு துயரம் (ஐங்குறு, உசக) உ0ச
நயந்தலைமாறுவார் கலித் அ0)உகூஎ
நயனின்மையிற் (நற்றிணை, எரு) கஅக
நரந்தநா றிருங்கூந்தல் (கலித், ருச) ககூரு
நல்கினும் நாமிசையாள் (வெண்பா, பாடாண், சஅ) கஙஅ
நல்லது செய்தல் (புறம், ககூரு) கருச

நல்யாழ் ஆகுளி (புறம், சுச) கருஉ
நல்லாய், பொய்யெல்லாம் (கலித், கரு) உஎசு
நல்லார்கள் நல்ல சகக
நல்லார் பழிப்பில் (மூத்த நாயனார் திருவிரட்டை மணி மாலை, உ0) ருஉசு
நல்லுரை இகந்து (குறுந், உக) கஅகூ
நளிகடல் இருங் (புறம், உசு) ககஅ
நள்ளென் றன்றே (குறுந். சு) உ0எ
நறவுக்கமழ் அலரி கருஎ
நறவுந் தொடுமின் (புறம், உசுஉ) எஅ
நறுநீல நெய்தலும் (யாப். வி. ப. உஉசு) சஅங
நறுந்தண் தகரம் (திணைமாலை, உச) உகரு
நறுவிரை துறந்த (புறம், உஎசு) க0ரு
நறை பரந்த சாந்தம் (திணைமாலை, க) உங, கஎகூ
நற்கொற்ற வாயில் (யாப். வி. ப. உஉசு) சஅங
நனவினல் நல்காக் (குறள், கஉகஎ) ஙஅரு
நனவினற் கண்டதூஉ (குறள், கஉகரு) ஙஎரு
நன்மரங் குழீஇய (அகம், கசுசு) உககூ
நன்மையும் தீமையும் (குறள், ருகக) ஙஎசு
நன்றாய்ந்த நீள்நிமிர் (புறம், கசுசு) கக0
நன்றி மறப்பது (குறள், க0அ) சருங
நன்னலந் தொலைய (குறுந். கூங) உஎக
நன்னிற மென்முலை (யாப் வி. ப. கஙச) சசுஅ
நாணுல் உயிரைத் (குறள், க0கஎ) ஙஎச
நாணொடு நல்லாண்மை (குறள், கககங) கஅ0
நாமவர் திருந்தெயி உஎகூ
நாயுடை முதுநீர்க் (அகம், கசு) உஎஅ, சசஉ
நாவாயும் தோணியும் (வெண்பா. உழிஞை. கஎ) க0க
நாளு நாளு (சிற்றெட்டகம்) உரு சங
நாள்கோள் திங்கள் (பதிற்றுப். கச) சகக
நாள் வேங்கை பொன் (திணைமாலை, உ) உகரு
நாற்றம் பெற்று உஙஅ
நிரப்பாது கொடுக்கும் (புறம், கஅ0) க0ரு
நிரைதிமில் களிறுகத் ரு0ங
நிலங்கிளையா (யாப். வி. பக். சசுஅ) சசஎ
நிலத்தினும் பெரிதே (குறுந்.ங) உஎ0, ஙசசு
நிலநீர் வளிவிசும் (பதிற்றுப், கச) சகஎ, ருசரு
நிலம்பிறக் கிடுவது (புறம், ங0ங) க0ரு
நிலவுக்காண் பதுபோல (கலித். ககக) சக0
நிலவுமணல் அகன்துறை (யாப். வி. ப. ஙஅரு) ருசங
நிலவு மறைந்தன்று (நற்றிணை, கஅஉ) உஉக
நிலை திரிபுஎரியத் (புறம், உ௯) கககூ
நிலையில் திரியா (குறள், கஉச) ஙஎங
நிலையும் நிறையும் (வெண்பா. வெட்சி, கூ) எஎ
நிழலே இனியதன் (யாப். வி. ப. கருங) சசுச
நிறை அரியர்மன் (குறள், கககூஅ) உஉக
நினக்கியாம் பாணரும் (ஐங்குறு, சஅ0) சு0
நினக்கே அன்றஃ (ஐங்குறு, சக) உஎங
நினைப்பவர் போன்று (குறள், கஉ0ங) ஙஎரு
நின்நயந்து உறைநர்க்கும் (புறம், கசுங) கருங
நின்மார் படைதலின் (அகம், ருஅ) கஎரு
நின்மொழி கொண்டியாளே (கலித், கககங) ஙஉசு
நின்ற சுவையே ஙசுக

நின்ற சொல்லர் (நற்றிணை, ௧) ௨௬௯
நின்றபுகழொழிய (வெண்பா, உழிஞை, ௧௨) ௯௭
நின்னணங் கன்மை (நற்றிணை, ௩௪) ௨௩௭
நின்னணங் குற்றவர் (கலித், ௭௭) ௩௪௯
நின்னொக் கும்புகழ் ௪௯௦
நின்னோர் அன்னோர் (புறம், ௩௭௩) ௪௧௦
நீகண் டனையோ (குறுந், ௭௫) ௨௮௧
நீங்கின் தெறாஉங் (குறள், ௧௧௦௪) ௧௭௫
நீடற்க வினையென்று (யாப் வி. ப. ௨௬௪) ௫௨௪
நீடினம் என்று (ஐங்குறு, ௪௭௮) ௬௧
நீடுநீர்க் கானல் ௨௧௪
நீயுறும் பொய்ச்சூள் (கலித், ௮௮) ௩௧௮, ௩௮௯
நீயே, வினைமாண் (கலித், ௭) ௪௩௮
நீரறவு அறியா (புறம், ௨௭௧) ௧௦௦
நீரார் செறுவில் (கலித், ௭௫) ௨௮௦
நீரின் தண்மையுந் (யாப். வி. ப. ௨௫௭) ௪௫௧, ௪௭௮
நீஇர் பாண (யாப். வி. ப. ௩௮௩) ௫௪௨
நீர்நீ டாடிற் (குறுந், ௩௫௪) ௨௭௧
நீர்பலகால் (வெண்பா. வாகை, ௪௪) ௧௧௪
நீலக் கச்சைப் (புறம், ௨௭௪) ௧௦௬
நீலமுண்ட துகில் ௩௩௮
நீவிளை யாடுக (நற்றிணை, ௩௬௨) ௫௩௨
நுண்எழில் மாமைச் (கலித், ௪) ௩௫௪
நுண்ஞாண் வலையிற் (ஐந்திணையெழு, ௬௪) ௨௮௯
நுதிவேல் கொண்டு (புறம், ௩௪௯) ௧௩௨
நெஞ்சத்தார் காத (குறள், ௧௧௨௮) ௧௯௮, ௩௮௫
நெஞ்சமொடு மொழிகடுத் (ஐங்குறு, ௬) ௨௮௯
நெஞ்சு நடுக்குறக் (கலித். பாலை, ௨௩) ௫௭, ௩௭௭
நெடிபடு கானத்து (வெண்பா. வெட்சி, ௩) ௭௬
நெடுங்கழை முளிய (ஐங்குறு, ௩௨௨) ௬௨
நெடுங்கொடி நுடங்கும் (அகம், ௭௦) ௧௯௦
நெடுங்கொடிய (புறம், ௫௫) ௪௪௨
நெடுநல் யானையுந் (புறம், ௭௨) ௩௭௨
நெடுநா ஒண்மணி (நற்றிணை, ௪௦) ௨௮௮
நெடுந்தேர் கடாஅய்த் ௩௩௭
நெடுந்தேர் கடைஇத் ௨௧௭
நெடும்புனலுள் வெல்லு (குறள், ௪௯௫) ௫௩௫
நெடுவரை மிசையது (ஐங்குறு, ௨௮௭) ௨௨௭
நெடுவரை மிசையிற் ௪௦௭
நெடுவேள் மார்பின் (அகம், ௧௨௦) ௨௨௩
நெய்தல் கூம்ப (நற்றிணை, ௧௮௭) ௨௨௧
நெய்தல் நறுமலர்ச் (ஐங்குறு, ௧௮௨) ௨௩௦
நெய்தற் பரப்பிற் (குறுந், ௧௧௪) ௨௨௦
நெய்தற் புறவின் (திணைமொழி, ௪௧) ௧௯௬
நெய்யணிக செவ்வேல் (வெண்பா. உழிஞை, ௨) ௧௦௦
நெய்யால் எரிநுதுப்பேம் (குறள், ௧௧௪௮) ௨௨௨
நெய்யுங் குய்யும் (நற்றிணை, ௩௮௦) ௨௮௨
நெய்யொடு மயக்கிய (ஐங்குறு, ௨௧௧) ௧௯௨
நெருநலும் முன்று ௨௧௫
நெருப்பவிர் கனலி (ஐங்குறு, ௩௮௮) ௪௭
நெருப்பின் அன்ன (அகம், ௮௪) ௩௯௯
நெல்லொடு, நாழி (முல்லைப்பாட்டு, ௮-௧௦) ௧௦
நெறிநீர் இருங்கழி ௨௧௬
நெறியறி செறிகுறி (கலித், ௩௯) ௫௪௯

நேர்ந்தநங் காதலர்
(சிலப், கானல்) ௫௩௪

நோக்கினுள் நோக்கி
(குறள், ௧0௯௩) ௧௬௬
நோக்குங்கால் நோக்கித்
(கலித், ௬௩) ௧௯௬
நோதக்காய் என நின்னை
(கலித், ௭௩) ௨௭௩
நோமே நெஞ்சே
(குறுந், ௪) ௨0௩
நோயும் வடிவுங்
(கலித், ௯௭) ௧௮௫

பகடுபுறந்தருநர் (புறம், ௩௫) ௧௧௩
பகலில் தோன்றும்
(ஐங்குறு, ௫௭) ௨௮௭
பகலே பலருங்
(நற்றிணை, ௩௬௫) ௩௩௩
பகலே பல்பூங்
(யாப். வி. ப. ௧௩௫) ௪௬௨
பகைநலியப் பாசறையு (நெடுநல்,
இறுதி வெண்பா.) ௩௭௪
பசந்தாள் இவளென்ப
(குறள், ௧௧௮௮) ௩௮௫
பசலையால் உணப்பட்டுப்
(கலித், ௧௫) ௩௩௭
படாஅ தோழி ௨௪
படியுடையார் பற்றமைந்தக்
(குறள், ௬0௬) ௪௪௬
படுகிளி யாவும் (கலித், ௫0) ௪௨௪
படுபயன் வெஃகிப்
(குறள், ௧௭௨) ௧௨௨
படைகுடி கூழ்அமைச்சு
(குறள், ௩௮௧) ௧௨௪
படைப்புப் பலபடைத்துப்
(புறம், ௧௮௮) ௧௨௫
பணைத்தோட் குறுமகள்
(குறுந், ௨௭௬) ௧௮0
பணைநீங்கிப் பைந்தொடி
(குறள், ௧௨௩௪) ௩௮௫
பணையாய் அறைமுழங்கும்
(வெண். பெருந்திணை, ௬) ௬௯
பரியரைக் கமுகின்
(பெரும்பாணாற், ௭-௮) ௪0௫
பருக்காழும் செம்பொன்
(வெண்பா.பாடாண், ௧௪) ௧௪௬
பருதியஞ் செல்வன் ௪௧௩
பருவ மென்றிணை. ௨௩

பலர்புகழ் ஞாயிறு
(திருமுருகாற், ௨) ௪0௪
பலவின்பழம் (திணைமொழி, ௧0)
௧௯௧
பல்அமர் செய்து ௭௩
பல்சான்றீரே (புறம், ௧௯௫) ௧௨௧
பல்சான்...செல்கென
(புறம், ௨௪௬) ௧௩௪
பல்பூங் கானல் (அகம், ௨0) ௨0௫
பல்லோர் துஞ்சு
(குறுந், ௨௪௪) ௨௨௭
பழிதபு ஞாயிறே (கலித், ௧௪௩)
௫௩௪
பழிமலைந் தெய்திய
(குறள், ௬௫௭) ௩௩௬
பறவைதம் பார்ப்புள்ள
(கலித், ௧௧௯) ௫௫௮
பறைபடப் பணிலம்
(குறுந், ௧௫) ௨௩௮, ௨௫0
பனிபடு சோலைப் (நாலடி,
இளமை, ௭) ௪௨௭
பனிமலர் நெடுங்கண் ௬௨
பன்மாடக் கூடல்
(யாப். வி, ப. ௨௩௭) ௪௮௪
பன்மீன் உணங்கற்
(யாப். வி பக். ௨௮௫) ௫௪௩
பன்னருங் கோங்கின்
(யாப். வி. பக். ௧௩௪) ௪௬௪

பாஅல் அஞ்செவிப்
(கலித், பாலை, ௪) ௪0
பாஅன்மருண் மருப்பி
(கலித், ௨௧) ௪0௭
பாசடை நிவந்த (குறுந், ௯) ௧0
பாசடைப் பரப்பிற்
(மணிமே, (௪-௮-௧௩) ௪0௧
பாடின்றிப் பசந்தகண் ௪௯௬
பாணர் தாமரை (புறம், ௧௨) ௯0
பாணர் முல்லை (ஐங்குறு,
௪0௮) ௩0௩
பாணன் சூடிய (புறம், ௧௪௧) ௧௪௯
பாம்புரு வொடுங்க ௪0௬
பாயில்கொண் டென்தோட்
(கலித், ௨௪) ௩௭௪
பாயிரும் பரப்பகம்
மார்க்கண். காஞ்சி
பாயினும் மாயும்
(வெண்பா. தொச்சி, ௨) ௧0௧

பாய்திரை பாடோவாப்
(கலித்,கஉக) ௩௨௧
பாரி பாரி(புறம், ௧0எ)௧௪௩,௪௧௫
பார்ப்பார்க்கு அல்லது
(பதிற்றுப். ௬௩) ௩௪௫
பாலன்ன மென்மொழி ௪0௫
பாலும் உண்ணுள்
(அகம், ௪அ) ௩அ௫
பாலொடு தேன்கலந்
(குறள், ௧0௨௧) ௪௫௩
பால்மருள் மருப்பின் (கலி, பாலை,
௨0) ௪௩, ௩௫௧, ௫0௫
பாவடி உரல (குறுந், அ௬) ௨௩௬
பாற்கடல் முகந்த
(யாப். வி. ப. ௩எ௬) ௫௫0
பானலந் தண்கழிப்
(திணைமாலை, ௩௨) ௧௬௫
பாண்ட், பள்ளி யானையி
(குறுந், ௧௪௨) ௩எ௬
பிணிநிறந் திர்ந்து
(திணைமொழி, ௬) ௧௬எ
பிரசம் கலந்த (நற்றிணை, ௧௧0)
௩0௩
பிள்ளை கடுப்பப் (வெண்பா.
கரந்தை, எ) அ௫
பிறவிப் பெருங்கடல்
(குறள், ௧0) ௪௨௨, ௪௫௩
பிறப்பொக்கும் எல்லா
(குறள், ௬எ௨) ௧௬௧
பிறர்நாணத் தக்கது
(குறள், ௧0௧அ) ௫௪0
பிறர்பழியுந் தம்பழியும்
(குறள், ௧0௧௫) ௩எ௪
பிறர்வேல் போலா
(புறம். ௩௩௨) ௧௫௧
பிறன்மனை நோக்காத
(குறள். ௧௪அ) ௧௨௧
புணர்துணையோ டாடும்
(சிலப், கானல் ௩௧) ௨௧௧
புதுப்புள் வரினும்
(புறம், ௨0) ௧௫௪
புத்தே ளுலகிற் ௪0௫
புரிவின்றி யாக்கை
(வெண்பா. வாகை, ௨0) ௧௧௪
புரிவுண்ட புணர்ச்சியுள்
(கலித்' நெய், ௨௩) ௬௭
புலவு நுனைப் (பெரும்பாணாற்
௨௬௬, ௨எ௧) ௪0௪
புலிக்கணமுஞ் சீயமும்
(வெண்பா. கரந்தை, ௪) அ௪
புலிநிறக் கவசம்(புறம்,௬௩) ௩எ௨
புலியிறப்ப ௪0௪
புலியென்ன ,,
புலைமகன் ஆதலிற் ௨௬௨
புல்லார் புகழொடு
(வெண்பா. உழிஞை, ௧0) ௬எ
புல்லிய கேளிர் (கலித்,௧௪௪)௩௬0
புல்லேன் மகிழ்ந
(நற்றிணை, ௩௪0) ௨அ௨
புல்வீழ் இற்றிக்
(குறுந், ௧0௬) ௨0௩
புள்இமிழ் அகல்வயல்
(கலித், எ௬) ௨௬௬
புறத்துறுப் பெல்லாம்
(குறள், எ௯) ௩எ௩
புனவன் துடவைப்
(குறுந். ௧0௫) ௨0௬
புனைபூந் தழைஅல்குல்
(ஐந்திணையைம், ௧௪) ௨௧௬
புனையிழாய்ஈங்குநாம்
(கலித், பாலை, ௧௫) ௫௬
புன்கண்ணை வாழி
(குறள், ௧௨௨௨) ௩அஎ
புன்தலை மந்திக்
(நற்றிணை, ௩எ௬) ௨௧௫
பூஉங் குவளைப்
(யாப். விரு. ப. ௧௫அ) ௪௬௪
பூங்கட் புதல்வனைப்
(கலித். எ௬) ௨எ௪, ௨அ௩
பூங்கண் நெடுமுடிப்
(வெண்பா. பாடாண், ௬) ௧௪0
பூங்கொடி மருங்கின் ௨௬
பூத்த வேங்கை (யாப். வி. ப.
௧எ௬) ௪௬௫
பூந்தண்டார்ப் புலர்
(கலித் குறிஞ்சி' ௨௧) ௧௩அ
பூந்தாமரைப் போதலமரத்
(யா. வி. பக். ௩௩௬) ௪அ0
பூவை விரியும்
(வெண்பா. பாடாண், ௪) அ௩
பூவொடு நீர்தூவிப்
(வெண்பா. பொது, ௬) அ௬
பெண் விழைந்து
(திரிகடுகம், ௨௬) ௩எ௩
பெயர்த்தனென் முயங்கயான்
(குறுந், அ௪) ௩அ

பெயர்ந்து போகுதி ௪௭
பெய்ப்பல்கண் மறைத்தலின்
(குறுந். ௩௫௫) ௧௧௯
பெரியார்க், கடியரோ
(கலித், ௮௮) ௩௦௭, ௩௪௩
பெருங்கை இருங்களிறு
(ஐந்திணை யெழு, ௧௨) ௨௨௬
பெருஞ்செல்வர் இல்லத்து
(முத்தொள், ௮௮) ௪௦௮
பெருநன் றுன்றிற்
(குறுந், ௧௧௫) ௨௨௪
பெருந்தேர் யானும்
(அகம், ௨௮௪) ௩௬௭
பெரும, விருந்தொடு
(கலித், ௮௧) ௩௭௫
பெரும்பணை மென்தோள்
(வெண்.இருபாற்.பெருந், ௬)௬௧
பெரு அமை அஞ்சும்
(குறள், ௧௨௬௫) ௩௮௬
பேணுப பேணார்
(நற்றிணை, ௭௨) ௨௦௩
பேதையென்ப ௪௨௩
பேர்ந்து பேர்ந்து
(யாப். வி. ப ௩௮௦) ௫௫௦
பொங்கிரு முந்நீர்
(கலித், ௧௪௪) ௩௮௭
பொங்குதிரை பொருத
(நற்றிணை, ௩௫) ௨௮௭
பொதுமொழி பிறர்க்
(கலித், ௬௮) ௨௧௫
பொய்படு பறியாக்
(ஐங்குறு, ௨௫௦) ௨௩௦
பொய்யெல்லாம் ஏற்றித் ௫௫
பொருகடல் வண்ணன்
(கார்நாற். ௧) ௩௫௦
பொருகளிற் ௪௦௪
பொருவ மென்ற ௪௮௧
பொருள் தீர்ந்த (குறள், ௧௧௧) ௩௭௭
பொருள் பொருளார்
(குறள், ௯௧௪) ௩௧௯
பொலம்பூ வேங்கை
(சிலப். பதிகம்) ௩௬௭
பொழுதும் எல்லின்று
(குறுந், ௧௬) ௧௧௧
பொள்ளென வாங்கே
(குறள். ௪௮௭) ௩௭௭
பொன் அடர்ந் தன்ன
(அகம், ௨௮௦) ௧௮௯
பொன்இணர் வேங்கை
(ஐந்திணையைம், ௧௧) ௨௧௦
பொன்னுரை மார்பிற்
(யாப் வி. பக் ௬௨) ௪௮௫
பொன்னுரை மார்பிற்
(முத்தொள், ௧௦௪) ௩௭௫,௪௫௭
பொன்னின் அன்ன
(யா. வி. ப. ௧௩௪ - ௩௮௨)
௪௬௭, ௫௪௧
பொன்னும் மணியும்
(நற்றிணை, ௧௬௬) ௨௬௦
பொன்னுரை. கடுக்குந்
(திருமுரு ௧௪௫) ௪௦௭
போது சாந்தம் பொற்ப
(யாப். வி. ௪௧) ௪௪௧
போதுவிடு குறிஞ்சி
(யாப். வி. ப. ௧௪௧) ௪௬௯
போழ்தாண் டுசியின்
(புறம், ௮௨) ௩௭௬
மகிழ மகிழ்தாங்
(யாப். வி. பக். ௭௪) ௪௫௨
மகிழ்செய் தேமொழி
(கலித், ௧௨௫) ௩௦௭
மகிழ்நன் மார்பே (குறுந், ௭௩)
௨௨௫
மஞ்சுசூழ் சோலை (யாப். வி.
பக். ௨௧௧) ௪௨௪
மடப்பிடியை மதவேழந்
(யாப். வி. பக். ௩௪௧) ௫௨௪
மடவ மன்ற (குறுந், ௬௬) ௪௫
மடிமை குடிமைக்கண்
(குறள், ௬௦௮) ௩௭௬
மட்டுத்தா னுண்டு
(யாப். வி. பக். ௪௬௩) ௪௪௫
மணிநிற நெய்தல்
(ஐந்திணையெழு,௬௦) ௧௧௮
மணிநிற மருத்த ௪௫௬
மணியில் திகழ்தரு
(குறள், ௧௨௭௩) ௨௩௬
மதவலி யானை (அகம்,௩௫௪)௩௦௧
மதிபோலுந் தாமரை ௪௧௭
மதியும் மடந்தை
(குறள், ௧௧௧௬) ௧௮௨
மத்திமம் என்பது ௩௬௦
மயில்கொல் மடவாள்
(திணைமொழி, ௪௧) ௧௫௭

மயிற்கணத்து அன்னார் (வெண்பா. உழிஞை; ௧௧) ௯௯
மரல்சாய மலைவெம் (கலித், ௧௩) ௪௪௬
மருந்தின் தீரா ௧௫௬
மருப்பிற் றிரிந்து (கலித், ௧௫) ௪௦௪
மரையா உகளம் (கைந்நிலை, ௬) ௧௯௭
மரையா மரல்கவர (கலித், பாலை, ௫) ௪௧, ௫௦௮
மலர்மிசை ஏகி (குறள், ௩) ௪௨௫
மலைபடு சாந்தம் (வெண்பா, பாடாண், ௪௭) ௧௩௮
மழைவர லறியா (ஐங்குறு, ௨௯௮) ௧௮௬
மழைவிழை தடக்கை ௪௦௫
மறத்தற் கரிதால் (நற்றிணை, ௪௨) ௨௬௫
மறுவில் தூவிச் (ஐங்குறு, ௩௯) ௩௭
மனைத்தக்க மாண்பு (குறள், ௫௧) ௩௦௪
மனைநடு வயலை (ஐங்குறு, ௧௧) ௨௭௧
மனையுறை கோழிக் (குறுந், ௧௩௯) ௨௯௨
மன்றத் துறுகற் (ஐந்திணை யெழு, ௯) ௧௯௭
மன்றப் பலவின் (ஐந்திணை யெழு, ௪) ௨௦௮
மன்றப் பனைமேல் (கலித், ௧௪௨) ௫௩௪
மன்ற மரா அத்த (குறுந், ௮௭) ௧௯௭, ௨௧௧, ௩௮௯
மன்னா உலகத்து (புறம், ௧௬௫) ௧௨௩
மன்னுயிர் எல்லாந் (குறள், ௧௧௬௮) ௩௮௫
மன்னுயிர் முதல்வனை (பரிபா, ௧) ௪௧௦
மாஅத் தாஅண் (யாப். வி. ப. ௧௫௮) ௪௬௮
மாக்கேழ் மடநல்லாய் (நாலடி, ௪௧) ௧௨௬, ௩௬௬
மாசறக் கழீஇய (குறுந், ௧௩) ௨௨௫
மாடமலி மறுகிற் (திருமுருகு, ௭௧ - ௭௩) ௪௧
மாட்டிய பிள்ளை (வெண்பா. கரந்தை, ௯) ௮௫
மாண மறந்துள்ளா (கலித், ௮௯) ௨௭௬, ௩௯௧
மாண்டனை பலவே (பதிற்று, ௩௨) ௧௨௦
மாண்இழை பேதை ௧௭௧
மாதர் நகிலே (யாப். வி. ப. ௧௫௩) ௪௬௮
மாதர் முகம்போல் (குறள், ௧௧௧௮) ௧௮௨, ௩௫௧, ௫௩௪
மாநிலந் தோன்றாமை ௪௯௦
மாந்தர் மயங்கிய ௫௯
மாமலர் முண்டகந் (கலித், ௧௩௩) ௫௦௪
மாயவன் மாயம் (வெண்பா. பாடாண், ௪௦) ௧௩௭
மாயோன் அன்ன (நற்றிணை, ௩௨) ௨௨௦
மாரியன்ன வண்கை (புறம், ௧௩௩) ௩௯௬
மாரியாம்பல் (குறுந், ௧௧௭) ௪௧௨
மாரிவீ ழிருங் கூந்தல் (கலித், ௧௪) ௪௦௭
மாலை துயல (வெண்பா. பொது, ௧௨) ௮௬
மாலைநீ, தையெனக் (கலித், ௧௦௮) ௫௩௪
மாவும் புள்ளும் (யாப் வி. ப. ௧௩௦) ௪௬௧
மாவென மடலும் (குறுந், ௧௭) ௧௮௦
மாவென்ற மடநோக்கின் (கலித், ௫௭) ௪௦௭
மானொக்கு ௪௦௪
மானோக்கி நீயழ (கலித், ௮௭) ௨௯௧
மிகுதியான் மிக்கவை (குறள். ௧௫௮) ௧௨௩, ௩௭௭
மிகையணங்கு மெய்ந்நிறீஇ (வெண்பா. பொது, ௮) ௮௫
மிடையூர் பிழியக் (அகம், ௧௫௮) ௨௩௭
மின்னிவர் ஒளிவடந் (யாப். வி. ப. ௧௩௪) ௪௬௪
மீன்உண் கொக்கின் (புறம், ௨௭௭) ௧௩௨
மீன்தேர்ந் தருந்திய (யாப். வி.ப. ௧௪௮) ௪௬௯

மூகமறியார் மூதுணர்ந்தார்
(யாப். வி. பக். சகடு) சசகூ
மும்டவுமுதிர் பலவின்
(அகம், ௩டுஉ) உஎ0
முதிர்கோங்கின்
(கலித், டுகூ) சசஎ
முதுக்குறைநந் தனளே
(யாப். வி. ப். கஉஉ)
உ௩, ச௩0, சஎஅ, டு௩கூ
முத்துடை வான்கோ ச0கூ
முத்தேர்......நம்வலைப்
(கலித், கூஎ) ௩௩௩
முத்தேர் (கலித், கூ௩) ச0ச
முரசு முழங்குதானை
(பொருநராற், டுச-கூ) ௩கூஅ
முருகயர்ந்து வந்த
(குறுந், ௩கூஉ) உ௩௩
முலையே முகிழ்முகிழ்த்
(குறுந், ௩௩எ) கஎஎ
முல்லையும் குறிஞ்சியும்
(சிலப் காடுகாண், கூச-கூகூ) கஅ
முல்லைவாய் முறுவலித்தன
(யாப். வி. ப. ௩சக) டுஉகூ
முல்லை வைந்நுனை (அகம் ச) உக
முழவுறழ் தடக்கையி
(திருமுரு உகடு) ச0எ
முளவுமா வல்சி
(ஐங்குறு, ௩கூச) சடு
முளிதயிர் பிசைந்த
(குறுந். ககூஎ) ௩0உ
முளை நிரை முறுவல்
(கலித், கடு) சடுக
முனிவின்றி நனந்தலை
(குறுந், கூ) ௩எச
மெய்யில் தீரா
(அகம், உஅ) உஉடு
மெய்யே வாழி தோழி
(குறுந், கஉக) ௩அகூ
மெல்லியல் நல்லாருள்
(நாலடி, கஅஅ) டு௩டு
மெல்லியல் விறலிநீ
(புறம், க௩௩) கடு0
மென்தினை மேய்ந்த
(ஐங்குறு, உகூக) ககூஎ
மேலோர் இறைஅமருள்
(வெண்பா பாடாண், அ) கசகூ
மையல் வேழ
(குறிஞ்சிப், ககூடு-கூ) ௩கூஅ
மொய்த்துடன் தவழு
(யாப். வி. ப. டு௩) சஅஎ
மோப்பக் குழையும்
(குறள், கூ0) ச00
யாகாவா ராயினும்
(குறள், கஉஎ) ௩எ௩
யாங்கறு குவமோ
(நற்றிணை, கீசஎ) உ0டு
யாங்குப் பெரிதாயினும்
(புறம், உசடு) க௩௩
யாதனின் யாதனின்
(குறள், ௩சக) கஉகூ
யாஙிற் கூறவும் (கலித், ௩)சடுச
யாம்எம் காமந்(குறுந்,உசக)உ0க
யாயா கியளே (குறுந், கூ)
உஅகூ, ௩0உ
யாயும் ஞாயும் (குறுந், ச0)
கஎஉ, உடுகூ
யாரிவன் எங்கூந்தல் (கலித்,அகூ)
௩0எ, ௩ச௩, டுகஉ
யாரிவன் என்னை (கலித், ககஉ)
ககூஉ
யாரினும் காதலம்(குறள், க௩கச)
உடுஅ, ௩கூ0
யாரு மில்லைத் (குறுந், உடு) உ0௩
யாரையோ எம்மில்
(கலித், கூஅ) ௩0எ
யாவருங் காணுநர் ௩அஎ
யாவரும் விழையும்
(அகம்,ககூ) அசஉ
யாழ்கெழு மணிமிடற் (அகம்,
கடவு. வாழ்த்து.) ச0ச
யானுந் தோழியும்
(யாப். வி: ப. ௩௩உ) டுஉகூ
யானை உழலும் (திணைமொழி, கூ)
உககூ
யானை தாக்கினும் எகூ
வசையில் புகழ்
(பட்டினப், க) டுசடு
வஞ்சமில் கோலானை
(வெண்பா, வாகை அ) கககூ
வட்டொட்டி யன்ன
(யாப். வி. ப. ௩அஉ) டுசக
வண்டுறையுங் கூந்தல்
(வெண்பா. பெருந்திணை, கஅ)
ககடு
வண்டூது சாந்தம்
(கலித், மரு, உஅ) டுடு

வந்துவினை முடித்தனன் (அகம், ௪௪) ௫௩
வயங்குமணி பொருத (அகம், ௧௬௭) ௨௬௩
வயலைக் கொடியின் (புறம், ௩௦௫) ௩௦, ௩௭௨
வயல்வெள் ஆம்பலீ (நற்றிணை. ௨௯௦) ௨௯௯, ௩௧௪
வரிப்பந்து கொண் (வெண்பா. பாடாண், ௫௦) ௧௩௯
வருகதில் வல்லே (புறம், ௨௮௪) ௯௪
வருதார் தாங்கி (புறம், ௬௨) ௧௦௭
வருந்திணை வாழிய (அகம், ௭௯) ௫௩௪
வருவது கொல்லோ (ஐங்குறு, ௨௯௫) ௧௯௭
வரையாது சுரக்கும் ௪௦௫
வலம்புரி புரையும் (திருமுரு, ௧௨௭) ௪௦௭
வல்லா ராயினும் (புறம், ௫௭) ௧௪௨
வல்வருவர் காணாய் (திணைமாலை நூற். ௬௬) ௪௫
வல்வே லிளையரொ (அகம், ௧௨௦) ௩௩௭
வளங்கெழு திருநகர்ப் (அகம், ௧௭) ௨௪
வளமலர் ததைந்த (ஐங்குறு. ௩௬௯) ௬௩
வளம்பட வேண்டாதார் (நாலடி, ௧௦௩) ௪௮௩
வளிதுரந்தக் கண்ணும் (வெண்பா, பாடாண் ௧௨,) ௧௪௬
வளை அணி முன்கை (ஐங்குறு, ௧௯௮) ௨௧௮
வளைவாய்ச் சிறுகிளி (குறுந், ௧௪௧) ௨௦௭
வள்ளிதழ் கூம்பிய (கலித், ௧௨௧) ௪௧௦
வள்ளெயிற்றுப் (யாப். வி. ஒழி) ௪௦௨
வள்ளை நீக்கி (மதுரைக்காஞ்சி, ௨௫௫-௭) ௧௦௮
வன்கண் குடிகாத்தல் (குறள், ௬௩௨) ௧௨௫
வாடாத சான்றோர் (திணைமாலை நூற், ௧௫) ௨௪, ௨௩௩
வாட்புகா வூட்டி ௮௬
வாயல்லா வெண்மை (கலித், ௮௮) ௩௮௬
வாயிலோயே வாயிலோயே (புறம், ௨௦௬) ௧௪௫
வாய்மை எனப்படுவது (குறள், ௨௯௧) ௨௫
வாரா தமைவானோ (கலித், ௪௧) ௪௧௧
வாரார் பாண (நற்றிணை, ௩௭௦) ௨௫௯
வால்வெள் ளருவி (யாப். வி. ப. ௩௮௩) ௫௪௧
வாளிலங் குண்கண் ௨௯௪
வாளை வாளிற் (நற்றிணை, ௩௯௦) ௨௯௮
வாள் அமரின் (வெண்பா. பொது ௭) ௮௩
வாள்நடந் தன்ன (அகம், ௭௨) ௨௦௬
வாள்நாள் கொளலும் (வெண்பா. உழிஞை ௩) ௧௦௦
வாள்வரி வேங்கை (யாப். வி, ப. ௩௩௦) ௫௨௫
வானத் தணங்கருங் (அகம், ௧௬) ௪௧௩
வானம் இறைவன் (வெண்பா. தும்பை, ௨௬) ௧௦௮
வான்மருப்பின் களிற்றி (பதிற்று, ௮௦) ௯௩
விடலைநீ நீத்தலின் (கலித், மரு. ௩௦) ௫௫
விடிந்த ஞாலம் ௨௨
விட்டகன் றுறைந்து ௩௭௨
விட்டென விடுக்குநாள் (குறுந், ௨௩௬) ௨௮௯
விண்ணதிர் இமிழிசை (மலைபடு ௨) ௪௦௬
விண்பொருபுகழ் (புறம், ௧௧) ௪௦௫
விரிதிரைப் பெருங்கடல் (குறுந், ௧௦௧) ௨௬௧, ௪௪௨
விரிபுனற் பேரியாறு ,,
விருந்தும் பெறுகுநள் (அகம், ௩௨௪) ௩௧௨
விரும்பிநீ, என்றோள் (கலித், ௧௮) ௩௪௧

விரைந்து தொழில் கேட்கும் (குறள், ௬௪௮) ௧௧௫
விலங்கொடு மக்கள் (குறள், ௪௧௦) ௪௦௧
வில்லோன் காலன (குறுந், ௭) ௪௭
விழவுவீற் றிருந்த (பதிற்று, ௫௬) ௧௦௭
விழுந்த மாரிப் (நற்றிணை, ௨௪௪) ௩௩௪
விளங்கிழாஅய் செல் ௪௫
விளம்பழங் கமழும் (நற், ௧௨) ௪௨
விளியுமென் இன்னுயிர் (குறள், ௧௨௦௯) ௩௮௬
விளையா டாயமொடு (நற்றிணை, ௧௭௨) ௩௫௨
வினைமாட்சிய விரை (புறம், ௧௬) ௮௧
வினையமை பாவையின் (நற், ௩௬௨) ௫௦
வீங்குசுரை நல்லான் ௪௦௫
வீங்குநீர் அவிழ் (கலித், ௬௬) ௪௪௬
வீடுணர்ந் தார்க்கும் (வெண்பா. வஞ்சி, ௧௧) ௯௧
வீதல் அறியா (கலித், ௮௬) ௨௭௫
வீழுநர்வீழப் (குறள், ௧௧௯௩) ௨௭௧
வீழும் இருவர்க்கு (குறள், ௧௧௦௮) ௧௭௪
வெண்குடை மதியம் (புறம், ௨௯௪) ௧௦௪
வெண்டிங்கள் ௪௧௬
வெய்ய நெடிதுயிரா (வெண்பா. இருபாற் பெருந், ௧௦) ௮௨
வெய்யாரும் வீழ்வாரும் (கலித், ௯௩) ௩௯௦
வெல்புகழ் மன்னவன் (கலித், ௧௧௮) ௯௭
வெள்ளாங் குருகின் (குறுந், ௧௫௨) ௩௫௦, ௫௫௧
வெள்ளி விழுத்தொடி (அகம், ௨௮௬) ௨௯௦
வெறிகமழ் வெற்பன் (ஐந்திணையைம், ௨௦) ௨௨௮
வெறிகொள் அறையருவி (வெண்பா. பாடாண், ௪௨) ௧௩௭
வெறிகொள் இனச்சுரும்பு (தண்டி, ௫௩-உரை) ௬௩, ௩௫௩
வெறுக்கைக்குச் சென்றார் (திணைமாலை, ௬௭) ௫௧
வென்றுகலந் தரீஇயர் (பதிற்று, ௫௯) ௧௦௨
வேங்கை நறுமலர் (ஐந்திணையைம், ௧௫) ௨௩௦
வேங்கை மலர (திணைமொழி, ௮) ௨௧௭
வேட்டச் செந்நாய் (குறுந் ௫௬) ௪௧
வேட்ட பொழுதின் (குறள், ௧௦௦௫) ௧௭௫
வேட்டோர்க்கு (அகம், ௩௩௨) ௩௯௮
வேண்டுதல் வேண்டாமை (குறள், ௪) ௪௨௨
வேண்டுதியால் நீயும் (வெண்பா. பாடாண், ௪௧) ௧௩௭
வேதின வெரிநின் (குறுந், ௧௪௦) ௩௦௮
வேந்துடைத் தானை (புறம் ௩௩௦) ௯௧
வேம்பின் பைங்காய் (குறுந், ௧௯௬) ௨௫௭, ௨௯௧
வேயெனத் திரண்டதோள் (கலித், ௫௭) ௧௬௬
வேய்புரை மென்றோள் (கலித், ௩௯) ௪௦௬
வேய்மருள் பணைத்தோள் (அகம், ௧) ,,
வேய்வென்ற தோள் (கலித், ௧௩௮) ௪௦௭
வேரல் வேலி (குறுந், ௧௮) ௨௨௭, ௪௭௮
வேர்பிணி வெதிரத்துக் (நற்றிணை, ௬௨) ௬௦
வேலும் விளங்கின (அகம், ௨௫௧) ௯௨
வேளாப் (அகம், ௨௪) ௫௨
வேறுக (திணை-நூற், ௯௦) ௩௭
வேற்றுமை (புறம், ௧௮௩) ௧௧௪
வேனிலுழந்த (கலித், ௭) ௩௧௫
வைகுபுலர்விடியல் (அகம், ௪௧) ௫௨
வைய மகளை (வெண்பா. பாடாண், ௩) ௧௩௭
வையைதன் (கலி, மருத, ௨) ௧௩௮
வையை (பரிபாடல்) ௩௭௦